# ஈமானின் உண்மையை நீ அறிவாயா?

M. S. M.

# BIBLIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| **Title of the Book** | : EAMANIN UNMAIYAI NEE ARIVAYA |
| **Author** | : Seyhul Mufliheen<br>M.S.M Abdullah( Rah)<br>4414, Hajiyar Road, Maruthamunai<br>Kalmunai Sri Lanka |
| **Subject** | : Do you know the truth of Eaman ( Faith) |
| **Language** | : Tamil |
| **First Publication** | : 1980- May- 9th (1000 Copies) |
| **Second Publication** | : 2002 - July - 25th ( 1000 Copies) |
| **Third publication** | : 2005 - July - 25 ( 1000 Copies) |
| **Copy right** | : Author |
| **Publisher** | : All Ceylon Thareekathul Mufliheen<br>Colombo Branch, Sri Lanka |
| **Paper Used** | : 70 GSM Bank |
| **Paper Size** | : A5 |
| **Size of the Book** | : 1/8 |
| **Number of Pages** | : 798 |
| **ISBN** | : 955-1212-02-9 |

# ஈமானின் உண்மையை நீ அறிவாயா?

அழிந்தொழியும் ஆதேயமான சர்வபிரபஞ்சங்களுக்கும் அழிந்தொழியாத ஆதாரமாய், மருட்சியுடைய மக்களுக்கு மறைந்தது போலும், மருட்சியற்ற மகான்களுக்கு மறைந்ததில்லாமல் சதோதயமாய் விளங்குவதுமாயுள்ள சர்வசக்தனாகிய அல்லாஹ்வுக்கே சர்வபுகழும், எம் நன்றியும் உரித்தாகட்டும். மேலும், மல்ஹறுல் அதம்மியான மகான் முஹம்மது முஸ்தபா றசூல் (ஸல்) அவர்கள் பேரிலும், அன்னார் கிளையார்கள், தோழர்கள் இன்னும் அவர்களைப் பின்பற்றிய நல்லடியார்கள் அனைவர் பேரிலும் சாந்தியும், சமாதனமும், ஸலவாத்தும் உரித்தாகட்டும்.

## 001 நீங்கள் அறியவேண்டிய சில முக்கிய விபரங்கள்

நான் எழுதியுள்ள இந்நூலை வாசிக்கும் அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே! உங்களையும், என்னையும் ஒரே உண்மைப் பொருளின் பல தோற்றங்களாக நான் காணுகின்றேன். ஆகவே, உங்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி என் முன்னிலையிலாக்கி ஆண்பாலின் “அன்புச் சகோதரனே”என்றும் அழைக்க விரும்புகிறேன். ஏனென்றால் உண்மைக்கு வழி காட்டக்கூடிய அறிவு உண்மையாகவே ஆணாயிருக்கிறதென்றும், அவ்வறிவை வீரதீரமுள்ள ஆண் மகனேயன்றித் தோழமை பிடிக்க முடியா தென்றும் பல பெரியார்கள் கூறியிருப்பதை நானும் என் அனுபவத்தில் உண்மைதான் எனக் கண்டேன். மேலும் என் பேச்சு உங்களுடைய உள்ளத்தில் உறுதியாகப்பதியவேண்டும் என்பதற்காக “நீ” என்று அழைக்கவும் விரும்புகிறேன். பெருந்தன்மையோடு மன்னிப்பீர்களாக.

**(1)**

**என் அன்புக்குரிய ஆண்மகனாகிய சகோதரனே!**

இவ்வுலகின் கண்ணேவாழும் மக்களிடையே எத்தனை எத்தனையோ கொள்கைகளும் மதங்களும் இருப்பதை நாம் பார்க்கின்றோம். ஒவ்வொர் மனிதனும் அல்லது ஒவ்வோர் மனிதக் கூட்டமும் ஒவ்வோர் வழியைப் பின்பற்றியோ அல்லது தங்கள் அறிவினால் ஒரு வழியை அமைத்துக்கொண்டோ அல்லது உண்மையான ஒரு கொள்கையை அல்லது மதத்தைப் பல பிரிவுகளாக பிரித்தெடுத்துக்கொண்டோ செயல்பட்டுக் கொண்டே தான் இருக்கிறார்கள். இம் மண்ணுலக மக்கள் ஒவ்வொருவரும் தாங்கள் கொண்டுள்ள வழியே சரியானது, உண்மையானது என்ற நம்பிக்கையோடுதான் செயல்படுகிறார்கள். சுருக்கமாய்க் கூறினால் உலக மக்கள் அனைவரையும் எழுபத்தி மூன்று பெரும் கூட்டங்களாக வகுத்து அறிஞர்கள் விபரம் தந்திருக்கிறார்கள். ஆயினும் இந்த மனிதக் கூட்டத்திலும் சிற்சில உட்பிரிவுகளும் பல கிளைகளும் இருக்கவே செய்கின்றன. என்றாலும், இவ்வுலக மக்கள் கொள்கை விளக்கங்களில் எத்தனை எத்தனையோ பேதங்களைக் கொண்டிருந்தாலுங்கூட ஒன்றுக்கு மற்றொன்று நேர்மற்றம்போல் தென்படுகிற **இரண்டு மூலக்கொள்கைகளை ஆதாரமாகக்கொண்டே** இயங்குகின்றனர் என்பதை நான் காணுகின்றேன். இவ்விரு மூலக்கொள்கைகளும் சாதாரண மனிதர்களுடைய அறிவில் ஒன்றுக்கொன்று முரணானவைபோல் தென்பட்டாலும் அவ்விரு கொள்கைகளினதும் நோக்கம் ஒன்றே (உடன்பாடும், எதிர்மறையும் உண்மையைத் தரிபடுத்தவே அமைந்துள்ளது) என்பதை மிகக் கடினமான பலவருட ஆராய்வினாலும் இறைவனின் நல்லுதவியினாலும் கண்டறிந்தேன். இன்ஷா அல்லாஹ் விபரம் பின்னால் தருவேன்.

மனிதர்களும் நடமாடும் ஜீவராசிகளும் மட்டும்தான் செயல்படுகின்றனவா? (இயங்குகின்றனவா) என்று நோக்கினால்இல்லை, சர்வ பிரபஞ்சங்களிலுமுள்ள சர்வபொருட்களுமே இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. மனிதன் தனது சாதாரண அறிவினால் சீவனற்றது என்று கணிக்கினற பொருட்கள் கூட இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. விசேடமாய் கூறினால் ஒவ்வோர் அசைவும்கூட இயங்கிக்கொண்டுதான் இருக்கிறது. இவ்வுண்மை ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்களுக்கு நன்கு தெரியும். குர்ஆன், ஹதீஸ்களும் இவ்வுண்மையை எமக்கு விளக்குகின்றன. இந்த இயங்கும் பொருட்களில் எம்முடைய சாதாரண அறிவுக்கு இயங்குவனவாய்த் தென்படுகின்ற சில பொருட்களை மட்டும் எடுத்துக்கொண்டு ஒரு பெரிய உண்மையைக் கண்டறிவதற்காக எம் அறிவுக்கு எட்டியமட்டில் ஆராய்ந்து பார்ப்போம்.

ஆரம்பத்தில் விதை என்ற பெயரோடு இருந்த ஒரு பொருள் காலக்கிரமத்தில் முளையாக மாற்றமடைகின்றது. முளையாக இருந்தது மரமாக அல்லது செடிகொடியாக மாறுகிறது. மரமாயிருந்தது நாளாவட்டத்தில் எத்தனை எத்தனையோ மாற்றங்களைப் பெற்று பூவாய், பிஞ்சுவாய், காயாய், கனியாய் மாறி மீண்டும் விதையென்ற முடிவுக்கே வந்து சேர்வதை நாம் பார்க்கிறோம். ஒரு கல்லின் கீழே அகப்பட்டுக்கொண்ட ஒரு புல்லும்கூட நாளடைவில் கல்லைத் தாண்டிச் சுற்றிச் சுழன்று வெளியே வந்துகொண்டுதானே இருக்கிறது. மனிதனுடைய உடலின் நிலைமையும் ஏறக்குறைய இப்படித்தான்

இருக்கிறது. முதலில் தந்தையின் இரத்தமாயிருந்து இந்திரியமாய், கற்பமாய், சிசுவாய், பாலகனாய், வாலிபனாய், வயோதிபனாய், மாறி முடிவில் பிணமாகிவிடுகிறது இந்த மனித உடல். முடிந்ததா விஷயம்? இல்லை, பிணமாயிருந்து அழுகிக் கரைந்து மண்ணாய், தண்ணீராய், காற்றாய், நெருப்பாய் மாறிப் புல்லாய், பூண்டாய், மாடாய், ஆடாய், பறவையாய், ஊர்வனவாய் எத்தனை எத்தனையோ மாற்றங்களையடைந்து மீண்டும் இரத்தமாய், இந்திரியமாய், கருவாய், சிசுவாய், மாறிக் கொண்டே இருக்கிறது இந்த மனித உடல். இதுதான் மறுபிறவி என்கிறார்கள் ஒருசாரார். இதை இன்னும் ஒரு சாரார் பரிணாமம் என்கின்றார்கள். இறந்தபின் சுவர்க்கம் அல்லது நரகம் கிடைக்கும் என்கிறார்கள் இன்னொரு சாரார். இவர்களில் நரகம், சுவர்க்கம் நிரந்தரமானவை என்று கூறுவோரும் உண்டு. நரகில் பட்டவன் அவசியத்தினளவு தண்டிக்கப்பட்டு மீண்டும் சுவர்க்கம் சேர்ந்து விடுவான் என்போரும் சிலருண்டு. நரக, சுவர்க்கம் என்பதும் மறுபிறவி என்பதும் ஒரே விஷயம்தான் என்று கூறுவோரும் சிலருண்டு. இப்போது நாம் இந்த அபிப்பிராய பேதங்களில் மூழ்கவும், சரி பிழை கண்டறியவும் வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், நாம் ஆராய்வுக்கு எடுத்துக்கொள்ளப்போகிற தௌஹீதுடைய விஷயம் உண்மையின்படி சரியாய் விளங்கிவிடுமேயானால் உண்மை என்ன? எதுசரி? எதுபிழை? என்ற விஷயம் சக்குச் சந்தேகமில்லாமல் விளங்கிவிடும் என்பது நிச்சயம்.

## (2)

**ஆ**னால் மேலே நாம் சுட்டிக் காட்டிய அபிப்பிராய பேதங்களில் இருந்து **மிகமிக முக்கியமான இரண்டு உண்மைகள் நமக்குத் தென்படுகின்றன.** அதாவது இயங்கும் பொருட்கள் விரைவாகவோ காலதாமதமாகவோ செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத ஓர் உண்மையாகும். அதேபோல சரியானது என்றாலும் பிழையானது என்றாலும் செயல்படுவதற்கு ஒரு குறிக்கோள் அல்லது ஒரு நோக்கம் இருக்கவேண்டும் என்பதும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத இரண்டாவது உண்மையாகும். இப்போது நாம் அறிந்துகொண்ட இவ்வுண்மையை (இன்னமல் அஹ்மாலுபின் நிய்யத்தி) செயல்கள் யாவும் நோக்கத்தைப் பொறுத்தவை என்று எமது இமாமான குர்ஆனும், ஹதீஸும் விபரம் தருகினறன. ஆகவே செயல்படும் பொருள் எதுவாக இருந்தாலும் செயல்கள் எப்படிபட்டவையாய் இருந்தாலும் ஏதோ ஒரு நோக்கத்திற்காகவே தத்தம் அறிவுக்கும் இயல்புக்கும் ஏற்றபடி செயல்படுகின்றன என்பதை நாம் தெரிந்துகொண்டோம். நோக்கம், குறிக்கோள் ஏதோ ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான். அதாவது கல்லின் கீழேபட்டுக்கொண்ட புல் காற்றையோ, சூரிய வெளிச் சத்தையோ அல்லது இன்னும் வேறு எதையெதையோ பெற்றுக் கொள்வதற்காகச் சுற்றிச் சுழன்று வெளியே வருவதை போல, சிருட்டிகள் ஒவ்வொன்றும் தத்தமக்கு எதுவெது தேவை யென்பதை தெரிந்தாலும், தெரியாவிட்டாலும்கூட ஏதோ ஒன்றைப் பெற்றுக்கொள்ள அல்லது தம் வாழ்வைப் பூர்த்திசெய்துகொள்ளவே பிறக்கின்றன, இயங்குகின்றன (செயல்படுகின்றன) என்பதில் யாரும் சந்தேகப்படவேண்டியதில்லை.

ஆகவே, மனிதன் ஏன் பிறக்கின்றான்? என்ற கேள்விக்கு நாம் சுருக்கமாய்க் கூறும் விடை, தன் பூரணத்தன்மையை (சாந்தியை) பெறவே பிறக்கின்றான் என்பதுதான். அதேபோல மனிதன் ஏன் செயலில் ஈடுபடுகிறான்? என்ற கேள்விக்கு நாம் சுருக்கமாய்க் கூறும் விடை, மனிதன் தன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே செயலில் ஈடுபடுகிறான் என்பதுதான். அதே போல மனிதனின் நோக்கம்தான் என்ன? என்ற கேள்விக்கு நாம் சுருக்கமாய்க் கூறும் விடை மனிதன் தன்னுடைய ஆரம்ப நிலைமையை (சாந்தியை) அடைவதே நோக்கம் என்பதுதான். நல்லவன், கெட்டவன் மட்டுமல்ல, தற்கொலை செய்பவன்கூட சாந்தியைப் பெறுபதற்காகவே தற்கொலை செய்கின்றான் என்பதை மறுக்க முடியாது. (முழு விபரங்களும் பின்னால் விபரமாய் தரப்படும். பொறுமை அடையவும்)

ஆனால் மனிதன் நீங்கலாகவுள்ள மற்றும் சிருட்டிகள் தத்தமது குறிக்கோளை அடைவதற்காக எந்த எந்த வழியை எடுத்துக்கொண்டு இயங்கினாலும் அவைகளிடையே தங்கள் நோக்கமான பாதையில் (தீனில்) வேறுபாடோ கட்சிப்பற்றோ வெற்றி, தோல்வி கணிக்கும் சுபாவமோ போராட்டமோ கிடையாது. ஒரு மாடு புல்லையே உணவாகக் கொள்ளும்போதும் இன்னோர் மாடு வைக்கோலையே உணவாகக் கொள்ளும்போதும் அவற்றிடையே எவ்வித கட்சிப்பற்றும் போராட்டமும் ஏற்படுவ தேயில்லை. ஆனால் மனித இனம் மட்டும் எந்த நாட்டவன், எந்த இனத்தவனாயினும் சரி ஒரு வகுப்பாரின் கொள்கையை நடைமுறையை, மறுவகுப்பார் பிழையாகவே காண்கிறார்கள். ஒருவரின் கொள்கையை மற்றவர் குறை கூறினால் மாபெறும் யுத்தமே ஆரம்பமாகிவிடுகிறது. இவ்விதமான சொற்போர், மற்போர்களை நாம் என்றும் எவ்விடத்திலும் பார்க்கவே செய்கிறோம். எவரெவர் எந்தெந்தக் கொள்கையைப் பின்பற்றிச் செல்கிறார்களோ அந்த அந்தக் கொள்கையே சரியானது, உண்மையானது என்று சந்தோஷம் அடைகிறார்கள்.

فَتَقَطَّعُوٓا۟ أَمْرَهُم بَيْنَهُمْ زُبُرًا ۖ كُلُّ حِزْبٍۭ بِمَا لَدَيْهِمْ فَرِحُونَ

23:53 *எனினும்தங்களுடைய வேதத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டுஒவ்வோர் வகுப்பாரும்தங்களிடமுள்ளபிரிவைக்கொண்ட சந்தோஷமடைகின்றனர்.*

وَإِذَا قِيلَ لَهُمُ ٱتَّبِعُوا۟ مَآ أَنزَلَ ٱللَّهُ قَالُوا۟ بَلْ نَتَّبِعُ مَا وَجَدْنَا عَلَيْهِ
ءَابَآءَنَآ أَوَلَوْ كَانَ ٱلشَّيْطَـٰنُ يَدْعُوهُمْ إِلَىٰ عَذَابِ ٱلسَّعِيرِ

31:21 *அவர்களை நோக்கி அல்லாஹ் இறக்கியதைப் பின்பற்றுங்கள் என்று கூறப்பட்டால் அதற்கு அவர்கள் இல்லை எங்களைமூதாதையர்கள் எதன் மீதிருக்கக்கண்டோமோ அதனையே பின்பற்றுவோம் என்றுகூறுகின்றனர் அவர்களுடைய மூதாதையர்களை ஷைத்தான் நரக வேதனையின்பால் அழைத்திருந்தாலுமா? (பின்பற்றுவார்கள்) என்று குர்ஆன் கேட்கிறது.*

ஆனால் இவ்வளவு கட்சிப்பற்றோடும் சரியான, பிழையான கொள்கையோடும் வாழ்கிற இவ்வுலக மக்களின் செயல்படும் மக்களின் **குறிக்கோள் அல்லது நோக்கம்தான் என்ன?**இதைப்பெரும் பிரயாசையோடு ஆராய்ந்தால் ஒவ்வோர் மனிதனும், ஒவ்வோர் சிருஷ்டிப் பொருளும் தத்தமது பூரணத்தன்மையை அடைந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு, குறிக்கோளோடு தான் செயல் படுகின்றன, இயங்குகின்றன என்பது தெரியவருகிறது. இதை முன்பே கூறியுள்ளேன். தத்தமது பூரணத் தன்மையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஒவ்வோர் பொருளும் ஏதோ ஒரு (இனம் தொியாத) பூரணத்தன்மையில் இருந்துதான் தம் செயல்களை ஆரம்பித்திருக்க வேண்டும். விதையென்ற பூரணத் தன்மையிலிருந்து செயலை (பிரயாணத்தை) ஆரம்பித்து எத்தனை, எத்தனையோ மாற்றங்களைப்பெற்று (மர்த்தபாக்களைக் கடந்து) மீண்டும் விதையென்ற பூரணத்தன்மையில் முடிவடைந்ததுபோல. **ஆயினும் பூரணத்தன்மையில் இருந்த ஒன்று மீண்டும் பூரணத் தன்மையைப் பெறவேண்டியதில்லையே? செயல்பட வேண்டிய அவசியமில்லையே?பூரணத் தன்மையைப் பெறுவதற்காகவே செயல்படுகின்றன என்றால் ஆரம்பத்தில் பூரணத்தன்மை உடையவனாய் இருந்திருக்க முடியாதே?** இவ்வாறான பல சந்தேகங்கள் இவ்விடத்தில் நமக்கு ஏற்படுகின்றன. இவ்வாறான சந்தேகங்களை உடனடியாகத் தீர்க்கவும் முடியாமல் இருக்கிறது. ஏனென்றால் சிருஷ்டி என்பது என்ன? என்ற உண்மையை விளங்கிக்கொள்ளாத ஒருவர் மேற்காட்டிய சந்தேகங்களில் இருந்தும் விடுபடுவது மிகமிகக் கடினமான ஒரு விஷயமாகும். இந்த விபரமோ மிகமிகச் சிக்கல் நிறைந்ததாயும் சாதாரண அறிவு குறைந்த மக்களின் அறிவைத் திணறடிக்கக் கூடியதாயும் இருக்கிறது. ஆகவே, இச்சந்தேகங்களை நீக்குவதற்கு முன்னோடியாக, அறிவைத்தெளிவுபடுத்தக்கூடிய சில முக்கியமான விஷயங்களை விளக்கித்தந்தபின் “சந்தேக நிவர்த்தி” என்ற தலைப்பில் கேள்வி பதில் என்ற முறையில் உன் அறிவு சந்தேகமில்லாமல் ஏற்று உறுதிகொள்ளக் கூடிய வகையில் பூரணமான ஆதாரங்களோடு இன்ஷா அல்லாஹ் விபரம் தருவேன். கவலைப்படாதே

## (3)

**நா**ம் முன்பு கூறிய விபரப்படி மனிதனை மட்டும் நோக்குவோம். எம்முடைய பூரணத்தன்மையைப் பெற்றுக் கொள்ளவே செயல்படுகின்றோம் (அமல் செய்கிறோம்) என்று அறிந்தும் அறியாமலும் தத்தமது நோக்கத்தைப் புரிந்துகொண்டும் புரிந்து கொள்ளாமலும் செயல்படுகிற **எல்லா மனிதர்ளுமே பூரணத்தன்மையை அடைவார்களா? அப்படியாயின் பூரணத் தன்மையைப் பெற்றுக்கொண்ட மனிதர்கள் உண்டா? பூரணத்தன்மையைப் பெறக்கூடிய வழி வகைகள்தான் எவை?**என்ற கேள்விகளும் இங்கே நமக்கு ஏற்படுகின்றன. இவ்விதமான கேள்விகளுக்கும் மிகத்தெளிவாய், விரிவாய் விடைதர வேண்டியதாய் இருக்கிறது. நான் தௌஹீது விஷயமாய்த் தரப்போகிற உண்மைகளைப் பலமுறை வாசித்து விளங்கிக் கொண்டால் இறைவனுதவியால் சந்தேகங்கள் யாவும் நீங்கி உன் பூரணத்தன்மையை நீ பெற்றுக்கொள்வதற்கு அது உதவியாய் அமையலாம் என்று நம்புகிறேன். (பூரணத்தன்மையென்றால் மனிதனுடைய இறுதி முடிவான சாந்தி, சமாதானம் என்பதே கருத்தாகும்.)

சாந்தி என்பது உலக விஷயங்களை மட்டும் பொறுத்ததல்ல. உலக விஷயத்திலேனும் ஓரளவு சாந்தியைப் பெறவேண்டும் என்று மனிதன் விரும்பினாலும் பெரும்பாலும் சாந்தி கிட்டுவதாகத் தெரியவில்லை. அப்படி ஏதோ ஒன்று இரண்டு விஷயங்களில் ஓரளவு சாந்தி கிட்டினாலும் அது பூரண சாந்தியாய் இருப்பதே இல்லை. உதாரணமாக பசிக்கும் போது உணவு தேவைப்படுகிறது. உணவை உட்கொண்டால் சாந்தி கிடைக்கிறது. ஆனால் சில மணித்தியாலங்களின் பின் மீண்டும் உணவு தேவைப்படவே செய்கிறது இதேபோல் மற்றும் எல்லாக் காரியங்களையும் சிந்தனை செய்துபார். இவ்விதமான சாந்தியை தற்காலிக சந்தர்ப்ப சாந்தியென்று கூறலாமே தவிரப் பூரணசாந்தியென்று கூறமுடியாது அது தவிர நாம் சந்தர்ப்ப சாந்தியைப் பெற்றுக்கொள்ளக் கையாளும் ஒவ்வோர் செயலும் நோக்கமுடையதாய் இருப்பதால் பூரணசாந்தியென்பது வேறோர் விஷயமாய் இருக்கிறது என்பதும் உலக விவகாரங்கள் யாவும் அந்தப் பூரணசாந்தியைப் பெறும் நோக்கமுடையவையே என்பதும் தெரிய வருகிறது. அதாவது பூரணத் தன்மை அல்லது **சாந்தி என்பது அறிவைப் பொறுத்த ஒரு விஷயமாயும். அறிவு அறியப்படும் பொருளைப் பொறுத்த ஒரு விஷயமாயும் இருக்கிறது.** அல்லாஹ்வைவிடச் சிறந்த ஓர் உண்மை ஏது? அப்படியானால் அல்லாஹ்வை அறியும் அறிவு சிறந்ததாகவும் அதனால் அடையும் இன்பம் பெரிதாயும் சாந்தி தரக்கூடியதாகவும்தானே இருக்கும். ஆகையால்தான் உலக விஷயங்களில் அடையக்கூடிய தற்காலிக சாந்தியைச் சிற்றின்பம் என்றும், இறைவனை அறிந்து அடையக்கூடிய

பூரணசாந்தியைப் பேரின்பம் என்றும் கூறப்பட்டது. **ஈமான் என்பதன் உண்மை இந்தப் பூரணசாந்தியைப் பெறக்கூடிய அறிவைப்பெறுவதே.**

நாம் குறிப்பிட்ட பூரணத்தன்மையைப் பெற்று கொண்டவர்கள்தான் நபிமார்கள், றசூல்மார்களும் அவர்களைப் பின்தொடர்ந்த நல்லடியார்களான வலிமார்களும். ஆனால் மனிதர்களில் மிகப் பெரும்பாலோர் அறியாமையின் காரணமாக **வழி தவறிக் குருட்டு நம்பிக்கையில் சென்று கொண்டிருக்கும்போதும், தாங்கள் சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதாகவே நம்பியிருக்கிறார்கள்.**இவ் விஷயத்தை நாம் மிகமிகப் பொறுமையோடும் தெளிவான அறிவோடும் விளங்கி அறியவேண்டியதாய் இருக்கிறது. நபிமார்கள், றசூல்மார்கள் அவ்வக் காலங்களுக்கும், சமய சந்தர்ப்பங்களுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்றபடி மக்கள் தங்கள் குறிக்கோளை அடையக்கூடிய வழிவகைகளைத் தெய்வ சகாயத்தினால் அறிந்து அவ்வழிவகைகளைச் சரிவர கடைப்பிடித்தொழுகி அவர்களும் வெற்றியடைந்தார்கள். அவர்களைப் பூரணமாய் பின்பற்றிய ஒரு சில மக்களையும் வெற்றிபெறச் செய்தார்கள். ஆனால் நபிமார்கள் இறந்து பல வருடங்கள் சென்றபின் அறிவு குறைந்த, பேராசை, புகழாசை பிடித்த ஒரு சிலர் அந்த நபிமார் காட்டிச்சென்ற பாதைகளைப் புரட்டியே வந்திருக்கிறார்கள். இப்படி உண்மை புரண்டுபோன காலங்களில் ஒரு சில வலிமார்களைக்கொண்டு இறைவன் அந்த நபிமார் காட்டிச்சென்ற பாதைகளுக்குப் புத்துயிர் கொடுத்தே வந்திருக்கிறான். ஏறக்குறைய எல்லா றசூல்மார்களுடையவும் மறைவுக்குப்பின் இப்படித்தான் நடந்து வந்திருக்கிறது.

இறுதியாக வெளியான காத்தமுன் நபிய்யீன் முஹம்மது முஸ்தபா றசூலே கரீம் (ஸல்) எந்தக் காலத்துக்கும், எந்த இடத்திற்கும், எந்தச் சூழலுக்கும், எந்தச் சமூகத்திற்கும் பொருந்தக்கூடிய மிகமிக இலகுவான ஒரு வழியைத் தெய்வ சகாயத்தினால் பெற்றுத்தந்து, அவ்வழியிலேயே வாழ்ந்தும் காட்டிச் சென்றிருக்கிறார்கள். ஆனால் றசூல் (ஸல்) அவர்களால் இலகுபடுத்தித்தரப்பட்ட அந்த வழிக்குப் பெயர்தான் இஸ்லாம் என்பது. இந்த இஸ்லாம் என்ற பெயர்கூட றசூல் (ஸல்) அவர்களால் சூட்டப்பட்டதல்ல. இப்றாஹீம் (அலை) அவர்கள்தான் இஸ்லாம் என்ற பாதையில் செல்லும் மக்களை முஸ்லிம்களென்றும் பெயர் சூட்டியிருக்கிறார்கள். றசூல் (ஸல்) அவர்களுக்கு முந்திய நபிமார்கள் மறைந்த பின்பு எப்படியெல்லாம் (மார்க்கம்) உண்மை புரட்டப்பட்டுப் பொய்யை மக்கள் உண்மையென்று நம்பக்கூடியதாய் ஒரு சாரார் வழிகாட்டி வந்தார்களோ, அதேபோல எமது றசூல் (ஸல்) அவர்களுடைய மறைவுக்குப் பின்பும் ஒரு சாரார் உண்மையைப் புரட்டிப் பொய்யை மக்கள் உண்மையென்று நம்பக் கூடிய பல உபாயங்களைக் கையாண்டுதான் வந்திருக்கிறார்கள். **இவ்விஷயம் இன்றுள்ள மிகப் பெரும்பாலான மக்களுக்குத் தெரியாத ஒரு விஷயமாகவே இருக்கிறது.** அறிவு விளக்கமில்லாத பாமர மக்கள் இவ் விஷயத்தை அறியாமல் இருப்பது ஆச்சரியமல்ல. ஆனால், அறிவாளர்கள் உலமாக்களிலும் பெரும்பாலோர் அறியாமல் இருக்கிறார்கள் என்பதுதான் ஆச்சரியம். காரணம் என்னவென்றால் பட்டம் பெறும் நோக்கமாக மார்க்கக் கல்வியை அவர்கள் பெற்றுக் கொண்டார்களேயன்றி அவர்கள் கற்றறிந்த கல்வியின் உண்மை, பொய்யை அவர்கள் ஆராய்ந்தறியவில்லை. இன்ஷா அல்லாஹ் எம் அறிவுக்கெட்டியவரையில் நாம் ஆராய்ந்து உண்மையைக் கண்டறிவோம்.

## (4)

**ஹதீஸ்:** ***காலங்களில் சிறந்தது என்காலமும் பிறகு என் காலத்தை அடுத்தவர்களின் காலமும் பிறகு அவர்களை அடுத்தவர்களின் காலமும் ஆகும். பிறகு பொய் பரவிவிடும்.***

**அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி)**
**ஆதாரம்: திர்மிதீ.**

**இதே** போன்ற இன்னும் பல ஹதீஸ்கள் றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் அவற்றை விளக்குவோம். மேலே காட்டிய ஹதீஸில் குறிப்பிட்ட சிறந்த காலம் றசூல் (ஸல்) அவர்களுடைய வபாத்துக்குப் பிறகு சுமார் முப்பது வருடங்கள்தான் இருந்து இருக்கிறது. அதன் பின் உண்மை புரட்டப்பட்டு குர்ஆன், ஹதீஸ்களுக்கு மாறான படுபொய்கள் பல புகுத்தப்பட்டிருக்கின்றன. இன்ஷா அல்லாஹ் பொறுமையோடு விளங்கித் தெளிவு பெறுவோம்.

**ஹதீஸ்:** ***கடைசி நாளையில் வருகிற தஜ்ஜாலைவிட வேறு சிலதஜ்ஜால்களுக்குநான்மிகப் பயப்படுகிறேன் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூற அவர்கள் யாரென்று ஸஹாபாக்கள் வினவவழிகேட்டில் ஜனங்களைத் தள்ளிவிடுகிற இமாம்கள் என்று பதில் கூறினார்கள்.***

(இந்த இமாம்கள் யார்? என்பதை பின்னால் ஆராய்வோம்.)

**ஹதீஸ்:** ***ஆண்டவனே இமாம்களுக்கு நேர்வழிகாட்டி பாவங்களுக்கு மன்னிப்பளிப்பாயாக.***

**ஹதீஸ்:** ***இஸ்லாம் மார்க்கம் வெளியாகும்போது அற்பமாக உதவியற்றதாக இருந்ததுபோல் இனிமேலும் ஆகிவிடும். ஆகையால் உதவியற்றவர்களுக்குச் சோபனம் உண்டாகக் கடவது என்று றசூல் (ஸல்) கூறியபோது உதவியற்றவர்கள் யார்? என்று ஒருவர் வினவ எனது மார்க்கத்தில் மற்றவர்கள் கட்டுக்குலைத்தவைகளைவிருத்தி செய்தவர்களேயாவார்கள் என்று கூறினார்கள்.***

இஸ்லாமும் அதன் மூலக் கொள்கையும் புரட்டப்பட்டுள்ளது என்பதற்கு இவைபோல் அநேக ஆதாரங்கள் தென்படுகின்றன. உரிய இடங்களில் கவனிப்போம். இப்போது எடுத்துக்கொண்ட விஷயத்தை நோக்குவோம்.

## (5)

**இ**ஸ்லாம் என்றசொல் குர்ஆன் ஹதீஸ்களில் பல கருத்துக்களோடு பாவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பல கருத்துக்கள் மனிதர்களின் அறிவுத் தகமைக்கேற்றபடி பாவிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விஷயத்திலும் விரிவான விளக்கம் தரவேண்டியதாய் இருக்கிறது. ஆயினும் இறை அன்பைப் பெற விரும்பும் உனக்கு வேண்டிய ஓர் உண்மையை மட்டும் இவ்விடத்தில் கூறுவோம்.

இஸ்லாம் என்ற அறபுச்சொல் ஸலாமுன் (ஸலிம) என்ற சொல்லடியாய்ப் பிறந்த ஒரு சொல்லாகும். இதைப் பல அறிஞர்கள் ஆராய்ந்து விளக்கியுள்ளார்கள். ஸலாம் என்றால் சாந்தி என்பதுதான் கருத்து. இதில் தற்கால சந்தர்ப்ப சாந்தியும் உண்மையான பூரணசாந்தியும் அடங்கும். ஆகவே தீனுல் இஸ்லாம் என்றால் சாந்தி தரக்கூடிய பாதை(வழி) என்பதுதான் கருத்தாகும். இதில் சந்தர்ப்ப சாந்தியைப் பெறக்கூடிய வழியும் நிரந்தர சாந்தியைப் பெறக்கூடிய வழியும் பொதிந்திருக்கின்றன. சந்தர்ப்ப சாந்தியைப் பெற விரும்பும் மக்களை இஸ்லாம் என்ற சொல் உணர்த்தும் கருத்து வழிப்பட்டவர்கள் (முஸ்லிம்கள்) என்பதே. இது இஸ்லாத்தின் வெளிக்கோலமாகும். பூரணமான நிரந்தர சாந்தியை, இறைவனின் ஒன்றுதலைப்பெற விரும்பும் மக்களை இஸ்லாம் என்ற சொல் உணர்த்தும் கருத்து ஈமான் கொண்டவர்கள் (மூமீன்கள்) என்பதே இது இஸ்லாத்தின் உட்கோலமும் உயிருமாகும். இவ்விரண்டையும் “லாஹிறு”“பாதினு” என்று கூறப்படும்.

ஆனால் இஸ்லாம் என்ற சொல்லை சரிவர ஆராயாத ஒருசில பின்பற்றல்வாதிகள் இஸ்லாம் என்றால் சன்மார்க்கம் என்று கூறுகிறார்கள். வெளிநோக்காகப் பார்க்கும்போது துன்மார்க்கத்துக்கு எதிரானதாய் இஸ்லாம் தென்படுவதால் அதைச் சன்மார்க்கம் என்று கூறுவதில் தவறில்லையே என்றும் கருதுகிறார்கள். ஆனால் இஸ்லாம் என்றசொல் சன்மார்க்கம், துன்மார்க்கம் என்ற பாகுபாடு எதுவும் வெளியாகாமல் அவற்றைத் தன்னுள் அடக்கிக் கொண்டுதான் சாந்தி என்ற பொருளைக் கொடுக்கிறது. இவ்விடயத்தில் பல நுட்பங்கள் மறைந்திருக்கின்றன. இந்த நுட்பங்கள் அறிவு குறைந்த சாதாரண மக்களான அவாம்களுக்கு வேண்டியவையல்ல. எனினும் இறைவழி செல்லவும் இறை ஐக்கியத்தைப் பெற்றுச் சாந்தியடையவும் விரும்புகிற உனக்கு அந்த நுட்பமான உண்மைகள்அவசியம் வேண்டியவைகளாகும். ஆகவே இவ்விடத்தில் உன் உள்ளத்தில் பொதுப்படையாய்ப் பதித்துக்கொள்ளக் வேண்டிய ஓர் உண்மை என்னவென்றால் சன்மார்க்கம் துன்மார்க்கம் என்ற வேறுபாடுகள் சட்டத்தின் பிடியில் சிக்குண்டிருக்கும் அறிவினால் ஏற்படுகின்ற மருட்சி அல்லது ஒளித்திரை என்பதுதான். அதாவது ஏதோ ஓர் அடிப்படையை ஆதாரமாய்க் கொண்டுதான் சரி, பிழை, நன்மை, தீமைகளை நாம் கணிக்கின்றோம். ஆனால் உண்மையும் சாந்தியடையும் விபரமும் வெகுதொலைவில் இருக்கின்றன. இவ்விபரத்தை இந்த நூலில் “இஸ்லாத்தின் நோக்கம் என்ன?” என்ற தலைப்பில் உன் அறிவு பூரணமாய் ஏற்றுக்கொள்ளக் கூடிய விதமாய்ச் சரியான ஆதாரங்களோடு விளக்கியிருக்கிறேன்.

இந்த இஸ்லாம் என்ற பாதை(தீன்)வெறும் மூட நம்பிக்கைகளைக் கொண்டோ குருட்டுத்தனமான அனுஷ்டானங்களை (அமல்களை)க்கொண்டோ ஏற்படுத்தப்பட்ட ஓர் போலிமார்க்கமல்ல என்பது பேச்சளவில் கேள்வி மூலமாய் நம் எல்லோருக்கும் தெரியும். ஆயினும் முஸ்லீம்கள் என்ற போர்வையில் புகுந்துள்ள மக்களில் மிகப் பொரும்பாலாருடைய அறிவில் இஸ்லாம் என்றால், குருட்டுநம்பிக்கையோ குருட்டு அனுஷ்டானமோ பரவாயில்லை. எல்லோரும் சொல்வதுபோல நாமும் சொல்லிக் கொண்டால் செய்து கொண்டால் அதுதான் இஸ்லாம் என்று நம்பியிருப்பதாகவே நான் காணுகின்றேன். ஏனென்றால் மக்களில் பெரும்பாலானோர் கையாளும் நடை உடை பாவனை கலாச்சாரங்களான பழக்க வழக்கங்களையே இஸ்லாம் என்று நம்பியுள்ளார்களே அல்லாமல் **ஈமான் என்னும் கொள்கை விளக்கத்தை உள்ளத்தில் உறுதிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட செயல்விளக்கமே இஸ்லாம் என்பதையும் அறியாதவர்களாய் இருக்கிறார்கள்.**மேலும் இஸ்லாத்தில் விதிக்கப்பட்ட செயல் விளக்கங்கள்கூட இந்தக் காலத்தில் (ஸமானில்) தலைகீழாகப் புரண்டு கிடக்கின்றன என்பதும் மக்களின் அநேகருக்கும் உலமாக்களில் சிலருக்கும் கூடத் தெரியாது. இன்னும் பலர் இஸ்லாத்தை உண்மைப்படி கையாள முடியாதென்று நம்பியிருப்பதாகவும் தென்படுகிறது.

முஸ்லீம்களாகிய எம்மைப்பற்றி இப்படியெல்லாம் குறை கூறாலாமா? என்று வேண்டுமானால் என்னை நீ கோபித்துக் கொள். ஆனால் நீ இறை அன்பைப் பெற விரும்பியவனாய் பகுத்தறிவுடையாவனாக இருந்தால் நான் கூறப்போகின்ற விபரங்ளை உனக்கு வெறுப்பும் கசப்புமாக இருந்தாலும் பொறுமையோடு கேட்டுச் சிந்தனைசெய்து தெளிவுபெறு. **இஸ்லாம் அதன் மூலக் கொள்கையும் தலை கீழாகப் புரட்டப்பட்டு உருமாறிப்போய் கிடப்பதையும் இஸ்லாமென்ற போர்வையில் வாழுகிறநம்மில் மிகப்பலர் மதியிழந்து மருட்சியில் ஊறிக்கிடப்பதையும் இன்ஷா அல்லா என்னால் இயன்ற வரையில் விளக்கிக் காட்டுவேன். பொறுமையடைவாயாக.**

**அன்பிற்குரிய சகோதரனே!**

இஸ்லாம்என்ற பாதையில் ஐந்துகட்டாய கடமைகள் (பர்லுகள்) இருக்கின்றன என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த ஓர் விடயமதான். இந்தக்கட்டாய கடமைகள் ஐந்துதான் என்பதில் எவரும் எக்காலத்திலும் மாறுபாடான அபிப்பிராயம் தெரிவித்ததே கிடையாது. அதாவது லாஹிறுடைய உலமாக்களும் பாத்தினுடைய உலமாக்களும் இஸ்லாம் ஐந்து கட்டாய கடமைகளைக் கொண்டுள்ளது என்பதை ஏகமனதாக ஒப்புக்கொண்டேயிருக்கிறார்கள். இவ்விபரம்"புனியல் இஸ்லாமு அலாஹம்ஸின்"என்கிற ஹதீஸினால் உறுதிப்படுத்தப்படுகிறது.

இந்த ஹதீஸை கலீபா உமறேபாருக் அவர்களே அறிவித்தார்கள் என்பதிலும் எவருக்கும் ஆட்சேபனை கிடையாது. இந்த இஸ்லாத்தின் ஐந்துகட்டாய கடமைகளில் முதலாவதாக "லாஇலாஹ இல்லல்லாஹ் முகம்மதுறசூலுல்லாஹ்" என்ற கலிமாவைக்கொண்டு சாட்சி கூறவேண்டும். என்பதிலும் எவருக்கும அபிப்பிராயபேதமே கிடையாது. ஆனால் இது விடயத்தில குர்ஆன் ஹதீஸ்களையும் றசூல் (ஸல்) அவர்களுடைய சில செயல்களையும் ஆராய்ந்து பார்க்கும் போது சில சட்ட நுட்பங்கள் தென்படுகின்றன. அதாவது எவராவது ஒருவர் எக்காரணத்தைக்கொண்டேனும்"லாஇலாஹ இல்லல்லாஹ் முகம்மது றசூலுல்லாஹ்" என்ற கலிமாவை நாவினால் கூறி விடுவாரேயானால் நாம் அவரை ஒரு முஸ்லிம் என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சட்டம் அனுமதியளிப்பதற்குப் பல காரணங்கள் தென்படுகின்றன. அவற்றில் மிகமுக்கியமான காரணம் அவரை இஸ்லாம் என்ற கட்சியில் சேர்த்துப்பின் பயிற்சியளிக்கப்பட வேண்டும் என்பதுதான். இது சாதாரண மனிதர்களைப் பொறுத்த ஒரு விடயமாக இருக்கிறது ஏனென்றால் ஈமான் கொள்வதற்குப்பல பர்ளுகள் விதிக்கப்பட்டிருப்பதால் கட்சியில் சேர்த்துக் கொள்வதற்காகவே கலிமாவை விளங்கியறியாமல் கூறியவரையும் நாம் முஸ்லீமென்று ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சட்டம் அனுமதிப்பதையும் **ஈமான் கொள்பவர் விளங்கியறிந்து சாட்சி கூற வேண்டுமென்று சட்டம் தீர்ப்புக் கட்டுவதையும் நாம் அறிகிறோம்.**இதை விபரமாக பின்னர் விளங்கியறிவோம்.

ஆனால் இந்தச் சட்ட அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட சாட்சியம் (கலிமாவை விளங்கி அறியாமல் நாவினால் கூறுகிற சாட்சியம்) உலக காரியங்களுக்குப் போதுமானது என்றாலும் எந்த ஓர் உயர் பதவிக்கும் எம்மை இட்டுச்செல்லாது என்பது நிச்சயமாக உண்மையாகும். ஏனென்றால் மனதார விளங்கியறிந்து உண்மைதான் என்று ஏற்றுக்கொள்ளாத ஓர்விடயத்தில் சாட்சிகூறுதல் பொருந்தாது. உண்மைதான் என்று கண்டறியாததெரிந்துகொள்ளாத ஒரு விடயத்தில் சாட்சி கூறினோமென்றால் வெறும் பொய் கூறினோம் என்பதுதான் கருத்து. மேலும் எங்களை நாங்களே ஏமாற்றிக் கொண்டோம் என்றே நாம் நம்பவேண்டும். ஏனென்றால் ஈமான் கொள்வதற்கு நான்கு பர்ளுகள் விதியாய் இருக்கின்றன.

**1ஆவது**: கலிமாவை அட்சரப்பிழையில்லாமல் நாவினால் கூறுவது(இதுதான் சட்டம் அனுமதித்த சாட்சியம்) இது ஊமையர் பேரில் கடமையாகாது.

**2ஆவது**: நாவினால் கூறிய கலிமாவின் பொருளை விளங்கியறிவது.

**3ஆவது**: விளங்கியறிந்த, கலிமாவின் பொருளை உள்ளத்தில் பதித்துக்கொள்வது

**4ஆவது**: உள்ளத்தில் பதித்துக்கொண்ட உண்மையை நழுவவிடாமல் பாதுகாப்பது. இதற்காகத்தான் வெளிச்செயல்கள்தரப்பட்டுள்ளன.

(இவ்விபரத்தை வேறோரிடத்தில் விளக்குவோம்)

ஆகவே விளங்கியறியாமல் நான் ஈமான்கொண்டேன் என்று கூறுவது வெறும் மருட்சிப்பேச்சாகும். எங்களுடைய தாய்தந்தையர் உறவினர்களும் எங்களுடைய ஆசிரியர்களான உலமாக்களும் எங்களுடைய சிறுபராயத்திலேயே கலிமாவை கற்றுத்தந்திருக்கிறார்கள். வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை என்பதே அந்தத் தௌஹீதுக் கலிமாவின் பொருள் என்றும் இதுவே உண்மையான கருத்து என்றும் கற்பித்துத் தந்திருக்கிறார்கள். .இந்தக் கருத்தை ஒப்புக் கொண்டுவிட்டால் உண்மையாகவே நாம் ஈமான் கொண்டு விட்டோம், ஷிர்க்கில் இருந்தும் விடுபட்டுவிட்டோம் என்றே நாம் நம்பியிருக்கிறோம். அதாவது ஒரே இறைவனை நாம் ஏற்றுக்கொண்டால் இஸ்லாத்தின் முதலாவது கடமையான மூலக்கொள்கையை, ஏகத்துவக்கொள்கையை ஏற்றுக்கொண்ட ஒரு பூரண மூமீனாக மாறிவிட்டோம் என்றே கற்பிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் ஓரிறைக்கொள்கைக்கும் ஏகதெய்வக்கொள்கைக்கும் ஏகத்துவக்கொள்கைக்கும் வேறுபாடு என்ன? இவற்றில் இஸ்லாத்தின் உண்மையான கொள்கை எது? என்பதுகூட எமக்குத்தெரியாது. ஏனென்றால் எம்முடைய பாடசாலைகள் எதிலுமே இஸ்லாத்தின் கொள்கைவிளக்கம் எமக்குத் தரப்படுவதே இல்லை.

மேலும் கலிமத்துத்தையிபா, கலிமத்துஸ்ஸஹாதத், கலிமத்துத்தம்ஜீது, கலிமத்துத் தொளஹீது, கலிமத்துல் குபிர் என்று ஐந்து கலிமாக்களை எமக்கு உலமாக்கள் எம்முடைய சிறுபராயத்திலேயே கற்றுத்தந்திருக்கிறார்கள். இவற்றின் பொதுவான கருத்து யாதெனில் சர்வ வல்லமையுள்ள ஒரே இறைவனை ஏற்றுக்கொண்ட ஒருவர் பூரண மூமினாய் இருக்கிறார் என்பதுதான். அறபுபாஷை நமக்குத் தெரியாது என்றாலும் அப்பாஷையைக் கற்றறிந்த உலமாக்கள் எமக்குக் கற்பித்திருப்பதால் அவர்கள்

தந்தவிளக்கத்தையே நாம் முற்றிலும் நம்பியிருக்கிறோம். பெரும்பாலும் நாம் அவ்விளக்கங்களை ஆராய்வதே இல்லை. ஏனென்றால் அவ்விளக்கங்களில் எமக்குப்பூரண நம்பிக்கையுண்டு.

ஆனால் நாம் இமாமாக, வழிகாட்டியாக, வேதநூலாக ஏற்றுக்கொண்ட குர்ஆனைத் தெளிவான அறிவோடு ஆராய்ந்து பார்க்கும் போது நாம் அறிந்துள்ள கலிமாவின் கருத்தும் விளக்கமும் **எங்கள் உள்ளத்தில் பதிக்கபட்டுள்ள இஸ்லாத்தின் மூலக்கொள்கையும் மிகமிக தவறானது என்பதும் பிசகான விளக்கத்திலேயே நாம் எம்மை யறியாமலே ஊறியுள்ளோம் என்பதும் கலிமா ஒன்றேயொன்றுதான் என்பதும் உலமாக்கள் என்றபோர்வையில் புகுந்துள்ள ஒரு சில அறிவு குறைந்த மக்களால் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பதும் நம்மை நாமே தவறாக மூமீன்கள் என்று எடைபோட்டிருக்கிறோம் என்பதும் சந்தேகமில்லாமல் தெளிவாய்த் தெரியவருகிறது.**இதன் பூரணவிபரம் மிகத் தெளிவாய் விளக்கித்தரப்படும். பொறுமையடைவாயாக.

**ஹதீஸ்:** ***மனிதர்களில் ஓர்காலம் வரும், அப்போது இஸ்லாத்தின்நாமமேயல்லாதுஅதன் (உண்மை) சத்தியம் இராது. குர்ஆனில் எழுத்தேயல்லாது அதன் உண்மையான அர்த்தம் (கருத்து) இராது அவர்களின் மஸ்ஜித் (பள்ளிவாயில்)கள் நேர்வழியின்றிக் கெட்டுப்போய் இருக்கும். அவர்களின் உலமாக்கள் வானத்தின் கீழ் மிகக்கெட்ட ஜந்துக்களாய் இருப்பார்கள். என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அலி(றலி)**
**ஆதாரம்: பைஹக்கி,மிஸ்காத்**

**ஹதீஸ்:** ***இறுதிகாலத்தில் ஆற்றல் அனுபவமில்லாத மடையர்கள் வருவார்கள். வெளித்தோற்றத்தில் வெளியரங்கமான தொழுகை,நோன்பு, முதலாம் அமல்களில் மிகப் பேணுதலாயிருப்பார்கள். ஆனால் அவர்கள் கெட்ட கொள்கை (ஷிர்க்) உடையவர்களாகவும் பிசகான நம்பிக்கை (குருட்டுநம்பிக்கை) கொண்டவர்களாகவும் இருப்பார்களென்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூஸயீதில் குத்ரி (றலி)**
**ஆதாரம்: புகாரி**

**ஹதீஸ்:** ***அண்மையில் என் சமூகத்தவரிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். அப்போது ஒரு பிரிவார் ஏற்படுவார்கள். அவர்கள் நன்மொழி கூறுவார்கள். தீய செயலில் ஈடுபடுவார்கள். குர்ஆனை ஓதுவார்கள். அது அவர்கள் மார்பின் ஆரம்ப எலும்பையும் கடக்காது. (இருதயத்தில் அமையாது) வேட்டைப் பொருளில் இருந்து அம்பு வெளிப்படுவது போல மார்க்கத்தைவிட்டும் அவர்கள் அப்புறப்பட்டு விடுவார்கள். பின்னர்திரும்பவும் மாட்டார்கள். அம்பு அதன் கூட்டைஅடையும்வரை. அவர்கள்தாம்படைப்புக்களில் மிகக் கெட்டவர்கள். அவர்களைக் கொல்லுபவர்க்கும் அவர்களால் கொல்லப்படுபவர்க்கும் நல் வாழ்வுண்டாகட்டும். குர்ஆனின் பக்கம் அவர்கள் அழைப்பார்கள். ஆனால் அதில் அவர்களுக்கு எவ்வித சம்பந்தமும் இருக்காது. அவர்களை எவர் கொல்கிறாரோ அவர் அல்லாஹ்வை நெருங்கியவர்களில் மேலானவராயிருப்பார் என்று றசூல்(ஸல்) அவர்கள்கூறினார்கள்.அப்போதுநாயகமே! அவர்களின் அடையாளமென்னவென்று தோழர்கள் வினவினார்கள அடையாளம் மொட்டையடிப்பது என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அனஸ் (றலி)**
**ஆதாரம்: அபூதாவூத்**

(இன்றுள்ள வஹ்ஹாபிகளில் ஒரு பிரிவார் அவர்களுடைய ஷெய்க்கிடம் பைஅத் (தீட்சை) பெறும்போது தலைமுடியை மொட்டையடிப்பதாக நாமறிகிறோம். மேலும் உண்மையை மொட்டையடிப்பது, கப்றுகளை மொட்டையடிப்பது என்றும் பொருள் கொள்ள இடமுண்டு).

## (7)

**எ**ம்முடைய வழிகாட்டிகளான ஆசிரியர்கள் கலிமாவைப் பற்றியும் அதன் வலிமையைப் பற்றியும் எப்படியெப்படி எல்லாமோ எமக்கு வர்ணித்துக் கூறியிருக்கிறார்கள். இன்றும் கூறிக்கொண்டுதான் இருக்கிறார்கள். கேட்பதற்கு இன்பமாயும் மிகமிக ஆச்சரியமாகவுந்தான் இருக்கிறது. குர்ஆன்கூட எத்தனையோ இடங்களில் எத்தனையோ வகைகளில் கலிமாவைப் புகழ்ந்துதான் கூறுகிறது.

أَلَمْ تَرَ كَيْفَ ضَرَبَ ٱللَّهُ مَثَلًا كَلِمَةً طَيِّبَةً كَشَجَرَةٍ طَيِّبَةٍ أَصْلُهَا ثَابِتٌ وَفَرْعُهَا فِى ٱلسَّمَآءِ

14:24 *(நபியே!தௌஹீதுக் கலிமா என்னும்) நல்வாக்கியத்திற்கு அல்லாஹ் எவ்வாறு (மிக்கமேலான) உதாரணத்தைக் கூறுகிறான் என்பதை நீர் காணவில்லையா? (அது)வானத்தை அளாவிய கிளைகளையும் அழப்பாய்ந்த வேர்களையும் உடைய ஒரு நல்ல விருட்சத்துக்கு ஒப்பாக இருக்கிறது.*

تُؤْتِىٓ أُكُلَهَا كُلَّ حِينٍۭ بِإِذْنِ رَبِّهَا ۗ وَيَضْرِبُ ٱللَّهُ ٱلْأَمْثَالَ لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَذَكَّرُونَ

14:25 *(அம்மரம்)இறைவனின் அருளைக்கொண்டு எக்காலத்திலும் கனிகளைக் கொடுத்துகொண்டே இருக்கிறது. மனிதர்கள் நல்லுணர்ச்சி பெறும்பொருட்டு அவர்களுக்கு (இதை)அல்லாஹ் உதாரணமாக்குகிறான்.*

وَمَثَلُ كَلِمَةٍ خَبِيثَةٍ كَشَجَرَةٍ خَبِيثَةٍ ٱجْتُثَّتْ مِن فَوْقِ ٱلْأَرْضِ مَا لَهَا مِن قَرَارٍ

14:26 *கெட்ட (கலிமாவுக்கு) வாக்கியத்திற்கு உதாரணம் பூமியில் வேர்கள் அறுபட்டு (பட்டுப்போன) கெட்ட மரத்திற்கு ஒப்பாகும். அது நிலைத்திருக்காது.*

என்று குர்ஆன் விபரம் தருகிறது. ஆனால் எம் சமூகமக்களில் மிகப் பெரும்பாலாருடைய வாழ்வில் கலிமாவைக்கொண்டு ஏதாவது பிரயோசனம் அடைந்திருக்கிறோமா? என்றால் **பெரும்பாலும் அப்படியோர் பிரயோசனம் பெற்றிருப்பதாக தெரியவில்லை.**ஏனென்றால் நாம் பட்டுப்போன கெட்ட மரத்திற்கொப்பான வாக்கியத்தை நல்ல மரத்துக்கொப்பான நல்வாக்கியம் என்று நம்பிக்கொண்டிருக்கிறோம்போல் தென்படுகிறது. ஆனால் நல்லடியார்களான மக்களின் வாழ்வுகளில் எத்தனையோ மகத்தான காரியங்கள் கலிமாவினால் சித்தித்து இருப்பதாக சரித்திரங்கள் எமக்கு விபரம் தருகின்றன. இப்போதும் மிகச் சிலருடைய வாழ்வுகளில் ஏதேதோ சிற்சில அபூர்வ நிகழ்ச்சிகள் கலிமாவினால் சித்தித்திருப்பதாக நாம் காணுகிறோம்.

يُثَبِّتُ ٱللَّهُ ٱلَّذِينَ ءَامَنُوا۟ بِٱلْقَوْلِ ٱلثَّابِتِ فِى ٱلْحَيَوٰةِ ٱلدُّنْيَا وَفِى ٱلْءَاخِرَةِ ۖ وَيُضِلُّ ٱللَّهُ ٱلظَّٰلِمِينَ ۚ وَيَفْعَلُ ٱللَّهُ مَا يَشَآءُ

14:27 *ஈமான் கொண்டவர்களை இம்மையிலும் சரி மறுமையிலும் சரி (கலிமாவெனும்) உறுதியான வாக்கைக்கொண்டு அல்லாஹ் அவர்களை உறுதிப்படுத்துகிறான். அக்கிரமக்காரர்களைத் தவறான வழியில் விட்டுவிடுகிறான். அல்லாஹ் நாடியதைச் செய்கிறான். (என்று அல்குர்ஆன் விபரம் தருகிறது)*

ஆகவே, நாம் கலிமாவைக் கூறிக்கொண்டும் நம்பிக்கொண்டும் இருக்கும்போதும் பிரயோசனம் பெறாமல் பெறமுடியாமலும் இருப்பதன் காரணமென்ன? என்பதை ஆராயவும் பிரயோசனம் பெறக்கூடியவழி வகைகளைக் கண்டறியவும் வேண்டியவர்களாய் இருக்கிறோம். எமது இமாமான குர்ஆனிலுள்ள 7-59, 7-65, 7-73, 7-75, 7-85, 41-43, 21-25 போன்ற ஆயத்துக்கள் எமக்கு மிகப் பெரிய உண்மையை வெளிப்படுத்துகின்றன. (இவ்வாயத்துக்களின் விபரம் உரிய இடத்தில் தரப்படும்) உலகில் தோன்றிய நபிமார்கள் றசூல்மார்கள் அனைவரும் ஏதோ ஓர் கொள்கைவிளக்கமான சித்தாந்தத்தையும் அக்கொள்கை விளக்கத்தை உள்ளத்தில் உறுதிப்படுத்துவதற்காகவே செயல்களையும் (அமல்) தந்துள்ளார்கள் என்பது தெளிவாகவே தென்படுகிறது. இவ்விடயத்தை இஸ்லாத்தின் நோக்கம் என்ன? என்ற தலைப்பில் மிகவிரிவாய் விளக்கித் தருவேன். பொறுமை அடையவும். நாம் முன்புகாட்டிய ஆயத்துக்களின் விபரப்படி "கொள்கை விளக்கம்" இஸ்லாத்தின் உயிர் என்பதும் "இபாதத்" என்பது இஸ்லாத்தின் உடல் என்பதும் தெரியவருகிறது. இக்கொள்கை விளக்கத்தின் பெயர்தான் ஈமான் (விசுவாசம்) என்பது.

இந்தக்கொள்கை விளக்கத்துக்குரிய மூலமந்திரமான கலிமாவின் பொருளை ஒருசாரார் எமது உள்ளத்தில் தவறானமுறையில் தவறான விளக்கங்களோடு பதித்துவிட்டிருப்பதால் எமது கொள்கையின் (சித்தாந்தத்தின் ஈமானின்) உண்மையான விபரம் தெரியாதவர்களாய் இருக்கின்றோம். இந்த விபரம் எமக்குத் தெரியாமையால் செயல்களைமட்டும் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுகிறோம். இச்செயல்கள் நோக்கத்தை (கொள்கை)யை உறுதிப்படுத்துவதற்காகச செய்யப்படாவிட்டால் அவை செத்துப்போன உடலுக்கு ஒப்பாக அல்லது வேரறுபட்டுக் கெட்டுப்போன மரத்துக்கொப்பாக இருக்கின்றன. இச்செயல்கள் எமக்கு எப்படிப் பிரயோசனமளிக்கும். (கொள்கை விளக்கத்தைப் புரட்டியவர்கள் யார்? ஏன் புரட்டினார்கள் என்பதை விளங்கிக் கொள்ளக் கூடிய ஆற்றல் இப்போது உன்னிடமில்லை என்பதை இறையுதவியால் நான் அறிவேன். ஆகையால் தயவுசெய்து பொறுமையடைய வேண்டும். விபரம் பூரணமாய்த்தருவேன்)

## (8)

**நா**ம் கற்றுள்ள, கற்கும் மதநூற்களில் பெரும்பாலானவையும் எமது ஆசிரியர்களில் பெரும்பாலானவர்களும் என்ன கூறுகிறார்கள் என்றால் எவ்விதமான துர்க்கிருத்தியங்களிலும் ஈடுபடக் கூடாது என்றும் அப்படி ஈடுபடுவது மார்க்க விரோதமென்றம் கூறுகிறார்கள். ஆனால் துர்க்கிருத்தியங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளக்கூடிய உபாயங்கள் எவை? என்பதைப் பெரும்பாலானோர் கூறுவதேயில்லை. ஏதோ ஒருசிலர் ஒரு சில உபாயங்களைக் கூறினாலும் அந்த உபாயங்களைக்கையாண்டு மக்களில் பெரும்பாலானோர் சீர்திருத்தம் அடைந்திருப்பதாகவும் தெரியவில்லை. எமது அறிவாளர்களில் மிகப்பலர் கூறும் உபாயங்களில் ஒன்று ஆசையைக் கட்டுப்டுத்தவேண்டும் என்பதே. ஆனால் ஆசையைக் கட்டுப்படுத்துவது அல்லது அடக்குவது பேச்சளவில் இலகுபோல் தென்பட்டாலும் செயலளவில் மிகக் கடினமான ஓர் விஷயம்தான். இந்த உபாயத்தைக் கையாண்டு வெற்றிபெறுவதும் கடினம்தான். ஏனென்றால் மனிதராகியநாம் எமது சிறுபராயம்தொடங்கியே புலனாட்சிக்கு அடிமையாகிப் பழக்கப்பட்டுவந்திருக்கிறோம். எம்மிடமுள்ள அல்லது நாம் அனுபவிக்கும் பொருளைவிட இன்னொன்று அழகானது, திறமையானது, இனிமையானது. என்று நாம் அறியும்போது, அப்பொருள் எம்முடையதல்ல என்பது நமக்குத் தெரிந்திருந்தாலும் கூட எம்முடைய எண்ணம் (ஆசை) அப் பொருளை இச்சிப்பது (மனம்பாய்வது) ஆச்சரியமான ஓர் விஷயமல்ல. இது மனித உள்ளங்களுக்கு இறைவனால் விதிக்கப்பட்ட ஓர் இயற்கை நியதியேயாகும்.

இந்த மனப்பாய்ச்சலை ஆசையைக் கண்டிப்பாய் கட்டுப்படுத்தியே ஆகவேண்டும் என்றால் தண்டனைக்குப் பயப்படும் அச்சத்தினால் அல்லது வேறோர் பேராசையினால் பலாத்காரமாய்த்தான் கட்டுப்படுத்தவேண்டியதாய் இருக்கிறது. இப்படிச்செய்தாலும் ஆசையை மறைத்துக்கொண்டோம் என்பதே கருத்தல்லாமல் ஆசையை வெற்றிகொண்டுவிட்டோம் என்பது கருத்தாகாது. மேலும் பலாத்காரமாகப் போடப்படுகிற கட்டுப்பாடுகள் சரியான சந்தர்ப்பசூழ்நிலைகள் வாய்க்கும்போது தவிடு பொடியாகிவிடும் (உடைந்துவிடும்) என்பதும் நிச்சயம். மேலும் சுவர்க்க போகத்தை ஆசைகொள்வதால் சின்ன ஆசைகளை அடக்கலாம் என்றால் இதுவும் அறிவு ஏற்றுக்கொள்ளாத ஓர் விஷயமேயாகும். ஆனால் அறிவுகுறைந்த சிந்தனையில்லாத பாமரமக்களுக்காக இவ்வுபாயங்களைக் கூறுவது சரிதான் என்றாலும் இறைவனின் பேரன்பை (ஐக்கியத்தை)ப் பெற முயற்சிக்கும் அறிவுத்தாகம் கொண்டமக்களுக்கு இவ்வுபாயங்கள் பொருத்தமானவைகளேயல்ல. ஆகவே இவ் விஷயத்திலும் நாம் ஆராய்தல் செய்ய வேண்டியவர்களாகவே இருக்கிறோம். ஏனென்றால் நல்லடியார்களான மகான்கள் எந்த எந்த உபாயங்களை எப்படியெப்படிக் கையாண்டு வெற்றி பெற்றார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியாவிட்டால் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வெற்றிபெற(சாந்தியடைய) எம்மால் முடியமலே போய்விடலாம்.

## (9)

**அ**டுத்ததாக தொழுகை இஸ்லத்தின் தூணாகும். தொழாதவன் காபீராகிவிடுவான், அல்லது காபீராகியே விட்டான், (மூமீனையும்) முஸ்ரீக்கையும் பிரிப்பது தொழுகையேதான், ஆகையால் எது எப்படியானாலும் பரவாயில்லை தொழுதே ஆகவேண்டும், தொழுகை மூமின்களின் கட்டாய கடமையாய் இருப்பதால் தொழுகையை மிகமிகக் கண்டிப்பாய் எடுத்துக்கொள்ள வேண்டும்? அப்படி எடுத்துக்கொண்டால் எல்லாமே சரியாகிவிடும். என்றெல்லாம் எமது ஆசிரியர்களும் சமூகப்பெரியார்களும் வற்புறுத்துகிறார்கள். அதுமட்டுமல்லாமல் தொழாதவனுடைய பேச்சைக் கேட்பது ஹறாம் என்றுகூடக் கூறுகிறார்கள. ஸுஜூது இல்லாத வணக்கமே கிடையாது. என்றும் ஸுஜூது செய்யாதவனுடைய பேச்சைக் கேட்கக்கூடாது என்றும் இன்னும் சில் அறிவுமேதைகள் விளக்கம் கூறுகிறார்கள்.

இறைவனுக்கு ஸுஜூது செய்யாத ஒருவனுக்கு, உண்மையன இபாதத்தில் ஈடுபாடில்லாத ஒருவனுக்கு, ஞானத்தின்வாசல் திறப்பதேயில்லை. என்பதை இவர்கள் அறியவில்லை. செயலில்லாதவனுடைய பேச்சைக் கேட்கக்கூடாது என்று கூறுகிறமேதைகள், தங்களிடமுள்ளவைபோன்ற (வேஷச்) செயல்கள் அந்த அறிஞனிடமுள்ள (அமல்களை) செயல்களைக் கண்டு கொள்ளக்கூடிய அறிவுக் கண்களும் இம்மேதைகளிடத்தில் இல்லையென்பதும் உண்மைதான். இம்மேதைகள் செயல், செயல் என்று கூறுவதெல்லாம் உலகமக்களையும் தம்மையும் ஏமாற்றிக் கொள்வதற்காகத் தங்களால் கையாளப்படும் வெளிவேஷ நடிப்புக்களைத்தானே! இந்த மேதைகள் தொழுகையற்ற ஸுஜூது செய்யாத அரசாங்க அதிகாரிகளின் சொற்களை எந்தச் சட்டத்திற்கமைவாய்க்

கேட்கிறார்ளோ நான் அறியேன். இவர்கள் தங்களுடைய பேச்சுக்களுக்கு எவ்விதமான ஆதாரங்களைக் கொண்டுள்ளார்களோ அதையும் நான் அறியேன். ஆனால் இவ்வகையினர் தங்களை அறிவு மேதைகளாக எடை போட்டுக்கொண்டு திமிர் பிடித்தவர்களாய் இருப்பதைப்பற்றி நான் மிகமனவருத்தமும் வெட்கமும் அடைகிறேன். ஒவ்வோர் கல்விமானுக்கும் மேலான ஒவ்வோர் கல்விமானை (அறிஞனை) நான் வைத்திருக்கிறேன் என்று இறைவன் கூறுவதை இவ்வகையினர் மீண்டும் வாசித்து விளங்கவேண்டும். ஓதுவீராக என்பதே எமக்கருளப்பட்ட முதல் வசனம் என்பதை இவர்கள் மீண்டும் ஆராய்தல் செய்யவேண்டும்.

**இவ்விதமான, மதிமாறட்டமான, புரட்டல்களுக்கும் ஏமாற்றுப் பேச்சுக்களுக்கும் குர்ஆனிலோ, ஹதீஸிலோ, ஆன்றோரின் வாக்குகளிலோ எவ்விதமான ஆதாரங்களும் கிடையாது.** சிந்திக்க ஆற்றலில்லாத பாமர மக்களை ஏய்ப்பதற்கு இவ்வித மருண்ட வார்த்தைகளைக் கூறுவது மனித குலத்தை அழிவுக்கிடங்கில் தள்ளிவிடுவதற்கு ஒப்பான விஷமச்செயலாகும்.

وَكَذَٰلِكَ جَعَلْنَا فِى كُلِّ قَرْيَةٍ أَكَـٰبِرَ مُجْرِمِيهَا لِيَمْكُرُوا۟ فِيهَا ۖ وَمَا
يَمْكُرُونَ إِلَّا بِأَنفُسِهِمْ وَمَا يَشْعُرُونَ

6:123 *அன்றி இவ்வாறே ஒவ்வோர் ஊரிலும் ஆங்காங்கேயுள்ள பாபிகளையே நாம் தலைவர்களாக்கியிருக்கிறோம். அங்கு அவர்கள் விஷமம் செய்து கொண்டிருப்பார்கள். எனினும். அவர்கள் தங்களுக்கேயன்றிச் சதிசெய்துவிடமுடியாது. (இதை) அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. (விஷமம் கொலையைவிடக் கொடியது என்று குர்ஆன் விபரம் தருகிறது)*

**ஹதீஸ்:** ***அறிவு ஈமான்தாரிகளின் தவறிப்போன பொருளாகும். எனவே அவர் அதனை எங்கு அடையப்பெறினும் அது அவருக்கே உரிமையுள்ளதாகும்***

**அறிவிப்பவர்: அபூஹுறைறா (றலி)**
**ஆதாரம்: திர்மிதீ**

இன்னும் சில அறிவாளர்கள் தங்களுடைய பிரசங்க மேடைகளில் அவர்களுடைய குறிக்கோளுக்கமைவாய், அவர்களுடைய (வஹ்மு) பேதபுத்தியினால் அறிந்துள்ள விளக்கங் களுக்கமைவாய் குர்ஆன் ஹதீஸ்களைப் புரட்டி வியாக்கியானம் செய்கிறார்கள். யாராவது சுயசிந்தனையும் பகுத்தறிவும் உடைய ஒருவர் அந்த பேச்சாளரின் விளக்கம் பிழையானது என்று கூறி குர்ஆன் ஹதீஸ்களின் சரியான ஆதாரங்களைக் காட்டினாலும், அந்தப் பிரசங்கமேதைகள் என்ன கூறுகிறார்களென்றால், இது தவறான வளக்கம். குர்ஆனைத் தவறாக விளங்கிக்கொண்ட வழிகெட்டவர்களின் விளக்கம் இவ்விதமான விளக்கத்தைக் கேட்பதே ஹறாம் என்கிறார்கள். மேலும் தாங்களே சுன்னத்து வல்ஜமாஅத்துக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தாங்களே சுவர்க்கம் போகிறவர்கள் என்றும் கூறிப்பாமர மக்களை ஏமாற்றி விடுகிறார்கள். யாராவதொருவர் பகுத்தறிவைத் துணையாய்க் கொண்டு சந்தேக நிவர்த்திக்காக ஓர் நியாயமான கேள்வியைக் கேட்டாலும் உடனே குபிர்க் கலிமா சொல்லிக்கொடுக்கிறார்கள். இந்த எத்திவைக்கும் கூட்டத்தார் கலிமாவை பற்றியும் குபிர் ஷிர்க்கைப்பற்றியும் என்ன நினைத்திருக்கிறார்களோ நான் அறியேன்.

ஆனால் யாருக்கு யார், எதை எதற்காக எப்போது எப்படி எத்திவைப்பது என்பதைப் பகுத்தறிவுடைய ஒவ்வோர் மனிதனும் அறிந்திருக்க வேண்டும் என்றுதான் என்னால் கூறமுடியும்.

**ஹதீஸ்:** ***அறிவைக் கற்பிக்கிறவன் அதைக் கேட்பவன் அதற்குச் செவி சாய்ப்பவன் அதை நேசிப்பவன் ஆகிய நான்கு வகுப்பார் மாத்திரம் கூலியைப்பெற்றுக்கொள்வதினாலும் அறிவுடைய பெட்டகத்துக்குத் திறவுகோல் கேள்வியாய் இருப்பதனாலும்அறிவைக்கேட்டுக் கற்றுக்கொள்வார்களாக.***

என்றுதான் றசூல்(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் எமது அறிவுக்கும் அமல்களுக்கும் வழிகாட்ட முற்பட்டுள்ள எத்திவைக்கும் கூட்டத்தைச் சேர்ந்தோர் நியாயமான கேள்விகளுக்கேனும் இடமளிப்பதாய் தெரியவில்லை. மேலும் கேள்விகேட்பதே நாஸ்த்தீகவாதம் என்று முடிவுகட்டிவிடுகிறார்கள். ஆமாம் நரிகளின் குகைகளில் நாஸ்த்தீகவாதம் குடியிருப்பதில்லை என்று இங்கர்சால் கூறுவது முற்றிலும் உண்மைதான். எவன் ஒருவன் பிறருடைய நன்மைக்காகப் பாடுபடுகிறேன் என்று கூருகிறானோ அவன் பிறருக்கு இன்னல்தரும் மகா மூடனாக, அல்லது மகாபெரிய அறிஞனாகவே இருக்கவேண்டும் என்பதை நாம் உணரத்தான் வேண்டும். **ஆனால் அறிஞனால் மக்களுக்கேற்படும் இன்னல்கள் இறைவனுடைய (றஹ்மத்) அருளாகவும் மூடனால் ஏற்படும் இன்னல்கள் இறைவனுடைய தண்டனையாகவும் இருக்கும் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.**

எமது சமூக மக்களிடையே எவ்வளவோ தப்புத்தவறான மார்க்கவிபரங்கள், நல்லநோக்கோடும், தீயநோக்கோடும் புகுத்தப்பட்டிருக்கின்றன. தீய காரியங்களை எடுத்துப்பேசிப் பிறரைக்குறை கூறும் நோக்கோடு ஏதோவெல்லாம் நான் கூறுவதாகக் கருதவேண்டாம். நீ இதுவரை அறியாமல் இருந்த, அல்லது அறிந்தும் பூரணமாய் ஒப்புக்கொள்ளமுடியாமல் திணறிக்கொண்டிருந்த மிகப்பெரிய ஓர் உண்மையை விளக்கி உன் சந்தேகங்களை நீக்கி வைக்க வேண்டும் என்பதற்காகவே நான் பிறரைக் குறைகூறும் முயற்சியில் இறங்கினேன் என்பதையும் இந்தக் குறைகூறும் விஷயம் இவ்விடத்தில் ஆமோதிக்கப்பட்ட ஓர் விஷயமே என்பதையும் முதலில் உனக்கு சொல்லி வைக்கிறேன்.

எம் சமூகத்திலுள்ள சித்தசுத்தியும் தெளிவான ஆராய்வும் உள்ள ஒரு சில நல்ல உலமாக்களைத் தவிர பெரும்பாலான அறிஞர்கள் யானையைத் தடவிப்பார்த்த குருடர்கள்போலவே மார்க்கத்தின் உயிரான தௌஹீது (ஈமான்) விஷயத்தில் தென்படுகிறார்கள். யானையின் செவியைத் தடவியவன் யானை சுளகுபோன்றது என்று கூறுகிறானேயன்றி யானையின் ஓர் அங்கத்தையே நான் தடவிப்பார்த்தேன் என்று உணர்கின்றானில்லை. யானையின் எல்லா அங்கங்களையும் தடவிபார்க்கக் கூடிய வாய்ப்பும் இவனுக்கில்லை. யானையின் உண்மையான தோற்றத்தைக் கண்டறியக்கூடிய கண்ணும் இவனுக்கில்லை இதேபோல யானையின் காலைத் தடவியவன் யானை உரலைப்போல என்று கூறுகிறான். துதிக்கையைத் தடவியவன் யானை உலக்கையைப் போல என்று கூறுகிறான் வாலைத் தடவியவன் யானை துடைப்பத்தைபோல என்று கூறுகிறான். இவர்களின் பேச்சைக் கேட்டுக்கெண்டிருந்த இன்னோர் குருடன் யானை ஏறக்குறைய ஒரு வீட்டைப்போல என்று அனுமானிக்கிறான். இவர்கள் சகலருடையவும் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த இன்னொருவன், யானையைக் காணக்கூடிய கண்ணிருந்தும் அதைப் பார்த்துக் கண்டறியாமல் குருடர்களின் அனுமானிப்பை ஆதாரமாய்க்கொண்டு இடத்துக்கும் கால சூழ்நிலைகளுக்கும் ஏற்றபடி புழுகிப் புகழ்ந்து பிரசங்கமாரி பொழிகிறான். புஸ்தகம் புஸ்தகமாக எழுதித்தள்ளுகிறான். ஆனால், யானையைக் கண்ட பார்வையுடைய இன்னொருவன் மவுனியாகிவிடுகிறான். ஏனென்றால், குருடர்களுக்கு யானையைப் பற்றிய விபரம் கொடுப்பது தன்மீது கடமையல்ல என்பதற்காகவும், தன்பேச்சைக் குருடர்கள் நம்பமாட்டார்கள் என்பதற்காகவும்தான். ஆனால் பார்வையுடைய ஒரு சிலர் யானையை பார்க்கிறார்கள், பழகுகிறார்கள், அனுபவத்தை அடைகிறார்கள் யானையின் உண்மையைக் குருடர்களுக்குக் காட்டிக் கொடுப்பது தம் கடமை என்பதை அறிகிறார்கள், குருடர்களின் பார்வையை ஓரளவேனும் தெளிவுறச் செய்யக்கூடிய சிற்சில தத்துவங்களையும் அவர்கள் இறைவனிடமிருந்து பெருகிறார்கள. தம்கடமையைச் செய்ய முற்படுகிறார்கள் இவ்வகையினர் ஒவ்வோர் சமானிலும் மிகமிகச் சிலர்தான் இருக்கிறார்கள் .

நாம் கூறிய யானை என்பதை ஈமான் அல்லது உண்மையான தௌஹீது என்று உணர்ந்து கொள்ளவேண்டும். அனுமானத்தை ஆதாரமாகக்கொண்டு புஸ்த்தகம், கிதாபுகளை எழுதுபவர்கள் அல்லது பிரசங்கிப்பவர்கள் கண்ணிருந்தும் யானையைக் கண்டறியாதவர்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மற்றோர்களுடைய விஷயம் இப்போது நமக்கு அவசியமில்லை. ஆனால், இந்த எழுத்தாளர்கள் பிரசங்கிகளைப் பின்பற்றியொழுகும் மக்கள் நியாயமான அளவு தொழுகை முதலாம் இபாதத்க்களைச் செய்யவே செய்கிறார்கள். உம்முல் குர்ஆன் என்று வர்ணிக்கப்படுகின்ற அல்ஹம்து சூறாவை நாளொன்றுக்கு சுமார் பதினேழு முறையாவது ஓதி முடிக்கிறார்கள். நம்மிடையே ஏறக்குறைய 50,60 வருடங்களுக்கும் அதிகமாகத் தொழுகையில் ஈடுபடுவர்களும் உண்டு. இந்தத் தொழுகையாளர்களான எம்மில் மிகப் பலர் தொழுகையின் போது உன்னுடைய **நல்லடியார்கள் சென்ற நேரான பாதையில் சீராக வழிநடாத்து என்று கேட்ட பிரார்த்தனை (துஆ) ஒப்புக்கொள்ளப்பட்டதா? இல்லையா? என்பதைக்கூட சிந்திப்பதே இல்லை. ஏனென்றால் அந்த நேரான பாதை (ஸிறாத்துல் முஸ்தகீம்) ஆகிறாவில் உள்ளதுதானே என்று மருட்சியடைந்தும் மயக்கப்பட்டுமிருக்கிறோம். துன்யாவில் ஸிறாத்து என்ற நேரான பாதை உண்டு என்பதும் இப் பாதையை துன்யாவில் கடந்து செல்பவரே ஆகிறாவிலும் அப்பாதையைக் கடந்து செல்வார் என்பதும் எமக்கு அறிவிக்கப்படவில்லை.**நாம் அதைப்பற்றிச் சிறிதேனும் சிந்திக்கவும் இல்லை. துன்யாவுடைய விஷயம் ஒரு சதம் பெறுமதியானதாய் இருந்தாலும் கூடப் பலமுறை சிந்தனைசெய்கிற பலர் தீனுடைய விஷயத்தில் பெரும்பாலும் சிந்திப்பதே கிடையாது.

பல வருடங்கள் நேரான பாதையில் சீராக வழிநடாத்து என்று பிரார்த்தனை செய்துகொண்டிருந்த எம்மில் மிகப்பலர் ஐந்து ரூபாய் வருமானத்துக்காகப் படுபொய்யையே கூறிவிடுகிறோம். எம்மைவிட மற்றவன் ஐந்துரூபாய் கூடுதலாக வைத்திருக்கிறான் என்றால் உடனே பொறாமைப்படுகின்றோம். எம்மைவிடக் குறைவாக வைத்திருக்கிறான் என்றால் அவனை இழிவாகக் கருதுகின்றோம். **நாம் கூறுவது உண்மைதான் என்றால் நாம் வருடக்கணக்கில் கேட்டுவந்த பிரார்த்தனையின் நிலைமை என்ன? அப்பிரராத்தனை இடம்பெற்ற தொழுகையின் நிலைமைதான் என்ன?** ஐம்பது அறுபது வருடங்களாக நேரான வழியைக் கேட்டுக்கொண்டிருந்த அதே மனிதன் குர்ஆனை மறுத்து எதிர்க்கவும், மூடமக்களான எம்முன்னோரில் சில காட்டிய தவறான பாதையே சரியானதென்றும் தீர்ப்புக் கட்டவும் செய்கிறானென்றால் **இம்மனிதன் இறைவனிடம் பிரார்தனை செய்தபாதை எது? எதற்காக?** இவைபோன்ற மற்றும் விஷயங்களை நீயே சிந்தனை செய்துபார். விபரித்தால் பெருகும்.

وَإِذَا قِيلَ لَهُمُ ٱتَّبِعُواْ مَآ أَنزَلَ ٱللَّهُ قَالُواْ بَلْ نَتَّبِعُ مَا وَجَدْنَا عَلَيْهِ

ءَابَآءَنَآ أَوَلَوْ كَانَ ٱلشَّيْطَٰنُ يَدْعُوهُمْ إِلَىٰ عَذَابِ ٱلسَّعِيرِ

31:21 *அவர்களை நோக்கி அல்லாஹ் இறக்கியதை (குர்ஆனை)ப் பின்பற்றுங்கள் என்று கூறப்பட்டால் அதற்கு அவர்கள் இல்லை எங்கள் மூதாதைகள் எதன்மீதிருக்கக் கண்டோமோ அதனையே பின்பற்றுவோம் என்று கூறுகின்றனர். அவர்களுடைய மூதாதையர்களை ஷைத்தான் நரகவேதனையின்பால் அழைத்திருந்தாலுமா (பின்பற்றுவார்கள்)*

وَمَثَلُ ٱلَّذِينَ كَفَرُواْ كَمَثَلِ ٱلَّذِى يَنْعِقُ بِمَا لَا يَسْمَعُ إِلَّا دُعَآءً وَنِدَآءً ۚ صُمٌّۢ
بُكْمٌ عُمْىٌ فَهُمْ لَا يَعْقِلُونَ

2-171 *(குருட்டுத்னமாயத் தங்கள் மூதாதைகளைப் பின்பற்றும்) அந்த நிராகரிப்போரின் (குர்ஆனை மறுப்பவர்களின்) உதாரணம் (அர்த்தத்தை உணராமல்) கூச்சலையும் ஓசையையும் மாத்திரம் பின் தொடந்து செல்லும் (கால் நடைகளான மிருகங்களின்)உதாரணத்தைஒத்திருக்கிருன்றது. ஊமையர்களாகவும் செவிடர்களாகவும் இருக்கின்றனர். ஆதலால் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?*

فَوَيْلٌ لِّلَّذِينَ يَكْتُبُونَ ٱلْكِتَٰبَ بِأَيْدِيهِمْ ثُمَّ يَقُولُونَ هَٰذَا مِنْ
عِندِ ٱللَّهِ لِيَشْتَرُواْ بِهِۦ ثَمَنًا قَلِيلًا ۖ فَوَيْلٌ لَّهُم مِّمَّا كَتَبَتْ أَيْدِيهِمْ
وَوَيْلٌ لَّهُم مِّمَّا يَكْسِبُونَ

2:79 *எவர்கள் தங்கள் கையைக்கொண்டு (பொய்யாய்) எழுதிய புஸ்த்தகத்தை (கிதாபை) ஒரு சொற்ப கிரயத்தைப் பெறுவதற்காக இது அல்லாஹ்விடமிருந்து வந்ததுதான் என்று கூறுகிறார்களோ அவர்களுக்குக் கேடுதான். அவர்களுடைய கைகள் எழுதியதனாலும் அவர்களுக்குக் கேடுதான். அவர்கள் சம்பாதிப்பதாலும் அவர்களுக்குக் கேடுதான்.*

وَلَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهِۦ عِلْمٌ ۚ إِنَّ ٱلسَّمْعَ وَٱلْبَصَرَ وَٱلْفُؤَادَ كُلُّ أُولَٰٓئِكَ
كَانَ عَنْهُ مَسْـُٔولًا

17:36 *நீர் அறியாத யாதொரு விஷயத்தையும் நீர் பின் தொடராதீர். ஏனென்றால் நிச்சயமாக, காது, கண், இருதயம் ஆகியவை ஒவ்வொன்றுமே கேள்வி கேட்கப்படும்.*

## (10)

**ந**ம்மை நாமே தவறாக எடைபோட்டுக் கொண்டதால் மருட்சியும் திமிரும் அடைந்திருக்கிறோம். உண்மையான விசுவாசிகள் நாமே என்று ஏமாந்து கொண்டிருக்கிறோம். கனவுமூலம் உதாரணம் காட்டப்பட்ட ஒரு விஷயத்தை, உண்மை அப்படியேதான் என்று நம்பி இறைவனின் ஆணைக்காகத் தன் செல்வமகனை குர்பான் கொடுக்க முற்பட்ட எம்தந்தை இப்றாஹீம்(அலை) அவர்கள் ஏற்றுக்கொண்ட அதே இஸ்லாத்தைத் தழுவியவர்கள்தானா நாம் என்பதைச் சிந்தனை செய்துபார். உண்மையை உணர, உணர்ந்த உயிர்த் தியாகம் செய்த உத்தமர்களை நாம் பின்பற்றியவர்களாய் இருந்திருந்தால் எம் இமாமான குர்ஆனைக் கொஞ்சமேனும் புரட்டி, உருட்டிப் பார்த்திருப்போமல்லவா? மீசான் என்னும் தராசு நம்மிடமே உண்டு என்பதும், சிறாத்துல் முஸ்தத்கீம் என்னும் நேரான பாதை துன்யாவில் கலிமாவின் விபரமே என்பதும் அதத் தாண்டுவது என்பது சந்தேகங்கள் நீங்கித் தௌஹீதில் நிலை பெறுதலே என்பதும் நம்மில் மிகப் பெரும்பாலாருக்குத் தெரியாத ஒரு விஷயமாகும்.

وَٱلْمِيزَانَ لِيَقُومَ ٱلنَّاسُ بِٱلْقِسْطِ ۖ

57:25 *மனிதர்கள் நீதமாக நடந்துகொள்ளும் பொருட்டு மீஸானை (நிறைகோலை)யும் கொடுத்தோம்.*

**அன்புச் சகோதரனே !**

பிறரைத் தூற்றுவதில் நான் இன்பமடைகிறேன் என்று நம்பி விடாதே. அந்த மானக்கேடான விஷயத்தைவிட்டும் இறைவன் எம்மைக் காப்பாற்றுவானாக. தவறு எது என்பதையே நாம் கண்டறியாதவரையில் சரி எது என்பதையும் எம்மால் கண்டறிய முடியாது. சரி எது என்பதை நாம் முதலில் ஆராய்ந்திருக்கலாம். ஆனால் சரி எது என்பததைக் கண்டறியக்கூடிய கண் எம்மக்களில் பெரும்பாலருக்கு (இல்லை) மழுங்கிக்கிடக்கிறது என்பதையும், பிழையை ஏதோ ஓர் அளவு கண்டறியக்கூடிய கண் கொஞ்சம் ஒளியுள்ளதாய் இருக்கிறது என்பதையும் இறையுதவியால் நான் அறிவேன். ஆகையால் தான் அறிவுக்கேற்ற சில சிறு பிழைகளை முதலில் எடுத்துக்காட்ட விரும்பினேன். மேலும் தவறு எது என்பதையும் தவறேற்படக் காரணம் என்ன என்பதையும் முதலில் நாம் கண்டறிந்து கொள்ளாவிட்டால் உண்மையை அறிந்து கொண்டாலும்கூட அவ்வுண்மையை உள்ளத்தில் பதிக்கவும் முடியாமல் போய்விடும். **இத்தவறுகளின் பிறப்பிடம் இஸ்லாத்தின் மூலக்கொள்கை, ஓரிறைக் கொள்கையா?, ஏகத்துவக் கொள்கையா?, ஏக தெய்வக் கொள்கையா? என்பதை உணராத, தௌஹீதின் உண்மையைச் சரிவர விளங்கியறியாத அறிவீனமேயாகும்.**

எம்மில் மிகப்பலர் செய்யும் அமல்களில் பெரும்பாலான அமல்கள் பிரயோசனம் தராமல் இருப்பது கலிமாவை உண்மையின்படி ஒப்புக்கொண்டு அந்த உண்மையின் அடிப்படையில் இல்லாமல் கண்மூடித்தனமான பின்பற்றல் முறையில் கையாளப்படுவதுதான். விபரமும், ஆதாரமும் பின்னால் தருவேன். கலிமாவின் உண்மையான விபரத்தை, சுத்தமான தௌஹீதின் ஞானத்தை ஒரு மனிதன் சரிவரப் புரிந்து கொள்வானேயானால் பெரும்பாலும் தவறான பாதையில் செல்லாத ஒரு நல்லடியானாக மாற்றமடைவான் என்பதும் அவனுடைய அமல்கள் நிச்சயமாக நற்பலனைக் கொடுக்குமென்பதும் பூரண உண்மையாகும். ஆகவே உண்மையான பூரண சாந்தியைப் பெறவேண்டிய ஒவ்வோர் மனிதனும் கலிமாவைப் பூரணமாய் விளங்கியறிந்து உண்மையான தௌஹீதில் நிலைபெறவேண்டியவனாய் இருக்கிறான். எப்போது தௌஹீதின் உண்மை அறிவுக்குத் தெளிவுபடுமோ அப்போதுதான் சிருஷ்டிப் பொருட்களான படைப்பினங்களின் உண்மை புலனாகும். எப்போது சிருஷ்டிகளின் உண்மை அறிவுக்குத் தென்படுமோ அப்போதே மனிதனுடைய அவா (ஆசை), மூடத்தனம் எல்லாம் அவனையறியாமலே அவனை விட்டும் நீங்கிவிடும். ஆசையை அடக்க வேறு எவ்விதமான பலாத்காரமும் பகுத்தறிவுடையோருக்கு வேண்டியதே இல்லை. இவ்விபரங்கள் மிக நீளமாய் இருக்கின்றன. இவ்விடத்திற்கு இவ்வளவு விபரமே போதுமானதாகும். மீதி விபரங்களைச் சரியான ஆதாரங்களோடு "இஸ்லாத்தின் நோக்கமென்ன?" என்ற தலைப்பில் விளங்குவோம். ஆகவே முதலில் எம்முடைய அறிவுக்கெட்டியவரையில் அறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் கலிமாவின் ஓர் அம்சத்தை மட்டும் ஆராய்வோம்.

## (11)

தௌஹீதுக் கலிமாவை விளங்கியறிந்து மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டவனே மூமினாய் (உண்மை விசுவாசியாய்) இருக்கிறான் என்பதை ஏறக்குறைய நாம் எல்லோருமே ஒப்பு கொண்டிருக்கிறோம். இதன் சுருக்கம் முன்பு ஓரளவு தரப்பட்டுள்ளது. கலிமாவில் கூறப்பட்டுள்ள அறபு வசனங்கள் நான்கேயாகும். முஹம்மதுர் றசூலுல்லாஹ் என்பது கலிமாவோடு இணைக்கப்பட்டுள்ள ஒரு துணை வாக்கியமாகும். இதைப் பின்னால் நோக்குவோம். கலிமாவில் கூறப்பட்டுள்ள லா, இலாஹுன், இல்லா, அல்லாஹ் என்ற நான்கு சொற்களையும் எவ்வித மாற்றமும் செய்யாமல் அப்படியே வைத்துக்கொண்டு அதைச் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்தால்"அல்லாஹ தவிர இலாஹுன் இல்லை" என்பதே அதன் உண்மையான அர்த்தமாகும். இலாஹுன் என்ற அறபுச்சொல் வணங்கப்படுகிற சிருஷ்டிகளான விக்கிரகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கும் பொதுவான பொதுப் பெயர்ச் சொல்லாக குர்ஆன். ஹதீஸுகளில் பற்பல இடங்களில் பாவிக்கப்பட்டிருக்கின்றன. கலிமாவில் பாவிக்கப்பட்டுள்ள இலாஹுன் என்ற சொல் வணங்கப்படுகிற சிருஷ்டிகளான விக்கிரகங்களைக் குறிப்பிட்டே இறைவனால் கூறப்பட்டுள்ளது என்பதில் உண்மையான உலமாக்களுக்கும் ஆராய்ச்சியாளருக்கும் அவ்லியாக்களுக்கும் எவ்விதமான அபிப்பிராயபேதங்களும் கிடையாது. ஆனால் ஆராய்வும் உள்ளத்தெளிவும் இல்லாத (வஹ்மு) பேதபுத்தியுடைய மக்களுக்கு இவ்விஷயத்தில் ஆட்சேபனை இருக்கவே செய்கிறது.

இவ்வகையினர் இலாஹுன் என்ற சொல், வணங்கப்படத் தகுதியான இறைவனுக்கு என்றே இறைவனால் கூறப்பட்டதாகும் என்கின்றனர், ஆனால் எவரெவர் எதையெதைக் கற்பனை பண்ணினாலும் "வணக்கத்துக்குப் பாத்திரமான" அல்லது "வணக்கத்துக்கத் தகுதியான" என்ற கருத்துள்ள எந்த ஓர் அறபு வசனமும் கலிமாவில் கிடைக்கவே கிடையாது. இதன் விபரம் மிக விரிவாய் விளக்க வேண்டிய ஒன்றாகும். அதை உரிய இடத்தில் கவனிப்போம். இப்போது அவசரப்படாமல் என்பேச்சை முதலில் ஒரு பெரிய உண்மையை கண்டறிவதற்காக கிரகித்துக்கொள். உண்மையான உலமாக்கள் (அவுலியாக்கள்) கூறுகிறபடி நோக்கினால் அல்லாஹ் தவிர (ஒன்றுமே) விக்கிரகம் இல்லை என்பது பொருளாகும். ஆராய்வில்லாத வஹ்முடையோரின் கூற்றுப்படி கலிமாவை நோக்கினால் "அல்லாஹ் தவிர அல்லாஹ் இல்லை" என்பதே பொருளாகும். "வணக்கத்துக்குரிய" என்பது ஒரு சிலரால் கலிமாவின் கருத்துடன் பலாத்காரமாய்ப் புகுத்தப்பட்ட ஒரு வசனமாகும். இதையும் நாம் பின்பு தெளிவாய் விளங்கியறிவோம்.

ஆனால் உண்மையான கனம்தங்கிய உலமாக்கள், ஆராய்ச்சியாளர்கள், வலிமார்கள் கலிமாவுக்குக் கூறியுள்ள கருத்தை அதாவது அல்லாஹ் தவிர விக்கிரகம் அல்லது வணங்கப்படுகிற சிருஷ்டி இல்லை என்ற பொருளை எம்முடைய மக்களில் மிகப்பெரும்பாலாருடைய அறிவு ஏற்க மறுக்கிறது. ஏனென்றால், கலிமா வணங்கப்படுகிற சிருஷ்டிகளான இலாஹுகள் அல்லாஹ்

அல்லாதவையல்ல என்றும்,எல்லா இலாஹுும் அல்லாஹ்தான் என்றும், அல்லாஹ் தவிர ஒன்றுமே கிடையாதென்றும் உணர்த்துகிறது. இலாஹு என்பதைப் பொதுப்பெயர்ச் சொல்லாக எடுத்துக்கொண்டால் எல்லாச் சிருஷ்டிகளும் இலாஹுதான் என்று ஆகிவிடுகிறது. ஆகவே நாய், பன்றி, மலஜலம் போன்றவற்றையும் அல்லாஹ்தான் என்று ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எம்முடைய அறிவு குழப்பமடைகிறது. ஏனென்றால் எம் தாய், தந்தையர்கள், சமூகப்பெரியார்கள், பெரும்பாலான மௌலவிமார்கள் மற்றும் நாம் கற்றறிந்த புஸ்த்தகங்கள், கிதாபுகள் எமக்குமத் தந்துள்ள கலிமாவின் பொருளுக்கும் அல்லாஹ் தவிர ஒன்றுமே இல்லை என்னும் பொருளுக்கும் நேர்விரோதமான வேறுபாடு இருப்பது தெளிவாகவே எங்களுக்குத் தென்படுகிறது. மேலும் விக்கிரகமான சிருஷ்டியும் அல்லாஹ்தான் என்றால் அவற்றை வணங்கக் கூடாது என்று ஏன் இறைவன் தடுக்க வேண்டும்? என்றும் எங்களுடைய அறிவு கேட்கிறது. விடை கிடைக்காததால் அறிவாளர்களான உலகமாக்கள் கூறும் கலிமாவின் பொருளை ஏற்கமுடியாமலே இருக்கிறது. மேலும் சிருஷ்டிகளான இலாஹு அல்லாஹ்வாக ஏற்றுக்கொள்வது ஸிர்க், குபிர், பெரும்பாவம் என்றெல்லாம் நாம் கற்பிக்கப்பட்டிருப்பதால் இவ் விபரத்தை எம் அறிவு ஏற்றுக்கொள்ள மறுப்பது ஆச்சரியமேயல்ல. ஆகவே அறபு பாஷையின் இயல்பான வழக்கப்படி கலிமாவுக்கு உலமாக்கள் வலிமார்கள் கொண்டுள்ள கருத்து மிகமித் தவறானது போலவும் வழிகேட்டில் நுழைக்கக் கூடியதுபோலவுமே எங்களுக்குத் தெளிவாய்த் தென்படுகிறது. ஆகவே உண்மையான உலமாக்கள், வலிமார்கள் கொண்டுள்ள கலிமாவின் கருத்து வேடிக்கையான, மாபாதகமான, ஒரு நூதன பித்அத்தாகத்தான் இருக்க வேண்டும் என்று எம்மில் மிகப் பெரும்பாலாருடைய அறிவு முடிவு கட்டுகிறது.

நாங்களும் எங்கள் மூதாதைகளான முன்னோர்களும் அல்லாஹ் வேறு சிருட்டி வேறு என்ற கொள்கையிலேயே ஊறி வாழ்ந்து படித்து கேட்டு அறிந்திருக்கிறோம். எங்களுடைய அறிவு பெரும் மேதைகளால் பரம்பரையாய் ஊட்டப்பட்டு வந்ததாகும் என்று நம்பியுள்ளோம். இதற்கு ஆதாரமான எத்தனை எத்தனையோ கிதாபுகள் ஆயிரக் கணக்கில் எம்மிடையே இருக்கின்றன. கலிமாவுக்கு"வணக்கத்துக்குரிய நாயன்யாரும் இல்லை அல்லாஹ்வைத்தவிர" என்று நாங்கள் கற்றுக்கொண்ட கருத்து எவ்வகையிலும் எங்களுடைய அறிவில் குழப்பத்தை ஏற்படுத்தவேயில்லை. இக்கருத்தையும் இதனால் நாங்கள் அறிந்து கொண்ட ஓரிறைக் கொள்கையையும் எங்களுடைய உள்ளம் பூரண திருப்தியாய் ஏற்றுக்கொள்ளவே செய்கிறது. வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று கூறும் போது **மறைக்கமுடியாத இரண்டு உண்மைகள் நமக்குத் தென்படுகின்றன.**அதாவது வணக்கத்துக்கு தகுதியானவன் அல்லாஹ் மட்டுமே என்பது ஓர் உண்மையாகும். இதே போல சிருஷ்டிப் பொருட்கள் எவையுமே வணக்கத்துக்குத் தகுதியானவையல்ல என்பது மற்றோர் உண்மையாகும். இது வெளிப்படையாகவே வசன நடையினால் (இபாரத்துன்னஸ்ஸினானால்) விளங்கிக்கொண்ட விளக்கமாகும். சிருஷ்டிகளை வணக்கத்துக்குரியவையல்ல என்று ஏன் நீக்குகிறோம் அந்த சிருஷ்டிகள் அல்லஹ்வேயல்ல என்பதானால்தான். ஆகவே கருத்தினால் (தலாலத்னஸ்ஸினால்) அல்லாஹ் வேறானவன் சிருஷ்டிகள் வேறானவை என்பதை சக்கில்லாமல் தெளிவாய் அறிந்து கொண்டோம். நாம் காட்டிய மிகச்சுருக்கமான விபரத்தைச் சரியாக உள்ளத்தில் பதித்துக்கொள்ள முடியாவிட்டால் கடைசிவரையிலும் உண்மையைக் கண்டறிய எம்மால் முடியாமலே போய்விடும். ஆகவே அறிவு விளக்கம் போதாதவர்கள் மீண்டும் வாசித்துக்கொள்வதே நல்லது.

## இதன் சாரம் என்னவென்றால்:

**1ஆவது:** வலிமார்களான உலமாக்கள் கலிமாவுக்குக் கொண்டுள்ள கருத்துப்படி "இபாரதுன்னஸ்" என்னும் வெளிச்சத்தப் பிரமாணதினாலும் "தலாலத்துன்னஸ்" என்னும் கருத்துப் பிரமாணத்தினாலும் உண்டாயிருப்பவை நல்லவை கெட்டவை எவையாய் இருப்பினும் அல்லாஹ்வை விட்டும் வேறானவையல்ல. அல்லது அவனே (ஹமவோஷ்த்) அல்லது அல்லாவையன்றி ஒன்றுமே இல்லை என்பதைக் கலிமா விளக்குகிறது. இக் கொள்கை ஏகத்துவக் கொள்கை என்று கூறப்படுகிறது.

**2ஆவது:** வலிமார்களின் மேற்கூறிய விளக்கத்தை தற்கால மௌலவிகளில் மிகப்பொரும்பாலார் ஏற்றுக் கொண்டிருப்பதாய் தெரியவில்லை.

**3ஆவது:** மேற்கூறிய விளக்கத்துக்கு ஆதம் (அலை) அவர்களுடையகாலத்தில் இருந்து இன்றுவரையும் எதிர்ப்பு இருந்து கொண்டேவந்திருக்கிறது.

**4ஆவது:** எம்சமூகப்பெரியார்கள், ஒருசில உலமாக்கள், அல்லது மௌலவிகள், பொரும்பாலான கிதாபுகள் கலிமாவுக்குக் கொண்டுள்ள கருத்துப்படி "இபாரதுன்னஸ்" என்னும் வெளிச்சத்தப் பிரமாணத்தினாலும் "தலாலத்துன்னஸ்" என்னும் கருத்துப்பிரமாணத்தினாலும் அல்லாஹ் வேறு சிருஷ்டிகள் வேறு அல்லது அப்துவேறு, றப்புவேறு அல்லது சிருஷ்டிகள் எவையுமே அல்லாஹ் அல்ல என்பதைக் கலிமா விளக்குவதாகத் தெரிகிறது. இக்கொள்கை ஒரே தெய்வக்கொள்கை அல்லது ஓரிறைக்கொள்கை என்று கூறப்படுகிறது.

**5ஆவது:** இவ்விபரத்தைக், காலாகாலம் தோன்றிய ஒருசிலர் மட்டும் எதிர்த்துச் சில புத்தகம், கிதாபுகளை எழுதியிருக்கிறார்கள். இவர்களில் மிகப்பெரும்பாலார் மக்களுடைய எதிர்ப்புக்குள்ளாகியே இருந்திருக்கிறார்கள்.

இப்போது நாம் எம் தாய்தந்தையரும் எம் உலமாக்களும் எமக்குத்தந்துள்ள விளக்கப்படி ஒரேதெய்வக் கொள்கையைச் சிறிது நோக்குவோம். இக்கொள்கையுடைய மக்கள் தெய்வம் வேறு சிருஷ்டி வேறு என்று நம்பியுள்ளார்கள். இதன்படி சிருஷ்டிகளை அல்லாஹ் அல்லாதவை என்றால் இந்தச் சிருட்டிகள் அல்லாஹ் அல்லாத ஒருவரால் சிருஷ்டிக்கப்பட்ட மூலப்பொருட்களில் இருந்து அல்லாஹ் அல்லாத ஒருவராலேயே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.அதாவது வேறு எங்கிருந்தோ வேறு எவறாலோ உருவாக்கப்பட்ட மண், தண்ணீர், காற்று, நெருப்பு முதலாம் மூலப்பொருட்களை இரவலாக, அல்லது கடனாக, அல்லது விலையாக வாங்கியே எம்முடைய இறைவன் சிருஷ்டிகளை உருவாக்கியிருக்க வேண்டும். அல்லாஹ் என்ற ஒரே இறைவன் இல்லாத ஓர் இடமும் காலமும் மூலப்பொருட்களும் இருந்திருக்கவேண்டும். (பொறுமையோடு நுட்பமாய் உணர வேண்டும்) அல்லாஹ் அல்லாத இடமும் காலமும்மூலப்பொருளும் உண்டு என்றால் அம்மூலப்பொருட்களைச் சிருஷ்டித்த இன்னும் ஓர் அல்லது பல இறைவர்கள் இருக்கிறார்கள் என்று ஆகிவிடும். ஆகவே,எம்முடைய ஒரே தெய்வக் கொள்கை வெறும் குருட்டுக் கொள்கையாக மாறிவிடும்.

அப்படியில்லாமல் இறைவன், வேறுஎங்கேயும் வேறுஎவரிடத்திலேயும் மூலப்பொருட்களைப்பெறாமல் சிருஷ்டிகளை உருவாக்கினான் என்றால் மூலப்பொருட்கள் அவனிலிருந்தே எடுக்கப்பட்டு இருக்கவேண்டும். அதாவது அல்லாஹ்வையன்றிவேறு ஓர் இடமும் வேறு ஓர் காலமும் வேறு ஓர் மூலப் பொருளும் இல்லையென்பது உண்மையானால் சிருட்டிகளை இறைவன் தன்னிலிருந்தே உருவாக்கியிருக்கவேண்டும். அப்படியானால் சிருட்டிகள் நல்லவையாயினும் கெட்டவையாயினும் அல்லாஹ்வை விட்டும் வேறானவையாய் இருக்கமுடியாது. ஆகவே றப்புவேறு அப்துவேறு இறைவன்வேறு சிருட்டிவேறு என்னும் கொள்கை பிழையாய் முடிந்துவிடும்.

## இதன் சாரம்

1. சிருஷ்டிவேறு இறைவன் வேறென்றால் சிருஷ்டிகள் இறைவனோடுஎவ்வித சம்பந்தமும் இல்லாதவேறோர்இடத்திலிருந்து வேறொருவரால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது இறைவனோடு சம்பந்தம் அல்லது தொடர்பு இல்லாத ஒருவர் உருவாக்கிய பொருட்களைக்கொண்டே சிருஷ்டிகளை இறைவன் உருவாக்கியிருக்க வேண்டும். அப்படியானால் இறைவனும் இன்னும் வேறு ஒருவனும் உண்டென்றாகிவிடுவதால் ஒரே இறைவன் என்னும் கொள்கை பொய்யாய் முடிந்துவிடும்.**நாவினால் ஒரே தெய்வம் என்று கூறியவன் அவனையறியாமலே உள்ளத்தினால் இரு தெய்வங்களை அல்லது பல தெய்வங்களை ஒப்புக்கொண்டவனாய் விடுவான். ஆகவே இது தவறானவிளக்கம் என்பது புலப்படுகிறது.**

2. இறைவன் ஒன்றேதான், அவன் தன்னிலிருந்தேசிருஷ்டிகளை உருவாக்கினான் என்றால் சிருஷ்டிகள் அவனல்லாதவை என்பது பொருந்தாது. சிருஷ்டிகள் அவனில் நின்றுமே வெளியாகின என்பது உண்மையானால் சிருஷ்டிகள் அல்லாஹ்வின் தத்துவத்தைவிட்டும் வேறான தத்துவம் உடையவையென்று கூற முடியாது. ஏகமாய் உள்ளது ஒரே தத்துவம்தான் என்பது உண்மையாகும். அப்படியானால் அப்துவேறு றப்புவேறு என்றோ அப்தின் தத்துவம்வேறு, றப்புவின் தத்துவம்வேறு என்றோ தெய்வமும் சிருஷ்டியும் உண்டென்றோ அல்லது ஏகதெய்வமென்றோ கூறமுடியாது. ஏகத்துவக் கொள்கையென்பதே சரியானது என்று ஆகிவிடும். **அவ்லியாக்கள் கொண்டுள்ள கொள்கை விளக்கமே உண்மையானது என்றாகிவிடும்.** ஆனால் இவ்வுண்மையை எவ்வளவோ தெளிவாய் அமைதியாய் விளக்கவும் பொறுமையோடு விளங்கி அறியவும் வேண்டியதாய் இருக்கிறது. இன்ஷா அல்லாஹ் பின்னால் அறிவோம்.

நாம் கூறிய மிகச்சுருக்கமான இவ்விபரத்திலிருந்து ஓர் உண்மை எமக்கு இப்போது தென்படுகிறது. அதாவது **ஏகதெய்வ அல்லது ஒரே தெய்வக் கொள்கை இஸ்லாத்தின் கொள்கையேயல்ல என்பதுதான் அவ்வுண்மை. இக்கொள்கை இஸ்லாத்தில் நுழைக்கப்பட்ட ஓர் துர்க்கொள்கையாகும்.** இக்கொள்கை குர்ஆன் ஹதீஸ்களுக்கும் அறிவுக்கும் முற்றும் முரணாண ஓர் கொள்கையாகும்.இதை நாம் சரியான ஆதாரங்களோடு பகுத்தறிவை உபயோகித்து விளங்கியறிவோம். ஆகவே நாம் கற்றுள்ள கலிமாவின் பொருள். **“வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர” என்பது குர்ஆன் ஹதீஸ்களுக்கும் அறிவுக்கும் நேர்மாறான, முஸ்ரிக் கீன்களின் கொள்கையை உறுதிப்படுத்துவதான ஒரு விபரமாக இருக்கிறது.** ஆனால் எம்மில் மிகப்பலர் இதை அறியாதவர்களாய் இருக்கிறோம்.

**(12)**

அடுத்ததாக எம் ஆசிரியர்கள் வழிகாட்டிகளில் மிகப்பலர் இஸ்லாத்தின உண்மையான கொள்கை தௌஹீது என்கிறார்கள். தௌஹீது என்றால் ஒரே இறைவனை ஏற்றுக்கொள்வதே என்கிறார்கள். இதுவும் அறிவுக்கும் குர்ஆன், ஹதீஸ்களுக்கும் முரணாண ஓர் விஷயமாகவே

தென்படுகிறது. “தௌஹீது” என்ற அறபுச் சொல்லுக்கு நேர் பொருத்தமான ஓர் தமிழ்சொல் “அத்வைதம்’ அல்லது “அத்துவிதம்” என்பதேயாகும் . “ஏகத்துவம்” என்ற சொல்லும் அதே பொருளை உணர்த்தும் ஓர் சொல்லாகும். ஆனால் அத்வைதம், அத்துவிதம் என்பது வட சொற்களோடு தொடர்புடையவையாயும் ஏகத்துவம் அல்லது ஏகதத்துவம் என்பது நம் நாட்டுச்சொல்லாயும் இருக்கிறது. (விபரம் பின்னால் தரப்படும்)

**தௌஹீது என்ற அறபுச்சொல் “வஹ்தத்”(அவ்ஹத) என்ற சொல்லடியாய் “தப்ஈலு” என்னும் ஒலிநிறையில் பிறந்த ஓர் சொல்லாகும்.** நாம் முன்புகூறிய வட சொற்கள் தமிழ் சொற்களுக்கும் தௌஹீது என்ற அறபுச் சொல்லுக்கும் கருத்தில் பேதமேகிடையாது. இதையும் பின்னால் விளக்குவோம். தௌஹீது என்றால் ஏகமாக்கல் என்பதே அதன்பொருள் இதை ஒரு சிலர் ஒருமைப்படுத்தல் என்றும் கூறுகிறார்கள். **ஒருமைப்படுத்தல் என்றால் ஒரே இறைவனை ஏற்றுக்கொள்வது என்பது அதன் சாராம்சமல்ல. ஒருமைப்படுத்தல் என்றால் மருட்சியடைந்த பேதபுத்தியில் (வஹ்மில்) பலவாய்ப் பல தத்துவங்களாய்க் காண்பதைப் பகுத்தறிவைக் கொண்டு ஒன்றாய் ஒரேதத்துவமாய் காண்பது என்பதே அதன் உண்மை வளக்கமாகும்.** நாம் இப்போது மிகக்குறுகலாய்க்காட்டிய விபரமே தௌஹீது என்பது உண்மையானால் “ஷிர்க்” என்பது இதன் மாற்றத்தில் கட்டுண்டதாய் இருக்க வேண்டும். அதாவது யாவற்றையும் ஒன்றாய் ஒரே தத்தவமாயக் காண்பதே உண்மையான தௌஹீது என்றிருந்தால் ஒவ்வொன்றையும் தனித்தனியாய் இறைவனை வேறாயும் சிருஷ்டிகளை வேறாயும் இறைதத்துவம் வேறாயும் சிருஷ்டியின் தத்துவம் வேறாயும் காண்பதே ஷிர்க்காக இருக்க வேண்டும். தௌஹீது என்ற சொல்லுக்கு நேர்விரோதமான ஓர் சொல்தான் “ஷிர்க்” என்ற சொல். இதன் விபரமும் பின்னால் தரப்படும்.

நாம்காட்டிய இவ்விபரப்படி நாம் கொண்டுள்ள விசுவாசம் ஷிர்க்காகவே தென்படுகிறது. இதை நம்மில் பெரும்பாலார் சிந்திப்பதே இல்லை. அப்படிச் சிந்தனை செய்தாலும் அறிவில் மிகப்பெரிய ஓர் குழப்பம் ஏற்படவே செய்கிறது. நம் அறிஞர்களால் விளக்கித்தரப்பட்ட இஸ்லாத்தின் மூலக்கொள்கையே எமது அறிவைக் குழப்பக்கூடியதாயும் சரிபிழை கணிக்கமுடியாததாயும் தென்படுகிறது.

بَلْ كَذَّبُوا۟ بِٱلْحَقِّ لَمَّا جَآءَهُمْ فَهُمْ فِىٓ أَمْرٍ مَّرِيجٍ

50:5 *அவ்வாறிருந்தும் அவர்களிடம் வந்த உண்மையை அவர்கள் பொய்யாக்கி வெறும் குழப்பத்துக்குள்ளாக்கிவிட்டனர்.*

எம்முன்னோர்களில் மிகப் பலர் எமக்குச் செய்த கைங்கரியம் **வேதத்தின் உண்மையைப் புரட்டி உருட்டி எம்மைக் குழப்பதுக்குள் ஆக்கி விட்டிருப்பதுதான்.**ஆகவே நம்மில் அநேகர் கலிமாவை நாவினால் கூறுகிறோமேயல்லாமல் பிரயோசனம் பெறத் தெரியாதவர்களாய் இருக்கின்றோம். றசூல் (ஸல்) அவர்களைக் கட்சி அடிப்படையில் எல்லோரும் நாவினால் ஏற்றுக்கொள்வதுபோல நாமும் நாவினால் றசூலாக ஏற்றுக்கொள்கிறோமேயன்றி இருதயத்தில் ஏற்றுக்கொள்ளாதவர்களாகவே இருக்கின்றோம். **ஏனென்றால் அவர்களால் கொண்டுவரப்பட்ட முதல் வாக்கியமே எம் அறிவைக்குழப்பக்கூடிய வெறும் பொய்யும் பித்தலாட்டமும் போல் எம்மில் பலருடைய அறிவுக்குத் தென்படுகிறது.**அவர்களால் கொண்டுவரப்பட்ட குர்ஆனும் அப்படித்தானே இருக்கும் என்று எம்மையறியாமலே எம்முடைய உள்ளங்கள் நம்பியிருக்கின்றன. ஆகவே கட்சிப்பற்றின் காரணமாக குர்ஆனை முஹ்ஜிஸாத் என்றும் தெய்வத் திருவசனம் என்றும் றசூலை உலகமக்களுக்கு இறைவனால் அனுப்பப்பட்ட “றஹ்மத்” என்றும் நாவினால் புழுகுகிறோம். ஆனால் இந்தக் குர்ஆனுக்கும் றசூலுக்கும் அறிவுக்கும் கூட மாறான கொள்கை விளக்கத்தில ஊறியுள்ளதால்தான் குர்ஆன் ஹதீஸ்களால் விலக்கப்பட்ட அத்தனை துர்க்கிருத்தியங்களிலும் மூழ்கியுள்ளோம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவில்லை. **மௌத்துடைய வேளையில் நிச்சயமாக உணரத்தான் போகிறோம். ஆயினும் அவ்வுணர்வினால் நாம் எவ்விதபலனையும் அடையமுடியாது என்பது உண்மையே.**

சுமார் ஐம்பது வருடங்களாக வணங்கி வருகிற ஈமானின் உண்மை விளக்கம் தெரியாத ஒருவர் அல்லது ஈமான் தரிபாடில்லாத ஒருவர் உம்முல் குர்ஆன் என்ற “அல்ஹம்து”சூறாவைக் கண்டிப்பான கணக்குப்படி சுமார் 310250 முறையேனும் ஓதித் தொழுதிருக்கிறார் என்பதும் அதனால் அவர் உண்மையான பிரயோசனங்கள் எதையும் பெறவேயில்லை என்பதும் நமக்குத் தெரிந்த ஓர் விஷயம்தான் **அம் மனிதர் தொழுகையின் போது ஓதிய பிரார்தனை ஒப்புகொள்ளப்பட்டிருந்தால் நிச்சயமாக நல்லடியார்களில் ஒருவராக அவர் மாறியே இருப்பார்.** நல்லடியாராய் உள்ள ஒருவர் ஐந்து ரூபாய் வருமானத்துக்காகப் பொய் பேசுவாரா? பொறாமைப்படுவாரா? மூடனாய் வாழ்வாரா? என்பதச் சிந்தனை செய்து பார். “அல்ஹம்து” சூறாவை எப்படியோ எல்லாம் புகழுகிறார்கள். ஆனால் பிரயோசனம் பெறுகிற விஷயத்தைத்தான் எம்மால் நம்ப முடியாமல் இருக்கிறது. மீதி விபரங்களை நீயே சிந்தனை செய்துகொள்.

**ஹதீஸ்:** ***துர்க்கிரிகை முதலான கெட்டகாரியங்களை விட்டும் நிவர்த்தியாக்காத எந்தத் தொழுகையினாலும் அல்லாஹ்வை விட்டுத் தூரமாவதே உண்டாகிறது.***

ஹதீஸ்: *தொழுகிறவர்களில் எத்தனையோபேருக்கு வருத்தமும் நோவுமே தவிர மற்றப்படி (அத்தொழுகையினால்) பயனில்லை.*

ஹதீஸ்: ***சிந்தித்து ஆராயாமல் குர்ஆன் ஓதுவதில் நன்மை இல்லை. விளங்கிச் செய்யாத வணக்கம் ஓர் வணக்கமல்ல. முழுக்க முழுக்க அறிவுடையயோர் யாரென்றால் மனிதர்களை இறைவனின் அருளைவிட்டும் நம்பிக்கை இழுக்கச் செய்யாதிருப்பவரும் இறைவனுடைய வெறுப்பைவிட்டும் அவர்களை அச்சமற்று இருக்கச்செய்யாதவரும் குர்ஆனைவிட்டும் குர்ஆன் அல்லாதவற்றின் பக்கம் அவர்களைத்திரும்பச் செய்யாதவருமாவார் என்று றசூல் (ஸல்) கூறினார்கள்.***

**அறிவிப்பாளர்: அலி** (றலி)
**ஆதாரம்: ரஜீன்**

பழக்கத்தால் நீங்கள் தொழுகையை நிறைவேற்றுகிறீர்கள். அதற்குப் பகரமாய் அல்லாஹ்விடம் பலவற்றை வேண்டுகிறீர்கள். உலகப்பற்று (ஆசை) பிடித்தவர்களுக்காகச் சுவர்க்கம் ஏற்படுத்தப்பட்டதல்ல. நற்கருமங்களை வர்த்தகம் செய்பவர்களுக்குரிய இடம் அது. **தொழுகையும் நோன்பும் மற்ற உங்களுடைய சகல நற்செயல்களும் உங்களை அல்லாஹ்விடமிருந்து பிரித்தால் அவை உங்களுக்குச் சாபக்கேடானாவைதான்**என்று முஹையதீன் அப்துல் காதிர் ஜெய்லானி அவர்கள் கூறுகிறார்கள். **இன்று முஸ்லீம்கள் என்ற போர்வையிலுள்ள ஒருசாரார், மக்களைக் குர்ஆனுக்கு மாறான திசையிலேயே அழைத்துச் செல்கிறார்கள் என்பதையும், அம்மக்களில் மிகப் பெரும்பாலார் அமல்களைச் சாபக்கேடாகவே ஆக்கிக்கொள்கிறார்கள் என்பதையும் சிந்தித்துத் தெளிவு பெற்றுக்கொள்ள வேண்டும்.**

இஸ்லாத்தின் மூலக்கொள்கையே மனிதராகிய எம்மில் அநேகருடைய புத்திக்கு பொருந்தாமலும் விளங்காமலும் இருக்கும்போது ஈமான் கொள்வதும் அதில் உறுதியடைந்து வெற்றிபெறுவதும் எப்படிவாய்க்கும்? ஈமானுடைய உண்மையை உள்ளாலுள்ளபடி உணர்ந்து கொள்ளவில்லையென்றால் தொழுகை மற்றும் இபாதத்துக்கள் எப்படிப்பிரயோசனம் தரும்? ஆகவே மூலக்கொள்கையின் விபரமே விளங்காமல் இருக்கும்போது நான் ஈமான் கொண்டிருக்கிறேன் என்று நம்பிக்கைகொண்டால் அதன் கருத்தென்ன? வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று கூறிக்கொண்டால் **நாம் ஈமான் கொண்டுவிட்டோம், உண்மை மூமினாகிவிட்டோம் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோம்.**விஷயம் அப்படியல்ல. நாயோடுபடுப்பவன் தெள்ளோடுதானே எழும்புவான். எம் சமூகமக்களில் பெரும்பான்மையோரின் நிலைமையை சீர்தூக்கிச் சிந்தனை செய்துபார். **இஸ்லாம் எங்கிருந்து எங்கே எப்படி போய்க் கொண்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து வெற்றி பெறு.**

وَمِنْهُمْ أُمِّيُّونَ لَا يَعْلَمُونَ الْكِتَابَ إِلَّا أَمَانِيَّ وَإِنْ هُمْ إِلَّا يَظُنُّونَ

2:78 *அன்றி,கல்வியறிவில்லாதவர்களும்அவர்களிலுண்டு. வேதத்தைபற்றிக்(கேள்விப்பட்டுள்ள)வீண் நம்பிக்கை (விசுவாசம்,ஈமான்)களைத்தவிர (உண்மையை) அவர்கள் அறியவேமாட்டார்கள் அவர்கள் வீண்சந்தேகத்தில் (ஆழ்ந்து) கிடப்போரைத்தவிர வேறில்லை. (என்று குர்ஆன் கூறுகிறது)*

**(13)**

**சகோதரனே!**

இப்போது நம்மிடையேயுள்ள சித்தசுத்தியும் சத்திய விளக்கமும் உள்ள ஒரு சில உண்மையான உலமாக்களைத்தவிர மற்றும் லாஹிறுடைய உலமாக்கள் மௌலவிமார்களையும் மற்றும் அறிஞர்களையும் சிந்தனை செய்துபார். இவர்களில் மிகப் பலர் மிகப் பெரிய பட்டம் பதவிகள்,கௌரவத்தைப் பெற்றிருந்தாலும் **ஈமானுடைய விஷயத்தில் இஸ்லாத்தின் உண்மையான கொள்கை விளக்கத்தில் மூடபுத்தியும் கோழைத்தனமும் உடையவர்களாய் இருக்கிறார்கள்.** எப்படியென்றால் ஒரு சாரார் உண்மை இன்னதுதான் என்பதை ஓரளவு உணர்ந்திருந்தாலும்கூட அவ்வுண்மையை வெளிப்படுத்தப்பயப்படுகிறார்கள். ஏனென்றால் உண்மையை ஓரளவு உணர்ந்திருக்கிறார்கள். எனினும் அவர்கள் சந்தேகங்களில் இருந்தும் விடபட்டவர்களாயில்லை. மேலும் அவர்கள் உண்மையோடு வாழ்வை அமைத்துக்கொள்ளவுமில்லை. மேலும் மக்கள் தௌஹீதைச் ஷிர்க்காகவும், ஷிர்க்கை தௌஹீதாகவும் விளங்கியுள்ள இக்காலத்தில் உண்மையைக் கூறினால் உதைவாங்க நேரிடுமே! கௌரவம் பாழாய்விடுமே! பணவருவாய் தடைப்படுமே! முஸ்ரீக், காபிர் என்றெல்லாம் பெயர் கேட்க நேரிடுமே என்று பயப்படுகிறார்கள்.

இன்னொருசாரார் தௌஹீது சம்பந்தமாய் குர்ஆன் ஹதீஸ்களில் வந்திருக்கிற வாக்கியங்களுக்குத் தங்கள் புத்திக்குப் பொருத்தமான முறையில் மாற்றி பலாத்காரமாய் வலிந்துரை கொள்ளவேண்டுமென்றும், இல்லையானால் தௌஹீது ஒத்துவராது என்றும் நம்புகிறார்கள்.

கூறுகிறார்கள். இன்னொருசாரார் **உண்மையைக் கூறினால் மக்கள் தொழுகைபோன்ற கட்டாயக் கடமைகளைக் கூட விட்டுவிடுவார்களாகையால் உண்மையைக் கூறவே கூடாது என்கிறார்கள்.**சாதாரண மனிதனின் மூடத்தனமான போலி வேஷத்துக்காக உண்மையை மூடிமறைப்பவர்கள் உண் மையை உணராதவர்கள் மட்டும்ல **உண்மையை உணர்த்தத் தகுதியும் இல்லாதவர்கள் என்பதே என்கருத்து.** இன்னும் சிலர் தௌஹீதை நாவினால் ஒப்புக்கொள்ள வேண்டுமேயன்றி உள்ளத்தினால் உறுதி கொள்ள வேண்டிய அவசியமே இல்லையென்றும் அப்படி உறுதி கொள்ளவும் முடியாது என்றும் கூறுகிறார்கள். இன்னும் சிலர் இவ்விஷயத்தில் மௌனம் சாதிப்பதே நல்லது என்கிறார்கள். இவர்களைப்போல் இன்னும் எத்தனையோ வகுப்பான இனமான மௌலவிகள், அறிவாளிகள், வழிகாட்டிகள் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். விபரிப்பதானால் இன்னும் எவ்வளவோ கூறலாம். எம்மடையேயுள்ள அறிவுப் பொக்கிஷங்களான **கிதாபுகள் புஸ்த்தகங்களிலும் மிகப்பொரும்பாலானவை இதே நிலைமையில் தான் தென்படுகின்றன.** என்னே! இவர்களின் அறியாமை, அறிஞர்கள் (உலமாக்கள்) கண்ணியப்படுத்தப்படவேண்டியவர்கள் என்று இறைவனே கூறுகிறான்.

ஒரு மனிதன் உண்மையை உணரவேண்டும் என்ற அவாவும் நல்ல (நஸீபும்) அதிஷ்டம் அல்லது விதியும் உடையவனாய் இருந்தால் நாம் சுருக்கமாய்ச் சுட்டிகாட்டிவந்த இவ் விளக்கமே வழிகாட்டும் தூண்டுகோளாய் அமைவதற்குப் போதுமானதாகும். அவாவற்றவனாக, தகுதியற்றவனாக இருக்கும் ஒருவனுக்கு நாம் எதை எப்படிக்கூறினாலும் ஆவது ஒன்றுமே இல்லை தெண்டித்தவன் பெற்றுக்கொள்வான் என்பது உண்மை. அதேபோல பெற்றுக்கொண்டவனே தெண்டிப்பான் என்பதும் உண்மையே.

وَلَا تَكُونُوا۟ كَٱلَّذِينَ قَالُوا۟ سَمِعْنَا وَهُمْ لَا يَسْمَعُونَ

8:21 *செவியுறாது செவியுற்றோம் என்று வாயால் கூறியவர்களைப் போல் நீங்களும் ஆகி விடவேண்டாம்*

إِنَّ شَرَّ ٱلدَّوَآبِّ عِندَ ٱللَّهِ ٱلصُّمُّ ٱلْبُكْمُ ٱلَّذِينَ
لَا يَعْقِلُونَ

8:22 *நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் மிருகங்களில் மிக கேவலமானவை (எவையென்றால், உண்மையை சத்தியத்தை) அறிந்துகொள்ள முடியாத செவிடர்களும் (அறிந்தும் சொல்லமுடியாத) ஊமையர்களும்தான்.*

இவ்வாயத்தில் அறிந்தவர்களிடத்தில் கேட்டு அறிவதைப்பற்றியும் அறிந்தவர்கள் உண்மையை அறிவிக்காமல் இருக்கக் கூடாது என்பதைபற்றியும் சைக்கினை செய்யப்படிருப்பதை அவதானிக்க வேண்டும்.

**சகோதரனே !**

நீநல்லதிஷ்டம் உடையவனாய் இருந்தால் உண்மையை அறிந்துணர்ந்து உண்மை விசுவாசியாக (மூமீனாக) வாழ விரும்பினால் உன் உள்ளத்தை உறுதியாக்கிக்கொண்டு நான் விளக்கிக் காட்டப்போகிற விபரங்களைப் பொறுமையோடு முதலிருந்து முடிவு வரை வாசிக்காமல் நீ எந்தவோர் முடிவுக்கும் வரவே கூடாது. முதலிருந்து முடிவுவரை பலமுறை வாசிக்காமல் நீ தெளிவுபெறமாட்டாய் என்றே நான் நம்புகிறேன். நான் ஓர் பெரிய கல்விமானாய் அறிஞனாய் இருப்பதால் ஒரேமுறை வாசித்தாலே எனக்குப் போதுமானது என்று நீ சொல்லக் கூடும். நீ அறிஞனாய் கல்விமானாய் இருப்பதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். ஆனால் ஈமானுடைய விஷயத்தை ஒருமுறை வாசித்து உள்ளத்தில் பதித்துக் கொள்ளலாம் என்பதும், சந்தேகமற்ற உண்மையான ஈமானைப் பெற்றுவிடலாம் என்பதும் உண்மையில் நடக்ககூடிய ஒரு காரியமேயல்ல. **நீ எவ்வளவுதான் பெரிய ஓர் அறிஞனாய் இருப்பினும் உன் உள்ளத்திலுள்ள முத்திரைகள் (திரைகள்) படிப்படியாய் நீங்காதவரையில் ஈமானுடைய உண்மை உள்ளத்தில் பதியக்கூடிய ஒன்றேயல்ல. ஆகவே நீ பலமுறை வாசிக்காமல் உன் உள்ளத்தின் திரைகள் நீங்கவே முடியாது என்பது அறிவு ஆராய்தலால் மட்டுமல்லாமல் அனுபவத்தினாலும் கண்டறிந்து ஓர் உண்மையாகும்.**ஆகவே விஷயம் கசப்பாக இருப்பினும் மிகமிகப பொறுமையோடு வாசித்துச் சிந்தனை செய்து தெளிவுபெறுவாயாக.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ وَٱبْتَغُوٓا۟ إِلَيْهِ ٱلْوَسِيلَةَ وَجَٰهِدُوا۟ فِى
سَبِيلِهِۦ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

5:35 *விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொண்டு அவனிடம் செல்வதற்குரியவழியைத் தேடிக்கொள்ளுங்கள்,அவனுடைய பாதையில் பெருமுயற்சி (பீஸபீல்)எடுத்துக் கொள்ளுங்கள்.*

وَٱلَّذِينَ جَٰهَدُواْ فِينَا لَنَهۡدِيَنَّهُمۡ سُبُلَنَاۚ

29:69 *யார் நம்மில் பாடுபட்டார்களோ அவர்களுக்கு நாம்நம்முடையவழிகளைக் காட்டுவோம்.*

(இவ்வாயத்துக்களின் சரியான உண்மையான விபரங்களைப் பின்னால் விளக்குவேன். வழிகள் எவை என்பதையும் கூறுவேன். இன்ஷா அல்லாஹ் பொறுமையடைவாயாக)

சகோதரனே! சர்வ சக்தனான இறைவன் உனக்கு மறைமுகமாக நல்லுதவி புரிந்திராவிட்டால் இந்த நூல் உன்கையில் கிடைக்கவும் நான் விளக்கிக்காட்டப் போகிற மிக அபூர்வமான உண்மைகளை நீ கண்டடையவும் விளங்கித் தெளிவு பெறவும் கூடியவாய்ப்பு உனக்கும் கிடைக்காமல் போகவும்கூடும். ஆகவே கருணைக் கடலான இறைவனின் நல்லுதவிக்காக நன்றி செலுத்திக்கொண்டு மேலும் சிறிது செவிதாழ்த்துவாயாக.

ஈமான் கொள்வது என்பது மிக இலகுவான ஒரு விஷயம்போல் எமக்குத் தென்பட்டாலும் உண்மை அப்படியல்ல. மனிதனுடைய உள்ளத்தில் குடிகொண்டுள்ள (வஹ்மு) பேதபுத்தியோடு ஈமான் கொள்வது மிகமிகக் கடினமான ஒரு விஷயமேயாகும். ஆகையால்தான் றசூல்(ஸல்) அவர்கள் ஊசியுடைய காதில் ஒட்டகை நுழைவதைவிட **மனிதருடைய கல்பில் ஈமான் நுழைவது கடினம்** என்று கூறினார்கள். கடினமான ஒரு விஷயத்தைக் கடினமான முறையில் ஆராய்ந்து விளங்கியறிந்துதான் உண்மையைப் பெறவேண்டும்.

**ஹதீஸ்:** ***ஒருவன்(நரக) நெருப்பை நோக்கிச் செல்வதை அல்லாஹ் தடுத்திராவிட்டால் அல்லாஹ்வைத் தவிர இலாஹு இல்லையென்றும் முஹம்மத்(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்துதர் என்றும் இருதய பரிசுத்ததுடனே சாட்சிகூறக்கூடியவன் ஒருவனுமில்லையென்று நபி(ஸல்) அவர்களின் ஆதாரத்தைக்கொண்டு அனஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.***

**ஆதாரம்: புஹாரி**

ஆகவே இவ்விஷயத்தில் உண்மையான விளக்கத்தைப் பெற்று உண்மையைக் கண்டறிவதானால் இதற்குதவியான சில விபரங்களை, உன் உள்ளத்திலுள்ள முத்திரைகளை(திரைகளை) நீக்கக்கூடிய சில உபாயங்களை முதலில் விளக்கித் தர வேண்டியதாய் இருக்கிறது. ஆனால் சாதாரணமான அற்ப விஷயங்களையும் ஆதாரங்களோடுதான் விளக்கவேண்டுமென்றால் இந்த நூல் சுமார் 1500 பக்கங்கள் கொண்டதாகவே அமையலாம். ஆகவே சாதரண விஷயங்களைப் பிரசங்க பாணியிலும் அவசியமான விஷயங்களைத் தக்க ஆதாரங்களோடும் விளக்கிவைக்க விரும்புகிறேன்.

ஆதாரங்கள் என்றவகையில் குர்ஆன், ஹதீஸ்கள்தான் சரியானவை என்பதும் பொருத்தமானவை என்பதும் கேள்வியறிவு நூலறிவு மூலமாய் நம்மெல்லோருக்குமே தெரிந்த ஒரு விஷயம் தான். **ஆனாலும் பெரும்பாலான சாதரண மக்களுடைய அறிவும் பெரும்பாலான தற்கால அறிஞர்கள், மௌலவிகள், பட்டதாரிகளுடைய அறிவுகளும்கூட குர்ஆன், ஹதீஸ்களின் உண்மையான சரியான ஆதாரங்களை நூற்றுக்கு நூறுவீதமும் ஏற்றுக் கொண்டிருப்பதாய் தெரியவில்லை.**இதற்குப்பல காரணங்கள் இருக்கின்றன. அதில் முக்கியமான காரணம் என்னவென்றால் மனித இனத்தில் மிகமிகப் பெரும்பான்மையோருடைய களங்கமற்ற பகுத்தறிவை “வஹ்மு” என்ற பேதபுத்தி மிகைத்திருப்பதேயாகும். ஆகவே மக்களில் பெரும்பாலார் சிந்திக்கத் தெரியாதவர்களாய், சிந்தித்தும் சிறந்த முடிவைப்பெறத் தெரியாதவர்களாய், வாழத் துணிவில்லாதவர்களாய், இருக்கிறார்கள். ஆகவே **முதலில் கல்பில் உள்ள முத்திரைகளை, திரைகளை நீக்கி அறிவைத் தெளிவுபடுத்தாவிடில் குர்ஆன் ஹதீஸ்களான ஆதாரங்களையும் நல்லடியார்களான உலமாக்களின் சாட்சியங்களையும் மனிதன் நம்பவேமாட்டான்.**

குர்ஆன் ஹதீஸ்களையும் அவ்லியாக்களான உலமாக்களின் சாட்சியத்தையும் பகுத்தறிவையும் எவன் நம்பவில்லையோ**அவனுடைய கல்பில் ஈமான் நுழையவே முடியாது என்பது பூரண உண்மையாகும்.**ஈமானை உண்மையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளாத ஒருவன் தன் குறிக்கோளை அடையப்போவதே இல்லை. அதாவது ஈமானை விளங்கியறிந்து அந்த ஈமானை உறுதிப்படுத்தும் நோக்கமாக அமல்கள் செய்யப்படவில்லையானால் **அந்த அமல்கள் பிரயோசனப்படப்போவதேயில்லை.**அம்மனிதன் மக்களிடையே மாமேதையென்றோ, மாபெரும் பட்டதாரியென்றோ பெயரைப் பெற்றிருந்தாலும் சரியே.

**ஹதீஸ்:** ***வணக்கங்களில் (இபாதத்துக்களில்) சிறந்தது என்ன? என்று றசூல் (ஸல்) அவர்களிடம் கேட்க அல்லாஹ்வைப்பற்றிய அறிவு (ஈமான்) என்றார்கள். எந்த அறிவு என்று திரும்பவும் கேட்க அல்லாஹ் ஸுப்ஹானஹுத்தஆலாவைப் பற்றிய அறிவு என்று கூறினார்கள் நாங்கள் அமலைப்பற்றிக் கேட்கும்போது தாங்கள் அறிவைப்பற்றிக் கூறுவதென்ன? என்று மீண்டும்கேட்க அல்லாஹ்வை அறிவதுடனே அற்பவணக்கமும்பிரயோசனம் செய்கிறது. ஆனால் இறைவனைப் பற்றிய அறிவீனத்துடனே எந்த வணக்கமும் (அமலும்) பிரயோசனம் கொடாது என்று***

*கூறினார்கள். (இந்த ஹதீஸை கஸ்ஸாலி(றஹ்) அவர்கள் யஹ்யா உலுமுத்தீன் எனும் கிதாபில் வெகு தெளிவாய் விளக்கியுள்ளார்கள்.)*

ஹதீஸ்: *நடு நிலைமையைக் கொண்டு இறைமுன்நிலையை எய்தி காலையிலும் மாலையிலும் இரவின் பிற்பகுதியிலும் (இபாதத்தில்) வணக்கத்தில் பெரும்பாலும் ஈடுபடுங்கள். மார்க்கபிரசாரமும் செய்யுங்கள். மேலும் அறிந்துகொள்ளுங்கள், நிச்சயமாக எவருடைய வணக்கமும் அவரைச் சுவர்க்கம் சேர்த்துவிடாது என்று கூறினார்கள். அப்போது,நாயகமே! தாங்கள்? என்று மக்கள் வினவினார்கள். அதற்கு றசூலுல்லாஹ் அவர்கள், முடியாது அல்லாஹ்வுடைய மன்னிப்பும் கிருபையும் என்னை அடைந்தால் ஒழிய என்னுடைய வணக்கமும்என்னைச்சுவர்க்கம் சேர்த்துவிடாதுஎன்று கூறினார்கள்.*

அறிவிப்பவர்: அபுஹுறைறா(றலி
ஆதாரம்: புஹாரி.

இந்த ஹதீஸில் மிகப்பல உண்மைகள் தென்படுகின்றன. **பொறுமையோடு விளங்கியறிவோம்.**இன்னும் எத்தனையெத்தனையோ ஹதீஸ்கள் (மக்களுக்கு விளக்கிக்காட்டப்படாதவை) தென்படுகின்றன. அவற்றை உரிய இடங்களில் ஆராய்வோம். இதேபோல் குர்ஆனிலும் பல ஆயத்துக்கள் இடம் பெறுகின்றன. அவற்றைப் பின்பு நோக்குவோம். பாவமன்னிப்பு எது என்பதையும் பின்னால் அறிவோம்.

மனிதன் தன்னுடைய அறிவு ஏற்றுக்கொள்ளாத எந்த ஓர் விஷயத்திலும் ஈமான் கொள்ளவே மாட்டான். அறிவு ஏற்றுக்கொள்ளாத ஒரு விஷயத்தில் பிசகற அறிந்து விசுவாசம் கொண்டேனென்று கூறுவது தன்னையும் பிறரையும் ஏமாற்றிகொள்ளும் வெற்றுப்பேச்சாகும். நிச்சயமான அவசியமான சந்கேகம் மனிதனுக்கு ஏற்படவில்லையானால் அவனுக்கு உண்மையைப்பற்றி ஒன்றுமே தெரியாது என்பதேயாகும். நம்பிக்கை என்பது இன்ஸானுடைய வேலையாளாகவே இருக்கவேண்டும். அறிவு செயல்படாவிட்டால் நியாயமான சந்தேகம் பிறக்கவே பிறக்காது. சந்தேகம் ஏற்படவில்லையானால் உண்மை வெளியாகவும் முடியாது. ஆகையால்தான் மூடநம்பிக்கையும் வீண்பிடிவாதமும் உள்ள மக்கள் உண்மையையே மறுக்கிறார்கள். இந்த உண்மையைக் கண்டறிந்து ஈமான் கொள்கிற விஷயத்தில் நபிமார்கள் றசூல்மார்கள்கூட விலக்கானவர்களல்ல. ஒருசில, உயர்பதவியுடைய நபிமார்களே தங்களுடைய உள்ளம் ஈமானில் உறுதியடைவதற்காகச் சிற்சில விஷயங்களைக் கேட்டதாயும் சிற்சில விஷயங்களில் சந்தேகம் அடைந்ததாயும் சிற்சில விஷயங்களை நேரில் கண்டறிந்தே உறுதிகொண்டதாயும் குர்ஆன் பற்பல இடங்களில் பற்பல வகையில் எமக்கு விளக்கம் தருகிறது. இவ்விஷயத்தை ஹதீஸ்களும் அறிவிக்கின்றன.

உண்மையை உறுதிப்படுத்தக்கூடிய ஆதாரங்களில் மிகமுக்கியமானவை யுக்தி, சுருதி, என்பனவையேயாகும், யுக்தி என்றால் பகுத்தறிவு, புத்தி, என்பதே கருத்தாகும். சுருதி என்றால் வேதவசனம் (குர்ஆன்) ஹதீஸ் என்பவையாகும். வேத வசனங்கள் ஹதீஸுகள் உண்மையானவைதான் என்று படித்தோ கேட்டோ அறிந்திருந்தாலும்கூட **மனித அறிவு அவைகளைப் புரிந்து கொள்ளாவிடில் நிச்சயமாக அவற்றை ஏற்றுக்கொள்ளவே மாட்டாது.** மனிதர்களில் அநேகருடைய அறிவு, இக்காலச் சூழ்நிலையில் வேதவசனங்களை முற்றாய் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தில் இல்லவே இல்லை. யுக்தி என்பது இப்படிப்பட்டதல்ல. எம் மனிதனுடைய புத்தியும் அவனுடைய நிலைமையில் அவனுக்குச் சரியாகவே தென்படுகிறது. ஆகையால் தான் மனிதன் தன்னுடைய புத்தி ஒப்புக்கொண்ட விஷயத்தை ஏற்றுக்கொள்ளவும் புத்தி ஏற்றுக்கொள்ளாத விஷயத்தை மறுக்கவும் எதிர்க்கவும் செய்கிறான். அது உண்மையான விஷயம்தான் என்றாலும் அவனுடைய புத்தியில் அதைப் பொய்யாய்க் காண்பதால் மறுக்கிறான். ஆகையால்தான் ஒருசிலர், பட்டம் பதவிகளுடைய அறிஞர்களாய் இருந்தும்கூடத் தாங்கள் செய்யும் தவறுகளையும் சரியானவையென்று வாதிக்கிறார்கள். வேதாச்சாரிகள் வேதங்களுக்குமாறாய் நடப்பதும் பிரச்சாரம்செய்வதும் வேதங்களைப் புரட்டுவதும் இந்த யுக்தியின் விளைவுதான். இவர்கள் வேதாச்சாரிகளாய் இருந்தும் இவர்களுடைய புத்திகள் **வேதவசனங்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தில் இல்லை என்பதே கருத்தாகும்.**

ஏனென்றால் வஹ்மு என்று நாம்கூறுகிற பேதபுத்தி பகுத்தறிவை மிகைத்திருப்பதால் பகுத்தறிவு முறைப்படி செயல்படாமலே நின்றுவிடுகிறது. **வஹ்மு என்ற பேத புத்திக்கு குர்ஆன் ஹதீஸ்கள் முற்றும் முரணாணவையேயாகும்.** குர்ஆனுக்கு “பூர்கான்”என்று ஓர் பெயருண்டு. பூர்கான் என்றால் பிரித்து அறிவிப்பது என்பது பொருள். நன்மைதீமைகளைச் சரிபிழைகளைப் பிரித்தறிவிப்பது எது? அதுதான் பகுத்தறிவு என்பது. எனவே பூரணமான கட்டுப்பாடற்ற பகுத்தறிவுக்கு குர்ஆன், ஹதீஸ்கள் உண்மைதான். மன்கூல் என்பதும் மஹ்கூல் என்பதும் ஒரே விஷயம்தான். ஆகவே வஹ்மு என்ற பேதபுத்தியை ஓரளவு நீக்கிப் பகுத்தறிவு முறையாய் வேலை செய்யக்கூடிய சில உபாயங்களை விளக்கிக்காட்டி அதன்பின் குர்ஆன் ஹதீஸ்களின் சரியான ஆதாரங்களோடு ஈமான் இஸ்லாத்தின் உண்மைகளைப் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் விளக்கிவைப்பதே சரியென்று நான் காணுகிறேன்.

ஆனால் நான் தரப்போகிற எந்த ஓர் விளக்கமும் **என்னுடைய புதிய கண்டுபிடிப்புக்களோ அல்லது குர்ஆன் ஹதீஸ்களுக்கும் அறிவுக்கும் மாறான விஷயங்களோ அல்ல.**குர்ஆன் ஹதீஸ்களும் சென்றுபோன நல்லடியார்களும் விளக்கிக்காட்டிய பகுத்தறிவுக்குப் பொருத்தமான உண்மைகளைப் பல

வருடங்கள் அரும்முயற்சிசெய்து ஆராய்ந்து கடைப்பிடித்தொழுகி என் அனுபவத்திலும் உண்மைதான் என்று கண்டறிந்தபின் எனக்குத் தெரிந்த அளவு தெரிந்தவகையில் சொல்லிவைக்க விரும்புகிறேன்.

இறைவனுடைய ஒன்றுதலைப் பெறத் துடிக்கும் ஒருசில மக்களுக்கு என்னுடைய விளக்கம் உபயோகப்படலாம் என்பது என் கருத்து. இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள பல தினுசான மக்களைப் பார்த்துப் பழகிய ஓரளவு அனுபவம் எனக்குண்டு. அவர்களில் மிகப்பலர் இறைவழி செல்லத் துடிப்பவர்களாயும், உண்மையான விளக்கம் தெரியாதவர்களாயும் அறிவு குறைந்தவர்களாயும் இருப்பதை நான் அறிந்தேன் . மேலும் சிலர் பூர்வகால ஞானப் பாடல்களில் ஊறியவர்களாயும் குர்ஆன் ஹதீஸ்களினால் விபரிக்கப்படும் உண்மையான, சுத்தமான தௌஹீதைப் புரிந்து கொள்ளாமல் தடைப்பட்டவர்களாயும் இருப்பதைக் கண்டேன். ஆயினும் என்னால் எதுவுமே செய்ய முடியாதென்று தீர்ப்புக்கட்டியிருந்தேன். ஏனென்றால், நான் ஆசைக்காக ஓர் குறுகிய காலம் ஆசிரியனாகக் கடமையாற்றினேயல்லாமல்,**ஆசிரியர் என்ற பெயரைப் பெற்றுக் கொள்வதற்காக அல்ல. அதேபோல் மார்க்கத்தின் உண்மையை அறியவேண்டுமென்பதற்காக அறபுக் கல்வியைப் படித்துக் கொண்டேனேயல்லாமல் ஒரு மௌலவி என்ற பட்டத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. ஆகவே மௌலவி, உலமா என்ற ஒரு போர்வை எனக்கு இல்லாமல் இருக்கும்போது என்னுபதேசங்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களே என்பதற்காகத்தான் நான் மவுனியாயிருந்தேன்.**

ஆயினும் சர்வவல்லமையும் பேரறிவுமுடைய இறைவன் ஒருசில மக்களுக்கு என்னைக்கொண்டு உண்மையை உணர்த்த வேண்டுமென்று நாடினான் போலும். நான் அடிக்கடி றசூல்(ஸல்) அவர்களை மனாமிலும் (றூயா) காட்சியிலும் பார்ப்பதுண்டு. அன்றொருநாள் இற்றைக்கு எட்டு வருடங்களின் முன்பு ஓர் இரவு றசூல்(ஸல்) அவர்கள் மூலமாக சில விஷயங்களை அறிந்துகொண்டேன். அதாவது இஸ்லாத்தில் மறைக்கப்பட்டும் புதையுண்டு போய்க்கிடக்கும் தௌஹீதுடைய உண்மையான விபரம், அறிவுத்துறையில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு என்னால் உணர்த்தப்பட வேண்டும் என்பதும் அதற்காக ஒரு நூலை எழுத வேண்டுமென்பதும் எனக்குத் தெரியவந்தது. அதன்படி மிகக் கஷ்டப்பட்டு இந்த நூலை இறைவன் உதவியால் எழுதி முடித்தேன். ஆயினும் இந்த நூலை அச்சிடுவதற்குப் பயந்தவனாக, மக்களிடையே ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்படுமேயென்று அஞ்சியவனாக பல வருடங்களைக் கடத்திவிட்டேன். ஆயினும் ஒருசில மக்களுக்கு இந்த நூலைப் பற்றியும் இதன் உண்மை பற்றியும் அறிவித்தேன். ஒரு சில சாதாரண மக்களும் ஒரு சில மௌலவிகளும் கூட இந்த நூலைப் பார்வையிட்டார்கள். இவர்களில் பலர் இந்த நூலில் நான் கூறியுள்ள சிற்சில விபரங்களைக் கொப்பியடித்துக்கொண்டு பெரும் பெரும் மேதைகளாக, ஆரிபுகளாக நடிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஒருவர் “மனிதன் ஏன் பிறக்கிறான்” என்ற பெயரோடு ஓர் நூலை எழுதுவதாக நடிக்க முற்பட்டார். இன்னொருவர் தான் ஓர் பெரிய கவிஞனாக, ஆத்மீக அறிஞனாக மாறியிருப்பதாய் நடித்தார். இன்னும் பலர் அவரவர் எடுத்துக்கொண்ட ஒவ்வோர் பகுதியை வைத்துக்கொண்டு மக்களை ஏமாற்ற முற்பட்டார்கள். இவ்விதமான ஒருசில முனாபிக்கீன்களால் பொதுமக்களிடையே மிகப்பல தவறான பெயர்கள் எனக்கு ஏற்பட்டிருக்கின்றன என்பது தெரிய வந்தது.

இவ்வகையினர் முஸ்லீம்கள் என்றபோர்வையில் இருந்த முனாபீக்குகள் என்பதை நான் அறிந்துகொள்ளாமையால்தான் பன்றிகளின் கழுத்தில் இரத்தினக் கோவையை அணிந்ததுபோல எனக்கு தெரிந்த நல்லறிவுகளை நான் ஊட்டினேன். ஆயினும் இறைவன் எனக்கு இவர்களுடைய உண்மையை வெளிப்படுத்தினான். எமது றசூல்(ஸல்) அவர்களுக்கு வஹி எழுதிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் தானும் ஓர் நபியென்று வாதிட்ட விஷயம் நம்மெல்லோருக்கும் தெரிந்ததுதானே! எம் ஆசிரியரான றசூலுக்கு ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் சாயல்கள், மாணவர்களாகிய எம்முடைய வாழ்விலும் ஒரு சிறிதேனும் ஏற்படத்தானே வேண்டும். இல்லையானால் நாம் றசூலைப்பின்பற்றினோம் என்பதற்கு ஆதாரம் இல்லையல்லவா? ஆகவே மனச்சோர்வடைந்த நான் அறிவுக் கண்ணில்லாத பொதுமக்களின் தொடர்பை துண்டித்துக் கொண்டேன்.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் காத்தான்குடியைச் சேர்ந்த நண்பர் ஒருவர் இந்த நூலின் விபரத்தை எப்படியோ அறிந்து அதை அச்சிடுவதற்கு முன்வந்தார். நூலின் சாராம்சத்தைப் பேசி “டேப்”பில் பதிவு செய்துதரும்படியும் கோரினார். அதன்படி சுமார் ஐந்து மணித்தியாலங்கள் பேசி “டேப்”பில் பதிவு செய்து கொடுத்திருந்தேன். இன்றைக்கும் அந்த “டேப்” அவரிடமே இருக்கிறது. இந்த ஒலிப்பதிவு நாடாவைப் போட்டுப் பேச்சைக் கேட்டவர்களில் காத்தான்குடியை சேர்ந்த **அல்ஹாஜ் ஏ. றவூப் மௌலவி** அவர்களும் ஒருவராவார். அந்த ஒலிப்பதிவு நாடாவில் பேசியபேச்சில் இக்கால உலமாக்களைக் குறிப்பிட்டு நான் பேசியிருந்த சில விஷயங்கள் கனம் றவூப் மௌலவி அவர்களின் உள்ளத்தில் ஆணித்தரமாய்ப் பதிந்துவிட்டனபோலும். கனம் மௌலவி அவர்கள் உண்மையை ஏற்கனவே ஓரளவு அறிந்திருந்தார்களாகையால் மேடையேறிப் பிரசாரம் செய்ய முற்பட்டார்கள். இந்த நூலையும் அச்சிடமுன்வந்தார்கள். மௌலவி அவர்களும் அவர்களுடைய சகாக்களும் இந்தநூலைச் சுமார் ஒன்றரை மாதம் பார்வையிட்டார்கள். மெச்சினார்கள். ஆனால் மௌலவி அவர்களுடைய ஒழுங்கில்லாத பிரச்சாரத்தினால் உண்மையை உள்ளபடி முதலிருந்து முடிவுவரை அறிந்துகொள்ள முடியாத மக்களிடையயே பெரியதோர் கொந்தளிப்பு ஏற்பட்டதையும் அதன் விளைவையும் பல கண்ணோட்டங்களோடு நான் அவதானித்தேன். மிகவும் மனவருத்தமும் மனச்சோர்வும் அடைந்தேன். இறைவனிடம் முறையிட்டேன். புஸத்தகத்தை மௌலவி அவர்களின் சார்பாய் வெளியிட வேண்டாமென்றும் அச்சிடுவதற்குரிய ஒருவரை அனுப்புவதாகவும் கனவு மூலம் (இஸாரா) சைக்கினையாக இறைவன் எனக்கறிவித்தான். உலமா என்ற போர்வை எனக்கில்லையென்று மனச்சோர்வடைந்திருந்த என் உள்ளத்தை உறுதிப்படுத்தவேண்டிய முறைப்படி இறைவன் உறுதிப்படுத்தினான். அச்சிடக்கூடிய வாய்ப்பையும் தந்தான் அல்ஹம்துலில்லாஹ்.

وَمِنَ ٱلنَّاسِ مَن يَشۡرِي نَفۡسَهُ ٱبۡتِغَآءَ مَرۡضَاتِ ٱللَّهِۗ وَٱللَّهُ رَءُوفُۢ

بِٱلۡعِبَادِ

2:207 *அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெறுவதற்காகத் தன்னுடைய உயிரையே தியாகம் செய்யக் கூடியவர்களும் மனிதர்களில் இருக்கிறார்கள். அல்லாஹ் (இத்தகைய) அடியார்கள் மீது மிகவும் கிருபையுடையோன்.*

**ஹதீஸ்:** ***என்னுடைய உம்மத்தில் ஓர் கூட்டம் எப்போதும் சத்தியத்தின் பேரில் ஜிஹாது செய்துகொண்டே இருப்பார்கள். தங்கள் எதிரிகளிடம் வெற்றிபெற்றுக் கொண்டேயிருப்பார்கள். இறுதியாகக் கடைசியிலுள்ளவர்கள் தஜ்ஜாலை எதிர்த்துப் போராடுவார்கள்.***

**ஹதீஸ்:** ***இந்த மார்க்கம் கியாமத் நாள்வரையில் நிலைபெற்றிருக்கும் முஸ்லீம்களில் ஓர் கூட்டம் உண்மையான (தீனுக்காக) மார்க்கத்துக்காக யுத்தம் செய்து கொண்டே இருப்பர்.***

ஆகவே இந்த நூலில் 1000 பிரதிகளை தற்போது அச்சிடும் உரிமையை என் அன்பு மாணவர்களுக்கே அளிப்பதோடு சர்வசக்தனான என் இறைவன் மேல் பூரண நம்பிக்கை வைத்தவனாக, எனக்கிடப்பட்ட கடமையை நிறைவேற்றும் நோக்கத்தோடு நான் அறிந்துணர்ந்த உண்மைகளை இதோ வெளிப்படுத்துகின்றேன்.

எனது கடந்தகால வாழ்வில் புகழையும் பொருளையும் சம்பாதிக்க விரும்பி என் பொன்னான காலத்தில் பெரும்பகுதியை மண்ணாய்க் கழித்த பின்புதான் ஓரளவு அமைதியடைந்து, இஸ்லாத்தில் புதையுண்டுபோய்கிடக்கும் சில உண்மைகளைக் கூற முற்படுகிறேன் என்பதை உன் சிந்தனைக்கு தந்துவைக்கின்றேன். புஸ்த்தகம் கிதாபுகளை எழுதி வெளியிடுவோர் பிரபலம் வாய்ந்த பட்டதாரிகள், அறிஞர்களின் அணிந்துரை, மதிப்புரைகளைச் சேர்த்துக் கொள்வது வழக்கம். அதேபோல இந்த நூலுக்கும் எமது நாட்டிலுள்ள பிரபலம் வாய்ந்த பட்டதாரிகள் பலர் வசன நடையிலும் சிலர் கவிதை நடையிலும் பல மதிப்புரைகளை வழங்கியிருக்கிறார்கள். ஆயினும் அவைகளை இந்த நூலோடு இணைத்துக்கொள்ள நான் விரும்பவில்லை. அதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றில் மிகமுக்கியமான ஒன்று, நான் விளக்கப்போகிற உண்மைகள் குர்ஆன் ஹதீஸ்களினாலும் ஆன்றோரான அவ்லியாக்களின் அறிவிப்புக்களினாலும் பகுத்தறிவினாலும் அனுபவத்தினாலும் ஏற்பட்ட பூரண உண்மையேயாகும். **இவ்வுண்மைகளை அறிவிக்க வேஷம் போடுவது அறிவீனமாகும்.**பொய்தானே வேஷம் போட வேண்டும். உண்மை நிர்வாணத்தோடும் செல்லக்கூடியதுதானே? விரும்புவோர் ஏற்றுக்கொள்ளட்டும். விரும்பாதோர் ஏற்காமல்விடட்டும்.

**(14)**

**அ**டுத்ததாகப் புஸ்த்தகம் எழுதுவோர் எடுத்துக்கொண்ட ஓர் விஷயத்தை மட்டும், வேறுவிஷயங்கள் கலக்காமல் சுருக்கமாய்க் கூறுவதுதான் மரபு. (வழக்கம்) இந்த இலக்கணம் அறிவுடைய மக்களுக்கேயன்றி அறிவுத்துறையில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களுக்குப் பொருந்தாக ஓர் விஷயமாகும்.

ஏனென்றால் அப்படிக்கூறுவதை அவர்கள் தெளிவாய் விளங்கிக் கொள்ளமாட்டார்கள். **ஆகையால்தான் சிலமுக்கிய கட்டங்களை அளவுக்கதிகமாய் நீட்டிவிபாத்தும், ஒரே விடயத்தைப் பல வழிகளில் பல இடங்களில் புகுத்தியும் சாதாரண நாட்டுத்தமிழில் பிரசங்கபாணியில் இந்த நூலை எழுதியுள்ளேன். மக்கள் எப்படியும் உண்மையை உணரவேண்டும் என்பதுதான் நோக்கமேயல்லாமல் எமது திறமையை வெளிப்படுத்தவேண்டும் என்பது நோக்கமல்ல.**ஆகவே எனது வசன நடையில் யாப்புமுறையில் சொல்லழகில் முழ்காமல் என்னுடைய **கருத்தழகில் மட்டும் மூழ்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.**

**ஹதீஸ்:** ***(கருத்துக்களை விட்டு விட்டு)சொல்லழகில் மூழ்குபவர் நாசமாகட்டும் என்று நபி(ஸல்) அவர்கள் மூன்றுமுறை கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: இப்னுமஸ் ஊத்** (றலி)
**ஆதாரம்: முஸ்லீம், அபூதாவூத்**

**(15)**

**சகோதரனே !**

**நா**ன் இந்த நூலில் விளக்கியுள்ள உண்மைகளை ஏற்றுக்கொள்வதும் ஏற்காமல் விடுவதும் உன் சொந்தவிருப்பத்தைப் பொறுத்த ஓர் விஷயம். உன்னுடைய உரிமையில், சுதந்திரத்தில் தலையிடவோ உன்னை வற்புறுத்தவோ எமக்கு எவ்விதமான உரிமையும் கடமையும் கிடையாது. ஆனால் **நான் எனக்குத் தெரிந்த உண்மையை தெரிந்தமட்டில் உனக்கு எத்திவைத்தேன் என்பதற்கு இறைவனடத்தில நீயோர் சாட்சியாய் இருந்துகொள். அவ்வளவுதான்.**

وَلَوْ شَآءَ رَبُّكَ لَـَٔامَنَ مَن فِى ٱلْأَرْضِ كُلُّهُمْ جَمِيعًا ۚ أَفَأَنتَ تُكْرِهُ ٱلنَّاسَ حَتَّىٰ
يَكُونُوا۟ مُؤْمِنِينَ

10:99 *உம் இறைவன் விரும்பினால் பூமியிலுள்ளயாவருமே விசுவாசிகளாகி (மூமீன்களாகி) விடுவார்கள். மனிதர்கள் விசுவாசிகளாகி விடவேண்டும் என்று அவர்களை நீர்* நிர்ப்பந்திக்க முடியுமா?

நான் உன்னை எச்சரிக்கிறேன். இந்த நூலை வாசிக்கும் போது நீ எந்தக்கட்டத்திலும் பொறுமையிழந்து விடாதே. என்னைச் சந்தேகக்கண்கொண்டும் நோக்காதே. நான் கூறுகிற ஓர் விஷயம் உன் அறிவுக்குப் பிழையாகத் தென்பட்டால் உடனே அதை உதறித்தள்ளிவிடாமல் உன் விளக்கத்தில் பிழையிருக்கிறது என்று நம்பி மீண்டும் மீண்டும் பலமுறை வாசித்து சிந்தனை செய்து தெளிவுபெறு. பலவருட வணக்கத்தைவிட ஒரு நிமிட நியாயமான சிந்தனை உன்னை உயர்த்திவிடக்கூடும். நீ அறிந்துள்ள விபரங்களுக்கும் நான் கூறுகின்ற விபரங்களுக்குமிடையே விசேடமாக ஈமான், ஷிர்க், கலிமாவின் பொருள் போன்ற விஷயங்களில் நேர் விரோதம் தென்படலாம். நீ ஓர் முறை திகைப்படையலாம். அவ்வுண்மைகள் உன்னை ஒரு முறை நிச்சயமாக உலுத்தும் என்பதை இறை உதவியால் நான் அறிவேன்.

இதை உனக்கு அறிவிக்கமுற்படுகிற நானே இவ் விஷயத்தில் பல வருட அறிவுப்போராட்டம் நடாத்தினேன். என் சந்தேகங்களுக்கு விடைகாண முடியாமல் இலங்கையின் நாலாபாகங்களிலுமுள்ள உலமாக்களை அறிஞர்களைப் பெரியார்களை அணுகி ஆராய்ந்தேன். ஒரு சில சாதாரண விஷயங்களை அவர்கள் எனக்கு விளக்கினார்களேயன்றி **ஆத்மீகத்துறையில் என் கேள்விகளுக்கு, சந்தேகங்களுக்குச் சரியான ஆதாரங்களோடு அறிவு ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் எவரும் எனக்கு விபரம் தரவேயில்லை. உண்மையைக் கண்டறிந்து சந்தேகங்கள் நீங்காவிட்டால் உயிரையே மாய்த்துக்கொள்வதென்று முடிவு கட்டினேன்.**(வஹ்மு) பேதபுத்தி மிகைத்து கல்பில் இருள்திரைகள் குடிகொண்டு புஸ்த்தகப் பூச்சியாய் உணர்ச்சி வசப்பட்ட இளைஞனாய் இருந்த எனக்கு குர்ஆன் ஹதீஸ்கள் பிழைபோலவும் ஒரு வசனத்துக்கு இன்னோர் வசனம் முரண்போலவும் தென்பட்டன. அவற்றின் உண்மையை உணர்ந்து கொள்ளாத எவராலும் உணர்த்தப்படாத நான் குர்ஆன் ஹதீஸ்களைக் கிழித்தெறிந்தேன். இறைவனே இல்லையென்ற முடிவுக்கு வந்தேன். இங்கர்சால், வில்லியம்மூர், டார்வின் போன்றவர்களின் நூல்களை ஆராய்ந்தேன். மனம் சாந்தியடையவில்லை. கிறிஸ்த்தவ மதத்தை ஆராய்ந்தேன். என் சந்தேகங்கள் நீங்கவில்லை. (சைவ) இந்துமதத்தை ஆராய்ந்தேன். சுமாமி விவேகானந்தர் அவர்களால் எழுதப்பட்ட ஓர் நூலில் என் சந்தேகத்துக்குரிய ஓர் விடைதென்பட்டது. யார் நம்மில் பாடுபட்டார்களோ அவர்களுக்கு நாம் நம்முடைய வழிகளைப் காட்டுவோம் என்று இறைவன் கூறுகிறான் அல்லவா? **மதங்கள் உண்மை என்பதும் மூடமக்களின் அறிவுக் குறைவினால் மதங்களின் அடிப்படை உண்மைகள் புரட்டப்பட்டுள்ளன என்பது என் அறிவுக்குத் தென்பட்டது.** அறியாமையில் மூழ்கியிருந்த என் குற்றத்தை இறைவன் மன்னித்தேயாக வேண்டுமென்று நம்பி என் இறைவனிடத்தில மன்னிப்புக் கோரினேன். வழிகாட்ட வேண்டினேன். **காருண்யக்கடலான சர்வ வல்லமையுள்ள என் இறைவன் வழி காட்ட வேண்டிய முறைப்படி வழிகாட்டினான். இருள் ஒளித்திரைகளில் சிக்குண்டிருந்த நான் ஓரளவு சாந்தியடைந்தேன். குர்ஆன் ஹதீஸ்களை என் சிரசில் சுமந்து கொண்டேன். என் இறைவன் பாதத்தில் முற்றும் சரணடைந்தவனாக உயிர் வாழ்கிறேன் என்பதை உனக்குச் சொல்லிவைக்கின்றேன்.**

**சகோதரனே !**

**எ**ந்த ஓர்கட்டத்திலும் நீ பொறுமையை இழக்கவோ தீவிரவாதமடையவோ கூடாது என்று நான் உனக்கு மீண்டும் அறிவுரை கூறுகிறேன். அடிதடிசண்டையின்போது பொறுமையடைவதுதான், பொறுமையென்று நீ நினைக்கலாம் இல்லை, சண்டையில் பொறுமையடைவது இயலாமையினாலும் (கோழைத்தனத்தாலும்) ஏற்படலாம். உண்மையான பொறுமை அதுவல்ல. உண்மையைக். கண்டறிவதற்காக **அறிவுப்போராட்டம் (பீஸபீல்) நடாத்தும்போது தீவிரவாதம் கொள்ளாமல் பொறுமையடைவதுதான் உண்மையான பொறுமையாகும்.**வாளினால் துப்பாக்கியினால் செய்யப்படும் பீஸபீலைவிட அறிவுக்கும் அறிவீனத்துக்கும் இடையில் ஏற்படும் பீஸபீல் எத்தனையோ மடங்கு கடினமானதாகும். ஆகவே இந்த அறிவுப் போராட்டம் என்ற பீஸபீலில் **நிச்சயமாக மிகமிகப் பொறுமை அடைந்தேயாக வேண்டுமென்று உன்னை வேண்டுகிறேன்.** பொறுமையாளர்களுடன் இறைவன் இருப்பதாக குர்ஆன் கூறுகிறது. (ஸாபிர்) பொறுமையாளன் (காதிர்) தத்துவமுடையவனாக மாற்றமடைவான் என்பதும் நிச்சயமாக உண்மை.

ஆகவே நீ எந்த நிலைமையிலும் பொறுமையடைந்தவனாக இறைவன் மேல் உன் அறிவுக்கேற்றபடி நம்பிக்கை வைத்தவனாக ஆராய்ந்து தெளிவு பெற்று நல்லடியானாக மாறி இறைவனின் மேலான சந்நிதானத்தை அடைவாயாக. **உன் உள்ளத்திலுள்ள திரைகள் நீங்காமல் நீ உண்மையோடு ஒன்ற முடியாது என்பது உண்மை.**இது என் வாழ்க்கை அனுபவம் ஆகவே மனிதனுடைய உள்ளத்தின் திரைகள் நீங்கித் தெளிவு பெறக்கூடிய வகையாகவே இந்த நூலில் பாடங்களை நான் ஒழுங்கு செய்துள்ளேன். நான் ஒழுங்குபடுத்தியுள்ள முறைப்படியே செல்வது (வாசிப்பது) உனக்கு உதவியாக அமையலாம்.

குருட்டு நம்பிக்கைகளில் குருட்டு அனுஷ்டானங்களில் மூழ்கிப் பின்பற்றல் முறையில் சென்று உன் **பொன்னான வாழ்வை மண்ணாக்கிவிட்டு ஆகிறாவில் கைசேதப்படாதே.** நீ விளங்கியறியாமல் மூடத்தனமாய்ச் செய்யும் அமல்கள் உன் தண்டனைக்கும் காரணமாய் அமையலாம்.

**ஹதீஸ்:** ***வணக்கஸ்த்தர்களுக்கும் (அமலாளிகளுக்கும்) ஈமான் தாரிகளான அறிஞர்களுக்கும் இடையிலான கண்ணிய வித்தியாசம் என்னுடைய அஸ்ஹாபிகளில் மிகக்குறைந்த பதவியுடைய ஒருவருக்கும் எனக்கும் இடையிலுள்ள வித்தியாசம் போலாகும்.***

இந்த ஹதீஸில் அறிவில்லாமல் வணக்கம் பிரயோசனம் தரக்கூடாமல் இருப்பதால் அறிவுவிளக்கத்தோடும் வணங்குபவர்களின் பதவியைத் தாழ்த்தி ஈமானை விளங்கியறிந்த அறிஞர்களின் பதவியை நபிப்பட்டத்தோடு இணைத்துக் காட்டியிருப்பதைச் சிந்தனை செய்துதெளிவுபெறுவாயாக.

## இதன் சாரம்

**1ஆவது:** மனிதன் தன்னுடைய **பூரணத்தன்மையெனும் சாந்தியைப் பெற்றுக்கொள்வதற்காகவே பிறக்கிறான்.** ஆயினும் இவ்வுண்மையைப் பெரும்பாலான மக்கள் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

**2ஆவது:** மனிதனின் இம்மை மறுமைக்குரிய சகல விபரங்களையும் தெளிவாய் விளக்கி காட்டுவதே எல்லா மதங்களுடையவும் நோக்கமாகும். ஆயினும் அவை பற்பல காரணங்களால் புரட்டப்பட்டு இன்று உயிரற்றவையாயும் நேர்பாதையைக் காட்ட முடியாதவையாயும் இருக்கின்றன.

**3ஆவது:** சகல மதங்களாலும் போதிக்கப்பட்ட சகல உண்மைகளையும் ஒன்று திரட்டி இலகுவாக்கித் தரப்பட்ட மதம் (தீன்)தான் இஸ்லாம் என்பது இந்த இஸ்லாம் றசூல்(ஸல்) அவர்களுடைய மறைவுக்குப்பின் சுமார் 30 வருடங்கள்தான் முழுமையான உண்மையோடு இருந்திருக்கிறது. அதன்பின் பல காரணங்களால் இஸ்லாத்தின் மூலக்கொள்கையே மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தை மிகப்பொறுமையோடு விளங்கித் தெளிவு பெற வேண்டும்.

**4ஆவது:** சிறுபராயத்தில் எமக்குக் கற்பிக்கப்பட்டுள்ள இஸ்லாத்தின மூலக்கொள்கையும் அதன் விபரமும் குர்ஆன் ஹதீஸ்களுக்கும் பகுத்தறிவுக்கும் நல்லடியார்களின் வாக்குகளுக்கும் மாறாகவே கற்பிக்கப்பட்டுள்ளன. இதை நம்மில் மிகப்பெரும்பாலார் அறியாதவர்களாய் இருக்கிறோம். இதையும் பொறுமையோடு விளங்கித் தெளிவுபெற வேண்டும்.

**5ஆவது:** எம்மில் மிகப்பலர் இஸ்லாத்தின் கடமைகளைப் பழக்க வழக்க அடிப்படையில் கையாள்கிறோமேயல்லாமல் அக்கடமைகளால் பிரயோசனம் பெறாதவாகளாய்ப் பிரயோசனம் பெறத்தெரியாதவர்களாய் இருக்கிறோம். ஆகவே அவற்றைப்பொறுமையோடு விளங்கியறிந்து முறைப்படி கடமைகளைக் கையாண்டு நாம் இம்மை மறுமைக்குரிய பலன்களைப்பெற்றுக்கொள்ள வேண்டும்.

**6ஆவது:** இந்த நூலை நான் எழுதுவதற்குரிய காரணம் புகழையோ பொருளையோ பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதல்ல. எனக்கிடப்பட்ட கடமையை நிறைவேற்றுவதே நோக்கமாகும்.

**7ஆவது:** நான் கூறியுள்ள விபரங்களைக் கண்டிப்பாய் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று நான் யாரையும் வற்புறுத்தவேயில்லை. விரும்பியோர் ஏற்கலாம், விரும்பாதோர் ஏற்காமல் விடலாம். அது ஒவ்வோரினதும் சொந்த உரிமையாகும்.

**8ஆவது:** என் நாட்டுமக்களுக்கு நான் கூறும் அறிவுரை என்னவென்றால் அறிந்துணர்ந்து செய்யாத அமல் மனிதனுக்குப் பிரயோசனம் தரமுடியாததாய் இருப்பதால் உண்மையை, உண்மையான நோக்கத்தைப் பொறுமையோடு விளங்கியறிந்து அந்த நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய வகையாய் அமல்களைச் செய்து வெற்றி பெறவேண்டும் என்பதே.

**9ஆவது:** நான் இந்த நூலில் கூறியுள்ள விபரங்கள் முதலில் உன் அறிவுக்கும் பழக்க வழக்கங்கள்கேள்விகளுக்கும் விரோதம் போல் தென்பட்டாலும் பொறுமையையிழந்து தீவிர உணர்வு கொள்ளாமல் பலமுறை படித்துத் தெளிவுபெற வேண்டும்.

**10ஆவது:** அறிவு விளக்கம் பெறாத ஒரு சில முன்னோர்கள் எமக்குத் தந்துள்ள விபரங்கள் உண்மைக்கு முரணாய், ஆதாரமற்ற கற்பனைகளாய் இருப்பதால் அவர்களின் அடிப்படையில் நாம் செல்வது எம்மை ஆகிறாவில் கைசேதப்பட்டவர்களாய் மாற்றும் என்பதை நாம் உணரவேண்டும்.

**11ஆவது:** றசூல்(ஸல்) அவர்களே எமது (றசூல்), ஆசிரியர் என்பதையும் குர்ஆனே எமது இமாம் என்பதையும் பகுத்தறிவு நல்லடியார்களின் உபதேசங்களே எமது சாட்சிகள் என்பதையும் நாம் ஒப்புக் கொண்டவர்களானால் எந்த ஓர் விஷமியின் மிரட்டுதலுக்கும் நாம் ஏமாறவேகூடாது.

**12ஆவது:** உண்மையைக் கண்டறியப் பிரயாசைப்படுவது அமல்களில் எல்லாம் மிகச் சிறந்ததாகும்.

002

# திரை நீக்கம்

## (1)

**இ**வ்வுலகிலுள்ள ஜீவப்பிராணிகளுடையவும் மனிதனுடையவும் பிறக்கும் போதுள்ள இயற்கையறிவை நோக்கினால் இயற்கையாகவே அமைந்துள்ள சில நுட்பமான வேறுபாடுகள் தென்படுகின்றன. ஒரு எளியபிராணியான நாய் குட்டிகளை ஈன்றெடுத்தபின் அக்குட்டிகளுக்குப் பாலூட்டுவதற்காகத் தன்னுடைய பால்சுரக்கும் முலையைக் குட்டியின் வாயில் பலாத்காரமாக நுழைத்து பாலூட்டுவதே கிடையாது. நாய்க்குட்டிக்கு எப்போது பால் தேவையோ அப்போதே தனக்கு வேண்டியபால் எங்கேயிருக்கிறது என்பதையும் அதைக் குடிக்கும் விதத்தையும் அக்குட்டி அறிந்துகொள்கிறது. அது மட்டுமல்லாமல் தான் குடிக்க வேண்டியது பாலே என்பதையும் அக்குட்டி அறிந்திருக்கிறது. அக்குட்டி கண் விடுக்காதிருக்கும் போதும் தன் மோப்ப உணர்வால் தாயின் பால்மடியைக் கண்டுபிடித்துப் பாலருந்திவிடுகிறது அந்த நாய்க்குட்டிக்கு இன்னவிதமாய்ப் நடக்கவேண்டும் இன்னவிதமாய் உண்ணவேண்டும், இன்னவிதமாய் போராடவேண்டும், இன்னவிதமாய் ஊளையிட வேண்டும் என்று அதன் தாய், தந்தையோ சகோதரங்களோ உபதேசிப்பதும், பயிற்சியளிப்பதும் இல்லை. குட்டியின் போராட்ட வெற்றிக்காக மல்யுத்த கலையையோ, இனிமையாய் ஊளையிடுவதற்காக சுருதிப் பயிற்சியையோ சங்கீதக்கலையையோ எவரும் கற்றுக்கொடுப்பதே இல்லை.

இதேபோல மற்றும் ஜீவப்பிராணிகளையும் அவ்வவற்றின் பிறக்கும் போதுள்ள இயற்கை சுபாவங்களையும் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். (இவற்றை விபரித்தால் பெருகும்) இந்தச் ஜீவராசிகளின் முன்னேற்றங்களை ஆராயும் போது அதிலும் ஓர் உண்மைதென்படுகிறது. அதாவது உலகில் முதன்முதல் தோன்றிய ஓர் நாய் எந்த சுபாவத்தோடு வாழ்ந்ததோ அதே சுபாவத்தோடுதான் இன்றுள்ள நாயும் வாழ்கிறது. கால சூழ்நிலைகளுக்கேற்ப அவற்றின் உடல்தோற்றம் நிறம் முதலியவை மாறுபட்டிருப்பினும் வேறு எவ்விதமாற்றமும் ஏற்படவே இல்லை. ஆரம்பகால நாய் குப்பைமேட்டில் சுருண்டுகொண்டு உறங்கியதைப் போலவே இன்றுள்ள நாயும் உறங்குதேயல்லாமல் ஓர் குடிசையைக்கட்டிக் கொண்டு அல்லது ஓர் சோபாகட்டிலை அமைத்துக்கொண்டு உறங்குவதே இல்லை. இதேபோல் மற்றும் விஷயங்களையும் நீ சிந்தனைக்கெடுத்துக்கொள்.

ஆனால் மனிதக்குழந்தை மட்டும், மற்றும் ஜீவராசிகளின் இயற்கைத்தன்மைக்கு முற்றும் முரணான, மாறுபட்ட சுபாவத்தோடு தான் பிறக்கிறது. வாழ்கிறது, இறக்கிறது. தாய்வயிற்றிலிருந்து வெளியான மனிதக்குழந்தைக்கு எவ்விதமான பசி ஏற்படினும் தன்பசியை போக்கக்கூடிய பொருள் எது? என்பது தெரியவே தெரியாது. தன்தாயின் பால் சுரக்கும் மார்பு எங்குள்ளது? என்பதும் தெரியாது. தன்குழந்தையின் பசிக்காகத்தாய் தன் மார்பை குழந்தையின் வாயில் பலாத்காரமாக நுழைத்துப் பாலுட்ட வேண்டியதாய் இருக்கின்றது. இதேபோல உண்ண, உறங்க, சிரிக்க, கதைக்க, எழுந்திருக்க, தவழ, நடக்க, ஓட, ஆட, பாட, படிக்க, எழுத, வாசிக்க, அத்தனையும் படிப்படியாய்க், கலை கலையாய்ப் பயிற்சியளிக்க வேண்டியதாகவே இருக்கிறது. நன்மை தீமை சுகதுக்கம், சரிபிழை எல்லாமே படித்துக்கொடுக்க வேண்டியதாகவே இருக்கிறது. சுருக்கமாகக் கூறினால் மலசலம் கழிக்க அதிலிருந்துபரிசுத்தமடையவதற்குக்கூடப் பயிற்சியளிக்கவும் விளக்கம் கொடுக்கவும் வேண்டியதாகவே இருக்கிறது. நான் காட்டிய அடிப்படையில் மனித வாழ்வின் சகல துறைகளையும் சிந்தனைக்கு எடுத்துக்கொள். (விபரித்தால் பெருக்கமடையும்)

## (2)

**இ**ப்போது நுட்பமாய்ச் சிந்தனைசெய்துபார், பிறக்கும் குழந்தைக்கு எதுவுமே தெரியாமல் இருந்த அந்த ஆரம்ப நிலைமையில் அதன்தாய் பாலுக்குப் பதிலாக எருமைப்பாலையோ பசுப்பாலையோ ஆட்டுப்பாலையோ அல்லது நாய் பன்றி முதலாம் கெட்ட பிராணிகளின் பாலையோ அல்லது கரடி, புலி முதலாம் கொடிய பிராணிகளின் பாலையோ அல்லது தேனையோ அல்லது வேறு எதையெதையோ ஊட்டியிருந்தாலும் அக்குழந்தை அதைத் தன் உணவாக ஏற்றுக்கொண்டே இருந்திருக்கும். இதேபோல் அரிசி சோற்றையோ, கோதுமை ரொட்டியையோ, ஆடு, மாடு, ஒட்டகையின் மாமிசத்தையோ அல்லது பன்றியின் மாமிசத்தையோ உணவாகப்பழக்கியிருந்தாலும் அதை அக்குழந்தை ஏற்றுக் கொண்டுதான் இருந்திருக்கும். இதே போல உடை, பழக்க

வழக்கம்,பாஷை, வீடு. முதலாம் மனித பழக்கவழக்க, கலாச்சாரங்களில் அமைந்துள்ள ஒவ்வோர் விஷயத்தையும் சிந்தனை செய்துபார் (விபரித்தால் பெருகும்)

வளர்ந்துகொண்டிருக்கும் அக்குழந்தைக்கு வானில் தெரிகிற சூரியன்தான் நமது இறைவன் என்றோ சந்திரன்தான் இறைவனென்றோ அல்லது பசுமாடுதான் எமது இறைவன் என்றோ அல்லது வேறு எதுஎது நம் இறைவன் என்றோ அதன் தாய் ஆரம்பத்தில் ஊட்டி (சொல்லிக்கொடுத்து) இருந்தால் நிச்சயமாக அக்குழந்தை அதன் தாயின் (அல்லது தந்தையின்) சொல்லை ஏற்றுக்கொண்டே இருந்திருக்கும். நல்லதோ கெட்டதோ எந்த உணவை, எந்த உடையை, எந்த பழக்கத்தை, எந்தக் கலாச்சாரத்தைக் கற்றுக் கொடுத்திருந்தாலும் அக்குழந்தை ஏற்றுக்கொண்டிருந்ததுபோல மார்க்க (தீன்) விபரத்தையும், அது சரியேயானாலும் பிழையேயானாலும் அக்குழந்தை நிச்சயமாக ஏற்றுக் கொண்டுதான் இருந்திருக்கும். இந்தச் சுருக்கமான விபரத்தில் இருந்து நாம் பல உண்மைகளைக் கண்டறிகிறோம். **அதிலொன்று என்னவென்றால் வளரும் குழந்தையின் ஆரம்ப வாழ்வு, தாய்தந்தையர் சகோதர சகோதரிகள் உற்றார் உறவினர் சூழலில் வாழ்பவர்களிலிருந்தே முளைகொள்ள ஆரம்பிக்கிறது என்பதுதான். ஆனால் அந்த வளரும் குழந்தைக்கு தான் பயிற்றப்படும் முறைகளில் எது சரியானது? எது பிழையானது? எது நன்மையானது? எது என் நோக்கத்தை நிறைவேற்றக்கூடியது? எது என் நோக்கத்தை நிறைவேற்றக் கூடாதது? என்ற விபரங்கள் எதுவுமே தெரியாது.** இந்த ஆரம்பப் பழக்கங்கள் நாளாவட்டத்தில் குழந்தையின் வழக்கமாகவே நிறைவுபெற்று விடுகின்றன. அதாவது சரிபிழை தெரியாத காலத்தில் குழந்தைக்கு ஊட்டப்பட்ட உணவு, உடை மற்றும் பழக்கங்கள் அறிவு முதலிய எல்லா விஷயங்களுமே **வழக்கமாகமாறிக் குழந்தையின் உள்ளத்தில் உறுதியாகக் குடிகொண்டு விடுகின்றன.**வளரும் குழந்தையின் எதிர்கால வாழ்வு தாய் தந்தையரிலிருந்தே ஆரம்பிக்கப்படுகிறது என்பதை நாம் இப்போது ஓரளவு தெரிந்துகொண்டோம்.

**ஹதீஸ்:** ***பிறக்கிற ஒவ்வோர் குழந்தையும் நல்ல பிள்ளையாக (இயற்கைக்குரிய பண்புகளோடு) தான் பிறக்கிறது. பின்பு அதன் தாய் தந்தையர் அதை எஹூதியாகவும், நஸாறாவாகவும், மஜூஸியாகவும் செய்துவிடுகிறார்கள்.***

என்று றஸூல்(ஸல்) அவர்களுடைய ஓர் ஹதீஸ் காணப்படுகிறது. இதேகருத்துள்ள வேறுசில ஹதீஸ்களும் தென்படுகின்றன. நாம் இந்த ஒன்றையோ போதுமாக்கிக்கொள்வோம்.

இந்த ஹதீஸை ஆராய்வு செய்தால் பல உண்மைகள் தென்படுகின்றன. அதாவது எஹூதி, நஸாறா, முஸ்ரீக், காபீர், முனாபீக், மூமீன், நாஸ்த்தீகன் போன்ற எந்தக் கூட்டத்தைச் சேர்ந்த பெண்ணாயினும் அவள் பெற்றெடுக்கும் குழந்தை இயற்கைத் தன்மைக்குமாறில்லாத நல்ல குழந்தையேதான் என்பது தென்படுகிறது. அதாவது எந்த ஓர் உருவத்தையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மெழுகைப்போல, அல்லது எந்த எழுத்தையும் நிறத்தையும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வெள்ளைப்பேப்பரைப் போலவே அக்குழந்தை எத்துறையில் எவ்வித பயிற்சியையும் அறிவையும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே பிறக்கிறது என்பது நமக்குத் தெரியவருகிறது. பிறகு அக்குழந்தை தாய் தந்தையர் அல்லது உற்றார் உறவினரின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதாலும் அவர்களால் உபதேசிப்படுகிற உபதேசமொழிகளைக் கேட்டறிவதாலும் அவர்களால் கற்பிக்கப்டுகிற நூலறிவை (கல்வியை)ப் பெற்றுக் கொள்வதாலும் சூழலுக்கும் பழக்கவழக்கத்துக்கும் அறிவுக்கும் ஏற்றபடி மனோ இச்சைகளில் மூழ்குவதாலுந்தான், நல்லபிள்ளையாகப் பிறந்த குழந்தை (கெட்ட பிள்ளையாக) எஹூதி நஸாராவாக அல்லது முஸரீக்காக மாற்றமடைகிறது. **இவ்விஷயத்தை தெளிவாய் மனதில் பதித்துக்கொள்ள வேண்டும்.**

பிறந்த குழந்தைகள் ஒவ்வொன்றும் தனித்தனிச் சிறப்பியல்புகளை உடையனவாய் இருப்பினும், அக்குழந்தைகளின் தாய் தந்தையர் அக்குழந்தையின் உடல் நலனைக்கவனித்து (நோய் நொடிகள் ஏற்படாமல்) தான் குழந்தை வளர்ப்பில் ஈடுபடுகின்றார்களே அல்லாமல் **அக்குழந்தையின் உளவளர்ச்சிக்காக பெரும்பாலும் முயற்சி எடுப்பதேயில்லை. ஆயினும் அவர்கள் உளவளர்ச்சிக்காக, அறிவு வளர்ச்சிக்காக கையாளும் உபாயம் பழக்க வழக்க, கலாச்சாரங்களில் பயிற்சியளிப்பதும் பாடசாலையில் நூலறிவைக் கற்பிப்பதும்தான். இந்தப் பழக்க வழக்க கலாச்சாரங்களும் நூலறிவும் சரியான அடிப்படையில் உள்ளவையா? என்பதை பெரும்பாலும் பொருட்படுத்துவதோ கவனத்தில் எடுப்பதோ இல்லை.**ஒவ்வோர் தாய் தந்தையும் தங்களை அல்லது தாங்களறிந்துள்ள உண்மைகளைத் தங்கள் குழந்தைகளில் பிரதிபலிக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் பெரும்பாலும் குழந்தை வளர்ப்பில் ஈடுபடுகிறார்கள். அவர்களால் ஊட்டப்படும் கல்வியைக்கொண்டு அக்குழந்தை வாழவேண்டும் என்பதே அவர்களுடைய அவா. இன்னும் சிறிது விரிவுபடுத்தினால்,**குழந்தை எவ்விதமான கஷ்ட நஷ்டத்தையும் அடையினும் உண்மையைக் கண்டறிந்து அதன்படி வாழட்டுமென்ற நோக்கோடு கல்வி புகட்டப்படுவதேயில்லை.**எழுதவாசிக்கப் படித்துக்கொள்ளட்டும் அல்லது உத்தியோகம் பார்க்கப்படிக்கட்டும் இதுதான் எம்தாய் தந்தையரின் நோக்கம். அக்குழந்தைகளைக் குழந்தைகளாக வளர்க்க வேண்டுமேயல்லாமல் எம்மை நாம் அவர்களில் கண்டு களிப்பதற்காகக் **குழந்தைகளை வளர்க்கக் கூடாது என்று அறிஞர் ரூசோ கூறுகிறார்.**சுருக்கமாகக் கூறினால் தரவுகளை ஏற்றுக்கொண்ட கம்பியூட்டரை (கணனிகளை)ப் போலவே குழந்தை மாறிவிடுகிறது.

ஆகவே இயற்கையிலேயே நல்லதாக மெழுகை ஒத்ததாக அல்லது வெள்ளைப்பேப்பரை ஒத்ததாகப் பிறந்தகுழந்தை கெட்டதாக மாற்றமடையப் பலகாரணங்கள் இருக்கினறன என்பதும், அக்காரணங்களில் மிகமுக்கியமானவை மூன்றே என்பதும் தென்படுகிறது. அவையாவன,

**முதலாவது காரணம்:**

தாய் தந்தை, உறவினரால், சூழலில் உள்ள மக்களால், சமூகமக்களால், (ஏற்பட்ட) ஊட்டப்பட்ட பழக்க வழக்கங்களுக்கு அடிமையாதல் என்பதேயாகும்.

**இரண்டாவது காரணம்:**
தாய் தந்தையர் மற்றும் சமூகமக்களால்ஊட்டப்பட்ட கேள்வியறிவுகளிலும் தான் கற்றறிந்த (புஸ்த்தகம்) (கிதாபு) நூலறிவுகளிலும் சிக்குண்டு அடிமையாதல் என்பதாகும்.

**முன்றாவது காரணம்:**
முன்கூறிய பழக்கவழக்கங்களுக்கும் நூலறிவுக்கும் அடிமையான ஒருவன் அதற்கேற்றபடியே சிந்தனை செய்வான். சிந்தனை கேற்றபடியே ஆசை கொள்வான். தன் ஆசையே சரியானதென்றும் தன் ஆசைக்காகத் தான் பயன்படுத்தும் அறிவே சரியானதென்றும் தீர்ப்புக் கட்டுவான். ஆகவே இவன் தன் மனோ இச்சைக்கு அடிமையாகிவிடுகிறான்.

**மேலே மிகச்சுருக்கமாய்க் கூறிய இம் மூன்று காரணங்களையும் ஒன்று சேர்த்து ''வஹ்மு" பேதபுத்தி என்றும் திரை என்றும் முத்திரை என்றும் கூறப்படும்.**அதாவது பழக்கவழக்கங்களில் கட்டுண்ணுவதால் அல்லது அடிமைப்படுவதாலும் தான் கேட்டறிந்த, கற்றறிந்த நூற்கேள்வியறிவுகளில் சிக்குண்டு அடிமையாகி ஆராய்வில்லாமல் நம்புவதாலும், மனோஇச்சைக்கு அடிமையாவதினாலும்தான் நல்லவன் கெட்டவனாக மாற்றமடைகிறான் என்பதை அறிந்து கொண்டோம். இதை இன்னுமொரு வகையில் கூறினால்,**தவறான பழக்க வழக்கம், தவறான நூற்கேள்வியறிவு, தவறான மனோ இச்சை ஆகிய இம் மூன்று திரைகளிலும் சிக்குண்டிருப்பவன் தன் கல்பில் முத்திரை பொறிக்கப்பட்டவனாக, இருள் சிறையில் சிக்குண்டவனாக, குருடனாக, வழிதெரியாதவனாக, வழிகெட்டவனாக, நரகநெருப்பின்பால் ஓட்டப்பட்வனாக இருக்கிறான் என்றே கூறலாம்.**

இப்போது நாம் தெரிந்து கொண்ட விஷயத்தை எதிரிடையாக நோக்கினால் இன்னோர் உண்மை எமக்குத் தென்படுகிறது. அதாவது ஒரு முஸ்ரிக்கை அல்லது எஹுதுவை அல்லது நஸாராவை அல்லது மஜுஸியை அல்லது ஒரு மூடனைவிட்டும், பழக்கவழக்கம் நூற்கேள்வியறிவு, மனோஇச்சை ஆகிய மூன்று திரைகளையும் (கழட்டி) நீக்கிவிட்டால் **அம்மனிதன் மெழுகை ஒத்தவனாக அல்லது வெள்ளைப் பேப்பரை ஒத்தவனாக, பிறக்கும் போது எந்த இயற்கை நிலையில் இருந்தானோ அதே நிலைமையுடையவனாக மாறிவிடுவான் என்பது தென்படுகிறது.** இவ்வுண்மையை உணர்ந்திருக்கிற ஒலிமார்கள், ஞானமார்க்கத்தில் செல்ல விரும்புகிற தன் மாணவனை விட்டும் இம்மூன்று திரைகளையும் நீக்கிவிடாமல் எந்த ஓர் ஞான நுட்பங்களையும் உபதேசிப்பதே இல்லை. அம் மாணவர்களுக்குக் கொடுக்கபடுகிற பயிற்சிகளில் முதலாவது பயிற்சி இத்திரைகளில் நின்றும் விடுபடக்கூடிய பயிற்சியேயாகும். இப்பயிற்சியில் தேர்ச்சியடையாத ஒருவன் காலையில் மூமினாகவும் மாலையில் முஸ்ரிக்காகவும் இன்னோர் வேளையில் இன்னோர் குணமுடையவனாயும் இருப்பான் என்பது நிச்சயம்.

**ஹதீஸ்:** ***மறுமை நாள் வருவதற்கு முன் இரவின் காரிருள் போன்ற பித்தனாக்கள் ஏற்பட்டுவிடும். மனிதன் காலையில் விசுவாசியாகி மாலையில் நிராகரிப்பவனாக மாறிவிடுவான், மாலையில் விசுவாசியாகி காலையில் நிராகரிப்பவனாக மாறிவிடுவான். அன்றி பல கூட்டத்தினர் உலப்பொருளுக்காகத் தங்களின் மார்க்கத்தை விற்றுவிடுவார்கள். என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அனஸ்(ரலி) அவர்கள்**
**ஆதாரம்: திர்மிதீ**

நாம் முன்பு குறிப்பிட்ட ஹதீஸில் இருந்து இன்னும் ஓர் உண்மை நமக்குத் தென்படுகிறது. அதாவது பிறக்கும் குழந்தை (இஸ்லாம் என்ற) இயற்கையோடொட்டிய ரீதியில் நல்லதாக, எந்த உருவத்தையும் ஏற்றுக்கொள்ளும் மெழுகை ஒத்ததாக, அல்லது எவ்வித நிறத்தையும் உருவத்தையும் ஏற்றுக்கொள்ளும் கண்ணாடியைப்போல் அல்லது வெள்ளைப் பேப்பரை போல, பிறக்கிறதென்று கூறப்பட்டிருக்கிறதேயல்லாமல் **மூமினாக அல்லது ஈமான் கொண்டதாகப் பிறக்கின்றதென்று கூறப்படவே இல்லை. ஆகவே ஈமான் (விசுவாசம்) என்பது பிறக்கும் போதே ஏற்படுவதில்லை என்பதும் பிறக்கும் குழந்தை ஈமானையோ, ஷிர்க்கையோ அல்லது வேறு எதை எதையோ ஏற்றுக்கொள்ளும் உள்ளப்பக்குவமுடையதாகவே பிறக்கிறது என்பதும் தெரிகிறது.**ஆகவே குழந்தை மூமினுக்குப் பிறந்ததினாலும் முஸ்ரிக்கிற்குப் பிறந்ததினாலும் மூடப்பழக்க வழக்கம், தவறான நூற்கேள்வியறிவு, மனோ இச்சை ஆகிய மூன்று விலங்குகளில், சிறைகளில் சிக்குண்டிருக்கும்போது அக்குழந்தைக்குத் தான் கொண்டுள்ள பழக்க வழக்கம், கலாச்சாரம், அறிவு, விளக்கம், விசுவாசம் சரியனதா பிழையானதா? என்பது தெரியாமல் இருப்பதால், தான் பழகியுள்ள பழக்கவழக்கம் கலாச்சாரம் அறிவு மனோ இச்சையாவும் சரியானதும் உண்மையானதும், என்று பூரணமாகவே நம்பிக்கை கொண்டுவிடுகிறான் அவனுக்குத் தன் பழக்க வழக்க, அறிவு மனோ இச்சைகளில் எவ்விதமான சந்தேகமுமே கிடையாது. எம் தாய் தந்தையரின் அல்லது முன்னோரின் நிலைமையும் இதுதான்.

**ஆகவே இறைவன் எவனுக்கு வழிகாட்ட நாடினானோ அவனுக்குத் தன்பழக்க வழக்கம் அறிவுமுதலாம் பண்புகளில் சந்தேகம் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கி விடுகிறான்.**சிந்திக்க தூண்டிவிடுகிறான். உண்மையை உணர்த்தி வழிகாட்டி ஓர் நல்லடியானாக மாற்றிவிடுகிறான். இந்த நல்லடியான் அல்லது அறிவாளி அல்லது ஆராய்சியாளன், பழக்க வழக்க அறிவுமனோ இச்சை

என்னும் திரைகளில் சிக்குண்டிருக்கும் மனிதரை நோக்கி ஓர் உண்மையை உணர்த்த முற்பட்டால் அம்மக்களுக்கு அவ்வுண்மையை ஏற்கமுடியாத நிலைமை மட்டுமல்லாமல் அடங்காத கோபமும் ஆக்ரோஷமும் உண்டாகி விடுகிறது. அதாவது **திரையில் சிக்குண்டிருக்கும் மனிதரை நோக்கி உங்களுடைய பழக்க வழக்கம் பிழையானது, அறிவு பிழையானது. மனோ இச்சை பிழையானது என்று கூறப்பட்டால் மாபெரும் போராட்டமே ஆரம்பமாகிவிடுகிறது.**

ஹதீஸ்: *(சனங்கள்) ஒரு கூட்டம் விளங்கிக் கொள்ளக் கூடாத செய்தியைப் பேசுகிற ஒவ்வொருவனுடைய செய்தியும் அவர்களுக்கு அபத்தமாய் விடுகிறது.*

இந்த நிலைமை ஏறக்குறைய உலகமக்கள் அனை வரிடத்திலுமே இருந்தாலும் **முஸ்லிம் சமூக மக்களிடையே மிகக் கடினமாகவே தென்படுகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் நம்முன்னோர் நாம் வழி தவறிவிடுவோம் (அவர்களுடைய வழியிலிருந்தும் நீங்கி விடுவோம்) என்று நம்பி, அப்படி விலகிவிடக்கூடாது என்று விரும்பி, மிகக்கடினமான விலங்குகளை, இருட்திரைகளை எமக்கு ஏற்படுத்தி விட்டிருக்கிறார்கள்.**இந்த திரைகளில் நாம் சிக்கியுள்ளோம் என்ற உண்மை, அதாவது இஸ்லாத்தின் சில அம்சங்கள் புறட்டப்பட்டு அப்புரட்டில் நாம் ஊன்றிவிடுவதற்காக என்முன்னோரில் சிலர் அறியாமை காரணமாகச் சில மூடப்பழக்கம், சில மூடஅறிவு விளக்கங்களை எமக்கு ஊட்டி விட்டிருக்கிறார்கள் என்பது எள்ளளவும் **எம் சமூகமக்களில் மிகப் பெரும்பாலாருக்கு தெரியவே தெரியாது.**ஏன் தெரியுமா? நாம் அறியாமை என்ற இருளில் சிக்கிக் கொண்டிருப்பதனால்தான் தெரியாது. எம்மை வழிப்படுத்துவதற்காக அவர்களால் ஊட்டப்பட்ட அறிவுதான் எம்மை அறிவீனர்களாய் மாற்றிவிட்டிருக்கிறது.

ஹதீஸ்: *அறிவுகளில் சில அறிவீனங்களும் உண்டு.*

என்று கூறப்படுவது நாம் மேலே காட்டிய விஷயத்தை நிரூபிப்பதாய் இருக்கிறது. எம் சமூகமக்களில் உள்ள அறிவு குறைந்த பெரும்பாலான மக்கள் (அவாம்கள்) சிறிதேனும் சிந்திக்க முடியாத நிலைமையில் ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பூரணமான ஓர் உண்மையாகும். இவர்களுடைய பழக்க வழக்கங்களிலோ அறிவிலோ கொள்கை விளக்கங்களிலோ உண்மையான சீர்திருத்தங்களை ஏற்படுத்தக் காலாகாலம் ஒருசில அறிவாளர்கள் முயற்சிக்கும் போதெல்லாம் இம்மக்கள் மயக்கமமைடயவும் எதிர்க்கவும் பழமையில் ஊறிவிடவும்தான் செய்கிறார்கள். காரணம் என்னவென்றால் நாம் முன்பு கூறிய மூன்று கடினமான திரைகளிலும் மக்கள் சிக்குண்டிருப்பதும், இத்திரைகளில் நாம் சிக்குண்டிருக்கிறோம் என்பதை மக்கள் அறியாமல் இருப்பதுமேயாகும்.

நடுத்தர அறிவுடைய மக்களின் உள்ளத்தில் இத்திரைகளின் தன்மை சரியாகத் தெளிவாக விளங்கவேண்டும் என்பதற்காக ஒரு சிறுகதையை நாம் எடுத்துக்கொள்வோம். அத்தர் முதலாம் வாசனைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகிற ஒரு கடையில் நுழைந்த ஒரு மனிதன் திடீரென்று மயங்கிக் கீழே விழுந்துவிட்டான். அங்குள்ள மக்கள் அம்மனிதனுடைய மயக்கத்தைப் போக்குவதற்காக எவ்வளவோ முயற்சித்தும் பலன்கிட்டவேயில்லை. அவ்வேளை அங்கே வந்த ஒரு பெரியார் விஷயத்தை அறிந்தார். மயங்கி விழுந்தவனுடைய தொழிலை மக்களிடம் அப்பெரியார் விசாரித்தபோது அம்மனிதன் ஒரு சக்கிலியன் (தோட்டி) என்பது தெரியவந்தது. உடனே அப்பெரியார் சிறிது மலத்தை எடுத்து அவனுடைய மூக்கின் சமீபமாகத் தடவும்படி மக்களை ஏவினார். மக்களும் அப்படியே செய்தார்கள். மயங்கி விழுந்த மனிதன் அதே நிமிடம் உணர்வு பெற்றவனாக எழும்பிவிட்டான். கதை இதுதான். கதை உண்மையா? பொய்யா? என்ற பிரச்சினை எமக்கு வேண்டியதில்லை. நமக்கு வேண்டிய ஓர் அறிவு இக்கதையில் இருக்கவே செய்கிறது.

அதாவது மலம் வாருகிற தொழிலை மேற்கொண்டிருந்த ஒருவனுக்கு மலத்தின் துர்வாடை பழக்கப்பட்டு வழக்கமாய் மாறியுள்ள ஒரு சாதாரண (சிம்பிள்) விஷயமேயாகும். அந்தத் துர்வாடையை வெறுப்புக்குரிய ஒன்றாக அவன் காண்பதேயில்லை. அது துர்வாடை என்பதைக்கூட ஒப்புக்கொள்வதும் இல்லை இவனுடைய சொந்த அனுபவத்துக்கு மாற்றமான ஒரு வாடையை (அத்தர் முதலாம் வாசனைப் பொருட்களின் வாசனையை) இவன் அனுபவிக்கும் போது மயங்கிவிழுவது ஆச்சரியமேயல்ல. இவனை இந்த நிலைமைக்கு ஆளாக்கியது இவனுடைய பழக்கவழக்கம்தான்.

**இதேபோல தையிபாஎனும் மணக்கும் கலிமாவில் ஊறிய ஒருவனுடைய பழக்கவழக்கத்தை (நல்லடியார்களின் சில பழக்க வழக்கங்களை) கபீஸா என்னும் துர்நாற்றம் கலிமாவில் ஊறி வளர்ந்த பாமரமக்கள் பார்க்கும்போது மயக்கமடைகிறார்கள். நல்லடியாரின் பழக்க வழக்கம் பெரும்பாலாரின் பழக்கவழக்கங்ளுக்கு முற்றம் நேர் விரோதமாய் இருப்பதால் உடனே பிழையென்று தீர்ப்புக் கட்டவும் முற்படுகிறார்கள். சக்கிலியன் அத்தர் வாடையைப் பிழையானது என்று தீர்ப்புக்கட்டுவதுபோல.**

எமது கதையில் கூறியது போல எந்த ஒரு மனிதனாயினும்சரி அவன் கற்றறிந்த அல்லது கேட்டறிந்த ஒரு கொள்கை விளக்கம் பிழையானது என்று ஒருவர் கூறக்கேட்கும்போது அல்லது ஒரு நூலை வாசிக்கும்போது மயக்கமடைகிறான். தோட்டியின் நிலைமையே அவனுக்கு ஏற்படுகிறது தன்கொள்கை விளக்கம் சரியா? பிழையா? என்பது அவனுக்குத் தெரியாவிட்டாலும் கூட, தான் கற்றறிந்த அல்லது கேட்டறிந்த அறிவுத்தளையில் (திரையில்) சிக்குண்டிருப்பதால் உடனே மறுக்கவும், எதிர்க்கவும் செய்கிறான். மேலும் இது பித்அத், காபிர், முஸ்ரிக்குகளின் கொள்கை என்று தீர்ப்புக்கட்டவும் அக்கொள்கை விளக்கத்தைக் கூறிய பெரியாரை அல்லது அறிவாளியை மூடன்,பித்தன், ஷைத்தான், காபீர் என்றெல்லாம் தீர்ப்புக்கட்டவும் செய்கிறான். **உலக மக்களில் பெரும்பாலும் முஸ்லிம்களின் நிலைமை இப்படித்தான் தென்படுகிறது.**

இதேபோல் தவறான மனோ இச்சையில் ஊறியுள்ள ஒருவன் அது பிழையானது என்று உணர்த்தப்படும்போது தோட்டியின் நிலைமையைத்தான் பெறுகிறான். ஆகவே எந்த ஒரு மனிதனாயினும் தவறான பழக்கவழக்கம் தவறான நூற்கேள்வியறிவு, தவறான மனோ இச்சைகளில் சிக்குண்டிருக்கும் போது உண்மையை உணர முடியாதவனாகவேதான் இருப்பான். இம்மூன்று (ஆரம்ப திரைகள், தடைகள்) விலங்குகளில் இருந்தும் ஒருவன் விடுபட்டு விடுவானேயானால் நிச்சயமாக **அவன் உண்மையைக கண்டறியும் மனோபக்குவமுடையவனாக மாறிவிடுவான் என்பது நிச்சயம்.** ஆகையால்தான் உண்மையான பாதையில் செல்லவிரும்பும் ஒருவன் இம்மூன்று திரைகளை விட்டும் நீங்க வேண்டும் என்றும் அத்திரைகள் மீண்டும் மூடிக்கொள்ளாமலிருக்கத் **துர்ச்சன சகவாசத்தைவிட்டு நீங்க வேண்டும் மென்றும், சர்ச்சனசங்க உறவாடலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் கனம் தங்கிய பல பெரியார்கள் ஏகமனதாகக் கூறுகிறார்கள். ஆம், இது எமக்கு சொந்த அனுபவத்திலும் கண்டறிந்த ஓர் உண்மையாகும்.**

ஆகவே, நான் உன்னை எச்சரிக்கிறேன். ஈமானின் உண்மை என்ன? குர்ஆன், ஹதீஸுகளின் உண்மை என்ன? அவை எதற்காக? இஸ்லாம் இறைவனின் திருப்பொருத்தத்தைப் பெறக்கூடிய, சாந்தியை தரக்கூடிய உண்மையான ஒரு பாதைதானா? றசூல்(ஸல்) அவர்கள் உண்மையான றசூல் என்பதும், இறுதி நபியென்பதும் உண்மையா? என்ற விபரங்களைப் பூரண உண்மைகளை நீ அறிய வேண்டும் என்று ஆசைகொண்டவனாக இருந்தால் உன்னை மூடிக் கொண்டிருக்கிற, நாம் முன்பு கூறிய மூன்று திரைகளையும் விட்டும் நீங்கி மெழுகை அல்லது வெள்ளைப் பேப்பரை அல்லது கண்ணாடியை ஒத்ததாக உன் உள்ளத்தை ஆக்கிக்கொள்ள வேண்டும். **இல்லையானால் நிச்சயமாக உண்மையைக் கண்டறியவும் சாந்தியடையவும் உன்னால் முடியாமலே போய்விடும். இதை நினைவில் இருத்திக்கொள்.**

## (3)

**இ**ன்றைய உலகில் ஒவ்வோர் மதத்திலும் பற்பல பிரிவுகளும் பற்பல அறிஞர்களும் இருக்கவே செய்கிறார்கள். ஆயினும் நாம் எம்முடைய இஸ்லாத்தையும் அதில் தோன்றியுள்ள அறிஞர்களையுமே எடுத்துக்கொள்வோம். அதாவது இஸ்லாம் என்ற பொதுவான பெயரில் அல்லது அடிப்படையில் எத்தனை எத்தனையோ இனமான, வெவ்வேறான பழக்கவழக்கம், கலாச்சாரங்களுடைய மக்களும் பல அறிஞர்களும் எழுபதுக்கும் அதிகமான “மத்ஹபு”க்களும் தோன்றியதும் அழிந்தொழிந்ததும் உண்டு. ஆனால் இன்றைய உலகில் முஸ்லிம்களிடையே மீதமாயுள்ளது ஹனபி, ஷாபி, ஹம்பலி, மாலிக் ஆகிய நான்கு மத்ஹபுக்கள் மட்டுமதான். இஸ்லாமிய அறிஞர்களில் (இமாம்களில்)மக்களிடையே இன்று நினைவிலுள்ளவர்கள் அல்லது மதிப்புக்குரியவர்கள் இந்த நான்கு இமாம்கள் மட்டும்தான். இந்த இமாம்கள் ஒவ்வொருவரையும் பல கோடாகோடி மக்கள் பின்பற்றி வாழ்கிறார்கள். இம்மேதைகளான இமாம்களின் உண்மை, பொய் அறிவு விளக்கம் முதலிய விபரங்கள் சாதாரண மக்களுக்குத் தெரியாதேயென்றாலும் பூர்வீக காலமிருந்தே மக்களால் இவர்கள் புகழப்பட்டு வந்திருப்பதாலும் பல கோடாகோடி மக்கள் இவர்களைப் பின்பற்றி ஒழுகிக்கொண்டிருப்பதாலும் இவர்களை நாம் சந்தேகப்பட வேண்டிய அவசியமே இல்லையென்பதும் எமது நம்பிக்கையாகும்

இந்தக் கனம்தங்கிய இமாம்கள் ஒவ்வொருவரும் குர்ஆன் ஹதீஸ்களை மூலாதாரமாகக் கொண்டு அவரவர் அறிவு விளக்கத்துக்கும் அவ்வக்கால சூழ்நிலை சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றபடி பல வழிகளையும் பற்பல சட்டநுட்பங்களையும் எமக்கு வகுத்து விளக்கிச் சென்றிருக்கிறார்கள். இவர்கள் ஈமானையும், இஸ்லாத்தையும் ஒன்றிணைத்து வெளிப்படை (லாஹிறு), உட்படை (பாதின்) என் இருபெரும் பிரிவுகளாக பிரித்துப் **பெரும்பாலும் வெளிப்படையை மட்டுமே விளக்கிச் சென்றுள்ளார்கள் என்பது ஆராய்பவர்களுக்குத் தெரியுமேயன்றி அவாம்களான பாமரமக்களுக்குத் தெரியவே தெரியது.** இம்மகான்களான இமாம்கள் சிற்சில விஷயங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வோர் திசையில்போய்க் கொண்டிருக்கிறார்கள். சிற்சில விஷயங்களில் ஒருவரை ஒருவர் எதிர்ப்பவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சிலவிஷயங்களில் ஒருவரின் போக்கை மற்றவர் சீர்திருத்தம் செய்கிறார்கள். சில விஷயங்களில் ஒருவரையொருவர் பின்பற்றி சென்றிருக்கிறார்கள். (இவ்விபரங்கள் பின்னால் தெளிவுபடுத்தப்படும்) இவர்களின்போக்கு இப்படி அமைந்திருப்பது மக்களுக்கு எவ்வளவோ நன்மை பயக்குவதாகவே இருக்கறது.

ஆனால் இவர்களைப் பின்பற்றிச் செல்லும் சாதரண மக்களுக்கு (திரைகளில் சிக்குண்ட மக்களுக்கு) இந்த இமாம்களின் போக்கையும், அதன் காரணங்களையும் உணர ஆற்றலில்லாமல் இருப்பதால் மத்ஹப் வித்தியாசம் பாராட்டுகிறார்கள். ஒரு சாரார் ஷாபி இமாமும் அவர்களுடைய மதஹபுமே சரியானது, இலகுவானது என்று கூறினால் மறுசாரார் அதை மறுத்து இல்லை ஹனபி இமாமும் அவருடைய மத்ஹபுமே சரியானது, இலகுவானது என்கிறார்கள். இதுபோல் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தோர் தொழுகையின் பின் துஆ ஓதலாம் என்றால் மற்றோர் கூட்டத்தார் ஓதவே கூடாது என்கிறார்கள். ஒரு கூட்டத்தார் கொடி ஏற்றலாமென்றால் மறுகூட்டத்தார் ஏற்றவேகூடாது என்கிறார்கள். இதேபோல் மற்ற விஷயங்களை நீ சிந்தனைக்கெடுத்துக்கொள். இந்த ஒவ்வோர் கூட்டத்தார்களும் அவரவர் வாதங்களுக்கு குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் ஆகியவற்றிலிருந்தே ஆதாரமும் காட்டுகிறார்கள். உலகின் நாலாபக்கங்களிலுமுள்ள எல்லா முஸ்லிம்களுடையவும் நிலைமை ஏறக்குறைய இப்படித்தான் தென்படுகிறது. இஸ்லாமிய நாட்டு அரசாங்க நிலைமைகளும் இப்படித்தான் இருக்கின்றன.

فَتَقَطَّعُوٓا۟ أَمْرَهُم بَيْنَهُمْ زُبُرًا ۖ كُلُّ حِزْبٍۭ بِمَا لَدَيْهِمْ فَرِحُونَ

23:53 *எனினும் தங்களுடைய வேதத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வோர் வகுப்பாரும் தங்களிடமுள்ள பிரிவைக் கொண்டு சந்தோஷமடைகிறார்கள்.*

என்று அல்குர்ஆன் கூறுவது போல கிறிஸ்த்தவர்கள், எஹுதுகள், முஸ்லிம்கள் எல்லோருமே இப்படித்தான் இருக்கிறார்கள். இவைபோன்ற மற்றும் மனித சமூகத்திலுள்ள அத்தனை விஷயங்களையும் நீ சிந்தனைக் கெடுத்துக்கொள். விபரிப்பதனால் மிக விரிவடையும்.

மனித வாழ்க்கையிலுள்ள நடைமுறை பாவனை, கொள்கை முதலாம் விஷயங்களில் சிந்தித்து விளங்கியறிந்து முடிவுக்கு வரமுடியாத மக்கள் (அறிஞர்களிலும் மிகப்பலர்) கட்சிப்பற்றுடைய தீவிரவாதிகளாய்மாறி ஒருவரையொருவர் எதிர்த்து யுத்தமே செய்ய முற்பட்டுவிடுகிறார்கள். குர்ஆன், ஹதீஸ்களுடைய உண்மையும், மத்ஹபுகளுடைய (இமாம்களுடைய) நோக்கமும் என்ன? என்பதைப் புரிந்துகொள்ளாத மனிதர்கள், மனிதரென்றால், எல்லோரும் ஒரே நிலையில், ஒரே தகைமையிலுள்ளவர்கள்தானே என்று நம்பி விடுகிறார்கள். போர்செய்ய முற்படுகிறார்கள். ஒருவரை யொருவர் ஷைத்தானாகக் காணுகிறார்கள். இவ் விஷயங்களை விபரம் தரும் பல ஆயத்துக்கள். ஹதீஸ்கள் தென்படுகின்றன. விஷயத்தைச் சுருக்க வேண்டுமென்பதற்காக அவற்றை நாம் இங்கே குறிப்பிடவில்லை.

இவ்விதமான சொற்போர், மற்போர்களுக்கெல்லாம் மூலகாரணம் என்ன தெரியுமா? நாம் முன்பு கூறியுள்ள ஆரம்பத் திரைகளில் மனிதர்கள் சிக்குண்டிருப்பதுதான். அதுமட்டுமல்ல. திரைகளில் நாம் சிக்கியுள்ளோம் என்பது கூட மக்களுக்குத் தெரியாத இன்னோர் இருள் திரையிலும் இவர்கள் சிக்குண்டிருக்கிறார்கள். அத்தர்க் கடைக்குச்சென்ற தோட்டியின் நிலைமையை எய்தி விடுகிறார்கள். இந்த மூன்று திரைகளுடையவும் விபரங்கள் நடுத்தர வகுப்பைச்சேர்ந்த உனக்குச் சரிவர விளங்கவேண்டும். உன் உள்ளத்தில் பதியவேண்டும் என்பதற்காக நான் இன்னும் சிறிது கூறவிரும்புகிறேன்.

தான் ஒரு புஸ்த்தகத்தில் அல்லது கிதாபிலிருந்து வாசித்தறிந்த அல்லது தாய்தந்தை, சமூகமக்களால் அல்லது சமூகப் பெரியார்களால் அல்லது மௌலவி அல்லது ஆசிரியர் போன்றவர்களால் கேட்டறிந்த ஒரு விஷயத்துக்கு மாறாக ஒருவர் ஒரு விஷயத்தைக் கூறும்போது அல்லது எழுதும்போது, நூற்கேள்விகளுக்கு அடிமையாகித் திரையில் சிக்குண்டிருக்கிற மனிதன் உடனே அதை மறுக்கவும் எதிர்க்கவும் முற்படுகிறான். **தான் வஹ்மு என்ற பேதபுத்தியில் மூழ்கியிருக்கிறேன் என்பதும் அவனுக்குத் தெரியாது. எந்த அடிப்படையில் நான் அதை மறுக்கிறேன், எதிர்க்கிறேன் என்பதும் அவனுக்குத் தெரியாது.**அவனுடைய உள்ளத்தில் மறைந்து, புதையுண்டுபோய்க் கிடந்த சில தீயசக்திகளும் இவனுடைய பேதபுத்திக்கு துணைபுரிவதால் இவன் தீவிரவாதியாகவே மாற்றமடைகிறான். தன்னைத் தீவிரவாதியாய் மாற்றுவது எது? என்பதும் இவனுக்குத் தெரியவே தெரியாது. தான் நூற்கேள்வியறிவில் சிக்குண்டிருக்கிறேன் என்பதும் உண்மையையே நான் மறுக்கிறேன் என்பதும்கூட இவனுடைய அறிவுக்குத் தென்படுவதில்லை. ஏன்? **தான் கற்றிந்த கேட்டறிந்த விஷயங்களை எவ்வித ஆராய்வும் இல்லாமல் இவன் பூரணமாய் நம்பி இருப்பதால் தான் கொண்டுள்ள அறிவே சரியானது என்று அவனையறியாமலே அவன் நம்பியிருக்கிறான்.**

பொதுப்படையாகக் கூறினால் இவ்விதமான மக்கள் மத விஷயங்களில் மிகப்பெரிய தீவிரவாதிகளாய் பயங்கரவாதிகளாய் மாறிவிடுகிறார்கள். ஒரு சிறு அற்பவிஷயத்தில் ஒரு தமிழனுக்கும், முஸ்லிமுக்கும் அல்லது முஸ்லிமுக்கும் சிங்களவனுக்கும் அல்லது தமிழனுக்கும் சிங்களவனுக்கும் ஒரு சச்சரவு ஏற்பட்டுவிட்டால் அது முடிவில் அந்த ஒரு சமூக மக்களுடைய அல்லது மதங்களுடைய பெரும் போராட்டமாக மாறிப் பல உயிர்களைப் பலி கொண்டு விடுகிறது. இதையெல்லாம் விட மிகப்பெரிய ஒரு நஷ்டமும் ஏற்படவே செய்கிறது. **அதாவது முன்பிருந்த உள்ளத்தின் திரை மென்மேலும் வலிமை அடைகிறது.**

தான்கேட்டும் கற்றும் அறிந்துள்ள, அனுஷ்டானத்தில் கொண்டுள்ள (வழமைப்படுத்திக்கொண்ட) இஸ்லாத்தின் (மதத்தின்) சட்டதிட்டங்கள், கொள்கை விளக்கங்கள் எவையெவையோ அவை சரியானவையேயானாலும், பிழையானவையேயானாலும் அவற்றைக் கண்டிப்பாய்க் கையாண்டுதான் ஆகவேண்டும் என்று நம்புகிறார்களேயன்றி **அவற்றைச் சிறிதேனும் ஆராய்ந்து பார்க்க விரும்புவதேயில்லை. உண்மையைக் கண்டறிந்தபின் செயலில் ஈடுபடுவோம் என்றும் அவர்கள் நினைப்பதில்லை.**ஏனென்றால் இவர்கள் நூற்கேள்வியறிவை வாழ்க்கை வசதிக்காக கற்றுக் கொள்வதேயல்லாமல் ஆராய்ந்து உண்மையைக் கண்டறிவதற்காகக் கற்றுக் கொள்வதேயில்லை. மேலும் இவர்களிடத்தில் உண்மையைக் கண்டறிய வேண்டுமென்ற அவாவும் மனோவலிமையும் இருப்பதுமில்லை. இவர்களுடைய கொள்கை அல்லது விளக்கம் அல்லது செயல் பிழைதானென்று **சரியான ஆதாரங்களோடு நிரூபிக்கப்பட்டாலும் கூட அதை அவர்கள் ஒப்புக்கொள்வதேயில்லை,**வெள்ளைப் பேப்பரில் ஒரு வர்ணமையினால் அல்லது பல வர்ணமையினால் எழுதி அல்லது சித்திரம் தீட்டப்பட்டிருக்கும்போது அதேநிலைமையில் அப்பேப்பரில் வேறோர் மையினால் வேறு எழுத்துக்களை அல்லது வேறு சித்திரங்களைத் தீட்டும்போது எந்த எழுத்து எந்தச்சித்திரம் தெளிவாய் அமையும்? ஒன்றுமே தெளிவாய் அமையாது. நூற்கேள்வியறிவுக்கு அடிமையான மக்களும் ஒன்றுக்குமேல் ஒன்றாய்ப் பலசித்திரங்கள் தீட்டப்பட்ட பேப்பரைப்போல அமைந்துவிடுகிறார்கள்.

அதாவது தாங்கள் கற்றும் கேட்டுமுள்ள அறிவுக்கு மாறாக ஒன்றைப் படிக்கும்போது அல்லது கேட்கும்போது தடுமாற்றமடைகிறார்கள். ஒரு நிமிடம் தெளிவடைகிறார்கள். மறு நிமிடம் அவர்களை திரைமூடிக்கொள்கிறது. இவ்வகையினர் உண்மையை அறிவதனால் தங்களுடைய நூற்கேள்வி அறிவுகளின் பிடிகளில் இருந்து தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அலங்கோலப்பட்டுள்ள (ஒரு சித்திரம் தீட்டப் பட்டுள்ள பேப்பரில் வேறோர் சித்திரம் இடம்பெற வேண்டுமானால்) பேப்பரில் உள்ள பழைய சித்திரத்தை அழித்து பேப்பரை வெண்நிறமாக மாற்றியேயாக வேண்டும். இவர்கள், தாங்கள் உண்மையை ஒப்புக்கொள்ளதான் வேண்டும் என்று விரும்பினால் **தாங்கள் கற்றறிந்த கேட்டறிந்த விபரங்கள் உண்மையா? பொய்யா? என்பதை நிச்சயமாக ஆராய்ந்தே ஆகவேண்டும். பொய்யானால் அந்த அறிவை மறக்கவும் உண்மையானால் அந்த அறிவை உறுதிப்படுத்தவும்தான் வேண்டும், இதில் பட்டதாரிகளும் அடங்குவார்கள்.**

வேதத்தைப் பற்றிக் குர்ஆன். ஹதீஸ்களின் அல்லது நல்லடியார்களின் அல்லது பகுத்தறிவின் எவ்விதமான தர்க்கரீதியான ஆதாரங்ளும் இல்லாமலே உண்மையைக் கூட இவ்வினமக்கள் மறுக்கிறார்கள். எதிர்க்கிறார்கள. காலாகாலம் தோன்றிய நபிமார்கள் ஒலிமார்கள் அறிஞர்கள் கூறிய உண்மையான நல்லறிவுகளை இவ்வினமக்கள் புறக்கணித்தும் ஒருசில புஸ்த்தகம் கிதாபுகளை ஓதுக்கித் தள்ளியும் **ஒரு சில அறிவாளர்கள் நபிமார்களைக்கூடக் கொன்றொழித்தும் விட்டிருக்கிறார்கள்.**இவ்விதமான படுபாதகங்களுக்கெல்லாம் மூலகாரணம் தங்கள் தவறான நூற்கேள்வி அறிவுகளில் சிக்குண்டிருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளாமைதான். இது பூர்வீகாலச் செய்தி மட்டுமல்ல. இக்காலத்திலும் அப்படித்தான். ஒருமனிதர் சரியான உண்மையான ஆதாரங்களோடு உண்மையைக் கூற முற்பட்டாலும் **இது என்ன? ஓர் புது மார்க்கமாய் இருக்கிறது என்று மருளவும் எதிர்க்கவும்தான் செய்கிறார்கள்.**

ஏனென்றால் குர்ஆன் ஹதீஸ்களுக்கும் பகுத்தறிவுக்கும் மாறாய் எவ்விதமான தப்புத் தவறான விளக்கங்கள் எழுதப்பட்டிருந்தாலும் அது அறபு எழுத்தில் அறபு பாஷையில் எழுதப்பட்டிருந்தால் அதை ஓர் மேலான பொக்கிஷம் என்றே பெரும்பாலார் நம்பிவிடுகிறார்கள். இவ்விதமான நூற்களை எழுதியவர்கள் மதிப்பையும் பட்டங்களையும் பெற்றவர்கள் என்றும் நாள் ஒன்றுக்கு பலநூறு றக்காஅத் தொழுகை தொழுபவர்கள் என்றும் அறிந்துகொண்டால் அவர்கள் நிச்சயமாக ஒலிமார்களே என்றும் தீர்ப்புக்கட்டி விடுகிறார்கள். இவ்விதமான எழுத்தாளர்கள் ஷைத்தானைப் பின்பற்றியவர்களாய் இருந்தாலும்கூட, இவர்களுடைய எழுத்துக்களில் மக்கள் பிழை காண்பதேயில்லை. அவர்களையோ அவர்களுடைய நூலையோ ஆராய்வதுமில்லை. குர்ஆன் ஹதீஸ்ளுக்கும் பகுத்தறிவுக்கும் மாற்றமான **பல நூற்றுக்கணக்கான அறபுக் கிதாபுகளும் மற்றும் பாஷைகளிலுள்ள புஸ்த்தகங்களும் எம் சமூகத்தில் பாடசாலைகளில் கலாசாலைகளில் இன்றும் இருந்து கொண்டுதான் இருக்கின்றன.**இவ்வுண்மை ஆராய்ச்சியாளர்களான மகான்களுக்கேயன்றி அல்லது உள்ளத்தின் திரைகள் நீங்கப்பெற்ற உத்தமர்களுக்கேயன்றி சாதரண நூற்கேள்வியறிவில் சிக்குண்டமக்களுக்குத் தெரியவேதெரியாது. **ஆராய்வில்லாதபட்டதாரிகளுக்குக்கூடத் தெரியாது.** (இதை சமீபத்தில் அறிவோம்)

أُولَٰٓئِكَ ٱلَّذِينَ طَبَعَ ٱللَّهُ عَلَىٰ قُلُوبِهِمْ وَسَمْعِهِمْ وَأَبْصَٰرِهِمْ ۖ وَأُولَٰٓئِكَ
هُمُ ٱلْغَٰفِلُونَ

16:108 *இத்தகையோரின் இருதயங்கள் மீதும் காதுகள் மீதும் கண்கள் மீதும் அல்லாஹ் முத்திரையிட்டுவிட்டான். இவர்கள்தான் (ஆராய்வில்லாமல்) பராமுகமாய் இருப்பவர்கள்.*

ஆகவே இவர்கள் அறிந்துள்ள நூலறிவுக்குமாற்றமாய் இன்னொன்றைக் காணும்போது மறுக்கத்தானே முற்படுவார்கள்

بَلْ كَذَّبُوا۟ بِمَا لَمْ يُحِيطُوا۟ بِعِلْمِهِۦ وَلَمَّا يَأْتِهِمْ تَأْوِيلُهُۥ ۚ

10:39 *என்கினும் அவர்களுக்குத் தெரியாதும் அதன் தாவீல் (ஆதாரம்,விளக்கம்) அவர்களுக்கு வராததுமான சங்கதியைப் பொய்யென்று அவர்கள் கூறுவார்கள்.*

وَإِذَا قِيلَ لَهُمُ ٱتَّبِعُوا۟ مَآ أَنزَلَ ٱللَّهُ قَالُوا۟ بَلْ نَتَّبِعُ مَا وَجَدْنَا عَلَيْهِ
ءَابَآءَنَآ ۚ أَوَلَوْ كَانَ ٱلشَّيْطَٰنُ يَدْعُوهُمْ إِلَىٰ عَذَابِ ٱلسَّعِيرِ

31:21 *அவர்களை நோக்கி அல்லாஹ்வினால் இறக்கியதைப் பின்பற்றுங்கள் என்று கூறப்பட்டால் அதற்கு அவர்கள் இல்லை. எங்கள் மூதாதைகள் எதன்மீதிருக்கக் கண்டோமோ அதனையே பின்பற்றுவோம். என்று கூறுகின்றனர். அவர்களுடைய மூதாதைகளை ஷைத்தான் நரகவேதனையின்பால் அழைத்திருந்தாலுமா?*

ஆராய்வில்லாமல் கண்மூடித்தனமாய் ஒருவரை ஒருவர் பின்பற்றி எழுதியுள்ள தர்க்கரீதியான எவ்விதமான ஆதாரமும் அற்ற **புஸ்த்தகம், கிதாபுகளைப் பாடமிட்டுக் கொண்டு புஸ்த்தகப் புச்சிகளாய் மாறியுள்ள பெரும்பாலான மக்கள் (அறிஞர்கள், மௌலவிகள், ஆசிரியர்களிலுள்ள ஆராய்வில்லாத மிகப்பலர்) இந்த நிலைமையில்தான் தென்படுகிறார்கள்.**இதன்மிகமுக்கிய காரணம் இவர்கள் சம்பாதிக்க மதிப்பைப்பெறக் கல்வியைப் பெற்றுக்கொள்கிறார்களே அன்றி உண்மையை உணரவேண்டும், உண்மையோடு ஒன்றிப் பூரணத் தன்மையைப் பெறவேண்டும்மென்ற நோக்கோடு கல்வியைக் கற்ப தேயில்லை.

**இவ்வினமான அறிஞர்கள் பட்டதாரிகள் சொல்லிக் கொடுப்பதைக் கேட்டுப் பழகிக்கொண்ட கிளியைப்போல அல்லது பேச்சைப் பதிவுசெய்து கொண்டுள்ள ஒலிப்பதிவு நாடாவைப்போல இருக்கிறார்கள். ஒலிப்பதிவை ஏற்றுக்கொண்ட நாடாவுக்கு அவ்வொலியின் உண்மை பொய் எப்படித் தெரியும்.**அவ்வொலியைக் கேட்டு ஆராய்தல் செய்யும் இன்ஸான்தான் உண்மை, பொய்யை உணருவான். பேச்சைப் பழகிக்கொண்ட கிளிக்கு அப்பேச்சின் உண்மை, பொய் தெரியவே தெரியாது. இவ்வகையினரைக் குர்ஆன் ஹதீஸ்களும் ஆன்றோர்களில் பலருடைய வாக்கியங்களும் புஸ்த்தகம் சுமந்த கழுதைகளுக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றன. இவ்விதமான மக்கள் கண் மூடித்தனமாய்ப் பின்பற்றல் முறையில் செல்கிறாகள் என்பதற்கு மிகச் சிறிய ஓர் உதாரணம் மட்டும் தருகிறேன்.

இஸ்லாமிய மக்களிடைய “தொழுகை அடவு” என்ற ஒரு சிறுநூல் பாவனையில் இருப்பது நம் எல்லோருக்கும் தெரிந்த ஓர் விஷயம்தான். இந்நூல் பெரும்பாலும் தமிழ் பாஷையில் தமிழ் எழுத்திலும் அறபுத்தமிழ் என்ற ஒருவகை ஆக்க எழுத்திலும் அச்சிட்டு வெளியிடப்பட்டிருப்பதும், இனிமேலும் வெளியிடப்படப் போவதென்பதும் நமக்குத்தெரியும். தொழுகையின் ஒழுக்கங்களை விளக்குவதற்காக ஆரம்பத்தில் பாவிக்கப்பட்ட சொல் (வசனம்) தொழுகை அதபு என்பதே. இதைப் பின்னால் யாரோ ஒருவர் அச்சிட்டபோது தவறாக “தால்”( د ) என்ற அட்சரத்தின் கீழே “நுக்கத்” ஒன்று விழுந்திருக்கிறது. அது “தால்” என்ற சப்தம் மாறி “ட” என்ற சப்தமாய் அமைந்து விட்டது. இதைப்பின் வந்தோர் எள்ளளவும் சிந்தனை செய்யாமல் இன்றுவரையிலும் தொழுகை அடவு என்றுதான் அச்சிடுகிறார்கள். இனிமேலும் அப்படித்தான் அச்சிடுவார்களென்றே நினைக்கின்றேன். இந்த ஓர் அற்பவிஷயத்தைக் கூட இதுவரையில் **எந்த ஓர் அறிஞரும் எந்த ஓர் அறபுக்கலாசலையும் சிந்தனைக்கு எடுத்ததாய் தெரியவில்லை.**

இந்த அற்பவிஷயத்திலேயே கண்மூடித்தனமாய் பின்பற்றுகிறார்கள் என்றால் கடினமான விஷயங்களில் எப்படிபின்பற்றுவார்கள் என்பதைச் சிந்தனை செய்துபார். இதேபோல உள்ள கண்டிப்பான, பிடிவாதமான, நூற்கேள்வியறிவுகளில் சிக்கியுள்ள மிகப்பல மனிதர்களை, என் அனுபவத்துக்காக ஆராய்ந்து பார்த்து நான் பழகியதுண்டு. பட்டதாரிகளான அறிஞர்களில் மிகப்பலர் இந்த வஹ்மில் கட்டுண்டிருக்கும்போது சாதாரண மனிதர்களின் நிலைமை எப்படியிருக்கும் என்பதைச் சிந்தித்துப்பார்.

أَفَمَن شَرَحَ ٱللَّهُ صَدْرَهُۥ لِلْإِسْلَٰمِ فَهُوَ عَلَىٰ نُورٍ مِّن رَّبِّهِۦ ۚ

39:22 *எவனுடையஇருதயத்ததை இஸ்லாத்தைப் பெற்றுக்கொள்ள அல்லாஹ் விசாலப்படுத்தினானோ அவன் தன் இறைவனின் பிரகாசத்தில் இருக்கிறான்.*

يَهْدِى بِهِ ٱللَّهُ مَنِ ٱتَّبَعَ رِضْوَٰنَهُۥ سُبُلَ ٱلسَّلَٰمِ وَيُخْرِجُهُم مِّنَ ٱلظُّلُمَٰتِ
إِلَى ٱلنُّورِ بِإِذْنِهِۦ وَيَهْدِيهِمْ إِلَىٰ صِرَٰطٍ مُّسْتَقِيمٍ

5:16 *எவர்கள் அல்லாஹ்வின் திருப்பொருத்ததைப் பின்பற்றுகிறார்களோ அவர்களை அதன்மூலமாக அல்லாஹ் சமாதனத்துக்குரிய வழியில் செலுத்துகிறான். அன்றி இருள்களில் இருந்தும் வெளிப்படுத்தித் தன் அருளைக்கொண்டு பிரகாசத்தின் பக்கம் கொண்டுவிடுகிறான். தவிர அவர்களை சிறாத்துல் முஸ்த்தகீம் எனும் நேரான பாதையில் செல்லும்படியும் செய்கிறான்.(சிறாத்து, ஆகிறாவில்தானே என்று மருளவேண்டாம்).*

என் அனுபவ உண்மை என்னவென்றால், இந்த நூற்கேள்வி அறிவுகளில் தடையுண்டிருக்கும் மக்களுக்கு வழி காட்டுவது உண்மையை உணர்த்துவது இறைவனாலேயேயன்றி **மனித முயற்சியானால் ஆகக்கூடிய் ஓர் காரியமேயல்ல என்பதுதான்.**

மாபெரும் அறிஞர் என்று மக்களால் போற்றப்படுகிற (இமாம்) கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் பல்கலைக்கழகப் பேராசிரியராய்க் கடைமையாற்றியவர்கள். சிறுபராயத்திலேயே பல நூற்களை

எழுதியவர்கள். அப்படியிருந்தும் அவர்கள் கற்ற நூலறிவை எள்ளளவும் ஆராயாமல் இருந்து கொண்டுதான் பேராசிரியராகவும் நூலாசிரியராகவும் உலகுக்கு அறிமுகமானார்கள். பின்பு அவர்களுடைய காலத்தில் இருந்த பற்பல விகற்பமான கொள்கைகளை ஆராய்ந்தபோதுதான் அவர்களுடைய கல்வியில் அவர்களுக்கே சந்தேகம் ஏற்பட்டது. அந்தச் சந்தேகம் தான் அவர்களுக்கு உண்மையான தௌஹீதை வெளிப்படுத்தக் காரணமாய் இருந்தது. அதன்பின் பேராசிரியர் பதவியையும் நூலாசிரியர் பதவியையும்விட்டு நீங்கி இறைவழி செல்ல முற்பட்டார்கள் என்பதை சரித்திர வாயிலாக நாம் அறிந்தே இருக்கிறோம். நூற்கேள்வியறிவில் கட்டுண்டு பட்டம் பதவிகளில் கட்டுண்டுருக்கிற பெரும்பாலான மக்களின் நிலைமை இப்படித்தான். இவர்கள் **உண்மையை அறியத்தடையாய் இருப்பதெல்லாம் நான் ஓர் பட்டதாரியாய் இருந்தும் கல்விமானாய் இருந்தும் சாதாரண மனிதனுடைய பேச்சை விளக்கத்தை ஏற்றுக் கொள்வதா? என்ற ஓர் அகங்காரப் பிடிவாதமேயல்லாமல் வேறொன்றுமே கிடையாது.** இதைக் குர்ஆனே எமக்கு விளக்கம் தருகிறது. நூலறிவு அம்மனிதனை அவ்வளவு கடினமாய் திரையிடும் என்பது நிச்சயம்.

**“தான் கற்ற நூலளவேயாகும் நுண்ணறிவு”**

## (4)

**அ**டுத்ததாகத் தன்னுடைய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி அத்திரையில் சிக்குண்டிருக்கிற ஓர்மனிதன் தன்னுடைய பழக்கவழக்கங்களுக்கு மாறான ஓர்செயலை இன்னொருவரிடத்தில் காணும்போது அச்செயலை உடனே மறுக்கிறான் எதிர்க்கிறான். உதாரணமாக குந்தியிருந்து சலம் கழித்துப் பழகிக்கொண்ட ஒருவன் நின்றுகொண்டு சலம் கழிப்பவனைக் காணும்போது அச்செயலை மறுக்கிறான். எதிர்க்கிறான், திடீரெனக் காபீர் என்று கூடக் கூறுகிறான். அவன் ஏன் நின்றுகொண்டு சலம் கழித்தான், சில சந்தர்ப்பங்களில் அப்படிச்செய்வது ஆகுமா? ஆகாதா? என்ற விபரங்கள் எதுவுமே இவனுக்குத் தெரியாமல் இருக்கும்போதும் காபீர் என்றே தீர்ப்புக்கட்டிவிடுகிறான். நின்று சலம் கழிக்கக்கூடாது என்று கேட்டோ, கற்றோ அறிந்திருக்கிறான். அதேபோல தானும் குந்தியிருந்தே சலம் கழித்துப் பழகியிருக்கிறான். இன்னும் தன்சமூக மக்களும் அப்படியே செய்வதைக் கண்டிருக்கிறான். **இந்த அடிப்படையில்தான் அவன் பிழைகண்டான்.**காபீர் என்று தீர்ப்புக் கட்டினான். இவனுடைய பழக்க வழக்கத்துக்கும் அறிவுக்கும் அமைவாக உள்ளத்தில் மறைந்து நின்ற சில தீயசக்திகளும் வேலைசெய்ய ஆரம்பித்துவிடுகின்றன. இவன் தீவிரவாதியாகவே மாறுகிறான். இதேபோல் மற்றும் விஷயங்களையும் சிந்தனைக்கெடுத்துக்கொள்.

மனித குலத்தில் நடைமுறையிலுள்ள மிகப் பெரும்பலான விஷயங்கள் இந்தப் பழக்க வழக்க நடைமுறையின், அடிப்படையில்தான் சரி, பிழை கணிக்கப்படுகின்றன. உடை, தாடி, தலைப்பாகை போன்ற சாதாரண விஷயங்களில் கூட நல்லடியார்களையும் இந்த அடிப்படையில்தான் எடை போடுகிறார்கள். எம்நாட்டில், தென்னம்பிள்ளைக் கல்யாணம், காதுகுத்துக் கல்யாணம், சுன்னத்துக் கல்யாணம், வாழ்வு கல்யாணம் போன்ற இன்னும் எத்தனையெத்தனையோ கல்யாணங்கள், வைபவங்கள் எல்லாம் இந்த அடிப்படையில் தான் எம்சமூகத்தில் அமைந் திருக்கின்றன. எல்லோரும் காதுகுத்துக் கல்யாணத்திற்காக 7 நாள் “ஸ்பீக்கர்” பாவித்தால், நாம் குறைந்தது 8 நாளாவது பாவித்தேயாக வேண்டும். இல்லையானால் அது மார்க்க விரோதமாகக்கூட ஒருசில மக்களால் கணிக்கப்படக்கூடும். எவர் மனோவிரக்தி அடைந்து பைத்தியக்காரனாக மாறினாலும் எமக்கு நஷ்டமே கிடையாது. எம் பாரம்பரிய பழக்கத்தைக் கைவிடவே முடியாது என்ற நிலைமையிலேயே இன்றுள்ள சமூகமக்கள் வாழ்கிறார்கள். **இந்த பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகும் மக்கள் தங்கள் வாழ்வைக், குழந்தைகள் கண்கட்டி விளையாடுவதுபோல ஆக்கிக் கொண்டார்கள் என்றே எனக்குத் தென்படுகிறது.**

இதேபோல இந்த நூற்கேள்வி பழக்கவழக்கங்களின் திரையில் சிக்கிக்கொண்ட பெரும்பாலான மக்கள் ஈமான் இஸ்லாம் தீன்மார்க்கம் என்பதெல்லாம் தொழுகையேதான் என்றே முடிவு கட்டியிருக்கிறார்கள். உலகின் பல பாகங்களிலுமுள்ள பல இனமான முஸ்லீம்களில், ஒவ்வோர் வகுப்பாரும் ஒவ்வோர் தினுசான தொழுகை முதலாம் அமல்களைச் செய்கிறார்களென்பதை, அறிந்திருந்தும், எத்தனையெத்தனையோ வேறுபாடுகள் பழக்கவழக்கங்கள் தென்படுகின்றன என்பதைத் தெரிந்திருந்துகொண்டும்,**தாங்கள் எந்த அடிப்படையில் பழக்கப்பட்டிருக்கிறார்களோ அதுமட்டுமே சரியானது என்று தீர்ப்புக்கட்டி விடுகிறார்கள்.** பெரும்பாலார் இவ்விஷயத்தில் அணுவளவேனும் சிந்திப்பதோ மிகமிகக்குறைவுதான். இவ்விதமான பேதபுத்தியுடைய மக்களின் வாழ்வைக் குழந்தைகளின் குடிசை வாழ்வுக்கு ஒப்பிடாமல் வேறு எப்படித்தான் ஒப்பிடலாம்.

## (5)

**அ**டுத்ததாக மனோஇச்சைக்கு அடிமையான ஒருவன் அவனுடைய இச்சைக்கு மாறாக அல்லது அவனுடைய இச்சையைப் போக்கக்கூடிய ஓர் விஷயத்தைக் காணும்போதும், கேட்கும் போதும் அதை மறுக்கவும் எதிர்க்கவும் தான் செய்வான். குழந்தைகள் தம் தாய்தந்தையரை மூடர்களாகவும் உலோபிகளாகவும் காண்பது இந்த மனோஇச்சையென்னும் திரையின் ஓர் ஆரம்பப்பகுதியேயாகும். இந்தத் திரையில் ஏறக்குறைய ஐம்பது வீதமேனும் மாட்டிக்கொண்ட மக்கள் நல்லறிவுகளுக்கோ அறிஞர்களின் கட்டுபாடுகளுக்கோ செவிசாய்ப்பது மிகமிக அபூர்வமே. **இது ஒரு பெரிய உள நோயாகும்.**இதில் அநேகபிரிவுகள் இருக்கின்றன. இவற்றில் நான் எதைக் குறிப்பிடுகிறேன் என்பதை நீ முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். **“எவன் தன் மனோ இச்சையைத் தெய்வமாக எடுத்துக் கொண்டானோ” என்று குர்ஆன் கூறுகிற**மனோ இச்சையைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அதாவது

இறையன்பைப் பெறும் ஆசையைத் தவிர்ந்த, அந்த இறையன்பைத் தடை செய்யும் மற்றெல்லா ஆசைகளுமே மனோஇச்சையில் கட்டுண்டவையாகும். இதில் எமக்கு வேண்டியவற்றை மட்டும் நோக்குவோம்.

எந்த இனத்தை, எந்த நாட்டை, எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாய் இருப்பினும் மனிதர்களில் மிக அநேகர், உண்மை அல்லது தௌஹீது என்ற அடிப்படையில், தன்குழந்தையை அதன் பூரணத்தன்மையை அடைந்துகொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் குழந்தைகளை வளர்ப்பதோ அறிவுறுத்துவதோ கல்வி புகட்டுவதோ இல்லை. இன்னும் விபரமாய்க் கூறினால் ஒவ்வோர் குடும்பமும் சீரான தொழில்களைச் செய்து செம்மையாக வறுமை இன்றி வாழவும் சமூகமதிப்பைப் பெறவும்தான் விரும்புகிறது. இந்த மனிதகுலம் அறிந்துள்ள பூரணத்தன்மை என்னவென்றால் **பரிபூரணசெல்வமும் செல்வாக்கும் சுகபோகங்களும், நிறைந்த செழிப்பான உலக வாழ்வு என்பதுதான்.**ஆகவே இதே நோக்கோடுதான் குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள். இதைத்தவிர எமது குழந்தை எவ்விதமான கஷ்டநஷ்ட இன்னல்களையடைந்தாலும், உண்மையை அறியவேண்டும்,**அவ்வுண்மையிலே நிலைபெற்று இறைவனின் திருப்பொருத்தத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கோடு எவரும் குழந்தைகளை வளர்ப்பதேயில்லை. ஏனென்றால் இம்மக்கள் அறிந்துள்ள பூரணத் தன்மையான வாழ்வு சகல சுகபோகங்களும் நிறைந்த செழிப்பான உலகவாழ்வு என்பதுதானே.**இதை முன்பே கூறியுள்ளேன்.

இந்தச் சகல சுகபோகங்களும் நிறைந்த செழிப்பான வாழ்வைப் பெறுவதற்காகவே (நூலறிவும்) கல்வியும் மற்றும் கலைகளும் கற்பிக்கப்படுகின்றன. பட்டம் பதவிகள் பெற்றுப் பண்போடுவாழவேண்டும் என்பதே குறிக்கோளாகும். வளரும் குழந்தைக்கு வயது ஏறிக்கொண்டே போகும் போது அதன் இயற்கை சுபாவங்களிலும் வளர்ச்சி ஏற்படவே செய்கிறது. **அந்தச் சுபாவங்களில் ஒன்று பிறர் சாதிக்காத அல்லது சாதிக்கமுடியாத அபார சாதனைகளைத் தான் சாதிக்க வேண்டுமென்ற உணர்வாகும்.**அதாவது மக்கள் மெச்சிப் புகழக்கூடிய மதிப்போடு வாழ்வதற்கு மக்களிடத்தில் கவர்ச்சி வேண்டும் என்பதை வளரும் குழந்தை இயல்பாகவே உணர்கிறது. ஆனால் அந்தக்கவர்ச்சி எந்தவகையில் எந்த அடிப்படையில் என்பது அக்குழந்தைக்கு அறிவுறுத்தப்படாமையால், தான் விரும்புகிற எந்த ஓர் வகையிலாயினும் எந்த எந்த அடிப்படையிலாயினும் கவர்ச்சியைப் பெற்றே ஆகவேண்டும், என்று விரும்புகிறது. அது சரியான வகையா? சரியான அடிப்படையா? என்பதைக் குழந்தை பெரும்பாலும் பொருட்படுத்துவதே இல்லை.

தன்சக மாணவன் 6 பாடங்களில் சித்தியெய்தினால், தான் 8 பாடங்களில் சித்தியெய்த வேண்டும் என்று விரும்புகிறான். தன் சகமாணவன் வக்கீலாக வந்தால், தான் ஓர் நீதிவானாக வரவேண்டும் என்று விரும்புகிறான். தன் நண்பன் 3 அறைகளில் ஓர் வீட்டைக்கட்டிக் கொண்டால், தான் 5 அறைகளில் கட்டவே விரும்புகிறான். தன்னைப்போன்ற ஒருவன் 5 நாள் “டுயிட்” நடனமாடினால் தான் தலைகீழாய் 8 நாள் நிற்கவேண்டுமென்று ஆசைப்படுகிறான். ஓருவன் ஒரு வங்கியைக் கொள்ளையிட்டு ஒரு இலட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்டான் என்பதைக் கேள்விப்படுகிற இவன் இரண்டு வங்கிகளைக் கொள்ளையிடவும் 4 இலட்சம் ரூபாவை கைப்பற்றவும் விரும்புகிறான் நன்மையான விஷயமானாலும் தீமையான விஷயமானாலும் பரவாயில்லை, எப்படியும் அபார சாதனையைச் சாதிக்க வேண்டும், சீரோடும் சிறப்போடும் வாழவேண்டும் என்பதே நோக்கமாகும். **இந்த அபார சாதனைமோகம் தன்குறிக்கோளை நிறைவேற்றும் என்பதில் அவனுக்குப் பூரண நம்பிக்கையுண்டு.**

**சமூகத்தில் சீராய்ச் சிறப்பாய்வாழப் பணம்தேவை. பணத்தைப் பெறச் சரியானதென்றாலும் பிழையான தென்றாலும் கவர்ச்சி, வேஷம் (ஹீலா) அபார சாதனை தேவை.**தன் செயல்கள் தன்னை எந்த நிலைக்குள் ஆக்கும் என்பதை உணர்ந்து கொள்ளும் ஆற்றல் அவனிடமில்லை என்பது உண்மையேயாயினும் தன்னுடைய செயல் தன்னைச் செழிப்பாக வாழவைக்கும் என்றே அவன் பொதுப்படையாய் மேலோட்டமாய் நம்புகிறான். **ஏனென்றால் அவனுடைய உள்ளத்தில் பதிக்கப்பட்டுள்ள உண்மை பிறர் மெச்ச வாழ வேண்டும் என்பதுதானே.** ஆகவே இவன் எடுத்துக்கொண்ட முயற்சி சரியானதென்றாலும் பிழையானதென்றாலும் அதில் அபார சாதனையை மேற்கொள்ள வேண்டுமென்ற நோக்கமும் அதற்குதவியான மற்றும் சுபாவங்களும் ஒன்று சேர்ந்து பூரண மனோ இச்சை என்ற நிலைமையைப் பெற்றுவிடுகிறது. இந்த மனோஇச்சையை அவன் தெய்வஸ்த்தானத்தில் இருத்திக்கொள்கிறான்.

இந்த மனோஇச்சையினால் சிற்சில நுட்பமான தந்திரோபாயங்களையும் சிற்சில ஆற்றல்களையும் அவன் பெறவே செய்கிறான். இந்த **அறிவாற்றல் வளர்ச்சி இயற்கை எமக்களித்த மாபெரும் நன்கொடைகளில் ஒன்றாகும்.**இது இயற்கை நன்கொடையாய் இருந்தும் இதைப்புரிந்து கொள்ளாத ஒருசில வாலிப உள்ளங்கள் இந்த நன்கொடையைத் துஷ்பிரயோகம் செய்து விடுகின்றன. **இது வழிகாட்டிகளின் அறிவூட்டுபவர்களின் அறியாமையாகும்.**பூரணத்தன்மை எதில் தங்கியுள்ளது என்பதைப் கல்விமான்கள் இந்த இளம் உள்ளங்களுக்கு உணர்த்தாமைதான் காரணம். பிறர் வியந்து பாராட்டும் வண்ணம் நடந்து கொள்வதற்கான ஆசையையும் அறிவையும் ஏற்படுத்துவதே குழந்தைகளைக் கௌரவமாக வளர்ப்பதன் அடிப்படை என்று “ஹோம்ஸ்” என்பவர் கூறுகிறார். ஆனால், எந்தத் துறையில், எந்த அடிப்படையில், எந்த வகையில் பிறர் மெச்சத்தக்கதாய் வாழப்பழக்க வேண்டும், கற்பிக்கவேண்டும், அறிவூட்டப்பட வேண்டும் என்பதை நம்மில் மிகப்பலர் சிந்திப்பதே இல்லை. சிந்தித்தாலும் மிக **அநேகருடைய சிந்தனை உண்மையை நெருங்குவதும் இல்லை.**

எந்த நாட்டை, எந்தக் கிராமத்தை எடுத்துக்கொண்டாலும் பெரும்பான்மையோர் அறிவு குறைந்தவர்களாகவும் சிறுபான்மையோர்தான் அறிவுடையவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த அறிவு

குறைந்த பெரும்பான்மையான மக்களிடையயே மதிப்பை, செல்வாக்கைப் பெறவேண்டுமானால் அந்த மக்களுடைய அறிவுக்கேற்றபடிதான் நடக்கவேண்டும். இந்த மக்களின் அறிவு ஏற்றுக்கொள்ள முடியாத ஓர் சாதனையை நிலைநாட்ட முற்படும்போது அந்தச் சாதனை உண்மையயானதாய் இருந்தாலும்கூட அறிவு குறைந்த மக்களிடையயே மதிப்பையோ செல்வாக்கையோ பெறமுடியாது. மென்மேலும் அவமானத்தையம் கெட்டபெயர்களையும்தான் கேட்க நேரிடும். **உண்மையான சாதனைகளை நிலைநாட்டிய நபிமார்கள் றசூல்மார்கள், ஒலிமார்கள், அறிஞர்களில் மிகப்பலர் அந்த அந்தச் சமூகமக்களால் துன்புறுத்தப்பட்டதும் ஒருசிலர் கொலை செய்யப்பட்டதும் இந்த அபார சாதனையினால் தான்.**ஆகவே அறிவுகுறைந்த மக்கள் பெரும்பான்மையாய் வாழ்கிற இவ்வுலகில் அவர்களைத் திருப்திப்படுத்தி மதிப்பைப்பெற்ற ஒருவர் **உண்மையின் அடிப்படையில் அமையாத ஒரு வேஷதாரியாகத்தான் இருப்பார்.**வேஷமற்றவராய் இருந்தால் மக்கள் அவருக்கு மதிப்புக் கொடுக்கவேமாட்டார்கள். மக்களைத் திருப்திப்படுத்த அவரால் முடியவே முடியாது.

சாதரண மக்களால் ஒருவன் ஒதுக்கபடுகிறான் என்றால் **அவன் அம்மக்களிலும் தாழ்ந்தவனாக அல்லது மிக உயர்ந்த அறிவாற்றல் உடையவனாகவே இருப்பான்.**மக்களுக்கேற்ற கவர்ச்சியும் வேஷமும் உடையவன் மக்களிடையே மதிப்பைப் பெறலாம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆகவே சாதரண விஷயங்களிலும் கூட அபாரசாதனை மோகத்தில் சிக்கியுள்ள ஒருவன் தன்மன இச்சையைத் தெய்வமாக எடுத்துக்கொள்வதால் அவன் உண்மையான நல்லறிவுக்கோ, உண்மைக்கோ இடமளிப்பது அபூர்வமே, இந்த மனோஇச்சைக்கு அடிமையான ஒருவன் தன் மன நிலைமைக்கேற்றபடிதான் எதையும் சரி, பிழை கணிப்பான்.

தங்கள் சிறுபராயத்தில் கற்றறிந்த நூல்களில் ஈமான் இஸ்லாத்தின் உண்மைகள் எப்படியெப்படிக் கூறப்பட்டனவோ அதைப்போலவே எம் தாய் தந்தையர், ஆசிரியர்கள், சமூகப்பெரியார்கள் மூலம் கேட்டும் அறிந்திருக்கிறோம். ஆகவே எமது நூலறிவும் கேள்வியறிவும் ஒன்றுபடுகின்றன. இவ்வறிவில் எமக்கு சந்தேகம் ஏற்படக் காரணமே கிடையாது. ஏனென்றால், நாம் கற்றறிந்த நூல்கள், பெரும்பெரும் பட்டதாரிகள், உலமாக்கள், அறிஞர்களால் எழுதப்பட்டவையாய் இருப்பதாலும், எம் கேள்வியறிவும் அதேபோன்ற பட்டதாரிகள் உலமாக்கள் அறிஞர்களால் ஊட்டப்பட்டிருப்பதாலும் எம் மனோஇச்சை அவ்வறிவுகளுக்கமைவாய் அதே அடிப்படையில் ஏற்பட்டிருப்பதாலும் எம்மில் எமக்குச் சந்தேகம் ஏற்படக் காரணமே இல்லை. எவ்வகையில், எவ்வழியில் எம் அறிவுவளர்ச்சி அமைந்திருக்குமோ அதற்கமைவாகவே எம் மனோஇச்சை பிறக்கும் என்பது நிச்சயம். றசூல்(ஸல்) அவர்கள் மி்ராஜ் போய் வந்ததாகக் கற்றும் கேட்டும் இருக்கிறோம். அவர்களும் எங்களைப்போன்ற ஓர் மனிதரே என்பதும் எங்களுக்குத் தெரியும். ஆயினும் அவர்களைப் போல் நானும் ஓர் முறை மி்ராஜ் போய்வர வேண்டுமென்ற ஆசை, மனோஇச்சை நம்மைப் பிடிப்பதே இல்லை. ஏனென்றால் றசூலுல்லாஹ்வைப்போல் நாமும் போக முடியாதென்றே நாம் கற்றும் கேட்டும் அறிந்திருக்கிறோம். அப்படி யாரும் போய் வந்ததாகவும் நாம் அறியவில்லை. ஆகவே அப்படியோர் ஆசை, மனோஇச்சை எமக்கு ஏற்படாமல் இருப்பது ஆச்சரியமே அல்ல

## (6)

**நா**ம் மேலே மிகமிகச் சுருக்கமாய்க் கூறியுள்ள, நூற்கேள்வி அறிவு பழக்க வழக்கம், மனோஇச்சை ஆகிய இந்த மூன்று ஆரம்ப விலங்குகளில், திரைகளில், (முத்திரிகைகளில்) சிக்குண்டிருக்கிற மக்களுக்கு உண்மையாகவே உண்மை தெரியாமல்தான் இருக்கும். இருக்கிறது. ஏனென்றால் இம்மக்கள் தங்கள் அறிவை ஆராய விளங்கியறியச் சரியான சந்தர்ப்பம், வாய்ப்பு தேவையற்றவர்களாகவே இருக்கிறார்கள். சுருக்கமாகக் கூறினால் **நாங்கள் பரம்பரை பரம்பரையாய் மூமின்கள் வயிற்றில் பிறந்து வளர்ந்த பரிசுத்தமான மூமின்கள். ஓர்புதிய ஈமானோ இஸ்லாமோ, சீர்திருத்தமோ பழக்கவழக்கமோ எங்களுக்கு வேண்டியதில்லை. குர்ஆன் ஹதீஸ்களையும் அன்பியாக்களையும் அவர்களுடைய அடிச்சுவட்டையும் நாங்கள் பின்பற்றிச் செல்லும்போது நாங்கள் ஆராய வேண்டிய அவசியம்தான் என்ன? ஆராயவேண்டிய அவசியமே எங்களுக்கில்லையென்ற முடிவுக்கே நாம் வந்துவிடுகிறோம்.**இதுதான் எம் சமூகத்தின் வீழ்ச்சிக்குரிய, உண்மை புதையுண்டு போனதற்குரிய முதலாவது காரணமும் முழு மூடத்தனமுமாகும்.

நாம் ஒப்புக்கொண்டிருப்பதாய் வாய்வேதாந்தம் பேசுகிற அதே **குர்ஆன் சுமார் எழுபது இடங்களில் தொழுகையைக் கடை பிடித்தொழுகும் படியும் சுமார் முன்னூற்றுக்கும் அதிகமான இடங்களில் சிந்தித்து ஆராயும்படியும் அதிலும் மிகவிசேடமாக குர்ஆனின் வசனங்களைச் சிந்தனை செய்து தெளிவுபெறும் படியும் கூறிக்கொண்டிருப்பதை நாம் காணவில்லையா?**அதுமட்டுமா? இன்று உங்கள் மார்க்கத்தை பூரணமாக்கித் தந்தேன் என்று கூறுகிற அதேஇறைவன்தான் பிறக்கும் ஒவ்வோர் குழந்தைக்கும் சிந்திக்கக்கூடிய மூளை, இருதயம் (உள்ளம்) போன்றவற்றையும் கொடுத்து அனுப்புகிறான். சிந்திக்க வேண்டிய சூழ்நிலைகளையும் ஏற்படுத்துகிறான். சிந்திக்கவேண்டிய அவசியமில்லையானால் சிந்திக்க வேண்டிய கருவிகள் எதற்காக? ஆகிறாவில் நம்மைப் பிடித்து நரகில் தள்ளும்போது என் இறைவனே! நான் குற்றவாளியல்ல, என் தாய்தந்தையர், என் ஆசிரியர்கள், என் சமூகமக்கள், என் வழிகாட்டிகள்தான் என்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கிவிட்டார்கள் என்று நம் இறைவனை நோக்கிக்கூறும்போது,**அந்த இறைவன் எம்மைநோக்கி நான் சிந்திக்கச் சொன்னேனே! சிந்திக்க உதவியான உறுப்புக்களைத் தந்தேனே! சிந்திகக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகளை ஏற்படுத்தினேனே! சிந்தனை செய்து முடிவுகட்டினாயா? என்று நம்மைக் கேட்டால் நாம் என்ன பதில் கூறமுடியும்?**

உண்மைதான் நாம் சரியோ பிழையோ எமதறிவுக்கேற்றபடி சிந்தனைசெய்து முடிவுகட்டியிருந்தால் அம்முடிவு பிழையானதாய் இருந்தாலும் கூட, என் இறைவனே! நீ எனக்குத் தந்த அறிவின்படி நான் சிந்தனை செய்தேன், அதன்படிதான் நான் செயலாற்றினேன். **ஆகவே என்னை நீ மன்னிக்க வேண்டும் என்று உரிமைப் போராட்டம் ஒன்றைக் காருண்ய மூர்த்தியான அவ்விறைவனோடு நடாத்தவும் நல்லுதவி பெறவும் முடியுமல்லவா?** ஆகவே நாம் எம் அறிவு ஏற்றுக்கொள்ளும் வரையிலும் ஒவ்வோர் விஷயத்தையும் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

وَلَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهِۦ عِلْمٌ ۚ إِنَّ ٱلسَّمْعَ وَٱلْبَصَرَ وَٱلْفُؤَادَ كُلُّ أُو۟لَٰٓئِكَ
كَانَ عَنْهُ مَسْـُٔولًا

17:36 *நீர் அறியாத யாதொருவிஷயத்தையும் நீர் பின்தொடராதீர் ஏனென்றால் நிச்சயமாக கண், காது, இருதயம் ஆகிய இவை ஒவ்வொன்றுமே கேள்வி கேட்கப்படும்*

உண்மையை நாம் கண்டறிவதற்குக் கட்டுபாடற்ற நல்ல சுயசிந்தனை எமக்கு மிகஅவசியமாய் இருக்கிறது. ஆகவே உண்மையைப் பெறுவதற்காகச் சிந்தனை செய்யவேண்டிய நாம் நூற்கேள்வியறிவு, பழக்கவழக்கம், மனோஇச்சை முதலாம் விலங்குகளை விட்டும் நீங்கினவர்களாய் சுதந்திரமான பகுத்தறிவோடு சிந்தனை செய்துதான் உண்மையைக் காணவும், உறுதிகொள்ளவும் வேண்டும். மூடத்தனம் “குருட்டு நம்பிக்கை” என்ற போலியான வரட்டு அமைதியைவிட துணிவு ஆராய்வு அறவுவிளக்கம் என்ற (பிஸபீல்) போராட்டமே சிறந்ததாகும். உண்மையான அமைதி இந்தப் பீஸபீல் எனும் அறிவுப் போராட்டதில்தான் நிலைத்திருக்கிறது. உண்மையைக் கண்டறியும் போராட்டம் இல்லாமல் ஷிறாத் என்ற நேரான பாதையை எம்மால் கண்டறியவே முடியாது. அறிவுப் போராட்டமும் உண்மையைக் கண்டறியவேண்டும் என்ற அவாவும் துணிவும்தான் எம்மை ஸிராத் என்ற நேரானபாதையில் செலுத்தி எமது நோக்கமான (பிறப்பின்பயனைப்) பூரணத்தன்மையைப் பெற்றுத்தருமேயன்றி **மூடநம்பிக்கையோ குருட்டு அனுஷ்டானமோ எமக்குப் பூரணத்தன்மையைத் தராது என்பது நிச்சயம்.**

**ஹதீஸ்:***அறிவு ஈமான்தாரிகளின் தவறிப்போன ஓர் பொருளாகும். எனவே அவர்கள் அதனை எங்கே கண்டாலும் (அடையப்பெறினும்) அது அவருக்கே உரிமையுள்ளதாகும்.(இந்த ஹதீஸ் முன்பும் தரப்பட்டுள்ளது)*

இந்த ஹதீஸில் மிக அபூர்வமான உண்மைகள் பல தென்படுகின்றன மிக அவசியமான ஓர்முன் அறிவிப்பும் இதில் தென்படுகிறது. ஈமான்தாரிகளுக்கு வேண்டிய அறிவு எது? அது எப்போதவறியது? அறிவைத்தவறவிட்ட ஈமானதாரிகள் யார்? அந்த அறிவைக் கண்டவிடத்தில் கைப்பற்ற வேண்டிய ஈமான்தாரிகள் யார்? என்பவைபோன்ற விஷயங்களைச் சிந்தனை செய்துபார். மேலோட்டமாக நோக்காதே.

செவியின் இன்பம் நல்ல ஓசை இராகம் என்றால். கண்ணின் இன்பம் நல்ல காட்சி என்றால், மூக்கின் இன்பம் நல்ல மணம் என்றால், தொட்டறிவின் (ஸ்பரிஸம்) இன்பம் அனுபவிப்பு என்றால்,**ஆத்மாவின் (றூஹின்) இன்பம் அறிவைப் பெறுவதேயாகும் என்பதை நீ உணர்ந்தே ஆகவேண்டும்.**ஆகவே அவசியமான விஷயங்களில் அவசியத்துக்கமைவாய் நியாயமான முறையில் சிந்திக்க இடம்கொடாமல் தடைபோடுகிற ஒவ்வோர் வேஷதாரியும் **மனிதனின் பகுத்தறிவை உரிமையைப்பறிக்கும் திருடனாகவே இருக்கிறான்.**இதே போல அவசியமான விஷயங்களில் நியாயமான முறைப்படி தர்க்கரீதியாய் ஆதாரங்களோடு சிந்திக்க இடம் கொடாமல் **தடைபோடுகிற ஒவ்வோர் கிதாபும் திருட்டுபோவழிகளின் ஷைத்தான்களின் கையாயுதங்களாகவே இருக்கின்றன.**இன்ஷா அல்லாஹ் இதை நாம் சமீபத்தில் நிருபித்துக் காட்டுவோம் பொறுமை அடைவாயாக.

சிந்தனை என்பது ஏறக்குறைய எல்லாவகையான சிருஷ்டிகளுக்கும் ஓரளவு இருக்கிறது. என்பது உண்மை. ஆயினும் இன்ஸான் விசேட சிந்தனையுடையவன். மலக்குகளும் அறியாத இரகசியங்களையெல்லாம் அறியக்கூடியவன். இன்ஸான் இறைவனின் பிரதிநிதி (கலீபா) அல்லவா? **என்றாலும் சிந்திக்க வேண்டிய விடயங்களும் சிந்திக்கவேண்டிய முறைகளும் பல இருக்கின்றன.**ஆகவே சிந்திக்க வேண்டிய விஷயங்களில் சிந்திக்க வேண்டிய முறைப்படி, சிந்திக்க வேண்டிய அளவு சிந்திப்போமாக. எடுத்துக்கொண்ட விஷயத்துக்கு இன்னும் தூரம் என்றாலும் சளைக்காது தொடர்ந்து துணிவுடன் செல்வாயாக.

## இதன் சாரம்

**1ஆவது:** பிறக்கிற ஒவ்வோர் குழந்தையும் நல்லதாகவே பிறந்தாலும் அதன் தாய்தந்தையர், உற்றார் உறவினர்கள், சூழலில் உள்ளவர்களின் சகவாசத்தினால்தான் அக்குழந்தை கெட்டதாக, துர்க்குணமுள்ளதாக அறிவிலியாக மாற்றமடைகிறது.

**2ஆவது:** பிறந்த குழந்தையை உண்மையான வழிகாட்டிகள் உண்மையின் அடிப்படையில் வழிகாட்டினால் அதாவது குழந்தைக்கு உண்மையை உணர்த்தக்கூடிய பெற்றார் உறவினர் சூழல் கல்விகள் அமைந்தால் அக்குழந்தை நல்லதாக அறிவுடையதாக மற்றோருக்கும் வழிகாட்டக் கூடியதாக வளரும் என்பது நிச்சயம்.

**3ஆவது:** மனிதன் நல்லவனாக அல்லது கெட்டவனாக மாற்ற மடைவதற்குரிய காரணங்களில் மிக முக்கியமானவை மூன்று

அவை: 1. பழக்கவழக்கம்
2. நூற்கேள்வியறிவு
3. சுய மனோஇச்சை

**4ஆவது:** பழக்க வழக்கம், நூற்கேள்விஅறிவு, மனோ இச்சை என்பவை மிகக் கடினமான திரைகளாகும்.

**5ஆவது:** இந்த மூன்று திரைகளிலும் சிக்கியுள்ள மக்கள் உண்மையை உணர ஆற்றலில்லாதவர்களே தான்.

**6ஆவது:** உண்மையை அறிந்து அதன்படி வாழவேண்டுமென்றால் முன்கூறிய மூன்று திரைகளையும்விட்டு நீங்கவேண்டும் என்பது கட்டாய கடமையாகும்

**7ஆவது:** துர்ச்சன சகவாசம் வழிகெடுக்கும் என்பதையும் சற்சன சகவாசம் நேர்வழி காட்டும் என்பதையும்உள்ளத்தில் ஊன்றிப்பதித்துக் கொள்ளவேண்டும்

**8ஆவது:** உண்மையை நெருங்குவதானால் பட்டம்பதவி பணம் போன்றவற்றால் ஏற்பட்டுள்ள செருக்கையும் வீண்பிடிவாதத்தையும் நீக்கிவிட்டுத் தெளிந்தமனத்தோடு ஆராய்தல் செய்யவேண்டும்

**9ஆவது:** உண்மையைக் கண்டறிவதற்கும் உண்மையோடு ஒன்றி வெற்றி பெறுவதற்கும் சுய சிந்தனையும் மனஉறுதியும் மிக அவசியமானவை. சபலபுத்தி எந்த ஓர் பிரயோசனத்தையும் தரவே தராது.

## 003 உள்ளமும் கல்வியின் வேறுபாடும்

**(1)**

மனிதராகிய எம்முடைய உள்ளத்தை (மனதை) ஆரிபீன்களாகிய ஒலிமார்கள், ஞானவான்கள்,“அம்மாறா”, “லவ்வாமா”,“முல்ஹிமா”,“முத்மஇன்னா”,“றாளியா”,“மர்ளிய்யா”,“கமாலியா” என்று ஏழுபிரிவுகளாய் வகுத்து விபரம் தந்திருக்கிறார்கள். குர்ஆன் ஹதீஸ்களும் இதை ஆமோதிக்கின்றன. இந்த ஒவ்வோர் நிலைமையையும் (மர்த்தபாவையும்) தனித்தனியே விபரிப்பதனால் எத்தனையோ புஸ்த்தகங்களை எழுதவேண்டி ஏற்படும். மேலும் சாதாரண நடுத்தர அறிவுடைய மக்கள் விளங்கிக் கொள்வது கடினமாயும் இருக்கும். தத்துவ சாஸ்த்திரிகளான உளநூல் விற்பன்னர்களும் “ஹிப்நாடிஸ”, “மெஸ்மரைஸ” நிபுணர்களும் விளக்குவதுபோல் நாமும் விளக்க முற்பட்டால் அதுவும் நடுத்தர மக்களால் புரிந்துகொள்வது கடினமாகவே தென்படுகிறது. ஆகவே **இவற்றையெல்லாம் ஒன்றுபடுத்தி அவற்றின் சாரம்சத்தை ஏறக்குறைய எல்லாமக்களுக்கும் விளங்கிக்கொள்ளக் கூடியதாய்ச் சுருக்கமாய்க் கூற நான் விரும்புகிறேன்.** இந்த விபரத்தை ஓரளவேனும் புரிந்து கொள்ளமுடியாத ஒருவன், தன்னடைய பிறப்பின் நோக்கத்தையோ வணக்கம் (தொழுகை) முதலாம் அமல்களின் உண்மையையோ தௌஹீதின் உண்மை விளக்கத்தையோ பெற்றுக்கொள்ள முடியாமலே போய்விடலாம். **ஆகவே இந்த அவசியமான அறிவை முதலில் நாம் இலகுவாய் விளங்கி அறிந்துகொள்வோம்.**

**என் அன்பிற்குரிய வாலிபச் சகோதரனே!**

மனிதனுடைய உள்ளம், மனம், இருதயம் ஒன்றேயொன்றுதான் இதன் நிலைமைக்கேற்றபடி பலபெயர்களைப் பெறினும் நாம் இரு நிலைமைகளாய்ப் பகுத்தே அறிவோம். இந்த நிலைமைகளில் முதலாவதைப் புறமனம் அல்லது வெளிமனம் என்றும் இரண்டாவதை உள்மனம் என்றும் கூறுவோம். இந்த உள்மனம் என்பது வருணிக்கமுடியாத மிகமிக அபாரவல்லமை உடைய ஒன்றாகும். இந்த, வருணணைக்கப்பாற்பட்ட, அபாரசக்திவாய்ந்த உள்மனம் அறிந்துணர்ந்து சரிதான் என்று ஏற்று எடுத்துக் கொள்ளாத எந்த ஓர் விஷயத்திலும் **நம்பிக்கை கொள்வதே இல்லை.** கறாமத், முஹ்ஜிஸாத், என்றெல்லாம் கூறப்படுகிற மகா அற்புதவேலைகளெல்லாம்இந்த உள்மனத்தின் வல்லமையில் (செயல்பாட்டில்) தான் தங்கியிருக்கின்றன. மேலும் இல்ஹாம், கஸ்பு, இல்முல்லதுன்னிறுாயா, என்றெல்லாம் கூறப்படுகிற மிகமிக நுட்பமான அறிவுகள் காட்சிகள் எல்லாம் இந்த உள்மனத்தின்

செயல்பாடுகள்தான். மேலும் 'ஹிப்நாடிஸம்' மெஸ்மரைஸம் போன்ற கல்விகளும் உண்மையான கனவுகளும்கூட (பொய்கனவுகள் நீங்கலாக உள்ளவை) இம்மனத்தின் தொழிற்பாடுகளேயாகும். "வாஸிலாத்" போன்ற சூட்சும் சிருஷ்டிகளின் வசியம்கூட இம்மனத்தின் தொழிற்பாடேயாகும். ஆனால் இவை ஒவ்வொன்றும் உள்மனத்தின் ஒவ்வோர் நிலைமையில் கட்டுண்டனவாய் இருக்கின்றன். இவ்விபரம் இப்போது நமக்கு இவ்விடத்தில் தேவையில்லாமல் இருப்பதால் அதை வேறோரிடத்தில் அறிவோம்.

மனிதனுடைய உள்மனம் புறமனம் ஆகிய இருநிலைமைகளுக்கும் பொதுவாய் அமைந்த அறிவு அல்லது கல்விகள் நான்கு வகையாகும். அவற்றை இல்முல் எகீன், ஐனுல் எகீன், ஹக்குல் எகீன், கமாலுல் எகீன் அல்லது விஜ்தான், என்று அறபுபாஷையில் கூறுவார்கள். அதாவது இல்முல் எகீன் என்றால் நூற்கேள்வி அறிவுகளினால் ஏற்படுகிற அனுமானப் பிரமாணம், நம்பிக்கை,ஈமான் என்பதே அதன் கருத்தாகும். இக் கல்வி புறமனதுக்குரியதாகும். இரண்டாவது ஐனுல் எகீன் என்றால் பிரத்தியட்சப் பிரமாணத்தினால் ஏற்படுகிற அறிவும் நம்பிக்கைளும் (ஈமான்) என்பதே அதன் கருத்தாகும். இது உள்மனத்துக்குரிய ஆரம்பக் கல்வியாகும். மூன்றாவது ஹக்குல் எகீன் என்றால் அனுபவத்தினால் ஏற்படுகிற அறிவு, நம்பிக்கை (ஈமான்) என்பதே கருத்தாகும். இதுவும் உள்மனதுக்குரிய கல்வியாகும். இதை அனுபவம் என்று கூறுவதைவிட அனுபூதியென்று கூறுவதே சரியாகும். நாலாவதாக விஜ்தான் என்றால் உள்மனத்துக்கு இறைவனால் கொடுக்கப்படுகிற விசேட (கஸ்பு, இல்ஹாம், வஹி) அறிவாகும். இதுவும் உள்மனத்துக்குரிய கல்வியேயாகும். இதன் விபரமும் இப்போது உன் அறிவில் அமையாது. ஆகையால் இதையும் நாம் பின்பு நோக்குவோம்.

## இதன் சாரம்

**1ஆவது: மனித அறிவு நான்குவகையானது. அவற்றில்,**

A. **இல்முல் எகீன்**: நூற்கேள்வியறிவுகளினால் ஏற்படுகிற நம்பிக்கை, விசுவாசம்,ஈமான் என்பதே. இது புறமனத் தொடர்புடையது.

B. **ஐனுல் எகீன்**: பிரத்தியட்சப் பிரமாணத்தினால், சரியான ஆராய்வினால் உறுதியான ஆதாரங்களைக் கண்டறிந்து உண்டாகிற அறிவு, நம்பிக்கை, விசுவாசம்,ஈமான் என்பதே இதன் கருத்து.

C. **ஹக்குல் எகீன்**: உண்மையான சொந்த அனுவத்தினால் சக்குச் சந்தேகமில்லாமல் கண்டு அல்லது உணர்ந்து அறிகிற அறிவு, நம்பிக்கை, விசுவாசம்,ஈமான் என்பதே இதன்பொருளாகும். இது வெளிப்புலன்களால் ஏற்படும் அனுபவமல்ல. இதை தமிழில் "அனுபூதி" என்று கூறப்படும்.

D. **விஜ்தான்**: இறைவனால் கொடுக்கப்படுகிற (பரிவட்டம்) விசேட நன்கொடைகளில் இதுவும் ஒன்றாகும். அதை அன்பியாக்களான நபிமார்களும் அவ்லியாக்களான ஒருசில நல்லடியார்களுமேயன்றி மற்றவர்கள் விளங்கிக்கொள்ள முடியாது. அவ்லியாக்களிலும் ஒருசிலரை (குத்புகளை), (காமீல்களை)த் தவிர ஏனையோர் விளங்கிக் கொள்ளவே மாட்டார்கள். வஹி, கஸ்பு, இல்ஹாம் எல்லாம் இவ்வினத்தைச் சேர்ந்தவையேயெனினும் இவற்றில் மிகமிக வேறுபாடுகளும் மிகமிக நுட்பங்களும் இருக்கின்றன. இவ்விபரங்கள்சாதாரண மக்களுக்கோ ஆரம்ப ஸுபிகளான இறைவழி செல்பவர்களுக்கோ அவசியமானவையல்ல.

**2ஆவது:** மனிதனுடைய உள்மனத்தின் அறிவுகள் ஐனுல் எகீன்,ஹக்குல் எகீன் என்பவை மட்டுமே

**3ஆவது:** மனிதனுடைய உள்மனதுக்கு விஷேடமாய்க் கொடுக்கப்படுகிற இறையறிவே விஜ்தான் என்பது (கமாலுல் எகீன்)

மேலேகூறிய சாராம்சத்தைப் பல முறைவாசித்துக் கிரகித்துக்கொள்ள வேண்டும். இந்த உள்மனத்துக்குச் சொந்தமான கல்வியில், அறிவில்,ஈமானில் முதலாம் நிலைமையைப் பிரத்தியட்சப் பிரமாணம் என்று கூறப்படும். அதாவது வெளிமனதில் நூற்கேள்விகளினால் உண்டான சந்தேகங்களை ஆராய்ந்து விளங்கி ஆதாரங்களைக் கண்டறிவதினால் சந்தேகங்கள் நீங்கி உண்மை கொள்வது, விசுவாசிப்பது, அறிவது,ஈமான் கொள்வது என்பதே இதன் சரியான விபரம். "தரீக்கத்" என்று கூறப்படுவதும் இதுதான். இதில் ஒருவருக்கொருவர் சற்று ஏற்றவாட்டமும் இருக்கலாம். **இந்தப் பிரத்தியட்சப் பிரமாணத்துக்கமைவாய் உண்மைதான் என்று கண்டறியாத, ஆதாரங்கள் தென்படாத எந்த ஓர் விஷயத்தையும் இந்த உள்மனம் ஏற்றுக்கொள்வதே இல்லை. இது அதன் சிறப்பியல்பாகும்.** இந்த உள்மனம் எவ்வித தடையும் திரையும் இல்லாமல் புலன்களுடைய ஆட்சியில் கட்டுண்ணமால் தன்சொந்த நிலைமையில் இயங்குமேயானால் எவ்விஷயத்திலும் நிச்சயமாக உண்மையைக் கண்டறிந்தே ஆகும். மனிதனுடைய பகுத்தறிவு ஆராய்வு எல்லாம் இந்தப் பற்றற்றுத், திரையற்று நிற்கும் உள்மனத் தொடர்புடையனவேயாகும். மனிதன் எதைக் குறிக்கோளாகக் கொண்டானோ அந்தக்

குறிக்கோளுக்கேற்ற பூரணத்தன்மையை நிச்சயமாக இந்த உள்மனம் அடைந்தே ஆகும். **குறிக்கோள் சரியானதாயினும் பிழையானதாயினும் அதில் பூரணத்தன்மை கிட்டும் என்பது நிச்சயம். இன்றைய விஞ்ஞான மேதைகளே இதற்குப் போதுமான ஆதாரமாகும்.**

இந்த உள்மனம் புறமனத்தொடர்பில்லாமல் தனித்து இயங்குமேயானால் பகுத்தறிவுக்கே எட்டாத பரலோகத் தொடர்பைப் பெற்றுக்கொள்ளும். **இந்த நிலைமையில்தான் குர்ஆன் ஹதீஸ்களான வேத வசனங்களின் பூரண உண்மையை இந்த மனம் பெற்றுக்கொள்கிறது. ஈமானுடைய பூரண உண்மை ஒலித்தனத்துக்குரிய திடநம்பிக்கை எல்லாம் இந்த உள்மனம் தனித்து நிற்கும் நிலைமையில் உள்ளவைகளே.** இந்த உள்மனம் இவ்வித நிலைமையில் இருக்கும் போதுதான் “ஹக்குல் எகீன்” அனுபவப் பிரமாணம் என்ற அறிவு,ஈமான், ஏற்படுகிறது. இந்த அனுபவத்தின் ஊன்றிப் பதியும்போதுதான் விஜ்தான் என்ற இறையறிவு அங்கே குடிகொள்ள ஆரம்பித்துவிடுகிறது. இது இறைவனுடைய விசேட நன்கொடை என்று மட்டுமே நாம் கூறலாம்.

இந்த உள்மனம் இவ்வளவு விசேட தன்மையுடையதாய் இருக்கும் போதும் புறமனத் தொடர்பு கொண்டதாய் அமையும் போது தன்னுடைய விசேட திறமைகளை இழந்தே விடுகிறது. மேலும் புறமனத்தில் குடிகொண்டிருந்த (வஹ்மு) பேதபுத்தி என்ற ஓர்கொடிய நோயும் இந்த உள்மனதை தாக்கி விடுகிறது. இந்தப் புறமனதின் தொடர்பு உள்மனதுக்கு ஏற்படும் போதெல்லாம் உண்மையைக் கண்டறிய முடியாததாயும் அரைகுறையாக தொழிற்படக் கூடியதாயும் மாற்றமடைந்து விடுகிறது. இந்த நிலைமையில் உள்ள ஒருவர், அதாவது புறமனதின் ஆட்சியில் கட்டுண்டு உள்மனம் தன்னுடைய விஷேட திறமையை இழந்திருக்கும் நிலையில் பேத புத்தியெனும் வஹ்மில் மாட்டிக் கொண்டிருக்கிற ஒருவர். **மக்களிடையே மதிப்பைப் பெற்றவராய்ப் பட்டம் பதவிகளை உடையவராய் இருப்பினும் சில விஷயங்களில் குர்ஆன் ஹதீஸ்கள் பகுத்தறிவு போன்ற உண்மைகளுக்கு இடமளிக்கவோ பொருட்படுத்தவோமாட்டார்.**

அதாவது இவ்வகையினர் வெளிப்புலன்களில் கட்டுண்ட புறமன ஆட்சியில் சிக்குண்டிருப்பதால் உள்மனத்துக்குச் சொந்தமான பகுத்தறிவு முறையாய் வேலை செய்ய முடியாமல் தடைப்பட்டு விடுகிறது. அதாவது உள்மனத்தின் விஷேட திறைமை அடிபட்டு விடுகிறது. ஆகவே இவ்வகையினர் புலனாட்சியில் சிக்குண்டு தம்முடைய பகுத்தறியும் திறைமையை இழந்துவிடுவதால், தான் முன்பு கொண்டிருந்த தவறான அபிப்பிராயமே சரியானதென்று தீர்ப்பு கட்டுவார்களேயல்லாமல் **உண்மைக்கும் பொய்க்கும் இடையில் பிரித்தறியவே மாட்டார்கள்.** உள்மனம் தனித்துத் தன்சொந்த இயல்போடு இருக்கும் நிலைமையில், அதில் ஏற்படுகிற எண்ணத்திற்கு அல்லது நினைவுக்குத்தான் “நிய்யத்” என்று கூறப்படுவது. இந்த உள்மனம் தனித்து நின்று ஏற்றுக்கொள்ளும் எண்ணம் அல்லது நிய்யத்துக்குத்தான் “இக்லாஸ்” கலப்பறுதலான நிய்யத் என்று கூறப்படுவது. அதாவது வெளிமனத்தின் எவ்விதமான கலப்பும் இல்லாத நினைவு, எண்ணம் இதுதான். “இக்லாஸ்” ஏகாக்கிர சித்தத்தோடு செய்யப்படும் எந்த அமலும் சரியானதோ, பிழையானதோ நிச்சயமாக அதற்குரிய பலனைத் தந்தேயாகும். இது இறைவனின் கோபமோ அருட்கொடையோ அல்ல. இது ஓர் இயற்கை நியதியாகும். இதை உளநூல் ஆராய்ச்சியாளர் நன்கு அறிவார்கள்.

இந்த உள்மனம் தனித்து நின்று பயிற்சி பெறுவதற்குரிய எத்தனையோ வகையான இனமான உபாயங்களில் மிகவிஷேடமான ஒன்றுதான் தொழுகை என்பது. ஆனால் அறிவு விளக்கம் தெரியாத நாம் எம்முடைய செயல்கள் (அமல்கள்) “இஹ்லாஸ்” ஏகாக்கிர சித்தநிலையில் இல்லாவிட்டாலும் பிரயோசனம் தருமென்றே மேலோட்டமாய் நம்பிவிடுகிறோம். அதாவது எந்த அமலைச் செய்யும்போதும் மனிதன் தன் உள்மனத்தைத் தனிமைப்படுத்திச் செய்ய வேண்டும் என்பதைப் பேச்சளவில் ஒத்துக்கொண்டிருந்தாலும் பெரும்பாலும் செயலளவில் சாதிக்கிறோமில்லை. ஆனால் இஸ்லாத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பர்லான கடமைகள் நபிலுக்காக என்பதும் இந்த நபில் என்பது மனிதனுடைய உள்மனத்தைத் தனிமைப்படுத்தி அதற்குரிய கல்வியான ஹக்குல் எகீனை உருவாக்கி அதன் விஷேட திறமையைப் பெறுவதற்கே என்பதும் **எம்மில் அநேகருக்குத் தெரியாது. எம் ஆசிரியர்களிலும் மிக அநேகருக்குத் தெரியாது.** இதைப்பின்னால் சரியான ஆதாரங்களோடு அறிவோம். மனித உள்ளத்தைத் தனிமைப்படுத்தி உள்மனத்தின் விஷேட திறமை மூலம் பரலோகத் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் றசூலின் பர்லான, நபிலான வணக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் சக்குச் சந்தேகமில்லாமல் விளங்கித் தெளிவடைவோம்.

இவ்வுண்மையை உணர்ந்துக்கொள்ள ஆற்றலில்லாத எம்மில் பலர் கைகழுவுவது மிஸ்வாக் செய்வதுபோன்ற விஷயங்களிலும் அமல்களிலும் கண் மூடித்தனமாய்ப் பின்பற்றிப் பிரயோசனம் பெறத்தெரியாமல் வீண்காலம் கடத்துகிறோம். மனிதனுடைய உள்மனம் புறமனத் தொடர்பில்லாமல் ஒரு நல்ல அமலையோ, தீய அமலையோ செய்தால் நிச்சயம் அந்த அமலுக்கேற்ற பிரயோசனத்தை மனிதன் பெற்றே ஆவான் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லவே இல்லை. இஸ்லாத்தில் விதிக்கப்பட்டுள்ள பரிசுத்தமான கடமைகளைச் செய்து கொண்டும் வட்டி, ஹறாம், ஸனா போன்ற தீய காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டும் அறியாமை என்னும் இருளில் மூழ்கிக்கொண்டும்**மனிதரில் பலர் திணறுவதன் காரணம் இந்த உள்மனம் தனித்து நின்று உண்மையின் அடிப்படையில் செயல்படாமைதான்.** மனிதன் தன் அமலின் வெளிக்கோலத்தைப் பூரணமாய்ச் செய்துமுடிக்கிறான் என்பது உண்மையேயாயினும், உள்மனம் தனித்து நின்று (இஹ்லாஸ்) ஏகாக்கிரகசித்தத்துடன் செயல்படாவிட்டால் **அந்த அமல் உயிரற்ற பிணமே என்பது அவனுக்கு, அவனுடைய அறிவுக்குத் தென்படுவதில்லை.** இம் மனிதன் தன்னுடைய அமலின் கூலியை ஆகிறாவில்தானே காணலாம் என்றும் ஏமாந்துகொண்டிருக்கிறான். இந்த அபார வல்லமையுடைய உள்மனம் தொழுகையின்போது தனித்துநின்று “இஹ்திநஸ்ஸிறாத்தல் முஸ்தகீம்” என்ற வேத வசனத்தை ஓதி (கேட்டு) இருந்தால்

அம்மனிதன் நிச்சயமாக **அதேகணம் நல்லடியார்களில் ஒருவனாக மாற்றப்பட்டிருப்பான். வழிகாட்டப்பட்டிருப்பான் என்பதில் சந்தேகமே கிடையாது.** மேலும் அவனுடைய கல்பில் குடிகொண்டிருந்த அல்லது போடப்பட்டிருந்த திரைகள் மறுகணமே நீக்கப்பட்டு நேரான பாதையைக் கண்டறியக் கூடிய வாய்ப்பையும் அவன் பெற்றிருப்பான். இறைவனுடைய எந்த ஓர் அருட் கொடையையும் எவராலும் எச்சக்தியாலும் தடைப்படுத்த முடியாமல், மறைவே இல்லாமல் வெளிப்படையாகவேதான் அந்த அருட்கொடைகள் இருக்கின்றன. ஆனால், எம் அறியாமையால் அதைப் பெற்றக்கொள்ள எமக்குத் தெரிவதில்லை.

**ஹதீஸ்:** ***தொழுகையினால் எத்தனையோ பேருக்கு வருத்தமும் நோவுமே தவிர மற்றப்படி பலன் இல்லை.***

இவைபோன்ற பல ஹதீஸ் ஆதாரங்கள் இருப்பினும் நான் அவற்றை இங்கே கூறவில்லை.

## (2)

**அ**டுத்தது மனிதனுடைய புறமனம், மனிதனுக்குரிய பார்வை, கேள்வி, ஸ்கந்தம் (மணம்), சுவை, ஸ்பரிஸம் (தொட்டறிவு) ஆகிய இந்த ஐந்து பண்புகளும் அவ்வவற்றிக்குரிய வெளி உறுப்புக்களான கண், காது, மூக்கு, நாக்கு ஆகிய நான்கு உறுப்புக்களும் இவை எல்லாவற்றையும் தன்னுள் பொதிந்துகொண்ட வெளி உடலும் இந்தப் புறமனத்தின் கருவிகளாகும். இந்தப் புறமனம் இந்த ஐந்து புலன்களிலும் கட்டுண்டதாயும் இந்த ஐந்து புலன்களும் புறமதில் கட்டுண்டவையாயும் இருக்கின்றன. புலன்களில் இந்தப்புறமனம் கட்டுண்டிருப்பதல் பெரும்பாலும் உண்மையை உணராததாயும் உணரமுடியாததாயும் இருக்கிறது. ஏனென்றால் இந்த வெளிப்புலன்கள் ஐந்தும் நிறம் தோற்றம் மணம் சுவைபேன்ற வெளிக்கோலங்களை மட்டுமே பெற்றுக்கொள்வதால், இவற்றில் கட்டுண்ட புறமனம் அனுமானித்துத் தீர்ப்புக் கட்டுவதோடு நின்றுவிடுகிறது. மனிதனுடைய வெளி உலகத் தொடர்புகளெல்லாம் இந்த அனுமானித்துத் தீர்ப்புக்கட்டுகிற வெளிமனத் தொடர்புடையவையேதான். அதாவது அனுமானிப்பதனாலேயே இந்தக் கல்வி பெறப்படுகிறது இன்றைய உலக விஞ்ஞானம்கூட இந்த அனுமானக் கல்வியிலேயே அடங்கும் **நாம் கற்றிந்த பெரும்பாலான கல்விகளெல்லாம். ஆசிரியர்கள், உலமாக்களில் ஓர் பகுதியினரும் மற்றும் பட்டதாரிகள் கூடக், கற்றுப்பட்டம் பெற்றுக் கொள்ளும் கல்வி, அறிவும் இந்த அனுமானப்பிரமாணக் கல்வியேயாகும்.**

இந்த நூற்கேள்வியறிவின் விபரத்துக்கு மூலகாரணமாய் அமைந்திருப்து இந்தப் பௌதீக உலகமே. வஹ்மு என்ற பேத புத்தி உருவாவதும் இந்தப் புறமனத்திலேயேயாகும். “நபுஸ்”,“அம்மாறா” என்ற ஆசைகளின் பிறப்பிடமும் இந்தப் புறமனம்தான். இந்தப்புறமனம் உள்மனத்தொடர்பில்லாமல் (பகுத்தறிவின் துணையில்லாமல்) தனிமையில் இயங்குமேயானால் அம்மனிதன் வனவிலங்கு போன்றவனாக அல்லது அதிலும் கேவலமானவனாகவே இருப்பான் இந்தப் புறமனத்தில் உருவாகும் ஆசைகளும் பேதபுத்தியும் எம்மிடம் இல்லையானால் இவ்வுலக இன்பதுன்பங்கள் எதையுமே எம்மால் அனுபவிக்கவும் முடியாமல் போய்விடும். பகுத்தறிவு இயங்காவிடில் இவ்வுலக இன்பதுன்பங்களை எம்மால் முறையாய் அனுபவிக்கவும் முடியாது. **ஆகவே வஹ்மு என்ற பேதபுத்தியை எம்மால் முற்றாய் நீக்கிவிடவும் முடியாது. நீக்கவும் கூடாது.** ஏனென்றால் வஹ்மை, அல்லது பகுத்தறிவை, அல்லது இரண்டையுமே நீக்கிவிட எம்மால் முடியும்போது உலக இன்ப-துன்பம் எதையும் அனுபவிக்கவோ உணரவோ முடியாமலாகிவிடும். உலகில் நாம் பிறந்திருக்கவேண்டிய அவசியமே இல்லாமல் ஆகிவிடும். ஆகவே அவை இரண்டையும் முற்றாய் நீக்கிவிடமுடியாதவர்களாகவே எம்மை இறைவன் அமைத்திருக்கிறான்.

**ஆனால் இந்தப் பேதபுத்தி என்ற வஹ்மை எம்முடைய பகுத்தறிவுக்கு அமைவாய்ப் பழக்கிகொள்ள நிச்சயமாக எம்மால் முடியும். இறைவனின் நாட்டமும் அதுதான்.** புறமனத்தில் உருவாகும் பேதபுத்திக்கு இப்பௌதீக உலகம் சுவர்க்கம் போலவும் பகுத்தறிவுக்கு நரக உலகம் போலவும்தான் காட்சியளிக்கும். **இந்தப்புற மனதுக்கு வேத வசனங்கள் வேப்பங்காயாகத் தோன்றுவதும் பகுத்தறிவுக்குப் பஞ்சாமிர்தமாகத் தோன்றுவதும் இயல்பே.** புறமனம் அனுமானிப்பதால் ஏற்படுகிற அறிவைக்கொண்டு ஓரளவான பகுத்தறிவின் துணையுடன் உருவாக்கப்பட்ட நூற்கேள்விஅறிவுகள் யாவும் நூற்றுக்கு நூறுவீதம் உண்மையாகவே இருக்கும் என்பதை ஊர்ஜிதம் செய்யமுடியாது. சிலசமயம் சில விஷயங்கள் நூறுவீதமும் உண்மையாக இருக்கவும் கூடும். ஆனால் இவ்வுண்மை பகுத்தறிவுக்கேயல்லாமல் பேதபுத்தியான வஹ்முக்கு தென்படுவதேயில்லை. **இந்த அனுமானப் பிரமாணமான நூற்கேள்வி அறிவுகளை நாம் பாடசாலைகள் மத்ரஸாக்கள், கலாசாலைகளில் இருந்து பெறுகிறோம்.**

இந்த நூற்கேள்வியறிவுகளில் மிகப் பெரும்பாலானவை இருப்பதை ஆதாரமாகக் கொண்டு இல்லாததை அனுமானமாய்க் கணிப்பதாலேயே தீர்மானிக்கப்படுகின்றன என்பதையும் நாம் முன்பே கூறினோம். இந்த அனுமானம் அல்லது யூகம் எல்லாவிஷயங்களிலும் எல்லா நிலைமைகளிலும் சரியாகவே அமையும் என்றுகூற முடியாது. கணிப்பு அல்லது யூகிப்புச் சரியான அடிப்படையில் அமைந்துவிட்டால் அதனால் பெறப்பட்ட அறிவும் உண்மையின் அடிப்படையில் அமைந்திருக்கலாம். யூகிப்பு அரைகுறையாய் அல்லது பிழையாய் அமைந்திருந்தால் அதனால் பெறப்பட்ட அறிவும் (கல்வியும்) பிழையாகவே இருக்கும். இது ஆச்சரியமான ஓர் கண்டுபிடிப்பல்ல. எமது இமாம்களான ஒருசிலர் எமக்கு வகுத்தளித்த ஈமான் இஸ்லாத்தின் விபரங்களும் விஷேடமாய் (பிக்ஹு) முஆமலாத் என்ற இல்முகளும் இந்த வகையை (அனுமானப்பிரமாணத்தை)ச் சேர்ந்தவையாகும். இல்முல் எகீன் என்பதன் உண்மை இதுவேயாகும். இந்த இல்முல் எகீன் என்ற அறிவு அல்லது **முஆமலாத்துடைய**

**(பிக்ஹுவுடைய) அறிவு முற்றிலும் உண்மையின் அடிப்படையிலேயே அமைந்தில்லாத காரணத்தினால் அந்த இமாம்களே ஒருவருக்கொருவர் மாறான, வேறான விளக்கங்களையும் சட்ட நுட்பங்களையும் எம்க்குத் தந்துள்ளார்கள் என்பதே நமக்குப் போதுமான ஆதாரமாகும்.**

ஒரு அறிஞர் எழுதிய ஓர்நூலை இன்னோரு அறிஞர் மறுப்பதையும் ஆதரிப்பதையும் அல்லது வேறுவகையான விபரம் தருவதையும் நாம் பார்க்கவே செய்கிறோம். கீழ்கோட்டு நீதிபதியால் தீர்க்கப்பட்ட ஒரு தீர்ப்பை மேற்கோட்டுநீதிபதி ஆமோதிப்பதை அல்லது திருத்துவதை, அல்லது மறுப்பதை நாம் பண்டிதர், பாமரர் யாவரும்தான் அறிந்திருக்கிறோம். இது சாதரண ஓர் விஷயம்தான். ஆனால் **ஈமான் இஸ்லாத்துடைய விபரங்களில் மிகப்பெரும்பலான மக்கள் இந்த அனுபவ உண்மையை ஒப்புக்கொள்வதேயில்லை.** காரணம் என்னவென்றால் நாம்முன்பு விளக்கிய மூன்று திரைகளிலும் சிக்கிப், புறமன அறிவான பேதபுத்தியல் மூழ்கியுள்ள மக்களுக்குப் பகுத்தறிவு சரிவர இயங்காமல் நின்றுவிடுவதேயாகும் . நான் மிகமிகச் சுருக்கமாய்க் கூறிய இவ்விஷயத்தில் ஸுலூக்குடைய பாதையில், இறைவழியில் நடக்கமுற்படும் உனக்கு ஒரு பெரிய உண்மை புதையுண்டிருப்பதை முதலில் நீ விளங்கிக் கொள்ள வேண்டும்.

**அதாவது நூற்கேள்வியறிவில் (அனுமானப்பிரமாணமான இல்முல் எகீனில்) கட்டுண்டிருக்கிற அறிஞர்கள், வியாக்கியானிகள் அல்லது மௌலவிகள் ஈமான் இஸ்லாத்துடைய விஷயங்களில் எமக்குத்தந்துள்ள விளக்கங்கள் யாவுமே நூறு வீதமும் சரியானவை உண்மையானவை என்றுகூற முடியாது என்பதே அவ்வுண்மையாகும்.** சிலவேளை சில விஷயம் உண்மையாய் இருக்கவும்கூடும். ஆயினும் நாம் பேதபுத்தியிலிருந்தும் நீங்கிச் சரியான பகுத்தறிவோடும் குர்ஆன் ஹதீஸ்களின் ஆதாரங்களோடும் **விளங்கியறிந்து தெளிவுபெறாமல் திடீர்முடிவுக்கு வரவேகூடாது.** முதலில் அனுமானிப்பதனால் ஏற்படுகிற அறிவின் கல்வியின் தன்மையையும் அதன் குறைபாடுகளையும் உன் உள்ளத்தில் இலகுவாய்ப் பதிப்பதற்காக ஓர் விளக்கம் தருகிறேன். சிந்தனை செய்துதெளிவு பெறுவாயாக.

## (3)

இருளான அல்லது மங்கிய வெளிச்சமுள்ள மாலைநேரத்தில் செடிகொடிகள் நிறைந்த, புற்பூண்டுகள் அடர்த்தியாய் வளர்ந்து செழிப்பான சூழ்நிலையிலுள்ள ஓர் ஒற்றையடிப்பாதையில் நீ போய்க்கொண்டிருக்கிறாய் அப்போது நடுவழியில் ஓர் பாம்பை காண்கிறாய். உடனே அச்சமைடகிறாய். ஏதோ கொஞ்சம் தைரியமடைந்து, விஷப்பாம்பைக் கண்டுகொண்டேன். ஓடிவாருங்கள், ஓடிவாருங்கள், என்று சப்தமிடுகிறாய். உன் அலறலைக்கேட்ட ஓர் வயோதிபர் கையில் ஓர் விளக்கும் அல்லது 'டோச்லைட்டும்' கம்பும் எடுத்துக்கொண்டு உன்னிடம் வந்துசேர்ந்தார். வயோதிபர் கொண்டுவந்த வெளிச்சத்தில் பாம்பைப் பார்த்தபோது அது பாம்பேயல்ல என்பதும் அது ஓர் பழைய கயிற்றுத்துண்டுதான் என்பதும் தெரிய வந்தது. இருளாய் இருந்தபோது கயிற்றுத்துண்டு பாம்பென்று அனுமானித்தாய், நம்பிமனாய்,ஈமான் கொண்டாய் அல்லது விசுவாசித்தாய். அவ்வேளையில் உன்னுடைய நிலைமையில் இருளாக இருந்த காரணத்தால், கயிற்றுத்துண்டு பாம்பாக உனக்குத் தென்பட்டது என்பது உண்மைதான். ஆயினும் வெளிச்சம் கிடைத்தபோது அது பாம்பேயல்ல என்று சந்தேகம் நீங்கியதோடு கயிறேதான் என்ற உண்மையும் வெளியாகிவிட்டது. இருளின் போது கயிற்றைப் பாம்பென்று அனுமானித்து நம்பிய ஈமானுக்கு இல்முல் எகீன் என்று பெயர் வைத்துக்கொள். பாம்மைப் பற்றி அறிந்திருந்த அறிவுதான் கயிற்றைப் பாம்பாய் காட்டியது.

வெளிச்சம் கிடைத்த பின் அது பாம்பல்ல, கயிறேதான் என்று பிரத்தியட்சமாய்க் கண்ணாரக்கண்டறிந்த நம்பிக்கைக்கு ஐனுல் எகீன் என்று பெயர் வைத்துக்கொள். இப்போது கயிற்றைப்பாம்பென்று நம்பினேனே! என் மதியீனம்தான் என்ன? என்று நாணமும் அடைகிறாய். இந்த நாணமடையும் மனச்சாட்சிக்கு "லவ்வாமா" நிந்திக்கும் மனச்சாட்சி என்று பெயர்வைத்துக்கொள். இந்த மனச்சாட்சி ஓரளவு உள்மனத் தொடர்புடையதாகும். கயிற்றைப் பாம்பு என்று நம்பியது புறமனத்துக்குரிய வஹ்மு ஆகும். இந்த வஹ்முக்கு மூலகாரணம் இருளாகும். இருள் என்பது பகுத்தறிவு தொழிற்படாத நிலைமையாகும். வெளிச்சத்தைக்கண்ட பின் லவ்வாமா, என்ற பகுத்தறிவுத் தொடர்புடைய மனச்சாட்சி வேலைசெய்ய ஆரம்பித்ததுபோல **வஹ்முடைய இருளில் தவிக்கும் மக்களுக்கு இந்த மனச்சாட்சி தென்படுவதே இல்லை.** இந்த மனச்சாட்சியும் இதையடுத்து முல்ஹிமா, முத்ம இன்னா, என்ற படித்தரங்களில் வேலைசெய்கிற, தொழிற்படுகிற ஒருவர் ஏறக்குறைய உண்மையைக் கண்டறிந்தவராக அல்லது உண்மையில் ஊறியவராகத்தான் இருப்பார்.

தான் செய்தது தவறு, அல்லது பிழை என்னுடையதே என்று எவர் உண்மையின்படி உணர்கிறாரோ அவர் நேரான பாதையில் செல்கிற உண்மை மனிதன் என்றே கூறலாம். பாவமன்னிப்பு என்பது இந்த நிந்திக்கும் மனச்சாட்சியின் வேண்டுதலினால் கிடைப்பதேயன்றி **வாய்ச் சொற்களினால் வெகுநீள அகலமுடைய துஆக்களினால் கிடைப்பதல்ல என்பதை இவ்விடத்தில் புரிந்துகொள்ள வேண்டும்.** மேற்கூறிய உதாரணவிளக்கத்தில், உவமானக் கதையில் கூறப்பட்ட இருள் அல்லது மங்கிய வெளிச்சம் என்பதை வஹ்மு பேதபுத்தி என்று வைத்துக்கொள். குருட்டு நம்பிக்கை என்றாலும் சரி. அதாவது தவறான நூற்கேள்வியறிவு, பழக்கவழக்கம், மனஇச்சைகளினால் ஏற்பட்ட நம்பிக்கை என்பதே அதன் சாரம். கயிற்றைப் பாம்பாக அனுமானித்த ஈமானை இல்முல் எகீன் என்று வைத்துக்கொள். பாம்பல்ல கயிறேதான் என்று நம்பிய நம்பிக்கையை ஐனுல் எகீன் என்று வைத்துக்கொள். வயோதிபரை உன் ஒஸ்த்தாது அல்லது உண்மைக்கு வழிகாட்டுபவர் என்று வைத்துக்கொள். வெளிச்சத்தைப் பகுத்தறிவாக ஏற்றுக்கொள். சென்று கொண்டிருந்த பாதையைத் தீனாக மார்க்கமாகவும் பாதையுள்ள சூழலைத் துன்யாவாகவும் வைத்துக்கொள். இவ்வுபமானத்தைப்

பல கண்ணோட்டங்களோடு பல கோணங்களில் ஆராய்ந்து தெளிவுபெறு. இதிலிருந்து நாம் படிக்கவேண்டிய கண்டிப்பான உண்மை என்னவென்றால். **நாம் தவறான நூற்கேள்விகளில் பட்டம் பதவிகளில் சிக்குண்டிருக்கும்போது எம்மால் அனுமானிக்கப்படுகிற அல்லது யூகிக்கப்படுகிற எல்லாமே சரியாக இருக்க முடியாது என்பதே.**

## (4)

**அன்பிற்குரிய சகோதரனே!**

இப்போது உன் பகுத்தறிவை உபயோகித்துப்பார். சர்வபிரபஞ்சங்களான சகல சிருஷ்டிகளையும் நாம் எம்முடைய சாதாரண அறிவைக்கொண்டு நோக்கும் போது சிற்சில விபரங்கள் எமக்குத் தென்படுகின்றன. எந்த ஓர் சிருஷடிப் பொருளும் தானாகத் தன்னைத் தானே உருவாக்கிக்கொள்ள, அல்லது தன் தேவைகள் யாவையும் இன்னொன்றின் துணையின்றித் தேடிக்கொள்ள முடியாதிருப்பதைக் காணுகிறோம். ஆகவே இந்தச் சர்வ சிருஷ்டிகளையும் உருவாக்கிய, உருவாக்கிக் கொண்டிருக்கிற ஓர் தத்துவம் அல்லது ஒருவர் இருக்கவேண்டுமென்று அனுமானிக்கிறோம், யூகிக்கிறோம். அந்த தத்துவத்திற்கு இறைவன் என்று பெயர் சூட்டி இருக்கிறோம். இந்த இறைவன் சிருஷ்டிகளின் அமைப்புகளைப் பண்புகளைத் தத்துவங்களை, உருவகங்களை, நிறங்களை உருவாக்கியிருக்கும் தன்மையைச் சிந்தனை செய்தால், எம்முடைய அறிவே திணறக்கூடிய மிகப்பெரிய பல உண்மைகளை நாம் அறிகிறோம். சிருஷ்டிகளைப் படைத்த இறைவன் மாபெரும் வல்லமை உடையவனாக மிகச்சிறந்த அறிஞனாக நித்திய ஜீவனுடையவனாக, பார்வை, கேள்வி முதலாம் சர்வபண்புகளும் உடையவனாகவே இருக்கவேண்டுமென்று அனுமானிக்கிறோம். நம்புகிறோம். நாம் படித்தும் கேட்டுமறிந்துள்ள இறைவனின் மற்றும் சகல பண்புகளையும் இவ்விடத்தில் சிந்தனைக் கெடுத்துக்கொள்ள வேண்டும். விபரித்தால் விரிவடையும். ஆகவே எமது புலன்களுக்கமைவாய் எமது அறிவுக்குத்தென்படுகிற சர்வ உலகங்களையும் நாம் சிந்தனைக்கெடுக்கும்போது எமது அறிவுக்கெட்டாத நித்திய ஜீவனுடைய, மாபெரும் வல்லமையும் மிகச் சிறந்த நுண்ணறிவுமுடைய ஓர் இறைவன் இருந்தே ஆகவேண்டும் என்று யூகித்து அல்லது அனுமானித்து நம்பிக்கைகொள்கிறோம். இந்த மனித அறிவு அனுமானித்துத் தீர்ப்புக்கட்டுவதனால் ஏற்படுகிற விசுவாசம்,**நம்பிக்கை என்பதுதான் மனிதனுடைய ஈமானின் ஆரம்ப நிலையாகும்.**

**இந்த அனுமானிப்பினால் ஏற்பட்ட நம்பிக்கை,ஈமான் சட்டப்படி ஏற்றுக்கொள்ளபட்டிருப்பினும் இதே அளவோடு நின்றுகொள்ள வேண்டுமென்று சட்டம் அனுமதியளிக்கவே இல்லை. இந்த ஆரம்ப ஈமானைச் சட்டம் ஏற்றுக்கொள்வதற்கு மிக முக்கியமான பலகாரணங்கள் இருக்கின்றன.** அவற்றை அவசியமான இடத்தில் கண்டறிவோம். இந்த ஆரம்ப ஈமானுடைய ஒருவர் விசுவாசியென்ற பெயரைப் பெற்றுக்கொண்டாலும் அவர் உண்மையான பூரண சாந்தியை, அல்லது பூரணதன்மையை அடைய முடியாதவரேயாவார். **கயிற்றுத்துண்டை, இருளான வேளையில் பாம்பு என்று நம்பிய அனுமான விசுவாசத்தினால் ஈமானினால் அம்மனிதன் அடைந்த பிரயோசனம் தான் அச்சமடைந்ததும் பிறரை அச்சமடையச் செய்ததும்தான்.** வெளிச்சம் (அறிவு-ஞானம்) கிடைத்தபிறகு ஏற்பட்ட நம்பிக்கையினால்,ஈமானினால் அவன் அடைந்த பிரயோசனம் **அச்சம் தீர்ந்து சாந்தியடைந்ததுடன் பிறரையும் அதே நிலைமைக்குக் கொண்டுவருவதுமாகும்.** ஆகவே நாம் கல்வியறிவுகள் மூலம் அனுமானித்த ஈமான் பூரண உண்மையல்ல என்பதையும் பூரண ஈமானைப்பெற்றுச் சாந்தியடையப் பிரத்தியட்ச ஈமானைப் பெறவேண்டும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். ஏனென்றால் அனுமானிப்பதால் ஏற்பட்ட விசுவாசம் பூரண உண்மைதான் என்பதை எவ்வகையிலும் திடமாக உறுதிகொள்ளவே முடியாது.

يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ وَلَا يُحِيطُونَ بِهِۦ عِلْمًا

20:110 *அவர்களுக்கு முன்னுள்ளதையும் பின்னுள்ளதையும் அவன் (இறைவன்) அறிவான். எனினும் அவனைக் கல்வியறிவைக் கொண்டு அறிந்து கொள்ள முடியாது.*

ஆகவே அனுமானிப்பதனால் ஏற்படுகிற கல்வியறிவைக் கொண்டு ஆரம்பநிலைமையிலுள்ள இல்முல் எகீன் என்ற ஈமானை நாம் அடையலாமேயன்றி **இரண்டாவது நிலைமையிலுள்ள பிரத்தியட்சமான ஐனுல் எகீன் என்ற ஈமானை அடையவே முடியாது.**

முன்பு கூறிய ஆரம்பநிலைமையிலுள்ள சட்டம் ஏற்றுக்கொண்ட ஈமானை இவ்விடத்தில் சிந்தனை செய்துபார். இந்த நம்பிக்கையின் மூலம் இரண்டுஉண்மைகள் எமக்குத் தென்படுகின்றன. அதாவது சர்வ சிருஷ்டிகளையும் உற்பத்தி செய்த சிருஷ்டிகர்த்தாவான இறைவன் ஒருவன் உண்டென்பது ஓர் உண்மையாகும். இந்த இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிகளும் உண்டென்பது இன்னோர் உண்மையாகும். இந்த அடிப்படையில் நிலையான இருப்பும் வல்லமையுமுடைய அந்த இறைவனைச் சிருஷடியாகிய நான் கீழ்படிந்து, வணங்கி அவனுடைய கட்டளைகளை ஏற்று நடக்காவிடில் என்னுடைய தேவைகளை என்னால் நிறைவேற்றிக்கொள்ள முடியாதென்று நம்புகிறோம். மேலும் அவனுடைய கட்டளையை ஏற்று வணங்கிக் கீழ்படிந்து நடக்காவிட்டால் தண்டனைக்குள்ளாக வேண்டுமென்றும் அச்சமடைகிறோம். இதேபோல் கட்டளைகளை ஏற்றுக் கீழ்ப்படிந்து வணங்கினால் சன்மானம (சுவர்க்கம்) கிடைக்குமென்றும் ஆசைப்படுகிறோம். இவ்வுலகில் வாழும் சகல

மனிதருடையவும் ஆரம்ப நிலைமை இதுவேயாகும். மதங்கள், கொள்கைகள் அனுஷ்டானங்கள் வேறுபட்டிருப்பின் சகல மனிதருடையவும் ஆரம்ப நிலைமை இதுவேயாகும்.

சுருக்கமான இந்த விபரம்தான் பக்திமார்க்கம் என்பது. இந்த ஆரம்ப நிலைமையிலுள்ள (அவாம்கள்) மனிதர்கள் சர்வவல்லமையுமுள்ள இறைவனின் தண்டனைக்கு அச்சப்படுவதிலும் அவனுடைய சன்மானத்துக்கு ஆசைப்படுவதிலும் (அச்சம்- ஆதரவு) சிக்கியிருக்கிறார்கள். இந்த ஆரம்ப நிலையிலுள்ள மனிதனுக்கு அவன் நம்பியுள்ள இறைவனின் கட்டளைகளை விளக்கி அவனுடைய உயர்பதவிக்கு வழிகாட்டக்கூடிய வேதநூலும் அதை விளக்கிவிபரம்தர, வழிகாட்டிகளான ஆசிரியர்களும் (நபிமார்களும்) அவசியமேயாகும். இந்த வேத நூல்களும் ஆசிரியர்களும் இந்த ஆரம்ப மனிதனுடைய அறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய விதமாய் இவனை உயர் வகுப்புக்கு இட்டுச் செல்லக்கூடிய வகையில் விபரம் தரவேண்டியது மிகமிக அவசியமாகும். இந்த ஆரம்ப நிலையிலுள்ள மனிதன் அவனுடைய அறிவு ஏற்றுக்கொள்ளும் வகையில் விபரம் தரப்படவில்லையானால் அவ்விபரம் உண்மையேயானாலும் கூட ஏற்றுக்கொள்ளவேமாட்டான். ஏனென்றால் இவன் இன்னும் பகுத்தறிவின் பூரணநிலைமையை எய்திக்கொள்ளாத (வஹ்மு) பேதபுத்தியில் மூழ்கிய மனிதனாகவே இருக்கிறான். ஆகவே இவனுடைய பேதபுத்தியை நீக்கி இவனுடைய பகுத்தறிவு சரியாய் இயங்கக்கூடிய உபாயங்களைக் கையாண்டு இவனை உயர்பதவிக்கு இட்டுச்செல்வது வேத நூலுடையவும் ஆசிரியருடையவும் கடமையாய் இருக்கிறது. **இதே நோக்கோடுதான் வேதம் அருளப்பட்டிருக்கிறது இதே நோக்கோடுதான் எம் ஆசிரியர்களான நபிமார்கள் தோன்றியிருக்கிறார்கள்.**

அதாவது வேதங்களுடையவும் நபிமார்களுடையவும் பொதுவான நோக்கம் "அதாலத்" என்ற ஆரம்பநிலையிலுள்ள மனிதனைத் "தரீக்கத்" என்ற இரண்டாவது வகுப்புக்கும் "தரீக்கத்" என்ற இரண்டாம் வகுப்பிலுள்ள மனிதனை ஹகீகத் என்ற மூன்றாவது வகுப்பிற்கும் மூன்றாம் வகுப்பிலுள்ள மனிதனை "மஹரிபத்" என்ற நாலாம் வகுப்புக்கும் உயர்த்திச் சென்று அவனுக்கு அவனுடைய பூரணத்தன்மையை, சாந்தியை, ஏற்படுத்த வேண்டும் என்பதேயாகும். இதே நிலைமையில்தான் வேதமும் நபிமார்களின் நன்மொழிகளும் (குர்ஆன்-ஹதீஸுகள்) அமைந்திருக்கின்றன. மனிதனுடைய சிந்தனா சக்தியைத் தூண்டக்கூடிய வகையாகவே அவை அமைந்திருக்கின்றன. **ஆனால் ஆரம்பகாலத்திலுள்ள சிலமக்கள், நபிமார்களின் மறைவுக்குப்பின் தோன்றிய ஒரு சில வேதப்புரட்டர்கள் தப்புத்தவறான விளக்கங்களையும் வியாக்கியானங்ளையும் மக்களுக்கு ஊட்டிவிட்டிருக்கிறார்கள்.** இவர்களுடைய ஈமான் இஸ்லாத்துடைய சில விபரங்களை குர்ஆன், ஹதீஸ்களுக்கு முற்றும் முரணாய் அவற்றின் நோக்கத்துக்குமாறாய் அமைந்திருப்பதால் அதாலத் என்ற முதலாம் வகுப்பிலுள்ள ஒருவன் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் தான் இருந்த நிலைமையைவிட்டு முன்னேறி இரண்டாம் வகுப்பான தரீக்கத்தை எட்டிப்பிடிக்க முடியாத நிலைமையில் கட்டுண்டவனாய் இருக்கிறான். **அதுமட்டுமல்ல இரண்டாம் வகுப்பை அறியாதவனாயும் இரண்டாம் வகுப்பிலுள்ளவனை வழிகெட்டவனாயும் காணுகிறான். இதைப் பொறுமையோடு விளங்கியறிவோம்.**

பெரும்பாலும் அறிவுவிளக்கமில்லாத ஒருசில முன்னோர் சமூக மக்களைத் தங்கள் போக்கில் வழிப்படுத்துவதற்காகத் **தொழுகையை ஓர் கேடயமாகப் பாவித்திருக்கிறார்களே அல்லாமல் தொழுகை எதற்காக? அதன் அந்தரங்கம் என்ன? அதனால் பிரயோசனம் பெறுவது எப்படி? என்ற விபரங்களை,எள்ளளவேனும் உண்மையை நெருங்கியதாயமைந்த விபரங்களைக் கற்பித்தார்களேயில்லை.** எவருடைய இறுதிமொழி "லா இலாஹ இல்லல்லாஹ்" என்று அமைகிறதோ அவர் சுவனம் செல்வார் என்று றசூலுல்லாஹ் கூறியிருந்தும் இதன் அந்தரங்க விபரம் என்ன? என்பதை இந்த வியாக்கியான கர்த்தாக்களில் **மிகப்பெரும்பாலார் விளக்கிவைத்ததாக தெரியவில்லை. மேலும் றசூலுடையவும் அல்லாஹ்வுடையவும் நோக்கத்துக்கு முற்றும்மாறான விபரங்களையே கற்பனை பண்ணி மக்களுக்குப் புகட்டியிருக்கிறார்கள்.** தான்தோன்றித்தனமான சட்டங்களைஇயற்றிய இந்த அறிவுமேதைகள் சுவர்க்கம் செல்வதற்கு உதவியாக மக்களுக்கு விளக்கிவைத்ததெல்லாம் **தொழுகையின் வெளிக்கோலத்தை மட்டும்தான்.**

இந்த தாறுமாறான, தவறான விளக்கங்களை ஆரம்பநிலையிலுள்ள அவாம்கள் அவர்கள் இருந்த அதே இருளில் நிலைப்படுத்தி வைத்திருக்கின்றனவேயன்றி அம்மனிதர்களை அதற்கடுத்த **உயர் நிலைமைக்கு போக முடியாதவர்களாகவும் தடைப்படுத்திவிட்டிருக்கின்றன.** ஆனால் உண்மை என்னவென்றால் அதாலத் என்னும் பக்தி மார்க்கத்தில் இறைவனால் றசூலால் விபரிக்கப்பட்ட ஒவ்வோர் விஷயமும் மனிதனைச் சிந்திக்கக் கூடியவனாய் மாற்றி அவனை உயர் பதவிக்கு இட்டுச்செல்லக் கூடியதாகவே கூறப்பட்டுள்ளன என்பதுதான். மனிதனுக்கு ஆரம்பத்தில் ஊட்டபடுகிற கலிமாவே , எடுத்த எடுப்பிலேயே மனிதனைச் சிந்திக்க கூடியவனாய் மாற்றக்கூடியதாய் இருந்தும் அதை ஒருசாரார் புரட்டிவிட்டிருப்பதால் **மனிதனுடைய சிந்தனையை எவ்வளவு தூரம் தடைப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் தடைப்படுத்தியே விட்டிருக்கிறது.** நல்லது கெட்டால் நாய்க்கும் உதவாதல்லவா?

## (5)

இவ்வுலகிலுள்ள அறிவுவிளக்குமற்ற அவாம்களான சாதாரண மக்களுக்குக் கற்பிக்கப்பட்ட விபரங்கள் உண்மையாகவே சிந்திக்கத் தூண்டக்கூடியவையா? என்பதை இப்போது நோக்குவோம். மனிதன் இறைவனின் ஏவலையேற்று நல்ல காரியங்களைச் செய்தால் அவனுக்குச் சுவர்க்கபோகமும், ஏவலை மறுத்து தீமைகளைச் செய்தால் நரகபோகமும் தருவதாக இறைவன் வாக்களித்துள்ளான் என்று இம்மனிதன் கற்பிக்கட்டுள்ளான். அதே வேளையில் இறைவன் தேவையற்றவன் என்றும் கற்பிக்கப்பட்டுள்ளான். இவன் இதே நம்பிக்கையில் இருக்கும்போது இவனுடைய சிந்தனையை இந்த

நம்பிக்கைகள் தூண்டுகின்றன. எப்படியென்றால் தேவையற்றவனாயுள்ள இறைவன் நன்மையைச் செய்யும்போது சந்தோஷமடையவும் அதனால் சுவர்க்கத்தைத் தரவும், தீமையைச் செய்யும்போது அவன் கோபப்படவும் அதனால் நரகத்தைத் தரவும் வேண்டிய அவசியம்தான் என்ன? சந்தோஷமடைகிறவன், கோபப்படுகிறவன் மக்களின் நன்மை தீமைகளின் வேண்டுதலுள்ளவனாக இருக்கிறானே? அப்படியானால் இறைவன் தேவையற்றவன் என்பதன் அர்த்தம் என்ன? என்று சிந்திக்க முற்படுகிறான்.

இதேபோல என் இறைவன் எங்கும் நிறைந்தவன் என்றால் சிருஷ்டிகள் இருப்பதற்கு இடமேது? சிருஷ்டிகள் இருக்கும் இடத்திலும் இறைவன் இருக்கிறான் என்றால் சிருஷ்டி இருப்பதற்கு இடமில்லையே? உண்மைதான் இறைவன் அரூபியென்று வைத்துக்கொண்டால் ரூபியாய் வரமுடியாதவன் என்றல்லவோ ஆகும்? அப்படியானால் சர்வ வல்லமையும் உடையவன் இறைவன் என்று எப்படி நம்புவது? ஆகவே இவ்விஷயங்களில் நான் அறியாத வேறு ஏதேனும் உண்மைகள் இருக்க முடியுமோ? என்று இம் மனிதன் சிந்திக்கமுற்படுகிறான். இதேபோல மற்ற விஷயங்களையும் நீ சிந்தனைக் கெடுத்துக்கொள். விபரித்தால் பெருகும். அதாவது சாதரணமனிதனுக்குக் கற்பிப்பிக்கபட்ட ஆரம்ப விஷயங்களில் பெரும்பாலானவை இம்மனிதனின் சிந்தனையை அறிவைத் தூண்டக்கூடியனவாய் இருப்பதால் இம்மனிதன் நியாயமான சிற்சில சந்தேகங்களையுடையவனாகவும் அறிவுத்தாகம் கொண்டவனாகவும் மாற்றமடைகிறான். தன் சந்தேகங்களை நீக்கிக்கொள்ள அறிஞர்களையோ இன்னும் பல கிதாபு புஸ்தகங்களையோ அணுகி ஆராயமுற்படுகிறான். ஆனால் இன்று எம்சமூகத்திலுள்ள பெரும்பாலான அறிஞர்களும் புஸ்தகம் கிதாபுகளும் இவனுடைய சிந்தனயைத் தடைப்படுத்தி இவன் தவறான பாதையில் அல்லது நாஸ்த்தீகப் பாதையில் செல்வதாக ஓலமிடுவதைக் கேட்ட இந்தக்கோழை மனிதனின் அறிவு முன்னேற்றப்பாதையில் தடைப்பட்டு விடுகிறது. ஆனால் இறைவனால் வழி காட்டப்பட்ட ஒருசிலர் மட்டும் தடைகளைத் தாண்டி எப்படியும் உண்மையைக் கண்டறிந்தேயாக வேண்டும் என்ற நோக்கோடு மேலும் ஆராய முற்படுகிறார்கள். முடியாதபோது தான் நம்பியிருந்த இறைவனையே வழிகாட்டும்படி வேண்டுகிறார்கள். **தொழுகையின் போது ஓதக்கூடிய அல்ஹம்து ஸூறாவைப் போன்றவை இந்த நோக்காகவேதான் தொழுகையில் இடம்பெறச் செய்யப்பட்டிருக்கின்றன.**

இம்மனிதன் முன்னிலும் அதிகமாக இறைவனை வேண்டுவதாலும் நியாயமான சிற்சில சந்தேகங்கள் குடிகொண்டவனாய் இருப்பதாலும் ஓர்சிறுபுரட்சியில் சிக்குண்ட உண்மையான பக்திமானாக மாற்றமடைகிறான். உலகப்பராக்குகள் எதில் அம்மனிதன் மூழ்கியிருக்கும்போதும் அவனுடைய உள்ளம் உண்மையான அறிவைத் தேடவும் இறைவனைத் தேடவும் ஆசைகொள்கிறது. மென்மேலும் தான் கற்றறிந்த தீனுடைய ஒவ்வோர் விஷயமும் இவனைச் சிந்தனைக்குள்ளாக்கவே செய்கிறது. இறைவனைத் தேடிக் கண்டடைந்தேயாக வேண்டும் என்ற கடினமான ஆசை இம்மனிதனை ஆட்கொண்டுவிடுகிறது. சுருக்கமாய்க் கூறிய இந்த நிலைமையைத்தான் “தரீக்கத்” என்று கூறப்படுவது. இந்த மனிதனுக்கேற்படும் சந்தேகங்கலெல்லாம் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது கலிமாவின் உண்மையான விளக்கமேயாகும். அதாவது தௌஹீதுடைய விஷயமேயாகும் ஆனால் இக்கால விளக்கமான தௌஹீதில் எவ்விதமான சந்தேகமும் ஏற்படுவதே இல்லை. அவர்களுடைய சிந்தனை தூண்டப்பபடுவதுமில்லை. ஏனென்றால் கலிமாவின் விளக்கமும் அதனால் பெற்றுக்கொள்ளப்படும். தௌஹீதும் **தலை கீழாகப் புரட்டப்பட்டுள்ளதால் மனித சிந்தனை பூட்டி வைக்கப்படுள்ளதுபோல் ஆகிவிட்டது.**

ஆனால் வழி காட்டப்பட்ட மக்கள் துணிகரமும் அறிவுத்தாகமும் கொண்டவர்களாக மாறும் போது அந்தக் காருண்ய மூர்த்தியான இறைவனே அம்மக்களுக்கு ஞானத்தின் வாசலைத் திறந்து விடுகிறான். அதற்குரிய சமய சந்தர்ப்ப சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்கிறான். உண்மையை விளக்கி உறுதிப்படுத்தி ஆட்கொள்ள முற்படுகிறான்.

وَهُدُوٓاْ إِلَى ٱلطَّيِّبِ مِنَ ٱلۡقَوۡلِ وَهُدُوٓاْ إِلَىٰ صِرَٰطِ ٱلۡحَمِيدِ

22:24 *பரிசுத்த வாக்கியம் (கலிமத்துத் தையிபா) அவர்களுக்கு கற்பிக்கப்பட்டு மிக்க புகழுக்குரிய இறைவனின் பாதையிலும் (ஷிறாத்) அவர்கள் (இம்மையிலேயே) செலுத்தப்படுவார்கள்.*

“ஸரீஅத்” என்றால் வணங்குவது என்றும்,“தரீக்கத்” என்றால் இறைவனைத் தேடுவது என்றும்,“ஹகீகத்” என்றால் இறைவனைக் கண்டறிவது என்றும்,“மஃறிபத்” என்றால் அவனுடன் ஒன்றிவிடுவது (நாஸ்தியாதல்) என்றும் அபூபக்கர் ஸிப்லி (ரலி) அவர்கள் விபரம் கூறுகிறார்கள். **எவருக்கு எப்போதும் உண்மையான சந்தேகம் ஏற்படவில்லையோ அவருக்குப் பகுத்தறிவு செயல்படவில்லை என்பதே கருத்து.** எவருக்குப் பகுத்தறிவு செயல்படவில்லையோ அவருக்கு விசுவாசத்தை (ஈமானை)ப் பற்றி, தீனின் உண்மையைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்பதே கருத்தாகும். இவ்விஷயம் எம்மைப்போன்ற சாதரண மக்களுக்கு மட்டுமல்ல. **நபிமார்கள்கூடச் சந்தேகமடையாமல் அவர்களுடைய ஈமானை உறுதிப்படுத்திக் கொண்டதே கிடையாது.**

وَمَآ أَرْسَلْنَا مِن قَبْلِكَ مِن رَّسُولٍ وَلَا نَبِىٍّ إِلَّآ إِذَا تَمَنَّىٰٓ أَلْقَى ٱلشَّيْطَٰنُ فِىٓ
أُمْنِيَّتِهِۦ فَيَنسَخُ ٱللَّهُ مَا يُلْقِى ٱلشَّيْطَٰنُ ثُمَّ يُحْكِمُ ٱللَّهُ ءَايَٰتِهِۦ ۗ وَٱللَّهُ
عَلِيمٌ حَكِيمٌ

22:52 *உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு நபியுடையவும் றசூலுடையவும் மனத்தில் ஷைத்தான் குழப்பத்தை உண்டுபண்ண முயற்சிக்காதிருக்கவில்லை. ஷைத்தான் உண்டுபண்ணிய தப்பெண்ணத்தை அல்லாஹ் நீக்கியபின் தன்னுடைய வசனங்களை அல்லாஹ் இஸ்திரப்படுத்தி விடுகிறான். அல்லாஹ் அறிந்தோனும் ஞானமுடையோனுமாய் இருக்கிறான்.*

வீண்சந்தேகங்கள் ஒரு கரைக்கும் இழுத்துச் செல்லாது என்பது குர்ஆனின் வாதம். வீண்சந்தேகம் ஏற்படுவதற்குக் காரணம் ஷைத்தானின் திருவிளையாடல் தான். உண்மையான, தெளிவான பகுத்தறிவுக்கேற்படும் நியாயமான சந்தேகம் உண்மையை உணர்ந்துகொள்ளும் தூண்டுகோலாக அமைந்து விடுகிறது.

உண்மையை உணர்வதற்கு உபயோகமாகும் ஒரு நுட்பமான கருவிதான் **நியாயமான சந்தேகம்.** வீண் சந்தேகம் ஒரு கரைக்கும் எம்மை இழுத்துச் செல்லாது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். உண்மையைக் கண்டறியும் ஆவலோடு முயற்சி செய்யும் மக்களுக்கு இறைவனின் மறைவான நல்லுதவி கிடைப்பதால் இவர்கள் கலிமாவின் உண்மையை, தௌஹீதின் அந்தரங்கத்தை நிதர்சனமாய் எவ்வித சக்கச் சந்தேகமும் இல்லாமல் கண்டடைகிறார்கள். இவர்கள்தான் மூன்றாம் வகுப்பைச் சேர்ந்த ஹகீகத்துடைய பெரியார்கள், நல்லடியார்கள். **இந்த வகுப்பைச் பெறுவதே எமது ஆரம்ப வகுப்பின் நோக்கம் என்பதை அறிந்துகொள்ளாத மனிதன் ஸரீஅத்துக்கு மூன்றாம் வகுப்பான ஹகீகத் முரணானது என்று நம்புகிறான்.** ஏனென்றால் இவ்விதமான அறிவீனம் நூற்கேள்வயறிவுகள் மூலம் அவனுக்கு ஊட்டப்பட்டிருக்கிறது. இந்தத் தவறான நூற்கேள்வி அறிவுகளல் சிக்கியுள்ள மனிதனின் அறிவுக்கு இந்த 2ஆம் 3ஆம் படிகளையுடைய மனிதனின் அறிவும் விளக்குமும் வேறுபட்டவை என்பது உண்மையேயானும் நேர் விரோதமானவை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. **ஆரம்பத்திலேயே உண்மை புரட்டப்பட்டிருப்பதானேலேயே நேர்விரோதமாக இன்று தென்படுகிறது.** ஆகவே நாம் ஆரம்பத்தில் கற்றிந்த எல்லாமே நூற்றுக்கு நூறு வீதமும் உண்மையான அடிப்படையில் உள்ளவை என்று கூறமுடியாது. **இவ்விஷயத்தை வெளிப்படையாகவே விபரிக்கும்போது அறிவு குறைந்த மக்கள் என்னை விரோதிப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆயினும் நான் எனக்குத் தெரிந்தமட்டிலும் கூறி விளக்க வேண்டியவனாய் இருக்கிறேன். எவரும் எதையும் கூறட்டும். பரவாயில்லை.**

றசூல்(ஸல்) அவர்களோ, அவர்களைப் பின்பற்றிய “தாபியீன்”களோ தாபியீன்களைப் பின்பற்றிய “தப்அத்தாபியீன்”களோ எந்த ஒரு மத்ஹப்பையும் உருவாக்கியவர்களுமல்ல. எந்த ஒரு மத்ஹப்பையும் பின்பற்றியவர்களுமில்லை. றசூல்(ஸல்) அவர்களால் சில ஹதீஸ்கள் மூலம் சுட்டிக்காட்டி விளக்கப்பட்ட. **பொய் பரவிவிடும் என்று அறிவுறுத்தப்பட்ட அதேகாலத்தில்தான் இந்த மத்ஹபுகள் யாவும் உருவாக்கப்பட்டிருக்கின்றன.** இவற்றில் மக்களுக்குப் பெரிய நன்மைகள் தென்படுகின்றன என்பது உண்மைதான் என்றாலும் பெரும் இருள்களும் (மூடத்தனமான அறிவீனங்களும்) தென்படவே செய்கின்றன. இவ்விபரத்தை உரிய இடத்தில் சரியான ஆதாரங்களோடு அறிவோம். றசூலுடைய மறைவுக்குப் பின் கலீபாக்களின் ஆட்சி சிதறுண்டு அராஜகம் நிலவியபோது ஒருசில அறிஞர்கள் மக்களுடைய நன்மையைக்கருதி குர்ஆன் ஹதீஸ் நபி வாழ்வுகளை ஆதாரமாகக்கொண்டு அவரவர் அறிவுக்கேற்றபடி சிற்சில மதுஹபுகளை ஏற்படுத்திச் சென்றிருக்கிறார்கள். சிந்தனாசக்தியும் ஆராயும் திறமையுமற்ற மக்கள் எந்தெந்த மதஹபுவைப் பின்பற்றினார்களோ அந்தந்த மதுஹபுக்களே உண்மையானவையென்று நம்பி அவரவர் விருப்பம்போல் கண்மூடித்தனமாய்ப் புகழ்ந்தும் வந்திருக்கிறார்கள். ஆனால் இறைவழிச்செல்ல, உண்மையைக் கண்டறிய முற்பட்ட மனிதர்களுக்கு எந்த மதுஹபுமே அவசியமல்ல. எந்தவோர் மதுஹபுவானாலும் குர்ஆன் ஹதீஸ் பகுத்தறிவுகளோடு ஒத்த உண்மையைக் கூறுமேயானால் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். இதேபோல் **குர்ஆன் ஹதீஸ்களுக்கும் பகுத்தறிவுக்கும் மாறான அபிப்பிராயத்தை புழுகுப்புராணங்களை ஒதுக்கித்தள்ள வேண்டியதுதான்.** இவ்விஷயத்தில் அநேக கிதாபுகள் குர்ஆன் ஹதீதுகளுக்கும் பகுத்தறிவுக்கும் முராணான எவ்வளவோ தவறான அபிப்பிரயாங்களைக் கூறிக்கொண்டிருக்கின்றன.

ஒரு சிறு உதாரணம் மட்டும் தருவோம். “ஹுசைன் ஹில்மி இஸ்க்” என்பவர் அவருடைய சுன்னத்வழி என்றோர் கிதாபில் எந்தவோர் மதுஹபுவையும் பின்பற்றாத ஒருவனை மூமின் என்றோ முஸ்லீம் என்றோ கூறக்கூடாது என்று எழுதுகிறார். இது ஆதாரமற்ற மூடத்தனமான வீண்வாதம் என்பது அறிஞர்களுக்குத் தெரியும். எனினும் அறிவு குறைந்தமக்களுக்கு எப்படித் தெரியும்? ஆனால் இவ்வாசிரியரைப் போன்றவர்கள் றசூல்(ஸல்) அவர்களையும் ஷஹாபாக்களையும் எந்த மதுஹபுவைச் சேர்ந்தவர்கள் என்று அழைப்பாரோ எமக்குத் தெரியவில்லை. நம் நாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் ஒருசில பட்டதாரிகளான அறிஞர்கள்கூட நூற்கேள்வி அறிவுகளில் சிக்குண்டு ஆராய்வில்லாமல் இருப்பதால் மதவிடயங்களில் உண்மையை மறுப்பவர்களாகவே தென்படுகிறார்கள். ஆனால் நாம்

முன்பு விளக்கிய மூன்று திரைகளினாலும் மனித உள்ளத்தில் ஏற்பட்ட பேதபுத்தி பகுத்தறிவுக்கு அடங்கிவிடுமேயானால் அம்மனிதன் உண்மையைக் கண்டறிபவனாகமாறி உண்மையோடு ஒன்றிவிடுவான் என்பது நிச்சயம். பேதபுத்தி மிகைத்திருந்தபோது சரியென்றுகண்ட ஒருவிடயம் பகுத்தறிவினால் பிழையென்று கணிக்கப்பட்டுவிடும். “நபுஸ்” அம்மாறாவில் மூழ்கிச் சரியென்றுகண்ட ஓர் ஆசை “முத்மஇன்னா”வினால் பிழையென்று கணிக்கப்பட்டுவிடும். வுஹ்மில் மூழ்கிய மக்களால் மூடன் பித்தன் வழிதவறியவன் என்று கணிக்கப்பட்ட ஒருவன் பகுத்தறிவுவாதிகளால் அறிஞர்களால் மேதையென்று கணிக்கப்படுகிறான்.

மனிதன் புறமனத்தொடர்போடு பேதபுத்தியில் மூழ்கியிருக்கும்போதுதான் திரையில் சிக்குண்டிருக்கிறேன் என்ற உண்மை அவனுக்குத் தெரியாத காரணத்தினால் அவன் அறியாத படியாத ஆராயாத எந்த ஓர் உண்மையையும் அவன் ஏற்றுக்கொள்ளவதே இல்லை. எவ்விதமான ஆதாரங்களை அவன் கண்டபோதும் அவனுடைய பகுத்தறிவு சரிவர இயங்காமல் இருப்பதனால் அவ்வாதாரங்களை அவன் மறுக்காமல் எதிர்க்காமல் இருப்பதும் இல்லை. பொய்யென்று கூறாமல் இருப்பதும் இல்லை. இதற்கு காரணம் தான் கற்றவைதான் சரியென்று நம்பியுள்ள மூடப்பிடிவாதம்தான்.

بَلْ كَذَّبُوا۟ بِمَا لَمْ يُحِيطُوا۟ بِعِلْمِهِۦ وَلَمَّا يَأْتِهِمْ تَأْوِيلُهُۥ

10:39 *என்கினும் அவர்களுக்குத் தெரியாததும் அதன் தாவீல் (ஆதாரம் விளக்கம்) அவர்களுக்கு கிடைக்காததுமான சங்கதியைப் பொய்யென்று அவர்கள் கூறுவார்கள்.*

وَلَقَدْ صَرَّفْنَا فِى هَٰذَا ٱلْقُرْءَانِ لِلنَّاسِ مِن كُلِّ مَثَلٍ ۚ وَكَانَ ٱلْإِنسَٰنُ أَكْثَرَ شَىْءٍ جَدَلًا

18:54 *மனிதர்களுக்கு இந்தக் குர்ஆனில் ஒவ்வோர் உதாரணத்தையும் விபரித்திருக்கிறோம். எனினும் மனிதனோ அதிகமாக (வீண்) தர்க்கம் செய்பவனாகவே இருக்கிறான். (என்று குர்ஆன் கூறுகிறது)*

இப்போது நாம் கூறி வந்த விபரங்களுக்கு ஆதாரமாய் றசூல் (ஸல்) அவர்களுடைய சரித்திரத்தை ஆராய்ந்து பார்.

~~(6)~~

## 004 றசூல் (ஸல்) அவர்களை மக்கள் ஏன் எதிர்த்தார்கள்?

01(06)

அறிவிலோ, கலைகளிலோ, பொருளாதார (பண) வசதிகளிலோ, வீரத்திலோ, செல்வாக்கிலோ வேறு எந்தக் காரியங்களிலோ, வகைகளிலோ எல்லாம் றசூலுக்கு முன்பு எத்தனையெத்தனையோ பேர் இவ்வுலகின் பல பாகங்களிலும் தோன்றியதும், மறைந்ததும் உண்டு. சரித்திரவாயிலாக நாம் இவ்வுண்மையைத் தெளிவாக அறிந்தே இருக்கிறோம். ஆயினும்,“அல்அமீன்” நல்ல நம்பிக்கைக்குரியவர் என்ற பட்டபெயர் முஹம்மது றசூல்(ஸல்) அவர்களுக்கேன்றி உலகின் எப்பாகத்திலும் எக்காலத்திலும் எந்த மனிதனுக்கும் சூட்டப்படவேயில்லை. இந்த அல்அமீன் என்ற பட்டப்பெயரை ஏதாவதோர் கல்விக்கூடம் அல்லது கலாசாலை அல்லது ஓர் அரசன் அல்லது அரசியல்வாதிகள் சூட்டினார்களா? என்று நோக்கினால் இல்லை. அவர்கள் நபியாக வந்த பிறகுதான் இப்பட்டப் பெயர் சூட்டப்பட்டதா? என்று நோக்கினால் அப்படியுமில்லை. அவர்கள் தங்களை நபியாக அறிவிப்பதற்கு நீண்ட நாட்களுக்கு முன்பே சிறுவராக இருந்தபோது, அவர்கள் பிறந்து வளர்ந்த அதே நாட்டு அதே கிராமத்து அல்லது பட்டணத்து மக்களால்தான் “அல்அமீன்” என்ற பெயர் சூட்டப்பட்டிருந்தார்கள் என்பது தெரிகிறது.

றசூல்(ஸல்) அவர்கள் சாதரண சிறுவராக அப்துல்லாஹ்வின் மகன் ஆமினாவின் பாலகர் முஹம்மதாக இருந்தபோது மக்கள் நன்நம்பிக்கைக்குரியவர் என்ற பட்டத்தை ஏன் சூட்டினார்கள்? மக்கா வாசிகளான அறபு மக்கள் எப்போவதாவது எங்கேயாவது இந்தச் சிறுவர் பொய் சொன்னதாகவோ, களவு செய்ததாகவோ அல்லது பிறரை ஏமாற்றிப் பிழைத்ததாகவோ அல்லது வேறு ஒரு துர்க்கிருத்தியத்தில் ஈடுபட்டதாகவோ அவர்களில் எவரும் கண்டதுமில்லை. கேள்விப்பட்டதுமில்லை. ஆகையால்தான் அல்அமீன் நன்நம்பிக்கைக்குரியவர் என்ற பட்டப்பெயரைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த மக்கா நகர மக்களிடையே ஏற்பட்ட எத்தனையோ பிணக்குகளை இந்த அல்அமீன் என்ற சிறுவரே தம் சொந்தச் செல்வாக்கைக் கொண்டு நேர்மையாகத் தீர்த்தும் வைத்திருக்கிறார்கள். அதாவது அந்த மக்காநாட்டு மக்கள் இந்த முஹம்மது என்ற சிறுவரில்

அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பதுதான். இதை உறுதிப்படுத்த நாம் ஒரு சிறு விஷயத்தை மட்டும் எடுத்துக்கொள்வோம்.

மக்கா நகரில் உள்ள “க.ஃபா” என்ற ஆலயத்தில் புனருத்தாரணம் (சீர்திருத்தம்) செய்தபோது அதன் சுவரில் பதிக்கப்பட்டிருந்த “ஹஜருல் அஸ்வத்” என்ற இரத்தினக் கல்லை கழட்டி வைத்திருந்தார்கள். அந்தக் கல்லைச் சுவரில் பதிக்கவேண்டிய நேரம் வந்தது. ஒவ்வோர் வம்சத்தவரும் தாங்களே அக்கல்லைத் தூக்கி வைத்துப் பதிக்கத் தகுதியுடையவர்கள் என்று வாதிட்டுக்கொண்டார்கள். ஒரு பெரிய யுத்தமே ஆரம்பிக்ககூடிய சந்தர்ப்ப சூழ்நிலை உருவாகிவிட்டது. இறுதியாக இந்த அல்அமீன் என்று பட்டம் சூட்டப்பட்ட வாலிபரிடமே தீர்ப்புப் பெறுவதென்று ஏகமனதாக எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். அதேபோல் அந்த அல்அமீனுடைய தீர்ப்பை யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கம்பளம் ஒன்றை விரிக்கச் செய்து அக்கம்பளத்தில் அல்அமீனே தங்கள் முபாறக்கான கையால் அக்கல்லைத் தூக்கி வைத்தார்கள். பின்பு எல்லா வம்ச மக்களும் ஒன்று சேர்ந்து கம்பளத்ததைத் தூக்கிச் சென்றார்கள். முடிவில் அந்த அல்அமீனுடைய கையினாலேயே குறிப்பிடப்பட்ட இடத்தில் கல் வைக்கப்பட்டுப் பதிக்கப்பட்டது. மூடமக்களான முரட்டு அராபியருடைய ஓர் பெரிய யுத்தம் சமாதனமாகவே முடிவடைந்துவிட்டது. இதைப்போன்ற இன்னும் பலவிஷயங்கள் நாம் அறிந்திருக்கிறோம். ஆயினும் நாம் எடுத்துக்கொள்ளப் போகிற முயற்சிக்கு இந்த ஓர் ஆதாரம் மட்டுமே போதுமானது. இந்த அல்அமீன் என்பவர் அப்போது ஓர் செல்வந்தப் பையரோ மக்கள் உள்ளத்தில் இடம்பெற்ற ஓர் கலைஞரோ கல்விமானோ அல்லது ஏதாவதோர் அபார சாதனையைச் சாதித்து மக்களிடையே மதிப்பைப் பெற்றுக் கொண்டவர்களோ அல்ல. அப்படியிருந்தும்தான் அந்த மக்காநாட்டு மக்களின் உள்ளத்தில் ஓர் சிறப்பான, மதிப்பான, கௌரவமான உண்மையான ஓர் இடத்தை அல்அமீன் பிடித்திருந்தார்கள்.

அப்படியானால் இந்தச் சிறுவரை அந்த மக்காவாசிகள் இவ்வளவு மதிப்போடு மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டிருந்த காரணம்தான் என்ன? இந்த அல்அமீன் உண்மைக்கு மாறான எந்த ஒரு விஷயத்திலும் தலையிடமாட்டார்கள். பொய்யே பேசமாட்டார்கள் என்பதை மனப்பூர்வமாகச் சந்தேகமின்றி அந்த மக்கள் அறிந்து விசுவாசித்திருந்தமையால்தான் அச்சிறுவருக்கு அவ்வளவு கண்ணியமான மதிப்பைக்கொடுத்து, அவர் உண்மையாளர்தான் என்று தீர்ப்புக் கட்டியிருந்தார்கள். இப்படி உறுதியாக தம்மை நம்பியிருந்த மக்களிடையே தம்முடைய நபித்துவத்தை வெளியாக்க விரும்பாமல் நபியவர்கள் சுமார் இரண்டு வருடங்ளைக் கடத்தி விட்டார்கள். ஏனென்றால் தாம் அறிந்த விஷயங்களைக்கூற முற்பட்டால் மக்கள் தம்பேரில் கொண்டுள்ள நம்பிக்கையை இழந்து விடுவார்களாகையால், தானும் மக்களும் இன்னலடையவேண்டி ஏற்படுமே என்ற அச்சத்தினாலதான் மறைத்தார்கள். அந்த மக்காநாட்டுமக்களின் அறிவையும் தம்முடைய அறிவையும் ஒப்பிட்டுபார்த்தபோது மக்கள் தம்பேச்சைத் திட்டமாக நம்பவேமாட்டார்கள் என்பதை அவர்கள் தெளிவாய் அறிந்திருந்தமையால்தான் தாங்கள் அறிந்திருந்த சத்தியமான உண்மையை மறைத்துக்கொண்டு இரண்டு வருடங்களைக் கடத்திவிட்டார்கள். மறைக்கபட்டகாலம் 4 வருடமென்று கூறுவோரும் உண்டு.

பின்பு இறைவனின் கண்டிப்பான ஏவலைமேற்கொண்டு தாம் அறிந்த உண்மையை மக்களிடையே வெளிப்படுத்த முற்பட்டார்கள். அதாவது மக்காவாசிகளிடையே எத்தனையோ ஆதாரங்களைக் கேட்டறிந்து அம்மக்கள் தம்மைப்பூரணமாக நம்பவே செய்வார்கள். தமக்களித்த அல்அமீன் என்ற பட்டப்பெயரில் அம்மக்கள் பூரணநம்பிக்கைகொண்டே இருக்கிறார்கள் என்பதை விளங்கியறிந்த பிறகுதான் நபி(ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்தினார்கள். அந்த மக்காவாசிகளான அறபு மக்களிடையே அந்த அல்அமீன் அவர்கள் வெளிப்படுத்திய உண்மைதான் என்ன? “லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற தௌஹீதுக் கலிமாவைத்தான் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

அந்த அரபு மக்கள் அறபு பாஷையையே வழக்கமாய் பேசுவார்கள். அந்த அல்அமீனால் உபதேசிக்கப்பட்ட தௌஹீதுக் கலிமாவான முதலாவது வசனத்தின் பொருளை அம்மக்கள் தெளிவாகவே விளங்கிக்கொண்டார்கள். லா இலாஹ இல்லல்லாஹ் என்றால் அந்த வசனம் அல்லாஹ்வைத்தவிர இலாஹு இல்லை என்பதையும் எல்லா இலாஹும் அல்லாஹ்வேதான் என்று உணர்த்துவதையும் அறிந்தார்கள். இயன்றவரை சிந்தனை செய்தார்கள். புத்தி ஏற்றுக்கொள்வதாய் இல்லை.

أَجَعَلَ ٱلْءَالِهَةَ إِلَٰهًا وَٰحِدًا ۖ إِنَّ هَٰذَا لَشَىْءٌ عُجَابٌ

38:5 *என்னே! இவர் எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹுதான் என்று ஆக்கிவிட்டாரா? இது ஓர் ஆச்சரியமான விஷயம்தான்*

என்று அந்த மக்காநாட்டு மக்கள் ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தார்கள். பிறகு றசூல்(ஸல்) அவர்கள் சத்தியம்செய்து முஹம்மதுடைய உயிர் யார்வசம் இருக்கிறதோ அந்த இறைவன் மேல் ஆணையாக நீங்கள் நீர் மொள்ளும் பாத்திரத்ததைக் கயிற்றிற்கட்டிக் கீழ்ப்பூமியாகிய பாதளத்துக்கு இறக்குவீர்களேயானால் அது நிச்சயமாக அல்லாஹ்வின்மேல் விழும் என்று கூறினார்கள். (இந்த ஹதீஸை திர்மிதி(றஹ்) அவர்கள் றிவாயத்துச் செய்திருக்கிறார்கள்) அதற்கு ஆதாரமாக

هُوَ ٱلْأَوَّلُ وَٱلْءَاخِرُ وَٱلظَّٰهِرُ وَٱلْبَاطِنُ ۖ وَهُوَ بِكُلِّ شَىْءٍ عَلِيمٌ

57:3 *ஆதியானவன், அந்தமானவன், வெளியானவன், உள்ளீடானவன், சகலதையும் அறிந்தவன்*

என்ற வேதவசனத்தையும் இன்னும் சில வேதவசனங்களையும் எடுத்தோதினார்கள். **ஆனால் அந்த அறபுமக்களுக்கு அறிவில் மாபெரும் குழப்பம் ஏற்பட்டுவிட்டது.** ஏனென்றால் (இலாஹுˇ) என்று கலிமாவில் குறிப்பிட்ட சொல், அந்த அறபு மக்களால் **அல்லாஹ் அல்லாதது என்று கணிக்கப்பட்டிருந்த விக்கிரகங்களான சிருட்டிப்பொருட்களைக் குறிப்பிடுகிற ஒரு சொல்லாகும்.** அந்த மக்கள் அல்லாஹ்வை நெருங்கிச் சேர்வதற்கு உதவியாய் அல்லாஹ் அல்லாத இலாஹுˇகளை எடுத்துக்கொண்டதாகவே கூறிக்கொண்டிருந்தவர்கள். (வணங்கப்படுகிற இலாஹுˇகளான) விக்கிரகங்ளையே "இலாஹுˇ"என்று அழைத்துக் கொண்டிருந்தவர்கள். **அதாவது இலாஹுˇ என்ற சொல் அம்மக்களுடைய வழக்கத்தில் இருந்த ஓர் சாதாரணசொல். வணங்கப்படுகிற சிருஷ்டிகளான விக்கிரகங்களுக்கு அவர்களால் பரம்பரை பரம்பரையாய்ப் பாவிக்கபட்டுவந்த ஓர் சாதாரண சொல்.** இந்தச் சொல்லை அம்மக்கள் நுட்பமாய் ஆராயவேண்டிய அவசியம் எதுவும் அவர்களுக்கு இருந்ததே இல்லை. அவர்களுடைய அறபு பாஷையில் சாதாரண வழக்கப்படி "லா இலாஹ இல்லல்லாஹுˇ" என்பது அல்லாஹ் தவிர இலாஹுˇ இல்லை என்பதை வெளிப்படையாகவே விளக்குகிறது. எல்லா இலாஹுˇம் அல்லாஹ்தான் என்று உணர்த்துகிறது. ஆனால் அம்மக்களோ இலாஹுˇகள் அல்லாஹ் அல்லாதவையென்று நம்பியிருந்தவர்கள். **ஆகவே றசூலுடைய சொல்லை அம்மக்கள் ஏற்கமறுத்தார்கள். றசூல் கொண்டு வந்த முதல் வசனமே பொய்யானது என்று தீர்ப்புக்கட்டினார்கள். றசூலை ஒரு கவிவாணராக, பைத்தியக்காரராகக் கணித்தார்கள்.**

إِنَّهُمْ كَانُوٓا۟ إِذَا قِيلَ لَهُمْ لَآ إِلَٰهَ إِلَّا ٱللَّهُ يَسْتَكْبِرُونَ

37:35 *அல்லாஹ் தவிர இலாஹுˇ இல்லையென்று அவர்களுக்கு கூறப்பட்டால் நிச்சயமாக அவர்கள் கர்வம் கொண்டு*

وَيَقُولُونَ أَئِنَّا لَتَارِكُوٓا۟ ءَالِهَتِنَا لِشَاعِرٍ مَّجْنُونٍۭ

37:36 *என்னே! நாங்கள் பைத்தியங்கொண்ட ஒரு கவிவாணருக்காக எங்களுடைய இலாஹுˇகளை மெய்யாகவே விட்டுவிடுவோமா? என்றும் அவர்கள் கூறுகின்றனர்.*

(இந்த வேதவசனத்தின்படி, இலாஹுˇ என்பது வணங்கப்படுகிற சிருஷ்டிகளான விக்கிரகங்கள்தான் என்பதை அந்த அறபு மக்கள் சக்குச் சந்தேகமில்லாமால் ஒப்புக்கொண்டிருந்தார்கள் என்பதை மனதில் பதித்துக் கொள்ளவேண்டும்.)

அதாவது எல்லா இலாஹுˇம் அல்லாஹ்தான் என்பதைக் கலிமா விளக்குவதையும் விக்கிரகங்களை வணங்கக்கூடாது என்பதை றசூலின் வார்த்தைகள் வலியுறுத்துவதையும் கண்ட அந்த மக்களுக்கு, அவர்களுடைய அறிவில் பெரிய ஒரு குழப்பம் ஏற்படக் காரணமாகிவிட்டது. கலிமாவைக் கூறிய றசூலுக்கு அவர்களின் பெரிய தந்தையான அபுலஹப் என்பவனே மண்ணை வாரி இறைத்தான் என்பதை நாம் அறிவோம்.

**ஹதீஸ்:** ***நிச்சயமாக நாம் உம்மைப் பொய்யராக்கவில்லை, எனினும் நீர் எதனைக் கொண்டு வந்தீரோ அதனையே பொய்யாகக் காணுகிறோம் என்று அபூஜஹீல், நபி (ஸல்) அவர்களிடம் கூறினான். அப்போது நபியே அவர்கள் கூறுவது உமக்குக் கவலையை அளிக்கிறது என்பதை நாம் திட்டமாக அறிவோம. அவர்கள் உம்மைப் பொய்யராக்கவில்லை. ஆனால் இவ்வக்கிரமக்காரர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களையே பொய்யாக்கிப் புறக்கணிக்கின்றனர் என்ற 6–33ஆம் ஆயத்தை அல்லாஹ் அருளினான்.***

**அறிவிப்பவர்:** அலி (ரலி)
**ஆதாரம்: திர்மிதீ**

முன்பு கூறிய ஆயத்துக்களையும் இந்த ஹதீஸையும் சிந்தனை செய்துபார். மற்றும் ஆதாரங்களைப் பின்பு கவனிப்போம். அபூஜஹீல் போன்ற ஜென்ம விரோதிகள்கூட **றசூலுல்லாஹ்வுடைய உண்மை கூறும் தன்மையில் திடமான பூரணநம்பிக்கையே வைத்திருந்தார்கள் என்பதும் றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட கலிமாவையும் மற்றும் "ஹுˇவல் அவ்வலு" போன்ற வேதவசனங்களையுமே பொய்யாகக் கண்டார்கள் என்பதும் எமக்குத் தெளிவாகவே தென்படுகின்றன.** இலாஹுˇ என்ற அறபுச்சொல் வணங்கப்படுகிற சிருஷ்டிப் பொருட்களைக் குறிப்பிடும் என்பதில் அறபு மக்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இருந்ததே இல்லை. மேலும் கலிமாவை உறுதிப்படுத்துவதற்காக றசூல்(ஸல்) அவர்களால் ஓதிக்காண்பிக்கப்பட்ட மற்றைய வேத வசனங்களும் கலிமா உணர்த்தும்

அதே கருத்தையே உறுதிப்படுததுவதை அம்மக்கள் உணர்ந்தார்கள். எல்லா இலாஹுகளையும் சர்வசிருஷ்டிகளையும் கூட அல்லாஹ் தான் என ஏற்று விசுவாசிக்க வேண்டும் என்பதும் அவைகளை வணங்கக்கூடாது என்பதும் அவர்களுக்கு மயக்கதை ஏற்படுத்தியது. புத்தி தடுமாறினார்கள். சாதாரண அறிவு குறைந்த மனிதருடைய புத்தி தடுமாறல் என்ன செய்யும்? நாமறியாத ஏதோ ஒன்றை விளக்கவே இறைவன் நபியை அனுப்பியிருக்கிறான் என்பதை அவர்கள அறியவில்லை. சிருஷ்டிகளான விக்கிரகம்போன்ற இலாஹுகள் அல்லாஹ்வேயல்ல என்று நம்பியிருந்த மக்களுக்கு அந்த இலாஹுகள் அல்லாஹ் அல்லாதவையல்ல என்றும் அவற்றை வணங்கவேகூடாது என்றும் கூறுவது அவர்களுடைய அறிவுக்கு,எம்முடைய தற்கால மக்களில் பெரும்பாலாருடைய அறிவுக்குத்தானும் எப்படிப் பொருந்தும்?

مَا نَعْبُدُهُمْ إِلَّا لِيُقَرِّبُونَآ إِلَى ٱللَّهِ زُلْفَىٰٓ

39:3 *ஆலிஹத்துக்கள் (விக்கிரகமான இலாஹுகள்) அல்லாஹ்விடத்தில் நெருங்கிச் சேர்ப்பதற்காகவேயன்றி மற்றப்படி நாங்கள் அவற்றை வணங்குவதில்லை.*

ஆகவே அந்த மக்கள் றசூலை மறுத்தார்கள். எதிர்த்தார்கள். றசூலை ஒரு மகாபெரும் மூடராகக் கண்டார்கள். அல்அமீன் என்று கூறிய அதே வாய்களால் பொய்யர் என்று கூறினார்கள். றசூல்(ஸல்) ஓர் பைத்தியக்காரரேதான் என்று தீர்ப்புக்க்கட்டினார்கள். வழிகெட்டவர் மார்க்கம் அற்றவர் என்று கூறினார்கள். சொல்லமுடியாத, நம்பமுடியாத, அவ்வளவு கடினமான இன்னல்களையெல்லாம் செய்தார்கள். அத்துடன் முடிந்து விட்டதா விஷயம்? இல்லை, ஆளையே கொன்றொழித்து விடுவதாக முடிவு கட்டினார்கள்.

ஆனால் அந்த றசூல்(ஸல்) அவர்கள் யாரையாவது நோக்கிப் பொய் சொல்லும்படியோ களவு செய்யும்படியோ அல்லது வேறு ஏதாவதோர் கெட்ட செயலில் ஈடுபடும்படியோ கூறியதும் கிடையாது தாங்களே செய்ததும் கிடையாது. தம்மை நன்நம்பிக்கைக்குரியவர் "அல்அமீன்" என்று நம்பிப்போற்றிப் புகழ்ந்த அந்த மக்களிடையே அவர்கள் கூறியதெல்லாம் "லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற வாக்கியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது மட்டும்தான்.

இப்போது சிந்தனை செய்துபார். நன்நம்பிக்கைக்குரியவர் என்று பூரணமாய் ஒப்புக்கொண்டிருந்த மக்கள் பொய்யர் பைத்தியக்காரர் என்று ஏன் கூறினார்கள்? ஆரம்பத்தில் நாம் விபரித்து வந்துள்ள நூற்கேள்வியறிவு, பழக்கவழக்கம், மனோஇச்சை (மூடப்பிடிவாதம்) போன்ற திரைகளில் சிக்குண்டு வஹ்மு என்ற பேதபுத்தியல் மூழ்கியிருந்த மக்களுக்கு,தெய்வ றஹ்மத்தான றசூலின் வார்த்தைகளைச் சிந்தித்து உணர்ந்து உண்மையைக் கண்டறிய முடியாமல், பகுத்தறிவு செயல்படாமல் இருந்ததுதான் காரணம். இத்திரைகளில் கட்டுண்ட மக்களுக்குச் சிந்திக்கவோ பகுத்துணரவோ முடியாமல்தான் இருக்கும். இந்த நிலைமையிலுள்ள மிருகங்களுக்குகொப்பான மக்கள் றசூலைப் பொய்யர் பைத்தியக்காரர் என்று கூறவும் கொன்றொழிக்கவும் தானே முற்படுவார்கள்.

إِنَّ شَرَّ ٱلدَّوَآبِّ عِندَ ٱللَّهِ ٱلصُّمُّ ٱلْبُكْمُ ٱلَّذِينَ
لَا يَعْقِلُونَ

8:22 *நிச்சயமாக மிருகங்களில் அல்லாஹ்விடத்தில் மிகக்கேவலமானது (உண்மையைக் கேட்டு) அறிந்துக்கொள்ள முடியாத செவிடர்களும் (அறிந்தும் சொல்லமுடியாத) ஊமையர்களும்தான்.*

றசூல்(ஸல்) அவர்களை மட்டும்தான் இப்படிப்பட்ட மக்கள் எதிர்த்தார்கள் என்று நீ மருட்சியடையாதே. இதற்கு முந்திய நபிமார்களுடைய நிலைமையும் இதேபோல்தான்.

فَإِن كَذَّبُوكَ فَقَدْ كُذِّبَ رُسُلٌ مِّن قَبْلِكَ جَآءُو بِٱلْبَيِّنَٰتِ وَٱلزُّبُرِ
وَٱلْكِتَٰبِ ٱلْمُنِيرِ

3:184 *பின்னரும் அவர்கள் உம்மைப்பொய்யர் எனக்கூறினால் (நீர்கவலைப்படாதீர்) உமக்கு முன்னர்வந்த பலதூதர்களையும் அவர்கள் பொய்யர்கள் என்றே கூறினார்கள். அவர்கள் தெளிவான அத்தாட்சிகளையும் வேத நூல்களையும் பிரகாசமானவேதத்தையும் கொண்டுவந்தே இருந்தனர்.*

وَكَذَٰلِكَ جَعَلْنَا لِكُلِّ نَبِيٍّ عَدُوًّا شَيَٰطِينَ ٱلْإِنسِ وَٱلْجِنِّ

6:112 *இவ்வாறே நாம் ஒவ்வோர் நபிக்கும் எதிராகத் தலைவர்களும் பொதுமக்களுமான ஷைத்தான்களை விரோதிகளாகச் செய்திருந்தோம்.*

وَكَذَٰلِكَ جَعَلْنَا فِى كُلِّ قَرْيَةٍ أَكَٰبِرَ مُجْرِمِيهَا لِيَمْكُرُوا۟ فِيهَا ۖ وَمَا يَمْكُرُونَ إِلَّا بِأَنفُسِهِمْ وَمَا يَشْعُرُونَ

6:123 *அன்றி இவ்வாறே ஒவ்வோர் ஊரிலும் ஆங்காங்கேயுள்ள பாபிகளை நாம் தலைவர்களாக்கியிருக்கிறோம். அங்கு அவர்கள் விஷமம்செய்துகொண்டிருப்பார்கள். எனினும் அவர்கள் தங்களுக்கேயன்றிச் சதி செய்துவிட முடியாது (இதை) அவர்கள் உணர்ந்து கொள்ளமாட்டார்கள்.*

றசூல்(ஸல்) அவர்கள் ஏதோ சில சுய நன்மைகளுக்காகத்தான் இவ்வித பிரசாரம் செய்கிறார்கள் என்று நம்பிய ஒருசிலர் மக்கா நகரின் தலைமைப் பதவியை, பணத்தை, அழகிய பெண்களைத் தருவதாவும் பிராசாரத்தை நிறுத்த வேண்டுமென்றும் கூறினார்கள். ஆனால் றசூல்(ஸல்) அவர்கள் எதைத்தந்தபோதிலும் எவ்விதமான இன்னல்கள் ஏற்பட்டபோதிலும் தம்முடைய பிரசாரத்தை நிறுத்தப்போவதே இல்லையென்று **கூறியதைக் கேட்ட சிலர், சிந்திக்கமுற்பட்டார்கள்.** அவர்களை மூடிக்கொண்டிருந்த, நாம் முன்பு கூறிய மூன்று திரைகளில் இருந்தும் விடுபட்டு உண்மையை உணர்ந்து ஈமான் கொண்டார்கள். இன்னும் சிலர் றசூலுடைய அற்புத நிகழ்ச்சிகளைக் கண்ணுற்று ஈமான் கொண்டார்கள். **இன்னும் பலர் அந்த அற்புதக் காட்சிகளைக் கண்ணுற்றும், முன்னிலும் அதிகமாக மூடர்களானார்கள்.** சூரியப் பிரகாசத்தைக் கண்ட வௌவாலின் கண்கள் இருளடைவதைப்போல இவர்களுடைய இருதயங்களும் குருடாகிவிட்டன. **ஆகவே றசூலுடைய அற்புதங்கள் யாவும் சூனியம் ஸிஹ்று என்றே கூறமுற்பட்டார்கள்.**

மனிதனுடைய அறிவு காரணகாரியத் தொடர்போடு கட்டுண்டதாகும். அதாவது ஓர்காரியம் நடைபெறுவதற்கு நிச்சயமாகக் காரணம் இருந்தே ஆகவேண்டும் என்பதுதான் மனிதனுடைய அறிவு விளக்கம், ஆகவே காரணம் தென்படாத ஓர் காரியம் நடைபெறும்போது அதை மனித அறிவு நம்பவே நம்பாதுதான். கறாமத்து முஹ்ஜிஸாத்துப்போன்ற அற்புத நிகழ்ச்சிகளுக்கும் காரணம் உண்டு என்பது உண்மைதான் என்றாலும் இந்தக் காரணங்கள் மனித அறிவுக்கு எட்டாதவையாகும். ஆகவே ஓர் அற்புதம் நடைபெறும்போது தங்களுக்குத் தெரிந்த ஏதாவது ஓர் காரணத்தைக் கற்பனைபண்ணி, சூனியம் (ஸிஹ்று) அல்லது வாஸிலாத், அல்லது மெஜிக், குறளிவித்தையென்றுதான் மனிதன் கூறுவான். அன்று மட்டுமல்ல இன்றைக்கும் ஒரு சில நல்லடியார்களுக்கு ஏதாவது ஓர் அற்புதம் நிகழ்ச்சி நடைபெறும்போது அதைக்கண்ணுற்ற விரோதி அதை மறுக்கவும், அதைகண்ணுற்ற நல்லடியாரின் ஆதரவாளன் ஒன்றை ஒன்பதாய்ப் புகழவும்தான் செய்வார்கள். ஆகவே அறிவுத் தெளிவில்லாமல் இருளில் தவித்த முழுமூடர்களான அறபு மக்கள் றசூலின் அற்புத நிகழ்ச்சிகளைக் கண்ணுற்றும் அவற்றைச் ஸிஹ்று என்றும் கூறியது ஆச்சாியமேயல்ல, அந்த அறிவுக்கடலான மகான் முஹம்மது றசூல்(ஸல்) அவர்களைக் கொன்றொழிக்க முற்பட்டதும் ஆச்சரியமேயல்ல.

றசூல்(ஸல்) அவர்கள் மிகச்சிறந்த ஓர் வஸியக்காரர் என்று நம்பிய அபூஜஹ்லைப் போன்றவர்கள் றசூலின் பேச்சைக் கேளாமலும், றசூலின் முகத்தைப் பாராமலும் விலகிக்கொண்டார்கள். ஒருசிலர் செவியில் விரலை நுழைத்துக்கொள்வதும் உண்டு. ஏன்? றசூலின் பேச்சு செவியில் விழுந்தால் வசியமாகி வழிதவறி மார்க்கம் கெட்டவனாகிவிடுவானென்று பயத்தினால்தான். ஒருசிலர் றசூலைக் காணும்போது கண்களை மூடிக்கொள்வதும் தலையை மறுபுறம் திருப்பிக்கொள்வதும் உண்டு ஏன்? றசூலின் வசியத்தில் சிக்குண்டு மயங்கி மார்க்கம் கெட்டவனாய் வழிதவறி விடுவோமென்ற அச்சத்தினால் தான் இப்போது மிகச்சுருக்கமாய்க் கூறிய இவ்விபரத்தைத் தெளிந்த அறிவோடு சிந்தனை செய்துபார். றசூலை மட்டுமல்ல, அதற்குமுந்திய நபிமார், றசூல்மார்கள், ஒலிமார்கள், அறிஞர்களையும் பிந்திய குத்புகள் ஒலிமார்கள் மற்றும் அறிஞர்களையும் சிந்தனைக்கெடுத்துப்பார். **இவர்களில் அநேகரை மக்கள் கொலைசெய்திருக்கிறார்கள். அடித்துத் துரத்தி இருக்கிறார்கள். நெருப்பிலிட்டு வேடிக்கை பார்த்திருக்கிறார்கள். ஏதோவெல்லாம் செய்திருக்கிறார்கள். இந்த மகான்களில் ஒரு சிலர் எழுதிய அறிவுக் களஞ்சியங்களான சிறந்த நூற்களைத் தீயிட்டுச் சாம்பராக்கி இருக்கிறார்கள். ஒரு சில நூற்களைத் தடை செய்திருக்கிறார்கள்.**

அந்த இறைநேசர்களான நல்லடியார்களைக் காபீர், முஸ்ரீக், பித்தன், சமூகத்துரோகி என்றெல்லாம் பட்டம் சூட்டியிருக்கிறார்கள். இவ்விதமான செயல்களை மூடமக்கள் மட்டுமே செய்தார்கள் என்று நீ நினைக்கிறாயா? இல்லை. **அவ்வக்காலங்களில் இருந்த நூற்கேள்வியறிவின் திரையில் சிக்குண்டிருந்த கல்விமான்கள் பட்டதாரிகளும் சேர்ந்துதான் செய்திருக்கிறார்கள். உண்மையை உறுதிப்படுத்துவதற்காகவே சட்டம் என்பதை மறந்து தவறான சட்டத்தை உறுதிப்படுத்தவதற்காகவே உண்மையை உதாசீனம் செய்யும் கல்விமான்கள் வேறு எதைத்தான் செய்வார்கள். தான் பிறந்து வளர்ந்த பொற்பூமியான மக்கா நகரைவிட்டு இரவோடிரவாக ஒழிந்தோடி**

**மதீனாமண்ணில் தஞ்சமடைய வேண்டிய நிலைமை றசூலுல்லாஹ்வுக்கு ஏற்பட்டது ஏன்? அவர்கள் யாருக்குத் துரோகம் செய்தார்கள்?** என்னதான் தீவினை செய்தார்கள்? மிருகங்களைப்போல் இருந்த மக்களுக்கு அறிவுவிளக்கம் கொடுக்க முற்பட்டார்களேயன்றி வேறு எத்தீவினையும் செய்ததாக இல்லவே இல்லை. றசூலை மட்டுமன்றி அதன்பின்வந்த நல்லடியார்கள், அறிஞர்களையும் சிந்தனை செய்துபார். எக்காலத்திலாவது எங்கேயாவது தாங்கள் பிறந்து வளர்ந்த அதே நாட்டு மக்களால் **மூடன் பித்தன் காபீர் என்று ஒதுக்கித் தள்ளப்படாத ஓர் அறிஞரை உன்னால் காட்டமுடியுமா?**

அபாயஸீதுல் புஸ்த்தாமி(றஹ்) அவர்கள் இந்த அனுமானக் கல்வி (இல்முல் எகீன், நூற்கேள்வி)களில் ஊறியுள்ள பட்டதாரிகள் பண்டிதர்களைக் குறித்து,"பிணத்திடமிருந்து பிணத்தை எடுத்துக்கொண்டவர்கள்" என்றும் நல்லடியார்களான அவ்லியாக்களின் "ஹக்குல் எகீன்" என்ற அறிவைக்குறித்து "மரிக்காதவனிடமிருந்து மரிக்காததை எடுத்துக்கொண்டவர்கள்" என்றும் கூறுகிறார்கள்.

சகோதரனே! இனிமேலாவது மக்கள் அப்படிச் செய்யமாட்டார்கள் என்று நீ நம்புகிறாயா? இல்லவே இல்லை. **இனிமேலும் அப்படித்தான் செய்வார்கள். இப்போதும் அப்படித்தான் செய்கிறார்கள்.** எவராவது ஒருவர் சரியான ஆதாரங்களோடு ஓர் உண்மையைக் கூற முற்பட்டால் அதை விளங்கித் தெளிவோம் என்று விரும்புகிறவர்கள் எம்மில் யார் இருக்கிறார்கள்? அவர்கள் சரியான பாதையில் இருப்பதாக, முற்றிலும் உண்மையைக் கண்டறிந்த பட்டதாரிகள், அறிஞர்களாகத் தங்களில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருப்பவர்கள், சாதரண மனிதனுடைய பேச்சை விளக்கத்தை ஏன் கேட்கப்போகிறார்கள்? ஏதாவதோர் உண்மை வெளிப்படும் போது அதை விளங்கியறிவதற்குப் பதிலாக,**அதைக்கேட்கவே கூடாது என்று தீர்ப்புக்கட்டி மக்களை தடைசெய்பவர்கள்தானே இன்றும் எம் சமூக மக்களை மேய்க்கிறார்கள். இவர்கள் தங்களை யார்? என்று தெரிந்து கொள்ளாவிடிலும் பகுத்தறிவு இவர்கள்யார்? எவ்வகையினர் என்பதை எமக்குக் காட்டித்தரவே செய்கிறது.** குர்ஆன் ஹதீஸ்கள் தீர்ப்புக் கூறவே செய்கின்றன. சென்று போன நல்லடியார்களின் வாழ்வுகளில் எவ்வளவோ இன்னல்களை ஏற்படுத்திய மக்களின் பிற்சந்ததியினராகிய நாம், அந்த நல்லடியார்களின் அடக்கஸ்தலங்களை அலங்கரிப்பதிலும் காணிக்கைபோடுவதிலும் வரம் கேட்பதிலும் காலத்தைக் கடத்துகிறோமேயல்லாமல்,**அவர்களின் சொல், செயல், கருத்துக்களை எள்ளளவும் சிந்தனைக்கெடுத்துத் தெளிவு பெறுகிறோமில்லை.** மனிதர்களாகிய எம்மில் மிகப்பெரும்பான்மையோர் ஏன் இந்த நிலைமையில் இருக்கிறோமென்றால் வஹ்மு என்ற பேதபுத்தியில் மூழ்கியவர்களாகவும் இஸ்லாத்தின் மூலக் கொள்கையான **தௌஹீதை விளங்கியறிந்து தெளிவு பெறாதவர்களாகவும் இருப்பதனால்தான்.**

وَإِنَّهُمْ لَيَصُدُّونَهُمْ عَنِ ٱلسَّبِيلِ وَيَحْسَبُونَ أَنَّهُم مُّهْتَدُونَ

43:37 *நிச்சயமாக (ஷைத்தான்கள்) அவர்களை நேரானபாதையில் இருந்து தடுத்துவிடுகின்றனர். எனினும் அவர்களோ தாங்கள் நேரான பாதையில் இருப்பதாகவே எண்ணிக்கொள்கின்றனர்.*

وَيْلٌ لِّكُلِّ أَفَّاكٍ أَثِيمٍ

45:7 *கற்பனையாகக் கூறும் பாபிகளுக்கெல்லாம் கேடுதான்.*

بَلْ كَذَّبُوا۟ بِٱلْحَقِّ لَمَّا جَآءَهُمْ فَهُمْ فِىٓ أَمْرٍ مَّرِيجٍ

50:5 *இவ்வாறிருந்தும் அவர்களிடம் வந்த உண்மையான (வேதத்)தைஅவர்கள் பொய்யாக்கி வெறும் குழப்பத்துக்குள்ளாக்கி விட்டனர்.*

وَلَقَدْ يَسَّرْنَا ٱلْقُرْءَانَ لِلذِّكْرِ فَهَلْ مِن مُّدَّكِرٍ

54:40 *நல்லுணர்ச்சி பெறும்பொருட்டு இந்தக் குர்ஆனை நிச்சயமாக மிக்க எளிதாக்கியிருக்கிறோம். நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டா?*

ஆகவே பகுத்தறிவு செயல்படாத, சிந்திக்கும் ஆற்றலைப்பெறாத ஒவ்வோர் மனிதனும் உண்மையைக்கூட மறுக்கத்தான் செய்வான். நல்லறிவு கூறும் மனிதனையும், நல்லறிவுகளையும் பொய்யன் என்றும் பொய்யென்றும் தான் கூறுவான். ஏனென்றால், அம்மனிதனுக்குத்தான் அறியாமையில், திரையில் சிக்கியுள்ளேன் என்பது தென்படுவதில்லை.

وَلَقَدْ ضَرَبْنَا لِلنَّاسِ فِى هَـٰذَا ٱلْقُرْءَانِ مِن كُلِّ مَثَلٍۢ ۚ وَلَئِن جِئْتَهُم بِـَٔايَةٍۢ لَّيَقُولَنَّ ٱلَّذِينَ كَفَرُوٓا۟ إِنْ أَنتُمْ إِلَّا مُبْطِلُونَ

30:58 *மனிதர்களுக்கு வேண்டிய உதாரணங்கள் யாவையும் இந்தக் குர்ஆனில் நிச்சயமாக நாம் கூறியே இருக்கிறோம். எந்த அத்தாட்சியை நீர் அவர்களிடம் கொண்டு வந்தபோதிலும் நீரும் உம்மைச் சார்ந்தோர்களும் பொய்யர்களேயன்றி வேறில்லையென்று இந்த நிராகரிபோர் நிச்சயமாகக் கூறுவார்கள்.*

இவ்வாயத்தில் குறிப்பிட்ட நபியைச் சேர்ந்தவர்கள் யார்? நிராகரிப்பவர்கள் யார்? என்பதை பொறுமையோடு பின்னால் விளங்கியறிவோம்.

இதேபோல 10-39 ஆம் ஆயத்தில் "அவர்கள் தங்கள் அறிவால் தெரிந்து கொள்ள முடியாததையும் அதில் கூறப்பெற்றவை நிகழாதிருக்கையில் அவற்றையும் பொய்யென அவர்கள் கூறுகின்றனர்" என்று இறைவனே அறிவிக்கிறான். மனிதன் தன் அறிவால் விளங்கியறிந்துகொள்ள முடியாத ஒன்றை மறுப்பதும் அவ்வுண்மையைக் கூறுவோரை வழிகெட்டவன் என்று தீர்ப்புக்கட்டுவதும் தாங்கள் கற்றுள்ள, அறிந்துள்ள அறிவே உண்மையானது, முடிவானது என்று திமிரடைவதும் திரைகளில் சிக்குண்ட மக்களின் இயல்பே ஆகும். மக்கள் உண்மையை உணர்ந்துகொள்ள முடியாமல் தவிப்பதற்கும் உண்மையை வெறுத்து ஒதுக்குவதற்கும் இன்னும் பல காரணங்கள் இருக்கிறன்றன. அவை ஒவ்வொன்றையுமே விபரிப்பதென்றால் பல நூற்களையே எழுதவேண்டியேற்படும். ஆயினும் அவசியமான அளவு மட்டிலும் மிகச் சுருக்கமாய்க் கூறுவோம்.

ஓர் அடியான், இறைவனின் தீதாறைச் சந்திக்க வேண்டு மென்றால் எழுபது ஆயிரம் (இருளான) இருட்திரைகளையும், எழுபதாயிரும் ஒளித் திரைகளையும் கடந்து சென்றுதான் தரிசிக்க வேண்டுமென்று நம்முன்னோர்கள் கூறியதை, எழுதியதை நீ கேள்விப்பட்டோ, படித்தோ இருக்கலாம். அராபியருடைய பூர்வீககாலக் கணிதப்படி எழுபதாயிரம் என்றால் எண்ணிலடக்கிக் கணக்கிட முடியாத அவ்வளவு அதிகம் என்பதே கருத்தாகும். அதாவது மிக அதிகமான இருட்திரைகளையும், மிக அதிகமான ஒளித்திரைகளையும் கடந்து முன்னேறாமல் இறைவனுடைய (தீதாறை) உண்மையை உணரமுடியாது. பூரண சாந்தியை, பூரணத்தன்மையைப் பெறமுடியாது என்பதே அதன் சாரமாகும். இந்த இருள், ஒளி, ஆகிய இரண்டு திரைகளிலும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. அது என்னவென்றால் முதலாது திரையைவிட இரண்டாவதும், இரண்டாவது திரையை விட மூன்றாவதும் கடினம்(மறைக்கும் தன்மை) குறைந்தவை என்பதேயாகும். மேலே சென்று முன்னேறும்போது மறைக்கும் திரைகளின் மறைக்கும் தன்மையும் குறைந்துகொண்டே போகின்றன. இருள், ஒளித்திரைகள் இரண்டுமே இத்தன்மையுடையவைதான்.

இருட்திரையென்றால் அறிவுக் குறைவினால், பேதபுத்தியினால் பிடிவாதகுணத்தினால், தவறான கற்பனையறிவுகளினால் ஏற்படுகிற தடை என்பதே கருத்தாகும். ஒளித்திரையென்றால் தான்கற்றிந்த நூற்களில் (புஸ்த்தகம், கிதாபுகளில்) ஆராய்வு செய்யாமல் கண்மூடித்தனமாய் ஒப்புக்கொண்டு பின்பற்றியிருக்கும் அறிவுத் (திரை) தடையென்பதே அதன் கருத்தாகும். நான் முன்புகூறிய பழக்க வழக்கம், மனோஇச்சை கற்பனை, வீண்பிடிவாதம் என்பவை இருட்திரைகளைச் சேர்ந்த 1ஆம் 2ஆம் திரைகளாகும். நூற்கேள்வியறிவென்று நாம் குறிப்பிட்டது ஒளித்திரைகளில் 1ஆம் 2ஆம் திரைகளாகும். இந்த ஆரம்ப இருள் ஒளித்திரைகளில் இருந்தும் விடுபடக்கூடிய அத்தனை திரைகள் தடைகளைத் தாண்டவும், உண்மையை உண்மையின்படி உணரவும் இறைவனின் சந்திப்பைப் பெறக்கூடிய வாய்ப்பை உன்னால் பெறவும் முடியும் என்பது நிச்சயம். **இல்லையென்றால் கலிமாவின் பொருளை விளங்கித் தெளிவு பெறவும், ஷிறாத்து என்ற பாதையைக் காணவும், அதில் தடையின்றிச் செல்லவும், மீஸான் தராசைக் காணவும், அதில் உன் செயல்களைக் எடைபோட்டு அறியவும்,ஈமானின் பூரணத்தன்மையைப் பெற்றுப் பூரணசாந்தியை அடையவும் உன்னால் முடியாமலே போய்விடும். நான் கூறியுள்ள வார்த்தைகளை மேலோட்டமாக நோக்காமல் சிந்தனைக் கெடுப்பாயாக.**

02 **(7)**

நம்மையெல்லாம் இருளில் தவிக்கும்படி விட்டுச்சென்ற ஒரு கூட்டம் உண்டு. அப்போதுமட்டுமல்ல இப்போதும் மக்களை மென்மேலும் இருளிலேயே பலாத்கார அறிவுரைகளால் தள்ளிவிட்டுக் கொண்டிருக்கிற பின்பற்றல்வாதிகளான புதுமை, பழைமை விரும்பிகளின் கூட்டங்கள் ஒவ்வோர் நாட்டிலும், ஒவ்வோர் கிராமத்திலும் இருக்கவே செய்கின்றன. எம் முன்னோர்களிலுள்ள ஒரு சிலர் பெயரை, புகழைப் பெறவும் பணத்தைப் பெறவும் தாங்களறிந்த உண்மையே சரியென நம்பி அதை மக்களுக்கு எடுத்துரைக்கவும் விரும்பி,**அதாவது நல்ல நோக்கோடும், தீயநோக்கோடும் புஸ்த்தகம், கிதாபுகளை எழுதும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.** இவர்களில் பெரும்பான்மையோர் நாம் மக்களுக்கு நன்மையே செய்கின்றோம் என்று நம்பித்தான் புஸ்த்தகம், கிதாபுகளை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள் என்பது ஆராய்வினால் தென்படுகிறது. அவர்கள் எதை எழுதும்போதும் இதை வாசித்தவன், அறிந்தவன், கேட்டவன், நம்பினவன், காபிராகிவிடுவான் அல்லது காபிராகியே விட்டான், நரகமே செல்வான் என்றும், கேள்வி கேட்பதோ, சந்தேகப்படுவதோ ஆராய்வதோ வழிகேடு, குபிர் என்றெல்லாம் எழுதியும், பேசியும் அவர்கள் எமக்கு போட்டுவந்த கடிவாளங்கள் அல்லது

மூக்கணாங்கயிறுகள்தான் எம்மை இருளில் தவிக்கவிட்டிருக்கின்றன. உலக மக்களை திருப்திப்படுத்திப் பொய்யை உண்மைதான் என்று நம்ப வைப்பதற்கு வேஷம் வேண்டுமல்லவா? பொய் ஆடையணிந்துதானே செல்லவேண்டும்.

۞ أَلَمْ تَرَ إِلَى ٱلَّذِينَ بَدَّلُوا۟ نِعْمَتَ ٱللَّهِ كُفْرًا وَأَحَلُّوا۟ قَوْمَهُمْ دَارَ ٱلْبَوَارِ

14:28 *அல்லாஹ்வின் அருளை (நிஹ்மத்தை) நிராகரிப்பைக் (குபிரை)க் கொண்டு மாற்றித் தங்கள் ஜனங்களையும் அழிவுக்கிடங்கில் இறக்கிவிட்டவர்களை நீர் பார்க்கவில்லையா?*

இவ்வித இனமான நூற்கள் பல இக்காலத்தில் அழிந்துவிட்டன என்பது உண்மைதான். எனினும் முற்றதாய் அழிந்தோ, அழிக்கப்பட்டோ விட்டன என்று கூறமுடியாது. எம் தாய், தந்தையரில் பழைய வயோதிபரில் மிகப்பலர் அந்தப் பழைய புஸ்த்தகம், கிதாபுகளினாலிடப்பட்ட கடிவாளங்களினாலேயே இன்னும் கட்டுண்டிருக்கிறார்கள். அவர்கள் கற்றறிந்த அறிவின் அடிப்படையிலேயே எங்களை வளர்த்துப் பழக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேயே எங்களுக்குக் கல்வி ஊட்டியிருக்கிறார்கள். ஆகவே, புதுமை விரும்பிகளான வாலிப உள்ளங்களுக்கு ஓரளவு உண்மையை உணர்த்தலாம் என்றாலும் எம் தாய், தந்தையரான பழைமை விரும்பிகளுக்கு உண்மையை உணர்த்துவது சாதாரண ஒரு வேலையுமல்ல, நடாத்தி முடிக்கக்கூடிய ஒரு காரியமுமல்ல.

எந்தப் புஸ்த்தகத்தையாவது கிதாபையாவது விவாதிப்பதற்கோ, சந்தேகிப்பதற்கோ, ஆராய்வதற்கோ முடியாத பரிசுத்தமானது என்று **எப்போது நாம் நம்புகிறோமோ அப்போதே நாம் எம்முடைய பகுத்தறிவை இழந்து விட்டோம், சிறைப்படுத்தி விட்டோம் என்பதுதான் பொருளாகும்.** இந்தக் குர்ஆனை நீங்கள் ஆராய்ந்து பார்ப்பதில்லையா? சிந்தித்து உணர்வதில்லையா? என்று இறைவனே கேட்கும்போது சாதாரண மனிதனால் எழுதப்பட்ட ஒரு நூலைச் சந்தேகிப்பதும் ஆராய்வதும் ஏன் கூடாது? நியாயமான சந்தேகம் இல்லையானால் உண்மையை ஒருபோதும் அறியவே முடியாது. மனிதனுடைய பகுத்தறிவு பூரணமாய் ஒரு விஷயத்தை ஏற்றுக்கொள்ளவில்லையானால் அவ்விஷயத்தில் விசுவாசமும் கிடையாது.

நம் முன்னோர்களால் எமக்கேற்பட்ட நன்மைகளுக்காக நாம் அவர்களுக்கு நன்றி செலுத்தவேண்டியதுதான். ஆயினும் அந்த முன்னோரின் கொள்கைகள் விளக்கங்கள் உண்மையான ஆதாரங்களுக்குமாறாக, அறிவுக்கு முரணாய்த் தென்பட்டால் அவற்றை ஒதுக்கித்தள்ளிவிட்டு உண்மையைக் கண்டறியும் **சுதந்திர புத்தியும் எம்மிடம் இருக்கத்தானே வேண்டும். சொல்வார் சொன்னாலும் கேட்பாருக்கு மதி (புத்தி) வேண்டும் என்பது பழமொழியல்லவா?**

நம் முன்னோர்களில் ஒரு சிலரைப்போல தாங்கள் கூறும் வார்த்தைகளைத் தாங்களே உணர்ந்து கொள்ளமுடியாத வஹ்முமிகைத்த பட்டதாரிகள், அறிவாளர்கள் பலர் இப்போதும் இருக்கவே செய்கிறார்கள். தங்களால் இயன்றவரை உபதேசங்களும் பல சீர்திருத்தங்களும் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஏதோவெல்லாம் சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருப்பதாயும் நம்பித்தான் இருக்கிறார்கள். ஆனால், இறைவன் எனக்களித்த அறிவைக்கொண்டு நான் பார்க்கும்போது அன்று சுமார் **1400 வருடங்களின் முன்னே மக்கள் மத அறிவுத்துறையில் எப்படியிருந்தார்களோ அதே நிலைமையில்தான் இன்றும் பெரும்பாலான மக்கள் இருப்பதாக நான் காணுகின்றேன்.** விபரம் தருவேன் பொறுமையடைய வேண்டும். ஆகையால் நீ உண்மையைக் கண்டறிய வேண்டும் என்று விரும்பினால் தவறான நூற்கேள்விகளை மறந்தேயாக வேண்டுமென்று உன்னை எச்சரிக்கிறேன். நூற்கேள்வியறிவை மறப்பது எப்படி? மறந்தால் மேலதிக அறிவைப் பெறுவது எப்படி? என்று நீ என்னைக் கேட்டால் நான் விடை அளிப்பேன் நூற்கேள்வி அறிவு என்று நான் கூறுவது குர்ஆன், ஹதீஸ்கள், ஆன்றோரின் சரியான விளக்கங்களும் பகுத்தறிவுக்கும் மாற்றமான தவறான நூற்களின் அறிவையும் தவறான கேள்வி அறிவையும்தான். ஆன்றோர் என்பதன் முழுவிபரமும் பின்னால் தருவேன். படிக்கத் தெரியாதவனைப்போலவே படிக்கத்தகாதவற்றைப் படிப்பவனும் எழுத்து வாசனையற்றவனாகிவிடுவான் என்று ஒருவர் கூறுகிறார். கற்றதையெல்லாம் மறக்கும் போதுதான் நாம் கற்கத் தெடங்குகிறோம் என்று இன்னொருவர் கூறுகிறார். ஆகவே கற்கத்தகாதவை எவை? என்பதற்கு நாம் ஓர் அடிப்படையைக் கண்டறிய வேண்டியதாய் இருக்கிறது. இதைப் பொறுமையோடு பின்னால் கண்டறிவோம்.

ஆகவே, நீ கற்றறிந்த அல்லது கேட்டறிந்த ஓர் அறிவு குர்ஆன், ஹதீஸ்களுக்கு முரணாய்ப் பகுத்தறிவுக்கு மாற்றமாய் இருந்தால் அதை ஒதுக்கித் தள்ளிவிடவும், குர்ஆன், ஹதீஸ்களுக்கும் பகுத்தறிவுக்கும் பொருத்தமான அறிவை நிச்சயமாக எடுத்துக்கொள்ளவும் தான் வேண்டும். தௌஹீதை விளங்கியறிந்து ஈமான் என்ற செல்வம் உன் உள்ளத்தில் குடிகொண்டு விடுமேயானால் நீ பிரயாசப்படாமலே நூற்கேள்வியறிவுகளை மறக்கவும் “விஜ்தான்” என்னும் இறையறிவு உள்ளத்தில் நிலைபெறவும் தொடங்கிவிடும். இந்த நிலைமை உனக்கேற்பட்டுவிட்டால் நீ கற்றறிந்த அறிவு அறிவேயல்ல என்ற முடிவுக்கு வந்து சேர்வாய். ஆகவே ஈமானுடைய விபரத்தை தௌஹீதின் உண்மையை விளங்கியறிந்து தெளிவுபெற முயற்சிசெய்.

மனிதனுடைய உள்மனத்தின் தன்மையை வாயினால் கூறி அல்லது புஸ்த்தகமாய் எழுதி விளக்கிவிடலாம் என்று நம்பாதே. மனித உள்ளம் அதன் திரைகளில் இருந்தும் விடுபட்டுத் தன் சொந்த நிலைமையில் இருக்குமேயானால் “ஆலமுல் மலக்கூத்தில்” நின்றும் “லௌஹுல்

மஹ்பூலில்”நின்றும் உண்மைகளை அறியும் தத்துவம் நிச்சயமாக அதற்குண்டு. மனித உள்ளத்தின் அறிவுகள் இரண்டு வகையானவை. ஒன்று வெளியானது. மற்றொன்று மறைவானது. இதை “லாஹிரு,பாத்தினு” என்று கூறுவார்கள். வெளியான அறிவுதான் புறமனத்துக்குடையது. இந்த வெளிமனத்தின் அறிவுதான் இன்றைய உலகிலுள்ள நுண்ணறிவுகள் எல்லாம். இந்த வகையைச் சேர்ந்ததுதான் **சட்டம் ஏற்றுக்கொண்டஈமான். அதாவது நாவினால் கலிமாவைக் கூறுவது. (இல்முல் எகீன்)**

மறைவான (இல்மை) அறிவைச் சேர்ந்தவைதான் ஆகிறா, நரக, சுவர்க்கம் மற்றும் சொல்லில் விளக்க முடியாத நுபுவ்வத், விலாயத்தைச் சேர்ந்த அறிவுகளெல்லாம். இந்த வகையிலுள்ளவைதான் ஐனுல் எகீன், ஹக்குல் எகீன் என்ற ஈமானுடைய வகுப்புக்கள். நாம் மிகச் சுருக்கமாய்க் கூறிய இவ்வறிவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் மனிதனுடைய உள்ளத்திலும் (நல்லவனாயினும், கெட்டவனாயினும் சரி) நிச்சயமாக இருக்கவே செய்கின்றன. ஆனால், திரைகளால், துருக்களால் (கறைகளால்) மூடப்பட்டுப் புதையுண்டு போய்க்கிடக்கின்றன. மனித உள்ளம் திரைகளைவிட்டும் தெளிவுபெற்றால் சிற்சில அறிவுகளையோ பெரும்பான்மையான அறிவுகளையோ அவரவர் நோக்கம், கிரிகைகள், தகைமைகளுக்கேற்றபடி நிச்சயமாகப் பெறமுடியும். இது புஸத்தக விளக்கமோ, வாய்ப்பேச்சோ அல்ல. உண்மையான அனுபவமாகும். ஆனால் வெளிப்புலன்களால் உண்டாகிற அரைகுறை அறிவுகளும், தான் ஓர் அறிவாளியென்ற திமிரும் உள்ளத்தில் இருக்கும் வரையிலும் இந்த உள்மனத்தில் இருந்த மறைவான அறிவுகள் வெளியாவதே இல்லை.

இந்த வெளிப்புலன்களால், புஸ்த்தகம், கிதாபுகளின் அரைகுறைஅறிவுகளால் தடைப்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் பெரும்பாலும் நூலறிவே இல்லாத எழுதவாசிக்கத் தெரியாத உம்மிகளாக நபிமார்களை இறைவன் அனுப்பினான். இன்று உலகிலுள்ள வெளியறிவுகளான கணிதம், விஞ்ஞானம், வைத்தியம், சங்கீதம்போன்ற அறிவுகளை, கலைகளை எல்லாம் ஆரம்பத்தில் கண்டறிந்தவர்கள் பட்டதாரிகளோ, நூலறிவுடையவர்களோ அல்ல. நூலறிவும் பட்டம், பதவியும் இல்லாத மனத்தெளிவுபெற்ற சாதரண மக்களேயாகும். **ஆலிம், அறிஞன், ஞானி என்றால் நூலறிவுடைய பட்டம் பெற்றவர்கள்தான் என்பது பொருளல்ல. மனத்தெளிவுபெற்ற அறிவுடையவர்கள் என்பதே பொருளாகும்.**

இவ்விதமான மக்கள் தங்கள் உள்ளத்தெளிவின் மூலம் இறை உதவியால் கண்டறிந்த உண்மைகளைத் தொகுத்துக் கலைகளாக்கி தந்திருக்கிறார்கள். நாம் அவனுக்கு நம்மிடத்தில் நின்றும் அறிவை அறிவித்தோம் என்று இவ்வின மக்களை நோக்கியே இறைவன் கூறுகிறான். இந்த மனத்தெளிவு பெற்ற மேதைகள் ஏற்படுத்திய சிற்சில நுட்பமான விபரங்களை மேலும், மேலும் நூலறிவுடையோர் ஆராய்ந்து தெளிவுபெற்று ஒரு சில கலைகளில் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். விஞ்ஞானம், வைத்தியம் போன்றவை இவ்வுண்மைக்கு ஆதாரமாகும். **ஆனால், நூலறிவுடைய ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் இக்கலைகளைப் பணவருவாய்க்காகப் பயன்படுத்திப் பல பிரிவுகளாக ஒன்றுக்கொன்று விரோதம்போன்ற தன்மையில் ஆக்கிவிட்டிருக்கிறார்கள். இதற்கு மற்போர், சங்கீதம் போன்ற கலைகள் ஆதாரமாகும்.** ஆனால் நபிமார்கள் மூலம் இறையுதவியால் அருளப்பட்ட உள்ளறிவுகளும் வெளியறிவிற் சிலவும் மனத்தெளிவில்லாத நூலறிவாளர்களால், ஆராயப்படாமலே கண்மூடித்தனமாய்ப் பின்பற்றிப் புரட்டப்பட்டும் இருக்கின்றன. இதற்கு ஆதாரம் இன்றுள்ள தௌஹீதின் விளக்கம், இஸ்லாத்தின் மூலக்கொள்கை விளக்கம், மற்றும் சமூகங்களிடையேயுள்ள, றசூலுடைய காலத்தில் இல்லாத, அவர்களால் அனுமதிக்கபடாத, குர்ஆனால் விலக்கப்பட்ட சில செயல்களுமாகும். எம் சமூகமக்கள் கையாளும் கைக்கூலிபோன்றவையும் ஆண், பெண்களுக்குச் சொத்துப் பங்கிடும் முறையுமே இதனைத் தெளிவுபடுத்தப் போதுமானதாகும். இதை ஆராய்ச்சியாளர்கள் தெளிவாய் அறிவார்கள். எனினும், பாமரமக்கள் அறியவேமாட்டார்கள்.

## 03 **(8)**

**இப்போது** றசூல் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை விபரங்களில் ஒரு சிலவற்றை இவ்விடத்தில் சிந்தனை செய்துபார். றசூல்(ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று கூறுகிறோம். உலகமக்கள் அனைவருக்கும் வழிகாட்டவந்தவர்கள் என்று ஒப்புக்கொண்டிருக்கிறோம். உலகமக்கள் றசூலுடைய காலத்தில் இருந்தவர்கள் அதன்பின் வந்தோர், வருவோர், இறுதி நாள்வரை வரவேண்டியவர்கள் அனைவரையும் எண்ணிக் கணக்கிட எம்மால் முடியவே முடியாது. இந்த மனிதர்கள் குணசுபாவத்திலோ, அறிவிலோ, உருவத்திலோ வேறு எந்த வகையிலோ ஒருவரைப்போல் இன்னொருவர் இருந்ததுமில்லை, இனிமேல் அப்படி இருக்கப்போவதுமில்லை. இறுதி நாள்வரையிலும் வாழவேண்டிய அத்தனை மனிதருக்கும் வேண்டிய அத்தனை விஷயங்களையும் பொதுப்படையாகவோ, குறிப்பாகவோ, உதாரணமாகவோ அந்த றசூல்(ஸல்) அவர்கள் விளங்கிச் செய்துகாட்டித்தான் சென்றிருக்க வேண்டும். குர்ஆனும் அதே வகையில் தான் அமைந்திருக்க வேண்டும். இல்லையானால் குர்ஆனை இறுதிவேதமென்றும் றசூலை காத்தமுன் நபியென்றும் நாம் கூறமுடியாது. இதை அறிவோடு நோக்கும்போது ஆம், குர்ஆனும் அந்த இறுதி நபியும் இறுதி நாள்வரையிலும் வாழவேண்டிய அத்தனை விஷயங்களையும் பொதுப்படையாகவும், குறிப்பாகவும், உதாரணமூலமாகவும் விளக்கித்தான் வைத்திருக்கிறார்கள். குர்ஆன் பரிபூரணமாக மனிதருக்கு வேண்டிய அத்தனையையும் அணுவும் விடாமல் விளக்கித்தந்து கொண்டுதான் இருக்கிறது.

ஆகவே, காத்தமுன் நபியாகிய றசூல்(ஸல்) அவர்களைக் கணித சாஸ்திரத்தில் கையாளப்படும் வாய்ப்பாட்டுக்கு ஒப்பிட்டுக் கூற நான் விரும்புகிறேன். வாய்ப்பாட்டை எடுத்துக்கொண்டால் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல்போன்ற எந்தக் கணிதத்துடையவும் விடையைக் கூறமுடியும். கணிதம்

எவ்வளவு சிக்கலுள்ளதாயினும் அடிப்படை வாய்ப்பாட்டைக் கடப்பதே இல்லை. குர்ஆனும் இதேபோல் உள்ளதுதான். மனித அறிவில், வாழ்வில் ஏற்படக்கூடிய எத்துறையிலுள்ள விஷயமேயானாலும் எவ்விதக் கஸ்ட்டமான சிக்கலான விஷயமேயானாலும் றசூலுடைய சொல், செயல், கருத்துக்களையும் குர்ஆனையும் கொண்டு எம்மால் விடை காணமுடியும் ஆனால், விடைகாண முற்படும் **நாம் கட்டுப்பாடற்ற சுயசிந்தனையும் தெளிவான பகுத்தறிவும் உடையவர்களாக இருக்க வேண்டும்.** ஆனால் இவ்வுண்மையைப் பேச்சளவில் ஒத்துக் கொண்டிருந்தும் உள்ளத்தால் உணர்ந்து கொள்ளமுடியாத எம் முன்னோரில் சிலர், குர்ஆன், ஹதீஸ்கள் எல்லோருக்கும் பொதுப்படையாய் இருப்பதால் எல்லாம் எல்லோருக்குமே என்று நம்பி வியாக்கியானம் செய்தார்கள். மனிதகுலத்தை அவாம், கவாஸ், கவாஸுல் கவாஸ் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் தனித்தனியாகவும் எல்லோருக்கும் பொதுப்படையாகவும் பற்பல தினுசான வேதவசனங்கள் குர்ஆனில் இடம்பெறுவதும் ஹதீஸ்களும் இதே வகையிலுள்ளவையே என்பதும் பெரும்பாலரின் அறிவில் பிடிபடவேயில்லை. ஒன்றுக்கொன்று முரண்போல் தென்படுகிற ஆயத்துக்களில் இவர்களுடைய அறிவுக்கு முரணாய்த் தென்படும் ஆயத்துக்களை மாற்றப்பட்டவை என்கிறார்கள். குர்ஆனில் ஓர் அட்சரத்தைக்கூட மாற்றப்பட்டதென்று கூற முடியாது. ஒரு வசனம் ஒரு வகுப்பாருக்கும் மாற்றப்பட்டதாகத் தென்பட்டாலும் இன்னோர் வகுப்பாருக்கு அது அவசியமானதாகவே இருக்கும். எனவே குர்ஆனில் மாற்றபட்ட வசனங்கள் உண்டென்பது அறிவுத் தெளிவின்மையால் ஏற்பட்ட கற்பனை யூகமாகும். இதேபோல் தங்களறிவுக்கு முரணாகத் தென்படுகிற ஒரு சில ஹதீஸ்களை “லயீப்” என்கிறார்கள். றாவிகளில் ஒருவரைப் பொய்யரென்று கூறி அவரால் அறிவிக்கப்பட்ட ஹதீஸை மறுக்கிறார்கள். இன்னும் சிலர் பாமரமக்களுக்காக அறிவுறுத்த முற்பட்டவர்கள் அறிஞர்களுக்குக் கூறப்பட்ட, குறிப்பிடப்பட்ட விஷயங்களை மறைத்தும் மறுத்தும் வியாக்கியானம் செய்தார்கள். பாமரமக்களுக்கு உயர்பதவிக்குரிய விளக்கங்களை விளக்கினால் சமூகம் கட்டுக்குலைந்து விடுமென்று நம்பி, மக்களை எந்தெந்த உபாயங்களைக் கொண்டு கட்டுபாட்டில் நிறுத்தமுடியுமோ அந்த அந்த உபாயங்களையெல்லாம் கையாண்டார்கள்.

உதாரணமாக றசூலுல்லாவும் ஸஹபாக்களும் மரணிக்கும் வரையும் தொழுதே வந்திருப்பதாலும் தொழுகை மூமின்களுக்கு விதிக்கப்பட்ட கடமையென்று குர்ஆன் கூறுவதாலும் இறக்கும் வரையும் நாமும் தொழுதே ஆகவேண்டும் என்றும் அப்படித் தொழாதவன் காபீராகிவிட்டான் அல்லது காபீராகியே விடுவான் என்றும் வியாக்கியானம் செய்தார்கள். இந்த வியாக்கியானங்களை உறுதிப்படுத்த இதன் சார்பான ஹதீஸ்கள் வேதவசனங்களை மட்டும் கையாண்டார்கள். இதற்கடுத்த ஒருபடியும் அறிவும் வேதவசனங்களும் ஹதீஸ்களும் உண்டென்பதைக்கூடப் பெரும்பாலும் மக்கள் உணர்ந்து கொள்ளாதபடி மிகக்கடினமாய் மறைத்தே வியாக்கியானித்தார்கள். இவர்களுடைய விளக்கங்களுக்கமைவாகவே சிலவேத வசனங்களை (பலகருத்துடைய முதஸாபிஹாத்தையும் ஒரே கருத்துடைய முஹ்கமாத்தையும் கூட)ப் புரட்டி வியாக்கியானித்தார்கள். இன்று எம்சமூகத்திலும் பெரும்பாலும் **பட்டடமளிக்கப்படும் மதுரஸாக்களிலும் கூட வழக்கத்தில் இருக்கும் கிதாபுக்களில் பெரும்பாலானவை இவ்வினத்தைச் சேர்ந்தவைதான்.** இவ்விஷயத்தைப் பொறுமையோடு அமைதியாய் நாம் விளங்கியறிய வேண்டும். இப்போது நாம் தொகுப்பாய்க் கூறும் விபரங்களை மட்டும் பொதுப்படையாய்க் கிரகித்துக் கொள்ளவும்.

சுருக்கமாகக்கூறினால் அவரவர் வஹ்முக்கேற்றபடி எழுதப்பட்ட கிதாபுகளைப் பாடமிட்டுப் பட்டம் பெற்றுக்கொண்ட பெரும்பாலாருக்கு உசூல் பலாகத், பயான், மன்தீக், பிக்ஹு, மஆனி தப்ஸீர், நஹ்பு போன்ற அறிவுகளில் தேர்ச்சியும் ஆராய்வும் குறைவாய் இருப்பதால் தாங்கள் கற்றுக்கொண்டவற்றைப் பெரும்பாலும் ஆராயாமலே பாமரமக்களுக்கு விளக்கம் கொடுத்தார்கள், விளக்கம் கொடுக்கிறார்கள். இந்த வியாக்கியானங்களை மக்கள் நழுவவிடாமல் பிடித்துக்கொண்டால் வழிதவறிவிடமாட்டார்கள் என்று நம்பி மிகக்கடினமான கட்டுப்பாடுகளையும் விதித்தார்கள். ஆனால் இந்தக் கட்டுபாடுகள் அச்சுறுத்தல்கள் மனிதனை எந்த நிலைமைக்கு இட்டுச்செல்லும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேயில்லை. இவ்விதமான வியாக்கியானங்களை விளக்கங்களைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றிய பாமரமக்கள் நாம் உண்மையான பாதையில் சென்று கொண்டிருப்பதால் எதையும் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லையென்று நம்புகிறார்கள். உண்மையையும் உண்மையான விளக்கங்களையும் உதாசீனம் செய்கிறார்கள். இந்த மக்கள் தொழுகையை எடுத்துக்கொண்டால் நாம் மூமினாகிவிட்டோமென்று நம்பும் அளவுக்கு இட்டுச்செல்லப்பட்டார்கள். அதாவது அந்தச் சீர்திருத்தவாதிகள் வியாக்கியான கர்த்தாக்கள் பெரும்பாலும் **தொழுகையை ஓர் கேடயமாகப் பாவித்தே மக்களை இந்த நிலைக்குள்ளாக்கியிருக்கிறார்கள்.**

சுருக்கமாகக் கூறினால் ஓர் விஷயத்தை விளங்கிக்கொள்வதற்காக நியாயமான ஓர் கேள்வியைக் கேட்பதும் பெரும் பாவங்களில் ஒன்று என்று நம்பும் அளவுக்கு மனிதர்கள் இட்டுச்செல்லப்பட்டார்கள். கேள்விகேட்டு ஆராய்ச்சி செய்து உண்மையைக் கண்டறியும் உரிமை எமக்கில்லையென்றால் இறைவனால் எமக்களிக்கப்பட்ட பகுத்தறிவின் பயன்தான் என்ன? **ஆராயவேண்டாம் சந்தேகிக்க வேண்டாம், என்று கூறுபவன் ஒவ்வொருவனும் உன் பகுத்தறிவைப் பறிக்கும் திருடனே என்று இங்கர்ஸால் கூறுவது உண்மையே.** ஓதுதல், கற்றல், படித்தல், என்றால் அறியாததை அறிதல் என்பதுதானே பொருள். அறியாததை அறிந்தவர்களிடம் கேட்டுத்தானே அறியவேண்டும்.

**ஹதீஸ்:** ***அறிவைக் கற்பிக்கிறவன் அதைக்கேட்பவன் அதற்குக் காதுகொடுப்பவன் அதை நேசிப்பவன் ஆகிய நான்குபிரிவார் மாத்திரம் கூலியைப்பெறுவதாலும் அறிவுடையபெட்டகத்துக்கு திறவுகோல் கேள்வியாய் இருப்பதாலும் அறிவைக் கேட்டுக்கற்றுக் கொள்வார்களாக. என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.***

ஆனால் எம் சமூகங்களில் மிக அநேகர் எம்முன்னோரின் மிகக் கடினமான கட்டுப்பாடுகளில் சிக்குண்டதனால் சிந்திக்கும் உரிமையையும் தன்மையையும் இழந்துவிட்டார்கள் என்றே கூறலாம். **தாடி,தலைப்பாகை, தொழுகை போன்றவற்றை எடுத்துக்கொண்டால் நான் உண்மையின் பாதையில் செல்கிறேன் என்றே பெரும்பான்மையோர் நம்பிவிட்டோம்.** இந்தக் கண்மூடித்தனமான, அறிவுக்கு விளங்காத பல செயல்கள் மனிதனை மறதியாளனாக மாற்றி விட்டிருக்கின்றன. நான் கூறும் செய்தியை, அல்லது எழுதும் செய்தியை எவன் மறுக்கிறானோ அவன் வழிகெட்டவன் என்றும், நான் கூறுவதே ஸுன்னத்வல் ஜமாஅத்தாரின் கொள்கையென்றும், இந்தக் கூட்டம் மட்டும்தான் சுவர்க்கம் போவதென்றும் ஒரு கிதாபு கூறும்போது அல்லது ஒருவர் உபதேசிக்கும்போது பாமரமக்கள் அவர்களுடைய அறிவுக்குப் பொருந்தாத விளங்காத விஷயமேயானாலும்கூட அதை ஒப்புக் கொள்ளத்தானே செய்வார்கள்.

**ஹதீஸ்:** *அண்மையில் என் சமூகத்தவரிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்படும். அப்போது ஒரு பிரிவார் ஏற்படுவார்கள். அவர்கள் நன்மொழி கூறுவார்கள். தீயசெயல் புரிவார்கள். குர்ஆனை ஓதுவார்கள். அது அவர்களுடைய மார்பின் ஆரம்ப எலும்பையும் கடக்காது. வேட்டைப் பொருளிலிருந்து அம்பு வெளிப்படுவதைப் போல மார்க்கத்தை விட்டும் அவர்கள் அப்புறப்படுவர். பின்னர் திரும்பவும் மாட்டார்கள். அம்பு அதன் கூட்டை அடையும்வரை. அவர்கள்தான் படைப்புகளில் மிகக்கெட்டவர்களாவார்கள். அவர்களைக் கொல்பவர்க்கும் அவர்களால் கொல்லப்படுபவர்களுக்கும் நல்வாழ்வு உண்டாகட்டும். குர்ஆனின் பக்கம் அவர்கள் அழைப்பார்கள். ஆனால் அதில் அவர்களுக்கு எவ்விதமான சம்பந்தமும் இருக்காது.அவர்களை எவர் கொல்கிறாரோ அவர் அல்லாஹ்வை நெருங்கியவர்களில் மேலானவராவார். என்று நபி(ஸல்) அவர்கள் கூறினர்.நாயகமே! அவர்களுடைய அடையாளம் என்ன? என்று தோழர்கள் வினவினார்கள். அடையாளம் மொட்டையடிப்பது என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர்: அனஸ் (றலி)**
**ஆதாரம்: அபூதாவூத்**

இது போல் இன்னும் பல ஹதீஸ்கள் தென்படுகின்றன. இவர்கள்தான் எம்முன்னோர்களா? என்பதை நாம் யோசிக்கவேண்டும்.

உலகநாடுகளின் அரசியற்கொள்கைகள் நாட்டுக்குநாடு காலத்துக்குக் காலம் வேறுபட்டுவந்தது போல இஸ்லாத்தின் மூலக்கொள்கையும் அதன் பண்பாடுகளும் காலாகாலம் மாறுபட்டுக்கொண்டே வந்திருக்கின்றன. இதன் காரணம் வியாக்கியானகர்த்தாக்களின் ஒருசில விளக்கங்கள் உண்மைக்கு மாறாய் அமைந்திருப்பதுதான்

**ஹதீஸ்:அறிவுகளில் சில அறிவீனங்களும் உண்டு**

ஆனால் அறிவு அறிவீனமாகாதென்பது உண்மையேயாயினும் **மக்கள் வழிதவறிவிடுவார்கள் என்று கணித்துக் கூறப்படுகிற சில அறிவுகள் அறிவீனத்தின் கெடுதியை உண்டாக்கும் என்பது இந்த ஹதிஸினால் விளக்குகிறது என்று கஸ்ஸாலி(றஹ்) கூறுகிறார்கள்.**

பொதுவான விபரம் என்னவென்றால் பிரபலம் வாய்ந்த, மக்களிடையே மிகக் கண்ணியமான மதிப்பைப்பெற்ற, பெரும்பெரும் **உலமாக்கள், சலபுகள், முஹத்திசுகள், முபஸ்ஸருகள், முஜ்தஹிதுக்கள், முகல்லிதுகள், முதபக்கிஹுகள்** ஆகிய இவர்களில் சித்தசுத்தியும் ஆராய்வும் தெளிவான விளக்கமுடைய ஒரு சில மகான்களைத்தவிர பெரும் பான்மையோர் **கலிமாவையும் அதன் விபரமான தௌஹீதையும் ஒருவரையொருவர் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றி உண்மைக்குமாறாய் புரட்டி விட்டிருக்கிறார்கள் என்பதே.** இவ்வுண்மையை. “கலிமத்துல்ஹக்கி” என்ற கிதாபின் ஆசிரியர் மௌலானா அப்துர்றஹ்மான் ஷெய்யத்ஷா குத்புஸ்ஸமான் அவர்கள் மிகத்தெளிவாய் விளக்கியிருக்கிறார்கள். அவர்களுடைய விளக்கம் நூறுவீதமும் ஹக்கான உண்மையே என்பதை **நானும் என் அனுபவத்தினாலும் ஆராய்வினாலும் கண்டறிந்தேன்.**

இன்றைய உலகில் இஸ்லாத்தின் விபரங்களடங்கிய பல்லாயிரக்கணக்கான கிதாபுகள் தப்ஸீர்கள் தென்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான உலமாக்கள் இஸ்லாத்தின்பக்கம் அழைப்புவிடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இந்தப்பல்லாயிரம் கிதாபுகளில் ஒன்றேனும் பல்லாயிரம் உலமாக்களில் ஒருவரேனும் இஸ்லாத்தின் அடிப்படை உண்மையை, கலிமாவின் விபரமான சுத்தத் தௌஹீதை விளக்கி விபரம் தருவதாய்க் காணவே இல்லை. ஆனால் காலாகாலம் தோன்றிய ஒன்றிரண்டு குத்புமார்கள் மட்டும் ஏதோ அவ்வக்காலங்களுக்கேற்றபடி ஒருசில விபரங்களைமட்டும் விளக்கிச்சென்றிருக்கிறார்கள். இதை நான் மட்டும் கூறவில்லை. உள்ளத்தெளிவுள்ள நல்ல உலமாக்களில் ஒரு சிலரும் தங்களுடைய கிதாபுகள் மூலம் கூறிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே உண்மையைக் கண்டறியவேண்டிய ஒருசிலர் புதைபொருள் ஆராய்வில் இறங்கவேண்டியதாகவே இருக்கிறது.

**ஹதீஸ்:** *காலங்களில் நல்லகாலம் என்காலமும் பிறகு என்காலத்தை அடுத்தவர்களின் காலமும் பிறகு அவர்களை அடுத்தவர்களின் காலமும் ஆகும். அதன்பின் பொய் பரவிவிடும் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர்: உமர்(றலி)**
**ஆதாரம்: திர்மிதீ**

இந்த ஹதீஸைப்போன்ற பல ஹதீஸ்கள் தென்படுகின்றன.

**ஹதீஸ்:** *என் சமூகத்தவரின் கிலாபத் முப்பது ஆண்டுகள் இருக்கும் அதன்பின் அரசுரிமையாகிவிடும்.*

**அறிவிப்பவர்: ஸபீனா (றலி)**
**ஆதாரம்: அபூதாவூத், திர்மிதீ**

**ஹதீஸ்:** *இந்த மார்க்கம் 12 கலீபாக்கள் காலம்வரையில் மிகைத்தும் ஆற்றல் வாய்ந்ததாகவும் இருக்கும். அவர்கள் அனைவருக்கும் குறைஷிகளாகவே இருப்பார்கள். என்று றசூல்(ஸல்) அவர்கள் கூற அதன்பின் என்ன நடக்கும் என்று கேட்டதற்கு விஷமமும், குழப்பமும் (மார்க்கத்தில்) ஏற்பட்டுவிடும் என்று கூறினார்கள்.*

**அறிவிப்பவர்: ஜாபீர் இப்னுஸமூரா(றலி)**
**ஆதாரம்: புஹாரீ, முஸ்லிம், அபுதாவூத், திர்மிதீ**

இவைபோன்ற மற்றும் ஹதீஸ்களை உரிய இடங்களில் நோக்குவோம்.

**ஹதீஸ்:** *நபி(ஸல்) அவர்களுடைய காலத்தில் இருந்த (அமல்களில்) செயல்களில் நான் இப்போது ஒன்றையேனும் காணவில்லையே என்று அனஸ்(றலி) அவர்கள் கூறினார்கள். தொழுகை இருக்கிறதல்லவா? என்று அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு அதிலும் நீங்கள் எவ்வளவோ மாற்றங்களைச் செய்துவிடவில்லையா?என்று தாங்கள் மறுகேள்வி விடுத்ததாகக் கூறினார்கள்.*

**அறிவிப்பவர்: அனஸ் (றலி)**
**ஆதாரம்: திர்மிதீ**

இவைபோன்ற ஹதீஸ்களும் தென்படுகின்றன.

**ஆகவே இஸ்லாத்தின் மூலக்கொள்கைமட்டுமல்ல, தொழுகை முதலாம் அமல்களிலும் காலாகாலம் அவரவர் அறிவுக்கேற்றபடி மாற்றிப்புரட்டியே வந்திருக்கிறார்கள் என்பதும்பாமரமக்கள் அறியாமலே பின்பற்றிவந்திருக்கிறார்கள் என்பதும் தென்படுகிறது.**

மேற்காட்டிய ஹதீஸ்களினால் சுட்டிக்காட்டப்பட்ட அதே காலத்தில்தான் **இஸ்லாத்தின் மூலக்கொள்கை புரட்டப்பட்டிருக்கிறது. கலிமாவுக்கு வலிந்துரை கொள்ளப்பட்டிருக்கிறது,**கலிமா இலகுவாய் பொருள்தரக் கூடிய சுருதிகளில் உள்ளதாய் இருந்தும் பொருள் பொருந்தாமல் இடர்படுகிற தெளிவற்ற சுருதிகளில் ஒன்றாய் மாற்றப்பட்டிருக்கிறது. **அதாவது கலிமா முஹ்கமாத்தைச் சேர்ந்ததாய் இருக்க அதை முதஸாபிஹாத்தைச் சேர்ந்ததாய் மாற்றியிருக்கிறார்கள். (சமீபத்தில் விளங்கியறிவோம்) இந்தமாற்றலும் புரட்டலும் பெருகிவந்து இன்றைய உலகில் உண்மையான தௌஹீது ஸிர்காயும் உண்மையான ஷிர்க் தௌஹீதாயும் ஏறக்குறைய எல்லா முஸ்லீம்களுடையவும் அறிவில் தென்படுகிறது.** இவ்விபரத்தை மிகக்கடினமான முயற்சி செய்து இறைவனின் வழிகாட்டலோடுதான் கண்டறியக்கிடைத்தது. இன்ஷா அல்லாஹ் இதன் முழுவிபரங்களையும் பொருத்தமான ஆதாரங்களோடு விளங்கியறிவோம். பொறுமையடைய வேண்டும்.

04 **(9)**

இறுதி நாள் வரையிலும் வாழவேண்டிய அத்தனை மனிதர்களுக்கும் வழிகாட்டவேண்டியவை குர்ஆனும் ஹதீதுகளுமே என்பதை நாம் அறிவோம். மூடத்தனத்தில் ஊறிய ஓர் கூட்டத்தை எமது ஆதிக்கதின்கீழ், அல்லது அறிவின்கீழ் கொண்டுவரவேண்டும் என்பதற்காக, அல்லது அம்மக்களிடையே செல்வாக்கைப் பொருளைப் பெறுவதற்காக ஒருவரையொருவர் கண்முடித்தனமாய்ப் பின்பற்றி எழுதப்பட்ட கிதாபுகள் புஸ்தகங்கள் எமக்கு உண்மையின் பாதையயைக் காட்வே முடியாதவையாகும். றசூல்(ஸல்) அவர்களுடைய ஸஹாபாக்களில் ஒரு சிலரைத்தவிர மிக அநேகர் அறிவு குறைந்நவர்கள், ஆயினும் மிகச்சிறந்த பக்தி விசுவாசம் உடையவர்கள். அவர்கள் அவரவர் அறிந்து, றசூலுடைய சகல விபரங்களையும் எள்ளளவும் மாறுபாடில்லாமல் மனப்பாடமிட்டும் எழுதியும் சேகரித்தும் எமக்குத் தந்திருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் கூறுவது இன்னொருவர் கூறுவதற்கு முற்றும் முரண்போல் தென்பட்டாலும் விஷயம் உண்மைதான். உதாரணமாக இமாம் ஜமாஅத்தோடு தொழுவது தனிமையில் தொழுவதைவிட 26மடங்கு மேலானது என்று றசூல்(ஸல்) அவர்கள்அறிவித்ததாக ஒருவர் கூறுகிறார்.

ஆனால் இன்னொருவர் தனித்த இடங்களில் அல்லாஹ்வுக்கு ஸுஜூது செய்வதைவிட மனிதனுக்குச் சிறந்த ஓர் வணக்கம் இல்லையென்று றசூல்(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டேன் என்று கூறுகிறார்.

இதே போல் ஒவ்வோர் விஷயங்களிலும் ஒன்றுக்கொன்று முரண்போல் தென்படுகிற அநேக ஹதீஸ்கள் தென்படுகின்றன. நாம் முன்பு கூறிவந்த வியாக்கியானகர்த்தாக்களுக்கு இந்த ஹதீஸ்களும் அவற்றின் உஸூல்களும் தெரிந்தவைதான். ஆயினும் அவர்களுடைய அறிவு உண்மையான தௌஹீதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தமையாலும், பாமரமக்களைத் தங்களுடைய அறிவின் கீழ் கொண்டு வரவேண்டியிருந்தமையாலும் அவரவர் இஷ்டம்போல உட்படையான விஷயங்களைப், பாமரமக்களுக்கு எட்டாத வகையில் மிகக் கவனத்தோடு மூடிமறைத்து வெளிப்படையான விஷயங்களை மட்டுமே கண்டிப்பான கட்டுப்பாடுகளோடு வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். இன்று ஏறக்குறையப் பெரும்பாலான அறபுக் கலாசாலைகளில் ஓதிமுடித்துப் பட்டம் பெறுபவர்கள் எல்லாம் இவ்விதமான வியாக்கியானங்கள் உள்ள கிதாபுகளையே கற்றிருப்பதால் இதே அடிப்படையில்தான் சாதாரண மக்களுக்கு வியாக்கியானம் செய்கிறார்கள். இந்த வியாக்கியானங்களில் ஊறியுள்ளமக்களுக்குத் தாங்கள் அறிந்துள்ள விஷயங்களுக்கு அப்பாற்பட்ட உள்ளரங்கம் ஒன்று உண்டு என்பதுகூடத் தெரியாது. ஏனென்றால் அவர்கள் எல்லோரும் எவரெவருடைய அறிவுக்கேற்றபடி எதையெதை எப்போது றசூலுல்லலாஹ் கூறினார்கள் என்பதும் எதற்காக அப்படி ஒன்றுக்கொன்று முரண்போல கூறினர்கள் என்பதும் தெரியாத காரணத்தினால் தாங்களறிந்தவற்றிற்கு முரணாய் ஒருவர் கூறும்போது அதை எதிர்க்கவும் பொய்யென்று கூறவும் வழிகேடு என்று தீர்ப்புக்கட்டவும் உண்மையை மறுக்கவும் செய்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் எல்லோருமே உசூல் படித்தவர்களல்ல. ஆகவே மக்களுடைய அறிவு, தகைமை, அவசியம், இடம், காலம் என்பவற்றை ஆதாரமாகக்கொண்டு றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட யாவும் உண்மையே என்பது அவர்களுக்குத் தென்படுவதில்லை. காரணம் என்னவென்றால் இவ்வகையினர் பெரும்பாலாகச் சிந்திப்பதேயில்லை.

இதேபோல குர்ஆனும் அன்றிருந்த அதே நிலைமையில்தான் இன்றும் இருக்கிறது. **ஆனால் அந்தக் குர்ஆனுடைய வசனங்களின் மொழிபெயர்ப்புக்களும் வியாக்கியானங்களும் மாற்றிப்புரட்டப்பட்டிருக்கின்றன. கலிமாவின் விபரமான உண்மைத் தௌஹீதை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாலும் குர்ஆனுடைய வசனங்கள் ஒன்றுக்கொன்று முரண்போல் தென்பட்டதாலும் பாமரமக்கள் உண்மையை அறிந்தால் வழிதவறிவிடக் கூடுமே என்று பயந்ததனாலும்தான் இந்தப் புரட்டல் ஏற்பட்டிருக்கிறது.** இதைப்பின்னால் தெளிவாய் ஆதாரங்களோடு விளங்கியறிவோம். இந்தப் புரட்டல் மனிதவர்க்கத்துக்கு மிகப் பெரிய ஓர் தீயவிளைவையே ஏற்படுத்திவிட்டிருக்கிறது, அதாவது நாவினால் கலிமாவைக் கூறி இஸ்லாத்தில் நுழைந்துகொண்ட மனிதன் எவ்வளவு அமல்களைச் செய்துகொண்டிருந்த போதிலும் ஆரம்பத்தில் எந்தவகுப்பில் எந்தப் படித்தரத்தில் இருந்தானோ அதே நிலைமையிலேயே இறக்கும் வரையிலும் இருக்க வேண்டியவனாய், தன்நிலைமையில் **ஆத்மீகத் துறையில் உயர்பதவிக்கு அணுவளவேனும் செல்லமுடியாதவனாய் மாற்றி விட்டிருக்கிறது.** இதை இன்னோர் வகையாய்க் கூறினால், கலிமாவின் விளக்கமான தௌஹீதினால் திறக்கப்பட்டிருந்த சுவர்க்கபதியின் ஓர்வாயில் அல்லது கதவு மக்களால் கண்டறிய முடியாதபடி மறைக்கபட்டுவிட்டது என்றே கூறலாம்.

இவ்விடத்தில் தற்காலம் நம்மிடையே பாவிப்பிலிருக்கிற தப்ஸீர் (குர்ஆனின் மொழி பெயர்ப்பு) களைப் பற்றி ஓரளவு விபரம் தரவேண்டியவனாய் இருக்கிறேன். றசூல்(ஸல்) அவர்கள் இருதய சுத்தியும் தெளிவான அறிவுமுள்ள ஒரு சந்ததியனரை உருவாக்கவே விரும்பினார்கள். ஆகவே தவறான, பிழையான கருத்துக்களின் ஆதிக்கத்திலிருந்தும் தூய்மை பெற்றதான திருக்குர்ஆனைத் தந்த இறைவனால் அதே குர்ஆனில் வகுத்துத் தந்த **மூலக்கொள்கை, திட்டங்களுக்கமைவாகவே தங்கள் ஸஹபாக்களைப் பயிற்சி அளித்திருக்கிறார்கள்.** இந்த ஸஹபாக்கள் அவர்களைப் பின்பற்றிய அடுத்த சந்ததியினரும் (தாபியீன்கள், தபுஅத்தாபியீன்களும்) **குர்ஆனின் உண்மையான விளக்கத்திலிருந்தே, அதன் மூலக்கொள்கையில் இருந்தே கருத்துக்களைப் பெற்றிருக்கிறார்கள்.** அதனால் வரலாற்றில் ஒரு தனித்துவத்தையே அவர்கள் பெற்றிருந்தார்கள். ஆனால் அதன் பின் வந்தவர்களின் காலங்களில் குர்ஆனின்உண்மையான கருத்துக்கள் விளக்கங்களோடு, கிரேக்க தத்துவங்கள், கிரேக்க தர்க்கவியல், பண்டைக்காலப் பாரசீகப் புராணங்களும் அவற்றின் கருத்துக்களும், யூத ஆகமங்களும் அவற்றின் சார்பாக ஆதாரமற்ற கதைகளும், கிறிஸ்தவ மெய்யியலும் இந்து சமய சார்பான (இருக், யஜுர், ஸாமு, அதர்வணம் போன்ற பிரிவுகளின்) கருத்துக்களும் குர்ஆனின் மொழிபெயப்பு வியாக்கியானங்களில் கலக்கப்பட்டுவிட்டன. அதாவது தப்புத் தவறான அநேக கருத்துக்கள் குர்ஆனின் விரிவுரைகளுடனும் (தப்ஸீருகளுடனும்) இல்முல்கலாம் எனும் மெய்யியலுடனம் கலந்துவிட்டன. நாம் கூறிய இதே உண்மையை "பீலிழாலில் குர்ஆன்" எனும் தப்ஸீர் நூலின் ஆசிரியரான இமாம் ஷெய்யத் குத்ப் அஸ்ஸஹீத் அவர்கள் வெகுதெளிவாக விளக்குகிறார்கள்.

இவ்வுண்மையை காலத்தில் சிறந்தது என்னடைய காலமும் பின் என்னை அடுத்தவர்களின் காலமும் அதன்பின் அவர்களை அடுத்தவர்களின் காலமும் ஆகும். **அதன் பின் பொய் பரவிவிடும்** என்று றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸ் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறது. இவ்வுண்மையைக் குர்ஆனும் விளக்கம் தருகிறது.

இப்படித் தவறான கருத்துக்கள் தப்ஸீர்களில் பயன்படுத்தப்பட்ட காலங்களில் மென்மேலும் ஆதரமற்ற வெறும் கட்டுக்கதைகள். யூகங்கள், பொய்களும் கலக்கப்பட்டே வந்திருக்கின்றன. ஆயினும் மார்க்க விளக்கமான உண்மைகளில் கைதேர்ந்த வலிமார்களான மாமேதைகள் பலர் அவ்வக்காலங்களில் தோன்றி மேலேகாட்டிய தப்ஸீர்களையும் அவற்றின் புரட்டல்களையும்

தவறுகளையும் சரியான உண்மையான ஆதாரங்களோடு விளக்கிகாட்டித் **தீனுல் இஸ்லாத்தின் உண்மையை நிலை நாட்டித்தான் சென்றிருக்கிறார்கள்.**

நம் நாட்டில் தற்கால வழக்கிலுள்ள தப்ஸீர் “தர்ஜுமத்துல் குர்ஆன்”,“அன்வாருல் குர்ஆன்” போன்றவையும் “தப்ஸீர் அத்தூருல் மன்தூர்”,“தப்ஸீர் ரூஹுல்மஆனி”,“தப்ஸீருல் குர்த்துபீ”,“காஸின”,“தப்ஸீருல் ஸஆலபி”,“தப்ஸீர் மதாரிக் அத்தப்ஸீர்” எனும் “தப்ஸீர் நஸஹ்பீ”, தப்ஸீர் ஜலாலைன்”,“இப்னு கதீர்”போன்ற **இன்னும் அநேக தப்ஸீர்கள் சிற்சில இடங்களில் இஸ்லாத்தின் உண்மைக்குமாறான ஆதாரமற்ற வெறும் பொய்களையும் புரட்டுகளையும் வஹ்மின் கற்பனையான யூகங்களையும், அனுமானிப்புக்களையும்தான் கையாண்டிருக்கின்றன.** இவற்றிடையே தப்ஸீர் தந்தாவி இப்னு அப்பாஸ் போன்ற ஒரு சில தப்ஸீர்கள் மட்டும் ஏதோ ஓரளவு உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. ஆயினும் முன்கூறிய தப்ஸீர்களிலுள்ள பொய்கள் புரட்டல்களையெல்லாம் அவ்வக்காலம் தோன்றிய குத்புமார்கள் சரியான உண்மையான ஆதாரங்களைக் காட்டித் தெளிவாய் விளக்கித்தான் வைத்திருக்கிறார்களென்றாலும் இவ்விதமாக விளக்கநூல்கள் எம்நாட்டு மக்களில் மிக அநேகருடைய கையில்கிட்டவே இல்லை. உலமாக்களிலும் ஒருசிலருக்குக்கூடக் கிட்டவில்லையென்றே தோன்றுகிறது.

எனினும் எவ்வளவுதான் அறிஞர்கள் முயற்சிசெய்தாலும் அறிவுவிளக்கம் பெறாத ஒரு சிலர் அவற்றை மேலும் மேலும் மூடிமறைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இக்கால நிலைமையும் இதேபோலத்தான். நாம் முன்புகூறிய பொய்யும் புரட்டுமுள்ள தப்ஸீர்களைப்பாடமிட்டுக் கொண்ட பின்பற்றல்வாதிகள் இன்றைக்கும் உண்மைகளை மூடிமறைக்கத்தான் முற்படுகிறார்கள். **இவ் விதமான தப்புத்தவறான கருத்துக்ளையுடைய தப்ஸீர்கள்தான் எம்நாட்டு மத்ரஸாக்களில் தற்காலம் கையாளப்படுகின்றன.** இவை அறபு எழுத்தில் அமைந்திருப்பதாலும் பெரும்பாலும் மேதைகளால் எழுதப்பட்டவையென வருணிக்கப்பட்டிருப்பதாலும் கல்வித்திட்டங்களில், மத்ரஸாக்கலில் இடம் பெற்றிருப்பதாலும் இவற்றைப் பாடமிட்டுக்கொண்டே “டேப்” ஒலிப்பதிவு நாடாவை ஒத்த **ஒரு சில உலமாக்கள் இவற்றை ஆராய்வதே இல்லை** இவ்விதமான புரட்டல் நூல்களிலிருந்தும் விடுபட்டு உண்மையின் பக்கம் அணுவேனும் முகம்நோக்க முடியாதவர்களாகவே அவர்களில் பலர் நூலறிவில் கட்டுண்டிருக்கிறார்கள்.

இவ்விதமான புரட்டல் நூல்களின் விபரங்களில் இருந்து அணுவேனும் அவர்கள் உண்மையின் பாதையில் முகம்நோக்க முடியாதவர்களாகவே கட்டுண்டிருப்பது ஏனென்றால் அவர்களுக்கு வேண்டியது சிருஷ்டிகளான மக்களிடத்தில் கௌரவமும், புகழும், பணமும்தானே!

சிருஷ்டிப்பொருளை நெருங்குபவன் அல்லாஹ்வைவிட்டும் தூரமானவனாகிறான். அல்லாஹ்வை (உண்மையை) நெருங்குபவன் சிருஷ்டிகளைவிட்டும் தூரமாகிறான் என்பது நாமறிந்த உண்மைதானே. ஆகவே ஆராய்வில்லாத புகழை பொருளை விரும்புகிற உலமாக்களையோ அவர்களுடைய உபதேசங்களுக்கு அவர்கள் காட்டுகின்ற ஆதாரங்களையோ பகுத்தறிவோடு பலவாறாக ஆராய்தல் செய்யாமல் **கண்மூடித்தனமாய் ஒப்புக்கொள்ள வேண்டாம் என்று நான் உன்னை எச்சரிக்கிறேன்.**

சொல்லி கொடுத்ததை அல்லது கற்றறிந்ததைப் பாடமிட்டுக் கொண்ட மக்களுக்கு இவ்வுண்மை எப்படித்தெரியும்? ஆராய்ந்து தெளிவுபெற்று அனுபவமடைந்தவர்களுக்குத்தான் தெரியும்.

ஒருவர் எந்த நிறமுள்ள கண்ணாடியை அணிந்துகொண்டு சூரியனைப் பார்க்கிறாரோ அந்தக்கண்ணாடியின் நிறத்துக்கேற்றபடியேதான் சூரியன் தென்படும். சூரியனின் உண்மையை, நிறத்தை நாம் பார்க்கவேண்டுமானால் கண்ணாடியை நாம் நிச்சயமாகக் கழட்டியே ஆகவேண்டும். ஆனால் எம் முன்னோரான சில வியாக்கியான கர்த்தாக்களுக்கும் எம்மில் பலருக்கும் நாம் சூரியனைப் பார்க்கும் போது கண்ணாடி அணிந்திருந்தோம், அணிந்திருக்கிறோம் என்பது தென்படுவதில்லை. நம்மில் சிலர் கண்ணாடியைக் கழட்டினாலும் சூரியன் தென்படுவதில்லை. **ஏன்? சூரியனுடைய கடினமான பிரகாசம் உறுதியற்ற கண் பார்வையைப் பறித்தேவிடுகிறது.** சூரியன் என்று நாம் கூறுவது இறைவேதமான குர்ஆனைத்தான். ஆராய்பவர்களின் நிலைமை அவரவர் வஹ்முக்கும் பகுத்தறிவுக்கும் உளப்பரிசுத்தத்துக்கும் தகுந்தபடி தானே அமையும்.

சூரியன் ஆயிரக்கணக்கான பளிங்குக்கண்ணாடிகளில் தோன்றும்போதும் அவ்வக்கண்ணாடிகளின் நிறத்துக்கேற்றபடித்தானே பிரகாசிக்கும் என்று இராக்கீ(றஹ்) அவர்கள் கூறுகிறார்கள். உன்னுடைய முகம் கண்ணாடியின் தெளிவுக்கேற்ற அழகையே பிரதிபலித்துக் காட்டும், ஆஹ்! எங்கள் இருதயமான கண்ணாடியானது கறையால் மூடப்பட்டிருக்கிறதே! என்று மௌலானா ஜாமீ (றஹ்) அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே உண்மையைக் கண்டறிவதற்குப் போலி அறிஞர்களின் கிதாபுகள் புஸ்தகங்களை நீ ஆரம்பத்தில் எடுத்துக்கொள்ளக் கூடாது. என்று கூறுகிறேன். **நாம் முன்புகூறிய திரைகளைவிட்டும் நீங்கியவனாய் இருப்பவனுக்கு குர்ஆன் ஹதீஸ்களும் தெளிவான பகுத்தறிவுமே உண்மையைக் காட்டுவதற்குப் போதுமானவையாகும்.** குர்ஆன் ஹதீஸ்களில் ஒன்றுக்கொன்று முரணானவைபோல (வஹ்மு) பேதபுத்திக்குத் தென்பட்டாலும் **பகுத்தறிவுக்கு மாறான ஓர் சில சிறுவசனம் கூடக் குர்ஆன் ஹதீஸ்களில் கிடையாது. பின்னால் இதை நிருபிப்போம்.**

وَإِذَا دُعُوٓاْ إِلَى ٱللَّهِ وَرَسُولِهِۦ لِيَحۡكُمَ بَيۡنَهُمۡ إِذَا فَرِيقٞ مِّنۡهُم مُّعۡرِضُونَ

24:48 *தங்களுக்கிடையில் தீர்ப்புப்பெற அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் வாருங்கள் என அழைக்கப்பட்டால் அவர்களில் ஒரு பிரிவினர்புறக்கணித்துவிடுகின்றனர்.*

என்று குர்ஆன் கூறுவதுபோலவே, குர்ஆன் ஹதீஸ்களைக் கொண்டு உண்மையை விளக்க முற்பட்டாலும் அவ்விஷயம் உண்மைதான் என்று அறிவு தீர்ப்புக்கட்டினாலும்கூட ஒருசிலர் தங்கள் கற்றறிந்த கிதாபு புத்தகங்களையே விடாப்பிடியாக பிடித்துக்கொண்டு உண்மையை மறுப்பதை இன்றும் நாம் பார்க்கத்தானே செய்கிறோம்.

إِنَّمَا كَانَ قَوۡلَ ٱلۡمُؤۡمِنِينَ إِذَا دُعُوٓاْ إِلَى ٱللَّهِ وَرَسُولِهِۦ لِيَحۡكُمَ بَيۡنَهُمۡ أَن
يَقُولُواْ سَمِعۡنَا وَأَطَعۡنَاۚ وَأُوْلَٰٓئِكَ هُمُ ٱلۡمُفۡلِحُونَ

24:51 *எனினும் உண்மையாகவே விசுவாசம் (ஈமான்) கொண்டவர்களோ அவர்களுக்கிடையில் தீர்ப்புப்பெற அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் வரும்படி அழைக்கப்பட்டால் அதற்கவர்கள் நாங்கள் செவிசாய்த்தோம், நாங்கள் வழிப்பட்டோம் என்பதைதவிர வேறொன்றும் கூறுவதில்லை. இத்தகையோர்தான் முற்றிலும் சித்தியடைந்தவர்கள்*

**குர்ஆன் ஹதீஸ்களுக்கும் பகுத்தறிவுக்கும் பொருத்தமான கலிமத்துல் ஹக்கி, புத்துஹாத்துல் மக்கியா, புஸுஸுல் ஹிகம், இன்ஸான் காமில், கவாத்திமுல் ஹிகம், யவாக்கீத்வல் ஜவாஹிர், இப்ரீஸ், தக்ரீபுல் உஸுல், ஜாமிஉல் உஸுல் போன்ற அநேக கிதாபுகள் அறபி, உருது, பாரசீக பாஷைகளில் இருக்கின்றன. இவையெல்லாம் மனத்தெளிவுபெற்ற மகான்களால் எழுதப்பட்ட உண்மையான பொக்கிஷங்களாக இருந்தும் இதுவரை இவ்விதமான கிதாபுகள் மொழிபெயர்க்கப்படவுமில்லை, மத்ரஸாக்களில் பாடநூற்களாகச் சேர்த்துக்கொள்ளப்படவுமில்லை. ஆகவே, நம்நாட்டு மக்களில் பெரும்பாலார் உண்மை தெரியாதவர்களாக இருப்பது ஆச்சரியமேயல்ல.**

குர்ஆனைப் பகுத்தறிவோடு விளங்கியறிய ஆற்றலில்லாத ஒரு சிலர் கூறுகிற மருட்சி வார்தைகளில் மயக்குண்ட மக்கள் அமல்களின் வெளிக்கோலங்களைத் தெளிவாக அறிந்தவர்களாகவும் அவற்றின் உண்மையான நோக்கத்தை அறியாதவர்களாகவும் மறதியாளராக மாறியிருப்பதுபோல நீயும் ஏமாந்துவிடாதே. மனிதன் சந்திரனுக்குப் போய்வந்த செய்தியைக் குர்ஆனுக்கு மாறாய்ப் பொய்யாய்க் கண்ட ஒருசில பட்டதாரிகள்கூட எம்மிடையே உண்டு என்பது நமக்குத் தெரியும். இவர்கள் குர்ஆனைப் பகுத்தறிவோடு நோக்கியிருந்தால் இது ஒரு சாதாரண வேலை என்பதையும் இதுவரை மனிதன் கண்டறிந்த அறிவு மிகச் சொற்பமே என்பதையும் இவர்கள் அறிந்திருப்பார்கள். சூரியனையே மனிதன் வாடிவீடாக ஏற்படுத்திக்கொண்டான் என்றாலும்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இன்ஸானுடைய உள்ளத்தின் தன்மையை நோட்டமிட்டால் இது ஓர் அபாரசாதனையேயல்ல என்பதை நாம் காணலாம். சந்திரனுக்கு மனிதன் போவதைக் குர்ஆனுக்கு மாற்றாமாய்க் கண்ட பட்டதாரிகள் றசூலுடைய மிஹ்றாஜை எப்படி ஒப்புக்கொண்டார்களோ நாம் அறியோம்.

أَلَمۡ تَرَوۡاْ أَنَّ ٱللَّهَ سَخَّرَ لَكُم مَّا فِي ٱلسَّمَٰوَٰتِ وَمَا فِي ٱلۡأَرۡضِ

31:20 *வானங்களில் உள்ளவை பூமியிலுள்ளவை எல்லாவற்றையும்அவன்உங்களுக்கு வசப்படுத்தினான்.*

இவ்விதமான வாக்கியங்களை இந்தப் பட்டதாரிகள் காணவில்லையா? கண்டும் நம்பவில்லையா? இவ்விதமான போலி அறிஞர்கள் ஊசியுடைய காதில் ஒட்டகை நுழைவதைவிடக் கடினமான சிக்கல் நிறைந்த, அறிவு திணறக்கூடிய,ஈமானின், தௌஹீதின் விபரங்களை விளக்கித் தெளிவுபடுத்தி உன்னையும் என்னையும் அல்லாஹ்வுடைய சன்னிதானத்திற்கு அழைத்துச் செல்லக்கூடியவர்கள்தானா? என்பதைச் சிந்தனை செய்துபார்.

இவ்வளவு நேரமும் இவ்வளவு தூரமும் ஆதாரங்கள் தராமலே நான் பிரசங்க பாணியில் தொகுப்புரைபோல் கூறினேன். ஏனென்றால் **நீ தகுதிபெறாமல் ஆதாரங்களை நம்பமாட்டாய் என்பதற்காகத்தான்.** இப்போது ஆதாரங்களை நம்பக்கூடிய ஓரளவு தகுதியை நீ பெற்றுவிட்டாய் என்றே நான் நம்புகிறேன். ஆகவே, கலிமாவுடைய, தௌஹீதுடைய விஷயங்களில் மிகமிகப் பிரசித்திபெற்ற ஒருசில பெரிய அறிஞர்களே விட்டுவந்துள்ள தெளிவான தப்புத் தவறுகளைக் குாஆன்,

ஹதீஸ்களைக்கொண்டே உன் அறிவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக விளக்கிக்காட்ட விரும்புகிறேன். உன் பகுத்தறிவைப் பயன்படுத்தி கேட்டு, விளங்கித் தெளிவு பெறுவாயாக.

05 (10)

## உள்ளத்தின் நிலைமைகள்

**1ஆவது:** "தபக்கதுஸ் ஸுதூர்" இது இஸ்லாம் உருவாகும் நிலைமை.

**2ஆவது:** "தபக்கத்துல் கல்பி" இது ஈமான் உருவாகும் நிலைமை.

**3ஆவது:** "தபக்கத்துஸ் ஸிகாப்" இது இரக்கம்,இறைவனோடுள்ள இஸ்க்கு (காதல்) உருவாகும் நிலைமை.

**4ஆவது:** "தபக்கத்துல் புஆத்" இது கஸ்பு என்னும் ஞானவெளிப்பாடு, முஸாஹிதா உருவாகும் நிலைமை

**5ஆவது:** "தபக்கத்து முஹப்பதுல் கல்பி" இது அல்லாஹ்வுடைய முகப்பத்துக்கு மட்டிலும் சொந்தமானது. இம்மை மறுமைகளைப் பற்றிய எவ்வித மருட்சியும் (வஹ்மும்) இந்த நிலையில் ஏற்படாது.

**6ஆவது:** "தபக்கதுஸ் ஸுவைதா" இது இல்முல்லதுன்னி என்னும் கடாட்ச ஞானம் உண்டாகும் நிலைமை.

**7ஆவது:** "தபக்கத்துல் இஸ்ஸத்தி" இதுதான் பரிபூரணமான ஈமானைப் பெற்றுக்கொண்ட அக்மல்களான நல்லடியார்களின் (நபிமார்கள், ஒலிமார்களின்) இருதய நிலைமை. **இந்த உள்ளங்களில் தெய்வீக இரகசியங்கள் இருக்கின்றன. இந்த இரகசியங்கள் ஒருபோதும் அகத்திலிருந்து புறத்துக்கு வெளியாகமாட்டாது. அதிலிருந்து எவ்வித அடையாளமும் கூடக் கொஞ்சமேனும் வெளியாகமாட்டாது. இது றப்புக்கும் அப்துக்கும் உள்ள ஓர் (சிர்று) இரகசியமாகும்.** ஆனால் கடமையுள்ளவர்கள் மட்டும் கால சூழ்நிலைகளுக்கேற்ப அவசியமான ஒருசில விஷயங்களை மட்டும் வெளிக்காட்டக்கூடும்.

## 005 ஒரு சில உலமாக்களின் புரட்டு

### எச்சரிக்கை:

الٓمٓ ۝١ ذَٰلِكَ ٱلۡكِتَٰبُ لَا رَيۡبَۛ فِيهِۛ هُدٗى لِّلۡمُتَّقِينَ

2:1,2 *இது வேதநூல், இதில் சந்தேகமில்லை. (இது) முத்தகீன்களான பயபக்தி உடையவர்களுக்கு வழிகாட்டும்.*

மிகச்சுவையுள்ள அத்திப்பழமானது (அதை ஜீரணிக்கச் சக்தியற்ற) கீழ்ஜாதிப் பறவைகளுக்கு உணவாக முடியாது. அதைப்போன்ற சத்திய போதனைகளைச் செவியேற்றுக்கொள்ளும் திறமை எல்லா மனிதர்களிடமும் இராது

மஸ்னவீ 11-26

ஆதலால் சுத்தசத்திய இறைவேதமான திருக்குர்ஆனையும் நபி(ஸல்) அவர்களுடைய ஹதீஸ்களையும் நல்லடியார்களான ஒலிமார்களின் உண்மையான அறிவு விளக்கங்களையும் பகுத்தறிவையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிற **நல்லறிவுடைய மக்களோடுதான் எமக்குப் பேச்சசேயல்லாமல், ஆதாரங்கள் எதுவுமே இல்லாமல் அறிவுக்கு இடம் கொடாமல் பழமையிலும் புதுமையிலும் ஊறிக்கொண்டிருக்கின்ற எந்த ஒரு மனிதருடனும் எமக்கு பேச்சேகிடையாது.** ஆகவே, உண்மையைக் கண்டறிய விரும்பும், குர்ஆன், ஹதீஸ்கள், பகுத்தறிவுகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள விரும்பும் என் அன்புச் சகோதரனே! இதோ நான் விளக்கிக் காட்டப்போகிற விஷயத்தை முதலிலிருந்து முடிவுவரை வாசிக்காமல் முடிவுக்கு வரவேண்டாம் என்று உன்னை கேட்டுக்கொள்கிறேன்.

**சகோதரனே!**

கலிமத்துத் தையிபாவை விளங்கியறிந்து சுத்த சத்தியமான தௌஹீதை உணர்ந்து கொண்ட சித்தசுத்திபெற்ற நல்லடியார்களான கனம்தங்கிய ஒருசில உலமாக்களைத் தவிர, பெரும்பாலான மௌலவிமார்கள், உலமாக்கள், பெரும்பாலான புஸ்த்தகங்கள், கிதாபுகளும், கலிமத்துத் தையிபாவான "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற அறபு வாக்கியத்துக்கு **நாலு அல்லது பல பொருட்கள் உண்டு என்று கூறுவதை நீ கற்றறிந்தோ, கேட்டறிந்தோ இருக்கலாம்.** ஒரு கிதாபில் கலிமாவுக்கு எட்டுப் பொருட்கள் கூறியிருந்ததை நான் வாசித்ததுண்டு. நம் நாட்டுக் குழந்தைகள் படிக்கிற சாந்தி மார்க்கம், தொழுகை அதபு போன்ற சாதாரண நூற்களில்கூட கலிமாக்கள் ஐந்தை உருவாக்கி ஐந்து பொருட்களைக் கூறியிருப்பதை இன்றும் நாம் காணலாம். ஒரு சில உலமாக்கள் ஸரீஅத், தரீக்கத், ஹகீகத், மஃரிபத் ஆகிய நான்கு வகுப்பு மக்களுக்கும் நான்கு பொருட்கள் கலிமாவுக்கு உண்டு என்றும் அப்படிக் கூறிவிளக்குவதே பொருத்தம் என்றும் கூறுகிறார்கள். இவர்கள் ஒவ்வோர் கூட்டத்தாருடையவும் விபரங்களை தௌஹீதை விளக்கும்போது நாம் தெளிவாய்க் கூறுவோம். **இப்போது கலிமத்துத்தையிபாவுக்கு நாலு அல்லது பலபொருட்கள் உண்டென்று கூறிக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருக்கிறார்களே! அது உண்மையா! பொய்யா? என்பதை நாம் முதலில் கண்டறிவோம்.** முதலில் எம் இமாமும் நீதிபதியுமான குர்ஆனை மட்டுமே நோக்குவோம். மற்றும் ஆதாரங்களைப் பின்பு நோக்குவோம்.

هُوَ ٱلَّذِىٓ أَنزَلَ عَلَيۡكَ ٱلۡكِتَٰبَ مِنۡهُ ءَايَٰتٞ مُّحۡكَمَٰتٌ هُنَّ أُمُّ ٱلۡكِتَٰبِ
وَأُخَرُ مُتَشَٰبِهَٰتٞۖ فَأَمَّا ٱلَّذِينَ فِى قُلُوبِهِمۡ زَيۡغٞ فَيَتَّبِعُونَ مَا تَشَٰبَهَ مِنۡهُ
ٱبۡتِغَآءَ ٱلۡفِتۡنَةِ وَٱبۡتِغَآءَ تَأۡوِيلِهِۦۖ وَمَا يَعۡلَمُ تَأۡوِيلَهُۥٓ إِلَّا ٱللَّهُۗ وَٱلرَّٰسِخُونَ فِى
ٱلۡعِلۡمِ يَقُولُونَ ءَامَنَّا بِهِۦ كُلّٞ مِّنۡ عِندِ رَبِّنَاۗ وَمَا يَذَّكَّرُ إِلَّآ أُوْلُواْ ٱلۡأَلۡبَٰبِ

3:7 *அவனே இவ்வேதத்தையும் உம்மீது அருளினான். .இதில்குறிப்பாகஉள்ள ஒரே கருத்துடைய வசனங்களும் இருக்கின்றன. இவைதான் இவ்வேதத்தின் அடிப்படை அன்றி,பல கருத்துடைய வசனங்களும் இருக்கின்றன. எவர்களுடைய இருதயங்களில் மாறுபாடு இருக்கிறதோ அவர்கள் பல அர்த்தங்களையே தேடிப்பின்பற்றுவார்கள். ஆயினும்இதன் (பல அர்த்தமுடைய வசனங்களின்) உண்மைக் கருத்தை அல்லாஹ்வையன்றி ஒருவரும் அறியார். இஸ்திரமான கல்விமான்களோஇதனையும் நாங்கள் விசுவாசித்தோம். யாவும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவைதான் என்றுகூறுவார்கள். அறிவுடையோரேயன்றி மற்றெவரும் நல்லுபதேசம் அடையமாட்டார்கள்.*

**குறிப்பு:** இந்த குர்ஆன் ஆயத்தில் கிதாபு என்ற அறபுவசனத்துக்கு வேதம் என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கிதாபு என்றால் புத்தகம் என்பதுதானே பொருள் என்று நீ கூறலாம். ஆம் இப்புத்தகம் என்பது குர்ஆனையே என்பதில் சந்தேகம் இல்லை. குர்ஆன் என்பது வேதமே என்பதிலும் வேதப் புத்தகமே என்பதிலும் சந்தேகமே இல்லை. மேலும் வேதத்தின் அடிப்படையான தௌஹீதை உறுதிப்படுத்தி அதன் விளக்கத்தை எமக்குத் தருவதற்காகவே (குர்ஆன்) இப்புத்தகம் தரப்பட்டுள்ளதால் குர்ஆனை வேதம் என்று கூறுவதில் எவருக்கும் எதிர்வாதமிருக்க முடியாது. **இந்த விபரத்தையும் ஆயத்தின் பொருளையும் பலமுறை வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும்.**

மேலே காட்டிய ஆயத்தில் குறிப்பாக உள்ள ஒரே கருத்துடைய வசனத்தை (முஹ்கமாத் ) என்ற இறைவன் கூறுகிறான். பல அர்த்தங்களுடைய வசனத்தை (முதஸாபிஹாத்) என்று இறைவன் கூறுகிறான். இந்த வசனங்களை நாம் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

"முஹ்கமாத்" என்றால் அதன் உண்மையான கருத்து என்ன?

01. குறிப்பாக உள்ள ஒரே கருத்துமட்டும் உடையது. உம்மிகளும் அறியக் கூடியது.
02. திடப்பிரமாணத்தில் உள்ளது. தெளிவானது.
03. சட்டமாக்கப்பட்டது. ஹுக்குமாக்கப்பட்டது.
04. மாற்ற முடியாதது. மாற்றப்படக் கூடாதது.
05. பல அர்த்தங்களைப் பெற முடியாதது, பெறக்கூடாதது
06. "தலாலத்துன்னஸ்"இ "இபாரத்துன்னஸ்" ஆகிய வெளிச் சத்தத்தினாலும உட்பொருளினாலும் ஒரே கருத்தைக்கொடுக்க கூடியது.

மேலே காட்டிய 6 அம்சங்களும் பொருந்திய, சத்தத்தினாலும் கருத்தினாலும் ஒரே பொருளை தரக்கூடிய வசனம்தான். “முஹ்கமாத்” என்பது அறபு அகராதியும் இதை ஏற்றுக்கொள்கிறது. லாஹிருடைய உலமாக்களும் பாத்தினுடைய உலமாக்களும் இந்த விளக்கத்தைப் பூரணமாய் ஒப்புக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

இவ்விபரத்தை நினைவில் இருத்திக்கொள்ளவும்.

முதஸாபிஹாத் என்றால் அதன் உண்மையான கருத்து என்ன?

**01.** பல கருத்துக்களையுடையது.
**02.** சந்தேகப் பிரமாணத்தில் உள்ளது, தெளிவில்லாதது.
**03.** இடம், காலம், சூழல், நிலைமைகளுக்கேற்றபடி பொருள் கொள்ளக்கூடியது.
**04.** இதன் உண்மைக் கருத்தை இறைவன் மட்டுமே அறிவான்.
**05.** இஸ்தீரமான (உறுதியான) கல்விமான்களும் இதை ஒப்புக்கொள்வார்கள்.
**06.** கல்வியறிவில்லாத உம்மிகள் இதன் கருத்தை அறியவேமாட்டார்கள்.

இந்த 6 அம்சங்களும் பொருந்தியதுதான் “முதாஸாபிஹாத்” என்பது. அறபு அகராதியும் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. லாஹிருடைய பாத்தினுடைய உலமாக்களும் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

“புனியல் இஸ்லாமு அலாஹம்ஸின்” என்று உமர்(றலி) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸின்படி வேதத்தின் அடிப்படை “லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் றசூலுல்லாஹ்” என்ற கலிமாவைக் கொண்டு சாட்சி பகர்வதே என்பதை நாம் எல்லோரும் அறிந்தே இருக்கிறோம். இந்த விபரத்தையும்உலகின் நாலபக்கங்களிலுமுள்ள எல்லா உலமாக்களுமே ஏகமனதாக ஒப்புக்கொண்டே இருக்கிறார்கள்.

இப்போது சிந்தனை செய்துபார். வேதத்தின் அடிப்படை தௌஹீதுக் கலிமாவான “லாஇலாஹ இல்லல்லாஹ்” என்ற கலிமாவே என்பதை யாவரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த வேதத்தின் அடிப்படை “முஹ்கமாத்” ஒரே கருத்துடைய வசனம் என்பதை மேலே காட்டிய 3-7ஆம் ஆயத்து மூலம் இறைவன் அறிவிக்கிறான். ஆகவே வேதத்தின் அடிப்படையான கலிமா “முஹ்கமாத்” ஒரே கருத்துடையது என்றும் (மாற்றப்புரட்டப்பட்ட) பல கருத்துக்களைக் கூற முடியாது என்றும் அறிந்துகொண்டோம். “இபாரத்துன்னஸ்”“தலாலத்துன்னஸ்” ஆகிய வெளிச் சத்தப் பிரமாணத்தினாலும் கருத்துப் பிரமாணத்தினாலும் ஒரே பொருளை விளக்கக் கூடியதே கலிமா என்பதையும் அறிந்து கொண்டோம். கல்விமான்களான அறிஞர்கள் மட்டும் அன்றிக் கல்வியறிவே இல்லாத உம்மிகளும் சிக்கல்படாமல் அது உணர்த்தும் பொருளை அறிவார்கள் என்பதையும் அறிந்து கொண்டோம்.

இப்போது சிந்தனை செய்துபார். கலிமாவைக்கூறிய றசூல்(ஸல்) அவர்கள் ஸ்த்திரமான ஒரு கல்விமானா? எழுத, வாசிக்கத் தெரியாத கல்வியறிவே இல்லாத உம்மி நபியா? அவர்களிடமிருந்து கலிமாவைப் பெற்றுககொண்ட அறபு மக்கள் கல்விமான்களா? உம்மிகளான கல்வியறிவில்லாத மக்களா?

هُوَ ٱلَّذِى بَعَثَ فِى ٱلْأُمِّيِّـۧنَ رَسُولًا مِّنْهُمْ

62:2 *உம்மிகளுக்கு அவர்களில் நின்றுமே ஒரு றசூலை அனுப்பினான் என்று குர்ஆன் கூறுகிறது.*

ஆகவே, உம்மி நபியினால் உம்மிகளான மக்களுக்கு உபதேசிக்கப்பட்ட கலிமா ஒரே கருத்துடைய “முஹ்கமாத்”தைச் சேர்ந்ததாக இருக்குமா? பல கருத்துடைய முதஸாபிஹாத்தைச் சேர்ந்ததாக இருக்குமா? திட்டமாக நிச்சயமாக, ஒரே கருத்துடைய முஹ்கமாத்தைச் சேர்ந்ததாகவேதான் இருக்கும். முதஸாபிஹாத்தைச் சேர்ந்ததாய்ப் பல கருத்துடையதாய் இருக்கவே முடியாது. ஒரே கருத்துடையதாய் இருந்ததால்தான் அந்த உம்மிகள் கலிமாவின் பொருளை வெளிப்படையாக உணர்ந்தார்கள். அதன் கருத்து விளக்கத்தை, அறிவு விளக்கமில்லாமையால் மறுத்தார்கள். பல கருத்துடையதாய் இருந்திருந்தால் அதை விளங்கவும் மறுக்கவும் முடியாமல் இருந்திருக்கும். **இப்போது குர்ஆனின்படி கலிமா ஒன்றேயொன்றுதான் ஐந்தல்ல என்றும் அந்தக் கலிமா ஒரேயொரு கருத்துமட்டுமுடையதேயல்லாமல் பல கருத்துடையதேயல்ல என்றும் அறிந்துகொண்டோம்.** “மன்கூல்” என்ற வேதவசனத்தை “மஹ்கூல்” என்ற யுக்தியும் ஏற்றுக்கொண்டதென்பதை நினைவில் இருத்திக் கொள்ளவும் மன்கூல், மஹ்கூல் என்பவை வெவ்வேறு போல் தென்பட்டாலும் உண்மையில் இரண்டும் ஒரே விடயம்தான். ஆதலால்தான் குர்ஆனுக்கு, புர்கான் என்றபெயர் சூடப்பட்டிருக்கிறது.

இப்போது மீண்டும் 3-7ஆம் ஆயத்தை நோட்டமிட்டுப்பார். எவர்களுடைய இருதயங்களில் மாறுபாடு இருக்கிறதோ **அவர்கள் குழப்பத்தை உண்டு பண்ணக்கருதிப் பல அர்த்தங்களையே தேடிப் பின்பற்றுவார்கள் என்று இறைவன் கூறுகிறான்.** பல அர்த்தங்களுடைய வசனங்களை என்று கூறாமல் பல அர்த்தங்களையென்று இறைவன் கூறுவதை அறிவைக்கொண்டு நோக்கவேண்டும். எதற்குப்பல அர்த்தங்களைத் தேடுகிறார்கள்? **முஹ்கமாத்தான ஒரே கருத்துடைய வசனங்களுக்குத்தான் பல அர்த்தங்களைத் தேடுகிறார்கள் என்பதை அறிந்துகொண்டோம்.** இன்னும் கொஞ்சம் கவனித்துபார்.

தேடிப் பின்பற்றுகிறார்கள் என்று இறைவன் கூறுகிறான். பின்பற்றல் என்றால் என்ன? ஒருவர் சொன்னதை, எழுதியதை செய்ததை மற்றவர் முன்பின் யோசிக்காமல் சிந்திக்காமல், ஆராயாமல், ஆதாரங்களைக் கண்டறியாமல், கண்மூடித்தனமாய் ஒப்புக்கொண்டு, தானும் அப்படியே செய்வதைத்தான் பின்பற்றல் என்று கூறப்படுவது. அதாவது ஒருவரால் சொல்லப்பட்ட அல்லது எழுதப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஓர் விஷயத்தை மற்றவர் பின்பற்ற அவரை இன்னொருவர் அல்லது பலர் பினபற்ற அவர்களை ஏனையோர் பின்பற்றத் தொடவர்வதுதான் பின்பற்றல் என்று கூறப்படுவது. **இந்தப் பின்பற்றல், அதாவது கலிமாவுக்குப் பல பொருட்கள் உண்டு என்று ஆரம்பத்தில் கூறப்பட்ட விஷயம் நாம் முன்பு விளக்கிய ஹதீஸில் சுட்டிக்காட்டப்பட்ட பொய் பரவிவடும் என்ற காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு இது கால வரையிலும் பின்பற்றப்பட்டே வந்திருக்கிறது. வருகிறது.** றசூல்(ஸல்) அவர்கள் வபாத்தாகி (மௌத்தாகி) சுமார் 30 வருடங்களுக்குள்ளாக இந்தப் பின்பற்றலும் புரட்டும் ஏற்படவேயில்லை என்பதும் 30 வருடங்களின் பின்பே இந்தப் புரட்டு ஏற்பட்டிருக்கிறது என்பதும் ஆராய்வினால் தெரியவருகிறது. உரிய இடங்களில் கவனிப்போம். பொறுமை அடைவாயாக. முன்பு இதற்காதாரமான ஓர் ஹதீதைத்தந்துள்ளேன்.

இந்தப் பின்பற்றல் எதைப்போன்றதென்றால் **இந்த விக்கிரக வணக்க மார்க்கமானது எங்கள் பிதாக்கள் இதை அனுஷ்டித்துவர நாங்கள் கண்ட ஓர்மார்க்கமாக இருக்கிறது** என்று அக்கால முஸ்ரிக்கீன்கள் கூறியது போலவே இருக்கிறது. **கலிமாவுக்குப்பல பொருட்கள் உண்டு என்றும் கலிமாக்கள் ஐந்து என்றும் எங்கள் முன்னோரான நாதாக்கள் அறிவித்ததைத் தான் நாங்களும் அறிவிக்கிறோம் என்றுதான் பின்பற்றல் வாதிகளும் கூறுகிறார்கள்.**

وَإِذَا قِيلَ لَهُمْ تَعَالَوْا۟ إِلَىٰ مَآ أَنزَلَ ٱللَّهُ وَإِلَى ٱلرَّسُولِ قَالُوا۟
حَسْبُنَا مَا وَجَدْنَا عَلَيْهِ ءَابَآءَنَآ ۚ أَوَلَوْ كَانَ ءَابَآؤُهُمْ لَا يَعْلَمُونَ شَيْـًٔا وَلَا
يَهْتَدُونَ

5:104 *அல்லாஹ் இறக்கி வைத்ததன்பாலும் தூதரின்பாலும் வாருங்கள் என அவர்களுக்கு கூறப்பட்டால் அதற்கு அவர்கள் இல்லை. எங்கள் மூதாதைகள் எதன் மீதிருக்க கண்டோமோ அதுவே எங்களுக்குப் போதும் என்று கூறுகின்றனர். அவர்களுடைய மூதாதைகள் யாதொன்றையும் அறிந்து கொள்ளாமலும் நேரான வழியில் இல்லாமலும் இருந்தாலுமா?*

وَإِذَا قِيلَ لَهُمُ ٱتَّبِعُوا۟ مَآ أَنزَلَ ٱللَّهُ قَالُوا۟ بَلْ نَتَّبِعُ مَا وَجَدْنَا عَلَيْهِ
ءَابَآءَنَآ ۚ أَوَلَوْ كَانَ ٱلشَّيْطَٰنُ يَدْعُوهُمْ إِلَىٰ عَذَابِ ٱلسَّعِيرِ

31:21 *அவர்களை நோக்கி அல்லாஹ் இறக்கியதைப் பின்பற்றுங்கள் என்று கூறப்பட்டால் அதற்கு அவர்கள் இல்லை. எங்கள் மூதாதைகள் எதன்மீதிருக்க நாங்கள் கண்டோமோ அதனையே பின்பற்றுவோம் என்று கூறுகின்றனர். அவர்களுடைய மூதாதைகளைச் சைத்தான் நரகவேதனையின்பால் அழைத்திருந்தாலுமா?*

وَإِذَا قِيلَ لَهُمْ تَعَالَوْا۟ إِلَىٰ مَآ أَنزَلَ ٱللَّهُ وَإِلَى ٱلرَّسُولِ رَأَيْتَ ٱلْمُنَٰفِقِينَ
يَصُدُّونَ عَنكَ صُدُودًا

4:61 *அல்லாஹ் இறக்கியதன்பாலும் தூதரின்பாலும் நீங்கள் வாருங்கள் என்று அவர்களுக்குக் கூறப்படடால் அந்த முனாபிக்கீன்கள் (நய்வஞ்சகர்கள்) எம்மை விட்டு முற்றிலும் விலகிவிடுவதையே நீர் காண்பீர்*

இப்போது உன்பகுத்தறிவைப் பயன்படுத்திப்பார். வேதத்தின் அடிப்படை கலிமா என்றும் கலிமா முஹ்கமாத்தான ஒரே கருத்துடையதென்றும் கலிமா ஒன்றேயென்றும் குர்ஆன் மூலம் ஒப்புக்கொள்ள வேண்டிய நாம் கலிமா ஐந்து என்றும் கலிமா பல கருத்துக்களுடையது என்றும் கற்றும் கேட்டும் அறிந்திருப்பது **குர்ஆனுக்கும் பகுத்தறிவுக்கும் மாறான படுபொய்யல்லவா? எம் முன்னோரில் மிகப்பலர் கலிமாவுக்குப் பல கருத்துகளுண்டுஎன்று எழுதியும், பேசியும், குர்ஆன் ஹதீஸ்களுக்கும் (அல்லாஹ்வுக்கும் றசூலுக்கும் விரோதமாய்) பகுத்தறிவுக்கும் உண்மைக்கும்**

**நேர்விரோதமான விபரங்களை, கண்மூடித்தனமாய்ப் பின்பற்றி எமக்குக் கூறி எம்மைக் குழப்பத்துக்குள்ளாக்கி உண்மைக்குமாறான வழிகேட்டிலேயே அழைத்துச் சென்றுள்ளார்கள் என்பது நிச்சயமான உண்மையல்லவா?**

**"எவர்களுடைய இருதயங்களில் மாறுபாடு இருக்கிறதோ அவர்கள் குழப்பதை உண்டுபண்ணக்கருதி"** என்று 3-7ஆம் ஆயத்தில் கூறப்படுகிற வசனம் இன்னும் பல உண்மைகளை எமக்கு விளக்கம் தருகிறது. அவற்றை உரிய இடங்களில் ஆராய்வோம். நான் குர்ஆனுக்கு மாற்றமாய்க் கூறமாட்டேன்,ஆயினும் என்னுடைய சொல் குர்ஆனுக்கு மாற்றமாய்த் தென்பட்டால் என்னுடைய சொல்லை விட்டு விட்டு நீங்கள் குர்ஆனையே முற்றிலும் பின்பற்றுங்கள் என்று றசூல்(ஸல்) அவர்களே கூறுகிறார்கள்.

**ஹதீஸ்:** ***நான் உங்களிடம் இரண்டு பொருட்களை விட்டுச் செல்கின்றேன் அவ்விரண்டையும் நீங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டால் நீங்கள் வழிதவறி விடமாட்டீர்கள். அவற்றில் முதலாவது இறைவேதம். இரண்டாவது இறைதுதரின் வழிமுறை. என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: இமாம்மாலிக் (றலி)**
**ஆதாரம்: முஅத்தா, சுன்னா (வழிமுறை) என்பது கொள்கையைக் குறிப்பதாகும்.**

**ஹதீஸ்:** ***நிச்சயமாக நான் உங்களிடையே எத்தகையவற்றை விட்டுச் செல்கிறேன் என்றால், அவற்றை நீங்கள் பற்றிப்பிடித்துக்கொண்டால் எனக்குப்பின் நீங்கள் வழிதவறிவிடமாட்டீர்கள். அதில் ஒன்று மற்றொன்றைவிட மேலானது. அது விண்ணகத்திலிருந்து மண்ணகம்வரை தொங்கும்படியான இறைவேதம் (குர்ஆன்) ஆகும். மற்றொன்று என்னுடைய அஹ்லுல்பைத் என்னும் குடும்பத்தினராவர். (அவ்லியாக்கள்) இவ்விரண்டும் "ஹவ்ழுல் கவ்தரில்" என்னிடம் வந்து சேர்ந்து விடும். ஆதலில் அவ்விரண்டினபாலும்நீங்கள் எனக்குப்பின் நல்லமுறையில் நடந்துகொள்ளவீர்களாக.***

**அறிவிப்பவர்: ஜைதுப்னு அர்க்கம் (றலி)**
**ஆதாரம்: திர்மிதீ**

**ஹதீஸ்:** ***எவரும் நம் மார்க்கத்தில இல்லாதவற்றைப் புதிதாய்க் கூறினால் உண்டாக்கினால், அது மறுக்கப்படவேண்டிய (பிதுஅத்) தாகும். என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: ஆயிஷா (றலி)**
**ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்**

பாபம் என்னும் கொடியவனுக்குப் பல ஆயுதங்கள் இருப்பினும் அந்த ஆயுதங்களுக்கெல்லாம் பொருத்தமான ஓர்பிடி உண்டு என்றும் **அதன் பெயர்தான் பொய்** என்றும் **"ஹோம்ஸ்"**என்னும் அறிஞர் கூறுகிறார். **இவ்விதமான சிந்தனையில்லாத, மதிமாறாட்டமான, உண்மைக்கும் பொய்க்குமிடையில் பேதம் காணமுடியாத, பேதம் காணத்தெரியாத, வஹ்மூமிகைத்த அறிஞர்களைப்பற்றி நீ ஏமாறாதே.** ஆகையால்தான் தாடிஉன்னை மருட்டவேண்டாம். தும்பை ஆட்டுக்கும் தாடி இருக்கத்தான் செய்கிறது என்று மாலிக் இமாம் கூறுகிறார்கள்.

**ஹதீஸ்:** ***அவனே இவ்வேதத்தையும் அருளினான். இதில் குறிப்பாக உள்ள ஒரேகருத்துடைய வசனங்களும் இருக்கின்றன. இவைதான் இவ்வேதத்தின் அடிப்படை ……. 3–7ஆம் ஆயத்து முடியும்வரை நபியவர்கள் ஓதினர் என்று கூறி ……. அன்றியும் பலபொருளுடைய வசனங்களும் இருக்கின்றன என்பதை ஆயிஷா(றலி) அவர்கள் ஓதிப் பலபொருளுடைய வசனங்களில் குதர்க்கம் புரிபவர்களை நீங்கள் காணில் இவர்களைப்பற்றித்தான் இறைவன் இந்த வசனத்தில் கூறியிருக்கிறான் என்று அறிந்து அவர்களைப் பற்றி எச்சரிக்கையாய் இருங்கள் என்பதாக நபி(ஸல்) அவர்கள் எடுத்துரைத்தனர்.***

**அறிவிப்பவர்: ஆயிஷா (றலி)**
**ஆதாரம்: புஹாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ**

மேலே காட்டிய 3-7ஆவது ஆயத்தில் எவர்களுடைய இருதயங்களில் மாறுபாடு இருக்கிறதோ என்று இறைவன் கூறுவது இன்னும் பல பெரிய உண்மைகள் எமக்கு விளக்கம் தருகிறது. இந்த மாறுபாடுடையவர்கள் யார்? என்பதை நாம் கண்டறியவேண்டியதாய் இருக்கிறது. இவ்விடம் அந்த ஆராய்வுக்குப் பொருத்தமான இடமல்ல. ஆகவே இன்ஷா அல்லாஹ் கலிமாவை விளக்கும்போது அவ்விபரத்தைத் தருவேன் பொறுமையடைவாயாக.

இந்த ஹதீஸைஆழமாக நோட்டமிட்டால் றசூலுடைய காலத்தில், பின்வருவோர் கலிமாவான முஹ்கமாத்துடைய வசனத்துக்குப் பல பொருட்களைக் கற்பித்துத் தப்பர்த்தம் செய்யமாட்டார்களென்று நம்பியிருந்தார்கள் என்பதும் பல அர்த்தங்களையுடைய வசனங்களையே பலர் (போலிப்பீர்மார்)

தப்பர்த்தம் செய்து வழிகெடுப்பார்கள் என்று நம்பி எச்சரிக்கை செய்துள்ளார்கள் என்பதும் தெரியவருகிறது. ஆயினும் இது றசூலுக்குத் தெரியாதிருக்கக் கூடிய ஓர் விஷயமல்ல.

**(2)**

இப்போது நாம் குர்ஆனைமட்டும் வைத்துக்கொண்டு கண்டறிந்த உண்மையை, அதாவது கலிமத்துத்தையிபா ஒரேகருத்துடையது என்று அறிந்த உண்மையை உறுதிப்படுத்துவதற்காக "உசூல்பிகஹி" என்னும் தர்ம சாஸ்திரத்தில் கையாளப்படும் மூல சூத்திரங்களின் பரிபாஷைகளில் சிலவற்றை நமது தெளிவான **பகுத்தறிவைகொண்டே ஆராய்ந்து பார்ப்போம்.** வேத வசனங்களான குர்ஆன் ஆயத்துக்களில் பல இனமான ஆயத்துக்கள் இடம் பெறுகின்றன. அவற்றில் ஒன்று "நல்முலாஹிறு" என்று கூறப்படும்.

## "நல்முலாஹிறு" என்பதன் விபரம் என்னவென்றால்:

குர்ஆன் வசனநடையின் கருத்து வெளிப்படையாய் இருந்தும் அந்தக் கருத்துக்குப் பொருத்தமாய் நேர்நடையாய் வசனம் நடாத்தப்படவில்லையானால் அந்த வாக்கியத்தை "நல்முலாஹிரு" என்ற கூறப்படும். இந்த விபரப்படி கலிமா "நல்முலாஹிறாக' இருக்க முடியாது. ஏனென்றால் அதன்வசனநடை கருதிய பொருளுக்குப் பொருத்தமான நேர்நடையாய்க் கூறப்பட்டதாய் இராது. இதைக் கல்வியறிவில்லாத உம்மிகளான மக்கள் தெளிவாய் அறியமாட்டார்கள். ஆகவே தௌஹீது விஷயமாய் அறிவிக்கப்பட்ட வாக்கியம் சந்தேகத்துக்கிடமில்லாமல் கருதிய பொருளுக்கேற்ற நேர்நடையுள்ளதாகவே இருக்கவேண்டும். இது அவசியமான வாஜிபாகும். ஆகவே கலிமத்துத் தையிபா "நல்முலாஹிறு" என்ற இனத்தைச் சேர்ந்ததேயல்ல என்பது தென்படுகிறது.

அடுத்தது "நஸ்ஸு" என்ற வகையைச்சேர்ந்த வசனங்கள்.

## "நஸ்ஸு"என்பதன் விபரம் என்னவென்றால்:

வெளிப்படையாயும் விரைவாயும் கருத்து விளங்கக்கூடியதாய் வசனம் நடாத்தப்பட்டிருந்தும் "தக்சீஸு" என்னும் விசேடக்குறிப்பையும் "தஹ்வீலு" என்னும் வலிந்துரை கொள்வதையும் ஏற்கக்கூடியதாய் இருந்தால் அந்த வாக்கியத்தை "நஸ்ஸு" என்று கூறப்படும். இந்தவிபரப்படி நோக்கினால் கலிமத்துத்தையிபா இந்த நஸ்ஸு என்ற இனத்தைச் சேர்ந்ததாயும் இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. ஏனென்றால் நஸ்ஸு என்பதில் (தக்சீஸு, தஹ்வீலு) குறிப்பித்தல், வலிந்துரை கொள்ளல் ஆகிய குற்றத்தைக் கொண்டு தௌஹீதை உறுதிப்படுத்தமுடியாது. அதன்கருத்தை கல்வியறிவில்லாத உம்மிகள் அறியமாட்டார்கள். **ஆகவே கலிமா நஸ்ஸு என்ற வகையைச் சேர்ந்ததுமல்ல என்பதை அறிந்துகொண்டோம்.**

அடுத்தது "முபஸ்ஸறு" என்ற வகையைச் சேர்ந்த வசனங்கள்.

## "முபஸ்ஸறு" என்பதன் விபரம் என்னவென்றால்:

"தஹ்வீலு" என்னும் வலிந்துரைகொள்வதற்கு இடமில்லாமல் வெளிப்படையாய்த் தெளிவாய்த் துரிதமாய்ப் பொருள்தரக்கூடியதாய் இருந்தும் ("மன்ஸுக்" என்னும்) வேறோர் வாக்கியத்தால் மாற்றப்பட்டதாய் இருந்தால் இந்த வாக்கியத்தை "முபஸ்ஸறு என்று கூறப்படும். இந்த விபரத்தின் படி நோக்கினால் கலிமா முபஸ்ஸறு என்றவகையைச் சேர்ந்ததாயும் இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. ஏனென்றால் முபஸ்ஸறு என்பது வேறோர் வாக்கியத்தால் மாற்றப்பட்டிருக்கும். மாற்றப்பட்ட வாக்கியத்தைக் கொண்டு இறுதி நாள்வரையிலும் தௌஹீதை நிலைப்படுத்த முடியாது. **ஆகவே கலிமா முபஸ்ஸறு என்ற இனத்தைச் சேர்ந்ததுமல்ல என்பதை அறிந்து கொண்டோம்.**

அடுத்தது முஹ்கமு என்ற வகையைச் சேர்ந்த வசனங்கள்.

## "முஹ்கமு" என்பதன் விபரம் என்னவென்றால்:

"தஹ்வீல" என்ற வலிந்துரைகொள்ளுதல் (பலாத்காரமாக் கருத்துக் கொள்ளுதல்) "மன்ஸுக்" என்ற மாற்றப்படல் முதலிய குற்றங்களுக்கு இடமில்லாததாய்,வெளிப்படையாய், தெளிவாய், விரைவாய், உம்மிகளும் அதன்கருத்தை அறிந்துகொள்ளக்கூடியதாய்க் கருதியபொருளை விளக்குவது எதுவோ அதை முஹ்கமு என்று கூறப்படும். அதாவது முஹ்கமு என்பதன் ஷர்த்து என்னவென்றால்:

**1ஆவது:** வாக்கியத்தில் கருதியபொருள் வெளிப்படையாய் இருக்க வேண்டும்

**2ஆவது:** வாசகநடை கருதிய பொருளுக்குப் பொருத்தமான நேர் நடையாக அமைந்திருக்க வேண்டும்.

**3ஆவது:** "தஹ்வீல்" என்னும் வலிந்துரை (பலாத்காரக்கருத்து) கொள்வதற்கு இடமில்லாமல் இருக்கவேண்டும்.

**4ஆவது:** "தக்சீஸு" என்னும் குறிப்பித்தலுக்கு இடமில்லாததாய் இருக்க வேண்டும்.

**5ஆவது:** "நுஸ்க்கு" என்னும் மாற்றப்படலுக்கு இடமில்லாததாய் இருக்க வேண்டும்.

**6ஆவது:** "இபாரத்துன்னஸ்" என்னும் வெளிச்சத்தாலேயே கருதியபொருளை உணர்த்துவதாய் இருக்கவேண்டும்.

**7ஆவது:**"தலாலதுன்னஸ்" என்னும் கருத்துப்பிரமாண த்தினாலும் வெளிச்சத்தத்தால் உணர்த்திய அதே பொருளை உணர்த்தக் கூடியதாய் இருக்க வேண்டும்.

**8ஆவது:** கல்வியறிவில்லாத உம்மிகளும் அதன் பொருளைக் கஸ்டமில்லாமல் தெளிவாய் அறியக் கூடியதாய்க் கருதியபொருளை வெளிப்படுத்தவேண்டும். (அதன்விபரத்தை அறிவு ஏற்றுக் கொண்டாலும் கொள்ளா விட்டாலும் கருத்து இன்னதுதான் என்பதை எல்லோரும் அறியக்கூடியதாய் இருக்கவேண்டும்.)

மேலே கூறிய ஸர்த்துக்கள் யாவும் சரியாய் உள்ளது எதுவோ அதுதான் முஹ்கமு என்பதாகும். ஆகவே குர்ஆன் ஹதீஸ்களில் தௌஹீதின் பேரில் அறிவிக்கப்படுகிற வாக்கியங்கள் நிச்சயமாகச் சந்தேகமின்றி முஹ்கமுவாக, ஒரே கருத்துடைய வசனமாகவே இருக்கவேண்டும். இது வாஜிபாகும், இந்த விபரப்படி **கலிமாவான வேத அடிப்படை முஹ்கமாத் என்று இறைவன் கூறுவது முற்றிலும் நூறுவீதமும் உண்மைதான் என்பதை நாம் அறிந்து கொண்டோம்.**

அடுத்ததாக உம்மிகளுக்கு அவர்களில் நின்றுமே ஓர் றசூலை அனுப்பினான் என்ற குர்ஆன் ஆயத்தின்படி உம்மிகளுக்கு இறைவன்மேல் எதிர்வாதம் இருக்கமுடியாது. இதுகூடாது என்ற நயத்துக்காகவே இறைவன் றசூல்(ஸல்) அவர்கள் கலிமாவை வெளிப்படுத்தி அதை உறுதிப்படுத்துவதற்காக ஓதிக்காட்டிய (ஹுவல் அவ்வலு) ஆதியனவன், அந்தமானவன், வெளியாகி இருப்பவன், உள்ளீடாய் இருப்பவன் போன்ற மற்றும் ஆயத்துக்களும் **முஹ்கமு என்னும் வகையைச்சேர்ந்த ஒரே கருத்துமட்டும் உடையவையாய் இருப்பதால் கலிமாவும், கலிமாவின்பின் ஆயத்துக்களை ஓதியிருப்பதால்அந்த ஆயத்துக்களும் முஹ்கமுவான ஒரே கருத்துடையவைதான் என்பதை நாம் அறிகிறோம்.** ஏனென்றால் முஹ்கமுவுக்கு ஆதாரமாய்த் தலீலாய் தரப்பபட்டவையும் ஒரே கருத்துமட்டும் உடைய முஹ்கமுவாகவே இருக்க வேண்டும். ஆகவே நாம் எடுத்துக் கொண்ட முயற்சியால் **சுருதி, யுக்தி என்ற இருபிரமாணங்களுக்கும் அமைவாய் கலிமா வலிந்துரை கொள்ளத் தேவையில்லாத ஒரே கருத்துமட்டும் உடையதே என்பதையும், கலிமாவுக்குப் பல கருத்துக்கள் உண்டு என்று கூறுவது உண்மையான பகுத்தறிவுக்கும் வேதமான குர்ஆனுக்கும் நேர்மாறான படுபொய்யே என்றும் தெளிவாய் அறிந்து கொண்டோம்.**

இது விஷயமாய் நாம் இன்னொருகோணத்தில் சிந்தனை செய்து பார்ப்போம். நாம் முன்புகாட்டிய 62-2 ஆயத்தில் உம்மிகளுக்கு அவர்களில் நின்றுமே ஓர் றசூலை அனுப்பினான். என்று இறைவன் கூறுகிறான். அந்த உம்மிகளில் (எழுத வாசிக்கத் தெரியாத, கல்வியறிவு இல்லாத மக்களில) றசூல்(ஸல்) அவர்களுக்கு மிகக்கடினமான விரோதியாய் இருந்தவன் அபூஜஹீல்தான். அபூஜஹீல் என்றால் மடையர்களின் தந்தை என்பதே அதன் அர்த்தம். இந்த மடையர்களின் தந்தையான அபூஜஹீல் றசூலைப் பார்த்து என்ன கூறுகிறான் என்றால், முஹம்மதே! நாம் உம்மைப் பொய்யராக்கவில்லை, நீர்கொண்டு வந்ததையே பொய்யாகக் காணுகின்றோம் என்றே கூறுகிறான்.

**ஹதீஸ்:** ***நிச்சயமாக நாம் உம்மைப் பொய்யராக்கவில்லை. எனினும் நீர் எதனைக் கொண்டு வந்தீரோ அதனையே பொய்யாக்குகிறோம் என்று அபூஜஹீல் கூறினான்.***

**அறிவிப்பவர்: அலி(றலி)**
**ஆதாரம்: திர்மிதீ**

இப்போது சிந்தனை செய்துபார். றசூலுல்லாஹ்வால் உபதேசிக்கப்பட்ட கலிமாவை **மடையர்களின் தந்தையான அபூஜஹீல் கூடத்தெளிவாக விளங்கியதால் தான் அந்தக்கலிமாவின் கருத்து அவன் கொண்டிருந்த கொள்கைக்க முரணாய்ப் பொய்யாய் இருப்பதைக் கண்டான் ஆகையால்தான் நீர் கொண்டு வந்தததைப் பொய்யாக்குகிறோம் என்று கூறினான்.** ஆகவே மடையர்களுக்கும் கூடக் கலிமாவின் பொருளைத் தெளிவாய் அறியக்கூடியதாகவும் அதன் கருத்தைப் பொய்யாய்க் காணக்கூடியதாகவும்தான் இருந்திருக்கிறது. அப்படியானால் அந்த மடையர்களான உம்மிகளுக்கு உபதேசிக்கப்பட்ட கலிமா, பல கருத்துடையதாய்க் கல்விமான்களுக்கும் அல்லாஹ்வுக்கும் மட்டும் அறியக்கூடியதாய் எப்படி இருக்கமுடியும்? இருக்கவே முடியாது. **அதாவது பல கருத்துடையதாய் இருக்கவே முடியாது. நிச்சயமாக ஒரே கருத்துடையதாய் (முஹ்கமாத்தாய்) தான் இருக்கமுடியும்.** இது சாதாரண ஓர் மனிதனும்கூட விளங்கிக்கொள்ளக் கூடிய ஓர் விஷயமாயிருந்தும்,**பட்டம் பதவிகளைப் பெற்ற ஒருசில உலமாக்களே இதை எள்ளளவும் சிந்தனைக் கெடுக்காமலே கண்மூடித்தனமாய் மறுக்கிறார்கள், எதிர்க்கிறார்கள் என்றால் நாம் அவர்களை உலமாக்கள் என்று எப்படிக் கூறுவது?** பட்டம் பெற்ற முட்டாள் என்றுதானே கூறவேண்டும். (படித்ததினால் அறிவிழந்தோரும் பல்லாயிரம் உண்டல்லாவா)

ஆயினும் இவ்விஷயத்தில் எமக்கு வேறுபல சந்தேகங்களும் கேள்விகளும் பிறக்கின்றன. அதாவது.

**1ஆவது:** கலிமாவுக்குரியது ஒரே பொருள்தான் என்றாலும் மனிதனுடைய அறிவு விளக்கத்துக்கேற்றபடி பல பொருட்களைக் கூறி விளக்கினால் என்ன?

**2ஆவது:** பல தெய்வங்கள் உண்டென்று நம்பிய மக்களுக்கு பலாத்காரமாய்ப் பொருள் கூறி ஒரே இறைவனை முதலில் ஏற்றுக்கொள்ளச்செய்து அதன்பின் படிப்படியாய் உண்மையை வெளிப்படுத்தி மக்களை நேர்வழியில் நடாத்துவதற்காகக் கலிமாவுக்குப் பல பொருட்களைக் கற்பனை பண்ணுவதில் என்ன தவறு?

**3ஆவது:** பெரும்பெரும் மேதைகளான எம்முன்னோர்கள் இந்த உண்மையை அறியாதவர்களாய் இருந்திருப்பார்களா?

**4ஆவது:** மனிதர்களுடைய அறிவுக்கேற்றபடி பேசும்படியாய் றசூலுல்லாஹ்வே கூறியிருப்பதால் கலிமாவுக்குப் பல பொருட்களைக் கற்பித்து மனிதர்களுடைய அறவுக்கேற்றபடி எம்முன்னோர் விளக்கிச் சென்றுள்ளர்கள் என்று நாம் எடுத்துக் கொண்டால் அதில் என்ன தவறு?

என்பவை போன்ற பல சந்தேகங்கள் எமக்கு ஏற்படுகின்றன. இவ்விஷயத்தில் உண்மையான தௌஹீதுக்கு நேர்மாறான பலவிஷயங்களும் வழிகேடும் தங்கியிருக்கின்றன. **இதைப் பொறுமையோடு அமைதியாய் ஒவ்வொன்றாய்த் தெளிவாய் நாம் விளங்கியறிய வேண்டியதாய் இருக்கிறது.** இதை நாம் விளங்கித் தெளிவோம். நாம் தொகுப்பாய் முதலில் கூறுகிற விபரங்களை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். அப்படியானால்தான் எமது சந்தேகங்களை உள்ளபடி நாம் நீக்கிக் கொள்ள முடியும்.

## (3)

நம்முடைய மூதாதையர்கள் கூறியிருப்பதே சரி என்றிருந்தால் றசூல்(ஸல்) அவர்களே கலிமாவுக்குப் பல பொருட்களை கற்பனை பண்ணிக்கூறி அந்த இருண்டகால மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றிருப்பார்கள் அப்படிக்கூறாமல்,**அந்த அறிவு குறைந்த மக்கள் கலிமா உணர்த்தும் பொருளைத் தெளிவாய் அறியக்கூடியதாகவும் அந்தப்பொருளை அறிவினால் ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாகவும் இருந்தமையால்தான் றசூல்(ஸல்) அவர்களை எதிர்த்தார்கள்.** பைத்தியக்காரர், பொய்யர் என்றெல்லாம் கூறினார்கள். றசூல்(ஸல்) அவர்கள் துன்யாவுக்கு அனுப்பப்பட்டதே கலிமாவைக் கூறித் தௌஹீதை விளக்கிவைத்து மக்களுக்கு வழிகாட்டுவதற்காகத்தனே அவர்கள் வந்தவேலையில் முழுநோக்கமே மக்களால் உணர்ந்து கொள்ள முடியாமல் இருந்த தௌஹீதை உணர்த்துவதுதான். அப்படி அதற்காகவே வந்த நபியவர்கள் வந்தவேலையை அரைகுறையாய் விட்டுவிட்டுச் சென்றுள்ளார்கள் என்று எவராலும் கூறமுடியாது. **அந்த றசூல்(ஸல்) அவர்கள் எங்கேயாவது எப்போதாவது எவரிடத்திலாவது, எக்காரணத்துக்காகவாவது, கலிமாவுக்குப் பல பொருட்கள் உண்டு என்று வெளிப்படையாய் அல்லது மறைமுகமாய், அல்லது உவமைகள் மூலமாய் கூறியதே கிடையாது. இதற்கு எந்த ஓர் ஹதீஸிலும் குர்ஆனிலும் எவ்விதமான ஆதாரமுமே கிடையாது.**

குர்ஆனுக்கு மாற்றமாய் நான் கூறமாட்டேன். அப்படிக் கூறியிருப்பதாய் உங்களுக்கு தென்பட்டால் **என் சொல்லை நீக்கிவிட்டு குர்ஆனைப் பின்பற்றுங்கள்** என்று கூறிய அதே றசூலுல்லாஹ்வுடைய நாவின் மூலம் வெளியானதுதான் நாம் முன்பு காட்டிய 3-7ஆவது குர்ஆன் ஆயத்தும். இந்த ஆயத்தில் கலிமா ஒரே கருத்துடையது என்று இறைவன் விளக்கியுள்ளதை அந்த றசூல்(ஸல்) அவர்களே மறுத்திருப்பார்களா? கலிமாவுக்குப் பல பொருட்களைக் கூறியிருப்பார்களா? குர்ஆனில் வீண்தர்க்கம் செய்வது நிராகரிப்பு (குபிர்) என்று கூறுகிற றசூல்(ஸல்) அவர்கள் குர்ஆனுக்கு மாற்றமாய்க் கூறியிருக்கமுடியுமா? ஐந்து கலிமாக்களை கூறியிருப்பார்களா?

**ஹதீஸ்:** ***திருக்குர்ஆனில் வீண்தர்க்கம் செய்வது நிராகரிப்பாகும். என்று நபியவர்கள் கூறினாாகள்.***

**அறிவிப்பவர்: அபூஹுரைரா(றலி)**
**ஆதாரம்: அபூதாவுத்**

فَمَنْ أَظْلَمُ مِمَّنِ افْتَرَىٰ عَلَى اللَّهِ كَذِبًا أَوْ كَذَّبَ بِآيَاتِهِ ۚ إِنَّهُ لَا يُفْلِحُ
الْمُجْرِمُونَ

10:17 *அல்லாஹ்வின்மீது பொய் சொல்பவனை அவனுடைய வசனங்களைப் பொய்யாக்குபவனைவிட, அக்கிரமக்காரன் யார்? குற்றவாளிகள் சித்தியடையவேமாடடார்கள்.*

இவ்விஷயத்தில் மிகவிரிவான விளக்கத்தை “ஸிர்க்” என்றால் என்ன என்ற தலைப்பிலும் சந்தேக நிவர்த்தி என்ற தலைப்பிலும் **உன் அறிவு ஏற்றுக்கொள்ளக்கூடியதான ஆதாரங்களோடு விளக்கியுள்ளேன்.** இப்போது, அறிவில் நடுத்தர வகுப்பைச்சேர்ந்த நீ அவற்றை விளங்குவது கஸ்டமே. ஆகவே பொறுமையோடு தொடர்ந்து செல்லவும்.

கலிமத்துத்தையிபா ஒரே கருத்துடைய முஹ்கமாத்தைச் சேர்ந்ததுதான் என்று இவ்வளவு தெளிவாய் அறிந்தபின்பும் எங்களுடைய நாதாக்களின் அல்லது இமாம்களின் விபரத்தையே நான் ஏற்றுக்கொள்வேன் என்று நீ கூறுவதனால் என்னால் எதுவுமே செய்யமுடியாது. ஆனால் என்னுடைய இமாம் குர்ஆன்தான். அபூஸமதுகுத்ரீ(றலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட ஓர் ஹதீஸ் திர்மிதியில் காணப்படுகிறது. அதில் **மக்களுடைய பயம் எவரையும் உண்மையைக் கூறத் தடைசெய்யாதிருக்கட்டும். அவர் அதனை உள்ளபடி அறிந்திருப்பாரானால் என்று கூறப்படுகிறது. ஹதீஸ் நீளமாய் இருப்பதால் இங்கே எழுதப்படவில்லை.**

**ஹதீஸ்:** ***என் சமூகத்தவரின் மறுத்தவரைத்தவிர ஏனையோர் சுவனம் செல்வர் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறியபோது மறுத்தவர்கள் யார் என்று தோழர்கள் வினவினர். எவர் என்னைப் பின்பற்றி ஒழுகின்றாரோ அவர் சுவனபதி செல்வார். அன்றி எவர் எனக்குமாறு செய்தாரோ அவர் நிச்சயமாக மறுத்தவரே ஆவார். என்ற றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூஹுரைரா**
**ஆதாரம்: புஹாரீ**

மறுப்பவர் நிராகரிப்பவர் யார்? என்பதை நீ சிந்தனை செய்.

فَلَا تُطِعِ ٱلْكَٰفِرِينَ وَجَٰهِدْهُم بِهِۦ جِهَادًا كَبِيرًا

25:52 *ஆகவே நீர் நிராகரிப்பவர்களுக்கு வழிப்படாதீர். இந்தக்குர்ஆனைப் பற்றி நீர் அவர்களுடன் பலமாகத் தர்க்கம் செய்யும்.*

وَلَقَدْ صَرَّفْنَا فِى هَٰذَا ٱلْقُرْءَانِ لِلنَّاسِ مِن كُلِّ مَثَلٍ ۚ وَكَانَ ٱلْإِنسَٰنُ أَكْثَرَ
شَىْءٍ جَدَلًا

18:54 *மனிதர்களுக்கு இந்தக் குர்ஆனில் ஒவ்வோர் உதாரணத்தையும் விபரித்தே இருக்கிறோம். எனினும் மனிதனோ அதிகமாக (வீண்) தர்க்கம் செய்பவனாக இருக்கிறான்*

**உண்மை இப்படியிருக்கும்போது ஆரம்ப மதுரஸாக்களிலேயே மாணவர்களுக்கு ஐந்து கலிமாக்களையும் ஒரே கருத்துடைய கலிமாவுக்குப் பல பொருட்களையும் கற்பித்தே (ஈமானின்) இஸ்லாத்தின் ஆரம்பத்தை உணர்த்துகிறோம்.** ஆனால் என்னறிவுக் கெட்டியவரையில் மதுரஸாக்களில் கடைமையாற்றும் பொறுப்புவாய்ந்த ஆசிரியர்களோ சமூகத்திலுள்ள அறிஞர்களோ கல்விகற்று வெளியேறும் பட்டதாரி மாணவர்களோ இவ்விஷயங்களைச் சிந்தனைக் கெடுத்ததாய் தெரியவில்லை. மதுரஸாக்களின் பாடநூற்களைப் பாடத்திட்டங்களை குர்ஆன், ஹதீஸ் பகுத்தறிவின் ஆதாரங்களுக்கமைவாய் மாற்றி அமைக்கபட்டதாயும் தெரியவில்லை. பூர்வீககாலத்தில் இருந்தே ஒருவரையொருவர் பின்பற்றித்தான் கல்வி போதிக்கப்படுகிறதேயல்லாமல் **உண்மையின் அடிப்படையிலேயே கல்வி போதிக்கப்படுகிறது என்று கூற முடியாமலே இருக்கிறது.** குர்ஆன் ஹதீஸ்களில் எங்கேயாவது ஐந்து கலிமத்துத் தையிபாக்களுண்டென்று கூறப்படாமல் இருக்கும்போது,**குர்ஆன் ஹதீஸ்களுக்குமாறான, மார்க்கத்துக்கு விரோதமான இந்தத்தவறான அடிப்படையில், கலிமாவுக்குப் பல பொருட்களுண்டு என்ற அடிப்படையிலேயே கல்வியை கற்று வெளியேறும் மாணவன் உண்மையை எப்படி ஒப்புக்கொள்வான்? உண்மையை எப்படி உபதேசிப்பான்?**

இவ்விஷயத்தில் அறியவேண்டிய பல உண்மைகளும் நுட்பங்களும் தென்படுகின்றன. அவற்றை உரிய உரிய இடங்களில் கண்டறிவோம்.

**ஹதீஸ்:** ***நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு 3 காரியங்களைவிட்டும் அபயமளித்திருக்கிறான்.***

**1ஆவது:** ***நீங்கள் யாவரும் அழிந்துவிட உங்கள் நபி உங்களை சபியாதிருத்தல்***

**2ஆவது:** ***பொய்யர்கள் உண்மை சொல்பவர்களை வெற்றிகொள்ள அல்லாஹ் விடமாட்டான்.***

**3ஆவது:** ***வழிகேட்டில் நீங்கள் அனைவரும் ஒன்றுசேரமாட்டீர்கள்.***

அறிவிப்பாளர்:அபூமாலிக் அஸ்அரீ(றலி)
ஆதாரம்: திர்மிதீ

(இவ்வாக்கியத்தில் பலநுட்பங்கள் தென்படுகின்றன. பின்னால் விபரம் தரப்படும்)

ஹதீஸ்: *கைஸுப்னு அபீஹாஸிம்(றலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட ஓர் நீண்ட ஹதீஸில் அறியாமைக் காலத்துக்குப்பின் அல்லாஹ் நல்கிய இந்த மார்க்கத்தில் எங்களின் வாழ்வு எவ்வளவு காலம் நீடிக்கும் என்று அபூபக்கர்(றலி) அவர்களிடம் ஓர் பெண் வினவினாள். அதற்கு அவர்கள் உங்களுடைய இமாம்கள் நேர்மையாய் இருக்கும் வரை என்றனர். இமாம்கள் என்றால் யார்? என்று அப்பெண் மீண்டும் வினவினாள். அதற்கு அவர்கள் அறிந்து கொள்ளும் உம்முடைய கூட்டத்தாரில் கட்டளை பிறப்பித்து அவர்களை அதற்குப் பணிந்து நடக்கச் செய்யும் தலைவர்களும் சிறப்புமிக்கவர்களும் இல்லையா? அவர்கள்தான் கூறினார்கள்.*

அறிவிப்பாளர்: கைஸீப்னு அபிஹாசிம்(றலி)
ஆதாரம்: புஹாரி

ஆகவே எம்வழிகாட்டிகளான அபூஹனிபா(றஹ்), ஸாபி, அம்பலி, மாலிகி போன்ற இமாம்கள்தான் கலிமாவுக்கு பல பொருட்களுண்டு என்று கூறியிருந்தாலும் கூட அது மறுக்கப்படவேண்டிய ஒன்றேயாகும். இமாம்கள்தான் அப்படிக் கூறினார்கள் என்பது சரியாய் உறுதிப்படவில்லை. அப்படி அவர்கள் கூறியிருந்தாலும் கூட அது அவர்களின் அறியாமையும் தவறுமேயாகும். ஏனென்றால் மக்களால் இமாம்கள் என்று கணிக்கப்பட்ட அவர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரமுமே கிடையாது. அவர்களும் எம்மைப் போன்ற தவறு செய்யக்கூடிய மனிதர்களேதான். றசூல் (ஸல்) அவர்களே உலக விவகாரங்களில் சில தவறுகளைச் செய்துள்ளார்கள் என்பது தென்படுகிறது.

فَاعْلَمْ أَنَّهُ لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ وَاسْتَغْفِرْ لِذَنبِكَ
وَلِلْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ

47:19 *(நபியே!) நிச்சயமாக அல்லாஹ்தவிர இலாஹுஇல்லை என்பதை நீர் உறுதியாக அறிந்துகொண்டு நீர் உம்முடைய தவறுகளை மன்னிக்ககோருவதுடன் விசுவாசம் கொண்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் மன்னிப்பைக்கோருவீராக. உங்களுடைய நடமாட்டத்தையும்நீங்கள் தங்கும் இடங்களையும் அல்லாஹ் அறிவான்.*

தவறு எவ்வகையிலுள்ளதேயாயினும் றசூலுக்கும் தவறுண்டு என்பதை ஆயத்தைக் கொண்டு நாம் அறிகிறோம். அவர்களிடம் தவறில்லாதிருந்தால் அவர்களைக் காமீல் என்று கூறமுடியாது.

ஹதீஸ்: *றசூல்(ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது மதீனாவாசிகள் பேரீச்சை மரங்களுக்கு ஒட்டுவைத்து ஆண்பாளைகளைப் பெண்பாளைகளோடு சேர்த்துக் கட்டிக் கொண்டிருந்தார்கள். அப்போது றசூல்(ஸல்) அவர்கள் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். நாங்கள் வழக்கமாகச் செய்துவந்த ஒன்றைச் செய்கிறோம் என்று அவர்கள் கூறினார்கள். அதைக்கேட்ட றசூல்(ஸல்) அவர்கள் நீங்கள் அவவிதம் செய்ய வேண்டாம் என்று கூறினார்கள். எனவே அவர்கள் அவ்விதம் செய்வதைக் கைவிட்டு விட்டார்கள்.அதன் காரணமாக மரங்கள் காய்க்கவில்லை. இச் செய்தி றசூல்(ஸல்) அவர்களிடம் அறிவிக்கப்பட்டபோது உங்களின் மார்க்கம் பற்றி ஒன்றைநான் உங்களுக்குக் கட்டளையிடுவானேயாயின் அதனை நீங்கள் கடைபிடித்து ஒழுகுங்கள்,அன்றி நான் உங்களுக்கு என் ஆலோசனையின்படி ஒன்றைக் கூறினால் நிச்சயமாக நானும் மனிதன்தானே (உங்கள் நோக்கப்படி செயலாற்றுங்கள்) என்று கூறினார்கள்.*

அறிவிப்பவர்: இப்னுகதீஜ் (றலி)
ஆதாரம்: முஸ்லீம்

இதேபோல் இன்னும் பலஹதீஸ்கள் தென்படுகின்றன. நாம் இந்த ஒன்றையே போதுமாக்குவோம்.

ஆகவே காத்தமுன் நபிய்யீனான றசூல்(ஸல்) அவர்கள் தவறு செய்திருக்கும்போது, அவர்களுடைய ஆலோசனையே தவறியிருக்கும்போது,சாதாரண மனிதர்களான இமாம்களுடைய, எம்முன்னோருடைய, எம்முடைய யோசனைகள் தவறாது என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? இமாம்களுடைய ஆலோசனைகள் தவறாயிருந்தால் இது ஓர் ஆச்சரியமான செய்தியேயல்ல. இமாம்கள் அக்கால அரசியல், சூழ்நிலைகளைப் பயந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கமாகக்

**கலிமாவுக்குப் பல பொருட்களைக் கூறுவதே உபாயம் என்று கண்டிருக்கலாம்.** அல்லது மக்களுடைய அறிவுக்கேற்றதாய்ப் பேசும்படி றசூலுல்லாஹ் கூறியுள்ள ஒருசில ஹதீஸ்களை அவர்களுடைய வஹ்முக்கேற்றபடி பொருள்கொண்டதால் அப்படிக் கூறியிருக்கலாம். இன்றுள்ள அறிஞர்களிலும் ஒருசிலர், நபியுடைய ஹதீஸ்கள் மக்களுடைய அறிவுக்கேற்றபடி விபரம் கொடுக்க வற்புறுத்துவதால் கலிமாவுக்குப்பல பொருட்களைக் கூறுவதே பொருத்தம் என்று கூறுகிறார்கள். ஆகவே இந்த ஹதீஸ்களை நாம் நோட்டமிட்டுப் பார்ப்போம்.

**ஹதீஸ்:** ***ஜனங்கள் விளங்கிக் கொள்ளக்கூடாத விதமாய்ப் பேசுகின்ற ஒவ்வோருவனுடைய வாக்கியமும் அவர்களில் குழப்பத்தை உண்டாக்குவதற்குக் காரணமாகிறது.***

**ஹதீஸ்:** ***ஜனங்கள் விளங்கக்கூடிய வாக்கியங்களைக் கூறி அவர்களால் விளங்க முடியாத வார்த்தைகளைப் பேசாமல் இருக்கவேண்டும், அல்லாஹ்வையும் நம்மையும் பொய்யாக்கவேண்டாம்.***

**ஹதீஸ்:** ***அன்பியாக்களாகிய நாங்கள் ஜனங்களின் புத்திக்குத் தக்க பிரகாரமே பேசும் படியாய்க் கற்பிக்கப்பட்டிருக்கிறோம்.***

**ஹதீஸ்:** ***ஒரு கூட்டம் விளங்கிக்கொள்ளக் கூடாத செய்தியைப் பேசுகிற ஒவ்வொருவனுடைய செய்தியும் அவர்களுக்கு அபத்தமாய் விடுகின்றன.***

இவ்விதமான ஹதீஸ்களை உண்மையான பகுத்தறிவோடு சிந்தனை செய்து பார். மக்கள் விளங்கக்கூடிய விதமாய், விளங்கக்கூடிய பாஷையில், விளங்ககூடிய வசன நடையில், பாணியில் விளக்கவேண்டும் என்றுதான் ஹதீஸ்கள் விளக்குகின்றனவேயன்றி, வேறு எதுவும் கூறப்படவில்லை. மக்கள் அறிவு விளக்கம் குறைந்தவர்களாய் இருப்பதால் உண்மையைப் புரட்டியோ மறைத்தோ கூறப்பட வேண்டும் என்று எந்த ஹதீஸும் விளக்கம் தரவே இல்லை. ஆனால் எங்களுடைய (வஹ்மு) பேதபுத்தி இப்படிப் புரட்டி மறைக்க வேண்டும் என்று நம்புகின்றது. விளங்கிக்கொள்ளக் கூடாத செய்தியைப் பேசுகிற ஒவ்வொருவருடைய வாக்கியமும் குழப்பத்தை, பித்னாவை உண்டாக்கும் என்று கூறப்பட்டிருப்பதாலும், கலிமாவின் பொருள் விளக்கத்தை மக்கள் அறிய முடியாதவாகளாய் இருப்பதாலும் கலிமாவுக்குப் பல பொருள்களைக் கற்பிக்கவும் உண்மையை மறைக்கவும் நாம் முற்படுகிறோம். இது எங்களுடைய பேதபுத்தியேயாகும். இந்த பேதபுத்தி, மக்களிடையே குழப்பதை ஏற்படுத்தாமல் பொதுசன பாதுகாப்புக்காக உண்மையை மறைப்பதும் புரட்டுவதுமே சரியென்று கானுகிறது.

ஆனால் எம்மையும் அல்லாஹ்வையும் பொய்யாக்க வேண்டாம் என்று அதே ஹதீஸ் அறிவிப்பதால் அல்லாஹ்வும் றசூலும் ஒப்புக்கொண்ட உண்மையை மறைத்துப் புரட்டக்கூடாது என்பதும் மறைக்கப்பட வேண்டிய, மக்களுடைய அறிவுக்கேற்றபடி பேச வேண்டிய விஷயம் அதுவல்ல என்பதும் எம்முடைய பகுத்தறிவுக்குத்தென்படவே செய்கிறது. முன்பு தந்த ஹதீஸ்களைக் கூறிய அதே றசூல்தான், பொதுசன பாதுகாப்பைப் பொருட்படுத்தாமல் கலிமாவின் இரகசியங்கள் நீங்கலாக உள்ள பொதுப்படையான உண்மையைப் பாமரமக்களிடையே எவ்வித ஒளிப்பும் மறைப்பும் புரட்டுமில்லாமல் வெளிப்படுத்தினார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்தப் பாமர மக்கள் கலிமாவின் உண்மைப் பொருளைத் தெளிவாய் அறிந்தும் அப்பொருளை அவர்களுடைய அறிவு ஏற்றுக்கொள்ளாமல் மறுத்தபோது வாளைக்கொண்டு யுத்தம் செய்து பலாத்காரமாகவே உண்மையை றசூல்(ஸல்) அவர்கள் உணர்த்தியிருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகவே எமக்கு தெரிகிறது.

**ஹதீஸ்:** ***மக்கள், அல்லாஹ் தவிர இலாஹு இல்லை, திட்டமாக முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய துதாராவர் என்று சாட்சி கூறித் தொழுகையைக் கடைப்படித்தொழுகி, சக்காத்தும் கொடுத்து வராத வரையில் அவர்களுடன் அறப்போர் (பீஸபீல்) புரியுமாறு இறைவன் எனக்கு ஆணையிட்டுள்ளான். இவ்விதம் அவர்கள் செய்து வருவார்களானால் அவர்களுடைய உயிர்களையும் பொருட்களையும் என்னைவிட்டும் காத்துக்கொண்டவர்களாவார்கள். இஸ்லாத்தின் கடமைகளைத் தவிர அவர்களுடைய கணக்கு அல்லாஹ்விடமிருக்கிறது என்ற றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அப்துல்லாஹ இப்னு உமர்**(றலி)
**ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்**

ஆகவே தற்கால மக்களின் பாதுகாப்புக்காக உண்மையை மறைக்க வேண்டுமென்பதும் புரட்ட வேண்டுமென்பதும் மருட்சியாகும். ஏனென்றால் தற்கால மக்களின் பாதுகாப்புக்காக உண்மை புரட்டப்பட்டால் அல்லது திரிபுபடுத்தப்பட்டால் இறுதிநாள்வரையிலும் வாழவேண்டிய அத்தனை மக்களும் வழிதவறவேண்டியேற்படும். அதாவது அவசியமற்ற ஒருவருடைய பாதுகாப்புக்காக அவசியமான ஓராயிரம் பேரைக் கொல்வதுபோலாகும். ஆகவே தற்கால மக்களின் (அறிவிலிகளின்) பாதுகாப்புக்காக எதிர்காலத்தில் வரவேண்டிய பல கோடான கோடி மக்களை மூடத்தனமான இருளில் தள்ளுவது எப்படி நீதியாகும். ஆகவே றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸ்களின் உண்மையைக் கூறும்போது அதை விளங்கி உணர்ந்து கொள்ள முடியாத அறிவு குறைந்த மக்களிடையே குழப்பம், பித்தலாட்டம் ஏற்படும் என்பதும் விளக்குபவர்களுக்கு இன்னல்கள் ஏற்படுமென்பதும் றசூல்(ஸல்) அவர்கள் தங்கள் வாழ்வில் கண்டறிந்த மறுக்கமுடியாத உண்மை அனுபவமாக இருக்கிறது. ஆகவே அதற்குத் தகுந்த உபாயங்களோடு, விளங்கக்கூடிய பாஷையில்

உண்மையைப் புரட்டாமல் அல்லாஹ்வையும் எம்மையும் பொய்யாக்காமல் விளக்கப்பட வேண்டும் என்றும், இல்லாவிட்டால் கஷ்டநஷ்டம் ஏற்படும் என்றும்தான் **ஹதீஸ்கள் மூலம் முன்னறிவித்தல் செய்திருக்கிறார்கள்.** இதைப் பகுத்தறிவைப் பயன்படுத்திப் புரிந்துகொள்ளாமல் பொதுசன பாதுகாப்புக்காக உண்மையை மறைக்க வேண்டும் என்று விளங்குவது வஹ்மின் மருட்சியாகும்

**ஹதீஸ்:** ***(கருத்துக்களை விட்டுவிட்டு) சொல்லழகில் மூழ்குபவர் நாசமாகட்டும் என்று நபி(ஸல்) அவர்கள் மூன்று முறை கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: இப்னுமஸ்வூத்** (றலி)
**ஆதாரம்: முஸ்லிம், அபூதாவுத்**

**(4)**

குர்ஆனுக்குமாறான அபிப்பிராயத்தைக் கொள்வதற்கு முஸ்லீம்கள் மூமின்களான எந்த ஓர் ஆண்பெண்ணுக்கும் றசூலுல்லாஹ்வுக்கும் கூட உரிமை கிடையாது.

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى ٱللَّهُ وَرَسُولُهُۥٓ أَمْرًا أَن يَكُونَ لَهُمُ
ٱلْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ ۗ وَمَن يَعْصِ ٱللَّهَ وَرَسُولَهُۥ فَقَدْ ضَلَّ ضَلَٰلًا مُّبِينًا

33:36 *அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் யாதொரு விஷயத்தைப்பற்றிக் கட்டளையிட்டபின்னர் அவ்விஷயத்தில் வேறு அபிப்பிராயம்கொள்வதற்கு விசுவாசியான எந்த ஆணுக்கும் எந்தப் பெண்ணுக்கும் உரிமையில்லை. அல்லாஹவுக்கும் அவனுடைய தூதருக்கும் எவரேனும் மாறுசெய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கின்றனர்.*

ஆகவே ஆரம்பத்தில் இமாம்கள்தான், அதிலும் விசேடமாக முதன்முதல் உண்டான ஹனபி இமாம் அவர்கள்தான் கலிமாவுக்குப் பலபொருட்கள் உண்டு என்று கூறினார்களென்பதாக யாராவது சொன்னால் **இதுவிஷயத்தில் நாம் அவர்களை இமாமாக ஏற்க முடியாது.** ஏனென்றால் “ஹனீப்” என்ற சொல் முற்றாக சரியானதை நம்புவர் என்று கருத்துக்கொள்ளும்.“அபூஹனீபா” என்றால் நம்புகிறவர்களின் தந்தையென்றோ, முற்றாகச் சரியானதை நம்புகிறவர்களின் தந்தையென்றோ கூறலாம். முற்றாகச் சரியானது எது? முற்றாகச் சரியானது குர்ஆன்தான். அது இறைவனுடைய பேச்சு. ஆகவே முற்றாகச் சரியான குர்ஆன், கலிமா முஹ்கமாத்தைச் சேர்ந்த ஒரே கருத்துடையது என்று விளக்குவதை ஏற்றுக் கொள்ளாமல் அந்தக் குர்ஆனுக்கு மாற்றமாய்க் **கலிமாவுக்குப் பல பொருட்களுண்டு என்று கூறுகின்ற ஒருவரை, முற்றாகச் சரியானதை நம்புபவர்களின் தந்தை (அபூஹனிபா) என்று எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?** றசூல்(ஸல்) அவர்களால் அறிவிக்கபட்ட அபூஹனிபா என்பவர் இந்த **நுஹ்மான் (றஹ்) என்பவர்தான் என்று கூறுவதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?** ஷாபி, ஹனபி, மாலிக், ஹம்பலி மதுஹபுகளை வகுத்தளித்த இமாம்களே கலிமாவுக்குப் பல பொருட்களைக் கற்பித்துக் கூறினார்கள் என்பது உண்மையானாலும் கூட **அது அவர்களின் வஹ்மும் பின்பற்றலுமேயாகும்.**

**ஹதீஸ்:** (இது முன்பும் தரப்பட்டுள்ளது)

***ஆண்டவனே இமாம்களுக்கு நேர்வழிகாட்டிப் பாவங்களுக்கு மன்னிப்புப் கொடுப்பாயாக. என்று றசூல் (ஸல்) அவர்கள் துஆகேட்டிருக்கும்போது இமாம்கள் குற்றம், தவறு செய்யமாட்டார்கள் என்பதற்கு ஆதாரம் கிடையாது.***

**இந்த இமாம்களின் காலம்தான் இஸ்லாத்தில் பொய் பரவிய காலமாகும்.** நான் முன்பு விளக்கம் தந்த உமரே பாறுக்(றலி) அவர்களின் வாயிலாய் அறிவிக்கப்பட்ட ஹதீஸில், காலங்களில் சிறந்தது என்னுடைய காலமும் அதன் பின் என்னை அடுத்தவர்களின் காலமும் அதன்பின் அவர்களை அடுத்தவர்களின் காலமும் ஆகும். அதன்பின் பொய்பரவிவிடும் என்று சுட்டப்பட்ட காலம் 30 வருடங்கள் மட்டும்தான் உண்மையான ஈமான், இஸ்லாம் இருந்திருக்கிறது. அதன்பின் படிப்படியாய் இஸ்லாமும் அதன் மூலக்கொள்கையான தௌஹீதும். தலைகீழாய்ப் புரட்டப்பட்டு இன்று தௌஹீது ஸிர்க்குப்போலவும் ஸிர்க் தௌஹீதுபோலவும் மக்களுடைய அறிவுக்குத் தென்படுகிறது. இதை ஆராய்ச்சி செய்பவர்கள் நன்கு அறிவார்கள். எழுபதுக்கும் அதிகமான மதுஹபுகளும் இமாம்களும் தோன்றி மறைந்திருக்கிறார்கள். இன்று மீதமாயுள்ளது நான்குதான். அபூஹனிபா என்று கூறப்படுகிற நுஹ்மான் இப்னுதாபித்(றஹ்) என்பவருடைய காலம் ஹிஜ்ரி 80-150 ஆகும். (இதுதான் ஹனபி மதுஹபு) இரண்டாவது மதுஹபு மாலிக். இதன் காலம் ஹிஜ்ரி 95-179 ஆகும். மூன்றாவது மதுஹபு ஷாபி. இதன் காலம் ஹிஜ்ரி 150-204 ஆகும். நான்காவது மதுஹபு ஹன்பல். இதன் காலம் ஹிஜ்ரி 164-241 ஆகும்.

இந்த மதுஹபுகளையும் இவைகளை உருவாக்கிய இமாம்களையும் தெளிந்த அறிவோடும் பல கண்ணோட்டங்களோடும் ஆராய்ந்து பார்த்தால் **கலிமாவுடைய விஷயத்தில் இவர்களும் ஒருவரையொருவர் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றியே சென்றிருக்கிறார்கள் என்பது தென்படுகிறது.** கலிமாவுடைய விஷயத்தில் இவர்கள் சிற்சில தவறுகளைவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்றாலும்

மற்றும் பல காரியங்களில் **மக்களுக்கு மிக அநேக நன்மைகளைச் செய்தே இருக்கிறார்கள் என்பதை மறுக்கமுடியாது.** நாம் அவர்கள் செய்த நன்மைகளுக்காக அவர்களைப் பெரியார்களாகக் கணிக்கவும் நன்றி செலுத்தவும் வேண்டும் என்பது உண்மை, அதேவேளை அவர்களால் தவறு ஏற்பட்டிருந்தால் அத்தவறுகளை நீக்கிவிட்டு நாம்செயல்பட வேண்டும் என்பதும் உண்மை.

**ஹதீஸ்:** ***உங்களில் இறந்தவர்களுடைய நற்காரியங்களுக்காக நன்றி கூறுங்கள். அவர்களுடைய தீயகாரியங்களை விட்டுவிடுங்கள் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: உமர்** (றலி)
**ஆதாரம்: அபூதாவூத்.**

நான் கூறியுள்ள விஷயங்களுக்குமாறாக ஆதாரங்களை நீங்கள் கண்டால், என் சொல்லைவிட்டுவிட்டு ஆதாரங்களைக் கைக்கொள்ளுங்கள் என்று அபூஹனிபா(றஹ்) அவர்களே கூறியுள்ளதாக “ஹுசைன் ஹில்மி இஸ்க்” என்பவரும் இன்னும் பலரும் அவர்களுடைய கிதாபுகள் மூலமாக அறிவிக்கிறார்கள். ஆகவே உண்மையான சரியான **ஆதாரத்தைக் காணும் போது ஆதாரத்துக்கு மாறான எவருடைய எந்தச் சொல்லையும் நாம் ஏற்றுக்கொள்வது அறிவுடமையாகாது.** இவ்விஷயத்தில் மிகப்பிரபலம்வாய்ந்த மேதைகளான அறிஞர்களை நான் குறைகூறுகிறேன் என்று நீ நினைப்பாயேயானால் அது உன்னடைய தவறேயன்றி என்னுடையதவறாகாது. ஏனென்றால் உண்மையை விளக்கும்போது உண்மை அல்லாதது பிழையாய்க் கணிக்கப் படுவது நியாயமே அல்லாமல், எவரையும் **இழிவுபடுத்திக் குறை கூறுவது என்பது பொருளாகாது.**

**ஹதீஸ்:** ***கடைசிநாளையில் வருகிற தஜ்ஜாலைவிட வேறுசில தஜ்ஜால்களுக்கு நான் மிகப்பயப்படுகிறேன் என்ற றசூல் (ஸல்) அவர்கள் கூற அவர்கள் யாரென்று ஸஹபாக்கள் வினவ வழிகேட்டில் ஜனங்களைத் தள்ளிவிடுகிற இமாம்கள் என்று பதில் கூறினார்கள்.***

இந்த ஹதீஸை கஸ்ஸாலி(றஹ்) அவர்களுடைய எஹ்யா உலூமித்தீன் என்ற கிதாபில் விளக்கியுள்ளார்கள். (இதுவும் முன்பு தரப்பட்டுள்ளது)

فَرِيقًا هَدَىٰ وَفَرِيقًا حَقَّ عَلَيْهِمُ ٱلضَّلَٰلَةُ ۗ إِنَّهُمُ ٱتَّخَذُوا۟ ٱلشَّيَٰطِينَ
أَوْلِيَآءَ مِن دُونِ ٱللَّهِ وَيَحْسَبُونَ أَنَّهُم مُّهْتَدُونَ

7:30 *சிலரை அவன் நேரான வழியில் செலுத்தியிருக்க மற்றவர்கள் மீதுவழிகேடே விதிக்கப்பட்டதன் காரணம் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையன்றி ஷைத்தான்களையே தங்கள் அவ்லியாக்களாக (காரியஸ்த்தர்களாக) எடுத்துக்கொண்டதுடன் தாங்கள் நிச்சயமாக நேரானவழியில் இருப்பதாகவும் எண்ணிக்கொண்டதுதான்.*

ஒரு கிதாபை எழுதுவர் அல்லது ஓர் மார்க்க விளக்கம் தருபவர் அறபுமொழி படித்தவராக, தாடி, தலைப்பாகை, பட்டம், பதவி உடையவராக, கடினமான அமல்களில்ஈடுபடுபவராகத் தென்பட்டால் **அவரை மக்கள் (அவ்லியாவாக) ஒலியாக நம்பிவிடுகிறார்கள்.** இந்த மனிதர் எந்த வழியைக் காட்டினாரோ அந்தப் பாதையில் செல்லும் மக்கள் தாங்கள் நேரானபதையில் செல்வதாகவே நம்பியும் விடுகிறார்கள். ஆனால் தாங்கள் குர்ஆனுக்கு விரோதமாய்த் தவறான போதனையில் மூழ்கித் தவறான பதையிலேயே செல்கிறோம் என்பது அவர்களுக்குத் தென்படுவதே இல்லை. ஏனென்றால் தங்களுக்கு வழிகாட்டியவர்கள் ஒலிகளே என்று நம்பியிருப்பதால் அவர்கள் தங்களை, தங்கள் செயல்களைச் சிந்திப்பதே இல்லை. **இவ்விதமாகத் தவறானவழிகளைக் காட்டுவோரை இறைவேதம் ஷைத்தான்கள் என்று கூறுவதைச் சிந்தனைசெய்து தெளிவுபெறு.**

இவ்விதமான ஷைத்தான்களின் விஷமச்செயல் கொலையைவிட கடினமானது என்பதைக் குர்ஆன் விளக்கம் தருகிறது.

وَٱلْفِتْنَةُ أَكْبَرُ مِنَ ٱلْقَتْلِ ۗ

2:217 *விஷமம் கொலையைவிட மிகக் கொடியது.*

ஆராய்வுள்ள ஒரு சில மக்களைத் தவிரப் பெரும்பான்மையோர் அறிஞர்களிலும் பலர் **எவ்விதமும் முன்பின் யோசனைசெய்யாமல் பின்பற்றல் முறையிலேயே கொள்கை விளக்கங்களைப் பெற்றிருப்பதோடு செயலிலும் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள்.** நாம் முன்பு தெளிவுபடுத்திய பழக்க வழக்கம், நூற்கேள்வியறிவு, வீண்பிடிவாதம் போன்ற திரைகளைவிட்டும் நீங்கியவனாக இருந்துகொண்டு இதோ குர்ஆன் தரும் விளக்கத்தைப்பார், கேள், சிந்தனை செய், தெளிவுபெறு.

وَمَثَلُ ٱلَّذِينَ كَفَرُوا۟ كَمَثَلِ ٱلَّذِى يَنْعِقُ بِمَا لَا يَسْمَعُ إِلَّا دُعَآءً وَنِدَآءً ۚ صُمٌّۢ
بُكْمٌ عُمْىٌ فَهُمْ لَا يَعْقِلُونَ

2:171 *(குருட்டுத்தனமாய்த் தங்கள் மூதாதைகளைப் பின்பற்றும்) அந்தநிராகரிப்போரின் உதாரணம் (அர்த்தத்தை உணராமல்) கூச்சலையும் ஓசையையும் மாத்திரம் பின்தொடந்து செல்லும் (கால் நடைகளின்) உதாரணத்தை ஒத்திருக்கிறது. ஊமையர்களாகவும் செவிடர்களாகவும் இருக்கின்றனர், ஆதலால் அவர்கள் அறிந்து கொள்ளவேண்டாமா? (நிராகரிப்பவர் யார்? என்பதைச் சிந்தனை தெளிவு பெறு)*

وَلَا تَلْبِسُوا۟ ٱلْحَقَّ بِٱلْبَٰطِلِ وَتَكْتُمُوا۟ ٱلْحَقَّ وَأَنتُمْ تَعْلَمُونَ

2:42 *நீங்கள் உண்மையை அறிந்துகொண்டே அதனை மறைத்துப்பொய்யை மெய்யெனப் புரட்டிவிடவேண்டாம்.*

وَمِنْهُمْ أُمِّيُّونَ لَا يَعْلَمُونَ ٱلْكِتَٰبَ إِلَّآ أَمَانِىَّ وَإِنْ هُمْ إِلَّا يَظُنُّونَ

2:78 *அன்றிகல்வியறிவில்லாதவர்களும் அவர்களில் உண்டு. (வேதத்தைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ள) வீண் நம்பிக்கைகளைத் தவிர (உண்மையை) அவர்கள் அறியவேமாட்டார்கள். அவர்கள் வீண் சந்தேகத்தில் ஆழ்ந்து கிடப்போரைத் தவிரவேறில்லை.*

وَلَقَدْ ذَرَأْنَا لِجَهَنَّمَ كَثِيرًا مِّنَ ٱلْجِنِّ وَٱلْإِنسِ ۖ لَهُمْ قُلُوبٌ لَّا يَفْقَهُونَ بِهَا
وَلَهُمْ أَعْيُنٌ لَّا يُبْصِرُونَ بِهَا وَلَهُمْ ءَاذَانٌ لَّا يَسْمَعُونَ بِهَآ ۚ أُو۟لَٰٓئِكَ كَٱلْأَنْعَٰمِ
بَلْ هُمْ أَضَلُّ ۚ أُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْغَٰفِلُونَ

7:179 *நிச்சயமாக மனிதர்களிலும் ஜின்களிலும் அநேகரை நரகத்துக்காக வேநாம் படைத்திருக்கின்றோம். அவர்களுக்கு இருதயங்கள் இருக்கின்றன. எனினும் அவற்றைக்கொண்டு அவர்கள் உணர்ந்து கொள்ள மாட்டார்கள். அவர்களுக்குச் செவிகளும் உண்டு எனினும் அவற்றைக் கொண்டு அவர்கள் கேட்கமாட்டார்கள். இத்தகையோர் மிருகங்களைப்போல் அல்லது அவற்றைவிடவும் அதிகமாக வழிகெட்டவர்களாகவே இருக்கின்றனர். இத்தகையோர்தான் (குர்ஆனை) அலட்சியம் செய்தவர்கள்.*

كِتَٰبٌ أَنزَلْنَٰهُ إِلَيْكَ مُبَٰرَكٌ لِّيَدَّبَّرُوٓا۟ ءَايَٰتِهِۦ وَلِيَتَذَكَّرَ أُو۟لُوا۟
ٱلْأَلْبَٰبِ

38:29 *நாம் உமக்கு அருட்செய்திருக்கும் இவ்வேதம் மிக்க பாக்கியம்உடையது. அறிவுடையோர் இதன் வசனங்களை ஆராய்ந்து சிந்தித்து நல்லுணர்ச்சி பெறுவார்களாக.*

وَلَقَدْ يَسَّرْنَا ٱلْقُرْءَانَ لِلذِّكْرِ فَهَلْ مِن مُّدَّكِرٍ

54:17 *சிந்தித்து ஆராய்ந்து நலலுணர்ச்சி பெறும் பொருட்டு இந்தக் குர்ஆனை மிக்க எழிதாக்கியிருக்கிறோம். ஆகவே (இதனைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டா?*

أَفَلَا يَتَدَبَّرُونَ ٱلْقُرْءَانَ أَمْ عَلَىٰ قُلُوبٍ أَقْفَالُهَآ

47-24 *அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்கமாட்டார்களா? அல்லது இவர்களுடைய இருதயங்கள் மீது தாளிடப்பட்டுவிட்டதா?*

أَمْ تَحْسَبُ أَنَّ أَكْثَرَهُمْ يَسْمَعُونَ أَوْ يَعْقِلُونَ ۚ إِنْ هُمْ
إِلَّا كَٱلْأَنْعَٰمِ ۖ بَلْ هُمْ أَضَلُّ سَبِيلًا

25:44 *அவர்களில் பெரும்பாலோர் கேட்கிறார்கள் என்றோ அல்லது அதனை உணர்ந்து பார்க்கிறார்கள் என்றோ நீர் எண்ணிக்கொண்டீரா? அவர்கள் மிருகங்களேயன்றி வேறில்லை. பின்னும் மிகவும் வழிகெட்டவர்களாகவும் இருக்கின்றனர்.*

وَلَقَدْ ضَرَبْنَا لِلنَّاسِ فِى هَٰذَا ٱلْقُرْءَانِ مِن كُلِّ مَثَلٍ ۚ وَلَئِن جِئْتَهُم بِـَٔايَةٍ
لَّيَقُولَنَّ ٱلَّذِينَ كَفَرُوٓا۟ إِنْ أَنتُمْ إِلَّا مُبْطِلُونَ

30:58 *மனிதர்களுக்கு வேண்டிய உதாரணங்கள் யாவும் இந்தக் குர்ஆனில் நிச்சயமாக நாம் கூறியிருக்கிறோம். எந்த அத்தாட்சியை நீர் அவர்களிடம் கொண்டுவந்தபோதிலும் நீரும் உம்மைச் சேர்ந்தோரும் பொய்யர்களேயன்றி வேறில்லை என்று நிராகரிப்போர் நிச்சயமாக கூறுவார்கள்.*

**ஹதீஸ்:** ***நபி(ஸல்) அவர்கள முஆது(றலி) அவர்களை எமன் நாட்டுக்கு அனுப்பியபோது அவர்களை நோக்கி உம்மிடம் தீர்ப்புதேடி ஏதாவது வழக்குகள் கொண்டுவரப்பட்டால் நீர் எவ்விதம் தீர்ப்பு வழங்குவீர் ? என்று கேட்டனர். அல்லாஹ்வின் திருமறைப்படி தீர்ப்பு வழங்குவேன் என்று அவர்கள் கூறினார்கள். நபியவர்கள் நீர் அதற்குரிய கட்டளையைக் காணாவிட்டால்? என்று வினவினார்கள். அல்லாஹ்வுடைய துதரின் நடைமுறைப்படி தீர்ப்பு வழங்குவேன் என்று அவர்கள் கூறினார்கள். அதற்கு நபியவர்கள் அல்லாஹ்வுடைய துதரின் நடைமுறையில் நீர் காணாவிட்டால்? என்று வினவினர். அதற்கவர்கள் என் புத்தியைக் கொண்டு ஆராய்ந்து தீர்ப்பு வழங்குவேன். ஆராய்வதில் குறைவு செய்யமாட்டேன் என்று கூறினார்கள். அப்போது நபிகள்(ஸல்) அவர்களின் நெஞ்சில் தட்டிக்கொடுத்துப் புகழனைத்தும் அல்லாஹ்வுக்குரியதே. அவன்தான் அல்லாஹ்வுடைய துதுவரின் துதுவருக்கு அல்லாஹ்வுடைய தூதுவர் திருப்தியுறும் வகையில் அருள் புரிந்தவன் என்று கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: ஹாரிஸ் இப்னு அம்று(றலி) அவர்கள் முஆது(றலி) அவர்கள் வாயிலாக அறிந்து அறிவிக்கப்பட்டது.**
**ஆதாரம்: அபூதாவுத், திர்மிதீ**

**ஹதீஸ்:** ***அரசர்களின் அநீதியைப்பற்றியும் அல்லாஹ்வுடைய கலாமை (குர்ஆனை) ஏற்றுக்கொள்ளாமலும் கற்பனைகளையும் (வீண் நம்பிக்கைகளையும்) பஞ்சாங்கத்தையும் ஜனங்கள் ஈமான் கொள்வதைப் பற்றியுமாக இம்மூன்று காரியங்களும் எனக்குப் பின் எனது உம்மத்துக்களில் நேரிடும் என்று நான் பயப்படுகிறேன்***

(இந்த ஹதீஸையும் கஸ்ஸாலி(றஹ்) அவர்கள் தங்கள் கிதாபில் வியாக்கியானித்துள்ளார்கள் )

## (5)

இவைபோல் இன்னும் பல ஆயத்துக்களும் ஹதீஸ்களும் இருப்பினும் நாம் இவ்வளவையே போதுமாக்குவோம். நீ பகுத்தறிவுக்கு இடமளிப்பவனாய் இருந்தால் ஆராய்ந்து விளங்கித் தெளிவுபெறு. இன்றுள்ளவும் இனிமேல் வரவேண்டிய சகல விஷயங்களையும் விளங்கித் தெளிவுபடுத்தக் கூடிய உண்மையான ஒரு வேதம் (குர்ஆன்) 1400 வருடங்களாக எம்மிடையே இருந்தும் இதுவரை நம்மில் பெரும்பாலோர் அதை வாசித்து ஆராய்ந்து உண்மையைக் கண்டறிந்து தெளிவு பெறாமலே இருக்கிறோம். இவ்வுலக விஷயங்கள் எல்லாம் சாதாரண வெளிப்புலன்களைக் கொண்டு உணரக்கூடியவைதான். ஆனால், ஆத்மீகத்துறையோ நம்மில் அநேகர் நினைப்பது போல அவ்வளவு இலகுவான ஒரு வேலையில்லை. இன்ஸான் தனது நப்ஸு என்னும் மனம், புத்தி ஆகிய மறைந்த

வானத்துக்கும் அங்கிருந்து மலக்கூத்துடைய ஆலத்துக்கும் ஏறவேண்டியவனாகவும் இருக்கிறான். இந்த விபரங்களோ சாதாரண மனிதனுடைய அறிவு திணறக்கூடிய, தடுமாறக்கூடிய அவ்வளவு நுட்பமாயும், கடினமாயும் இருக்கின்றன. இந்த ஏற்றம் ஏறாவிடில் மனிதன் தன்னுடைய பூரணத்தன்மையான பூரண சாந்தியை அடையவே முடியாது. **இந்த ஏற்றத்தின் ஆரம்பமும் முடிவும் தௌஹீதுக் கலிமாவை விளங்கியறிந்து அதைக் கடைப்பிடிப்பதில்தான் தங்கியிருக்கறது.** ஆகவே ஆரம்பத்திலேயே கலிமாவை நேர்விரோதமாய்ப் புரட்டிக்கொண்டால் இந்த ஏற்றம் கடைசி வரையிலும் நடைபெறக் கூடியதேயல்ல.

ஹதீஸ்: ***அல்லாஹ் அறிவைப் படைத்து முன்னால் வருமாறு கூறினான். அது முன்னால் வந்தது. அதனைப் பின்னால் போகுமாறு பணித்தான். அது பின்னால் சென்றது. அப்போது அவன் உன்னைவிட எனக்கு மிகவும் உவப்பான ஒன்றை நான் படைக்கவில்லை. உன்னைப் படைப்புக்களில் எனக்கு மிகவும் உவப்பானவர்கள் மீதுதான் ஏற்றி அனுப்புவேன் என்று இறைவன் கூறினான் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: இப்னுமஸ்வூத்(றலி)**
**ஆதாரம்: றஜீன்**

மனிதன் ஒரு நிலைமையில் இருந்து இன்னோர் நிலைமைக்கு ஏறிச் செல்வது அறிவைக் கொண்டேயன்றி வணக்கத்தைக் கொண்டல்ல. வணக்கம் பிரயோசனம் செய்வது அறிவைக்கொண்டுதான். ஆனால் உண்மையான அறிவு என்பது கலிமாவின் விளக்கமான தௌஹீதில்தான் கட்டுண்டு நிலை பெற்றிருக்கிறது. இந்தக் கலிமாவின் விளக்கதை விளங்கித் தெளிவுபெற்றுத் தௌஹீதில் நிலைபெறாத ஒருவனை இன்ஸான் என்று கூறுவதே பொருந்தாது. ஏனென்றால் இன்ஸான் என்ற சொல் "உன்சியத்" என்ற சொல்லடியாயப் பிறந்த ஒரு தொழிற் பெயர்ச்சொல்லாகும். ஆகவே "இன்ஸான்" என்றால் தன் இறைவனோடு கலந்துரையாடுபவன் என்பதே கருத்தாகும். இந்தக் கலந்துரையாடல் என்பது தௌஹீதை விளங்கியறிந்து அதில் நிலைபெற்றாலேயன்றி வாய்க்காது. ஆகவே, ஒருவன் எவ்வளவுதான் கௌரவம் பட்டம் பதவிகளைப் பெற்றிருந்தாலும் கூட கலிமாவின் விபரமான தௌஹீதை ஒப்புக்கொள்ளாமல் அதில் நிலைபெறாமல் இருக்கும் வரையிலும் அவனை இன்ஸான் என்று கூறுவது பொருந்தாது.

۞ إِنَّ شَرَّ ٱلدَّوَآبِّ عِندَ ٱللَّهِ ٱلصُّمُّ ٱلْبُكْمُ ٱلَّذِينَ لَا يَعْقِلُونَ

8-22 *நிச்சயமாக கால்நடைகளில் (மீருகங்களில் மிகக்கேவலமானவை (உண்மையை) அறிந்துகொள்ள முடியாத செவிடர்களும்(அறிந்தும்) சொல்ல முடியாத ஊமையர்களும்தான்.*

என்று குர்ஆன் விபரம் தருகிறது. அறிந்துகொள்ள முடியாத செவிடர் என்பது தெரியாதபோது தெரிந்தவரிடம் கேட்டறியவேண்டும் என்பதை எமக்கு விளக்கம் தருகிறது. மனிதன் தன் பூரணத் தன்மையைப் பெறக்கூடிய சிறப்பான பாக்கியம் பெற்ற கலிமாவுக்கும் அதை உறுதிப்படுத்தக் கூடிய வேத வசனங்களான குர்ஆன், ஹதீஸ்களுக்கும், உலக விவகாரங்களில் சிக்குண்டு மறதியாளராய் மாறி இருக்கிற மக்களால் உண்மையான விபரம் தரவே முடியாது. உலக விவகாரங்களில் சிக்குண்டிருப்போர் உலக விஷயங்களில் சட்ட திட்டங்களில் (பிக்ஹு) மார்க்கத்தின் வெளிக்கோலங்களில் விபரம் தரமுடியும். எனினும் **ஆகிறாவுடைய உண்மைகளை விளக்கி மனிதனுடைய பூரணத் தன்மைகளுக்கு வழிகாட்டக் கூடியவர்கள் அனுபவமுள்ள நல்லடியார்களான உலமாக்களேயாகும்.**

இவர்கள்தான் உண்மையை எத்திவைக்கும் கூட்டமான **"அஹ்லுல் ஹவ்லிவல் அக்திகள்"**என்னும் சிறப்புமிக்க பெரியார்களான, ஒலிமார்களான உலமாக்கள். தலைச்சன் ஆடு எவ்வழியில் செல்கிறதோ அதே வழியில் செல்லும் செம்மறியாட்டுக் கூட்டங்களைப்போல, எள்ளளவும் சிந்தனையில்லாமல் எவ்விதமான தர்க்கரீதியான கல்வியறிவும், ஆராய்வும் இல்லாமல், தான் எங்கே, எப்படிப் போய்க்கொண்டிருக்கிறேன் என்பது கூடத்தெரியாமல் தாடி மயிரில் மயக்குண்டு, தலைவன் காட்டிய பாதையில் போய்க்கொண்டிருக்கிற இன்றுள்ள மூடமக்களின் கூட்டம்தான் "தப்லீக்" எத்திவைக்கும் கூட்டம் என்று நீ ஏமாறாதே. ஒரு சாரார் இஸ்லாம் என்ற போர்வையில் தொழுகையை ஒரு கேடயமாக வைத்துக்கொண்டு மக்களை மென்மேலும் அறியாமையை மூழ்கடிப்பதனால் அக்கூட்டத்தை நாம் அறியாமையை எத்தி வைக்கும் கூட்டம் (தப்லீக்) என்றுதான் கூறலாம். கல்வியறிவும் பட்டம் பதவிகளுமுள்ள மிகப்பெரும் புகழ்வாய்ந்த ஒருசில அறிஞர்களே கலிமாவுக்குப் பல பொருட்களுண்டு என்றும் ஐந்து கலிமாக்கள் உண்டு என்றும் எமக்கு எத்திவைத்து குர்ஆன், ஹதீஸ்களுக்கு முரணாகவே எமக்கு வழிகாட்டி இருக்கும்போது, செம்மறியாட்டுக் கூட்டத்துக்கு ஒப்பான மக்கள் **எமக்கு எதை எப்படி எத்தி வைப்பார்கள் என்பதை பகுத்தறிவோடு சிந்தனை செய்துபார்.** தாடி, தலைப்பாகைதான் எத்திவைக்கும் கூட்டத்தின் அடையாளச் சின்னம், சீருடை என்று ஏமாறாதே.

۞ أَتَأْمُرُونَ ٱلنَّاسَ بِٱلْبِرِّ وَتَنسَوْنَ أَنفُسَكُمْ وَأَنتُمْ تَتْلُونَ ٱلْكِتَٰبَ ۚ أَفَلَا
تَعْقِلُونَ

2-44 *நீங்கள் வேதத்தை ஓதிக்கொண்டே உங்களை மறந்துவிட்டு மனிதர்களை நன்மை செய்யும்படி ஏவுகின்றீர்களா? நீங்கள் அறிந்து கொள்ளவேண்டாமா?*

**ஹதீஸ்:** ***குர்ஆன் ஆயாத்துக்களில் கருத்து உறுதியானவைகளையும் (முஹ்கமாத்) கியாமத்நாள்வரை பிரமாணம் நிலைக்ககூடிய ஹதீஸ்களையும் வேத நெறியாகிய பர்லு முதலியவைகளையும் அறிவதே ஞானமாய் இருக்கிறது என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.***

ஆகையால்தான் நான் மீண்டும் கூறுகிறேன் ஈமானுடைய. தௌஹீதுடைய விஷயத்தில் பூரண உண்மையான ஆதாரங்களாய் அமைந்த குர்ஆன் ஹதீஸகளையும் உன் பகுத்தறிவையும் முதலில் பற்றிப்பிடித்துக்கொள். உண்மையைக் கண்டறிந்த பின் உண்மையான விளக்கமுடைய கிதாபுகள், புஸ்த்தகங்கள், பாடல்கள், பைத்துக்கள் முதலான நல்லடியார்களின் சாட்சியங்களை எடுத்துக்கொள். இதைவிட மாமேதை சுல்தானுல் ஆரிபீன் என்று மக்களால் புகழப்படுகிற ஒருவரேயாயினும் குர்ஆன், ஹதீஸ்களுக்கும் பகுத்தறிவுக்கும் விரோதமாய்க் கூறுவாரேயானால் அல்லது எழுதுவாரேயானால் அதை உன் பின்புறமாகத் தள்ளிவிடு. அவருடைய அமலோ, வேஷமோ உன்னை மருட்ட வேண்டாம். குர்ஆன், ஹதீஸ்களை ஒப்புக்கொள்ளாதவர்கள், அவைகளுக்கு விரோதமாய்க் கூறுபவர் நாள் ஒன்றுக்கு ஆயிரம் றக்கஅத் தொழுபவரானாலும்கூட ஷைத்தானைப் பின்பற்றியவராகவே இருப்பார். உன் பொன்னான, விலைமதிக்க முடியாத வாழ்நாளைக் குருட்டு நம்பிக்கையில் கழித்துவிட்டு ஆகிறாவில் கைசேதமடையாதே. முற்றிலும் குர்ஆனையே உன் றசூலாக, ஒஸ்தாதாக, உன் தாய், தந்தையாக ஏற்றுக்கொள். அவ்வளவு தான்.

فَوَيْلٌ لِّلَّذِينَ يَكْتُبُونَ ٱلْكِتَٰبَ بِأَيْدِيهِمْ ثُمَّ يَقُولُونَ هَٰذَا مِنْ
عِندِ ٱللَّهِ لِيَشْتَرُوا۟ بِهِۦ ثَمَنًا قَلِيلًا ۖ فَوَيْلٌ لَّهُم مِّمَّا كَتَبَتْ أَيْدِيهِمْ
وَوَيْلٌ لَّهُم مِّمَّا يَكْسِبُونَ

2-79 *எவர்கள் தங்களுடைய கையைக்கொண்டு (பொய்யாய்) எழுதிய புத்தகத்தை (கிதாபை) ஒரு சொற்பகிரயத்தைப் பெறுவதற்காக இது அல்லாஹ்விடமிருந்து வந்ததுதான் என்று கூறுகிறார்களோ அவர்களுக்கு கேடுதான். (வைல் என்னும் நரகம்தான்) அவர்களுடைய கைகள் எழுதியதானாலும் அவர்களுக்கு கேடுதான். அவர்கள் சம்பாதிப்பதிலும் அவர்களுக்கு கேடுதான்.*

இஸ்லாத்தில் குர்ஆன், ஹதீஸ்களைவிட இன்னும் இரண்டு ஆதாரங்கள் இருக்கின்றன. ஒன்று “இஜ்மாஉ” என்றும் மற்றொன்று “கியாஸ்” என்றும் கூறப்படும்.

“இஜ்மாஉ” என்றால் அறிஞர்களின் ஏகோபித்த அபிப்பிராயம் என்பதே அதன் அர்த்தம் ஆனால், இன்று நம்மிடையே பெரும்பாலும் கையாளப்படும் “இஜ்மாஉ” அறிஞர்களின் ஏகோபித்த அபிப்பிராயம் என்று நாம் மருட்சியடைந்தாலும் உண்மை இதற்கு நேர்விரோதமாய் இருக்கிறது. **“இஜ்மாஉ” என்பதற்குச் சில வரைவிலக்கணங்கள் இருக்கின்றன. இதைக் கேள்வி, பதில் (சந்தேக நிவர்த்தி) என்ற தலைப்பில் மிக விபரமாய் விளக்கி இருக்கின்றேன். இவ்விடத்தில் அந்த விபரம் அவசியமல்ல.** பொதுவாக இவ்விடத்தில் கூறக்கூடிய விபரம் என்னவென்றால்,“இஜ்மாஉ”,“கியாஸ்” என்ற இருவிஷயங்களிலும் உண்மைக்கு நேர்மாறான சில விபரங்கள் தென்படுகின்றன. ஆகவே, இஜ்மாஉ, கியாஸ், என்பவற்றின் பூரண உண்மையைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளாமல் அவற்றை குர்ஆன் ஹதீஸ்களோடு ஒப்பிட்டு உண்மையைக் கண்டறியாமல்,**தற்கால மக்களின் சாதாரண வழக்கிலுள்ள இஜ்மாஉ, கியாஸ்களை ஏற்றுக்கொள்வது பொருந்தாது என்பதே. இஜ்மாஉ, கியாஸ்களின் உண்மை வேறாய் இருக்கிறது. அவற்றைப் பொறுமையோடு விளங்கியறிவோம்.** அவசரப்பட வேண்டாம். உண்மையை உறுதிப்படுத்துவதற்காகவே இறைவனால், றசூலால் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகையில் சேர்ந்தவைதான் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் என்பவை. ஆனால், மனிதனுடைய வஹ்மு என்னும் பேதபுத்தியினால் உருவாக்கிக்கொண்ட சட்டங்களுக்காவே உண்மை என்ற நிலைமை ஏற்பட்டால் நாம் உண்மையைக் கண்டறிவது எப்படி? **அவ்விதமான சட்டங்களுக்கு சட்டம் என்று பேர் கொடுப்பது எப்படி? கட்சியின் வெற்றிக்காகக் கையாளப்படும் வன்செயல் விளக்கம் என்று கூறுவதுதானே பொருந்தும்.** அதாவது இன்று நம் நாட்டிலுள்ள பெரும்பாலான மக்களும் ஆராய்வில்லாத உலமாக்களும் கைக்கொள்ளும் “இஜ்மாஉ” என்ற ஏகோபித்த அபிப்பிராயத்தில் சில உண்மையான இஜ்மாஉவேயல்ல. இது வழிதவறிய ஒரு சிலரின்

ஏகோபித்த அபிப்பிராயமேயாகும். இதன் உண்மையைச் சரியான ஆதாரங்களோடு உரிய இடத்தில் விளக்கித் தருவேன். பொறுமையடைய வேண்டும்.

وَلَوِ ٱتَّبَعَ ٱلۡحَقُّ أَهۡوَآءَهُمۡ لَفَسَدَتِ ٱلسَّمَٰوَٰتُ وَٱلۡأَرۡضُ وَمَن فِيهِنَّ

23-71 *சத்தியம் (உண்மை) அவர்களுடைய விருப்பத்தைப்பின்பற்றுவதென்றால்நிச்சயம் வானங்களும் பூமியும் அவற்றிலுள்ளவைகளும் அழிந்தேவிடும்.*

**ஹதீஸ்:** ***இந்த குர்ஆன்மீது முழுக்கமுழுக்க கவனம் செலுத்தி வாருங்கள். ஏனெனில் எவனுடைய கையில் முஹம்மதுடைய உயிர் இருக்கிறதோ அவன்மீது ஆணையாக ஒட்டகம் தன்னைக் கட்டும் கயிற்றை விட்டும் ஓடுவதைவிட விரைவாக இது (குர்ஆன்) மனிதர்களுடைய இருதயங்களைவிட்டும் ஓடிவிடும் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்***

**அறிவிப்பவர்: அபூமூஸா(றலி)**
**ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்**

நாம் முன்பு காட்டிய 33-36 ஆம் ஆயத்தின்படி அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் யாதொரு விஷயத்தைப்பற்றிக் கட்டளையிட்ட பின்னர் அவ்விஷயத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு ஈமான்கொண்ட எந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் உரிமையில்லை என்பது உண்மையானால், குர்ஆன், ஹதீஸ்கள் கலிமாவுக்கு ஒரேயொரு கருத்து மட்டுந்தான் உண்டு என்று கூறும்போது அவற்றிற்கு மாற்றமாக, இல்லை நான்கு அல்லது பல கருத்துக்கள் உண்டு என்று கூறும் மக்களை அறிஞர்களாய், விசுவாசிகளாய் எப்படி ஏற்றுக்கொள்வது? குர்ஆன், ஹதீஸ்களுக்கு முரணாய் வேறுபட்ட அபிப்பிராயம் கொண்டவர்களின் ஏகோபித்த முடிவை இஜ்மாஉ என்று எப்படி ஒப்புக்கொள்வது.

قُلۡ إِنَّ رَبِّي يَقۡذِفُ بِٱلۡحَقِّ عَلَّٰمُ ٱلۡغُيُوبِ ﴿٤٨﴾ قُلۡ
جَآءَ ٱلۡحَقُّ وَمَا يُبۡدِئُ ٱلۡبَٰطِلُ وَمَا يُعِيدُ

34-48,49 *நீர் கூறும் நிச்சயமாக என் இறைவன் உண்மையைத் தெளிவாக்குகிறான். மறைவான யாவற்றையும் அவன் நன்கறிந்தோன். நீர் கூறும் உண்மை வந்துவிட்டது. பொய் புதிதாக ஒன்றையும் செய்துவிடவில்லை. இனிமேலும் செய்யப் போவதுமில்லை.*

**குறிப்பு:**

குர்ஆனில் கலிமத்துத் தையிபா, கலிமத்துல் கபீஸா என்று இரண்டு கலிமாக்களை இறைவன் கூறுகிறானே! நீங்கள் உள்ளது ஒரே கலிமாதான் என்று கூறுகிறீர்களே! என்று வினவலாம்.

**பதில்:**14-24 ஆம் ஆயத்தின்படி கலிமத்துத் தையிபாவை இறைவன் விபரம் தந்திருக்கிறான். தையிபா என்றால் மணம், பரிசுத்தம் என்பது பொருள். அதாவது மணக்கும் கலிமா அல்லது பரிசுத்த கலிமா என்பது பொருள். இந்தக் கலிமாவை அதன் கருத்தைவிட்டும் புரட்டிவிடும்போது அது துர்நாற்றம் உடைய, கெட்ட கலிமாவாக மாற்றமடைந்து விடுகிறது. இதைதான் 24-26ஆம் ஆயத்தில் கலிமத்துல் கபீஸா, துர்நாற்றக் கலிமா, கெட்டவாக்கியம் என்று இறைவன் விபரம் தருகிறான். ஆகவே உள்ள ஒரே கலிமாவை எம்முடைய அறிவுக் குறைவினால் மாற்றிக்கொள்ளும்போது அது கெட்ட கலிமாவாக மாற்றமடைகிறதேயல்லாமல் கலிமா இரண்டு என்பது பொருளல்ல. பரிசுத்த வாக்கியம், கலிமத்துத் தையிபா ஒன்றேயொன்றுதான். எம்முன்னோர் பின்பற்றல் முறையில் 5 கலிமாக்களை ஏற்படுத்தி அதையே வழக்கத்தில் இருத்திக்கொண்டபோதிலும் உண்மையாய் உள்ளது ஒரே கலிமாதான்.

## (6)

**அ**ன்புக்குரிய ஆண்மகனே! இவ்விடத்தில் இன்னும் ஓர் உண்மை கூற வேண்டியதாய் இருக்கிறது. அதாவது தற்கால வழக்கிலுள்ள பெரும்பாலான, குர்ஆன், ஹதீஸ்களுடைய மொழி பெயர்ப்புக்களில் முஹ்கமாத்தான பல ஆயத்துக்களுக்கு வலிந்துரை செய்தே மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே நீ உண்மையைக் கண்டறிய விரும்பினால் குர்ஆன், ஹதீஸ்களில் இடம்பெற்றுள்ள வசனங்களை உண்மையாளராய் உள்ள நல்ல உலமாக்களிடத்தில் விசாரித்து விளங்கிக்கொள்ள வேண்டும். சிந்தித்து உணரக்கூடியவர்களுக்கு இவ்வளவு அதிகமாய்த் திரும்பத் திரும்பப் பலமுறை கூறவேண்டியதில்லை. அவர்கள் விளங்கிக் கொள்வார்கள். சிந்திக்க முடியாத, சிந்திக்கத் தெரியாத மக்களுக்கும் நாம் கூறவேண்டியதில்லை. அவர்கள் உண்மையை உணரவேமாட்டார்கள். ஆனால் அறிவுத்துறையில் மத்திய வகுப்பைச் சேர்ந்த அறிவுத் தாகமுடைய மக்களுக்கு விபரமாய் விளங்கித் தெளியக்கூடியதாய் நாட்டுப் பாணியில் கூறவேண்டியதாகவே

இருக்கிறது. ஆகவே உன் உள்ளத்தெளிவுக்காக சில விபரங்களைக் கூறுகிறேன். செவி தாழ்த்துவாயாக.

நீ கண்டுகளித்த சினிமாப்படத் திரையைக் கொஞ்சம் சிந்தனை செய்துபார். அத்திரை வெண் நிறச்சீலையினால் ஆக்கப்பட்டிருக்கிறது. ஏனிப்படி வெண்நிறச் சீலையினால் அத்திரையை உண்டாக்கினார்கள்? மற்றெந்த நிறச்சீலையினாலும் ஆக்கப்பட்ட திரைகளில் படக்காட்சியைக் கண்டுகளிக்க முடியாது. படக்காட்சி உள்ளபடி தென்படாது. இந்த வெண்நிறத்திரையில் நன்மை, தீமை, கடல், மலை, இருள், ஒளி, நல்லவை, கெட்டவை, மண், தண்ணீர், நெருப்பு, காற்று அத்தனையையும் கண்டுகளிக்கிறோம். ஆனால், இந்த வெண்திரை நன்மைகளின் பக்கமோ இருள், ஒளிகளின் பக்கமோ ஒன்றிவிடாமல் என்றும் இருந்ததுபோலவேதான் இருக்கிறது. இதேபோல் வஹ்மு என்ற பேதபுத்தி நீங்கிய எம்முடைய உள்ளம் என்னும் வெண்திரையில்தான் குர்ஆன், ஹதீஸ்களின் உண்மையை நாம் கண்டறிய வேண்டியதாய் இருக்கிறது.

ஆனால் மனிதனுடைய உள்ளம் என்னும் வெண்திரை பல வருட மூடப்பழக்கவழக்கங்களினாலும் தவறான நூற்கேள்வியறிவுகளினாலும் மனோ இச்சையென்னும் வீண் பிடிவாதங்களினாலும் துருப்பிடித்து (கறை பிடித்து) இருள் மூடிக்கொண்டதாய் இருக்கிறது. இந்த இருள் பலபடைகளாய், இருளாய்மாறி உள்ளத்தில் வெண்நிறத் தன்மையை மூடி மறைத்துக்கொண்டிருக்கிறது.

كَلَّا ۖ بَلْ ۜ رَانَ عَلَىٰ قُلُوبِهِم مَّا كَانُوا يَكْسِبُونَ

83-14 *என்கினும் அவர்கள் செய்தது அவர்களுடைய கல்புகளில் துருவாகப் பிடித்துக்கொண்டது.*

என்று குர்ஆன் கூறுகின்றது. இந்தத் துருவை அல்லது இருளை முயற்சியென்னும் தெண்டிப்பினால் நீக்கிக்கொள்ளாத வரையில் உண்மையைப் பெறவும் இறைவனுடைய படக்காட்சியைக் கண்டுகளிக்கவும் எம்மால் முடியாமலே போய்விடும். உள்ளம் துருப்பிடித்து அழிவதைவிட அதைக் துலக்கித் துலக்கித் தேயவைப்பதே நல்லது என்று ஓர் அறிஞன் கூறுகிறார். கல்பைத் துலக்கி உண்மையான காட்சியின் தன்மையைப் பெற்றுக் கொள்ளாத அனுபவமற்ற ஒருவர் காட்சியின் வருணணையைக் கூறுகிறார், எழுதுகிறார் என்றால் நாம் அதை எப்படி நம்புவது? கலிமா,ஈமான், ஆகிறா போன்ற விஷயங்களில் சித்த சுத்தியும் தெளிவும் இல்லாத ஒரு சிலர் எமக்களித்த வர்ணிப்புகள் படக்காட்சியைக் காணாத ஒருவர் காட்சியின் வர்ணனையைக் கூறுவதுபோலவே என் அறிவுக்குத் தென்படுகிறது.

ஒரு சிலர் கலிமாவுடையவும் தௌஹீதுடையவும் விஷயத்தில் கூறியுள்ள தவறான விபரங்களை நான் பல வருடங்கள் மிகக் கஷ்டத்தோடு ஆராய்ந்து பார்த்தபோது மிகமிக மனவருத்தமடைகிறேன். **பொதுவிபரம் என்னவென்றால் ஸிர்க் என்பது தௌஹீதாயும், தௌஹீதென்பது ஸிர்க்காயும் மக்களுடைய கல்பில் கெட்டியாய்பதிக்கப்பட்டுவிட்டது என்பதுதான்.** றசூல்(ஸல்) அவர்களால் கொண்டுவரப்பட்ட உண்மையைச் சரியான ஆதாரங்களைக் காட்டி நிரூபித்தாலும்கூட மக்களில் மிக அநேகர், பட்டதாரிகளிலும் மிகப் பலர் அவ்வுண்மையை ஏற்றுக்கொள்ளும் மனோபக்குவமுடையவர்களாகத் தெரியவில்லை. மேலும் எவ்வளவோ இன்னல்களையும் அவமானமான கெட்ட பெயர்களையும் வாங்கிக்கொண்டுதான் உண்மையை உணர்த்தவேண்டியதாய் இருக்கிறது. பரவாயில்லை. எவரெவர் எதையெதை வேண்டுமானாலும் கூறட்டும். எமது கடமையை நாம் செய்வோம்.

وَلَوْ شِئْنَا لَآتَيْنَا كُلَّ نَفْسٍ هُدَاهَا وَلَٰكِنْ حَقَّ الْقَوْلُ مِنِّي
لَأَمْلَأَنَّ جَهَنَّمَ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ أَجْمَعِينَ

32-13 *நாம் விரும்பியிருந்தால், ஒவ்வோர் மனிதனுக்கும் அவன் நேரான வழியில் செல்லக்கூடிய அறிவைக் கொடுத்திருப்போம். எனினும் ஜின்களையும், மனிதர்களையும்கொண்டு நரகத்தை நிரப்புவோம் என்ற நம்முடைய தீர்ப்பு ஏற்பட்டுவிட்டது.*

**ஹதீஸ்:** ***இஸ்லாம் மார்க்கம் வெளியாகும்போது அற்பமாக உதவியற்றதாக இருந்ததுபோல இனிமேலும் ஆகிவிடும். ஆகையால் உதவியற்றவர்களுக்குச் சுபசோபனம் உண்டாகக்கடவதுஎன்று றசூல்(ஸல்) அவர்கள் கூறியபோது உதவியற்றவர்கள் யார்? என்று ஒரு தோழர் கேட்க, எனது மார்க்கத்தில் மற்றவர்கள் கட்டுகுலைத்தவைகளை இஸ்தீரப்படுத்துகிறவர்களும், மற்றவர்கள் நாசம் செய்தவைகளை விருத்தி செய்தவர்களுமேயாவார்கள் என்று விடை கூறினார்கள்.***

இந்த ஹதீஸில் கூறப்பட்ட கட்டுக்குலைத்தவைகள், நாசம் செய்தவைகள் எவை? அவ்வேலைகளில் ஈடுபட்டவர்கள் யார்? என்பதைச சிந்தனை செய்.

ஹதீஸ்: *நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வோர் நுற்றாண்டின் துவர்க்கத்திலும் (என்னைப் பின்பற்றும்) இந்த இனத்தவருக்காக இவர்களின் மார்க்கத்தைப் புத்துயிர் ஊட்டித்தரும் ஒருவரை எழுப்பித் தருவான் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர்: அபூஹுரைரா(றலி) அவர்கள்**
**ஆதாரம்: புஹாரி, அபூதாவூத்**

உண்மை மறைந்து மார்க்கம் உயிரற்றதாய் மாறாவிட்டால் புத்துயிர் அளிப்பவர் எதற்காக? என்பதைச் சிந்தனை செய். புத்துயிரளிப்பவர் யார்? என்பதைக் கண்டு தெளிவுபெறு. தீனுக்கு (மார்க்கத்திற்கு)ப் புத்துயிர் அளிப்பவருக்குத்தான் முஹ்யித்தீன் என்பது பெயர். அப்துல் காதிறு ஜெய்லானி அவர்கள் சுமார் இற்றைக்கு 1000 வருடங்களுக்கு முன் அக்கால மக்களின் அறிவு, செயல் தகைமைகளுக்கு ஏற்றபடி புத்துயிர் அளிப்பவர்களாக (முஹ்யித்தீனாக) வெளிப்பட்டிருக்கிறார்கள். அதன்பின் எத்தனையோ முஹயித்தீன்கள் அவ்வக் காலத்திற்கேற்றபடி தோன்றி உண்மையை விளக்கம் தந்துதான் சென்றிருக்கிறார்கள். இனிமேலும் எத்தனையோபேர் வருவார்கள். ஆனால் நம்மில் அநேகர் இவர்களைப் பொருட்படுத்துவதேயில்லை.

إِلَّا مَنْ أَتَى ٱللَّهَ بِقَلْبٍ سَلِيمٍ

26-89 *அல்லாஹ்விடத்தில் சலீமான கல்பைக் கொண்டுவந்தவனேயன்றி ஈடேற்றம் பெறமாட்டான்.*

**(7)**

**சகோதரனே!**

உனக்கு வெறுப்பும் கசப்பும் ஏற்பட்டாலும்கூடப் பொறுமையை இழந்து விடாமல் இன்னும் சிறிது செவிதாழ்த்துவாயாக. மனிதன் உடையைக் கொண்டு கணிக்கப்படுகிறான் என்பது “ஷேக்ஸ்பியரின” வாக்கு. உடை என்பதில் பல அர்த்தங்கள் தென்படுகின்றன. பொய் ஆடை அணிந்துதான் செல்லவேண்டும். உண்மை நிர்வாணமாகவே செல்கிறது என்பது ஒரு பழமொழி. இவ்வாக்கியங்களில் பல உண்மைகள் புதைந்துகிடக்கின்றன. ஒருவர் ஒரு விஷயத்தை விளக்கும் போது அது உண்மையானாலும் பொய்யேயானாலும, மனிதராகிய நாம் விஷயத்தைக் கூறிய மனிதருடைய நடை, உடை, பாவனை, பட்டம், பதவி, மக்களிடையேயுள்ள மதிப்பு, பணம் போன்றவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் சரி பிழை கணிக்க முற்படுகிறோம். ஆனால் நாம் எடுத்துக்கொண்ட விஷயம் எந்த அடிப்படையில் உண்மையானது சரியானது அல்லது எந்த அடிப்படையில் பொய்யானது, பிழையானது என்பதை நம்மில் மிக அநேகர் கவனிப்பதேயில்லை.

உதாரணமாக, மூடன் அல்லது கெட்டவன் என்ற பெயரை மக்களிடையே பெற்றுக்கொண்ட ஒருவன் உண்மையாக ஓர் அறிஞனாக, நல்லடியானாக இருப்பினும் அவன் கூறும் விஷயம் உண்மையாகவே இருப்பினும் அம்மனிதன் கூறுவதை யாரும் பொருட்படுத்துவதோ, அக்கறை கொள்வதோ இல்லை. அப்படி யாராவது ஒன்றிரண்டுபேர் அதைப் பொருட்படுத்த முற்பட்டாலும் அதை எம்மில் பலர் தடைப்படுத்திவிடுகிறோம். மக்கள் அம்மனிதனை மூடனாய் கெட்டவனாய் ஏன் கணித்தார்கள் என்பதைக்கூட நாம் சிறிதும் ஆராய்வதே கிடையாது. ஆராய்ந்தாலும் எம்முடைய ஆராய்வு உண்மையைக் கண்டறிவதும் இல்லை. இதேபோல் அறிஞன் அல்லது பட்டதாரி அல்லது மக்களிடையே மதிப்புள்ள பெரியார் என்ற பெயர் வாங்கிக்கொண்ட ஒருவர் ஒரு விஷயத்தைக் கூறும்போது அவ்விஷயம் உண்மைக்கு மாறானதேயானாலும் வழிகெடுக்கக் கூடியதேயானாலும் எம்முடைய பகுத்தறிவுக்கு முரணானதேயானாலும் நம்மில் மிகப்பலர் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவே செய்கிறோம். இவ்விஷயத்திலும் நாம் பெரும்பாலும் ஆராய்வதே கிடையாது. அப்படி ஆராய்ந்தாலும்கூட அந்த ஆராய்வும் உண்மையை நெருங்குவதேயில்லை. மேலும் அப்பெரியார் கூறிய விஷயம் பொய்தான் அல்லது பிழைதான் என்பதை எம்முடைய அறிவு எடுத்துக் காட்டினாலும், இல்லை அவர் கூறுவதில் நாமறியாத ஏதோ இரகசியம் இருக்கவேண்டும் என்றே நம்பி விடுகிறோம். இதே போல் எம்வாழ்வில் ஏற்படக்கூடிய மத சம்பந்தமான விஷயங்கள் மட்டுமல்லாமல் ஏறக்குறைய எல்லா விஷயங்களையுமே சிந்தனை செய்துபார்.

மூடன் என்ற பெயரை அல்லது கெட்டவன் என்ற பெயரைப் பெற்றக்கொண்ட அந்த மனிதன் கூறிய உண்மையை நாம் ஏன் ஏற்றுக்கொள்ளாமல் விடுகிறோம்? பெரியார், பட்டதாரி என்ற பெயர்கொண்ட ஒருவர் கூறும் வெறும் பொய்யை நாம் ஏன் ஒப்புக்கொள்கிறோம்? நாம் ஏதோ ஓர் அறியாமையில், திரையில் சிக்குண்டிருந்தமையால்தான் உண்மையைப் பொய்யென்றும், பொய்யை உண்மையென்றும் ஒப்புக்கொண்டிருக்கின்றோம். எம்முடைய அறியாமை(வஹ்மு) பகுத்தறிவை மிகைத்திருந்ததால் கோழைகளாசிச் சிந்திக்க முடியாதவர்களாகி விட்டோம். ஆயினும் நாம் நவநாகரீக காலத்தில் வாழ்கிறவர்கள் என்றும் அறிவாளிகள் என்றும் எம்மை நாம் ஏமாற்றிக்கொள்கிறோம். உண்மையை நோக்கினால் நாகரீகம் என்பது என்ன? என்பதே நமக்கு இன்னும் தெரியாததென்றே கூற வேண்டியதாய் இருக்கிறது. அறிவின் ஆரம்பத்தைக்கூட நாம் இன்னும் எட்டிப் பிடிக்கவில்லை என்றே

தென்படுகிறது. ஏனென்றால் அந்த 1400 வருடங்களின் முன்பு வாழ்ந்த அந்தகார இருளில் மூழ்கிய அந்த முஸ்ரிக்குகளும் எம்மைப்போலதானே இருந்திருக்கிறார்கள்.

அதாவது றசூல்(ஸல்) அவர்களை அந்த அறிவிலிகளான முஸ்ரிக்கீன்கள் நபியாக, றசூலாக ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள், எதிர்த்தார்கள். ஏன் மறுத்தார்கள்? ஏன் எதிர்த்தார்கள்? அந்த றசூல் (ஸல்) அவர்கள் ஒரு கல்விமானோ, பட்டதாரியோ, மக்களிடையே அறிஞன் என்று பெயர் பெற்றவர்களோ அல்ல. எழுதவாசிக்கத் தெரியாத சாதாரண உம்மியான மனிதர். ஆகவே, முஹம்மது (ஸல்) அவர்களை ஒரு அறிஞராக, நபியாக அந்த மக்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாமலே இருந்தது. றசூல்(ஸல்) அவர்கள் மிகப்பெரிய ஒரு பணக்காரரோ, மிகப் பெரிய மாடமாளிகைகள் உள்ளவரோ அல்ல. ஆரம்பகாலத்தில் ஒரு சிறந்த வீரருமல்ல. ஒரு சிறந்த கலைஞனுமல்ல. அவர்கள் ஆரம்பத்தில் கூறிய கலிமாவோ பித்தனுடைய சொற்போல தென்படுகிறது. வழமையாகப் பரம்பரையாகக் கையாண்டுவந்த விக்கிரக வணக்கம் பிழையென்றும் நங்கள் வழிதவறிச் செல்கிறீர்கள் என்றும் கூறுகிறார். உங்களுடைய மார்க்கம் பிழையென்றும் புரட்டிக் கொண்டீர்கள் என்றும் கூறுகிறார். இவர் தம்வாயினால் கூறுகிற விஷயங்களை “ஜிப்ரீல்” என்னும் தேவதூதர் மூலம் அறிவதாய்க் கூறுகிறார். அந்த வானவரை எவரும் கண்டதில்லை.

**சகோதரனே!**

இப்போது சிந்தனை செய்துபார். நீயும் நானும் அப்போது அந்த மக்களிடையே இருந்திருந்தால் அந்த நபியை நாம் மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டிருப்போமா? அந்த நபியின் வார்த்தைகளை நாம் பொருட்படுத்தி இருப்போமா? உன்னுடைய உண்மையான மனச்சாட்சியை நீ கேட்டுப்பார். **நான் கூறுகிறேன், நிச்சயமாக ஆரம்பகாலத்தில் நாம் அந்த நபியை ஒப்புக்கொண்டிருக்கவேமாட்டோம். அந்த நபியின் பேச்சுக்கு செவிசாய்த்திருக்கவே மாட்டோம்.** இல்லை நான் ஏற்றுக்கொண்டிருப்பேன் என்று நீ கூறக்கூடும். அது உன் உள்ளத்தில் இருந்து வெளியாகும் உண்மைச் சொல்லேயல்ல. ஏனென்றால் இந்த விஞ்ஞானகாலத்தில் அறிஞர்களாக, பட்டதாரிகளாக, நாகரீகம் மிக்கவர்களாக வாழ்கிற நாம், மூடன், கெட்டவன் என்ற கற்பனைப் பெயரில் மயக்குண்டு உண்மையை மறுத்துவிடுகிறோம், உதாசீனம் செய்து விடுகிறோம். பட்டதாரி, பெரியார் என்ற கற்பனைப் பெயரில் மயக்குண்டு பொய்யை, வழிகேட்டை உண்மையாக மனதார ஏற்றுக்கொள்கிறோம். ஆகையால்தான் அந்த நபியை, தெய்வறஹ்மத்தைப் பெற்ற பூரணமாக, உண்மையாக ஏற்றுக்கொள்ளவில்லையென்றே நான் கூறுவேன், என்னை எப்படி வேண்டுமானாலும் நீ கோபித்துக்கொள். ஆனால் உன் உண்மையான மனச் சாட்சியைத் தொட்டுச் சிந்தனை செய்து தெளிவுபெறு.

தாடி, தலைப்பாகையை, நீண்டசட்டையைக் கண்டவுடன் மருட்சியடைகிறோம். அவரை அவ்லியாக்களில் ஒருவரென்றே கணித்துவிடுகிறோம். ஆனால் ஒருவர் சாறனை மடித்துக்கொண்டார் என்றால் அவரை நாம் மூடனாகக் கணிக்கிறோம். விஷயம் அப்படியல்ல. வனவிலங்குகளிடையே வாழவேண்டிய ஒருவன் சாறனை மடித்துக்கட்டிக்கொள்ள வேண்டியதும், மனிதரைக் காணும் போது சாறனை அவிழ்த்துவிட்டுக் கனம்பண்ண வேண்டியதும் அவசியம் என்பதை அவர் அறிகிறார். ஆகையால்தான் வனவிலங்குகளிடையே வாழும்போது அதற்கேற்ற பாவனையாக நடித்துக்கொள்கிறார். இதை அறிந்துகொள்ளாத நாம் அவரை அறிவீனராகக் காண்கிறோம். உண்மை என்னவென்றால் அவரிடத்தில் அறிவுண்டு என்பதைக் கண்டுகொள்வதற்கு எம்மிடத்தில் அறிவு இல்லை என்பது தான் அர்த்தம். குரங்கு கிணற்றின் ஆழத்தைக் காண்பதற்காகத் தன்வாலைக் கிணற்றில் விடுவது போல் அறிஞனின் அறிவை அறிவீனத்தைக் கொண்டு எடைபோடுவது அறிவீனமாகும்.

நம்மிடையேயுள்ள ஒருவர் அவரறிந்த உண்மையை அனுபவத்தைக்கூற முற்பட்டால் அவர் பட்டதாரியா? உலமாவா? மௌலவியா? கறாமத் அவரிடமுண்டா? அவர் பணக்காரரா? மக்களிடையே செல்வாக்குடையவரா? நல்ல மாடிவீடு அவரிடமுண்டா? உண்ணாமல், உறங்காமல் இருக்கிறாரா? தாடி, தலைப்பாகை, தஸ்பீஹ்மணி, தொழுகை அவரிடமுண்டா என்று ஆராய்கிறோமேயல்லாமல் அவர் கூறும் உண்மையைக் கண்டறிய, ஆராய, சரிபிழை கணித்து உண்மையை ஒப்புக்கொள்ள முற்படுகிறோமேயில்லை. மேலும் அவரிடமுள்ள நல்ல குணசுபவாங்களையெல்லாம் மறந்து அவரிடம் இல்லாத துர்குணங்களையெல்லாம் கற்பனைபண்ணி ஏதாவதோர் பட்டமும் சூட்டிவிட முற்படுகிறோம். மேலும், அவரை எப்படியாவது தோற்கடித்து எம் கட்சியை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்றும் கங்கணம் கட்டுகிறோம். **அந்த இருண்டகால மக்களும் நம்மைப்போன்ற இதே நிலையில்தானே இருந்திருக்கிறார்கள்.** இதோ குர்ஆனைப் பார்.

وَقَالُوا۟ مَالِ هَـٰذَا ٱلرَّسُولِ يَأْكُلُ ٱلطَّعَامَ وَيَمْشِى فِى ٱلْأَسْوَاقِ

لَوْلَآ أُنزِلَ إِلَيْهِ مَلَكٌ فَيَكُونَ مَعَهُۥ نَذِيرًا

25-7 *அவர்கள் கூறுகிறார்கள், இந்தத் தூதருக்கென்ன? (நேர்ந்தது) அவர் ஆகாரம் புசிக்கிறார். கடைக்குச் செல்கிறார். அவருக்காக ஒரு மலக்கு இறக்கி வைக்கப்பட்டு அவர் இவருடனிருந்துகொண்டு அச்சமூட்டி எச்சரிக்கை செய்துகொண்டிருக்க வேண்டாமா?*

أَوْ يُلْقَىٰٓ إِلَيْهِ كَنزٌ أَوْ تَكُونُ لَهُۥ جَنَّةٌ يَأْكُلُ مِنْهَا ۚ وَقَالَ ٱلظَّٰلِمُونَ إِن
تَتَّبِعُونَ إِلَّا رَجُلًا مَّسْحُورًا

25-8 *அல்லது அவருக்கு யாதொரு புதையல் கொடுக்கப்படவேண்டாமாஅல்லது அவர் உண்பதற்கு வேண்டிய (கனிகளையுடைய) யாதொருசோலை அவருக்கு இருக்கவேண்டாமா? அன்றி இவ்வக்கிரமக்காரர்கள், நீங்கள் சூன்யம் செய்யப்பட்ட மனிதரையே பின்பற்றுகிறீர்கள் என்று (விசுவாசிகளை நோக்கிக்) கூறுகின்றனர்.*

ٱنظُرْ كَيْفَ ضَرَبُوا۟ لَكَ ٱلْأَمْثَٰلَ فَضَلُّوا۟ فَلَا يَسْتَطِيعُونَ سَبِيلًا

25-9 *ஆகவே உம்மைப் பற்றி அவர்கள் என்ன, என்ன உதாரணங்களைக் கூறுகிறார்கள் என்பதை கவனித்துப்பாரும். இவர்கள் வழிகெட்டே போனார்கள். நேரான வழியை அடைய இவர்களால் முடியாது.*

وَقَالَ ٱلَّذِينَ لَا يَعْلَمُونَ لَوْلَا يُكَلِّمُنَا ٱللَّهُ أَوْ تَأْتِينَآ ءَايَةٌ ۗ كَذَٰلِكَ قَالَ ٱلَّذِينَ
مِن قَبْلِهِم مِّثْلَ قَوْلِهِمْ ۘ تَشَٰبَهَتْ قُلُوبُهُمْ ۗ قَدْ بَيَّنَّا ٱلْءَايَٰتِ لِقَوْمٍ يُوقِنُونَ

2-118 *மேலும் கல்வியறிவில்லாதோர் அல்லாஹ் நம்முடன் பேச வேண்டாமா? அல்லது ஒரு வசனம் நமக்கு வரவேண்டாமா? எனக்கேட்கின்றனர். இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் (மூஸாவிடம்) கேட்டார்கள். (அவர்களுடைய இருதயங்கள்) இவர்களுடைய இருதயங்களை ஒத்திருக்கின்றன. விசுவாசம் கொள்ளும் ஜனங்களுக்கு நம்முடைய அத்தாட்சிகளை நிச்சயமாக நாம் தெளிவாக்கி இருக்கிறோம்.*

இவைபோன்ற மற்றும் ஆயத்துக்களையும் சிந்தனை செய்துபார். ஆகையால் தான் பூர்வீக காலமக்களின் நிலைமையிலேயே இன்னும் நாம் இருந்துகொண்டிருக்கிறோம் என்று நான் கூறுகிறேன். நாம் உண்மையான விஞ்ஞான காலச் சீர்திருத்தவாதிகளாய் இருந்தால் எவர் கூறினாலும் சரி பட்டம்பதவி, உடை, நடைகளை நோக்காமல் உண்மையைக் கண்டறியவே முற்படுவோம். றசூல் (ஸல்) அவர்களால் யுத்தமேசெய்து நிலைப்படுத்திய உண்மைகளைப் புரட்டியே இருக்கமாட்டோம். அந்த றசூலையும், குர்ஆனையும் உண்மையாகவே மனப்பூர்வமாக நம்பியிருந்தால் அல்லாஹ்வுக்கும் அவனது றசூலுக்கும் மாறாகக் கூறுகிற எந்த ஒரு விஷமியின் சொல்லையும் நாம் ஏற்றிருக்கமாட்டோம். சகோதரனே! பொறுமையை இழந்துவிடாதே. காலாகாலம் தோன்றிய அறிஞர்கள், நல்லடியார்கள் எல்லோருமே பட்டதாரிகளாகவோ, எல்லா வசதிகளையும் பெற்றுக்கொண்டவர்களாகவோ வாழ்ந்ததில்லை. ஒரு சிலருக்கு ஒரு சிலவாய்ப்புக்களையும் வேறுசிலருக்கு வேறுபல வாய்ப்புக்களையும் இன்னும் சிலருக்கு ஏறக்குறைய எல்லாவாய்ப்புக்களையும் இறைவன் கொடுத்திருந்தான். மூடமக்களிடையே புதையுண்டு உயிரற்றுக் கிடந்த உண்மைகளை அவர்கள் எடுத்துக்கூறியபோதெல்லாம் **பெரும்பாலும் மக்களுடைய எதிர்ப்புகுள்ளானார்கள். அவர்கள் பெரும்பாலும் பொய்யர்கள் என்றே கணிக்கப்பட்டார்கள்.**

தங்கள் செயல்களைத் தங்கள் அறிவுகளைத் தாங்களே எடைபோடத் தெரியாத ஒருசிலர் இந்த மகான்களை வழிகெட்ட கூட்டம் என்றும், மார்க்கம் கெட்டவர்கள், தெரியாதவர்கள் என்றும் தீர்ப்புக் கட்டினார்கள். றசூலுல்லாஹ்வையும் ஸஹாபாக்களையும் கூட அக்கால மக்கள் வழிகெட்டவர்களென்றும் மார்க்கம் தெரியாதவர்களென்றும் தீர்ப்புக் கட்டியிருக்கிறார்கள். இவ்விஷயம் சில ஹதீஸ்களினாலும் ஆயத்துக்களினாலும் தென்படுகிறது. விரிவைப் பயந்து அவற்றை நான் இங்கே கூறவில்லை.

وَإِذَا رَأَوْهُمْ قَالُوٓا۟ إِنَّ هَٰٓؤُلَآءِ لَضَآلُّونَ

83-32 *இவர்களைக் கண்டால் நிச்சயமாக இவர்கள் வழிகெட்டுபோனார்கள் என்று கூறுகின்றனர்.*

அறிஞர்கள், சீர்திருத்தவாதிகள். அவ்லியாக்கள், நபிமார்களில் பலர் மூடமக்களால் கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள். ஒரு சிலர் சமூகத்தை விட்டு நீங்கி காட்டுப்புறங்களில் வாழ்ந்தார்கள். ஒருசிலர் மட்டும்தான் காலாகாலம் உண்மையை உணர்த்தினார்கள். உண்மையைக் கூறுவது அவர்களுடைய கடமையாக இருந்தது. ஆயினும் மக்கள் அவர்களை இறப்பின் பிறகுதான் ஏதோவெல்லாம் புழுகமுற்பட்டார்கள். இது அக்காலத்தில் மட்டுமல்ல, இக்காலத்திலும் இனிமேலும்

அப்படித்தான். **ஏனென்றால் நல்லடியார்கள், அவ்லியாக்கள் என்ற வசனம் மக்களுக்குத் தெரியுமேயல்லாமல் அப்பெரியார்களின் உண்மை, அவர்களுடைய அறிவின் தன்மை மக்களுக்குத் தெரியவே தெரியாது.** நல்லடியார் என்றால் அறிஞர் என்றால் மக்கள் அவரிடம் எதிர்பார்ப்பது தாடி, தலைப்பாகை, தஸ்பீஹ்மணி, தொழுகை போன்றவற்றைதான். ஏனென்றால் இம்மக்கள் இந்த அடிப்படையில்தான் பயிற்றப்பட்டிருக்கிறார்களேயன்றி உண்மை தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

தொழுகையை ஒரு கேடயமாகவைத்தே நம்முன்னோரில் சிலர் அறியாமையால் எம்மை வழிகெடுத்திருக்கிறார்கள் என்பது எம்மில் அநேகருக்க தெரியாது. எம்மில் மிக அநேகர் குர்ஆனையோ ஹதீஸ்களையோ சிறிதேனும் ஆராய்ந்து பாராததால் தொழுகை எதற்காக? அதன் இரகசியம் என்ன? என்பது தெரியவில்லை.

وَمِنْهُم مَّن يَسْتَمِعُونَ إِلَيْكَ ۚ أَفَأَنتَ تُسْمِعُ ٱلصُّمَّ وَلَوْ كَانُوا۟ لَا يَعْقِلُونَ

10-42 *அவர்களில் உம்முடைய வார்த்தையைக் கேட்போரும் இருக்கின்றனர். (ஆயினும் எல்லோருமே கேட்கிறார்கள் என்று நம்பிவிட்டீரா?) ஒன்றையுமே அறிந்துகொள்ள முடியாத முழுச்செவிடர்களைச் செவிகேட்கும்படி செய்ய மெய்யாகவே உம்மால் முடியுமா?*

وَمِنْهُم مَّن يَنظُرُ إِلَيْكَ ۚ أَفَأَنتَ تَهْدِى ٱلْعُمْىَ وَلَوْ كَانُوا۟ لَا يُبْصِرُونَ

10-43 *அவர்களில் உம்மைப் பார்ப்போரும் பலர் இருக்கின்றனர். (ஆயினும் எல்லோருமே உம்மை அறிந்துவிட்டார்கள் என்று நம்புகிறீரா?) யாதொன்றையும் பார்க்க முடியாத பிறவிக் குருடர்களைப் பார்க்கும்படி செய்ய உம்மால் முடியுமா?*

அபூஜஹ்ல் போன்றவர்கள் என்னை அப்துல்லாஹ்வுடைய மகன் முஹம்மதாகக் கண்டார்களேயன்றி நபியாக றசூலாக என்னைக் காணவில்லை என்று றசூலுல்லாஹ் கூறுகிறார்கள்.

وَمَا مَنَعَ ٱلنَّاسَ أَن يُؤْمِنُوٓا۟ إِذْ جَآءَهُمُ ٱلْهُدَىٰٓ إِلَّآ أَن قَالُوٓا۟ أَبَعَثَ ٱللَّهُ بَشَرًا
رَّسُولًا

17-94 *மனிதர்களிடம் நேரான வழி வந்த சமயத்தில் அல்லாஹ் ஒருமனிதரையா தூதாராக அனுப்பி வைத்தான் என்று கூறுவதைத் தவிர அவர்கள் விசுவாசம் (ஈமான்) கொள்வதைத் தடைசெய்வதற்கு ஒன்றுமே இல்லை*

قُل لَّوْ كَانَ فِى ٱلْأَرْضِ مَلَٰٓئِكَةٌ يَمْشُونَ مُطْمَئِنِّينَ لَنَزَّلْنَا عَلَيْهِم مِّنَ ٱلسَّمَآءِ
مَلَكًا رَّسُولًا

17-95 *நீர் கூறும், பூமியில் மலக்குகளே வசித்து அதில் அவர்கள் சாதாரணமாக நடந்து திரிந்துகொண்டுமிருந்தால் நாமும் வானத்தில் இருந்து ஒரு மலக்கையே தூதராக அவர்களிடம் அனுப்பியிருப்போம்.*

وَلَوْ جَعَلْنَٰهُ مَلَكًا لَّجَعَلْنَٰهُ رَجُلًا وَلَلَبَسْنَا عَلَيْهِم مَّا يَلْبِسُونَ

6-9 *தூதரை ஒரு மலக்காக அனுப்புவதாயினும் அவரையும் ஒரு மனிதருடைய ரூபத்தில்தான் நாம் அனுப்புவோம். இப்போதிருக்கும் சந்தேகத்தையே நாம் உண்டுபண்ணியவராவோம்.*

يَٰحَسْرَةً عَلَى ٱلْعِبَادِ ۚ مَا يَأْتِيهِم مِّن رَّسُولٍ إِلَّا كَانُوا۟ بِهِۦ يَسْتَهْزِءُونَ

36-30 *அந்தோ! என் அடியார்களைப் பற்றிய துக்கமே! அவர்களிடம் நம்முடைய எந்தத்தூதர் வந்தபோதிலும் அவர்கள் அவரைப் பரிகாசம் பண்ணாதிருப்பதில்லை.*

மனிதன் தன்னுடைய அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயத்தில் வீண் பிடிவாதமாகவும் வெற்றிபெறும் நோக்கமாகவும் கண்மூடித்தனமாக எதிர்ப்பான் என்பது உண்மை. முடிந்தவன் சாதிக்கிறான். முடியாதவன் போதிக்கிறான். முயற்சியே செய்யாதவன் விவாதிக்கிறான்.

மேற்காட்டிய ஆயத்துக்களை நுட்பமாக ஆலோசனை செய்துபார். எவ்விடத்துக்கு எவரை எதற்காக எப்படி அனுப்புவது என்பது இறைவனுடைய அறிவைப் பொறுத்தேயல்லாமல் எம்முடைய விருப்பத்தை அறிவைப் பொறுத்த விஷயமேயல்ல.

**ஹதீஸ்:** ***அல்லாஹ்வுக்காக ஜனங்கள் யாவரையும் விரோதித்து குர்ஆனுடைய ஆயத்துக்களுக்கு (உண்மையான) பல பொருட்களையும் விளங்குகிற வரையில் சிறந்த மார்க்க விளக்கவான்களில் சேர்க்கப்படமாட்டான்.***

இந்த ஹதீஸை நோக்கினால் உண்மையை விளங்கியறிவதற்கு ஜனங்கள் யாவரையுமே விரோதிக்க வேண்டும் என்றிருந்தால் விளக்குபவர் எப்படி மக்களை விரோதிக்க நேரிடும் என்பதைச் சிந்தனை செய்துபார். ஒருவர் ஓர் உண்மையைக் கூற முற்பட்டால், தங்களை மேதைகளாகக் கணித்துக் கொண்ட ஒருசிலர் எடுத்த எடுப்பிலேயே காபீர் (வழிகெட்டவன்) காதியானி, வஹ்ஹாபி, பலாஸிபா என்ற தங்களுக்கு தெரிந்த ஒரு கூட்டத்தின் பெயரால் பெயர் சூட்டிவிடுகிறார்கள். ஆனால் இந்தக் கூட்டத்தார்கள் யார்? அவர்களுடைய கொள்கைகைள் எவை? என்பதைக்கூட அறியாமலிருக்கும் போதும் பெயர் சூட்டிவிடுகிறார்கள். நீண்ட தாடியை வைத்துக்கொண்டு மெதுவாய்ப் பேசு நீ நீண்டதூரம் போகலாம் என்று "ரூஸ்வெல்ட்" கூறுவது போல ஒரு சிலர் தாடி, தலைப்பாகைகளை வைத்துக்கொண்டே மக்களை ஏய்த்துவிடுகிறார்கள். இவ்விதமான பட்டப்பெயர்களைக்கேட்ட பாமரமக்கள் உண்மையைக் கண்டறியும் வாய்ப்பை இழந்தேவிடுகிறார்கள். மூடப்பிடிவாதமுடைய ஒருசில வேஷதாரிகள் ஒவ்வோர் கிராமத்திலும் இருக்கவே செய்கிறார்கள். இவர்களுடைய உள்ளம் கண்களைப்போல் இருக்கிறது. கண்களில் அதிக ஒளிபட்டவுடனே கண்கள் இறுக மூடிக்கொள்வது போல அவர்களுடைய அறிவுக்கப்பாற்பட்ட விஷயங்களை இவர்கள் கேட்கும்போது இவர்களுடைய உள்ளங்களும் மூடிக்கொள்கின்றன.

ٱشْتَرَوْاْ بِـَٔايَٰتِ ٱللَّهِ ثَمَنًا قَلِيلًا فَصَدُّواْ عَن سَبِيلِهِۦٓ إِنَّهُمْ سَآءَ مَا كَانُواْ

يَعْمَلُونَ

9-9 *அவர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களை சொற்பகிரயத்திற்கு விற்றுவிட்டு (மனிதர்கள்) அவனுடைய பாதையில் செல்வதையும் தடுக்கின்றனர். நிச்சயமாக அவர்கள் செய்யும் காரியம் மிகவும் கெட்டது.*

بَلْ كَذَّبُواْ بِمَا لَمْ يُحِيطُواْ بِعِلْمِهِۦ وَلَمَّا يَأْتِهِمْ تَأْوِيلُهُۥ

10-39 *என்கினும் அவர்களுக்குத் தெரியாததும் அதன் தாவீல் (ஆதாரம்) அவர்களுக்கு கிடைக்காததுமான சங்கதியைப் பொய்யென்று கூறுவார்கள்.*

இவ்விடத்தில் நான் சில அறிவுரைகளைக் கூறவேண்டியவனாக இருக்கிறேன். நம்நாட்டில் பெரும்பாலும் வறுமையை அடிப்படையாகக் கொண்டுதான் மாபெரும் மேதைகளையும் கூடத் தவறான வழியில் செல்பவர்களாகவும் அல்லாஹ்வுடைய தண்டனையைப் பெற்றுக் கொண்டவர்களாகவும் கணிக்கிறோம். இது எங்களுடைய அறிவீனமாகும் விஷயம் அப்படியல்ல. இறைவழியில் சென்றுகொண்டிருக்கிற ஒரு நல்லடியார் ஏழு நிலைமையில் சீர் பெற வேண்டியவராயும் இந்த ஒவ்வோர் நிலைமையிலும் சீர்படும்போதுதான் அடுத்த நிலைமையைப் பெறுபவராகவும் இருக்கிறார்.

அந்த நிலைமைகள்:

**1ஆவது: "முஜாஹிதா"** எனும் சத்முயற்சி (பிரயாசை தெண்டிப்பு)
**2ஆவது: "தவக்கல்"** எனும் தெய்வத்தில் நம்பிக்கைகொள்ளல்.
**3ஆவது: "ஹுஸ்னேகுல்க்"** என்னும் நற்குண ஒழுக்கம்.
**4ஆவது: "ஷுக்குர்"** என்னும் நன்றியறிதல்.
**5ஆவது: "ஸபூர்"**என்னும் பொறுமை
**6ஆவது: "ரிலா"** என்னும் தெய்வசித்தப் பொருத்தம்
**7ஆவது: "ஸித்தீக்"** (ஸித்க்) என்னும் சத்தியம் என்பவையாகும்.

மேற்காட்டிய ஒவ்வோர் விஷயத்திலும் பூரணத்தன்மைபெற்ற ஒருவர்தான் இறை ஐக்கியத்தைப் பெறும் தகுதியை அடைகிறார். ஆகவே இந்த நிலைமைகள் ஒவ்வொன்றிலும் தேர்ச்சிபெற வேண்டும் என்பதற்காகவே இறைவன் அவனுடைய விஷேட கிருபையினால் சில கஷ்டநஷ்டங்களை ஏற்படுத்துகிறான். உதாரணமாக வறுமை, பிறரால் கஷடமடைய வேண்டிய நிலைமைகள், ஒரு

மனிதனுக்கு ஏற்படாவிட்டால் அம்மனிதனுக்கு “ஸபூர்” என்பதன் உண்மையைத் தெரியாதவனாகவே இருப்பான். பேரிழப்புக்களும் இன்னல்களும் ஏற்படாதவரையில் “ரிலா” என்னும் தெய்வ சித்தப் பொருத்தத்தை அறியாதவனாகவும் அதில் வெற்றி பெற முடியாதவனாகவும்தான் இருப்பான். இதே போல இந்த ஏழு விஷயங்களிலும் பூரண விளக்கமும் அனுபவமும் இல்லாத ஒருவர் ஆரிபீன்கள் (ஒலிமார்களின்) நிலையை அடைய முடியாதவராய்விடுகிறார். இவ்விஷயங்களில் தேர்ச்சியுடைய ஒருவர் இறைவனுடைய இரகசியங்களைக் காப்பாற்றக்கூடியவராகவும் மக்களை வழி நடத்தக்கூடியவராகவும் ஆகிவிடுகிறார். இவரைத்தான் ஒலி என்று நாம் கூறுகிறோம். நாவிதக்கத்தியைப் பாவித்துப் பலன்பெற வேண்டுமானால் நாவிதப் பயிற்சிபெற வேண்டும் என்பது நிச்சயம். பயிற்சி இல்லாதவன் கையில் கத்தியைக் கொடுக்கவே முடியாது. ஏன்? அக்கத்தியினால் அவனும் பிறரும் நஷ்டமமைவதோடு கத்தியும்கூட நிச்சயமாகப் பாழடைந்தேவிடும். ஆகையால்தான் ஒலித்தனத்தைக்கொடுக்க இறைவன் விரும்புகிற ஒருவனுக்கு வாழ்வு நரகம்போலத்தென்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

பட்டம் பதவிகளிலும் செல்வச் செருக்கிலும் ஊறியுள்ள அறிவிலியான மனிதன் தன்னை உயர் பதவிக்கு ஏறிக்கொண்டிருப்பதாகக் காணுகிறான். இறைவன் தன்பேரில் கிருபைகடாட்சம் கொண்டே இந்தச் சுகபோக வாழ்வைத் தந்திருப்பதாக நம்புகிறான். ஆனால் அவன் உண்மையாகவே நரகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதையும் படிப்படியாக இறைவனால் தண்டிக்கப்பட்டுக் கொண்டிருப்பதையும் உணர்ந்து கொள்வதே இல்லை. இவ்விஷயத்தைக் குர்ஆனே எமக்கு விளக்கம் தருகிறது. இந்த அறிவு குறைந்த மனிதன் எக்கண்ணோட்டத்தோடு நோக்கினானோ அதே கண்ணோட்டத்தோடுதான் நல்லடியார்களின் வாழ்வையும் நோக்குகிறான். அவர்கள் உயர்பதவியிலிருந்து தாழ்பதவிக்கு இறங்கிக்கொண்டிருப்பதாகக் காணுகிறான். அவர்களுடைய வறுமை கஷ்டநஷ்டங்களெல்லாம் இறைவனால் கொடுக்கப்பட்ட தண்டனையே என்றும் காணுகிறான். அந்த நல்லடியார்களை மிகக் கேவலமானவர்களாக அவன் காண்பதால், அவர்களின் வார்த்தைகளையோ செயல்களையோ கணிப்பதுமில்லை., அவற்றில் உண்மை காண்பதுமில்லை. அது உண்மைதான் என்று கண்டாலும்கூட மனமுரண்டாக அதை ஏற்றுக்கொள்வதுமில்லை. **ஆனால் இந்த நல்லடியார்களைத் தன் பிரதிநிதியாக ஆக்கி அவர்களிடம் தன் பரிவட்டங்களைக் கையளித்து மக்களுக்கு வழிகாட்டவேண்டும் என்பதற்காகவே இறைவன் அவர்களுக்கு இவ்விதமான கடும் பயிற்சிகளை அளிக்கிறான் என்பதை அந்த முட்டாள் எப்படி உணர்ந்து கொள்ள முடியும்?**

நாம் முன்பு கூறிய ஏழு நிலைமைகளையும் தனித்தனியே விபரம் தருவதானால் பலநூறு பக்கங்களைக் கொண்ட பல புஸ்த்தகங்களையே எழுத வேண்டியேற்படும். வேண்டியதில்லை. இதற்கு முந்திய நல்லடியார்களான ஒலிமார்கள். எத்தனையெத்தனையோ விபரங்களை விளக்கிக்காட்டிச் சென்றிருக்கிறார்கள். இந்த ஒவ்வொர் நிலைமையிலும் எத்தனையோ வகையான படித்தரங்கள் இருக்கின்றன. இந்தப் பாதையில் எள்ளளவும் ஈடுபாடில்லாத ஒரு முட்டாள் இதை உணர்ந்து கொள்வது முடியாத ஒரு காரியமேயாகும். நான் உங்களை நேசிக்கிறேன் என்று ஒருவர் றசூல்(ஸல்) அவர்களிடம் கூறியபோது. **அப்படியானால் வறுமையை, ஏழ்மையை எதிர்பாருங்கள் என்றார்கள். நான் அல்லாஹ்வை நேசிக்கிறேன் என்றபோது அப்படியானால் சோதனைகளை எதிர்பாருங்கள்** என்று கூறினார்கள். ஆகவே வறுமை, பிணி, துன்பம் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு நல்லடியார்களை எடைபோடுவது தவறாகும்.

ஐயூப்(அலை) கடினரோகத்தினால் சுமார் 18 வருடங்கள் பீடிக்கப்பட்டு இருந்தார்கள். அக்காலமக்கள் **அவர்கள் வழிதவறிச் சென்றதனால் அல்லாஹ்வால் ஏற்பட்ட தண்டனைதான் அது என்றுதான் தீர்ப்புக்கட்டினார்கள். அவர்களை ஒதுக்கித்தள்ளினார்கள்.** அவர்களுடைய அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். இதேபோல நூஹு(அலை), இப்றாஹீம்(அலை),ஈஸா(அலை), றசூல்(ஸல்) ஆகியோரையும் மற்றும் நபிமார்களையும் அவர்களின் பின் வெளியான நல்லடியார்களையும் சிந்தனை செய்துபார். **இந்த மகான்களெல்லாம் நோயினால், வறுமையினால், கஷ்டநஷ்டங்களினால் பக்குவப்படுத்தப்பட்டார்களென்பது அக்காலமக்கள் அறியாத ஒரு விஷயம் தான்.** அவ்விதமான கஷ்ட நஷ்டங்கள் இறைவனின் பேரன்பினால் அருளப்பட்ட விஷேட நன்கொடை என்பதும் அம்மக்களுக்குத் தெரியாத ஒரு விஷயம்தான். ஆகையால்தான் அக்காலமக்கள் அந்த மகான்களைத் தூஷணித்தார்கள். ஆனால் அந்த நபிமார்கள் ஒலிமார்களின் பெயர்களைக்கூறிய மாத்திரத்திலேயே நாம் இன்று ஸலவாத்து, புகழ்மாலை கூறுகிறோம். ஒன்றை ஒன்பதாக மிகைப்படுத்திப் புகழவும் ஆரம்பிக்கிறோம். ஆனால் அதே நல்லடியார்களைப் பின்பற்றிய ஒரு நல்லடியார் இன்று கஷ்டமான நிலையில் துன்பங்களின் மத்தியில் சிக்குண்டிருந்தால் அவர் வழிகெட்டவரென்றும் அவருக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை இறைவனின் தண்டனையென்றும் தீர்ப்புக்கட்டுகிறோம். அவருடைய பேச்சு மகத்தான உண்மைதானென்று தெரிந்தாலும்கூட அதை நாம் உதறித்தள்ளுகிறோம். எம்முடைய வஹ்மு எம்மை எவ்வளவுதூரம் மிகைத்திருக்கிறதென்பதைச் சிந்தனை செய்துபார். **நாம் எவ்வளவு தூரம் பொய்யர்களாக, கேள்வியில், எழுத்தில், வழக்கத்தில் மூழ்கிய மூடர்களாக இருக்கிறோம் என்பதைச் சிந்தனை செய்துபார். றசூல்(ஸல்) அவர்கள் பசி தாங்கமுடியாத நிலையில் வயிற்றில் கல்லைக் கட்டிகொண்டார்கள் என்பதை நீ அறியவில்லையா? முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் சுமார் 25 வருடங்கள் வயிறார உண்ண உணவில்லாமல் தவித்தார்கள் என்பதை நீ கேள்விப்பட்டதில்லையா? அவர்கள் உட்கார, உறங்க வீடில்லாமல், இடிந்து பாழடைந்த ஓர் இடத்தைப் போதுமாக்கிக் கொண்டார்கள் என்பதை நீ அறியவில்லையா? ஷாஹுல் ஹமீத் நாயகம் அவர்களுக்கு ஒருபோது குடிப்பதற்கே நீர் தரமுடியாதென்று மக்கள் மறுத்தார்கள் என்பதை நீ அறியவில்லையா?** இவ்விதமான ஒலிமார்களின் சமாதிகளில் கட்டடம் கட்டவும் காணிக்கை வைக்கவும் கூடிய உள்ளம் இப்போது நமக்கு எப்படி

ஏற்பட்டது? நாம்வெறும் பிணங்களாக, அறிவுக்கு இடமளியாத மிருகங்களாக வாழ்வதில் அர்த்தமே இல்லை. ஆகவெ மூடத்தனத்தைவிடுத்துப் பகுத்தறிவைக்கொண்டே உண்மையை உணர்வாயாக.

أَمْ حَسِبْتُمْ أَن تَدْخُلُوا۟ ٱلْجَنَّةَ وَلَمَّا يَأْتِكُم مَّثَلُ ٱلَّذِينَ خَلَوْا۟ مِن قَبْلِكُم ۖ
مَّسَّتْهُمُ ٱلْبَأْسَآءُ وَٱلضَّرَّآءُ وَزُلْزِلُوا۟ حَتَّىٰ يَقُولَ ٱلرَّسُولُ وَٱلَّذِينَ ءَامَنُوا۟
مَعَهُۥ مَتَىٰ نَصْرُ ٱللَّهِ ۗ أَلَآ إِنَّ نَصْرَ ٱللَّهِ قَرِيبٌ

2-214 *உங்களுக்கு முன் சென்றவர்களுக்கு ஏற்பட்டதுபோன்ற (கஷ்டநஷ்ட) நிலைமை உங்களுக்கு வராமலே நீங்கள் சுவர்க்கத்தில் நுழைந்துவிடலாம் என்று நினைத்துக் கொண்டீர்களோ! விசுவாசம் கொண்ட அவர்களையும் அவர்களுடைய தூதர்களையும் கஷ்டங்களும் துன்பங்களும் பீடித்து (சகிக்கமுடியாத நிலைமையில்) அல்லாஹ்வுடைய உதவி எப்போது வருமென்று கேட்டதற்கு அல்லாஹ்வினுடைய உதவி (இதோ) நிச்சயமாக சமீபத்தில் இருக்கிறதென்று (நாம்) கூறும்வரையில் அவர்கள் ஆட்டிவைக்கப்பட்டார்கள்.*

وَلَنَبْلُوَنَّكُم بِشَىْءٍ مِّنَ ٱلْخَوْفِ وَٱلْجُوعِ وَنَقْصٍ مِّنَ ٱلْأَمْوَٰلِ وَٱلْأَنفُسِ
وَٱلثَّمَرَٰتِ ۗ وَبَشِّرِ ٱلصَّٰبِرِينَ

2-155 *பயம், பசி, பொருள்களில் நஷ்டம், பலன்களின் நஷ்டம் ஆகியவைளைக்கொண்டு நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். சகித்துக்கொண்டிருப்போருக்கு நீர் நன்மாராயம் கூறுவீராக.*

இவ்வாயத்துக்களைப் பல கண்ணோட்டங்களோடு ஆராயவேண்டும். எமது அறிவு குறைந்த மக்கள் நினைப்பதுபோல் சுவர்க்கம செல்வது அவ்வளவு இலகுவான ஒரு வேலையேயல்லை.

நபிமார்கள் வலிமார்களுக்கு கடினமான வெறுக்கத்தக்க நோய்கள் ஏற்படுவதில்லையென்று முஸ்லிம்களில் ஒரு சாரார் வியாக்கியானம் தருகிறார்கள், நம்புகிறார்கள். ஆனால் இவர்களுடைய கூற்றுக்கு உறுதியான ஆதாரங்கள் தென்படவில்லை. குர்ஆனின் விபரங்களை நோக்கும் போது அவ்விதமான கொடிய நோய்கள் நபிமார்கள், வலிமார்களுக்கு ஏற்பட்டாலும் நாம் அதைப் பொருட்படுத்த வேண்டிய அவசியமேயில்லை. ஏனென்றால் அவர்களும் எம்போன்ற மனிதர்கள்தானே.

இன்றைய உலகில் வாழும் மக்களில் இந்து சமய மக்களை ஒரு வகையில் மெச்சவேண்டியதாக இருக்கிறது. அதாவது இந்து சமய அறிஞர்கள் தௌஹீது (அத்வைதம்) சம்பந்தமாக எத்தனையோ வகையான இனமான விபரங்களை எக்காலத்திலும் வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறார்கள். சிற்சில தப்புத்தவறுகள் இருப்பினும் சரியே. ஆனால் அச்சமூக மக்கள் அவற்றில் எதையும் திடீரென மறுப்பதோ, எதிர்ப்பதோ கிடையாது. மேலும் இந்த அத்வைதமான முக்திமார்க்க விளக்கங்களை பக்திமார்க்கத்துக்கு விரோதமாக அவர்கள் காண்பதுமில்லை. ஏனெனன்றால் பக்திமார்க்கத்தின் உண்மையான நோக்கம் முக்திபெறுவதே என்பதை அவர்கள் எல்லோரும் தெளிவாக அறிந்திருக்கிறார்கள். ஆனால் எம் முஸ்லீம் மக்களிடையே தௌஹீது சம்பந்தாக எந்த ஒரு விளக்கத்தை எவர் எப்போது வெளிப்படுத்தினாலும் ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. ஏனென்றால் முஸ்லீம் சமூகமக்களிடையே தௌஹீது என்பது முக்திபெறுவதற்குரிய வழியே என்பதும் அந்த முக்தியில் சேர்ப்பதே பக்திமார்க்கத்தின் நோக்கம் என்பதும் முற்றாக மறைக்கப்பட்டுப் போய்விட்டதால். **முக்தி மார்க்கம் என்று ஒன்று கிடையாது என்றே முடிவு கட்டிவிடுகிறார்கள். மேலும் முக்திமார்க்கம் என்பது பக்திமார்க்கத்துக்கு நேர் விரோதமான ஒன்று என்றும் காண்கிறாார்கள்.** எந்த ஒரு நல்லறிஞரும் எப்போதும் எம்மக்களிடையே உண்மையைக் கூறமுடியாத நிலையே இருந்து கொண்டிருக்கிறது. இதற்குரிய காரணம் எம்முன்னோர்களில் ஒருசிலர் எமக்குத்தந்த மூடத்தனமான விளக்கங்களில் நாம் புதையுண்டு கிடப்பதேயாகும். கண்மூடித்தனமான கட்டுப்பாடுகள் மனிதனை அறிவிலியாக மாற்றும் என்பது நிச்சயம். இன்றுள்ள தப்புதவறான நம்பிக்கைகளுக்கு முக்கிய காரணம் அச்சம்தான்.

உலகின் எந்தப்பக்கத்தில், எப்போது ஓர் உண்மை கண்டு பிடிக்கப்பட்டாலும் அதை முதலில் எதிர்ப்பவர்கள் பொய்யாய்ப், புரட்டாய் காண்பவர்கள் பெரும்பாலும் முஸ்லீம்களாகவே தென்படுகிறார்கள். ஒலிப்பதிவு நாடாவுக்கொப்பான ஒருசில உலமாக்கள் மக்களின் சிந்தனையைப்பறித்து விட்டிருக்கிறார்கள் என்பதுதான் காரணம். சாதாரண உலக விவகாரங்களிலேயே நுட்ப அறிவும் சரிபிழை கணிக்கும் ஆற்றலும் இல்லாத, நடிப்புக் கலையில் கைதேர்ந்த ஷைத்தான்களின் உண்மைக்குமாறான உளறல்களை உள்ளத்தில் பதித்துக்கொண்டால் உண்மையான மூமின்களாக மட்டுமல்ல, பகுத்தறிவுடைய சாதாரண மனிதனாய்க்கூட வாழ்வது கடினம்தான்.

ஹதீஸ்: *உங்களில் ஒருவன் காலையில் சென்று அறிவின் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்வது நூறு றக்காஅத்துத் தொழுவதைவிடச் சிறந்ததாகும்.*

ஹதீஸ்: ***ஜனங்களால் கற்றுக்கொள்ளப்படுகிற (உண்மையான) அறிவின் ஒருபாடம் துன்யாவையும் அதிலுள்ளவை யாவையும் உரித்தாக்கிக் கொள்வதைவிடச் சிறந்ததாகும்.***

ஹதீஸ்: ***அறிஞுனுடைய சங்கத்துக்குப் போவது ஆயிரம் ஜனாஸாவுக்குச் செல்வதை விடவும் ஆயிரம் றக்காஅத்துககள் தொழுவதைவிடவும் ஆயிரம் வியாதியஸ்தரைக் கண்டு வினவுவதை விடவும் சிறந்தது என்று நபியவர்கள் கூற,குர்ஆனை ஓதுவதைவிடவும் சிறந்ததா? என்று ஒரு தோழர் கேட்க, ஆம் அறிவில்லாமல் குர்ஆன் பிரயோசனம் செய்வதுண்டா? என்று கூறினார்கள்.***

ஹதீஸ்: ***இஸ்லாத்தில் நிலைப்படுவதற்காக இல்மைக் கற்றுக்கொண்டு வரும்போது இறந்து போகிறவர்களுக்கும் அன்பியாக்களுக்குமிடையில் சுவர்க்கத்தில் ஒரேயோரு பதவி மட்டுமே வித்தியாசம்.***

இவை போன்ற பல ஹதீஸ்களை அறிவுரைகள் இருப்பினும் நாம் இவ்வளவை போதுமாக்குவோம்.

ٱتَّبِعُواْ مَآ أُنزِلَ إِلَيۡكُم مِّن رَّبِّكُمۡ وَلَا تَتَّبِعُواْ مِن دُونِهِۦٓ أَوۡلِيَآءَۗ قَلِيلٗا مَّا
تَذَكَّرُونَ

7-3 *உங்களுக்காக இறைவன் அருளியதையே பின்பற்றுங்கள். அவனையன்றிக் காரியஸ்தர்களை நீங்கள் பினபற்றாதீர்கள். நல்லுணர்ச்சி பெறுவோர் உங்களில் வெகுசொற்பம்*

إِنَّ ٱلَّذِينَ فَرَّقُواْ دِينَهُمۡ وَكَانُواْ شِيَعٗا لَّسۡتَ مِنۡهُمۡ فِي شَيۡءٍۚ إِنَّمَآ أَمۡرُهُمۡ إِلَى
ٱللَّهِ ثُمَّ يُنَبِّئُهُم بِمَا كَانُواْ يَفۡعَلُونَ

6-159 *எவர்கள் தங்கள் மார்க்கத்ததைப் பலபிரிவுகளாகப் பிரித்துவிட்டனரோ அவர்களுடன் உமக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை. அவர்களுடைய விஷயமெல்லாம் அல்லாஹ்விடமே இருக்கின்றன. அவர்கள் செய்து கொண்டிருப்பவற்றைப் பற்றிப் பின்னர் அவன் அவர்களுக்கு அறிவித்துவிடுகிறான்.*

(இந்த ஆயத்தை நுட்பமாய் ஆராயவும் )

ذَٰلِكَ بِأَنَّ ٱللَّهَ نَزَّلَ ٱلۡكِتَٰبَ بِٱلۡحَقِّۗ وَإِنَّ ٱلَّذِينَ ٱخۡتَلَفُواْ فِي ٱلۡكِتَٰبِ لَفِي
شِقَاقِۭ بَعِيدٖ

2-176 *இதன் காரணம் நிச்சயமாக அல்லாஹ் உண்மையாகவே வேதத்தை இறக்கி இருக்க (சில சுகங்களுக்காக அதன் வசனங்களை மறைப்பதுதான்) மேலும் வேதத்தைப் புரட்டுகிறவர்கள் நிச்சயமாக (நேர்வழியைவிட்டுப்) பிரிந்து வெகுதூரத்தில் இருக்கிறார்கள்.*

إِنَّ ٱلَّذِينَ يَكۡتُمُونَ مَآ أَنزَلۡنَا مِنَ ٱلۡبَيِّنَٰتِ وَٱلۡهُدَىٰ مِنۢ بَعۡدِ مَا بَيَّنَّٰهُ لِلنَّاسِ
فِي ٱلۡكِتَٰبِ أُوْلَٰٓئِكَ يَلۡعَنُهُمُ ٱللَّهُ وَيَلۡعَنُهُمُ ٱللَّٰعِنُونَ

2-159 *நேர்வழியையும் தெளிவான அத்தாட்சிகளையும் நாம் இறக்கி அவற்றை மனிதர்களுக்காக வேதத்தில் தெளிவுபடுத்திய பின்னும் எவர்கள் அவற்றை மறைக்கிறார்களோ அவர்களை நிச்சயமாக அல்லாஹ்வும் சபிக்கிறான். சபிப்போரும் அவர்களைச் சபிக்கின்றனர்.*

فَمَنْ أَظْلَمُ مِمَّنِ ٱفْتَرَىٰ عَلَى ٱللَّهِ كَذِبًا أَوْ كَذَّبَ بِـَٔايَـٰتِهِۦٓ ۚ إِنَّهُۥ لَا يُفْلِحُ ٱلْمُجْرِمُونَ

10-17 *அல்லாஹ்வின் மீது பொய்சொல்பவனைவிட அல்லது அவனுடைய வசனங்களைப் பொய்யாக்குபவனைவிட அக்கிரமக்காரன் யார்? நிச்சயமாக குற்றவாளிகள் சித்தியடையவே மாட்டார்கள்.*

ஹதீஸ்: ***நிச்சயமாக உண்மை நன்மையின்பக்கம் வழிகாட்டுகிறது. நன்மையோ சுவனபதிக்கு அழைத்துச்செல்கிறது. மனிதன் உண்மைபேசவிரும்பினால் அவன் இறைவனிடம் உண்மையாளன் என்று எழுதப்பட்டுவிடுகிறான். அன்றிப் பொய்யோ பாவங்களுக்கு வழிகாட்டுகிறது. பாவங்களோ நரகத்துக்கு அழைத்துச் செல்கின்றன. மனிதன் பொய்யுரைத்துப் பொய்பேசவிரும்பினால் இறைவனிடம் அவன் பொய்யன் என்றே எழுதப்பட்டுவிடுகிறான் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பாளர்: இப்னுமஸ்ஊத்**(றலி)
**ஆதாரம்: புஹாரி, முஸ்லிம், முஅத்தா, அபூதாவுத், திர்மிதி**

ஹதீஸ்: ***திருக்குர்ஆனிலுள்ள விஷயங்கள்பற்றி வீண்தர்க்கம் செய்வது நிராகரிப்பு (குபிர்) ஆகும். என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூஹுரைரா** (றலி)
**ஆதாரம்: அபூதாவூத்**

குர்ஆனுடைய விதிப்படி கலிமா முஹ்கமாத்தான ஒரே கருத்துடைய வசனம் என்பதை ஒப்புக்கொள்ளாமல் குர்ஆனுக்குமாறாக, (அல்லாஹ் றசூலுக்கு மாறாக) அறிவுக்கு நேர்விரோதமாக, கலிமா ஐந்து என்றும் கலிமாவுக்குப் பல கருத்துக்கள் உண்டென்றும் மக்களுக்கு விளக்கம் தந்தவர்களின் தகுதி என்ன? என்பதை நாம் மேலே காட்டிய குர்ஆன் ஹதீஸ்களின் ஆதாரங்களைக் கொண்டு நீ தீர்ப்புப் பெறுவாயாக, எம்முடைய இமாமும் நீதிபதியும் இறைவேதமான குர்ஆனேயாகும்.

மக்களிடையே மதிப்பைப்பெற்ற ஒருசில பட்டதாரிகளான எம்முடைய முன்னோர் மட்டும்தான் உண்மையைக் கண்டவர்கள் என்றும் இக்காலத்தில் உண்மையைக் கண்டவர்கள் இல்லையென்று தீர்ப்புக்கட்டுவது அறியாமையாகும். முன்னோர்களின் பிழையை ஒருவர் எடுத்துக்காட்டி விளக்குகிறார் என்றால் ஏதோ ஓர் புது விஷயத்தை (பித்அத்தை) நுழைக்கிறார் என்பது கருத்தல்ல. அவ்வுண்மையை ஒழித்துக்கட்டக் கத்தியைத் தீட்டுவதில் அர்த்தமேயில்லை. புத்தியை தீட்டுவதே பொருத்தமானது.

## இதன் சாரம்

**1ஆவது:** கலிமத்துத் தையிபா என்பது முஹ்கமாத்தைச் சேர்ந்தது **அதாவது ஒரே கருத்தையுடையது என்பது குர்ஆன் ஹதீஸ்களினாலும் பகுத்தறிவினாலும் வலிமார்களின் வாக்குகளினாலும் உறுதிப்படுத்தப்பட்ட ஓர் பூரண உண்மையாகும்.**

**2ஆவது:** கலிமாவுக்கு நாலு அல்லது பல பொருட்களுண்டு என்று கூறுவது **குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் அறிவுக்கும் நல்லடியார்களின் வாக்குகளுக்கும் மாறான படுபொய்யும் புரட்டுமாகும்.**

**3ஆவது:** கலிமா ஒரே கருத்துடையது என்பதற்கு குர்ஆன் ஹதீஸ்களில் **வேண்டியளவு ஆதரங்களுண்டு.**

**4ஆவது:** கலிமாவுக்குப்பல கருத்துக்களுண்டு என்பதற்கு **எவ்விதமான ஆதாரங்களுமே கிடையாது.** இது பின்பற்றல் வாதிகளின் கண்மூடித்தனமான பின்பற்றலால் இஸ்லாத்தில் நுழைக்கப்பட்ட **ஓர் பித்அத்தாகும்**

**5ஆவது:** ஐந்து கலிமாக்கள் உண்டு என்பதும் ஆதாரமற்ற கூற்றாகும். **இவ்விஷயமும் இடைக்காலத்தில் ஒரு சிலரால் நுழைக்கப்பட்ட ஓர் விஷயமாகும், இவற்றை பெரும்பாலார்** சிந்திக்காமலே கையாண்டு வருவதால் இன்று **இது வழக்கமாக மாறியிருக்கிறது.**

**6ஆவது:** றசூல் (ஸல்) அவர்களால் முன் அறிவித்தல் செய்யப்பட்ட காலத்தில்தான் **கலிமாவுக்குப் பல கருத்துக்கள் உண்டு என்பதும் ஐந்து கலிமாக்கள் உண்டு என்பதும் நுழைக்கப்பட்டிருக்கிறது.**

**7ஆவது:** இன்றுள்ள கல்விக்கூடங்களும் பெரும்பாலான முஸ்லீம்களும் கலிமாவுடைய உண்மையை ஆராயாமல் வழக்கம் என்ற அடிப்படையிலேயே பின்பற்றிவருகிறார்கள்.

**8ஆவது:** இமாம்கள் என்று மக்களால் வருணிக்கப்படுகிறவர்களில் மிகப் பெரும்பாலார் பிக்ஹுடைய உலமாக்களாகவும் வணக்கவாளிகளாகவும் இருந்திருக்கிறார்களேயல்லாமல் ஆரிபுகளாகவே இருந்தார்கள் என்பதற்கு எவ்விதமான ஆதாரமும் தென்படவில்லை. **இவ்விஷயம் வேறுஓர் இடத்தில் விபரமாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (பொறுமையோடு வாசித்து அறியவும்) இவர்கள் தவறமாட்டார்கள் என்பதற்கும் ஆதாரம் இல்லை.**

**9ஆவது:** மக்கள் உண்மையை உணராமல் பின்பற்றல் முறையில் சென்று கொண்டிருப்பதற்கு காரணம் பட்டம் பதவிகளில் நடை, உடை, பாவனைகளில் மருட்சியடைந்திருப்ப தேயாகும்.

**10ஆவது:** இஸ்லாம் புரட்டலுக்குள்ளாகும் என்பதை குர்ஆன் ஹதீஸ்கள் எவ்வளவோ தெளிவாய் விளக்கியிருந்தும், அப்புரட்டல்களை நீக்கி இஸ்லாத்துக்குப் புத்துயிரளிக்கும் அறிஞர்கள் காலாகாலம் தோன்றுவார்கள் என்று விபரம் தரப்பட்டிருந்தும், சமூகமக்களின் கவலையீனத்தால்தான் உண்மை நிலைகொள்ளமுடியாத நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

**11ஆவது:** உண்மையை ஓரளவு ஏற்றுக்கொண்ட ஒருசில அறிஞர்கள் கூட உண்மையை மறுப்பதற்குக் காரணம் கௌரவ (ரியா) ஆசையேயன்றி வேறில்லை.

**12ஆவது:** கலிமா எல்லோராலும் தெளிவாய் விளங்கக்கூடியதாய் நேரே பொருள் தரக்கூடியதாய் இருக்கிறது. என்பதும் அதன்பொருளை அறிவு மறுக்கிறது என்பதும் உண்மை. அதற்காக மனிதரின் அறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய விதமாய்ப் புரட்டப்படவேண்டும். என்பது அறிவீனமாகும். (இதன் முழுவிபரமும் தௌஹீதுடைய விஷயத்தில் இடம் பெறுகிறது, பொறுமையோடு வாசித்துப் பயன் பெறவும்)

## 006 "ஷிர்க்" (இணை ஏற்படுத்தல்) என்பதன் விபரம் என்ன?

**(1)**

"**ஷி**ர்க்" அல்லது இணைவைத்தல் என்று கூறப்படுவதன் உண்மையான விபரம் என்ன? என்பதை முதலில் நாம் விளங்கிக் கொண்டதால்தான் அதற்கு நேர் விரோதமான தௌஹீது, அல்லது அத்வைதம், அல்லது ஏகத்துவம். என்று கூறப்படுகிற, இஸ்லாத்தின் உண்மையான அடிப்படைக் கொள்கையின் உண்மையான விபரத்தை எங்களால் அறிந்துகொள்ள முடியும். பொய் எது என்பதை முதலில் அறிந்து கொண்டதால்தானே உண்மை எது என்பதை எம்மால் இலகுவாகக் கண்டறிய முடியும். ஷிர்க், என்பதற்கும் குபிர் என்பதற்கும் சிறுவேறுபாடு உண்டு. ஆயினும் எம் நாட்டில் ஷிர்க், இணை வைத்தல், நிராகரிப்பு, குபிர், என்றெல்லாம் கூறப்படுவது ஒரே விஷயம்தான் என்றே மக்கள் நம்பியிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய பொதுப்படையான அபிப்பிராயப்படியே ஷிர்க், இணைவைத்தல் என்ன? என்பதை எம்முடைய இமாமும் நீதிபதியுமான திருக்குர்ஆன் மூலமே விளக்கம் கேட்டறிவோம்.

قُلْ مَن رَّبُّ ٱلسَّمَٰوَٰتِ ٱلسَّبْعِ وَرَبُّ ٱلْعَرْشِ ٱلْعَظِيمِ

23-86 *ஏழுவானங்களைப் படைத்தவனும் கனம்தங்கிய அர்ஸை உண்டாக்கியவனுமாகிய நாயகன் யார்? என்று (அந்த முஸ்ரிக்கீன்களைக் கேளும்) அல்லாஹ்தான் என்று அவர்கள் கூறுவார்கள்.*

وَلَئِن سَأَلْتَهُم مَّنْ خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ لَيَقُولُنَّ خَلَقَهُنَّ
ٱلْعَزِيزُ ٱلْعَلِيمُ

43-9 *வானங்களையும் பூமியையும் படைத்தது யார்? என்று நீர் அவர்களைக்கேட்டால் அஸீஸும் அலீமுமாகிய அல்லாஹ்தான் அவைகளைப் படைத்தான் என்று அவர்கள் கூறுவார்கள்.*

وَلَئِن سَأَلْتَهُم مَّنْ خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ لَيَقُولُنَّ ٱللَّهُ

31-25 *வானங்களையும் பூமியையும் சிருட்டித்தவன் யார்? என்று நீர்அவர்களைக் கேட்பீராயின் அல்லாஹ்தான் என்று நிச்சயமாக கூறுவார்கள்.*

وَلَئِن سَأَلْتَهُم مَّنْ خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ وَسَخَّرَ ٱلشَّمْسَ
وَٱلْقَمَرَ لَيَقُولُنَّ ٱللَّهُ ۖ فَأَنَّىٰ يُؤْفَكُونَ

29:61 *வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார்? சூரியனையும் சந்திரனையும் தன் திட்டப்பிரகாரமே நடக்கச்செய்தவன் யார்? என்று நீர் அவர்களைக் கேட்பீராயின் நிச்சயமாக அல்லாஹ்தான் என்று அவர்கள் கூறுவார்கள். அவ்வாறாயின் அவர்கள் எங்கு வெருண்டோடுகிறார்கள்.*

وَلَئِن سَأَلْتَهُم مَّن نَّزَّلَ مِنَ ٱلسَّمَآءِ مَآءً فَأَحْيَا بِهِ
ٱلْأَرْضَ مِنۢ بَعْدِ مَوْتِهَا لَيَقُولُنَّ ٱللَّهُ ۚ قُلِ ٱلْحَمْدُ لِلَّهِ ۚ بَلْ أَكْثَرُهُمْ لَا يَعْقِلُونَ

29:63 *மேகத்தில் இருந்து மழையை வருஷிக்கச் செய்பவன் யார்? அதனைக்கொண்டு இறந்த பூமியை உயிர்ப்பிப்பவன் யார்? என்று நீர் அவர்களைக் கேட்பீராயின் நிச்சயமாக அல்லாஹ்தான் என்று அவர்கள் கூறுவார்கள். அதற்கு நீர் புகழடங்கலும் அல்வாஹ்வுக்கென்றே கூறுவீராக, எனினும் அவர்களில் பெரும்பாலார் உணர்ந்துகொள்வதில்லை.*

இவ்விதமான இன்னும்பல ஆயத்துக்கள் குர்ஆனில் இடம் பெறுகின்றன. இந்த ஆயத்துக்களைப் பகுத்தறிவோடு ஆராய்ந்துபார்த்தால் பல உண்மைகள் எமக்கு வெளியாகின்றன. அதாவது எந்த ஓர் மனித கூட்டமும், முஸ்ரீக்குகள் காபீர்கள், கெட்டவர்கள், நல்லவர்கள் எவருமே இறைவனை எக்காலத்திலும் மறுத்ததேயில்லை என்பதை இவ்வாயத்துக்கள் விளக்கம் தருகின்றன. இறைவன் இல்லையென்று கூறும் நாஸ்தீகன்கூட இறைவனை மறுப்பதில்லை என்பது தென்படவே செய்கிறது. இந்த நாஸ்தீக வாதத்தைப் பின்னால் ஆராய்வோம். **முஸ்ரீக்காய் (ஷிர்க்குடையவனாய்) காபீராய் (நிராகரிப்பவனாய்) இருப்பவனும் வானம் பூமிகளைப் படைத்த அஸீஸுும் அலீமுமாகிய இறைவன் ஒருவன் உண்டு என்பதை அறிந்தே இருக்கிறான் என்று இறைவனே எமக்கு அறிவிக்கிறான். அதாவது அல்லாஹ்தான் வானம், பூமிகளைப்படைத்த சிருஷ்டிகர்த்தா என்றும் அவன் சர்வவல்லமையுடையவன் என்றும் அவன் அல்லாஹ்வாகிய ஒருவனே என்றும் (ஷிர்க்குடைய) முஸ்ரிக்குகள்கூட அறிந்தும் ஒப்புக்கொண்டும் (ஈமான் - விசுவாசம்- நம்பிக்கை) உள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என்பதை மேற்காட்டிய ஆயத்துக்கள் தெளிவாய் விளக்கம் தருகின்றன. (நுட்பமாய் உணரவும்)**

இப்படி ஒரே சிருஷ்டிகர்த்தாவான ஒரே இறைவனை ஏற்று அந்த அஸீஸுும் அலீமுமாகிய அல்லாஹ் ஒருவன் உண்டு என்று நம்பி,ஈமான்கொண்டிருந்த மக்களை நோக்கியே அந்த முஸ்ரிகீன்களைக் கேளும் என்று இறைவன் கூறுகிறான். **ஆகவே அல்லாஹ் ஒருவன் உண்டு என்று ஒப்புக்கொண்டு,ஈமான்கொண்டு இருந்தாலும்கூட முன்காட்டிய ஆயத்துக்களின்படி அவன் ஷிர்க்குடைய முஸ்ரிக்காய் இருக்கிறான் என்பது தெரிகிறது.** இந்த முஸ்ரிக்கோ, நான் சர்வவல்லமையுடைய அல்லாஹ்வை ஈமான்கொண்டு நேர்வழியில் இருக்கிறேன் என்று நம்பியிருக்கிறான். ஆனால் ஆயத்துக்களோ இந்த நம்பிக்கை முஸ்ரிக்குகளின் நம்பிக்கை என்பதை எமக்கு விளக்கம் தருகின்றன. **ஆகவே இந்த ஒரே தெய்வக் கொள்கையை ஏற்றுக்கொண்ட ஒருவன் நேர்வழியில் நான் செல்கிறேன் என்று நம்பியிருந்தாலும் அவனுடைய அறிவுக்குத்தென்படாத ஷிர்க்கு அவனில் இருந்துகெண்டிருக்கிறது என்பதை ஆயத்துக்கள் விளக்கம் தருகின்றன.** அந்த ஷிர்க்கு என்பது விக்கிரக வணக்கம்தான் என்று இப்போது நீ மருட்சியடையாதே. பொறுமையடை. விளக்கம் தரப்படும்.

இவ்விடத்தில் வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ்வே என்றும் அந்த அல்லாஹ் ஒருவனே என்றும் எற்றுக்கொண்டால் நாம் ஈமான்கொண்டு ஷிர்க்கில் இருந்துவிடுபட்ட மூமீன்களாகிவிட்டோம் **என்று எம்முடைய பட்டதாரிகள், கிதாபுகள் எமக்குத் தந்த விளக்கங்கள் உண்மையா? பொய்யா? என்பதைச் சிந்தனைக்கெடுத்துக்கொள்.** இதேபோல ஆரம்ப நிலையிலுள்ள மக்களுக்கு தெய்வம் பலவல்ல, ஒன்றேதான் என்றுணர்த்துவதற்காகவே கலிமாவுக்கு பல பொருட்களை எங்களுடைய நாதாக்கள் கூறினார்களென்று இன்னும் **சில பட்டதாரிகள் கூறுகிறார்களே அது உண்மையா,பொய்யா? என்பதையும் சிந்தனைக் கெடுத்துக்கொள்.**

சிருஷ்டிகளான வானம்பூமி சூரியன் சந்திரன் யாவையும் படைத்து ஆட்சி பண்ணுகிற அஸீஸுும் அலீமுமாகிய ஒரே அல்லாஹ்வை ஏற்றிருந்த மக்களையே முஸ்ரீக்கீன்கள் என்று இறைவன்

கூறுவதால் அந்த முஸ்ரீக்குகள் ஒரே தெய்வகொள்கையை, ஓரிறைக்கொள்கையை ஏற்றிருந்தார்கள் என்பதும் இது மூமின்களின், றசூலுல்லாஹ்வினால் போதிக்கப்பட்ட **இஸ்லாத்தின் மூலக்கொள்கையேயல்ல என்பதும் தென்படுகிறது.** மேலும் றசூலுல்லாஹ்வினால் போதிக்கப்பட்ட கொள்கை இதற்கு நேர்விரோதமானதாகவே இருந்திருக்க வேண்டும் என்பதும் தென்படுகிறது. இந்தக் கொள்கை விளக்கத்தை இப்போது எடுத்துக்கொண்டால் எமது குறிக்கோள் வேறுதிசையில் திரும்பிவிடலாம். **ஆகையால் இந்தக் கொள்கை விளக்கத்தையும் பிற்படுத்துவோம்.**

முன்பு தந்துள்ள குர்ஆனின் ஆயத்துக்களை இன்னோர் கண்ணோட்டதோடு ஆராய்ந்தால் இன்னும் ஓர் உண்மை தென்படுகிறது. அதாவது இறைவன் இந்த ஆயத்துக்களை றசூல(ஸல்) அவர்களாலேயே வெளிப்படுத்தியிருக்கிறான். அந்த றசூல்(ஸல்) அவர்கள் அந்த அறபுநாட்டில் அறபிகள் மத்தியில் பிறந்து வளர்ந்து றசூலானவர்கள், அது தவிர ஒருசில ஆயத்துக்களின்படி ஆரம்பத்தில் அந்த அறபு மக்களுக்கே உம்மை நபியாக அனுப்பினேன் என்று இறைவன் கூறியுள்ளான். ஆகவே **இந்த ஆயத்துக்கள் உலமாக்கள் அனைவருக்கும் பொதுவானவை என்பதும் அறபு மக்களுக்குக் குறிப்பானவை என்பதும் (உஸுலைக் கொண்டு) தெரிகிறது.** அந்த அறபு நாட்டு அறபுமக்கள் பல நூற்றுக்கணக்கான விக்கிரகங்களை (இலாஹுகளை) வணங்கிக் கொண்டிருந்தபோதும் சர்வவல்லமையுள்ள **அஸீஸும் அலீமுமாகிய அல்லாஹ்வை மறுத்ததோ எதிர்த்ததோ கிடையது.**அந்த அஸீஸும் அலீமுமாகிய அல்லாஹ்விடத்தில் நெருங்கிச் சேர்வதற்கு உதவியாகவே தாங்கள் விக்கிரக வணக்கத்தை எடுத்துக்கொண்டதாகத்தான் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இப்படித்தான் அவர்கள் கூறினார்கள். என்பதை எமது இமாம் குர்ஆன் விளக்கம் தருகிறது.

مَا نَعْبُدُهُمْ إِلَّا لِيُقَرِّبُونَا إِلَى اللَّهِ زُلْفَى

39:3 *ஆலிஹத்துக்கள் (விக்கிரகங்களான இலாஹுகள்) அல்லாஹ்விடத்தில நெருங்கிச் சேர்ப்பவதற்காகவேயன்றி மற்றப்படி நாங்கள் வணங்குவதில்லை.*

ஆகவே அந்த அறபுமக்கள் அல்லாஹ்வை மறுக்கவே இல்லை என்பதை நாம் அறிகிறோம். அப்படியிருந்தும்தான் அந்த மக்களை இறைவன் முஸ்ரிக்கீன்கள், இணை ஏற்படுத்துபவர்கள் என்று கூறுகிறான். இன்றைக்கும் விக்கிரக வணக்கம் புரிபவர்களும் இறைவனை ஞாபகப்படுத்த, அல்லது நெருங்கிச் சேரவே விக்கிரக வணக்கம் புரிவதாகத்தான் கூறுகிறார்கள். **ஆகவே இந்த மக்கள் விக்கிரகங்களை ஏற்படுத்திக்கொண்டதுதான் இணையாக,ஷிர்க்காக, இருக்குமா? என்பதை ஆராய்ந்தால் அதைவிடவேறோர் நுட்ப காரணம் உண்டு என்பதைக் குர்ஆன் விளக்கம் தருகிறது.** இந்த விபரத்தைக் குர்ஆன், ஹதீஸ்களைக்கொண்டு பகுத்தறிவின் துணையோடு நோக்கும்போது **ஷிர்க் என்னும் இணைஏற்படுத்துவதற்கு முக்கியமான ஓர் காரணமும் பல கிளைக் காரணங்களும் தென்படுகின்றன.**

அதாவது ஷிர்க் என்னும் இணை ஏற்படுத்துவற்கு இஸ்லாத்துக்கு,ஈமானுக்கு விரோதமான துர்க்கொள்கையை உண்டாக்குவதற்குப் பொதுப்படையாய் ஆறு காரணங்கள் இருக்கின்றன என்பதும். இவையாவும் ஒருமுக்கிய காரணத்தில் கட்டுண்டிருக்கின்றன என்பதும் **முக்கியமான அந்த ஒரு காரணத்தை நீக்கிவிட்டால் மற்றெல்லாக் கிளைக்காரணங்களும் தன்னாலேயே நீங்கிவிடும் என்பதும் தென்படுகிறது.**ஆகவே இந்த ஆறு காரணங்களும் எவை என்பதையும் முக்கியமான காரணம் எது என்பதையும் கண்டறிந்து தெளிந்து அக்காரணத்தை நாம் நீக்கிக்கொள்வேண்டும். இந்தவிபரம் மிகச் சிக்கலானதாயும் அறிஞர்களே தெளிவாய் இலகுவாய் விளங்ககூடியதாயும் இருக்கிறது. ஆயினும் நடுத்தர அறிவுடைய மக்கள் ஓரளவு விளங்கக் கூடியதாய் விளக்கவேண்டுவது கடமையாய் இருப்பதால். நல்லடியார்களின் வாக்குகளையும், ஹதீஸ்களையும் பிற்படுத்தி முதலில் குர்ஆனைக்கொண்டே விளங்குவோம். இப்போது உன்கவனத்தை வேறு திசையில் திருப்பாமல் கவனிப்பாயாக.

குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஷிர்க் என்னும் துர்க் கொள்கைக்குரிய ஆறு காரணங்கள், கொள்கைகளில்.

### ஷிர்க்குக்குரிய 1 வது கொள்கை:

**விக்கிரகங்களான இலாஹுகளை (விக்கிரகம்) முதலான பௌதீக சூச்சும (சூட்சும) சிருட்டிகளை வணங்குவது:**

இந்த கொள்கையை, செய்கையைக் குர்ஆனைக்கொண்டு ஆராய்ந்தால் ஷிர்க்குக்கு இது முக்கியமான ஓர் காரணேமேயல்ல என்பதும், இது ஓர் கிளைக் காரணமே என்பதும், வேறோர் முக்கிய காரணத்தில் இச்செயல் கட்டுண்டிருப்பதாலேயே இது ஷிர்க்காக மாற்றமடைகிறது என்பதும் தெரியவருகிறது. அதாவது விக்கிரக வணக்கத்தை மட்டும் நீக்கிவிட்டால் ஷிர்க்கில் இருந்து நாம் விடுபட்டுவிட்டோம் என்று கூறமுடியாது. **ஆகவே விக்கிரக வணக்கம் ஷிர்க்குக்குரிய ஆணிவேரேயல்ல.** எப்படியென்றால்:

وَإِذْ قُلْنَا لِلْمَلَائِكَةِ اسْجُدُوا لِآدَمَ فَسَجَدُوا إِلَّا إِبْلِيسَ

2:34 *மலக்குகளை நோக்கி ஆதமுக்கு ஸுஜூது செய்யுங்கள் என்று கூறியபோது இப்லீஸைத்தவிர யாவரும் ஸுஜூது செய்தார்கள். என்று குர்ஆன் கூறுகிறது.*

ஆதம்(அலை) அவர்கள் எங்களைப்போல் இறைவனால் உருவாக்கப்பட்ட ஓர் சிருஷ்டியே என்பதிலும் அவர்களைப்போல் நாமும் உருவாக்கப்பட்ட சிருஷ்டிகளே என்பதிலும் எமக்குச் சந்தேகமே கிடையாது. இந்த ஸுஜூதில் ஈடுபட்டவர்களை முஸ்ரிக்கீன்கள் என்றோ ஷிர்க்குடையவாகள் என்றோ குர்ஆனில், ஹதீஸில் எவ்விடத்திலும் கூறப்படவேயில்லை. **இந்த ஸுஜூதில் ஈடுபடாமல் மறுத்த இப்லீஸைத்தான் அல்லாஹ் லஹ்னத்துச் செய்திருக்கிறான்.** இவன் லஹ்னத்துக்குள்ளான விபரத்தையும் இப்போது நாம் எடுத்துக்கொண்டால் எமது கவனம் சிதைவுறும். ஆகையால் இதையும் பிற்படுத்துவோம். ஆதம்(அலை) அவர்ளுக்கு மலக்குகள் ஸுஜூது செய்த விபரத்தை எமக்க அறிவிக்கிற அதே குர்ஆன் யூஸுப்(அலை) அவர்களை ஒரு சில மக்கள் **ஸுஜூது செய்தார்கள் என்று அறிவிக்கிறது.** அந்த ஸுஜூதில் ஈடுபட்ட மக்களையும் குர்ஆன் எவ்விடத்திலும் ஷிர்க்குடையவர்கள்,**முஸ்ரிக்கீன்கள் என்று கூறவேயில்லை.** இதேபோல் யஹ்கூப்(அலை) அவர்களையும் சிலர் **ஸுஜூது செய்ததாக எமது குர்ஆன் விபரம் தருகிறது.** இந்த ஸுஜூதில் ஈடுபட்டவர்களையும் குர்ஆன் எவ்விடத்திலும் **முஸ்ரீக்கின்கள் என்று கூறவேயில்லை.**

ஆனால் விக்கிரகங்களான பௌதீகப் பொருட்களுக்கும்,ஆதம்(அலை), யூசுப்(அலை), யஹ்கூப்(அலை) போன்றவர்களுக்கும் பேதமுண்டு என்ற நீ கூறுவாயேயானால் அது உன்னுடைய வஹ்மாகும். **ஏனென்றால் சிருஷ்டி என்ற அடிப்படையில் ஒன்றுக்கு மற்றொன்று பேதமேற்படக் காரணமே கிடையாது.** அதாவது சிருஷ்டிகள் சில இயங்காதனவாய்த் தென்பட்டாலும் உண்மை அப்படியல்ல. சிருஷ்டி என்ற ஒவ்வோர் பொருளும் இயக்கமுடையதேதான். இதை விளக்க இவ்விடம் பொருத்தமான இடமேயல்ல. இப்போது நீ அறியவேண்டியது என்னவென்றால் சிருஷ்டிகள் எத்தன்மை உடையனவாய் இருப்பினும் மண், தண்ணீர், காற்று, நெருப்பு முதலான மூலப்பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்டவைதான். இந்த மூலப் பொருட்களின் சேர்க்கையில் **விகிதாசார வேறுபாடு இருக்கலாமே தவிர மூலப்பொருட்கள் யாவும் ஒரே அடிப்படையிலுள்ளவைதான்.** ஆகவே இயங்கும் பொருளேயானாலும் இயங்காப் பொருளேயானாலும் **சிருஷ்டி என்ற அடிப்படையில் பேதமேற்படக் காரணமே கிடையாது.**

ஆதம்(அலை) அவர்களும் அவர்களை ஸுஜூது செய்தவர்களும் யூசுப் (அலை), யஹ்கூப் (அலை) போன்றவர்களும் அவர்களை ஸுஜூது செய்தவர்களும் விக்கரகங்களான இலாஹுகளும் அவைகளை ஸுஜூது செய்பவர்களும் சிருஷ்டிகளேதான். **இது ஷிர்க்குக்குரிய முக்கிய காரணமாய் இருந்திருந்தால், இறைவனே இதைச் செய்யும்படி ஏவியிருக்கமாட்டான். செய்யாத இப்லீஸை லஹ்னத்து செய்திருக்கவும்மாட்டான்.**

ஆனால் இவ்விடத்தில எமக்குப்பல சந்தேகங்களும் கேள்விகளும் பிறக்கின்றன. அதாவது விக்கிரகவணக்கம் ஷிர்க் என்னும் இணை வைத்தலுக்கு முக்கியமான காரணமல்ல என்றால் இறைவனும் முந்திய நபிமார்களும் எம்முடைய றசூல்(ஸல்) அவர்களும் விக்கிரகவணக்கத்தை ஏன் தடைசெய்தார்கள். இப்றாஹீம்(அலை) அவர்கள் விக்கிரகங்களை ஏன் உடைத்தெறிந்தார்கள். இதை குர்ஆனே எமக்கு விளக்கம் தருகிறதே? மேலும் றசூல்(ஸல்) அவர்கள் மக்காவை வெற்றிகொண்டபோது க..பாவின் உள்ளே இருந்த விக்கிரகங்களை அகற்றிய பிறகுதானே உள்ளே நுழைந்திருக்கிறார்கள். ஆகவே விக்கிரக வணக்கம் ஷிர்க்குக்குரிய முக்கிய காரணமல்ல என்பதை ஏற்கமுடியமலிருக்கிறதே? என்பதுதான் எமது சந்தேகமும் கேள்வியுமாகும். இதற்கு பதிலை நாம் கண்டறிவோம்.

**பதில்:** விக்கிரகவணக்கம் கூடாது என்று அல்லாஹ்வும் நபிமார்கள் றசூல்மார்களும் தடைசெய்ததற்குச் சில வெளிக்காரணங்களும் சில உட்காரணங்களும் இருக்கின்றன. அவற்றில் வெளிக் காரணங்களை மட்டும் இப்போது காண்போம்.

**1ஆவது காரணம்:** அல்லாஹ், இறைவன், கடவுள் என்றெல்லாம் கூறப்படுகிற "வாஜிபுல் உஜூது" (ஹக்கு) அழிந்தொழியமுடியாத ஆதாரமான பொருளாக இருக்கிறது. இலாஹு என்று கூறப்படுகிற சிருஷ்டிகளான இயங்குவன, இயங்காதவன யாவுமே பொருளல்லாத வெறும் நாமமும் தோற்றமுமான ஆதேயங்களாய் இருக்கின்றன. அதாவது ஆதேயங்களான சிருஷ்டிகள் யாவும் அறிவினால் இருப்பதுபோல தென்படுகிற வெறும் கற்பனைகளாயும்தேவையுடையவைகளாயும் இருக்கிறன்றன. (சிருஷ்டிகளின் உண்மையை உணர்ந்து கொள்ளாத ஒருவர் இதை விளங்கிக் கொள்வது மிகக்கடினம்தான் (இதை சிருஷ்டிகளின் உண்மை என்ன? என்ற தலைப்பில் நான் விளக்கியுள்ளேன். அதுவரையிலும் பொறுமை அடைய வேண்டும்) ஆகவே, அல்லாஹ்வை ஆதாரமாகவும் சிருஷ்டிகளை ஆதேயமாகவும் எடுத்துக்கொண்டால் ஆதாரத்தையேயல்லாமல் ஆதேயத்தை வணங்கவே கூடாது.

**2ஆவது காரணம்:** இன்ஸான் என்பவனுடைய உண்மைத் தோற்றம் அரூபமாய் இருக்கிறது அதாவது இன்ஸான் அரூபியாய்த் தோற்றமில்லதவனாய் இருக்கிறான். உடல் என்பது இன்ஸானின் வாகனமேயாகும். விக்கிரகங்களான சிருஷ்டிகள் உருவ

முடையவையாய்த் தாழ்ந்த பதவியில் இருக்கின்றன. ஆகவே உயர் பதவியுடைய இன்ஸான் தாழ் பதவியுடைய விக்கிரகத்தை வணங்கவே கூடாது.

**3ஆவது காரணம்:** வாஜிபுல்உஜூத் என்று கூறப்படுகிற உண்மைப்பொருளான அல்லாஹ் வியாபகமாய் அகண்டப்பொருளாய் இருக்கிறான். அகண்டப்பொருள் என்று கூறுவதே குற்றம் என்று சொல்லக் கூடிய அவ்வளவு பரிசுத்தமும் வியாபகமும் உடையவனாய் இருக்கிறான். விக்கிரகமான சிருஷ்டி கண்டபொருளாய், நீளம், அகலம், கனம், நிறை, இடம், காலம், தோற்றம் முதலாம் கட்டுப்பாடுகளில் சிக்குண்டதாய் இருக்கிறது. ஆகவே கண்டப்பொருளான ஒன்றை வணங்கவே கூடாது. அப்படி ஒன்றை எடுத்துக்கொண்டால் மற்றும் சிருஷ்டிகள் வணக்கத்துகுரியவையல்ல என்று ஏற்படும். எல்லாமே வணக்கத்துகுரியவைதான் என்று எடுத்துக்கொண்டால் எல்லாவற்றையுமே வணங்க வேண்டியேற்படும். மேலும் இறைவனை (தஸ்பிஹில்) உருவத்தில் மட்டுப்படுத்திய குற்றமும் ஏற்படும். விக்கிரகம், அல்லாஹ் அல்லாதது என்றும் இறைவனுடைய ஞாபகத்துக்காக என்றும் எடுத்துக்கொண்டால் விக்கரகம் அல்லாஹ்வைப் போன்ற ஓர்தனி மூலப்பொருள் (ஹக்கு) என்று ஏற்பட்டுவிடும். (இதை அமைதியாய்தான் பின்பு விளங்கியறிய வேண்டும்.)

**4ஆவது காரணம்:** விக்கிரகத்தோற்றம் மனதில் பதிந்துகொண்டால் இறை தியானத்தின்போது வெளியாகக்கூடிய சிற்சில சூட்சும சிருஷ்டிகளை உள்ளத்தில் பதிவான தோற்றத்திலேயே காணவேண்டி நேரிடும். இது உண்மையல்லாத வெறும் கற்பனைக் காட்சியாய் முடியும். மேலும் உண்மைக் காட்சி வெளியாகத்தடையாகவும் அமையும். மேலும் இப்போது உனக்குள்ள அறிவினால் விளங்கிக்கொள்ளமுடியாத பல நுட்ப காரணங்களும் இருக்கின்றன. ஆயினும் உண்மையை உணர முற்படும் உனக்கு இவ்வளவே போதுமானதாகும்.

**5ஆவது காரணம்:** முன்கூறியவற்றையெல்லாம் விட முக்கியமான காரணம் விக்கிரகத்தை வணங்குபவன் அந்த விக்கிரகத்தை அல்லாஹ் அல்லாதது என்ற நம்பிக்கையோடு வணங்குவது தான். உண்மையான ஷிர்க்குக்குரிய மூலகாரணம் இதுதான். இதை ஷிர்க்குக்குரிய 6வது காரணத்தில் தெளிவாய் விளக்கித் தருவேன். பொறுமையடைவாயாக. இப்போது குர்ஆனை நோட்டமிடு.

وَلِلَّهِ يَسْجُدُ مَا فِى ٱلسَّمَٰوَٰتِ وَمَا فِى ٱلْأَرْضِ

16:49 *அல்லாஹ்வுக்கே வானங்களில் இருப்பவர்களும் பூமியில் இருப்பவர்களும் ஸுஜூது செய்து வணங்குகிறார்கள்.*

என்று குர்ஆன் கூறுகிறது. இந்த ஆயத்தில் வணங்கப்படுகிற அல்லாஹ்வை முற்படுத்தி “லில்லாஹியஸ்ஜுது” என்று கூறியிருப்பது யார் யார் எதையெதை எப்படியெப்படி ஸுஜூது செய்தாலும் அந்த ஸுஜூது அல்லாஹ்வுக்கேயன்றி, ஸுஜூது, வணக்கம் கிடையாது என்பதை குர்ஆன் விளக்கம்தருகிறது. இப்போது சிந்தனைசெய்துபார். எத்தனையோ இனமான, நல்ல, தீய, உயிருள்ள, உயிரற்ற சிருஷ்டிப்பொருட்களையெல்லாம் ஒருசில மனிதர்கள் வணங்கி ஸுஜூது செய்துகொண்டிருக்கும்போதும், பூமியில் இருப்போரும் அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்கிறார்கள், வணங்குகிறார்கள் என்பது எப்படிச் சரியாகும் ? அல்லாஹ் கூறுவதுதான் சரியென்றால் மனிதன் வணங்கிக் கொண்டிருக்கும் அத்தனை சிருஷ்டிகளும் அல்லாஹ்வின் வேறல்ல என்பது தான் உண்மையாகும். ஆனால் மனிதனோ தானும், தான் வணங்கும் சிருஷ்டியும் அல்லாஹ் அல்லாதவையென்றே நம்பி வணங்குகிறான். ஸுஜூது செய்கிறான். இவைபோல் பல ஆயத்துக்கள் குர்ஆனில் தென்படுகின்றன. விரிவை அஞ்சி இங்கே எழுதப்படவில்லை. வேண்டுமானால் குர்ஆனைக் கொண்டே ஆராயவும்.

ஆகவே அறிவுத்துறையின் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த உனக்கு மிகச் சுருக்கமாய்க் குர்ஆனைக்கொண்டு காட்டிய விபரப்படி **விக்கரக வணக்கம் ஷிர்க்குக்கு முக்கியமான ஆணிவேரல்ல என்றும் ஓர் கிளைக் காரணமே என்றும் அறிந்துகொண்டோம்.**

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ إِنَّمَا ٱلْخَمْرُ وَٱلْمَيْسِرُ وَٱلْأَنصَابُ وَٱلْأَزْلَٰمُ رِجْسٌ مِّنْ

عَمَلِ ٱلشَّيْطَٰنِ فَٱجْتَنِبُوهُ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

5:90 *விசுவாசிகளே! நிச்சயமாக சாராயமும், சூதாட்டமும், விக்கிரக ஆராதனையும், அம்பெறிந்து குறிகேட்பதும் ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளிலுள்ளவையாகும். ஆகவே இவைகளிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். நீங்கள் சித்திபெறுவீர்கள்.*

விக்கிரக ஆராதனை, சூதாட்டம், மதுவருந்தல் போன்றவை ஒரே இனமானவை என்பதை விளங்கித் தெளிவு பெறுக. (**விக்கிரக ஆராதனையை நான் ஆமோதிக்கிறேன் என்று நீ மருட்சியாய் விளங்கிக் கொள்ள வேண்டாம்)**

### ஷிர்க்குக்குரிய இரண்டாவது கொள்கை:

எங்களுடைய இலாஹுகளான இந்த விக்கிரகங்கள் எங்களுக்காகச் சபாஅத் செய்யுமென்று நம்புவது. அதாவது சிருஷ்டிகள் எங்களுக்கு உதவி செய்யும் அல்லது உதவிபெற உதவிசெய்யும் அல்லது இறைவனிடம் நெருங்கிச்சேர அனுகூலமளிக்கும் என்று நம்புவது.

مَا نَعْبُدُهُمْ إِلَّا لِيُقَرِّبُونَآ إِلَى ٱللَّهِ زُلْفَىٰٓ

39-3 *எங்களனைவரையும் அல்லாஹ்வின் பக்கம் சேர்த்துச் சமீபமாக்கும் என்பதற்காகவேயன்றி நாங்கள் ஆலிஹத்துக்களை வணங்குவதில்லை.*

இந்தக் கொள்கையை ஆராய்ந்தால் இதுவும் ஸிர்க்கின் ஒரு கிளைக் காரணமேயன்றி ஆணிவேரான மூலகாரணமேயல்ல என்பதும் தெரிகிறது. எப்படியென்றால் அல்லாஹ் வேறு, றசூல் வேறு என்று நாம் நம்பியிருக்கும் போதும் றசூல் (ஸல்) அவர்களிடம் ஸபாஅத்தின் ஆதரவு வைப்பது ஆகுமான ஒரு காரியம்தான். றசூல்(ஸல்) அவர்களும் நம்மைப்போன்ற ஒரு சிருஷ்டியேயாகும். சிருஷ்டிகளிடையே வேறு பிரிக்கக் காரணமேயில்லை என்பதை முன்பு கூறியிருக்கிறோம். ஆகவே சிருஷ்டியைச் சிருஷ்டி ஆதரவு வைப்பதில் தவறொன்றுமேயில்லை. விளக்கம் குறைந்த அறிவாளர்களின் கொள்கைப்படி அல்லாஹ்வுக்கு அந்நியம் உண்டு என்று வைத்துக்கொண்டாலும் சிருஷ்டியை சிருஷ்டி ஆதரவு வைப்பதில் தவறு கிடையாது. நீதிமன்றத்தில் நாம் குற்றவாளியாகாமல் தப்பிக்கொள்வதற்காக, ஓர் உத்தியோகத்தைப் பெறுவதற்காக, இன்னோர் உத்தியோகத்தரிடம் ஆதரவு வைக்கிறோம். ஆகவே விக்கிரக வணக்கவாளி விக்கிரகத்தில் ஆதரவு வைப்பது போலவே ஒரு முஸ்லிமும் இயங்குகிற இயங்காத பொருட்களில் ஆதரவு வைக்கிறான். இந்தவகையில் முஸ்லீமும் முஸ்ரிக்கும் சமமாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே இக்கொள்கை ஷிர்க் என்னும் இணைவைத்தலுக்குரிய முக்கிய ஆணிவேரான காரணமேயல்ல.

### ஷிர்க்குக்குரிய மூன்றாவது கொள்கை:

சிருஷ்டிகளான விக்கிரகங்களுக்கு இலாஹு என்று பெயர் சூட்டுவது இக்கொள்கையை ஆராய்ந்தால் இதுவும் ஷிர்க் என்னும் இணைவைத்தலுக்குரிய முக்கிய காரணமேயல்ல. எப்படியென்றால்:

إِنَّمَا ٱللَّهُ إِلَٰهٌ وَٰحِدٌ

4:171 *அல்லாஹ் என்பதெல்லாம் ஒரே இலாஹுதான்*

أَءِلَٰهٌ مَّعَ ٱللَّهِ قُلْ هَاتُوا۟ بُرْهَٰنَكُمْ إِن كُنتُمْ صَٰدِقِينَ

27:64 *அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? நீங்கள் உண்மை சொல்பவர்களாய் இருந்தால் உங்களுடைய அத்தாட்சிகளைக் கொண்டு வாருங்கள் என்று நீர் கூறும்*

وَهُوَ ٱلَّذِى فِى ٱلسَّمَآءِ إِلَٰهٌ وَفِى ٱلْأَرْضِ إِلَٰهٌ

43:84 *அவனே வானத்திலும் இலாஹாய்ப் பூமியிலும் இலாஹாய் இருக்கிறான்.*

இந்த ஆயத்துக்களில் இலாஹு என்ற சொல் விக்கிரகங்களான இலாஹுகளுக்கும் அல்லாஹ்வான இலாஹுவுக்கும் பொதுப்பெயர்ச் சொல்லாக இறைவனால் குர்ஆனில் பாவிக்கப்பட்டிருக்கிறது. இலாஹு என்ற பதம் பல பொருட்களுக்கு ஒரு சொல்லாகப் பாவிக்கப்பட்டிருக்கிறது. இது ஓர் பொதுப் பெயர்ச் சொல் என்பதில் சந்தேகமே இல்லை. இறைவனுக்கு மட்டுமே சொந்தம் என்றில்லாத சாதாரண பெயர்களைச் சிருஷ்டிகளின் மேல் கூறுவது ஆகுமான ஓர் விஷயம்தான்.

إِنَّ ٱللَّهَ بِٱلنَّاسِ لَرَءُوفٌ رَّحِيمٌ

22:65 *இறைவன் மனிதர்களுடன் இரக்கமும் கிருபையும் வைத்துள்ளான்*

لَقَدْ جَآءَكُمْ رَسُولٌ مِّنْ أَنفُسِكُمْ عَزِيزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيصٌ عَلَيْكُم

بِٱلْمُؤْمِنِينَ رَءُوفٌ رَّحِيمٌ

9:128 *உண்மையாக உங்களில் இருந்து உங்களுக்கு ஒரு தூதர் வந்துவிட்டார். நீங்கள் எண்ணுவது அவருக்குமிக இலேசானது. ஈமான் கொண்டவர்கள் மீது அவர்மிகவும் கிருபையும் இரக்கமும் உள்ளவர்.*

இந்த ஆயத்துக்களில் றஊபுன், றஹீமுன் என்ற பெயர்களைத் தனக்கும் சிருஷ்டியான றசூல் (ஸல்) அவர்களுக்கும் இறைவன் பாவித்திருக்கிறான். இதேபோல இறைவனுடைய திருநாமங்கள் சிலவற்றை சிருஷ்டிகளான நபிமாருக்கும் இறைவனே குர்ஆனில் கூறியிருக்கிறான். (விரிவைப்பயந்து இங்கே எழுதப்படவில்லை) அதேபோல் பல பொருட்களுக்கு ஓர் சொல்லான "இலாஹுு" என்ற சொல்லை விக்கிரகங்களுக்குப் பாவிப்பதில் எவ்விதமான ஷிர்க்குமே கிடையாது. அறபுமக்கள் இலாஹுு என்றால் வணங்கப்படுகிற சிருஷ்டி என்று நம்பியதும், பெயரிட்டதும் எவ்வித ஷிர்க்குக்கும் காரணமல்ல. ஆகவே இக்கொள்ளையும் ஷிக்கு என்னும் இணைவைத்தலுக்கு முக்கிய காரணமேயல்ல.

**ஷிர்க்குக்குரிய நாலாவது கொள்கை:**

இறைவன் தஸ்பீஹில் கட்டுண்டவன் என்று நம்பும் கொள்கை. அதாவது இறைவனை உருவம், நிறம், தோற்றங்களில் கட்டுண்டவன் என்று நம்பும் கொள்கை

"ஓ! முகம்மதே!! உம்முடைய இறைவனின் வர்ணிப்பை எங்களுக்குச் சொல்லும் அவன் எந்தவஸ்துவால் ஆனவன்**பொன்னினாலா? வெள்ளியினாலா?"**

இந்தக் கொள்கையை ஆராய்ந்தால் இதிலும் ஷிர்க்கு என்னும் இணைவைத்தல் கட்டுண்டிருக்கவில்லை. ஏனென்றால் அஹ்லுல் கிதாபிளான எஹுுது, நஸாறாக்கள் இறைவனைத் "தஸ்பீஹில்" உருவப் பொருட்களில் மட்டுப்படுத்தியவர்கள். அதாவது எஹுுதுகள் உஸைறு(அலை) அவர்கள் **அல்லாஹ்வுடைய மகன் என்று கூறினார்கள்.** நஸாறாக்கள் ஈஸா(அலை) அவர்களை **அல்லாஹ்வுடைய குமாரன் என்று கூறினார்கள்.**

وَقَالَتِ ٱلْيَهُودُ عُزَيْرٌ ٱبْنُ ٱللَّهِ وَقَالَتِ ٱلنَّصَٰرَى ٱلْمَسِيحُ ٱبْنُ ٱللَّهِ ۖ ذَٰلِكَ

قَوْلُهُم بِأَفْوَٰهِهِمْ ۖ يُضَٰهِـُٔونَ قَوْلَ ٱلَّذِينَ كَفَرُوا۟ مِن قَبْلُ ۚ قَٰتَلَهُمُ ٱللَّهُ ۚ

أَنَّىٰ يُؤْفَكُونَ

9:30 *யூதர்கள் (எஹுுதுகள்) உஸைறை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகின்றனர். கிறிஸ்த்தவர்கள் (நஸாறாக்கள்) மஸீஹை (ஈஸாவை) அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகின்றனர். தங்கள் வாய்களால் கூறும் இக் கூற்றானது இவர்களுக்கு முன்னிருந்த நிராகரிப்பவர்களின் (காபீர்களின்) கூற்றையே ஒத்திருக்கிறது. அல்லாஹ் இவர்களை அழித்துவிடுவானாகவும் இவர்கள் எங்கு வெருண்டோடுகின்றனர்.*

இந்த ஆயத்தையும் இவைபோன்ற இன்னும் பல ஆயத்துக்களையும் நுட்பமாய் ஆராய்ந்தால் **குர்ஆனின் எவ்விடத்திலுமே அவர்களை முஸ்ரிக்குள் என்று இறைவன் கூறவில்லை.** காபீர்கள் என்றுதான் கூறுகிறான். ஆகவே குபிருக்கும் இணைவைத்தலான ஷிர்க்குக்கும் மிகவேறுபாடு உண்டு என்பதும் தென்படுகிறது. மேலும், குபிர் மன்னிக்கப்படக்கூடியது என்பதும் ஷிர்க்கு என்னும் இணை ஏற்படுத்தல் மன்னிக்கப்படவே முடியாதது என்றும் தெரிய வருகிறது. **ஏனென்றால் இந்தக் காபிரீன்களான எஹுுது நஸாறாக்களின் உணவு, பெண்கள் போன்ற சில விஷயங்களை மூமின்களுக்கு ஆகுமானதாகவும் முஸ்ரீக்கீன்களுடைய எவ்விஷயமுமே மூமின்களுக்கு ஆகாதது என்றும் விதிவிலக்களிக்கிறான் இறைவன்.**

وَلَا تَنكِحُوا ٱلْمُشْرِكَٰتِ حَتَّىٰ يُؤْمِنَّ وَلَأَمَةٌ مُّؤْمِنَةٌ خَيْرٌ مِّن مُّشْرِكَةٍ وَلَوْ
أَعْجَبَتْكُمْ وَلَا تُنكِحُوا ٱلْمُشْرِكِينَ حَتَّىٰ يُؤْمِنُوا وَلَعَبْدٌ مُّؤْمِنٌ خَيْرٌ مِّن
مُّشْرِكٍ وَلَوْ أَعْجَبَكُمْ أُولَٰٓئِكَ يَدْعُونَ إِلَى ٱلنَّارِ وَٱللَّهُ يَدْعُوٓا إِلَى ٱلْجَنَّةِ
وَٱلْمَغْفِرَةِ بِإِذْنِهِۦ وَيُبَيِّنُ ءَايَٰتِهِۦ لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَذَكَّرُونَ

2:221 *இணை ஏற்படுத்தும் (முஸ்ரிக்கான) பெண்களை அவர்கள் (ஈமான்) விசுவாசம் கொள்ளும் வரையிலும் நீங்கள் மணந்துகொள்ளாதீர்கள். முஸ்ரீக்கான பெண் உங்களை கவரக் கூடியவளாய் இருப்பினும் மூமினான ஓர் அடிமைப்பெண் அவளைவிட நிச்சயமாக மேலானவள். முஸ்ரீக்கான ஆண்கள் ஈமான் கொள்ளும் வரையிலும் (மூமினான பெண்களை) மணம் செய்து கொடுக்கவேண்டாம். முஸ்ரிக்கான ஆண் உங்களைககவரக் கூடியவனாய் இருப்பினும் மூமினாகிய ஓர் அடிமை அவனைவிட நிச்சயமாக மேலானவன். இவர்கள் எல்லாம் நரகத்துக்கு அழைப்பார்கள். அல்லாஹ்வோ தன்கிருபையைக்கொண்டு சுவர்க்கத்துக்கும் மன்னிப்புக்கும் அழைக்கிறான். மனிதர்கள் கவனித்துக்கொள்ளும் பொருட்டுத் தன்னுடைய வசனங்களை விபரிக்கிறான்.*

وَطَعَامُ ٱلَّذِينَ أُوتُوا ٱلْكِتَٰبَ حِلٌّ لَّكُمْ وَطَعَامُكُمْ حِلٌّ لَّهُمْ

5:5 *அஹ்லுல் கிதாபிகளான (எஹுூது நஸாரா) அவர்களில் முஹ்ஸனத்தான பெண்களும் மூமீன்களில் முஹ்ஸனத்தான பெண்களும் ஆகிய இவர்களுக்கு நீங்கள் அவர்களுடைய மஹர்களைக் கொடுப்பீர்களாகில் அவர்கள் உங்களுக்கு ஹலாலாவார்கள்.*

என்று இறைவன் விபரம் தருகிறான். இதே போன்ற ஆயத்துக்களையும் நோட்டமிடுக. 5:5 ஆயத்தில் உங்களுடைய உணவு அஹ்லுல் கிதாபிகளுக்கும் அவர்களுடைய உணவு உங்களுக்கும் ஹலாலானதே என்றும் இறைவன் விளக்குகிறான்.

இந்த ஆயத்துக்களை நோட்டமிட்டால் குர்ஆனுடைய விபரப்படி இறைவனை “தஸ்பீஹ்” உருவத்தில் மட்டுப்படுத்துவதும் ஷிர்க்கு என்னும் இணைவைத்துலுக்கு மூலகாரணமேயல்ல என்று தெளிவுபடுகிறது. ஏனென்றால் எஹுூது, நஸாராக்கள் இறைவனை உருவத்தில் மட்டுப்படுத்தியவர்கள். இவர்களுடைய உணவையும் பெண்களையும் மூமீன்களுக்கு ஹலாலக்கியிருக்கிறான் இறைவன். இவர்கள் இறைவனுக்கு மகன் உண்டு என்றவர்கள். உருவம் ஏற்படுத்தினவர்கள். முஸ்லீம்களோ அல்லாஹ்வுக்கு உருவமே இல்லாத அரூபி என்பவர்கள். **அதாவது எஹுூது நஸாராக்கள் அல்லாஹ்வுக்கு உருவம் உண்டு என்பவர்கள். முஸ்லீம்களோ அல்லாஹ்வுக்கு உருவம் கிடையாது என்பவர்கள். ஆனால் மூமின்களோ “தன்ஸீஹ்”“தஸ்பீஹ்” உருவம், அரூபம் இரண்டையும் ஒப்புக்கொள்ளவேண்டியவர்கள் இதுதான் உண்மையான விசுவாசமாய் இருக்கிறது.**

هُوَ ٱلْأَوَّلُ وَٱلْءَاخِرُ وَٱلظَّٰهِرُ وَٱلْبَاطِنُ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

57:3 *ஆதியும் அவனே. அந்தமும் அவனே. தோற்றுவதும் அவனே. மறைந்திருப்பவனும் அவனே.*

ஆகவே இறைவனை தஸ்பீஹில் மட்டும் கட்டுப்படுத்துவது **விசுவாசத்தில் குறைவேயில்லாமல் ஷிர்க்கு என்னும் இணைவைத்தலாகாது.** அதாவது இறைவன் உருவமற்றவன் என்று கூறும்போது அவன் **உருவத்தோடு வெளியாகத் தத்துவமில்லாத சக்தி குறைந்தவன் என்று ஆகும். அதேபோல் இறைவன் ரூபமுடையவன்தான் என்றால் அரூபமாய் இருக்கமுடியாதவன், சக்தி குறைந்தவன் என்று ஆகும்.** இந்த இருகொள்கைகளும் “வல்லாஹு அலா குல்லிஷையின்கதீர்” இறைவன் சர்வ் வல்லமையும் உடையவனென்ற வேத வசனத்திற்கு முரணாகும். அந்த அரூபியானவன்,**உருவமில்லாதவன் என்று கூறப்படுவது அவனுடைய தாத்து சம்பந்மான “குன்ஹு“ என்ற சுய நிலைமையைப் பொறுத்த ஓர் விஷயமாய் இருக்கிறது. இறைவன் உருவம் உடையவனென்று கூறப்படுவது இறைவனுடைய “அஸ்மா”“ஸிபாத்து” சம்பந்தமான ஓர் விஷயமாய் இருக்கிறது. ஓர் மூமின் தாத்தையும், ஸிபாத்தையும், லாஹிறையும், பாதினையும் மனப்பூர்வமாக**

விளங்கியறிந்து ஒப்புக்கொள்ள வேண்டியவராய் இருக்கிறார். இந்த விஷயத்தைப் பின்னால் நாம் பூரணமாய் அறிவோம். ஆனால் லாஹிறு, பாதினு (வெளிப்பாடு- உள்ளீடு) ஆகிய இரு தன்மைகளில் ஒன்றைமட்டும் ஒப்புக்கொள்வது ஈமானில் குறைவேயல்லாமல் ஷிர்க்குக்குரிய முக்கிய காரணமேயல்ல. இதேபோல இறைவனுடைய பார்வை, கேள்வி, பேச்சு முதலாம் பண்புகளையும் லாஹிரு பாதின் ஆகிய இரு தன்மைகளுக்கும் அமைவாய்த்தான் ஓர் முமீன் ஒப்புக்கொள்ள வேண்டும் **ஆனால் எமக்குச் சிறுபராயத்திலேயே, கண்ணின்றிப் பார்ப்பவன், செவியின்றிக் கேட்பவன், நாவின்றிப் பேசுபவன் என்று பாதினுடைய அம்சங்களை மட்டுமே கற்றுத் தருகிறார்கள். இது எம்முடைய முன்னோரின் மருட்சியும் புரட்டலுமேயாகும். லாஹிறு – பாதின் ஆகிய இரு தன்மைகளையும் ஏற்றுக்கொள்வதே சுத்த ஈமானாய் இருக்கிறது.** இதை நாம் பின்னால் அறிவோம்.

## ஷிர்க்குக்குரிய ஐந்தாவது கொள்கை:

அந்த இலாஹுகளான விக்கிரகங்கள், லாப, நஷ்டம், நன்மை, தீமை, சுகம், துக்கம் போன்ற குணங்களைக் கொடுக்கும் என்று நம்பும் கொள்கை. இதை ஆராய்ந்து பார்த்தால் இதுவும் ஷிர்க்கு என்னும் இணைவைத்தலுக்கரிய முக்கிய காரணமான ஆணிவேரேயல்ல என்பது தெரியவருகிறது. எப்படியென்றால் அல்லாஹ் அல்லாதது என்று பெரும்பான்மையாரால் கணிக்கப்படுகிற சிருஷ்டிப்பொருட்கள் குணம் கொடுப்பவைதான் என்று ஏறக்குறைய எல்லா மனிதர்களுமேதான் நம்பியிருக்கிறார்கள். நெருப்பு சுடும் என்பதில் யாருக்குமே சந்தேகம் கிடையாது. நெருப்பு என்ற சிருஷ்டிப்பொருளில் இருந்து உஷ்ணம் என்ற குணத்தைப் பெறுவதில் எவருக்குத்தான் சந்தேகம் உண்டு?

குர்ஆன் ஆயத்தின் விதிப்படி இதில் ஒன்றும் ஷிர்க்குக்குக் காரணமேயல்ல, இன்ன மருந்து இன்ன குணத்தைக் கொடுக்கும் என்று முஸ்லீமும் நம்புகிறான், முஸ்ரீக்கும் நம்புகிறான். குர்ஆனில் கூடச் சில மருந்துகள் கூறப்பட்டே இருக்கின்றன. நபிமார்களும் சிற்சில மருந்துக்களைக் கூறியிருக்கிறார்கள். மருத்துவமும் செய்திருக்கிறார்கள். இறைவன் நோயையும் மருந்தையும் இறக்கி ஒவ்வோர் நோய்க்கும் மருந்தை உண்டுபண்ணியுள்ளான், எனவே நீங்கள் மருத்துவம் செய்யுங்கள் என்று றசூலுல்லாஹ்வே கூறியிருக்கிறார்கள். உணவு பசியைத் தீர்க்கும் என்பதில் எவருக்கும் ஆட்சேபனையேயில்லை. இந்த வகையில் ஓர் முஸ்லீமும் முஸ்ரீக்கும் சமமானவர்களேதான். முஸ்லீம் சிருஷ்டிகள் குணம் கொடுக்கும் என்று நம்புவது போலவே முஸ்ரீக்கும் **சிருஷ்டியான விக்கிரகம் குணம் கொடுக்கும் என்று நம்புகிறான். ஆகவே இக்கொள்கையும் ஷிர்க்கு என்னும் இணை ஏற்படுத்துவதற்குரிய முக்கிய காரணமான ஆணிவேரே அல்ல என்பதை நாம் அறிந்துகொண்டோம்.**

## ஷிர்க்குக்குரிய ஆறாவது கொள்கை:

அல்லாஹ் வேறானவன், சிருஷ்டிகள் வேறானவை என்று நம்பும் கொள்கை. அதாவது அல்லாஹ் ஓர் தனிப்பொருள் என்றும் சிருஷ்டிகள் யாவும் அல்லாஹ் அல்லாத வெவ்வேறு தனித்தனிப் பொருட்கள் என்றும் நம்பும் கொள்கை. இன்னும் விபரமாய்க் கூறினால் முஜர்ரது, மாதாக்கள். இலாஹுகளான விக்கிரகங்கள் முதலான சூக்கும, பௌதீக, நல்ல, தீய சிருஷ்டிகள்யாவும் அல்லாஹ்வை விட்டும் வேறான தனித்தனிப்பொருட்கள் என்று வேறுபிரித்து நம்பும்கொள்கை. இந்தக் கொள்கையைக் குர்ஆன், ஹதீஸ்களைக் கொண்டும் பகுத்தறிவைக்கொண்டும் ஆராய்வுக்கெடுத்தால்,**உண்மையான ஷிர்க்கு என்னும் இணை ஏற்படுத்துதலை உண்டாக்குவது, இந்த வேறுபிரிக்கும் கொள்கைதான் என்பது தெரியவருகிறது.** அதுமட்டுமல்லாமல் நாம் முன்பு கூறிய ஐந்து காரணங்களையும் ஷிர்க்காக மாற்றிக்கொண்டிருப்பதும்இந்தக் கொள்கைதான் என்பதும்தெரிய வருகிறது. அதாவது ஷிர்க்கு என்னும் மன்னிக்கப்படாத குற்றத்துக்கு மூலகாரணமாய் ஆணிவேராய் அமைந்திருப்பது இக்கொள்கை தான் என்பதும் தெரிய வருகிறது. அதாவது ஷிர்க்கு என்னும் மன்னிக்கப்படாத குற்றத்துக்கு மூலகாரணமாய் ஆணிவேராய் அமைந்திருப்பது இக்கொள்கைதான் என்பதும் இக்கொள்கையை நீக்கிக் கொண்டால் முன்பு கூறிய ஐந்து காரணங்களும் ஷிர்க்காக மாற்றமடையாது என்பதும்தெரிய வருகிறது. **இந்தக் கொள்கையை நீக்கி உண்மையை உணர்த்தி நேர்வழி காட்டுவதற்காகவே இறைவன் நபிமார்களை அனுப்பினான் என்பதும் இக் கொள்கையை நீக்குவதற்காகவே கலிமா உபதேசிக்கப்பட்டது என்பதும் தெரிய வருகிறது.** இதை விளங்கிக் கொள்ளாமல்தான் நபிமார்கள் றசூல்மார்களை மக்கள் எதிர்த்தார்கள் என்பதும் தெரிய வருகிறது. **ஆனால் எமக்குச் சிறுபராயத்திலேயே தரப்பட்ட கொள்கை விளக்கங்கள் இந்த உண்மைக்கு நேர்விரோதமாகவே தென்படுகின்றன. ஆகவே அவசரபுத்தியைத், தீவிரவாதத்தை வீண்பிடிவாதத்தை விட்டுநீங்கி அமைதியாய் தெளிவாய் இந்த உண்மையை நாம் விளங்கியறியவேண்டும்.** இவ்விஷயத்தில் பொறுமை மிகமிக அவசியமாய் இருக்கிறது.

மேற்கூறிய வேறுபிரிக்கும் கொள்கையை நீக்கிவிட்டால் எல்லாவிதமான ஷிர்க்குக்களுமே தானாகவே நீங்கிவிடும் என்பது அறிவுக்குத் தென்படவே செய்கிறது. எப்படியென்றால்,**அல்லாஹ் அல்லாத ஒரு சிருஷ்டியுமேயில்லை என்று எடுத்துக்கொண்டால், வணங்குதல் (ஸுஜூது செய்தல்) ஸபாஅத்தின் ஆதரவுதேடல், இலாஹு என்று பெயரிடல், குணம் தருமென்று நம்புதல், உருவத்தில் மட்டுப்படுத்தல் ஆகிய எல்லாச் செயல்களுமே அல்லாஹ்வுக்கே அன்றி இல்லையென்று ஆகிவிடும். சர்வதத்துவங்களும் அல்லாஹ்வுக்கே என்பதும் உண்மையாகிவிடும்.** (நுட்பமாய் உணர்க) இவ்விஷயத்தை அறிவுடையயோர் இலகுவாய் விளங்கிக்கொள்ளக் கூடும். ஆயினும் நடுத்தர அறிவுடைய மக்களுக்கு இன்னும் விபரமாய் விளக்க வேண்டியதாகவே இருக்கிறது. ஆகவே உன்கவனத்தைச் சிதறவிடாமல் செவிதாழ்த்துவாயாக.

சர்வபிரபஞ்சங்களிலுமுள்ள சர்வசிருஷ்டிகளும் அல்லாஹ்வில் நின்றும் உள்ளவையே என்றும் அவை அல்லாஹ்வைவிட்டும் தனித்தனியான மூலப்பொருட்களேயல்ல என்றும் அவையாவும் இறைவனின் (ஸிபாத்துடைய) பண்புகளுடைய வெறும் நாமமும் தோற்றங்களும் பெயர்களுமேயென்றும் எடுத்துக்கொண்டால், நெருப்புச் சுட்டது என்று கூறும்போது, நெருப்பு என்று ஒரு தனி மூலப்பொருள்தான் அந்தக் குணத்தைக் கொடுத்தது என்று ஆகாமல், அல்லாஹ்வே சுட்டானென்று ஆகிவிடும். அதாவது அல்லாஹ் நெருப்பு என்னும் பெயரைப் பெற்றிருந்தான், அல்லாஹ்வே சுட்டான்,அல்லாஹ்வே சுடப்பட்டான் என்று எல்லாத் தத்துவங்களும் அவனுக்கே என்றும் அவனையன்றி ஒன்றுமேயில்லையென்றும் ஆகிவிடும். இதேபோல விக்கிரகம் அல்லாஹ் அலலாததல்ல என்று எடுத்துக்கொண்டால் இலாஹு என்று பெயர் சூட்டியது, ஸபாஅத் செய்யும் என்று நம்பியது ஸுஜூது செய்தது எல்லாமே அல்லாஹ்வுக்கென்றே ஆகிவிடும். ஏனென்றால் வேறொன்றுமில்லை அல்லாஹ் மட்டும்தான் உண்டு என்று நம்பும்போது எந்த ஒரு செயலும் அல்லாஹ்வுக்கேயன்றி இல்லை என்று ஆகிவிடும்.

ஆனால் இந்த விஷயம் உண்மைதான் என்றாலும் **எம்முடைய சாதாரண அறிவு இதை ஏற்றுக்கொள்ள மறுக்கவே செய்கிறது. மேலும் இக்கொள்கையை எதிர்க்கவும் பிழையாய்க் காணவும்தான் செய்கிறது. மேலும் மேலும் சீ.. சீ இதுவெறும் பித்தலாட்டம், குபிர் என்றெல்லாம் எம் அறிவு தீர்ப்புக்கட்டவும்தான் செய்கிறது.** ஏனென்றால் முன்கூறிய விளக்கத்தைப் பகுத்தறிவு ஒத்துக்கொண்டிருந்தாலும்கூட மனிதன் தன்னுடைய புலனுணர்வுகள் மூலம் பிரபஞ்சத்தைப் பார்க்கும்போது ஒன்றுக்கொன்று நேர்விரோதமான பற்பல சிருஷ்டிகளைப் பார்க்கிறான். ஒன்று பெரியது. இன்னொன்று சிறியது. ஒன்று வெண்மையானது. இன்னொன்று கருமையானது. ஒன்று ஹலாலனது இன்னொன்று ஹறாமானது. அதாவது நல்லது கெட்டது என்ற வேறுபாடுகளோடு ஒன்றுக்கொன்று வேறுபாடுகளோடு ஒன்றுக்கொன்று வேறுபட்டதாய், ஒவ்வொன்றும் தனிதனிப் பண்பும் தனித்தனித் தத்துவமும் உடையதாகவே சிருஷ்டிகளை மனிதன் காணுகிறான். அதுபோல காண்பதுமட்டுமன்றித் தன் சொந்த அனுபவத்தில் அனுபவிக்கவும் செய்கிறான். மேலும் எந்த ஓர் சிருஷ்டியும் தன் தேவையைத் தீர்த்துக்கொள்ள இன்னொன்றின் தேவையுள்ளதாய்ச் சக்தி குறைந்ததாய் இருக்கவே காண்கிறான். ஆகவே மிகமிகப் பரிசுத்தமுள்ள சர்வவல்லமையுமுடைய இறைவனை நாய், பன்றி, மலஜலம் போன்ற அசுசிப்பொருட்களோடும் ஒன்றுசேர்த்து எல்லாம் அல்லாஹ்வேதான் என்று ஒப்புக்கொள்ள **மனிதனுடைய அறிவு இயல்பாகவே மறுத்துவிடுகிறது. மேலும் அல்லாஹ்வைத்தவிர ஒன்றுமே இல்லை என்று கூறுவோரை பைத்தியக்காரராகவே மனித அறிவு கணிக்கமுற்படுகிறது.**

இப்படி அறிவினால் ஒப்புக்கொள்ளமுடியாமல் இக்கொள்கையை மறுத்து எதிர்த்து நின்று அல்லாஹ்வேறு சிருஷ்டிவேறு. அல்லாஹ் வேறு இலாஹுகளான விக்கிரகங்கள் வேறு என்று நம்பியிருந்த முஸ்ரீக்கீன்களை (ஷிர்க்குடையவர்களை) நோக்கி அவர்களுடைய நம்பிக்கையை மறுத்து அது தவறான கொள்கையென்பதை விளக்கிவைப்பதற்காகத்தான் **நபிமார்கள், றசூல்மார்களான மகான்களையும் "லாஇலாஹ இல்லல்லாஹ்" (அல்லாஹ்தவிர இலாஹு இல்லை) என்றதௌஹீதுக் கலிமாவையும் அதை விபரித்து விளக்கக் கூடிய வேதநூல்களையும் கறாமத், முஹ்ஜிஸாத்துக்களையும் இறைவன் அனுப்பினான். இந்தக்கலிமாவினால் விளக்கப்படுகிற ஏகத்துவக்கொள்கைதான் இஸ்லாத்தின் உயிராகும்.** இக்கொள்கையை மனிதர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டிருந்திருந்தால் நபிமார்கள், றசூல்மார்கள் வரவேண்டிய அவசியமே இல்லை. **அல்லாஹ் ஒருவனே உண்டென்று கூறுவதற்கு இவ்வளவுபெரிய மகான்களான நபிமார்கள் அவசியமேயில்லை. ஏனென்றால் இதை இன்றுள்ள மனிதரும் அன்றுள்ள மனிதரும் இனிமேல் வரக்கூடியவர்களும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளவே செய்வார்கள். ஆனால், அல்லாஹ்வைத் தவிர ஒன்றுமே இல்லை என்பதை அறிஞர்கள்கூட விளங்கியறியாமல் ஏற்றுக்கொள்ளவேமாட்டார்கள்.**

ஆகையால்தான் அல்-அமீன் என்ற பெயருக்குப்பாத்திரமானவர், தகுதியுடையவர் முஹம்மது (ஸல்) அவர்களேதான் என்பதை முழுமையானதாய் ஏற்றிருந்த அபூஜஹ்ல்கூட றசூல்(ஸல்) அவர்களைப் பொய்யர் என்று கூறாமல் **நீர் கொண்டுவந்த கலிமாவையும் வேதவசனங்களையுமே பொய்யாகக் காணுகிறேன் என்று கூறினான்.** ஏனென்றால் அந்த நபியினால் கூறப்பட்ட கலிமா அல்லாஹ்வைத் தவிர ஒன்றுமே இல்லையென்று அறிவித்ததை அந்த மக்களுடைய அறிவு ஏற்றுக்கொள்ளாமல் மறுத்ததே காரணமாகும்.

**ஹதீஸ்:** ***நிச்சயமாக நாம் உம்மைப் பொய்யராக்கவில்லை. எனினும், நீர் எதனைக் கொண்டு வந்தீரோ அதனையே பொய்யாக்குகின்றோம் என்று அபூஜஹ்ல் கூறினான்.***

**அறிவிப்பவர்: அலி (றலி)**
**ஆதாரம்: திர்மிதீ**

இந்த ஹதீஸினால் இரண்டு உண்மைகள் வெளிப்படுகின்றன.

**1ஆவது:** றசூலால் உபதேசிக்கப்பட்ட கலிமா ஒரே கருத்துடைய முஹ்கமாத்தைச் சேர்ந்தது, கல்வியறிவில்லாதவர்களாலும் தெளிவாய் விளங்கிக் கொள்ளக் கூடியது.

**2ஆவது:** கலிமாவின் கருத்தையும் தங்களுடைய நம்பிக்கையையும் ஒப்பிடும் போது மனிதன் கலிமாவின் கருத்தைப் பொய்யாகவே காண்பான் என்பது. ஆகவே, சாதரண மனிதனுடைய அறிவு விளக்கத்துக்குக் கலிமா உணர்த்தும் உண்மை நேர்விரோதமானது என்பது நிச்சயமான உண்மை.

ஆகவே நபிமார்களால் உபதேசிக்கப்பட்ட கலிமாவின் உண்மையை மனிதன் விளங்கியறிந்து எப்போது சந்தேகமில்லாமல் ஒப்புக்கொண்டானோ அப்போதுதான் உள்ளது ஒரே தத்துவம்தான் என்பதை அறிவான். **இதுதான் இஸ்லாத்தின் உண்மையான உயிரான ஏகத்துவக்கொள்கை என்பது. தௌஹீது என்பதன் உண்மையான சாராம்சம் இதுதான்.** இவ்வுண்மையைச் சக்குச்சந்தேகமில்லாமல் விளங்கியறிந்து மனத்தால் பூரணமாய் ஏற்றுக்கொள்வதன் பெயர்தான் ஈமான், விசுவாசம் என்பது. இந்த ஈமான் மனிதனுக்கு ஏற்படாதவரையிலும். "தஜஜற்றுத்" என்னும் மௌத்தாகாமல் மௌத்தாகும் நிலைமையை (மௌத்துக்கபுல் அன்த மௌவுத்) மனிதனால் பெறவே முடியாது. இந்த நிலைமையைப் பெற்றுக் கொள்ளாத ஒருவர் கடைசிவரையிலும் சாந்தியைப் பெறவும் முடியாது. **மயிரிலும் நுண்மையானது வாளிலும் கூர்மையானது என்றெல்லாம் எமக்கு வர்ணிக்கப்பட்ட "ஸிராத்துல் முஸ்தகீம்" என்ற நேரான பாதை என்பது இந்தத் தௌஹீதுக் கலிமாவின் உண்மையான விளக்கமேயாகும்.** ஆனால் யானையைப் பார்த்த குருடர்கள் போலுள்ள ஒருசில வஹ்முடைய அறிஞர்களால் நாம் தவறான வழியில் செலுத்துப்பட்டிருக்கிறோம் என்பது எமக்குத் தென்படவேயில்லை. மேலும், நாம் நேரான பாதையிலேயே போய்க்கொண்டிருப்பதாயும் நம்பிக்கொண்டிருந்தோம். நூற்கேள்வியறிவிலும் மூடப் பிடிவாதங்களிலும் சிக்குண்டிருக்கும் மனிதன் இந்த உண்மையைப் பொறுமையோடு விளங்கித் தெளிவு பெறாமல் ஸிறாத்து என்னும் நேரான பதையை விட்டுவிலகி (பாலத்தில் இருந்து கீழே விழுந்து) கொண்டிருக்கிறான். பாலத்தில் நின்றும் வீழ்பவன், சறுக்குபவன் நரகத்திலேயே வீழ்வான் என்று மனிதன் கேட்டோ படித்தோ அறிந்திருக்கிறான். **ஆனால் பாலம், நேரானபாதை எது என்பது அம்மனிதனுக்கு விளக்கப்படவேயில்லை. மனிதனுக்கு அமல் எதற்காகவென்பது விளக்கப்படாமலிருந்ததால் மயக்குண்டு அதிகமாக அமலில் ஈடுபடுவர்கள் தான் அவ்லியாக்கள் என்றும் நம்பினான். ஆகவே அந்த அமலாளர்களில் பெரும்பாலார் ஷைத்தான்களாக இருந்து தம்மை வழிகேட்டில் தள்ளியிருக்கிறார்கள் என்பதை மனிதன் உணர்ந்து கொள்ளவில்லை.**

فَرِيقًا هَدَىٰ وَفَرِيقًا حَقَّ عَلَيْهِمُ ٱلضَّلَٰلَةُ ۗ إِنَّهُمُ ٱتَّخَذُوا۟ ٱلشَّيَٰطِينَ
أَوْلِيَآءَ مِن دُونِ ٱللَّهِ وَيَحْسَبُونَ أَنَّهُم مُّهْتَدُونَ

7-30 *சிலரை அவன் நேரான வழியில் செலுத்தியிருக்கமற்றோர் மீது வழிகேடே விதிக்கப்பட்டதன் காரணம் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையன்றி ஷைத்தான்களையே தங்கள் அவ்லியாக்களாக எடுத்துக்கொண்டதுடன் நிச்சயமாக தாங்கள் நேரான பாதையில் இருப்பதாகவும் எண்ணிக்கொண்டதுதான்.*

உண்மை தெரியாத பின்பற்றல்வாதிகளான ஒருசில ஷைத்தான்களை நாம் அவ்லியாக்களாக நம்பியதாலும் நேரானபாதையில் நாம் செல்வதாக நம்பிக்கொண்டதாலும் எம்சிறு பிராயத்தில் இருந்தே **இஸ்லாத்தின் மூலக்கொள்கையில் இருந்தும் முற்றும் மாறான ஓர் பாதையிலேயே இட்டுச் செல்லப் பட்டிருக்கிறோம். எம்மை அவர்கள் குர்ஆனுக்கு மாற்றமாக, அறிவுக்கு மாற்றமாக, எவ்வளவு ஏமாற்றிச் சென்றிருக்கிறார்கள் என்பதை நோட்டமிடு. நாம் இப்படிக் கூறுவதால் ஒரு சிலர் எம்மைப் பகைப்பார்கள் என்பது எமக்குத் தெரியும். அறிவு குறைந்தோரின் அபவாதங்களையிட்டு எமக்குக் கவலையேயில்லை. நாம் கூறுவது குர்ஆனுடைய தீர்ப்பையேயல்லாமல் எம்முடைய சொந்த அபிப்பிராயமேயல்ல.**

ٱللَّهُ وَلِىُّ ٱلَّذِينَ ءَامَنُوا۟ يُخْرِجُهُم مِّنَ ٱلظُّلُمَٰتِ إِلَى ٱلنُّورِ ۖ
وَٱلَّذِينَ كَفَرُوٓا۟ أَوْلِيَآؤُهُمُ ٱلطَّٰغُوتُ يُخْرِجُونَهُم مِّنَ ٱلنُّورِ إِلَى
ٱلظُّلُمَٰتِ ۗ أُو۟لَٰٓئِكَ أَصْحَٰبُ ٱلنَّارِ ۖ هُمْ فِيهَا خَٰلِدُونَ

2-257 *அல்லாஹ்வே ஈமான்தாரிகளின் (அவ்லியா) பாதுகாவலன், அவன் அவர்களை இருள்களில் (அறியாமையில்) இருந்து வெளியேற்றிப் பிரகாசத்தின்பால் (ஞானத்தின்பால்) செலுத்துகிறான். ஆனால் நிராகரிப்பவர்களுக்கோ அவர்களின் பாதுகாவலர்கள் (அவ்லியாக்கள்) ஷைத்தான்கள் தான். அவர்கள், அவர்களைப் பிரகாசத்தில் இருந்து நீக்கி இருளின்பால் (அறியாமையின்பால்) செலுத்துகிறார்கள். அன்றி அவர்கள் நரகவாசிகளே. மேலும் அவர்கள் அதில் எந்த நாளும் தங்கிவிடுவார்கள்.*

முஸ்ரிக்குகள் நஜீஸானவர்கள் என்று இறைவன் குர்ஆனில் கூறுகிறான். நஜீஸ் என்றால் துர்நாற்றம், வெறுப்பு, அருவருப்பு உள்ளது என்பதே கருத்தாகும். கலிமத்துத்தையிபா என்றால்மணக்கும் பரிசுத்த வாக்கியம் என்பதே கருத்தாகும். ஆகவே நஜீஸான கெட்டநாற்றத்தை

நல்லமணமுள்ள கலிமாவைக்கொண்டுதான் பரிசுத்தப்படுத்த வேண்டும். **ஆகையால்தான் கலிமாவுக்கு இறைவன் தையிபா என்ற பெயரைச் சூட்டியிருக்கிறான்.** முஸ்ரீக்கீன்கள், இறைவனை வேறாகவும், இலாஹுகளான சர்வசிருஷ்டிகளையும் அல்லாஹ்வைவிட்டும் வேறானவையாகவும் நம்பியிருந்தவர்கள். அல்லாஹ்விடம் நெருங்கிச்சேர்வதற்காகவே இலாஹுகளை எடுத்துக்கொண்டதாகவும் அவற்றை வணங்குவதாகவும் கூறினார்கள். ஆகவே இறைவன் ஓர் தனிமூலப் பொருள் என்றும் சிருஷடிகள் அல்லாஹ்வைவிட்டும் வேறுவேறான தனித்தனி மூலப்பொருட்கள்(உஜுதுகள்) என்றும் நம்பினார்கள். மலக்குகள், மாதாக்களான சூட்சும சிருஷ்டிகள் இறைவனின் பெண்மக்கள் என்றும் உஷைறு (அலை),ஈஸா (அலை) போன்றவர்கள் இறைவனின் ஆண் மக்கள் என்றும் நம்பினார்கள். இலாஹுகளான சிருஷ்டிகள் தனித்தனிப் பொருட்களாய்த் தனித்தனி உஜுதுகளாய் இருப்பதால் குணம்கொடுக்கக்கூடியவை என்று நம்பினார்கள. இலாஹு என்று பெயர் சூட்டினார்கள். இந்த வஹ்மில் பேதபுத்தியில் மூழ்கியிருந்த மூடமக்களை நோக்கி உண்மையை உணர்த்துகிறான் இறைவன்.

எப்படியென்றால் "லாஇலாஹ இல்லல்லாஹ்" அல்லாஹ்வைத்தவிர இலாஹு இல்லை. அல்லது எல்லா இலாஹும் அல்லாஹ்வே. அல்லது எல்லாம் அவனே (ஹமவோஸ்த்) என்று உணர்த்துகிறான். அதாவது மனிதன் தன்னுடைய கனவின்போது உருவம், நிறம், பெயர், காலம், இடங்களில் கட்டுண்டு தோற்றுகிற கனவில் வெளியான பொருட்களைக் குணம் கொடுப்பவை, ஸபாஅத்துச் செய்பவை, கனவைக்காணும் மனிதனைவிட்டு வேறானவை என்று நீங்கள் நம்புவது தவறு என்றும் கனவின்போது தென்பட்ட ஆதேயமான அத்தனை நல்ல, தீய பொருட்களும் கனவுகண்டுகொண்டிருந்த மனிதனைவிட்டும் வேறானவையல்ல என்றும் கனவைக்காணும் மனிதன் தன்னுடைய மனம் என்ற பெருவெளியில் தன் கற்பனையில் மூழ்கியிருந்த அத்தனை பொருட்களையும் தானே கனவு என்ற நிலைமையில் காண்கிறான் என்றும், கனவில் வெளியான எந்த ஓர் சிருஷ்டிக்கும் கனவைக் காணும் மனிதனின் தத்துவத்தைவிட வேறான தத்துவம் கிடைக்கவேகிடையாது என்றும் கூறுவதுபோல, மிக இலகுவாய் ஒரேவசனத்தில் கலிமாவைக் கொண்டு இறைவன் விளக்குகிறான். நல்ல,தீயபொருட்கள் வேறானவையேயல்ல என்று கூறுவது போல "லாஇலாஹ இல்லல்லாஹ்" அல்லாஹ் தவிர வணங்கப்படுகிற சிருஷ்டிகளான இலாஹுகள் வேறான (தனிஉஜுது) உண்மைப் பொருட்களேயல்லவென்று உணர்த்துகிறான். எல்லா இலாஹுகளும் அல்லாஹ்வேதான் என்று கூறுகிறான்.

إِلَٰهُكُمْ إِلَٰهٌ وَاحِدٌ

16-22 *உங்களுடைய இலாஹு ஒன்றேதான்.*

(வணங்கப்படுகிற சிருஷ்டிகளான இலாஹுகளையும் தன்னையும் ஒன்றுபடுத்தியே இறைவன் இப்படிக் கூறுகிறான்)

அது மட்டுமல்ல, இந்தக் கலிமா உணர்த்தும் உண்மையை விளங்கித் தெளிவுபெற "ஹுவல்அவ்வலு" போன்ற வேதவசனங்களையும் அருளினான். பல நபிமார்கள் றசூல்மார்களைக்கொண்டு உணர்த்தினான். இதை உணர்த்துவதற்கு உதவியாக நபிமார்கள் றசூல்மார்களுக்கு கறாமத், முஹ்ஜிஸாத் போன்ற மனித அறிவை மீறிய அற்புதங்களையும் கொடுத்து உதவிசெய்தான். இறுதியில் முஹம்மது(ஸல்) அவர்களைக்கொண்டு **இக்கலிமாவை மனிதன் ஒப்புக்கொள்ளும் வரையில் வாள்கொண்டு யுத்தமே செய்யும்படியும் ஏவினான்.**

ஆகவே சர்வ பிரபஞ்சங்களிலுமுள்ள சர்வ சிருஷ்டிகளையும் அல்லாஹ்வை விட்டும் வேறாய்க் காணுகிற கணிக்கிற மனிதனின் அறியாமையைப்போக்கி "வாஜிபுல் உஜுது" ஆகிய உண்மைப் பொருளான ஹக்கையன்றி ஒன்றுமே இல்லை என்ற சுத்த சத்தியமான தௌஹீதை உணர்த்தவேண்டும் என்பதுதான் கலிமாவைக்கொண்டு நபிமாரை இறைவன் அனுப்பிய நோக்கமாகும். (அதாவது மனிதன் தன்னுடைய மறதியை நீக்கித் தான் யார்? என்பதை உணர்ந்து தன் பூரணத்தன்மையைப் பெற்றுக்கொள்வதற்காகத்தான்) **ஆனால் மனிதனுடைய பேதபுத்தியில் நாய், பன்றிபோன்ற அசுசிப் பொருட்களையும அல்லாஹ்தான் என்று ஏற்றுக்கொள்வது விளங்காத ஓர் விஷயமாயும் தவறான ஓர் விஷயம் போலும் தென்படுகிறது. மேலும், மனிதன் குர்ஆன் ஹதீஸ்களை வெளிநோக்காகப் பார்க்கும்போது அவற்றில் அல்லாஹ் வேறு சிருஷ்டி வேறு என்று தெளிவாகவே தென்படுகிற பல ஆயத்துக்கள், பல விஷயங்கள் தென்படுவதாகவும் காணுகிறான். ஆகவே எல்லாம் ஒன்றேயென்று கூறுவதும் நம்புவதும் குர்ஆன் ஹதீஸ்களுக்கு மாறான ஓர் விஷயமென்றும் வழிகேடு என்றும் நம்புகிறான். இவ்விதமான உபதேசம் தஜ்ஜாலுடையது. ஆகையால் இதற்குச் செவிசாய்க்கவே கூடாது என்றும் தீர்ப்புக்கட்டுகிறான்.**

ஆனால் இவ்விதமான பேதபுத்தியில் ஊறிய மக்களுக்கு **குர்ஆன் ஹதீஸ்களில்சுத்த சத்தியமான தௌஹீதுக்கு மாற்றமான ஓர் அட்சரம் (எழுத்துக்கூட) கிடையாது என்பது தெரியாது.** குர்ஆன் ஹதீஸ்களைப் பொறுமையோடு விளங்கித் தெளிவுபெறப் போதிய அறிவில்லாமல் இருப்பதும், தௌஹீதுக்கு நேர்விரோதமான ஓர் கொள்கை உள்ளத்தில் பதிக்கப்பட்டுள்ளதும் தான் இதற்குக் காரணம். **ஆனால் குர்ஆனிலோ ஹதீஸ்களிலோ உண்மையான தௌஹீதுக்கு மாற்றமான ஓர் சிறுவசனம்கூடக் கிடைக்கவே கிடையாது.** தௌஹீதை உறுதிப்படுத்தவே குர்ஆன் தரப்பட்டதென்றால் தௌஹீதுக்கு மாற்றமான விஷயங்கள் அதில் எப்படி இடம்பெறும்? ஆகவே இதை நாம் உரிய இடத்தில் தெளிவாய் அறிவு ஏற்றுக்கொள்ளும் வகையில் விளங்கியறிவோம். **பொறுமையடைவாயாக.**

ஆகவே அசூசி பொருட்களான சிருஷ்டிகளையும் இறைவனையும் ஒன்றுபடுத்தி அல்லாஹ்வைத்தவிர எதுவுமேயில்லை என்று கூறிய நபிமார்களைப் பின்பற்றி விளக்கம் தருகிற **நல்லறிவுடையவர்களை மக்கள் எதிர்ப்பதும் விரோதிப்பதும் நியாயமான ஓர் விஷயம்தான்.** ஏனென்றால் எல்லா மக்களுடைய அறிவுக்கும் இலகுவாய்த் தெளிவாய்த் தென்படக்கூடிய ஓர் விஷயம்தான் தௌஹீது,ஈமான்கொள்வது என்றிருந்தால், இத்தனை நபிமார்களும் வரவேண்டியதேயில்லை. றசூல் (ஸல்) வாள் கொண்டு வலியுறுத்த வேண்டியதேயில்லை.மனிதன் தன்னுடைய அறிவினால் ஒப்புக்கொள்ளக்கூடிய ஓர் சாதரண விஷயத்தை விளக்க இத்தனை நபிமாரும் பெரியார்களும் எதற்காக? இறைவன் ஒருவன் உண்டு என்று நம்பியிருந்த மக்களுக்கு இறைவன் ஒருவன் உண்டென்றே நபிமார்கள் கூறியிருந்தால், அவர்களை மக்கள் ஏன் எதிர்க்கப் போகிறார்கள். மனிதனுடைய அறிவுக்கு இலகுவாய் உணர முடியாத ஓர் விஷயத்தை விளக்குவதற்காகத்தான் நபிமார்களை இறைவன் அனுப்பினான்.

உண்மை என்பது எவரும் கற்கமுடியாத கசப்புடைய ஒன்றுதான். ஆனாலும் எல்லோரும் அவசியம் கற்றிருக்கவேண்டிய ஒன்றும்தான் என்று ஓர் அறிஞர் கூறுகிறார். **சாதாரண, அறிவு விளக்கமில்லாத மனிதரிடையே தௌஹீது விஷயத்தில் (ஈமான்கொள்வதில்) எவ்வளவோ சந்தேகங்கள் ஏற்படும் என்பது முற்றிலும் உண்மை. மனிதர்களுடைய அறிவு விளங்கித்தெளிவு பெறாதவரையில் தௌஹீதை,ஈமானுடைய உண்மையை எதிர்க்கவே செய்யுமென்பது உண்மை.** ஆகவே அவசரபுத்தி, அடங்காமுற்கோபம் கொள்ளாமல் மிகமிகப் பொறுமையோடு விளங்கியறிந்துதான் ஈமான் கொள்ளவேண்டும். ஆனால் பொறுமையோடு விளங்கித்தெளிவு பெறாமல் அவசரபுத்தியோடு உதறித்தள்ளிவிட்டால் ஈமானுடையவிஷயம் நிச்சயமாக கைநழுவியேவிடும்.

**ஊசியுடைய காதில் ஒட்டகை நுழைவதைவிட மனிதருடைய கல்பில் ஈமான் நுழைவது கடினம்.** என்று றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஓர் விஷயமல்லவா? ஆகவே, சந்தேகநிவர்த்தி என்ற தலைப்பில் கேள்வி – பதில் என்ற முறையில் மனிதர்களுக்குத் **தௌஹீது (ஈமான்) விஷயமாய் ஏற்படக் கூடிய அத்தனை சந்தேகங்களையும் ஆதாரங்களோடு தீர்த்து வைப்போம் இன்ஷா அல்லாஹ் பொறுமையடைவாயாக!**

## (2)

**அன்புச் சகோதரனே!**

வணக்கத்துக்குரியநாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று கூறுவதற்கு சுமார் ஒரு இலட்சத்து இருபத்துநாலாயிரம் நபிமார்கள், அதிலும் 313 முற்ஸலீன்கள், அதிலும் 6 உலுல் அஸ்மிகளான மேதைகளும் நான்கு வேதங்களும் மற்றும் ஸுஹ்புகளும் அவசியமில்லை. ஏனென்றால் வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று கூறுவதை எல்லா மனிதர்களுடைய அறிவுமே ஏற்றுக்கொள்ளும். இதற்கு முன்பும் இப்போதும் மனிதர்களில் பெரும்பாலார் ஏற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள். இதை முன்பும் கூறியுள்ளேன். **ஆகையால்தான் வணக்கத்துக்கரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று கூறுவதே மனோரம்மியமாய் ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் இருக்கிறதென்றும் அல்லாஹ்வைத்தவிர இலாஹுயில்லை என்பதை மனம் ஏற்றுக்கொள்ளமுடியாமல் இருப்பதால் இப்படிக்கூறுவது ஹறாம் என்றும் "றசாயிலுல் மதனா"" துஹ்பா" போன்ற அறபு எழுத்தில் ஆக்கப்பட்ட (சில கிதாபு) புஸ்தகங்களில், எமக்கு வழிகாட்டிய சிலஷைத்தான்கள் கூறுகிறார்கள்.** எவ்விதமான ஆராய்வும் இல்லாமல் ஒருவரையொருவர் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றிக் கூறியிருக்கும்போது அந்த மக்களை இமாம்களாக, வழிகாட்டிகளாக, உண்மை மூமின்களாக, எம்முடைய பேதபுத்தியினால் விளங்கியறியாமல் நம்பியிருந்தாலும்கூட இவ்வகையினரைக் குர்ஆன் ஷைத்தான்களென்றே தீர்ப்புகட்டுகிறது. குர்ஆனுடைய தீர்ப்பு ஹக்கான தீர்ப்பேயாகும் என்பது ஆராய்வினாலும் அனுபவத்தினாலும் கண்டறிந்த உண்மையாகும்.

**ஏனென்றால், இவர்களுடைய உள்ளம் முஸ்ரீக்கீகளின் கொள்கையை மனோரமமியமாய் ஏற்றுக்கொள்வதாயும் மூமின்களின் (நபிமார்களின்) கொள்கையை ஹறாம் என்று தீர்ப்புக்கட்டுவதாயும்தானே இருந்திருக்கிறது.** ஆனால் எம்முடைய அறிவுக் குறைவினால் இவர்களை அவலியாக்களாய் நம்பி இவர்கள் காட்டிய, சறுக்கிய வழிகேட்டில் சிறுபராயத்திலிருந்தே ஊறியிருக்கிறோம். உண்மை எப்படிப் புரட்டப்பட்டு எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பதைச் சிந்தனை செய்துபார். இவர்கள் ஷைத்தான்களா? அவ்லியாக்களா? என்பதை கண்டறிய மீண்டும் 7-30 ஆயத்தையும் அவை போன்ற மற்றும் ஆயத்துக்களையும் ஆராய்ந்து பார். இவர்கள் றசூல்மார்கள் கொண்டுவந்த உண்மையை குர்ஆன், ஹதீஸ்களின் விபரங்களைப் பொய்யாகத்தானே கண்டிருக்கிறார்கள்.

بَلْ قَالُوٓا۟ إِنَّا وَجَدْنَآ ءَابَآءَنَا عَلَىٰٓ أُمَّةٍ وَإِنَّا عَلَىٰٓ ءَاثَٰرِهِم مُّهْتَدُونَ

43-22 *இவர்கள் (தங்களுக்கு ஆதாரமாகக்) கூறுவதெல்லாம் நாங்கள் எங்கள் மூதாதைகளை ஒருவழியில் கண்டோம். அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றியே நாங்கள் நடக்கிறோம் என்பதுதான்.*

وَلَقَدْ ضَرَبْنَا لِلنَّاسِ فِى هَـٰذَا ٱلْقُرْءَانِ مِن كُلِّ مَثَلٍ ۚ وَلَئِن جِئْتَهُم بِـَٔايَةٍ
لَّيَقُولَنَّ ٱلَّذِينَ كَفَرُوٓا۟ إِنْ أَنتُمْ إِلَّا مُبْطِلُونَ

30-58 *மனிதர்களுக்குவேண்டிய உதாரணங்கள்யாவும் இந்தக் குர்ஆனில் நிச்சயமாக நாம் கூறியே இருக்கிறோம். எந்த அத்தாட்சியை நீர் அவர்களிடம் கொண்டுவந்த போதிலும் நீரும் உம்மைச் சேர்ந்தோரும் பொய்யர்களேயன்றி வேறில்லையென்று நிராகரிப்போர் நிச்சயமாகக் கூறுவார்கள்.*

இந்த ஆயத்தை முன்பும் தந்துள்ளேன். நிராகரிப்பவர்கள் யார்? **உண்மையை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள்தான் நிராகரிப்பவர்கள். உண்மை எது? இறைவேதமான குர்ஆனேதான். நபிமார்கள் கொண்டுவந்த அத்தாட்சிகள் எவை? கலிமாவும், வேதவசனங்களும், கறாமத், முஹ்ஜிஸாத்துக்களுமேயாகும்.** நபிமார்களைப் பின்பற்றியவர்கள் **யார்? அவர்களின் வாரிசுகளாய் வந்த நல்லடியார்களான ஒலிமார்களேயாகும்.** இப்போது சிந்தனை செய்துபார் வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்பதுதான் றசூல்(ஸல்) அவர்களால் கொண்டுவரப்பட்டதாய் இருந்தால், முன்காட்டிய ஆயத்தின்படி மக்கள் இந்த நபியைப் பொய்யர், அல்லது நர் கொண்டுவந்தது பொய் என்று கூறியிருப்பார்களா? றசூல்(ஸல்) அவர்களும் அவர்களைப் பின்பற்றிய நல்லடியார்களும் வணக்கத்துக்குரியநாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று கூறுவது “ஷிர்க்கு” என்றும் அல்லாஹ் தவிர இலாஹு இல்லை என்பதே உண்மை என்றும் கூறியதால், கூறுவதால்தான் **அன்றும் இன்றும் மக்கள் அக்கூற்றுப் பொய்யென்றும் அப்படிக் கூறுவோரைப் பொய்யர்கள் என்றும் கூறுகிறார்கள். இக்கூற்றை மனோரம்மியமாய் ஏற்கமுடியாதென்று கூறுகிறார்கள்.** ஏன் அப்படிக் கூறுகிறார்கள்? இவர்கள் நபிமார்கள் கொண்டுவந்த உண்மையை (குர்ஆனை) மறுப்பவர்களாய் நிராகரிப்பவர்களாய் இருப்பதனால்தான் அப்படிக்கூறுகிறார்கள். குர்ஆனுடைய 2-13 போன்ற ஆயத்துக்களையும் ஆராய்ந்துபார். (விரிவைப் பயந்து இங்கே தரப்படவில்லை)

إِنِ ٱلْكَـٰفِرُونَ إِلَّا فِى غُرُورٍ

67-20 *இந்த நிராகரிப்போர் வெறும் மாய்கையிலன்றி வேறில்லை.*

**ஹதீஸ்:** ***ஒருவன் நரகநெருப்பை நோக்கிச் செல்வதை அல்லாஹ்தடுத்திராவிட்டால் அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்றும் முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்றும் இருதய பரிசுத்தத்துடன் சாட்சிகூறக் கூடியவன் ஒருவருமில்லையென்று அனஸ் (றலி) அவர்கள் நபிமூலம் அறிவிக்கிறார்கள். இந்த ஹதீஸ் முன்பும் தரப்பட்டுள்ளது.***

இந்த ஹதீஸை நுட்பமாய்ச் சிந்தனை செய்துபார் மேலும் அல்லாஹ்தவிர இலாஹு இல்லையென்று றசூலுல்லாஹ் கூறியதனால்தான் உம்மைப் பொய்யராக்கவில்லை, நீர் கொண்டுவந்ததையே பொய்யாய்க் காணுகின்றோம் என்று அபூஜஹ்ல் கூறினான். இந்த ஹதீஸையும் சரியான அறிவோடு சிந்தனை செய்துபார். முஸ்ரிக்கீன்கள். அல்லாஹ்வை நெருங்கிச்சேர,வக்கீலாக விக்கிரகங்களை எடுத்துக்கொண்டார்களேயல்லாமல் வணக்கத்துக்குப் பாத்திரமானவன் அல்லாஹ்வே என்றும் அவன் ஒருவனே என்றும் அவர்கள் அறிந்தேதான் இருந்தார்கள். **இவர்கள் கொண்டிருந்த கொள்கையை றசூலுல்லாஹ் மறுத்ததனால்தான் பொய்யர் ஆக்கப்பட்டார்கள்.** இந்த றசூலைப் பின்பற்றி றசூல் உணர்த்திய அதே உண்மையை எவர் உணர்த்த முன் வருகிறாரோ அவரும் மக்களிடையே பொய்யர் என்றுதான் கணிக்கப்படுவார். கணிக்கப்டுகிறார்.

ஆகவே சாதாரண மனிதனுடைய அறிவு ஏற்றுக்கொள்ளாத ஓர் உண்மையை மனிதன் பொய்யென்று கூறவே செய்வான். எல்லாம் அவனே என்பதை மனிதனுடைய அறிவு இலகுவாய் ஏற்றுக்கொள்ளவே மாட்டாது என்பது உண்மை. சாதாரண மனிதன் விளங்காத ஓர் விஷயத்தை விளக்கிக்காட்டுவதற்குதானே ஆசிரியர்கள் தேவை. இந்த ஆசிரியர்கள்தான் நபிமார்கள். எமது ஆசிரியர்களின் விளக்கங்களை நாம் குறுகிய புத்தியோடு நோக்காமல் தெளிந்த, திரையற்ற மனத்தோடும் உண்மையான பகுத்தறிவோடும் அமைதியாய் விளங்கியறிந்துதான் தெளிவுபெற வேண்டும்.

இப்போது குர்ஆனை மட்டும், அறிவைமட்டும் ஆதாரமாகக் கொண்டு நாம் முன்பு கூறிய ஆறு காரணங்களையும் நீ சரியாகப் புரிந்திருந்தால் ஷிர்க்கு அல்லது இணை ஏற்படுத்துதல் எது என்பதை அறிந்திருப்பாய். **அதாவது என்றும் அழிந்தொழியாமல் நிலையாய் இருக்கும் உண்மைப் பொருளான உஜூதோடு (அல்லாஹ்வோடு) இன்னும் பல உஜூதுகளான உண்மைப் பொருட்களும் உண்டென்று கற்பதை பண்ணுவதே ஷிர்க்காக இருக்கிறது.** சிருஷ்டிகள் அல்லாஹ் அல்லாதவை என்று நம்பும்போது அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டென்று ஏற்படுகிறது. சிருஷடிகள் அல்லாஹ் அல்லாதவை என்றால் அவை அல்லாஹ் அல்லாத ஓர் இடத்தில் இன்னோர் அல்லாஹ்வால்

உருவாக்கப்பட்டிருக்கும். ஆகவே அல்லாஹ்வோடு இன்னும் ஓர் அல்லாஹ் உண்டு என்று ஆகிவிடும். அப்படியல்லாமல் அல்லாஹ்தான் அவைகளைப் படைத்தான், அவனையன்றி வேறு எவரும் இல்லையென்றால் படையுண்ட அத்தனையும் நல்லவை, கெட்டவை யாவும் அல்லாஹ்வில் நின்றும்தான் உண்டாகியிருக்கவேண்டும். அப்படியானால் அவை அல்லாஹ் அல்லாதவையென்று கூறுவது பிழையாகும். இதுதான் ஷிர்க் தௌஹீது என்பவற்றின் பொதுவான சாராம்சம்.

“லாஇலாஹ இல்லல்லாஹ்” அல்லாஹ் தவிர இலாஹுᵘ இல்லையென்று கூறும் போது எல்லா இலாஹுᵘம் அல்லாஹ்வேதான் என்று பெறப்படுவதால் அவனையன்றி எதுவமே இல்லையென்று ஆகிவிடும். இது இப்போது விளங்காவிடினும் அறிவு ஏற்றுக் கொள்ளாவிடினும் **இந்தக்கலிமா அல்லாஹ்வை மட்டுமே நிலைப்படுத்துகிறது என்பது தெளிவாகவே தென்படுகிறது.** தௌஹீது என்பதன் சுருக்கம் இதுதான். இதை நாம் விளங்கித் தெளிவோம். வணக்கத்துக்குரியநாயன் யாரும் இல்லை அல்லாஹ்வைத் தவிர என்று கூறும்போது சிருஷ்டி வேறு இறைவன் வேறு என்று தென்படுகிறது. ஆகவே இதைக் கூறுபவன் நாவினால் ஒரே இறைவனை ஏற்றுக் கொண்டிருந்தும் **அவனை அறியாமலே அவனுடைய உள்ளத்தில் இன்னும் ஒரு அல்லது பல உண்மைப் பொருள்கள் இருப்பதாய் நுழைந்துவிடுகிறது. ஷிர்க் என்பதன் இரகசியம் இதுதான்.** இது சாதாரண ஓர் சிறுவிஷயம் போல் தென்பட்டாலும் உண்மை அப்படியல்ல. இது ஓர் கடினமான உளநோயாய் இருக்கிறது. அதைப் பின்பு விளங்குவோம்.

وَقَالَ ٱللَّهُ لَا تَتَّخِذُوٓا۟ إِلَٰهَيْنِ ٱثْنَيْنِ ۖ إِنَّمَا هُوَ إِلَٰهٌ وَٰحِدٌ ۖ فَإِيَّٰىَ فَٱرْهَبُونِ

16-51 *அல்லாஹ் கூறுகிறான். இருதெய்வங்களை நீங்கள் எடுத்துக்கொள்ளாதீர்கள். இலாஹுᵘ ஒன்றேதான். ஆகவே நீங்கள் எனக்கே பயப்படுங்கள்.*

இதேபோல் குர்ஆனில் கூறப்படுகிற 6:22 போன்ற ஆயத்துக்களையும் ஆராய்ந்துபார். நூற்றுக்கணக்கான விக்கிரகங்களை மனிதர்கள் எடுத்துக் கொண்டிருக்கும்போதும்**இருதெய்வங்களை எடுத்துக்கொள்ளாதீர்கள் என்றே இறைவன் கூறுகிறான்.** அதாவது சிருஷ்டி அல்லாஹ்வை விட்டும் வேறானது என்று நம்பும் நம்பிக்கை,எம்மை அறியாமலே இன்னுமோர் இறைவனுண்டு என்று எங்கள் உள்ளத்தில் பதிந்துவிடுகிறது என்பதுதான். அஸீஸுᵘம் அலீமுமாகிய ஒரே இறைவன் சமீபிக்க இலாஹுᵘகளை எடுத்துக்கொண்ட மக்களை நோக்கியே இரு தெய்வங்களை எடுக்க வேண்டாம் என்று இறைவன் கூறுகிறான். பல தெய்வங்களையென்று கூறாமல் இருதெய்வங்களையென்று கூறுகிறான். பல தெய்வங்களையென்று கூறாமல் இருதெய்வங்களையென்று கூறுவது இன்னும் பல உண்மைகளை எமக்குப் புலப்படுத்துகிறது. நாம் மிகச் சுருக்கமாய்க் கூறிய விபரங்களைப் புரிந்து கொள்ளாமல், **வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று கூறுபவனுக்கும் முஸ்ரீக்கிற்கும் வேறுபாடு உண்டு என்று யாராவது கூறுவதானால் அவர் “தக்லீது”“தஹ்கீது” ஆகிய இருதன்மையும் இல்லாதவராகவே இருப்பார்.** அதாவது தக்லீது உடையவரானால் வேதம்கூறும் உண்மையை ஒப்புக்கொண்டிருப்பார். தஹ்கீது உடையவரானால் தீர்ந்த ஆராய்வினால் உண்மையைக் கண்டறிந்திருப்பார்

وَيَوْمَ يُنَادِيهِمْ فَيَقُولُ أَيْنَ شُرَكَآءِىَ ٱلَّذِينَ كُنتُمْ تَزْعُمُونَ

28-74 *இறைவன் அவர்களை நோக்கி எனக்கு இணையானவைகள் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்களே! அவைகள் எங்கே? என்று கேட்கும் நாளை அவர்களுக்கு ஞாபகமூட்டும்.*

وَلَا تَدْعُ مَعَ ٱللَّهِ إِلَٰهًا ءَاخَرَ ۘ لَآ إِلَٰهَ إِلَّا هُوَ ۚ كُلُّ شَىْءٍ هَالِكٌ إِلَّا وَجْهَهُۥ ۚ لَهُ
ٱلْحُكْمُ وَإِلَيْهِ تُرْجَعُونَ

28-88 *அல்லாஹ்வுடன் வேறு ஒரு இலாஹை அழைக்க வேண்டாம். அவனைத்தவிர வேறு இலாஹுᵘ இல்லை. அவனைத்தவிர சகலமும் அழிந்துவிடக்கூடியனவே. சகல அதிகாரங்களும் அவனுக்குடையனவே. அவனிடமே நீங்கள் யாவரும்கொண்டுவரப்படுவீர்கள்*

قُلْ أَرُونِىَ ٱلَّذِينَ أَلْحَقْتُم بِهِۦ شُرَكَآءَ ۖ كَلَّا ۚ بَلْ هُوَ ٱللَّهُ ٱلْعَزِيزُ ٱلْحَكِيمُ

34-27 *அல்லாஹ்வுக்கு இணையானவையென நீங்கள் அவனுக்குச் சமமாகச் சேர்த்து வைக்கீன்றீர்களே! அவைகளை நீங்கள் எனக்குக் காண்பியுங்கள் (அவனுக்கு இணையானது*

*அல்லது அவனுடன் ஒன்றுமே) இல்லை.அவனோ மிகைத்தோனும் ஞானமுடையோனுமாகிய அல்லாஹ்வாகும். என்று கூறும்.*

إِنَّهُمْ كَانُوٓا۟ إِذَا قِيلَ لَهُمْ لَآ إِلَـٰهَ إِلَّا ٱللَّهُ يَسْتَكْبِرُونَ

37-35 *அல்லாஹ் தவிர வேறு இலாஹுᵘ இல்லை என்று அவர்களுக்குக் கூறப்பட்டால் நிச்சயமாக அவர்கள் கர்வம் கொண்டு*

وَيَقُولُونَ أَئِنَّا لَتَارِكُوٓا۟ ءَالِهَتِنَا لِشَاعِرٍ مَّجْنُونٍۭ

37-36 *என்னே! நாங்கள் பைத்தியம் கொண்ட ஒரு கவிவாணருக்காக எங்களுடைய இலாஹுᵘகளை மெய்யாகவே விட்டுவிடுவோமா? என்றும் அவர்கள் கூறுகின்றனர்.*

**6-21, 6-33**போன்ற ஆயத்துக்களையும் ஆராய்க.

وَلَقَدْ يَسَّرْنَا ٱلْقُرْءَانَ لِلذِّكْرِ فَهَلْ مِن مُّدَّكِرٍ

54-22 *நல்லுணர்ச்சி பெறும் பொருட்டே இந்தக் குர்ஆனை நாம் மிக்க எளிதாக்கி வைத்தோம். நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டா?*

## இதன் சாரம்

**1ஆவது:** **இறைவன் என்னும் உண்மையான மூலவஸ்த்துவுடன் இன்னும் ஏதோவெல்லாம் மூலவஸ்த்துக்களும் உண்டு என்று நம்பும் நம்பிக்கையே "ஷிர்க்கு" எனப்படும்.**

**2ஆவது:** **இந்த நம்பிக்கையினால்தான், விக்கிரக ஆராதனை, ஆதரவுதேடல், பெயர் சூட்டுதல், உருவத்தில் கட்டுப்படுத்துதல், லாபநஸ்டத்தை எதிர்பார்த்தல், போன்ற செயல்களும் ஷிர்காக மாற்றமடைகின்றன.**

**3ஆவது:** அல்லாஹ் அல்லாத மூலப்பொருட்களும் உண்டு என்னும் நம்பக்கை உள்ளத்தைவிட்டும் நீங்காதவரையில் **எந்தஓர் அமலாலும் பிரயோசனம் பெறவோ இறை ஐக்கியத்தைப் பெறவோ முடியாது.**

**4ஆவது:** நபிமார்கள் வந்ததும் கலிமாவைக் கொண்டுவந்ததும் **அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்னும் தவறான கொள்கையை நீக்குவதற்காகத்தான்.**

**5ஆவது:** **எமக்குச் சிறுபராயத்தில் ஷிர்க்கு, தௌஹீது சம்பந்தமாய்த் தரப்பட்ட விபரங்கள் உண்மைக்கு (குர்ஆன், ஹதீஸ்களுக்கும் அறிவிக்கும்) முரணாய் இருக்கின்றன.**

**6ஆவது:** இஸ்லாத்தின் கொள்கை விளக்கத்தில், எள்ளளவும் ஆராய்தலே இல்லாமலும் குர்ஆன், ஹதீஸ்களின் வற்புறுத்தல்களைக் கவனிக்காமலும் எம்முன்னோர்களில் ஒருசிலரின் அறியாமையால் ஏற்படுத்தப்பட்ட தவறான விபரங்களிலேயே எம்மில் பலர் ஊறிக்கொண்டிருக்கிறோம்.**அதனாலேயே உண்மையைக்கூட மறுக்கிறோம்.**

**7ஆவது:** நாம் உண்மையை உணரவேண்டுமானால் குர்ஆன். ஹதீஸ்களையும் வலிமார்களின் வாக்குளையும் பூரணமாய் விளங்கியறிந்து ஒப்புக்கொள்ள வேண்டும். உண்மையை அறிவதனால் தெளிந்த மனத்தோடும் கட்சிப்பற்றில்லாத அறிவோடும் ஆராய்தல் செய்ய வேண்டும்.

**8ஆவது:** **வேஷதாரிகளான ஷைத்தான்களின் ஆதாரமற்ற பேச்சுக்கள் எழுத்துக்களில் மூழ்காமல் திடமான உறுதியான உள்ளத்தோடு ஆராய்தல் செய்துதான் உண்மையைக் கண்டறியவேண்டும்.** ஏனென்றால் உண்மை புரட்டப்பட்டு வெகு நீண்டகாலமாகிவிட்டது.

007

## "தௌஹீது"

### (ஏகமாக்கல்) என்பது என்ன?

சித்தசுத்தியும் அறிவும் அனுபவமும் கொண்ட நல்லடியார்களான ஒருசில கண்ணியம் மிக்க உலமாக்களைத் தவிர மற்றும் ஒருசில மௌலவிகளும், அறிஞர்களும் தௌஹீது விஷயமாய்ப் பற்பல அபிப்பிராய பேதங்களைக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய எல்லா அபிப்பிராயங்களையுமே விளக்குவதானால் பல நூற்களை எழுதவேண்டியேற்படும். ஆயினும் எமது சமூக மக்களிடையே எமது நாட்டிலுள்ள பெரும்பாலான கல்விமான்கள் கொண்டுள்ள மூன்று விதமான அபிப்பிராயங்களை மட்டும் விளக்கிக்காட்டி அவற்றிலுள்ள,**குர்ஆன், ஹதீஸ்களுக்கு மாறான விபரங்களை உன் கவனத்துக்கு தந்தபின் உண்மையான தௌஹீதின் விளக்கத்தை விளக்கிவைக்க விரும்புகிறேன்.** "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற தௌஹீது கலிமா "ஷிர்க் இணை ஏற்படுத்தலென்னும் ஒருதவறான கொள்கையை மறுத்து உண்மையை விளக்குவதற்காகவே இறைவனால் நபிமார்கள், றசூல்மார்கள் மூலம் எமக்கு அருளப்பட்டது என்பதை, ஏறக்குறைய எல்லா உலமாக்களும் அறிஞர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இக் கலிமாவின் விளக்கத்தினால் பெறப்படுகிற தௌஹீது, ஏகமாக்கல், ஒருமைப்படுத்தல் என்பதில்தான் அபிப்பிராய பேதங்கள் தென்படுகின்றன. எப்படியென்றால்,

உலமாக்களிள் ஒரு கூட்டத்தார் தௌஹீது என்றால் அதாவது ஒருமைப்படுத்தல், ஏகமாக்கல் என்றால் "உலூஹியத்" தில் ஒருமைப்படுத்தல் என்கிறார்கள்.

**இந்த உலூஹியத்தில் ஒருமைப்படுத்தல் என்பதன் விபரம் என்னவென்றால்,**

நாயகத்தன்மையை ஒன்றுபடுத்தல் என்பதே அதன் சாரமாகும். அதாவது அல்லாஹ்வே நாயகன் என்றும் அவனுடைய நாயகத் தன்மையில் இன்னொன்றை அல்லது பலதைக் கூட்டாக்காமல் இணையாக்காமல் இருப்பதுமே ஒருமைப்படுத்தல், தௌஹீது என்கிறார்கள். இவர்கள் சொல்லுமு விபரம்தான் உண்மையானது என்றால்,**அல்லாஹ்வே நாயகன் என்று அறியாமல் இருப்பதும் அவனுடைய நாயகத்தன்மையில் இன்னொன்றைக் கூட்டாக்குவதும்தான் ஷிர்க்கென்று ஆகிறது.** தௌஹீதுக்கு நேரெதிரானதுதானே ஷிர்க் என்பது. இது எஹுூது, நஸாராக்களில் ஒருபகுதியினரில் உள்ளமையேயானாலும் அறபு நாட்டு முஸ்ரிக்கீன்களின் (ஷிர்க்குடையவர்களின்) கொள்கை இப்படி இருந்ததே இல்லை.

ஆகவே றசூல்(ஸல்) அவர்களைக்கொண்டு இறைவன் இக்கொள்கையை ரத்துச் செய்யவேண்டி இருந்ததேயில்லை. ஏனென்றால் றசூல்(ஸல்) அவர்கள் ஆரம்பத்தில், முன்னொருபோதும் நபிமார் வராத அறபு மக்களுக்காகவே அனுப்பப்பட்டவர்கள் என்று இறைவனால் அறிவிக்கப்பட்ட அதே காலத்தில்தான், றசூலுல்லாஹ் அறபு மக்களிடையே கலிமாவை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதன் பிறகு நீண்ட நாட்களின் பின்புதான்,"உலக மக்கள் அனைவருக்குமே உம்மை றஹ்மத்தாக (நபியாக) அனுப்பினேன்" என்று இறைவன் கூறினான். **இது எம்முடைய யூகமல்ல. குர்ஆனுடைய உண்மையான விளக்கமாகும்.** ஆகவே றசூல்(ஸல்) அவர்களால் எந்த மக்களை முன்னோக்கிக் கலிமா கூறப்பட்டதோ அந்த மக்கள் முஸ்ரீக்கீன்களான அறபு மக்கள்தான் என்பதில் எவருக்கும் சந்தேகமோ, ஆட்சேபனையோ கிடையாது. அந்த அறபு நாட்டு முஸ்ரீக்கீன்கள் ஏகநாயகன் ஒருவன் உண்டு என்பதை அறிந்தவர்களாக, அஸீஸுும் அலீமுமாகிய இறைவனின் தத்துவங்களை ஏற்றுக்கொண்டவர்களாக, அந்த நாயகனுடைய நாயகத் தன்மையில் இன்னொன்றைக் கூட்டாக்கி இணைக்காதவர்களாகவே இருந்திருக்கிறார்கள் என்பதைக் குர்ஆன் அறிவிக்கின்றது. அப்படியிருந்தும்தான் அல்லாஹ் அவர்களை முஸ்ரீக்கீன்கள் என்று கூறுகிறான்.

قُلْ مَن رَّبُّ ٱلسَّمَٰوَٰتِ ٱلسَّبْعِ وَرَبُّ ٱلْعَرْشِ ٱلْعَظِيمِ

23-86 *ஏழு வானங்களைப் படைத்தவனும் கனம்தங்கிய அறுஷைப்படைத்தவனும் ஆகிய நாயகன் யார்? என்று அந்த முஸ்ரிக்கீன்களைக் கேளும் அல்லாஹ்தான் என்று அவர்கள் கூறுவார்கள்.*

(நாம் முன்கூறிய 43-9, 31-25, 29-61, 29-63 போன்ற ஆயத்துக்களையும் இவ்விடத்தில் ஆராய்வுக்கு எடுத்துக்கொள்ளவும்.)

இந்த ஆயத்துக்களின் விபரப்படி முஸ்ரிக்கீன்கள் நாயகத்தன்மையை ஒப்புக்கொண்டும் அந்த நாயகத்தன்மையில் எவரையும் கூட்டாக்காமலும்தான் இருந்திருக்கிறார்கள். அப்படி இருக்கும் போதும் அவர்களை இறைவன் முஸ்ரிக்கீன்கள் என்றே கூறுகிறான். ஆகவே அந்த உலூஹியத்தில் ஒருமைப்படுத்தல்தான் தௌஹீது என்று கூறுகிற **ஒருசாராரின் விளக்கப்படி பார்த்தால் இந்த முஸ்ரீக்கீன்களும் தௌஹீதுவாதிகளேயாவார்கள். இது இறைவனுடைய சொல்லுக்கு, குர்ஆனுடைய விளக்கத்திற்கு நேர்மாறான பொய்யாகவே முடிகிறது.** இன்னொன்று முன்காட்டிய விபரப்படி அறபு முஸ்ரிக்கீன்களிடையேயும் (உலூகியத்தில்) நாயகத்தன்மையில் (இஸ்ராக்) ஷிர்க்கு இல்லையென்றால் மூமினுக்கும் முஸ்ரீக்கிற்கும் இடையில் எந்த வேறுபாடுமே கிடையாது. அதாவது இந்தக் கூட்டத்தார்களின் (உலமாக்களின்) விளக்கப்படி மூமினும் முஸ்ரிக்கும் கொள்கைவிளக்கத்தில் சமமாகவே இருக்கிறார்கள் என்று முடிகிறது. (நுட்பமாய் உணர்க). ஆகவே இந்தத் தௌஹீது இறைவனுடைய பேச்சுக்கு, குர்ஆனுக்கு நேர்விரோதமாய்த தென்படுவதால் இதுதான் உண்மையான தௌஹீது, ஏகமாக்கல், ஒருமைப்படுத்தல் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. **இந்தக்**

**கொள்கைவிளக்கம் ஆராய்வில்லாத, குர்ஆனைப் பூரணமாக ஏற்றுக்கொள்ளாத மக்களின் வஹ்மினால் ஏற்பட்ட விளக்கமாகவே தென்படுகிறது.**

## (2)

உலமாக்களில் இன்னும் ஒரு கூட்டத்தார் இபாதத்தில் (வணக்கங்களில்) தௌஹீது செய்வது ஈமானின் ஒருபகுதி என்றும் இதுவே போதுமானது என்றும் கூறுகிறார்கள்.

**இதன் விபரம் என்னவென்றால்:**

அல்லாஹ்வைத்தவிர மற்றொன்றை அல்லது பலதை வணக்கத்துக்குப் பாத்திரமானது என்று கருதாமல் (எண்ணாமல்) இருப்பதே தௌஹீது என்று கூறுகிறார்கள். அதாவது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குப்பாத்திரமான நாயன் யாரும் இல்லையென்று நம்பி அதன்படி வணக்கத்தில் ஈடுபடவேண்டும் என்பதே இவர்களுடைய விளக்கம். இப்படி நம்பி வணங்குவதே தௌஹீது, ஏகமாக்கல், ஒருமைப்படுத்தல் என்று கூறுகிறார்கள். இந்த விளக்கத்தைப் பகுத்தறிவோடு ஆராய்ந்து பார்த்தால் **இதுவும் குர்ஆனுக்கு மாற்றமான தவறான விளக்கமே என்பது தென்படுகிறது.** ஏனென்றால் அந்த முஶ்ரிக்கீன்களான மக்கள் அல்லாஹ்வை நெருங்கிச்சேர உதவியாகவே ஆலிஹத்துக்களான இலாஹுகளை வணங்குவதாகவே கூறியுள்ளார்கள் என்று குர்ஆன் விபரம் தருகிறது. அதாவது அந்த முஶ்ரிக்குகள் அந்த இலாஹுகளை அல்லாஹ்வாக நம்பி (வணக்கத்துக்குப்பாத்திரமான நாயன் இந்த விக்கிரகம்தான் என்று நம்பி) அவர்கள் வணங்கவே இல்லை. ஆகவே உலமாக்களில் இந்தக் கூட்டத்தார்கள் கூறுவதுபோல்,**அல்லாஹ் அல்லாததை அல்லாஹ்வாக நம்பிவணங்குவதே ஷிர்க்கு என்பது உண்மையானால் விக்கிரகவணக்கவாளியான முஶ்ரீக்கும் ஷிர்க்குடையவனாகமாட்டான். (நுட்பமாய் உணர்க) ஏனென்றால் அவர்கள் விக்கிரகங்களை அல்லாஹ்வாக நம்பி வணங்கவே இல்லை.**

مَا نَعْبُدُهُمْ إِلَّا لِيُقَرِّبُونَآ إِلَى ٱللَّهِ زُلْفَىٰٓ

39-3 *ஆலிஹத்துக்கள் எங்களை அல்லாஹ்விடத்தில் நெருங்கிச் சேர்பதற்காகவே அன்றி நாங்கள் வணங்குவதில்லை.*

என்றுதான் முஶ்ரீக்கீன்கள் கூறினார்கள் என்பதாக குர்ஆன் எமக்கு விபரம் தருகிறது. இப்படிக்கூறியவர்கள் ஷிர்க்குடையவர்கள் என்பதை அல்லாஹ் குர்ஆன் மூலம் எமக்கு விளக்கம் தருகிறான். ஆகவே இக்கொள்கையை வெளி நோக்காகப் பார்க்கும் போது வஹ்முக்குச் சரிபோல் தென்பட்டாலும் பகுத்தறிவிடத்தில் **இக்கொள்கை குர்ஆனுக்கு, இறைவனுடைய அறிவித்தலுக்கு முற்றும் மாறானதேயாகும்.** குர்ஆனுக்கு மாறான ஓர்கொள்கையை ஆராயாமல் நாம் பின்பற்றுவது அறிவுடமையாகாது. இக்கொள்கை விளக்கமும் **ஆராய்வில்லாத, குர்ஆனை உண்மையாய் ஏற்றுக்கொள்ளாத வஹ்முடையவர்களின் விளக்கமாகவே தென்படுகிறது.** வணக்கத்தில் மட்டும் ஷிர்க்கேற்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காக கலிமா தரப்படவில்லை. வாழ்வின் எப்பகுதியிலும் ஷிர்க் ஏற்படக்கூடாதென்பதே கலிமா தரப்பட்ட நோக்கம்.

## (3)

உலமாக்களில் இன்னும் ஓர் கூட்டத்தார் **எந்தக்காரியத்திலும் அல்லாஹ் அல்லாததை அல்லாஹ்வுடன் கூட்டாக்காமல் இருப்பதே தௌஹீது என்கிறார்கள்.** இவர்களுடைய விளக்கத்தை நுட்பமாய் ஆராய்ந்தால் இதுவும் தவறான விளக்கமே என்பது தென்படுகிறது. அதாவது இவர்கள் கூறுவதுபோல் அல்லாஹ் அல்லாததை அல்லாஹ்வுடன் கூட்டாக்காமல் இருப்பதே தௌஹீது என்பது உண்மையானால் **இந்தத் தௌஹீது இவர்கள் கூறுகிற மூமின்களிலும் காணப்படவே இல்லை. ஏனென்றால் இவர்களுடைய கொள்கைப்படியுள்ள மூமின்கள் சர்வபிரபஞ்சங்களையும் அவற்றிலுள்ள சர்வ சிருஷ்டிகளையும் அல்லாஹ் அல்லாத பிரத்தியோகமான (வேறான) மவுஜூது என்று நம்பியிருக்கிறார்கள்.** ஆகவே இவர்கள் கூறுகிற மூமின்கள் சர்வபிரபஞ்சங்களும் (அல்லாஹ் அல்லாதவைகளும்) உண்டு என்று நம்புகிற கருத்துப்படி அல்லாஹ்வுக்கு இணையாக்கினார்கள். (அல்லாஹ்வோடு அல்லாஹ் அல்லாத வேறு மூலப்பொருட்களும் உண்டு) என்று ஆகிவிடுகிறது. இவர்களிலும் இன்னோர் வகுப்பார் **அல்லாஹ்வுடைய உஜூதைத் உண்மையான உஜூது என்றும் பிரபஞ்சங்களின் உஜூதைத் தற்காலிக உஜூது என்றும் கூறுகிறார்கள்.** இவர்களுடைய விபரத்தை ஆராய்வுக்கெடுத்தால் வெளிநோக்காகப் பார்க்கும் போது சரிபோலத்தென்பட்டாலும் **உஜூதில் இணையாக்கல் (ஷிர்க்வைத்தல்) என்ற குற்றம் நீங்கவே முடியாது.** ஆகவே இந்தக்கூட்டத்தாரின் விளக்கத்தையும் ஏற்றுக்கொள்ளவே முடியாது. அதுதவிர இக்கொள்கை மூலம் மனிதன் தன்னுடைய பூரணத்தன்மையைப் பெறவும் முடியாது. இந்துக்களில் ஒருசாராரின் (விசிட்டாத்வைதிகளின்) கூற்றும் இதுதான். (இதைப் பின்னால் அறிவோம்).

மேலே நாம் விபரித்துக்காட்டிய இந்த மூன்றுவிதமான அபிப்பிராயங்களும்தான் தௌஹீது சம்பந்தமாய் எம்நாட்டிலுள்ள பெரும்பாலான உலமாக்கள் பொதுமக்களிடத்திலெல்லாம் உண்மையென்று பரம்பரைபரம்பரையாய் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகும். இதேபோல் ஒவ்வோர் வகுப்பாரும் அவரவருடைய நம்பிக்கையும் விளக்கமுமே சரியானதென்று கூறி அவரவர்

அறிவுக்கேற்றபடி விவாதித்து வெற்றிதோல்வி கணிக்கமுற்பட்டாலும் **இவ்விவாதங்கள் எல்லாம் குர்ஆன், ஹதீஸ்களுக்கும் பகுத்தறிவுக்கும், அனுபவத்துக்கும் முரணாகவே இருக்கின்றன.** ஆகவே வீண்விவாதங்களில் மூழ்கி வெற்றிதோல்வி கணிக்க முற்படாமல் எம்முடைய இமாமும் நீதிபதியுமான குர்ஆனைக் கொண்டும் சாட்சிகளான ஹதீஸ், பகுத்தறிவு, ஒலிமார்களின் வாக்குகளைக்கொண்டும் உண்மையைக் கண்டறிவோமாக.

**ஹதீஸ்:** ***திருக்குர்ஆனிலுள்ள விஷயங்களைப்பற்றி வீண்தர்க்கம் செய்வது நிராகரிப்பு ஆகும். என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள் .***

**அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரலி)**
**ஆதாரம்: அபூதாவூத்**

## முக்கியமான ஓர் அறிவிப்பு

நாம் ஷிர்க்குடைய விபரத்திலும் தௌஹீதுடைய விஷயத்திலும் விளக்கியுள்ள விபரங்களை முறைப்படி புரிந்துகொள்ளாமல் முஸ்லீம்கள், மூமீன்களாகிய பெரும்பாலான மக்களை வெளிப்படையாக, அல்லது சூசகமாக, முஸ்ரீக்குகள், காபீர்கள் என்று கூறுவதாகவோ, எழுதுவதாகவோ விளங்கிக் கொண்டு **என்னைக் குறை கூறவேண்டாம்.** ஏனென்றால் எவர் எக்காரணத்தைக் கொண்டேனும் “லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற கலிமாவை நாவினால் கூறியிருப்பாரேயானால் அவர் ஓர் முஸ்லீம்தான், என்பதை **நான் ஒப்புக் கொண்டவனாய் இருக்கிறேன்.** ஆனால் அவர்களுடைய விசுவாசத்தை அவர்களுடைய அமல்களின் தன்மையை அறிவதும் கூலிகொடுப்பதும் இறைவனுடைய செயல். ஆனால் முஸ்லீம்களாய், மூமீன்களாய் அனுமதிக்கப்பட்டுள்ள நாம் எமது பூரணத்தன்மையை அடையவேண்டும் என்பதற்காக உண்மையை உணரவும் அதன்படிஒழுகவும் வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஆகவே எமக்குத் தெரிந்த உண்மையை உங்களுக்கு எத்திவைக்கும் நோக்கமாய் இவ்விஷயங்களின் சரிபிழைகளை உங்களுடைய அறிவுக்குத் தருகிறேனேயல்லாமல் எவரையும் குறைகூறுவதற்காக அல்ல என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன்.

**(4)**

**சகோதரனே!**

“இஸ்ராக்” என்பது “ஷிர்க்” என்ற சொல்லடியாக “இப்ஆலு” என்னும் ஒலி நிறையில் பிறந்த ஓர் அறபுச் சொல்லாகும். இதே போலத்தான் “தௌஹீது” என்பதும் “தப்ஈலு” என்ற சொல்லடியாக பிறந்த “தப்ஈலுன்”“இப்ஆலுன்” என்ற ஒலி அளவைகளால் நிறுத்தெடுக்கப்பட்ட பிறவினைப்பெயர்ச் சொல்லாகும். அதாவது சாதாரண மனிதனுடைய **வஹ்மு என்ற பேதபுத்தியில் பலவாயும், பல தத்துவங்களாயும் காண்பதைப் பகுத்தறிவைக்கொண்டு ஒன்றாய் ஒரே தத்துவமாய், ஏகமாய் காண்பதே தௌஹீது என்ற அறபுச் சொல்லின் உண்மையான கருத்தாகும்.** இதைத்தான் ஒருமைப்படுத்தல், ஏகமாக்கலென்று கூறப்படுவது. இதைத்தவிர தெய்வம் பலவல்ல ஒன்றுதான் என்று கொள்வதே தௌஹீது, ஒருமைப்படுத்தல், ஏகமாக்கல் என்பது கருத்தல்ல. ஆனால் பல தெய்வங்கள் அல்ல ஒரே தெய்வம்தான் என்று ஏற்பதே தௌஹீதென்று அறியாத மக்களால் நாம் சிறுபராயத்தில் இருந்தே அறிவிக்கப்பட்டிருக்கிறோம். இக்கருத்து குர்ஆனுக்கு மாறானது என்று முன்பு நான் விளக்கியுள்ளேன்.

தௌஹீது என்ற அறபுச்சொல்லுக்கு நேர் பொருத்தமான தமிழ் சொற்கள், அத்வைதம், ஏகத்துவம் என்பவைதான். ஏகத்துவம் என்றால் ஏகமாய் உள்ளது (ஒரே) தத்துவம்தான் என்பதே கருத்தாகும். (ஏக+தத்துவம் =ஏகத்துவம்). அத்வைதம், அத்துவிதம் என்றால் இரண்டல்ல ஏகம் என்பதே கருத்தாகும். அதாவது துவிதம் என்றால் இரண்டு என்பது பொருள். அ, துவிதம் என்றால் இரண்டல்ல ஏகம் என்பதுதான். (அ+துவிதம் =அத்துவிதம், அல்லது அத்வைதம்) சரியான ஆராய்வில்லாத ஒருசில அறிஞர்கள் **அத்வைதம் இந்துக்களின் கொள்கையென்றும் தௌஹீது என்பதே முஸ்லீம்களின் கொள்கையென்றும் பாமரமக்களை ஏய்க்கிறார்கள்.** இது அவர்களின் அறியாமையாகும்.

நிற்க, இந்த தௌஹீதுடைய விஷயத்தை மனிதன் இலகுவாய் விளங்கிக்கொள்ள முடியாத ஒன்றாய் இருப்பதாலும் இது சார்பாயுள்ள உண்மையான ஆதாரங்களை மனப்பூர்வமாய் மனிதன் திடீரென ஒப்புக்கொள்ள முடியாமல் இருப்பதாலும், அறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய சில விபரங்களை முதலில் கூறி அதன் பின் ஆதாரங்களைக் காட்டி உறுதிப்படுத்த விரும்புகிறேன். ஆகவே முதலில் எமது பகுத்தறிவையே நாம் பயன் படுத்துவோம்.

இன்று உலகில் வாழ்பவர்களும் இதற்குமுன் வாழ்ந்து அழிந்து போனவர்களும் இனிமேல் பிறந்து வாழவேண்டியவர்களும் எம் தந்தை ஆதம்(அலை) அவர்களில் இருந்தே தோன்றியவர்கள், தோன்றப்போகிறவர்கள் என்பதை நாம் அறிவோம். ஆதம்(அலை) அவர்களை நாம் நம்பினாலும் நம்பாவிட்டாலும், யாரோ ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து சில பிள்ளைகளைப் பெற்று அதன் பின் அப்பிள்ளைகள் ஒன்றோடொன்று சேர்ந்து பல பிள்ளைகளைப்பெற்று இப்படியே காலக்கிரமத்தில் பெருகி இப்போதிருக்கிற நாம் தோன்றியிருக்கின்றோம். இனிமேல் எம்மில் இருந்து

தோன்றப்போகிறவர்கள் யார் யார் எப்படிப்பட்டவர்கள் என்பது நமக்குத் தெரியாவிட்டாலும் நம்மிலிருந்து இனிமேல் பலகோடா கோடி மனிதர்கள் வெளியாகப் போகிறார்கள் என்பது உண்மையே. இனிமேல் பிறந்து வரவேண்டியவர்களின் எவ்விதமான தன்மைகளும் இப்போது நமக்குத் தெரியாவிட்டாலும் இப்போது அவர்கள் எம்மோடுதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதேபோல் நாம் பிறந்து வெளியாவதற்குமுன் ஆதம்(அலை) அவர்களோடுதான் இருந்திருப்போம் என்பது உண்மை.

இல்லாத ஒன்று வராது (இருப்பதாகாது). இருப்பது இல்லாததாகாது. அதாவது இருப்பது மாறுபாடடையலாமேயன்றி இல்லாதது இருப்பதாகாது. இந்தத் தத்துவத்தின்படி நாம் சூட்சும நிலையிலிருந்து இப்போது பௌதீக நிலைக்கு வந்துள்ளோம். பௌதீகநிலையிருந்து விடுபட்டால் முன்போல் சூட்சும நிலையைப் பெறுவோம். எனவே உடல் (மண்தண்ணீராய்) மாறுபாடடைந்தாலும் நான் என்றுணரும் நாம் இருக்கத்தான் போகிறோம்.

இனிமேல் வரவேண்டியவர்களும் இப்போதிருப்பவர்களும் இதற்குமுன் வாழ்ந்து முடித்தவர்களும், வெளியாவதற்குமுன் எம் தந்தை ஆதம்(அலை) அவர்களோடு காலம், இடம், நிறம், தோற்றம், பெயர், பண்புகள், எதுவுமே இல்லாதவர்களாக, நான், நான் என்ற தனித்தனி உணர்வுகூட இல்லாதவர்களாகவேதான் இருந்திருப்போம். இனிமேல் வரவேண்டியவர்களும் இப்போது எம்மோடு, எந்தக் கண்டிப்பும், நான் என்ற உணர்வும்கூட இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். இது எம்முடைய அறிவுக்குத் தென்படவே செய்கிறது. ஆனால் காலம்வரும்போது எம்மில் இருந்து பிறந்து வெளியாகிக் காலத்தினாலும் இடத்தினாலும் வேறுபட்டு நான், நான், என்ற தனித்தனி உணர்வுடையவர்களாய் வாழ்வார்கள் என்பது நிச்சயம். அப்படியானால் இனிமேல் வரவேண்டிய ஒவ்வொருவரும் உணர்கிற நான் என்னும் உணர்வும், இப்போது நானென்று உணரும் நம்மோடுதான் இருக்கவேண்டும். இதேபோல இப்போதிருக்கிற, இதற்கு முன் சென்றுபோன, இனிமேல்வரப்போகிற அத்தனைபேருடைய, நான், நான் என்றுணர்ந்த, உணர்கிற தனித்தனி உணர்வுகள் எல்லாம் ஒன்றாய் ஓர் உணர்வாய் ஆரம்பத்திலிருந்து ஆதிமனிதனுடைய உணர்வாகத்தானே அப்போது இருந்திருக்கவேண்டும்.

ஆனால் நாம் அந்த ஆதி மனிதரில் இருந்து வெளியானபின் ஒவ்வோருவருமே தனித்தனியாக நான்வேறு அவன்வேறு என்று ஏன் உணர்கிறோம்? நம் அறிவுக்கு இப்போது இது விளங்காவிட்டாலும் இதில் ஏதோ ஓர் நுட்பம், ஏதோ ஓர் இரகசியம் இருக்கத்தான் வேண்டும். அந்த இரகசியமான நுட்பம்தான் காலம், இடம் என்ற மிகப்பெரிய (திரைகள்) கட்டுப்பாடுகள் ஆகும், நாம் ஆதி மனிதரில் மறைந்தவர்களாய்க் கட்டுப்பாடற்றவர்களாய் காலம் இடம் என்ற திரைகளில் சிக்குண்ணாமல் இருந்தபோது, ஆதி மனிதனோடு வேறுபாடே இல்லாத, ஆதி மனிதனாகவேதான் இருந்தோம். காலத்தினாலும் இடத்தினாலும் வேறுபட்டு நாம் வெளியானபிறகு ஆதிமனிதர் பல ஆயிரவருடங்களுக்கு முந்தியவர் என்றும் நாம் பிந்தியவர்கள் என்றும் கூறுகிறோம். உணர்கிறோம். ஆதிமனிதர் சுவர்க்கத்தில் வாழ்ந்தவர், நாம் உலகில் வாழ்பவர்கள் என்கிறோம். அவர் நெட்டையர் நான் குட்டையன், அவர் வெண்நிறமானவர், நான் கருநிறமானவன், அவருடைய காலம் வேறு என்னுடைய காலம்வேறு என்ற ஒவ்வோர் பண்பையும் வெவ்வேறாகத் தனித்தனியாகவே காண்கிறோம்.

இப்படி ஏன் நாம் நம்புகிறோம்? நாம் காலத்திலும் இடத்திலும் புலன்களுடைய ஆட்சியிலும் கட்டுண்டு எம் சுயநிலையை, ஆதிநிலையை, அறிவினால் எத்திக் கொள்ளமுடியாமல், மறதியாளர்களாய் மாறியிருப்பதனால்தான். இதைத்தான் வஹ்மு என்றும் பேதபுத்தியென்றும் மருட்சியென்றும் மறதிமாய்கையென்றும் குர்ஆன் ஹதீஸ்கள் விபரிக்கின்றன. இன்னும் சிறிது சிந்தனை செய்துபார். முன்பு ஒரு காலத்தில் சூரியனிலிருந்து வெடிப்புண்டு பறந்து குளிர்ச்சியடைந்தவைதான் சூரியகுடும்பத்தைச் சேர்ந்த கிரகங்கள் என்றும் அவற்றில் ஒன்றுதான் நாம் வாழும் பூமியென்றும் கேட்டுப்படித்து அறிந்திருக்கிறோம். இதுவிஷயம் உண்மையானதாய் இருக்கட்டும். அல்லது பொய்யாகவே இருக்கட்டும். பரவாயில்லை. சூரியனாய் இருந்த பொருள் அதற்கு முன்பிருந்த இன்னும் ஏதோ ஒன்றிலிருந்துதான் தோன்றியிருக்க வேண்டும். இதேபோல் சிந்தனை செய்தால் ஒரு புகைநட்சத்திரம் ஆதியிலிருந்து வெடிப்புண்டு பறந்ததால்தான் சர்வகிரகங்களும் தோன்றியிருக்கின்றனவென்றும் புகைநட்சத்திரத்தின் ஆரம்பநிலை தெரியாது என்றும் விஞ்ஞானம் அனுமானித்துத் தீர்ப்புக்கட்டியிருக்கிறது.

ஆயினும் நாம் எம்முடைய பகுத்தறிவை உபயோகித்துச் சிந்தனை செய்தால் (அறிவு எட்டும் வரையிலும் ஆராய்ந்தால்) எம்முடைய அறிவுக்கெட்டாத ஏதோ ஒன்றிலிருந்துதான் ஆரம்பம் உண்டாகியிருக்க வேண்டும். அந்த ஆரம்பப் பொருளில் இருந்துதான், இதற்குமுன் அழிந்தவையும் இப்போதிருப்பவையும் தோன்றியிருக்க வேண்டும். அந்த ஆரம்பப் பொருள், மனித அறிவுக்கெட்டாத இனம் தெரியாத அந்தப் பொருள் ஒன்றாகத்தான் இருந்திருக்க வேண்டும். அதையன்றி வேறு எதுவும் அதனுடன் இல்லாத தனிப் பொருளாகவே இருந்திருக்க வேண்டும். இதை நாம் விளங்கிக் கொள்வதற்காகப் பொருள் என்றே கூறிக்கொள்வோம். மேலும் அந்த இனம் தெரியாத ஆதிப்பொருள் ஒன்றுமட்டுமல்லாமல், எதன் தேவையும் அற்றதாய், உண்டானது, உண்டாயிருப்பது, உண்டாக வேண்டியது அத்தனையையும் தன்னுள் அமைத்துக்கொண்ட பூரணமுடையதாகவே இருந்திருக்க வேண்டும். அதையன்றிப் பிறிதொன்றில்லாமல் இருப்பது இடத்திலோ காலத்திலோ இலக்கத்திலோ கட்டுப்படாத ஏகமாகவே இருக்கும். இதை ஒன்றென்று கூறுவது தவறாகும். எனினும் எல்லோரும் இலகுவாய் விளங்கிக் கொள்வதற்காக ஒன்று என்ற சொல்லை தற்காலிகமாகப் பாவிப்போம். அப்படியானால் இப்போதுள்ள யாவும் நல்லவை, கெட்டவை எவையாய் இருப்பினும் அந்த இனம் தெரியாத மூலப்பொருளில் இருந்துதான் வெளிப்பட்டவையாக இருக்க வேண்டும். அதாவது இப்போதுள்ள நல்லவர்கள், கெட்டவர்கள் யாவரும் ஆதி மனிதரில், ஆதி மனிதராகவே இருந்ததுபோல, இனம்தெரியாத ஆதிப்பொருளின் ஆரம்ப நிலையில், வெளியான, வெளியாக

வேண்டிய அத்தனையும் மூடுதலாய் கட்டுண்டு விபரமே இல்லாமல் இருந்த சுயநிலையை “அமா” என்று கூறப்படும். (இதன் விபரம் பின்னால் தருவேன்).

இந்த இனம்தெரியாத ஆரம்பப்பொருள் மனித அறிவுக்கு எட்டாததாக. இனம் காணமுடியாததாக, பௌதீக, சூச்சும தன்மைகளில் எதிலுமே கட்டுண்ணாததாக, நீளம், அகலம், கனம், நிறம், தோற்றம், பெயர், பண்பு, எதிலும் சிக்குண்ணாததாக இடம் காலங்களுக்கு அப்பாற்பட்டதாக, நாம் கூறிய எல்லாத்தன்மைகளையும் தன்னுள் பொதிந்து கொண்டதாகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் மனித அறிவில் கட்டுண்ண (எத்தக்கூடிய) ஒன்று தேவையுடையதாய்க், குறைவுடையதாய், இதற்குமுன் வேறொன்றில் இருந்து வெளியானதாய்த்தான் இருக்கும். ஆகவே இந்த இனம் தெரியாத பொருளை நாம் விளங்கிக்கொள்வதற்காகப் பொருள் என்று கூறினாலும் இந்தச்சொல் பொருத்தமானதேயில்லை. இது மனித அறிவுக்கு எட்டாமல் வருணனைகளுக்கு அப்பாற்பட்டிருப்பதால் இதை இந்துக்கள், கடவுள் என்றும் அனீர்வசனீயமென்றும் கூறுகிறார்கள். கடவுள் என்றால் உள்ளுதலை (உள்ளத்தால் சிந்திப்பதை)க் கடந்தது என்பதே கருத்தாகும். அனீர்வசனீயம் என்றால் வசனிக்க, பேச, உரையாடி விளக்கமுடியாதது என்பதே கருத்தாகும்.

இதை முஸ்லீம்கள் தாத்து, உஜுது, ஹக்கு என்றெல்லாம் கூறுவார்கள். இச்சொற்களின் விபரம் விபரிக்கப்பட வேண்டியிருப்பதால் அவற்றைப் பின்னால் நோக்குவோம். ஆனால் எம்முடைய அறிவுக்கேற்றபடி நாம் எப்பெயரைக் கூறினும், நாம் கூறும் அந்த ஆரம்ப நிலைமைக்கு (மர்த்தபாவுக்கு) எவ்வித நாமமும் பொருந்தாது. அவ்வளவு தூய்மையானது. மனித அறிவில் இந்த நிலைமை எட்டாது என்பதற்காக இவ்விடத்தை நீங்கள் ஆராய்தல் செய்ய வேண்டாம் என்று குர்ஆன், ஹதீஸ்கள் விபரம் தருகின்றன. ஆகவே இந்த உயர்ந்த நிலைமையை நாம் தாண்டிச் செல்லமுடியாமல் இருப்பதால் இதன் கீழுள்ள விஷயங்களையே நாம் ஆராய்வோம். இந்தக் கீழ் நிலைமைகள் மனித அறிவுக்கு எட்டக்கூடியவைதான்.

இப்போது நாம் தெரிந்துகொண்ட இனம் தெரியாத ஆரம்பப் பொருள் ஒன்றாகவேயன்றிப் பலவாக இருந்திருக்க முடியாது. ஏனென்றால் பலவாக இருந்திருந்தால் அதற்குமுன், பலவாயிருப்பவை வேறு ஏதோ ஒன்றிலிருந்தே தோன்றியிருக்கும். மேலும் பலவாக இருந்திருந்தால் இயலாமை (சக்தியின்மை) என்ற குற்றமுடையவையாகவே இருக்கும். பலவாக இருப்பவை ஒரேவித ஒரே அளவுடைய சக்தியாய் இருந்திருந்தால் பல என்ற கூறுவது பிழையாகும். (நுட்பமாய் உணர்க) ஆகவே ஆதியில் இனம் தெரியாமல் இருந்த, இருக்கிற பொருள் ஒன்றேதான் என்பதில் எமக்குச் சந்தேகமே இல்லை. விளக்குவதற்காக நான் ஒன்று என்று கூறினாலும் இலக்கத்தில் கட்டுப்படாத ஏகம் என்று கொள்ள வேண்டும்.

## (5)

சர்வபிரபஞ்சங்களிலுமுள்ள சர்வசிருஷ்டிகளையும் நாம் நோக்கும் போது அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாய், மாறுபட்டவையாய், ஒவ்வொன்றும் தனித்தனி தன்மையுடையவையாய் எத்தனையோ இனமான வகையான பேதாபேதங்களைக் கொண்டவையாய்த் தனித்தனியாய் இருப்பதைப் பார்க்கிறோம். எண்ணிலடக்கமுடியாத வேறுபாடுகளும் வெவ்வேறு தத்துவங்களும் பண்புகளும் இருப்பதை நாம் தெளிவாகவே காணுகிறோம். ஆனால் இல்லாத ஒன்றுவரவே முடியாது. ஆகவே இப்போதிருப்பவை இதற்கு முன்பும் (கண்செவி முதலாம் புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாமல் இருந்தாலும்) இருந்துதான் வெளியாகியிருக்க வேண்டும் இதை முன்பே கூறியுள்ளேன். இப்போது வேறுபட்டிருக்கிற நாம் ஆதிமனிதரில் இருந்ததுபோல் அல்லது சர்வகிரகங்களும் சர்வபொருட்களும் புகைநட்சத்திரத்திலும், புகைநட்சத்திரம் இனம்காணமுடியாத ஆதிப்பொருளிலும் அமைந்து மூடுதலாய் இருந்ததுபோல. இது எமது பகுத்தறிவின் தீர்ப்பாகும். ஏனென்றால் இப்போது இருக்கிற ஒன்று நல்லதாயினும் கெட்டதாயினும் முன்பு ஏதோ ஓர் நிலைமையில் இருந்துதானே இருக்கவேண்டும். ஆனால் நிறம் தோற்றம் பெயர் காலம் இடம் மற்றும் பண்புகளும் மாறுபட்டிருக்கலாம். (நுட்பமாய் உணர்க).

ஆகவே சர்வபிரபஞ்சங்களிலுமுள்ள சர்வபொருட்களும் நல்லவை கெட்டவையாய் எவ்வித வேறுபாடுடையவையாய் இருப்பினும் எம்முடைய பகுத்தறிவைக்கொண்டு நோக்கும்போது, ஆதியில் இனம் தெரியாமல் நின்ற, நிற்கும், மூலப்பொருளில் எவ்விதபேதமும் இல்லாமல் ஒன்றாய் ஏகமாய் இருந்துதான் வந்து இருக்கவேண்டும்.

அதாவது நெட்டையன் குட்டையன் நல்லவன் கெட்டவன் என்ற வேறுபாடு எதுவுமே இல்லாமல் நாம் எல்லோரும் ஆதிமனிதரில் அமைந்திருந்தது போலவே சர்வசிருஷ்டிகளும் சர்வபொருட்களும் இனம்தெரியாத அந்த மூலப்பொருளில் எவ்விதவேறுபாடுமற்ற நிலைமையில் இருந்துதான் வெளியாகியிருக்க வேண்டும். இப்போது காலமும் இடமும் வேறாய் இருப்பதால், ஒவ்வோர் பொருளும் நான் வேறு நீ வேறு என்று இப்போது உணர்ந்துகொண்டிருந்தாலும் காலத்தையும் இடத்தையும் நீக்கிவிட்டால், முன்பு ஆதியில் யாவரும் யாவும் ஒன்றாய் இருந்தது உண்மைதான் என்பது தெரியத்தானே செய்யும். இது பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் உண்மைதானே. ஆனால் காலத்தையும் இடத்தையும் நீக்குவதும் இவ்வுண்மையை உள்ளத்தில் பதியவைப்பதும்தான் மிகக்கடினம். இன்ஷா அல்லாஹ் இந்தக் கடினமான வேலையை நாம் கையாண்டு வெற்றி காணுவோம் கவலைப்படாதே.

இப்போதுள்ள வெவ்வேறு தன்மைகளையுடைய ஒவ்வோர் பொருளும் வெளியாவதற்குமுன் இடமும் காலமும் சிருஷ்டிகளைப் போல் சிருஷ்டிக்கப்பட்டவைதானே! அப்படியானால் காலமும் இடமும் சர்வசிருஷ்டிகளும் சிருஷ்டிக்கப்படுவதற்குமுன்பு (காலத்துக்கு முன்பின்னென்ற வரைவிலக்கணம் இல்லையென்றாலும் விளக்கத்துக்காக முன்பு என்று கற்பனைபண்ணிக் கொள்) தங்களைத் தங்களே அறியாதவர்களாய் அந்த ஆதிப்பொருளோடு எவ்வித வேறுபாடுமற்ற ஆதிப்பொருளாகவே ஒன்று என்ற நிலைமையில்தானே இருந்திருக்கும். ஆகவே அந்த ஆதியான மூலப்பொருள் காலத்தையும் இடத்தையும் சர்வசிருஷ்டிகளையும் தன்னுள் பொதுவாய் அமைத்துப் பொதிந்துகொண்டதாய் எதன்தேவையும் அற்றதாய்த், தனித்ததாய், வேறோர் இடமோ காலமோ தன்னைவிடவேறாக இல்லாததாய்த்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் இவ்வளவு நிரப்பமும் பரிசுத்ததன்மையும் எதன் தேவையும் அற்றதாய் இருந்த, இருக்கிற ஒன்று, இடமாய்க், காலமாய், சிருஷ்டியாய், நல்லதாய், கெட்டதாய் ஏன் வெளியாக வேண்டும்? வெளியானது என்றால் முதலில் வெளியாகாமல் மறைவாய் இருந்தது என்றல்லவோ முடியும்? என்று எமது அறிவு கேட்கிறது. இதற்குப் பொறுமையாய் விடைகாண்போம்.

**ஹதீஸ்:** ***நாயகமே! சிருஷ்டிகளைப் படைப்பதற்குமுன் அல்லாஹ் எங்கிருந்தான் என்று நான் கேட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அமாவில் (அவனுடன் ஒன்றுமில்லாத நிலைமையில்) இருந்தான். அவனுக்குக் கீழே காற்றும் இல்லை. மேலே காற்றுமில்லை. அன்றி அவன் தன்னுடைய அரியணையை நீரின்மீது படைத்தான் என்று கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூறஜீனில் உகைலிய்யி**(றலி)
**ஆதாரம்: திர்மிதி**

இந்த ஹதீஸை நுட்பமாய் உணரவேண்டும். மேலும் காற்றில்லை, கீழும் காற்றில்லை என்று கூறப்பட்டிருப்பதால் மேல்,கீழ் என்ற இடங்கள் இருந்தன என்று வஹ்முக்கமைவான பொருள்களைக்கொள்ள வேண்டாம் (பொறுமை அடையவேண்டும் விபரம் பின்னால் வரும்).

"அமா" என்றால் அவனுடன் ஒன்றுமே இல்லை என்பது பொருளாகும் என்று யஜீது(றலி) விளக்கம் கூறினார்கள். ஆனால் ஒருசிலர், அமா என்றால் இருள் என்றும் அறியாத நிலைமையென்றும் பலவாறாக வியாக்கியானம் தருகிறார்கள். இவ்விதமான விளக்கங்கள் மருண்ட வார்த்தைகளாகவும் குர்ஆன் ஹதீஸ் பகுத்தறிவுக்கு முரணாயும் இருக்கின்றன. அமாவைப்பற்றிய ஹதீஸ்கள் ஆயத்துக்கள் பல இருப்பினும் இந்த ஓர் ஹதீஸை மட்டுமே இவ்விடத்தில் போதுமாக்குவோம்.

**ஆதியில் இருந்த அந்த மூலவஸ்த்து ஒன்றேயன்றிப் பல அல்ல (ஏகம்) என்பது உன் உள்ளத்தில் பதிய வேண்டும் என்பதற்காக** நான் இன்னும் சிறிது கூற விரும்புகிறேன். ஏனென்றால் இவ்வுண்மை உன் கல்பில் பதியாவிட்டால் தௌஹீதின் சரியான உண்மையை நீ உணர்ந்து கொள்ளவே மாட்டாய் ஆகவே செவிதாழ்த்துவாயாக.

## (6)

**கி**றிஸ்தவர்களுடைய திரித்துவக் கொள்கையின்படி ஸ்பிரீத், சாந்து, பரிசுத்த ஆவி, என்று மூன்று தத்துவங்கள் இருப்பதாக தற்கால கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள். இம்மூன்றும் தனித் தனித் தத்துவங்களே என்றும் சிலர் கூறுகிறார்கள். இதே போல இந்து சமய மக்களிலும் அத்வைதம் அறியாத சிலர் படைத்தல், அழித்தல், காத்தல் ஆகிய மூன்று தொழில்களையும் மூன்று தெய்வங்கள் செய்வதாய்க் கூறுகிறார்கள். இவ்விபரங்களைப் பகுத்தறிவோடு ஆராய்ந்தால் இவையெல்லாம் மனிதனுடைய (வஹ்மினால்) அச்சத்தின் காரணமாய் உருவான தவறான நம்பிக்கைகளே என்பது தென்படுகிறது. ஏனென்றால் இந்த மூன்று தத்துவங்களும் அல்லது தெய்வங்களும் சக்தியின்மை, இயலாமை என்னும் குற்றத்தில் சிக்குகின்றன. எப்படியென்றால் படைப்பவருக்கு அழிக்கவும் காக்கவும் முடியாமல் இருக்கிறது. காப்பவருக்கு படைக்கவும் அழிக்கவும் முடியாமல் இருக்கிறது. அழிப்பவருக்கு படைக்கவும் காக்கவும் முடியாமல் இருக்கிறது. ஆகவே எல்லாவேலைகளையும் செய்ய எல்லோரினாலும் முடியாமல் இருக்கும்போது அவர்களைத் தெய்வங்களாய் அல்லது நிரப்பமான தத்துவங்களாய் எப்படி ஏற்கமுடியும்?

இதேவிஷயத்தை இன்னோர்வகையாய் நோக்குவோம். ஆதியில் இருந்தவை இரண்டு மூலப் பொருட்கள் என்றுவைத்துக்கொள்வோம். ஒன்று உஷ்ணம் (சூடு) என்றும் மற்றொன்று குளிர் என்றும் வைத்துக்கொள்வோம். இவை ஆரம்பப் பொருட்களான மூலப்பொருட்களே என்று கூறும்போது, இவை சக்தியின்மை, இயலாமை, என்னும் குற்றத்தில் சிக்குகின்றன. எப்படியென்றால் உஷ்ணமாய் இருந்தது குளிராயும், குளிராய் இருந்தது உஷ்ணமாயும் மாறமுடியாதனவாய் இருக்கின்றன. சக்தியற்ற ஒன்று பூரணத்தன்மையுடையதாய் இருக்கமுடியாது. உஷ்ணம் பூரணத்தன்மையுடையதாய் இருந்திருந்தால் குளிரை உஷ்ணமாக மாற்றியிருக்கும். குளிர் பூரணத்தன்மையுடையதாய் இருந்திருந்தால் உஷ்ணத்தைக் குளிராக மாற்றியிருக்கும். ஆகவே பூரணத்துவம் உடைய ஒன்றுதான் மிஞ்சும். மிஞ்சுகிற அந்த ஒன்றுதான் ஆரம்பத்திலும் இருந்திருக்கும். அந்த ஆரம்பத்தில் இருந்த ஒன்று உஷ்ணம்தான். அல்லது குளிர்தான் என்று கூறமுடியாததாயும் உஷ்ணம், குளிரென்ற இருதன்மைகளையும் தன்னுள் பொதிந்துகொண்ட தாயும் அவ்விரு தன்மைகளைவிட்டும் பரிசுத்தமானதாயும்தான் இருக்கும். அது ஒரு தன்மையில் உஷ்ணம்போலவும் வேறோர் தன்மையில் குளிர் போலவும் தென்பட்டாலும் **இரண்டல்லாத ஒன்றாகத்தானே இருக்கும்.**

இதேபோல தற்போது சர்வபிரபஞ்சங்களும் ஒன்றுக்கொன்று மாறான ஏதோவெல்லாமாகத் தென்பட்டாலும் இந்தச் சர்வபிரபஞ்சங்களும் அழிந்தொழிந்தால் முடிவாய் மிஞ்சுவது முதலிலிருந்த இனம் தெரியாத அந்த ஒன்றாகத்தான் இருக்கவேண்டும். ஆகவே, மிஞ்சி நிற்கிற அந்த ஒன்றேயொன்றுதானே ஆரம்பத்தில் இருந்திருக்கும். அப்படியானால் தோன்றிமறைகிற சர்வபிரபஞ்சங்களான சர்வசிருஷ்டிகளும் அந்த ஆதிப்பொருளைவிட்டும் வேறானவையாக,**ஆதிப்பொருளைப்போல் நிலையான தனித்தனி உண்மைப் பொருட்களாக இருக்கவே முடியாது.** ஆகவே தோன்றி மறைந்தது நல்லதேயாயினும் கெட்டதேயாயினும் இனம் தெரியாத அந்த மூலப்பொருளில் இருந்தும் வெளியானதாகவேதான் இருக்கும். ஆனால் நாய், பன்றி, மலஜலம் போன்ற அசூசிப்பொருட்களும் மற்றும் எவ்வளவோ சிறப்பான நல்ல பொருட்களும் எம்முடைய அறிவுக்கு வேறுவேறானவையாய்த் தென்படுவதால் இந்த உண்மையை எம்முடைய உள்ளம் திடீரென ஏற்றுக் கொள்ளமுடியாமல் மறுக்கவே செய்கிறது. இந்த உண்மை எம்முடைய அறிவுக்குக் கசப்பாய்த் தென்படுவதால் இதை விளங்கி அறியவும் நாம் முயற்சிப்பதில்லை. இந்த மருட்சி, எம்முடைய புலனாட்சியில் சிக்குண்ட பேதபுத்தியின் விளைவேயல்லாமல் பகுத்தறிவின் வேலையேயல்ல.

இந்த உண்மையைத் தெளிவாய் விளக்கி நாம்யார்? என்பதை எமக்கு உணர்த்துவதற்காக, எம்முடைய வஹ்மை, மறதியை நீக்கி, காலம் இடம் என்ற திரைகளைக் கடந்து எம்முடைய ஆரம்ப நிலையை அடையச் செய்வதற்காகத்தான் கலிமா உபதேசிக்கப்பட்டதாகும். இக்கலிமாவின் உண்மையான விபரம்தான் தௌஹீது ஒருமைப்படுத்தல், ஏகமாக்கல் என்பதாகும். இதை உபதேசிக்க வேண்டும் என்பதற்காகத்தான் மேதைகளான, ஆசிரியர்களான றசூல்மார்களை, நபிமார்களை இறைவன் அனுப்பினான். இன்றும் நபிமார்க்ளைப் பின்பற்றிய ஒருசில நல்லடியார்களை இறைவன் காலாகாலம் வெளியாக்கிகொண்டே இருக்கிறான். நபிமார்களான ஞானமேதைகள் தௌஹீதை உறுதிப்படுத்துவதற்கும் அவ்வுண்மையை மனித உள்ளத்தில் நிலைபெறச் செய்வதற்காகவுள்ள செயல் விளக்கங்களை மக்களுக்கு விபரிப்பதற்காகவும்தான், இறைவனிடமிருந்து வேதங்களைப் பெற்றுத் தந்தார்கள். இந்த வேதங்கள்தான் உண்மையை விளக்கும் சட்டநூற்களாக நீதிபதிகளாக இருந்தன. இவற்றையெல்லாம் ஒன்று திரட்டித் தரப்பட்ட வேதநூல்தான் குர்ஆன் என்பது. ஆகவே, இப்போது நாம் அறிவினால் அனுமானித்த விஷயம் உண்மையா? பொய்யா? என்பதைக்கண்டறிய எம் இமாமான நீதிபதியான குர்ஆனையே முதலில் நோக்குவோம்.

هُوَ الْأَوَّلُ وَالْآخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ ۖ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

57-3 *அவனே ஆதியானவன். அவனே இறுதியானவன். அவனே வெளியாகியிருப்பவன். அவன் சகலத்தையும் அறிந்தவன.*

مَا لَكُم مِّنْ إِلَٰهٍ غَيْرُهُ ۖ

7-85 *அவனைத்தவிர உங்களுக்கு வேறு இலாஹுு இல்லை.*

**இதன்விபரம்:**

நங்கள் அல்லாஹ்வைவிட்டும் வேறாய் நம்புகிற இலாஹுுகள் தனித்தனி உண்மைப் பொருட்களான உஜுுதுகளேயல்ல. உண்மையான இலாஹுு தனி உஜுுதாய் (உண்மைப்பொருளாய்) இருக்கிற அல்லாஹ்வேயாகும். அந்த அல்லாஹ் அவனில் வெளியான வெளிப்பாட்டை (நிறம் தோற்றம் பெயர்களினால் கற்பனையாய், புலன்களின் உணர்வுக்குத் தென்பட்டுத் தோன்றி மறையும் தோற்றங்களை) இலாஹுு என்று பெயரிடவோ குணம் கொடுப்பவை என்று நம்பவோ தனித்தனி உஜுுதுகளாய்க் கொள்ளவோ வேண்டாம். அது ஷிர்க்காகும் என்பதே ஆயத்தின் உபதேசமாகும்.

لَوْ كَانَ فِيهِمَا آلِهَةٌ إِلَّا اللَّهُ لَفَسَدَتَا ۚ

21-22 *வானம்பூமியாகிய அவ்விரண்டிலும் அல்லாஹ் அல்லாத இலாஹுுகள் இருக்குமானால் அவ்விரண்டும் கேட்டை அடைந்திருக்கும்.*

**இதன்விபரம்:**

நங்கள் இலாஹுு என்று பெயர்கூறுகிற சிருஷ்டிகள் (விக்கிரகங்கள்) அல்லாஹ் அல்லாத தனித்தனி உண்மைப் பொருட்களாய் (உஜுுதுகளாய்) மூலப்பொருட்களாய் இருந்தால் அவை ஒன்றையொன்று தாக்கி (ஒன்றின் சக்தி மற்றொன்றை மேற்கொண்டு மிகைத்து) முடிவில் வானம் பூமியாகிய சகலதும் அழிந்திருக்கும். ஆகவே உண்மையான உஜுுதின் வெளிப்பாடான, நிறம் பெயர் தோற்றங்களான ஆதேயதமான வெறும் கற்பனைகள்தான் சிருஷ்டிகளான விக்கிரகங்களேயல்லாமல் அல்லாஹ்வைவிட்டும் வேறான **தனித்தனி உஜுுதுகளான உண்மைப்பொருட்களேயல்ல.** அல்லாஹ் என்ற தனி உண்மைப் பொருளின், சிருஷ்டி என்னும் வெளிப்பாட்டை நீங்கள் அல்லாஹ்வை விட்டும் தனியான உண்மைப் பொருட்களாய் (உஜுுதுகளாய்) நம்பி இலாஹுு என்று பெயரிடுகிறீர்கள். குணம் கொடுப்பவையாய் நம்புகிறீர்கள். இது ஷிர்க்காகும். இந்த மூடநம்பிக்கை அழியாவிட்டால் உண்மையை

உணர்ந்து உங்கள் பூரணத்தன்மையைப் பெறமாட்டீர்கள். ஆகவே அவை வேறான தனி உஜூதுகள் என்பதை விட்டொழித்து அல்லாஹ்வையே நம்புங்கள். அவனையே வணங்குங்கள். எல்லாவல்லமையும் அவனுடையதே என்பதை அறியுங்கள் என்பதே ஆயத்து விளக்கும் உபதேசமாகும்

مَا ٱتَّخَذَ ٱللَّهُ مِن وَلَدٍ وَمَا كَانَ مَعَهُۥ مِنْ إِلَٰهٍ ۚ إِذًا لَّذَهَبَ كُلُّ إِلَٰهٍۭ بِمَا خَلَقَ
وَلَعَلَا بَعْضُهُمْ عَلَىٰ بَعْضٍ ۚ سُبْحَٰنَ ٱللَّهِ عَمَّا يَصِفُونَ

23-91 *அல்லாஹ் சந்ததி எடுத்துக்கொள்ளவில்லை. அவனுடன் வேறு இலாஹும் இல்லை. அவ்வாறாயின் ஒவ்வோர் இலாஹும் தான் சிருஷ்டித்தவைகளைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு ஒருவர் மற்றவர் மீது யுத்தம் புரிய ஆரம்பித்து விடுவார். இவர்கள் வர்ணிக்கும் இவைகளை விட்டும் அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன்.*

இந்த ஆயத்தையும் முன் கூறியதுபோல் தெளிந்த அறிவோடு சிந்தனை செய்துபார். இவ்விதமான ஆயத்துக்களைச் சரியாய், நுட்பமாய் விளங்கிக்கொள்ள ஆற்றல் இல்லாத ஒருசிலர் தான் கலிமாவையும் அதன் தலீல்களான முஹ்கமாத்தான வசனங்களையும் புரட்டமுற்பட்டவர்கள். இதைப்பின்னால் அறிவோம்.

இரண்டு தத்துவங்கள் (இரண்டு மூலப்பொருட்கள்) இருந்தால் அவை ஒன்றையொன்ற தாக்கிக் கொள்ளும் (தாக்கம் ஏற்படும்) என்பதை இக்கால விஞ்ஞானிகள் உணர்ந்துள்ளார்கள் என்பது உண்மைதான். ஆனால் விஞ்ஞான காலத்துக்கு முன்பே இறைவன் தன் திருமறைமூலம் இந்ததத்துவத்தை வெளிப்படையாகவே விளக்கியிருந்தும், எம்முடைய முன்னோர்களில் பலர் இதை உணர்ந்து கொள்ள முடியாமையால், வேதவசனங்கள் மூலம் இறைவன் வெளிப்படுத்திய பேருண்மையை மறுத்தும் புரட்டியும் விட்டிருக்கிறார்கள். இந்தப் புரட்டலுக்கு அறிவ்னத்துக்கு, நாமும் அடிமையானால் நாம் விஞ்ஞான காலமக்கள் என்பதில் அர்த்தமே இல்லை.

சிருஷ்டிகள் அல்லாஹ்வின் நின்றும் உள்ளவையல்ல, அல்லது சிருஷடிகள் அல்லாஹ் அல்லாதவையேதான் என்றால் அச்சிருஷ்டிகளின் மூலப்பொருளை உருவாக்கிய இன்னும் ஓர் அல்லாஹ் உண்டு என்றாகும். ஷிர்க் என்பது இதுதான். குர்ஆன் ஹதீஸ்களைப் பிற்படுத்தி இன்னும் பகுத்தறிவைக் கொஞ்சநேரம் உபயோகிப்போம்.

## (7)

சர்வபிரபஞ்சங்களும் வெவ்வேறாய்த் தென்பட்டாலும் அறிவைக் கொண்டு நோக்கும் போது இந்தச் சிருஷ்டிகளின் ஆரம்ப மூலப்பொருள் (சதுர்ப்பூதங்கள்) மண், தண்ணீர்,காற்று, நெருப்பு, ஆகிய நாலு பௌதீகப் பொருட்களே என்பது தென்படுகிறது. அதாவது எந்த ஓர் சிருஷடியை எடுத்துக்கொண்டாலும் அது மண் தண்ணீர் காற்று நெருப்பு ஆகிய பௌதீகப் பொருட்களின் செயற்கையினாலேயே உருவாகியிருக்கின்றன. ஆகவே சர்வசிருஷ்டிப் பொருட்களும் அழிந்தால் மண், தண்ணீர், காற்று, நெருப்பு ஆகிய நான்கு பொருட்களாகவே மிஞ்சும். இந்த நான்கு பொருட்களும் ஒன்றையொன்று ஆக்கிரமித்தால் (தாக்கினால்) ஆகாயம் மட்டுமே மிஞ்சும். இது உருவமற்றதாகவே இருக்கும். உருவமிருந்தால் இன்னும் மாறுபடும். (நுட்பமாய் உணர்க) ஆகவே, இறுதியாக மிஞ்சுகிற ஆகாயம் வான வெளிதான் என்று நம்பாதே. அப்படி நம்பினாலும்கூட அது சித்தாகாயமாக (மனமாகவே) மிஞ்சும். இதை இப்போது நீ விளங்கிக் கொள்ளமாட்டாய். ஆதலால் வான வெளியென்றே வைத்துக் கொள். இப்போது இவ்வுண்மையை எதிரிடையாய்த் தலைகீழாய் நோக்கி ஆராய்ந்துபார்.

அறிவுக்கெட்டாமல் உருவமும் பண்புமில்லாமல் இருந்த சித்தாகாயத்தில் இருந்து சடஆகாயமும் (வான வெளி என்றே கற்பனை பண்ணிக்கொள்) சடஆகாயத்தில் இருந்து மண், தண்ணீர், காற்று, நெருப்பும், அவற்றின் சேர்க்கையால் சர்வ பிரபஞ்சப் பொருட்களும் தோன்றியிருக்க வேண்டும். ஆகவே இப்போதிருப்பவை எப்படி எப்படி வேறுபட்டிருந்தாலும் சித்தாகாயம் அல்லது சித்தாகாயத்தையே உருவாக்கிய இனம் தெரியாத பெயர்கூற முடியாத ஒன்றிலிருந்துதான் யாவும் உருவாகியிருக்க வேண்டும். இப்போது குர்ஆனைப் பார்.

أَوَلَمْ يَرَوْا۟ كَيْفَ يُبْدِئُ ٱللَّهُ ٱلْخَلْقَ ثُمَّ يُعِيدُهُۥٓ ۚ إِنَّ ذَٰلِكَ عَلَى ٱللَّهِ يَسِيرٌ

29-19 *ஒன்றும் இல்லாதிருந்த சிருஷ்டிகளை அல்லாஹ் எவ்வாறு ஆரம்பத்தில் வெளியாக்கினான் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? பின்னரும் அவைகளை மீளவைப்பான். நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக்க சுலபமானதே.*

وَهُوَ ٱلَّذِيٓ أَنشَأَكُم مِّن نَّفۡسٖ وَٰحِدَةٖ فَمُسۡتَقَرّٞ وَمُسۡتَوۡدَعٞۗ
قَدۡ فَصَّلۡنَا ٱلۡأٓيَٰتِ لِقَوۡمٖ يَفۡقَهُونَ

6-98 *உங்கள் அனைவரையும் ஒரே ஆத்மாவில் இருந்து உற்பத்திசெய்து (தகப்பினிடம்) தரித்திருக்கச்செய்து (கற்பத்தில்) ஒப்படைப்பவனும் அவனே. சிந்தித்து உணரக்கூடிய சனங்களுக்கு வசனங்களை நிச்சயமாக விபரித்தோம்.*

عَلَى ٱلۡإِنسَٰنِ حِينٞ مِّنَ ٱلدَّهۡرِ لَمۡ يَكُن شَيۡـٔٗا مَّذۡكُورًا ① إِنَّا
نَسَٰنَ مِن نُّطۡفَةٍ أَمۡشَاجٖ نَّبۡتَلِيهِ فَجَعَلۡنَٰهُ سَمِيعَۢا بَصِيرًا

76-1, 2 *ஒவ்வோர் மனிதனுக்கும் (வெளியாவதற்கு) முன்னர் ஓர் காலம் செல்லவில்லையா? அதில் அவன் இன்ன வஸ்த்து என்றும் கூறுவதற்கில்லாத நிலைமையில் இருந்தான். கலந்த ஓர் இந்திரியத்துளியைக் கொண்டு நிச்சயமாக நாம் தான் மனிதனைச் சிருஷ்டித்தோம். அவனை நாம் சோதிக்கும் பொருட்டே அவனைச் செவியுடையோனாகவும் பார்வையுடையோனாகவும் ஆக்கினோம்.*

ثُمَّ ٱسۡتَوَىٰٓ إِلَى ٱلسَّمَآءِ وَهِيَ دُخَانٞ فَقَالَ لَهَا وَلِلۡأَرۡضِ ٱئۡتِيَا طَوۡعًا
أَوۡ كَرۡهٗا قَالَتَآ أَتَيۡنَا طَآئِعِينَ

41-11 *வானத்தை சிருட்டிக்கக் கருதியபோது அது ஆவியாய் இருந்தது. அதனையும் பூமியையும் நோக்கி நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் என்னிடம் வாருங்கள், என்று கூறினான் அதற்கவைகள் இதோ நாங்கள் விருப்பத்துடனேயே வந்தோம் என்று கூறின.*

இவ்வாயத்தில் கூறப்பட்ட ஆவி என்பது நீரில் இருந்து வெளியாகும் ஆவிபோல என்றும் என்னிடம் வாருங்கள் என்றதால் அல்லாஹ்வைவிட்டும் வேறிடத்தில் இருந்தன என்றும் விளங்கிக் கொள்ளவேண்டாம். இதை இப்போது உன்னால் விளங்குவது கடினம். பின்னால் விளக்குவேன்.

كَيۡفَ تَكۡفُرُونَ بِٱللَّهِ وَكُنتُمۡ أَمۡوَٰتٗا فَأَحۡيَٰكُمۡۖ ثُمَّ يُمِيتُكُمۡ
ثُمَّ يُحۡيِيكُمۡ ثُمَّ إِلَيۡهِ تُرۡجَعُونَ

2-28 *நீங்கள் அல்லாஹ்வை எவ்வாறு நிராகரிக்கிறீர்கள் உயிரற்றவர்களாகஇருந்தஉங்களை அவனே உயிருள்ள ஜீவனாக்கினான். பின்னும் உங்களை அவனே மரிக்கச் செய்வான். பின்னும் உங்களை அவனே உயிர்ப்பிப்பான். நீங்கள் அவனிடமே கொண்டுவரப்படுவீர்கள்.*

أَوَلَمۡ يَرَ ٱلَّذِينَ كَفَرُوٓاْ أَنَّ ٱلسَّمَٰوَٰتِ وَٱلۡأَرۡضَ كَانَتَا رَتۡقٗا فَفَتَقۡنَٰهُمَاۖ
وَجَعَلۡنَا مِنَ ٱلۡمَآءِ كُلَّ شَيۡءٍ حَيٍّۚ أَفَلَا يُؤۡمِنُونَ

21-30 *(ஆரம்பத்தில்) வானம் (என்றும்) பூமி (என்றும்) இல்லாமல் இருந்ததை நாமே பிரித்தமைத்து நீரைக்கொண்டு ஒவ்வொன்றையும் வாழ்ந்திருக்கச் செய்தோம். அவர்கள் நம்பமாட்டார்களா? (ஈமான் கொள்ளமாட்டார்களா?)*

இந்த ஆயத்தைப் பகுத்தறிவோடு சிந்தனை செய்துபார். வானம், பூமி ஆகிய சகலவற்றையும் படைத்த அஸிஸும் அலீமுமாகிய இறைவன் ஒருவன் உண்டு என்பதையும், சர்வசிருஷ்டிகளையும் படைத்துப் பரிபக்குவப்படுத்தி ஆட்சிபண்ணுபவன் அல்லாஹ்தான் என்பதையும் மூமினும் முஸ்ரிக்கும்கூடப் பூரணமாய் நம்பித்தான் இருக்கிறார்கள். “வானங்களையும் பூமியையும் படைத்தது

யார்? என்று நீர் கேட்பீராயின் அஸீஸும் அலீமுமாகிய அல்லாஹ் தான் என்று அந்த முஸ்ரிக்கீன்கள் கூறுவார்கள்" என்ற குர்ஆனுடைய வசனம் எமக்கு இந்த உண்மையை உணர்த்துகிறது. ஆகவே "வானம் என்றும் பூமியென்றும் இல்லாதிருந்ததை நாமே பிரித்தமைத்து நீரைக்கொண்டு ஒவ்வொன்றையும் வாழ்ந்திருக்கச் செய்தோம். அவர்கள் நம்பமாட்டார்களா?" என்ற இந்த ஆயத்து மிகப்பெரிய ஓர் சந்தேகத்தைக் கிளப்புகிறது. அதாவது வானம், பூமியாகிய சகலவற்றையும் படைத்தவன் இறைவனே தான் என்று நம்பியிருந்த சகல மக்களையும், முமீன், முஸ்ரிக் ஆகிய எல்லோரையும் நோக்கித்தான் நம்பமாட்டார்களா? என்ற இறைவன் கேட்கிறான்? ஆகவே இறைவன் கேட்கும் நம்பிக்கை எது?

சகலவற்றையும் படைத்த அல்லாஹ் ஒருவன் உண்டென்று நம்பியிருப்பது நம்பிக்கை (விசுவாசம்,ஈமான்) அல்ல, வேறு ஏதோ ஓர் விஷயம்தான் நம்பிக்கை,ஈமான் என்பது தெளிவாகிறது. ஏனென்றால் அல்லாஹ் ஒருவன் உண்டென்று நம்பிய மக்களை நோக்கியே நம்பமாட்டார்களா? என்று கேட்கப்படுவதால், சகல சிருஷ்டிகளும் அல்லாஹ்வில் "அமா" என்ற நிலையில் இருந்து தற்காலிகமாய் வெளியாகி அழிந்தொழிந்துவிட, முடிவில் இறைவன் மட்டுமே மிஞ்சுவதால் **சர்வசிருஷ்டிகளும் அவனில் அவனுக்காகவெளியாகும் அவனுடைய பண்பு (ஷிபத்துக்) களே என்பதை, சகலமும் அவனே என்பதை, அவனையன்றி ஒன்றுமே இல்லை என்பதை அவனைவிட்டும் சிருஷ்டிகள் வேறுவேறான தனித்தனி உஜுதுகளல்ல என்பதை நம்பமாட்டார்களா? என்பதுதான், இறைவனால் நம்பமாட்டார்களா? என்று கேட்கப்படுவதன் அர்த்தமாகும்.** அதாவது சகலவற்றையும் படைத்த இறைவன் ஒருவன் உண்டு என்பது ஈமானேயல்ல, ஏனென்றால் இது சிருஷ்டிகளுக்களிக்கப்பட்ட ஓர் இயற்கை சுபாவமாகும். அல்லாஹ்வையன்றி ஒன்றுமே இல்லை,**எல்லாம் அவனே என்று நம்புவதுதான் உண்மையான நம்பிக்கையாய்,ஈமானாய் இருக்கிறது என்பதே ஆயத்தின் விளக்கமாகும்.**

இந்த ஆயத்துக்களையும் இவைபோன்ற மற்றும் ஆயத்துக்கள் ஹதீஸ்களையும் பலகண்ணோட்டங்களோடு சிந்தனை செய்யவும். சிருஷ்டிகள் அல்லாஹ்வை விட்டும் வேறானவை என்று கணித்தால் தனியான உஜுதுகள் உண்மைப்பொருட்கள் என்று நம்பினால், இந்த வேத வசனங்கள் யாவும் பொய்யென்றே முடியும். பகுத்தறிவுகூடப் பொய்யாகும். நான் அல்லாஹ்வைத் தவிர வேறு ஒன்றையும் பார்க்கவே இல்லை எனவும்,"என் உள்ளேயிருக்கிற விஷயத்தை நான் வெளியிடுவேனேயானால் ஆழமான கிணற்றில் விடப்பட்ட கயிறு துடிப்பதைப்போல் நீங்களும் துடிப்பீர்கள்" எனவும் அலி(றலி) அவர்கள் கூறுகிறார்கள். "ஏழு வானங்களையும் அல்லாஹ் எவ்வாறு படைத்தான் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? என்ற 71:15 ம் ஆயத்துக்கு நான் விரிவுரை தருவேனானால் என்னைக் கல்லெறிந்து கொன்றுவிடுவீர்கள்" என்று அப்பாஸ்(றலி) அவர்கள் கூறுகிறார்கள்.

ஏன் அப்படிக் கூறுகிறார்கள்? அந்த ஸஹாபாக்களில்கூட மிகஅநேகர் வெளிப்படை அனுஷ்டானங்களில் (ஆரம்பநிலையில்)தான் மூழ்கியிருக்கிறார்கள். றசூல்(ஸல்) அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட சுமார் 10 பேர் மட்டும்தான் உண்மையான தௌஹீதில் நிலைபெற்றவர்களாக, தௌஹீதை விளங்கிக் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆகையால்தான் நான் விளக்குவேனேயானால் என்னைக் கல்லெறிந்து கொன்றுவிடுவீர்கள் என்ற கூறுகிறார்கள். இதிலிருந்து நாம் புரிந்துகொள்ளக்கூடிய உண்மை என்னவென்றால் தௌஹீதை விளங்கித் தெளிவுபெறுவது கடினம் என்பதுதான்.

தௌஹீது என்ற உண்மையைப் பூரணமாய் விளங்கி அறிந்து ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் அக்காலத்திலும் றசூல்(ஸல்) அவர்களுடைய காலத்திலேயும் பெரும்பாலும் இல்லாமல்தான் இருந்திருக்கிறது. ஆகையால்தான் இவ்வுண்மையைப் பெரும்பாலார் வெளிப்படுத்தாமல் விட்டுவிட்டு வெளி அனுஷ்டானங்களை மட்டுமே விளக்கிச் சென்றிருக்கிறார்கள். றசூல்(ஸல்) அவர்களும் இதே காரணத்தினால்தான் அவரவர் அறிவுக்கேற்றபடி வியாக்கியானம் தந்திருக்கிறார்கள். ஆனால் தௌஹீதின் இரகசியங்களை மறைத்தும் தகுதியுடையோருக்கு மட்டும் வெளிப்படுத்தியும் தௌஹீதின் பொது அறிவை எல்லோருக்கும் சமமாய் விளக்கியும்தான் சென்றிருக்கிறார்கள், ஆகவே அறிவுகுறைந்த மக்கள் பெரும்பாலும் வெளி அனுஷ்டானங்களிலேயே மயக்குண்டிருந்ததனாலேயே காலக்கிரமத்தில் தௌஹீது ஷிர்க்குபோலவும் ஷிர்க்கு தௌஹீதுபோலவும் மக்களிடையே மாறிவிட்டது

## (8)

**நா**ம் முன்பு சித்தகாயம் என்று கூறியது உனது கல்பு என்னும் உள்ளத்தைத்தான். இதை இப்போது விளங்கிக்கொள்ள முடியாது என்பது உண்மை. ஆயினும் விஷயத்தைப் பொதுப்படையாய்க் கிரகித்துக்கொள். நான் இருக்கிறேன் என்ற உணர்கிற நீ இந்த அழிந்தொழியும் பௌதீக உடலுக்குள் குடியேறி இருப்பதாய் நம்புகிறாய், அந்த நம்பிக்கை மனித அறிவில் உண்மைதான். ஆனால் ஹக்கான உண்மையோ அப்படியல்ல, சர்வபிரபஞ்சங்களும் உன்னுடைய பௌதீக உடலும்கூட சித்தாகாயமான உன் கல்பிலேயேதான் இருக்கின்றன. இவ்வார்த்தை உன்னை ஆச்சரியப்படுத்தலாம். ஆனால் இப்போது சரி, பிழை கணிக்க முற்படாமல் பேச்சைமட்டும் கிரகிக்கவும், கல்பு, உள்ளம் என்று நாம் கூறுவது உன் இரத்தாசயம்தான் என்று மருளாதே. இந்தப் பௌதீக உடலுக்குள் இருக்கிறேன் என்று நம்பியுள்ள நீ உன்னையும் மற்றும் சிருஷ்டிகளையும் இறைவனையும்கூட உன்னைவிட்டும் வேறானதாய் நம்பியிருக்கிறாய். இந்தப் பிழையான நம்பிக்கையைப் போக்கி உன்னை உனக்கு உணர்த்துவதற்காகத்தான் தௌஹீதுக் கலிமா தரப்பட்டதாகும். நீ உன்னை யார் என்று உணர்ந்து கொள்ளாத வரையில் உன் இறைவனை உன்னால் உணரவோ, உன் பூரணத்தன்மையை அடையவோ

கடைசிவரையிலும் முடியாமலே போய்விடும். உன்னை நீ உணர்ந்துகொள்ளும் நிலைமையின் ஆரம்பம்தான். விளிப்படைதல், மாய்கையிலிருந்து விடுபடல், மௌத்தாகாமல் மௌத்தாகுதல் (தஜற்றுத்து) என்றெல்லாம் கூறப்படுவது.

“தன்னை அறிந்தவன் தன் நாயனையறிவான்” என்ற வசனம் இவ்வுண்மையை நோக்கி கூறப்பட்டதேயாகும். “மாய்கை” என்னும் உறக்கத்தில் இருந்து விழிப்படைதலே மரணமற்ற அமரவாழ்க்கைக்கு வழியாகும் என்று புத்தர் கூறுகிறார். இறைவன் எமக்குத் தாயும் தந்தையுமாக இருக்கிறார் என்றும் நாம் அவருக்காக அவரிலேயே வாழ்கிறோமென்றும் இதை உணர்ந்து கொள்வதே நித்தியவாழ்வு நிலைப்பதற்கு வழியாகுமென்றும் இயேசு(ஈஸா(அலை) கூறுகிறார்கள். கடவுளே வாழ்கிறார், ஆன்மாவே வாழ்கிறது, ஞானம் ஒன்றே வாழ்ந்து கொண்டிருக்கிறது, அதைப்பற்றிக் கொள்க. என்று விவேகானந்தர் கூறுகிறார். உலகிலுள்ள ஒவ்வோர் மதமும் ஒவ்வோர் பெரியாரும் ஒவ்வோர்வகையாக இந்த உண்மையை இயன்றவரை உணர்த்தித்தான் சென்றிருக்கிறார்கள். இவ்விதமான சிற்சில ஆதாரங்கள் ஏறக்குறைய எல்லா மதங்களிலுமே எண்ணிலடக்கிக் கூறமுடியாத அளவு தென்படுகின்றன. ஆயினும் இவ்விஷயத்தில் தர்க்கரீதியான அறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரத்தைக் கூறுவது குர்ஆன் மட்டுமே.

இப்போது பொதுப்படையாய் அறியவேண்டிய உண்மை என்னவென்றால் எம்முடைய பகுத்தறிவின் ஆராய்வினாலும் குர்ஆனுடைய ஆதாரத்தினாலும் **நாம் கண்டறிந்த உண்மை மூலப்பொருளாய் இருந்தது எதுவோ, அதிலிருந்தே யாவும் தோன்றின** என்பது மட்டுமே. ஆயினும் மனிதனுடைய சந்தேகங்கள் இவ்வளவோடு நீங்கிவிடவே முடியாது. மனிதன் சரியாக ஆராயும்போது, தன் அறிவுக்கு விளங்காவிட்டாலும், இருப்பதாய்க் காணுகிற சர்வபிரபஞ்சங்களும், தோன்றி மறையும் ஓர் கனவுக்காட்சியை ஒத்ததே என்பதை மறுக்க முடியாது. எல்லா இலக்கங்களும் ஒன்று என்ற இலக்கத்தில் கட்டுண்டிருப்பது போல எல்லாச் சிருஷ்டிகளும் மூலவஸ்த்துவாயுள்ள ஒன்றிலேயே கட்டுண்டிருக்கின்றன. ஆனால் சர்வபிரபஞ்சங்களையும் தன்புலனுணர்வுகளைக் கொண்டு காணுகிற, அனுபவிக்கிற மனிதன் பேதபுத்தியில் மூழ்கி மறதியாளனாய் மாறியிருப்பதால் ஒவ்வொன்றையும் வெவ்வேறாகவே காண்கிறான். வெவ்வேறு மூலப்பொருட்கள் என்றே நம்புகிறான். மனிதன் இறைவனையும் சிருஷ்டிகளையும் தன்னையும் வெவ்வேறாகவே காண்பதால், உணர்வதால்,**ஷிர்க்கு என்னும் ஓர் உளநோயில் கட்டுண்டுவிடுகிறான். இந்தநோய் அவனையே அவன் உணர்ந்துகொள்ள முடியாதவனாக மாற்றிவிடுவதால் அவன் தன் உயர் நிலையைப் பூரணத்தன்மையை, கமாலியத்தை, சாந்தியை அடையவே முடியாதவனாகிவிடுகிறான். நிரந்தர நரகம் என்பதன் இரகசியம் இதுதான். ஆகையால்தான் ஷிர்க்கு என்பது மன்னிக்கப்பட முடியாத குற்றம் என்று கூறப்படுகிறது.**

## (9)

وَجَعَلُواْ لِلَّهِ أَندَادًا لِّيُضِلُّواْ عَن سَبِيلِهِۦ

14-30 *அவர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் இருந்து (ஜனங்களைத்)திருப்பிவிடும் பொருட்டு அவனுக்கு நித்துக்களை உண்டாக்குகிறார்கள்.*

**அ**ல்லாஹ் தனியான மூலப்பொருள், சிருஷ்டி வேறான மூலப்பொருள் என்ற கொள்கைதான் ஷிர்க்கு என்றில்லாவிட்டால் நித்துக்களை ஆக்குகிறார்கள் என்ற வேதவசனம் பொய்யாய் முடிந்துவிடும். அறபு பாஷையில் நித்து என்பதன் கருத்து “நவுகு” என்னும் ஜாதியில் ஒன்றுக்கு மற்றொன்று ஒத்திருத்தல் என்பதே கருத்தாகும். ஆனால் அறபு முஸ்ரீக்கீன்கள் இந்த இலாஹுகள் அல்லாஹ்வுக்கு ஒப்பானவை. அல்லது அல்லாஹ்வைப் போன்றவை என்று எப்போதும் கூறவே இல்லை.

قُلْ مَن رَّبُّ ٱلسَّمَٰوَٰتِ ٱلسَّبْعِ وَرَبُّ ٱلْعَرْشِ ٱلْعَظِيمِ

23:86 *ஏழுவானங்களை படைத்தவனும் கனம்தங்கிய அறுஸை உண்டாக்கியவனுமாகிய நாயகன் யார்? என்று நீர் (அந்த முஸ்ரீக்கீன்களைக்) கேட்பீரயின் அல்லாஹ்தான் என்று அவர்கள் கூறுவார்கள்.*

இலாஹுகளான சிருஷ்டிகளைச் சிருஷ்டித்த இறைவன் அந்தச்சிருஷ்டிகளுக்கு ஒப்பாக அல்லது சிருஷ்டிகளைப்போல் இருக்கமாட்டான் என்பது எல்லோருக்குமே தெரிந்த ஓர் விஷயம்தான். ஏனென்றால் அவனை ஒப்பிடுவதற்கு ஒப்பிட்டுநோக்கக்கூடிய இன்னோர் பொருள் இல்லை. **ஆகவே நித்துக்களை ஆக்குகிறார்கள், ஒப்பிடுகிறார்கள் என்று இறைவன் கூறுவது அறிவில் மயக்கத்தை உண்டாக்குகிறது.** ஏனென்றால் முஸ்ரீக்குகள் அவர்கள் வணங்கிய விக்கிரகங்களான இலாஹுகளை அல்லாஹ்வுக்கு ஒப்பானவை என்று எப்போதும் சொன்னதேயில்லை என்பதை குர்ஆனே விளக்கம் தருகிறது. ஆகவே ஒப்பிடுகிறார்கள், நித்துக்களை ஆக்குகிறார்கள் என்று இறைவன் கூறுவதை நாம் விளங்கியறிய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.“நித்துக்களை” ஆக்குதல் என்பது இரண்டுவகையாய் இருக்கிறது. ஒன்றை “பஸீத்து” என்று கூறுவார்கள். இன்னொன்றை “முறக்கபு” என்ற கூறுவார்கள். (இது அறபு

இலக்கணவிதியாகும்) இதில் “பஸீத்து” என்னும் ஆக்குதலுக்கு ஒரே செயப்படுபொருள் போதும். இந்த விதிக்கு குர்ஆனில் உதாரணம்:

அவன் இருட்டையும் வெளிச்சத்தையும் ஆக்கினான்.

“பஸீத்து” என்னும் ஆக்குதலுக்கு மேற்காட்டிய உதாரணமே போதுமானது.

அடுத்தது “முறக்கபு” என்னும் ஆக்குதலுக்கு இரண்டு செயற்படுபொருள் வேண்டும். அதிலும் அகவாக்கல், புறவாக்கல் என்று இரண்டுவகை உண்டு.

(1)அதாவது ஆக்கியவனுடைய (செய்தவனுடைய) ஆக்கவினை (செயல்) செயப்படுபொருளில் வெளிப்படையாய்த் தெரிந்தால் அதைப் புற ஆக்கல் என்று கூறப்படும்.

(2) அப்படி ஆக்கவினை வெளிப்படையாய்த் தெரியாமல் (செயப்படு பொருளில் வெளியாகாமல்) ஆக்கியவனுடைய (செய்தவனுடைய) அகத்தில் (உள்ளத்தில்) மட்டும் நடைபெறுவது அகவாக்கல் (உள்ளத்தின் ஆக்கல்) என்று கூறப்படும்

இவ்விரண்டு ஆக்குதல்களின் புறஆக்கலுக்கு குர்ஆனில் உதாரணம்

جَعَلَ ٱلشَّمْسَ ضِيَآءً وَٱلْقَمَرَ نُورًا

10-5 *சூரியனைப் பிரகாசமாகவும் சந்திரனை ஒளியாகவும் ஆக்கினான் என்பதே.*

அகவாக்கலுக்கு குர்ஆனில் உதாரணம்:

وَجَعَلُوا۟ لِلَّهِ أَندَادًا لِّيُضِلُّوا۟ عَن سَبِيلِهِۦ

14-30 *அவர்கள் அவனுக்கு நித்துக்களை (சமமானவர்களை)ஆக்குகிறார்கள், என்பதே*

இந்த வசனத்தில் அகவாக்கல் இருப்பது எப்படியென்றால், முஸ்ரீக்குகள் இலாஹுகளை அல்லாஹ்வைவிட்டும் வேறானவையாக அகத்தில் (உள்ளத்தில்) நினைக்கிறார்கள். ஆகவே உள்ள ஒரே வஸ்த்துவைத் தங்கள் அகத்தில் (உள்ளத்தில்) பலவஸ்த்துக்களாக ஆக்கியவர்களாய் விடுகிறார்கள், அதாவது உள்ள ஒரே பொருளை இரண்டு பொருளாய்க் காணுகிற சாரக் கண்ணனைப்போல, ஹக்காயுள்ள ஒரே உண்மைப் பொருளை இரண்டாய் அல்லது பலவாய் அவர்களுடைய அகத்தில் (உள்ளத்தில்) காண்கிறார்கள் என்பதே. சாரக்கண்ணன் ஒரு சந்திரனை இரண்டாகக் காணுவதால் சந்திரனுக்கு ஒரு “நித்தை” உண்டாக்குகிறான். அதாவது சந்திரன்போன்ற ஒன்றை, சந்திரனுடன் இருப்பதாக அவனுடைய உள்ளத்தில் காணுகிறான். இதேபோல் முஸ்ரிக்குகள் அல்லாஹ்வுடைய உஜூதில் (உள்ளமையில்) அவனுக்கு நித்துக்களை (ஒப்பானவர்களை) அவர்களுடைய உள்ளத்தில் ஆக்குகிறார்கள். இன்னும் விபரமாய்க் கூறினால், இலாஹுகள் அல்லாஹ்வுடைய (ஷிபத்து ஆதேயம்) தோற்றங்களாகவே இருக்கும்போது, அவைகளை அல்லாஹ்வை விட்டும் தனியான (உஜூதுகள்) உண்மைப்பொருட்கள் என்று நம்புவதால் அல்லாஹ்வுடன் வேறு ஒப்பானவர்கள், இணையானவர்கள், சமமானவர்கள் உண்டென்று அவர்களுடைய அகத்தில் (உள்ளத்தில்) ஆக்கிக்கொள்கிறார்கள்.

அதாவது ஒன்றை இரண்டாய்க்காண்பது போல உண்மைப் பொருளான இறைவனுடன் இன்னும் ஏதோ உண்மைப் பொருட்களும் உண்டு என்று உள்ளத்தால் நம்புவது, ஆக்கிக் கொள்வதே ஷிர்க்கு என்றால், தௌஹீது என்பது இதற்கு எதிரிடையாக இருக்கவேண்டும். அதாவது உள்ளது ஒரே உண்மைப் பொருளேயன்றிப் பல உண்மைப்பொருட்கள் இல்லை என்று காண்பதே தௌஹீதாக இருக்கும். ஆகவே, நாம் இப்போது அறிந்துகொண்ட உண்மை சரியானதா? அல்லது பிழையானதா? என்பதைக் கண்டறியப் பகுத்தறிவைக் கொண்டு குர்ஆனையே நோக்குவோம்.

أَجَعَلَ ٱلْـَٔالِهَةَ إِلَٰهًا وَٰحِدًا ۖ إِنَّ هَٰذَا لَشَىْءٌ عُجَابٌ

38-5 *என்னே! இவர் எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹுதான் என்று ஆக்கிவிட்டாரா? மெய்யாகவே இது ஓர் ஆச்சரியமான விஷயம்தான்.*

என்றுதான் முஸ்ரீக்குகள் கூறினார்கள். ஆகவே அவர்களுடைய (வஹ்மு) பேதபுத்திக்குப் பொருத்தமான பொருள் என்னவென்றால் எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹுதான் என்றா நினைக்கிறார்? அதாவது அவை எல்லாமே அல்லாஹ்தான் என்றா நினைக்கிறார்? இந்த எண்ணம் உண்மையானால் இது ஓர் ஆச்சரியமான செய்திதான் என்பதே. ஆனால் உண்மையான பகுத்தறிவிடத்தில் இந்த ஆயத்தின் பொருள் என்னவென்றால் இலாஹுகளையெல்லாம் ஒரே இலாஹுதான் அல்லது எல்லா இலாஹும் அல்லாஹ்வேதான் என்பதை றசூல் (ஸல்) அவர்கள்

திடமாக அறிந்திருந்தார்கள் என்பதேயாகும். அதாவது ஷிர்க்குடையவர்கள் ஒரே உண்மைப் பொருளைப் பல உண்மைப் பொருட்களாய் அவர்களுடைய உள்ளத்தில் கண்டதுபோல்,அவர்களுக்கு நேர்மாற்றமான மூமின் றசூல்(ஸல்) அவர்கள் பல பொய்ப் பொருட்களை ஒரே இறைவனின் தோற்றங்களே என்றும் உண்மைப் பொருள் ஒன்றேயென்றும் அவர்களுடைய உள்ளத்தில் கண்டார்கள். **முஸ்ரிக்குகளின் அக (உள்ள) ஆக்குதலுக்கு மூமின்களின் அக ஆக்குதல் நேர்மாற்றமானதுதானே.** அவை பலவாய்த் தென்படுகிறது வஹ்மு என்ற பேதபுத்தியிலேயே அல்லாமல் பகுத்தறிவிடத்தில் யாவும் ஒன்றின் பிரதிபலிப்பே என்று தான் தென்படும். **இது முஸ்ரிக்கீன்களுக்கும் பேதபுத்தியுடையவர்களுக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கும்.** ஆகவே பகுத்தறிவுடைய மூமின்களிடத்தில் எல்லாவற்றையும் ஒரே உண்மைப்பொருளின் பிரதிபலிப்பாய் கண்டு யாவும் ஒரே உண்மைப் பொருளின் ஒரே தத்துவமே என்று உறுதி கொள்வதுதான் தௌஹீதாயும் சுத்தமான உண்மையாகவும் இருக்கின்றது.

إِنِ ٱلْكَـٰفِرُونَ إِلَّا فِى غُرُورٍ

67-20 *இந்த நிராகரிப்போர் வெறும் மாய்கையிலன்றி வேறில்லை.*

அதாவது இல்லாத ஒன்றை இருப்பதாக கற்பனை பண்ணுகிற மருட்சியில் (வஹ்மில், மாய்கையில்) மூழ்கியிருக்கிறார்கள் என்பதே ஆயத்தின் விளக்கமாகும்.

فَلَا تَدْعُ مَعَ ٱللَّهِ إِلَـٰهًا ءَاخَرَ فَتَكُونَ مِنَ ٱلْمُعَذَّبِينَ

26-213 *ஆதலால் நீர் அல்லாஹ்வுடன் வேறோரு கற்பனைஆண்டவனை அழைக்காதீர், அதனால் நீர் வேதனை செய்யப்படுவீர்.*

இந்த ஆயத்தை யூகித்துபார்? கற்பனையான ஆண்டவன் யார்? என்பதை நோட்டமிடு.

تَٱللَّهِ إِن كُنَّا لَفِى ضَلَـٰلٍ مُّبِينٍ

26-97 *அல்லாஹ்வின் மீது சத்தியமாக நாங்கள் பகிரங்கமான வழிகேட்டில்தான் இருந்தோம்.*

إِذْ نُسَوِّيكُم بِرَبِّ ٱلْعَـٰلَمِينَ ﴿٩٨﴾ وَمَآ أَضَلَّنَآ إِلَّا ٱلْمُجْرِمُونَ

26-98,99 *உங்களை நாம் உலகத்தாரின் இறைவனுக்குச் சமமாக்கிவைத்தோம்.(அதாவது சமமாக, வேறோர் மூலப்பொருளாகக் கற்பனை பண்ணிக் கொண்டிருந்தோம்.) குற்றவாளிகளேயன்றி எங்களை வழிகெடுக்கவில்லை.*

இவ்வாயத்தில் இலாஹுகளையே இறைவனுக்குச் சமமாக்கினோம் என்று கூறப்படுவதன் இரகசியம் என்ன? முஸ்ரீக்குகள் எப்போதும் இலாஹுகள் இறைவன்தான் என்றோ இறைவனுக்குச் சமமானவை என்றோ கூறவில்லை. இந்த இலாஹுகளை அல்லாஹ்விடத்தில் நெருங்கிச் சேர வக்கீலாய் எடுத்துக் கொண்டோம் என்றுதான் கூறினார்கள். இதை 39-3 போன்ற ஆயத்துக்கள் விளக்கம் தருகின்றன. ஆகவே, சமமாக்கினோம் என்பதன் பொருள் ஆலிஹத்துக்கள் அல்லாஹ் அல்லாதவை என்று நம்பியிருந்ததால்,**அவர்களுடைய உள்ளத்தில் ஓர் கற்பனை ஆண்டவனை உண்டாக்கிக் கொண்டார்கள் என்பதே.** அதாவது இலாஹுகள் அல்லாஹ் அல்லாதவை என்று மருண்டதால் அவைகளும் இறைவனுடன், தனியான உண்மைப் பொருள்களே என்று நம்பி இறைவனுடன் அவனைப் போன்ற சமமான உண்மைப் பொருட்களும் உண்டு என்று இணையாக்குகிறார்கள் (சமமாக்கினார்கள்) என்பதே.

(மேலும் 16:151, 4:50 போன்ற மற்றும் குர்ஆனுடைய வசனங்களையும் ஆராய்ந்து தெளிக).

## (10)

“உஜுது” என்ற அறபுச் சொல்லையும் “மவுஜுது” என்ற அறபுச் சொல்லையும் கடினமாய் ஆராய்ந்து விளங்கினால் அவைஒன்றுக்கொன்று பேதம்போல வெளிப்படையில் தென்பட்டாலும் உண்மையாகவே அவ்விரு சொற்களுக்குமிடையில் பேதமில்லை. “றப்பு”“அப்து” என்ற அறபுச் சொற்களும் இதேபோல் எவ்வித பேதமுமில்லாத சொற்களேதான். ஆனால் இதை முறையாய்ச் சிந்தனை செய்து தெளிவு பெறாத வஹ்முடைய மக்கள் இவ்வுண்மையை ஒப்புக்கொள்வதே இல்லை. ஆகவே மனிதரில் பெரும்பாலார் எவ்வித ஆதாரமும் கண்டறியாமலே இவ்வுண்மையை மறுக்கமுற்படுகிறார்கள். இதற்குரிய காரணம் என்னவென்றால். **றப்பை ஓர் தனிமூலப் பொருளாகவும்**

**அப்தை அல்லாஹ் அல்லாத ஓர் தனிப்பொருளாகவும் அவர்களுடைய உள்ளம் பதிவுசெய்து கொண்டிருப்பதுதான். ஆனால் உண்மை என்னவென்றால் உள்ள ஒரேயொரு மூலப்பொருளின் இரு நிலைமைகளுக்கமைவாய் இடப்பட்ட இரு பெயர்கள்தான் றப்பு, அப்து என்ற சொற்களாகும்.** ஆனால் வஹ்முடைய மக்கள் இவ்விரு சொற்களும் இரண்டு தனித்தனிப் பொருட்களை உணர்த்துவதாக நம்புகிறார்கள். ஆகவே அப்து றப்பாகாது. றப்பு அப்து ஆகாது என்கிறார்கள். எப்படி ஆகும்? உள்ளது ஒரேபொருள் நிலைமைக்கேற்ற பெயரைப் பெறும்போது ஒன்று மற்றொன்றாக மாற இரண்டு பொருட்கள் ஏது? (நுட்பமாய் உணர்க). இதை இலகுவாக மனிதன் உணரக்கூடியதாய் இருந்திருந்தால் இத்தனை நபிமார்கள் வரவேண்டியதில்லை. ஆகவே சிருஷ்டி என்பது என்ன? என்ற விபரத்தைப் பொறுமையோடு விளங்கியறிவோம்.

"அப்து" என்ற அறபுச்சொல்லுக்கு அடிமை என்பதே அர்த்தம். றப்பு என்றால் எஜமான் என்பது அர்த்தமாகும். அதாவது அப்து என்பதற்கு எதிர்ச்சொல்தான் றப்பு என்பது. அப்து அடிமையென்றால் எவ்விதமான சுதந்திரமும், நான் என்ற தன்னுணர்வும்கூட இல்லாதது என்பதே அதன் கருத்தாகும். நான் என்று உணர்கிற உணர்வானது இருந்தால். இது "அப்து" அடிமையென்ற பெயரைப்பெறாது. இதே போல் றப்பு என்பது சர்வசுதந்திரமும் எதன் தேவையுமற்ற ஒன்றாகும். மற்றெல்லாவற்றுக்கும் வேண்டிய எல்லாத் தேவைகளையும் (அடிமைக்கு வேண்டிய அத்தனையையும்) தன்னிடத்தே வைத்துக்கொண்டிருப்பதனால்தான் அது "றப்பு" எஜமான் என்ற பெயர் பெறுகிறது. இப்போது சிந்தனை செய்துபார். றப்பு (எஜமான்) என்பது (அப்து) அடிமைக்கு ஆதாரமாய் இருக்கிறது. அப்து (அடிமை) என்பது ஆதாரத்தின் வேண்டுதலுள்ள (தேவையுள்ள) ஆதேயமாய் இருக்கிறது. ஆதேயம் என்பது தோன்றி மறைந்தொழியும் வெறும் நாமமும் நிறமும் தோற்றமுமாகவே இருக்கிறது. இப்படி தோன்றி மறையும் பொருள் குணமேயல்லாமல் குணியல்ல. அதாவது ஆதாரமும் (குணி) றப்பாகவும் ஆதேயம் (குணம்) அப்துவாகவும் இருக்கிறது. இன்னும் கூறினால் எஜமான் என்னும் றப்பு பூரண சுதந்திரமுள்ள ஆதாரமாகவும் அடிமை என்னும் அப்து சுதந்திரமற்ற ஆதேயமாயும் இருக்கிறது. இது மனிதனை மட்டும் பொறுத்த விஷயமல்ல. சர்வசிருஷ்டிகளுமே அப்துவாக (அடிமைகளாக) த்தான் இருக்கின்றன. இதை இன்னும் தெளிவாய்ப் புரிந்து கொள்வதற்காக நீ காணும் கனவைச் சிந்தனை செய்துபார். உன்னுடைய உள்ளத்தை அல்லது ஆத்மாவை றப்பினுடைய இஸ்தானத்தில் வைத்துக்கொள். உன்கனவில் தென்படுகிற சிருஷ்டியை அப்துடைய இஸ்தானத்தில் வைத்துக்கொள். இப்போது சிந்தனை செய்துபார். உன் உள்ளம் அல்லது ஆத்மா பூரண சுதந்திரமுடையதாகவும் கனவில் தென்பட்ட சிருஷ்டி எவ்வித சுதந்திரமுமில்லாமல் உள்ளத்தின் (ஆத்மாவின்) தேவையுள்ள அடிமையாகவும்தான் இருக்கிறது. ஏனென்றால் விளிப்பைப் பெற்றபின் அந்தக் கனவில் தோன்றிய சிருஷ்டி நிச்சயமாக மறைந்தே போய்விடும். ஏன் அப்படி மறைந்து விடுகிறது? அந்தச் சிருஷ்டி உண்மையில் பொருளே அல்ல. வெறும் நாமமும் தோற்றமும் நிறமுமேயல்லாமல் பொருளல்ல. பொருளாய், ஆதாரமாய்க் குணியாய் றப்பாய் இருந்தது மனமேதான். அதேபோல் ஆதேயமாய், குணமாய், அப்தாய் இருந்தது கனவில் வெளியான சிருஷ்டிதான். ஆகவே மனம் அல்லது ஆத்மாவென்ற பொருள் அதன் உண்மையான நிலையில் எஜமானாகவும் (றப்பு ஆகவும்) அதனால் உருவாக்கப்பட்ட சிருஷ்டி என்ற நிலைமையில் அல்லது ஆதேயம் அல்லது குணம் அல்லது ஷிபத் என்ற நிலைமையில் அடிமையாகவும் (அப்துவாகவும்) தென்பட்டது. **ஆகவே உள்ள ஒரே பொருள்தான் நிலைமைக்கேற்றபடி றப்பு என்றும் அப்து என்றும் பெயர் பெற்றதல்லாமல் இரண்டு பொருள் இல்லவே இல்லை. நுட்பமாய் உணர்க.**

ஆதியில் இனம் காணமுடியாமல் அறிவுக்கு எட்டாமல் (நின்ற) இருந்த, இருக்கிற, இருக்கப்போகிற,"உஜூது" என்ற உண்மைப் பொருள் இருந்த அதேநிலைமையில் இருந்துகொண்டு தன்னிடத்தே தனக்காக "மவுஜூது" என்ற உடையில் காலமாய், இடமாய், ஏதோவெல்லாமாய் வெளியாகித் தனக்கே காட்சியளிக்கின்றது. ஆகவே, உஜூது என்ற சொல்லுக்கும் மவுஜூது என்ற சொல்லுக்கும் தொனியில், சொல்லில் பேதமேயன்றிப் பொருளில் பேதமே இல்லை. **பொருள் ஒன்றேயன்றி இரண்டேயல்ல.** சிருஷ்டி என்பதன் பொதுப்படையான விளக்கம் உஜூதில் தோன்றி மறைந்தழியும் அவ்வுஜூதின் கற்பனைகளேயன்றி, உஜூதைப்போன்ற **தனித்தனி உஜூதுகளேயல்ல.** இது பொறுமையாய்த் தெளிவாய் விளங்கிக் கொள்ளவேண்டிய ஓர் விஷயம். ஆனால், ஆச்சரியம் என்னவென்றால் எவ்விதமான ஆராய்வும் தர்க்கரீதியான ஆதாரமும் இல்லாமல் திடீரென மறுப்பதும் உண்மையைக் கண்டறிய முற்படாமல் இருப்பதும்தான். ஏனென்றால் றப்பு என்பதை ஓர் பொருளாகவும் அப்து என்பதை வேறோர் பொருளாகவும் நம்பி உள்ளத்தில் உறுதியாக அமைத்துக் கொண்டிருப்பதுதான்.**இது நூற்கேள்வியினால் ஏற்பட்ட விளைவாகும்.**

றப்பை ஓர் பொருளாகவும் அப்தை றப்பல்லாத இன்னோர் பொருளாகவும் கணிக்கிற மக்கள், சாரக்கண்ணன் ஒரேபொருளை இரண்டாகப் பார்ப்பதுபோல ஒரே உண்மைப் பொருளை இரண்டாய் அல்லது பலவாய்க் காண்கிறார்கள். அவர்களுடைய அகத்தில் இவ்விதமான ஆக்குதலை அறியாமையினால் உருவாக்கிக் கொண்டிருப்பதால் அப்து றப்பாகவோ றப்பு அப்தாகவோ முடியாது என்று பிடிவாதம் கொள்கிறார்கள். **இந்த வஹ்மில் மிகப்பல பட்டதாரிகளான அறிஞர்களும்கூட சிக்குண்டிருக்கிறார்கள். இந்த விதமாக உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் தவறான கொள்கைதான் ஷிர்க்கு என்பதன் உண்மை. இந்தத்தவறான எண்ணத்தை நீக்கி ஒன்றைத் தவிர ஒன்றுமே இல்லையென்று உறுதிகொள்வதுதான் ஈமான் என்பதன் உண்மை.** இந்த ஈமானுக்குத்தான் தௌஹீது என்று கூறப்படுவது. இதை விளக்கும் மூலமந்திரம் தான் தௌஹீதுக் கலிமா என்பது.

அப்துவேறு, றப்பு வேறு என்று ஒருசாரார் ஆதாரமேயில்லாமல் கூறுவது சரியா? பிழையா? என்பதை இப்போது இவ்விடத்தில் நாம் ஓரளவு விளங்கிக்கொள்ளவேண்டும். பின்பு ஆதாரங்களோடு தெளிவாய் அறிவோம். ஏதோ ஓர் மூலப்பொருளுக்கு நாம் "மண்" என்று பெயரைச் சூட்டியுள்ளோம். இதே மண் பொருள், பானை என்னும் தோற்றத்தில் பெயர் பெறும்போது மண்னென்ற சொல்லுக்கும் பானையென்ற சொல்லுக்கும் (இபாரத்துன்னஸ்) வெளிச்சத்தத்தினால் பேதமுண்டேயல்லாமல் (தலாலத்துன்னஸ்) கருத்தினால் பேதமேயில்லை. மண்தான் பானை, பானை என்பது மண்ணேதான், ஏதோ ஓர் மூலப்பொருள் ஒரு நிலையில் மண் என்றும் இன்னோர் நிலையில் பானை என்றும் பெயரைப் பெற்றதேயல்லாமல் இரண்டு பொருட்கள் இல்லவேயில்லை. இந்த உதாரணம் இறைவனுடைய விஷயத்தில் பொருந்தாது. ஏனென்றால் மண் என்பது விகாரமான தோற்றத்தை அடைந்துதான் பானை என்ற பெயரைப் பெற்றது, ஆனால் இறைவனோ விகாரப்பட்டுத் தோன்றுவதோ பெயர்பெறுவதோ கிடையாது. ஆகவே இவ்வுதாரணம் பொருந்தாது என்பது உண்மை. ஆயினும் சொற்களில் பேதமுண்டு பொருளில் பேதமில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்வதற்கு இவ்விடத்தில் இந்த உதாரணமே போதுமானது.

மனித அறிவினால் பூரணமாய் அறிய முடியாத **ஏதோ ஓர் மூலப்பொருளுக்கு அதன் பண்புகள் நிலைமைகளுக்கேற்றபடி றப்பு, அப்து என்றெல்லாம் பெயர் சூட்டப்பட்டாலும் உண்மையாக உள்ளது ஒரேயொரு பொருள்தான்.** ஆகவே இப்போது இருப்பதாய் தென்படுகிற சகலமும் அவற்றின் உண்மையும் இப்போது எம் அறிவுக்கு விளங்காவிட்டாலும், எல்லாமே அழிந்தொழிவனவாய் இருப்பதாலும், இல்லாமல் இருந்தே நுட்பமாய் உருவானவையாய் இருப்பதாலும் தோன்றிமறையும் யாவும் அந்த உண்மைப் பொருளிலேயே உருவாகி மறைவதாகத்தானே இருக்க வேண்டும். ஆகவே தோன்றி மறையும் சர்வ பொருட்களுக்கும் எம்மால் இடப்படுகிற எப்பெயரேயாயினும் அந்த மூலப்பொருளுக்குடையதாகத்தானே இருக்கும். (நுட்பமாய் உணர்க). வேறோரிடத்தில இதை விபரிப்போம். **ஆகவே மனித அறிவில் அமையமுடியாத ஓர் உண்மைப்பொருளுக்கு இடப்பட்ட பெயர்களில் ஒருசிலதான் றப்பு, அப்து, சிருஷ்டிகர்த்தா, சிருஷ்டி என்ற பெயர்கள். இது ஆச்சரியப்பட வேண்டிய, மறுக்கப்படவேண்டிய ஓர் விஷயமேயல்ல.**

ஆனால், நாம் பரம்பரை பரம்பரையாய் கேட்டுக் கற்று அறிந்த உண்மைக்கு இவ்வுண்மை விரோதமாய்த் தென்படுவதாலும் பலவருட மூடத்தனத்தில் ஊறிப்போய் பேதபுத்தி குடி கொண்டவர்களாய் இருப்பதாலும் ஆராய்வில்லாமல் ஈமானுடைய விஷயத்தைப் பழக்கத்தில் எடுத்துக்கொண்டிருப்பதாலும் இவ்வுண்மையை மறுக்கவும் எதிர்க்கவும் முற்படுகிறோம். எம்முடைய தவறான நூற்கேள்வி அறிவையும் பழக்கவழக்கத்தையும் பிடிவாதத்தையும் அடிப்படையாகக் கொண்டுதான் உண்மையை மறுக்கிறோம் என்பது எமக்குத் தெரிவதே இல்லை. ஆயினும் இவ்விபரத்தைச் செவிதாழ்த்தி கேட்பவர்கள் உடனே ஒப்புக்கொள்கிறார்கள். எனினும் மறுகணத்தில் மறுக்கிறார்கள். இவர்கள் மின்னலில் அகப்பட்ட மக்களைப்போல் இருக்கிறார்கள். இதை இறைவனே குர்ஆனில் விளக்குகிறான். மின்னொளியைக் காணும்போது நடக்க ஆரம்பிக்கிறார்கள். ஆனால் ஒளி மறைந்து இருள் குடிகொண்டவுடனே நின்ற இடத்திலேயே நின்று விடுகிறார்கள். இவர்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள் என்றால் கல்பிலுள்ள திரைகளை நீக்கிக்கொள்ளக்கூடிய அறிவும் உண்மையைக் கண்டறிய வேண்டுமென்ற பூரண அவாவும் சரியான மனோ உறுதியும் இல்லாமல் இருப்பதனால்தான். ஆகவே கலிமா உணர்த்தும் தௌஹீதைப் பெரும்பாலார் மறுப்பதும் எதிர்ப்பதும் ஆச்சரியமே அல்ல.

**ஹதீஸ்:** ***ஒருவன் நரக நெருப்பை நோக்கிச்செல்வதை அல்லாஹ் தடுத்திராவிட்டால் அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்றும் முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்றும்இருதய பரிசுத்தத்துடனே சாட்சி கூறக்கூடியவன் ஒருவனும் இல்லை. என்று றசூல்(ஸல்) அவர்களைத் தொட்டு அனஸ்(றலி) அவர்கள் கூறுகிறார்கள்.***

இந்த ஹதீஸ் முன்பும் தரப்பட்டது.

ஊசியுடைய காதில் ஒட்டகை நுழைவதைவிடக் கடினமான விஷயம்தான் கலிமாவை விளங்கித் தௌஹீதை ஒப்புக்கொள்வது.

இவ்விஷயத்தைப் பல வருடங்கள் சரியான ஆதாரங்களோடு ஆராய்ந்து பார்த்தபோது கலிமத்துல் ஹக்கி ஆசிரியர் மௌலானா அப்துற்றஹ்மான் ஷெய்யத்ஸா குத்புஸ்ஸமான் அவர்கள் கூறியதுபோல் மிகப்பெரும் பட்டதாரிகள், பண்டிதர்கள், எல்லோரிலும் மிகப்பெரும்பாலார் தௌஹீதுடைய விஷயத்தில் மயக்கபுத்தியும், பிடிவாதமும் கொண்டவர்களாய் பின்பற்றல்வாதிகளாகவே தென்படுகிறார்கள். **இவர்களுடைய கிதாபுகளில் மிகப் பெரும்பாலானவை மனித உள்ளங்களுக்குத் தவறான பாதையை உண்மையான பாதையாகவே காட்டிச் சென்றிருக்கின்றன.** இந்தத் தவறான விளக்கங்களைப் பாடமிட்டுக்கொண்ட, ஒலிப்பதிவு நாடாவையொத்த ஒருசில மௌலவிகள் இன்றைக்கும் இந்தத் தவறான பாதையிலேயே மக்களை வழிநடாத்துகிறார்கள். முன்பின் எள்ளளவும் ஆராய்வும் சிந்தனையும் இல்லாமலே பிரசங்கம் செய்கிறார்கள். இது எவ்வளவு அறிவீனம்? தான்தோன்றித்தனமான சட்டங்களில் கட்டுண்டிருப்பதே இதற்குக் காரணம்.

இந்த உண்மையான தௌஹீதை விளங்கித் தெளிவதுதான் ஈமானும் ஒலித்தனத்தின் ஆரம்பமாயும் இருக்கிறது என்பதையும் இந்த உண்மையில் நிலைப்படுவதே மனித வாழ்வு என்பதையும் இந்த உண்மையில் ஊறி ஒன்றிவிடுவதே மனிதனின் குறிக்கோள் என்பதையும் நீயாவது

உணர்ந்துகொள்ளவேண்டும். அறிவுக்கு அப்பாற்பட்டு இருக்கும் ஓர் உண்மைப் பொருள் தானிருக்கும் அதே நிலையில் இருந்துகொண்டு தன்னால் வகுக்கப்பட்ட (மர்த்தபா) நிலைமைகளில் ஒன்றுக்கொன்று வேறுபோல் தென்படும் பல தன்மைகளில் காலமாய், இடமாய், இன்னும் ஏதோவெல்லாமாய்த் தன்னிடத்தே தனக்காக காட்சியளிக்கிறது. இந்த வேறுபாடுகளும் தன்மைகளும் எம்முடைய புலன்கள்மூலம் உறுதிப்பட்டிருப்பதால் நாம் இவ்வுண்மையை, தௌஹீதைக் கசப்பாகவும் பிழையாகவும் காண்கிறோம்.

**தௌஹீது விஷயத்தில் மனிதனுக்கேற்படக்கூடிய அபாரசந்கேங்களை நீக்கி உண்மையை உணர்த்தி நேரான பாதையைக் காட்டக்கூடிய அறிஞர்களும் கிதாபுகளும் இந்த ஸமானில் மிகக்குறைவேயாகும். அதிலும் எம்முடைய நாட்டில் மிகவும் அபூர்வமே.** மனிதனுடைய உள்ளத்தில் இது விஷயமாய் ஏற்படக்கூடிய சந்தேகங்கள் எப்போது நீங்கிவிடுமோ அப்போது வஹ்மாய் இருந்த பேதபுத்தி படுதோல்வியடைந்துவிடுகிறது. பகுத்தறிவு உண்மையான ஈமானை ஏற்றுக்கொள்கிறது. அம்மனிதன் அந்த ஈமானில் உறுதியடைந்து முடிவில் பூரண சாந்தியை அடைகிறான். இறைவனோடு ஐக்கியமாகி விடுகிறான். இதுதான் சுவர்க்கம் என்பதன் சாரம். இதை மனிதருக்கு விளக்கிகாட்டிச் சாந்தியடையக் கூடிய வழிவகைகளை உணர்த்துவதற்காகத்தான் காருண்ய மூர்த்தியாகிய இறைவன் இத்தனை நபிமார்களையயும் கலிமாவையும் அனுப்பியிருக்கிறான்.

ஆனால் சிறுபராயத்தில் எமக்குத்தரப்பட்ட உண்மைக்கு நேர் விரோதமான விபரங்கள், இந்த உண்மைக்கு முற்றும் **மாறான ஓர் கொள்கையை எம்முடைய உள்ளத்தில் உறுதிப்படுத்தி விட்டிருக்கின்றன.** ஆகவே இந்த உண்மையை அறிவு ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஆதாரங்களோடு விளங்கி அறியாமல் இறைவழி செல்லவே முடியாது. வெற்றிபெறவும் முடியாது. ஆகவே நாம் கூறிய இவ்விஷயத்துக்கு குர்ஆன் ஹதீஸுகளில் ஏதும் ஆதாரங்கள் உண்டா? என்பதை முதலில் நோக்குவோம்.

لَآ إِلَـٰهَ إِلَّا ٱللَّهُ

*அல்லாஹ் தவிர இலாஹு இல்லை*

مَا لَكُم مِّنْ إِلَـٰهٍ غَيْرُهُۥٓ

7-85 *உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லை.*

هُوَ ٱلْأَوَّلُ وَٱلْءَاخِرُ وَٱلظَّـٰهِرُ وَٱلْبَاطِنُ ۖ وَهُوَ بِكُلِّ شَىْءٍ عَلِيمٌ

57-3 *ஆதியானவன். அந்தமானவன். வெளியானவன். உள்ளீடானவன். சகலதையும் அறிந்தவன்.*

لَوْ كَانَ فِيهِمَآ ءَالِهَةٌ إِلَّا ٱللَّهُ لَفَسَدَتَا ۚ

21-22 *வானம் பூமியாகிய அவ்விரண்டிலும் அல்லாஹ் அல்லாத இலாஹுகள் இருந்தால் அவ்விரண்டும் கேட்டை அடைந்திருக்கும்*

وَهُوَ ٱلَّذِى فِى ٱلسَّمَآءِ إِلَـٰهٌ وَفِى ٱلْأَرْضِ إِلَـٰهٌ ۚ

43-84 *அவனே வானத்திலும் இலாஹாய்ப் பூமியிலும் இலாஹாய் இருக்கிறான்.*

مَا ٱتَّخَذَ ٱللَّهُ مِن وَلَدٍ وَمَا كَانَ مَعَهُۥ مِنْ إِلَـٰهٍ ۚ إِذًا لَّذَهَبَ كُلُّ إِلَـٰهٍۭ بِمَا خَلَقَ

وَلَعَلَا بَعْضُهُمْ عَلَىٰ بَعْضٍ ۚ سُبْحَـٰنَ ٱللَّهِ عَمَّا يَصِفُونَ

23-91 *அவனுடன் அவனல்லாத யாதொரு இலாஹும் இருப்பதில்லை. அப்படியிருந்தால் அந்த இலாஹுகள்* தங்கள் சிருட்டிகளைக் கொண்டுபோய் ஒருவர் மற்றவர் மீது யுத்தம்புரிய ஆரம்பித்துவிடுவார்.

قُلْ لَّوْ كَانَ مَعَهُۥٓ ءَالِهَةٌ كَمَا يَقُولُونَ إِذًا لَّٱبْتَغَوْا۟ إِلَىٰ ذِى ٱلْعَرْشِ سَبِيلًا

17-42 *அவர்கள் சொல்லுவதுபோல அவனுடன் பல இலாஹுகள் இருந்தால் அந்த இலாஹுகள் அர்ஸையுடைய நாயன் பக்கம்போக ஓர் வழியைத்தேடி இருப்பார்கள்.*

لَوْ كَانَ هَٰٓؤُلَآءِ ءَالِهَةً مَّا وَرَدُوهَا

21-99 *அந்தச்சுவாமிகள் (அல்லாஹ் அல்லாத) இலாஹுகளாய் இருந்தால் அவை நரகத்துக்கு வரமாட்டா*

இவ்விதமான ஆயத்துக்களை புரிந்து கொள்ளாமையால்தான் கலிமாவைப் புரட்டியிருக்கிறார்கள். (விபரம் பின்னால் தரப்படும்)

فَأَيْنَمَا تُوَلُّوا۟ فَثَمَّ وَجْهُ ٱللَّهِ

2-115 *நீங்கள் எங்கு திரும்பினாலும் அல்லாஹ்வுடைய முகம் அங்கு இருக்கிறது.*

وَكَانَ ٱللَّهُ بِكُلِّ شَىْءٍ مُّحِيطًا

4-126 *திடனாக அவன் எல்லா வஸ்த்துக்களையும் சூழ்ந்தவனாய் இருக்கிறான்.*

(இந்தச் சூழ்தல் நீரைக் கிணறு சூழ்ந்திருப்பதைப்போலல்ல. இதன் விபரம் பின்னால் தரப்படும்).

إِنَّمَا ٱللَّهُ إِلَٰهٌ وَٰحِدٌ

4-171 *அல்லாஹ் என்பதெல்லாம் ஒரே இலாஹுதான்.*

لَيْسَ كَمِثْلِهِۦ شَىْءٌ

42-11 *அவனைப் போல் யாதொருவஸ்தும் இல்லை.*

وَٱللَّهُ سَمِيعٌ عَلِيمٌ

2-224 *அல்லாஹ்கேட்கிறவனாயும் அறிகிறவனாயும் இருக்கிறான்*

فَإِنِّى قَرِيبٌ أُجِيبُ دَعْوَةَ ٱلدَّاعِ إِذَا دَعَانِ

2-186 *நிச்சயமாக நான் சமீபத்தில் இருக்கிறேன். என்னை அழைப்பவனுடைய அழைப்புக்கு நான் மறுமொழிசொல்லுவேன்*

قُلْ إِنَّ صَلَاتِى وَنُسُكِى وَمَحْيَاىَ وَمَمَاتِى لِلَّهِ رَبِّ ٱلْعَٰلَمِينَ

6-162 *நீர் கூறும். நிச்சயமாக என்னுடைய தொழுகையும் என் வணக்கங்களும் என் ஜீவியமும் என் மரணமும் உலகத்தோரைச் சிருஷ்டித்துப் போஷித்துப் பரிபக்குவப் படுத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை*

إِنَّ ٱللَّهَ مَعَنَا

9-40 *திடனாக அல்லாஹ் நம்மோடிருக்கிறான்*

وَهُوَ مَعَكُمْ أَيْنَ مَا كُنتُمْ

57-4 *நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களோடு இருக்கிறான்.*

وَنَحْنُ أَقْرَبُ إِلَيْهِ مِنْ حَبْلِ ٱلْوَرِيدِ

50-16 *நாம் இன்ஸானிடத்தில் அவனது பிராண நரம்பிலும் சமீபமாய் இருக்கிறோம்.*

(உடனிருப்பதும் பிராண நரம்பிலும் சமீபமாய் இருப்பதும் இன்ஸான் அவனாகவே இருந்தாலன்றி எவ்வகையிலும் ஒத்துவராது)

مَّن يُطِعِ ٱلرَّسُولَ فَقَدْ أَطَاعَ ٱللَّهَ

4-80 *எவனொருவன் றசூலுக்கு வழிப்பட்டானோ அவன் திடனாக அல்லாஹ்வுக்கே வழிப்பட்டான்.*

(இவ்விதமான ஆயத்துக்கள் இன்ஸானைக் கனப்படுத்துவதற்காகக் கூறப்பட்டவை என்று சிலர் கூறுவது பிழை என்று பின்னால் நிரூபிக்கப்படும். பொறுமை அடையவும்.)

وَمَا رَمَيْتَ إِذْ رَمَيْتَ وَلَٰكِنَّ ٱللَّهَ رَمَىٰ

8-17 *நீர் மண்ணை எறிந்த போது அதை நீர் எறியவில்லை என்கினும் அல்லாஹ்தான் எறிந்தான்*

إِنَّ ٱلَّذِينَ يُؤْذُونَ ٱللَّهَ وَرَسُولَهُۥ

33-57 *அல்லாஹ்வையும் றசூலையும் நோவச் செய்பவர்கள்.*

فَلَمْ تَقْتُلُوهُمْ وَلَٰكِنَّ ٱللَّهَ قَتَلَهُمْ

8-17 *அவர்களை நீங்கள் வெட்டவில்லை. என்கினும் அல்லாஹ் அவர்களை வெட்டினான்.*

يُقْرِضُ ٱللَّهَ قَرْضًا حَسَنًا

2-245 *அழகான கடனாக நீங்கள் அல்லாஹ்வுக்குக்கடன் கொடுப்பீர்களாகில்*

إِنَّ ٱلَّذِينَ يُبَايِعُونَكَ إِنَّمَا يُبَايِعُونَ ٱللَّهَ يَدُ ٱللَّهِ
فَوْقَ أَيْدِيهِمْ

48-10 *எவர்கள் உம்முடைய கையைப்பிடித்து வாக்குறுதி செய்கிறார்களோ அவர்கள் அல்லாஹ்விடமே வாக்குறுதிசெய்கிறார்கள். அவர்களுடைய கைகளுக்கு மேல் அல்லாஹ்வுடைய கைதான் இருக்கிறது.*

இவ்விதமான இன்னும் பல ஆயத்துக்கள் குர்ஆனில் இடம் பெறுகின்றன. இவைகள் கலிமாவின் வியாக்கியானங்களாய் இருக்கின்றன. சிருஷ்டிவேறு சிருஷ்டிகர்த்தாவேறு என்ற நம்பிக்கையை மாய்க்கவேண்டும் என்பதே கலிமாவின் நோக்கம் என்றில்லாவிட்டால் இவ்வேத வசனங்கள் அத்தனையும் பொய்யென்றே முடியும். இறைவன் வீண் விளையாட்டுக்காரனும் பொய் சொல்பவனுமல்ல. குர்ஆன் முஹ்ஜிஸாத்தைச் சேர்ந்தது உண்மையானது. ஆகவே இவ்வேத வசனங்களை உண்மைக்கு மாறாய் விளங்குகிற எம்முடைய அறிவில்தான் ஏதோ கோளாறு இருக்க வேண்டும்.

**இவ்விதமான வேத வசனங்களை விளங்குவதில் சிலர் தப்பர்த்தம் செய்ய முற்படுகிறார்கள்.** எப்படியென்றால்: இவ்வாயத்துக்களிலும் இவைபோன்ற ஹதீஸ்களிலும் கூறப்பட்டுள்ள விஷயங்களை அல்லாஹ்வே செய்தான் என்பது ஹகீகத்தாகிய அந்தரங்கத்தை நோக்குவதாய் இருப்பதாலும் எல்லாச் செயல்களில் வினைமுதலும் அல்லாஹ்வாய் இருப்பதனாலும். **இவைகளை அடியான் செய்தான் என்பது உபசார வழக்காய் இருக்கிறதென்றும் கூறிக்குழப்பி விடுகிறார்கள். இன்னும் சிலர் இவ்விதமான வசனங்கள் அடியானைக் கனப்படுத்துவதற்காகவே குர்ஆன் ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளன என்று கூறுகிறார்கள். இவ்விதமான மருட்சியுடைய வார்த்தைகள் உசூலுடைய காயிதாக்களுக்கு விரோதமாயும் அகராதி அர்த்தத்தின் உண்மைக்கு மாறாயும் இருக்கின்றன.** எப்படியென்றால்:-

செயல்களின் உண்மையான வினைமுதல், அச்செயல்களை எவன் செய்தானோ அவனேதான் என்றும் இச்சையின்றி (விரும்பாமல்) செய்தவன் உபசாரவழக்கினால் மாத்திரமே அவன் வினைமுதலாய் இருக்கிறான் என்றும்உண்மையில் அவன் வினைமுதலேயல்ல என்றும் **உசூலுடைய காயிதாவில் தரிபடுத்தப்பட்டிருக்கிறது.** இந்தக்காயிதாவை ஆதாரமாகக் கொண்டு அநேக பிக்ஹுடைய மஸ்அலாக்கள் பிரிந்திருக்கின்றன. உதாரணமாக,

கொலை, களவு முதலிய குற்றங்களில் ஒருவன் தன் இச்சையின்றிக்கூடி அல்லது செய்து இருப்பானெயானால் அக்குற்றங்களுக்குரிய தண்டனைகள் **அவனைவிட்டு நீங்கிவிடும்.** இந்த விபரம் பகீஹுடைய பட்டதாரிகளுக்குத் தெளிவாய்த் தெரிந்த ஓர்விஷயம்தான். அப்படி அறிந்திருந்தும் கூட இந்த வேத வசனங்களுக்கும் இவை போன்ற ஹதீஸ்களுக்கும் **வலிந்துரைகொள்ள முற்பட்டு உண்மையைப் புரட்டுவதுதான் ஆச்சரியம்.** ஆராய்ந்து பார்க்காமல் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுவதுதான் காரணம். இதைநாம் இன்னும் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

فَلَمَّآ أَتَىٰهَا نُودِىَ مِن شَٰطِئِ ٱلْوَادِ ٱلْأَيْمَنِ فِى ٱلْبُقْعَةِ ٱلْمُبَٰرَكَةِ مِنَ ٱلشَّجَرَةِ
أَن يَٰمُوسَىٰٓ إِنِّىٓ أَنَا ٱللَّهُ رَبُّ ٱلْعَٰلَمِينَ

28-30 *மூஸா(அலை) நெருப்பினிடம் வந்தபோது அவ்வொளியின் வலப்பக்கத்தில் ஓர் மரத்தின் முபாறக்கான ஓர் இடத்தில் இருந்து ஓ! மூஸாவே! திடனாக நான் றப்பில் ஆலமீன் ஆகிய அல்லாஹ்வாய் இருக்கிறேன் என்று கூப்பிடப்பட்டது.*

இந்த ஆயத்தைத் தெளிந்த அறிவோடு சிந்தனை செய்துபார். கூப்பிட்டதும் அச்சொல்லைக் கூறியதும் அந்த மரமேயாகும். ஆகவே (இபாரத்துன்னஸ்ஸினால்) வெளிச்சத்தப் பிரமாணத்தினால் அம்மரம் அல்லாஹ்வின் வேறல்ல என்றும் (தலாலத்துன்னஸ்ஸினால்) கருத்துப் பிரமாணத்தினால் அம்மரம் சிருஷ்டிகளின் வேறல்ல என்றும் இந்த வேத வசனம் விளக்கம் தருகிறது. ஆனால் வஹ்முடைய ஒருசிலர் அந்த மரத்திசையில் நின்றும் கூப்பிடப்பட்டதே அல்லாமல் **மரம் கூப்பிடவில்லை என்று வியாக்கியானம் செய்கிறார்கள்.** எல்லாம் அவனே என்பதை ஏற்றுக்கொள்ள முடியாத அறிவீனம் கல்பில் குடிகொண்டிருப்பதுதான் இதற்குக் காரணம். இப்போது நோட்டமிட்டுப்பார். இறைவனுடைய வசனம் சிருஷ்டியாய் இருந்த மூஸா(அலை) அவர்களுடைய செவியிலேயே விழுந்தது. **சிருஷடியின் செவியில் விழக்கூடிய சொல்லை இன்னும் ஓர் சிருஷ்டிதான் கூறியிருக்க வேண்டும். திரைமறைவிலிருந்து அல்லது அறிவிக்கக்கூடிய** மலக்குகள் மூலமேயன்றி எவருடனும் நேருக்குநேர் இறைவன் பேசுவதற்கில்லையென்று குர்ஆன் கூறுவதை அவர்கள் பார்க்கவில்லையா? ஆகவே **மரம் என்ற திரையில் இருந்தே இறைவன் கூப்பிட்டான் என்பதில் ஏன் சந்தேகம் கொள்ளவேண்டும்? ஏன் தவறான வியாக்கியானம் செய்யவேண்டும்.** உண்மையான தௌஹீதின் இரகசியத்தை உணர்ந்துகொள்ளாத குற்றம்தான். மனிதனுடைய பேதபுத்தி அவனையன்றி ஒன்றுமே இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்ததனால்தான் இவ்விதமான தவறான விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். இப்போதும் தருகிறார்கள்.

**ஹதீஸ்:** ***நீயல்லாத யாதொரு இலாஹும் இல்லை.***

**ஹதீஸ்:** ***முஹம்மதுடைய உயிர் யார் வசமிருக்கிறதோ அந்த நாயகன் மேல் ஆணையாக நீங்கள் நீர்பருகும் பாத்திரத்தைக் கயிற்றில் கட்டி கீழ்பூமியாகிய பாதாளத்துக்கு இறக்குவீர்களாயின் அது நிச்சயம் அல்லாஹ்வின் மேல் விழும். என்று கூறி அதன்பின் ஆதியானவன்,அந்தமானவன், வெளியானவன், மறைவானவன்,என்ற வேதவசனத்தையும் றசூல்(ஸல்) அவர்கள் ஓதினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூஹுரைரா(றலி) அவர்கள் இந்த ஹதீஸை றிவாயத்துச் செய்திருப்பதாக "கரீதத்துல் அஜாயிப்" என்ற கிதாபில் கூறப்பட்டிருக்கிறது. இதே ஹதீஸை லபீது(றலி) அவர்களும் அறிவித்திருப்பதாய் தெரிகிறது. இந்த ஹதீஸின் உண்மை அனுபவமூலமாய் உணரவேண்டிய உண்மையாகும் என்று "தாவீலாத்துன் நஜ்மிய்யா" என்ற கிதாபில் கூறப்பட்டுள்ளது.**

**ஹதீஸ்:** ***நீங்கள் காலத்தை திட்டவேண்டாம். திடனாக காலமாகிறது அல்லாஹ் தானாகவே இருக்கிறது.***

ஹதீஸ்: *திராட்சைப்பழத்தைக்கண்ணியம் வாய்ந்ததென்று கூறாதீர்கள். ஐயகோ! காலத்தின் கேடே என்றும் கூறாதீர்கள். ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ்வே காலமாகும்*

அறிவிப்பாளர்: அபூஹுரைரா(றலி)
ஆதாரம்: புகாரி, முஸ்லிம், அபூதாவூத்

ஹதீஸ்: *நாங்கள் ஓர் பிரயாணத்தில் இருந்தபோது மக்கள் இரைந்து தக்பீர் கூறினார்கள். அப்போது றசூல்(ஸல்) அவர்கள் உங்கள் உயிர்மீது இரக்கம் காட்டுங்கள். ஏனென்றால் நீங்கள் நிச்சயமாகச் செவியுறுவோனையும் பார்ப்போனையும்தான் அழைக்கிறீர்கள். அன்றி அவன் உங்களுடன்தான் இருக்கிறான். மேலும் நீங்கள் எவனை அழைக்கிறீர்களோ அவன் உங்கள் வாகனமானஒட்டகையின் கழுத்தைவிட அருகிலேயே (சமீபமாக) இருக்கிறான். என்ற கூறினார்கள்.*

அறிவிப்பவர்: அபூமூஸா(றலி)
ஆதாரம்: முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ

ஹதீஸ்: *ஹஜறுல் அஸ்வத் என்கிற கல் பூமியில் அல்லாஹ்வுடைய வலதுகையாகும்.*

ஹதீஸ்: *எமன் பக்கத்தில் இருந்து றஹ்மானுடைய நப்ஸை நான் காணுகின்றேன்*

(இந்த இரண்டு ஹதீஸ்களும் எஹ்யாவில் இருந்து எடுத்து எழுதப்பட்டவை)

ஹதீஸ்: *மறுமைநாளில் அல்லாஹ் ஆதம்(அலை) அவர்களின் மகனே! நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன். அப்போது நீ என்னை விசாரிக்கவில்லையே என்று கேட்பான். இறைவனே உன்னை எவ்விதம் நலன் விசாரிப்பது. நீயோ அகிலத்தைப் படைத்து உணவளித்துப் பரிபாலிப்பவனாயிற்றே என்று கூறுவான். நிச்சயமாக என் அடியானாகிய இன்னான் நோய்வாய்ப்பட்டிருந்தான் என்பதை அறியீரோ! நீர் அவனை நலன் விசாரித்திருந்தால் நிச்சயமாக நீர் என்னை அவனிடம் பெற்றுக்கொண்டிருப்பீர் என்பதை அறியமாட்டீரோ என்று ஓர் நீண்ட ஹதீஸ் இருக்கிறது.*

அறிவிப்பாளர்: அபூஹுரைரா(றலி)
ஆதாரம்: முஸ்லிம்

ஹதீஸ்: *இறைவன் மீது ஆணையாக நான் இப்போது "ஹவ்லுல் கவ்தர்" என்னும் தண்ணீர்த் தேக்கத்தைக் காணுகிறேன்.*

அறிவிப்பவர்: உக்துப்னு ஆமிர்(றலி)
ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்

இவைபோல் எண்ணிலடக்கிக் கூறமுடியாத பல ஹதீஸ்கள் தென்படுகின்றன. இந்த ஹதீஸ்களில் தௌஹீதுடைய உண்மை மட்டுமல்லாமல் வேறுபல நுட்பங்களும் தென்படுகின்றன. இவ்விதமான ஹதீஸ்களில் சில, அடியானை அல்லாஹ் புகழ்ந்து கனப்படுத்துவதற்காகக் கூறப்பட்டவை என்றும் வேறு சிலவற்றை நபிமாருக்கு மட்டும் சொந்தமான விஷயங்கள் என்றும் ஒருசாரார் கூறுகிறார்கள். **இது அவர்களுடைய ஆராய்வில்லாத வெறும் பேச்சாகும்.**

மேலே சுட்டிக்காட்டிய ஆயத்துக்கள் ஹதீஸ்கள் போன்றவற்றை ஹக்கும் கல்கும் ஏகம் என்று தெளிவாய் விளக்கம் தருகிற அநேக சுருதிகளைச் சித்தசுத்தியும் ஆராய்வும் இல்லாத ஒரு சாரார் **அவர்களுடைய வஹ்முக்கேற்றபடி புரட்டியிருக்கிறார்கள்.** இதே போல் தௌஹீதை உறுதிப்படுத்த இறைவனால் அருளப்பட்ட அத்தனை வாக்கியங்களையும் இயன்றவரை புரட்டியே இருக்கிறார்கள். ஆயினும் **இது அவர்களால் முடிக்கக்கூடிய ஓர் காரியமேயல்ல.** கலிமா வெளிப்படையாய்ப் பொருள் தரக்கூடியதாய் இருந்தும் அதைப் பொருள் பொருந்தாமல் இடர்படுகிற சுருதிகளில் ஒன்றாக மாற்றியிருக்கிறார்கள். காரணம் அல்லாஹ்வையன்றி ஒன்றுமே இல்லை என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாமல் இருந்தமைதான் இவ்விதமான தவறான கொள்கையிலேயே முஸ்ரீக்குகளும் இருந்தார்கள் என்பதை குர்ஆன் எமக்கு விபரம் தருகிறது. ஆகவே இவர்களுடைய புரட்டல் **முஸ்ரீக்குகளின் கொள்கையை உறுதிப்படுத்துவதாகவே அமைந்துவிட்டது.**

## (11)

"**லா** இலாஹ ஹைறுக" நீயல்லாத யாதொரு இலாஹுும் இல்லையென்று றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸைப் புரட்டர்கள் அவர்களுடைய வஹ்முக்கேற்றபடியே புரட்டி, அல்லாஹ்தான் வணக்கத்துக்குரிய இலாஹு என்றும் மற்ற இலாஹுகள் வணக்கத்துக்குரியவையே அல்ல என்பதும்தான், ஹதீஸின் பொருள் என்று தவறான வியாக்கியானம் செய்கிறார்கள். அதாவது, விக்கிரகங்களான இலாஹுகள் அல்லாஹ் அல்லாதவை என்று நம்பியே றசூல்(ஸல்) அவர்கள் வணக்கத்துக்குரிய நாயகன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்ற கருத்தோடு ஹதீஸைக் கூறியுள்ளார்கள் என்று வியாக்கியானம் செய்கிறார்கள். ஆனால் இலாஹுகள் எங்களை

அல்லாஹ்விடம் நெருக்கிச்சேர்க்கும் என்பதற்காகவே வணங்குகிறோம் என்ற வசனத்தையும், என்னே! இவர் எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹுதான் என்று ஆக்கிவிட்டாரா? என்ற வசனத்தையும் ஹுவல் அவ்வலு போன்ற வசனங்களையும் வஹிமூலம் அறிந்து றசூல்(ஸல்) அவர்கள் தங்கள் வாயினாலேயே எமக்குக் கூறினார்கள் என்பதையும் **இந்தப்புரட்டர்கள் மறந்தேவிட்டார்களா? மார்க்கம் எங்கிருந்து எங்கே போய்விட்டது.** அப்படியானால் மூமின்களுடைய கொள்கைக்கும் முஸ்ரீக்குடைய கொள்கைக்கும் வேறுபாடுதான் என்ன?

**சகோதரனே!**

எம்மிடையேயுள்ள சில உலமாக்கள், நாங்கள் சுமார் 1400 வருடங்களாக இஸ்லாத்தைப்பாதுகாத்து வருகிறோம் என்றும் இதுவரையில் இஸ்லாத்தின் கொள்கைகளில் எதையும் புதிதாய் நுழையவிடாமலே இருந்து வருகிறோம் என்றும் ஓலமிடுகிறார்களே! அதன் உண்மைதான் என்ன? என்பதைச் சிந்தனை செய்துபார். இவ்விதமான, சிந்தனையில்லாத, உலமா என்ற போர்வையிலுள்ள ஒரு சிலர் உண்மையாகவே அபூஜஹ்லுடையவும் அவனைச்சார்ந்த முஸ்ரீக்கீன்களுடையவும் கொள்கை விளக்கத்தையே பாதுகாப்பவர்களாகவும் றசூல்(ஸல்) அவர்களுடைய உண்மையான கொள்கையை மக்களிடையே பிரபல்யமாகவிடாமல் தடை செய்பவர்களாகவும்தானே இருந்திருக்கிறார்கள். இவர்கள் றசூல்(ஸல்) அவர்களுடைய கட்சியை சேர்ந்த உலமாக்களா? அபூஜஹ்லுடைய கட்சியை சேர்ந்த உலமாக்களா? என்பதை நீயே தீர்ப்புக்கட்டிக்கொள். இவ்வகையினரின் சரியான உண்மையைச் சந்தேகநிவர்த்தி என்ற தலைப்பில் விபரித்துள்ளேன். பொறுமையோடு வாசித்துச் செல்வாயாக.

உண்மையை உள்ளபடி விளங்கிக்கொள்ள முடியாமல் குர்ஆன் ஹதீஸ்களைப்புரட்டியுள்ள மக்களை நாம் இன்னோர் கண்ணோட்டத்தோடு நோக்கினால் **குர்ஆன் ஹதீஸ்களில் முனாபிக்கீன்கள் என்று கூறப்படுபவர்கள் இவர்கள்தான் என்பது தீர்க்கமாய் தென்படுகிறது.** ஏனென்றால் இவர்களுடைய வெளிக்கோலமான நடை, உடை, பாவனை அமல்களெல்லாம் மூமீன்களை ஒத்தவையாயும் இவர்களுடைய உட்கோலமான கொள்கைவிளக்கம் முஸ்ரிகீன்களை ஒத்ததாகவும்தானே இருக்கிறது. முஸ்ரிகீன்கள் இறைவனைவிட வேறு மூலப்பொருட்களும் உண்டு என்று நம்பியவர்கள். இவ்விபரம் குர்ஆன் ஹதீஸ்களின் சரியான ஆதாரங்களினாலும் பகுத்தறிவினாலும் ஒலிமார்களின் தெளிவான விளக்கங்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே முஸ்ரிகீன்களின் கொள்கை விளக்கத்தை உறுதிகொண்டவர்களாய், மூமீன்களின் செயல்களை எடுத்துக்கொண்டவர்களாயுள்ள மக்களை முனாபிக்குகள் என்று குர்ஆன் கூறுவது சரியென்றே தென்படுகிறது. ஆனால் இந்த இரண்டும் கெட்டான் நிலையிலுள்ள மனிதன் தான் நேரான பாதையில் செல்வதாகவே நம்பிக்கொண்டிருக்கிறான். 4-143, 5-41 போன்ற ஆயத்துக்களை ஆராய்ந்து பார். விரிவைப் பயந்து இங்கே எழுதப்படவில்லை.

**இவ்விதமான வேதப்புரட்டலுக்கு மிகமுக்கியமான ஐந்து காரணங்கள் தென்படுகின்றன.** இவற்றை அறிவுகுறைந்த மக்கள் விளங்கிக்கொள்வது கடினமாய் இருப்பதால், இதைச்சரியாய் விளங்கிக் கொள்ளக்கூடிய சில விபரங்களை முதலில் விளக்கிக்காட்டியபின், கலிமாவையும் ஆதாரங்களையும் புரட்டியதுயார்? ஏன் புரட்டினார்கள்? என்ற உண்மையைச் சந்தேக நிவர்த்தி என்ற தலைப்பில் கேள்வி பதில் என்ற முறையில் ஆதாரங்களோடு விளக்குவோம். கலிமாவையும் அதன் ஆதாரங்களையும் வஹ்முக்கேற்றபடி புரட்டிக்கொண்ட ஒருசாரார், இந்த முஹ்கமுவான ஆயத்துக்களின் கருத்துப்படி அமல் செய்ய முடியாமலிருப்பதாகவும் கூறுகிறார்கள். இது என்ன அறியாமை? வேதவசனமான குர்ஆனுக்கு மாறாய் (அறிவுக்கேமாறாய்) வஹ்முக்கேற்றபடி தவறான விளக்கங்களைக் கற்பனையாய் ஏற்படுத்திக்கொண்டு அதன்படி செயல்படுவதற்கு **வணக்கம், என்று எப்படிக் கூறலாம்? இந்த அறிவீனமான அமல் எப்படிப் பிரயோசனம் தரும்?**

விலக்கப்பட்ட கனியை அருந்தினால் எக்காலமும் நித்திய ஜீவனோடு இருக்கமுடியுமென்று இப்லீஸ், ஆதம்(அலை) அவர்களுக்கு அறிவுறுத்தினான். அது நல்ல நோக்கந்தான் எனக் கண்ட ஆதம்(அலை) அவர்களும் கனியை அருந்தித் தங்களுக்குத் தாமே தீங்கிழைத்துக்கொண்டார்கள். **ஆகவே, விருப்பம் நல்ல நோக்கோடு இருந்தாலும் அந்த நோக்கம் நிறைவேறுவதற்குரிய வழியைக் கடைப்பிடிப்பதில் தவறு ஏற்பட்டதற்காகவே ஆதம்(அலை) அவர்களுக்குத் தண்டனை ஏற்பட்டிருந்தால், நோக்கம் நிறைவேற்றும் பாதை (தொழுகை முதலாம் அமல்கள்) உண்மையின் அடிப்படையில் இல்லாதவையாயும் இருந்தால், அந்த அமல்களைப்பற்றி நாம் என்னதான் கூறலாம். இவ்விதமான அமல்கள் மனிதனை எங்கே கொண்டு சேர்கிறதென்பதை பகுத்தறிவைக்கொண்டு சிந்தனை செய்துபார்.**

**ஹதீஸ்:** ***எவனுக்கு அல்லாஹ் நன்மை செய்ய நாடுகிறானோ அவனுக்கு மார்க்கத்தைச் சரியான முறையில் அறிந்துகொள்ளும் சக்தியை அல்லாஹ் கொடுக்கிறான் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பாளர்: அனஸ்(றலி)**
**ஆதாரம்: புஹாரி**

ஹதீஸ்: *வணக்கங்களில் (அமல்களில்) சிறந்தது என்ன? என்று றசூல்(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டபோது அல்லாஹ்வைப்பற்றிய அறிவு என்றாகள். எந்த அறிவு என்று திரும்பவும் கேட்டபோது அல்லாஹ் சுப்ஹானஹுவத்தஆலாவைப்பற்றிய அறிவு என்றார்கள். நாங்கள் அமலைப்பற்றிக் கேட்கும்போது தாங்கள் அறிவைப்பற்றி கூறுவதென்ன? என்று மீண்டும் கேட்க அல்லாஹ்வை அறிவதுடனே அற்பவணக்கமும் பிரயோசனம் செய்கிறது. ஆனால் அல்லாஹ்வைப்பற்றிய அறிவீனத்துடனே எந்தவணக்கமும் (அமலும்) பிரயோசனம் செய்யாது என்று பதில் கூறினார்கள்.*

ஹதீஸ்: *மார்க்கத்தை விளங்கி அறிவதைவிடச் சிறந்ததைக்கொண்டு அல்லாஹ்வை வணங்கப்படுவதில்லை. மார்க்கத்தை விளங்கிய ஒருவன் ஆயிரம் வணக்கவாளிகளை (ஆபிதுகளை) விட சைத்தானுடைய விசமத்துக்குக் கடினமாய் இருக்கிறான். ஒவ்வொரு மாளிகைக்கும் தூண் இருப்பதுபோல் மார்க்கத்தின் தூண் மார்க்க விளக்கமாய இருக்கிறது.*

ஹதீஸ்: மூமினாகிய வணக்கவாளியை விட மூமினாகிய அறிஞர் எழுபது பதவி சிறந்தவனாய் இருக்கிறான்.

ஹதீஸ்: *(மார்க்கவிளக்கமுள்ள) அறிஞனுடைய சங்கத்துக்குப் போவது ஆயிரம் ஜனாஸாவுக்குச் செல்வதை விடவும் ஆயிரம் வியாதியஸ்த்தரை வினவுவதை விடவும் ஆயிரம் றக்கஆத் தொழுவதைவிடவும் சிறந்ததாய் இருக்கிறது என்று றசூல்(ஸல்) அவர்கள் கூற குர்ஆன் ஓதுவதைவிடவும் சிறந்ததா? என்று ஒருவர் கேட்டபோது அறிவில்லாமல்குர்ஆன் பிரயோசனம் செய்வதுண்டா? என்று கூறினார்கள்.*

மேலே காட்டிய ஹதீஸ்களை கஸ்ஸாலி(றஹ்) அவர்கள் தங்களுடைய எஹ்யா உலூமித்தீனில் தெளிவாய் விளக்கியுள்ளார்கள். இவைபோன்ற இன்னும் எத்தனையோ ஹதீஸ்கள் இருப்பினும் நாம் இவ்வளவையே போதுமாக்குவோம். ஒருசாரார் குர்ஆன் ஹதீஸ்களை எவ்விதமாகப்புரட்டி வியாக்கியானம் செய்தாலும் அறிவுடையோருக்கு குர்ஆன் ஹதீஸ்கள் உண்மையை வெளிப்படுத்தியே ஆகும் என்பது நிச்சயம். இவ்விதமான புரட்டல் வியாக்கியானங்களுக்கெல்லாம் காரணம் பெரும்பாலார் தௌஹீதை உண்மையின்படி விளங்கிக்கொள்ளாமல் இருப்பதும் நஹ்பு, மஆனி, பயான், பலாகத், உசூல் போன்ற இல்முகளில் பூரண அறிவு இல்லாமையுமேயாகும். இந்த இல்முகளில் பாண்டித்தியமுடையவர்கள் எப்போதும் மதிமாறாட்டமான வியாக்கியானங்கள் செய்ததாகத் தெரியவே இல்லை. அப்படி ஒருசிலர் செய்திருந்தால் அது வஹ்மும் பின்பற்றலுமாகவே இருக்கும்.

"தத்துவ விசாரனையில் கைதேர்ந்த தௌஹீதுவாதியான பக்கா மனிதருடைய வார்த்தைகளை அவ்விசாரணையில்லாத துவிதசித்தாந்தியாகிய கச்சாமனிதன் உணர்ந்துகொள்ளமாட்டான். ஆகவே பேச்சைச் சுருக்குவது அவசியம் வஸ்ஸலாம்" என்று மௌலானா றூமி அவர்கள் மஸ்னவியில் கூறுகிறார்கள்.

அல்லாஹ்வேறு சிருஷ்டிவேறு என்னும் துவித கொள்கையுடைய மனிதர்கள் ஷிர்க் என்னும் உளநோய் உடையவர்களாய் இருக்கிறார்கள. இந்த உளநோயைக் கலிமாவைக்கொண்டு, அதன் விளக்கமான தௌஹீதைக் கொண்டேயல்லாமல் தீர்க்க முடியாது. இந்த உளநோய் தீராத மனிதன் உண்மையான ஞானத்தை ஏற்க முடியாதவனாய், மறுப்பவனாய்த்தான் இருப்பான்.

يَـٰٓأَيُّهَا ٱلنَّاسُ قَدْ جَآءَتْكُم مَّوْعِظَةٌ مِّن رَّبِّكُمْ وَشِفَآءٌ لِّمَا فِى ٱلصُّدُورِ
وَهُدًى وَرَحْمَةٌ لِّلْمُؤْمِنِينَ

10-57 *மனிதர்களே! உங்களுக்கு இறைவனிடமிருந்து ஓர் நல்லுபதேசம் வந்திருக்கிறது, உங்கள் இருதயங்களிலுள்ள நோய்களுக்கு அது ஓர் (சஞ்சீவி) மருந்து ஆகும். விசுவாசம் கொண்டவர்களுக்கு (அது) நேர்வழிகாட்டியாகவும் ஓர் அருளாகவும் இருக்கிறது.*

## (12)

இப்போது குர்ஆனை வேறோர் கோணத்தில் ஆராய்வோம்.

أَلَمْ تَرَ كَيْفَ ضَرَبَ ٱللَّهُ مَثَلًا كَلِمَةً طَيِّبَةً كَشَجَرَةٍ طَيِّبَةٍ أَصْلُهَا ثَابِتٌ وَفَرْعُهَا فِى ٱلسَّمَآءِ

14-24 *(நபியே! கலிமத்துத்தையிபா என்னும்) நல்ல வாக்கியத்துக்கு அல்லாஹ் எவ்வாறு உதாரணத்தைக் கூறுகிறான் என்பதை நீர் கவனிக்கவில்லையா? அது வானளாவிய கிளைகளையும் ஆழப் பாய்ந்த வேர்களையுமுடைய ஓர் நல்ல விருட்சத்துக்கு ஒப்பாக இருக்கிறது.*

وَمَثَلُ كَلِمَةٍ خَبِيثَةٍ كَشَجَرَةٍ خَبِيثَةٍ ٱجْتُثَّتْ مِن فَوْقِ ٱلْأَرْضِ مَا لَهَا مِن قَرَارٍ

14-26 *கெட்டவாக்கியத்துக்கு (கலிமா கபிஸாவுக்கு) உதாரணம் பூமியில் வேர்கள் அறுபட்டு (பட்டுப்போன) கெட்ட மரத்துக்கு ஒப்பாகும். அது நிலைத்திருக்காது.*

இந்த இரு ஆயத்துக்களையும் நோட்டமிட்டால் நல்ல ஒரு கலிமாவும் கெட்ட ஒரு கலிமாவும் உண்டு என்பது தென்படுகிறது. நல்ல கலிமா, பரிசுத்த வாக்கியம். “லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற தௌஹீதுக் கலிமாவேதான் என்பதை நாம் எல்லோரும் பொதுவாகவே ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் கெட்ட (கலிமா) வாக்கியம் ஒன்று உண்டு என்றும், அது கெட்ட மரத்திற்கு ஒப்பானது என்றும் இறைவனே கூறுகிறானே! அது எது? இதை நாம் கண்டறியவேண்டும். இதைக் கண்டறிந்துகொண்டால் இதற்கு நேர்மாற்றமான நல்ல வாக்கியத்தை எம்மால் இலகுவாக உணர்ந்து கொள்ள முடியும். முதலில் எம்முடைய பெரும்பாலான உலமாக்கள் கூறுகிறபடி வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை, அல்லாஹ்வைத் தவிர என்பதே பரிசுத்த வாக்கியத்தின் கருத்து என்பது உண்மையானால் கெட்ட வாக்கியத்தின் கருத்து இதற்கு விரோதமாக இருக்கவேண்டும். அதாவது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரிய வேறு நாயன்களும் உண்டு என்பதே கெட்ட வாக்கியத்தின் கருத்தாக இருக்கவேண்டும்.

இப்போது சிந்தனை செய்துபார். ஆலிஹத்துக்கள் எங்களை அல்லாஹ்விடம் நெருங்கிச் சேர்க்கும் என்பதற்காகவே அன்றி நாங்கள் அவைகளை வணங்குவதில்லை என்றுதான் முஸ்ரீக்கன்கள கூறியிருக்கிறார்கள். இந்த இலாஹுகள் வணக்கத்துக்குப் பாத்திரமான அல்லாஹ்தான் என்று அவர்கள் நம்பியதோ, கூறியதோ கிடையாது. அப்படியானால் எம்முடைய சில உலமாக்கள் கூறுகிற **வணக்கத்திற்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்ற கருத்தே கெட்ட வாக்கியமாக இருக்க வேண்டும்.** ஏனென்றால் கெட்டவர்கள் முஸ்ரீக்கீன்கள் என்பதையும் கெட்ட வாக்கியம் அவர்களுடைய வாக்கியமே என்பதையும் நாமறிவோம். அவர்கள் வணக்கத்துக்குரிய நாயகனான அல்லாஹ் இந்த இலாஹுகள்தான் என்று கூறவேயில்லை என்பதைக் குர்ஆன் அறிவிக்கிறது. அவர்கள் கூறிய அதே பொருளைத்தான் வணக்கத்துக்குரிய நாயகன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்ற வசனம் உறுதிப்படுத்துகிறது. ஆகவே இந்த வாக்கியம்தான் பரிசுத்த வாக்கியத்தின் கருத்து என்று எப்படிக் கூறமுடியும். அதாவது ஒரு மூமின் கூறுவதே பரிசுத்தமானதாயும், முஸ்ரக்குகள் கூறுவதே கெட்டதாயும் இருக்க வேண்டும். இந்த முஸ்ரீக்கீன்கள் கூறியதையே நாமும் உறுதிப்படுத்துவதானால் எமக்கும் அவர்களுக்குமிடையில் பேதம் என்ன? எம்மில் பலர் சிருஷ்டிகள் வணங்கப்படத்தகுதியற்ற அல்லாஹ் அல்லாதவை என்று கூறுவதுபோலவேதான் முஸ்ரீக்கீன்களும் அஸீஸும் அலீமுமாகிய இறைவனை அண்முவதற்காக இவைகளை எடுத்துக்கொண்டோமென்றும் இவை அல்லாஹ்வேயல்ல என்றும்தானே கூறியிருக்கிறார்கள்.

இந்த முஸ்ரீக்கீன்களின் கூற்றை மறுத்துத்தான் றசூல்(ஸல்) அவர்கள் அல்லாஹ் தவிர இலாஹுகள் இல்லை (எல்லா இலாஹும் அல்லாஹ்வேதான்) என்று கூறியிருக்கிறார்கள். இவர்கள் இப்படிக் கூறினார்களாகையால்தான்,“என்னே! எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹுதானென்று ஆக்கிவிட்டாரா?” என்று அந்த முஸ்ரிக்கீன்கள் ஆச்சரியம் அடைந்திருக்கிறார்கள். **ஆகவே றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட அல்லாஹ்தவிர இலாஹுயில்லை என்பதே பரிசுத்த வாக்கியத்தின் அர்த்தமாக இருக்கவேண்டும்.** இதற்கு நேர்மாற்றமான வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வை தவிர என்பதே கெட்ட வாக்கியத்தின் கருத்தாக இருக்கவேண்டும்.

இந்த நல்லவாக்கியம் எக்காலத்திலும் பலனைக் கொடுக்குமென்றும் கெட்டவாக்கியம் பலனைக்கொடுக்காது என்றும் இறைவன் கூறுகிறான். நான் அல்லாஹ்வைவிட்டும் வேறான ஒரு தனி மூலப்பொருளேயல்ல என்று உணர்கிற ஒருவர் என்றோ ஒரு நாள் இறை ஐக்கியத்தைப் பெற்று நாஸ்தியாதல் (அனாநிய்யத்மாய்ந்தொழிதல்) நிச்சயம்தான். இது பகுத்தறிவினால் உணரக்கூடிய ஒரு விஷயம்தான். இந்த நிலைமை பூரணமடையும்போது இறை தத்துவம் அங்கே வெளியாகத்தானே செய்யும். இந்தப் பரிசுத்த வாக்கியத்தில் மூழ்கிய நபிமார்கள், றசூல்மார்கள், ஒலிமார்களில் இருந்து

கறாமத், முஹ்ஜிஸாத் போன்றவையும் இன்னும் ஏதேதோ பலன்கள் எல்லாம் வெளியாகித்தான் இருக்கின்றன. இன்றும் மிக அபூர்வமான ஒருசிலரிடையே ஏதேதோ சிற்சில பலன்கள் கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றன். இவ்வகையினர் அல்லாஹ் வேறு சிருஷ்டிவேறு என்று எப்போதும் சொன்னதாகவோ எழுதியதாகவோ இல்லை. ஆகவே இவ்வகையினர் கூறும் வாக்கியம்தான் பரிசுத்தவாக்கியமாக இருக்கவேண்டும். இதுதான் மணம்கமழும் தையிபா என்னும் வாக்கியமானால் இதற்கு நேர்மாறான, அல்லாஹ்வேறு சிருஷ்டிவேறு என்னும் வாக்கியம்தான் **துர்நாற்றமுடைய கபீஸா என்னும் கெட்டவாக்கியமாக இருக்கவேண்டும்.** இப்போது சிந்தனை செய்துபார். இறைவன் வேறு சிருஷ்டிவேறு என்று கூறிக்கொண்டிருந்த மக்கள் எவரிடமிருந்தேனும் **ஏதாவதோர் நல்லபலன், கறாமத், போன்றவை வெளியானதாக நாம் அறிந்ததுண்டா?**அல்லாஹ் வேறு சிருஷ்டிவேறென்று நம்பிக்கொண்டிருக்கிற மக்களில் எவரேனும் அவர்கள் இருந்துகொண்டிருக்கிற அதேநிலைமையைவிட்டும் **ஆத்மீகத்துறையில் அணுவேனும் உயர்பதவி அடைந்ததுண்டா?** மனிதனுக்கு வேண்டிய அத்தனையும் குர்ஆனில் உண்டு என்பது நிச்சயமான உண்மையே. கலிமத்துதையிபாவை, கலிமத்துல் கபீஸாவாக மனிதன் மாற்றுவான் என்பதை அறிந்துதான் கலிமத்துத்தையிபாவையும் கலிமத்துல் கபீஸாவையும் இறைவன் விபரித்து விளக்கியுள்ளான் என்பது தென்படுகிறதல்லவா?

அடுத்ததாக ஆதியானவன், அந்தமானவன், வெளியானவன், மறைந்தவன் என்ற வேதவசனம் கலிமாவை உறுதிப்படுத்துவதற்காகத் தரப்பட்ட தலீல்களில் ஒன்றாகும். கலிமாவைக் கூறியபின் றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட தலீல்களில் ஒன்றே இவ்வசனம் என்பதை ஏறக்குறைய எல்லா அறிவாளர்களுமே ஏற்றிருக்கிறார்கள். இந்த வசனம், அல்லாஹ்வின் வெளிப்பாடே சிருஷடிகள் என்பதை, அதாவது அல்லாஹ்வைத்தவிர ஒன்றுமே கிடையாது என்பதை இபாரத், தலாலத் ஆகிய இருபிரமாணங்களினாலும் வெளிப்படையாய் உறுதிப்படுத்துகிறது. கலிமாவுக்குத் தலீலாய் (ஆதாரமாய்) தரப்பட்ட வாக்கியம் அல்லாஹ்தவிர ஒன்றுமே இல்லை. அல்லது எல்லாமவனே என்று உணர்த்தும்போது அல்லாஹ் வேறு சிருஷ்டி வேறு என்று கலிமா எப்படி உணர்த்தும்? அல்லாஹ் தவிர இலாஹு இல்லை, எல்லா இலாஹும் அல்லாஹ்தான் என்ற கலிமா உணர்த்தும் உண்மையை உறுதிப்படுத்துவதுதான் தலீல் தரப்பட்ட காரணமாகும். ஆகவே அல்லாஹ் வேறு சிருஷ்டி வேறு என்னும் தவறான கொள்கையை மாய்ப்பதே கலிமா உபதேசிக்கப்பட்ட நோக்கம் என்பதும் எல்லாமவனே என்ற பொருளைக் கொடுப்பதுதான் பரிசுத்த வாக்கியம் என்பதும் தெளிவாகவே தென்படுகிறதல்லவா?

شَهِدَ ٱللَّهُ أَنَّهُۥ لَآ إِلَٰهَ إِلَّا هُوَ وَٱلْمَلَٰٓئِكَةُ وَأُو۟لُوا۟ ٱلْعِلْمِ قَآئِمًۢا بِٱلْقِسْطِ ۚ لَآ
إِلَٰهَ إِلَّا هُوَ ٱلْعَزِيزُ ٱلْحَكِيمُ

3-18 *நீதிமானாகிய அல்லாஹ் சாட்சி கூறுகிறான். நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வேறு இலாஹு (வணங்கப்படுகிற சிருஷ்டி) இல்லை. அவ்வாறே மலக்குகளும் (வேதத்தை ஆராய்ந்த) கல்விமான்களும் அவனைத்தவிர வேறு இலாஹுஇல்லை (அவன்) மிகைத்தோன். ஞானமுடையோன் (என்று சாட்சி கூறுகிறார்கள்)*

## 13 (11)

இப்போது கனம்தங்கிய உலமாக்களான ஒரு சில நல்லடியார்கள் கூறியுள்ள சில வார்த்தைகளை நோக்குவோம்.

**பார்ஸி பைத்தொன்றின் தமிழ் மொழி பெயர்ப்பு:**

சாந்திமார்க்கத்தை உபதேசிக்க எழுந்தருளிய ஞான ஆசிரியரே! என்னை மஜுஸிகளின் (இரண்டு கர்த்தாக்கள் உண்டு என்பவர்களில்) மார்க்கத்தை விட்டும் **(ஹக்கு வேறு கல்கு வேறு என்னும்) முஸல்மான்களின் மார்க்கத்தை விட்டும் விடுவித்த பேருதவிக்காகத்** தேவரீருடைய திருமேனியை வலது சாரியாய் சூழ்ந்து துதிக்கிறேன்.

**பார்ஸி பைத்தொன்றின் தமிழ் மொழி பெயர்ப்பு:**

தூதனுப்பினவன் வேறின்றித் தங்கள் தூதுவேலைக்காக றசூலுல்லாஹ் வந்தார்கள் என்று அறி. அனுப்பினவனும் தானாய் அனுப்பப்பட்ட றசூலும் தானாய் (கல்காகிய) தன்னிடத்துக்கே றசூலுல்லாஹ் எழுந்தருள் செய்தார்கள் என்று அறி.

**பார்ஸி பைத்தொன்றின் தமிழ் மொழி பெயர்ப்பு:**

பீயப்ஸுர் என்னும் ஒளியில் நின்றுமுள்ள சுர்மாவை (ஹக்கு வேறு கல்கு வேறு என்னும் கொள்கையுடைய) தூசிநிறைந்த கண்களில் தீட்டிக்கொள்வாயானால் அப்போது உள்ளாலும் வெளியாலும் கீழாலும் மேலாலும் முன்னாலும் பின்னாலும் வலப்புறத்தாலும் இடப்புறத்தாலும் அவனேயன்றி யாதொருமவுஜுது இல்லை என்று சாட்சி கூறுகிற **லாஇலாஹ இல்லல்லாஹ்வானது உன்னை மூடிக்கொண்டிருக்கிற திரையை உன் முகத்திலிருந்து நீக்கிவிடும்.** அப்போது

அல்லாஹ்வுடைய முகம் இருக்கிறது என்னும் உண்மை உனக்கு தெரியும். அவன் உங்களோடு இருக்கிறான் என்பது அவனுடைய தீதாறைக் காட்டி விடும்.

**பார்ஸி பைத்தொன்றின் தமிழ் மொழி பெயர்ப்பு:**

அல்லாஹ்வானவன் பார்கிறவனும் தானாய் பார்க்கப்படும் பொருளும் தானாய் ஜாலக்காட்சியும் தானாய் ஜாலவித்துவானும் தானாய் வியாதியஸ்தனும் தானாய் வைத்தியனும் தானாய் ஆஸிக்கும் தானாய் மஹ்ஸுக்கும் தானாய் விளங்குகிறான். அவன் தன் ஜால சக்தியினால்தானே தேகாதிபிரபஞ்சங்களில் வெளியாகிச் சர்வமும் தானாய் இலங்குகிறான். தானே மூஸா(அலை) ஆகித் தீதாறைத் தரிசிக்க நாடி ஆண்டவனே உன்னை எனக்குக் காட்டு என்று தன் காதுக்குத்தானே சொன்னான். தானே என்னைப் பார்க்கமாட்டாய் என்று கூறினான். இவையாவும் பிரபஞ்ச விவகாரங்கள் நடைபெறுவதற்காக என்று விளங்கியறி.

இவைபோல் எண்ணிலடக்கிக் கூறமுடியாத அவ்வளவு அதிகமான பைத்துக்கள் பாடல்கள் இருக்கின்றன. நாம் இவ்வளவையே போதுமாக்குவோம். இதேபோல சைவசமய நூல்களான அநேக உபநிடதங்கள், கைவல்ய நவநீதம், ஆரியப்புலவர் பாகவதம், சொரூபஞான தேசிகர்பாடல், தாயுமானவர் பாடல், பகவத்கீதை போன்ற மிக அதிகமான பாடல் நூல்களும் இந்துமதசாரம் போன்ற வசன நூற்களும் மிக அதிகமாகவே தென்படுகின்றன. அத்வைத அனுஸ்டானங்கள் வேறுபட்டிருப்பினும், குர்ஆன் விளக்கும் சுத்தமான தௌஹீதை ஒப்புக்கொண்ட பல நூற்கள் இந்து மதத்திலும் தென்படவே செய்கின்றன. இவற்றில் ஒருசில நூற்களில் சிற்சில தவறான விபரங்களும் இருக்கவே செய்கிறது. வேண்டியவற்றை ஆராய்ந்து தெளிவு பெறவும்.

தெளிந்தமனத்தோடு சிந்தனை செய்தால் பிறமத அத்வைத நூல்கள், ஒலிமார்களின் விளக்கங்கள், குர்ஆன் ஹதீஸ்கள் விளக்கம் தருவதுபோல் உண்மையாக உள்ளது வருணிக்கமுடியாத வாஜிபுல் உஜூதுமட்டுமேயாகும். ஆனால் மனிதபுலன்களுக்கும் நீக்குவதற்குக்கடினமான வஹ்முக்கும் நாம் கட்டுண்டிருப்பதால் இவ்வுண்மையைத் திடீரென ஒப்புக்கொள்ள முடியாமல் திகைக்கிறோம். மறுக்கிறோம். ஆனால் இவ்வுண்மையை விளக்குவதற்காகத்தான் கலிமா தரப்பட்டதாகும். இரண்டென்பது இல்லாமல் ஏகபரிபூரணஞான சொரூபியாய் இருக்கிற அந்த ஹக்கான உஜூதிடத்தில் கானலில் ஜலம்போல, நித்திரையில் கனவுபோல, கற்பிதமாய் தோன்றி மறைகிற ஜக, ஜீவ, பரம் என்ற முப்பண்புகளையும் அந்த உஜூதின் வேறான தனித்தனிப் பொருட்களென்று மருளும் மருட்சியைக் கொண்டுள்ள மக்களுக்கு அவர்களுடைய அஞ்ஞானமான இருளை நீக்கி அவர்களுக்கு வழிகாட்டி ஆட்கொள்வதற்காகவே **கலிமாவைக்கொண்டு றசூல்மார்கள், நபிமார்களை இறைவன் அனுப்பினான் என்பதுதான்.**

ஆனால் நாம் சிறுபராயத்தில் கற்றறிந்து உண்மையென்று நம்பியிருந்த கொள்கையையும் இந்த உண்மையையும் ஒப்பிட்டு நோக்கும்போது ஒன்றுக்கொன்று நேர்விரோதமாய்த் தென்படுகின்றன. மேலும் இக்கொள்கை நம்புவது கடினமாகவும் பலநூற்றுக்கணக்கான சந்தேகங்களும் தென்படுகின்றன. ஆகவே சந்தேகங்களில் இருந்துவிடுபடாமல் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ள எமது அறிவு மறுப்பதால் முதலில் கேள்விபதில் என்ற முறையில் எமது சந்தேகங்களை நீக்கிக்கொண்டு அதன்பின் கலிமாவை நெருங்குவோமாக.

**பர்ஸி பைத்தொன்றின் தமிழ் மொழி பெயர்ப்பு:**

சகோதரனே! உன் தேகமான தடியானது வஹ்மாயிருக்கிறது. ஆதலால் அதை நானென்று கருதும் பேதபுத்தியை விட்டுவிடு. இல்லையானால் நீ ஞானபூமியில் செல்லும்போது அந்தப் பேதபுத்தியில் அளவான வாசனாநிழல் உன்னைத்தொடர்ந்து வரும் என்பதே.

**ஹதீஸ்: அல்லாஹ்வேயன்றி மற்றயாவும் பாதில்** (பொய்) **என்று அறி.**

**அறிவிப்பவர்: லபீது**(றலி)

இந்துசமய அத்வைத நூற்களில், நம் கிராமமக்களிடையே இருக்கிற மிக அநேக நூற்கள் தவறான விளக்கமுடையவை என்பதையும் அவை பெரும்பாலும் சித்து (அற்புதத்தத்துவங்கள்) பெறுவதே நோக்கமுடையவை என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும். அதாவது இந்த நூற்களில் பல, தன்னுள்ளத்தில் இறைவனிருப்பதாக வலியுறுத்துகின்றன. தன்னையும் தன்னுள்ளே இறைவனையும் காணும்படி கூறுகின்றன. இது இஸ்லாத்தின் தௌஹீதுக்கு விரோதமான கொள்கையாகும். இதுசித்தைப் பெறும் உபாயமேயன்றித் தௌஹீது ஆகாது. துவிதம் இருக்கும் வரையும் தௌஹீது சரி வராது. இக்கொள்கை ஹுலுல் இத்திஹாத் என்னும் தவறான கொள்கை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

## 008 தௌஹீது (அத்வைதம்) சம்பந்தமான ஓர் முக்கிய விடயம்

உலகின் சகல இன, மதக் கொள்கை விளக்கங்களையும் கட்சிப்பாடற்ற சுய சிந்தனையோடு ஆராய்ந்து பார்க்கும்போதுதௌஹீது சம்பந்தமாய் நாலுவகையான கொள்கை விளக்கங்கள்

தென்படுகின்றன. நாம் உலக மக்கள், மதங்கள் அத்தனையையும் பொதுப்படையாகக் கூறினாலும் அத்வைதம் (தௌஹீது) சம்பந்தமான விளக்கங்கள் சரியானவையானாலும் பிழையானவையானாலும் பெரும்பாலும் **இந்து சமயத்திலும் இஸ்லாத்திலும்தான் தென்படுகின்றன. மற்றெல்லா மதங்களிலும் சாதாரண பக்திமார்க்க விளக்கங்களேயல்லாமல் தௌஹீதுடைய விளக்கங்கள் எள்ளளவேனும் இக்காலத்தில் இருப்பதாய்த் தென்படவேயில்லை.** மிகமிக நீண்ட காலமாக மக்களிடையே வேரூன்றியுள்ள இந்தத் தௌஹீது சம்பந்தமான நாலு கொள்கை விளக்கங்களும் றசூல்(ஸல்) அவர்களுக்கு முன்பிருந்தே உலகில் நிலவுகின்றன என்பது உண்மை. இந்த நாலு கொள்கை விளக்கங்களில் மூன்றை மறுத்து ஒன்றை நிலைப்படுத்துவதற்காகவே சுமார் ஒரு இலட்சத்து இருபத்தி நாலாயிரம் நபிமார்கள் தோன்றியிருக்கிறார்கள் என்பதையும், அவற்றில் சரியான ஒரு கொள்கை விளக்கத்தை உறுதிப்படுத்துவதற்காகவே காத்தமுன் நபிய்யீன் றசூல்(ஸல்) அவர்கள் தோன்றினார்கள் என்பதையும், அவர்கள் எமக்குப் பெற்றுத்தந்த **திருக்குர்ஆனே அந்தச்சரியான கொள்கையை விளக்கித்தரும் ஆதார நூல் என்பதையும் நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.** இந்த ஆதார நூலான குர்ஆன் உண்மையான சரியான தௌஹீதுக் கொள்கை எது என்பதையும் பிழையான கொள்கைகள் எவை என்பதையும் மிகமிகத் தெளிவாகவே விபரம் தந்திருக்கின்றது. அதற்குரிய சாட்சிகளாக றசூல்(ஸல்) அவர்களுடைய ஹதீஸ்களும் அவர்களைப் பின்பற்றிய ஒலிமார்களின் உபதேசங்களும் உண்மையான பகுத்தறிவும் அமைந்திருக்கின்றன. இந்த உண்மையான தௌஹீதுக்கு முன், பிழையான தௌஹீது எது என்பதையும் அதனால் ஏற்படும் தீமையையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். அவற்றில்,

### 1ஆவது கொள்கை விளக்கம்:

இறைவனையன்றி ஒன்றுமே இல்லையென்பது உண்மை. ஆனால் இறைவன் தன் சுயநிலைமையில் இருந்து மாறுபாடடைந்து (விகாரப்பட்டு) தான் சிருஷ்டியாக வெளியாகியிருக்கிறான் என்றஇக்கொள்கை விளக்கம் தருகிறது. இக்கொள்கை இந்து ஞானவான்களின் ஒருகுறுகிய தொகையினரிடையேயும் அவர்களைப் பின்பற்றிய ஒரு சில அறிவு விளக்கம் இல்லாத முஸ்லிம்களிடையேயும் தென்படுகிறது. இக்கொள்கை நபிமார்களால் போதிக்கப்பட்ட, குர்ஆன் ஹதீஸ்களினாலும் ஒலிமார்களின் அனுபவத்தினாலும் சிந்தனையாளர்களின் அறிவினாலும் உறுதிப்படுத்தப்பட்ட **தௌஹீதுக்கு நேர்முரணான ஓர் கொள்கையாகும். இதைநிரூபிக்க “சுப்ஹானல்லாஹ்” என்ற அறபு வாக்கியம் மட்டுமே போதுமானதாகும்.** இக்கொள்கை நம் நாட்டில் மிகக்குறைவு ஆகையால் இதை நான் விபரிக்காமலே விட்டுவிடுகிறேன். “சுப்ஹானல்லாஹ்” என்றால் மனித அறிவுக்கு எட்டாத, மனித அறிவினால் எவ்வகையிலும் கற்பனை பண்ணமுடியாத மிகமிகப் பரிசுத்தமானவன் என்பதே கருத்தாகும்.

### 2ஆவது கொள்கை விளக்கம்:

சிருஷ்டிகள் அழிந்தொழிவது உண்மையேயென்றாலும் அவை முற்றாய் அழிந்தொழிந்து நீங்கிவிடாமல் காலாகாலம் மாறுபட்டுக் கொண்டிருப்பதால், ஒவ்வோர் சிருஷ்டிக்குள்ளும் அல்லாஹ் இருந்து கொண்டே இருக்கிறான் என்பதுதான் இக்கொள்கையின் விளக்கம் இதைப் பொதுப்படையாய்க் கூறினால் அல்லாஹ்வும் அவனுடன் சிருஷ்டி என்று இன்னோர் பொருளும் இருக்கிறது என்பதே. **இக்கொள்கை குர்ஆன் ஹதீஸ்களினது விளக்கப்படி சுத்தமான “ஷிர்க்” ஆக இருக்கிறது.** இக்கொள்கையில் நிலைகொண்ட ஒருவர் பலகோடான கோடி வருடங்கள் முயற்சி செய்தாலும் இறை ஐக்கியம் என்னும் பேரின்பத்தைப் பெறமுடியாதவராகவே இருப்பார். ஏனென்றால் சிருஷ்டியாகிய நானும் இருக்கிறேன் என்ற (அனானியத்) தன்னுணர்வு இருக்கும்வரையிலும் அல்லாஹ்வுடன் ஐக்கியமாதல் என்னும் பேரின்பம் கிடைக்கவேகிடைக்காது. ஆனால் இவ்விதமான கொள்கை ஏன் மக்களிடையே ஏற்பட்டது? என்பதை ஆராய்ந்தால், பெரும்பாலும் அற்புதவேலைகளை (சித்துக்களை)ப் பெறுவதற்குரிய உபாயமாகவே இவ்விபரம் ஏற்பட்டிருக்கிறது என்பதும் அறிவுகுறைந்த ஒரு சிலராலேயே இது புகுத்தப்பட்டிருக்கிறது என்பதும் தென்படுகிறது. இந்தக் கொள்கை விளக்கத்தில் ஊறிய ஒருசில இந்துக்கள் தங்களை ஞானவான்களாய் கணித்துக்கொண்டு சிலபாடல் நூற்களை இயற்றியிருக்கிறார்கள். இவர்களைக் கண்மூடித்தனமாய் பின்பற்றிய ஒருசில முஸ்லீம்களும் இக்கொள்கையில் ஊறிக்கொண்டு தங்கள் வாழ்நாளை வீணாய் களிக்கிறார்களேயல்லாமல் எவராவது ஒருவர் இக்கொள்கையில் வெற்றி பெற்றிருக்கிறார் என்று கூறுவதற்கில்லை. பெரும்பாலும் இன்று எம் நாட்டு முஸ்லிம்களிடையே இருக்கும் ஞானப்பாடல் நூற்களில் மிகப் பெரும்பாலானவை இவ்வினத்தைச் சேர்ந்தவைதான்.

இக்கொள்கையில் இரண்டு பெரிய குற்றங்கள் தென்படுகின்றன.

**1ஆவது:** இறைவனுடன் இறைவனல்லாத சிருஷ்டிகளும் உண்டு என்பது. இது சுத்தமான ஷிர்க் ஆகும்

**2ஆவது:** அகண்டப் பொருளான இறைவனைக் கண்டப்பொருளான சிருஷ்டியில் மட்டுப்படுத்துவதாகும். அதாவது இறைவனை அவனுடைய பரிசுத்தத் தன்மையிலிருந்து குறைவுபடுத்திச் சிருஷ்டிக்குள்ளும் வாசம்செய்யக் கூடிய ஓர் அற்பப்பொருளாய் கணிப்பதாகும். இது ஷிர்க்கு மட்டுமல்லாமல் இறைவனைக் கண்ணியக் குறைவாய்க் கணித்த குற்றமும் சேர்ந்ததாகிறது. காலம், இடங்களைக் கடந்த பரம்பொருளைக் கண்டப்பொருளில் மட்டுப்படுத்திச் சடப்பொருளாய்க் கணிப்பதனால் அல்லது சடப்பொருளில் குடியிருப்பதாய்க் காண்பதனால் இதைவிட அறியாமை வேறென்னதான் இருக்கிறது? இவ்வகையினர் சிருஷ்டிகளின் உண்மையை உணராதவர்களாகவே இருப்பார்கள். சிருஷ்டிகளின் உண்மையை

உணர்ந்துகொள்ளாதவர் கலாக்கத்றுடைய விஷயத்தை எப்போதும் ஒப்புக்கொள்ளவே மாட்டார்.**கலாவுடைய விஷயத்தைப் புரிந்துகொள்ளாத ஒருவருக்கு தௌஹீது எள்ளளவும் தெரியாது என்பது நிச்சயம்.** தௌஹீதை பெற்றுக்கொள்ளாதவர் அதில் நிலைக்காதவர் தன் பூரணத்தன்மையைப் பெறுவதும் பகற்கனவேயாகும். ஆகவே இவ்வகையினர் தங்களைத் தாங்களே பெரும் பெரும் ஞானவான்களாகக் கருதிக் கொண்டாலும் உண்மையான பலனைபெறுவது இவர்களால் முடியாத ஓர் காரியமேயாகும். இந்த அஞ்ஞானத்தால் அடையக்கூடிய ஒரேயொரு பிரயோசனம் பாமர மக்களிடையே தம்மை ஏதோ ஓர் ஞானவானாகக் காட்டிக்கொள்வது மட்டும்தான். இவ்வித பாடல்களில் ஊறிக்கொண்டவர்கள்தான் முஸ்லீம்களிடையேயும் பெரும்பாலும் ஞானவான்களாக நடிக்கிறார்கள். ஆனாலும் இவ்வகையினர் ஞானத்தின் ஆரம்பத்தைக்கூட அடையவில்லை என்பது பூரண உண்மையாகும்.

**3ஆவது கொள்கை விளக்கம்:**

சிருஷ்டி என்பது ஓர் தனிப் பொருள். இறைவன் என்பது வேறோர் தனிப் பொருள், ஆயினும் அவ்விரண்டும் பிறித்தறிய முடியாதபடி (பாலும் நீரும்போல) ஒன்றோடொன்று கலந்து போய் இருக்கின்றன என்பது. விசிட்டாத்வைதம் என்பது இதுதான். இந்தக்கொள்கை முன்கூறிய இரண்டாவது கொள்கையை அனுசரித்த விளக்கமேயாகும். **இக்கொள்கையும் இஸ்லாத்தின் உண்மையான கொள்கைக்கும் முற்றும் முரணான ஷிர்க்காகவே இருக்கிறது.** நம் நாட்டில் அனுஷ்டானத்திலிருக்கிற, பெரும்பாலான, ஞானப்பாடல்கள் என்ற பெயரிலுள்ள பல நூற்கள் இவ்விதமான கொள்கை விளக்கங்களையே கூறிக்கொண்டிருக்கின்றன. முஸ்லீம்களிலும் மிகப் பலர் இவ்விதமானபாடல் நூல்களைப் பின்பற்றியே சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் காணுகின்றேன். இவர்களுடைய பரிதாபநிலையை எடுத்துநோக்கவும் உண்மையின் பாதையில் செல்லக்கூடிய அறிவு விளக்கமும் மனஓர்மையும் இவர்களிடத்தில் இல்லாததே காரணமாகும். நபிமார்கள், றசூல்மார்களால் விளக்கம் தரப்பட்ட சுத்தசத்தியமான தௌஹீது மக்களை அப்படி அறிவிலிகளாக மாற்றக்கூடிய ஒன்றேயல்ல. இது இருளில் (அறியாமையில்) தத்தளிக்கும் மக்களைப் பிரகாசத்தின் பக்கம் (அறிவுவிளக்கமான ஞானத்தில்) செலுத்தக்கூடியதாய் இருக்கிறது. அதாவது உண்மையான தௌஹீதை ஒருவர் ஒப்புக்கொள்வதானால் சிருஷடிகளின் உண்மையைச் சக்குச் சந்தேகமில்லாமல் உணரவேண்டியவராகிறார். சிருஷடிகளின் உண்மை எப்போது விளங்கிக்கொள்ளுமோ அப்போதே கலாகத்றுடைய விஷயமும் ஏவல், விலக்கல், நன்மை, தீமை, அதாபு, தவாபுகளுடைய விஷயங்களும் தானாகவே விளங்கிக்கொள்ளும். ஆகவே தௌஹீதுடைய விஷயம் ஒருவருக்கு உண்மையின்படி கிடைக்கப்பெறுமேயானால் அம்மனிதருக்கு இறை ஐக்கியம் என்னும் பெரும் பாக்கியம் (பூரணத்தன்மை) கிடைப்பதில் எவ்வித தடையுமே கிடையாது. அதாவது அறிவு குறைந்த மனிதர்களால் விளங்கிக்கொள்ள முடியாத, இறைவனுடைய இரகசியங்கள் இம்மனிதருக்குவெளியாகத் தொடங்கிவிடுவதால், இவர் குத்புடைய மர்த்தபாவை ஹயாத்திலேயே பெற்றுக்கொள்வார் என்பது நிச்சயம்.

**அன்புச் சகோதரனே!**

ந் உண்மையான இறை ஐக்கியத்தைப் பெறவேண்டுமென்ற நோக்குடையவனாய் இருந்தால் கண்மூடித்தனமான பின்பற்றலையும் வீண்பிடிவாதத்தையும், தான் ஓர் அறிஞன் என்ற செருக்கையும் விட்டுவிட்டு உண்மையான தௌஹீதைப் பொறுமையோடு விளங்கியறிந்து அதற்குரிய செயல்களில் ஈடுபாடுகொண்டு வெற்றிபெறுவாயாக. இந்துமத அத்வைத நூல்களில் இஸ்லாத்தின் உண்மையான கொள்கையை ஏற்றுக்கொண்ட அநேக பாடல் நூல்கள் இருக்கின்றன என்பது பூரணமான உண்மை. எத்தனையோ உபநிடதங்கள் இருக்கின்றன என்பதும் உண்மை. அதே போல தவறான கொள்கை விளக்கமுடைய பல நூற்களும் இருக்கவேதான் செய்கின்றன. இந்துமத அத்வைத நூல்களில் மிகப்பல உடற்கூறு சம்பந்தமான தத்துவ விளக்கங்களையே பெரும்பாலும் விளக்கிக்காட்டுகின்றன. இந்தத் தத்துவ விளக்க அடிப்படையிலேயே அனுஷ்டானங்களும் அமைந்திருக்கின்றன. இவ்வகையான விளக்கங்கள் றசூல்(ஸல்) அவர்களுடைய காலத்துக்கு முற்பட்டவையாயும் மிகமிகக் கடினமான கஷ்டநஷடங்கள் நிறைந்தவையாயும் இருக்கின்றன. றசூல்(ஸல்) அவர்கள் இம்முறைகள் அவ்வளவையும் ஒதுக்கித்தள்ளிவிட்டு மிகமிக இலகுவாக எல்லோரும் கையாண்டு வெற்றியடையக்கூடிய சில விபரங்களை எமக்கு விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். நாம் முன்புகூறிய “ஹுலுல்இத்திஹாத்” என்னும் கொள்கையிலுள்ள தவறான விளக்கங்களை வெற்றிபெற்ற நல்லடியார்களான ஒலிமார்கள் “கலாயிதுல் அகாயித் நஸபி”“புத்துஹாத்துல் மக்கியா”“புஸுஸுல்ஹிகம்”“கலிமத்துல்ஹக்கி” போன்ற பல கிதாபுகளில் விளக்கி வைத்திருக்கிறார்கள். அவ்விதமான கிதாபுகளைப் பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ந்து உண்மையான தௌஹீதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி உண்மையான தௌஹீதைப் பெற்றுக்கொள்ள முடியாத மனிதன் அவனுடைய சந்தேகங்களுக்குரிய பதிலைக் கண்டறிய முடியாதவனாக ஒவ்வோர் திடலிலும் தட்டழிந்துதான் திரிவான் என்பதைக் குர்ஆனே எமக்கு விளக்கம் தருகிறது. இந்த விளக்கம் நூறுவீதமும் உண்மைதான் என்பதை என் அனுபவத்திலும் கண்டேன். நம் நாட்டில் உள்ள ஒவ்வோர் கிராமத்திலும் சரிபிழை தெரியாமல் தட்டலைந்து திரிகிற பெரும்பாலான அஞ்ஞானவான்களை நான் பார்த்ததுண்டு.

وَٱلشُّعَرَآءُ يَتَّبِعُهُمُ ٱلْغَاوُۥنَ ﴿٢٢٤﴾ أَلَمْ تَرَ أَنَّهُمْ فِى كُلِّ وَادٍ يَهِيمُونَ

26-224-226 *கவிஞர்களையும் வழிகெட்டவர்கள்தான் பின்பற்றுகிறார்கள். நிச்சயமாக அவர்கள் ஒவ்வோர் திடலிலும் தட்டழிந்து திரிகிறார்கள் என்பதை நீர் பார்க்கவில்லையா?*

## 4ஆவது கொள்கை விளக்கம்:

"இ்.லமு அன்ன தாலிகல் வுஜுூத லெய்ஸலஹு ஷக்லுன், வலாஹத்துன் வலாஹஸ்ருன், வமஅஹாதாளஹற வஜதல்லா பிஷ்ஷக்லி, வல்ஹத்தி, வலம்யதகையர், அம்மாகான மின்அதமி ஸ்ஸக்லி வஅதமில்ஹத்தி பல்ஹுூவல் ஆன கமாகான அலைஹி"

(கருத்து) நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். அந்த உஜுூதுவாகிறது (அல்லாஹ் என்பவன்) அவனுக்கு உருவம் இல்லை. எல்லை இல்லை. காலம் முதலாம் எவ்விதகட்டுப்பாடுமே இல்லை. எனினும் அவன் அப்படி இருப்பதுடன் உருவத்திலும் எல்லையிலும் வெளியாகியுள்ளான். இப்படி வெளியானாலும் கூட அவன் முன்பு இருந்த நிலைமையில் இருந்து மாறுபடவேயில்லை. (அவன் எப்போதும் மாறுபடுவதும் இல்லை.) அவன் எப்போதும் இருந்த நிலைமையிலேதான் இருந்துகொண்டிருக்கிறான்.

எல்லா வஸ்த்துக்களும் அவன்தானே அவையாய் இருக்க அவ்வஸ்த்துக்களை வெளிப்படுத்திய இறைவன் தூயவன்.

**இதுதான் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட கொள்கை விளக்கமான சுத்த சத்தியமான தௌஹீதாய் இருக்கிறது.** இதுதான் கலிமாவினாலும் அதன் சார்புகளான தலீல்களாலும் (குர்ஆன், ஹதீஸ்களினாலும்) அனுபவஸ்த்தர்களான நபிமார்கள், வலிமார்களாலும் உண்மையான பகுத்தறிவினாலும் உறுதிப்படுத்தப்பட்ட சத்திய உண்மையாய் இருக்கிறது. இதை நாம் இன்ஷா அல்லாஹ் பொறுமையோடு விளங்கியறிவோம். முதலில் எமது சந்தேகங்களை நீக்கிக்கொள்வோம். இவ்விடத்தில் ஒருசிறு சந்தேகம் தோன்றலாம். அதாவது சித்துக்களைபெறும் நோக்கமாகவும் ஞானப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன என்பது உண்மையானால் தவறான கொள்கை விளக்கத்தையுடையவர்கள் சித்துக்களை எப்படிப் பெறமுடியும்? என்பதுதான் எமது சந்தேகம்.

## இதற்குரிய பதில்:

பொதுப்படையாய் அற்புத நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்றுபடுத்தி சித்து என்று கூறுவதுதான் எம்நாட்டு மரபு. ஆனால் சித்து (அற்புதம்) என்பதில் மூன்று பிரிவுகள் இருக்கின்றன.

**அவற்றில்:**

**1ஆவது:** மனோதத்துவம் என்று கூறப்படும். இந்த மனோதத்துவ அற்புதங்கள் நேரானபாதையில் செல்லும் நல்லவனுக்கும் தீயபாதையில் செல்லும் தீயவனுக்கும் ஏற்படலாம். இன்றுள்ள மெஸ்மரைஸம், ஹிப்நாடிஸம், வாசிலாத் என்பவையெல்லாம். இப்பகுதியில் அடங்கும். ஹடயோகம் கூட இவ்வகையைச் சேர்ந்ததுதான். இந்த அற்புத நிகழ்ச்சிகளில் அந்தரங்கம் என்னவென்றால் குறிக்கோளுக்கமைவாய் மனதை ஒரு வழிப்படுத்துவதேயாகும். மனம் ஒரு வழிப்படும்போது நல்லதேயாயினும் கெட்டதேயாயினும் குறிக்கோள் நிறைவேறும் என்பது உண்மைதான். இவ்விதமான அற்புதங்கள் எம் அறிவுக்கு அற்புதம் போல் தென்பட்டாலும் உண்மையில் அவை அற்புதமே அல்ல. இவையாவும் காரணகாரியத் தொடர்புடைய நிகழ்ச்சிகளாகவேதான் இருக்கும். இது மனித முயற்சியினால், சிற்சில பயிற்சிகளினால் பெறக்கூடிய ஒன்றாகும். இது கறாமத்துப் போல் தென்பட்டாலும் உண்மையில் இது கறாமத்தேயல்ல. தீய பாதையிலும் இது சித்திக்கக்கூடிய ஒன்றாகும். ஆனால் ஓர் குறுகிய காலம் மட்டுமே இது நிலைத்திருக்கும்.

**2ஆவது:** உண்மையான நேரான பாதையில் மனிதன் சென்று கொண்டிருக்கும்போது இம்மனிதருக்கு இறைவனால் கொடுக்கப்படுகிற ஓர் நன்கொடைதான் இம்மனிதரிடம் தென்படுகின்ற அற்புதங்கள். இதிலும் பலவகையும் பல படித்தரங்களும் உண்டு. பொதுவாக இவ்வகையினருக்கு ஏற்படும் அற்புத நிகழ்ச்சிகளைத்தான். "கறாமத்" என்று கூறப்படும். இது பிரார்த்தனையினாலும் (பக்தியினாலும்) ஏற்படலாம். சில சாதனைகளாலும் ஏற்படலாம். இவ்வித நிகழ்ச்சிகள் நல்ல காரியங்களுக்கேயன்றித் தீயகாரியங்களுக்காகப் பாவிக்கப்பட மாட்டா) இவ்வகையினர் விரும்பியும் இந்த அற்புதங்கள் நடைபெறலாம். சில சமயங்களில் இவரை அறியாமலேயே இறைவனாலேயும் இந்த அற்புதங்கள் நடைபெறலாம். எனினும் இந்தக்கறமாத்தும் காரணகாரியப் பொருத்தமுடையதாகவேதான் இருக்கும். ஆயினும் இது நிலையாய் இடம் பெறக்கூடியது.

**3ஆவது:** முஹ்ஜிஸாத் என்று கூறப்படும். இது நபிமார் றசூல்மார்களுக்குரிய விசேட நன்கொடையாகும். இதில் காரண காரியப்பொருத்தமும் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். இதில் இதற்கதிகமான விபரம் எமக்கு வேண்டியதில்லை. ஆகவே ஏதோ ஓர் அற்புத நிகழ்ச்சியை ஒருவன் செய்கிறான் என்றால் அவன் நேர்பாதையில் சென்ற ஒலிதான் என்பதை ஆராயமல் முடிவுகட்டவே கூடாது. உண்மையான அற்புதம் என்பது அறிவோடு சம்பந்தப்பட்டதாயும் சாதாரண அறிவுகுறைந்த மக்களால் இலகுவாய்க் கண்டறிய முடியாததாயும் இருக்கிறது.

# 009 சந்தேக நிவர்த்தி
## கேள்வி - பதில்

**1ஆவது கேள்வி:**

மனித அறிவுக்கு எட்டாமல் மிகமிகப் பரிசுத்தமாய் இருக்கும் வாஜிபுல் உஜூது (உண்மைப்பொருள்) மனித அறிவுக்கு எட்டக்கூடியதாய், கண், காது, மூக்கு, நாக்கு, தொட்டுணர்வுபோன்ற புலன்களுக்கு எட்டக்கூடியதாய், பௌதீகப் பொருட்களாய் எப்படி வரமுடியும்? அதுவும் எவ்விதமாறுபாடுமில்லாமல் இருந்தபடியே இருந்துகொண்டு சர்வபிரபஞ்சங்களாகவும் வெளியானது என்றால் இதை எப்படி நம்புவது?

**பதில்:**

ஒரு பொருள் இன்னோர்பொருளாக, வெளியாவதற்கு மனித அறிவில் மூன்றுகாரணங்கள் தென்படுகின்றன. அவற்றில்,

**1ஆவது:** காரணம்கெட்டு காரியம் உண்டாதல் என்ற கூறப்படும். இதன் விபரம் என்னவென்றால், ஒரு விதையை நாம் நாட்டியபின் மூலப்பொருளாய் இருந்த விதை கெட்டழிந்து முளையாய், மரமாய் செடியாய், கொடியாய், மாற்றமடைந்துவிடுகிறது. இப்படி உண்டாவதைத்தான் காரணம் கெட்டழிந்து காரியம் உண்டாதல் என்று கூறப்படும். இதேபோல் வாஜிபுல் உஜூதாக இருந்த மூலப்பொருள் கெட்டழிந்து பிரபஞ்சங்களாய் வெளியாகவே இல்லை. **இது மறுக்கப்பட்டதும் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளாததும் ஆகும்.**

**2ஆவது:** காரணம் கெட்டழியாமல் விகாரப்பட்டு (வித்தியாசமான மாற்றங்களையடைந்து) காரியம் உண்டாதல் என்று கூறப்படும். இதன் விபரம் என்னவென்றால் களிமண்ணாக இருந்த மூலப்பொருள் கெட்டழிந்து போகாமல் விகாரப்பட்டு (வித்தியாசமான மாற்றங்களை அடைந்து) பானை, சட்டி, குடம் என்ற தோற்றங்களைப் பெறுகிறது. அதாவது மூலப்பொருளாய் இருந்த களிமண் விகாரப்பட்டதனால் பானை, சட்டி, குடம், என்ற பெயர்களையும் தோற்றங்களையும் பெற்றதேயல்லாமல் மூலப்பொருள் கெட்டழியவே இல்லை. இதேபோலவும், வாஜிபுல் உஜூதாய் இருந்த மூலப்பொருள் விகாரப்பட்டுப் பிரபஞ்சம் என்ற பெயரில் வெளியாகவே இல்லை. **இதுவும் மறுக்கப்பட்டதும் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளாததுமாகும்.** ஆயினும் விளக்கம் குறைந்த ஒருசில இந்து ஞானவான்களும் அவர்களைப் பின்பற்றிய ஒருசில ஆராய்வும் அனுபவமும் இல்லாத முஸ்லீம்களும் உண்மைப்பொருள் விகாரப்பட்டே வெளியாகியிருப்பதாகச் சில பாடல்கள் மூலம் பாடியிருப்பதாகத் தெரிகிறது. இது குர்ஆன், ஹதீஸ்களுக்கும் அறிவுக்கும் விரோதமான அபிப்பிராயமாகும். இது அனுபவமற்ற, போதை வஸ்த்துக்களில் மூழ்கிய திருட்டு ஞானிகளின் தவறான விளக்கமாகும்.

**3ஆவது:** மூலகாரணம் கெட்டழியாமலும் விகாரப்படாமலும் இருந்தபடியே இருக்க காரியம் உண்டாதல் என்று கூறப்படும். இதை விவர்த்த காரணகாரியப் பொருத்தம் என்று கூறுவார்கள். இவ்விதமாகத்தான் வாஜிபுல்உஜூதான உண்மைப் பொருள் கெட்டழிந்து போகாமலும் விகாரப்படாமலும் தன் சொந்த நிலையில் இருந்தபடியே இருந்து கொண்டு சர்வபிரபஞ்சங்களான சர்வ சிருஷ்டிகளையும் தன்னிடத்தே வெளியாக்கியிருக்கிறது. அது எப்படியென்றால் மனம் (உள்ளம்) என்பது கண், செவி, மூக்கு, நாக்கு தொட்டுணர்வுகளுக்கும் அறிவுக்கும்கூட எட்டாததாய் இருக்கிறது. அப்படியிருந்தும் புலன்களாலும் அறிவாலும் உணரக்கூடிய உருவப்பொருட்களான சகல சிருஷ்டிப்பொருட்களும் அந்த மனதில் (சொற்பனாவஸ்த்தையில்) கனவின் போது வெளியாகின்றன. ஆனால் மனமோ கெட்டழிந்து, அல்லது விகாரப்பட்டு இந்த உருவங்களை உருவாக்கவே இல்லை. இந்த மனம் வேறெங்கும் சென்று அப்பொருட்களைக் காணவும் உருவாக்கவுமில்லை. புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாமல் பரிசுத்தமாய் இருந்த அந்த மனம் (உள்ளம்) தன் சுயநிலையில் எவ்வித மாறுபாடுமில்லாமல் இருந்துகொண்டே, தன்னிடத்தில் உருவப்பொருட்களான மண், தண்ணீர், காற்று, நெருப்பு, முதலாம் சர்வ சிருஷ்டிகளையும் நல்லவை கெட்டவையான, சர்வ பிரபஞ்சங்களையும் கண்டுகளிக்கிறது.

இந்தக் கனவைக் காணும்போது அதில் தென்பட்ட சகல உருவப்பொருட்களையும் பஞ்சபுலன்களைக்கொண்டும் நாம் அனுபவிக்கிறோம். உணவு முதலாம் பொருட்களை உண்டு சுவைப்பதும் கஷ்ட, நஷ்டங்களை அனுபவிப்பதும் பெண் இன்பத்தை அனுபவித்து ஸ்கலிதமாவதும் உண்மைதான். ஆனால் புலன்களுக்கெட்டாத உருவம் இல்லாத மனமோ இந்தக் காட்சிகளின்போது எதிலுமே கட்டுண்ணாமலும், விகாரப்படாமலும் என்றும் இருந்த அதே நிலைமையில்தான் இருந்துகொண்டிருக்கிறது. கனவின்போது வெளியான காலம், இடம் போன்றவற்றையும், அவற்றின் கட்டுப்பாட்டில் உருவான சகல சிருஷ்டிப் பொருட்களையும் அணுவும் தவறாமல் கண்டு கொண்டிருந்தும் அந்த மனம்தான். இந்தக் கனவுக்காட்சியின்போது தென்பட்ட நாய், பன்றி, மலம், ஜலம், அசுசிப் பொருட்களையும் மணம் குணமுள்ள நல்ல பொருட்களையும், நல்லவன், கெட்டவன்,

போன்ற மனிதர்களையும் ஷைத்தான், ஜின், மலக்குகள் போன்ற சிருஷ்டிகளையும் அணுவும் விடாமல் வெவ்வேறாய்த் தனித்தனியாய்க் கண்டுகொண்டிருந்தும், அப்போது ஒவ்வொன்றும் தனித்தனியாய் நான், நான், என்று உணர்ந்து கொண்டிருந்த (அனாநிய்யத்) தன்னுணர்வை, (அகங்காரம்) உண்டாக்கியதும் அந்த மனம்தான். அந்த உணர்வுகள் கனவில் வெளியான பொருட்களின் உணர்வேயல்ல. ஆயினும் கனவின்போது அவை ஒவ்வொன்றும் தனித்தனி உணர்வுடையனவாய்த்தான் தென்பட்டன. கனவில் வெளியான பொருள் நான் மனத்தின் வெளிப்பாடான ஓர் தோற்றமே என்றும் நான் வெறும் தோற்றமும் பெயரும் மட்டுமே என்றும் என் உணர்வு மனத்தின் உணர்வே என்றும் அறியும் போது கனவு கலைந்துவிடும். அதுமட்டுமன்றி அவ்வுணர்வு மனத்தின் அறிவாக இருக்குமேயல்லாமல் மனத்தில் வெளியான பொருளின் அறிவாகவும் இருக்கமுடியாது. (நுட்பமாய் உணர்க).

கனவின்போது தோன்றிய ஒவ்வோர் சிருஷ்டியும் நான், நான் என்று தங்களைத்தாங்களே வெவ்வேறாய் நம்பியதும் அந்த நம்பிக்கையினால் (வேறு என்ற உணர்வினால்) ஒருநாய் ஓர் மனிதனைக்கடித்ததும், இரத்தம் பீறிட்டதும், கடியுண்டவன் வேதனையடைந்ததும் கனவின்போது நிச்சயமான முழுஉண்மைதான். கனவு முடிந்து விழிப்படைந்த போது (ஜாக்கிரதாநிலையில்) நான் கண்டது கனவு என்றுணர்வதும் அந்தமனம்தான். அந்தக் கனவுக் காட்சிக்குச் சாட்சியாய் இருந்ததும் அந்த மனம்தான். தன்திட்டப்படி கனவில் அத்தனை காட்சிகளையும் சிருஷ்டிகளையும் நிகழ்ச்சிகளையும் வெளியாக்கிய போதும் அதற்கு முன்பும் காட்சி மறைந்த பின்பும் நிலையாய் இருந்ததும் இந்த மனம்தான். தன்னால் உருவாக்கப்பட்ட காலம் இடங்களைக்கடந்ததாய்க் கனவில் வெளியான சிருஷ்டிப்பொருட்களின் அறிவில் எட்டாததாய் நின்றதும் அந்த மனம் தான். கனவில் வெளியான நல்ல தீயபொருட்கள் அத்தனைக்கும் ஆதாரமாய் இருந்ததும் அந்தமனம்தான். ஆதியாய் இருந்ததும் தன்னிடத்தே தனக்காக வெளியானதும் வெளியானபொருட்களுக்கு மறைந்ததாயும், முடிவாய் இருந்ததும் அந்தமனம்தான். (ஆதியாய், வெளியானதாய், மறைந்ததாய், அந்தமாய் இருந்தது மனமே)

இதுபோல வாஜிபுல்வுஜூது ஆகிய உண்மைப்பொருள் கெட்டழியாமலும் விகாரப்படாமலும் இருந்தபடியே தன் சொந்தநிலையில் (அஹதுடைய மர்த்தபாவில்) இருந்துகொண்டு எவ்வித முன்மாதிரியுமே இல்லாமல் தன்னிடத்தே தனக்காகக் காலமாகவும் இடமாகவும் சர்வபிரபஞ்சங்களாகவும் வெளியாகியிருக்கிறது. நுட்பமாய்ப் பலகண்ணோட்டங்களோடு சிந்தனை செய்தால் **மனிதனுடைய பகுத்தறிவுக்கு இது அப்பாற்பட்ட ஓர் விஷயமேயல்ல.** அதாவது இது எல்லாமனிதருடைய அறிவுக்கும் எட்டக்கூடிய ஓர் விஷயம்தான் கனவில் வெளியான ஓர் பொருள் மனதைவிட்டும் வேறான ஓர் தனிப்பொருள் என்று கூறுவது ஆராய்வும் விளக்கமின்மையும் வஹ்முமெயன்றி வேறு என்ன?

இந்த விபரத்தில் இறைவழி நடக்கமுற்படும் உனக்கு இப்போது ஹக்குக்கெட்டழியாமலும் விகாரப்படாமலும் இருந்தபடியே இருக்கச் சர்வமும் அதில் வெளியாக முடியும் என்ற உண்மைமட்டுமே இவ்விடத்தில் போதுமானதாகும். பின்வரும் சில கடினவிளக்கங்களுக்கு இவ்வுண்மை அவசியமாய் இருப்பதால் இதைப் பல கண்ணோட்டங்களோடு சிந்தனை செய்து விளங்கிக் கொள்ள வேண்டும். “ஹுவல் அவ்வலு” போன்ற வேதவசனங்களையும். “அல்லாஹ்தவிர இலாஹு இல்லையென்ற கலிமாவின் பொருளையும் கனவுக்காட்சியோடு சிந்தனைசெய்து ஓரளவு தெளிவுபெறவேண்டும். (கவனத்தை வேறுதிசையில் திருப்பாமல் பொறுமையோடு தொடர்ந்து வாசிக்கவும்)

**2ஆவது கேள்வி:**

கனவுக்காட்சி பொய்த்தோற்றமான ஓர்விஷயம் என்பது எல்லோருக்குமே தெரியும். ஆனால் நிஜமாகக்காணுகிற, காட்சியளிக்கிற சர்வ உலகங்களையும் அவற்றிலுள்ள சர்வசிருஷ்டிகளையும் பொய்த்தோற்றம் என்று, அல்லது, பொய்த்தோற்றத்தைப் போன்றது என்று ஒப்புக்கொள்வதும் நம்புவதும் எப்படி?

**பதில்:**

ஒருமனிதன் உறக்கத்தில் இருந்து கனவைக்காணும்போது அவனுடைய தத்துவங்களில் சுமார் இருபது தத்துவங்கள் மட்டும்தான் செயல்படுகின்றன. அந்த இருபது தத்துவங்களோடும் தன்னுடைய சூட்சும உடலோடும் ஓர் குறிப்பிட்ட குறுகிய நேரம் வரையிலும்தான் மனிதன் கனவைக் காணுகிறான். அதேமனிதன் விழிப்பு நிலையில் (ஜாக்கிரதாவஸ்த்தையில்) சுமார் 35, 40 தத்துவங்களோடும் ஸ்த்தூல உடலோடும் சுமார் நூறுவருடங்கள் சர்வ உலகங்களையும் காணுகிறான். குறைந்த தத்துவங்களோடு குறுகிய நேரம் கனவைக்கண்டு அனுபவித்தவனும் கூடிய தத்துவங்களோடு கூடிய நேரம் உலகைக் கண்டு அனுபவித்தவனும் அதே மனிதன்தான். குறுகிய நேரம் காண்பதைப் பொய்த் தோற்றம் என்றால், கூடிய நேரம் காண்பதைப் பொய்த் தோற்றமென்று ஏன் சொல்லக்கூடாது? ஏன் ஒப்புக்கொள்ள முடியாது? கனவின்போது தென்பட்டவையும் அனுபவித்ததையும் அவ்வேளையில் உண்மையாகவே தென்பட்டன. கனவு கலைந்த பிறகு அது ஓர் பொய்த் தோற்றமே என்பது தென்பட்டது. இதேபோல உலகை நாம் அனுபவிக்கும் போது அதன் சகல காரியங்களும் உண்மையாகவே தென்படுகின்றன. ஆனால், இறந்த பிறகு உலகு ஓர் பொய்த்தோற்றமே என்றும் கனவு போன்றதே என்றும் இப்போது நான் வந்திருக்கிற ஆகிறாவே உண்மையானது என்றும் மனிதன் காணவேபோகிறான். அதே மனிதன் இறைவனோடு ஐக்கியமாகும்போது (லிகாவை அடையும்போது) ஆகிறாவும் ஓர் நீண்ட பொய்த்தோற்றமே என்று கண்டறியப் போகிறான். இதில் என்ன ஆச்சரியம்?

நல்லடியார்களான நபிமார்கள் றசூல்மார்கள் ஒலிமார்கள் உலகில் நடமாடும் போது சுமார் 96 தத்துவங்களோடும் ஸ்த்தூல, சூட்சும, காரண உடல்களோடும், அவற்றைவிட்டு நீங்கியும் இங்கிருந்துகொண்டே ஆகிறாவைப் பார்க்கிறார்கள். நடமாடுகிறார்கள். (இதைப்பின்னால் அறிவோம்). நித்திரைக்கும் மௌத்துக்கும் வேறுபாடுகிடையாது. உலகம் ஓர் நீண்ட கனவை போன்றதே என்பதை மனிதன் மரணத்தின் பின் ஒப்புக்கொள்வான் என்பதில் சந்தேகமே இல்லை. இதைக் குர்ஆன், ஹதீஸ்கள் தெளிவாய் விபரம் தருகின்றன. அனுபவஸ்த்தர்கள் அனுபவத்தில் காணுகிறார்கள்.

ٱللَّهُ يَتَوَفَّى ٱلْأَنفُسَ حِينَ مَوْتِهَا وَٱلَّتِى لَمْ تَمُتْ فِى مَنَامِهَا ۖ
فَيُمْسِكُ ٱلَّتِى قَضَىٰ عَلَيْهَا ٱلْمَوْتَ وَيُرْسِلُ ٱلْأُخْرَىٰٓ إِلَىٰٓ أَجَلٍ مُّسَمًّى ۚ إِنَّ
فِى ذَٰلِكَ لَءَايَٰتٍ لِّقَوْمٍ يَتَفَكَّرُونَ

39-42 *மனிதர்கள் இறக்கும்போதும் இறக்காமல் நித்திரையில் இருக்கும் போதும் அல்லாஹ்வே அவர்களுடைய உயிரைக்கைப்பற்றுகிறான். பின்னர் எவர்கள் மீது மரணம் விதிக்கப்பட்டதோ அவர்களுடைய உயிரை நிறுத்திக் கொள்கிறான். மற்றவர்களைக் குறிப்பிட்டகாலம் வரையில் அவன் அவனிடமே அனுப்பிவிடுகிறான். கவனித்து அறியக்கூடிய சனங்களுக்கு நிச்சயமாக இதில் பல படிப்பினைகள் இருக்கின்றன.*

وَيَوْمَ يَحْشُرُهُمْ كَأَن لَّمْ يَلْبَثُوٓا۟ إِلَّا سَاعَةً مِّنَ ٱلنَّهَارِ يَتَعَارَفُونَ بَيْنَهُمْ ۚ قَدْ
خَسِرَ ٱلَّذِينَ كَذَّبُوا۟ بِلِقَآءِ ٱللَّهِ وَمَا كَانُوا۟ مُهْتَدِينَ

10-45 *அவர்களை ஒன்றுசேர்க்கும் நாளில் ஒருபகலின் சொற்ப நேரம் தவிர தாங்கள் (உலகில்) தங்கவில்லை என்று அவர்கள் எண்ணுவதுடன், தங்களுக்குள் ஒருவரையொருவர் அறிந்தும் கொள்வார்கள். அல்லாஹ்வின் சந்திப்பை பொய்யாக்கியோர் நிச்சயமாக நஷ்டமடைந்தே இருப்பார்கள். வழிகாணாதவர்களாயும் அவர்கள் இருப்பார்கள்.*

قَالُوا۟ يَٰوَيْلَنَا مَنۢ بَعَثَنَا مِن مَّرْقَدِنَا ۜ هَٰذَا مَا وَعَدَ ٱلرَّحْمَٰنُ وَصَدَقَ
ٱلْمُرْسَلُونَ

36-52 *அன்றி எங்களுடைய துக்கமே! எங்களை நித்திரையில் இருந்து எழுப்பியவர்கள் யார்? என்று கேட்பார்கள். றஹ்மான் வாக்களித்ததும் நபிமார்கள் கூறிவந்த உண்மையும் இதுதான் (என்று கூறப்படும்).*

இவைபோன்ற மற்றும் ஆயத்துக்கள் ஹதீஸ்களையும் ஆராய்க. வாழ்வு ஓர் நீண்ட கனவு போன்றதே என்பதையும் மரணம் நித்திரை போன்றதே என்பதையும் ஆகிறா நித்திரையிலிருந்து விளிப்படைவது போன்றதே என்பதையும் சிந்தனை செய்து தெளிவு பெறுக.

**3ஆவது கேள்வி:**

குர்ஆன் ஹதீஸ்களின் விபரப்படி இறைவன் தேவையற்றவனாய்ப் பூரணத்தன்மை உடையவனாய் இருக்கிறான் என்பது தெரியவருகிறது. அப்படியிருந்தும் அவனே அவனிடத்தில் சர்வமுமாய் வெளியாகியிருக்கிறான் என்றால் வெளியாகவேண்டிய தேவையுடையவன் என்றும் பூரணத்தன்மையற்றவன் என்றும் ஆகிவிடுகிறதே? பூரணத்தன்மையுள்ளது, தேவையற்றது ஏன் வெளியாக வேண்டும்? அதிலும் நாய், பன்றி, மல, ஜலம் போன்ற அசூசிப் பொருட்களாகவும் ஏன் வெளியாக வேண்டும்? இதை எப்படி ஒப்புக்கொள்வது.

**பதில்:**

**“வா**ஜிபுல் உஜூது” அல்லது “தாத்து” அல்லது “ஹக்கு” என்று நாம் கூறுகிற மூலப்பொருளான இறைவனுக்கு இரண்டு விதமான பூரணத்தன்மைகள் (கமாலியத்து) இருக்கின்றன. அவற்றுள் ஒன்றை “கமாலுன்தாத்தியுன்” என்று கூறப்படும். அதாவது இறைவனுடைய “தாத்து”சம்பந்தமான பூரணத்தன்மை என்பதே இதன் பொருளாகும். இதில் முன்கூறிய தாத்து சம்பந்தமான பூரணத்தன்மையென்றால் இறைவன் அவனல்லாத வேறொன்றில் வேறொன்றுக்காக, வேறொன்றால் என்கிற வேற்றுமை எதுவுமே இல்லாமல் அவனே அவனிடத்தில், அவனுக்காக, அவனால் வெளியானான் என்பதாகும். அதாவது நாம் இப்போது குறிப்பிடுகிற நிலைமையில் சிருஷ்டி என்பதே இல்லையாகையால் வேறொன்றுக்காக, வேறொன்றில் என்றில்லாமல் தன்னால் தனக்காக தன்னிடத்தில் என்று கூறுகிறோம். இந்தப் பூரணத்தன்மைக்கு வேறொன்றின் தேவையில்லாமல் இருப்பது மிகமிக அவசியம். ஒன்றும் தேவை இல்லை என்பதன் கருத்து என்னவென்றால். தங்கத்தில் நகைகள் எல்லாவற்றுடையவும் தோற்றமும் சகல பாகங்களும் அடங்கியிருப்பதுபோல, இறைவனுடைய இந்த “அஹதியத்” என்ற தாத்துக்குள் சகலமுமே சம்பூரணமாய் அடங்கியிருக்கின்றன. அவன் தன்னில்தானே நாயகத்தன்மைக்குரிய சர்வ நிருவாகங்களையும், அவற்றின் சட்டங்கள் சார்புகளுடனும் அவற்றின் சர்வதேவைகளுடனும் அவற்றை அவன் தன்னிலே பார்ப்பதனால்தான் அனுபூதியினால் வேறொன்றின் தேவை அவனுக்கு அவசியமில்லை என்று கூறுகிறோம்.

அதாவது வேறொன்றும் தேவையில்லை என்று நாம் கூறுவது ஏனென்றால் இறைவன் இந்தக்காட்சியினால் சர்வபிரபஞ்சங்களையும் வெளிப்படுத்துவதைவிட்டும் தேவையற்றவனாய் இருக்கிறான் என்பதற்காகத்தான். சர்வபிரபஞ்சங்களையும் அவற்றிலுள்ள சர்வசிருஷ்டிகளையும் பார்ப்பது (அறிவது) என்ற இந்தக் காட்சி உண்டாவதில் அவனுக்கு யாதொரு தேவையும் இல்லவே இல்லை. ஏனென்றால் அவனுடைய “வஹ்தானியத்துக்குள்” எல்லாமே சம்பூரணமாய் அடங்கியிருப்பதால் சர்வசிருஷ்டிகளினதும் தோற்றமும் காட்சியும் அவனுக்கு இருக்கவே செய்கிறது. இந்தகாட்சி (அறிவு) விதையில் மரத்தையும் அதன் சகல பாகங்களையும் முற்றாய் காண்பதைப்போல அறிவினால் ஏற்படும் காட்சியாகும். (இதை மறைந்த காட்சியென்று) நாம் கூறினாலும் அவனிடத்தில் அது மறைந்த காட்சியேயல்ல. அதாவது ஒரே பொருளில் இருந்து இறுதிவரையிலும் வெளியாகக்கூடிய அத்தனையும் ஒரே நேரத்தில் பூரண அறிவினால் அறிவதைப்போல, காண்பதைப்போல உள்ள ஞானக்காட்சியாகும். இவ்விஷயத்தை நுட்பமாய் விளங்கிக்கொள்ள வேண்டும்.

## (2)

அடுத்தது நாமம் (பெயர்) சம்பந்தமான பூரணத்தன்மையென்பது இறைவன் அவனிடத்திலேயே வெளியாகி வேறுபோல் தென்படும் சர்வ பிரபஞ்சங்களிலும் தன்னைக் காண்பதாகும். இது வகையில் தொகையைக் காண்பது போலுள்ள காட்சியாகும். அதாவது மரம், கிளை, இலை, பழம் முதலாம் சார்புகளில் விதையைப் பார்ப்பதுபோலுள்ள, பலவற்றில் ஒன்றைக் காணும் வெளிக்காட்சியும் கண்காட்சியுமாகும். நாமம் சம்பந்தமான இந்தக் காட்சி சர்வபிரபஞ்சங்களும் அவற்றிலுள்ள சர்வசிருஷ்டிகளும் வெளியாவதைப் பொறுத்தே உண்டாகிறது. ஏனென்றால் சர்வபிரபஞ்சங்களும் வெளியானாலேயன்றி அவன் தன்னிடத்தே தன்னைக் கண்டறிவது முடியாததாகும். ஆகவே, இவ்விடத்தில் தானல்லாத ஒன்றைக்கொண்டு பூரணத்துவம் தேடுகிறானே என்பதுபோல ஒரு சந்தேகம் பிறக்கிறது. அது அப்படியல்ல. உண்மையான தாத்துத் தன்னில் வெளிப்பட யாதொரு “மள்ஹர்” அவசியமில்லாமலே வெளியாகிப் பூரணத்தன்மையுடையது என்பது உண்மை. ஏனென்றால் சிருஷ்டிகளின் பூரணத்தன்மைக்காவும் அஸ்மாவும் ஸுயுனுமாகிய நாமங்கள் காரியங்களின் பூரணத்தன்மைக்காகவும்தான் அவனுடைய தாத்துக்காகவல்ல. ஆகவே, அவனுடைய தாத்துக்கு இன்னொன்றைக் கொண்டு பூரணத்துவம் ஏற்படுகிறதே என்ற சந்தேகம் ஏற்படவே முடியாது. (நுட்பமாக உணர்க).

ஆயினும் அவனுடைய நாமங்களின் பூரணத்தன்மை சிருஷ்டிகள் உண்டாவதனால் உண்டாகிறதே? ஆகையால் அவனுடைய நாமங்கள் பூரணத்தன்மை இல்லாதனவாய், வேறொன்றின் தேவையுடையனவாய் இருக்கின்றனவே? என்று ஒரு சந்தேகம் பிறக்கிறது. இதுவும் அப்படியல்ல. சிருஷ்டி உண்டாவதனால்தான் நாமங்களுக்குப் பூரணத்துவம் ஏற்படுகிறது என்றிருந்தால்தான் அந்தச் சந்தேகம் சரியாகும். விஷயம் அப்படியல்ல. சிருஷ்டிகள் உண்டாவதற்கு முன்பே நாமங்களுக்குப் பூரணத்தன்மையுண்டு என்பது நிச்சயமான உண்மை. தாத்து எப்படிப் பூரணமுடையதோ நாமங்களும் அப்படிப் பூரணமுடையவைதான். ஆனால் கண்காட்சி சிருஷ்டி உண்டாவதைப் பொறுத்தது என்று கூறப்படுவது நாமங்களின் பூரணத்தன்மை சிருஷ்டியில் வெளியாவதைத்தான். ஆகவே தாத்தும் அதன் நாமங்களும் எவற்றின் தேவையுமே இல்லாத சம்பூரணமான பூரணமுடையவையோயாகும். சிருஷ்டி என்றால் என்ன? என்பதை அறிந்து கொள்வதற்கு முன் இதைப் பூரணமாய் விளங்கிக்கொள்வது கடினம்தான். ஆயினும் பொதுப்படையாய் விளங்கிக் கொள்க.

இப்போது வேறோர் கோணத்தில் சிந்தனை செய்துபார். இதற்கு முன் உண்டானவை இப்போது உண்டாகிக் கொண்டிருப்பவை இனிமேல் உண்டாக வேண்டியவை அத்தனையுமே அவனில் நின்றுமே உள்ளவை என்றால். சிருஷ்டி என்பது என்ன. அவன் அவனுடைய கற்பனையை அவனிடத்தில் “குன்” என்ற சொல்லால் உருவாக்கிக் கொண்டதேயாகும். அப்படியானால் அவனில் அவனிடத்தில் இல்லாதது எது? எதுவுமே கிடையாது. எல்லாமே அவனிடத்தில் அவனுடைய (கல்பில்) லவ்ஹுல் மஹ்பூலில் நிரப்பமாய்ப் பரிபூரணமாய் இருக்கவே இருக்கிறது. இப்படியிருக்கும் நிலைமையில் யாருக்கு எது தேவை? சிருஷ்டியின் தேவையாய் இருந்தாலும் கூட அதுதேவை என்று கூறமுடியாது. ஏனென்றால் அது அவனிடத்தில் அவனுக்காகவே இருக்கிறது. எவனுடைய தேவையும் அங்கு கிடையாது. அவன்

அவனிடத்தில் அவன் நாடியதை உருவாக்குகிறான். இதைத் தேவையென்று எப்படிக் கூறமுடியும்? இப்போது கலிமாவை நோட்டமிட்டுபார். அல்லாஹ்வையன்றி ஒன்றுமே கிடையாது என்றால் யாரிடத்தில் யார் தேவை கொள்வது? எவரிடத்திலும் எதிலும் எந்தத் தேவையுமே கிடையாது ஏன்? அவனையன்றி எதுவுமே இல்லையென்பது உண்மையானால் சிருஷ்டிகளின் தேவைகூட சிருஷ்டி என்ற கட்டில் கட்டுண்டிருக்கும் வரையில் ஏற்படுகிற ஓர் மயக்கமேயல்லாமல் உண்மையில் தேவையென்பது ஒன்று கிடைக்கவே கிடையாது. நான் ஓர் சிருஷ்டியே என்ற வஹ்மில் கட்டுண்டிருக்கிற ஓர் சாதாரண மனிதன் இவ்வுண்மையை விளங்கிக் கொள்வது மிக மிகக் கடினமான ஓர் விஷயம்தான், ஆகவே பொறுமையோடு நுட்பமாய் உணரவேண்டும். முக்காலங்கள், மூவிடங்கள் என்ற கடினமான திரைகளில் சிக்குண்டிருக்கிற மனிதன் இதைவிளங்கிக் கொள்வது கடினம்தான்.

## (3)

**அ**டுத்தது இறைவனே அசூசிப் பொருட்களாய் வெளியானான் என்பதும் அசூசிப் பொருட்களும் இறைவனே என்பதும் மேலோட்டமாய்ப் பார்க்கும்போது ஒன்றுபோல் தென்பட்டாலும் இவ்விரண்டுக்குமிடையில் மிகநுட்பமான வேறுபாடு இருக்கிறது. இரண்டும் தௌஹீதை உறுதிப்படுத்தக் கூடியவைதான். எனினும் முந்தியது உண்மையை நோக்கியும் பிந்தியது கண்டப்படுத்தல் என்ற கட்டுப்பாட்டை நோக்கியும் திரும்புகின்றன. மேலும் பிந்தியது வஹ்மையும் அதுக் குறைவையும் ஏற்படுத்துகின்றன. ஆகவே அல்லாஹ்வுக்கென்றே மட்டும் குறிப்பிடப்பட்ட “அல்லாஹ்” என்ற நாமத்தைச் சிருஷ்டியின்பேரில் நடாத்துவது பொருத்தமானதல்ல. சிருஷ்டி என்பது நாமமும் தோற்றமும் பெயருமேயன்றிப் பொருளல்லாமல் இருக்கிறது. இதைப்பின்னால் அறிவோம். இறைவனுக்கே சொந்தமானது என்றில்லாத திருநாமங்களைக்கொண்டு சிருஷ்டிகளைக் கனப்படுத்தும் நோக்கமாக குர்ஆனில் சிற்சில இடங்களில் சில நாமங்கள் பாவிக்கப்பட்டுள்ளன என்பதை முன்பே விளக்கியிருக்கின்றேன். ஆனால் அல்லாஹ் என்ற திருநாமத்தைக் கொண்டு எந்தச் சிருஷ்டியையும் அழைக்கப்படவே இல்லை. ஆகவே இவ்விஷயத்தில் இரண்டு உண்மைகள் வெளிப்படுகின்றன. அதாவது சாதாரண மனிதர்கள்(அவாம்கள்) சிருஷ்டிகள் என்ற தனித்தனிப் பொருட்கள் இருப்பதாய்க் காண்பதால் இறைவனுடைய அல்லாஹ் என்ற திருநாமத்தைச் சிருஷ்டியின்பேரில் பாவிப்பது தவறு என்பது ஓர் உண்மையாகும். கவாஸ்ஸுக்கள் என்ற மகான்களான அறிஞர்கள் (ஞானிகள்) சிருஷ்டி என்பது சொல்லும், நிறமும், தோற்றமும் கொண்ட, இறைவனைவிட்டும் வேறில்லாத வெறும் கற்பனையாய் இருப்பதாலும் அவை இறைவனின் பண்பே (ஸிபத்து) என்று காண்பதாலும் இறைவனின் திருநாமத்தைச் சிருஷ்டியின் பேரில் நடாத்துவது தவறல்ல என்பது மற்றோர் உண்மையாகும். இவ்விரு உண்மைகளையும் நுட்பமாய் நீ விளங்கிக் கொண்டால் கமாலை உடைய தத்துவ ஞானிகளில் ஒருவராக நீ இருக்கிறாய் என்பது கருத்தாகும். இந்த இருவித விளக்கங்களும் அறிவுத்தகைமையைப் பொறுத்தவையேயன்றி ஒன்றுக்கொன்று விரோதமானவையல்ல. இது தத்துவ விளக்கமாகும்.

## (4)

இப்போது சிந்தனை செய்துபார், உலகிலுள்ள **நல்லவை கெட்டவையாகிய எந்தச் சிருஷ்டியேயானாலும், அவை நிறமும், தோற்றமும் பெயருமேயல்லாமல் பொருட்களேயல்ல மனித அறிவினால் இனம்காணமுடியாத ஏதோ ஓர் சூக்கும வஸ்த்துவுக்கு, அதன் நிலைமைக்கும் குணாதிசயங்களுக்கும் ஏற்றபடி மனித அறிவினால் இடப்படுகிற காரணப்பெயர், சுட்டுப்பெயர், குணப்பெயர், இடுகுறிப்பெயர்களைத்தான் நாம் சிருஷ்டி என்று காணுகிறோம்.** எப்படியென்றால் உதாரணமாகப் பானை என்ற சிருஷ்டிப்பொருளை எடுத்துக்கொள்வோம். மண்ணென்ற மூலப்பொருளின் விகாரப்பட்ட ஓர் தோற்றத்துக்கு எம்மால் இடப்படுகிற வெறும் பெயர்தான் பானை என்பது. அதாவது மண்ணின் ஒரு தோற்றத்துக்குப் பானை என்று நாம் பெயர் சூட்டியிருக்கிறோம். பானை என்பது மண்ணைவிட்டும் வேறான ஓர் தனிப்பொருள் என்றும் மருட்சியடைகிறோம். ஆனால் பானை என்பது மண்ணின் ஓர் பெயரேயன்றிப் பொருளேயல்ல. கடலில் உண்டாகிற அலையும் நுரையும் ஒன்றுக்கொன்று வேறானவைபோல் தென்பட்டாலும் உண்மையாக உள்ள பொருள் கடல் மட்டுமேதான். கடலின் ஓர் தோற்றத்தை அலையென்றும் இன்னோர் தோற்றத்தை நுரையென்றும் கூறினோமேயல்லாமல் அலையோ, நுரையோ கடலையன்றிப் பொருட்களேயல்ல. வெறும் பெயர்கள் மட்டும்தான். அதாவது ஏதோ ஓர் மூலப்பொருளின் பலதோற்றங்களுக்கு நாம் பல பெயரைச் சூட்டுகிறோம். இந்தப் பெயரும் நிறமும் தோற்றமும்தான் பொருள் என்றும் மருண்டு விடுகிறோம். இவ்வுதாரணங்கள் விளக்கத்துக்கு இலகுவானவையாய் இருப்பதால் எடுத்துக்கொண்டோமேயல்லாமல் இறைவனுடைய விஷயத்தில் பொருந்தாதவையேயாகும்.

ஆகவே இப்போது கனவில் காணுகிற நல்ல தீய பொருட்கள் அத்தனையையும் சிந்தனைக்கெடுத்துப்பார். அவையெல்லாம் உள்ளத்தின் சக்தியால் உள்ளத்தில் வெளியான வெறும் நாமங்களும் தோற்றங்களும் நிறங்களுமேயன்றி மனதைவிட்டும் வேறான தனித்தனியான பொருட்களேயல்ல. அப்படியிருந்தும் எம் அறிவுக்குறைவினால் அவை தனித்தனியான பொருட்களேயென்று மருண்டுவிடுகிறோம். மனம்தான் கனவின் தோற்றங்களை உருவாக்கியதேயல்லாமல் தோற்றங்களால் மனம் உருவானதேயல்ல. இப்போது நுட்பமாய்ச் சிந்தனை செய்துபார். மனம் என்பதை ஓர் பொருளாக வைத்துக்கொள். இந்த மனம் என்பது மனம் என்ற சொல்லினால் (பெயரினால்) உணர்த்தப்படுகிற ஓர் உண்மைப்பொருளாய் இருக்கிறது. அதாவது சொல்லும் பொருளுமாய் இருக்கிறது. இந்த மனதில் கனவின்போது தோன்றி மறைந்த நல்ல, தீய பொருட்கள் அத்தனையும் பொருளல்லாத வெறும் சொற்களாகவே (பெயர்களாகவே) இருக்கின்றன. அவை சொற்களேயன்றிப் பொருட்களேயல்ல.

இதுபோல வாஜிபுல்உஜுது என்ற உண்மைப்பொருள் உஜுது என்ற சொல்லினால் அல்லது "அல்லாஹ்" என்ற சொல்லினால் உணர்த்தப்படுகிற உண்மைப் பொருளும் சொல்லுமாய் (பெயருமாய்) இருக்கிறது. இந்த உண்மைப் பொருளில் கனவைப்போல் தோன்றி மறையும் சர்வசிருஷ்டிகளும் பொருளல்லாத நாமமும் நிறமும், தோற்றமும், கொண்ட வெறும் கற்பனைகளாய் இருக்கின்றன. ஆகையால்தான் சர்வபிரபஞ்சங்களையும் அறிஞர்கள் "மும்கீனுல் உஜுது" ஆதேயம் என்று கூறுகிறார்கள். ஆதேயம் என்றால் ஆதாரத்தின் (மூலப்பொருளின்) வேண்டுதல் (தேவை) உள்ள வெறும் நாமமும் தோற்றமுமே என்பதுதான் கருத்து. அதாவது ஆதேயம் என்றால் ஆதாரத்தையன்றித் தனியான ஓர் பொருலேயல்ல. மண்ணாகிய ஆதாரத்தின்மேல் தோன்றிய கற்பனையான பானை என்ற ஆதேயத்தை மருண்ட புத்தியால் (வஹ்மில்) மண்ணை விட்டும் வேறான ஓர் தனிப்பொருளாகவே மனிதன் காணுகிறான். அல்லது மனம் என்ற ஆதாரத்தினால் அதிலேயே கற்பனையாய்த் தோன்றிய ஆதேயமான பொருட்களை மனமாகிய ஆதாரத்தை விட்டும் தனித்த வேறோர் ஆதாரப் பொருட்களாக மனிதன் காணுகிறான்.

பானை என்ற கற்பிதமான தோற்றம் எடுபட்டால் பானை என்ற பெயரே கிடையாது. அப்பெயர் அழிந்துவிடும். மீண்டும் அந்த மண் குடமாகலாம். குடம் என்ற கற்பிதமான தோற்றம் எடுபட்டால் குடம் என்ற பெயரும் நீங்கி விடும். மண்மட்டுமே மிஞ்சும். மீண்டும் அந்தமண் சட்டியாகலாம். சட்டியென்ற கற்பிதமான தோற்றம் அழிந்து விட்டால் சட்டி என்ற பெயரும் இல்லாமல் ஆகிவிடும். மண் மட்டுமே மிஞ்சும். இப்போது சிந்தனை செய்துபார். பானை, குடம், சட்டி என்பவை எங்கே? பானை, சட்டி, குடம் என்பவை எவை? பானை, குடம், சட்டியென்ற பெயர்கள் மண்ணென்ற மூலப்பொருளுக்கு எம்மால் இடப்பட்ட வெறும் பெயர்களேயாகும். பானை, சட்டி, குடம் என்பவை உண்டாவதற்கு முன்பும், உண்டானபோதும் வெளிப்டைத் தோற்றமாயும், அத்தோற்றங்களின் பெயரில் மறைந்தும், அவை அழிந்தபின் மீதமாய் நின்றது மண் ஒன்று மட்டும்தான். இங்கே வஹ்முக்கு ஓர் சந்தேகம் பிறக்கலாம். அதாவது பானை செய்யும் வேலையைக் குடமும், குடம் செய்யும் வேலையைச் சட்டியும் செய்ய முடியாதே? ஆகவே வேறு என்றுதானே கொள்ளவேண்டுமென்று வஹ்மு கேட்கலாம். பானையும் வேலை செய்வதில்லை. குடமும் வேலை செய்வதில்லை. சட்டியும் வேலை செய்வதில்லை. அத்தோற்றங்களில் காட்சியளித்த மண்தான் வேலை செய்தது என்பதை வஹ்மு உணரவேண்டும். சர்வ சக்தியும் மண்ணுக்கே உரியது. இதேபோலசர்வ **சக்தியும் அந்த மூலப்பொருளுக்கே உரியது என்பது தான் ஏகத்துவம் என்பதன் சாரமாகும். இக்கொள்கைதான் இஸ்லாத்துடைய உயிராகும்.** இதை இப்போது ஓரளவுக்கு ஆராய்ந்து பார்ப்போம்.

أَنَّ ٱلْقُوَّةَ لِلَّهِ جَمِيعًا

2-165 *சர்வ சக்தியும் (தத்துவமும்) அல்லாஹ்வுக்கே உரியது. என்று குர்ஆன் கூறுகிறது.*

وَٱللَّهُ خَيْرُ ٱلْمَٰكِرِينَ

8-30 *சூழ்ச்சி செய்வோரின் எல்லாம் அல்லாஹ் மிக்க மேலானவன்.*

**சர்வ தந்திரமும் அல்லாஹ்வுக்கே** உரியது என்றும் குர்ஆன் கூறுகிறது.

சர்வகசன புவனங்களிலுமுள்ள சர்வசிருஷ்டிகளும், ஒவ்வோர் அணுவும் கூட சக்தியுடையதாகவே தென்படுகிறது. ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையான சக்தியுடையனவாகவே தென்படுகின்றன. இன்றைய மனிதன் அறிந்துள்ள அணுசக்தியை நோட்டமிட்டால் ஆச்சரியபடவேண்டியதாய் இருக்கிறது. இந்தச் சர்வகசன புவனங்களிலுமுள்ள சர்வஅணுக்களும் தனித்தனிச் சக்தியுடையவையே என்பது உண்மையானால் குர்ஆன் சர்வசக்தியும் அல்லாஹ்வுக்கே உரியது என்று கூறுவது பொய்யாய் முடியும். அப்படியல்லாமல் குர்ஆன் விளக்குவதே உண்மை என்றால் ஒவ்வொன்றும் தனித்தனிச் சக்தியுடையவை என்று மனிதன் கூறுவது பொய்யாகும். பகுத்தறிவைக்கொண்டு சிந்தனை செய்துபார். சர்வமும் அவனுடைய கற்பனைத்தோற்றமாய் இருப்பதால் **சர்வசக்தியும் அல்லாஹ்வுக்குரியது என்று குர்ஆன் கூறுவதுதான் பூரண உண்மையாகும்.** அப்படியானால் சிருஷ்டி அல்லாஹ் அல்லாத தனி மூலப்பொருள் என்று மருளுவது எம்முடைய பேதபுத்தியேயாகும்.

இப்போது சர்வதந்திரமும் அல்லாஹ்வுக்கே என்று குர்ஆன் கூறுவதை நோட்டமிட்டுப்பார். ஓர் பூனை ஓர் எலியைப் பிடிப்பதற்காக் கையாளும் தந்திரோபாயங்களை நாம் கண்டுதானே இருக்கிறோம். எலியும் பூனையும் அல்லாஹ் அல்லாதவை என்பது உண்மையானால் குர்ஆன் கூறுவது பொய்யென்றாகும். குர்ஆன் கூறுவதுதான் உண்மையென்றால் சர்வசிருஷ்டிகளும் அல்லாஹ் அல்லாதவை என்று கூறுவது பொய்யாகும். உண்மையான தெளிந்த அறிவைக்கொண்டு நோக்கினால் குர்ஆன் கூறுவதுதான் பூரண உண்மையாகும். சர்வசிருஷ்டிகளும் அல்லாஹ் அல்லாதவை என்று கூறுவது தவறான விளக்கமும் வஹ்முமாகும். இதேபோல குர்ஆனுடைய வாக்கியங்களையும் ஹதீஸ்களையும் ஆராய்ந்து தெளிவுபெறு. விபரித்தால் பெருகும்.

இவ்விடத்தில் ஓர் கடினமான சந்தேகம் பிறக்கிறது. அதாவது சர்வசக்தியும் சர்வதந்திரங்களும் அல்லாஹ்வுடையதுதான் என்றால் மனிதன் செய்யும் நன்மை தீமைகளுக்கு தவாபு, அதாபு ஏன் கொடுபடவேண்டும்? ஒன்றைவிட மற்றொன்று உயர்வு தாழ்வுடையதாய் இருப்பதால் இறைவன்

அநீதிசெய்கிறான் என்றல்லவோ முடியும்? என்பதுதான் எமது சந்தேகம். இந்தச் சந்தேகத்துக்கு 5வது கேள்வியில் மிகவிரிவான விளக்கம் தரப்பட்டிருக்கிறது. பொறுமையோடு வாசித்து விளங்கித் தெளிவு பெறவும்.

ஆகவே குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் பகுத்தறிவுக்கும் மாறாய் **அல்லாஹ் வேறு சிருஷ்டி வேறு என்று எவர் கூறுகிறாரோ அவர் குர்ஆனை ஒப்புக்கொண்டவருமல்ல, ஆராய்ந்து தெளிவுபெற்றவருமல்ல.** இவ்வகையினர்தான் கண்மூடித்தனமாய் ஒருவரையொருவர் பின்பற்றித் தௌஹீதின் உண்மையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டிருக்கிறார்கள். இன்றுள்ள 90 வீதமான பட்டதாரிகள்கூட இவ்வுண்மையை உணராமல் இருந்துகொண்டுதான் மக்களுக்கு வழிகாட்டுகிறார்கள். அவர்களுடைய வஹ்முக்கேற்றபடியே குர்ஆனுக்குப் பொருள் கூறுகிறார்கள்.

**ஹதீஸ்:** ***(சரியான)கல்விஞானமின்றி திருக்குர்ஆனுக்கு விளக்கம் கூறுபவன், நரகத்தைத் தம்முடைய இருப்பிடமாக்கிக் கொள்ளவும் என்று அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(றலி)**
**ஆதாரம்: திர்மிதி**

**ஹதீஸ்:** ***அமானிதம் பாழாக்கப்படும்போது நீங்கள் மறுமையை எதிர்பாருங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். எவ்விதம் அமானிதம் பாழாக்கப்படும்என்று வினவப்பட்டபோது தகுதியற்றோருக்கு அதிகாரம் நல்கப்படுங்கால் என்று அறிவித்தார்கள்.***

**ஆறிவிப்பவா: அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம்: புஹாரி**

சரியான தகுதியற்றோர் கல்வி புகட்ட முற்பட்டதனால்தான் அமானிதம் பாழாக்கப்பட்டிருக்கிறது இவ்விதமான மதிமாறாட்டமான விளக்கங்கள் எம்மை இறை சன்னிதானத்துக்கு எடுத்துச் செல்லாது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

إِنْ هِيَ إِلَّآ أَسْمَآءٌ سَمَّيْتُمُوهَآ أَنتُمْ وَءَابَآؤُكُم مَّآ أَنزَلَ ٱللَّهُ بِهَا مِن
سُلْطَٰنٍ ۚ إِن يَتَّبِعُونَ إِلَّا ٱلظَّنَّ وَمَا تَهْوَى ٱلْأَنفُسُ ۖ وَلَقَدْ جَآءَهُم مِّن
رَّبِّهِمُ ٱلْهُدَىٰٓ

53-23 *இவைகளெல்லாம் நீங்களும் உங்கள் மூதாதைகளும் வைத்துக்கொண்ட வெறும் பெயர்களேயன்றி ஒன்றுமில்லை. அதற்காக அல்லாஹ் உங்களுக்கு யாதொரு ஆதாரத்தை இறக்கிவைக்கவில்லை. அவர்கள் சரீர இச்சையின் பொருட்டு வீண்சந்தேகத்தைப் பின்பற்றுவதேயன்றி இல்லை. நிச்சயமாக அவர்களுக்கு இறைவனிடமிருந்து நேரானவழி வந்தே இருக்கிறது.*

இவ்வாயத்தைப் பலகண்ணோட்டங்களோடு சிந்தனை செய்யவும் சரீர இச்சை என்பது புலனாட்சி என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ ﴿٢٦﴾ وَيَبْقَىٰ وَجْهُ رَبِّكَ ذُو ٱلْجَلَٰلِ وَٱلْإِكْرَامِ

55-26,27 *பூமியிலுள்ளயாவும் அழிந்தேபோகும். மிக்க கண்ணியமும் பெருமையும் தங்கிய உமது இறைவன் மட்டும் நிலைத்திருப்பான்.*

أَءِلَٰهٌ مَّعَ ٱللَّهِ ۚ قُلْ هَاتُوا۟ بُرْهَٰنَكُمْ إِن كُنتُمْ صَٰدِقِينَ

27-64 *அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? நீங்கள் உண்மை சொல்பவர்களாய் இருந்தால்உங்களுடைய அத்தாட்சிகளைக் கொண்டு வாருங்கள் என்று நீர் கூறும்.*

இவைபோன்ற பல ஆயத்துக்கள் குர்ஆனில் இடம்பெறுகின்றன. ஆகவே இருப்பதாயும் தனித்தனி மூலப்பொருட்கள் போலும் தென்படுகிற சிருஷ்டிகள் யாவும் வெறும் நாமமும் தோற்றமுமேயல்லாமல் அல்லாஹ்வை விட்டும் வேறான தனித்தனிப் பொருட்களேயல்ல. ஜடம் என்றால் என்ன? என்பதை அறியாதோர் இதை விளங்கிக்கொள்வது கடினம்தான். இவ்விபரம் தெளிவாய் மனதில்

அமைவதற்காகச் சிற்சில விஷயங்களை இன்னும் ஆலோசனைக்கெடுக்க வேண்டும். நீ கண்டுகளித்த சினிமாப்படத்தை நோக்கி ஆராய்தல் செய்துபார். அத்திரையில் நீ கண்ட காட்சிகள்யாவும் இருளினாலும் ஒளியினாலும் உண்டாக்கப்பட்டவைதான். வெறும் கற்பனைத் தோற்றங்களேயன்றி உண்மையான பொருட்களேயல்ல. இந்த விஷயத்தைத் தெளிவாய்ப் புரிந்துகொண்டால் இறைவன் எந்த நாமத்திலும் தோற்றத்திலும் கட்டுண்ணாத மிகமிகத்தூயவன் என்பதை அறிந்து கொள்ளலாம். ஆயினும் அவனுக்கு எப்பெயரைச் சூட்டினாலும் அப்பெயரை ஏற்பவனாகவும் இருக்கிறான் என்பதையும் அறிந்து கொள்ளலாம். இந்த விபரம் தௌஹீதைச் சரியாய்ப் புரிந்து கொள்வதற்கு மிகமிக அவசியமாய் இருப்பதால் இதை இன்னும் ஓர் கண்ணோட்டத்தோடு நாம் ஆராய்வோம். சடைவுகொள்ளாமல் செவி தாழ்த்துவாயாக.

## (5)

**இ**றைவன் தன்னைத் தன்சிபத்துக்களில் (பண்புகளில்) திரைகளில் வெளியாக்க நாடினான். இந்தச் சிபத்து என்ற திரையில் அவனுடைய தாத்து எந்தத் திரையில் (பண்பில்) வெளியானதோ அதற்கு இஸ்மு (நாமம்) அல்லது பெயர் என்று கூறுப்படும். உதாரணமாக “ஹயாத்து” என்ற (பண்பில்) திரையில் ஹையு ஜீவனுள்ளவன். அறிவு என்னும் திரையில் “அலிமுன்” அறிவுள்ளவன். தத்துவம் என்னும் திரையில் “கதீறுன்” தத்துவமுடையவன். இதேபோல மற்றும் ஸிபத்துக்களான பண்புகளையும் யூகித்துக்கொள்ள வேண்டும். இதேபோல் இந்த எல்லாப் பண்புகளும் (ஸுறத்துக்கள் - திரைகள்-ஸிபத்துக்களுக்கும்) இலாஹிய்யான அஸ்மாக்கள் (நாமங்கள் - பெயர்கள்) என்றும் “முஸம்மா” என்றும் கூறப்படும். இது எதைப்போல் என்றால் எல்லா நகைகளுடைய பெயரும் தங்கத்துடைய பெயராய் இருப்பதைப்போல. அல்லது கனவில் வெளியான அத்தனை பொருட்களின் பெயர்களும் மனத்துடைய பெயராய் இருப்பதைப்போல. அதாவது மோதிரம், வளையல், மாலை, காப்பு, தூக்கு என்று கூறப்படுகிற எல்லா நகைகளுடைய பெயர்களும் எல்லா நகைகளுடைய உருவங்களும், நகைகளாக்கப்படுவதற்கு முன் தங்கமாய்த், தங்கத்தின் பெயராகவே இருக்கிறது. ஆயினும் நகைகளாக்கப்பட்டபின், முன்கூறிய தங்கத்தின் பெயர்களுக்குப் பெயராகவே வாயினால் கூறும் பெயர்கள் அமைகின்றன. அதாவது தங்கத்தின் பெயர்தான் மோதிரம் என்பது. இது தங்கத்தின் (முஸம்மா) பெயரேதான். ஆனால் நாவினால் மோதிரம் என்று வெளியான சொல் (பெயர்) மோதிரம் என்ற உண்மைப் பெயருக்குப் பெயராய் இருக்கிறது. அதாவது முஸம்மாவுக்கு முஸம்மாவாய் இருக்கிறது. நாவினால் மோதிரம் என்று கூறிய சொல் (பெயர்) மோதிரமேயல்ல. மோதிரம் என்ற சொல்லினால் உணர்த்தப்படுகிற ஓர் பொருளின் உண்மைப்யெருக்குப் பெயராய் இருப்பதுதான் மோதிரம் என்ற சொல். (நுட்பமாய் உணர்க).

இதேபோல இறைவன் எப்போது அறிவு என்ற ஸிபத்தை (திரையை) எடுத்துக்கொண்டானோ அதனால் அவனறிவில் என்ன ஸுறத்து (தோற்றம்) வெளியாகுமோ அந்தத் தோற்றத்துக்கு (ஸுறத்துக்கு) இஸ்மு (முஸம்மா) உண்மையான பெயர் உண்மையான தாத்துவாகவே இருக்கிறது. ஆனால் (அலிமுன்) அறிவுடையோன் என்று நாவினால் வெளியாகிற சொல் அந்தத் தாத்தினுடைய உண்மைப் பெயருக்குப்பெயராய் இருக்கிறது. இதேபோல இறைவனுடைய மற்றும் ஸிபத்துக்களையும் (பண்புகளையும்) யூகித்து விளங்கிக்கொள்ள வேண்டும். திரையல்லது உடை என்பது தாத்துச் சிபத்தின் பேரில் வெளியாதல் என்று அறிந்துகொள்ள வேண்டும். இறைவன் எந்தச் சிபத்தின் பேரில் வெளியாக நாடினானோ அந்த ஸிபத்தின் தோற்றத்துக்கு (ஸுறத்துக்கு) (இலாஹியான அஸ்மா) இறைவனின் உண்மைப் பெயர் என்று கூறப்படும். அதாவது இறைவன் தன் அறிவில் தன்னை மண்ணாகக் கண்டானே அந்த ஸுறத்துக்கு உண்மையான (ஹகீகி) திருநாமம் என்று கூறப்படும். ஆனால் நாம் மண் என்ற நாவினால் கூறுகிற பெயர் (சொல்) அந்த ஹகீகியான உண்மைப் பெயருக்கு பெயராய் இருக்கிறது.

இதேபோல் எம் அறிவில் நல்லதாய்க், கெட்டதாய் காணப்படுகிற எந்தப் பொருளேயானாலும் இறைவனுடைய அறிவில் இல்லாத எந்தப் பொருளுக்கும் நாமம் கிடையாது. அவனுடைய அறிவிலுள்ளவைகளுக்கு எண்ணிக்கை, எல்கையும் எமக்குத் தெரியவே தெரியாது. இது மனித அறிவில் அமையக்கூடிய ஒரு விஷயமுமல்ல. ஆகவே, இறைவனுடைய பெயர்களுக்கு எல்லை, எண்ணிக்கையென்பதும் கிடையாது. ஏழு கடல்களும் மையாகவும் சகல மரங்களும் எழுதுகோல்களாகவுமானாலும்கூட அவனுடைய இஸ்முகளை (நாமங்களை) எழுத முடியாதென்றும் இப்படிப்பட்ட பல சமுத்திரங்களை மையாக எடுத்துக்கொண்டாலும் சரியேயென்றும் குர்ஆனில் இறைவன் விளக்கம் தருகிறான். ஏனென்றால் எந்த ஓர் அணுவாயினும் அவனுடைய அறிவிலுண்டோ அது அவனுடைய இஸ்மு (பெயர்) ஆகவே இருக்கும்.அவனுக்கு என்றே ஒரு குறிப்பான பெயர் இல்லாவிட்டாலும்கூட எல்லாப் பெயர்களும் அவனுடையவைதான். அவற்றை நல்லவையாகக் கெட்டவையாக மனிதன் கண்டாலும் சரியே. நல்லவை கெட்டவை கணிக்கப்படுவது பழக்க வழக்கம் நூற்கேள்வியறிவின் சட்ட அடிப்படையில்தான்.

இந்த இலாஹியான அஸ்மாக்கள் என்று கூறப்படுகிற அஸ்மாக்களின் (பெயர்களின்) ஸுறத்துக்கள்தான் சர்வசிருஷ்டிகளுடையவும் (ஹகீகத்) உண்மையாகும். அதாவது சர்வககனபுவனங்களிலும் அவற்றிலுள்ள சர்வ சிருஷ்டிகளிலும் (சர்வ சிருஷ்டிகளாயும்) வெளியாவதெல்லாம் அவனுடைய அஸ்மாக்களும் அவற்றின் குணாகுணங்களுமேயாகும். **ஓவ்வோர்**

**அணுவும்கூட அஸ்மாவுடைய (மர்த்தபாவில்) நிலையில் ஒவ்வோர் குறிப்பிட்ட தோற்றத்தில் வெளியாகிக்கொண்டேதான் இருக்கிறது.** அல்லாஹ்வுடைய தாத்து ஒவ்வோர் அணுவையும் தன் அறிவில் வேண்டியபடி வெவ்வேறாகவும் விபரமாகவும் அறிந்தேதான் இருக்கிறது. இம்மாதிரியாய்ச் சர்வத்தையும் ஒன்றாய்ச் சேர்த்துக்கொண்டதுபோல, தன்னுடைய அஸ்மாக்கள் சகலத்தையும் ஒன்று சேர்த்துக்கொண்டு ஒரு குறிப்பான ஸூறத்திலும் (தோற்றத்திலும்) தன் அறிவில் இருக்கவே செய்கிறது. **இப்படி எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு குறிப்பிட்ட தோற்றத்தில் இறைவன் தன் அறிவில் தன்னைத்தான் காண்கிறானே! அதன் பெயர் (இஸ்மு) தான் "ஹகீகத் இன்ஸானி" உண்மையான இன்ஸான் என்பதாகும்.** ஆனால் இன்ஸானுடைய வெளியிலுள்ள தோற்றம் (பௌதீக உடல்) அந்த ஹகீகத் இன்ஸானியென்னும் உண்மைத்தோற்றத்தின் தோற்றமாகும். இன்ஸானியென்ற முஸம்மாவுக்கு முஸம்மாவாகும். விருட்சத்தின் சகல பாகங்களையும் சேர்த்துக்கொண்ட விருட்சத்தைப்போலவே இன்ஸான் சகல இஸ்முகளையும் ஒன்றாய்ச் சேர்த்துக்கொண்ட (ஹகீகத்) உண்மைப்பொருளாகும். இந்த இஸ்மு இலாஹியானாலும் கௌனியானாலும் சரியே. **கலீபா என்பதுடையவும் "மள்ஹர்" என்பதுடையவும் இரகசியம் இதுதான்.** (நுட்பமாய் உணர்க).

**பெரும்பாலான புஸ்தகம், கிதாபுகள் விளக்கிக் காட்டாத மிக அபூர்வமான ஓர் உண்மையை இறைவழி நடக்கவிரும்பும் உனக்காக மிகச் சுருக்கமாய்க் கூறியிருக்கிறேன்.** உலகில் தென்படும் நல்ல, தீய பொருட்கள் யாவும் இறைவனுடைய நாமத்தின் தோற்றங்களே என்பதை மக்களின் பெரும்பாலாருடைய வஹ்மு ஏற்றுக்கொள்ள முடியாமல்தான் இருக்கிறது. இதுதான் மறதியென்பது. இந்த விபரத்தைத் தெளிவாயறிந்து உறுதியடையாதவரையில் "அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ்" பிசகற அறிந்து விண்ணப்பம் செய்கிறேன் அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்று மனிதன் நாவினால் கூறுவது பொய்ச் சொல்லேயாகும். ஆகையால்தான் மனிதன் கலிமாவை நாவினால் கூறிக்கொண்டும் தவறான அடாத காரியங்களில் ஈடுபடுகிறான். வழி தவறிச் செல்கிறான். நேரான வழியில் செல்வதாகவும் நம்புகிறான். ஆனால், கலிமாவைப் பூரணமாய் விளங்கியறிந்து தெளிவு பெறாதவரையில் மனிதன் தன் குறிக்கோளை அடையவே முடியாது என்பது உண்மை. ஆகவே இறைவழி நடக்க விரும்புகிற ஒவ்வோர் மனிதனும் பலவருட முயற்சி செய்தேனும் உண்மையை அறிந்து செல்லவேண்டியது அவசியமாகும். இவ்விஷயத்தில் இன்னும் தெளிவுபெற வேண்டும் என்பதற்காக இன்னும் சிறிது ஆராய்வோம்.

(6)

மனிதன் அசூசிப் பொருளாய் கணிப்பதில் மலமும் ஒன்று. இது மலம் என்ற நிலையில் இருக்கும் போது அருவருப்பை ஊட்டக் கூடியதாயும் துர்நாற்றம் உடையதாயும் இருக்கின்றதென்பது உண்மையே. ஆயினும் இதே பொருள் நேற்று எம்மால் தெரிவுசெய்து வாங்கப்பட்ட மீன், இறைச்சி, மரக்கறி, அரிசி மற்றும் பொருட்களும் சேர்ந்த ஒன்றே என்பதில் யாருக்கும் சந்தேகமே கிடையாது. அப்பொருட்களைச் சுவையுள்ள உணவாகச் சமைத்து உண்டபோது மணம், சுவைகளை அனுபவித்ததும் அதை வயிறார உண்டு மகிழ்ந்ததும் உண்மை. நாம் உண்டு கழித்த அதே உணவுப் பொருள்தான் இன்று சிற்சில மாற்றங்களை அடைந்த பின்பு அசூசிப்பொருளாய் வெறுப்பை ஊட்டக்கூடியதாய் துர்நாற்றமுடையதாய்க் காட்சியளிப்பதும் உண்மை. நாளைக்கு அப்பொருள் சிற்சில மாற்றங்களையடைந்து நாற்றமற்றுப் பசளை (உரம்) என்ற பெயரில் காட்சியளிக்கபோவதும் உண்மை. ஓர் நிலைமையில் (மர்த்தபாவில்) மீன், இறைச்சி, மரக்கறி, அரிசி என்று பெயரைப்பெற்ற பொருட்கள் இன்னோர் நிலைமையில் (மர்த்தபாவில்) மலம் என்ற பெயரைப் பெற்றது. இன்னோர் நிலைமையில் (மர்த்தபாவில்) பசளை (உரம்) என்ற பெயரைப் பெற்றது. இவ்விஷயத்தில் நடந்த உண்மைதான் என்ன?

நாம் எம்முடைய ஐந்துபுலன்களிலும் கட்டுண்டு புலனாட்சியில் ஊறியிருந்தமையால் ஓர் நிலைமையை (மர்த்தபாவை) விரும்புகிறவர்களாகவும் இன்னோர் நிலைமையில் (மர்த்தபாவை) வெறுக்கின்றவர்களாகவும் இருந்தோம். ஓர் நிலைமையை இன்பமாகக் கண்ட நாம் இன்னோர் நிலைமையை துன்பமாய் காண்கிறோம். இது எம்முடைய குற்றமேயன்றி எம்மால் அனுபவிக்கப்பட்ட பொருட்களின் குற்றமேயல்ல. எம்முடைய புலனறிவுக்கமைவாய் ஓர் நிலைமையை நல்லதாயும் இன்னோர் நிலைமையைத் தீயதாயும் நாம் கணித்தோமேயல்லாமல் பொருட்கள் எவையுமே நல்லவையோ கெட்டவையோ அல்ல. இதேபோல நாய், பன்றி, ஷைத்தான் மற்றும் நல்ல, தீயபொருட்கள் அத்தனையையும் சிந்தனை செய்துபார். உன்கண்ணுக்குத் தரப்பட்டுள்ள சக்தியை ஓர் பூதக்கண்ணாடியின் சக்திக்கு ஒப்பாகத் தரப்பட்டிருந்தால் ஆறுஅடி உயரமுள்ள ஓர் பொருளை அறுபதடி உயரமாகக் கண்டிருப்பாய். இதேபோல உன் சுவையறிவில் (நாவில்) ஓர் மாற்றம் தரப்பட்டிருந்தால் இனிக்கும் பொருளைக் கசப்பாகவும் கசக்கும் பொருளை இனிப்பாகவும் கண்டிருப்பாய். இதேபோல நுகரும்புலனில் (மூக்கில்) ஓர் மாற்றம் தரப்பட்டிருந்தால் நாறும்பொருளை நறுமணமாகவும் நறுமணத்தை நாறும் பொருளாகவும் கண்டிருப்பாய். இதேபோல உனக்குள்ள ஒவ்வோர் புலனறிவையும் நோட்டமிட்டுப்பார்.

இதிலிருந்து நாம் அறியவேண்டிய உண்மைதான் என்ன? எமக்குத் தரப்பட்டுள்ள புலனறிவுக்கமைவாய் நாம் சிருஷ்டிப் பொருட்களை அனுபவிக்கிறோம், நல்லவை தீயவையென்று கணிக்கிறோமேயல்லாமல் **சிருஷ்டிப்பொருட்களின் சரியான உண்மை எமக்குத் தெரியவே தெரியாது என்பதுதான் உண்மை.** எம்புலனறிவுக்கேற்றபடி ஓர் பொருளை வெறுக்கிறோம். இன்னோர் பொருளை

விரும்புகிறோம். அவ்வளவுதான். இதேபோல் ஓர் செயலில் நன்மைதீமை சரி பிழை கணிப்பதும் ஏதோ ஓர் அடிப்படையைக்கொண்டு கணிக்கிறோமேயல்லாமல் உண்மையான உண்மை எமக்கு உண்மையாகத் தெரியாது என்பதுதான். ஆகவே எமக்குத்தரப்பட்டுள்ள அறிவுக்கேற்ற கட்டுப்பாடுகள், கட்டளைகளை முறையாய் உண்மையின் அடிப்படையில் கையாண்டு பொய்மையில் (வஹ்மில்) இருந்துவிடுபட்டு எம் சுயநிலைமையை (பூரணத்தன்மை–சாந்தி) அடையவேண்டும் என்பதற்காகத்தான் கலிமத்துத்தையிபாவுடன் நபிமார்களை இறைவன் அனுப்பியிருக்கிறான். ஆனால் கலிமா இவ்வுண்மையை உணர்த்தி எமக்கு வழிகாட்டுமா? என்பதை எம்மில் அநேகர் சிந்திப்பதேயில்லை. ஆயினும் கலிமா வழிகாட்டும் என்பதில் சந்தேகமே கிடையாது.

“மா” என்று ஒருபொருள் இருப்பதாக ஒருவன் கேள்விப்பட்டோ புஸ்த்தக வாயிலாகக்கற்றோ அறிந்திருக்கிறான். ஆனால் அவன் ஒருபோதும் மாவைப் பார்த்ததேயில்லை. அதன் உண்மையான தோற்றம் அவனுக்குத் தெரியவே தெரியாது. ஒருநாள் அவனுக்கு ஓர் ரொட்டி கிடைத்தது. மாவையும் அதன் உண்மையையும் ரொட்டியையும் அதன் உண்மையையும் தெளிவாய் அறிந்திருந்த நீ அந்த ரொட்டியைப் பார்த்து இந்த ரொட்டி மாவல்லாததல்ல என்று கூறுகிறாய் அவன் உடனே சீ…சீ…. இது தவறான பேச்சு. மாவு ரொட்டியல்ல ரொட்டி மாவேயல்ல என்றுதான் கூறுவான். ஆனால் நீயோ மாவல்லாத ரொட்டி இல்லையென்றும் எல்லா ரொட்டிகளும் மாவேதான் என்றும் கூறுகிறாய். இதே போல விக்கிரகங்களான இலாஹுகளும் சர்வசிருஷ்டிகளான மற்றும் இலாஹுகளும் அல்லாஹ் அல்லாத தனித்தனி உஜுதுகள் என்று மருண்டிருந்த மக்களை நோக்கி “லா இலாஹு இல்லல்லாஹ்” அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்று கூறப்பட்டது. எல்லா இலாஹும் அல்லாஹ்தான் என்று விளக்கப்பட்டது. (இதன் சரியான விபரங்கள் ஆதாரங்களோடு பின்னால் விளக்கப்படும்.) இந்த உண்மையை உள்ளபடி விளங்கித் தெளிந்து கொண்டால் அவனுடைய கல்பின் (வானத்தின்) வாசல்கள் நிச்சயமாகத் திறந்து கொள்ளும். அவனுடைய கல்பில் போடப்பட்டிருந்த முத்திரைகள் உடைக்கப்பட்டுவிடும். திரைகள் நீங்கிவிடும்.

إِنَّ ٱلَّذِينَ كَذَّبُوا۟ بِـَٔايَـٰتِنَا وَٱسْتَكْبَرُوا۟ عَنْهَا لَا تُفَتَّحُ لَهُمْ أَبْوَٰبُ ٱلسَّمَآءِ
وَلَا يَدْخُلُونَ ٱلْجَنَّةَ حَتَّىٰ يَلِجَ ٱلْجَمَلُ فِى سَمِّ ٱلْخِيَاطِ ۚ وَكَذَٰلِكَ نَجْزِى
ٱلْمُجْرِمِينَ

7-40 *நிச்சயமாக எவர்கள் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கி அதைப் புறக்கணிப்பதைப் பெருமையாய்க் கொண்டார்களோ அவர்களுக்கு வானத்தின் வாசல்கள் திறக்கப்படமாட்டாது. ஊசியுடைய காதில் ஒட்டகை நுழையும் வரையில் சுவனபதியை அவர்கள் அடைய மாட்டார்கள். குற்றவாளிகளை நாம் இவ்வாறே தண்டிப்போம்.*

## (7)

وَكَانَ ٱللَّهُ بِكُلِّ شَىْءٍ مُّحِيطًا

4-126 *திடனாக அவன் எல்லா வஸ்துக்களையும் சூழ்ந்தவனாய் இருக்கிறான்.*

என்று குர்ஆன் கூறுகிறது. இந்தச்சூழ்தல் கிணறு உள்ளேயிருக்கும் நீரைச் சூழ்ந்து கொண்டிருப்பதுபோல் உள்ள சூழ்தலல்ல. இப்படியானால் நீருள்ள இடத்தில் கிணறும் கிணறுள்ள இடத்தில் நீரும் இல்லை என்று ஆகும். இதேபோல, சிருஷ்டியை இறைவனும் சூழ்ந்துள்ளான் என்றால் இறைவன் உள்ள இடத்தில் சிருஷ்டியும், சிருஷ்டியுள்ள இடத்தில் இறைவனும் இல்லை என்றாகும். **ஆகவே குர்ஆன் விளக்கும் சூழ்தல் இப்படியல்ல.** அது எப்படியென்றால் மனிதனுக்குரிய பண்புகளில் பார்வையும், கேள்வியும், ஸ்கந்தமும். சுவையும், ஸ்பரிஸமும் முக்கியமான பண்புகளாகும். இந்த முக்கியமான ஐந்து பண்புகளையும் மனிதன் சூழ்ந்தவனாய் இருக்கிறான். இந்தப்பார்வை கேள்வி முதலாம் பண்புகள் இல்லாதபோதும் மனிதன் இருக்கவே செய்கிறான். பண்புகள் அழிவதால் இன்ஸான் அழிவதேயில்லை. ஆகவே பண்புகளை இன்ஸான் சூழ்ந்திருக்கிறான் என்று கூறுகிறோம். இன்ஸானுடைய பண்புகள் (ஸிபத்துக்கள்) தான் பார்வைகேள்விகள் என்பது எமக்குத் தெரியும். ஆகவே பார்வைகேள்வி முதலாம்பண்புகளை இன்ஸான் சூழ்ந்திருப்பது உள்ளூற்றதை வெளிப்பொருள் சூழ்ந்ததுபோல் அல்ல.

கேள்வியைக் கேட்பது செவி, பார்வையைப் பார்ப்பது கண் என்பது உண்மையா? இல்லை. அவ்வுறுப்புக்களைக் கருவிகளாகக் கொண்டு கேட்டவனும் பார்த்தவனும் இன்ஸான்தான். **ஆகவே இந்தப்பார்வை கேள்விகளை (பண்புகளை) இன்ஸான் பூரணமாகச் சூழ்ந்தவனாகவே இருக்கிறான்.** பண்புகள் அவனைவிட்டு வேறானவையேயல்ல. ஆகவே பண்புகள் வேறானவை இன்ஸான் வேறானவன் என்று கூறுவதானால் அது எம்முடைய மருட்சியல்லவா?

உண்மை என்னவென்றால், உண்மைப்பொருளான உஜூதில் பண்புகள் (ஸிபத்துகள்)தான் சிருஷ்டியென்ற பெயரில், தோற்றத்தில் எமது புலனறிவுக்கமைவாய்த் தென்படுகின்றனவேயன்றி **அவை உண்மையான தனித்தனி உஜூதுகளேயல்ல.** ஆகவே நாய் பன்றி மலஜலம் என்ற பெயர்களிலோ தோற்றங்களிலோ நாம் மருட்சியடையவேண்டிய அவசியமே இல்லை.

இவ்விடத்தில் நான் கூறவேண்டிய ஓர் உண்மையென்னவென்றால் அப்தை ஓர் பொருளாகவும் றப்பை வேறோர் பொருளாகவும் (**இரண்டு தனித்தனிப் பொருட்களாய்க்)** காணுகிற மனிதன் மாபெரும் அறியாமையில் மூழ்கியிருக்கிறான் என்பதே. ஏனென்றால் இறைவனைவிட வேறு பொருட்கள் உண்டு என்று எப்போது மனிதன் காணுகிறானோ அப்போதே **அவனையறியாமல், இறைவனின் பண்புகள் அத்தனையையும் மறுத்தவனாகிறான். குர்ஆன், ஹதீஸ்களையும் பகுத்தறிவையும் கூட மறந்தவனாகிறான்.** அதாவது இறைவனைவிட வேறு மூலப்பொருட்கள் உண்டென்றால் இறைவன் தேவையுடையவன் என்றாகிவிடும். தேவையுடையவன் என்னும்போது இறைவனுடைய எல்லாப் பண்புகளுமே தவிடுபொடியாகிவிடும். அதாவது இறைவனை இம்மனிதன் வாயினால் ஒப்புக்கொண்டிருந்தாலும் உள்ளத்தினால் பூரணமாய் மறுத்தவனாகவே மாறிவிடுவான். இதை அறிவுகுறைந்த மனிதன் உணர்ந்துகொள்வதே இல்லை. இவ்விதமாய் அறியாமையால் உள்ளத்தில் ஏற்பட்ட மருட்சியின் பெயர்தான் “ஷிர்க்” இணை ஏற்படுத்தல் என்பது. இந்த மருட்சியிருக்கும் வரையும் பூரணநிலைமையை அடையவே முடியாது. நிரந்தர நரகம் என்பதன் கருத்து இதுதான்.

قُلِ ٱنظُرُوا۟ مَاذَا فِى ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضِ ۚ وَمَا تُغْنِى ٱلْءَايَٰتُ وَٱلنُّذُرُ عَن قَوْمٍ
لَّا يُؤْمِنُونَ

10-101 *வானங்களில் உள்ளவை பூமியில் உள்ளவைகளைக் கவனித்துப் பாருங்கள் என்று கூறுவீராக. எனினும் (ஈமான்) விசுவாசம் கொள்ளாத ஜனங்களுக்கு நம்முடைய வசனங்களும் அச்சமூட்டி எச்சரிக்கைசெய்தலும் யாதொரு பயனுமளிக்கா.*

ஒளி அல்லது வெளிச்சத்தை நாம் அறிவதற்கு இருள் அவசியம். இருளை அறிவதற்கு வெளிச்சம் அவசியம். இதே அடிப்படையில்தான் இறைவன் தன்நாட்டப்படி ஒன்றை அதன் எதிர் மறையைக்கொண்டே உறுதிப்படுத்த நாடினான். உதாரணமாக, நீ ஓர் ஹறாமான பெண்ணை ஆசைப்படுகிறாய் என்று வைத்துக்கொள். அதேவேளை ஐயோ! இது பெரும்பாபங்களில் ஒன்று என்றும் இந்தத் தீய ஆசையை விட்டொழிக்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் இன்ன இன்ன தீய விளைவுகள் ஏற்படும் என்றும் இவ்வாசையில் இருந்து நீங்கிவிட்டால் இன்ன இன்ன நன்மைகள் ஏற்படும் என்றும் ஆலோசனை செய்து தீர்ப்புக்காட்டுகிறாய். **இந்த நல்ல தீய எண்ணங்கள் இரண்டையும் உருவாக்கியது உன்னிடம் உள்ள ஒரேமனம் (உள்ளம்)தான்,**இதில் ஆசைகொள்ளவைத்த மனோநிலையை ஷைத்தான் என்று நீ பேர்கூறலாம். நல்ல எண்ணத்தை உருவாக்கிய மனோநிலையை அறிவென்றோ மலக்கு என்றோ நீ பேர்கூறலாம். ஆனால் நீ இப்போது சிந்தனை செய்துபார். உன்னிடம் உள்ளது ஒரேயொரு உள்ளம்தான். **நல்ல தீய எண்ணங்கள் அத்தனையையும் உருவாக்கியதும் தீர்ப்பளித்ததும் அந்த மனம்தான். இந்த மனம் ஒவ்வோர் நிலைமையில் (மர்த்தபாவில்) ஒவ்வோர் தன்மையையும் ஒவ்வோர் பெயரையும் பெற்றிருந்தது அவ்வளவுதான்.**

ஆரிபுறப்பானி ஆபூயஸீதினில் ஹர்ராஸ் (குத்திஸஸிர்ருஹு) அவர்களிடம் அல்லாஹுத்தஆலாவைத் தாங்கள் எதனால் எப்படி அறிந்தீர்கள் என்று வினவப்பட்டபோது ஒன்றுக்கொன்று முரணான (நேர்விரோதமான) தன்மைகள் அவனில் அமைந்திருப்பதைக்கொண்டு விளங்கியறிந்தேன் என்று கூறி “ஹுவல்அவ்வலுவல்ஆகிறு” என்ற ஆயத்தையும் ஓதிக்காட்டியிருக்கிறார்கள். ஞானவான்களான மேதைகள் இவ்விஷயத்தையிட்டு எவ்வளவோ விபரங்களைத் தந்திருக்கிறார்கள். விரிவைப்பயந்து நாம் இவ்வளவோடு முடிப்போம்.

இந்த மூன்றாவது கேள்விக்குரிய பதிலை நான் பிரசங்கபாணியில் கூறியிருப்பினும் நீ பலகண்ணோட்டங்களோடு இதைச் சிந்தனை செய்து தெளிவு பெறவேண்டும். ஏனென்றால் தௌஹீதை ஓரளவு விளங்கிக்கொள்ள இது முக்கியமான விஷயமாய் இருக்கிறது. நாம் விளக்கம் தருகிற தௌஹீது ஒருசில இந்து ஞானவான்களின் உலுல்இத்திஹாது என்ற கொள்கைக்கு முற்றும் முரணானது என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும்.

## இதன் சாரம்

**1ஆவது:** இறைவன் தேவையற்றவன் என்பது பூரண உண்மையாகும்

**2ஆவது:** இறைவனுடைய ஷிபத்துக்கள் என்னும் பண்புகளே ஓர் நிலைமையில் சிருஷ்டிகள் என்ற பெயர் பெறுகின்றன.

**3ஆவது:** மனிதன் தன்னுடைய புலனாட்சியில் கட்டுண்டு பேதபுத்தியில் மூழ்கியிருப்பதால் மருட்சியடைந்து சிருஷ்டிகள் அல்லாஹ்வை விட்டும் வேறான தனித்தனி மூலப்பொருட்கள் என்று நம்புகின்றான். இது தவறான விளக்கமாகும். ஷிர்க்கு என்பது இந்த நம்பிக்கைதான்.

**4ஆவது:** மனிதன் புலனறிவைக் கொண்டும் சில சட்டதிட்டங்களை அடிப்படையாகக் கொண்டும் நன்மை, தீமை, சரி, பிழை கணித்தாலும், இது சாதாரண மனிதர்கள் விஷயத்தில் சரியேயானாலும் உண்மை இதற்கு அப்பாற்பட்டது. பகுத்தறிவு இருக்கும் வரையிலும்தான் சட்டம் செல்லுபடியாகும். சாந்தி என்பது சட்டங்களுக்கு அப்பாற்பட்டது.

**5ஆவது:** இறைவன் “வெளியானான்” என்பது விளக்கத்துக்காகப் பாவிக்கப்படுகிற வசனமாகும். இதன் அந்தரங்கம் வேறாய் இருக்கிறது. அவன் எப்போதும் இருந்த நிலையில்தான் இருக்கிறான். இருப்பான்.

**6ஆவது:**அல்லாஹ்வையும் அவன் செயல்களையுமன்றி வேறு ஏதோ எல்லாம் இருப்பதாய்க் காண்பது மனிதனின் அறிவுத் தகைமையைப் பொறுத்ததாயும் சாதாரண மனிதனுக்குச் சரியாயும், ஞானவான்களுக்குப் பிழையாயும் இருக்கிறது.

**7ஆவது:**ஒவ்வோர் சிருஷ்டிக்குள்ளேயும் அல்லாஹ் இருக்கிறான் என்பது தவறான விளக்கமும் துவிதக் கொள்கையுமாகும். அல்லாஹ்வுடைய ஷிபத்துக்களின் தோற்றங்களே சிருஷ்டிகளாகும்.

**4ஆவது கேள்வி:**

குர்ஆன் ஹதீஸுகளில் இறைவன்வேறு சிருஷ்டிவேறு (றப்புவேறு, அப்துவேறு) என்று தெளிவாய் விளக்கிக் கூறப்பட்ட பல ஆயத்துக்களும் ஹதீஸ்களும் இருக்கின்றன. உங்களுடைய விளக்கம் குர்ஆன், ஹதீஸ்களுக்கு மாறானதுபோல் தென்படுகிறது. ஆகவே இவ்விஷயத்தை அறிவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் தெளிவாய் விளக்கிக் காட்டவேண்டும்

**(1)**

குர்ஆனிலோ ஹதீஸிலோ இறைவன் வேறு சிருஷ்டிவேறு (றப்புவேறு, அப்துவேறு) என்று **எங்கேயும் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ கூறப்படவேயில்லை.** ஆனால் குர்ஆன், ஹதீஸ்களுடைய வசனநடைகளையும் பரிபாஷைகளையும் விளங்கிக்கொள்வதில் ஒருசிலருக்குச் சிற்சில சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவர்கள் பட்டதாரிகளாய் இருந்தாலும் வஹ்முடையவர்களாய் இருப்பதால் அவர்களுடைய அறிவுக்கேற்றபடி குர்ஆன் ஹதீஸ்களுடைய வசனநடைகளைத் தவறாக விளங்கிக்கொள்கிறார்கள். இவர்களுடைய அறிவு, தௌஹீதை ஏற்றுக்கொள்ள மறுப்பதால் அவர்களுடைய கொள்கை அடிப்படையிலேயே குர்ஆன், ஹதீஸ்களுக்குப் பொருள்கொள்ள முற்படுகிறார்கள். பொதுப்படையான விபரம் என்னவென்றால் இவ்வகையினருக்கு குர்ஆன், ஹதீஸ்களை உள்ளபடி விளங்கிக்கொள்ள **அறிவுபோதாமல் இருப்பதே காரணமாகும்.** இதை நாம் தெளிந்த அறிவோடு ஆராய்ந்து பார்ப்போம்.

அல்லாஹ்வுடைய லஹ்னத்துப் பொய்யர்கள் பேரிலாகும். (குர்ஆன்).

فَإِنَّ ٱللَّهَ عَدُوٌّ لِّلْكَٰفِرِينَ

2-98 *திடனாக அல்லாஹ் காபிரீன்களுக்குப் பகைவனாய் இருக்கிறான்.*

فَإِنَّهُمْ عَدُوٌّ لِّىٓ إِلَّا رَبَّ ٱلْعَٰلَمِينَ

26-77 *சர்வ உலகங்களையும் பரிபாலிப்பவன் தவிர திட்டமாக விக்கிரகங்கள் எனக்குச் சத்துருக்களாய் இருக்கின்றன.*

إِنَّكُمْ وَمَا تَعْبُدُونَ مِن دُونِ ٱللَّهِ حَصَبُ جَهَنَّمَ

21-98 *திடனாக நீங்களும் நீங்கள் வணங்குகிற விக்கிரகங்களும் நரகக்கட்டைகள்தாம்.*

خَتَمَ ٱللَّهُ عَلَىٰ قُلُوبِهِمْ وَعَلَىٰ سَمْعِهِمْ

2-7 *அல்லாஹுதஆலா அவர்களுடைய கல்புகளின் பேரிலும் அவர்களுடைய கேள்விப்புலன்கள் பேரிலும் முத்திரை பதித்தான்.*

இவையும் இவைபோன்ற இன்னும்பல ஆயத்துக்களும் குர்ஆனில் இடம் பெறுகின்றன. ஹதீஸ்களிலும் இவ்விதமான வசனங்கள் இடம்பெறுகின்றன. இவ்விதமான ஆயத்துக்கள் ஹதீஸ்கள் **அப்துவேறு றப்புவேறு என்று தெளிவாய் விளக்கம் தருவதாய் ஒரு சிலர் நினைக்கிறார்கள்.** ஆனால் இவ்விதமான வசனங்கள் தௌஹீதுக்கு அணுவளவேனும் மாற்றமில்லாமல் ஒவ்வோர் வகையான பொருளை விளக்கக்கூடியனவாகவே கூறப்பட்டிருக்கின்றன. அது எப்படியென்றால்,“ஜிப்ரி மாட்டை அடித்தான்” என்று கூறப்படும்போது ஜிப்ரியும் மாடும் ஒன்றுதான் என்றோ வெவ்வேறுதான் என்றோ கூறப்படவும் இல்லை. விளக்கம் தரப்படவும் இல்லை. அதாவது ஜிப்ரியும் மாடும் ஒன்றேதான் என்று விளக்குவதோ வெவ்வேறுதான் என்று விளக்குவதோ வசனத்தின் நோக்கமல்ல. அடித்தவன் ஜிப்ரி என்றும் அடிக்கப்பட்டது மாடு என்றும் விளக்கம் தருவதுதான் வசனத்தின் நோக்கமாகும்.

ஆனால் வஹ்மு என்ற பேதபுத்தி மாட்டை அடித்த ஜிப்ரியும் அடியை வாங்கிக்கொண்ட மாடும் ஒன்றாய் இருக்கமுடியாதே என்று மருண்டு வெவ்வேறுதான் என்று தீர்ப்புக்கட்டுகிறது. ஆயினும் அந்த வஹ்மு கூறுவது போலவே வைத்துக்கொண்டாலும் கண்டப்பொருள் அல்லது சடப்பொருள் என்ற அடிப்படையில் மாடும் ஜிப்ரியும் ஒன்றுதானேயெனினும் எதிர்க்கும் சக்தியும் ஏற்கும் சக்தியும் ஒன்றாயிருக்கமுடியாதே! ஆகவே வேறுவேறுதான் என்று வஹ்மு தீர்ப்புக்கட்டுகிறது. ஆனால் சக்தி என்ற அடிப்படையில், அடிக்கும் சக்தி ஜிப்ரியுடையதாயும் அடியை ஏற்கும் சக்தி மாட்டுக்குடைய தாயும் இருப்பதால் இரண்டும் ஒன்றுதானேயென்று தென்பட்டாலும் அவ்விரண்டும் ஒன்றே என்பதை அந்த வஹ்மு ஏற்பதேயில்லை. இது சிருஷ்டிகளைப் பொறுத்த ஓர் விடயமாகும்.

அல்லாஹ்வோ அரூபியாயும் சர்வசக்தியும் உடையவனாயும் இருப்பதால் அல்லாஹ்வுடைய லஹ்னத்து பொய்யர்கள் பேரிலாகும் என்ற வசனத்தில் **நிச்சயமாக பொய்யர்கள்வேறுதான், அல்லாஹ் வேறு தான் என்றே வஹ்மு தீர்ப்புசெய்கிறது.** ஆனால் லஹ்னத்து செய்யும் சக்தி அல்லாஹ்வுடையது என்றும் அதை ஏற்கும் சக்தி பொய்யனுடையது என்றும் சக்தியென்ற அடிப்படையில் இரண்டும் ஒன்றே என்பதும் வஹ்முக்குத் தெரியவே செய்கிறது. ஆயினும் இதை வஹ்மு ஏற்பதேயில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. இப்போது வஹ்மு என்ற பேதபுத்தியை விட்டுவிட்டு ஆயத்தை நோட்டமிட்டுப்பார். இவ்வாயத்தில் கூறப்பட்ட வசனத்தில் லஹ்னத்தைப் பெற்றுக்கொள்பவன் பொய்யன் என்றும் லஹ்னத்துச் செய்பவன் அல்லாஹ் என்றும்தான் கூறப்படுகிறது. அல்லாஹ்வும் பொய்யனும் ஒன்றுதான் என்றோ வேறுதான் என்றோ ஆயத்து விளக்கம் தரவே இல்லை. இப்படியிருக்கும்போது வெவ்வேறுதான் என்று கற்பனை பண்ணுவது வஹ்மின் வேலையேயன்றி அறிவின் வேலையேயல்ல.

இதேபோல் குர்ஆன் ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ள மற்றும். வசனங்களையும் யூகித்துப்பார் அதாவது “இபாரதுன்னஸ்” தலாலத்துன்னஸ் ஆகிய இருபிரமாணங்களினாலும் தெளிவாய் வெளிப்படையாய் பொருள் விளங்கக்கூடிய முஹ்கமாத்தைச்சேர்ந்த சிற்சில ஆயத்துக்களைக்கொண்டு மட்டுமே குர்ஆன் ஹதீஸ்களில் யாவும் ஒன்றே என்பது விளக்கப்பட்டுள்ளதேயல்லாமல் எல்லா வசனங்களினாலும் ஒன்றென்றோ வேறென்றோ விளக்கப்படவேயில்லை. ஆனால் வஹ்மு, றப்புவேறு அப்துவேறு என்ற கொள்கையில் ஊறித் திளைத்திருப்பதால் முஹ்கமாத்தான வசனங்களையும் கூட வெவ்வேறு என்ற பொருளிலேயே புரட்ட முற்படுகிறது. இவ்விஷயம் மிக அவசியமாய் இருப்பதால் இன்னும் சில ஆயத்துக்களை நாம் நோட்டமிடுவோம். அல்லாஹ்வுடைய திருவசனங்களை ஒன்றோடொன்று பொருத்திப்பார்ப்போம்.

**அவர்கள் தங்கள் நபுஸுகளின் பேரில் கொடுமை செய்கிறார்கள்.**
**(அல்-குர்ஆன்)**

**என்கினும் அவர்கள் தங்கள் நபுஸுகளுக்குக் கொடுமை செய்கிறவர்களாய் இருக்கிறார்கள்.**
**(அல்-குர்ஆன்)**

இவைபோன்ற மற்றும் ஆயத்துக்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விரண்டு வசனங்களிலும் தங்கள் நபுஸு தங்கள் நபுஸு என்றே இறைவன் கூறுகிறான். தெளிந்த அறிவோடு நோக்கிப்பார். இவ்வசனங்களில் கூறப்பட்ட தாங்கள் வேறு நபுஸு வேறு என்பது கருத்தா? அல்லது தாங்களே நபுஸு, நபுஸே தாங்கள் என்பது கருத்தா? இவ்வாக்கியங்களில் உடைய என்ற ஆறாம் வேற்றுமை உருபு தற்கிழமைப் பொருளில் பாவிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய உயிர் என்றால் நாம் வேறு உயிர் வேறு உயிர் வேறு என்பது கருத்தல்ல. **நான்தான் உயிர், உயிர் தான் நான் என்பதே கருத்தாகும்.** இதேபோல அல்லாஹ்வுடைய றசூல் என்பதிலும் உடைய என்ற உருபு தற்கிழமைப் பொருளில்தான் பாவிக்கப்பட்டிருக்கிறது. **ஆகவே என்னுடைய உயிர் என்றால் நானே உயிர் என்பதைப் போலவே அல்லாஹ்வுடைய றசூல் என்றால் அல்லாஹ் தான் றசூல் என்பதே கருத்தாகும்.** ஆயினும் என்னுடைய உயிர் என்ற போது நானே உயிர் என்பதை ஏற்றுக்கொண்ட வஹ்மு அல்லாஹ்வுடைய றசூல் என்னும்போது **அல்லாஹ்தான் றசூல் என்பதை ஏற்றுக்கொள்வதே இல்லை. இது எமது மருட்சியின் விளைவேயாகும்.**

இப்போது அல்லாஹ் உங்களைப் படைத்தான் என்ற வசனத்தை நோட்டமிட்டுப்பார். இந்த ஆயத்து மூன்றுவிதமான பொருள்களைத் தருகிறது.

**1ஆவது:** சிருஷ்டிகர்த்தா உஜுதில் சிருஷ்டிக்கு வேறாய் இருக்கிறான் என்று விளக்குகிறது.

**2ஆவது:** சிருஷ்டிகர்த்தா உஜுதில் அவனே சிருஷ்டியாய் இருக்கிறான் என்று விளக்குகிறது.

**3ஆவது:** அல்லாஹ் ஒவ்வோர் பொருளுடையவும் சிருஷ்டிகர்த்தாவாய் இருக்கிறான் என்று விளக்குகிறது.

இந்த மூன்றாவது பொருளை விளக்குவதுதான் ஆயத்தின் நோக்கமாகும். இந்த மூன்றாவது பொருளைவிளக்குவதற்காகத்தான் ஆயத்துபிரமாணமாய் இருக்கிறது. ஆகவே இவ்வாயத்துக்குமுன் கூறிய இரு கருத்துக்களும் விளக்கமும் வெறும் மருட்சியும் வஹ்முமாய் இருக்கின்றன. இது கற்பனையும் வலிந்துரையும் புரட்டலுமாய் இருக்கிறது.

இதேபோல் மற்றும் ஆயத்துக்களையும் நோட்டமிட்டுப்பார். அல்லாஹ்வுடைய லஹ்னத்துப் பொய்யர்கள் பேரிலாயிருக்கும் என்ற ஆயத்தில் 3 பொருட்கள் தென்படுகின்றன.

**1ஆவது:** அல்லாஹ்வேறு பொய்யன்வேறு என்பது.

**2ஆவது:** அல்லாஹ்வும் பொய்யனும் ஒன்றே என்பது.

**3ஆவது:** லஹ்னத்துச் செய்பவன் அல்லாஹ் - லஹ்னத்தைபெறுபவன் பொய்யன் என்பது.

இந்த மூன்றாவது பொருளை விளக்குவதற்காகத்தான் ஆயத்துத்தரப்பட்டது. “திடனாக அல்லாஹ் காபிரீன்களுக்குச் சத்துருவாக இருக்கிறான்.”“சர்வ உலகங்களையும் பரிபாலிப்பவன் தவிர திட்டமாக விக்கிரகங்கள் எனக்குச் சத்துருக்களாய் இருக்கின்றன. “திடனாக நீங்களும் நீங்கள் வணங்குகிற விக்கிரகங்களும் நரகக் கட்டைகள்தாம்.” அல்லாஹுத்தஆலா அவர்களுடைய கல்புகளின் பேரிலும் அவர்களுடைய கேள்விப்புலன்கள் பேரிலும் முத்திரை பதித்தான்.

இந்த ஆயத்துக்களையும் இவைபோன்ற மற்ற ஆயத்துக்களையும் ஒவ்வோர் வகையான பொருளை விளக்குவதற்காகப் பாவிக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் **இறைவனும் சிருஷ்டியும் ஒன்றேயென்று விளக்குவதற்காகவோ வெவ்வேறுதான் என்று விளக்குவதற்காவோ பாவிக்கப்படவேயில்லை.** இறைவன் வேறு சிருஷ்டி வேறு என்ற நோக்கோடு பொருள்கொள்ளும்போது அப்படிப் பொருள் கொண்ட வஹ்முக்கு (பேதபுத்திக்கு) இறைவன் வேறு சிருஷ்டி வேறல்ல என்பதையும் அந்த ஆயத்துக்கள் வலியுறுத்தவே செய்கின்றன. என்னுடைய நப்ஸு எனக்குச் சத்துருவாய் இருக்கின்றது. என் நப்ஸை நான் விரோதிக்கிறேன் என்று நாம் கூறும்போது **நப்ஸும் நானும் வேறானவையென்ற நோக்கை உறுதிப்படுத்துவதோ, நப்ஸும் நானும் ஒன்றே என்பதை உறுதிப்படுத்துவதோ எமது பேச்சின்கருத்தல்ல.** இதேபோல எம்முடைய வஹ்முக்கேற்ற கற்பனையை மனதில் இருத்திக்கொண்டு குர்ஆன்ஹதீஸ்களுக்குப் பொருள் கொள்வது மாபெரும் தவறான விஷமச்செயல் என்பதைக் குர்ஆன், ஹதீஸ்கள் எத்தனையோ இடங்களில் எத்தனையோ வகைகளில் விபரம் தருகின்றன.

ஆகவே **உண்மையை நாம் அறியவேண்டும் என்றால் அப்தும் றப்பும் ஒன்றேதானென்றோ வேறுதானென்றோ மருட்சியடையாமல் தெளிந்த மனத்தோடுதான் ஆராயவேண்டும்.** மேலும் ஓரளவேனும் அறபு இலக்கண அறிவும் வேண்டும். குர்ஆன், ஹதீஸ்கள் தௌஹிதுக் கலிமாவோடு எப்படித்தொடர்பு கொண்டுள்ளன என்பதைக் கண்டறிவது கடினமான சிக்கல் நிறைந்த ஓர்விடயமாகவே தென்படுகிறது. இந்தக் கடினமான கஷ்டநிலைக்குக் காரணம் ஆரம்பத்தில் எமக்குத் தரப்பட்ட தவறான விளக்கங்களேயாகும். இவ்விடயத்தை ஆராய்வது ஒன்றிரண்டு தினங்களில் முடியக்கூடிய காரியமாயுமில்லை. ஏனென்றால் இவ்விதமான ஆராய்வில் ஈடுபடுவோர் வழிதவறிச் செல்வதாகவே எம்முடைய அறிவாளரில் மிகப்பலரும் சமூகமும் இன்றும் தடைபோட்டுக் கொண்டுதானே இருக்கிறார்கள். ஆகவே உண்மையைக்கண்டறிவது கடினம்தான்.

குர்ஆன் என்பது எம்போன்ற அறிவு குறைந்த மனிதர்களால் ஆக்கப்பட்ட ஓர் சாதாரண புஸ்த்தகமேயல்ல. இது இறைவனுடைய வசனம். முஹ்ஜிஸாத்தைச் சேர்ந்தது. இதை விளங்கியறிய எமக்கு அறிவுபோதாமையால் எம்முடைய இஷ்டம் போல கருத்துக்கொள்கிறோம் அது தவறாகும். மேலும் குர்ஆனில் அப்துவேறு றப்புவேறு என்று வெளிப்படையாய்க் கூறுவது போலுள்ள வேறு சில வசனங்கள் தென்படுகின்றன. ஆனால் அப்துவேறு றப்புவேறு என்று நம்பியுள்ள சிலருக்கு அப்படித்தென்பட்டாலும் உண்மையான பகுத்தறிவிடத்தில் அப்படி இல்லவேயில்லை. உதாரணமாக,

قُلْ أَفَغَيْرَ ٱللَّهِ تَأْمُرُوٓنِّىٓ أَعْبُدُ أَيُّهَا ٱلْجَـٰهِلُونَ

39-64 *நீர் கூறும். ஓ மூடர்களே! அல்லாஹ்வுக்கு வேறாய் இருப்பதையா என்னை வணங்கச் சொல்கிறீர்கள்.*

*அல்லாஹ்வுக்கு வேறாய் இருப்பதையா எனக்குச் தோஸ்த்தாய்ப் பிடித்துக் கொள்வேன்.*

(அல்-குர்ஆன்)

இவ்வாயத்துக்களைப்போல குர்ஆன் முழுவதிலும் வந்திருக்கிற “மின்தூனி” (என்னின் வேறு “மின்தூனில்லாஹி” (அல்லாஹ்வின் வேறு) “மின்தூனிஹி” (அவனின் வேறு) என்று கூறப்பட்டுள்ள வசனங்களும் **தௌஹீதுக்கு மாற்றம்போல் தென்படுகின்றன.** அதாவது அல்லாஹ்வேறு சிருஷ்டிவேறு என்று வெளிப்படையாய்க் கூறுவதுபோல் தென்படுகின்றன. ஆனால் உண்மையாகவே **இவ்வாயத்துக்கள் தௌஹீதை உறுதிப்படுத்துவனவாயும். முஸ்ரீக்குகளின் கொள்கையை வெளிப்படுத்துவனவாயும்தான் தரப்பட்டிருக்கின்றன.**இவ்விதமான ஆயத்துக்களுடைய உசூலை ஆராய்ந்தபோது இவ்வாயத்துக்கள் முஸ்ரீக்குகளை நோக்கிக் கூறப்பட்டவையாகவே இருக்கின்றன. அந்த முஸ்ரீக்குகள் வணங்கிக்கொண்டிருந்த விக்கிரகத்தையோ மற்றும் சிருஷ்டிப்பொருட்களையோ எப்போதும் அல்லாஹ்வாக ஏற்றுக் கொண்டதே கிடையாது. அவை அல்லாஹ் அல்லாதவை என்றே அவர்கள் நம்பியிருந்தார்கள் என்பதை குர்ஆன் விளக்கம் தருகிறது.

مَا نَعْبُدُهُمْ إِلَّا لِيُقَرِّبُونَآ إِلَى ٱللَّهِ زُلْفَىٰٓ

39-3 *ஆலிஹத்துக்கள் அல்லாஹ்விடம் நெருங்கிச் சேர்ப்பதற்காகவேயன்றி நாங்கள் அவைகளை வணங்குவதில்லை*

என்றுதான் கூறினார்களேயன்றி அந்த இலாஹுகள் அல்லாஹ்தான் என்று கூறவுமில்லை, ஒப்புக்கொள்ளவும் இல்லை. குர்ஆனுடைய 38:5,6,7,8 ஆம் ஆயத்துக்கள் இந்த முஸ்ரீக்கீன்கள் தங்கள் உள்ளத்தில் கொண்டிருந்த நம்பிகையை (அகஆக்கலை) எமக்குத் தெளிவாய் விளக்கம் தருகின்றன.

أَجَعَلَ ٱلْءَالِهَةَ إِلَٰهًا وَٰحِدًا ۖ إِنَّ هَٰذَا لَشَىْءٌ عُجَابٌ

38-5 *என்னே! இவர் எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹுதான் என்று ஆக்கிவிட்டாரா! மெய்யாகவே இது ஓர் ஆச்சரியமான விஷயம்தான்.*

என்று முஸ்ரீக்குகள் கூறிய விஷயத்தை ஆழமாக நோட்டமிட்டால் அல்லாஹ் வேறு சிருஷ்டிவேறு என்ற கொள்கையிலேயே (எண்ணத்திலேயே) அவர்கள் நிலைபெற்றிருந்தார்கள் என்பது தெளிவாகவே புலப்படுகிறது. இவ்விதமான மக்களை நோக்கித்தான்,**“அல்லாஹ்வுக்கு வேறாய் இருப்பதையா என்னை வணங்கச் சொல்லுகிறீர்கள். ஓ! மூடர்களே!!” என்ற வசனமும் இவைபோன்ற வசனங்களும் கூறப்பட்டிருக்கின்றன.** ஆகவே இவ்வசனம் அல்லாஹ்வேறு சிருஷ்டிவேறு என்று எண்ணியிருந்த மக்களின் எண்ணத்தை நீக்குவதற்காக அவர்களுடைய பாவனையிலேயே கூறப்பட்டதாகும். அதாவது **ஓ! மூடர்களே!! (உங்களுடைய எண்ணத்தில் அல்லது நினைவில்) அல்லாஹ்வுக்கு வேறானது என்று நம்பி இருப்பதையா என்னை வணங்கச் சொல்கிறீர்கள் என்பதுதான் ஆயத்தின் உண்மையான விளக்கம்.** (இந்த வசனத்தில்) ஆயத்தில் உங்களுடைய எண்ணத்தில் என்ற வசனம் தொக்கி (மறைந்து) இருக்கிறது. இவ்விஷயம் அறபு யாப்பிலக்கணம் கற்ற அறிஞர்களுக்குத் தெளிவாய் தெரியும். ஆனால் அரைகுறைக் கல்விமான்கள் இதை உணரவேமாட்டார்கள் என்பது உண்மையே. ஆகவே ஆயத்தில் மறைந்து தொக்கியிருந்த உங்கள் எண்ணத்தில் என்ற சொல்லையும் சேர்த்தே பொருள் கொள்ளவேண்டும். இதை ஓ! மூடர்களே!! என்ற வசனம் உறுதிப்படுத்துகிறது.

ஏனென்றால் அல்லாஹ்வேறு சிருஷடிவேறென்ற எண்ணத்தைக் கெண்டிருந்ததினாலேயே **அவர்கள் மூடர்கள் (ஜாஹில்கள்) என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.** ஆகவே இவை போன்ற மற்றும் வசனங்களுக்கும் இதேபோல எண்ணத்தில் அல்லது நினைவில் என்ற வசனத்தைப் பொருத்திப் பொருள் கொண்டால் எம்முடைய வஹ்மின் மருட்சியும் நீங்கிவிடும். தௌஹீதும் நிலைப்படும்.

இவ்விடத்தில் இன்னும் ஒருசிறு சந்தேகம் பிறக்கலாம். அதாவது இந்த ஆயத்தில் உங்கள் எண்ணத்தில் என்ற சொல்லையும் சேர்த்து இறைவன் கூறியிருக்கலாமே! அப்படி இறைவன் கூறாமல் விட்ட காரணம்தான் என்ன? என்பதுதான் நமது சந்தேகம். இதற்குரிய விடை: இறைவனும் றசூலும் பேச்சு நாகரீகமுடையவர்கள். அவ்விறைவனின் பேச்சு குர்ஆன் முழுவதிலும், மூமினையும், முஸ்ரிக்கையும் பிரித்துக்காட்டக்கூடிய வகையாகவேதான் அமைந்திருக்கிறது. ஓர் முஷ்ரிக் இறைவன் வேறு சிருஷ்டிவேறு என்ற உளநோயிலே ஊறியிருப்பதால் அதே நோக்கோடுதான் இறைவசனத்தைக் கருத்துக்கொள்கிறான். ஆகவே அவனுடைய ஷிர்க்கு இன்னும் அதிகப்படுகிறது. ஆனால் ஓர் மூமின் உள்ளத்தெளிவுடையோராய் இருப்பதால் இவ்வசனத்தின் உண்மையை உணர்கிறார். அவருடைய விசுவாசம் மேலும் மேலும் அதிகரிக்கப்படுகிறது. ஆகவே மூமினுடைய விசுவாசம் அதிகப்படுவதற்கும் முஸ்ரீக்குடைய ஷிர்க்கு அதிகப்படுவதற்கும் ஏதுவான வகையில்தான் குர்ஆனுடைய வசனங்கள் கூறப்பட்டுள்ளன. இதைக் குர்ஆனே விபரம் தருகிறது.

يُضِلُّ بِهِۦ كَثِيرًا وَيَهْدِى بِهِۦ كَثِيرًا ۚ وَمَا يُضِلُّ بِهِۦٓ إِلَّا ٱلْفَٰسِقِينَ

2-26 *இதைக் கொண்டு அநேகரை வழிகெடும்படியும் செய்கிறான். இதைக்கொண்டு அநேகரை நேர்வழி பெறும்படியும் செய்கிறான். பாவிகளைத் தவிர இதைக்கொண்டு வழிகெடும்படி அவன் செய்யமாட்டான்.*

(பாவியென்றால் யார்? ஷிர்க்குடையவன் தான் பாவி).

**ஆகவே மேலே காட்டிய குர்ஆன் ஆயத்துக்கள் எதிலுமே அப்தையும் றப்பையும் வேறுபிரித்து விளக்கம் தருவதாய் வசனநடைகள் நடாத்தப்படவே இல்லை.** அவ்வசனங்கள் வேறுபிரித்துக் காட்டுவதாய் மருட்சியடைவது எம்முடைய வஹ்மு ஆகும். அப்படி வேறு பிரித்துக் காட்டப்படவேண்டும் என்றிருந்தால்

***இந்த இலாஹுகள் அல்லாஹ்வின் வேறானவை (அல்லது)***

***இந்தவானம் அல்லாஹ் அல்ல (அல்லது)***

***உன்னின் வேறானது***

என்பவை போன்ற வாக்கியங்கள் குர்ஆன், ஹதீஸ்களில் பாவிக்கப்பட்டிருக்கும். **இவ்விதமான வாக்கியங்கள் குர்ஆன், ஹதீஸ்களில் எங்கேயும் பாவிக்கப்படவில்லை.** ஆகவே குர்ஆன், ஹதீஸ்களுடைய எந்த ஓர் வசனமும் அப்தையும் றப்பையும் பிரிக்கும் நோக்கமாகவோ தௌஹீதுக்கு மாறாகவோ நடாத்தப்படவேயில்லை. அப்படியிருப்பதாய்க் காண்பது வஹ்மேயன்றி உண்மையல்ல. இவ்வகையில் அறிவுத்துறையில் மத்திய வகுப்பைச் சேர்ந்த உனக்கு இவ்வளவு இலகுவான விபரமே போதுமானதாகும். இன்னும் கடினமாய் நுட்பமாய் ஆராயவேண்டுமானால் உசூல், பலாகத், பயான், பிக்ஹு, மஆனி, நஹ்பு போன்றவைகளில் மிகவிஷேடதிறமையும் மருட்சியின்மையும், இறைவழிசெல்லும் அவாவும் வேண்டியதாகும். பொதுவான சாரம் என்னவென்றால் குர்ஆன், ஹதீஸ்களுடைய உண்மையை நுட்பமாய் உணரக்கூடிய நுண்ணறிவும் பாண்டித்தியமும் இல்லாத சிலர் அவர்களுடைய வஹ்முக்கேற்றபடி பின்பற்றல் முறையில் அல்லாஹ்வேறு சிருஷ்டிவேறு என்று கூறுகிறார்களேயல்லாமல் உண்மை அப்படியல்ல. **தௌஹீதுக்கு மாற்றமான ஓர் அட்சரம்கூட குர்ஆன், ஹதீஸ்களில் இல்லவேயில்லை.** நாம் எம்முடைய அறிவை ஏதோ எல்லாம் எடைபோடுகிறோம். உண்மை அப்படியல்ல. தெளிந்த அறிவுடையவர்கள் நபிமார்கள், றசூல்மார்களும் ஒலிமார்களும்தான். மற்றவர்கள் எவ்விதமான கல்விமான்கள் பட்டதாரிகளாய் இருப்பினும் அறிவில் குழப்பமுடையவர்களேதான். இதை நாம் இப்போது சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

## (2)

**ம**னிதன் தன்னுடைய அறிவினால் பிரபஞ்சத்திலுள்ள ஒரு சிலவற்றை ஓரளவு அறிந்துள்ளான் என்பது உண்மையேயானாலும் அம்மனிதன் தன்னைப்பற்றி அறிந்திருப்பது மிகமிகச் சொற்பமேயாகும். அதுமட்டுமல்லாமல் **மாபெரும் கல்விமான்கள் பட்டம்பதவியுடையவர்கள் கூட வாழ்க்கையின் சில பகுதிகளைக் குழம்பிய அறிவோடுதான் கழிக்கிறார்கள்.** பெரும்பாலான மக்கள் தெளிவில்லாத குழம்பிய அறிவோடுதான் இகபரவாழ்வை அமைத்துக் கொள்கிறார்கள். எப்படியென்றால், நான், எனக்கு என்னுடைய என்ற வசனங்களை நாம் எல்லோருமே சர்வசாதாரணமாய்க் கையாள்கிறோம். நான் பார்ப்பவன், நான் கேட்பவன், நான் அனுபவிப்பவன் என்று கூறும்போது சர்வ பிரபஞ்சங்களும் என்னுடைய பார்வை, கேள்வி முதலாம் அனுபவத்துக்குரிய வேற்றுப் பொருட்கள் என்றும் நான் அனுபவிப்பவனாகிய ஓர் வேற்றுப்பொருள் என்றும், உலகையும், எம்மையும் இரண்டு பகுதிகளாய் எம்மை அறியாமலே பிரித்துக் கொள்கிறோம். அதாவது அனுபவிப்பவனாகிய நான் ஓர் பொருள் என்றும் என்னால் அனுபவிக்கப்படும் உலகம் எம்மை விட்டும் வேறான ஓர் பொருள் என்றும் இயல்பாகவே நாம் எம்முடைய அறிவில் பிரித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் அனுபவிக்கப்படும் பொருளான உலகைவிட அனுபவிக்கும் பொருளான நானே சிறந்தவன் என்றும் எம்மை அறியாமலே உணர்ந்தும் இருக்கிறோம். அனுபவிக்கப்படும் பொருள் எவ்வளவு சிறந்ததோ அதனால் ஏற்படும் அனுபவமும் (இன்பமும்) மிகச் சிறந்ததே என்றும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் காணும், அனுபவிக்கும், உலகுக்குமையமாய் இருப்பது நாமே என்பது நம்மில் மிகப்பெரும்பாலாருக்குத் தெரியவே தெரியாது. இந்த நிலையில் இருக்கிற நாம் தான் எம்மை மிகப்பெரிய அறிவாளியாகக் கற்பனை செய்து கொண்டு இறுமாப்படைகிறோம். நான் என்று கூறும்போது அந்த வசனத்தினால் விளக்கப்படுவது அல்லது உணரப்படுவது நம்மிடமுள்ள இன்ன பொருள் தான் அல்லது இன்ன பகுதிதான் என்பதை நாம் உணர்வதேயில்லை. ஆயினும் நான் என்ற சொல்லினால் குறிப்பிடப்படுவது அல்லது உணரப்படுவது நம்மோடு இன்றியமையாத தொடர்புடைய ஏதோ ஒன்றுதான். மற்றவையெல்லாம் அந்த இன்றியமையாத இனம் தெரியாத பொருளுக்குப்பின் நிற்பவைதான். அது ஒரு நாயென்று கூறும்போது நாய் என்னிலும் வேறானது என்பதும் அது என் அனுபவத்துக்குரிய வேறோர் பொருள் என்பதும் உண்மை. அது என்னுடைய நாய் என்னும்போது என் அனுபவத்துக்குரிய நாய் என்னுடையதேதான் என்பதில் எமக்குச் சந்தேகமே இல்லை. ஆகவே அது என்னுடைய நாய் என்று கூறும்போது நானும் நாயும் ஒன்றுதான் என்று கூறக்கூடிய அல்லது நம்பக்கூடிய குழம்பிய அறிவு இப்போது நம்மிடத்தில் இல்லவேயில்லை. அந்த நாய் நம்மைக் கடித்து விட்டால் என்னை நானே கடித்துக்கொண்டேன் என்று சொல்லக்கூடிய குழம்பிய அறிவுடையவர்கள் எம்மிடையே இல்லவேயில்லை. ஆகவே அந்த நாய் என்னிலும் வேறானது, நான் அதைவிட்டும் வேறானவன் என்ற திட்டமான, சந்தேகமில்லாத, குழப்பமில்லாத, தெளிந்த அறிவோடுதான் நாம் வாழ்கிறோம்.

இதேபோல் எம்முடைய அனுபவத்துக்குட்பட்ட எந்தப்பொருளைப் பற்றிப் பேசும்போதும் அவைவேறு நாம்வேறு என்று குழம்பிய அறிவில்லாமல் தெளிவாகத் திட்டவட்டமாக நம்பியே

இருக்கிறோம். ஆனால் இது எனது நாய் என்று கூறியதுபோல இது என் உடல் என்று சொல்லும்போது **எம்முடைய குழம்பாத அறிவில் ஓர் சிறு குழ்ப்பம் ஏற்படவே செய்கிறது.** வெளிப்படையாய் நோக்கினால் என்னுடைய உடல் என்று சொல்லும் போது உடல் எனக்குரியது, நான் வேறு உடல் வேறு என்று நம்பவேண்டியதுதான் எம்முடைய குழம்பாத அறிவின் தீர்ப்பாகும். என்னுடைய நாய் என் அனுபவத்துக்குரிய வேற்றுப் பொருள் என்று தீர்ப்புக்கட்ட வேண்டியதுதான், குழம்பாத அறிவினால் தீர்ப்புக்கட்டவேண்டிய தீர்ப்பாகும். இந்தத் தீர்ப்புத்தான் எம்முடைய குழம்பாத அறிவின் சரியான தீர்ப்பாகும். ஆயினும் இவ்விஷயத்தில் உண்மை என்ன? என்பது **எம் அறிவில் பெரும்பாலும் அமைவதே இல்லை.**

ஏனென்றால், நான் காயமடைந்தேன், நான் நோய்வாய்ப்பட்டேன், என்றெல்லாம் கூறும்போது நம்முடைய முந்திய குழம்பாத அறிவில் சரியான குழப்பமே ஏற்படுகிறது. காயம் உடலில் உள்ளது என்பதும் அவ்வுடல் என் அனுபவத்துக்குரிய வேற்றுப் பொருள் என்பதும்தானே எம்முடைய குழப்பாத அறிவின் தீர்ப்பு. ஆனால் நான் காயமடைந்தேன் என்னும் போது நானே உடலென்றும் உடலே நானென்றும் தீர்ப்புக்கட்டிவிடுகிறோம். இதுபோல் நான் வயோதிபனானேன். நான் நோயாளியானேன். நான் இலட்சணமுடையவனாய் இருக்கிறேன். நான் கருநிறமுடையவனாய் இருக்கிறேன் என்றெல்லாம் கூறும்போதும் நானே உடல் என்றும் உடலே நான் என்றும்தான் தீர்ப்புக் கட்டுகிறோம். ஆனால் முதுமையடைந்ததும், நோயுற்றதும், இலட்சணமாய் இருந்ததும், கருநிறமாய் இருந்ததும், உடலேயன்றி நானல்ல என்பதும் உடல் என்னுடைய அனுபவப்பொருள் என்பதும் தான் எம்முடைய குழம்பாத அறிவின் விளக்கம். அந்த விளக்கம் நான் நோய்வாய்ப்பட்டேன் என்னும் போது பிழையாய் முடிந்துவிடுகிறது. இதேபோல நான் ஓர் ஆண், அல்லது பெண் என்று கூறும்போதும் எம்முடைய அறிவில் குழப்பமே இருந்துகொண்டிருக்கிறது.ஏனென்றால் ஆணாய் இருப்பதும் பெண்ணாய் இருப்பதும் எம் உடலேயன்றி நாமல்ல என்பதுதான் உண்மை. இதுதான் குழம்பாத அறிவின் விளக்கம். **இந்தச் சாதாரணமான ஓர் சிறுவிஷயத்திலேயே சாதாரண மனிதன் மட்டுன்றி அறிவாளர்கள்கூடக் குழம்பிய அறிவோடுதான் வாழ்கிறோம்.**

எம்முடைய கல்பை (மனதை)க் கூறும்போது என்னுடைய மனம் என்றுதான் கூறுகிறோம். இந்த வசனத்தினால் மனம் என்னிலும் வேறானது என்றும் மனம் என்னுடைய அனுபவப்பொருள் என்றும் தெளிவாகவே நாம் விளங்குகிறோம். வெளி உலகிலுள்ள எல்லா நிகழ்ச்சிகளையும் நாம் அவதானித்துக் கண்டு களிப்பதைப் போல எம்முடைய மனத்தில் நிகழும் எல்லா நிகழச்சிகளையும் அவதானித்துக் கண்டுகளிக்க எம்மால் முடியத்தானே செய்கிறது. இது உண்மையான ஓர் விஷயம்தான். ஆகவே மற்ற எல்லாப் பொருட்களையும்போல, எம்முடையமனமும் எம் அனுபவத்துக்குட்பட்ட வேற்றுப் பொருளாகவேதான் நாம் காணுகிறோம். ஆனாலும் இந்தக் கருத்துக்கள் எம்முடைய அறிவில் தெளிவாய் அமைவதேயில்லை. அப்படித் தெளிவாய் எம்முடைய அறிவில் அமைந்திருந்தால், நான் பேசுகிறேன், நான் சிரிக்கிறேன், நான் அழுகிறேன், என்று நாம் கூறும் வார்த்தைகளெல்லாமே பொய்யாகும். அதாவது மனம்தான் பேசியது, மனம் தான் சிரித்தது, மனம் தான் அழுதது என்பது உண்மையானால், மனம் என்னிலும் வேறுபட்ட வேற்றுப்பொருள் என்பதும் உண்மையானால், நான் பேசினேன் என்று கூறுவது எப்படி? அது பொய்தானே! **என் மனம் கவலையடைகிறது, நான் கவலையடைகிறேன் என்று இரண்டுவிதமாய் கூறப்படும் போதும் பெரும்பாலும் நாம் ஒரே கருத்தைத்தானே பெறுகிறோம்.** ஆகவே எமது மனத்துக்கும் எமக்குமுள்ள சம்பந்தம், தொடர்பு, உண்மை பற்றி நாம் அறியாமலே எம்முடைய அறிவில் சரியான குழப்பம், மயக்கம், வஹ்மு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை இவ்விபரம் காட்டுகிறதல்லவா? நான்தான் உடலா? என்னுடைய உடலா? நானும் உடலும் ஒன்றா? என்ற உண்மைகூட எமக்குத்தெரியாமல் மயங்கிக்கொண்டிருக்கிறோம் அல்லவா?

**ஆகவே நாம் நம் நாவினால் கூறுகிற சாதரண சொற்களையே விபரமாய் விளங்கி உண்மையை உணரமுடியாதவர்களாய், வஹ்மு என்ற பேதபுத்தியில் மூழ்கியவர்களாய்க் குழம்பிய அறிவுடையவர்களாய் இருக்கிறோம் என்பது நிச்சயமான உண்மை.** ஆகவே சர்வ வல்லமையும் பேச்சு நாகரீகமும் உடைய இறைவனின் பேச்சான குர்ஆனையும், தெளிந்த, வஹ்மில்லாத, பரிசுத்தமான, அறிவு ஞானமுடைய றசூலின் பேச்சுக்களையும், குழம்பிய, தெளிவில்லாத அறிவு குறைந்த மக்கள் எப்படி விளங்கிக்கொள்வார்கள்? எப்படி உண்மையான விபரம் தருவார்கள்? ஆகவே குர்ஆன், ஹதீஸ்களை, குழப்பமில்லாத நல்லறிவுடைய நல்லடியார்களான உலமாக்களைக்கொண்டு விளங்கியறிய வேண்டுமேயல்லாமல் பட்டம் பதவிகளை அடிப்படையாகக்கொண்டு மயங்கவோ விளங்கியறியவோ வேண்டியதில்லை. **பட்டம் பதவி உடையவர்கள்தான் உலமாக்களென்று ஏமாறவேண்டாம்.** நல்லறிவுடைய மக்கள்தான் உலமாக்கள் என்பதே உண்மை. முடிவு என்னவென்றால் இறைவன் வேறு சிருஷ்டி வேறு என்பதுபோல் குர்ஆன், ஹதீஸ்களில் தென்படும் வசனங்கள் வஹ்முக்கும் மருண்ட அறிவுக்கும் அப்படித் தென்படுகின்றனவேயன்றி உண்மை அப்படியல்ல. **குர்ஆன் ஹதீஸ்களில் தௌஹீதுக்கு மாற்றமான எந்த ஓர் வசனமும் இல்லை என்பது தெளிவான பகுத்தறிவிடத்தில் உண்மையாகும்.**

### 5வது கேள்வி:

நீங்கள் காட்டியபடி, குர்ஆன் ஹதீஸ்கள் தௌஹீது விடயமாய், இறைவனுடைய ஸிபத்துக்களே சிருட்டிகளாய் வெளியாகியுள்ளன என்று விளக்குகின்றன என்பது உண்மையானால் ஏவல் விலக்கல், தேவையில்லையே? தொழுகை, நோன்பு போன்ற கட்டாய கடமைகள் (பர்ளுகள்) தரப்பட வேண்டியதில்லையே? கடமைகளைச் செய்தோருக்குத் தவாபும் செய்யாதோருக்கு அதாபும் தருவதாய், அச்சம் ஆதரவு ஊட்டவேண்டியதில்லையே? ஹலால் ஹறாம் என்ற வேறுபாடு வேண்டியதில்லையே? எல்லாம் அவனே என்றால் பன்றி, நாய் போன்றவற்றை உண்பதும், சகோதரி,

மகள் போன்றவர்களை விவாகம் செய்வதும் ஏன் விலக்கப்படவேண்டும்? இதுமனித அறிவில் அமையாத ஓர் விடயமாகவும் குர்ஆன் ஹதீஸ்களுக்கு மாறான விபரமாகவும் தென்படுகிறதே? இதை அறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விளக்கிக்காட்ட வேண்டும்.

01 **(3)**

**பதில்:**

**இ**வை எல்லாவற்றையும் தனித்தனியே விபரித்து விளக்குவதனால் பல புத்தகங்களை எழுதவேண்டி நேரிடும். ஆயினும் மிகச் சுருக்கமாய்ப் பிரசங்கபாணியில் தொகுப்பாய்க் கூறுகிறேன். நுட்பமாய் விளங்கிக்கொள்ள வேண்டும். இவ்விதமான ஓர் கேள்வி றசூல்(ஸல்) அவர்களிடத்திலேயே அவர்களுடைய சஹாபாக்களில் ஒருசிலரால் அக்காலத்திலேயே கேட்கப்பட்டு றசூல்(ஸல்) அவர்களும் அதற்கு விடையளித்திருக்கிறார்கள். அது சம்பந்தமான ஓர் நீளமான ஹதீஸ், அபூதாவுத், முஸ்லிம், மற்றும் கிரந்தங்களில் அபூஹுறைறா(றலி) அவர்களால் அறிவிக்கப்பட்டு இருப்பதால் இங்கே அதை எழுதவில்லை. அவசியமானோர் அக்கிரந்தங்களில் கண்டறியவும். றசூல்(ஸல்) அவர்களுடைய பதிலின் சாரம் கலாகத்றை உறுதிப்படுத்துவதாகவும் நாம் விளக்கம் தரப்போகிற தௌஹீதின் உண்மையை வலியுறுத்துவதுமாகவே அமைந்திருக்கிறது.

மனிதனுடைய உணர்ச்சியினாலும் நாமரூபகுணா குணங்களினாலும் சிருஷ்டிகள் ஒன்றுக்கொன்று பேதமாயும் விரோதமாயும் இருப்பது நூறுவீதமும் உண்மையே. இது இறைவனுடைய நாட்டத்தில அடங்கியுள்ள அவ்வியக்கப் பொருளாய் இருக்கிறது. அதாவது “கன்ஸுல் மக்பிய்யி” என்ற இந்த அவ்வியக்க (இயக்கமில்லாத) புதையல் வெளிப்படுவதும் உலகத்தை அடுக்காகக் கோப்பதும், றசூல்மார்கள், நபிமார்களை அனுப்புவதும், ஸஹுபுகள், கிதாபுகளை வேதங்களை அனுப்புவதும் “அம்று”“நஹ்யு” என்ற விதிவிலக்குகளை நடாத்துவதும், நன்மைக்குத் தவாபும் தீமைக்கு அதாபும் கொடுப்பதும், ஸரீஅத்துடைய சட்டங்கள் என்னும் ஹுக்கூம்களை இயக்குவதும்,“இலைஹில்மற்ஜிஉ வல்மஆபு” என்ற விதிப்படி அல்லாஹ்விடத்தில் ஐக்கியமாவதும் மனிதனுடைய அறிவினால் உணர்வினால் சிருஷ்டிகள் ஒன்றுக்கொன்று பேதமாய், விரோதமாய் இருப்பதைப் பொறுத்தே அமைந்திருக்கிறது.

குர்ஆன் ஆயத்தின் விதிப்படி உறுதிப்பட்டு நீங்காமல் நிலைத்திருக்கிற வஹ்மியாகிய **நாமரூப பேதங்கள் உண்டு என்று ஒப்புக்கொள்ள வேண்டியது உண்மையான சுத்த ஈமானாகவே இருக்கிறது. ஆனால் இந்தப் பேதாபேதங்கள் எல்லாவற்றிற்கும் “ஹகீகத்” (உண்மை) உஜூதாக இருக்கிறதென்று தெளிவு பெறுவதே தௌஹீதாய் இருக்கிறது.** அது எப்படியென்றால் “ஹப்பார்” (இரங்கி மன்னிப்பவன்) “கஹ்ஹார்” (கடினமாய் அடக்கி ஆள்பவன்) “நாபிஉ (இலாபம் கொடுப்பவன்) “லாற்று” (நஷ்டம் கொடுப்பவன்) என்ற திருநாமங்கள் **ஒன்றுக்கு மற்றொன்று நேர்விரோதமானதாய் இருந்தாலும் இந்தப் பண்புகள் எல்லாம் உஜூதாகிய அந்த ஒன்றுக்கேஉரியனவாக இருக்கின்றன**என்பதை நாமெல்லோரும் அறிந்தே இருப்பதைப்போல. ஆகவே ஏவல், விலக்கல், நன்மை, தீமை அதாபு, தவாபு எல்லாம் சிருஷ்டிகளைப் பொறுத்த விஷயங்களாய் இருக்கின்றன. ஆனால், அந்த உண்மைப் பொருளோ இந்தக் குற்றம் குறைகள் யாவையும் விட்டு நீங்கிய மிகமிகப் பரிசுத்தமானதாகவே இருக்கின்றது. எப்படி? கனவுக் காட்சியைக் கண்ட நீ (ஆத்மா) கனவைக் கண்ட மனத்திலோ கனவில் வெளியான எதிலுமோ கட்டுண்ணாமல் என்றும் இருந்ததுபோலவேதான் இருந்தாய். (இருந்தது) கனவில் வெளியான அத்தனையும் வெறும் நாமரூபங்களாய் இருந்து தோன்றி மறைந்ததுபோல (ஆதேயங்கள்போலவே) சர்வபிரபஞ்சங்களும் தோன்றி மறைகின்றன. இவ்வளவு விபரமுமே அறிவுடையயோருக்குப் பதில் என்பதற்குப் போதுமானதாகும். ஆயினும் நடுத்தர அறிவுடையோர் விளங்கிக் கொள்ளமாட்டார்கள் என்பதற்காக நாம் இன்னும் சிறிது கூறுவோம். ஏனென்றால் இவ்விஷயம் கலாகத்றுடைய விஷயமாயும், குர்ஆன், ஹதீஸ்களில் (இஸாரத்துன்னஸ்) சயிக்கினை மூலம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதாலும் மிகப்பெரும்பாலார் இவ்விஷயத்தில் மயக்கமடைந்தே இருக்கிறார்கள்.

02 **(4)**

**க**னவுக்காட்சியில் தனக்கு அன்னியமாய்க் கண்ட பொருட்கள் தானாயும் தனக்கு அன்னியம்போலவும் மனதுக்குத்தென்பட்டன. அதாவது மனம்தானே கனவாகவும் தனக்கன்னியமான பொருள்களாகவுமே கனவைக் காண்பதுபோல உண்மைதானாகவும் உண்மைக்கு அன்னியம் போலவும் மனதுக்குத்தென்பட்ட, தென்படும் பொருட்கள் சிருஷ்டியென்ற பெயரில் இருக்கின்றன. இந்தச் சிருஷ்டிகள் ஒவ்வொன்றும் நீங்காமல் நிலைபெற்றுள்ள வஹ்மில் கட்டுண்டிருப்பதால் (குன் என்ற இறைவனுடைய சொல்லில் கட்டுண்டிருப்பதால்) தங்களை இறைவனைவிட்டும் வெவ்வேறான தனித்தனிப் பொருட்களாய் கணிக்கின்றன. கனவில் கண்ட மாடு, கனவில் உலாவிய உன்னை முட்டும்போது நானும் நீயும் ஒன்றேயென்ற உணர்வோடு முட்டுவதேயில்லை. கனவில் கண்ட நாய் உன்னைக் கடிக்கும்போது நீ வேறு நான் வேறு என்ற திடமான உறுதியான நம்பிக்கையோடுதான் கடிக்கிறது. அதே போல கனவில் வெளியான எந்தப் பொருளுக்கும். கனவின்போது நான் மனதின் தோற்றங்களில் ஒன்றே என்பதும் நான் என்றுணர்வது மனமே என்பதும் தெரிவதேயில்லை. அப்படித் தெரிந்துவிட்டால் கனவே கலைந்துபோகும். அது தவிர அப்படி உணர்வது மனமேயன்றிக் கனவில் வெளியான பொருளாகவும் இருக்காது. கனவில் வெளியான ஒவ்வொர் பொருளும் உணர்ந்திருந்ததுபோலவே சிருஷ்டிகளும் சர்வ பிரபஞ்சங்களிலுமுள்ள சகல பொருட்களுமே நான்,

நான் என்றும் தம்மை வெவ்வேறானவை என்றுமே உணர்கின்றன. உணர்ந்திருக்கின்றன. இந்த நான், நான் என்றுணர்கிற உணர்வைத் தமிழில் அகங்காரமென்றும் அறபியில் “அனாநிய்யத்” என்றும் கூறப்படும்.

இந்த அனாநிய்யத் இருக்கும் வரையிலும் (அழிந்தொழியும் வரையும்) ஒவ்வோர் சிருஷ்டிக்கும், நான் ஓர் சிருஷ்டிப் பொருள்தான் என்ற உணர்வு இயல்பாகவே உள்ளத்தில் இருக்கவே செய்யும். இவ்வுணர்வுள்ள பொருட்களையே, இவ்வுணர்வுள்ள சிருஷ்டிகள் (ஹக்குக்கு) உண்மைக்கு அன்னியமாய், வேறாய், கருதுகின்றன. **இவ்வுணர்வு மாய்ந்தொழிவது பேச்சளவில் இலகுவாய்த் தென்பட்டாலும் செயலளவில் இலகுவான ஓர் விடயமேயல்ல.** இந்த அகங்காரம், அனாநியத்தென்னும் உணர்வு மாய்ந்தொழியும் நிலைமையைத்தான், கட்டவிழ்தல்,“தஜற்றுது” மௌத்தாகாமல் மௌத்தாதல் என்றெல்லாம் கூறப்படுவது. அதாவது கனவில் இருந்து ஓர் பொருள், நான் மனமே என்றுணரும்போது கனவும் தானும் இல்லாது விளிப்படைவது போலவே இவ்வுணர்வு மாய்ந்தொழிபவர்களும் இல்லாதொழிகிறார்கள். இந்த நிலைமையில் உள்ள ஓர் உள்ளம் எவ்வித கட்டுப்பாட்டிலும் அமையாது. உலக விவகாரங்கள் இவ்விடத்தில் அழிந்துவிடும். இதற்கதிகமாய் இதை விபரிக்க முடியாது. விபரிக்கக்கூடாது. இந்த நிலைமை சாதாரண மனிதனுடைய அறிவில் திடீரென அமையாத ஓர் நிலைமையாகும். இந்த நிலையைப் பெறுவதுதான் ஒவ்வோர் மனிதனும் பிறப்பதன் நோக்கமுமாகும். இதை மனிதனுக்கு உணர்த்துவதற்காகத்தான் கலிமாவும் நபிமாரும் தேவையானார்கள். இந்த நிலைமை எய்தாத மனிதன் நான் ஓர் சிருஷ்டி என்ற உணர்வில் இருந்து விடுபடவே முடியாது. இவ்வுணர்வு நீங்காத வரையில் பூரணத்தன்மையையோ சாந்தியையோ, சுவர்க்கத்தையோ, லிகாவையோ அடையவே முடியாது. இவ்வுணர்வு ஒன்றிரண்டு தினங்களில் அல்லது பல மாதங்களில் மாய்ந்தொழியக்கூடியதாயும் இல்லை. இந்த நிலைமையைப் பெறப்பல வருடங்களும் பிடிக்கலாம். இறக்கும் வரையிலும் இந்த நிலைமை கிட்டாமலும் போகலாம்.

இவ்விதமான வெவ்வேறென்ற தன்னுணர்வோடு வாழும் மனிதன் நான் என்பது பெரும்பாலும் இந்தப்பௌதீக உடலேதான் என்றுணர்கிறான். இதேபோல மற்றும் சிருஷடிகளின் வெளி உடல்களையே இவன் சிருஷ்டியாகவும் உணர்கிறான். இதே உணர்வு இப்லீஸுக்கும் இருந்ததனால்தான் இறை ஏவலுக்குமாறு செய்தவனாய் லஹ்னத்துப் பெற்றவனாய் கணிக்கப்பட்டான்.

قَالَ لَمْ أَكُن لِّأَسْجُدَ لِبَشَرٍ خَلَقْتَهُۥ مِن صَلْصَٰلٍ مِّنْ حَمَإٍ مَّسْنُونٍ

15-33 *அதற்கவன் (காய்ந்தால்) சப்தம் கொடுக்கக்கூடிய பிசுபிசுப்பான களி மண்ணால் சிருஷ்டித்த மனிதனுக்கு (நெருப்பால் சிருஷ்டிக்கப்பட்ட நான்)சிரம் பணிவதற்கில்லையென்று கூறினான்.*

**ஆதம்(அலை) என்ற மனிதர் களிமண்ணால் சிருஷ்டிக்கப்பட்ட உடலே தான் என்றும், நான் நெருப்பினால் செய்யப்பட்ட உடலேதான் என்றும் நம்பிய தவறான நம்பிக்கைதான் இப்லீஸை அவனிருந்த உயர்பதவியை விட்டும் தாழ் பதவிக்குக் கொண்டு சென்றிருக்கிறது.** இதேபோல, நான் ஓர் சிருஷ்டியே என்றும், நான் என்பது இவ்வுடலே என்றும் நம்பியுள்ள மனிதன் தாழ்பதவியில் இருந்து கொண்டிருக்கிறான். காலத்தையும் இடத்தையும் பிரித்துக்கொண்ட மனிதன் மயக்கில் வாழ்கிறான். இம்மனிதன் நான் யார் என்பதை உணர்ந்து தன் சுயநிலைமையில் தரிக்கவேண்டியவனாயும் இருக்கிறான். இம்மனிதன் தன்னுடைய சுயநிலைமையை அடைய அறிவுத்துறையில் (ஆத்மீகத் துறையில்) எத்தனையோ படித்தரங்களைக் கடந்துதான் செல்லவேண்டியவனாயும் இருக்கிறான். இவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உணர்வுகளில் மிருகம், ஷைத்தான், மலக்குகளுக்குரிய உணர்வுகளும் (குணங்களும்) தனக்கென்ற சொந்தமான சில குணங்களும் கலந்தே இருக்கின்றன. இம்மனிதன் அறிவுத்தெளிவில்லாதவனாயும் இருப்பதால், தன் சொந்தக் குணத்தோடு மட்டும் வாழமுடியாதவனாயும் இருக்கிறான். மற்றும் குணங்கள் என் உயர் பதவிக்கு உதவியாய்த் தரப்பட்டவைதான் என்பதையும் அறியாதவனாய் இருக்கிறான். ஆகவே இவ்விதமான (இருளில்) அறியாமையில் மூழ்கியுள்ள மனிதனுக்கு, அவன் தன் உயர்நிலையை எட்டிப்பிடிப்பதற்கு உதவியாகச் சில உபாயங்களை விளக்குவதும் உயர் பதவியை எய்துவதற்குத் தடையான விஷயங்களைத் தடுத்து நிறுத்துவதும் அவசியமல்லவா? ஆகவே சிருஷ்டி என்ற கட்டில் சிக்கியுள்ள மனிதன் தன் உயர் பதவியைப் பெறுவதற்காக ஏவல், விலக்கல், அச்சம், ஆதரவுகளையூட்ட வேண்டியது நீதியான, தேவையான ஓர் விஷயம்தானே!

ஆரம்ப நிலைமையில், மருட்சியில் ஊறியுள்ள மனிதனுக்குச் சட்டங்களும், வேதமும் வழிகாட்டிகளும், அவசியம்தான், அச்சம் ஆதரவு ஊட்டுவதும் அவசியம்தான்,**ஆனால் அவை உண்மையின் அடிப்படையில் அவசியத்தின் அளவாய் அமைந்திருக்க வேண்டும்.** ஆனால் இன்று மதரஸாக்களில் பாவிக்கப்படுகிற பெரும்பான்மையான நூற்கள், ஒருசிலரால் புகுத்தப்பட்டு தான்தோன்றித்தனமான சட்டதிட்டங்களை அடிப்படையாய்க் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன. இது எனது 25 வருட ஆராய்வினால் கண்டறிநத உண்மையாகும். வழி காட்டிகளான நபிமார்களும் அவர்கள் எமக்களித்த வேதங்கள், சட்டங்களும் நீதியானவையாய், அவசியத்தினளவு தரப்பட்டிருந்தும் எம்மில் பலர் இவ்வுண்மையை உணராததால், குறிக்கோளை மறந்தவர்களாய் இருந்ததால், நபிமாரால் தரப்பட்ட உண்மைகளைப் புரட்டி நேர்விரோதமான திசையில் கிறுக்கி அளவுக்கதிகமான அச்சம்

ஆதரவுகளை ஊட்டியிருக்கிறார்கள். ஆகையால்தான் இன்றுள்ள மனிதர்களில் மிகப்பெரும் பாலார் உண்மைதான் என்று அறிவு ஏற்றுக்கொண்டாலும்கூட உண்மையை உதறித்தள்ளி விடுகிறார்கள்.

மனிதனுடைய ஆரம்பநிலைமை(ஈமான்) வளரும் பயிருக்கொப்பானது. அப்பயிரைக்காப்பதற்காக நீர், காற்றோட்டம், பசளை, வேலி முதலியவை அவசியம் தேவையானவைதான். அச்சிறுபயிர் வளர்ச்சியடைந்து பெருமரமாகி விட்டால் வேலி இருப்பதும் இல்லாதிருப்பதும் சமம்தான். ஏனென்றால் அம்மரம் எந்த நிலைமையையும் சமாளிக்ககூடிய பக்குவத்தில் இருப்பதால் அதைப் பற்றி நாம் கவலைப்படவேண்டிய அவசியமே இல்லை. பக்குவமடைந்த ஈமான்தாரிகளுக்கு அமலில்லாமலே ஈமான் கமாலியத்தை அடையும் என்பது உண்மை.

## 03 (5)

**உ**ள்ளத்தெளிவுபெறாத, வஹ்முநீங்கா மனிதர்கள் அறிவுத்துறையில் பலதரப்பட்டவர்களாகவே தென்படுகிறார்கள். அவர்கள் பட்டதாரிகளாகக் கல்விமான்களாக இருப்பினும் சரிதான் உதாரணமாக ஓர் சிற்பம் செதுக்கும் விற்பன்னன் ஓர் கல்லைப் பார்க்கும் போது இக்கல் எனது சிற்பவேலைக்குப் பொருத்தமானதா? இல்லையா? என்பதை நோக்குகிறான். ஓர் மேசன் அக்கல்லைப்பார்க்கும்போது இக்கல்லில் எத்தனை கியூப் எனது வீட்டு வேலைக்குத் தேவைப்படும் என்று நோக்குகிறான். அதேகல்லை ஓர் இரசாயான விற்பன்னன் பார்க்கும்போது அக்கல்லின் ஒப்பு, அடர்த்தி, அதிலடங்கியுள்ள மூலப்பொருட்கள் எவை என்பதையே பார்க்கிறான். அதேகல்லை ஓர் பூகோள விற்பன்னன் பார்க்கும்போது வேறோர் கோணத்திலும் விஞ்ஞானி பார்க்கும்போது இன்னுமோர் கோணத்திலும் பார்க்கிறான். ஆகவே இவர்கள் ஒவ்வொருவருடைய ஆராய்விலும் எதுசரி? எது பிழை? என்று நோக்கினால் எல்லாமே சரிதானென்ற முடிவுக்கே வரவேண்டியதாய் இருக்கிறது. ஏனென்றால் ஒரே உண்மைப் பொருள் பற்பல சூழ்நிலைகளில் பற்பல அறிவுத்தகுதிகளிலே வெவ்வேறான விளக்கத்தைக் கொடுப்பதாய் வெவ்வேறோன கோட்பாடுகளை விளக்குவதாய் அமையலாம். ஆனால், உண்மையாகவே அப்படியொரு வேறுபாடும் அப்பொருளில் இல்லவேயில்லை. எனினும் ஒவ்வொரு மனிதனுடைய அறிவின் படித்தரத்துக்கேற்ப தத்துவ விளக்கம் வெவ்வேறு வகையாய்தென்படுகிறது என்பதுதான் உண்மையாகும்.

இதேபோல உலகவிவகாரங்கள், அரசியல், மதம், கொள்கை அனுஷ்டானம் மற்றும் எல்லா விஷயங்களிலுமே மனித இனம் அறிவுத்துறையில் வேறுபட்டுத்தான் இருக்கிறது. இந்தமனித இனத்தை அவாம்கள் (சாதாரண, அறிவு விளக்கம் குறைந்தவர்கள்) கவாஸுகள் (அறிவு விளக்கம் உடையவர்கள்) என்று இரண்டுபகுதிகளாக வகுத்துக்கொண்டு நாம் விளக்கம் பெறுவோம். ஒரு சாதரண மனிதன் (அறிவு விளக்கமில்லாதவன்) நான் ஓர் சிருஷ்டியே என்ற உணர்வுடையவனாய் இருக்கும் வரையிலும் அவனுடைய வினைகளின் (செயல்களின்) பிரதிபலன்களை அவனே எற்படுத்திக்கொள்கிறான். அச்செயல் நன்மையானாலும் தீமையானாலும் சரிதான். அவனுடைய செயல்களை மீறக்கூடிய இன்பமோ, துன்பமோ, நன்மையோ, தீமையோ, சுகமோ, துக்கமோ, அவனுக்கு ஏற்படுவதேயில்லை. இவ்வித நிலைமையில் உள்ள மனிதன், யாவும் இறைவன் செயலே என்பதை பலாத்காரத்தினால் வெளிமனதால் ஏற்றுக்கொண்டிருந்தாலும்,**அவனுடைய அறிவும் உள்மனமும் ஏற்றுக்கொள்வதேயில்லை. இந்தச் சொல் அவனுடைய அறிவுக்கு இப்போது பொருந்தாததாகவே தென்படும்.** ஏனென்றால், இம்மனிதன் சிருஷ்டியாகிய தன்னையும் சிருஷ்டிகர்த்தாவான இறைவனையும் வேறு வேறாய்க் கண்டுகொண்டிருப்பதால், இறைவனே நான் என்றுணர்பவனும், செயலில் ஈடுபட்டவனும் செயலும் என்பதை அறியாதவனாய் இருப்பதால் எல்லாம் இறைவன் செயலே என்பதை பலாத்காரத்தினால் வெளிமனதால் ஏற்றுக்கொண்டிருந்தாலும் **அவனுடைய அறிவும் உள்மனமும் ஏற்றுக்கொள்வதேயில்லை.** இப்படியெல்லாம் இறைவன் செயலே என்று கூறுவது அவனுடைய அறிவில் நிச்சயமாகக் குழப்பத்தை ஏற்படுத்தவே செய்யும்.

لَا يُكَلِّفُ اللَّهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا لَهَا مَا كَسَبَتْ وَعَلَيْهَا مَا اكْتَسَبَتْ

2-286 *அல்லாஹ் யாதொரு ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல்நிர்பந்திப்பதில்லை. அவை தேடிக்கொண்ட நன்மை அவைகளுக்கே அவை தேடிக்கொண்ட தீமை அவைகளுக்கே. (இவ்விதமான ஆயத்துக்களெல்லாம் இந்தச் சாதாரண அவாம்களை நோக்கியவையாகவே இருக்கின்றன.)*

அதாவது இந்தச்சாதாரண மனிதன் அறிந்துள்ள, நம்பியுள்ள கோட்பாடு, (ஜீவபோதம்) நான் ஓர் சிருஷ்டியே என்பதுதான். இக்கோட்பாடு, அவரவர் செய்யும் நன்மை தீமைகளுக்கேற்றபடியே தவாபு,அதாபு முதலாம் பெறுபேறுகளைப் பெறுவார்கள் என்ற அளவோடு முடிவடைந்து விடுவதால் இதற்கதிகமாய் ஆத்மீகத்துறையில் முன்னேற அவனால் முடியாமலே போய்விடுகிறது. அதாவது ஆரம்பக் கல்விக்கூடங்களில் கலிமாவின் உண்மை விளக்கப்படாமையாலும் ஆத்மீகத்துறையை

மூடிமறைக்கக்கூடிய விபரங்கள் கொடுக்கப்பட்டமையாலும் அவன் உண்மைக்கு மாறான எதிர்திசையில் செலுத்தப்பட்டமையாலும்தான் மனிதனுக்கு இந்த நிலைமை ஏற்படுகிறது. ஆத்மீகத்துறை மறைக்கப்படாமல் அவனுக்கு ஆரம்பத்தில் விளக்கப்பட்டு, அல்லது கொடுக்கப்பட்ட விளக்கங்களுக்கு மேலான ஆத்மீக விளக்கம் என்பதும் ஒன்றுண்டு என்று அறிவிக்கப்பட்டிருந்தால், அவன் என்றோ ஒருநாள் தன் உயர் பதவியை அடைந்தேயாவான். ஆனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட கல்வியே இறுதியான முடிவானதென்றும் இதற்கு மாற்றமான, அல்லது உயர்வான விளக்கங்கள் எல்லாம் பிழையானவை, வழிகேடானவை என்றும் அவனுக்குக் கற்றுக் கொடுத்திருக்கும்போது அம்மனிதன் உயர் பாதையைப் பெறுவது எப்படி? அவன் உயர் பாதையின் விபரமான உண்மையை மறுக்கத்தானே முற்படுவான்? ஆகவே இந்த அவாம் (சாதாரணமனிதன்) கவாஸுகளுடைய நிலைமையைப் பெற முடியாதவனாயும் அவர்களுடைய அறிவை மறுத்து அதைப் பிழையாகவும் காணுகிறான்.

ஓர் மரத்தை எடுத்துக்கொள்வோம். பலகோடிக்கணக்கான இலைகள் நூற்றுக்கணக்கான கிளைகள், பல ஆயிரக்கணக்கான பூக்கள், பிஞ்சுகள், பழங்கள் எல்லாம் சேர்ந்த ஓர் கூட்டுப்பொருளே (சமஷ்டிப் பொருளே) மரம் என்று சாதாரண மனிதன் நம்புகிறான். நல்ல, தீய பலகோடானுகோடி சிருஷ்டிகளும் இறைவனும் சேர்ந்த கூட்டுப்பொருள்தான் பிரபஞ்சம் என்று நம்பியதைப்போலவேதான் மரத்தையும் காணுகிறான். ஆகவே கூட்டுப்பொருளான மரத்தின் இலை, கிளை, பட்டை, பூ, காய் முதலான ஒவ்வோர் அங்கமும் தனித்தனிப் பொருட்களே என்றும் அவை ஒவ்வொன்றும் காரணகாரியப் பொருத்தத்தோடமைந்த சொந்தமான தனித்தனிச் செயலுடையவைகளே என்றும் காணுகிறான். பட்டையின் வேலையை இலையும், இலையின் வேலையைப் பழமும் செய்வதாக அவன் காண்பதே இல்லை. ஆனால் மரம் முழுவதையும் பொதுநோக்காகப் பார்ப்பவர்களுக்கு இலை, காய், கிளை முதலாம் அங்கங்கள் யாவும் மரத்தின் பேரமைப்பில் அமைந்து விடுவதாகவே தென்படுகிறது. மேலும் இலை, காய், பூ, பழம், முதலாம் அங்கங்களின் செயல்கள்கூட வெவ்வேறாய்த் தென்படாமல் யாவும் மரத்தின் செயலே என்றும் அமைந்துவிடுகிறது. அதாவது பட்டை, கிளை, இலை, முதலாம் பொருட்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் தனிப்பொருள் என்றாகாமல் மரம் என்பதிலேயே கட்டுண்டுவிடுகின்றன. பல கோடாகோடி அலைகள் நுரைகள் உள்ள கடலைப் பொதுவாய் நோக்கும்பொது அலை, நுரை, என்பவை தனித்தனிப் பொருட்களாயும் தனித்தனிச் செயல்கள் உள்ளவையாயும் இல்லாமல் கடலின் பேரமைப்பில் அடங்கிவிடுவதுபோல அறிஞர்களின் (கவாஸ்களின்) அறிவில் இறைவன் பேரமைப்பிலேயே சர்வபிரபஞ்சங்களும் அடங்கிவிடுகின்றன.

இம்மகான்கள், இலை, கிளைகளை மரத்தின் பேரமைப்பில் ஒன்றாய்க் காண்பதுபோல, அலை நுரைகளைக் கடலின் பேரமைப்பில் ஒன்றாய்க் காண்பதுபோல சர்வபிரபஞ்சங்களையும் சர்வ தத்துவங்களையும் இறைவனின் பேரமைப்பில் ஒன்றாக ஒரே தத்துவமாகக் காண்கிறார்கள். இவர்கள் எந்தவோர் பொருளையும் தனிப்பொருளாக தனிச்செயலுடைய பொருளாகக் காண்பதே இல்லை. அதாவது அல்லாஹ்வையும் அவனுடைய தோற்றங்களையும் அவனுடைய தத்துவத்தையும் தவிர நான் இருக்கிறேன் என்றுணர்கின்ற தன்னைகூட ஓர் தனிப்பொருளாக அவர்கள் காண்பதேயில்லை. அல்லாஹ்வைத் தவிர நான் எதையும் பார்த்ததே இல்லை என்று அலி(றலி) அவர்கள் கூறுகிறார்கள். (ஆதாரங்கள் இப்போது எமக்கு வேண்டியதில்லை). இந்த மகான்களுடைய அறிவில் உண்மைப்பொருளில் உண்மையல்லாத கற்பனைப் பொருட்கள் மறைந்துவிடுகின்றன. ஆனால் இலை, கிளைகளைக் காண்பவன் மரத்தை முற்றாய் அறியாததுபோல, அலை, நுரைகளைத் தனித்தனியாய்க் காண்பவன் கடலைக்காணாததுபோல சிருஷ்டிகளை காண்பவன் இறைவனைக் காண்பதேயில்லை. எல்லாம் அவன் செயலே என்பதை ஒப்புக்கொள்வதுமில்லை. ஏனென்றால் மரத்தின் ஒவ்வோர் அங்கமும் தனித்தனிச் செயலுடையதாய் அலை, நுரை ஒவ்வொன்றும் தனித்தனிச் செயலுடையவையாய் அவன் காண்பது போலவே சர்வசிருஷ்டிகளும் தனித்தனிச் செயலுடைய தனித்தனிப் பொருட்களாக அவன் காணுகிறான். ஆகவே அறிவு விளக்கம்காணாத இந்த அவாம்களுக்கு அவர்களுடைய கோட்பாடுகளுக்கமைவான சட்டதிட்டங்கள், ஏவல் விலக்கல்கள் அவசியமானவைதான். ஆனால் இச்சட்டதிட்டங்கள் உண்மையை மறைப்பவையாய் இருக்கக் கூடாது. இந்தச் சட்டதிட்டங்களுக்கு உண்மையை மறைக்கக்கூடிய விளக்கங்கள் விபரங்கள் கொடுபடவும், தவறான கட்டுப்பாடுகளை அமைக்கவும் கூடாது.

كُلٌّ مِّنْ عِندِ ٱللَّهِ

4-78 *யாவும் அல்லாஹ்வின்பால் இருந்தே கிடைக்கின்றன.*

مَآ أَصَابَ مِن مُّصِيبَةٍ إِلَّا بِإِذْنِ ٱللَّهِ

64-11 *அல்லாஹ்வுடைய கற்பனையின்றி யாதொரு தீங்கும் வந்தடையாது.*

وَأَنَّهُۥ هُوَ أَضْحَكَ وَأَبْكَىٰ ﴿٤٣﴾ وَأَنَّهُۥ هُوَ أَمَاتَ وَأَحْيَا

53-43,44*நிச்சயமாக அவனே உம்மைச் சிரிக்கவைக்கிறான். அழவும் வைக்கிறான்.*

وَلَوْ شِئْنَا لَآتَيْنَا كُلَّ نَفْسٍ هُدَاهَا وَلَٰكِنْ حَقَّ الْقَوْلُ مِنِّي

لَأَمْلَأَنَّ جَهَنَّمَ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ أَجْمَعِينَ

32-13 *நாம் விரும்பியிருந்தால் ஒவ்வோர் மனிதனுக்கும் அவன் நேரான வழியில் செல்லக்கூடிய அறிவைக் கொடுத்திருப்போம். எனினும் ஜின்களையும் மனிதர்களையும் கொண்டு நிச்சயமாக நரகத்தை நிரப்புவோம் என்று நம்முடைய தீர்ப்பு ஏற்பட்டுவிட்டது.*

وَلَٰكِن لِّيَقْضِيَ اللَّهُ أَمْرًا كَانَ مَفْعُولًا لِّيَهْلِكَ مَنْ هَلَكَ عَن

بَيِّنَةٍ وَيَحْيَىٰ مَنْ حَيَّ عَن بَيِّنَةٍ ۗ وَإِنَّ اللَّهَ لَسَمِيعٌ عَلِيمٌ

8-42 *எனினும் அல்லாஹ் கற்பனை செய்துவிட்டகாரியம் நடந்தேறுவதற்காகவும் அழிந்தவர்கள் தக்க முகாந்திரத்துடன் அழிவதற்காகவும் பிழைத்தவர்கள் தக்க காரணத்தைக் கொண்டே பிழைப்பதற்காகவும் நிச்சயமாக அல்லாஹ் செவியுறுவோனும் அறிந்தோனுமாய் இருக்கிறான்.*

وَإِذْ يُرِيكُمُوهُمْ إِذِ الْتَقَيْتُمْ فِي أَعْيُنِكُمْ قَلِيلًا وَيُقَلِّلُكُمْ فِي

أَعْيُنِهِمْ لِيَقْضِيَ اللَّهُ أَمْرًا كَانَ مَفْعُولًا ۗ وَإِلَى اللَّهِ تُرْجَعُ الْأُمُورُ

8-44 *அவர்களும் நீங்களும் சந்தித்துக்கொண்ட போது அவர்களுடைய தொகையை உங்களுடைய கண்ணுக்குக் குறைத்தும் உங்களுடைய தொகையை அவர்களுடைய கண்களுக்குக் குறைத்தும் காண்பித்ததெல்லாம் அல்லாஹ் கற்பனை செய்தகாரியம் நடைபெற்றுத் தீருவதற்காகத்தான் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.*

இவ்விதமான ஆயத்துக்களைப் பல கண்ணோட்டங்களோடு ஆராய்ந்து கலாகத்றுடைய விஷயத்தை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இந்த ஆரம்ப நிலையிலுள்ள சாதாரண மனிதன் பெயரளவில் மனிதனாய் இருந்தாலும் ஷைத்தானுடைய, மிருகத்துடைய சுபாவத்தில் கட்டுண்டவனாயும் தன் சொந்த சுபாவத்தை அறியாதவனாயும் இருப்பதால் மனித உருவிலுள்ள ஓர் மிருகமாகவே இருக்கிறான். “இன்னஸற்றத்தவ்வாப்பஹின்தல்லாஹி”“உலாயிகல் அன்ஆமி” போன்ற ஆயத்துகளும் ஒரு சில ஹதீஸ்களும் இவ்வுண்மையை அறிவிக்கின்றன.

04 **(6)**

உண்மையை விளங்கித் தெளிந்த கவாஸுகளான ஸுபிகள் ஞானவான்களின் அறிவில் தோன்றி மறையும் பொய்த்தோற்றமான சர்வபிரபஞ்சங்களின் உணர்வும் மாய்ந்து உண்மைப்பொருளான ஹக்கையன்றி வேறெதுவுமே கிடையாதென்பது தென்படுகிறது. அதாவது ஒரு ஞானியின் அறிவு இறைவனின் அறிவில் மறைந்து விடுகிறது. இதை ஓர் முட்டாள் எப்படி அறிய முடியும்? என்று மௌலானா ஜலாலுத்தீன் றூமி அவர்கள் கேட்கிறார்கள். ஞானமார்க்கத்தில் செல்லும் ஸுபி இறைவனுடைய பண்பு (ஷிபத்து) க்களில் ஏதாவது ஒன்றில் மறைந்துவிடுகிறார். அந்தப் பண்பு பேச்சு என்னும் பண்பாக இருந்தால் அந்த ஸுபியான மகான் **சிலசமயம் இறைவனுடைய பேச்சின் மூலமாக பேசுகிறார். அல்லது இறைவன் சிலசமயம் ஸுபியுடைய நாவின் மூலமாக பேசுகிறான்.** (நுட்பமாய் உணர்க) இதேபோல மற்றும் பண்புகளையும் சிந்தனைக்கெடுத்துக் கொள்ளவேண்டும். இந்த நிலையிலுள்ள ஒருவருக்கும் சாதாரண மனிதருக்கும் மிகமிக வேறுபாடுகள் இருக்கவே செய்யும். இந்தச்சாதாரண மனிதன் இந்த நிலையைப் பெறுவதற்கு முன்னோடியான எவ்வளவோ பயிற்சிகளில் ஈடுபட்டுப் பண்படவேண்டியவனாய் இருக்கிறான். **இந்தப் பயிற்சிக் கோவைதான் பக்திமார்க்கம் என்று கூறப்படுகிற ஸரீஅத்துடைய (அதாலத்துடைய) கடமைகள்.** இந்தப் பயிற்சியில் ஈடுபட்டு உயர் நிலையை அடைய விரும்பும் மக்களுக்கு ஏவல், விலக்கல் அத்தனையும் அவசியமேயாகும். இது சாதாரண மக்களைப் பொறுத்த ஓர் விஷயமாகவும், சமூக அரசியல் விஷயமாகவும் இருக்கிறது. ஆனால் ஸுபிகளான அவ்லியாக்களின் நிலையோ வேறோர் விஷயமாய் இருக்கிறது. அதாவது இறைவன் எவரை நாடுகிறானோ அவரில் தஜல்லியாகிறான். அம்மனிதர் “தாயிரத்துஸ் ஷிர்ரு” என்பதில் சென்றடைகிறார். ஷிர்ரு என்பது இரகசியம் என்பதைக் குறிக்கும். ஒவ்வோர் மூமினும், அங்கீகரிக்கப்பட்டுள்ள ஷரீயத்தின் சாரமாகிய தரீக்கத்தின் கனியாக இருக்கிற ஹகீகத்தை அறிவிக்கும் சமிக்ஞைப் பெயராக “ஷிர்ரு” என்ற சொல்லை மஸாயிகுமார்களான ஞானவான்கள் (அவ்லியாக்கள்) ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதைக்குறிப்பிட்டு,

எனக்கும் என்னுடைய அடியானுக்குமிடையில் ஓர் “ஷிர்ரு” இருக்கிறது. முகற்றபான மலக்கோ முற்ஸலான நபியோ அதற்கு இடம் பெறமாட்டார்கள் என்று இறைவன் கூறியதாக றசூல்(ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த றிவாயத்தில் மிக நுட்பமான இரகசியங்கள் மறைந்திருக்கின்றன. இவ்விஷயங்கள் இவ்விடத்தில் எமக்கு அவசியமில்லை. ஏனென்றால் அனுபவமற்ற மக்களின் அறிவு இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தில் இல்லவேயில்லை.

சிருஷ்டி என்ற கண்டிப்பான கட்டில் கட்டுண்டிருக்கிற இன்ஸானுக்கு, ஸ்தூல, சூட்சும, காரண உடல்களான மூன்று வாகனங்களையும் அவ்வவற்றிக்குரிய புலன் பொறிகளையும் கொடுத்தே “குன்” என்ற சொல்லினால் இறைவன் கட்டுண்ணவைத்திருக்கிறான். ஏனென்றால் அவனுடைய அறிவில் அவ்வியக்கப்புதையலாயிருந்த யாவும் முறையாய் ஒழுங்காய் நடைபெறுவதற்கு இவையாவும் இன்ஸானக்குத் தேவையாய் இருக்கின்றன. இப்படிக் கொடுக்கப்படாவிட்டால் உலக விவகாரங்கள் எதுவுமே நடைபெறாமல் “அமா” என்ற நிலைமையே நிலையாகிவிடும். இறைவனின் திருநாமங்கள் எல்லாமே அவ்வியக்கப் புதையலிலேயே அமைந்துவிடும். மல்ஹறான இன்ஸான் கிரிகைகளில் (செயல்களில்) ஈடுபடாவிட்டால் ஹப்பார் என்றோ கஹ்ஹார் என்றோ (மன்னிப்பவன் - அடக்கியாள்பவன்) எந்தத் திருநாமமும் அதன் தத்துவங்களும் வெளியாவதேயில்லை. மல்ஹறான, இன்ஸான், ஸ்தூல, சூட்சும, காரண உடல்களையும் அவற்றின் புலன் பொறிகளையும்கொண்டு பல நிலைமைகளை (மர்த்தபாக்களை)த் தாண்டித் தன்னுடைய உண்மையான பூரண நிலைமையை அடையவேண்டியவனாய் இருக்கிறான். இப்போதுள்ள ஸ்தூல(பௌதீக) உடலையும் அதற்குரிய பண்புகளையும் கொண்டு சர்வ பிரபஞ்சங்களான பௌதீக உலகை அனுபவிக்கிறான். இந்தப்புலன்களுக்கும் பொறிகளுக்கும் அடிமையாகிப் பேதபுத்தியில் சிக்குண்டு **அவனுடைய இஷ்டம் போல் வாழ முற்பட்டால் சூட்சும உலக முன்னேற்றம் தடைப்பட்டுவிடுகிறது. சூட்சும உடலின் முன்னேற்றம் தடைப்பட்டால் காரண உடலின் முன்னேற்றமும் பாழாகிவிடுகிறது.**

இந்தப் பௌதீக உலகுபுலனறிவில் கட்டுண்ட மனிதனுக்கு எப்படி உண்மையானதோ அதேபோல சூட்சும உலகமான ஆகிறாவும் உண்மையானதுதான். அந்த ஆகிறா உண்மையாய் இருப்பதுபோல அதற்கடுத்த காரண உலகும் உண்மையானதுதான். ஆகிறா சூட்சும உலகென்று நான் கூறுவதைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. இப்போது அது எமக்கு சூட்சும உலகு என்பதும் அப்போது அது எமக்கு நிஜ உலகுதான் என்பதும் உண்மை. இதை விளங்கிக்கொள்ளவேண்டும். மனிதன் ஸ்தூல உடலைக் கொண்டு இவ்வுலகை ஆட்சி பண்ணுவது போல சூட்சும உடலைக்கொண்டு சூட்சும உலகமான மலக்கூத்திலும் (ஆட்சிபண்ண) அனுபவிக்கக்கூடியவனே. பௌதீக உடலின் (உலகின்) புலன் பொறிகளைவிட, சூட்சும உடலின் (உலகின்) புலன் பொறிகள் கூர்மையானவை. இவ்வுலகில் மனிதன் எப்படி இன்ப துன்பங்களை நிச்சயமாகஅனுபவிக்கிறானோ.அதே போல ஆகிறாவென்ற சூட்சும உலகிலும் நிச்சயமாக நன்மை தீமைகளை அனுபவிக்கவே போகிறான். அவ்வுலகப் புலன் பொறிகள் கூர்மையானவையாய் இருப்பதால் அவ்வுலக நன்மை தீமைகள், இவ்வுலகில் அனுபவித்த நன்மை தீமைகளைவிடக் கடினமாகவே இருக்கும் என்பதும் உண்மை. அதன்பின் காரண உடலோடும் அதன் புலன்களோடும் (இப்போது உன்னால் விளங்கிக்கொள்ள முடியாது). பல மர்த்தபாக்களைக் கடந்துதான் பூரணத்தன்மையை, சாந்தியை, லிகாவை மனிதன் அடையப்போகிறான்.

لَّقَدْ كُنتَ فِى غَفْلَةٍ مِّنْ هَٰذَا فَكَشَفْنَا عَنكَ غِطَآءَكَ فَبَصَرُكَ ٱلْيَوْمَ حَدِيدٌ

50-22 *நிச்சயமாக நீ இதனைப் பற்றிக் கவலையற்றிருந்தாய். இன்று நாம் உன்னைவிட்டும் உன்திரையைத் திறந்து (நீக்கி) விட்டோம். இன்று உன்பார்வையானது கூர்மையானதாய் இருக்கிறது.*

மேலே கூறிய சுருக்கமான விபரப்படி, மனிதன் ஆரம்ப நிலையில் தன் மனஇஷ்டம்போல வாழமுற்பட்டால் இந்த ஏற்றம் ஏறமுடியாதவனாய் தடைப்பட்டவனாகி விடுகிறான். இப்போது மனிதனின் அறிவு இதை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும். இன்றைக்கு நாளை இருப்பதுபோல இம்மைக்கு மறுமை இருப்பது நிச்சயம்தான். ஆனால் மறுமை, நரக, சுவர்க்கமெல்லாம் இம்மையைவிட்டும் தனித்தனி,வேறானவையென்று சாதாரண மனிதன் மருட்சியடைகிறான். சாதாரண மனிதனுடைய அறிவில் இது உண்மைதான். ஏனென்றால் இவன் இறந்தபிறகுதான் நரக, சுவர்க்கங்களை அனுபவிக்கப் போகிறான். ஆகவே இவனுடைய பிரயாணம் சீராய் அமைவதற்காக இவனுக்கு வழிகாட்டக்கூடிய ஏவல், விலக்கலயாவும் அவசியமானவைதான்.

ஆனால் “ஐனுல் எகீன்”“ஹக்குல் எகீன்” என்ற உண்மையான ஈமான் (அறிவுஞானம்) உடையவர்களான கவாஸுகளின் நிலைமை இப்படியல்ல. இவர்கள் இம்மையைவிட்டு மறுமையும் மறுமையைவிட்டு இம்மையும் வேறானவையல்ல என்று காண்கிறார்கள். ஏனென்றால் இவர்கள் மௌத்தாகாமலே ஓர் மௌத்தை அனுபவித்துவிடுவதால் இப்படிக் காணுகிறார்கள். இவர்கள் முக்காலங்கள் மூவிடங்கள் என்ற கடினமான திரைகளிலிந்தும் விடுபடுகிறார்கள். இவர்களுடைய இக்காட்சி சாதாரண மனிதனுடைய அறிவுக்கு எட்டாவிட்டாலும் விஷயம் உண்மை.

كَلَّا لَوْ تَعْلَمُونَ عِلْمَ ٱلْيَقِينِ ﴿٥﴾ لَتَرَوُنَّ ٱلْجَحِيمَ ﴿٦﴾ ثُمَّ لَتَرَوُنَّهَا عَيْنَ ٱلْيَقِينِ ﴿٧﴾

102-5,6,7 *ஐனுல் எகீன் (ஈமான்) என்ற அறிவு (ஞானம்) உங்களுக்கு இருந்தால் நீங்கள் நரகத்தை காண்பீர்கள் என்பது உறுதி*

وَإِنَّ جَهَنَّمَ لَمُحِيطَةٌۢ بِٱلْكَٰفِرِينَ

9-49 *திடமாக நரகமாகிறது காபீர்களைச் சூழ்ந்ததாய் இருக்கிறது.*

**ஹதீஸ்:** ***ஒருநாள் நபி(ஸல்) அவர்கள் எங்களைத் தொழவைத்தபின் மிம்பர்மீது ஏறிநின்று தம்முடைய கைகளால் மேற்குப்புறம் சாடை காட்டி நான் உங்களைத் தொழவைத்தபோது இச்சுவரின் பக்கமாக நரகம் சுவர்க்கம் ஆகியவற்றின் கோலத்தை கண்டேன். நன்மை தீமைகளை நான் இன்றுபோல் என்றுமே கண்டதில்லை என்று கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அனஸ்(றலி)**
**ஆதாரம்: புஹாரி**

*ஹதீஸ்:* ***ஒருநாள் நபியவர்கள் வெளியில் வந்து உஹதுப்போரில் உயிர்நீத்த தியாகிகள்மீது ஜனாஸா தொழுதார்கள். பிறகு மிம்பர் அருகே வந்து நான் உங்களுக்கு முன்னோடியாய் இருக்கிறேன். மேலும் இறைவன்மீது ஆணையாக நான் தற்போது "ஹவ்லுல்கவுதர்" என்னும் நீர்த்தேக்கத்தைக் காணுகிறேன். என்னிடம் உலகக் கருவூலங்களின் திறவுகோல்கள் நல்கப்பட்டிருக்கின்றன. மேலும் இறைவன் மீது ஆணையாக நிச்சயமாக எனக்குப் பின் நீங்கள் இணை ஏற்படுத்துவீர்கள் என்று நான் அஞ்சவில்லை. எனினும் நீங்கள் மண்ணாசையில் மூழ்கிவிடுவீர்களென்று அஞ்சுகிறேனென்று கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: உக்பத்துப்னு ஆமிர்(றலி)**
**ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்**

இன்னும் எவ்வளவோ ஆதாரங்கள் தென்படுகின்றன. இவ்விதமான காட்சிகள் நபிமார்களுக்கு மட்டுமே என்று நம்பவேண்டாம். நபிமாரும் எங்களைப்போன்ற மனிதர்களேதான். இறைவனுடைய ஒவ்வோர் சிருஷ்டிக்கும் உட்படை, வெளிப்படை என்ற இரு தன்மைகள் இருக்கின்றன. (லாஹிறு – பாதினு) இவ்விருதன்மைகளும் வெவ்வேறு என்றே சாதாரண மனிதன் அறிகிறான். ஆனால் கவாஸுகளான மகான்களோ நரக, சுவர்க்கம் முதலாம் சர்வசிருஷ்டிப்பொருட்களினதும் உட்படை வெளிப்படை யாவும் மனிதருடைய அறிவுத் தகமையைப்பொறுத்த ஓர் விஷயம் என்று கணிக்கிறார்கள். எம்முடைய ஸ்தூல, சூட்சும, காரண உடல்கள் மூன்றும் தனித்தன்மை உடையவைகளேயெனினும் ஒன்றை விட்டொன்று வேறானவையேயல்ல. **இவைமூன்றும் நான் என்று உணர்கிற எம்மில்தான் தங்கியிருக்கின்றன.** ஆனால் நாமோ இந்த ஸ்த்தூல, உடலுக்குள் புகுந்து கொண்டிருப்பதாகவே நம்பி ஏமாந்து கொண்டிருக்கிறோம். கனவின்போது ஸ்த்தூல உடலின் தோற்றத்திலேயே எமது சூட்சும உடலை ஏதோவெல்லாமாகக் காணுகிறோம். ஆனால் உண்மையான தியானத்தின்போது (திக்ரின்போது) எமது சூட்சும உடலை எம்மால் நிதர்சனமாகப் பார்க்கமுடியும் என்பது உண்மை.

இதே போல காரண உடலைக்கொண்டும் அதன் புலன் பொறிகளைக்கொண்டும், மகான்களான நல்லடியார்கள் சில இரகசியங்களை (ஸிர்றுகளை)க் காண்கிறார்கள். என்பது ஆச்சரியமல்ல. ஆனால் சாதாரண மனிதனோ இந்தப் பௌதீக உடலின் புலன்களில் கட்டுண்டிருக்கும்போதும் தான் உலகை முற்றாய் அறிந்துகொண்டதாகவே மருண்டுவிடுகிறான். ஆனால் இவன் தன் புலன்களுக்கமைவாய் உலகைக் கண்டானேயல்லாமல் உண்மையை இவன் காணவேயில்லை என்பதுதான் உண்மை. ஆகவே இவன் தன் அறிவால் எட்டிக்கொள்ளாத விஷயங்களைப்பற்றிய விளக்கங்களும் ஏவல்விலக்கல்களும் இவனுக்கு அவசியமேயாகும். கவாஸுகளான மகான்களின் நிலைமை சாதாரண மனிதரின் நிலைமைக்கு முற்றும் மாறுபட்டது போல் தென்பட்டாலும் **அது குர்ஆன், ஹதீஸ்களுக்கோ பகுத்தறிவுக்கோ மாறுபட்டதேயல்ல.** இந்த மகான்களின் நிலைமையைத்தான் "ஹகீகத்","மஃறிபத்" என்று கூறப்படுவது. சாதாரண மனிதன் வெளிஉலகை எப்படி உண்மையானதாகக் காண்கிறானோ அதேபோல இந்த மகான்கள் ஆகிறாவையும் உண்மையானதாகக் காணுகிறார்கள். இவ்வுலகு எப்படிக் கற்பனையானது என்று அம்மகான்கள் காணுகிறார்களோ அதே போல் ஆகிறாவும் நரக சுவர்க்கமும் கற்பனையானவையே என்று காண்பவர்களும் அவர்களில் உண்டு. ஆகவே அவற்றை ஒதுக்கித்தள்ளிவிட்டு மூலப்பொருளான உஜூதிலேயே பூரணமாய்ச் சரணடைபவர்களும் அவர்களில் உண்டு. அல்லாஹ்வையன்றித் தன்னையே காணாதவர்களும் உண்டு. எல்லாவற்றையுமே

ஒன்றையொன்று தடைப்படுத்தாமல் காண்பவர்களும் உண்டு. இவர்கள்தான் நபிமார்கள், றசூல்மார்கள். இதற்கதிகமான விபரம் இப்போது நமக்கு வேண்டியதல்ல.

இவ்விடத்தில் ஓர் சந்தேகம் பிறக்கலாம். அதாவது நரக, சுவர்க்கங்கள் நிலையானவையென்று சில ஆயத்துக்கள், ஹதீஸ்கள் விளக்கம் தருகின்றனவே! நீங்கள் கூறுவது அவற்றிற்கு மாறாய்த் தென்படுகிறதே? என்பதுதான் சந்தேகம். விஷயம் அப்படியல்ல. நரக, சுவர்க்கம் நிரந்தரமானவை என்று கூறப்பட்டிருப்பது அவாம்களுடைய அறிவுக்கேற்றபடி மிகைப்படுத்திக் கூறப்பட்ட ஓர் விஷயமாகும். உண்மை அப்படியல்ல. இல்லாமையில் இருந்து சிருஷ்டியாய் வெளியான ஓர் பொருள் என்றோ ஒருநாள் அழிவைப் பெற்றேயாக வேண்டும். அழிவைப் பெறாவிட்டால் சிருஷ்டியென்றாகாது. அழிவைப் பெற்றால் அப்பொருள் சிருஷ்டிக்கப்பட்டு முன் எந்த நிலைமையில் இருந்ததோ அதே நிலைமையை (அமா) அடைந்தே ஆகவேண்டும். ஆகவே, இறைவனுடைய “அஹது” என்ற உண்மையான நிலைமையைவிட மற்றெல்லாம் என்றோ ஓர்முறை அழிவைப் பெற்றேயாகுமென்பது நிச்சயம். ஏனென்றால் இறைவனுடைய சுயநிலைமையைவிட மற்றெல்லாம் சிருஷ்டிக்கப்பட்டவைகளாகவே இருக்கின்றன. அர்ஸி, குர்ஸி, லவ்ஹு, கலம், நரகம் சுவர்க்கம் யாவுமே இதிலடங்கும். இறுதியில் இறைவன் மட்டுமே மிஞ்சுவான். இதுதான் தௌஹீதின் உச்சக்கட்டம். இவ்விஷயத்தில் இதற்கதிகமான விபரம் எமக்கு வேண்டியதில்லை. ஏனென்றால் இது எல்லா மனிதருடைய அறிவிலும் திடீரென அமையக்கூடிய ஓர் விஷயமல்ல. இவ்வுண்மையில் நிலைபெறுவதே (சாந்தியடைவதே) நாம் சிருஷ்டியாய் வெளியானதன் நோக்கமாகும். இந்த நிலைமையை விளங்கித் தெளிவு பெறுவதுதான் ஞானம் என்பது.

ஞானத்தைப்பெற்ற இவர்கள்தான் விழிப்பைப் பெற்றுக்கொண்ட நல்லடியார்கள். கனவு கலைந்து ஜாக்கிரதா நிலைமையைப் பெற்றுக்கொண்ட மக்களைப் போன்றவர்கள்.இவர்களுடைய விஷயங்கள் சாதாரண மனிதர்களுடைய விஷயங்களுக்கு அப்பாற்பட்டவையாகும். **ஆகவே இவர்களையும் சாதாரண மனிதனையும் ஒன்று சேர்த்து அறிவைக் குழப்பிக்கொள்ள வேண்டியதில்லை.** சாதாரண மனிதனுக்கிடப்பட்ட சாதாரண சட்ட திட்டங்களைக் கொண்டு இம்மகான்களை நாம் கணித்தலும் கூடாது, 1ஆம் வகுப்பு மாணவனின் சட்டங்கள் 4ஆம் வகுப்பு மாணவனின் சட்டங்களுக்கு முரண்போல் தென்பட்டாலும் ஆச்சரியமல்ல. 1ஆம் வகுப்பு மாணவனுக்குக் கொடுக்கப்படும் சட்டங்கள் அவனை 4 ஆம் வகுப்புக்குச் செலுத்துவதற்காகத்தான். இந்த மகான்களுடைய சில விபரங்கள் குர்ஆன் ஹதீஸ்களுக்கு முரண்போல வெளிநோக்கில் தென்பட்டாலும் உண்மை அப்படி இருக்கவே இருக்காது. இவ்வுண்மையை விளங்கித் தெளியாத ஒருசில பின்பற்றல்வாதிகள் இம்மகான்களைப் பற்றிச் சில தவறான அபிப்பிராயங்களை மக்களிடையே பரப்பி விட்டிருக்கிறார்கள். இதில் சில நுண்விபரங்களும் விவாதமும் இருப்பதால் இஸ்லாத்தின் நோக்கம் என்ன? என்ற தலைப்பில் சரியான ஆதாரங்களோடு விளக்கம் தருவேன். பொறுமையடைவாயாக. சாதாரண மனிதனுக்கு விபரிக்கப்பட்டுள்ள ஏவல், விலக்கல், தொழுகை, நோன்பு போன்ற அத்தனை செயல்களும் இம்மகான்களின் நிலைமையைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான்.

இந்தக் கவாஸுகளான மகான்களிடத்தில் பெரும்பாலான கீழ்தரமான சிருஷ்டிக்குணங்கள் இருப்பதேயில்லை. ஆகவே ஆசை, கோபம், மோகம் போன்ற சிருஷ்டிக் குணங்களற்ற ஒருவர் எதைத் தேடுவார்? எதை ஆசைப்படுவார்? எதையும் ஆசைப்படவோ தேடவோமாட்டார். ஏன்? ஆசைப்படவோ தேடவோ ஹக்கையன்றி எதையுமே அவர் காண்பதே இல்லை. ஆகவே அவருடைய தேட்டமும் ஆசையும் ஹக்கோடு ஒன்றிவிடுவதுதான், சுருக்கமாகக் கூறினால் அவரில் எது வெளியானாலும் அது இறைவனுடைய பண்பாகவேதான் இருக்கும்.

**ஹதீஸ்:** ***விபசாரன் விபசாரம் செய்யும்போது ஈமானதாரியாய் இருப்பின் விபசாரம் செய்யமாட்டான் என்றும் திருடன் திருடும்போது ஈமான்தாரியாய் இருப்பின் திருடமாட்டான் என்றும் குடிகாரன் குடிக்கும் போது ஈமான்தாரியாய் இருப்பின் குடிக்கமாட்டான் என்றும் விலையுள்ள பொருட்களில் மக்கள் பார்வையைச் செலுத்திக்கொண்டிருக்கையில் ஒருவன் அதனை அபகரிக்கும்போது ஈமான்தாரியாய் இருப்பின் அதனை அபகரிக்கமாட்டான் என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவப்பவர்: அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம்: புஹாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நாஸாயி.**

நாம் கூறிய விபரம் சுத்த சத்தியமான தௌஹீதைப் பெற்றுக்கொண்டவர்களின் நிலைமையாகும். ஆனால் ஒவ்வோர் சிருஷ்டிக்குள்ளும் அல்லாஹ் இருக்கிறான் என்ற ஹுலுல் இத்திஹாத் என்னும் ஒருசில இந்து ஞானவான்களின் முறைப்படி பின்பற்றிச் செல்லும் ஒருவர் இந்த மகான்களின் நிலைமையை எப்போதும் எய்தப்போவதே இல்லை. ஏனென்றால் இவ்வகையினர் இறுதிவரையில் நான் என்பது இப்பௌதீக உடல் அல்லது உடலுடன் என்ற எண்ணத்தில் மூழ்கியிருப்பதால் உயர்நிலையைப் பெறவே முடியாது.

**சகோதரனே! உன் தேகமான தடியானது வஹ்மாய் இருக்கிறது. ஆதலால் அதை நான் என்று எண்ணும் பேதபுத்தியைவிட்டுவிடு. இல்லையானால் நீ ஞானபூமியில் பிரவேசிக்கும் போது அந்த வஹ்மின் வாசனா நிழல் உன்னை விடாமல் தொடர்ந்து வரும். (தடைப்படுத்தும் என்பதே)**

இது ஒரு பைத்தின் கருத்து.

ஆகவே இறைவழி செல்லும் ஓர் ஞானியையும் ஓர் சாதாரண மனிதனையும் ஒன்றுபடுத்தி நோக்கவே கூடாது.

## 05 (7)

அடுத்ததாக நாய் பன்றி போன்றவற்றை உண்பதிலும் மகள், சகோதரி போன்றவர்களை விவாகம் செய்வதிலும் பல தீய விளைவுகள் (இம்மை மறுமைகளில்) இருப்பதால்தான் அவை தடுக்கப்பட்டிருக்கின்றன. இதன் பொது விபரம் என்னவென்றால் இவற்றால் ஏற்படும் நன்மைகளைவிடத் தீமைகள் அதிகமாய் இருக்கின்றன. இத்தீமைகள் சாதாரண மனிதனுடைய உலக விஷயங்களிலேயே உடல், பொருள், ஆவி மூன்றையும் தாக்கி வீழ்த்தக்கூடியவையாய் இருக்கின்றன. உலக வாழ்வே வீழ்ச்சியடையுமானால் அம்மனிதன் ஆகிறா வாழ்வை எப்படிப் பெறுவான்? அம்மனிதனுடைய உலக வாழ்வே சீரழிவுக்குள்ளானால் இறை ஐக்கியத்தைப் பெறுவதற்கு அது தடையாகவே முடியும். ஆகையால்தான் ஊண், உடை, சமூக, அரசியல், சுகாதார விஷயங்களையும் மார்க்கத்தோடு இணைத்து நிலையான சட்டங்கள் தரப்பட்டுள்ளன. இது மனித முன்னேற்றத்திற்கு வேண்டியதுதான். ஆகவே தௌஹீதுவாதியான ஒருவர் இச்சட்டங்களைக் கவனிக்க வேண்டியதில்லையே என்று நினைப்பது மருட்சியும் வஹ்முமாகும். மனிதன் பூரணத்தன்மையைப் பெறுவதற்கு உதவியாகச் சட்டதிட்டங்கள், ஏவல் விலக்கல்கள் மிகமிக அவசியமானவைதான். **ஆனால் சட்ட திட்டங்களின் வியாக்கியானங்கள் மனிதன் குறிக்கோளையடையும் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தாத முறையில் அமைந்திருக்க வேண்டும்,**6:145, 5:3 போன்ற ஆயத்துக்களை ஆராய்வுக்கெடுக்கவும்.

**ஹதீஸ்:** ***என் சமூகத்தில் இருவகையினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இஸ்லாத்தில் எத்தகைய பங்கும் இல்லை. அவர்கள் "முர்ஜியாக்களும்""கதரிய்யாக்களும்" ஆவர். என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்**(றலி)
**ஆதாரம்: திர்மிதீ**

இந்த ஹதீஸினால் விபரிக்கப்பட்ட கதரிய்யாக்கள் என்பவர்கள் நன்மை அல்லாஹ்விடமிருந்தும் தீமை மனிதனிடமிருந்து உண்டாவதாகக் கூறுபவர்கள். முர்ஜியாக்கள் என்பவர்கள் எவருக்கும் பாவம் என்பது ஒன்றுமே இல்லையென்று பொதுப்படையாகக் கூறுபவர்கள். இவ்விரு கூட்டத்தாரின் அபிப்பிராயங்களுக்கும் அப்பாற்பட்டது தௌஹீது என்பதை சிந்தனை செய்து தெளிவுபெறவும். இதற்கதிகமான விபரம்தருவதானால் சாதாரண மனிதனுடைய அறிவு குழப்பத்திலாகும் என்பது நிச்சயம். ஏனென்றால் இது கலா கத்றுடைய விஷயத்தைக் கிளப்பக்கூடிய ஒன்றாய் இருக்கிறது. கலாகத்றுடைய விஷயமோ சாதாரண அவாம்களின் அறிவில் அமையக்கூடியதே அல்ல. இதை வெளிப்படையாய் விளக்குவதும் குற்றமாகும்.

**ஹதீஸ்:** ***நீங்கள் பாவங்களைச் செய்யாவிட்டால் அல்லாஹ் உங்களை நீக்கிவிட்டுப் பாவம் செய்யக்கூடிய வேறு ஓர் படைப்பை படைத்திருப்பான். பின்னர் அவன் அவர்களை மன்னித்துவிடுவான். என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூஐயுப்**(றலி)
**ஆதாரம்: முஸ்லிம், திர்மிதீ**

இதே போல் அபூஹுறைறா(றலி) அவர்களும் வேறுசிலரும் பல ஹதீஸ்களை அறிவிக்கிறார்கள். குர்ஆனிலும் பல ஆயத்துக்கள் தென்படுகின்றன. மேலும் எவன் கையில் உயிர் இருக்கிறதோ அவன் மேல் ஆணையாக நீங்கள் பாவம் செய்யாதிருப்பின் நான் அச்சமுற்றிருப்பேன். அது இதைவிடக் கடுமையானதாகும். அதுதான் அகம்பாவம் (அகங்காரம் - அனாநிய்யத்) என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறியதாக ரஜனியில் ஓர் ஹதீஸ் காணப்படுகிறது. இவற்றைப் பல கண்ணோட்டங்களோடு ஆராய்ந்தால் பல உண்மைகள் தென்படுகின்றன. இவ்விபரங்களை விபரிப்பதை விட மறைத்து விடுவதே நன்மையென்று நான் காணுகிறேன். எனினும் நான் தரக்கூடிய விபரம் என்னவென்றால் மனித வாழ்வில் அறிந்தோ அறியாமலோ சிற்சில பாவங்கள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கும். அப்படியல்லாமல் விட்டால் (ஹப்பார்) இரங்கி மன்னிப்பவன் என்ற திருநாமம் செயலற்றதாகப் பெறுமதியற்றதாகவே முடியும். ஆகவே சர்வசாதரணமாய் அறிந்தும் அறியாமலும் பாவம் செய்கிற மக்களுக்கு ஏவல், விலக்கல் அத்தனையும் அவசியமானவை என்பதுதான்.

## 06 (8)

**இ**வ்விஷயம் கலாகத்றுடைய ஓர் புதையலாய் இருக்கிறது. கலாகத்றுடைய விஷயம் மறைக்கப்பட வேண்டியதாயும் அனுபவம் பெற்ற மகான்களேயன்றி விளங்கிக்கொள்ள முடியாததாயும் இருக்கிறது. பொதுப்படையான விஷயம் என்னவென்றால் நான் ஒரு சிருஷ்டி என்ற உணர்வும் மனித அறிவும் இருக்கும் வரையிலும் சிருஷ்டிகளின் உண்மை என்னவென்பதை மனிதன் பூரணமாய் அனுபவத்தினால் அறிய முடியாதவனாகவே இருக்கிறான். ஆகவே இந்த நிலைமையிலுள்ள மனிதன், மனித அறிவுக்கேற்ற சட்டதிட்டங்களைக் கைக்கொள்ளவேண்டியவனேயாகும்.

இவ்விஷயத்தை நாம் இன்னோர் கண்ணோட்டத்தோடு நோக்குவோம். இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வோர் சிருஷ்டிப்பொருளும் ஒவ்வோர் தனித்தன்மை (குணசுபாவம்) உடையனவாகவே இருக்கின்றன. சர்வ பௌதீகப் பொருட்களான சர்வ சிருஷ்டிகளுக்கும் மூலப்பொருட்களாய் அமைந்துள்ளவை மண், தண்ணீர், காற்று, நெருப்பு என்பவைகளேயாகும். இதை ஒவ்வொன்றும் தனித்தனிக் குணசுபாவமுடையன என்பது நமக்குத் தெரிந்த ஓர் விஷயம்தான். இந்த ஒவ்வோர் பொருளையும் இன்ன, இன்ன, சுபாவம் (குணம்) உடையதாய் இருக்கவேண்டும் என்று இறைவனால் விதிக்கப்பட்ட இயற்கை அமைப்புக்கு நாம் விதி, கலாகத்று, தக்தீர், என்றெல்லாம் கூறுகிறோம். அதாவது நெருப்பு என்பது சுடும்தன்மையுடையதாய் அமைந்துள்ளது. இது இயற்கையாய் அமைந்துள்ள, அமைக்கப்பட்டுள்ள ஓர் இயற்கை நியதியாகும். இதை விதியென்று நாம் கொள்ளலாம். இந்த விதியை நிலைபெற்றதாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. நெருப்பை நாம் தொடும்போது நிச்சயமாக அது நம்மைச் சுட்டேயாகுமென்பதில் சந்தேகமில்லை. இந்தச் சுடும்தன்மையை நாம் நீக்கவேண்டுமானால் ஏதோ ஓர் உபாயத்தைக் கையாள வேண்டியதாய் இருக்கிறது. உதாரணமாக ஓர் மருந்தைக் கையில் தடவிக்கொண்டு நெருப்பைத் தொடும்போது அந்த நெருப்பு எம்மைச் சுடாமல் இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். ஏன் அப்படிச் சுடாமல் இருக்கிறது? நாம் தடவிக் கொண்ட மருந்து நெருப்பைச் சுடாமல் தடைப்படுத்தக்கூடிய இயற்கைநியதி (விதி) உடையதாய் இருந்ததால்தான் நெருப்பு எம்மைச் சுடாமல் இருந்தது. இது விஷயம் நெருப்பின் தன்மையோ மருந்தின் தன்மையோ அல்ல. அவ்விரண்டுக்கும் இயல்பாய்க் கொடுக்கப்பட்டிருந்த விதி (இயற்கைத் தன்மை, கலாகத்று, தக்தீர்) என்பதன் வலிமைதான் இது. இதேபோல் உலகிலுள்ள ஒவ்வோர் பொருளையும் எடுத்து நோக்கும்போது ஒவ்வொன்றும் அது அதற்கென்று கொடுக்கப்பட்டுள்ள விதிக்கு அணுவேணும் மாறுபடாமல், மாறுபட முடியாமல்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதை விதி அல்லது இயற்கை நியதி அல்லது கலாகத்று அல்லது தக்தீர் என்று நாம் கூறுவோம்.

இதே போல எமது புலன்களுக்குத் தென்படக்கூடிய ஒவ்வோர் அணுவுக்கும்கூட ஒவ்வோர் விதி அல்லது இயற்கைநியதி (சட்டம்) இருப்பதைப்போல, எமது புலன்களுக்கு எட்டாத அறிவுக்கு மட்டும் எட்டக் கூடிய சூட்சும வஸ்த்துக்களுக்கும், வஸ்த்துக்களேயல்லாத எமது குண சுபாவங்கள், செயல்களுக்கும் விதி (இயற்கை நியதி) இருந்துகொண்டுதான் இருக்கிறது. உதாரணமாக நீ ஒருவனை தூஷணையாய்ப் பேசும்போது அவனுடைய உள்ளம் கோபம் அடைகிறது. உன் பேச்சுக் கோபத்தை ஊட்டக்கூடிய விதியுடையதாயும், இந்தப் பேச்சைக் கேட்ட உள்ளம் கோபம் கொள்ளக்கூடிய விதியுடையதாயும் இருப்பது நம் எல்லோருக்கும் தெரிந்த ஓர் விஷயம்தான். இதேபோல ஒரு மனிதனுடைய ஓர் நற்செயல் நல்ல பலனைத்தரக் கூடியதாயும் தீயசெயல் தீயபலனைத் தரக்கூடியதாயும் இருப்பது அச்செயல்களுக்கேற்பட்ட விதியேயாகும். இந்தச் செயல்களினால் ஏற்படுகிற நன்மை தீமைகள் இறைவனின் அன்பினாலோ கோபத்தினாலோ ஏற்பட்டவையல்ல. ஆயினும் அறிவுகுறைந்த மக்களுக்கு இப்படிவிளக்கம் கொடுக்கப்படுகிறது. அதில் தவறேயில்லை. இந்த நல்ல, தீய செயல்கள் சுவர்க்க, நரகத்தை ஏற்படுத்திக் கொள்வதும் இதேபோன்ற விதியேயாகும். இதுவும் இறைவனின் இரக்கத்தினாலோ கோபத்தினாலோ ஏற்பட்ட விளைவல்ல.

இப்போது நீ நன்மை செய்வதற்கும் தீமைசெய்வதற்கும் காரணம் என்ன? என்பதைச் சிந்தனை செய்துபார். நன்மை செய்வதானாலும் தீமை செய்வதானாலும் அதற்குரிய மூலகாரணம் உன் மனோ விருப்பமேயாகும். இந்த மனோயிச்சைக்கேற்றபடி நன்மையோ தீமையோ நடைபெறுவது விதியேயாகும். இந்த மனோயிச்சை ஏற்படுவதற்குச் சூழல், காலம், அறிவு சகவாசம் போன்ற பல விதிகள் இருக்கின்றன. இந்த ஒவ்வொன்றும் அதனதன் இயற்கைத்தன்மையான விதியை விட்டும் அணுவேணும் பிசகமுடியாதவையாய் தென்படுகின்றன. இந்த விபரங்களைத் தானாகவே சிந்தனை செய்து கண்டறிந்து உண்மையின் அடிப்படையில் நுழைவதென்றால் மனிதனால் முடியக்கூடிய ஓர் காரியமேயல்ல. மனிதனுடைய (ஹயாத்தும்) வாழ்நாளும் இதற்குப்போதாது. ஆகையால்தான் பாரவான்களான நபிமார்கள் றசூல்மார்களையும் வேதநூல்களையும் நிலையான சட்டதிட்டங்களையும் ஏவல், விலக்கல்களையும் இறைவன் அனுப்பியிருக்கிறான். இந்த ஏவல், விலக்கல், சட்டதிட்டங்கள், வேதம் என்பவை மூடுண்டு, மக்களுடைய அறிவு இருளடையும் போது அவன் நாடிய நல்லடியார்களைக்கொண்டு காலகாலம் மக்களுடைய அறிவுக்குப் புத்துயிரளிக்கிறான். ஆனால் இறந்தவர்களுக்கொப்பான, மூடப் பிடிவாதம்கொண்ட கல்விச்செருக்குடைய ஒரு சில தஜ்ஜால்கள் குர்ஆன், ஹதீஸ்களையும் பகுத்தறிவையும் நல்லடியார்களின் நல்லுபதேசங்களையும் மூடத்தனமாய் குழப்பி மக்களை மென்மேலும் இருளிலே தவிக்கவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் குர்ஆன் ஹதீஸ்கள் இந்த மூடர்கள் அறிந்துகொள்ள முடியாத எத்தனை எத்தனையோ விபரங்களை அவரவர் அறிவுத் தகைமைக்கேற்றபடி தெளிவாய் விளக்கம் தந்துகொண்டுதான் இருக்கின்றன. கலாகத்றுடைய விஷயம் மூன்று பெரும் பாகங்களாகவே குர்ஆன், ஹதீஸ்களில் விபரம் தரப்பட்டிருந்தும் அவற்றை முறையாய்ப் புரிந்துகொள்ள முடியாதமனிதன் அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்துக் குழப்பிக்கொண்டு, என்னை நரகுக்காகப் படைத்திருந்தால் நான் எதற்காக வணங்க வேண்டும்? என்று கேட்கிறான். இவனுடைய அறியாமையைப் பற்றி நாம் நாணமடைய வேண்டியதாய் இருக்கிறது. ஏனென்றால் விதியைப் நம்பிக்கொண்டதாகக் கூறிக் கொள்ளும் இம்மனிதன் பணவிஷயத்தல் மட்டும் இதை நம்புவதேயில்லை. எனக்கு விதிக்கப்பட்ட உணவு கிடைத்தேயாகும் என்று நம்பி, இவன் உணவு தேடாமல் இருப்பதேயில்லை. இவனுடைய அறிவு இவனை ஏமாற்றிக் கொண்டிருப்பதை இவன் அறிந்துகொள்ளாவிட்டாலும் இவனுடைய பரிதாப நிலையை கண்ணுடையோர் காணத்தான் செய்கிறார்கள்.

**சகோதரனே !**

கற்பனை (விதி, கலாகத்று, தக்தீர்) என்பதில் இரண்டு பெரும் பிரிவுகள் இருக்கின்றன. ஒன்றை “தஜயுனுல் உலா” பொதுக் கற்பனை என்றும் மற்றொன்றை “தஜயுனுஸ்ஸானி” விபரக் கற்பனைஎன்றும் கூறப்படும். இவற்றில் பொதுக்கற்பனை என்பது இன்ஸானாகிய உன்னால் அறியமுடியாத ஒன்றாகும். ஏனென்றால் இப்போது உனக்குத்தரப்பட்டுள்ள பகுத்தறிவு படைக்கப்பட்ட ஒன்றாகும். பொதுக்கற்பனை என்பது படைக்கப்படாத ஒன்றாகும். படைக்கப்படாத ஒன்று படைக்கப்பட்ட பகுத்தறிவில் அமையாது என்பதை நீ முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அடுத்ததாக, விபரக்கற்பனை என்பது படைக்கப்பட்ட ஓர் விஷயமாய் இருப்பதால் அது, உன் பகுத்தறிவில் அமையக்கூடிய ஒன்றுதான். இந்த விபரக்கற்பனைதான் ஒவ்வோர் சிருஷ்டிக்கும் ஒவ்வொர் குணத்துக்கும், ஒவ்வோர் செயலுக்கும் கொடுக்கப்பட்டுள்ள இயற்கைத் தன்மையாகும். நெருப்புச் சுடும் தன்மையுடையதாயும் கெட்ட பொருள் துர்நாற்றமுடையதாயும் நல்ல பொருள் மணமுடையதாயும் ஷிர்க்கு இறைஐக்கியத்தைத் தடைப்படுத்துவதாயும் தௌஹீது (ஈமான்) இறை ஐக்கியத்தை ஏற்படுத்துவதாயும் இருப்பது இந்த விபரக்கற்பனை (தஜனுஸ்ஸானி)யைச் சேர்ந்த விஷயமாகும். இந்த இயற்தன்மை என்னும் விதி எள்ளளவும் மாற்றமடையாமல் செயல்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. இந்த விதியின் விளைவு உன்னைப் பலாத்காரப்படுத்துவதோ தண்டிப்பதோ கிருபை செய்வதோ அல்ல. இந்த விதி நல்லவர் தீயவர் எல்லோருக்கும் பொதுவான ஒன்றாகும். இதைத்தான் பொதுப்படையாய் றஹ்மத் என்று கூறப்படுவது. இந்த இயற்கை விதிக்கமைவாய் நீ செயலில் (அனுஷ்டானத்தில்) ஈடுபடும்போது இன்னோர் (இயற்கை நியதி) விதி உன்னை வந்தடையும் என்பது நிச்சயம். அதாவது இந்த விபரக்கற்பனையில் நீ நாடியதை மாற்றிக்கொள்ளக்கூடிய ஓர் விதி உனக்கேற்படலாம். இதற்குரிய விதி, பிரார்த்தனையாய் இருக்கலாம். அல்லது உன் ஆத்மீகபலமாய் இருக்கலாம். அல்லது விசேட நன்கொடையாய் இருக்கலாம். (பிரார்த்தனையானாலும் ஆத்ம வலிமையானாலும் அது வஷேட நன்கொடையேயாகும்.) இதைத்தான் “றஹீமிய்யத்” என்று கூறப்படுவது. ஆகவே இயற்கை விதிகளுக்கு மாறாய் செய்யப்படுகிற எந்த ஓர் அனுஷ்டானமும் உன்னை உண்மையிடத்தில்கொண்டு சேர்க்காது என்பது நிச்சயம். ஆதலால் விபரக்கற்பனையுடைய இயல்பிலிருந்தும் விடுபடக்கூடிய பக்குவத்தை (அறிவை) நீ பெறும்வரையில் ஏவல், விலக்கல்களைக் கைக்கொள்ள வேண்டியவனாகவே இருக்கிறாய். ஆனால் சமூகப்பழக்க வழக்கங்கள்தான் ஏவல், விலக்கல் என்று ஏமாறாமல் உன் இமாமான குர்ஆன் தரும் ஏவல், விலக்கல்களைக் கண்டறி, உன் ஒஸ்தாதுவான றசூல்(ஸல்) அவர்களுடைய ஹதீஸ்களை நடைமுறைகளைக் கண்டறி. நல்லடியார்களான ஒலிமார்களின் உபதேசங்களை விளங்கியறிந்து வெற்றிபெறு.

ஆனால் அவ்லியாக்களின் நிலைமையோ இதற்கு முற்றும் மாறான ஓர் நிலைமையாய் இருக்கிறது. அதாவது இவர்களுடைய நிலைமையில் நன்மை, தீமை, ஏவல், விலக்கல், செயல் (கிரிகை) எதுவும் எந்த சட்டதிட்டங்களுமே கிடையாது என்றே சொல்லலாம். அதாவது கனவு கலைந்து விளிப்பை அடைந்தவனிடத்தில், கனவின் போதுள்ள ஏவல், விலக்கல், நன்மை, தீமை, செயல், சட்டம் எல்லாம் இல்லாதொழிந்தது போலுள்ள ஓர் நிலைமையாகும். “கற்பனை வந்தவாறு காட்டினோம் காண்பவெல்லாம் சொற்பனம் போல எண்ணித்துணிந்தவன் ஞானியாவான்”, என்று ஒருவர் கூறினார்.

இவ்விஷயம் அனுபவத்தினால் உண்மையெனக் காணவேண்டிய ஒன்றேயல்லாமல் பேச்சினால் விளக்க, விளங்கக் கூடிய ஒன்றேயல்ல. பேசமுற்பட்டால் இறைவனால் போடப்பட்ட, இயல்பாய் நீங்கவேண்டிய ஓர் திரையை, பலாத்காரமாய்த் திறந்து அறிவு குறைந்த மக்களை இருளில் தவிக்க விட்டதாகவே முடியும். சுத்தமான தௌஹீதை விளங்கிக்கொள்ளாத ஒருவர் கடைசி வரையிலும் கலாகத்றுடைய உண்மையைப் புரிந்துகொள்ள முடியாதவரேயாவார். கலாகத்றுடைய உண்மையைப் புரிந்துகொள்ளாத ஒருவர் இறை ஐக்கியத்தை (சாந்தியை) பெறுவதும் முடியாத விஷயம்தான். இவ்விஷயத்தில் வாய்வேதாந்தம் பேசித் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்வதை விடுத்து உண்மையை உணர்வதற்காக முறையான கடமைகளில் ஈடுபட்டு வெற்றியடைவதே பொருத்தமாகும்.

قُلْ يَٰعِبَادِيَ ٱلَّذِينَ أَسْرَفُوا۟ عَلَىٰٓ أَنفُسِهِمْ لَا تَقْنَطُوا۟ مِن رَّحْمَةِ ٱللَّهِ ۚ
إِنَّ ٱللَّهَ يَغْفِرُ ٱلذُّنُوبَ جَمِيعًا ۚ إِنَّهُۥ هُوَ ٱلْغَفُورُ ٱلرَّحِيمُ

39:53 *நீர் கூறும் எனதடியார்களே! எவரும் வரம்புமீறித் தமக்குதாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும் அல்லாஹ்வின் அருளைப்பற்றி நீங்கள் நம்பிக்கை இழந்துவிட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னித்துவிடுவான்? ஏனென்றால் நிச்சயமாக அவன் மன்னிப்போனும் கிருபையுடையோனுமாவான்.*

நன்மை, தீமை என்பவை சொல்லினாலும் சட்டத்தினாலும் வெவ்வேறானவை என்பது உண்மை. ஆனால் நன்மையும் தீமையும் ஏற்படுத்தும் அனுபவ உண்மை ஒன்றேதான். அதுதான் அறிவு என்பது. இதை அறிஞர்கள் ஞானவான்களேயன்றிப் பாமரமனிதன் புரிந்துகொள்வது கடினம்தான். இதில் நான் கூறக்கூடிய இறுதிவார்த்தை என்னவென்றால் ஒவ்வோர் ஆயத்தும் ஒவ்வோர் ஹதீஸும் ஒவ்வோர் படித்தரத்திலுள்ள வெவ்வேறுமக்களைச் சுட்டுபவையாய் இருக்கின்றன. ஆகவே இவை எல்லாற்றையும் ஒன்று சேர்த்துக் குழப்பிக்கொள்ளக் கூடாதென்பதே. சம்பிரதாயச் சட்ட திட்டங்களுக்கும் சாந்தியடையும் நிலைமைக்கும் இடையில் வெகுதொலை தூரம் இருக்கிறது.

குர்ஆன், ஹதீஸ்கள் மனித இனத்தை அவாம்கள், கவாஸ்கள், கவாஸுல் கவாஸுகளென்ற மூன்று பெரும்பிரிவுகளாக வகுத்துத்தான் விளக்கம் தந்திருக்கின்றன என்பதை முதலில் புரிந்துகொள்ள வெண்டும். இந்த ஆயத்துக்கள் ஹதீஸ்கள் எல்லோரையும் பொதுப்படையாய் நோக்கியவைதான் என்று மருட்சியடைந்துள்ள மனிதன் கலாகத்றுடைய விஷயத்தில் பெரும் குழப்பத்தில் மாட்டிக்கொள்கிறான். இந்த அறிவுக் குழப்பம் தௌஹீதை ஒப்புக்கொள்ள முடியாதவனாகவும் இறைவனைக் குற்றவாளியாகவும் காணக்கூடிய நிலைமையை அம்மனிதனுக்கு ஏற்படுத்தி வருகிறது. இதை விளங்கித் தெளிவது கடினமான ஓர்விஷயமாய் இருப்பதனால்தான் ஈமானுடைய விஷயத்தில் கலாகத்றுடைய விஷயத்தை 6வது றுக்கூனாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவ்விஷயத்தைப் பொறுமையோடும் பல கண்ணோட்டங்களோடும் விளங்கியறிய வேண்டும். நாம் முன்பு காட்டிய அவாம்கள் கவாஸுகளுக்குரிய ஆயத்துக்களை நோட்டமிடும்போது மனிதனுக்கு நீங்காத ஓர் சந்தேகம் ஏற்படுகிறது. அதாவது இறைவன் தன் இஷ்டப்படியே சகல காரியங்களையும் இயக்கிக் கொண்டிருக்கும் போதும் அறிவு குறைந்த ஆரம்ப மனிதனை அவனுடைய செயல்களுக்காக ஏன் குற்றவாளியாக்க வேண்டும்? ஏன் தண்டனையளிக்க வேண்டும்? அப்படியானால் இறைவனை ஓர் நீதிமான் என்று எப்படிக் கூறுவது? அநீதிமான் என்றுதானே கூறவேண்டியதாய் இருக்கிறது. என்பது தான் எமது சந்தேகம். இந்தச் சந்தேகத்துக்குரிய விடை என்னவென்றால்,

இறைவன் நீதிமானா? அல்லவா? என்பதை நாம் கண்டறிவதனால் முதலில் நீதி என்பது என்ன? அநீதி என்பது என்ன? என்பதை நாம் கண்டறிய வேண்டும். பிறருடைய உரிமையில் பிறருடைய சுதந்திரத்தில் பிறருடைய பொருளில் இன்னொருவர் கையாட்சி பண்ணுவது, தலையிடுவதுதான் அநீதி என்பதாகும். இவ்விபரத்தைச் சாதாரண மனிதனும் அறிஞனும் உலக அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் இவ்வுண்மையைப் பூரணமாய் ஒப்புக்கொண்டே இருக்கிறார்கள். இந்த அடிப்படையில்தான் சமூக, அரசியல் சட்டங்களும், மதச்சட்டங்களும் அமைந்திருக்கின்றன. ஆகவே ஒருவருடைய சுதந்திரத்தில், உரிமையில் பொருளில் வேறோருவர் தலையிடுவது, கையாட்சி பண்ணுவதுதான் அநீதி என்றால், நீதி என்பது இதற்கு எதிரிடையாய், இதன் மாற்றத்தில் கட்டுண்டிருக்கவேண்டும். அதாவது ஒருவர் அவருடைய பொருளில், உரிமையில், சுதந்திரத்தில் அவருடைய இஷ்டம் போல் தலையிடுதல் கையாட்சி பண்ணுதல்தான் நீதி என்பதாகும்.

இப்போது இஸ்லாத்தின் மூலக்கொள்கையான தௌஹீதை, மூலமந்திரமான கலிமாவை, நோட்டமிட்டுப்பார். அல்லாஹ்வை தவிர ஒன்றுமே இல்லையென்றால், இருப்பதுயாவும் இறைவனும் இறைவனுடைய குணங்களுமே (ஷிபத்து) என்றால் யாருக்கு யார் அநீதி செய்வது? அநீதி இழைப்பதற்கு ஒருவனும் அநீதி இழைக்கப்படுவதற்கு இன்னொருவனும் வேண்டுமே? அல்லாஹ்வைத்தவிர ஒன்றுமே இல்லையென்றால் அநீதிசெய்பவன் யார்? அநீதிசெய்யப்படுபவன் யார்? இறைவனும் அவனுடைய குணங்களுமேயன்றி ஒன்றுமே இல்லை என்னும்போது, அவனுடைய உரிமையை, அவனுடைய பொருளை, அவனுடைய சுதந்திரத்தை அவனுடைய இஷ்டம்போல் கையாட்சி பண்ணுவது எப்படி அநீதியாகும்? அது பூரணமான நீதியேயாகும். அநீதியென்ற சொல்லுக்கே இடம்கிடையாது. ஆகவே தௌஹீதுடைய விஷயத்தில் மயக்கமும் மருட்சியும் ஏற்படுவது அறியாமையாகும். தௌஹீதை ஒருமனிதன் பூரணமாய் விளங்கிக் கொள்வானேயானால் மனித அறிவில் ஏற்படக்கூடிய சந்தேகங்கள் மருட்சிகள் அத்தனையும் நீங்கிவிடும் என்பது நிச்சயம்.

## இதன் சாரம்

01. மனிதர்களின் அறிவுத்தகமை மூன்றுவகையாய் இருப்பதால் குர்ஆன் ஹதீஸ்கள் இம்மூன்று வகையினருக்குமே தனித்தனியாயும் பொதுப்படையாயும் விளக்கம் தந்திருக்கின்றன. இவற்றை ஒன்று சேர்த்துக் குழப்பிக்கொள்ளக்கூடாது.

02. ஆரம்பமனிதன் (அவாம்) அறிவு குறைந்தவனாய் மிருக சுபாவமுடையவனாய் இருப்பதால் சமூக அரசியல் நலன்களைக்கருதியும் அவனுடைய உயர்நிலைமையைக் கருதியும் ஏவல், விலக்கல், முதலாம் சட்டங்கள் தரப்பட்டுள்ளன.

03. மனிதன் பூரணத்தன்மையை அடைவது என்பது மிகமிகக் கடினமான ஓர்விஷயமாய் இருப்பதால் இந்த நிலைமையை அடையும்வரையிலும் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியமேயாகும்.

04. சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்காமல் வாழ்வது பூரணத்தன்மையைப் பெறுவதற்கு முடியாத ஓர் நிலைமையை ஏற்படுத்தும்.

05. கலாகத்றுடைய விஷயத்தில் மனிதன் மருட்சியடைவது உண்மையான தௌஹீதை, கலிமாவின் உண்மையை விளங்கித் தெளிவுபெறாத குற்றமாகும்.

06. ஏவல் விலக்கல் முதலாம் சட்டதிட்டங்களுக்கும் உண்மையான தௌஹீதுக்கும் எவ்விதமான முரண்பாடுகளுமே கிடையாது. அப்படி இருப்பதாய்த் தென்படுவது (வஹ்மு) மருட்சியாகும்.

07. ஏவல் விலக்கல் சட்டதிட்டங்கள் யாவும் சிருஷ்டி என்ற கட்டில் கட்டுண்ட சிருஷ்டிகளைப் பொறுத்த ஓர் விஷயமாகும். இறைவனுடைய விஷயம் இத்தன்மைக்கு அப்பாற்பட்டது. அவன் மிகமிகத்தூயவன்.

08. இறைவன் அநீதிக்காரன் என்றுசொல்வது அறியாமையால் ஏற்படுகிற மருட்சியாகும்

**6வது கேள்வி**

கலிமாவுக்கும் பல கருத்துக்கள் உண்டு என்பதும், வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்பதே கலிமாவின் உண்மையான கருத்து என்பதும் எம் முன்னோரான உலமாக்கள் ஒருங்கு சேர்ந்து ஒப்புக்கொண்ட ஓர் காரியமாய் (இஜ்மாஉ) இருக்கிறது. என்னுடைய உம்மத்துக்கள் வழிகேட்டின் மேல் ஒன்று சேரமாட்டார்களாகையால், நீங்கள் பெரும் கூட்டத்தைப் பற்றிப் பிடியுங்கள் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறிய பல ஹதீஸ்கள் தென்படுகின்றன. ஆகவே எம் முன்னோரின் இஜ்மாஉவை விட்டுவிட்டு, நீங்கள் தனித்த ஒருவர் அல்லது ஒரு சிலர் கூறுவதை உண்மைதான் என்று ஒப்புக்கொள்வது எப்படி?

**(1)**

**பதில்**

இக்கேள்வியில் முக்கியமான மூன்றுவிஷயங்கள் இடம்பெறுகின்றன. இவை ஒவ்வொன்றையும் தனித்தனியாகவே விளங்கியறிவோம்.

**1ஆவது:**

எந்த விஷயத்தில் உலமாக்கள் ஒன்று சேர்ந்து ஒப்புக்கொள்கிறார்களோ அந்த விஷயம் மார்க்க சம்பந்தமான ஸறகுடைய காரியமாய் இருக்க வேண்டும்.

**2ஆவது:**

ஒரு விஷயத்தில் ஏற்படுகிற சந்தேகங்கள் சிக்கல்களை நீக்கி உண்மையை விளக்கவும் தீர்ப்புக்கட்டவும் திறமைவாய்ந்த "அஹ்லுல் ஹல்லிவல் அக்திகளான" (உலமாக்களான) பெரியார்கள் ஒரே காலத்திலாவது அடுத்தடுத்து வருகிற சமீபகாலங்களிலாவது அவ்விஷயத்தில் ஒன்று சேர்ந்து முடிவுகட்டவேண்டும்.

மேலே காட்டிய இரண்டு அம்சங்களும் ஒன்று சேர்ந்தவைதான் "இஜ்மாஉ" ஒன்று சேர்ந்த அபிப்பிராயம் என்று கூறப்படுவது. (இது ஞாபகத்தில் இருக்க வேண்டும்)

இப்போது கவனித்துப்பார். முதலாவது காரியம் அதாவது முஹ்கமாத்தைச் சேர்ந்த ஒரே கருத்துடைய திடப்பிரமாணத்தைச் சேர்ந்த கலிமாவுக்குக் குர்ஆன், ஹதீஸ்களுக்கு மாறாய்ப் பல கருத்துக்கள் உண்டு என்று கூறுவதும், கலிமாவுக்குப் அதன் உண்மையான கருத்துக்கு நேர்விரோதமான ஓர் கருத்தைக் கஷ்டப்பட்டு வலிந்துரைகொள்வதும் மார்க்க சம்பந்தமான ஸறகைச் சேர்ந்த காரியமாகுமா? இல்லை,**அது மார்க்க சம்பந்தமான ஸறகைச் சேர்ந்த காரியமேயல்ல.** (இஸ்லாத்தின்) வேதத்தின் அடிப்படையான கலிமா ஒரே கருத்துடைய முஹ்கமாத்தைச் சேர்ந்ததுதான் என்று குர்ஆன் கூறும்போது, இல்லை பல கருத்துடையதே என்று குர்ஆனுக்கு மாற்றமாய்க் கூறுவது எப்படிச் ஸறகைச் சேர்ந்த காரியமாகும்? **அது ஸறகுக்கு விரோதமான அடாத காரியமேயாகும்.** ஏனென்றல் கலிமா முஹ்கமாத்தான ஒரே கருத்துடைய திடப்பிரமாணத்திலுள்ளது என்றும் அதற்கு வலிந்துரை கொள்ள வேண்டிய அவசியமே இல்லையென்றும் குர்ஆன் எமக்குத் தெளிவாக விளக்கம் தரும்போது,**இமாமாக, நீதிபதியாக, வேதநூலாக ஏற்றுக்கொண்ட குர்ஆனுக்கு மாறாய், விரோதமாய் கூறுவது மார்க்க, விரோதமான காரியமேயல்லாமல் ஸறகைச் சேர்ந்த ஓர் காரியமேயல்ல.** அல்லாஹ் றசூலினால் தீர்ப்புக் கட்டப்பட்ட ஓர் விஷயத்தில் தலையிட, மாறான, அபிப்பிராயம்கொள்ள எந்த ஓர் மூமினான ஆண், பெண்ணுக்கும் உரிமையில்லை என்றால், குர்ஆனுக்கு விரோதமாய்க் கூறுவது எப்படி மார்க்கத்தைச் சேர்ந்த காரியமாகும்? நிச்சயமாக அது மார்க்க விரோதமான காரியமேயாகும். குர்ஆனை மீண்டும் கவனித்துப்பார்.

هُوَ ٱلَّذِىٓ أَنزَلَ عَلَيْكَ ٱلْكِتَٰبَ مِنْهُ ءَايَٰتٌ مُّحْكَمَٰتٌ هُنَّ أُمُّ ٱلْكِتَٰبِ
وَأُخَرُ مُتَشَٰبِهَٰتٌ ۖ فَأَمَّا ٱلَّذِينَ فِى قُلُوبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُونَ مَا تَشَٰبَهَ مِنْهُ
ٱبْتِغَآءَ ٱلْفِتْنَةِ وَٱبْتِغَآءَ تَأْوِيلِهِۦ ۗ وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُۥٓ إِلَّا ٱللَّهُ ۗ وَٱلرَّٰسِخُونَ فِى
ٱلْعِلْمِ يَقُولُونَ ءَامَنَّا بِهِۦ كُلٌّ مِّنْ عِندِ رَبِّنَا ۗ وَمَا يَذَّكَّرُ إِلَّآ أُو۟لُوا۟ ٱلْأَلْبَٰبِ

3-7 *அவனே இவ்வேதத்தையும் உம்மீது அருளினான். இதில் குறிப்பாக உள்ள ஒரே கருத்துடைய வசனங்களும் இருக்கின்றன. இவைதான் இவ்வேதத்தின் அடிப்படை அன்றிப் பல கருத்துடைய வசனங்களும் இருக்கின்றன. எவர்களுடைய இருதயங்களில் மாறுபாடு இருக்கிறதோ அவர்கள் குழப்பத்தை உண்டுபண்ணக் கருதிப் பலஅர்த்தங்களையே தேடிப் பின்பற்றுவார்கள். ஆயினும் இதன் உண்மைக் கருத்தை இறைவனேயன்றி ஒருவருமறியார். ஸ்திரமான (நிலையான) கல்விமான்களோ இதைனையும் நாங்கள் விசுவாசித்தோம் யாவும் எங்களுடைய இறைவனிடமிருந்து வந்தவைதான் என்று கூறுவார்கள். அறிவுடையோரேயன்றி மற்றெவரும் நல்லுபதேசமடைய மாட்டார்கள்.*

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى ٱللَّهُ وَرَسُولُهُۥٓ أَمْرًا أَن يَكُونَ لَهُمُ
ٱلْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ ۗ وَمَن يَعْصِ ٱللَّهَ وَرَسُولَهُۥ فَقَدْ ضَلَّ ضَلَٰلًا مُّبِينًا

33-36 *அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் யாதொரு விஷயத்தைப் பற்றிக் கட்டளையிட்டபின் அவ்விஷயத்தில் வேறு அபிப்பிராயம்கொள்வதற்கு விசுவாசியான ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமையில்லை. அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவரேனும் மாறுசெய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கின்றனர்.*

وَإِذَا دُعُوٓا۟ إِلَى ٱللَّهِ وَرَسُولِهِۦ لِيَحْكُمَ بَيْنَهُمْ إِذَا فَرِيقٌ مِّنْهُم مُّعْرِضُونَ

24-48 *தங்களுக்கிடையில் தீர்ப்பு பெற அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் வாருங்கள் என அழைக்கப்பட்டால் அவர்களில் ஒரு பிரிவினர் புறக்கணித்து விடுகின்றனர்.*

إِنَّمَا كَانَ قَوْلَ ٱلْمُؤْمِنِينَ إِذَا دُعُوٓا۟ إِلَى ٱللَّهِ وَرَسُولِهِۦ لِيَحْكُمَ بَيْنَهُمْ أَن
يَقُولُوا۟ سَمِعْنَا وَأَطَعْنَا ۚ وَأُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْمُفْلِحُونَ

24-51 *எனினும் மெய்யாக விசுவாசம் கொண்டவர்களோ அவர்களுக்கிடையில் தீர்ப்புப்பெற அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் வரும்படி அழைக்கப்பட்டால் அதற்கவர்கள் நாங்கள் செவிசாய்த்தோம் என்பதைத்தவிர வேறொன்றும் கூறுவதில்லை. இத்தகையோர்தான் முற்றிலும் சித்தியடைந்தவர்கள்.*

ஆகவே கலிமாவுக்குப்பல கருத்துக்கள் உண்டு என்பது மார்க்க விரோதமான காரியம் என்றும் ஸறகைச் சேர்ந்ததேயல்ல என்றும் அறிந்து கொண்டோம். மேலும் கலிமாவில் இல்லாத “மவுஜூதுன்” என்ற சொல்லைத் தொக்கிய பயநிலையாக அமைத்துக்கலிமாவின் உண்மைப்பொருளை மாறுபடுத்துவதும் ஸறகைச் சேர்ந்த காரியமேயல்ல. மார்க்க விரோதமான காரியமே ஆகும். (இதன் விபரம் கலிமாவை விளக்கும் போது தரப்படும்)

**(2)**

**இப்போது இரண்டாவது விஷயத்தை ஆராய்ந்து பார்ப்போம்.**

“**அ**ஹ்லுல் ஹல்லிவல் அக்திகள்” என்ற பெரியார்களான உலமாக்கள் ஒரே காலத்திலாவது அடுத்தடுத்து வந்த சமீப காலங்களிலாவது கலிமாவுக்குப் பலபொருட்கள் உண்டென்றோ. கலிமா முதஸாபிஹாத்தான பல கருத்துடையதென்றோ, கலிமாவுக்கு வலிந்துரைகொள்ள வேண்டுமென்றோ எப்போதும் எங்கேயும் கூறியதோ எழுதியதோ கிடையாது. மேலும் அந்தப் பெருமைதங்கிய உலமாக்கள் **கலிமா முஹ்கமாத்தான ஒரே கருத்துடையதென்றும் கலிமாவுக்கு வலிந்துரை கொள்ளகூடாது என்றும்தான் சொல்லியும் எழுதியும் வந்திருக்கிறார்கள்.** ஆனால் அறிவுகுறைந்த மக்களால் வழிகாட்டிகளாகக் கணிக்கப்பட்ட சிலர் ஒருவரையொருவர் பின்பற்றிக் கூறுவதையும் எழுதுவதையும் **“இஜ்மாஉ, ஏகோபித்த அபிப்பிராயம் என்று எப்படிக் கூறுவது?** குர்ஆனுக்கு மாற்றமாய்க் கூறுவோரை எழுதுவோரை **“அஹ்லுல் ஹல்லிவல் அக்திகள்” என்று எப்படிக் கூறுவது?** கலிமா முஹ்கமாத்தைச் சேர்ந்தது, ஒரே கருத்துடையது, என்று அறிந்துகொள்ளாதவர்களை **உலமாக்கள் என்றுதானும் எப்படிக்கூறுவது?** குர்ஆனுக்கு முரணாய் வழிகேட்டில் செல்வோரை **மூமின்கள் என்றுதானும் எப்படி ஒப்புக்கொள்வது?** இவர்கள் ஒன்றுகூடிப் பேசுகிற தவறான விளக்கங்கள் “இஜ்மாஉ” என்று கூறவே கூடாது

அதாவது கலிமா முஹ்கமாத்தல்லாத முதஸாபிஹாத்தைச் சேர்ந்த பலகருத்துடையதென்றும், கலிமாவுக்கு வலிந்துரைகொள்ள வேண்டுமென்றும் எவர்கள் கூறுகிறார்களோ, எவர்கள் எழுதுகிறார்கள் அவர்கள் **நாம் காட்டிய 33:36ஆம் ஆயத்தின் படி வழிகெட்டவர்களாய், மூமின்களல்லாதவர்களாய்**

**இருக்கிறார்கள்.** வழிகெட்டவர்களின். மூமின்களல்லாதவர்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தை "இஜ்மாஉ" என்று ஒப்புக்கொண்டால் நாமும் வழிகெட்டவர்கள் என்பதே குர்ஆனின் தீர்ப்பு ஆகும். குர்ஆனுக்கு முரணான விபரங்களை ஒருவரையொருவர் பின்பற்றி எமக்கறிவித்தவர்கள் பட்டம், பதவியும் உலமா என்ற பெயரும் உடையவர்களாய் இருந்திருக்கலாம். **ஆனால் குர்ஆனுடைய தீர்ப்பின் படி அவர்கள் உலமாக்களேயல்ல. மேலும் அவர்கள் வழி கெட்டவர்களாகவே இருக்கின்றார்கள்.** இவ்வகையினரை, இவர்களின் நூற்களைப் படித்த பட்டதாரிகள் இமாம்களென்று கூறினாலும் உண்மையில் இவர்கள் காபீர்களேதான்.

**ஹதீஸ்:** ***கடைசி நாளையில் வருகிற தஜ்ஜாலை விட வேறுசில தஜ்ஜால்களுக்கு நான் மிகப்பயப்படுகிறேன் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூற அவர்கள் யாரென்று வினவப்பட்டதற்கு வழிகேட்டில் ஜனங்களைத் தள்ளிவிடுகிற இமாம்கள் (வழிகாட்டிகள்) என்று கூறினார்கள். இந்த ஹதீஸ் முன்பு தரப்பட்டுள்ளது.***

**ஹதீஸ்:** ***மனிதர்களில் ஒரு காலம் வரும். அப்போது இஸ்லாத்தின் நாமமேயல்லாது அதன் சத்தியம் (உண்மை) இராது. குர்ஆனில் எழுத்தேயல்லாது அதன் உண்மையான அர்த்தம் (கருத்து) இராது. அவர்களின் மஸ்ஜித்கள் (பள்ளிவாசல்கள்) நேர்வழியின்றிக் கெட்டுப்போயிருக்கும். அவர்களின் உலமாக்கள் வானத்தின் கீழ் மிகக் கெட்ட ஜந்துக்களாய் இருப்பார்கள்.***

**அறிவிப்பவர்: அலி(றலி)**
**ஆதாரம்: மிஷ்காத், பைஹக்கி**

இவைபோல் பல நூற்றுக்கணக்கான ஹதீஸ்களும் குர்ஆன் ஆயத்துக்களும் தென்படுகின்றன. நான் விரிவை அஞ்சுவதால் அவற்றை இங்கே எழுதவில்லை. வேண்டியவற்றை ஆராய்ந்து கண்டறியவும்.

தௌஹீது என்னும் ஏகத்துவக் கொள்கையை, அதன் உண்மையை விளங்கியறிந்த மாபெரும் உலமாக்களும் ஸூபிகளுமான அவ்லியாக்கள்தான் "அஹ்லுல்ஹல்லிவல் அக்திகள்" என்னும் பெரியார்கள். இவர்கள்தான் உலமாக்களென்ற பெருமை தங்கிய பெயருக்குப் பாத்திரமானவர்கள். இவர்களுடைய ஏகோபித்த அபிப்பிராயத்துக்குத்தான் "இஜ்மாஉ" என்று பெயர். றசூல்(ஸல்) அவர்களோ, அவர்களுடைய ஸஹாபாக்களோ, தாபியீன்களோ, அவர்களைப் பின்தொடர்ந்த தப்அத்தாபியீன்களோ, கலிமாவுக்குப் பல பொருள்களைக் கூறியதோ, கலிமாவுக்கு வலிந்துரை கொண்டதோ கிடையாது. அவர்களுடைய காலங்களில் எங்கேயும் எப்போதும் கலிமாவுக்குப் பல பொருட்களைக் கூறியதும் கலிமாவுக்கு வலிந்துரைகொண்டதும் கிடைக்கவே கிடையாது. றசூல்(ஸல்) அவர்களால் விபரிக்கப்படாத சொல், செயல், கருத்துக்கள் இல்லையென்றே கூறலாம். அப்படியிருந்தும் வேதத்தின் அடிப்படையான கலிமாவுக்கு விளக்கமும், விபரமும் தராமலே போய்விட்டார்களென்று கூற முடியுமா? கலிமாவுக்கு பல கருத்துக்கள் உண்டு என்றிருந்தால், அல்லது கலிமாவுக்கு வலிந்துரைகொள்ள வேண்டுமென்றிருந்தால் அதன் விபரங்களை எமக்குத் தராமலா போயிருப்பார்கள்? அவர்கள் வந்த வேலையின் முழுநோக்கமே கலிமாவைப் பிரசாரம் செய்வதுதான். வணக்கத்துக்குரிய நாயகன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று கூறுவதற்கு அவர்கள் வந்திருக்க வேண்டிய அவசியமேயில்லை. ஏனென்றால், சாதாரண மக்களான முஸ்ரிக்கீன்கள் இதை ஒப்புக்கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். இதை முன்பு விளக்கியுள்ளேன்.

உலகப் பிரசித்தி பெற்ற ஜாருல்லாஸமஸ்கரீ(றலி) போன்ற பாரவான்களான பல உலமாக்களும் ஒவ்வோர் தரீக்காவையும் சேர்ந்த ஸூபிய்யாக்களான உலமாக்களும் காலாகாலம் தோன்றிய குத்புமார்களும், கலிமா ஒரே கருத்துடைய முஹ்கமாத்தைச் சோந்ததென்றும் கலிமாவுக்கு வலிந்துரைகொள்ளவே கூடாதென்றும் பேசியும் எழுதியும், போலிகளின் எதிர்ப்புக்குள்ளாகியும்தான் சென்றிருக்கிறார்கள். இது விஷயமாக எத்தனையெத்தனையோ அரும்பெரும் பொக்கிஷமான கிதாபுகள் புஸ்த்தகங்கள், பாடல்கள், பைத்துக்கள் இருக்கவே செய்கின்றன. இவற்றை ஆராயாமல் விட்டு விட்டு உண்மை எங்களைத் தேடுமென்று நாம் ஏமாந்து கொண்டிருக்கிறோம். நாம்தான் அறிவை, உண்மையைத்தேடிக் கண்டறிய வேண்டும். ஏகோபித்த அபிப்பிராயம் இஜ்மாஉ என்று கூறப்படுவது அவ்லியாக்களின் அபிப்பிராயத்தையேயல்லாமல், குர்ஆனுக்கு மாறாய்க் கூறுகிற ஷைத்தான்களுடைய அபிப்பிராயத்தையல்ல.

**ஹதீஸ்:** ***என்னுடைய உம்மத்திலுள்ள உலமாக்கள் (நல்ல உலமாக்கள்) பனீஇஸ்ராயீல்களின் நபிமார்களுக்கு ஒப்பாய் இருப்பார்கள். (இவ்வகையினர்தான் உண்மையான உலமாக்கள்)***

நம் நாட்டில் வாழ்ந்த ஸூபிகளான ஒரு சில பெரியார்கள் சாதாரண பாடல்கள் வாயிலாகவும், சாதாரண பெண்களுக்குக்கூட உண்மையை உணர்த்தியே வந்திருக்கிறார்கள். ஆகவே கலிமாவுக்குப் பல பொருட்களைக் கூறியதும் வலிந்துரை கொண்டதும் உண்மையான உலமாக்களேயல்ல, அது இஜ்மாஉ என்னும் ஏகோபித்த அபிப்பிராயமுமல்ல. உலமாக்களென்ற போர்வையிலிருந்த, வஹ்மு நீங்காத, குர்ஆன் ஹதீஸுகளை உள்ளபடி விளங்கியறிய ஆற்றலில்லாத இஸ்லாத்தின் கொள்கையை அறியாத அறிவீனர்களில் ஒரு சிலர்தான் ஆரம்ப காலத்திலேயே இந்தப் புரட்டல்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதை நுட்பமாய் ஆராய்ந்தால் அரசியல் சூழ்நிலை காரணமாக, றசூல்(ஸல்) அவர்களின் (உபாத்திற்குப்பின்) இஸ்லாத்தைப் புரட்ட வேண்டுமென்ற கெட்ட நோக்கோடுதான்

இந்தத்தவறான அபிப்பிராயம் உருவாக்கப்பட்டிருப்பது போலவும் தென்படுகிறது. குர்ஆனில் 3:7ஆவது ஆயத்தில் “குழப்பத்தை உண்டுபண்ணக்கருதி”என்ற வசனம் இதை எமக்கு எடுத்துக் காட்டுகிறது. சரித்திரங்களும் ஓரளவு தெளிவுபடுத்துகின்றன. ஆயினும் இது எப்போது நடைபெற்றது என்பதை சரியாக நிரூபித்துக் காட்டக்கூடிய ஆதாரங்கள் எமக்குக்கிடைக்கவில்லை. (கர்பலாயுத்த காலத்திலும் இது நிகழ்ந்திருக்கலாம்.)

இந்த வலிந்துரை கொள்ளல், பலகருத்துக்களைக் கூறல் என்ற திருவிளையாடல் யாரோ ஒருவரினால்தான் முதலில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதை, பின் வந்த ஒருசாரார் ஆராய்தல் செய்யாமல் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றி வந்திருக்கிறார்கள். இந்தப் பின்பற்றல் முறையிலேயே இதுகால வரையிலும் பின்பற்றப்பட்டு வருகிறது. இந்தப் பின்பற்றல் வாதிகளின் வஹ்மு, கலிமாவின் உண்மையை விளக்கித் தௌஹீதை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தில் இல்லாமலிருந்ததால் முஸ்ரிக்குகள் ஒருவரை ஒருவர் பின்பற்றியது போலவே இவர்களும் ஒருவரையொருவர் பின்பற்றுகிறார்கள்.

وَإِذَا قِيلَ لَهُمُ ٱتَّبِعُوا۟ مَآ أَنزَلَ ٱللَّهُ قَالُوا۟ بَلْ نَتَّبِعُ مَا وَجَدْنَا عَلَيْهِ
ءَابَآءَنَآ ۚ أَوَلَوْ كَانَ ٱلشَّيْطَـٰنُ يَدْعُوهُمْ إِلَىٰ عَذَابِ ٱلسَّعِيرِ

31-21 *அவர்களைநோக்கி அல்லாஹ் இறக்கியதைப் பின்பற்றுங்கள் என்று கூறப்பட்டால் அதற்கு அவர்கள் இல்லை. எங்கள் மூதாதைகள் எதன் மீதிருக்க கண்டோமோ அதனையே பின்பற்றுவோம். என்று கூறுகின்றனர். அவர்களுடையமூதாதைகளைச் சைத்தான் நரக வேதனையின்பால் அழைத்திருந்தாலுமா? (பின்பற்றுவார்கள்)*

இதே போல் குர்ஆன் ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ள மற்றும் வசனங்களையும் யூகித்தறியவும்.

**(3)**

**இப்போது மூன்றாவது விஷயத்தை ஆராய்வோம்.**

என்னுடைய உம்மத்துக்கள் வழிகேட்டின்மேல் ஒன்று சேரமாட்டார்கள். ஆகவே நீங்கள் பெரும்கூட்டத்தைப் பின்பற்றுங்கள். என்று றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட உண்மையான ஹதீஸில் குறிப்பிடப்பட்ட பெரும் கூட்டம் எது? என்பதை நாம் கண்டறியவேண்டும். அதாவது றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட பெரும்கூட்டம் என்பது எண்ணிக்கையினால், தொகையினால் பெரும்கூட்டமா? அறிவினால் பெரும்கூட்டமா? என்பதை நாம் அறிந்துகொள்ளாவிட்டால் ஹதீஸின் உண்மையை எம்மால் கண்டறிய முடியாமல் போய்விடும். ஆகவே றசூல்(ஸல்) அவர்களால் குறிப்பிடப்பட்ட பெரும்கூட்டம் எது என்பதை ஆராய்ந்தபோது பல உண்மைகள் தென்பட்டன. (பொழிப்புமட்டும் இங்கே தரப்படுகிறது). தொகையினால், எண்ணிக்கையினால் பெரும்கூட்டமாய்க் கணிக்கப்படுகிற கூட்டம் நாயக வாக்கியத்தில் கட்டுண்ட கூட்டமேயல்ல. நாயக வாக்கியத்தில் குறிப்பிடப்பட்ட பெரும்கூட்டம் என்பது அறிவினால், ஞானத்தினால் பெரும் கூட்டம் என்பதேயாகும். அதாவது றசூல்(ஸல்) அவர்களும் அவர்களுடைய ஸஹாபாக்களும், தாபியீன்கள், தப்அத்தாபியீன்கள், ஸூபிகளான ஒலிமார்கள் சேர்ந்த கூட்டமே நாயகவாக்கியத்தில் கட்டுண்ட பெரும் கூட்டமாகும். **தொகையினாலல்லாமல் அறிவினால் பெரும் கூட்டம் என்பதே ஹதீஸின் கருத்தாகும்.** அவ்வுண்மையைக் குர்ஆனும் ஹதீஸ்களும் விபரம் தருகின்றன.

وَإِن تُطِعْ أَكْثَرَ مَن فِى ٱلْأَرْضِ يُضِلُّوكَ عَن سَبِيلِ ٱللَّهِ ۚ إِن يَتَّبِعُونَ إِلَّا
ٱلظَّنَّ وَإِنْ هُمْ إِلَّا يَخْرُصُونَ

6:116 *இப்புவியில் இருப்போரில் அநேகர் இருக்கின்றனர். அவர்களைப் பின்பற்றுவீர்களானால் அவர்கள் உம்மை அல்லாஹ்வுடைய பாதையில் இருந்து திருப்பிவிடுவார்கள். வெறும் யூகங்களைத்தவிர அவர்கள் பின்பற்றுவதில்லை. அன்றி (பொய்யான) கற்பனையில்தான் அவர்கள் மூழ்கியிருக்கிறார்கள்.*

فَقَلِيلًا مَّا يُؤْمِنُونَ

2-88 *நம்பிக்கை (ஈமான்) கொள்வோர் சிறுபான்மையினரே.*

أَكْثَرَ ٱلنَّاسِ لَا يُؤْمِنُونَ

11-17 *பெரும்பான்மையான மனிதர்கள் நம்பிக்கை (ஈமான்) கொள்ளமாட்டார்கள்.*

இவ்வாயத்துக்களைப் பலகண்ணோட்டங்களோடு ஆராயவேண்டும். **எண்ணிக்கையினால் பெரும் கூட்டம் வழி தவறியவர்கள்.** அவர்கள் கற்பனையான பொய்யில் (ஷிர்க்கில்) ஊறியவர்கள். வெறும் யூகங்களையே பின்பற்றுபவர்கள். இவர்களைப்பின்பற்றினால் அல்லாஹ்வுடைய (தௌஹீதென்ற நேரான) பாதையில் நின்று திருப்பி (ஷிர்க்குடைய பாதையில் செலுத்தி) விடுவார்கள். என்று குர்ஆன் சுமார் 1400 வருடங்களின் முன்பே விபரம் தந்திருக்கிறது. ஆகவே றசூல்(ஸல்) அவர்கள் கூறிய பெரும் கூட்டம் **எண்ணிக்கையினால் பெரும் கூட்டமான சுயசிந்தனையில்லாத இரவல் மூளையுடைய கூட்டமேயல்ல. அறிவினால் பெரும் கூட்டம்என்பதே ஹதீஸின் கருத்தாகும்.**

**ஹதீஸ்:** *ஒரு நூற்றி எண்பது ஆண்டுகள் கழிந்த பின்னர் என்சமூகத்தினர் தனித்திருப்பதையும் மலைகளின் உச்சியில் மறைந்திருப்பதையும் நான் அவர்களுக்கு ஆகுமானதாகச் செய்திருக்கிறேன். என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

**அறிவிப்பவர்: ஈஸா இப்னு வாகிதீ(றலி)**
**ஆதாரம்: ரஜீன்**

இந்த 180 வருடங்களின் பின்புதான் மத்ஹபுகள் பிக்ஹு கிதாபுகளும் உருவாகியிருக்கின்றன.

மக்களின் பெரும்பாலார் தவறான பாதையில் சென்று விடுவார்கள் என்பதனால்தான் இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. றசூல்(ஸல்) அவர்களுடைய மறைவுக்குப் பின் 30ஆம் வருடத்தில் இருந்து பொய் பரவத் தொடங்கி 180 ஆம் வருடத்துக்குள் நிரப்பமடைந்துவிட்டது என்பது ஆராய்பவர்களுக்கு தெளிவாய் தென்படவே செய்கிறது. றசூல்(ஸல்) அவர்களுடைய ஹதீஸ்களினால் குறிப்பிடப்பட்ட அதேகாலத்தில்தான் சுமார் 70க்கும் அதிகமான மதுஹபுகளும் இமாம்களும் வியாக்கியானிகளும் உருவாகியிருக்கிறார்கள். நாளாவட்டத்தில் மறைந்து அழிந்து போனவைபோக மீதமாய் இன்றிருப்பது 4 மதுஹபுகளும் அவற்றின் விபரங்களும் மட்டும்தான்.

இன்னும் பல ஹதீஸ்களும் குர்ஆன் ஆயத்துக்களும் இவ்வுண்மையை எமக்கு விபரிக்கின்றன. நாம் விரிவை அஞ்சுவதால் இவ்வளவையே போதுமாக்குவோம்.

அதிகமான மக்கள் நம்புகிறார்களா? அப்படியானால் அந்த விஷயத்தை அவ்வளவுக்கவ்வளவு அதிக கவனத்தோடு ஆராய்தல் செய்ய வேண்டும் என்று “டால்ஸ்டாய்” கூறுகிறார். ஏனென்றால் அதிகமான மக்கள் பேத புத்தியுடையவர்களாய் இருப்பதால், வெறும் பொய்யான, கற்பனையான யூகங்களையே ஒருவரையொருவர் கண்மூடித்தனமாய் பின்பற்றுகிறார்கள் என்பதனால்தான்.

**சகோதரனே!**

பொய்யென்ற அறிவீனம் எவ்விதமான ஊளையிட்டாலும் உண்மையென்ற அறிவுச்சுடர் என்றைக்கும் ஒழிந்து (மறைந்து) கொள்வதேயில்லை.

إِنَّ ٱلَّذِينَ يَكۡتُمُونَ مَآ أَنزَلۡنَا مِنَ ٱلۡبَيِّنَٰتِ وَٱلۡهُدَىٰ
مِنۢ بَعۡدِ مَا بَيَّنَّٰهُ لِلنَّاسِ فِي ٱلۡكِتَٰبِ أُوْلَٰٓئِكَ يَلۡعَنُهُمُ ٱللَّهُ
وَيَلۡعَنُهُمُ ٱللَّٰعِنُونَ

2-159 *நேர்வழியையும் தெளிவான அத்தாட்சிகளையும் நாம் இறக்கி மனிதர்களுக்காக வேதத்தில் தெளிவுபடுத்திய பின்னும் எவர்கள் அவற்றை மறைக்கிறார்களோ அவர்களை நிச்சயமாக அல்லாஹ்வும் சபிக்கிறான். சபிப்போரும் அவர்களைச் சபிக்கின்றனர்.*

## பதிலின் சாரம்

**1ஆவது:** கலிமாவுக்குப் பலபொருட்கள் உண்டென்பதும் கலிமாவில் இல்லாத சொற்களைச் சேர்த்து கலிமாவுக்கு வலிந்துரை கொள்வதும் ஸறகுக்கும் குர்ஆன், ஹதீஸ்களுக்கும் நேர்விரோதமான அடாத காரியமாகும்.

**2ஆவது:** குர்ஆன் ஹதீஸ்களுக்கு முரணாய் வழிதவறிச் செல்வோர் ஒப்புக்கொள்வதை ஏகோபித்த அபிப்பிராயம் “இஜ்மாஉ” என்று கூறுவது அறியாமையும் தவறுமாகும். “அஹ்லுல் ஹல்லிவல் அக்திகளான” அவ்லியாக்களான உலமாக்களின் ஏகோபித்த அபிப்பிராயத்துக்குத்தான் “இஜ்மாஉ” என்று பெயர்.

**3ஆவது:** எண்ணிக்கையினால் பெரும் கூட்டம் வழிகெட்டதாயும் அறிவினால் பெரும் கூட்டம் நேர்வழி செல்வதாயும் இருப்பதால், அறிவினால் பெரும் கூட்டமாயுள்ளவர்களையே நாம் பின்பற்ற வேண்டும் என்பதே றசூல்(ஸல்) அவர்களுடைய ஹதீஸின் கருத்தாகும்.

**4ஆவது:** கலிமா, ஒரே கருத்துடைய முஹ்கமாத்தைச் சேர்ந்ததென்பதும் கலிமாவுக்கு வலிந்துரைகொள்ள வேண்டியதில்லையென்பதும் ஐந்து கலிமாக்களல்ல உள்ளது ஒரே கலிமாதானென்பதும் குர்ஆன், ஹதீஸ் (இஜ்மாஉ) அவ்லியாக்கின் ஏகோபித்த அபிப்பிராயத்தினாலும் அறிவினாலும் நிருபிக்கப்பட்ட மறைக்க, மறுக்க முடியாத பரிபூரணமான உண்மையாகும்.

**5ஆவது:** இக்கால வழக்கிலுள்ள பெரும்பாலான புஸ்த்தகங்களும் பெரும்பாலான கிதாபுகளும் உண்மைக்கு முரணான பின்பற்றல் முறையிலேயே எழுதப்பட்டுள்ளன. இந்த நூல்கள் ஒருசில முன்னோரின் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளனவேயன்றி உண்மையான தர்க்கரீதியான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவைகளேயல்ல.

**7ஆவது கேள்வி:**

நீங்கள் கூறுகிற விபரம் உண்மைதான் என்றால் இமாம்களும் கலிமாவுக்குப் பொருள் தெரியாமல் இருந்தார்கள் என்று நாம் கூறமுடியுமா? கலிமாவுக்குப் பல கருத்துக்கள் உண்டு என்று ஒரு சாரார் கூறிய காரணம் என்ன? கலிமாவுக்கு அவர்கள் வலிந்துரை கொண்ட காரணம் என்ன? இலாஹு) என்ற சொல்லுக்கு (முஸ்த்தஹக்கலில் இபாதா) வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் என்று மாற்றி (தஹ்வீல்) என்னும் வலிந்துரை கொண்ட காரணம்தான் என்ன?

**(1)**

**பதில்:**

இமாம்கள்தான் கலிமாவுக்குப் பல பொருட்களைக் கூறினார்கள் என்பது எமக்குச் சரியானஆதாரத்தோடு கிடைக்கவில்லை என்று நான் முன்பே கூறியிருக்கிறேன். ஆனால் அந்த இமாம்கள்தான் அப்படிக் கூறியிருந்தாலும் அவர்கள் கலிமாவின் உண்மைப்பொருளை அறியாமல் இருந்தார்கள் என்று கூறமுடியாது. அப்படிக் கூறுவதும் தவறாகும். கலிமாவுக்குப் பல பொருட்களை அவர்கள் கூறியிருப்பினும் அல்லாஹ் தவிர இலாஹு இல்லை என்பதே கலிமாவின் இறுதியான பொருள் என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பதால் அறியாதவர்கள் என்று கூறுவது பெருந்தவறாகும் இமாம்களுடைய உண்மை சரியான ஆதாரங்களோடு எமக்கு தென்படாவிட்டாலும் அவர்களைப் பின்பற்றுவோர் கூறும் விபரங்களிலிருந்து அந்த இமாம்கள் உண்மையை அறிந்தவர்களேதான் என்பது நிருபணமாகிறது. ஆயினும் அவர்கள் உண்மையில் உறுதிப்படாதவர்கள் என்றே தெரிகிறது.

**(2)**

மனிதர்களிடத்தில் அவர்களுடைய புத்தியின் அளவாய்ப்பேசும்படி கட்டளையிடப்பட்டுள்ளதாக றசூல்(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதே போன்ற கருத்தை வெளிப்படுத்தக்கூடிய வேறு பல ஹதீஸ்களும் தென்படுகின்றன. கலிமாவின் கருத்தையும் அதன் விபரமான தௌஹீதையும் மக்களில் அநேகர் விளங்கிக்கொள்ள முடியாத குறைந்த அறிவுடையவர்களாய் இருப்பதால் அவர்களுடைய அறிவுக்கேற்றபடி கலிமாவுக்குப் பல கருத்துக்களைக் கற்பனைபண்ணிக் கூறவேண்டுமென்றும், இல்லாவிட்டால் சமூகமே சிதறிவிடும் என்றும் ஒருசாரார் நம்பினார்கள். ஆகவே றசூல்(ஸல்) அவர்களுடைய ஹதீஸின்படி கலிமாவுக்குப் பல கருத்துக்களைக் கற்பிப்பதும் வலிந்துரைகொள்வதுமே பொருத்தமானதென்றும் சமூகத்தைச் சிதறவிடாமல் காப்பாற்றக்கூடிய உபாயமென்றும் நம்பினார்கள். ஏனென்றால் கலிமாவின் உண்மைப் பொருளைக் கூறினால் மக்கள் தொழுகை முதலாம் அமல்களை விட்டு விடவும் பாரதூரமான குற்றச்செய்கைகளில் ஈடுபடவும்கூடும். ஆகையால் மக்களுடைய அறிவுக்கேற்றபடி பொருள் கூறுவதே சரியென்று கண்டார்கள். இது பின்பற்றல்வாதிகளின் அபிப்பிராயமாகும். ஆனால் இவர்களுக்கு வழிகாட்டிய முன்னோர்களில் ஒருசிலர் ஆரம்பத்தில் கலிமாவுக்குப் பல பொருட்களைக் கற்பனை பண்ணியதற்கும் கலிமாவுக்கு வலிந்துரை கொண்டதற்கும் மிகமிக முக்கியமான காரணங்கள் ஐந்து தென்படுகின்றன. அவ்வைந்து காரணங்களுடையவும் சாராம்சம் என்னவென்றால் **குர்ஆன், ஹதீஸ்களுடைய சிலவசன நடைகள் ஒன்றுக்கொன்று முரணானவைபோல் தென்பட்டு மயக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.** றசூல்(ஸல்) அவர்களுடைய உபாத்துக்குச் சிறிது காலத்துக்குப்பின், கலிமாவைப் புரட்டியவர்களின் காலத்துக்குச் சிறிது காலத்துக்கு முன்னுள்ள சில நாயகத் தோழர்களே, குர்ஆன், ஹதீஸ்களுடைய வசனநடைகளில் முன்னுக்குப் பின் முரணிருப்பதாகச் சந்தேகப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. ஆதாரம் பின்னால் தரப்படும். இவ்விதமான மருட்சியடைந்த ஒரு சாரார் தான் அவர்களுடைய வஹ்முக்கேற்றபடி கலிமாவின் பொருளைப் புரட்ட முற்பட்டிருக்கிறார்கள். இதை நாம் தெளிவாய் அறியவேண்டியிருப்பதால் ஒவ்வோர் விஷயமாய் நோக்குவோம்.

**(3)**

முதலில், மக்களிடையே அவர்களுடைய அறிவுக்கேற்றபடி பேசவேண்டும் என்று றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட விஷயத்தின் உண்மையை நாம் நோக்குவோம்.

மக்களிடையே அவர்களுடைய அறிவுக்கேற்றபடி பேசவேண்டும் என்று கூறிய அதே றசூல் (ஸல்) அவர்கள்தான், அறிவிலிகளான மூடர்களாய், (ஜாஹில்களாய்) முரடர்களாய், தான்பெற்ற குழந்தையை உயிரோடு குழிதோண்டிப் புதைக்கும் சுபாவமுடைய மதிகெட்ட மிருகங்களாய் வாழ்ந்த உம்மிகளான அறபு மக்களிடையே "லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவை எவ்வித ஒழிப்பு மறைப்புமின்றிச் சயிக்கினையுமின்றி வெளிப்படையாகவே கூறினார்கள். இவ்விஷயம் நமக்குத் தெரிந்ததேயாயினும் நாம் இதை மீண்டும் நினைவுபடுத்த வேண்டியதாய் இருக்கிறது. இவ்விதம் றசூல் (ஸல்) அவர்கள் வெளிப்படையாய் விளக்கியதைக் கேட்ட மக்கள்,"என்னே! இவர் எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹுதான் என்று ஆக்கிவிட்டாரா? இது ஓர் ஆச்சரியமான செய்திதான்" என்று கூறி அம்மக்கள் வியப்படைந்தார்கள் என்பதைக் குர்ஆன் எமக்கு விளக்கம் தருகிறது?

أَجَعَلَ ٱلْأَلِهَةَ إِلَـٰهًا وَٰحِدًا ۖ إِنَّ هَـٰذَا لَشَىْءٌ عُجَابٌ

38-5 *என்னே! இவர் எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹுதான் என்ஆக்கிவிட்டாரா? இது ஓர் ஆச்சரியமான செய்திதான்.*

இந்த ஆயத்து இவ்வுண்மையை எமக்கு உறுதிப்படுத்துகிறது, அதன் பின் கலிமாவின் உண்மையை மக்கள் ஒப்புக்கொள்ள மறுத்தபோது றசூல்(ஸல்) அவர்கள் இறை ஏவலின் படி வாள்கொண்டு யுத்தமேசெய்து கலிமாவைப் பிரச்சாரம் செய்தார்கள் என்பதும் எமக்குத் தெரியவருகிறது.

**ஹதீஸ்:** ***மக்கள் (லா இலாஹ இல்லல்லாஹ்) அல்லாஹ் தவிர இலாஹு இல்லை, முகம்மது(ஸல்) அவர்கள் திட்டமாக அல்லாஹ்வுடைய துதராவார் என்று சாட்சி கூறித்தொழுகையைக் கடைப்பிடித்தொழுகி ஸக்காத்தும் கொடுத்து வராதவரையில், அவர்களுடன் அறப்போர் (பீஸபீல்) புரியுமாறு இறைவன் எனக்கு ஆணையிட்டுள்ளான். இவ்விதம் அவர்கள் செய்து வருவார்களானால் அவர்களுடைய உயிர்களையும் பொருள்களையும் என்னைவிட்டும் காத்துக்கொண்டவர்களாவர். இஸ்லாத்தின் கடமைகளைத் தவிர அவர்களுடைய கணக்கு அல்லாஹ்விடமிருக்கிறதென்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்**(றலி)
**ஆதாரம்: புகாரி, முஸ்லிம்**

இன்னும் பல ஹதீஸ்களிருப்பினும் இது ஒன்றையே நாம் போதுமாக்குவோம். ஆகவே றசூல் (ஸல்) அவர்கள் எவ்விதமான மறைப்பும் இல்லாமலே தௌஹீதை, வேதத்தின் அடிப்படையை, கலிமாவை வெளிப்படுத்தினார்கள் என்பதை நாம் அறிந்துகொண்டோம். அதன்பின் அவர்களைப் பின்பற்றிய எத்தி வைப்பவர்களான நல்லடியார்கள், றசூல்(ஸல்) அவர்களால் கொண்டுவரப்பட்ட உண்மையை அப்படியே எவ்வித மாறுபாடும் இல்லாமல் எத்தி வைக்க வேண்டியவர்களாவார்கள் என்பதை நாம் அறிவோம். புதிதாய்க் கூறுவது நபிமார்கள், றசூல்மார்களின் வேலை. நபிமார்கள் கூறிய அதே உண்மையை எத்திவைப்பது வழிகாட்டிகள் (இமாம்கள்) ஆசிரியர்களின் வேலையாகும். தேவையானபோது தேவையான உண்மைகளை விளக்குவதுதான் எத்திவைப்பவர்களின் வேலையேயல்லாமல் புதுப்புதுத் தவறான நுட்பங்களை பித்அத்துக்களை எத்திவைப்பது அவர்களின் வேலையாகாது. **தௌஹீதுடைய விஷயத்தில் அறிவு குறைந்த மக்களிடையே மறைக்கப்பட வேண்டிய பல இரகசியங்கள் உண்டென்பது உண்மை. ஆனால் ஆரம்ப விளக்கமான கலிமாவின் கருத்தில், பொதுப்படையான தௌஹீதில் மக்களுடைய அறிவுக்கேற்றபடி புரட்டி, மறைத்து பேசவேண்டும் என்பது கருத்தல்ல.** அறிவு குறைந்த உம்மிகளான மக்களிடையே றசூல்(ஸல்) அவர்கள் கூறி ஆதாரம் காட்டி விளக்கிய ஹக்குக்கு கல்குவேறல்ல என்ற பொதுப்படையான தௌஹீதின் ஆரம்பம் எவரிடத்திலும் எப்போதும் எங்கேயும் வெளிப்படுத்தப்பட வேண்டிய ஒன்றேயாகும். இது மறைக்கப்படவேண்டியதாய், மக்களுடைய அறிவுக்கேற்றபடி பேசப்படவேண்டியதாய் இருந்திருந்தால் கலிமாவையும் அதன் சார்புகளான தலீல்களையும் றசூல்மார்கள், நபிமார்களையும் இறைவன் அனுப்பியே இருக்கமாட்டான். றசூல்(ஸல்) அவர்கள் அந்த மூடமக்களிடையே உண்மையே வெளப்படுத்தி இருக்கவும் யுத்தம் செய்திருக்கவும் மாட்டார்கள்.

மேலும் இதை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு அதாபும் ஏற்றுக் கொண்டவர்களுக்குத் தவாபும் தருவதாயும் இறைவன் கூறியிருக்கமாட்டான். நல்லவர், தீயவர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், அறிஞர், மூடர் , அனைவரிடமும் கலிமாவைப் பிரச்சாரம் செய்யும்படிதான் இறைவன் றசூல்மார்களை அனுப்பி இருக்கிறான். றசூல்(ஸல்) அவர்கள் கலிமாவைக் கூறியபோது ஆச்சரியமடைந்த மக்களை நோக்கி மீண்டும் சத்தியம்செய்து முஹம்மதுடைய உயிர் யார் வசம் இருக்கிறதோ அந்த ஆண்டவன்மேல் ஆணையாக நீங்கள் நீர் மொள்ளும் பாத்திரத்தை…என்ற ஹதீஸையும் ஹுவல்அவ்வலு முதலாம் வேத வசனங்களையும் ஆதாரமாய் காட்டித்தான் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். இதை உறுதிப்படுத்தவே யுத்தம் செய்திருக்கிறார்கள். **ஆகவே கலிமாவையும் அதன் பொது விபரமான கருத்தையும் திருப்பாமல், புரட்டாமல், மறைக்காமல், எப்போதும் எவரிடத்திலும் எங்கேயும் கூறலாம் என்பது வெளிப்படையாகவே தென்படுகிறது.** ஆகவே, மக்களுடைய அறிவுக்கேற்றபடி பேச வேண்டும்

என்று றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸ் கலிமாவையும் தௌஹீதையும் சுட்டுவதல்ல எனபதும் **வேறோர் விஷயத்தைச் சுட்டியது என்பதும் தெரிய வருகிறது.**

ஆனால், இவ்விஷயத்தில் வஹ்மு நீங்காத, எள்ளளவும் ஆராய்வேயில்லாத பின்பற்றல்வாதிகளான ஒரு சிலர் மனம்போன போக்கில் எழுதியும், பேசியும் சென்றிருக்கிறார்கள். பரவச நிலைமையை எய்யாத ஒருவர் தௌஹீதை வெளிப்படுத்துவது குற்றம் என்றுகூடக் கூறுகிறார்கள். றசூல்(ஸல்) அவர்களுடையவும் நல்லடியார்களுடையவும் விபரங்களை ஆராய்வுக்கெடுத்தால் பிரயாசையினாலும் தெண்டிப்பினாலும் கூடத் தௌஹீதின் பூரணத்தன்மைகளை மனிதனால் பெறமுடியுமென்பது தெரிகிறது. இது அனுபவ உண்மையாகவும் இருக்கிறது. ஆகவே, பரவசநிலைமையை எய்தாதவர்தௌஹீதை வெளிப்படுத்தக்கூடாது என்பதும் மன்சூர் இப்னு கல்லாஜ் (றஹ்) அவர்களைப்போல் ஹக்கும் கல்கும் ஏகம் என்பதை மனதால் ஒப்புக்கொண்டவனாயும் வெளியரங்கத்தில் நுஹ்மான்(றஹ்) அபூஹனிபா(றஹ்) அவர்களைப்போல் மவுனம் சாதிப்பவனாயும் இருக்க வேண்டுமென்பதும் மக்களின் அறிவுக்கேற்றபடி புரட்டி, மறைத்துப் பேசவேண்டுமென்பதும் **வெறும் மூடத்தனமும் மருட்சியுமாகும். தௌஹீதை அறிவு குறைந்த மக்களிடையே வெளிப்படுத்தக்கூடாது என்பதும் குர்ஆன், ஹதீஸ்களுக்கு மாறாக, இஸ்லாத்தைக் குழிதோண்டிப் புதைக்கப்போடுகிற சதித்திட்டமேயாகும்.**

றசூல்(ஸல்) அவர்களால், மக்களுடைய அறிவுக்கேற்றபடி பேசவேண்டும் என்று கூறப்பட்ட ஹதீஸின்படி ஒரு விஷயத்தை மறைப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் ஆதாரமான ஓர் அடிப்படை இருக்கிறது. எடுத்துக்கொண்ட விஷயத்தை நிரூபித்து உண்மைப்படுத்தக்கூடிய யுக்தி, சுருதிகளான ஆதாரங்கள் தரப்படவில்லையானால் அது மறைக்கப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். இந்த இனத்தைச் சோந்ததுதான் கலாகத்றுடைய விஷயம். இது மக்களுடைய அறிவுக்கேற்றபடி தான் பேசவேண்டும் ஏனென்றால் இதை யுக்தி, சுருதிகளினால் நிரூபிக்கமுடியாது.

**ஹதீஸ்:** *அல்லாஹ்வுடைய கலாகத்றைப்பற்றி பேசப்படும் போதும் பஞ்சாங்க சாஸ்திரங்களைப் பற்றிப் பேசப்படும் போதும் எனது அஸ்ஹாபுகளைப்பற்றிப் பேசப்படும்போதும் காதுகொடாமல் தவிர்த்துக்கொள்க.*

இந்த ஹதீஸில் சுட்டப்பட்ட விஷயங்களை நிரூபிக்கக் கூடிய சரியான ஆதாரங்கள் தரப்படாமையால் **இவை மக்களுடைய அறிவுக்கேற்றபடி பேசப்பட வேண்டியவைதான்.** ஆனால்,எடுத்துக் கொண்ட விஷயத்தை நிரூபித்து உறுதிப்படுத்தக்கூடிய சரியான ஆதாரம் தரப்பட்டிருந்தால் **அது எல்லோரிடமும் வெளிப்படுத்தப்பட வேண்டிய ஒரு விஷயமேயாகும். இந்த இனத்தைச் சேர்ந்ததுதான் கலிமாவின் கருத்தும், பொது விபரமான தௌஹீதும்.**இது மறைக்கப்பட வேண்டிய ஒரு விஷயமேயல்ல. இதை உணர்ந்து கொள்வதற்காக இதோ ஒரு விஷயத்தை நீ நோட்டமிட்டுப்பார். ஈமான் கொள்வதில் நாலு (பர்ளுகள்) கட்டாயக் கடமைகள் இருக்கின்றன என்பதும் நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். அவற்றில்,

**1ஆவது:** கலிமாவின் அட்சரங்களின் (எழுத்துக்களில்) பிழை ஏற்படாமல் சரியாக உச்சரித்துக் கூறுவது (ஊமையனுக்கு இதில் விதிவிலக்குண்டு).

**2ஆவது:** அந்தக் கலிமா உணர்த்தும் உண்மையான கருத்தை விளங்கியறிவது.

**3ஆவது:** கலிமாவினால் உணர்த்தப்பட்ட (உணர்ந்த) பொருளை உள்ளத்தினால் பூரணமாய் ஏற்றுக்கொள்வது.

**4ஆவது:** உள்ளத்தால் ஏற்றுக்கொண்ட கலிமாவின் பொருளை நழுவ விடாமல் பாதுகாப்பது. (அந்த உண்மையிலேயே நிலைபெற்று நிற்பது).

இதைச் சரிவர ஆராய்ந்து பார்த்தால் 3ஆவது பர்ளே மூலபர்ளு என்பதும் நாலாவது பர்ளு அதிலிருந்து பிறந்த கிளைப்பர்ளு என்பதும் தென்படுகிறது. அதாவது விவாகமுடைய ஒரு முஸ்லிம் விபசாரத்தில் ஈடுபட்டால், அது சரியாக நிரூபிக்கப்பட்டால் அவனைக் கொல்வது கடமையாகிறது. ஆனால், முஸ்லீமாய் இருக்கிற அவன் **ஈமானை நழுவவிட்டதனாலேயே கொல்ல அனுமதிக்கப்படுகிறான்.** ஆகவே,3ஆவது பர்ளு மூலபர்ளு என்பதும் 4ஆவது பர்ளு கிளைப்பர்ளு என்பதும் தென்படுகிறது. பிறகு முதலாம், இரண்டாம் பர்ளுகளை மூன்றாவதோடு ஒப்பிட்டால் அவை இரண்டும் மூன்றாவதோடு கட்டுண்டிருப்பதாலேயே பர்ளாக்கப்பட்டன என்பது தென்படுகிறது. ஏனென்றால் பர்ளுக்கு முதல் விதியும் பர்ளாகவே அமையும். ஆகவே முதலாம் விதி மூன்றாம் விதியினாலேயே பர்ளாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கலிமாவும் அதன் உண்மை பொருளும் மறைக்கப்பட்டுப் புரட்டப்பட்டிருந்தால், அதன் உண்மையை விளங்கி ஆராய்ந்து பெற்றுக்கொள்ளாத ஒருவன் தௌஹீதை,ஈமானை எப்படிப் பெறுவான்? உண்மையைப் பெறாத ஒருவன் அதில் எப்படி நிலைத்து நிற்பான்? ஆகவே முந்திய மூன்று பர்ளுகளுமே அவனை விட்டும் தப்பி விடுகின்றன. நாவினால் கலிமாவைக் கூறிய ஒன்றுமட்டுந்தான் அவனுக்குக் கிடைக்கிறது. ஆகவே, கலிமாவின் உண்மையை அறியாத ஒருவன் தன்னை மூமின்தான் என்று எப்படி கூறுவது? ஆகையால்தான் கலிமாவை எல்லா மக்களும் விளங்கியறிய வேண்டியதாயும், கடமைப்பட்டவர்கள் ஒழிப்பு மறைப்பின்றித் தெளிவாக விளக்க வேண்டியதாயும் இருக்கிறது. விளக்குவோரை **மக்கள் காபிர், ஷைத்தான் என்று திர்ப்புக் கட்டினாலும் சரியே.** இப்போது கலிமாவுக்கு ஏன் வலிந்துரை கொண்டார்கள் என்பதை விபரமாய் ஆராய்வோம்.

குத்புஸ்ஸமான் மௌலானா ஷெய்யத்ஷா அப்துர்றஹ்மான்(றஹ்) அவர்கள் தாங்கள் எழுதிய "கலிமத்துல் ஹக்கி"யில் மிகவிரிவாக அறிஞர்கள் எவரும் மறுக்கமுடியாதபடி இவ்விஷயத்தை விளக்கித் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இந்த விளக்கம் மனித அறிவினால் கண்டறியக்கூடிய ஒன்றல்ல என்பதும், இல்ஹாமத்தின் உதவியினாலேயே கண்டறிந்து விளக்கியுள்ளார்கள் என்பதும் உண்மையே. இவ்விபரத்தை அறபு பாஷையில் மிகமிகப் பாண்டித்தியமுடையவர்களேயன்றி மற்றொருவரும் இலகுவாய் விளங்கிக்கொள்ளவும் முடியாமல் இருக்கிறது. ஆகவே. **அவர்களால் விளக்கப்பட்டுள்ள விபரத்தின் சாராம்சத்தை ஏறக்குறைய நடுத்தர அறிவுடையோரும் விளங்கிக்கொள்ள கூடியவகையில் இங்கே மிகச் சுருக்கமாய் கூறுகிறேன்.** இவ்விளக்கமே போதுமானது என்பது என் கருத்து. போதாதெனக் காணுபவர்கள் கலிமத்துல்ஹக்கி என்ற கிதாபையே பார்வையிட்டுத் தெளிவுபெறவும்.

கலிமாவில் உள்ள இலாஹுـ என்ற அறபுச்சொல்லுக்கு வணக்கத்துக்குரிய நாயன் என்று ஒருசிலர் (தஹ்வீல்) என்னும் வலிந்துரை கொண்டதற்கு முக்கியமான ஐந்து காரணங்கள் தென்படுகின்றன. அவற்றில்,

**1ஆவது காரணம்:**

லா இலாஹ இல்லல்லாஹ் என்பதில் "லா"என்னும் எதிர்மறைச்சொல்லைச் சார்ந்துநிற்கிற "இலாஹுـ" என்ற எழுவாய்ப் பெயர் சொல்லுக்கு "மவுஜுـதுன்"என்னும் பெயர்சொல்லைத் தொக்கிய பயநிலையாக அமைத்து அதன்பின் இலாஹுـ என்பதை முஸ்தஹக்கலில் இபாதா என்று அமைக்காவிட்டால் அந்த கலிமா பொய்யாகி விடுவதாக அவர்களுடைய அறிவில் தென்பட்டது. மவுஜுـதுன் என்ற தொக்கிய பயனிலை ஒன்றை அமைக்காவிட்டால் நபிமார் கொண்டுவந்த முதல் வாக்கியமே புத்திக்குப் பிரத்தியட்ச விரோதமாய்த் தென்படுகிறது. அதாவது, கலிமாவின் புணர்ப்பில் அல்ல, இல்லை என்று பொருள் கொண்ட"லா" என்னும் சொல்லைச் சார்ந்த இலாஹுـ என்னும் பெயருக்கு உண்டாய் இருப்பவை என்ற பொருளைக் கொண்ட மவுஜுـதுன் என்று ஓர் பயனிலை தொக்கியிருப்பதாய் அமைத்துக் கொண்டால் அந்தக் கலிமாவுக்குப் பொருள், அல்லாஹ்வே தவிர யாதொரு இலாஹுـம் உண்டாய் இருப்பதில்லை என்று ஆகிவிடுகிறது. இப்பொருளை ஏற்க அவர்களுடைய அறிவு மறுப்பதால் இக்கலிமா பொய்யாவே அவர்களுக்குத் தென்பட்டது. ஏனென்றால் முஸ்ரீக்கீன்கள் வணங்கி வந்த லாத், உஜ்ஜா, மனாஸ் போன்ற இலாஹுـகளும் அல்லாஹ்தான் என்று ஏற்கவேண்டியதாய் விடுகிறது. ஆகவே, மவுஜுـதுன் என்ற சொல்லைத் தொக்கிய பயனிலையாய் அமைக்கவே கூடாது என்று நம்பினார்கள். மேலும் இலாஹுـ என்னும் எழுவாய்ப் பெயரை (முஸ்த்தஹக்கலில் இபாதா) வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் என்ற பொருளில் மாற்றியமைத்தார்கள். மவுஜுـதுன் என்ற பயனிலையை அமைக்காமல் கலிமாவை உள்ளபடியே விட்டுவிட்டால் அல்லாஹ்வின் வேறான ஒரு இலாஹுـம் இல்லை. எல்லா இலாஹுـம் அல்லாஹ்தான் என்று ஆகிவிடுவதால் இதை புத்திக்கு விரோதமாய்க்கண்ட அவர்கள் கலிமாவுக்கு வலிந்துரை கொள்ளாமல் காரியம் பலிக்காது என்று நம்பினார்கள். **இதன் சாரம் என்னவென்றால் கலிமா உணர்த்தும் உண்மைப்பொருளை அவர்களுடைய அறிவு ஏற்கமுடியாமல் இருந்தது என்பதே.**

**2ஆவது காரணம்:**

கலிமாவின் தலீல்களில் (உறுதிப்படுத்தும் ஆயத்துக்களில்) ஒன்றான,

لَوْ كَانَ هَٰٓؤُلَآءِ ءَالِهَةً مَّا وَرَدُوهَا

21-99 *அந்த விக்கிரகங்கள் வணங்கப்படுகிற இலாஹுـகளாய் இருந்தால் அவை நரகத்துக்குவரா.*

என்ற ஆயத்தில் "ஆலிஹத்தன்" என்ற சொல் "கைரல்லாஹி" என்ற விசேடக் குறிப்பில்லாமல் பொதுப்படையாய்த் தரப்பட்டிருக்கிறது. இந்த ஆயத்தும் கலிமாவுக்கு வலிந்துரை கொள்ள ஓர் காரணமாய் விட்டது அதாவது இலாஹுـ என்ற சொல்லை வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் என்று மாற்ற வேண்டியதாயிற்று. அப்படி மாற்றாவிட்டால் தலீல் பொய்யென்று ஆகிவிடுகிறது. எப்படியென்றால் மன்தீக்குடைய காயிதாப்படி ஓர் வசனத்தின் சம்பந்தியாய் அதைத் தொடர்ந்துவரும் பின்வாக்கியப் பொருள் இல்லை. என்றொழிவது முன்வாக்கியப் பொருளை முரண்படமாற்றும், ஆகவே இந்தத் தலீல் பின்வாக்கியப் பொருள் இல்லையென்றொழிவதால் முன்வாக்கியப்பொருளை முரணாய் மாற்றுகிறது. அதாவது கலிமாவின் உண்மைப் பொருள் எல்லா இலாஹுـம் அல்லாஹ்வே என்று கூறுகிறது. ஆனால், இந்தத் தலீல் விக்கிரகங்கள் வணங்கப்படுகிற இலாஹுـகளேயல்ல என்று கூறுகிறது. அதாவது கலிமாவுக்குத் தலீலில் முரணாகிறது. இப்படியானால் இது இன்னுமோர் குர்ஆன் ஆயத்துக்கு முரணாகிறது. அதாவது முஸ்ரீக்குகள் அல்லாஹ்வைவிட்டு அவர்களுக்கு நஷ்டத்தையும் கொடாத இன்னும் இலாபத்தையும் கொடாதவைகளை வணங்குகிறார்கள். இன்னும் இவைபோல் எந்தெந்த தலீல்களால் இலாஹுـகள் வணங்கப்படுபவைதான் என்று ஏற்படுகிறதோ, அந்தத் தலீல்களையும் இவ்விடத்தில் கவனத்துக்கெடுத்துக் கொள்ளவும். (விரிவு அஞ்சி இங்கே எழுதப்படவில்லை)

ஆகவே,கலிமாவின் இலாஹு என்ற சொல்லை வணக்கத்துக்குரிய நாயன் என்று மாற்றினார்கள். இப்படிச் செய்யாவிட்டால் தலீல்கள் பொய்யாகிவிடும் என்று நம்பினார்கள்.

ஏனென்றால் தலீல் என்ற பிரமாணமும் “மதலூலு” என்ற பிரமேயமும் ஒன்றுடன் ஒன்று பொருந்தியிருக்கவேண்டியது அவசியம். இந்த “லவ்கானஹாஉலாஇ ஆலிஹத்தன்” என்ற தலீலில் இலாஹு என்பது “கைரல்லாஹி” என்ற விசேடக்குறிப்பில்லாமல் வந்திருக்கிறது. ஆகவே அதன் “மதலூலு” என்ற பிரமேயமாகிய கலிமாவிலும் இலாஹு என்ற சொல்லைத் தலீலுக்குப் பொருந்தும்படி அமைக்கவேண்டும். அதாவது பொதுப் பெயர்ச் சொல்லாய் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக்கொண்டால் தலீல்கள் பொய்யாய் முடிகின்றன. ஆகவே, அவர்களுடைய அறிவுக்கமைவாய் இலாஹு என்ற சொல்லை (முஸ்த்தஹக்கலில இபாதா) வணக்கத்துக்குப்பாத்திரமான நாயன் என்று மாற்றினார்கள். இந்த மாறுதலால், புரட்டலால் அவர்களுக்கேற்பட்ட பயன் என்னவென்றால் தலீல்களில் ஏற்பட்டதாகத் தென்பட்ட குற்றம் மறைந்து விட்டதுபோல் தென்பட்டதுதான். அதாவது தலீல்களிலும் கலிமாவிலும் வருகிற இலாஹு என்ற சொல்லுக்குப் பொருள் வணங்கப்படுகிற இலாஹு யாதொன்றும் இல்லையென்றாகாமல் வணக்கத்துக்குப் பொருத்தமான இலாஹு (நாயன்) என்று முடிவதால் தலீல்கள் பொய்யாகாமல் தப்பிவிடும் என்று நம்பினார்கள்.

**3ஆவது காரணம்**

لَوْ كَانَ فِيهِمَآ ءَالِهَةٌ إِلَّا ٱللَّهُ لَفَسَدَتَا

21-22 *(வானம் பூமியாகிய) அவ்விரண்டிலும் அல்லாஹ்வின் வேறான இலாஹுகள் உண்டாய் இருந்தால் அவ்விரண்டும் கேட்டை அடைந்திருக்கும்.*

இந்த ஆயத்தும் முன்விபரம்போல கலிமாவின் பொருளைமாற்றி அமைக்க அவர்களுக்குக் காரணமாய் அமைந்திருந்தது. அதாவது வணக்கத்துக்குரிய நாயனென்று மாற்றாமல் விட்டால் இந்த தலீலும் ஒத்துவராதென்று நம்பினார்கள். ஏனென்றால் ஒருவரையொருவர் தடுத்தல் என்னும் தடையினாலன்றி அவை கேட்டையடைவது முடியாது. சிருஷ்டிகளான இலாஹுகள் அல்லாஹ்வைத் தடுக்கும் என்பதும் பொருந்தாது. ஆகவே இந்த ஆயத்தில் வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் என்று பொருள் கொள்ளாவிடில் ஆயத்துப் பொய்யாகிவிடும். அதாவது அவை இரண்டிலும் வணக்கத்துக்குப் பாத்திரமான இலாஹுகள் உண்டாய் இருந்தால் என்று பொருள் கொள்ளாமல் வணங்கப்படுகிற இலாஹுகள் இருந்தால் என்று பொருள் கொண்டால் அவ்வகையான இலாஹுகள் அவை இரண்டிலும் இல்லையென்று ஆகிறது. இது பிரத்தியட்சமான பொய்யாய் இருப்பதால் ஆயத்தைப் பொய்யாக்காமல் காப்பற்றவேண்டுமே என்று நம்பி வலிந்துரை கொண்டார்கள்.

**4ஆவது காரணம்**

قُل لَّوْ كَانَ مَعَهُۥٓ ءَالِهَةٌ كَمَا يَقُولُونَ إِذًا لَّٱبْتَغَوْا۟ إِلَىٰ ذِى ٱلْعَرْشِ سَبِيلًا

17-42 *அவர்கள் சொல்லுவதுபோல் அல்லாஹ்வுடன் வேறு இலாஹுகள் இருக்குமாகில் அப்போது அவை அர்ஸையுடைய இறைவன் பக்கம்போக ஓர் வழியைத்தேடுவார்கள்.*

இந்த ஆயத்தும் அவர்களுடைய அறிவில் கலிமாவுக்கு வலிந்துரை கொள்ளக் காரணமாகத் தென்பட்டிருக்கிறது. ஏனென்றால் அர்ஸையுடைய ஆண்டவன் பக்கம்போக உணர்வியல்புள்ள ஜீவராசிகளாலேயே முடியாமல் இருக்கும்போது தங்கம், பொன், வெள்ளி, கற்களான தாதுப்பொருட்களால் செய்யப்பட்ட இலாஹுகள் வழிதேடல் என்பது எப்படிப் பொருந்தும்? ஆகவே விக்கிரகங்களான அவை வணக்கத்துக்குரிய இலாஹுகளேயல்ல. ஆகவே இந்தத் தலீலும் பொய்யென்றே முடிவதால் இவ்வாயத்தையும் காப்பதற்கு வழி கலிமாவுக்கு வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் என்று வலிந்துரை கொள்வதுதான் என்று நம்பினார்கள்.

**5ஆவது காரணம்**

مَا ٱتَّخَذَ ٱللَّهُ مِن وَلَدٍ وَمَا كَانَ مَعَهُۥ مِنْ إِلَٰهٍ ۚ إِذًا لَّذَهَبَ كُلُّ إِلَٰهٍۭ بِمَا خَلَقَ

وَلَعَلَا بَعْضُهُمْ عَلَىٰ بَعْضٍ ۚ سُبْحَٰنَ ٱللَّهِ عَمَّا يَصِفُونَ

23-91 *அவனுடன் யாதொரு இலாஹும் இருந்ததில்லை. அப்படி இருந்தால் ஒவ்வொரு இலாஹும் தாங்கள் சிருஷ்டித்த சிருஷ்டியைக்கொண்டு போய் இருப்பார்கள்.*

இந்த ஆயத்தும் கலிமாவுக்கு வலிந்துரைகொள்ளக் காரணமாய்த் தென்பட்டிருக்கிறது. ஏனென்றால் சிருஷ்டித்தல், கொண்டு போதல் ஆகிய இருதொழில்களும் உணர்வியல்புள்ள

சிருஷ்டிகளாலேயே முடியாமல் இருக்கும் போது தாதுவர்க்கங்களால் ஆக்கப்பட்ட இலாஹுகளால் முடியக்கூடிய ஓர் காரியமேயல்ல. ஆகவே அவை வணக்கத்துக்குரிய இலாஹுகளேயல்ல. ஆகவே இத்தலீலும் கலிமாவைப் பிழையாக்குவதால் தலீலைக் காப்பற்ற வேண்டுமே என்பதற்காக வணக்கத்துக்குரிய நாயன் என்று கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு வலிந்துரை கொண்டார்கள்.

மொத்தப்பொழிப்பு என்னவென்றால் கலிமாவை வலிந்துரை கொள்ளாமல் உள்ளபடியே விட்டுவிட்டால் எல்லாம் அல்லாஹ் தான் என்று விளக்குகிறது. ஆனால், குர்ஆனுடைய சில ஆயத்துக்கள் எல்லாம் அல்லாஹ்வேயல்ல என்று விளக்குவதுபோல் தென்படுகின்றன. அவற்றில் மேலே காட்டிய தலீல்கள் மிகப்பிரதானமானவையாகும். கலிமாவை எடுத்துக்கொண்டால் தலீல்களும், தலீல்களை எடுத்துக்கொண்டால் கலிமாவும் பொய்போல் பிழையாக,முரணாகத் தென்படுகின்றன. ஆகவே கலிமாவும் தலீல்களும் ஒத்துவரக்கூடியதாய் அமைத்துக்கொள்ளாவிடில் காரியம் பலிக்காது. குழப்பமாகவே முடியும் என்று கண்ட அவர்கள் அவர்களுடைய அறிவு ஒத்துக்கொள்ளக்கூடிய வகையில் கலிமாவுக்கு வலிந்துரை கொண்டிருக்கிறார்கள். அதாவது **குர்ஆனுடைய சில ஆயத்துக்கள் இவர்களுடைய அறிவில் மருட்சியை ஏற்படுத்தியிருப்பதால் குர்ஆன், ஒன்றுக்கு மற்றொன்று முரணாயிருப்பது போன்ற பல ஆயத்துக்களைக் கொண்டிருப்பதாய் நம்பினார்கள் என்பதுதான்.**

இவ்வித மருட்சியடைந்த மக்களுக்குச் சிறிது காலத்துக்கு முன் ஸஹாபாக்களுடைய காலத்திலேயே குர்ஆனுடைய வசனங்கள் ஒன்றுக்கொன்று முரணாய் இருப்பதாகச் சிலர் கண்டிருக்கிறார்கள் என்பது ஒரு சில ஹதீஸ்களால் தென்படுகிறது. ஸஹபாக்களுடைய காலத்திலேயே இப்படி மருட்சியிருந்திந்திருந்தால் பிற்காலத்தவர்கள் மருட்சியடையந்ததும் புரட்டியதும் ஆச்சரியமேயல்ல. புஹாரியில் ஓர் நீண்ட ஹதீஸ் காணப்படுகிறது. அதன் சாராம்சம் இங்கே தரப்படுகிறது.

**ஹதீஸின் சாரம்:**

***குர்ஆனில் சில இடங்களில் முன்னுக்குப் பின் முரண் இருப்பதாக நான் அறிகிறேன் என்று இப்னு அப்பாஸ் (றலி) அவர்களிடம் ஒருவர் கூறினார். அவை எவை? என்று அவர்கள் வினவினார்கள். அதற்கு அவர் 23:10 க்கு 37:50 முரணாகவும் 4:42க்கு 6–23 முரணாயும், 79:27,30க்கு 41: 9,11 முரணாயும், 48:14க்கு 48:7 முரணாயும் 4:58க்கு 123:10 முரணாயும் இப்படிப்பல ஆயத்துக்களை எடுத்துக்காட்டியிருக்கிறார். அதற்கு அப்பாஸ் (ரலி) அவர்கள் சரியான உண்மையான விளக்கங்களைக்காட்டி இறுதியாக, நீ நாசமாய்ப்போக, குர்ஆன் உமக்கு முன்னும் பின்னும் முரணாய்த் தோன்றாதிருக்குமாக, ஏனெனில் குர்ஆன் முழுக்கமுழுக்க இறைவனிடமிருந்து அருளப்பெற்றதேயாகும் என்று கூறினார்கள்.***

**அறிவிப்பாளர்: ஸஈதுப்னு ஜுபைர்(றலி)**
**ஆதாரம்: புஹாரி**

குர்ஆனில் ஒன்றுக்கொன்று மாறான எதுவுமே இல்லை என்றும், குர்ஆன் அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் முரணை நீர் காண்பீரென்றும் இறைவனே கூறுகிறான். மனிதர்களில் பெரும்பாலார் விளங்கியறியாமையாலும், கலிமாவின் உண்மைப்பொருளை ஏற்றுக்கொள்ளக்கூடிய தெளிவான அறிவு இல்லாமையாலும் தான் குர்ஆனுடைய வசனங்களை ஒன்றுக்கொன்று முரணாய்க் காணுகிறார்கள். கண்டு கலிமாவைப் புரட்டியிருக்கிறார்கள்.

وَمَا يَتَّبِعُ أَكْثَرُهُمْ إِلَّا ظَنًّا ۚ إِنَّ ٱلظَّنَّ لَا يُغْنِى مِنَ ٱلْحَقِّ شَيْـًٔا ۚ إِنَّ ٱللَّهَ عَلِيمٌۢ بِمَا يَفْعَلُونَ

10-36 *அவர்களில் பெரும்பாலார் வீண்சந்தேகத்தையேயன்றிப் பின்பற்றுவதில்லை. நிச்சயமாக வீண்சந்தேகம் உண்மையை அறிவதற்கு ஒரு சிறிதும் பயனளிக்காது. அல்லாஹ் அவர்கள் செய்பவைகளை நன்கறிந்தவனாகவே இருக்கிறான்.*

ஆகவே மேலே காட்டியதலீல்களில் கலிமாவின் உண்மைப் பொருளுக்கு மாறாய் தென்படுகிற சந்தேகங்களை உண்மையான பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ந்து எமது சந்தேகங்களை நாம் நீக்கிக்கொள்ளாவிட்டால் உண்மையான ஈமானை, தௌஹீதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாமல்தான் இருக்கும். ஆதலால் வேதத்தின் அடிப்படையான கலிமாவின் உண்மையைப் புரட்டாமல் உள்ளபடியே வைத்துக்கொண்டு தலீல்களில் ஏற்படுகிற சந்தேக விபரீதங்களை ஆராய்ந்து தெளிவு பெறவேண்டியவர்களாய் இருக்கிறோம். முன்கூறிய, கலிமாவைப் புரட்டுவதற்கு தென்பட்ட ஐந்து காரணங்களிலும் பிந்திய நாலு காரணங்களையும் முதலில் விளங்கிக் கொண்டால் முதலாவது காரணத்துக்குரிய விடை மனதில் இலகுவாக அமையும் ஆதலால் முதலில் இரண்டாவது காரணத்துக்குரிய சந்தேகத்தை நீக்கக்கூடிய விடையை இங்கே கூறுவோம்.

**2ஆவது காரணத்தை நீக்கக்கூடிய விடை:**

“லவ்கான உலாஇ ஆலிஹத்தன்” என்ற தலீலில் இலாஹு என்பதை “கைருல்லாஹி” என்ற விசேடணத்தால் குறிப்பிடப்படாமல் பொதுப்படையாய்க் கூறியிருப்பதால் ஏற்படுகிற சந்தேகத்தை நீக்கக்கூடிய பதில் என்னவென்றால் “லவ்கானபீஹிமா ஆலிஹத்தின் இல்லல்லாஹ்” என்பதில் கொண்டுவந்தது போல, எந்த எந்தத் தலீல்களில் கைருல்லாஹி என்று அர்த்தம் கொண்ட இல்லல்லாஹு என்னும் விசேடணத்தால் இலாஹுவைக் குறிப்பிடப்பட்டதோ அந்த இலாஹுவுடன் குறிப்பிடப்படாத பொதுவான இலாஹுவையும் பொருள் கொள்ளவேண்டும். அதாவது அல்லாஹ் அல்லாத இலாஹு என்று கைதிடப்படாமல் வந்திருக்கிற இலாஹுவுக்கும் அல்லாஹ் அல்லாத இலாஹு என்று பொருள்கொள்ள வேண்டும். இப்படிப் பொருள் கொண்டால் தலீல்களான ஆயத்துக்கள் பொய்யாய்ப் போகவேண்டியதுமில்லை, கலிமாவைப்புரட்ட வேண்டியதுமில்லை. இது அனுபவமுடைய ஒலிமார்களுக்கேயன்றி வஹ்முடைய மக்களுக்குத் தென்படாதுதான்.

இப்படிப் பொருள் கொள்வதை வலிந்துரையென்று எவரும் கூறமுடியாது. ஏனென்றால் குர்ஆனுடைய எந்த ஓர் வசனமும் முன்னுக்குப் பின் முரணானதேயல்ல என்பதை இறைவனே அறிவிக்கிறான். ஆகவே ஓர் வசனத்தில் அல்லாஹ் அல்லாத இலாஹு என்று கைதிடப்பட்டு வந்திருப்பதால் அதே அடிப்படையிலுள்ள மற்றும் ஆயத்துக்களும் இவ்விதமாகவே கைதிடப்பட்டு பொருள் கொள்வது வலிந்துரையாகாது. அப்படியானால் எல்லா ஆயத்துக்களுமே கைதிடப்படாமல் இறைவன் கூறிய காரணம்தான் என்ன என்று ஓர் சந்தேகம் பிறக்கலாம். குர்ஆன் என்பது ஈமான்தாரிகளின் ஈமானை உறுதிப்படுத்துவதற்கும் ஈமான்தாரிகள்போல் நடிக்கும் வேஷதாரிகளை வழிகேட்டிலேயே தள்ளிவிடுவதற்கும் ஓர் சாதனமாய் இருக்கிறது என்பதைக் குர்ஆனே எமக்கு விளக்கம் தருகிறது. நாம் குறிப்பிட்ட ஆயத்துக்களில் சில இதே நோக்கோடுதான் இறைவனால் கூறப்பட்டிருக்கலாம் என்பது தென்படுகிறது. ஏனென்றால் இவ்விதமான ஆயத்துக்கள்தான் பெரும்பாலான மக்களை வழிகேட்டிலும் குறிப்பிட்ட ஒரு சில மக்களை மட்டும் இறை அன்புக்குரிய நேர்வழியிலும் செலுத்தியிருக்கின்றன என்பது பிரத்தியட்சமான உண்மையாகும்.

يُضِلُّ بِهِۦ كَثِيرًا وَيَهْدِى بِهِۦ كَثِيرًا ۚ وَمَا يُضِلُّ بِهِۦٓ إِلَّا ٱلْفَٰسِقِينَ

2-26 *இதைக்கொண்டு அநேகரை வழிகெடும்படியும் செய்கிறான். இதைக்கொண்டு அநேகரை நேர்வழிபெறும்படியும் செய்கிறான். பாபிகளைத் தவிர இதைக்கொண்டு வழிகெடும்படி அவன் செய்யமாட்டான்.*

**3ஆவது காரணத்தை நீக்கக்கூடிய விடை:**

வானம் பூமியாகிய அவ்விரண்டின் கேட்டிற்கு அவற்றிலிருக்கிற இலாஹுகள் அல்லாஹ்வுக்கு வேறாய் இருப்பதே காரணமல்லாமல் ஒன்றையொன்று தடுத்தல் காரணமல்ல என்று எடுத்துக்கொண்டால் ஆயத்தும் பொய்யாகாது, கலிமாவையும் புரட்ட வேண்டியதில்லை. அதாவது அந்த இலாஹுகள் அல்லாஹ் அல்லாத தனித்தனி உஜூதுகளாய் இருந்தால்தான் வானம் பூமியாகிய இரண்டும் கேட்டையடையுமென்று எடுத்துக்கொண்டால், ஆயத்துப் பொய்யாகாது. கலிமாவைப் புரட்ட வேண்டியதுமில்லை. தௌஹீதும் நிலைப்படும். (தௌஹீதுடைய விஷயத்தில் இவ்விபரம் தரப்பட்டுள்ளது).

**4ஆவது காரணத்தை நீக்கக்கூடிய விடை:**

சிருஷ்டிகர்தாவைச் சிருஷ்டியின்வேறாய் கொள்வதன் போல் அந்தச் சிருஷ்டிகர்த்தா மும்கினாகிய இலாஹுகளில் ஒரு இலாஹாய் இருக்க வேண்டியதும் அவசியம் என்றான பிறகு சீவியம், நாட்டம், தத்துவம், பார்வை, கேள்வி, பேச்சு என்னும் சிபத்துக்கள்போல் சிருஷ்டிகளுக்கும் அதிலும் தாதுவர்க்கத்துக்கும் இச்சிபத்துக்கள் உண்டு என்று தரிப்பட்டதால் அவை அர்ஸையுடைய நாயன் பக்கம் போகவழியைத் தேடல் என்பது ஏற்படும். அதாவது அல்லாஹ்வுடைய உஜூதும் ஸிபத்துக்களுமேயன்றி இலாஹுகளுக்கும் தனியான உஜூதும் ஸிபத்துக்களுக்கும் இருந்தால்தான் அவனுடன் எதிர்த்துப் போரடப்போக முடியும் என்பதுதான். இதை விபரமாய்க் கூறினால் இலாஹுகள் அல்லாஹ் அல்லாத தனியான உஜூதுகளேயல்ல. இதை விளங்கிக்கொண்டால் தலீல் பொய்யாக வேண்டிய அவசியமேயில்லை. அனுபவமில்லாத வஹ்முடையோர் இப்படி விளங்கிக்கொள்ள முடியாதுதான்.

**5ஆவது காரணத்தை நீக்கக்கூடிய விடை:**

சிருஷ்டிகளில் நின்றும் ஓர் இலாஹான ஈஸா(அலை) அவர்களால் சிருஷ்டித்தொழில் நடைபெற்றிருப்பது உண்மை.

أَنِّىٓ أَخْلُقُ لَكُم مِّنَ ٱلطِّينِ كَهَيْـَٔةِ ٱلطَّيْرِ فَأَنفُخُ فِيهِ فَيَكُونُ طَيْرًۢا بِإِذْنِ ٱللَّهِ

3-49 *நான் உங்களுக்கு மண்ணில் நின்றும் பறவையின் கோலத்தில் ஒன்றைச் சிருஷ்டிப்பேன். பின்பு அதில் ஊதுவேன். அது அல்லாஹ்வுடைய உத்தரவு கொண்டு ஒரு பறவையாய் போகும்.*

என்று குர்ஆன் கூறுகிறது. இன்னும் இறந்தவர்களை உயிர்ப்பித்ததும் அவர்களால் நடைபெற்ற விஷயம்தான் என்பதும் நமக்குத் தெரிந்த ஓர் விஷயம்தான். இன்னும் மரிக்கச் செய்வதும் மரித்தவர்களை உயிர்ப்பிக்கச் செய்வதும் பிற்காலத்தில் “தஜ்ஜால்” என்பவனால் நடைபெறும் என்று ஸஹீஹுல் புஹாரியில் கூறப்பட்டிருக்கிறது. விரிவையஞ்சி இங்கே எழுதப்படவில்லை. தஜ்ஜாலும் சிருஷ்டிகளில் ஓர் இலாஹு ஆகும். இதனால் சிருஷ்டியாகிய இலாஹுவைக் கொண்டு சிருஷ்டி உண்டாவதும் கொண்டு போவதும் முடியும் என்றுதெரிகிறது. ஆகவே ஒவ்வோர் இலாஹும் தன் சிருஷ்டியைக் கொண்டு போவார் என்று இறைவன் கூறியவசனம் **நஸாராக்கள் பேரிலும் தஜ்ஜால் பேரிலுமே ஆகும். ஆகவே இவ்வாயத்து மற்றோர் பேரிலல்ல என்பதும் வெளிப்படையாகவே தென்படுகிறது.** ஏனென்றால் தங்கள் சிருஷ்டித்தேவர்களால் சிருஷ்டித்தொழில் வெளியானதாக மற்றவர்கள் எண்ணுவதேயில்லை.

மேற்கூறிய விபரப்படி இந்த நான்கு தலீல்களான ஆயத்துக்களிலும் ஏற்பட்ட சந்தேகங்கள் எப்போது நீங்கிவிட்டனவோ அப்போதே **கலிமாவுக்கு மவுஜுதுன் என்ற பயனிலை அமைக்காமலும் இலாஹுவை (முஸ்த்தஹக்கலில் இபாதா) வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் என்று மாற்றாமலும் விட்டால் கலிமா பொய்யாய்விடும் என்ற விபரீத புத்தியும் போய்விடும்.** ஆனால் கலிமா உணர்த்தும் பொருள் சாதாரண மனிதனுடைய வஹ்முக்கு முற்றும் மாறானது என்பது உண்மைதான். ஆயினும் பகுத்தறிவுக்கு அணுவேனும் விரோதமானதேயல்ல. வஹ்முக்குமாறாயும் (அறிவுக்கு) உண்மைக்கு நேராயும் இருந்ததை உணர்த்துவதற்காகத்தானேஇறைவன் றசூல்மாரை அனுப்பினான். மொத்தமான பொழிப்பு என்னவென்றால் உண்மையான சுத்தசத்தியமான தௌஹீதுக்கு மாற்றமான எந்த ஒரு சிறு வசனம் கூட குர்ஆன், ஹதீஸ்களில் கிடைக்கவே கிடையாது என்பதுதான். ஆகவே மாற்றிப்புரட்டியதெல்லாம், எல்லாமவனே என்பதை ஏற்றுக்கொள்ள முடியாமல் அல்லாஹ்வை வேறாகவும் சிருஷ்டியை வேறாகவும் கண்டுகொண்டிருந்த வஹ்மினால்தான். ஆனால் இந்த மூடத்தனமான வஹ்மினால் எவ்வளவோ கடும் முயற்சிசெய்து புரட்டியும் உண்மையை மூடிமறைக்க அவர்களால் முடியாமலும், சிற்சில ஆயத்துக்களைப் புரட்ட முடியாமலும்தான் போய்விட்டது உதாரணத்துக்கு,“ஹுவல்அவ்வலு” என்ற ஆயத்து ஒன்றே போதுமானது.

إِنَّهُمْ كَانُوٓا۟ إِذَا قِيلَ لَهُمْ لَآ إِلَٰهَ إِلَّا ٱللَّهُ يَسْتَكْبِرُونَ

وَيَقُولُونَ أَئِنَّا لَتَارِكُوٓا۟ ءَالِهَتِنَا لِشَاعِرٍ مَّجْنُونٍ

37-35,36 *அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்று அவர்களுக்குக் கூறப்பட்டால் நிச்சயமாக அவர்கள் கர்வம் கொண்டு என்னே! நாங்கள் பைத்தியம்கொண்ட ஒருகவிவாணருக்காக எங்களுடைய இலாஹுகளை மெய்யாகவே விட்டு விடுவோமா? என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.*

இவ்வளவு தெளிவான உண்மைகளைக் குர்ஆன் விளக்கிக்காட்டும் போதும் இதை நுட்பமான அறிவோடு விளங்கித் தெளிவு பெறமுடியாது பண்டிதர்கள் பட்டதாரிகள், எல்லாமவனே என்று விளங்கித்தெளிந்து அனுபவமடைந்த மகான்களைக் **காபீர்கள், தஜ்ஜால்கள் என்று தீர்ப்புக் கட்டுகிறார்கள் என்றால் அவர்களுடைய கல்வி பற்றி நாம் எதைதான் கூறலாம். இவர்களுடைய தீர்ப்பை, கட்சிக்காகக் கையாளும் வன்செயல் விளக்கம் என்றுதானே கூறலாம்.** இவ்வகையினர் எக்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று தீர்ப்புக்கட்டுவது குர்ஆனை ஏற்றுக்கொண்ட பகுத்தறிவின் கடமையாகும்.

சிருஷ்டி என்றால் என்ன? என்பதைச் சர்தூக்கி ஆராய அறிவுப்பாகுபாடு வேண்டும். ஆராய்ந்து உண்மையைக் காணும்போது அடையவேண்டிய பொருள் அல்லாஹ்வே என்பது தெரியவரும். உண்மைகளை அறியக்கூடிய உள்ளம் மனிதரில் மிகப்பெரும்பாலாருக்கு இருப்பதாகவே தெரியவில்லை. உணர்ச்சியடைவதும் உண்மையிடமிருந்து உண்மையைப் பெறுவதும் உள்ளமாகவே இருக்கிறது. நிச்சயமாக உள்ளமுடையவர்களாயிருந்து குர்ஆன் ஹதீஸ்களைச் சாட்சிகளாய் ஆதாரங்களாய்க் கொள்பவர்களுக்கு,“இதில் (குர்ஆனில்) நினைவூட்டுதல் மறைந்திருக்கிறது” என்று இறைவன் கூறுகிறான். “அகில்” அறிவுப்பாகுபாடு என்பதே தெளிவேற்படும்போது “கல்பு” உள்ளமாக மாற்றமடைகிறது. இந்தக் கல்பு விருத்தியடையும்போது. “பனா” உண்மையில் மறைந்த மனமாக மாறுகிறது. பனா விருத்தியடையும்போது “உஜுது” எனும் உண்மை நிறைந்த உள்ளமாக மாற்றமடைந்து விடுகிறது. இந்த நிலைமைக்குத்தான் “பகா” என்பது பெயராகும். இவ்விதமான படிப்படியான நிலைமைகள், உலகேதஞ்சம் என்றிருக்கும் கல்விமான்களுக்கு ஏற்படப்போவதே இல்லை. ஆகவே, இவ்வகையினர் உண்மைக்கும் பொய்க்குமிடையில் பேதம் காணமுடியாமல் இருப்பதும் அவர்களுடைய அறிவுக்கேற்றபடி சத்தியத்தைப் புரட்டுவதும் ஆச்சரியமான ஓர்விஷயமேயல்ல. இவர்களுடைய அறிவைக்கடந்த நல்லடியார்களை இவர்கள வழிகெட்டவர்களாய்க் கணிப்பதும் பட்டம் சூட்டுவதும் எப்படி ஆச்சரியமாகும்?

**8ஆவது கேள்வி**

لَقَدْ كَفَرَ الَّذِينَ قَالُوا إِنَّ اللَّهَ ثَالِثُ ثَلَاثَةٍ

5-73 *திடனாக அல்லாஹு'த்தஆலா மூவரில் மூன்றானாய் இருக்கிறான் என்று கூறியவர்கள் மெய்யாகவே காபீர் ஆனார்கள்.*

என்று குர்ஆனில் இறைவன் கூறுகிறானே! அப்படியானால் எல்லாவற்றையும் இறைவனே என்று கூறுபவன் ஏன் காபீராக மாட்டான்? என்றோர் கேள்வி பிறக்கலாம்.

**பதில்:**

مَا يَكُونُ مِن نَّجْوَىٰ ثَلَاثَةٍ إِلَّا هُوَ رَابِعُهُمْ وَلَا خَمْسَةٍ إِلَّا هُوَ سَادِسُهُمْ وَلَا

أَدْنَىٰ مِن ذَٰلِكَ وَلَا أَكْثَرَ إِلَّا هُوَ مَعَهُمْ أَيْنَ مَا كَانُوا

58-7 *மூவர் கூடி இரகசிப்பதில் அல்லாஹ் அவர்களில் நாலானாய் இருந்தேயன்றி, இன்னும் ஐவர்கூடி இரகசிப்பதில் அவன் ஆறானாய் இருந்தேயன்றி, இன்னும் மூவரிலும் குறைந்தும் ஐவரிலும் கூடியும் இரகசிப்பதில் அவன் அவர்களுடன் இருந்தேயன்றி இரகசிக்கிற இரகசியம் ஒன்றுமே இராது.*

கேள்வியில் இடம்பெற்ற ஆயத்தையும் பதிலில் இடம்பெற்ற ஆயத்தையும் நுட்பமாய் ஆராய்ந்தால் கேள்வியில் இடம்பெற்ற ஆயத்துக் குபிரைத் தெளிவுபடுத்துவதும் பதிலில் இடம்பெற்ற ஆயத்துத் தௌஹீதை விளக்குவதும் தென்படுகிறது. எப்படியென்றால் முந்தியது பிரித்தலும் வேறாக்குவதுமான கருத்தைக் கொடுக்கிறது. அதாவது மூவரில் (ஒருவனாய்) மூன்றானாய் இருக்கிறான் என்று கூறும்போது அந்த ஒருவன் தவிர **மற்ற இருவருமில்லை என்ற பொருளை விளக்குவதால் பிரித்தலும் வேறாய்க் காணலுமே குபிர் என்று இந்த ஆயத்துத் தெளிவாய் விளக்கம் தருகிறது.** பதிலில் இடம்பெற்ற ஆயத்தில் அவன் அவர்களோடு இருந்தே ஒழிய என்று சேர்த்தும் ஒன்றாக்கியும் உணாத்துவதால்,**சேர்ப்பதும் ஒன்றாக்கலுமே தௌஹீது என்று இந்த ஆயத்துத் தெளிவாய் விளக்கம் தருகிறது.** மேலும் 8:14 ஆம் ஆயத்தை நோட்டமிட்டுப்பார். இவ்வாயத்தில் யுத்தத்தில் கிடைத்த பொருளில் ஐந்திலொரு பாகம் அல்லாஹ்வுக்கென்று கூறப்பட்டுள்ளது. **பறக்கத்துக்காக என்று ஒரு சிலர் ஒரு சில தப்ஸீர்களில் விபரம் தருவது வஹ்மாகும்.** இந்த ஆயத்துக்களெல்லாம் கலிமாவின் விரிவுரைகளாய் அமைந்திருக்கின்றன. தூதரும், பந்துக்களும், அனாதைகளும், ஏழைகளும்,யாத்திரிகர்களும் அல்லாஹ்வை விட்டும் வேறானவர்களல்ல என்றும், எல்லாம் அவனாயிருப்பதால் **எல்லாப் பங்குகளும் அல்லாஹ்வுக்கே என்றும் இந்த ஆயத்து விளக்கம் தருகிறது.** நான் நோய்வாய்ப்பட்டேன் நீ என்னை வினவவில்லை. பசிக்கு உணவு கேட்டேன் நீ தரவில்லை என்பவைபோல் கூறப்பட்டுள்ள ஹதீஸ்களையும் இவ்விடத்தில் சிந்தனை செய்து தெளிவுபெறுக.

இதேபோல் குர்ஆனில் தரப்பட்டுள்ள மற்றும் ஆயத்துக்களையும் யூகித்துப்பார். குர்ஆன், ஹதீஸ்களில் பாவிக்கப்பட்டுள்ள வசனநடைகளில் எவையாய் இருப்பினும் அவை தௌஹீதுக்கு மாற்றமாய் இல்லவே இல்லை. ஆனால் ஒருசாரார் விளக்கமின்மையால் அவ்வசனங்கள் தௌஹீதுக்கு மாறாய் தென்படுவதாய்க் காணுகிறார்கள்,**"இபாரதுன்னஸ்","தலாலத்துன்னஸ்""இஸாரத்துன்னஸ்""இஹ்திலாவுன்னஸ்" ஆகிய பிரமாணங்களில் எதைக் கொண்டும் தௌஹீதுக்கு மாற்றமாய்க் குர்ஆன், ஹதீஸ்களில் எவ்விடத்திலும் எதுவுமே கூறப்படவில்லை.** ஏனென்றால் தௌஹீதை உறுதிப்படுத்துவதற்காகவே குர்ஆன், ஹதீஸ்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே தௌஹீதுக்கு மாற்றமாய் அவை எப்படி விளக்கம் தரமுடியும்? அப்படித் தௌஹீதுக்கு மாற்றாய் விளக்கம் தருவதாய்க் காண்பது எம்முடைய வஹ்மு என்னும் பேதபுத்தியேயாகும்.

## 9ஆவது கேள்வி

கலிமாவை விளங்கியறிந்தோ விளங்கியறியாமலோ ஒருவர் கலிமாவைக் கூறினால், அதாவது நாவினால் "லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர்றசூலுல்லாஹ்" என்று ஒருவர் கூறினால் நாம் அவரை ஓர் முஸ்லீமாக மூமினாக ஏற்றுக்கொள்ளமுடியுமா?

**பதில்:**

கலிமாவை விளங்கியறியாமல் நாவினால் மட்டும் கூறுவது பொருந்தாதெனினும் இவ்விஷயத்தில் சிலசட்ட நுட்பங்கள் தென்படுகின்றன. இந்தச் சட்ட நுட்பங்களின்படி,**எக்காரணத்தைக் கொண்டேனும் ஒருவர் நாவினால் கலிமாவைக் கூறுவாரேயானால் நாம் அவரைப் பொதுப்படையாய் முஸ்லிம் என்று ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.** கலிமாவை விளங்கியறிந்து அவ்வுண்மையில் நிலை பெற்றவர்தான் உண்மையான மூமின் என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். ஆயினும் கலிமாவை அப்படி விளங்கியறியாமல், கலிமாவோடு இணைக்கப்பட்டுள்ள **முஹம்மதுர்றசூலுல்லாஹ்**

**என்ற உபவாக்கியத்தையாவது விளங்கியறிந்து மனப்பூர்வமாய் ஒருவர் ஏற்றுக்கொண்டாலும் சட்டப்படி அந்த ஈமானே போதுமானதாகும்.** இந்த ஈமானை ஹுக்குமியான (சட்டப்படியுள்ள) ஈமான் என்று கூறப்படும். இந்த ஹுக்குமியான ஈமான்தாரி சிருஷ்டியையும் சிருஷ்டிகர்த்தாவையும் வெவ்வேறாய் நம்பியிருந்தாலும் சரியே, ஆனால் உண்மையின் அடிப்படையில் நோக்கினால் இந்த ஈமான் சட்ட அடிப்படையில் ஆகுமாக்கப்பட்டிருப்பதால் துன்யாவுடைய கருமங்களில் போதுமானதாய் இருந்தாலும் ஆகிறாவுடைய விஷயங்களில் **வெற்றியடையப் போதுமானதல்ல.** ஸறகுடைய சட்ட நுட்பங்களில் வஹ்முக்குச் சிற்சில சந்தேகங்கள் தென்பட்டாலும் பகுத்தறிவுக்கு நிச்சயமாக உண்மைகள் தென்படவே செய்கின்றன.

இஸ்லாத்தின் முதல்விதியாய் அமைந்த தௌஹீதுக் கலிமாவைக்கொண்டு ஈமான் கொள்வது வஹ்முக்கு விரோதமாய் இருந்தாலும் அறிவுக்கு விரோதமேயல்ல. இக்கலிமாவின் பொருள் வஹ்முக்கு ஒத்ததாய் இருந்திருந்தால் றசூல்மார்கள் வரவேண்டியதே இல்லையென்று நான் முன்பே கூறியுள்ளேன். ஏனென்றால் அல்லாஹ் வேறு சிருஷ்டி வேறு என்பதை எந்த மனிதனும் சிந்திக்காமலே ஒப்புக்கொள்வான். முஸ்ரீக்குகள் இறைவனை மறுத்ததே இல்லையென்றும், சிருஷ்டியையும் இறைவனையும் ஒன்றாய்க் காண்பதையே மறுத்தார்கள் என்றும் முன்பு விளக்கியிருக்கிறேன். ஆகவே வஹ்மு ஏற்றுக்கொள்ளாத ஓர் உண்மையை உணர்த்தவேதான் றசூல்மார்களை இறைவன் அனுப்பினான். ஆனால் இவ்விஷயம் கடினமே என்று தொிந்த இறைவன் ஊசியின் காதில் ஒட்டகை நுழைவதுபோல் கடினமான இவ்விஷயத்தை இலகுவாய் கல்பில் நுழைப்பதற்காகக் கலிமாவுடன் முஹம்மதுறசூலுல்லாஹ் என்ற உபவாக்கியம் ஒன்றையும் இணைத்து ஒன்றுசேர்த்துள்ளான்.

يُرِيدُ ٱللَّهُ أَن يُخَفِّفَ عَنكُمْ ۚ وَخُلِقَ ٱلْإِنسَـٰنُ ضَعِيفًا

4-28 *அல்லாஹ் உங்களுக்கு இலேசாக்கவே விரும்புகிறான். ஏனென்றால் மனிதன் பலவீனமாகவே சிருஷ்டிக்கப்பட்டுள்ளான்.*

என்று குர்ஆன் கூறுகிறது. ஆகவே ஒருவர் சிருஷ்டிவேறு, சிருஷ்டிகருத்தாவேறு என்று நம்பியிருந்தாலும் முஹம்மதுறசூலுல்லாஹ் என்பதை மட்டிலுமாவது உள்ளப்பரிசுத்தத்தோடு நம்பிவிடுவாரேயானால் அவரையிறியாமலே லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா உணர்த்தும் உண்மையான, எல்லாம் அவனே என்ற சுத்தசத்தியமான தௌஹீதை ஏற்றுக்கொண்டவராகிவிடுகிறார். அதாவது தொகுப்பை வகுத்துணராவிட்டாலும்கூடக் கலிமாவின் பொதுப்படையான தொகுப்பை ஏற்றுக்கொண்டவராகிவிடுகிறார். இவ்வளவு ஈமானாவது ஒருவருக்குக் கிடைத்து விட்டால் அவர் ஓர் மூமின், முஸ்லிம் என்பதற்கு ஆட்சேபனையே இல்லை. ஏனென்றால் வளரும் பயிருக்கொப்பான அந்த ஈமானை வளர்த்துப் பூரணமாக்கிக்கொள்ள முடியும். இதற்குப்பல ஆதாரங்கள் தென்படுகின்றன.

كَيْفَ يَهْدِى ٱللَّهُ قَوْمًا كَفَرُوا۟ بَعْدَ إِيمَـٰنِهِمْ وَشَهِدُوٓا۟ أَنَّ ٱلرَّسُولَ

حَقٌّ وَجَآءَهُمُ ٱلْبَيِّنَـٰتُ ۚ وَٱللَّهُ لَا يَهْدِى ٱلْقَوْمَ ٱلظَّـٰلِمِينَ ﴿٨٦﴾

3-86 *அல்லாஹ் ஒரு வகுப்பாரை நேரானவழியில் எவ்வாறு செலுத்துவான். அவர்களோ தங்களிடம் வந்த பல அத்தாட்சிகளைக்கொண்டு நிச்சயமாகத் தூதர் உண்மையானவர் எனச் சாட்சியம் கூறி விசுவாசித்ததன் பின்னரும் நிராகரிக்கின்றனர். அல்லாஹ் அக்கிரமக்காரஜனங்களைநேரான வழியில் செலுத்துவதில்லை.*

இந்த ஆயத்தில் தூதரை விசுவாசிப்பதே ஈமானின் ஆரம்ப நிலைக்குப் போதுமானதென்பதும், இப்படியாவது ஈமானை கொண்டுவிட்டால் நேர்வழியில் செலுத்தப்படுவார்கள் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. இன்னும் பல ஆயத்துக்கள் இருப்பினும் இது ஒன்றையே போதுமாக்குவோம். கலிமாவை நாவினால் கூறிய ஒருவரை ஓர் ஸஹாபி வெட்டி விட்டதனால் அந்த ஸஹாபியை நோக்கி வெட்டுப்பட்டவனுடைய கல்பை நீர் அளந்து பார்த்தீரோ! என்று ஒருமுறை றசூல்(ஸல்) அவர்கள் கடிந்து கூறியிருக்கிறார்கள். இன்னோர் சமயம் ஓர் அடிமைப்பெண்ணை நோக்கி அல்லாஹ் எங்கே இருக்கிறான் என்று றசூல்(ஸல்) வினவ அப்பெண் வானத்தில் இருக்கிறான் என்று விடை கூறினாள். றசூல்(ஸல்) அவர்கள் நான் யார்? என்று வினவ தாங்கள் அல்லாஹ்வுடைய றசூலாய் இருக்கிறீர்கள் என்று அப்பெண் விடை கூறினாள். **பிறகு றசூல்(ஸல்) அவர்கள் திடனாக அவள் ஓர் மூமினாய்த்தான் இருக்கிறாள் என்று கூறினார்கள்.** இவ்விதமான பல ஹதீஸ்கள் தென்படுகின்றன. இவற்றிலிருந்து எமக்குப் பலவிஷய விளக்கங்கள் தென்படுகின்றன. கலிமாவின் முற்பகுதியாகிய "லாஇலாஹ இல்லல்லலாஹ்"வில் கருதிய பொருளை உண்மையாக்குதல் என்ற ஈமான், தாங்கள் அல்லாஹ்வுடைய றசூலாய் இருக்கிறீர்கள் என்று அப்பெண் கூறியசொல்லில் மறைந்து அற்புத ஈமான் அவளுக்கும் உண்டாகிவிட்டது. ஆகையால்தான் அப்பெண்ணுக்கு அந்த ஈமானைப் போதுமாக்கினார்கள். **ஆகவே அவாம்களான சாதாரண மக்களுக்கு ஆரம்பத்தில் இந்த ஈமானே விதியாக்கப்பட்டிருக்கிறது (சட்டமாக்கப்பட்டிருக்கிறது) என்பதும் நாம் கூறுகிற ஈமான் ஆரம்ப நிலையிலுள்ள எல்லோர் பேரிலும் பர்ளு அல்ல என்பதும் தென்படுகிறது.** இது துன்யாவுடைய விஷயமாயும் சட்டசம்பந்தமானதாயும் இருக்கிறது.

அல்லாஹ் வானத்தில் இருக்கிறான் என்று அப்பெண் கூறிய சொல் எல்லாம் அவனே என்ற கொள்கைக்கு முற்றும் முரணாய் இருந்தும் அவளுடைய சொல்லைப் பாராட்டாமல், அவன் வானத்திலும் இலாஹாய் இருக்கிறான் என்ற வேதவசனத்தை ஓதிக்கொண்டு அச்சொல்லைப் பொருந்திக் கொண்டார்கள். ஏனென்றால் அவர்கள் உம்மத்துக்களின் ஈமானில் பேராவல் கொண்டவர்களாய் இருந்தார்கள். ஆகையால்தான் அல்லாஹ் வானத்திலும் இலாஹாய்ப் பூமியிலும் இலாஹாய் இருக்கிறான் என்ற வேதவசனத்தை ஓதி அவளுடைய ஈமானைப் பொருந்திக் கொண்டார்கள். ஆயினும் மனிதருடைய ஈமானில் நீர் பேராவல் கொண்டவராய் இருந்தாலும். **அவர்களில் அநேகர் மூமின்களாய் இருப்பதில்லை** என்று இறைவன் அறிவிக்கிறான். ஆகவே இவ்வித ஆயத்துக்களும் எமக்குச் சில விபரங்களை விளக்குகின்றன.

۞ قَالَتِ ٱلْأَعْرَابُ ءَامَنَّا ۖ قُل لَّمْ تُؤْمِنُوا۟ وَلَٰكِن قُولُوٓا۟ أَسْلَمْنَا وَلَمَّا
يَدْخُلِ ٱلْإِيمَٰنُ فِى قُلُوبِكُمْ ۖ وَإِن تُطِيعُوا۟ ٱللَّهَ وَرَسُولَهُۥ لَا يَلِتْكُم
مِّنْ أَعْمَٰلِكُمْ شَيْـًٔا ۚ إِنَّ ٱللَّهَ غَفُورٌ رَّحِيمٌ ﴿١٤﴾

49-14 *நாட்டுப் புறத்து அறபியரில் பலர் தாங்களும் (ஈமான்தாரிகள்) விசுவாசிகள் (மூமின்கள்) என்று கூறுகின்றனர். நீர்கூறும் நீங்கள் உங்களை மூமீன்கள் என்று கூறாதீர்கள், ஏனென்றால் ஈமான் (விசுவாசம்) உங்களுடைய இருதயங்களில் நுழையவே இல்லை,ஆயினும்முஸ்லீம்கள் (வழிப்பட்டவர்கள்) என நங்கள் கூறிக்கொள்ளுங்கள். எனினும் மெய்யாகவேஅல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு நடப்பீர்களாயின் உங்களுடைய நன்மைகளில் எதையும் அவன் உங்களுக்குக் குறைத்து விடமாட்டான். நிச்சயமாக அல்லாஹ் மிக்கமன்னிப்போனும் கிருபை உடையோனுமாக இருக்கிறான்.*

இவ்வாயத்தை நோக்கும் போது ஈமான்வேறு இஸ்லாம் வேறு என்றும் வேறு சில ஆயத்துக்களை நோக்கும்போது அவையிரண்டும் ஒன்றேயென்றும் தென்படுகின்றன. இன்ஷா அல்லாஹ் இவற்றின் உண்மைகளைப் பின்னால் விளங்கியறிவோம்.

۞ يَٰٓأَيُّهَا ٱلرَّسُولُ لَا يَحْزُنكَ ٱلَّذِينَ يُسَٰرِعُونَ فِى ٱلْكُفْرِ مِنَ ٱلَّذِينَ قَالُوٓا۟
ءَامَنَّا بِأَفْوَٰهِهِمْ وَلَمْ تُؤْمِن قُلُوبُهُمْ ۛ

5-41 *தூதரே சிலர் (குபிரின்பால்) நிராகரிப்பின்பால் விரைந்தோடுவது உமக்குக் கவலையைத் தரவேண்டாம். ஏனென்றால் அவர்கள் தங்கள் வாயினால் மட்டும் ஈமான் கொண்டோம் என்று கூறினார்களே தவிர அவர்களுடைய இருதயங்கள் (அதனை) ஒப்புக்கொள்வதில்லை.*

وَمَن لَّمْ يُؤْمِنۢ بِٱللَّهِ وَرَسُولِهِۦ فَإِنَّآ أَعْتَدْنَا لِلْكَٰفِرِينَ
سَعِيرًا

48-13 *எவன் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் உண்மையாகவே விசுவாசம் கொள்ளவில்லையோ நிச்சயமாக நாம் அத்தகைய (காபீருக்கு) நிராகரிப்போனுக்கு நரகத்தையே சித்தப்படுத்தி வைத்திருக்கிறோம்.*

இவைபோன்ற ஏனைய ஆயத்துக்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இவைகளில் மிகப்பல உண்மைகள் தென்படுகின்றன. சட்டப்படியுள்ள ஈமான் சாதாரண மனிதனுடைய உலக, சமூக வாழ்வுக்கு போதுமானதாய் இருப்பினும் உண்மை விபரமோ வேறாக இருக்கிறது. இன்ஷா அல்லாஹ் “இஸ்லாத்தின் நோக்கம் என்ன? என்ற தலைப்பில் தெளிவாய் விளங்கியறிவோம்.

وَمَآ أَكْثَرُ ٱلنَّاسِ وَلَوْ حَرَصْتَ بِمُؤْمِنِينَ

12-103 *நீர் எவ்வளவுதான் விரும்பியபோதிலும் மனிதர்களில் பெரும்பாலார் ஈமான் கொள்ளவே மாட்டார்கள்.*

إِنَّكَ لَا تَهْدِي مَنْ أَحْبَبْتَ وَلَٰكِنَّ ٱللَّهَ يَهْدِي

مَن يَشَآءُ ۚ وَهُوَ أَعْلَمُ بِٱلْمُهْتَدِينَ

28-56 *நிச்சயமாக நீர் விரும்பியவர்களை நேரானவழியில் செலுத்த உம்மால் முடியாது எனினும் தான்விரும்பியவர்களையே அல்லாஹ் நேரான வழியில் செலுத்துகிறான். நேரானவழியில் செல்லத்தகுதியுடையோர் யார் என்பதை அவனே நன்கு அறிவான்.*

لَعَلَّكَ بَٰخِعٌ نَّفْسَكَ أَلَّا يَكُونُوا۟ مُؤْمِنِينَ

26-3 *அவர்கள் ஈமான் கொள்ளாததன் காரணமாக நீர் தற்கொலை செய்துகொள்வீர் போலும்.*

இவ்விதமான ஆயத்துக்கள் றசூல்(ஸல்) அவர்கள் மக்களுடைய ஈமானில் பேராவல் கொண்டிருந்தார்களென்பதை விளக்கம் தருகின்றன. ஆகவே சட்ட அடிப்படையிலுள்ள ஈமானே போதும் என்பதற்காக கலிமாவை புரட்டவும் வலிந்துரை கொள்ளவும் வேண்டும் என்பதல்ல. அதே நிலையில் சட்டம் ஆமோதித்த ஈமானோடு நாம் நின்றுகொள்ள வேண்டும் என்பதும் பொருளல்ல. சட்டம் ஏன் அந்த அனுமதியை வழங்கியது என்பதை நாம் கண்டறிவோம்.

**10ஆவது கேள்வி:**

மேலே கூறிய விபரத்தின்படி சாதாரண மனிதனுடைய ஈமானையே சட்டம் போதுமானதாக்கியிருநதால் இவ்வளவு கஸ்டப்பட்டுக்கலிமாவை விளங்கியறிந்து ஈமான் கொள்ளவேண்டியதில்லையே?

**பதில்:**

நாவினால் கலிமாவைக் கூறியவர்களைச் சட்டம் ஈமான்தாரிகள் என்று ஏற்றுக்கொண்டிருந்தாலும் உண்மையாக விளங்கியறிந்து ஈமான் கொண்டவர்களோடு இவர்களை ஒப்பிட்டு நோக்கமுடியாது. ஏனென்றால் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஈமான் உண்மையானதுதான் என்றோ அதுவே போதுமானதென்றோ கொள்ளமுடியாது. ஒருவன் ஒரு கொலையைச் செய்து விடுகிறான். அவன் குற்றவாளிதானென்று நீதிபதியிடத்தில் நிரூபிக்கபடாவிட்டால் அவன் நிரபராதியென்றே கணிக்கப்படுகிறான். அதே போல ஒரு நிரபராதி குற்றவாளிதானென்று நீதிபதியிடத்தில் நிரூபிக்கப்பட்டால் அவன் தண்டிக்கப்படுகிறான்.நீதிபதி சாட்சியத்தைக்கொண்டு இந்தத் தீர்ப்பை வழங்கினாலும், நீதிபதியின் தீர்ப்பே உலகவிஷயத்தில் சரியானது என்றாலும், உண்மை பொய்யாகவோ பொய் உண்மையாகவோ மாறுவதில்லை. இதேபோல ஸறகுடைய சட்டம் ஓர் மனிதனை ஈமான்தாரியென்று தீர்ப்புக்கட்டினாலும் அத்தீர்ப்பு உலக, சமூகஅரசியல் விஷயங்களில் போதுமானதாக தென்பட்டாலும், அம்மனிதனுடைய உயர்பதவிக்குப் போதுமானதேயல்ல. இறைவழி சென்று தனது குறிக்கோளை அடைவதற்கு அது ஆரம்பமாய் அமைவதால், சட்டம் அதை அனுமதிக்கிறதேயன்றி அதே நிலையில் இருந்துகொள்ள வேண்டுமென்பது கருத்தல்ல. ஆகையால்தான் ஓர் விடயத்தைப்பற்றி மற்றவர்கள் தீர்ப்புத்தந்த போதிலும் அதைப்பற்றி உமது இருதயம் ஆராய்வுசெய்யவும் என்று றசூல்(ஸல்) அவர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

ஈமானின் ஆரம்பம் வளரும் குழந்தைக்கு ஒப்பாக இருக்கிறது. சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஈமான் படிப்படியாக வளர்ச்சியடைந்து பூரணநிலைமைக்கு வரவேண்டியதாய் இருக்கிறது. ஈமான் என்பது கொள்கை விளக்கமான சித்தாந்தமாய் (அறிவாய்) இருக்கிறது. **இந்த ஈமான் என்ற அறிவை வளர்ப்பதற்காக, உள்ளத்தில் உறுதிபெறச் செய்வதற்காகவே கடமைகள் தரப்பட்டிருக்கின்றன. செயல்கள் (அமல்கள்) உள்ளத்தின் நோக்கத்தை உறுதிப்படுத்துமென்பது உண்மை.** ஆகவே ஆரம்ப ஈமானுடைய ஒருவர் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டு வரும்போது காலக்கிரமத்தில் உண்மையான ஈமானைப் பெறக்கூடுமென்ற ஆழியநோக்கோடுதான் ஆரம்ப ஈமானை சட்டம் அனுமதிக்கிறது.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱدْخُلُوا۟ فِى ٱلسِّلْمِ كَآفَّةً وَلَا تَتَّبِعُوا۟

خُطُوَٰتِ ٱلشَّيْطَٰنِ ۚ إِنَّهُۥ لَكُمْ عَدُوٌّ مُّبِينٌ

2-208 *ஈமான் கொண்டவர்களே! நீங்கள் இஸ்லாத்தில் முற்றிலும் நுழைந்து விடுங்கள். தவிர ஷைத்தானின் அடிச்சுவட்டைப் பின்பற்றாதீர்கள். அவன் உங்களுக்கு பகிரங்கமான விரோதி.*

இந்த ஆயத்தில் ஆரம்ப ஈமானுடையவர்களைத்தான் இஸ்லாத்தில் முற்றிலும் நுழையும்படி இறைவன் கூறுகிறான். **இஸ்லாமென்பது (செயல்) அமலில் ஈடுபாடுகொள்வதேயாகும். ஈமான் என்பது கொள்கை விளக்கமாகும்.** ஆகவே நாவினால் கலிமாவை கூறிய ஒருவர் அந்தக் கொள்கை

விளக்கத்தில் நிலை பெறுவதற்காகவே கடமைகளில் ஈடுபடும்படி இறைவன் கூறுகிறான். ஆகவே சட்டத்தின் நோக்கம் ஈமானை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்பதே. அப்படியில்லாவிட்டால் கலிமாவை நாவினால் கூறுவது முதலாவது பர்ளு என்றும் விளங்கியறிவது இரண்டாவது பர்ளு என்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கமாட்டாது.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ ءَامِنُواْ بِٱللَّهِ وَرَسُولِهِۦ وَٱلْكِتَٰبِ ٱلَّذِى نَزَّلَ عَلَىٰ
رَسُولِهِۦ وَٱلْكِتَٰبِ ٱلَّذِىٓ أَنزَلَ مِن قَبْلُ ۚ وَمَن يَكْفُرْ بِٱللَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ
وَكُتُبِهِۦ وَرُسُلِهِۦ وَٱلْيَوْمِ ٱلْءَاخِرِ فَقَدْ ضَلَّ ضَلَٰلًۢا بَعِيدًا

4-136 *ஈமான்கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அவன் தன்னுடைய தூதர்மீது அருளியதையும் இதற்கு முன்னர் அவன் அருளிய வேதங்களையும் ஈமான் கொள்ளுங்கள். எவன் அல்லாஹ்வையும் அவனுடைய மலக்குகளையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் நிராகரிக்கிறானோ அவன் நிச்சயமாக வெகுதூரமான வழி கேட்டிலேயே இருக்கிறான்.*

இந்த ஆயத்தை நுட்பமாக சிந்தனை செய்துபார். ஈமான்கொண்ட மூமீன்களே! என்று கூப்பிட்டுத்தான் மேலும் ஈமான் கொள்ளும்படி இறைவன் அறிவுறுத்துகிறான். சட்டப்படியுள்ள ஈமானே போதுமென்றிருந்தால் **மேலும் ஈமான்கொள்ளும்படி இறைவன் கூறுவதன் அவசியம்தான் என்ன?** நாவினால் கலிமாவைக் கூறுபவர்களை சட்டம் அனுமதிப்பது இஸ்லாமென்ற கட்சியில் அம்மனிதர்களை அங்கத்தவர்களாய்ச் சேர்க்கவேண்டும் என்பதற்காகவேயல்லாமல் கலிமாவைக் நாவினால் கூறும் அளவொடு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. ஆகவே சட்டப்படியுள்ள ஈமானே போதுமென்று நாம் பிடிவாதம் கொள்வதனால் எம்மையும் எமது சமூகத்தையும் நாம் ஏமாற்றிக்கொள்கிறோம் என்பதுதான் கருத்து. இந்தப் பிடிவாதத்தினால் எம்முடைய உயர்பதவியை பெறவே முடியாது என்பது உண்மை.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ وَٱبْتَغُوٓاْ إِلَيْهِ ٱلْوَسِيلَةَ وَجَٰهِدُواْ فِى
سَبِيلِهِۦ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

5:35 *ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்துகொண்டு அவனிடம் செல்வதற்குரிய வழியைத் தேடிக்கொள்ளுங்கள். அவனுடைய பாதையில் (பீஸபீல்) பெருமுயற்சி எடுத்துக்கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடையலாம்.*

இந்த ஆயத்தில் ஈமான்கொண்டவர்களை நோக்கி அல்லாஹ்வுடைய பாதையில் செல்வதற்குரிய வழியைத்தேடும்படி இறைவன் கூறுகிறான். ஆகவே இதில் கூறப்பட்ட விசுவாசிகள் ஆரம்பநிலையில் உள்ளவர்கள் என்பதும் அல்லாஹ்வுடைய பாதையில் செல்வதற்குப் பெருமுயற்சி எடுக்க வேண்டியவர்கள் என்பதும் வெளிப்படையாகவே தென்படுகிறது. ஆயினும் நாம் அமல்களில் அப்படியொன்றும் பெருமுயற்சி செய்வதாகத் தெரியவில்லை. ஏனென்றால் இதை நாம் ஆராயவில்லை. விஷயம் அப்படியல்ல.**அமல் என்பது மன ஓர்மையை (இக்லாஸ்) ஏகாக்கிரசித்தத்தை ஏற்படுத்துவதற்காகவே தரப்பட்டுள்ளது.** இந்த ஏகாக்கிரசித்தநிலை தௌஹீதில் நிலைபெறுவதற்காகவே அமைக்கப்பட்டிருக்கிறது. தௌஹீதில் நிலைபெறுவதோ ஈமானில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஈமானோ, கலிமாவை விளங்கியறிவதில் தங்கியிருக்கிறது. இதை நுட்பமாய் ஆராய்ந்தால் வாளினால் பீஸபீல் செய்து கொள்வதைவிட இது எத்தனையோ மடங்கு கஷ்டமான பீஸபீலேயாகும்.

ஆனால் உண்மைக்கு மாறான செய்தியை ஆரம்பத்தில் உள்ளத்தில் பதித்துக்கொண்ட மக்கள் பூரண ஈமானை எதிர்பார்ப்பது முடியாத ஓர் காரியம் தான். எம்மில் மிக அநேகர் இன்று இருளில் தவிப்பதன் காரணம் இதுதான். கலிமாவின் உண்மை மறைக்கப்படாமல் குழந்தைப்பருவத்தில் ஊட்டப்பட்டிருந்தால், அந்த வயதின் அறிவு அதை அப்போது ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தாலும் அக்குழந்தை வயது வந்த பிறகு என்றோ ஓர் நாள் உண்மையான பூரண ஈமானைப்பெற்றே ஆகும் என்பது நிச்சயமே. லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை மக்கள் நாவினால் கூறுகிற வரையில் வாள் கொண்டு யுத்தம் செய்யக்கற்பிக்கப்பட்டேன் என்றும் அப்படியவர்கள் கூறுவார்களேயானால் அவர்களுடைய உடல், பொருள், ஆவி என்னை விட்டும் காக்கப்படும் என்றும் றசூல்(ஸல்) அவர்கள் கூறியதுபோல, நாவினால் கலிமாவைக் கூறுவதினால் சட்டம் ஏற்றுக்கொள்ளும் ஈமான் துன்யாவில் உடல்பொருள் ஆவியைக் காப்பாற்றலாம். சமூக அந்தஸ்த்தைத் தரலாம். ஆனால் ஆகிறாவில் பிரயோசனம் பெறவோ சாந்தியடையவோ அந்த ஈமான் உதவாது என்பது உண்மையே. சாதாரண மனிதன் கலிமாவை ஒப்புக் கொள்ளாவிடிலும் றசூலையாவது மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டுவிட்டால் அவர் என்றோ ஒரு நாள் பூரண ஈமானைப் பெறுவார் என்பது நிச்சயம். ஏனென்றால் றசூலை உண்மையாய் ஒப்புக்கொள்வதற்கு அவர்களுடைய பூரணவிபரம் தெளிவாய் அறியப்படவேண்டும். அப்படி அறியும்போது பூரண ஈமான் கிட்டவே செய்யும்.

ஹதீஸ்: *நாயகமே! எவர் தங்களுடைய ஸபாஅத்துக்குப் பாத்திரமானவர் என்று நான் வினவினேன். அதற்கு அவர்கள் என்னுடைய ஹதீஸ்களில் உமக்குள்ள ஆர்வத்தைக்கண்ட நான் உமக்கு முன் எவரும் இதைப்பற்றி வினவமாட்டார்கள் என்று எண்ணினேன். என்று கூறி எவர்கலப்பற்ற மனதோடு "லா இலாஹ இல்லல்லாஹ்" என்று கூறுகிறாரோ அவரே மறுமையில்என் ஸபாஅத்துக்குப் பாத்திரமானவர் என்று கூறினார்கள்.*

**அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம்: புஹாரீ.**

இந்த ஹதீஸுக்கு நேர்மாற்றமான வேறு ஓர் ஹதீஸும் தென்படுகிறது. இவற்றை ஆராய்ந்தபோது அவை ஒன்றுக்கொன்று விரோதமானவையல்ல என்பது தென்படுகிறது. விரிவைப்பயந்து இங்கே எழுதவில்லை.

உண்மையான, விளங்கித்தெளிவுபெற்ற ஈமான்தாரிகளின் நிலைமை வர்ணிப்புக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். இந்த ஈமான் செயலற்றது. தனித்தன்மையுடையது. இதைப் பின்பு அறிவோம். கலிமாவை விளங்கியறிந்து தெளிவு பெற்று ஒருவர் எப்போது ஈமான் கொண்டாரோ அப்போதே அவர் நல்லடியார்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிடுகிறார். **கலிமாவின் விபரமான தௌஹுதுதான் துன்யாவில் ஸிறாத்து என்பதை அவர் அறிந்துகொள்கிறார்.** இவருடைய பொதுவான விபரம் என்னவென்றால் இயற்கை மரணத்தின் முன்பே ஓர் மவுத்தை **(மவுத்துக்கபுல்அன்தமவுத்)** இவர் அனுபவித்துவிடுகிறார். இவர் இந்த மவுத்தை அனுபவிப்பதனால் தன்னை ஆகிறாவில் இருப்பதாகவே காண்கிறார். இவர்களில் அநேகபடித்தரங்கள் இருக்கின்றன. இவர்கள்தான் விழிப்பைப் பெற்றுக்கொண்ட, மறதி நீங்கிய நல்லடியார்கள். இவர்களுடைய கல்பின்திரைகள் படிப்படியாய் நீக்கப்படுகின்றன. சுவர்க்கபோகத்தைக்கூட உதறித்தள்ளிவிட்டு இறைவனுடைய லிகாவிலேயே பூரண ஐக்கியமாகிறவர்களும் இவர்களிலுண்டு. சட்டப்படியுள்ள ஈமானை இவர்களுடைய ஈமானோடு ஒப்பிடுவதே தகாது, மனிதன் இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட அமானிதம் என்பது கலிமாவும் அதன் விபரமான தௌஹீதுமேயாகும். சுருக்கமாய்க் கூறினால் அறிவுதான் அமானிதம் என்பது.

إِنَّا عَرَضْنَا ٱلْأَمَانَةَ عَلَى ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضِ وَٱلْجِبَالِ فَأَبَيْنَ أَن يَحْمِلْنَهَا
وَأَشْفَقْنَ مِنْهَا وَحَمَلَهَا ٱلْإِنسَٰنُ ۖ إِنَّهُۥ كَانَ ظَلُومًا جَهُولًا

33-72 *நிச்சயமாக (நம்முடைய) அமானத்தைச் சுமந்து கொள்வீர்களா? என்று நாம் வானங்கள் பூமிகளிடத்தில் வினவினோம். அதற்கு அவை அதைப் பற்றிப்பயந்து அதனைச் சுமந்து கொள்ளாது விலகிவிட்டன. அத்தகைய பொறுப்பைத்தான் மனிதன் சுமந்துகொண்டான். அவன் அறியாமையால் தனக்குத்தானே தீங்கிழைத்துக்கொண்டான்.*

ஈமான் பூரண வலிமைபெற்று மனோஉறுதி ஸ்திரமாகிவிடுபவர்கள், இறைவனாலே அறிவிக்கப்பட்டுள்ள கியாமத்தின் சகல காரியங்களையும் அகக்கண்கொண்டு பார்க்கிறார்கள். அவர்கள் நரக சுவர்க்கத்தைக் காண்பதும்**"சூர்"** ஊதலின் சப்தத்தைக் கேட்பதும் அந்தச் **"சூர்"** ஊதும் மலக்கைக்காண்பதும் சாதாரணமான விஷயம்தான். சிருஷ்டிகளான சகல வஸ்த்துக்களின் உண்மையையும் அவற்றின் மாறுதலையும் அவற்றின் முடிவையும் கண்டறியும் இந்த மகான்கள் சிருஷ்டிகளைப் பார்க்கும்போது அவற்றை நடைப்பிணங்களாகவே காண்கிறார்கள். சிருஷ்டிகளின் குறைவுகளைக்காணும் இவர்களில் சிலர் சிருஷ்டிகளை விட்டுநீங்கிவிடுகிறார்கள். மனிதர்களின் குறைவை உணரும்போதுஅம்மனிதர்களைவிட்டும் நீங்கிவிடுகிறார்கள். இவர்களில் ஒரு சிலர்காடு, மலை வனாந்தரங்களுக்கேகி, மலக்குகள் ஜின்களின் சகாவாசத்தில் ஆகிவிடுகிறார்கள். மலக்குகளும் ஜின்களும் அவர்களுடைய உடற்தோற்றத்தை மாற்றிக்கொண்டு சந்நியாசிகள் போலவும் பிரயாணிகள் போலவும் அந்த மகான்களுடன் உறவாட முற்படுகிறார்கள். ஆகவே இவ்வகையினர் மேலும்மேலும் தாங்கள் அறியாத எத்தனை எத்தனையோ விஷயங்களை அறிந்து கொண்டே தான் இருக்கிறார்கள், இன்னும் சிலர் எந்த ஓர் சிருஷ்டிப் பொருளையும் பார்க்க சகிக்காதவர்களாகி விடுகிறார்கள். இவர்களுடைய மனம் குழப்பமுற்றதாயும் அறிவிழந்துபோனதாயும் நிம்மதியற்றதாயும் இருக்கும். இந்த நிலைமையில் மூழ்கியிருக்கும் போது கருணையின்கரம் அவருடைய அகமியத்தில் படவும் ஸ்திரம் ஏற்பட்டுவிடுகிறது. அவருக்கு தெய்வ சமீபத்தின் நறுமணம் கிடைத்துவிடுவதால் பிரக்ஞை ஏற்பட்டுவிடுகிறது. கலப்பற்ற உண்மையிலும் ஞானத்திலும் கருணையிலும் சீர்பெற்றுவிடும்போது ஸ்திரமான ஓர் நிலையில் நிறுத்தப்பட்டவராகிவிடுகிறார். அப்போது சிருஷ்டிகளைக் கண்டு சகிக்கும் ஆற்றலும் வந்துவிடுகிறது. சிருஷ்டிகளின் சுமையைச் சிரமமின்றித் தாங்கும் சக்தியை இவர் பெற்றுவிடுகிறார். ஆகவே இவர் மீண்டும் மனிதர்களுடன் கலந்துறவாடி அவர்களின் சீர்திருத்தத்துக்கான முழுப் பொறுப்பையும் ஏற்று கொள்ளுகிறார். இவரைத்தான் பெரும்பாலும் "குத்பு" என்று நாம் கூறுகிறோம். இந்த மகான்களின் நிலைமை சட்டபடியுள்ள சாதாரண நம்பிக்கையால், நாவினால் கலிமாவைக் கூறுகிற அளவோடு நின்று கொள்வதால் ஏற்படபோவதே இல்லை. ஆகவே இம் மகான்களின் ஈமானை சாதாரண மனிதனுடைய ஈமானோடு ஒப்பிட்டு நோக்குவது மிகப்பெரும் தவறாகும்.

**11ஆவது கேள்வி:**

நங்கள் விபரித்த தௌஹீதுடைய விளக்கம் உண்மையே ஆனாலும் கூட, சாதாரண மனிதர்களிடையே இவ்வுண்மையை கூறவே கூடாதுபோல் தெரிகிறது. ஏனென்றால் இவ்வுண்மையை உணர முடியாத பாமரமக்கள் வீண் சந்தேகங்களில் மூழ்கி மார்க்கவிரோதமான செயல்களில் ஈடுபடக்கூடும். தொழுகை, நோன்புபோன்ற கட்டாயக்கடமைகளைக்கூடவிட்டுவிடுவார்கள். ஆகவே நீங்கள் கூறுவது உண்மைதான் என்றாலும் இதை பாமர மக்களிடையே வெளிப்படுத்தவேகூடாது போல் தென்படுகிறது. இதை மறைக்காமல் உள்ளபடியே வெளிப்படுத்த முற்பட்டால் இருக்கிற ஈமானையும் மக்கள் விட்டுவிடுவார்கள் அல்லவா?

**(1)**

**பதில்:**

**இ**வ்விதமான மருண்டபுத்தியுடையஒரு சிலர்தான் இஸ்லாத்தின் உயிரான கலிமாவின் உண்மையை குழிதோண்டிப்புதைத்தவர்கள். இவ்வகையினர்தான் குர்ஆன், ஹதீஸ்களைவிட தங்கள் அறிவை பெரிதாகக் கணித்து குர்ஆன், ஹதீஸ்களில் சில வசனங்களுக்கு வலிந்துரை கொண்டவர்கள். இவர்கள் மக்களுக்கு நன்மை செய்வதற்காகவே இப்படிச் செய்வதாகவும் நம்பினார்கள். இவர்களுடைய மூடத்தனமான அறிவில் அல்லாஹ்வையும், றசூலையும் அறிவில்லாத மூடர்களாகவும், தங்களை மிகப்பெரிய அறிவு மேதைகளாகவும் கண்டார்கள். சாதாரண அறிவு விளக்கமில்லாத பாமர மக்களின் பாதுகாப்பிற்காக அதுவும் தற்காலிக பாதுகாப்பிற்காக நிலையான, அவசியமான உண்மைகளை மூடிமறைப்பவர்கள், புரட்டுபவர்கள், உருக்குலைப்பவர்கள் **உண்மையை உணந்தவர்களுமல்ல, உண்மையை உணர்த்தத் தகுதியுடையவர்களுமல்ல.** உண்மையை மறைப்பதற்காக அவ்வுண்மையை நாம் விலங்கிட்டால், அவ்வுண்மை மனிதவர்க்கம் அத்தனைக்கும் விலங்கிடும் என்பது நிச்சியமான உண்மையாகும். பிறமனிதருடைய நன்மைக்காகப் பாடுபடுகிறோம். பிறமனிதர்கள் வழிசறுகிவிடாமல் காப்பாற்றுகிறோம் என்று கூறுகிற இவர்கள்தான,**உண்மையாகவே மனிதகுலத்தைத் தவறான பாதையில் இட்டுச்சென்றவர்கள், இட்டுச்செல்பவர்கள்.** இவர்கள் மனிதகுலத்துக்கே மிகமிக அபாயகரமானவர்கள் என்பதை நாம் உணரவேண்டும். தப்புத்தவறான மூடத்தனமான தீவிர கட்டுப்பாடுகள். மனிதனை அறியாமையிலும் தவறான பாதையிலும் இட்டுச்செல்லும் என்பது நிச்சயம்.

**சகோதரனே!**

அல்லாஹ்வுடையவும் றசூல்மார்களுடையவும் அறிவைப்பற்றி நீ என்னதான் நினைக்கிறாய்? சர்வவல்லமையும், நிரப்பமான அறிவுமுடைய முற்றறிஞனான அந்த இறைவன் தான் உம்மிகளாய், மூடர்களாய் இருந்த அறிவு குறைந்த பாமர மக்களிடையே, ஏறக்குறைய 1,24,000 நபிமார்களையும் அவர்களில் விஷேட திறமையுள்ள றசூல்மார்களையும் அனுப்பிக் கலிமாவைக் கொண்டு பகிரங்கமாய் தௌஹீதை விளக்கும்படி ஏவினான். முடியாதபோது கறாமாத் முஹ்ஜிஸாத்துக்களைக்கொண்டு உதவிசெய்தான். வேதவசனங்களை அருளினான். இறுதியாக வாள்கொண்டு யுத்தம் செய்து தௌஹீதை நிலைப்படுத்தும்படி ஏவினான். எம்முடைய றசூல்(ஸல்) அவர்களும் அதற்கு முந்திய நபிமார்கள். றசூல்மார்களும் மூடமக்களான பாமர மக்களிடையேதான் கலிமாவைக்கொண்டு தௌஹீதை வெளிப்படுத்தினார்கள். றசூல்(ஸல்) அவர்கள் கலிமாவைக் கூறக்கேட்ட மக்கள் கலிமாவின் பொருளைத் தெளிவாய் அறிந்தார்கள். ஆச்சரியமடைந்தார்கள்.

أَجَعَلَ ٱلْـَٔالِهَةَ إِلَـٰهًا وَٰحِدًا ۖ إِنَّ هَـٰذَا لَشَىْءٌ عُجَابٌ

38-5 *என்னே! இவர் எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹுதான் என்று ஆக்கிவிட்டாரா? மெய்யாகவே இது ஓர் ஆச்சரியமான விஷயம்தான்.*

இவ்விதமாக ஆச்சரியமடைந்த மக்களிடையேதான் றசூல்(ஸல்) அவர்கள் கலிமாவை ஓதிக்காட்டி தௌஹீதை முதலில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அந்தப் பாமரமக்கள் மேலும் வழிகெட்டுவிடுவார்கள் என்றோ கடினமான துர்ச்செயலில் ஈடுபடுவார்களென்றோ அல்லாஹ்வும், றசூலும் கருதவில்லை. கலிமாவின் விபரமான தௌஹீதைக் கொண்டுதான் அந்த மூடமக்களை நேர்வழியிலாக்க வேண்டும் என்பதே இறைவனின் ஆழியநோக்காகும். இந்த ஆழிய நோக்கத்துக்காகவே யுத்தம் செய்தேனும் உண்மையை உணர்த்தவேண்டுமென்று இறைவன் ஏவினான். றசூல்(ஸல்) அவர்கள் யுத்தமே செய்தார்கள். பொதுசன அமைதிக்காக அல்லது பாதுகாப்பிற்காக உண்மையை மறைக்கலாம் அல்லது புரட்டலாம் அல்லது தடைப்படுத்தலாம் என்று ஒரு சாரார் கூறுவது உண்மையானால் றசூல்(ஸல்) அவர்கள் உண்மையை உறுதிப்படுத்துவதற்காகவே பொதுசன அமைதியைக் கெடுத்தார்கள், பெரும் பாரதூரமான யுத்தமே செய்திருக்கிறார்கள் ஏன் செய்தார்கள்? என்பதை பகுத்தறிவுடைய மனிதன் சிந்தனை செய்தே ஆகவேண்டும். இவ்விதமாய்ப் பொதுசன அமைதியைக் கெடுத்தேனும் உண்மையை உணர்த்தும் உரிமை றசூல்மார்கள் நபிமார்களுக்கு மட்டும்தான் என்று ஏமாறவேண்டாம். அவ்வுரிமையை வேறு சிலருக்கும் இறைவன் அழித்தேயிருக்கிறான். இதை வேறிடத்தில் கவனிப்போம்.

அதாவது தௌஹீதை ஏற்றுக்கொள்ளாத மனிதன் வாழத்தகுதியற்றவனாய் அல்லது வாழத்தேவையில்லாதவனாய் இருப்பதனால் அவனை ஒழித்துக்கட்ட வேண்டுமென்பதற்காகவோ அல்லது பயமுறுத்தியேனும் உண்மையை உணர்த்த வேண்டும் என்பதற்காகவேதான் இறைவன் யுத்தமே செய்யும்படி ஏவியிருக்கிறான். ஆகவே பாமர மக்களிடையே தௌஹீதை வெளிப்படுத்தினால் வழிகெட்டுவிடுவார்கள் என்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது? நேரானபாதையில் உள்ளவன்தான் வழிசறுக்கி கெட்டபாதையில் போக முடியும். **தவறான பாதையில் இருப்பவன் வழிசறுக்கினான் என்றால் நேரானபாதையை அடைந்தான்** என்பதுதானே பொருள். மூடமக்களிடையே தௌஹீதை வெளிப்படுத்துவது கூடாது என்றிருந்தால் இத்தனை நபிமாரும் வேதங்களும் கறாமாத்து, முஹ்ஜிஸாத்துக்களும் எதற்காக? பாமரமக்களிடையே தௌஹீதை வெளிப்படுத்தக்கூடாது என்று நம்புபவர்கள் தங்களை சிறந்த அறிஞர்களாகவும் அல்லாஹ்வையும் றசூலையும் இரத்தவெறிபிடித்த மூடர்களாவும் கருதினார்கள் போலும். **இந்த சீர்திருத்தவாதிகளின் அறிவைப்பற்றி நாம் எதைத்தான் கூறலாம்.**

றசூல்மார்களினால் உபதேசிக்கப்பட்ட கலிமாவை விளங்கியறிந்து உண்மைக கொண்ட மூடமக்களில் மிகப்பெரும்பாலார் பெரும் பெரும் அறிவுமேதைகளாக, ஒலிமார்களாக வாழ்ந்தார்கள் என்பதை சரித்திரம் எமக்கு எடுத்துக்காட்டுகிறது. உதாரணமாக, உமரே பாரூக்(றலி), காலீத் இப்னு வலீத் போன்ற எத்தனையோ மேதைகளை நாம் கூறலாம். இவர்களில் பெரும்பாலார் கலிமாவின் விபரத்தை ஒப்புக்கொள்வதற்குமுன் மூடர்களாயும், முரடர்களாயும் வாழ்ந்தவர்கள்தான். அதிலும் உமரே பாரூக்(றலி), காலீத் இப்னு வலீத்(றலி)போன்ற சிலர் தௌஹீதை வெளிப்படுத்திய அதே றசூலை வாளின் வலிமையினால்ஒழித்துக்கட்டிவிட (வெட்டிக்கொலைசெய்ய) துடித்துக்கொண்டு முன்னேறிய மூடர்களாய், முரடர்களாய் இருந்தவர்கள்தான். இவ்வளவு கொடிய அரக்க குணம்கொண்டிருந்த மூடர்கள் பின்பு நீதிமான்களாக, அறிவு மேதைகளாக, ஒலிமார்களாக ஏன் மாற்றமடைந்தார்கள்? கலிமா விளக்கிய உண்மையை தெளிவாய் விளங்கியறிந்து தௌஹீதில் நிலைப்பெற்றதனால்தான். ஆகையால்தான் அந்தப் பாமரமக்களான உம்மிகளிடையே கலிமாவைக்கூறி தௌஹீதை விளக்கும்படி இறைவன் ஏவினான். **ஆகவேஅந்த முற்றறிஞனான இறைவனின் ஏவலில் பிழை கண்டு, மூடர்களிடையே தௌஹீதை வெளிப்படுத்தக்கூடாது என்று நாம் கூறுவதனால் எம்முடைய அறிவு அறிவுதானா? என்பதை யூகித்துப்பார்.**

**சகோதரனே!**

மூடமக்களிடையே தௌஹீதை வெளிப்படுத்தியதனால்தான் பெரும்பெரும் மேதைகள், நல்லறிஞர்கள் தோன்றினார்கள் என்பதைச் சுமார் 1400 வருடங்களின் முன்னே தெரிந்திருந்தும் அவ்வுண்மை இதுவரையிலும் எம் அறிவில் இடம்பெறவில்லையென்றால் எம் அறிவைப்பற்றி நாம் ஆச்சரியப்படவேண்டாமா? **ஒருவரையொருவர் எவ்வித ஆதாரங்களுமே இல்லாமல் கண்முடித்தனமாகப் பின்பற்றிய சில பின்பற்றல்வாதிகள் பாமரமக்களிடையே தௌஹீதை வெளிப்படுத்தக்கூடாது என்று எழுதியும், பேசியும் வருவதைப்பற்றி நாம் கவனத்துக்கெடுப்பதில் அர்த்தமே இல்லை. இப்பேச்சு ஆதாரமற்ற வீண்பேச்சேயாகும்.** இவ்விதமான மதிமாறாட்டமான பிரச்சாரங்கள்தான் மனிதரில் பெரும்பாலாரை இருளில் தவிக்கவிட்டிருக்கின்றன. நாம் முன்பு கூறிய பாமரமக்களான உம்மிகளின் நிலைமையை எதிர்ப்புறமாய்ச் சிந்தனை செய்துபார். மனிதன் மூடனாக, முரடனாக ஏன் வாழ்கிறான் என்றால் கலிமா உணர்த்தும் உண்மையான தௌஹீதை விளங்கித் தெளிவு பெறாமையால்தான். நாம் நமக்கேற்பட்ட உண்மையான அனுபவத்தைக் கண்டறிந்த பின்பும் இருளில் தத்தளிக்கும் மக்களுக்கு உண்மையைக் கூறாமல் விட்டுவிட்டு மறைப்பதும் நீதியாகுமா?

கலிமாவைக்கூறி அதற்காதாரமான தலீல்களை எடுத்துக்காட்டி மக்களிடையேதௌஹீதைப் பிரசாரம்செய்துகொண்டிருந்த றசூல்(ஸல்)அவர்களை வெட்டிக்கொல்பவனுக்கு நூறு ஒட்டகங்களைப் பரிசாகத்தருவேன் என்று அபூஜஹீல்(மூடர்களின் தந்தை) வாக்களித்தான். ஏன்? றசூலின் பிரசாரத்தை எல்லாம் அவனே என்ற கருத்தை ஒழித்துக்கட்டவேண்டும் தன்னுடைய கொள்கையை (அல்லாஹ் வேறு சிருஷ்டிவேறு என்னும் கொள்கையை) தன்னுடையபரம்பரையினர் கையாண்ட மார்க்கத்தை, தன் சமூக மக்களைக்காப்பாற்றவேண்டும் என்பதற்காகத்தான் றசூலைக் கொலைசெய்பவனுக்கு நூறு ஒட்டகங்களைத் தருவதாக அவன்வாக்களித்தான். அப்படியானால் றசூல்(ஸல்) அவர்களால்செய்யப்பட்ட எல்லாமவனே (ஹமவோஸ்த்) என்ற பிரசாரத்தைப் புதையுண்டுகிடக்கும் தௌஹீதை **வெளிப்படுத்தவே கூடாது என்றும், சமூகநலனைப் பாதுகாப்பதற்காக உண்மையை மறைத்தேயாகவேண்டுமென்றும் கூறுகிறஒருவர் அல்லது ஒரு கூட்டம் உண்மையாகவே அபூஜஹீலின் கட்சியைச் சேர்ந்ததா?றசூல்(ஸல்) அவர்களின் கட்சியைச்சேர்ந்ததா? என்பதை சிந்தனை செய்துபார்.**

தெளிந்த மனத்தோடு ஆராய்ந்தால் கலிமாஉணர்த்தும் உண்மையை வெளிப்படுத்தக்கூடாது அல்லது அது பிழையானது என்று ஒருவர் கூறுவாரேயானால், அவர்பட்டம்பதவியுடையவராயிருப்பினும்கூட,**இஸ்லாத்தின்ஜென்ம விரோதியான அபூஜஹீலின்கட்சியைச்சேர்ந்தவராவேஇருக்கிறார் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.** ஆனால் அவர்விளங்கித் தெளிவு பெறுவாரேயானால் எமது அபிப்பிராயத்தைஅவர் ஏற்றுகொள்வார் என்பதும், அப்படி உண்மையை ஏற்றுக்கொள்பவர் ஒரு குத்புடையநிலையை பெறுவார் என்பதும் எனது நம்பிக்கை. ஏனென்றால் வெற்றியின், உயர்பதவியின் முன்னேற்றத்தின், முதலாவது படிக்கல், தன் அறியாமையை,தோல்வியைமனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதேயாகும். இந்தநித்திக்கும் மனச்சாட்சிவேலை செய்யாத எந்த ஒரு மனிதனும் வெற்றியின் பாதையைப்பெறவே முடியாது என்பது நிச்சயம்.

ஆகவே, தௌஹீதின் உண்மையை மக்கள் உணரமுடியாமல் தடைசெய்பவர்கள் மக்களுடைய நன்மைக்காகப் பாடுபடுவதாய்க் கூறுவதும், தாங்களே எத்திவைக்கும் தப்லீக் கூட்டத்தினர் என்றும், மார்க்கப் பாதுகாப்பாளர்கள் தாங்களே என்றும் கூறுவது வெறும் மருட்சிவாதங்களாகும். இவ்வகையினர் மக்களுடைய அறிவு வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தடைபோடுகிற வஹ்முடையவர்கள் என்பதே உண்மை. தௌஹீதை வெளிப்படுத்தக் கூடாது என்பது குர்ஆன், ஹதீஸ்களுக்கும் பகுத்தறிவுக்கும் கூட விரோதமான விவாதமாகும்.

இது விஷயத்தில் றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட (எச்சரிக்கப்பட்ட) எத்தனையோ ஹதீஸ்களும் குர்ஆன் ஆயத்துக்களும் தென்படுகின்றன.

**ஹதீஸ்:** *அரசர்களின் அநீதியைப்பற்றியும் அல்லாஹ்வுடைய கலாமை (குர்ஆனை) ஏற்றுக்கொள்ளாமல் கற்பனைகளையும் வீண் நம்பிக்கைகளையும் பஞ்சாங்கத்தையும் ஜனங்கள் ஈமான் கொள்வதைப்பற்றியுமாக மூன்று காரியங்களும் எனக்குப்பின் எனது உம்மத்தில் நேரிடுமென்று நான் பயப்படுகிறேன்.*

(இந்த ஹதீஸ் முன்பு தரப்பட்டுள்ளது.)

**ஹதீஸ்:** *மனிதர்களில் ஒரு காலம் வரும். அப்போது இஸ்லாத்தின் நாமமேயல்லாது அதன் (உண்மை) சத்தியம் இராது. குர்ஆனில் எழுத்தேயல்லாது உண்மையான அர்த்தம் (கருத்து) இராது. அவர்களின் மஸ்ஜித் (பள்ளிவாசல்) நேர் வழியின்றிக் கெட்டுப்போய் இருக்கும். அவர்களின் உலமாக்கள் வானத்தின் கீழ் மிகக்கெட்ட ஜெந்துக்களாய் இருப்பார்கள்.*

(இந்த ஹதீஸும் முன்பு தரப்பட்டுள்ளது)

**ஹதீஸ்:** *அண்மையில் என் சமூகத்தவரிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். அப்போது ஒரு பிரிவினர் ஏற்படுவார்கள், அவர்கள் நன்மொழி கூறுவார்கள், தீய செயல்புரிவார்கள். குர்ஆனை ஓதுவார்கள் அது அவர்களுடைய மார்பின் ஆரம்ப எலும்பையும் கடக்காது. வேட்டைப் பொருளில் இருந்து அம்பு வெளிப்படுவதுபோல மார்க்கத்தை விட்டும் அவர்கள் அப்புறப்படுவர். பின்னர் திரும்பவுமாட்டார்கள். அம்பு அதன் கூட்டை அடையும் வரை, அவர்கள் தாம் படைப்புக்களில் மிகக்கெட்டவர்களாவார்கள்...*

(இந்த ஹதீஸும் முதல் தரப்பட்டுள்ளது)

**ஹதீஸ்:** *அந்தியகாலத்தில் ஒரு கூட்டம் வெளியாகும். அவர்கள் உலகத்தின் மார்க்கத்தைத் தாறுமாறாக்குவார்கள். அவர்கள் மனிதர்களை வஞ்சிப்பதற்காக ஆட்டுத்தோல்களைத் தங்கள்மேல் போட்டுக்கொள்வார்கள் (அதாவது அவர்களுடைய வெளிக்கோலம் சாந்தகுணமுள்ள ஆட்டைப்போல இருக்கும்படி செய்துகொள்வார்கள். நீண்ட தாடி, தலைப்பாகை, தஸ்பீஹ்மணி, லுங்கி அப்புச் சட்டைகளால் அலங்கரித்துக் கொள்வார்கள்) அவர்களுடைய நாவு தேனைப்பார்க்கினும் இனிமையாக இருக்கும். அவர்களின் (உட்கோலம்) இருதயங்கள் ஓநாயின் இருதயமாய் இருக்கும்.*

**அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி).**
**ஆதாரம்: கன்சுல் உம்மால் பாகம் 71, பக்கம் :124.**

இதே போன்ற இன்னும் பல ஹதீஸ்கள் தென்படுகின்றன. பல நூற்றுக்கணக்கான ஆயத்துக்களும் தென்படுகின்றன. இவ்வித கூட்டத்தினர்தான் தௌஹீதை மூடிமறைக்க,எதிர்க்க முற்படும் (தப்லீக், உலமா என்ற போர்வையிலுள்ள) ஒரு சில மக்கள் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

## (2)

**சகோதரனே!**

மனிதன் ஆசையைக் கட்டுப்படுத்த வேண்டும். பிறர்பொருளை அபகரிக்கக் கூடாது. ஹறாம், ஹலாலைக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்று ஏறக்குறைய எல்லோரும்தான் கூறுகிறார்கள். ஆனால், அறிவுரை கூறுகிற பெரும்பாலன மக்களே இவ்விஷயங்களில் பூரணவெற்றி பெறவில்லையென்பது அறிவுக்குத்தென்படவே செய்கிறது. ஆசையைக் கட்டுப்படுத்துவது பேச்சளவில் இலகுவாய் தென்பட்டாலும் செயலளவில் மிகக்கடினமான, பலாத்காரமான, இயற்கைக்கு விரோதமான ஒன்றாகவே தென்படுகிறது. ஆனால், இவ்விஷயத்தை குர்ஆன், ஹதீஸ்களின் உதவியோடு ஆராய்ந்து பார்த்தால், இந்த இக்கட்டான, கஸ்டமான மயக்கத்தில் இருந்து மனிதன் விடுபடுவதற்கும் வெற்றியடைவதற்கும் உள்ள **ஒரேயொரு வழி கலிமாவை விளங்கியறிந்து தௌஹீதில்**

**நிலைபெறுவதுதான்** என்பது சக்குச்சந்தேகமில்லாமல் தெரியவருகிறது. இதைத்தவிர ஆசையைக் கட்டுப்படுத்துவதாகக் கூறப்படும் மற்றெந்த உபாயங்களும் பலாத்காரமானவையாயும் ஒரு சிலரால் மட்டும் கையாளப்படக் கூடியனவாகவுமே தென்படுகின்றன. பயத்தினாலும், வேறுசில பெரிய ஆசைகளில் மயங்குவதினாலும் ஆசையைக் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வருவது **தற்காலிக உபாயமேயல்லாமல் நிரந்தரமான உபாயமேயல்ல.** தற்காலிக உபாயத்தினால் மனிதன் பூரணத்தன்மையை அடைதல் சாத்தியமேயில்லை. ஆகையால்தான் கலிமாவைக்கொண்டே மக்களுடைய பூரணத்தன்மையை எய்தவைக்க வேண்டும் என்ற ஆழிய நோக்கோடுதான் இறைவன் **மூடமக்களிடையே கலிமாவை உபதேசிக்கும்படி ஏவியிருக்கிறான்.**

ஆனால் எம்மக்கள் கலிமாவுக்கு வலிந்துரை கொண்டிருப்பதுபோலவே தௌ ஹீதை மனிதன் விளங்கிக் கொண்டால் அந்த விளக்கம் ஆயிரம் வருடம் முயற்சி செய்தாலும் ஆசையிலிருந்து அம்மனிதனை விடுவிக்கப்போவதோ, அவனுடைய பூரணத்தன்மையைக் கொடுக்கப்போவதோ இல்லை. ஆனால், கலிமாவின் உண்மை விளக்கமான தௌஹீது இப்படிப் போலியானதேயல்ல. மனிதன் எப்போது கலிமாவின் விபரத்தைப் புரிந்து கொண்டானோ அப்போதே சிருஷ்டிகளின் உண்மை அவனுக்குத் தென்படுகிறது. ஆசைப்படுவதற்குரியவேற்றுப்பொருளும் ஆசைப்படுபவனும் இல்லை என்பதை அவன் உணர்கிறான். ஆசையென்ற ஒரு சொல்லே அவனுடைய அறிவைவிட்டு நழுவ ஆரம்பிக்கிறது. வானத்தின் வாசல்கள் அம்மனிதனுக்குத் திறக்கப்படுகின்றன. தன்னுடைய சகல பண்புகளையும் அடக்கிக் கையாளக்கூடிய விஷேட திறமை கிட்டிவிடுகிறது. மூடனாய் இருந்த அம்மனிதன் அறிஞனாக மாற்றமடைகிறான். அநீதிமானாய் இருந்த அம்மனிதன் நீதிமானாக மாற்றமடைகிறான். மனதை ஒரு வழிப்படுத்தி வெற்றிபெறக்கூடிய ஒரு வழி கலிமாவை விளங்கியறிந்து (முறாக்கபா) நோட்டமிடுவதைப்போல் வேறேதுவுமே கிடையாது. உலகின் எப்பாகத்திலும் எப்போதுமே கிடையாது. ஆகையால்தான் உலகில் தோன்றிய அத்தனை நபிமாரையும் கலிமாவைக்கொண்டே இறைவன் அனுப்பினான். இவ்வுண்மையை அனுபவசாலிகளும், உளநூல், ஹிப்னாடிஸம், மெஸ்மரிசம் போன்ற இல்முகளில் ஆராய்வுடையவர்களும் தெளிவாய் அறிவார்கள். ஆகையால்தான் கலிமாவிக்கு நிகரானது எப்போதும் எங்கேயும் கிடைக்கவே கிடையாது என்று கூறப்படுகிறது.

وَهُدُوٓا۟ إِلَى ٱلطَّيِّبِ مِنَ ٱلْقَوْلِ وَهُدُوٓا۟ إِلَىٰ صِرَٰطِ ٱلْحَمِيدِ

22-24 *கலிமத்துத் தையிபா அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு மிக்க புகழுக்குரிய இறைவனின் பாதையிலும் (ஸிறாத்திலும்) அவர்கள் (இம்மையிலே) செலுத்தப்படுவார்கள்.*

**ஹதீஸ்:** ***“லா இலாஹ இல்லல்லாஹ்” எனது கோட்டையாகவும் அதில் செல்லுகிறவன் எனது அதாபைவிட்டு அச்சமற்றவனாகவும் இருக்கிறான் என்று அல்லாஹ் கூறுவதாக றசூல் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.***

இப்போது சிந்தனை செய்துபார். ஒருவன் பணக்காரனாக, உயர் பதவியுடையவனாக அல்லது எவ்வகையிலேனும் நம்மைவிட அவன் மேம்பட்டவனாக இருக்கிறான் என்று நாம் கண்டால் பொறாமை ஏற்படுவது ஏன்? நான்வேறு அவன்வேறு என்ற உணர்வு நம்மிடையே இருப்பதனால்தான், உலகிலுள்ள ஒவ்வோர் பொருளையும் தனித்தனிப் பொருட்களாய் காண்பதாலும், அப்பொருட்களை அனுபவிக்கும் நான் அவற்றைவிட்டும் என்னை வேறாய்க் காண்பதாலும் ஆசை, கோபம், அன்பு, வெறுப்பு, பொறாமை, இரக்கம் முதலிய அத்தனை பண்புகளும் வெளியாகின்றன. நானும் எனது பண்புகள் வெளியாகக் காரணமாய் இருந்த அத்தனை பொருட்களும் ஒரே பொருளின் பிரதிபிம்பங்களே என்று காணுகிற ஒருவர் எதை ஆசை கொள்வார்? எதைப் பொறாமைப்படுவார்? திரும்பும் திசையெல்லாம் இறைவனையே காணுகிற அல்லது இறைவனே பார்க்கிறான் என்று நம்புகிற ஒருவர் எப்படி களவு செய்வார்? எப்படி வபசாரம் செய்வார்? இவர் கொண்டிருக்கும் நம்பிக்கையை இழந்தாலே ஒழிய எவ்வித பாபச்செயல்களிலும் ஈடுபடவேமாட்டார்.

**ஹதீஸ்:** ***நிராகரிப்பவனும் அவனைக்கொன்றவனும் எப்போதும் நரகில் ஒன்று சேரமாட்டார்கள். இறைவழியில் எழும் புழுதியும் நரகத்தின் ஆவியும் எந்த நம்பிக்கையாளர் மீதும் ஒன்று சேராது. எந்த அடியானின் உள்ளத்திலும் (ஈமான்) நம்பிக்கையும் பொறாமையும் ஒன்று சேரமாட்டாது என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம்: முஸ்லிம், அபூதாவுத், நஸாயீ.**

மனித இனத்தில் நடைமுறையில் உள்ள தீய விஷயங்கள் அத்தனையையும் சிந்தனை செய்துபார். அத்தனைக்கும் நான் வேறு, நீ வேறு,நான் வேறு,அவை வேறு என்று நம்புவதுதான் காரணமாகும். இந்த அகங்கார உணர்வு கொண்டுள்ள ஒருவன் எவ்வளவுதான் சிறந்த கல்விமானாக இருப்பினும் கூடத் தீய உணர்வுடையவனாகவேதான் இருக்கிறான். தான் விரும்புகிற ஒன்றைத் தன் சகோதரனுக்கும் விரும்பாதவன் விசுவாசியாகமாட்டான் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். நீ விசுவாசியாக இருந்தால் பிறரிடமிருந்து நீ எதை விரும்புகிறாயோ அதையே நீ பிறருக்கும் செய்யென்று ஈஸா(அலை) அவர்கள் கூறுகிறார்கள். அவ்வித வாக்கியங்களைச் சிந்தனை செய்துபார். மனித சமுதாயம் மனித சமுதாயமாகவே வாழவேண்டுமானால் நிச்சயமாக ஒவ்வொருவரும் தௌஹீதின் உண்மையை உணர்ந்தேயாக வேண்டும். ஆகவே உண்மையான தௌஹீதை எந்த வழிகளில் மக்களுக்கு விளக்க முடியுமோ அந்த வழிகளில் அத்தனையையும் கையாண்டு உண்மையை

உணர்த்துவது கடமைப்பட்டவர்களுக்கு மிகமிக அவசியமாகும். இது விஷயத்தில் அறிவுடையோர் பெருமுயற்சி செய்ய வேண்டியவர்களே. அறிவு குறைந்தோர் ஏசிப்பேசி இன்னலிழைப்பினும் சரியே.

ஹதீஸ்: *மனிதன் அல்லாஹ்வுக்காக ஜனங்கள் யாவரையும் விரோதித்து குர்ஆன் ஆயத்துக்களுக்கு வேண்டியபடி பல கருத்துக்களையும் விளங்கி அறிகிறவரையில் சிறந்த மார்க்க விளக்கவான்களில் சேர்க்கப்படமாட்டான். என்று றசூல்(ஸல்) கூறுகிறார்கள். அப்படியானால் விளக்கமுற்றப்படுபவர்களை மக்கள் எப்படி விரோதிப்பார்கள் என்பதைச் சிந்தனை செய்துபார்.*

ஹதீஸ்: *இஸ்லாம் வெளியாகும்போது அற்பமாக உதவியற்றதாக இருந்ததுபோல இனிமேலும் ஆகிவிடும். ஆகையால் உதவியற்றவர்களுக்குச் சோபனம் உண்டாகக்கடவது என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறியபோது உதவியற்றவர்கள் யார்? என்று ஒருவர் வினவ, எனது மார்க்கத்தில் மற்றவர்கள் கட்டுக்குலைத்தவைகளை ஸ்த்திரப்படுத்துபவர்களும், மற்றவர்கள் நாசம் செய்தவைகளை விருத்திசெய்தவர்களுமேயாவார்கள் என்று கூறினார்கள்.*

(இந்த ஹதீஸ் முன்பும் தரப்பட்டுள்ளது)

அறபு பாஷையில் மட்டும்தான் தௌஹீதை வெளிப்படுத்த வேண்டும் என்றோ **அறபுப் பட்டதாரிகள் மட்டும்தான் வெளிப்படுத்த வேண்டுமென்றோ ஒரு நியதி கிடையாது.** மேலும்,வயது வந்தவர்களுக்கு அல்லது தகுதியுடையவர்களுக்குத்தான் தௌஹீதை வெளிப்படுத்த வேண்டும் என்பதும் கிடையாது. எந்தப் பாஷையிலும், எவரும், எவருக்கும், எவ்விடத்திலும் உண்மையைக்கூற உரிமையுடையவர்களேதான். இன்று உலகின் முழுப்பாகங்களிலுமுள்ள முஸ்லிம் பள்ளிவாசல்களில் நடாத்தப்படும் "அதான்" என்னும் பாங்கு ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் தொழுகைக்காக அழைப்பது மட்டுமல்ல,**உலகின் எப்பாகத்திலும் எப்போதும் எவரிடத்தும் தௌஹீதை வெளிப்படுத்த வேண்டுமென்ற ஓர் ஆழியநோக்கமும் அதில் மறைந்தே இருக்கிறது.** ஆனால் முற்றறிஞனான இறைவனோ பெருமைதங்கிய றசூலோ "பாங்கு" (அதனை) எப்பாஷையிலும் மொழிபெயர்த்துக் கூறலாம் என்று அனுமதியளிக்கவேயில்லை. அப்படி அனுமதியளிக்கப்பட்டிருந்தால் ஆராய்ச்சியாளருக்குக்கூட உண்மையைக் கண்டறிய முடியாத நிலைமைதான் ஏற்பட்டிருக்கும். ஏன்? ஒவ்வோர் மனிதக் கூட்டமும் அவரவர் அறிவுக்கேற்றபடி புரட்டிமாற்றிப் புதைத்து என்றோ உண்மையை அழித்தொழித்திருப்பார்கள். உண்மை மறையாமல் காப்பவனல்லவா இறைவன்.

## (3)

**அ**டுத்ததாகத் தௌஹீதை வெளிப்படுத்தினால் மக்கள் தொழுகைபோன்ற கட்டாயக் கடமைகளை விட்டுவிடுவார்களே என்பதும் இருக்கிற ஈமானும் போய்விடுமென்பதும் வெறும் நொண்டிச் சாட்டுக்களாகும். **மெய்தான் அப்படிப் போய்விட்டாலும் அது இரண்டுவகையில் நன்மையான காரியம் தான்.** ஊர் மெச்சுவதற்காகச் செய்யப்படும் அமல்கள் அந்த அமலாளியின் தண்டனைக்கும் காரணமாக அமையலாம். அப்படியானால் தன்னையும் பிறரையும் ஏமாற்றிய குற்றவாளியைத் தண்டனையிலிருந்து காப்பாற்றுவது ஒன்றும் உண்மையான மூமீன்களிடையே களை நீக்கம் செய்வதுமான மற்றொன்றுமாக இரு நன்மைகள் இருக்கவே செய்கின்றன. இருக்கிற ஈமானும் போய்விடுமே என்றால் துவிதக் கொள்கையான, இஸ்லாத்தின் கொள்கைக்கு மாறான, முஸ்ரீக்குகளின் கொள்கையை உறுதிப்படுத்துவதற்கான அந்தத் தவறான **ஈமான் போகவும் சுத்தசத்திய அத்வைதமான ஏகத்துவ ஈமான் குடிகொள்ளவும்தான் வேண்டும்.** அதேபோல ஈமானை உறுதிப்படுத்தும் நோக்கமாகத் தொழுகையும் திருத்திக் கையாளப்படத்தான் வேண்டும்.

தௌஹீதை வெளிப்படுத்தினால் மக்கள் தொழுகையை விட்டுவிடுவார்கள் என்பது மருட்சியினால் ஏற்படுகிற ஒரு வாதமாகும். தௌஹீதை விளங்கியறிந்தவர்கள் **அவசியத்தின் போதேயன்றி மற்றப்படி தொழுகையை விட்டு விட்டதாக எந்த ஆதாரமும் கிடையாது.** கலிமாவை விளங்கித் தெளிவுபெற்ற அவ்வுண்மையில் ஊறிவிடுவதற்கு உதவியாகத்தான் தொழுகை தரப்பட்டுள்ளது என்ற விபரம் மக்கள் அறியாத ஒரு விஷயமாகும். அவ்விதமான விபரம் மக்களுக்குக் கற்பிக்கப்பட்டிருந்தால் அவர்கள் அனாநிய்யத் மாய்ந்தொழியும் வரையிலும் தொழுகையை நிறைவேற்றிக்கொண்டே இருப்பார்கள் என்பதில் என்ன ஆட்சேபனை? இவ்விதமான தப்புதவறான மூடநம்பிக்கைகளுக்கெல்லாம் மூலகாரணம் **மதத்தின் பெயரால் மக்களிடையே புகுத்தப்பட்ட அளவுக்கதிகமான அச்சமேயாகும்.** இந்த அச்சமூட்டும் செயல் மென்மேலும் வலுவடைந்து கொண்டேயிருப்பதால் மனிதரில் பெரும்பாலார் அச்சத்தின் காரணமாய் அமலில் ஈடுபடுகிறார்களேயல்லாமல் அந்த அமல்களால் பிரயோசனம் பெறத்தெரியாதவர்களாகவே தென்படுகிறார்கள். தங்களுடைய அமல்கள் பிரயோசனமளிக்குமா? என்பதைக் கண்டறியக்கூடிய அறிவும் அவர்களிடத்தில் இல்லை. அச்சத்தை முற்றாய் நீக்கிவிடாதபடி அறிவுறுத்துங்கள் என்று றசூலுல்லாஹ் கூறியிருப்பதால்,**உண்மைக்கு மாறான மூடத்தனமான அச்சத்தையும் ஆதரவையும் ஊட்டி மனிதனின் சிந்தனா சக்தியை, சுதந்திரபுத்தியை, பகுத்தறிவைப் பறிக்க வேண்டுமென்பது கருத்தாகாது.**

ஒரு மனிதன் தான் செய்யும் வணக்கம் இபாதத்துக்கள் இன்ன நோக்கத்திற்காக என்பதை அவன் புரிந்துக்கொள்ளக்கூடியதாக ஆரம்பத்திலேயே உணர்த்தப்பட்டிருந்தால் மனிதன் மென்மேலும் முழுக்கவனத்தோடு அமலில் ஈடுபடுவான் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே தௌஹீதை வெளிப்படுத்தினால் மனிதன் அமலை விட்டுவிடுவான் என்பது மருண்டபுத்தியின் போதனையாகும்.

وَمِنَ ٱلنَّاسِ مَن يَعْبُدُ ٱللَّهَ عَلَىٰ حَرْفٍ ۖ فَإِنْ أَصَابَهُۥ خَيْرٌ ٱطْمَأَنَّ بِهِۦ ۖ
وَإِنْ أَصَابَتْهُ فِتْنَةٌ ٱنقَلَبَ عَلَىٰ وَجْهِهِۦ خَسِرَ ٱلدُّنْيَا وَٱلْـَٔاخِرَةَ ۚ ذَٰلِكَ
هُوَ ٱلْخُسْرَانُ ٱلْمُبِينُ

22.11 *மனிதரில் பலர் உறுதியற்ற நிலைமையில் அல்லாஹ்வை வணங்குகின்றனர். அவர்களை யாதொரு நன்மையடையும் பட்சம் அதைக்கொண்டு திருப்தியடைகின்றனர். அவர்களுக்கு யாதொரு தீங்கு ஏற்பட்டாலோ அவர்கள் தங்கள் முகத்தைத் திருப்பிக்கொள்கின்றனர். இவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நஷ்டமடைந்துவிட்டனர். இதுதான் தெளிவான பெரும் நஷ்டமாகும்.*

இந்த தௌஹீதுடைய விஷயத்தில் மக்களுக்கு வழிக்காட்டியவர்கள் பூர்வகாலத்தில் இருந்தே மூன்று பிரிவுகளாய்ப் பிரிந்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது. இவர்களில்,

**1ஆவது பிரிவினர்:**

எவ்வித காரணம்கொண்டும் சுத்த தௌஹீதை வெளிப்படுத்தக் கூடாது என்பவர்கள். இவர்களில் ஒரு சாரார் அது பிழையென்றும், இறைவன் வேறு, சிருஷ்டி வேறு என்பதே சரியென்றும் கூறுபவர்கள். இவர்களுடைய வாதப்பிரதிவாதங்களுக்கு வஹ்மும் பின்பற்றலுமே ஆதாரமல்லாமல், எவ்விதமான **தர்க்கரீதியான யுத்தி சுருதிகளின் ஆதாரங்களுமே கிடையாது.** இவர்கள் வேதவசனங்களை ஒப்புக்கொண்டவர்களுமல்ல. ஆராய்ந்து தெளிவு பெற்றவர்களுமல்ல. இன்றுள்ள தப்லீக், ஜமாஅத்தே இஸ்லாம், அகமதிகள் எல்லாம் இவ்வகையைச் சேர்ந்தவர்கள்தான்.

**2ஆவது வகையினர்:**

இவர்கள் உண்மையான தௌஹீதை ஒப்புக்கொண்டவர்கள் தான். ஆயினும் அறிவு குறைந்த பாமரமக்களிடையே சுத்தத் தௌஹீதை வெளிப்படுத்தக்கூடாது என்றும் தகுதியுடையவர்களுக்கு வெளிப்படுத்தலாம் என்றும் கூறுபவர்கள். **இவ்வினத்தைச் சேர்ந்தவர்கள்தான், ஷாபி, ஹனபி, ஹம்பலி, மாலிக்கி மதுஹபுகளைப் பின்பற்றிய பெரும்பாலான அறிஞர்கள். இமாம் கஸ்ஸாலி(றஹ்) போன்றவர்களும் இவ்வகையினர்தான்.** இவ்வகையினரின் அச்சம், ஆதரவு, அமல்களை நோட்டமிடும் போது இவர்களை சிறந்த அமலாளிகளாகவும் லாஹிறுடைய உலமாக்களாகவுமே இருந்திருக்கிறார்கள் என்பது தென்படுகிறது. அவர்களுடைய கிதாபுகளைப் பல கண்நோட்டங்களோடு ஆராய்ந்தால் இவர்கள் மார்க்கத்தின் வெளிப்படையான அறிவில்,சட்டத்துறையில் மிகச் சிறந்த அறிஞர்களே என்பதும், கிதாபுகளை எழுதும் காலங்களில் மார்க்கத்தின் (பாதின்) உட்படை அறிவில் அனுபவம் குறைந்த வணக்கஸ்த்தர்களாகவே இருந்துள்ளார்கள் என்பதும் தென்படுகிறது. இவ்வகையினர் பொதுப்படையாகக் காட்டும் ஒரு சட்டம்என்னவென்றால் சுத்தசத்தியமான அசல் தௌஹீதை அறிந்திருப்பது எல்லோர் பேரிலும் கட்டாயக்கடமையல்லவாகையால் ஒரு கிராமத்தில் ஒன்றிரண்டுபேர் இதை அறிந்திருப்பதே போதுமானது என்பதுதான். இவர்கள் கூறுவது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விஷயம்தான். இது துன்யாவுடைய கருமங்களில் போதுமானதும்தான். ஆயினும் ஒவ்வோர் மனிதனுடையவும் பூரணத்தன்மைக்கு இது வழிக்காட்டாது என்பதும் உண்மைதான். ஆகவே இவர்களுடைய எழுத்துக்களைக்கொண்டு நோட்டமிடும் போது இவர்கள்**லாஹிறுடையஉலமாக்களேதான் என்று யூகிக்கவேண்டியதாய் இருக்கிறது.**

ஆனால், இவர்களுடைய கடினமான வணக்கங்களையும் அச்சம் ஆதரவுகளையும் அடிப்படையாகக்கொண்டுஇவர்கள்வலிமார்களேதான் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். **ஆனால் வலிமார்களை அமல்களைக்கொண்டோ அச்சம், ஆதரவுகளைக்கொண்டோ தீர்ப்பிடமுடியாது. தீர்ப்பிடக்கூடாது என்பது எமது அபிப்பிராயம்.**இவர்கள் பிற்காலங்களில் வலிமாராக இருந்திருக்கலாம். நாம் அதை மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் நூலெழுதும் காலங்களில் அப்படியிருந்ததில்லை என்பது தென்படுகிறது. ஏனென்றால், இவ்வகையினர் சில கட்டங்களில் ஸூபிகளை மிகமிகப் பாராட்டியிருக்கிறார்கள். சில கட்டங்களில் ஸூபிகளுடைய வாக்குகளை மார்க்க விரோதமாகக் கூறியிருக்கிறார்கள். இவர்கள் ஸூபிகளுடைய பேச்சுக்களில்,**அனுபவமின்மையால் தவறான கருத்துக்களைவெளியிட்டிருக்கிறார்கள்என்பதை,பிற்காலத்தில் ஒரு சில வலிமார்களினால் தெளிவாய் விளக்கித் தரப்பட்டிருக்கிறது.**கலிமத்துல் ஹக்கியில் மௌலானா அப்துர்றஹ்மான்(றஹ்) அவர்கள் ஒலிமார்களான ஸூபிகளின் வாக்குகள் உண்மையானவையென்றும் மார்க்க விரோதமானவையல்லவென்றும் **தகுந்த ஆதாரங்களோடு எவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக நிரூபித்திருக்கிறார்கள்.** இதேபோல இன்னும் பல பெரியார்கள் பல கிதாபுகள் மூலம் இவ்விஷயத்தை

விளக்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த இரண்டாவது வகையினரின் போக்குச் சட்டத்துக்கமைவானதேயாயினும் பூரணத்தன்மைக்குரியஆத்மீகத்துறையில் சரியான வழியைக் காட்டாதென்பது உண்மை. இந்த இரண்டாவது வகையினரும் கலிமாவுக்கு நாலுபொருட்களையும், வலிந்துரையையும் கொண்டவர்கள்தான். இந்த இமாம்களே ஒருவருக்கொருவர் சிற்சில விடயங்களில் நேர்விரோதமாக இருக்கிறார்கள்.

**3ஆவது வகையினர்:**

கலிமாவின் உண்மையான பொருளை, தௌஹீதில் மறைக்கப்பட வேண்டிய இரகசியங்களை நீக்கிப் பொதுப்படையான தௌஹ்தை எவரிடத்திலும் எங்கேயும் எப்போதும் வெளிப்படுத்தலாம் என்று கூறுபவர்கள் இந்த மூன்றாவது வகையினர்தான். இவர்கள் விதிக்கும் ஒரேயொரு நிபந்தனை தௌஹீதில் மறைக்கப்படவேண்டிய இரகசியங்களைத் தகுதியுடையோருக்கேயன்றி வெளிப்படுத்தக்கூடாது என்பதே. உண்மையான அனுபவமும் சரியான விளக்கமும் உடைய ஒலிமார்கள் இவர்கள்தான். ஹக்குல்எகீன் என்ற உண்மையான ஈமானுடைய நல்லடியார்களான இவ்வகையினரின் வாதப்பிரதிவாதங்கள் குர்ஆன், ஹதீஸ்களுக்கும் பகுத்தறிவுக்கும் முற்றிலும் சரியாகவே இருக்கின்றன. இவ்வகையினரின் சரியான ஏகோபித்த அபிப்பிரயப்படியும், என் சொந்த அனுபவப்படியும் நான் சொல்லக்கூடிய உண்மை என்னவென்றால், ஒரு மனிதன் உள்ளத்தைத் தூய்மையாக்கி, சரியான அடிப்படையில் அவனுடைய வாழ்வை அமைத்து இம்மையிலும் மறுமையிலும் வெற்றியடைந்து உண்மையான சாந்தியைப், பூரணத்தன்மையை அடையவேண்டுமானால் அவன் கலிமாவின் உண்மையை, தௌஹீதை உணர்ந்தேதான் ஆகவேண்டும். அவனுடைய சந்தேகங்கள் நீங்கி உண்மையான ஈமானைப் பெற்றேயாக வேண்டும். ஆகவே எவரிடத்திலும் எங்கேயும் எப்போதும் கலிமாவின் உண்மைக் கருத்தையும் அதனால் தெளிவாகும் பொதுப்படையான தௌஹீதையும் வெளிப்படுத்துவதே சரியாகும். இப்படிச் செய்வது மனித குலத்துக்குச் செய்யும் மாபெரும் கைங்கரியமென்றே நான் கூறுவேன். **கலிமாவின் உண்மையை மறைக்கவேண்டும் என்பது அல்லாஹ், றசூலுக்கும் மனித குலத்துக்கும் செய்யும் மாபெரும் துரோகமும், மார்க்கவிரோதமுமாகும்.**

கல்விக்கூடங்களில் ஆரம்ப மாணவர்களில் இருந்தே உண்மை உணர்த்தப்பட்டிருந்தால் இன்றுள்ள சமூகம் அவ்வுண்மையை ஏற்றுக்கொண்டே இருந்திருக்கும். ஆரம்பத்திலேயே அறியாமையால்,உண்மைக்கும் மாற்றமான ஒரு கொள்கையை மாணவர்களுடைய உள்ளத்தில் பதித்துவிட்டு வயது வந்த பின் உண்மையை உணர்த்த வேண்டுமென்றால் அது எப்படி முடியும்? ஆகவே, தகுதியுடையோருக்கு மட்டுமே உண்மையைக் கூறவேண்டுமென்பது விதண்டாவாதமேயாகும். இன்று சமூகமக்கள் உண்மையை மறுப்பது ஏன்?அம்மக்களுக்கு உண்மையை மறைத்து வந்த ஒரு சிலரின் வஹ்மு என்ற பேதபுத்திதான் காரணம். இது சமூகமக்களின் குற்றமாகாது. மக்களுடைய அமலுக்கேற்ற கூலியளிப்பது இறைவனின் வேலையாகும்.**உண்மையை எடுத்துரைப்பதுதான் அறிஞரின் வேலையாகும்.**

إِنَّ ٱلَّذِينَ يَكْتُمُونَ مَآ أَنزَلْنَا مِنَ ٱلْبَيِّنَٰتِ وَٱلْهُدَىٰ
مِنۢ بَعْدِ مَا بَيَّنَّٰهُ لِلنَّاسِ فِى ٱلْكِتَٰبِ ۙ أُو۟لَٰٓئِكَ يَلْعَنُهُمُ ٱللَّهُ
وَيَلْعَنُهُمُ ٱللَّٰعِنُونَ

2-159 *நேர்வழியையும் தெளிவான அத்தாட்சிகளையும் நாம் இறக்கி மனிதர்களுக்காக வேதத்தில் தெளிவுபடுத்திய பின்னும் எவர்கள் அவற்றை மறைக்கின்றார்களோ அவர்களை நிச்சயமாக அல்லாஹ்வும் சபிக்கின்றான். சபிப்போரும் அவர்களைச் சபிக்கின்றனர்.*

وَمِمَّنْ خَلَقْنَآ أُمَّةٌ يَهْدُونَ بِٱلْحَقِّ وَبِهِۦ يَعْدِلُونَ

7-181 *நாம் சிருஷ்டித்தவர்களில் சிலருண்டு. அவர்கள் சத்திய வழியை அறிவித்து அதனைக்கொண்டே நீதியும் செய்கின்றனர்.*

**ஹதீஸ்:** ***நிச்சயமாகஅல்லாஹ் ஒவ்வோர் நூற்றாண்டின் துவக்கத்திலும்இந்த இனத்தவருக்காக இவர்களின் மார்க்கத்தைப் புத்துயிர் அளித்துத்தரும் ஒருவரை எழுப்பித்தருவான்.***

**அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம்: புஹாரி, அபூதாவுத்.**

هَٰذَا بَلَٰغٌ لِّلنَّاسِ وَلِيُنذَرُوا۟ بِهِۦ وَلِيَعْلَمُوٓا۟ أَنَّمَا هُوَ إِلَٰهٌ وَٰحِدٌ وَلِيَذَّكَّرَ أُو۟لُوا۟ ٱلْأَلْبَٰبِ

14-52 *மனிதர்கள் எச்சரிக்கப்பட்டு இலாஹு ஒன்றேயொன்றுதான் என்று அவர்கள் உறுதியாக அறிந்துக்கொள்வதற்கும் அறிவுடையோர் நல்லுணர்ச்சி பெறுவதற்கும் (குர்ஆன்) இது ஓர் அறிக்கையாகும்.*

இத்தனை நபிமார்களும் உண்மையை உணர்த்துவதற்காகவே என்றால் நாம் ஏன் உண்மையை மறைக்கவேண்டும்? இவ்விஷயமாய் இன்னும் சில விபரங்கள் தரவேண்டியதாய் இருக்கிறது. பொறுமையோடு செவிதாழ்த்தவும்.

**(4)**

**தௌ**ஹீதுப் பிரகாரம் அல்லாஹ்வுடைய தாத்தாகிய உஜுது தவிர மற்றக் காரணகாரியங்கள் சிருஷ்டிகள் தனித்தவை அல்லது முஸ்தஹக்கிலான உஜுதுகள் உண்டென்றும் இதுவே ஐந்தாவது நூற்றாண்டுவரையுள்ள ஒலிமார்களின் கஸ்பு என்றும் "தப்ஸீர் றூஹுல்பயான்""றிஸாலத்துல் குஸைரிய்யா" போன்ற சில கிதாபுகளில் ஒரு சில பின்பற்றல்வாதிகள் எழுதியிருக்கிறார்கள்.**மேலும்,"அப்து" வேறு,"றப்பு" வேறு என்ற கொள்கைதான் மனம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தௌஹீது என்றும் இதைத்தவிர வேறு தௌஹீதுகளை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றும், ஷெய்குஸக்கரியாவுல் அன்ஸாரி, ஷெய்கு இப்னு ஹாஜர் போன்றவர்கள் சில கிதாபுகளில் எழுதுகிறார்கள்.** அல்லாஹ்வுடைய உஜுதுதவிர உஜுது இல்லையென்பதும் லாமவுஜுத இல்லல்லாஹ் என்பவை போன்றவுமான தௌஹீது ஐந்தாம் நூற்றாண்டுக்குப்பின் உண்டானதென்றும் இவ்விதமான தௌஹீதில் விஷேடபலன் இல்லையாதலால் இதைப் பேசவே கூடாதென்றும் இதைப் பேசுவதால் பிரத்தியட்ச விரோதம் ஏற்படுகின்றதென்றும் **இந்த தௌஹீதைப் பேசுவது ஹறாமென்றும் "றூஹுல்பயான்""றசாயிலுல் மதீனா" போன்ற கிதாபுகளில் இப்னு ஹாஜர் இமாமுடைய "துஹபா" போன்ற கிதாபுகளிலும் ஒரு சாரார் கூறியிருக்கிறார்கள்.** இவ்விதமான மதிமாறாட்டமான, சுயசிந்தனையில்லாத ஒரு சிலர் தங்களை இமாம்கள், எழுத்தாளர்கள் என்று கணித்துக்கொண்டு குர்ஆன், ஹதீஸ்களுக்கும் பகுத்தறிவுக்கும் மாறாய் எழுதியுள்ள மூடமக்களின் அறிவுரைகளையும் மூடத்தனமான (பத்துவா) தீர்ப்புக்களையும் பாடமிட்டுக்கொண்ட மக்கள் பட்டதாரிகள் உண்மையை மறைப்பதும், மறுப்பதும் ஆச்சரியமேயல்ல.

۞ أَلَمْ تَرَ إِلَى ٱلَّذِينَ بَدَّلُوا۟ نِعْمَتَ ٱللَّهِ كُفْرًا وَأَحَلُّوا۟ قَوْمَهُمْ دَارَ ٱلْبَوَارِ ﴿٢٨﴾

14-28 *அல்லாஹ்வின் அருளை (நி:மத்தை) குபிரைக்கொண்டு மாற்றித் தங்கள் ஜனங்களையும் அழிவுக்கிடங்கில் இறக்கிவிட்டவர்களை நீர் பார்க்கவில்லையா?*

இவ்வித வேஷதாரிகளான ஒரு சில ஷைத்தான்கள், தஜ்ஜால்கள் சிறிதேனும் குர்ஆன், ஹதீஸ்களை ஆராய்ந்து விளங்கியறியாமால் ஒருவரையொருவர் கண்மூடித்தனமாகப் பின்பற்றிப் பொருளையும் புகழையும் சம்பாதிக்க விரும்பியே நூலெழுதும் வேலையில் ஈடுபட்டார்கள் என்பது தற்காலப்பட்டதாரிகளிலும் அநேகருக்குத் தெரியாத ஒரு விஷயம்தான். பெரும்பாலான **தற்காலப்பண்டிதர்கள் தொழிலுக்காகக் கல்வியைப் பெற்றுக்கொண்டார்களேயன்றி ஆராய்வுக்காகப் பெற்றுக்கொள்ளவேயில்லை.** ஆகவே, உண்மையைக் கண்டறிவது கடினம்தான். எம்முன்னோரில் மிக அநேகர் சிற்சில விஷயங்களில் எமக்கு நன்மை செய்துள்ளார்கள் என்பது உண்மையே என்றாலும் ஈமானுடைய, கலிமாவுடைய, தௌஹீதுடைய விஷயங்களில் முஸ்ரிக்கீன்களை ஒத்தோடி ஷைத்தான்களாகவே மாறியிருந்தார்கள் என்பதும் பூரண உண்மை. இதைக் குர்ஆன் எமக்கு விளக்கம் தருகிறது. இந்தவிதமான மதிமாறாட்டமான எம் அறிவீனத்தால் நம்பிக்கொண்டும் அவர்களுடைய நூல்களை ஆராய்வில்லாமல் பாடமிட்டுக் கொண்டும் அவர்களால் காட்டப்பட்ட நேரான பாதையிலேயே நாம் செல்வதாக நம்பிக்கொண்டும் இருக்கிற நாம், உண்மையை மறுக்கவும் குர்ஆன், ஹதீஸ்களைப் புரட்டவும் தீவிரவாதிகளாய் மாறவும்தானே செய்வோம்.

فَرِيقًا هَدَىٰ وَفَرِيقًا حَقَّ عَلَيْهِمُ ٱلضَّلَٰلَةُ ۗ إِنَّهُمُ ٱتَّخَذُوا۟ ٱلشَّيَٰطِينَ أَوْلِيَآءَ مِن دُونِ ٱللَّهِ وَيَحْسَبُونَ أَنَّهُم مُّهْتَدُونَ

7-30 *சிலரை அவன் நேரான வழியில் செலுத்தியிருக்க மற்றவர்கள் மீது வழிகேடே விதிக்கப்பட்டதன் காரணம் அவர்கள் அல்லாஹ்வையன்றி ஷைத்தான்களையே தங்கள் அவ்லியாக்களாக எடுத்துக்கொண்டதுடன் தாங்கள் நிச்சயமாக நேரான பாதையில் இருப்பதாக எண்ணிக்கொண்டதுதான்.*

இதேபோல குர்ஆனில் தென்படுகிற மற்றும் ஆயத்துக்களையும் ஆராய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம். சரியான தர்க்கரதியான குர்ஆன், ஹதீஸ்களின் எவ்விதமான ஆதாரங்களுமேயில்லாமல் எழுதப்பட்ட பல நூற்றுக்கணக்கான புத்தகங்கள் அறபு எழுத்தில் எழுதப்பட்டிருப்பதால் அவை நம்மிடையே மதிப்புடைய கிதாபுகளாய்க் கணிக்கப்படுகின்றன. **கிதாபில் எழுதப்பட்டுள்ள விஷயம் என்றால், அது ஒரு மௌலானா அல்லது ஆரிபுபில்லா அல்லது ஒலியுல்லாஹ்வினால் எழுதப்பட்டதுதான் என்று நாம் நம்பிவிடுகிறோம்.** மேலும், அந்த எழுத்தாளர் நாளொன்றுக்கு 1000 ரக்கா அத்துத் தொழுதவர் என்று நாம் கேள்விப்படும்போது நாம் அதை மறுக்க, ஆராயமுடியாதவர்களாய் நூற்கேள்வியறிவில் கட்டுண்டு விடுகிறோம். நாம் அவர்களை அவ்லியாக்களாகக் கண்டது அறபு பாஷை, தாடி, தலைப்பாகை, தொழுகை, கனிவான வசனநடைகளைக் கொண்டேயல்லாமல் அறிவைக்கொண்டல்லவே! **வேஷத்தில் ஏமாறும் நாம் கூட்டம் கூட்டமாக இருக்கும்போது வேஷதாரிகளும் இருக்கத்தானே செய்வார்கள்.**

وَكَذَٰلِكَ جَعَلْنَا فِي كُلِّ قَرْيَةٍ أَكَٰبِرَ مُجْرِمِيهَا لِيَمْكُرُوا۟ فِيهَا ۖ
وَمَا يَمْكُرُونَ إِلَّا بِأَنفُسِهِمْ وَمَا يَشْعُرُونَ ﴿١٢٣﴾

6-123 *அன்றி இவ்வாறே ஒவ்வோர் கிராமத்திலும் ஆங்காங்குள்ள பாவிகளையே நாம் தலைவர்களாக்கியுள்ளோம். அங்கு அவர்கள் விஷமம் செய்துக்கொண்டிருப்பார்கள். எனினும் அவர்கள் தங்களுக்கேயன்றி சதிசெய்து விடமுடியாது. (இதனை) அவர்கள் உணர்ந்து கொள்ளமாட்டார்கள்.*

**சகோதரனே!**

றசூல்(ஸல்) அவர்கள் இவ்வுலகுக்கு வந்தும் சுமார் 1400 வருடங்களாகிவிட்டன. அவர்களால் கொண்டுவரப்பட்ட சூரியப்பிரகாசம்போன்ற குர்ஆனும் பூரணச்சந்திரனைப்போன்ற ஹதீஸ்களும் மின்னொளிபோன்ற அறிவும் எம்மிடையே இருக்கும்போதும் நாம் இன்னும் ஏமாளிகளாகக் குருடர்களாக வாழ்வதில் அர்த்தமேயில்லை. ஆகிறாவில் கைசேதப்படவேண்டிய அவசியமும் இல்லை. அறிவில்லாத அமல் பிரயோசனம் தரவேதராது. ஆகையால் முதலில் உண்மையான அறிவைத்தேடிக்கொண்டு அமலில் ஈடுபடுவதே வெற்றிக்குரிய வழியாகும். கண்மூடித்தனமான பின்பற்றல் எம்மைக் கரைசேர்க்காது என்பது உண்மை. முன்பு ஸிர்குடைய பாடத்தில், எம்மை ஏமாற்றிவந்த ஷைத்தான் கூட்டத்தின் விபரத்தை விபரித்துள்ளேன். மீண்டும் அவற்றை வாசித்து விளங்கிக் கொள்வது நல்லது. தௌஹீதின் உண்மையை எதிர்ப்போர் முஷ்ரீக்கின் கூட்டத்தினர் என்பதையும் தௌஹீதை மறைக்கமுற்படுவார் வழிதவறியவர்கள் என்பதையும் தௌஹீதில் சிற்சில கோணலை உண்டுபண்ணுவோர் நிராகரிப்போர் என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும் இது விஷயமாய்க் குர்ஆனுடைய சில ஆயத்துகளை நோட்டமிட்டுப்பார்.

وَمِنَ ٱلنَّاسِ مَن يَقُولُ ءَامَنَّا بِٱللَّهِ وَبِٱلْيَوْمِ ٱلْءَاخِرِ وَمَا هُم بِمُؤْمِنِينَ

2-8 *அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசம் கொண்டிருக்கிறோமென்று கூறுவோரும் மனிதரில் சிலருண்டு. ஆனால் அவர்கள் விசுவாசம் கொண்டவர்களல்ல.*

يُخَٰدِعُونَ ٱللَّهَ وَٱلَّذِينَ ءَامَنُوا۟ وَمَا يَخْدَعُونَ إِلَّآ أَنفُسَهُمْ
وَمَا يَشْعُرُونَ

2-9 *அவர்கள் அல்லாஹ்வையும் மூமீன்களையும் வஞ்சிகின்றனர். ஆனால் அவர்கள் தங்களையேயன்றி வஞ்சிக்கமுடியாது. அவர்கள் உணர்ந்து கொள்ளமாட்டார்கள்*

فِى قُلُوبِهِم مَّرَضٌ فَزَادَهُمُ ٱللَّهُ مَرَضًا ۖ وَلَهُمْ عَذَابٌ أَلِيمٌۢ بِمَا كَانُوا۟
يَكْذِبُونَ

2-10 *அவர்களுடைய இருதயங்களில் நோய் ஒன்றுண்டு (உளநோய்). அவர்களுக்கு அல்லாஹ் அந்த நோயை அதிகப்படுத்தியும் விட்டான். அவர்கள்பொய் சொல்வதனால் மிக்க துன்புறுத்தும் வேதனையும் அவர்களுக்குண்டு. (இவாயத்தில் குறிப்பிடப்பட்ட உளநோயின் விபரம் இதே நூலில் கலிமாவின் கருத்து என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது)*

وَإِذَا قِيلَ لَهُمْ لَا تُفْسِدُوا۟ فِى ٱلْأَرْضِ قَالُوٓا۟ إِنَّمَا نَحْنُ مُصْلِحُونَ

2-11 *அவர்களை நோக்கிப் பூமியில் விஷமம் செய்யாதீர்கள் என்று கூறினால் அதற்கவர்கள் நாங்கள் சமாதானத்தை உண்டாக்குவோர்தான் என்று கூறுகின்றனர்.*

أَلَآ إِنَّهُمْ هُمُ ٱلْمُفْسِدُونَ وَلَـٰكِن لَّا يَشْعُرُونَ

2-12 *நிச்சயமாக அவர்கள் விஷமிகளேயன்றோ! ஆனால் அவர்கள் உணர்ந்து கொள்ளவேமாட்டார்கள்.*

وَإِذَا قِيلَ لَهُمْ ءَامِنُوا۟ كَمَآ ءَامَنَ ٱلنَّاسُ قَالُوٓا۟ أَنُؤْمِنُ كَمَآ ءَامَنَ
ٱلسُّفَهَآءُ ۗ أَلَآ إِنَّهُمْ هُمُ ٱلسُّفَهَآءُ وَلَـٰكِن لَّا يَعْلَمُونَ ﴿١٣﴾

2-13 *மேலும் அவர்களை நோக்கி மனிதர்கள் விசுவாசம் (ஈமான்) கொண்ட பிரகாரமே நீங்களும் விசுவாசம் கொள்ளுங்கள் என்று கூறினால் (அதற்கு) அவர்கள் மூடர்கள் விசுவாசம் கொண்டது போல நாங்களும் விசுவாசம் கொள்வதா? என்று கூறுகிறார்கள். நிச்சயமாக இவர்கள் மூடர்களேயன்றோ. ஆனால் அவர்கள் (இதை) உணர்ந்து கொள்ளமாட்டார்கள்.*

இவ்விதமான ஆயத்துக்களைப் பல கண்ணோட்டங்களோடு ஆராயவும். இவ்வகையினரைக் குறித்து

أُو۟لَـٰٓئِكَ ٱلَّذِينَ ٱشْتَرَوُا۟ ٱلضَّلَـٰلَةَ بِٱلْهُدَىٰ فَمَا رَبِحَت تِّجَـٰرَتُهُمْ وَمَا
كَانُوا۟ مُهْتَدِينَ ﴿١٦﴾

2-16 *நேரான வழிக்குப்பதிலாகத் தவறான வழியை விலைக்கு வாங்கிக் கொண்டவர்கள் இவர்கள்தான். எனவே இவர்களுடைய வியாபாரம் இலாபமளிக்கவில்லை. அன்றி, இவர்கள் நேர்வழி பெற்றவர்களாகவும் இருக்கவில்லை.*

என்று குர்ஆன் கூறுகிறது. மேலும், ஒருவர் தீயை மூட்டி அவரைச் சூழவும் பிரகாசம் ஏற்பட்ட சமயத்தில் அல்லாஹ் இவர்களுடைய பிரகாசத்தைப் போக்கிப் பார்க்கமுடியாத காரிருளில் விட்டுவிட்டான். இவர்கள் செவிடர்களாகவும், குருடர்களாகவும், ஊமையர்களாகவும் ஆகிவிட்டார்கள். இவர்கள் மீளவேமாட்டார்கள் என்றும் அடர்ந்த இருளும் இடியும் மின்னலும் உடைய மேகம் பொழியும் மழையில் அகப்பட்டுக்கொண்டவர்களை ஒத்திருக்கிறார்கள் என்றும் இடிமுழக்கங்களால் மரணத்துக்குப் பயந்து தங்களுடைய விரல்களைத் தங்களுடைய காதுக்குள் நுழைத்துக் கொள்ளுகின்றனர் என்றும் அல்லாஹ் இவ்வகையினரை வருணிக்கின்றான். **ஆகவே, உண்மையான சுத்தசத்தியமான தௌஹீதின் பிரகாசம் இவர்களுடைய அறிவுக்கண்ணைப் பறிப்பதால் அவ்வுண்மையை எவ்வித ஆதாரங்களுமே இல்லாமல் இவர்கள் மறுக்கவும் பிழையென்று காணவும்தானே செய்வார்கள்.**

وَمِنَ ٱلنَّاسِ مَن يُجَـٰدِلُ فِى ٱللَّهِ بِغَيْرِ عِلْمٍ وَيَتَّبِعُ كُلَّ شَيْطَـٰنٍ مَّرِيدٍ

22-3 *மனிதர்களில் பலர் கல்வியறிவுடைய எவ்வித ஆதாரங்களும் இன்றியே அல்லாஹ்வைப்பற்றித் தர்க்கித்து மூரியாட்டம் செய்யும் ஷைத்தான்களையே பின்பற்றுகிறார்கள்.*

ذَٰلِكَ بِأَنَّ ٱللَّهَ نَزَّلَ ٱلْكِتَـٰبَ بِٱلْحَقِّ ۗ وَإِنَّ ٱلَّذِينَ ٱخْتَلَفُوا۟ فِى ٱلْكِتَـٰبِ لَفِى

شِقَاقٍۭ بَعِيدٍ

2-176 *இதன் காரணம், நிச்சயமாக அல்லாஹ் உண்மையாக வேதத்தை இறக்கியிருக்க (அதன் வசனங்களை) மறைப்பதுதான். மேலும் வேதத்தைப் புரட்டுகிறவர்கள் நிச்சயமாக (நேர்வழியைவிட்டுப்) பிரிந்து வெகுதூரத்தில் இருக்கிறார்கள்.*

قُلْ هَـٰذِهِۦ سَبِيلِىٓ أَدْعُوٓا۟ إِلَى ٱللَّهِ ۚ عَلَىٰ بَصِيرَةٍ أَنَا۠ وَمَنِ ٱتَّبَعَنِى ۖ وَسُبْحَـٰنَ

ٱللَّهِ وَمَآ أَنَا۠ مِنَ ٱلْمُشْرِكِينَ

12-108 *நீர் கூறும், இதுவே எனது வழி. அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறேன். பிரத்தியட்சமான ஆதாரத்தின்மீதே நானும் என்னைப்பின்பற்றியவர்களும் இருக்கிறோம்.அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். ஆகவே இணை ஏற்படுத்துவோரில் நான் ஒருவனல்ல.*

شَهِدَ ٱللَّهُ أَنَّهُۥ لَآ إِلَـٰهَ إِلَّا هُوَ وَٱلْمَلَـٰٓئِكَةُ وَأُو۟لُوا۟ ٱلْعِلْمِ قَآئِمًۢا بِٱلْقِسْطِ ۚ لَآ

إِلَـٰهَ إِلَّا هُوَ ٱلْعَزِيزُ ٱلْحَكِيمُ

3-18 *நீதிமானாகிய அல்லாஹ் சாட்சி கூறுகிறான். நிச்சயமாகஅல்லாஹ்வைத் தவிர வேறு இலாஹு இல்லை.அவ்வாறே மலக்குகளும் கல்விமான்களும் அவனைத்தவிர(வணங்கப்படுகிற சிருஷ்டிகளான) வேறு இலாஹு இல்லை. (அவன்) மிகைத்தோன். ஞானமுடையோன்.*

**ஹதீஸ்:** ***ஆதம்(அலை) அவர்களைச் சிருஷ்டித்த காலத்துக்கும் கியாமத்துக்கும் இடையில் தஜ்ஜாலின் தீங்கைப்போல் அவ்வளவு பெரிய தீங்குடைய ஒரு சிருஷ்டியும் கிடையாது.***

**ஆதாரம்: புகாரி.**

இந்த ஹதீஸில் றசூல் (ஸல்)அவர்களால் கூறப்பட்ட“தஜ்ஜால்” என்பதன் உண்மை என்ன? என்பதை மிக நுட்பமாய் ஆராய்ந்தால், தஜ்ஜால் என்பது ஒரு தனிமனிதனல்ல என்பதும், தஜ்ஜால் என்பது வழிகெட்ட, வழிகெடுக்கிற கொள்கையுடைய ஒரு கூட்டத்தின் பெயரே என்பதும் தெரியவருகிறது. நஸாய் அவர்கள், அபூஹுறைறா(றலி) அவர்கள் மூலமாக வரப்பட்டதென்று கூறுகிற ஒரு ஹதீஸும் அறபு அகராதியும் இவ்வுண்மையை உறுதிப்படுத்துகின்றன.

**அபூஹுறைறா (றலி) அவர்கள் மூலம் தரப்பட்ட ஹதீஸாவது:**

***அந்திய காலத்தில் தஜ்ஜால் (கூட்டம்) வெளியாகும். அவர்கள் உலகத்தின் மார்க்கத்தை தாறுமாறாக்குவார்கள். அவர்கள் மனிதர்களை வஞ்சிப்பதாக ஆட்டுத்தோல்களைத் தங்கள் மேல் போட்டுக்கொள்வார்கள். (அதாவது அவர்களுடைய வெளிக்கோலம் சாந்தகுணமுடைய ஆட்டைப்போல் இருக்கும்படி செய்துகொள்வார்கள். ஆயினும் அவர்களுடைய உட்கோலம் ஓநாயின் குணத்தை ஒத்ததாகவேயிருக்கும்) அவர்களின் நாவு தேனைப் பார்க்கிலும் இனிமையாய் இருக்கும். அவர்களின் இருதயங்கள் ஓநாயின் இருதயமாய் இருக்கும்.***

***ஆதாரம்: கன்சுல் உமாமால் பாகம் 71 பக்கம் 124***

இதேபோல உமர் (றலி) அவர்களால் கூறப்பட்ட ஒரு ஹதீஸும் தென்படுகிறது.

இந்த ஹதீஸில் தஜ்ஜால் என்பது வழிகெட்ட, வழிகெடுக்கிற ஒரு கூட்டமே என்பதும் தென்படுகிறது. அறபு அகராதி தஜ்ஜால் என்ற சொல்லின் பொருளை,“பிரயாணம் பண்ணும் ஒரு கூட்டமனிதர்கள், வியாபாரத்திற்குச் சாமான்களைக் கொண்டுபோகிறவர்கள்” என்று விளக்கம் தருகிறது.

(லெயின்ஸ்அறபிக், இங்லீஸ், லெக்சிகொன், 1ஆம் புத்தகம், 3ஆம் பாகம் 583ஆம் பக்கம் பார்க்கவும்). றசூல்(ஸல்) அவர்கள் கஸ்பின்போது தஜ்ஜாலைக் கண்டதாகச் சில செய்திகள் தென்படுகின்றன. ஆயினும் நாம் கூறுவதற்கு அச்செய்திகள் முரணானவையேயல்ல. ஏனென்றால் கஸ்பின் வெளியாகும் தோற்றங்கள் பெரும்பாலும் அறிகுறியானவைகளாக, உவமைகளாகவே இருக்கின்றன. றசூல்(ஸல்) அவர்களின் காட்சியில் வெளியான அதே தோற்றத்திலேயே தஜ்ஜால் வெளியாவான் என்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. சில தருணங்களில் கஸ்பின்போது ஒரு மனிதனை ஒப்பாய்க் காட்டுவது ஒரு கூட்டத்தையும் குறிப்பிடலாம் என்பது றசூல் (ஸல்) அவர்கள் மூலமே எமக்குத் தெரியவருகிறது. உதாரணமாக துன்யா ஒரு வயோதிபப் பெண்ணுடைய தோற்றத்தில் மிஹ்றாஜின் போது காட்டப்பட்டது என்பதை நாம் அறிகிறோம். நாயகத்தின் தோழர்களில் ஒருவர் ஒரு காட்சியின் போது, அறபு நாட்டு முந்திய அரசர்களில் ஒருவரான நுஹ்மான் பின் அல்முன்சிர் என்பவரைக் கண்டேனென்று கூறியபோது, றசூல்(ஸல்) அவர்கள் அது அறபு நாட்டு எல்லா மக்களையும் குறிப்பிட்ட உவமையாகும் என்று வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். ஆகவே, தஜ்ஜால் என்பது ஒரு கூட்டத்தின் பெயரே என்பது தெரியவருகிறது. இந்த தஜ்ஜாலுடைய இலட்சணங்களில் ஒற்றைக் கண்குருடானவன் என்பதும் ஒன்றாகும். இதை ஆலோசனைக்கெடுத்தால் மார்க்கத்தின் உண்மையை அறியும் கல்புக்கண்தான் தஜ்ஜாலுடைய குருட்டுகண் என்பது தென்படுகிறது. (அதாவது அறிவுக்கண், வலதுகண் என்பது ஆகிறாவை அறியும்அறிவு என்பது பொருள்படும்).

குர்ஆனில் சிற்சில விஷயங்களை உவமைகளாகவே இறைவன் விளக்கியிருப்பதுபோலவே றசூல்(ஸல்) அவர்களும் சிற்சில விஷயங்களை உவமைகளாக விளக்கியுள்ளார்கள். இந்த தஜ்ஜால்கள் யார்? என்பதை நோக்கினால், சிற்சில அறபு மத்ரஸாக்களில் தப்ஸீர் ஜலாலைன், இப்னுகதீர், இப்னுஜரீர், துஹபா, றஸாயிலுல் மதீனா, கசசுல் அம்பியா போன்ற நூற்களை வாசித்துப் பாடமிட்டு ஸிர்க்கைத் தௌஹீதாயும்,தௌஹீதை ஸிர்க்காயும் விளங்கிக்கொண்ட ஞானமற்ற ஒருசில பட்டதாரிகளேதான் என்பது தென்படுகிறது. இவ்விதமான அறிவீனர்களை மௌலானா, மௌலவி, அல்லாமா, ஆலஹஸறத், இல்முக்கடல் என்றெல்லாம் தகுதிற்கு அப்பாற்பட்ட பட்டங்களைச் சூட்டிப் பாமரமக்கள்அழைப்பதால் இவர்கள் தங்களை ஏதோவெல்லாம் பெரிதாகக் கற்பனைப்பண்ணிக்கொண்டு, அல்லாஹ்வுடைய வஹ்தானியத்தை நிலைநிறுத்தநாடி றசூல்மார்களால் உபதேசிக்கப்பட்டு, யுத்தமேசெய்து நிலைநிறுத்தப்பட்ட உண்மையான தௌஹீதை எதிர்க்கிறார்கள்,மூடிமறைக்கிறார்கள். தெய்வீக ஞானத்தையே பிழையாகக் காணுகிறார்கள். உண்மையைக் கூறும் மக்களுக்குத் தஜ்ஜால் என்று கூடப்பட்டம் சூட்டுகிறார்கள். இவ்விதபட்டதாரிகளின் அறிவுக்கண் குருடாயிருப்பதும் அவர்களே சிறுசிறு தஜ்ஜால்களாக இருக்கிறார்கள் என்பதும் அறிவுடையோருக்குத் தென்படவே செய்கிறது.

ஆனால், இவ்வகையினருக்குத் தாங்கள் அறிந்துள்ள பெரும்பாலான தப்ஸீர் வியாக்கியானங்கள் ஆதாரமற்ற வெறும் யூகங்களே என்பதும், இவர்கள் கிரேக்க, பாரசீக தத்துவ விளக்கங்களைத் தந்தவர்கள் ஆராய்வில்லாத பின்பற்றல் வாதிகளே என்பதும் தெரியாது. ஏனென்றால் இவர்கள் தங்கள் கல்வியை மனப்பாடம் பண்ணிக்கொண்டார்களேயன்றி அக்கல்வியின் உண்மையை ஆராய்தல் செய்வதேயில்லை.

**ஆகவே, உண்மையான தௌஹீதை விளங்கித் தெளிவு பெறாமல் அவ்வுண்மையை எதிர்க்கிற ஒவ்வோர் கல்விமானும் தஜ்ஜாலுடைய (கையாயுதமாக) சிஷ்யனாக இருக்கிறான். ஷைத்தானுடைய மாணவனாக இருக்கிறான் என்பதே உண்மையாகும்.**

**ஹதீஸ்:** ***என்னுடைய உம்மத்தில் ஒரு கூட்டம் எப்பொழுதும் சத்தியத்தின்பேரில் ஜிஹாது செய்துகொண்டே இருப்பார்கள். தங்கள் எதிரிகளிடம் வெற்றிபெற்றுக் கொண்டேயிருப்பார்கள். இறுதியாகக் கடைசியிலுள்ள சனங்கள் தஜ்ஜாலை எதிர்த்துப் போரிடுவார்கள்.***

**ஆதாரம்:அபூதாவுத்**

**ஹதீஸ்:** ***இந்த மார்க்கம் கியாமத்து நாள்வரையில் நிலைத்திருக்கும். முஸ்லிம்களில் ஒரு கூட்டத்தார் உண்மையான மார்க்கத்திற்காக யுத்தம் செய்துக்கொண்டே இருப்பார்கள்.***

ஒரு விஷயத்தை வெளிப்படுத்துவதற்கும், வெளிப்படுத்தாமல் மறைப்பதற்கும் ஓர் அடிப்படை இருக்கிறது. அதாவது எடுத்துக்கொண்ட விஷயத்தை நிரூபிக்கக் கூடிய ஆதாரங்கள் தரப்படவில்லையானால் அது மறைக்கப்படவும்,ஒவ்வொருவருடைய அறிவுக்குத் தகுந்தபடி பேசப்படவும் வேண்டிய ஒரு விஷயமாகும். இவ்வினத்தைச் சேர்ந்ததுதான் கலாகத்துடைய விஷயம். கலாகத்துடைய விஷயத்தை நிரூபிக்கக்கூடிய ஆதாரங்கள் தரப்படவேயில்லை. இவ்ஷயம் அனுபவத்தினால் உண்மைகொள்ள வேண்டியதாயும் அறிவில் அமையாததாயும் இருக்கிறது. ஆனால் தௌஹீதுடைய விஷயம் இப்படிப்பட்டதல்ல. தௌஹீதை நிரூபிக்கக்கூடிய மிகப்பல ஆதாரங்கள் குர்ஆன், ஹதீஸ்களில் தரப்பட்டிருக்கின்றன. மேலும் மனிதன் புத்தியுடைய ஆராய்வினால் தௌஹீதுடைய விஷயத்தைத் தெளிவாய் விளங்கிக்கொள்ளக்கூடியதாயும் இருக்கிறது. அது தவிர தௌஹீதை வெளிப்படுத்த வேண்டுமென்ற கண்டிப்பான ஏவலும் இருக்கிறது. **ஆகவே, தௌஹீதை வெளிப்படுத்தக் கூடாதென்பது அபூஜஹ்லைப் பின்பற்றிய முஸ்ரிக்குகளின் வாதமேயல்லாமல் அறிவுடைய மனிதனின், உலமாக்களின் வாதமேயல்ல.**

**12ஆவது கேள்வி:**

நங்கள் விபரித்துள்ள உண்மையான தௌஹீதை நோக்கினால், குர்ஆனின் விதிக்குமாறுபோல் தென்படுகிறது. அதாவது தண்ணீரின் குளிர், நெருப்பின் சூடு, தேனின் இனிப்பு, வேம்பின் கசப்பு போன்ற தத்துவங்கள் உண்டு என்னும் கொள்கைக்கு மாறாய்த் தென்படுகிறது. மேலும் இந்த ஏகத்துவ அடிப்படையில் வாழ்வை அமைத்துக்கொண்டால் விரோதிகளை எதிர்ப்பதும் முடியாதுபோல் தென்படுகிறது. றசூல்(ஸல்) அவர்கள் யுத்தமே செய்திருக்கிறார்களே?

**பதில்:**

சிருஷ்டிப்பொருட்கள் எப்போதும் உள்ளவையென்றோ இல்லாதவை என்றோ கூறுவது தௌஹீதின் நோக்கமல்ல. சர்வசிருஷ்டிகளும் ஒன்றுக்கொன்று வேறாயும் விதர்ப்பமாயும் தென்படுவதை மருட்சியென்றும் கற்பனையென்றும் கொள்வதே தௌஹீது. கனவுக்காட்சிக்கு மனமே மூலகாரணமாய் இருப்பதுபோல சர்வககன புவனங்களுக்கும் மூலப்பொருளான ஹக்கு ஒன்றே மூலகாரணம் என்றும் அதைவிட வேறு மூலப்பொருளான எந்தக் காரணமும் இல்லையென்றும் ஒப்புக்கொள்வதே தௌஹீதாய் இருக்கிது.

குர்ஆனின் விதிப்படி உறுதிப்பட்டு நீங்காமல் இருக்கிற நாமரூபபேதங்கள் உண்டு என்றும் இந்த நாமரூபபேதங்கள் வஹ்முவாதலால் ஆதாரமான உண்மைப் பொருளே ஹக்கு என்றும் ஏற்றுக்கொள்வதுதான் தௌஹீதின் சாரம்சம். அதாவது சர்வசிருஷ்டிகளும் அல்லாஹ்வைவிட்டு வேறு வேறான உண்மைப்பொருட்கள் என்று நம்பியோர் அல்லாஹ் அரூபியென்றும் அவன் தத்துவம் வேறு என்றும் நம்புகிற மருட்சியை மாய்த்து உண்மைப்பொருள் ஒன்றேயென்றும் அதன் தத்துவமே பற்பல தோற்றங்களில் வெளியாகிக் கொண்டிருக்கிறது என்றும் விளக்கமளிப்பதே தௌஹீது. இது குர்ஆனுக்கோ, பகுத்தறிவுக்கோ மாற்றமான விஷயமேயல்ல. ஆனால் **அறிவினால் உணரப்படுகிற உண்மைகளுக்கும் வஹ்மினால் உணரப்படுகிற நாமரூபபேதங்களுக்குமிடையில் பிரித்தறிவது மனிதரில் பெரும்பாலாருக்கு முடியாதஓர் காரியமாகவே தென்படுகிறது. ஆயினும் "மன்கூல்""மஹ்கூல்" சுருதி, யுக்திபிரமாணங்களை அறிந்த அறிவாளர்களுக்கு உண்மை தென்படவே செய்கிறது.**

அடுத்தது ஏகத்துவ அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் எதிரியை எதிர்க்கமுடியாது என்பதும் மருட்சியேயாகும். ஏனென்றால் நாம் எம்முகத்தில், அக்குளில், அரையில் உள்ள உரோமங்களை நீக்குகிறோம். நகம் களைகிறோம். நமக்குப் பிடித்த ஓர் நோய்க்காகக் கசப்புள்ள மருந்தை அருந்துகிறோம். பட்டினி கிடந்து பத்தியம் காக்கிறோம். ஏன்? நாம் வேறு, முடி, நகம் வேறு, நோய்வந்த உடல்வேறு என்ற துவேஷபுத்தியினால் தான் அப்படிச் செய்கிறோமா? இல்லை. சீரிய, தூய மனப்பான்மையோடுதானே செய்கிறோம். இதேபோல ஏகத்துவ அடிப்படையில் வாழ்வை அமைத்துக்கொள்பவர்களும், அவர்களுடைய எதிரிகளை எதிர்ப்பதும் தீயதை நீக்குவதும் தூயநன்னோக்கோடல்லாமல் வேறு வேறு என்ற துவேஷபுத்தியினாலல்ல. றசூல் (ஸல்) அவர்கள் மாபெரும்யுத்தங்களில் ஈடுபாடு கொண்டதும் தூய, நல்ல, ஏகத்துவ மனப்பான்மையோடுதானல்லாமல் வேறு வேறு என்னும் துவேச உணர்வினாலல்ல.

## 010 குர்ஆன் ஹதீஸ்களில் தென்படும் வேறு சில சந்தேகங்கள்.

குர்ஆனில் மனிதனுடைய அறிவுக்கெட்டாத சில விபரங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக குர்ஆன் இறைவனை "ஹையுல்கையூம்" என்று கூறுகிறது. இறைவன் நித்திய ஜீவனையுடையவன் நிலையாக என்றும் இருப்பவன் என்பதே இதன் பொருள். அதே குர்ஆன் "வல்லாஹு அலா குல்லிஷையின்கதீர்" என்றும் கூறுகிறது. இறைவன் சர்வவல்லமையும் உடையவன் என்பதே இதன் பொருள். இவ்விருவசனங்களையும் நோட்டமிடும் போது எமக்கு ஓர் சந்தேகம் தோன்றுகிறுது. அதாவது நித்திய ஜீவனாய் நிலையாய் இருப்பவன் தன்னைத்தானே இல்லாமல் ஆக்கிக்கொள்ள வல்லமையுடையவனாய் இருக்கிறானா? ஆம் என்றால் ஹையுல்கையூம் என்ற வசனம் பொய்யாய்விடும். இல்லையென்றால் (கதிர்) சர்வல்லமை உடையவன் என்ற வசனம் பிழையாய்விடும்,இதேபோல் இன்னும் சில விஷயங்கள் குர்ஆனில் தென்படுகின்றன. இவ்வித வசனங்களைநோட்டமிடும்போது மனித அறிவு குழப்பமடையவே செய்யும். இன்னும், குர்ஆனில் الٓمٓ, حٰمٓ, الٓمٓصٓ போன்றசில வசனங்கள் (பரிபாஷைகள்) தென்படுகின்றன. இவ்விதமான விபரங்களைப்பற்றி நாம் பொதுப்படையாய் அறியவேண்டியது என்னவென்றால், மனித அறிவு என்பது சிருஷ்டிக்கப்பட்ட ஒன்றாகும். இறைவனுடைய அஹது என்ற நிலைமை சிருஷ்டியாகிய அறிவில் அணுவேணும் அடங்காத ஒன்றாகும். ஹையுல்கையூம் போன்ற வசனங்கள் அஹதுடைய (மர்த்தபாவை) நோக்கியவையாயும் மனித அறிவுக்கெட்டாதவையாயும் இருப்பதால் நாம் அவற்றைப் பொதுப்படையாய் ஒப்புக்கொள்ள வேண்டுமேயன்றி அறிவினால் ஆராய முடியாதவர்களாயும், ஆராயத் தேவையில்லாதவர்களாயும் இருக்கிறோம். ஆகையால்தான் இதை (அஹதை) நீங்கள் ஆராய்தல் செய்ய வேண்டாம் என்று இறைவனே அறிவிக்கிறான்.

மற்றது **அலிப்,லாம்,மீம்**போன்ற வசனங்கள் முதஸாபிஹாத்தான பல கருத்துகளையுடைய, றசூல்மார், ஒலிமார்களுக்கு வேண்டிய பரிபாஷைகளாய் இருக்கின்றன. ஆகவே இறைவழி செல்லும் ஆரம்ப மனிதர்களுக்கு இவ்வசனங்களின் விபரங்களும் ஆரம்பத்தில் அவசியமில்லாமலே தென்படுகின்றன. ஆகவே இவ்விதமான வசனங்களிலும் ஆரம்ப மூமீன்கள் ஆராய்தல் செய்யவேண்டியதில்லை என்றே நான் கூறுவேன். ஏனென்றால் இவற்றின் உண்மை றசூல்மார்கள் வலிமார்களுக்கேயன்றிப் புலப்படமுடியாது.

இன்று விஞ்ஞான உலகம் பற்பல உண்மைகளைக் கண்டறிந்திருக்கிறது. உதாரணமாக எத்தனையெத்தனையோ நோய்களையும் அவற்றிற்குரிய பற்பல மருந்துவகைகளையும் விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள். இந்த நோய்களில் சில தொற்றுவதாயும், வேறு சில ஒட்டுவதாயும், வேறு சில புதிதுபுதிதாய்த் தோன்றுவதாயும் விஞ்ஞானிகள் எமக்கு விளக்கம் தருகிறார்கள். ஆனால் றசூல்(ஸல்) அவர்களுடைய சில ஹதீஸ்களை ஆராயும்போது விஞ்ஞானிகளின் அறிவு இன்னும் முற்றுப்பெறாமையால், அவர்கள் கண்டறிந்த கண்டுபிடிப்புகளில் சிலபிழைகளும் உண்டென்பது தென்படுகிறது. அதாவது எந்த ஓர் நோயும் ஒட்டுவதோ தொற்றுவதோ இல்லையென்று சில ஹதீஸ்கள் அறிவிக்கின்றன. (ஹதீஸ்கள் நீளமாய் இருப்பதால் பொழிப்புமட்டும் இங்கே தரப்படுகிறது.) ஒவ்வோர் நோயும் இறைவனால் அவரவருக்கென்றே அனுப்பப்படுவதாகவும் ஒவ்வோர் நோய்க்கும் (மரணத்தைத் தவிர) மருந்தையும் இறைவன் உருவாக்கியே இருப்பதால் நீங்கள் நோய்க்கு மருந்து செய்யுங்கள் என்றும் சில ஹதீஸ்கள் விபரிக்கின்றன. இவ்விதமான ஹதீஸ்கள் தற்காலத்தில் நாம் கண்டறிந்துள்ள உண்மைகளுக்கு மாறானவைபோல் தென்பட்டாலும் ஹதீஸ்கள் பிழையானவை என்று எம்மால் கணிக்கமுடியாது. ஏனென்றால் எம்முடைய ஆராய்வு இப்போது நிரப்பமானது என்று கூறமுடியாது. றசூல்(ஸல்) அவர்களுடைய சொல் உண்மையிடத்திருந்தே பிறந்தது. ஆகையால் அவர்களுடைய சொல்லே உண்மையாய் இருக்கமுடியும். எம்முடைய ஆராய்வு முற்றுப்பெறும் போது றசூலுடைய சொல்லே உண்மையானதென்று நாம் காணக்கூடும்.

இதேபோல ஆகிறா, நரக, சுவர்க்கங்களின் வர்ணனைகள், இபாதத்துக்களின் தன்மைபோன்ற விஷயங்களில், ஹதீஸ்களில் பற்பல முரண்பாடுகளும், ஒன்றுக்கொன்று நேர்மாறானவைபோலும் தென்படுகின்றன. ஆனால் ஹதீஸ்கள் எவையுமே அப்படி ஒன்றுக்கொன்று நேர்மாறானவையோ முரண்பாடானவையோ அல்ல. இந்த ஹதீஸ்கள் எவரெவர் முன்நிலையில் எந்தெந்தச் சமயங்களில் என்னென்ன நோக்கோடு கூறப்பட்டவை என்பதை நாம் அறிந்து கொள்ளாமையால்தான் அவை ஒன்றுக்கொன்று முரணானவையாய்க் காணுகிறோம். இவ்விதமாய் ஒன்றுக்கொன்று முரணாய்த்தென்படும் ஹதீஸ்களின் உண்மையை உள்ளபடி கண்டறிய முடியாத ஒரு சில முன்னோர்கள் சில ஹதீஸ்களை "லயீப்" என்றும் சிலவற்றைப் பொய்யென்றும் சிலவற்றை (புத்திக்கு எட்டியவற்றை) "சஹீஹ்" என்றும் பிரித்தமைத்தார்கள். இது இன்றுள்ள பெரும்பாலான மௌலவிகளை இருளில் தள்ளிவிட்டிருக்கிறது. இது ஓர் மாபெரும் பிழையாகும். ஹதீஸ்களைப் பொய்யென்றும் லயீப் என்றும் நீக்குவதற்கு இந்த முன்னோர் கையாண்ட யூகம், றாவிகளில் ஒருவர் பொய்யராய், அல்லது பட்டம்பதவியற்ற பாமரனாய் இருக்கிறார் என்பதே. கொள்கை விளக்கம் தெரியாத அந்த முன்னோர், தாங்கள் அறிஞர்களின் பிடியில் சிக்காமல் இருப்பதற்காகவே இந்த யூகத்தைக் கையாண்டிருக்கிறார்கள். இவர்களுடைய நூற்களைப் படிக்கும் மக்கள் அந்த முன்னோரை, நல்லடியார்களான ஒலிமார்களேயென்று நம்பி அவர்களைப் பின்பற்றிச் செல்கிறார்கள். ஹதீஸ் சொன்னவன் பொய்யனா? நல்லவனா? கெட்டவனா? என்பது நமக்கு அவசியமல்ல. சொல்லை நோக்கு, சொல்பவனை நோக்காதே என்பதற்கிணங்க, அவன் கூறுவது உண்மைதானென்றால் அதை நாம் ஏற்றுக்கொள்வது பிழையல்ல. இஸ்லாத்தின் கொள்கை விளக்கம் புரியாத அறிவிலிகளுக்கு மிகமிக அனேக ஹதீஸ்கள் பிழையாய்த் தெரிவது ஆச்சரியமல்ல. றசூல்(ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் அறபுமக்களுக்கு மட்டும் நபியாகவும், அதன்பின் முஸ்லீம்கள், மூமீன்களுக்கு றசூலாகவும்அதற்கு முன்பே உலகமக்கள் அனைவருக்கும் றஹ்மத்தாகவும் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். குர்ஆன் இந்த விபரத்தை எமக்குத் தருகிறது. ஆகவே, அவர்களால் கூறப்பட்ட ஹதீஸ்கள் பலதினுசுகளாக ஒன்றுக்கொன்று முரண்போல் தென்படலாம். சரியான உசூலை அறியாமல் ஏதோ ஒன்றைத் தூக்கிக்கொண்டு மற்றொன்றைப் பிழையாகக் கணிக்கக்கூடாது. குர்ஆன் வசனங்களும் இதேபோலத்தான். **வாக்குவாதத்தில் வெற்றி பெறவேண்டும் என்பது வேறு விஷயம். உண்மையை அறியவேண்டும் என்பது வேறோர் விஷயமாகும்.** வேண்டுமானால் நாம் எவ்வளவும் ஆராய்தல் செய்யலாம். அப்படியில்லாமல் தவறான விபரிப்புக்களையுடைய நூல்களையோ, கிதாபுகளையோ,விளக்கம் கூறுபவர்களுடைய விளக்கங்களையோ பின்பற்றிக்கொண்டு சரிபிழை கணிக்கவும் தீர்ப்புக்கட்டவும் கூடாது. அப்படி தீர்ப்புக்கட்டுவது எம்மை மேலும் மேலும் அறிவீனமான இருளிலேயே நுழைக்கும் என்பது எமது அபிப்பிராயம்.

மேலும், குர்ஆன் ஆயத்தில் ஒரு சிலவும் ஹதீஸ்களில் ஒரு சிலவும் ஒன்றைக்கொண்டு இன்னொன்று மாற்றப்பட்டவையாய் இருக்கின்றன என்பதும் பொதுப்படையாக அறிஞர்கள் எல்லோருடையவும் அபிப்பிராயமாகும். இவ்விஷயம் முஆமலாத்துடைய வெளிப்படையான இல்மின்படி உண்மையான விஷயம்தான். ஆனால் இன்னோர்கண்ணோட்டத்தோடு (முகாஸபத்துடைய இல்மின்படி) ஆராயும்போது குர்ஆன் ஹதீஸ்களில் ஓர் அட்சரம் கூடமாற்றப்படவில்லையென்பதும், ஒவ்வோர் ஆயத்தும் ஹதீஸும் ஒவ்வோர் வகையான மனிதர்களுக்கு விபரிக்கப்பட்டவை என்பதும் ஆயத்துக்களால் ஹதீஸ்களால் சுட்டப்பட்ட இனமக்கள் இறுதிநாள் வரையிலும் இருந்துக்கொண்டுதான் இருப்பார்கள் என்பதும் தென்பதுகிறது. அதாவது மூடனாய் இருப்பவனைச் சுட்டும் ஆயத்தும் ஹதீஸும் அறிஞனுக்கு மாற்றப்பட்டதாய் இருக்கலாம். ஆனால் இறுதிநாள் வரையிலும் மூடர்கள் இருந்து கொண்டிருப்பதால் அவர்களைக் குறிப்பிடப்பட்ட ஆயத்துக்கள் ஹதீஸ்கள் செயலிழந்தவையாய் மாற்றப்பட்டுவிட்டன என்பது பொருந்தாது. ஆனால் அறிஞனுக்கு அவை மாற்றப்பட்டவையென்பதும் மூடனுக்கு அவை நிலையானவை என்பதும் உண்மையேயாகும். ஆகவே விவாதத்தில் வெற்றி

பெறுவதே நோக்கமாகக் கொண்டவர்கள் எதையும் எப்படியும் கொள்ளட்டும். ஆனால் உண்மையை உணரமுற்படும் நாம் பொறுமையோடு ஆராய்ந்துதான் தெளிவுபெறவேண்டும்.

## 011 நாஸ்தீக வாதம்

**நா**ஸ்தீகவாதத்தினால் ஏற்படக்கூடிய சில முக்கியமான சந்தேகங்களையும் ஓரளவு நீக்கிவைத்தால் நல்லதென்று நினைக்கிறேன். பிரபலம்வாய்ந்த நாஸ்தீகவாதிகளான, இங்கர்சால்,வில்லியம்மூர் போன்றவர்களின் வாதங்களின் சாராம்சம் மூன்று முக்கியமான விஷயங்களில் கட்டுண்டிருக்கின்றன. இம் மூன்றையும் சரிவர விளங்கிக்கொண்டால் அவர்களின் வாதம் வஹ்மே என்பது எமக்குப் புலனாகும். அந்த மூன்றுமுக்கிய விஷயங்களும் என்னவென்றால்,

**1ஆவது:** இறைவன் ஒருவன் இருப்பானேயானால் அவன் நீதிமான், காருண்யவான் என்று கூறமுடியாது. ஒருவனைச் சீமானாகவும் ஒருவனை ஏழையாகவும் ஆக்குபவன் இறைவன்தான் என்றால் உலகிலுள்ள ஒவ்வொன்றையும் உயர்வு தாழ்வோடு உருவாக்கியவன் இறைவன் தான் என்றால் அவ்விறைவனை நீதிமான், சமநீதியுடையவன் என்று கூறுவது எப்படி?

**2ஆவது:** இறைவன் ஒருவன் உண்டு என்றால் அவனைச் சிருஷ்டித்தது யார்?

**3ஆவது:** இறைவனை எங்கேயும் எவரும் கண்டதாய் உண்மையான ஆதாரம் கிடையாது. இறைவனைக் கண்டதாக, பேசியதாக, ஒருசாரார் (நபிமார்கள்) அற்புதங்கள் செய்ததாக மதங்கள் கூறுவதெல்லாம் வெறும் பொய். உண்மைதான் என்றால் இறைவனைக் காண்பித்துத் தரமுடியுமா?

இந்த மூன்று அம்சங்களும்தான் நாஸ்தீகவாதத்தின் பொது அம்சங்களாய் இருக்கின்றன. இம்மாதிரியான தவறான விவாதங்களுக்கெல்லாம் மூலகாரணம் தௌஹீதின் உண்மை மறைக்கப்பட்டு வந்தமையேயாகும். இவ்விஷயங்களை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

**1ஆவது:** இறைவன் நீதிமானா? அல்லவா? என்பதை நாம் கண்டறிய வேண்டுமானால் நீதியென்பது என்ன? அநீதி என்பது என்ன? என்பதை நாம் முதலில் கண்டறியவேண்டும். முதலில் அநீதி என்பது என்ன என்பதைக் கண்டறிவோம்.

பிறருடைய உரிமையில், பிறருடைய சுதந்திரத்தில், பிறருடைய பொருளில் இன்னொருவர் கையாட்சி பண்ணுதல், தலையிடுதல்தான் அநீதி என்று கூறப்படுவது. இதைச் சாதாரண மனிதனும் அறிஞனும் உலக அரசாங்கங்களுமே ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இது எக்காலத்திலும் எல்லா இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உண்மையாகும். இது சரிதான் என்றால் நீதி என்பது அநீதி என்பதன் நேர்மாற்றத்தில் கட்டுண்டிருக்கவேண்டும். அதாவது ஒருவர் அவருடைய உரிமையில், அவருடைய சுதந்திரத்தில், அவருடைய பொருளில் அவருடைய இஷ்டம் போல் அவர் கையாட்சி பண்ணுவதுதான் நீதியாக இருக்கவேண்டும்.

இப்போது இஸ்லாத்தின் மூலக்கொள்கையான, மூலமந்திரமான “லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற கலிமாவை நோட்டமிட்டுப்பார். அல்லாஹ் தவிர ஒன்றுமேயில்லையென்றால், இருப்பது யாவும் இறைவனும் அவனுடைய குணாகுணங்களுமேயென்றால், யாருக்கு யார் அநீதி செய்கிறார்? அநீதி இழைப்பதற்கு ஒருவனும் அநீதி இழைக்கப்படுவதற்கு இன்னொருவனும் வேண்டுமே. அல்லாஹ் தவிர இல்லை என்னும்போது அநீதி இழைப்பதுயார்? அநீதி இழைக்கப்படுபவர் யார்?

இறைவனும் அவனுடைய குணாகுணங்களுமேயன்றி இல்லையென்னும்போது அவனுடைய உரிமையை அவனுடைய சுதந்திரத்தை அவனுடையபொருளை அவன் தன் இஷ்டம்போல் கையாளுவது எப்படி அநீதியாகும்? அநீதியென்ற சொல்லுக்கே இடம் கிடையாது. அவன் நாடியபடி செய்வதுதான் உண்மையான நீதியாகும். ஆகவே, இறைவனை அநீதிமான் என்று கூறுபவர்கள் தங்களைப்பகுத்தறிவுவாதிகள் என்று கூறிக்கொண்டாலும் அவர்களுடையப் பகுத்தறிவு பகுத்து உணரும் தன்மையற்ற பேதபுத்தி (வஹ்மு) ஆகவே தான் இருக்கிறது. இஸ்லாத்தின் மூலக்கொள்கையான தௌஹீது அவர்களுக்குக்கிட்டியிருந்தால் இந்த வாதத்தில் அவர்கள் இறங்கியிருக்கவே மாட்டார்கள். (இவ்விபரம் முன்பும் தரப்பட்டிருக்கிறது)

**2ஆவது:**

இறைவன் ஒருவன் உண்டு என்றால், அவனைச் சிருஷ்டித்தது யார்? இதை ஆராய்வுக்கெடுத்தால் இதுவும் வஹ்மு என்னும் பேதபுத்தியின் திருவிளையாடலேதான் என்பது தென்படுகிறது. ஏனென்றால் சிருஷ்டிக்கப்பட்ட ஒருபொருள் சிருஷ்டி என்ற பெயரைப் பெறுமேயல்லாமல் சிருஷ்டி கருத்தா (இறைவன்) என்ற பெயரைப்பெறாது. அதாவது இறைவன் இன்னொருவரால் சிருஷ்டிக்கப்பட்டிருந்தால் அவனுக்குச் சிருஷ்டி என்ற பெயர் ஏற்பட்டிருக்குமே அல்லாமல் இறைவன் கடவுள் என்ற பெயர்கள் எப்படி ஏற்படும்? ஆகவே சிருஷ்டித்தவன்தான் இறைவன் என்ற பெயரைப் பெறுவான். இக்கேள்விக்கு இவ்வளவு விடையே போதுமானது. எனினும் நாம் இன்னும் சிறிது நோக்குவோம்.

சிருஷ்டி என்பது ஓர் குறிப்பிட்ட அளவுடையது. கண்டப் பொருளாய் இருக்கிறது. அதாவது சிருஷ்டி என்பது பௌதீகப் பொருளாயினும் சூட்சுமப் பொருளாயினும் நீளம், அகலம், கனம், காலம், இடம், நிறம், தோற்றம் போன்ற பண்புகளால் கட்டுண்ட கண்டப் பொருளாய் இருக்கிறது. இந்தச் சிருஷ்டிக்குக்கொடுக்கப்பட்ட பார்வை, கேள்வி, சுவை, ஸ்கந்தம், ஸ்பரிசம், அறிவு போன்றவையும் குறிப்பிட்ட அளவுடைய சிருஷ்டிகளாகவே இருக்கின்றன. நாம் இதை விளங்கிக்கொள்வதற்காகச் சிருஷ்டியின் பண்புகளையும் அறிவையும் ஒரு சேர் அளவுடையதாய் வைத்துக்கொள்வோம். இந்தச் சிருஷ்டி என்னும் தன்மைக்குச் சிருஷ்டிகர்த்தா எதிர்மாறாகவே இருக்கவேண்டும். இல்லையானால் சிருஷ்டிகர்த்தா என்ற பெயர் அமையாது. (நுட்பமாய்உணர்க) சிருஷ்டி கண்டப் பொருள் என்றால் சிருஷ்டிகர்த்தா அதற்கு நேர்மாறான அகண்டப் பொருளாகவேதான் இருப்பான். அப்படியானால் அவனுடைய தன்மைகள் எதுவுமே எதிலுமே கட்டுண்ணாத, எல்லையே இல்லாத மாபெரும் சமுத்திரமாகத் தானே இருக்கும். இந்த எல்லையில்லாத மாபெரும் சமுத்திரம் ஒரு சேர் அளவுடைய சிருஷ்டியின் அறிவில் எப்படி அமையும்? ஆகையால்தான் அந்த இறைவனைக் கடவுள் என்று கூறுகிறோம். கடவுள் என்றால் உள்ளுதலை (சிந்தனையை) உள்ளத்தைக் கடந்தது என்பதுதான் பொருள். ஆகவே மனிதன் சிந்தனையால், அறிவால் தேடிப்பார்த்துக்கண்டறிய முடியாத, எட்டாத நிலையில் கடவுள் இல்லை என்று அவன் கூறுகிற வசனம், கடவுள் நிச்சயமாக உண்டு என்பதை நிரூபிக்கிறதல்லவா?

கடவுளை மனிதன் ஏன் தேடினான்? அவனையறியாமலே அவனுடைய உள்ளத்தில் பதிந்துள்ள ஓர் இயல்பான உணர்வின் காரணமாகத்தான் தேடினான். ஆனால் அவனுடைய அறிவு கடவுளைக் கண்டறிய முடியாத அற்பமான சிருஷ்டி பொருளாய் இருந்ததால் தேடிப்பார்த்து முடிவில் கடவுள் இல்லை என்று கூறுகிறான். ஆனால் அறிவுடையோருக்கு அச்சொல் கடவுள் உண்டு என்பதை நிரூபிக்கவே செய்கிறது. ஆகவே கடவுள் இல்லை என்பவன், கடவுளைச் சிருஷ்டித்தது யார் என்று கேட்பவன் பேதபுத்தியில் கட்டுண்டவனாய்ப் பகுத்தறிவின் ஆரம்ப நிலைமையையே எட்டாதவனாய் இருக்கிறான் என்பது வெளிப்படையாகவே தென்படுகிறது. இவ்விதமான வாதங்கள் சிருஷ்டியின் தன்மைக்கு நேர்மாற்றமான ஓர் அகண்டப்பொருள் உண்டு என்பதை நிரூபிக்கின்றன.

சிருஷ்டி என்பது புதிதானது. சிருஷ்டிக்கப்படமுன் இல்லாமைப் பொருளாக எவ்வித குறிப்பும்கூட இல்லாமலிருந்தது. சிருஷ்டி என்பது என்றோ ஓர் நாள் அழிந்தொழியக்கூடியது. நிலையில்லாதது. அப்படியிருந்தும் அந்தச் சிருஷ்டி இறைவனைச் சிருஷ்டித்தது யார்? என்று கேட்கும்போது இறைவனைச் சிருஷ்டியாகிய தன்னில் ஒப்பிட்டு, கட்டுப்படுத்தியறியவே முயற்சிக்கிறது என்பது தென்படுகிறது. ஆகவே இந்தச் சிருஷ்டி தன் அறிவை எப்படியெல்லாம் புகழ்ந்து கொண்டிருந்தாலும்கூட அது பகுத்து உணரும் பகுத்தறிவை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை என்பது தான் குறைவுள்ள ஓர் சிருஷ்டியே என்பதை நிரூபிக்கிறதென்பதும் அறிவுடையோருக்குத் தென்படவேதான் செய்கிறது. ஆகவே, இவ்விதமான விவாதம் வஹ்மின் திருவிளையாடலேயன்றிப் பகுத்தறிவின் வேலையேயல்ல. படையுண்ணல் சிருஷ்டியைப் பொறுத்த விஷயம். படையுண்ணப்படாமல் இருப்பதே இறைவனின் தன்மை. ஆகவே கடவுளைப் படைத்தது யார்? என்ற கேள்விக்கு நாம் அளிக்கும் விடை எவரும் இல்லை என்பதே.

**3ஆவது:**

இறைவனைக் காண்பிக்க முடியுமா? இக்கேள்வியை ஆலோசனைக் கெடுத்தால் இதுவும் வஹ்மின் கேள்வியேயல்லாமல் பகுத்தறிவின் கேள்வியே அல்ல என்பது தென்படுகிறது.

சர்வ உலகங்களிலுமுள்ள சர்வ சிருஷ்டிகளுக்கும் இருவிதமான தோற்றங்கள் இருக்கின்றன. அவற்றின் ஒன்று வெளிப்படையானது (லாஹிறு) மற்றொன்று உட்படையானது (பாத்தின்). நாம் அகமது என்பவனைப் பார்க்கும் போது அகமதுடைய வெளிக்கோலம், கனம், நிறம், தோற்றங்களில் கட்டுண்டிருக்கிற அகமதின் வெளி உடலையே பார்க்கிறோம். இந்த உடலுக்குரிய அகமது (உயிர்) நீளம், அகலம் முதலாம் பண்புகள், கட்டுபாடுகளைக் கடந்த சூட்சுமவஸ்த்துவாய் இருக்கிறது. ஆகவே அகமதுடைய உட்படையான தோற்றம்(உயிர்) கண்செவி முதலாம் புலன்களுக்கு எட்டாததாகவே இருக்கிறது. ஆகவே அஹமதைக் காண்பிக்க முடியுமா? என்று கேட்கும்போது அஹமதுடைய வெளிக்கோலமான (லாஹிறான) உடலை நிச்சயமாக எம்மால் காண்பிக்கலாம். அந்த வெளிக்கோலமான உடலை எம்மால் பார்க்கவும் முடியும். ஆனால் அஹமதுடைய உட்கோலமான (பாத்தினான) நிலைமையை எம்மால் காண்பிக்கவும் முடியாது. பார்க்கவும் முடியாது. அஹமதுடைய உட்கோலம் அகண்டமானது. கண்டப்பொருளான புலன்களில் அமையாது. அகண்டப்பொருள் கண்டப்பொருளில் அமையவே அமையாது.

இதேபோல இறைவனுக்கும் (லாஹிறு-பாத்தின்) உட்படை வெளிப்படையென இருதன்மைகள் இருக்கின்றன. அதில் உட்படையென்பது இறைவனுடைய சுயநிலைமையாகும். அஹமதுடைய சுயநிலைமையை உயிர் என்று கூறுவது போல இறைவனுடைய சுயநிலைமையை தாத்து, உஜூது, ஹக்கு, குன்ஹு என்றெல்லாம் கூறப்படும். இந்த நிலைமை கண்டப்பொருளான புலன்களிலோ அறிவிலோ எப்போதும் எவருக்கும் எட்டக்கூடியதேயல்ல. ஏனென்றால் இந்த நிலைமை எவ்விதமான கட்டுபாடுமேயில்லாத ஓர் அகண்டமான நிலைமையாகும். கண்டப்பொருட்களில் இது அடங்கவே அடங்காது. இறைவனைக் கண்டேனேன்று ஒருவன் கூறினால் அவன் பொய்யனாக இருக்கிறான் என்று கூறப்பட்டது இந்த நிலைமையைத்தான். அகமது என்ற சிருஷ்டியின் உட்கோலத்தையே கண்டுகொள்ளமுடியாத எம்மால் இறைவனுடைய உட்கோலத்தைக் காணவே முடியாது. ஆனால், அஹமதுடைய வெளிப்படைக் கோலத்தை எம்மால் காணமுடிந்தது போல இறைவனுடைய வெளிப்படைக் கோலமான (லாஹிறான) தோற்றங்களை எம்மால் காணமுடியும். காட்டவும் முடியும்.

ஏனென்றால் இந்த வெளிப்படைத் தோற்றம் கண்டப்பொருளாக இருக்கிறது. கண்டப்பொருளான எமது புலன்களில் அது அமையக்கூடியதுதான். அஹமதின் வெளிக்கோலத்தைக்கொண்டு அஹமதின் உட்கோலத்தை எம்மால் ஓரளவு யூகிக்க முடிந்ததைப் போல இறைவனின் வெளிக்கோலங்களைக்கொண்டு (சர்வ பிரபஞ்சத்தைக்கொண்டு) அவனுடைய உட்கோலத்தை எம்மால் ஓரளவு யூகிக்க முடியும்.

இப்போது கலிமாவையும் அதன் தலீல்களான வேதவசனங்களையும் சிந்தனை செய்துபார். அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்று கூறும் போது சர்வகசன புவனங்களிலுமுள்ள சர்வ பொருட்களின் தோற்றமும் இறைவனுடைய (லாஹிறான) வெளிக்கோலமே என்பது புலனாகும். ஆகவே, இறைவனை உம்மால் காண்பிக்க முடியுமா? என்று கேட்கும் போது “ஆம்” என்றே விடை கூறலாம். இறைவனல்லாத ஒன்றை உம்மால் காண்பிக்கமுடியுமா? என்று நாம் எதிர்க்கேள்வியொன்றையும் கேட்கலாம். இறைவனின் லாஹிறான தோற்றத்தை எம்மால் பார்க்கமுடியும் என்பதற்குரிய குர்ஆன், ஹதீஸ்களின் ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன. அந்த ஆதாரங்களை மர்த்தபாவுடைய விஷயங்களை விளக்கும்போது தருவேன். பொறுமையடையவும். நாஸ்தீகவாதம் என்பது உண்மையாகவே பகுத்தறிவினால் ஏற்படுகிற ஒரு வாதமேயல்ல. இவ்வாதம் வஹ்மு என்னும் பேதபுத்தியினால் ஏற்படுவதேயாகும். நாஸ்தீகவாதீகள் கடவுளை மறுப்பவர்கள் என்றுதான் பெரும்பாலார் நம்புகிறார்கள். **ஆனால், நான் அவர்களைக் கடவுள் நம்பிக்கை உடையவர்களாகவும், அறிவுத்தாகம் உடையவர்களாகவுமே காண்கிறேன்.** ஏனென்றால், கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையோடுதான் அவர்கள் கடவுளை ஆராய்கிறார்கள். ஆனால் கடவுளைப்பற்றிய உண்மையான விபரத்தை அவர்கள் அறிந்துகொள்ள முடியாதபோது இல்லையென மறுக்கிறார்கள். இந்த மறுப்பு அறிவின் மறுப்பேயன்றி அவர்களுடைய உள்ளத்தின் மறுப்பேயல்ல என்பது உண்மை. தௌஹீதின் உண்மையை இவ்வினமக்கள் அறிந்துகொண்டால் பெரும் பெரும் மேதைகளாகவே இவர்கள் மாற்றமடைவார்கள் என்பது எமது நம்பிக்கை.

**சகோதரனே!**

ஒருவன் ஓர் இரும்புக் கடைக்குச் சென்று இரும்பு தாருங்கள் என்று கேட்கிறான். கடைக்காரன் ஓர் மண்வெட்டியைக் கொடுக்கிறான். இரும்பு வாங்கச் சென்றவன், சீ! சீ! நான் கேட்பது இரும்புதானே! நீங்கள் தருவது மண்வெட்டியல்லவா? என்று கூறுகிறான். கடைக்காரன் மீண்டும் மீண்டும் கோடரி, கத்தி, கம்பி, முதலாம் பொருட்களைக் கொடுக்கிறான். நீளமான, குட்டையான, தட்டையான, உருண்டையான பற்பல தோற்றமுள்ள பொருட்களைக் கொடுக்கிறான். ஆனால் இரும்பு வாங்கச் சென்றவன், கடைக்காரன் காட்டிய பொருட்களையெல்லாம் மறுப்பதோடு இரும்பு மட்டுமே தனக்கு வேண்டுமென்று வற்புறுத்துகிறான். இப்போது அந்த முட்டாளுக்குக் கடைக்காரன் இரும்பை எப்படிக் காட்டுவது? எந்த உருவத்தில் காட்டுவது? எந்த உருவத்தில் காட்டினாலும் அவன் ஏற்றுக்கொள்வதாயும் இல்லையே! கடைக்காரன், இங்குள்ள சகல பொருட்களும் இரும்பின் ஒவ்வோர் தோற்றத்தில் உள்ள பொருட்கள்தான், மண்வெட்டி, கத்தி, கோடரி முதலாம் சர்வ பொருட்களும் இரும்பேதான் என்று கூறுவதைத் தவிர வேறு எதைத்தான் கூறமுடியும்? ஏதாவது ஓர் உருவமில்லாத நிலைமையில் இரும்பை எப்படிக்காட்ட முடியும்? இரும்பு வாங்கச் சென்றவன் இரும்பென்பதன் உண்மையான தன்மை என்ன? என்பதை அறியாதவனாய் இருப்பதால் கடைக்காரனை மூடனாகப் பொய்யனாகக் கணிக்கிறான். ஆனால் அந்த முட்டாளுக்கு இரும்பை ஏதாவது ஓர் தோற்றத்தில், இடத்தில், காலத்தில், மட்டுப்படுத்தியேயல்லாமல் இரும்பின் அதன் சுயதோற்றத்தைக் காணமுடியாது என்பது தெரியாது. அதாவது நீளம், அகலம், உயரம், நிறம், உருவம் பெயர் முதலாம் பண்புகளில் கட்டுப்படுத்தியேயல்லாமல் இரும்பின் சுயதன்மையை எவ்வகையிலுமே காணமுடியாது என்பது நிச்சயம். இரும்பின் வெளித்தோற்றமான “லாஹிறை” ஏதாவது ஓர் தோற்றத்தில் பார்க்கலாமேயன்றி அதன் “பாதினை” உண்மையான இயற்தோற்றத்தை எம்மால் காணவே முடியாது. பௌதீகப் பொருளான இரும்பின் நிலைமையே இப்படியென்றால் மனித அறிவைக் கடந்திருக்கிற இறைவனின் சுய நிலைமையை காணவேண்டுமென்றால் அது நம்மால் எப்படி முடியும்? எம் அறிவுக்குள் அமையக்கூடிய ஏதாவது ஓர் தோற்றத்தில் தான் காணமுடியும். ஆகவே கடவுளைக் காட்டச்சொல்வதும் காணமுடியாதென்பதும் மருட்சியின் விளைவேயாகும்.

## 012 சிருஷ்டிகளின் உண்மை என்ன? (அவை எங்கிருந்து எப்படி வந்தன?)

### (1)

**அ**ல்லாஹ் என்று நாம் பெயர்கூறுகிற இறைவனே உண்மைப் பொருளாய் இருக்கிறான். இருக்கிறான் என்று கூறுவதால் அல்லாஹ் என்பது ஆண்பால் பெயர்ச்சொல்தான் என்று நாம் தீர்ப்புக்கட்டக்கூடாது. அல்லாஹ், உஜூது, தாத்து, ஹக்கு என்று கூறப்படுகிற இச்சொற்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால், தன்மை, முன்னிலை, படர்க்கை போன்ற எவ்வித கட்டுப்பாடுகளிலும் அமையாத, இவ்வித கட்டுப்பாடுகள் யாவையுமே தம்முள் அடக்கிக் கொண்ட, வேறு சொற்களால் பூரணமாய் உணர்த்தப்படமுடியாத தனித்தன்மையுடைய சொற்களாகும். இறைவன் என்று ஆண்பாலில் கூறப்படுவது மனித இனத்தின் பாரம்பரியமான ஓர் வழக்கான செயலல்லாமல் ஆண்பால்தான் என்பது கருத்தல்ல. God என்ற ஆங்கிலச் சொல்லை Gods என்று பலர்பாலிலும் Goddess என்று பெண்பாலிலும் மாற்றம்

செய்துகொள்வதுபோல நாம் முன்பு கூறிய சொற்களை ஆக்கிக்கொள்ள முடியாது. அப்படி ஆக்கிக்கொண்டால் பொருளும் பொருந்தாது. ஆகவே God என்ற ஆங்கிலச் சொல்லையோ கடவுள் போன்ற மற்றும் சொற்களையோ நாம் பேச்சு வழக்கில் பாவிப்பது பாதகமல்லவாயினும் முன்கூறிய அறபுச் சொற்களுக்குரிய பொருளோடு ஒப்பிடமுடியாது. ஆயினும் நாம் இறைவனைக் குறிப்பிடும் எச்சொல்லையும் எவ்வித கட்டுபாடுமில்லாத சொற்களாகவே கருதிக்கொள்ளவேண்டும். இப்போது விஷயத்துக்குவருவோம்.

தன்னுடைய நிலையான இருப்புக்குத்தானே ஆதாரமாய்த் தன்னுடைய "குத்றத்" என்னும் சக்தியினால் தனக்காகத், தன்னிடத்திலே சர்வபிரபஞ்சங்களான சகல சிருஷ்டிகளும் கற்பிக்கப்படுவனவாய், எக்காலத்திலும் கெட்டழியாமலும், மறைந்தொழியாமலும் சதோதயமாய் நிலைப்பெற்றிருக்கும், அறிவுக்கெட்டாத, வருணிக்கமுடியாத ஒர் உண்மைப் பொருளைத்தான், தாத்து. உஜூது, ஹக்கு, அல்லாஹ் என்று நாம் கூறுகிறோம். இந்த உண்மையான மூலப்பொருளுக்கு, அதன் நிலைமைகளுக்கும் எமது அவசியத்திற்கும் ஏற்றப்படி நாம் பல பெயர்களைக் கூறுகிறோம். இந்த மூலப்பொருளுக்கு "குன்ஹு" என்று அறபு பாஷையில் கூறப்படுகிற தற்சொரூபத்தை (இயற்றன்மையை)க் கொண்டுபேச முற்பட்டால் பேச்சே கிடையாது, ஏன்? இது மனிதனுடைய அறிவில் அமையாத ஓர் நிலைமையாகும். இதை இந்துக்கள் "அனீர்வசனீயம்" (வசனிக்க முடியாதது) என்று கூறுவர். இந்த நிலைமைக்கு எவ்விதமான நிறம், தோற்றம் மற்றும் பண்புகள் எதுவும், எதன் கட்டுப்பாடும் இல்லாதிருப்பதால் மனித அறிவு இதை எட்டிக்கொள்ளவே முடியாது. ஆகவே அல்லாஹ் என்ற சொல்லை, உண்மையை உணர்த்த உபயோகப்படும் இடுகுறிப்பெயராகவே இப்போது நாம் கொள்ளவேண்டும்.

இந்த மூலப்பொருள் தன்னுடைய (குன்ஹு) என்ற இயற்தன்மையிலேயே இருந்துகொண்டு தன்னில்தானே வெளியான விபரங்களை (மர்த்தபாக்களை)க்கொண்டுதான் நாம் பெயர் கூறியழைக்கிறோம். உதாரணமாக றஹ்மான், றஹீம், ஹப்பார், கஹ்ஹார், போன்ற மற்றும் திருநாமங்களை நாம் கூறலாம். இந்தப்பெயர்கள் எல்லாம், காரணப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர்களாவே இருக்கின்றன, இப்பெயர்கள் சிற்சில கண்டிப்புக்களை (கட்டுப்பாடுகளை) உடையனவாகவே இருக்கின்றன. இந்தப்பெயர்களுடைய நிலைமைகளைத்தான் "மர்த்தபாக்கள்" நிலைமைகள் என்று கூறப்படும். இந்த மர்த்தபாக்கள் மனிதனுடைய அறிவில் அமையக்கூடியனவாகவே இருக்கின்றன. இந்த மர்த்தபாக்கள் இல்லையானால் உண்மைப்பொருள் ஒன்று உண்டு என்பதைக்கூட மனிதன் அறியவேமாட்டான். நிலையாய் உள்ள அந்த உண்மைப்பொருள் தனக்காகத் தன்னில்தானே வெளியான விபரங்களை, மர்த்தபா, தஜல்லி, தனஸ்ஸுல், நிலைமை, இறக்கம் என்றெல்லாம் ஞானவான்களான ஒலிமார்கள் கூறுவதுண்டு.

இந்த விபரத்தைச் சிலர் ஏழாகவும், வேறுசிலர் நாலாகவும் வகுத்து விபரித்து விளக்கம் கூறியுள்ளார்கள். இந்த விபரங்களை மனித அறிவு விளங்கியறிவதற்கு வசதியாய் இருப்பதற்காக அப்படிப்பல வகையாய்க் கூறினார்களேயன்றி விஷயம் ஒன்றேயாகும். நாமும் வேண்டுமானால் எத்தனை எத்தனையோ வகையாக விபரம் கூறலாம். ஆயினும் எம்முடைய அனுபவத்தில் இதை ஏழாக வகுத்துக் கூறுவதே விளக்கத்துக்கு இலகுவாய்த் தென்படுவதால் நானும் இதை ஏழாக வகுத்துக் கூறவே விரும்புகிறேன். இவற்றில்,

### 1ஆவது (மர்த்தபா) நிலைமை:

இந்த நிலைமையை, அஹதியத், தாத்துல் முத்தலக், குன்ஹு தாத்து, உஜூது, துரியாதீதம், பிரம்மம், என்றெல்லாம் கூறப்படுவதுண்டு. இந்த நிலைமை எதையும் ஏற்கும் தன்மை (காபிலிய்யத், இஸ்த்திஹ்தாது) உடையதேயல்ல. ஏற்பதற்கு இதையன்றி வேறு எதுவுமே இல்லை. இதை அல்லாஹ்வையன்றிச் சிருஷ்டிகளால் அறியவேமுடியாது. "சுப்ஹானல்லாஹ்" அல்லாஹ் தூயவன் என்று கூறப்படுவது இந்த நிலைமையைத்தான். இந்த நிலைமையை நீங்கள் ஆராய்தல் செய்ய வேண்டாம் என்று குர்ஆன், ஹதீஸ்கள் கூறுகின்றன. இந்த நிலைமையை ஆராயமுற்பட்டவர்கள் தான் கடவுள் இல்லையென்று வாதிப்பவர்கள், அர்ஸையுடைய நாயன் தானங்களால் (மர்த்தபா-பதவி-நிலைமை) உயர்ந்தவன் என்று கூறப்படுவது இந்த நிலைமையை நோக்கித்தான்.

இந்த மர்த்தபாவைப்பற்றி வேறொன்றும் எமக்குத் தெரியாது.

### 2ஆவது (மர்த்தபா) நிலைமை:

இந்த நிலையை "தஜயுனுல்ஊலா" முதலாவது நிலைமை அல்லது முதலாவது இறக்கம் என்று கூறப்படும். இதை ஒரு சிலர் "மர்த்தபத்துல்வஹ்தத்தி" என்று கூறுவார்கள். இந்த மர்த்தபாவில் இறைவன் தன் தாத்தையும் ஷிபத்தையும் (குணி-குணம்) வகுக்காமலும் வெவ்வேறாய்ப் பிரிக்காமலும் தொகுப்பாய்த் தன்னில்தானே அறிந்திருந்தான் என்பதே இதன் சாரமாகும். இறைவன் அவ்வியக்கப்புதையலான (அமா) முதலாவது நிலைமையிலிருந்து எதை முதலாவது குறிப்பாக்கி வெளியானானோ அந்த முதலாது குறிப்பு (அறிவு) இந்த நூர் (முஹம்மது) என்பதேயாகும். (அவலம்கலகல்லாஹுநூரீ) அல்லாஹுத்தஆலா படைத்ததில் முதலாவது படைத்தது என் ஒளியே (நூறே) என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த நிலைமையை இன்னும் சில ஞானவான்கள் "தஜல்லிஅவ்வல்" என்றும் வேறு சிலர் "தனஸ்ஸுல்அவ்வல்)" என்றும் கூறுவதுண்டு. இந்த மர்த்தபாவில் இறைவன் (அருகதை அல்லது தகுதி அல்லது ஏற்புத்தன்மையைப்) பெற்றிருந்தான்.

ஆழ்ந்த உறக்கமான சுளுத்தியில் இருந்த ஜீவன் கனவைக்காணும் தகுதியை, அல்லது ஏற்புத்தன்மையைப் பெற்றிருந்ததைப்போல என்று நாம் கற்பனை செய்துகொள்ளலாம்.

இந்த மர்த்தபாவில் இறைவனுக்குள் அறிவை நாம் "இல்மு இஜ்மாலீ" என்று கூறுகிறோம். அதாவது பொதுவான விபரமில்லாத அறிவு என்பதே அதன் சாரமாகும். இந்த மர்த்தபாவில், இல்மு, மஹ்லூமு, ஆலிமு என்று கூறப்படும் அறிவு, அறியப்பட்டது, அறிந்தவன் ஆகிய இம்மூன்றும் ஒன்றைவிட்டு மற்றொன்று வேறில்லாத (திரிபுடி உணர்வு அற்ற) தாத்துத் தானாகவே இருக்கிறது. அதாவது கனவைக் காணும் அறிவு, கனவு, கனவைக் காணும் ஜீவன் ஆகிய மூன்றும் ஜீவன் என்ற நிலைமையில், அவைகளுக்கிடையில் வேறுபாடில்லாமல் ஒன்றாய் இருந்ததைப்போல. (நுட்பமாய் உணர்க). இந்த மர்த்தபாவில் வேறுவேறு என்ற வேற்றுமையும் துவிதமும் இல்லவே இல்லை இந்த நிலைமையில் இறைவன் தன் தாத்தை உணர்ந்திருப்பதோடு, சர்வசிருஷ்டிகளாயும் தானே தன் குணமே வெளியாவதற்குத் தகுதி, ஏற்புத்தன்மை உடையவனாயும், அதை அறிந்தவனாயும் இருந்தான் என்பதே இதன் பொழிப்பாகும். இதை இன்னும் இலகுவாய் மனதில் பதிப்பதற்காக ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். மண் என்ற மூலப்பொருள், பானை, சட்டி, குடம் முதலாம் தோற்றங்களில் வெளியாகத் தான் தகுதி அல்லது ஏற்புத்தன்மை பெற்றிருக்கிறேன் என்று தன்னைத்தானே அறிந்திருப்பது போல என்று கற்பனை செய்து கொள்ளலாம். இந்த மர்த்தபாவை இன்னும் சில ஒலிமார்கள் (ஞானிகள்) "ஹகீகத்துல்ஹகாயிகி" என்றும் கூறுவதுண்டு. ஏனென்றால் இந்த மர்த்தபா வெளியாகப் போகிற சகல சிருஷ்டிகளான கண்டப்பொருட்களையும், அகண்டப்பொருளான இறைவனுடன் ஒன்று சேர்ப்பதாயும், இனிமேல் வெவ்வேறாய்த் தனித்தனியே நான் வேறு நீ வேறு என்ற உணர்வோடு பிரிப்பதாயும், அமைந்திருக்கிறது. (நுட்பமாய் உணர்க). மேலும் இந்த மர்த்தபா, தன்னுடைய (ஆக்கத்தில்) நிர்மாணிப்பில் நின்றும் எது எதுவெல்லாம் வெளியாகுமோ அவை அத்தனையையும். மூடுதலாய்ப் பொதிந்து கொண்டதாயும் இருக்கிறது.

இவ்வித நிர்மாணிப்புகளான சிருஷ்டிகளுக்கும் (இல்மு) அறிவு (உஜூது) உண்மை என்னும் இருதன்மைகளிலும் எவ்வித வேறுபாடுமின்றி ஒன்றாகவே அமைந்திருப்பதால் இந்த மர்த்தபாவைச் சில ஞானவான்கள் "ஹுர்புல் ஆலிஹாத்" என்று கூறுகிறார்கள்.அல்லாஹ்வுடைய பொதுவான ஆதியான அறிவில் சர்வசிருஷ்டிகளும் ஒன்றுசேர்ந்து பக்குவப்பட்டிருப்பதால் சில ஞானவான்கள் இந்த மர்த்தபாவை"அஹ்யான்தாபிதா" என்று கூறுகிறார்கள். இந்த நிலைமைக்குமுன் இறைவன் தன்னை அறியாமல் இருந்தான் என்று நினைப்பது விளக்கப்பிசகாகும். ஏனென்றால் இன்னும் காலம் என்பது கட்டுபாடுடைய முக்காலமாய்ப் பிரிக்கப்படவில்லை, அல்லாஹ்வே காலமாய் இருக்கிறான். ஆகவே முன்பின் என்பதற்கு இடமில்லை. இதைப்பொறுமையாய் விளங்கவேண்டியிருப்பதால் அமைதியடையவும்.

இந்த மர்த்தபாவை இறைவழி செல்லமுற்படுபவர்கள், உண்மையைக் கண்டறிபவர்கள் பலகண்ணோட்டங்களோடு நோக்கவேண்டும். வெளியான, வெளியாகிக்கொண்டிருக்கிற, வெளியாகப்போகிற சர்வசிருஷ்டிகளும் சர்வ அணுக்களும் நல்லவை தீயவை சகலமுமே இந்த மர்த்தபாவில் வெவ்வேறு என்றில்லாமல் ஒன்றாய் ஏகமாய்த் தம்மைத்தாமும் அறியாதவையாய் இருந்தன.

கனவில் வெளியாகப்போகிற அத்தனை பொருட்களும், அத்தனை நிறம், தோற்றம், நாமம், பண்புகளும் கனவு வெளியாவதற்கு முன் (மனதில்) அல்லது ஜீவனில் வெவ்வேறு என்றில்லாமல் தம்மைத் தாமும் அறியாதனவாய் இருந்ததைப்போல. இந்த மர்த்தபாவில் அமைந்துள்ள எந்த ஒன்றுக்கும் ஒன்றைவிட மற்றொன்றுக்கு உயர்வோ, தாழ்வோ, பேதமோ கிடையாது. இவ்விடத்தில் இறைவனும், ஷைத்தானும், மலக்கும், றசூலும், அபூஜஹீலும், மூஸாவும், பிர்அவுனும், நீயும், பூனையும், நானும், நாயும் எம்மை நாமே அறியாதவர்களாய் ஒன்றாய் ஏகமாய் உஜூது அல்லது தாத்து என்ற மூலப்பொருளாகவேதான் இருந்தார்கள். இந்த மர்த்தபாவைப் பொறுமையோடு சந்தேகமில்லாமல் தெளிவாய் நீ விளங்கிக்கொள்ளாவிடில், நீ உலக மேதை, உலகமக்களின் அரசர் என்று பெயரைப் பெற்றிருந்தாலும் இரவு பகலாய்ப் பல ஆயிரம் வருடங்கள் வணங்கிக் கொண்டிருந்தாலும், ஐக்கியமாதல், சாந்தியடைதல், பூரணத்தன்மையடைதல் என்ற நிலைமை கிடைக்கப்போவதேயில்லை. இந்த உண்மையில் நீ போய்ச்சேர வேண்டும். உன்னைச் சேர்க்கவேண்டும் என்பதுதான் கலிமாதரப்பட்ட நோக்கம். இதை அறியாத விளங்காத கோழைகள்தான் கலிமாவைப் புரட்டியவர்கள். இந்த மர்த்தபாவில் காலமோ இடமோ இல்லாதிருப்பதால், தற்போது இன்ஸானாய் இருக்கிற நாம் காலம், இடம் என்ற இரு கடினமான திரைகளையும் கடக்காமல் இந்த மர்த்தபாவை இலகுவாய்ப் பெறவே முடியாது. இத்திரைகளைத் தாண்டக்கூடிய வழிவகைகளைப் பின்னால் கண்டறிவோம்.

இதன்பின் வருகிற மர்த்தபாக்களில் வெவ்வேறாய்த் தனித்தனியாய் வெளியானபிறகு நிறம்பெயர் முதலாம் பண்புகளைக் கொண்டுதான் நாம் வேறுபாடு காண்கிறோம். ஆனால் இந்த அஹ்யான்தாபிதாவில் வணங்கிய மனிதனும் வணங்கப்பட்ட இறைவனும் மற்றும் சிருஷ்டிகளான சீவவர்க்கம், தாதுவர்க்கங்களும், மூமீனும் முஸ்ரீக்கும், முஸ்ரீக் எடுத்துக்கொண்ட இலாஹூம் (இலாஹு என்பது பொதுப்பெயர்சொல் ஆகையால் இறைவனான இலாஹூம் சிருஷ்டியான இலாஹூம்) எவ்வித தனித்தனித் தன்மையும் இல்லாமல் ஒன்றாகவே இருந்தது என்பதை நீ ஓர் கணமும் மறந்துவிடக்கூடாது. ஏனென்றால் **கலிமாவின் உண்மைப்பொருளை அறிவதும் இஸ்லாத்தின் உயிரான, ஏகத்துவக்கொள்கை என்ற தௌஹீதை ஏற்றுக்கொள்வதும் இந்த மர்த்தபாவை விளங்கிக்கொள்வதிலேயே தங்கியிருக்கிறது.** வலிமார்கள் பேசிய சில விபரங்களை மார்க்கவிரோதமாய் ஒருசாரார் கண்டதும் தற்போது கண்டுகொண்டிருப்பதும் இவ்வுண்மையை உணர்ந்துகொள்ள முடியாமைதான். இந்த மர்த்தபாவில் நிலை கொள்ளமுடியாமல் தடைபோடுவது ஷிர்க்கு என்னும்

கொள்கைதான். ஆகையால்தான் அது மன்னிக்கப்படாத குற்றம் என்றும் அதற்குரிய பலன் நிரந்தர நரகம் என்றும் கூறப்பட்டது. இவ்விஷயத்தில் எண்ணிலடக்கிக் கூறமுடியாத அளவு ஆதாரங்கள் குர்ஆன் ஹதீஸ்களிலும், ஒலிமார்களின் பைத்துக்கள் பாடல்களிலும் பிறமதங்களிலுள்ள சில பாடல்கள் வசனநடைகளிலும் இருக்கின்றன. ஆயினும் நாம் ஒன்றிரண்டு பைத்துக்களை மட்டும் நோக்குவோம்.

## ஒரு பைத்தின் கருத்து:

“நிறமில்லாதது (உருவமில்லாதது) நிறத்தின் சிறையில் அகப்பட்டதும் மூஸாவுக்கும் பிர்அவுனுக்குமிடையில் சண்டையுண்டானது. எப்போது நிறங்களை விட்டும் கவனத்தை எடுத்துவிட்டாயோ அப்போது மூஸாவுக்கும் பிர்அவுனுக்குமிடையில் ஐக்கியம் உண்டாகிவிட்டது” என்று மௌலானாறுாமி பாடுகிறார்கள்.

“சகலவஸ்த்துக்களும் அவன்தானே அவையாய் இருக்க அவ்வஸ்த்துக்களை வெளிப்படுத்திய இறைவன் துாயவன்” என்று ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அறபி(றலி) அவர்கள் புத்துஹாத்துல் மக்கிய்யா என்ற கிதாபில் கூறுகிறார்கள்.

நாம் முன்பு கூறியுள்ளபடி துாதனுப்பியவன் வேறின்றித் தங்கள் துாதுவேலையின் பொருட்டு, கல்காகிய தன்னிடத்துக்கே அனுப்பப்பட்ட றசூலும் தானாய் அனுப்பிய ஹக்கும் தானாய் றசூலுல்லாஹ் எழுந்தருளினார்கள் என்று அறி. என்ற பைத்தையும் இவை போன்ற மற்ற பைத்துக்களையும் இவ்விடத்தில் யூகித்துஉணர்ந்து கொள்ளவேண்டும்.

أَوَلَمْ يَرَوْا كَيْفَ يُبْدِئُ اللَّهُ الْخَلْقَ ثُمَّ يُعِيدُهُ ۚ إِنَّ ذَٰلِكَ عَلَى
اللَّهِ يَسِيرٌ ﴿١٩﴾

29-19 *ஒன்றுமில்லாதிருந்த சிருஷ்டிகளை அல்லாஹ் ஆரம்பத்தில் எவ்வாறு வெளியாக்கினான் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? பின்னரும் அவைகளை மீளவைப்பான். நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக்கசுலபமானதே.*

இதேபோல குர்ஆனில் கூறப்பட்டுள்ள 21:30, 76:1,2 41:11, 2:28, 22:62, 6:98 போன்ற ஆயத்துக்களையும் ஆராய்ந்து தெளிவுபெறவேண்டும். விரிவை அஞ்சுவதால் அவை இங்கே எழுதப்படவில்லை.

இப்போது நாம் விளக்கியுள்ள இந்த மர்த்தபாவை கலந்தரியாக்கள் என்ற (தரீக்கா) வழியைச் சேர்ந்த ஸூபிகள் “மர்த்தபத்துஸ்ஸிபாத்தி” என்று கூறுகிறார்கள். அதாவது ஒரு விதையை எடுத்துக்கொண்டால் அந்த விதையில் இருந்து வெளியாகக்கூடிய விருட்சம் கிளை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், விதைகளும் பின்பு அவற்றிலிருந்து இறுதி வரையிலும் வெளியாகக்கூடிய அத்தனையும் அவ்விதையில் அடங்கி மூடுதலாய்இருந்ததுபோல உண்மைப்பொருளான தாத்திலே அதன் சிபத்துக்களான சகல பண்புகளும் பொதிந்திருந்தன. தாத்துத் தன்னுடைய ஸிபத்துக்களை நோட்டமிடுவதற்காகத் தன்னுடைய சொந்த நிலைமையில் இருந்து ஸிபத்துடைய மர்த்தபாவை அடைந்தது. தாத்தைக் குணி (குணமுடையது) என்றும் ஸிபத்தைக் குணம் என்று நாம் வைத்துக்கொள்ளலாம். இந்த நிலைமையில் தாத்து ஸிபத்தை மட்டும் அறிந்திருந்தது. எப்படியென்றால் ஜீவன், அறிவு, நாட்டம், தத்துவம், கேள்வி, பார்வை, பேச்சு இன்னும் இலாஹியான ஸிபத்துகளையும் அதாவது கிருபை, கொடை, மன்னிப்பு, சாந்தம், நன்றி, இரணமளித்தல், சிருஷ்டித்தல், உயிரூட்டல், பாதுகாத்தல், மரணிக்கவைத்தல், போஷித்தல் போன்ற சகல ஸிபத்துக்களையும் பொதுவாய் பொதிந்ததாய் இருந்தது என்பதே.

இதன் சாரம், வெளியாகி மறைந்துபோன, வெளியாகிக்கொண்டிருக்கிற, வெளியாகவேண்டிய நல்லவை தீயவையாவுமே இந்த மர்த்தபாவில் தம்மைத்தாமும் அறியாதனவாய் எவ்வித வேறுபாடுமில்லாதவையாய்த் தாத்திலேயே புதையுண்டவையாய்த் தாத்தாகவே இருந்தன என்பது தான்.

## 3ஆவது (மர்த்தபா) நிலைமை:

இந்த நிலைமையைத் “தஜய்யுனுஸ்ஸானி” என்று கூறப்படும். நாம் இதை இரண்டாம் குறிப்பு அல்லது விபரக்கற்பனை என்று கூறுவோம். இறைவன் தன் தாத்தையும் (சொந்த நிலைமையையும்)

ஷிபத்தையும் (குணா குணங்களையும்) அதாவது தன்னையும் இனிமேல் வெளியாக வேண்டிய சர்வசிருஷ்டிகளையும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்து வெவ்வேறாய்த் தனித்தனியாய் அவன் அறிந்துள்ள அறிவைக் கருதியே விபரக்கற்பனையென்று நாம் கூறுகிறோம். இதற்கு "மர்த்தபத்துல்வாஹிதிய்யா" என்றும் "ஹகீகத்து இன்ஸானிய்யா" என்றும் பெயர் கூறப்படும். இந்த (1,2,3) மூன்று மர்த்தபாக்களையும் (தாத்து, தஜயுனுல்ஊலா என்னும் முஹம்மதியா, நூரானியா, தஜனுஸ்ஸானி என்னும் இன்ஸானிய்யா) ஆகிய மூன்று நிலைமைகளையும் நாம் விபரமாய் விளங்கியறியவேண்டும் என்பதற்காகவே 1ஆம், 2ஆம், 3ஆம் என்று வெவ்வேறாகவும் முன்பின்னாகவும் கூறினோமேயல்லாமல் **உண்மையாகவே இவை காலத்தினாலோ இடத்தினாலோ வேறு எந்த வகையினாலோ ஒன்றைவிட்டொன்று வெவ்வேறானவையேயல்ல.** இதை நுட்பமாய்ப் பொறுமையோடு தெளிவாய் விளங்கியறியாமல் இறைவழி நடைமுறையை மேற்கொள்ளவே முடியாது. ஐக்கியமாதல், பனாவாதல், அனாநிய்யத் அழிதல், தஜற்றுத்து என்னும் கட்டவிழ்தல், மவுத்தாகமல் மவுத்தாதல் என்பதெல்லாம் இவ்விபரத்தில் தேர்ச்சியடையவதைப் பொறுத்திருப்பதால் இதை நுட்பமாக விளங்கிக்கொள்ள வேண்டும். இந்த நிலைமையில் உறுதியடைவதன் பெயர்தான் நிரப்பமான ஈமான் (ஹக்குல் எகீன் - கமாலும் எகீன்) என்பது.

இவ்விபரத்தைப் புரிந்துகொள்ளாத ஒருவர் கலிமாவை ஏற்றுக்கொள்ளவோ தௌஹீதை விளங்கியறிந்து உண்மையான ஈமானை ஏற்றுக்கொள்ளவோ மாட்டார் என்பது நிச்சயமான உண்மையேயாகும். இதைப் புரிந்துக்கொள்ளாத அனுபவமற்ற ஒரு சாரார் அப்தை ஓர் தனிப்பொருளாகவும் அல்லது சகல சிருஷ்டிகளான சகல இலாஹுகளையும் வெவ்வேறு தனிப்பொருட்களாயும் காண்பதால் அப்து வேறு றப்பு வேறு என்கிறார்கள். ஏனென்றால் அல்லாஹ்வுடன் இன்னும் ஏதோ தனிப்பொருள் இருப்பதாய் அவர்கள் மருட்சியடைந்திருக்கிறார்கள். ஆகையால் தான் உண்மையைக்கூடப் புரட்டினார்கள். ஏனென்றால் இவர்கள் தஹ்கீது, தக்லீது என்ற இரு தன்மைகளும் அற்றவர்கள். அதாவது வேத வசனங்களை ஒப்புக்கொண்டவர்களுமல்ல. ஆராய்ந்து விளங்கியறிந்தவர்களுமல்ல. இவர்கள்தான் பின்பற்றல்வாதிகள்.

ஆதியாய் நாமரூபங்களுக்கெட்டாமல் தன்னந்தனியாய் இருந்த இருக்கிற இருக்கப்போகிற உஜூதுதான், தன்னில்தானே பல மர்த்தபாக்களை வகுத்துச் சர்வபிரபஞ்சங்களாகவும் சர்வ சிருஷ்டிகளாகவும் தன்னில் தானே காலமாக, இடமாக, நாமம், நிறம், தோற்றம் என்ற திரைகளில் வெளியாக முற்பட்டது. **தாத்து என்னும் உண்மைப்பொருளின் வெளிப்பாடான (ஆதாரத்தின் வெளிப்பாடான) ஆதேயங்களே சர்வ சிருஷ்டிகளும் என்பதை இப்போது பொதுப்படையாய் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும்.** சர்வ பிரபஞ்சங்களிலுமுள்ள சர்வசிருஷ்டிகளும் தனித்தனியாக உணரப்போகிற நான், நான், என்ற அனாநிய்யத், அகங்காரம் இந்த மர்த்தபாவில் இறைவனான தாத்துக்குரியதே அன்றிச் சிருஷ்டிக்குரியதல்ல. ஏனென்றால் இந்த மர்த்தபாவில் சிருஷ்டி என்பதே இன்னும் ஆகவில்லை. அச்சிருஷ்டிகள் அவற்றின் புலனுணர்வில் எட்டக்கூடியதாய்த் தனித்தனியாய் இன்னும் வெளியாகவில்லை.

இப்போது காலத்திலும் இடத்திலும் புலனுணர்வுகளிலும் கட்டுண்டிருக்கிற இன்ஸான் தன் உண்மையை, ஆதியான நிலைமையை மறந்தவனாக இருக்கிறான். இவ்வுண்மையை ஞாபகத்துக்குக் கொண்டு வருவதற்காகவே இறைவன் கலிமாவைக் கொடுத்து நபிமார்களை அனுப்பினான். இந்த மர்த்தபாவில் இப்போது நீ அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், இந்த நிலைமையில் சிருஷ்டிகளான சகலதும் இறைவனில் நிலைபெற்ற நாமரூப பேதங்களில் கட்டுண்ட வெறும் கற்பனைகளான தோற்றங்களேயல்லாமல் **அவை இறைவனை விட்டும் தனித்தனியான, வெவ்வேறான உஜூதுகளேயல்ல என்பது மட்டும்தான்.** இந்த மர்த்தபாவின் நிலைமையை ஞாபகத்துக்குக் கொண்டுவரச் சிலவழிகள் உண்டு. இன்ஷா அல்லாஹ் இறுதியில் ஓர் வழியை விளக்குவோம்.

## 4ஆவது (மர்த்தபா) நிலைமை:

இந்த நிலைமையை "ஆலமுல் அர்வாஹ்" என்று கூறப்படும். இதுதான் ஜீவஉலகம் என்ற நிலைமை, இந்த மர்த்தபாவில்தான் ஒவ்வோர் ஜீவனும் (றூஹும்) தம்மையும் பிறவற்றையும், தத்தமக்கென்று குறிப்பான சிருஷ்டிக்குரிய அறிவைக்கொண்டு தெளிவாய் அறிகின்றன. நான், நான் என்று தனித்தனியே உணர்கிற **அனாநிய்யத் (அகங்காரம்) உண்டான இடம் இவ்விடந்தான். இதற்கு முந்திய நிலைமையில் நான் என்றுணர்ந்தது இறைவனின் உணர்வே என்பதை மறந்து விடக்கூடாது.** மன்ஸூர் இப்னுகல்லாஜி(றஹ்) போன்றவர்களின் வாயினால் வெளியான சொற்கள் (அனல்ஹக்கு நானே உண்மைப் பொருள்) என்பவை போன்ற வசனங்கள் முந்திய மர்த்தபாவில் இருந்து இறைவன் கூறிய வசனமே என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். மன்சூர் என்ற திரையில் இருந்து இறைவனே கூறினான் என்பதை நாமுணர வேண்டும். அக்கால மக்கள் குரோத மனப்பான்மையினாலும் அறியாமையினாலும் அச்சொல்லை மார்க்க விரோதமாய்க் கண்டார்கள். இப்போதிருக்கும் இன்ஸான் தியானத்தில் மூழ்கி அந்த மர்த்தபாவின் நிலையை எய்தும்போது அவசியமானால் இவ்விதமான வார்த்தைகள் அவருடைய வாயில் இருந்து வெளியாகலாம். இது ஆச்சரியமுமல்ல. அறிவுக்கு விரோதமுமல்ல. மார்க்கத்துக்கு முரணானதுமல்ல. இதற்குரிய ஆதாரங்களைப் பின்னால் விளக்குவோம்.

## 5ஆவது (மர்த்தபா) நிலைமை:

இந்தநிலைமையை "ஆலமுல்மிதால்" என்று கூறப்படும் (பிளான்) மாதிரி உலகம் என்பதே இதன் சாரமாகும். இந்த மர்த்தபாவில் எவ்விதமான பௌதீக (சட) வஸ்த்துக்களுமே கிடையாது. இந்த

மர்த்தபாவிலுள்ள சர்வபிரபஞ்சங்களுமே சூட்சுமமானவையாகும். ஆகையால்தான் இதைச் சூட்சும உலகம் என்று கூறப்படுகிறது. சிருஷ்டிகளின் புலன்களால் இதற்குமுன் உணரப்பட்டு அழிந்துபோன, இப்போது உணரப்படுகிற, இனிமேல் உணரப்படப்போகிற சகலமும் இந்த மர்த்தபாவில் சூட்சுமமாய்ப் பொதிந்திருப்பதால்தான் இதற்கு ஆலமுல்மிதால் என்று பெயர் கூறப்படுகிறது. மனிதராகிய எமக்குத் தரப்பட்டுள்ள சூட்சும உடல் இந்த மர்த்தப்பாவைச் சேர்நததேயாகும். இந்த மர்த்தபாஅர்ஸி, குர்ஸி, நரகம், சுவர்க்கம், வானம், பூமி, மண், தண்ணீர், காற்று, நெருப்பு ஆகிய சகலத்தையும் சூட்சுமமாய்த் தன்னுள் அடக்கிக் கொண்டதாய் இருக்கிறது. உதாரணமாய்க் கூறுவதனால் எமது உள்ளத்தைப் போலென்று கூறலாம். இப்போது எமக்குள்ள ஸ்த்தூல உடலை விட்டுப்பிரிந்து சூட்சும உடலோடு உலாவக்கூடிய ஆற்றல் எமக்கிருந்தால் நாமும் இச் சூட்சும உலகில் பிரவேசிக்கலாம். இது அவ்லியாக்களுக்குரிய ஓர் சிறப்பியல்பாகும்.

## 6ஆவது (மர்த்தாபா) நிலைமை:

இதை “ஆலமுல் அஜ்ஸாம்”என்று கூறப்படும். அதாவது சட உலகம் அல்லது பௌதீக உலகம் அல்லது ஸ்த்தூல உலகம் என்பதே இதன் பொருளாகும். நாமும் பிற சிருஷ்டிகளும் தத்தம் புலன்களைக்கொண்டு இப்போது அனுபவிக்கிற பௌதீக உலகம் தான் இந்த மர்த்தபா.

## 7ஆவது (மர்த்தபா) நிலைமை:

இதை “ஆலமுல்இன்ஸான்” என்று கூறப்படும், அதாவது முன்னேவிபரித்த, வஹ்தத், வஹ்தானியத், ஜிஸ்மானியத்தான சகல மர்த்தபாக்களையும் ஒன்றாய் இணைத்துக்கொண்ட கடைசி நிலைமை இதுவாகும். **ஹக்கான உண்மைப்பொருளாய் இருந்த உஜூது கடைசியான தஜல்லியாகவும் கடைசியான (உடை) திரையாகவும் ஆலமுல் இன்ஸான் என்ற பெயரோடு தன்னுடைய அறிவில் தனக்காகத் தன்னாலேயே வெளியாகி இருக்கிறது.** கனவுக் காட்சியின் சகல பாகங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருந்து தன் அறிவில் தன்னிடத்தே தனக்காகக் கனவைக்காணும் மனம் அல்லது ஜீவனைப் போல.

மேலே கூறிய விஷயங்களின் பொதுவான சாரம் என்னவென்றால், இணைதுணை எதுவுமே இல்லாமல் தன்னந்தனியாய் மனோ வாக்குக்கெட்டாமல், நாமரூபபேதங்களைவிட்டும் மிகமிகப் பரிசுத்தமானதாய் இருந்த, இருக்கிற, இருக்கப்போகிற, உண்மைப் பொருள் தன்னைத்தான் சிருஷ்டியென்ற திரையில் இருந்து உணர (கண்டறிய) நாட்டம் கொண்டது. “இறாதா” என்பது நாட்டம் என்று கூறப்பட்டாலும் ஆசை, விரும்பம் என்பது பொருளாகாது. ஆயினும் நாம் விளங்கிக் கொள்வதற்காக அப்படி வைத்துக்கொள்ளலாம். இதற்குமுன் காணாமல் இருந்தது என்பதும் பொருளல்ல. ஏனென்றால் காலம் சிருஷ்டியைப் பொறுத்ததாயும் உண்மைப் பொருள் முக்காலங்களில் கட்டுப்படாததாயும் அதுவே காலமாயும் இருக்கிறது.

தன்னந்தனியான அந்தப் பொருள் தன் நாட்டப்படி தன்னிடத்ததே வெளியாக நாடியபோது தனக்கு ஓர் கலீபாவை (பிரதிநிதியை) ஏற்படுத்த விரும்பியது. ஏனென்றால், உண்மைப்பொருளான இறைவனுடைய ஷிபத்துக்களை (குணா குணங்களை) வெளிப்படுத்தச் சிருஷ்டிகள் வேண்டும். அவை வெவ்வேறு என்னும் தனித்தன்மையுடையவையாயும் இருக்க வேண்டும். அல்லாஹ் தனித் தன்மையுடையவனாயும் இருக்க வேண்டும். அல்லாஹ் என்ற நாமத்தையோ அல்லது மற்றும் திருநாமங்களையோ வெளிப்படுத்தவும் நாயகத்தன்மைக்குரிய சகலகாரியங்களையும் இயக்கவும் சிருஷ்டிகள் இன்றியமையாது என்று கண்ட அவ்விறைவனுக்குச் சிருஷ்டிகள் அவசியமாகின. ஆனால் சிருஷ்டிகளோ மடிந்தழியும் தன்மையும் சிறுமையும் உடையனவாய் இருப்பதால் மலிக்குல் ஹக்காகிய இறைவனின் பெருமையும் வலிமையும் மற்றும் பண்புகளும் வெளியாக இடம்பாடில்லாமல் இருந்தது. ஆகவே தன் சிருஷ்டிகளையும் தன்னையும் நேர் சம்பந்தப்படுத்தவும் தன் தத்துவங்கள் பண்புகள் வெளியாகவும் வேண்டித் தனக்கோர் கலீபாவை உருவாக்கினான். இவ்விபரம் குர்ஆனில் சூறத்துல் பகறாவில் 30,31,32,33ஆம் ஆயத்துக்களிலும் வேறு பல இடங்களிலும் விளக்கப்பட்டுள்ளது. இவ்விபரத்தை விளக்கிய பல ஹதீஸ்களும் இருக்கின்றன. விரிவை அஞ்சி இங்கே அவை எழுதப்படவில்லை.

இந்தக் கலீபாவுக்கு ஏற்கும் தன்மை,ஈயும் தன்மை ஆகிய இரு பண்புகளையும் ஏற்படுத்தினான். இப்பண்புகளைப் பெரும் பாலான ஒலிமார்கள் முகங்கள் என்று கூறுவது போலவே நாமும் கூறுவோம். இந்த முகங்களில் ஒன்று இறைவனின் அருளை ஏற்பதும் மற்றொன்று சிருஷ்டிகளான சர்வ உலகங்களையும் நோக்கி ஈவதுமாகும். இந்தக் கலீபா சர்வ உலகங்களிலும் ஆட்சி அதிகாரங்களை நடாத்துவதற்காக அவரைத் தன்னுடைய “றஹ்மான்” என்ற சூறத்திலேயே (தோற்றத்திலேயே) உருவாக்கினான்.

ஆதமை றஹ்மானுடைய தோற்றத்தில் (சூறத்தில்) படைத்தோம். என்று ஓர் ஹதீஸிலும் இன்னும் ஓர் ஹதீஸில் அல்லாஹ் ஆதமை அவனுடைய சூறத்திலேயே படைத்தான் என்றும் கூறப்படுகிறது. இந்தக் கலீபா ஆட்சி அதிகாரங்களை முறையாய் நடாத்துவதற்காகத் தன்னுடைய அஸ்மா (நாமம்) ஸிபத்து (பண்பு)களைப் பரிவட்டமாகப் போர்த்தினான். தன்னுடைய நாமங்களான “லாஹிறு” வெளியானவன் “பாதினு” உள்ளீடானவன் என்ற இரு நாமங்களையும்கொண்டு ஓர் உடலையும் உயிரையும் கொடுத்தான். அதாவது உடலென்ற வாகனத்தைக் கொண்டு கீழ் உலகமான சட உலகில் ஆட்சிசெய்யவும் உயிரைக்கொண்டு மேல் உலகமான மலக்கூத்தில் ஆட்சி செய்யவும் வேண்டும் என்பதற்காகவே இவ்விருதன்மைகளும் கொடுக்கப்பட்டன. இவ்விரண்டும் ஒன்றாகவே

இணைக்கப்பட்டன. இவ்விடத்தில் சில இரகசியங்கள் மறைக்கப்பட வேண்டியிருப்பதால் பொதுப்படையான விபரத்தை மட்டும் கூறுவோம். சிருஷ்டிகளான சகல உலகங்களுக்கும் தனக்குமிடையில் இவர் கலந்து உரையாடக்கூடியவராய் இருப்பதால் இவருக்கு இன்ஸான் என்று பெயரும் சூட்டினான்.

நூறைவிட அல்லாஹ் ஓர் பெரிய படைப்பைப் படைக்கவில்லையென்று றசூல்(ஸல்) அவர்கள் கூறியுள்ள இந்த "றூஹுல் அஹ்லம்" தான் இன்ஸான் என்ற கலீபாவின் உண்மையான தோற்றமாகும். இந்தக்கலீபா தன் தேவைக்கேற்ற படி பாவிப்பதற்காக அமைக்கப்பட்ட வாகனம்தான் (சட உலகம்) சட உடலாகும். இவ்விடத்திலும் ஓர் இரகசியம் உண்டு. இறைவழி செல்லும்போது நீ அறிந்து கொள்வாய் கவலைப்படாதே. ஓரளவு சூசகமாய்க் கூறுகிறேன். நுட்பமாய் உணரவும். இந்தக் கலீபாவின் லாஹிறான (வெளிப்படையான) உடல் அர்ஸு, குர்ஸு மற்றும் சகல உலகங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டதாகும். இந்தக் கலீபாவின் உண்மையான நிலையைக் கூறுவதானால்,

(அல்ஆலமு இன்ஸானுன் கபீர்) சர்வபிரபஞ்சங்களும் சேர்ந்த பெரிய இன்ஸான் என்று கூறலாம். முஹக்கிகூன்களான தத்துவஞானிகள் இன்ஸானுல் அக்பர் என்று கூறுவதும் இந்து ஞானவான்களில் சரியான விளக்கமுடையவர்கள் "விராட்புருடன்" என்று கூறுவதும் இந்தக் கலீபாவைத்தான். இவ்விபரத்தை நீ ஓரளவேனும் விளங்கிக் கொள்ளாவிட்டால் குறுகிய கால எல்லைக்குள் இந்த நிலைமையைப் பெறவும் பூரணத்தன்மையை அடையவும் முடியாதிருக்கும். ஏனென்றால், இந்தக் கலீபாவின் நிலைமையை மனிதன் பெற்றுக்கொண்டால்தான் உண்மையான இறைபண்புகள் அவனில் வெளியாகவும் இறைவனோடு உறவாடவும் தன்னைத் தானே கண்டறியவும் முடியும்.

திடனாக அல்லாஹ் ஆதமைத் தன் சூறத்தின் மேல் படைத்தான் ஆகவே ஓ! இன்ஸானே!! நீ உன் நப்ஸை அறி. ஆப்படி அறிந்தாயாகில் உன் நாயகனை அறிவாய் என்று கூறப்பட்டுள்ளதை இவ்விடத்தில் கவனத்துக்கெடுக்கவேண்டும். மேலும் றூஹு என்பது இறைவனுடைய (அம்று) இரகசியத்தில் நின்றுமுள்ளது. ஆதன் விஷயத்தில் சொற்ப அறிவுதான் உங்களுக்கு உண்டு என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். இவ்விடத்தில் இன்னும் மேலதிக விபரத்தைத்தருவது அறிவு குறைந்த கோழைகளைக் குருடர்களாகவே மாற்றலாம். ஆகவே இவ்வளவோடு இதை முடிப்போம்.

மேலே காட்டிய றூஹும் அஹ்லம் என்ற உயிரில் நின்றும் நப்ஸுல் குல்லியில் நின்றும் உண்டான றூஹும் உடலும்தான் மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள தனித்தனித் தோற்றங்களாகும். இவ்விடத்தில் றூஹைப்பற்றித் தவறாக விளங்கிக் கொள்ளக்கூடாது. அதாவது றூஹு என்றால் தாய் வயிற்றில் இருக்கும் போது நாலாவது மாதம் எம்முள் புகுந்து கொள்வது என்று மருட்சியடைய வேண்டாம். இவ்விதமான விபரங்களெல்லாம் பாமர மக்களின் அபிப்பிராயங்களாய் இருக்கின்றன. உண்மையோ வேறாய் இருக்கிறது. இதன் உண்மை இப்போது அறிவில் அமைய முடியாமல் இருப்பதால் உடலை மட்டும் எடுத்துக்கொள்வோம்.

சர்வபிரபஞ்சங்களிலுமுள்ள சிற்சில பாகங்களைக் கொண்டு, அதாவது மண், தண்ணீர், காற்று, நெருப்பு முதலாம் பௌதீகப் பொருட்களைக்கொண்டு இந்தப் பௌதீக உடல் உண்டாக்கப்பட்டுள்ளது. ஆகவே சாதாரண மனிதனைச் சின்ன இன்ஸான் (இன்ஸானுன்ஸகீறுன்) என்று கூறுகிறோம். இந்த சின்ன இன்ஸான் உண்மையான இறைவழியைத் தெரிவு செய்து முறைப்படி செயற்பட்டால் (அமல் செய்தால்) அவனுடைய அறிவு விளக்கங்களுக்கமைவாய் என்றோ ஓர்நாள் பெரிய இன்ஸானுடைய மர்த்தபாவை அடைந்தே ஆவான் என்பது நிச்சயம். நாம் முன்பு கூறிய அஹது என்ற மர்த்தபாவைவிட மற்றும் ஆறு நிலைமைகளையும் இந்தச் சின்ன இன்ஸான் அவனுடைய பகுத்தறிவைக் கொண்டு உணரமுடியும். அதாவது இந்த ஆறு மர்த்தபாக்களும் பகுத்தறிவுக்கு எட்டக் கூடியவையே. இவ்வளவு தூரமும் கூறியவற்றின் சாரம்சம் என்னவென்றால், அஹதுடைய மர்த்தபாவில் இருந்த உண்மைப் பொருள்தான் இருந்த நிலைமையில் எவ்வித மாறுபாடும் இல்லாமல் இருந்து கொண்டு அஹ்யான்தாவில் தன் அறிவில் அடங்கியிருந்த அத்தனையையும் தன்னிலே வெளியாக்க நாடிக் "குன்" என்ற சொல்லைக்கொண்டு தன்னில் தானே தனக்காக வெளியானது என்பதுதான். மனம் தன்னில் புதையுண்டு கிடந்த காட்சியைக் கனவு என்ற பெயரில் தன்னிடத்தே தனக்காகக் காண்பதைப் போல "கற்பனை வந்தவாறு காட்டினோம், காண்பவெல்லாம் சொற்பனம்போல எண்ணித் துணிந்தவன் ஞானியாவான்" என்று ஓர் இந்து ஞானவான் பாடுகிறார்.

02 **(8)**

இப்போது சிந்தனை செய்துபார். உன் பெயர் அகமது என்று வைத்துக்கொள். "மும்கினுல் உஜூது" என்று கூறப்படுகிற அகமதாகிய நீ பிறப்பதற்குமுன் தந்தையின் இந்திரியமாயும், அதற்கு முன் இரத்தமாயும், அதற்குமுன் உணவாயும் இருந்தாய். நீ இறந்து விட்டபின் அழுகிக்கரைந்து மண்ணாய், தண்ணீராய். காற்றாய் நெருப்பாய் மாறிமாறி வந்துகொண்டிருந்த போதிலும் அகமதுவாகிய உன்னுடைய உஜூது நீங்காமல்தான் இருந்தது. ஆனால் பிள்ளையாகப் பெறப்பட்ட பின்புதான் அகமது என்று பெயர் சூட்டப்பட்டது. அதற்கு முன்னும் இறப்பின் பின்னும் ஒவ்வோர் மர்த்தபாவில் ஒவ்வோர் பெயரைப் பெற்றது. அதாவது உணவு, இரத்தம், இந்திரியம், கரு, சிசு, அகமது, பிணம், மண், தண்ணீர், காற்று நெருப்பு என்று பெயர் பெற்றுக்கொண்டிருந்தது. ஆனால் அகமது என்று ஓர்

மர்த்தபாவில பெயர் சூட்டப்பட்ட் உஜூது வெவ்வேறு நிலைமையில் வெவ்வேறு தோற்றங்களோடும் வெவ்வேறு பெயரோடும், என்றும் இருந்ததும், இருப்பதும், இருக்கப் போவதும்தான். ஆகவே என்றும் உள்ள உண்மை என்றைக்கும் மறைந்தழியாமல் எப்போதும் உள்ளதேதான். மறைப்பதற்கு இன்னும் ஓர் பொருள்வேண்டும். மறைக்கும் பொருள் மறையும் பொருளின் அளவுடையதாய் அல்லது அதிலும் பெரிதாய் இருக்க வேண்டும். வாஜிபுல் உஜூதைத்தவிர ஒன்றுமே இல்லையென்றால் மறைக்கும் பொருள் ஏது? மறையும்பொருள் ஏது?

فَلَنَقُصَّنَّ عَلَيْهِم بِعِلْمٍ ۖ وَمَا كُنَّا غَآئِبِينَ

7.7 *நாம் அறிந்திருப்பவற்றை நிச்சயமாக அவர்களுக்குக் கூறுவோம். நாம் மறைவாக இருக்கவில்லை.*

ஆகவே உண்மைப்பொருள் மறைந்திருப்பதாக நம்புவது மருட்சியாகும். உஜூது எப்போதும் உள்ளதுதான் என்பதற்குப் பொருள் என்னவென்றால் எதனுடைய இருப்பு அவசியமாயும் அதைவிட்டு நீங்குவது கூடாததாயும் இருக்கிறதோ அதுவேயாகும். நாம் முன்பு கூறிய அகமதுடைய உஜூது என்பது (மப்தவுல் ஆதாரி) பல பண்புகளும் குணங்களும் வெளிப்படுவதற்குச் சாதனமாய் அமைந்திருந்த ஒன்றேயாகும். அந்த உஜூது நாம் கூறிய உணவு, இரத்தம், இந்திரியம், கரு, சிசு போன்ற எந்த நிலைமையிலும் அகமதை விட்டும் நீங்கவேயில்லை. நீங்கியதெல்லாம் குறிப்பான சிற்சில பண்புகள் மட்டும்தான். இந்தப் பண்புகள் நாமமும் நிறமும் உருவமும் அன்றிப் பொருளேயல்ல. இந்த நாமம், நிறம், உருவம்போன்ற பண்புகள் அழிவதால் உஜூது அழிவதேயில்லை. எப்படியென்றால் அகமது பிள்ளையாய் இருந்து வாலிபத்துக்கும் வாலிபத்தில் இருந்து வயோதிபத்துக்கும் மாறிக்கொண்டிருந்தபோதும் அகமதின் உஜூது அழியாமல் என்றும் இருந்ததுபோலவேதான் இருந்தது. ஆகவே அகமது ஓர் நிலைமையில் இருந்து இன்னோர் நிலைமைக்கு மாறுவது அகமதுடைய உஜூதைப் பாதிக்காது என்பது வெளிப்படையாகவே தென்படுகிறது.

இம்மாதிரியான மாறுதலுக்கும் வெறும் நாமரூபபேதங்களுக்கும் "இம்கானுல்காஸ்ஸு" என்று கூறப்படும். இல்லாவிட்டால் அப்பொருள் அனாதி என்றாகாதவரையில் உஜூதாய் இருக்காது. இருந்தது தானே வரவேண்டும். இல்லாதது வராது. இருப்பது நாமரூப பேதமாற்றங்களால் அழிவடையவும் முடியாது. (நுட்பமாய் உணர்க). உயிருள்ள மாறுதலுக்கும் உயிரற்ற மாறுதலுக்கும் பேதமுண்டு என்று நீ கூறுவாயேயானால், நான் விளக்கிய விஷயம் உனக்குப் புரியவில்லையென்பதே பொருள், உயிரற்ற எப்பொருளுமே கிடையாது. ஆனால் சில இயங்குவன போலும் சில இயங்காதன போலும் தென்பட்டாலும் விஷயம் அப்படியல்ல. சகலமும் உயிருடையவை தான். இயங்குவனதான். அப்படியில்லையானால் சிருஷ்டி என்று ஆகாது. அதாவது உஜூது என்னும் உண்மை மூன்று வகையாகும்.

**1ஆவது:** வாஜிபுல் உஜூது என்னும் உண்மைப்பொருளாகும். இது தான் அல்லாஹ்வுடைய உஜூது.

**2ஆவது:** மும்தனிஉல் உஜூது என்னும் இன்மைப்பொருள். இது எப்போதும் இல்லாத ஒன்றாகும்.

**3ஆவது:** மும்கினுல் உஜூது என்னும் ஆதேயப்பொருள். அதாவது ஆதாரத்தின் வேண்டுதலுள்ள பொய்ப்பொருள். இதுதான் சிருஷ்டி என்பது. இந்த நிலைமைக்கு உண்மையும் உண்டு இன்மையும் உண்டு. இல்லாமல் அழிந்தொழிபவை. ஆகவே அழிவது நிறம் தோற்றம் பெயரேயன்றி உஜூதல்ல. (நுட்பமாய் உணர்க).

**கேள்வி:**

சிருஷ்டிகள் நிறமும் நாமமும் தோற்றமுமேயன்றிப் பொருளல்ல என்றால். நாம் காண்பதெல்லாம் அல்லாஹ்வைத்தான் என்று ஆகிறதே, ஆனால் யாராவதொருவன் விழித்திருக்கையில் முகக்கண்ணைக்கொண்டு அல்லாஹ்வைப் பார்த்தேன் என்று கூறுவானேயானால், அவன் பொய்யனும் ஜின்தீக்குமாய் இருக்கிறான் என்று ஷறகில் வெளிப்படையாக வந்திருக்கிறதே? ஆகவே, காண்பதெல்லாம் அல்லாஹ்வின் தோற்றங்களே என்று எப்படி ஒப்புக்கொள்வது?

**பதில்:**

குர்ஆனிலோ ஹதீஸிலோ இப்படி வெளிப்படையான சொல் வந்திருப்பதில்லை. ஆனால் குர்ஆன் ஹதீஸ்களில் எவ்விடத்திலாவது கேள்வியில் இடம் பெற்ற வசனங்கள் போலுள்ள வசனங்களால் சமிக்ஞை செய்யப்பட்டிருந்தால் அதன் விபரம், இறைவனுடைய "தன்ஸீஹ்" என்ற தாத்தின் நிலைமையைக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டதாகும். அதாவது மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பஞ்சபுலன்கள் இறைவனுடைய "தன்ஸீஹ்" என்ற நிலைமையைக் கண்டறியக்கூடியன அல்ல. ஆனால், மனிதனுடைய இந்த ஐந்து புலன்களும் இறைவனுடைய "தஸ்பீஹ்" என்ற வெளித்தோற்ற நிலைமையைக் கண்டறியக்கூடியவைதான். அதாவது இன்ஸான் என்று கூறப்படுகிற மனிதஜீவன் மனித அறிவுக்கு எட்டாததுபோலவே இறைவனுடைய இயற்றன்மையான தாத்தை மனித புலன்களால் கண்டடையவே முடியாது. ஆனால், இன்ஸானின் வெளித்தோற்றமான உடலை மனிதபுலன்கள் கண்டடைவதுபோல இறைவனின் "தஸ்பீஹ்" என்ற வெளித்தோற்றமான

(லாஹிறான) நிலைமையை மனிதபுலன்கள் கண்டடையக் கூடியவைதான். இந்த விபரம்தான் ஸறகில் கூறப்பட்டுள்ளதேயல்லாமல் அல்லாஹ்வுடைய லாஹிறான தோற்றங்களை எவ்விடத்திலும் காணமுடியாதென்பது கருத்தல்ல. இவ்விபரத்தைக் குர்ஆன், ஹதீஸ்கள் தெளிவாக விளக்கித் தருகின்றன.

فَلَنَقُصَّنَّ عَلَيْهِم بِعِلْمٍ ۖ وَمَا كُنَّا غَآئِبِينَ

7-7 *நாம் அறிந்திருப்பவற்றை நிச்சயமாக அவர்களுக்குக் கூறுவோம். நாம் மறைவாக இருக்கவில்லை.*

(வெளிப்படையாய் மறைவில்லாமல் இருக்கும் பொருளைக் காணமுடியும் என்பதில் ஆட்சேபனையில்லை. ஆனால் காண்பதற்குரிய கண்வேண்டும்)

وَلَمَّا جَآءَ مُوسَىٰ لِمِيقَٰتِنَا وَكَلَّمَهُۥ رَبُّهُۥ قَالَ رَبِّ أَرِنِىٓ أَنظُرْ إِلَيْكَ ۚ قَالَ
لَن تَرَىٰنِى وَلَٰكِنِ ٱنظُرْ إِلَى ٱلْجَبَلِ فَإِنِ ٱسْتَقَرَّ مَكَانَهُۥ فَسَوْفَ تَرَىٰنِى ۚ
فَلَمَّا تَجَلَّىٰ رَبُّهُۥ لِلْجَبَلِ جَعَلَهُۥ دَكًّا وَخَرَّ مُوسَىٰ صَعِقًا ۚ فَلَمَّآ أَفَاقَ قَالَ
سُبْحَٰنَكَ تُبْتُ إِلَيْكَ وَأَنَا۠ أَوَّلُ ٱلْمُؤْمِنِينَ

7-143 *நாம் குறிப்பிட்ட நேரத்தில் மூஸா வந்த பொழுது அவருடைய இறைவன் அவருடன் பேசினான். (அப்போதுமூஸா) என் இறைவனே நான் உன்னைப் பார்க்க நீ உன்னை எனக்குக் காட்டு என்று கூறினார். (நேர்முகமாய்) என்னைக் காண உம்மால் ஒருபோதும் முடியாது. எனினும் இம்மலையை நீர் நோக்கும் அது தன்னுடைய இடத்தில் நிலைத்திருந்தால் நீர் என்னைக் காண்பீர் என்று கூறினான். அவருடைய இறைவன் அம்மலைமீது தோற்றமளிக்கவே அது தவிடு பொடியாயிற்று. மூஸாதிடுக்கிட்டு (மூர்ச்சையாகி) விழுந்தார். அவர் தெளிவு பெறவே நீ மிகப்பரிசுத்தமானவன். நான் உன்னிடம் மன்னிப்புக் கோருகிறேன். அன்றி (உன்னை) விசுவாசிப்போரில் நான் முதன்மையானவன் என்று கூறினார்.*

أَلَآ إِنَّهُمْ فِى مِرْيَةٍ مِّن لِّقَآءِ رَبِّهِمْ ۗ أَلَآ إِنَّهُۥ بِكُلِّ شَىْءٍ مُّحِيطٌۢ

41.54 *நிச்சமாக அவர்கள் தாங்கள் இறைவனைக் காண்பதைப் பற்றியும் சந்தேகத்தில் இருக்கிறார்கள் என்பதை நீர் அறிந்து கொள்ளும். அவன் சகல விஷயங்களையும் சூழ்ந்து கொண்டும் இருக்கிறான் என்பதையும் நிச்சயமாக அறிந்து கொள்ளும்.*

(இவ்வித ஆயத்துக்களை ஆராய்ந்தால் நான் கூறியவிடயத்தை அறிய முடியும்).

இதில் குறிப்பிடப்பட்ட சூழ்தலுக்கு முன்பு விளக்கம் தரப்பட்டுள்ளது இதே போன்ற இன்னும் பல உறுதியான ஆயத்துக்கள் இருக்கின்றன. இவற்றையே நாம் போதுமாக்குவோம். இறைவனைக் காண்பது ஆகிறாவில்தானே என்று யாராவது கூறினால் அது அறியாமையாகும் என்பதை விளங்கியறிய வேண்டும். குர்ஆனுக்குமாறாய் விவாதிப்பதானால் நமக்கு பேச்சே கிடையாது. அவர்கள் கூறுவது போல இறைவனை ஆகிறாவில்தான் பார்க்கலாம். என்றாலும் அதற்கும் ஓர் தோற்றம், உருவம் வேண்டுமல்லாவா?

**ஹதீஸ்:** ***தாங்கள் இறைவனைப் பார்த்ததுண்டா? என்று நான் கேட்டேன். அவன் ஒளிமயமானவனாயிற்றே. நான் அவனை எவ்விதம் பார்த்தல், முடியும்? என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூசர்(றலி)**
**ஆதாரம்: முஸ்லீம், திர்மிதீ.**

(இந்த ஹதீஸில் இறைவன் ஒளிமயமானவன் என்றும் அவனைப்பார்க்க முடியாது என்றும் கூறப்பட்டுள்ளது. இறைவனின் "தன்ஸீஹ்" என்ற நிலைமையைக் குறிப்பிட்டதாகும்).

**ஹதீஸ்:** ***நபி(ஸல்) அவர்கள் இறைவனை இரு முறை பார்த்தார்கள் என்று நான் கூறினேன். அதற்கு இக்ரிமா (றலி)அவர்கள் எவர்களுடைய பார்வையும் அவனையடையாது என்று***

*6–130ம் ஆயத்தில் இறைவன் கூறுகிறானே? என்று கேட்டார்கள். அதற்கு நான் உம்முடைய கைசேதமே! இது இறைவன் தன்னுடைய பேரொளியில் (சுய தாத்தில்) தோன்றும்போதுதான். நிச்சயமாக நபி(ஸல்) அவர்கள் தம் இறைவனை இருமறை பார்த்திருக்கிறார்கள் என்று எடுத்துரைத்தேன்.*

**அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(றலி**
**ஆதாரம்: திர்மிதீ.**

**ஹதீஸ்:** ***அழகிய உருவில் என் இறைவன் என்னிடம் வந்து முஹம்மதே என்று கூறினான். அதற்கு நான் என் இறைவனே நான் அடிபணிந்தேன். இதோ பிரசன்னமாயுள்ளேன் என்று கூறினேன். அவன் வானவர்களில் மிக உயர்ந்தோர் எது பற்றி விவாதம் செய்கின்றனர் என்பதை நீர் அறிவீரா? என்று வினவினான். நான் அறியமாட்டேன் என்று கூறினேன். எனவே அவன் தன்கையை என் இரண்டு தோள்களுக்கும் இடையில், நான் அதன் குளிர்ச்சியை என் இரண்டு மார்புகளுக்குமிடயில் உணரும் வரை வைத்தான்.எனவே நான் வானங்கள் பூமியிலுள்ள யாவற்றையும் அறிந்து கொண்டேன். இப்படி ஓர் நீண்ட ஹதீஸ் தென்படுகிறது.***

**அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(றலி)**
**ஆதாரம்: திர்மீதி.**

(இவ்விடயம் சரியென்பதை என் சொந்த அனுபவத்திலும் நான் கண்டுள்ளேன் என்பதைச் சொல்லிவைக்கிறேன்.)

இது விஷயமாக உன் சந்தேகம் ஓரளவு நீங்கக் கூடியவகையில் ஓரளவு விபரம் தந்தால் நல்லது என்று நினைக்கிறேன். ஒரு “ரேடியோ” நிலையத்தில் இருந்து ஒலியலைகள் வானில் பரத்தப்படுகின்றன என்பதும் “டெலிவிஷன்” நிலையத்திலிருந்து ஒளி அலைகள் வானில் பரத்தப்படுகின்றன என்பதும் அவ்வலைகளைத் தம்மிடத்தே இழுத்தெடுப்பதும் அவ்வகை ஒலிகளைப் பாடல் பிரசங்கங்களை நாம் கேட்பதும், ஒளி அலைகளினால் ஆக்கப்பட்ட காட்சிகளை, மக்களை, உருவங்களை நாம் காண்பதும் எம் அனுபவத்திலுள்ள சர்வசாதாரணமான ஒரு விஷயமாகும். இந்த ஒலி, ஒளி அலைகளை எம் புறக்கண்களால் பார்ப்பதோ, செவியினால் கேட்பதேயில்லை, ஆயினும் ரேடியோ, டெலிவிஷன்களால் சீரமைத்துத் தரும்போது அவ்வொலிகளைச் செவியினாலும் ஒளிகளைக் கண்களினாலும் பார்த்து அனுபவிக்கிறோம். ஆயினும், ஒலி, ஒளி அலைகள் வானில் பரத்தப்பட்டள்ளன என்பதையும் அவற்றை ரேடியொ, டெலிவிஷன்கள் ஒன்றுபடுத்தி எமது அனுபவத்துக்குத் தருகின்றன என்பதையும் (அறிவாற்றலில்லாத) ரேடியோ, டெலிவிஷனைப் பற்றிய விபரம் தெரியாத ஒரு மனிதன் ஒப்புக் கொள்ளவேமாட்டான். டெலிவிஷன், ரேடியோ போன்ற கருவிகள் உருவாக்கப்பட்ட ஆரம்பத்தில் அறிவில்லாத பாமரமக்கள் அவ்வுண்மைகளை மறுத்துக்கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். இன்று அக்கருவிகள் சர்வ சாதாரணமாய் அனுபவத்திற்கு வந்து விட்டதனால் எவரும் அவற்றை மறுப்பதேயில்லை.

இவ்விஷயம் உண்மைதானென்று நமக்குத் தெரிந்திருந்தாலும் கூட எம்முடைய ரேடியொ, டெலிவிஷன் பழுதடைந்த நிலையில் இருக்கும்போது வானில் பரத்தப்பட்டுள்ள பாடல், பேச்சு முதலாம் ஒலி நிகழ்ச்சிகளையோ, காட்சி, மனிதர், நாடகம், நடனம் முதலாம் ஒளி நிகழ்ச்சிகளையோ எம்மால் கண்டுகளிக்க, கேட்டு ரசிக்க முடிவதேயில்லை, இதேபோல இறைவனுடைய (ஸிபத்துக்களின்) பண்புகளின் ஒலிகளும், ஒளிகளும் மற்றும் குணா குணங்களும், இடம் என்பது எவ்வளவு வியாபகமாய்ச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதோ அவ்வளவு வியாபகமான இடத்திலும் காலம் என்பது எவ்வளவு நீளமாய்ச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதோ அவ்வளவு காலம் முழுமையிலும் அணுவேனும் இடைவெளி இல்லாமல் வியாபகமாய்ப் பரந்திருக்கின்றன. ஒலிமார்களுடைய உள்ளங்களோ ரேடியோ, டெலிவிஷனைப்போல் இருக்கின்றன. அந்த உள்ளங்களான றேடியோ, டெலிவிஷன் கருவிகளில் இருந்த பிழைகள் திருத்தி மைக்கப்பட்டு (பல வருட கடின பயிற்சி, முயட்சி அருட்கொடைகளினால் திருத்தப்பட்டு) இறைவனுடைய ஷிபத்துக்களின் ஒலி, ஒளிப் பண்புகளைத் தங்களிடத்தே இழுத்துக்கொள்கின்றன. இதில் நபிமார்கள் றசூல்மார்களுடைய உள்ளங்கள் கிரகித்துக்கொள்ளும் ஒலி நிகழ்ச்சிகளுக்கு நாம் “வஹி” என்றும், ஒளி நிகழ்ச்சிகளுக்கு “தீர்க்கதரிசனம்” (உண்மையான காட்சி) என்றும் கூறுகிறோம். அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய வலிமார்கள் கேட்கும் ஒலி நிகழ்ச்சிக்கு “இல்ஹாம்”“இல்முல்லதுன்னீ” என்றும், அவர்கள் காணும் ஒளி நிகழ்ச்சிக்கு “றூயா” முஸாஹிதா, கஸ்பு என்றும் கூறுகிறோம். இது நம்மெல்லோருக்கும் தெரிந்த ஓர் விஷயம்தான். அப்படித் தெரிந்திருக்கும் போதும் இறைவனை நான் இன்ன ஸூறத்தில் கண்டேன் என்று ஒருவர் கூறும்போது அல்லது இறைவனுடைய பேச்சை நான் இப்படி அறிந்தேன் என்று கூறும் போது நாம் ஏன் அதை மறுக்கவும் வெறுக்கவும் வேண்டும்? இது எங்களுடைய அறியாமையாகும். சிந்தித்துத் தெளிவுபெறாத குற்றமாகும். எந்த அடிப்படையில் நாம் அவ்வுண்மையை மறுக்கிறோம் என்பதை நாம் சிந்திப்பதே இல்லை. அறிஞர்களான உலமாக்களிலும் ஒரு சிலர் இவ்வுண்மையை மறுப்பதென்றால், அவர்களை நாம் அறிஞர்கள் உலமாக்கள் என்று எப்படிக் கூறுவது? எங்களுடைய இருதயமான ரேடியோ, டெலிவிஷன்கள் பலவருட மூடப்பழக்கங்களிலும் அறியாமையிலும் ஊறித்துருப்பிடித்துப் பழுதடைந்து கிடப்பதால் இவ்விதமான பேச்சுக்களையும் காட்சிகளையும் கண்டுகொள்ளக் கேட்டுக்கொள்ள எம்மால் முடியாமல் இருக்கலாம். ஆனால் ஒலிமார்கள் தங்கள் இருதயங்களை திருத்திக் கொண்டவர்கள். அவர்கள் கூறுவது பொய்யல்ல. உண்மையான விஷயம்தான். நாமும் அரும்பாடுபட்டேனும் எம்

இருதயக்கருவியைத் திருத்தி அமைத்துக்கொண்டால் நாமும் உண்மையை அனுபவத்தில் காணலாம். கேட்கலாம் என்பது நிச்சயமான உண்மையேதான்.

**சகோதரனே!**

நீ உயிரோடு இருக்கும்போது உன் உடல்தோற்றத்தைப் போட்டோ (படம்) பிடித்து வைத்திருக்கிறாய். இதேபோல உன்பேச்சை ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து வைத்திருக்கிறாய். நீ இறந்த பிறகும் உன் உருவத்தைப் போட்டோ மூலம் காணவும் ஒலிப்பதிவு நாடாமூலம் உன் பேச்சைக் கேட்கவும் எங்களால் நிச்சயமாக முடியும்தானே! இதை நீ எப்படிப் பொய்யென்பாய்? இப்போது நுட்பமாய்ச் சிந்தனை செய்துபார். காலம் இடம் என்பவையும் அவற்றில் (கட்டுண்ட) சிருஷ்டிக்கப்பட்ட சர்வ நல்ல, தீய சிருஷ்டிகளும் எப்போது வெளியாக்கப்பட்டனவோ அப்போதிருந்தே அவற்றின் சர்வ விஷயங்களும் அணுவேனும் விடப்படாமல் ஒலி, ஒளி மற்றும் நுட்பமான பலபண்புகளால் பதிவு செய்யபப்ட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. நீ இறப்பதற்கு முன் உன் போட்டோவை நாங்கள் அமைத்துக் கொள்ளாவிட்டாலும் இயற்கையெனும் சக்தி எம் உருவத்தைப் படம் பிடித்துக்கொண்டு தான் இருக்கிறது. அதாவது உன்தோற்றம் எங்களுடைய உள்ளத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது போல மிகமிகச் சூட்சுமமான முறையில் சர்வ சிருஷ்டிகளுடைய சர்வகாரியங்களும் பதிவு செய்யப்பட்டுத்தான் இருக்கின்றன. பேச்சும் இதே போலத்தான்.

இப்படிச் சூட்சுமமாய்ப் பதிவுசெய்யப்பட்டுள்ள தோற்றங்களைப் பேச்சுக்களைக் கிரகிகக் கூடிய ஓர் கருவியை மனிதனால் உருவாக்க முடியுமானால் ஆதம்(அலை) அவர்களின் உருவத்தை நிச்சயமாக எம்மால் கண்டுகளிக்க முடியும். அவர்களுடைய பேச்சை எம்மால் கேட்கமுடியும். றசூல் (ஸல்) அவர்களுடைய உண்மையான தோற்றத்தைப்பேச்சை எம்மால் அனுபவிக்கமுடியும். இது ஆச்சரியமோ நடக்கமுடியாத ஓர் காரியமோ அல்ல ஆனால் இப்படியோர் கருவி இதுவரை மனிதனால் உருவாக்கப்படவில்லை. ஆயினும் மனிதன் என்றோ ஒரு நாள் இப்படியோர் கருவியைக் கண்டறிவான் என்பது நிச்சயமான உண்மை. அதாவது எந்த ஒரு பொருள் அழிந்தொழிந்து விட்டாலும் அதன் உருவமோ பண்போ மற்றும் எல்லாக் காரியங்களும் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால் சூட்சுமமாய் இருக்கின்றன. அவற்றை எம்முடைய புலன்கள் உணர்ந்து கொள்வதில்லை. இவ்விஷயத்தைக் குர்ஆன், ஹதீஸ்களின் உதவியோடு விபரமாக விளக்கித் தரமுடியும். ஆயினும் விரிவைப் பயப்படுவதால் நான் சுருக்கிக்கொள்கிறேன்.

எம்முடைய பயிற்சியற்ற புலன்கள் சூட்சும உலகையும் அவற்றில் பதிந்துள்ள சர்வ நிகழ்ச்சிகளையும் அறியக்கூடாதனவாய் இருப்பினும், நல்லடியார்களான வலிமார்களின் புலன்கள் அந்தச் சூட்சும உலகையும் அவற்றின் சர்வ காரியங்களையும் அறியக் கூடியனவாக இருக்கின்றன. அவர்களுடைய காட்சிகள் கேள்விகள் உண்மையானவைதான். அவ்விபரங்களில் நாம் விதண்டாவதாதம் செய்வது எம்முடைய அறியாமையேயாகும். இன்னும் சற்றுச் சிந்தனை செய்துபார். நல்லடியார்கள் ஓயாமல் தியானத்தில் ஈடுபடுகிறார்கள். இந்தத்தியானம் முதிர்ச்சியடையும்போது அவர்களுடைய புலன்கள் ஓடுங்கிவிடுகின்றன. அவர்களுடைய உள்ளங்கள் கண்ணாடிக்கொப்பாகின்றன. இவ்விதமமான ஓர் வேளையில் றசூல்(ஸல்) அவர்களுடைய அல்லது வேறோர் நல்லடியாருடைய அல்லது இறைவனுடைய ஓர்தோற்றம் அல்லது பேச்சு அல்லது வேறோர் உலகத்தின் காட்சி, பேச்சுக்கள் அவருடைய உள்ளத்தில் தென்படுவது ஆச்சரியமல்ல. மூமீனுக்கு மூமீன் கண்ணாடியாகும் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே கண்ணாடிக்கொப்பான அந்த நல்லடியாரின் கல்பில், சென்றுவிட்ட ஓர் பொருளின் அல்லது மனிதரின் தோற்றம் அல்லது பேச்சு அல்லது எதிர் காலத்தில் வரப்போகிற ஓர் விஷயம் வெளியாவது எப்படி ஆச்சரியமாகும். வந்த வரப்போகிற அத்தனையும் சூட்சுமமாய்ப் பொதிந்துகொண்டதுதான் “லவ்ஹுல்மஹ்பூல்” என்பது. இதைப்பார்ப்பவர்களும் மனிதரிலுண்டு.

இதில் நபிமார்கள் றசூல்மார்களுக்கும் வலிமார்களுக்குமிடையில் சிற்சில நுட்பமான வேறுபாடுகள் இருக்கின்றன. அவ்விபரங்கள் இவ்விடத்தில் அவசியமல்ல. ஒரு சிலர் கனவு, றூயா, போன்ற காட்சிகளில்தான் இப்படிக் கண்டு கேட்டு இருக்கிறார்கள் என்று மருட்சியடையாதே. நீ தௌஹீதில் நிலைப்படும்போதுதான் உண்மையை அறிவாய், அது வரையிலும் நல்லடியார்களில் பேச்சுக்களை உதறித் தள்ளிவிடாதே.

நான் எனது இறைவனை இருபாதங்களிலும் தங்கப்பாதரட்சையணிந்தும் நீண்ட தலை முடி வைத்துமுள்ள ஓர் அழகான வாலிபனின் உருவத்தில் கண்டேன் என்று முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜெய்லானி அவர்கள் கூறுகிறார்கள். இதேபோல இன்னும் எத்தனையோ ஸுபிகளான மகான்கள் கூறுகிறார்கள். இது விஷயத்தில் நாமும் அறிந்தவரையில் ஏதோவெல்லாம் கூறலாம். ஆயினும் நீ உன் சொந்த அனுபவத்தில் இவ்வுண்மையைக் கண்டறிய முயற்சிப்பாயாக.

இவ்விஷயத்தில் இன்னும் பல றிவாயத்துக்கள் தென்படுகின்றன. அவைமிக நீளமாய் இருப்பதால் இங்கே எழுதப்படவில்லை. அலி(றலி) அவர்கள் அல்லாஹ்வையன்றி நான் பார்த்ததில்லை என்று கூறுகிறார்கள். அவ்லியாக்களான நல்லடியார்கள் இது விஷயமாக எவ்வளவோ விஷயங்களைக் கூறியுள்ளார்கள். அவற்றையெல்லாம் நாம் இங்கு எழுதவில்லை. அவ்லியாக்கள் நபிமார்கள் றசூல்மார்கள் மட்டுமல்லாமல் சாதாரண மனிதனும்கூட இறைவனின் தோற்றங்களைத்தான் பார்க்கிறான். ஆனால் நல்லடியார்களுக்கு வெளியாகும் தோற்றங்களில் சில விசேட தோற்றங்களும் வெளியாகின்றன. அவ்வளவுதான். ஜின், மலக்குகள் முதலான சூட்சும சிருஷ்டிகளின் சாதாரண உருவங்களைக்கூட மனிதன் சிருஷ்டியின் தோற்றத்தில் காணுகிறான். ஆனால், இது ஜின், இது

மலக்கு என்பதை அவன் உணர்ந்து கொள்வதில்லை. இறைவனுடைய விசேட தோற்றங்களைக் காணக்கூடிய மனோபக்குவம் எமக்கும் இருந்தால் நாமும் அவ்விதமான விசேட தோற்றங்களைப் பார்க்கலாம் இதில் ஒன்றும் ஆச்சரியமே இல்லை.

صِبْغَةَ ٱللَّهِ ۖ وَمَنْ أَحْسَنُ مِنَ ٱللَّهِ صِبْغَةً ۖ وَنَحْنُ لَهُۥ عَـٰبِدُونَ

2:138 *அல்லாஹ்வுடைய வர்ணத்தை அடைவோம். அல்லாஹ்வைவிட வர்ண அழகன் யார்? நாம் அவனையே வணங்குவோம்.*

இவ்வாயத்துக்கு மிக அபூர்வமான விளக்கங்கள் தென்படுகின்றன. அழகு சூட்சுமமானதானாலும் வெளிப்படையானதானாலும் அந்த அழகு அறிவில் அமைவதற்குத் தோற்றம் அவசியமாகும் (நுட்பமாய் உணரவும்)

(அழகன் என்ற நாமத்தைத்தான் இந்துக்கள் முருகன் (அழகன்) என்று கூறுகிறார்கள்)

**ஹதீஸ்:** ***என் அடியான் என்மீது கொண்டுள்ள எண்ணத்தின்படிதான் நான் இருக்கிறேன் என்று அல்லாஹ் கூறியதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம்: புஹாரீ முஸ்லிம் திர்மிதி.**

சின்ன இன்ஸானாய் இருக்கிற நாம் காலத்திலும் இடத்திலும் கட்டுண்டு புலன்களுக்கும் வஹ்முக்கும் அடிமையாகி இருப்பதால் உண்மைப்பொருளை விட்டும் வேறான தனிப்பொருளாக எம்மை நம்பியிருக்கிறோம். காலத்தில் கட்டுண்டிருப்பதால் பலகோடிவருடங்களின் பின்பே நாம் பிறந்துள்ளதாய் நம்புகிறோம். புலனறிவில் கட்டுண்டிருப்பதால் பலகோடிவருடங்களின் பின்பே நாம் பூமியில் பிறந்துள்ளதாய் நம்புகிறோம். இடத்தில்கட்டுண்டிருப்பதால் இறைவனைவிட வேறான ஓர் இடத்தில் நாம் வாழ்வதாக நம்புகிறோம். இந்தக்காலத்தையும் இடத்தையும் உறுதிப்படுத்த எம்முடைய புலனறிவுகள் துணைசெய்கின்றன. எம்முடைய புலனறிவுகள் ஓர் குறிப்பிட்ட அளவு எல்கையுடையனவாகும். ஆகவே எம்முடைய சுய நிலைமையை மறந்த மறதியாளர்களாய், பிரயாணத்தை மறந்த பிரயாணிபோல் இருக்கிறோம். இந்த மறதியை நீக்கி எமது சுயநிலைமையைப் பெறுவதற்கு உதவியாய்த் தரப்பட்டதுதான் கலிமாவும் அதன் விபரமான தெளஹீதும். வஹ்மு, காலம், இடம் ஆகிய திரைகளை விட்டும் நீங்கக் கூடிய மனோபக்குவம் எமக்கு ஏற்பட்டால் அன்றிருந்த சுயநிலைமையிலேயே நான் இன்றும் இருக்கிறேன் என்பதும், என் திட்டத்தை நானே என்னில் காண்கிறேன் என்பதும் தெரியவரும். பூரணத்தன்மை, சாந்தி என்பதன் சாரம் இதுதான். இவ்வசனங்கள் ஒரு சிலரைக் குழப்பலாம் என்பது எமக்குத் தெரியும், ஆயினும் இறைவழிசெல்ல முற்படுவோருக்கு உண்மை விளங்கவும், உண்மையை விளக்கவும்தானே வேண்டும். ஆகவே எமது வசன நடையைப் பொருட்படுத்தாமல் அதன் உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும்.

**சகோதரனே!**

உண்மையான ஞானம் பெற்ற நல்லடியார்களுக்கு, மெய்கண்ட ஸித்திக்கீன்களான மெய்யடியார்களுக்கு "சூர்" என்னும் எக்காளம் ஊதப்பட்டுவிட்டது. ஏனென்றால் அவர்களுடைய நப்ஸிகளின் மீது முன்னதாகவே ஓர் கியாம நாள் உண்டாக்கப்படுகிறது. அவர்கள் தங்களுடைய ஊக்கங்கொண்டு உலகத்திலிருந்து முகம் திரும்பியவர்களாவார்கள். அவர்கள் ஸிராத்து என்னும் பாலத்தில் நடந்து கடந்தவர்களாவார்கள். உள்ளம் கொண்டு நடந்து சுவர்க்க வாயிலை அடைந்துவிட்டவர்கள். இன்னும் சிலர் இறைமுன் நிலைமையே எய்திவிட்டவர்கள். இவர்கள் இறைவனை அவன் நாடிய ஸூறத்தில் அல்லது இவர்கள் விரும்புகிற ஸூறத்தில் காண்பதும் உறவாடுவதும் ஆச்சரியமேயல்ல. இவ்வகையினரில் ஒரு சிலர். உலகச் சிக்கலில் மாட்டிக் கொண்ட மக்களும் தங்களுடைய நப்ஸே என்பதை அறிகிறார்கள். அவர்களை மீட்பதற்காகவே இவ்வுலகில் எம்மைப்போல் வாழ்கிறார்கள். இவர்களில் முதல்வகுப்பார் நபிமார்கள், அடுத்தவகுப்பினர் ஸித்திக்கீன்கள், மற்றெல்லா ஒலிமார்களும் இவ்விரு வகுப்பாரைவிடத் தாழ்பதவியுடையவர்களே ஆவார்கள் இது எமது புதுக்கண்டுபிடிப்பல்ல. ஆதம்(அலை) அவர்களுடைய காலத்திலிருந்து இதுவரை நடைபெற்றுவரும் உண்மைதான் இவ்விஷயம். இதை அனுபவமற்ற அறிவிலிகள் மறுத்தாலும் சரியே.

மேலே நாம் கூறிய விபரங்கள் அறிவுகுறைந்த மனிதர்களுக்கு வியப்பை, ஆச்சரியத்தை ஊட்டினாலும் உண்மை எப்போதும் உண்மைதான். காலம், இடம், வஹ்மு என்ற திரைகளைக் கடக்கவும் எம்சுய நிலையை அடையவும் தரப்பட்ட வேதவசனங்களைத் தலைகீழாகப்புரட்டிக்கொண்ட மக்களுக்கு வானத்தின் வாசல்கள் எப்படித்திறக்கும்? கலிமாவை விளங்கியறிந்து ஈமான்கொண்ட ஒருவர் படிப்படியாய் காலம் இடம் என்ற திரைகளைக் கடக்கிறார். அவருடைய வஹ்மு நீங்கிவிடுவதால் அவருடைய புலன்பொறிகள் அவருடைய ஆட்சியில் அமைகின்றன. அவருடைய சூட்சும புலன்கள் முறையாய் இயங்க ஆரம்பிக்கின்றன. தான் கடந்து செல்லும் மர்த்தபாக்களில், தான் சின்ன இன்ஸானாய் இருந்த போது படித்தறியாத, கேட்டறியாத எத்தனையெத்தனையோ உண்மைகளையும், நுட்பங்களையும் கண்டறிகிறார். இவருடைய சிருஷ்டி அறிவாகிய பகுத்தறிவு

“விஜ்தான்” என்னும் இறையறிவாக மாற்றமடைகிறது. முடிவில் “இன்ஸானுன்கபீர்” என்னும் பெரிய இன்ஸானுடைய (கலீபாவுடைய) நிலைமையைப் பெறுகிறார். இந்த நிலைமை இறைவன் தஜல்லியாகும் தகுதியுடையதாய் இருப்பதால், இவருடைய புலன்கள் பொறிகள்யாவும் வியாபகமடைகின்றன. அவரில் இறைவனுடைய ஸிபத்துக்கள் வெளியாகின்றன. இவருக்கு “ஹக்குல் எகீன்” என்ற பூரண ஈமான் ஏற்பட்டு விடுகிறது. என்னையன்றி ஒன்றுமே இல்லையென்று காணுகிறார். யார் காணுகிறார்? இறைவனேதான் காணுகிறான். இங்கே சிருஷ்டி என்ற தன்மை மாய்ந்து விடுவதால், இன்ஸான் என்ற போர்வை நீங்கிவிடுவதால் “அனல்ஹக்கு” நான் உண்மைப்பொருள் என்றும் கூறுகிறார்கள். யார் கூறுகிறார்? இறைவன்தான் கூறுகிறான். ஆனால் விஷயம் விளங்காமல் மூடப்பிடிவாதங்களில் ஊறிக்கிடக்கிற நாம் எம்மை ஏதோவெல்லாம் பெரிதாக நினைத்துக்கொண்டு இது ஸறகுக்கு விரோதமான சொல் என்றும் மன்சூர் இப்னுகல்லாஜ் என்ற மனிதரே இச்சொல்லைக் கூறினார் என்றும் தீர்ப்புக்கட்டுகிறோம். ஆனால்,**தீர்ப்புக்கட்டுகிற எம்மில் பலருக்கு ஸறகு என்றால் என்ன? என்பது கூடத் தெரியவே தெரியாது என்பது உண்மை.** EUNA C12 P02 Hakkul ekeen

இறைவன் “கலாமுல்லாஹ்” பேசுகிறவன் என்பதையும் திரைமறைவில் இருந்து பேசுகிறான் என்பதையும் மறந்தே விடுகிறோம். ஸறகு இவ்வகையினருக்கு விதிவிலக்களித்தள்ளது என்பதும் எமக்குத் தென்படுவதில்லை. இந்த உண்மையான நிலைமையை எய்தவைப்பது தான் ஷரீஅத்தின் நோக்கம் என்றால் இதை ஷரீஅத் எப்படி மறுக்கும்? ஏன் மறுக்க வேண்டும்? கலிமாவின் உண்மையும் மற்றும் சில உண்மைகளும் மறைக்கப்பட்டதும் புரட்டப்பட்டதும் தான் காரணம்.

فَإِنِّي قَرِيبٌ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ

2-186 *என்னுடைய அடியார்கள் என்னைப்பற்றிக் கேட்டால்நிச்சயமாக நான் சமீபமாகஇருக்கிறேன் (என்று கூறும்) என்னை அழைத்தால் அவ்வழைப்போனின் அழைப்புக்கு விடையளிப்பேன். ஆதலால் அவர்கள் என்னிடமே பிரார்தனை செய்யவும்,நேரான வழியை அடைவார்கள்.*

இறைவன் பேசக்கூடியவன் என்பதில் என்ன சந்தேகம். மேலும் திரைக்கப்பாலிருந்தோ அல்லது உண்மையை அறிவிக்கக் கூடிய ஓர் தூதுவர் மூலமாகவோ அன்றி எம்மனிதருடனும் இறைவன்பேசுவதற்கில்லை என்று குர்ஆன் கூறுகிறது. ஆகவே மன்சூர் இப்னுகல்லாஜ்(றஹ்) என்ற திரையில் இருந்து இறைவனே பேசினான் என்பதை நாம் ஏன் ஏற்றுக்கொள்ளமுடியாது? இறைதியானத்திலிருப்போரின் வாயிலிருந்து வெளியாகும்சொல் இறைவனின் சொல்லே என்பதை நாம் உணரவேண்டும். கஸ்ஸாலி(றஹ்) கூறுவது போல இறைவன் கூறிய வேதவசனத்தை அம்மனிதர் கூறிக் கொண்டிருந்தாரென்றுகொண்டாலே எமக்குப் போதுமானது. அதில் நாம் பிழை காணவேண்டிய அவசியம் இல்லை.

நாம் கூறிய விபரப்படி மனிதனே இறைவனாகிவிட்டான் என்று தவறாக விளங்கிக் கொள்ளவேண்டாம். மனிதன் (இன்ஸான்) ஒரு போதும் அல்லாஹ் ஆவதே இல்லை. “இன்ஸான்” என்பது இறைவனின் ஓர் தோற்றமேயன்றி வேறோர் தனிப்பொருளேயல்ல. இவ்விடத்திலும் ஓர் சந்தேகம் பிறக்கலாம். அதாவது பிர்அவுன் நமுறூது போன்றோர் நான் தான் நாயன் என்று கூறிய வார்த்தைகளை பிழையாகவும் அவ்லியாக்கள் கூறிய வார்த்தைகளைச் சரியாகவும் நாம் ஏன் கணிக்க வேண்டும்? என்பதுதான் சந்தேகம்.

**பதில்:**

ஹதீஸ்களும், குர்ஆன் வசனங்களும் றசூல்(ஸல்) அவர்களுடைய வாயினாலேயே வெளியானவை என்பது நம் எல்லோருக்குமே தெரியும். அதேபோல றசூல்(ஸல்) அவர்கள் தம் மனைவிமார்களோடு உரையாடிய சரச வார்த்தைகள் முஹம்மது(ஸல்) என்ற மனிதராலும், ஹதீஸ்கள் றசூலாலும் குர்ஆன் அல்லாஹ்வினாலும் கூறப்பட்டவை என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதாவது சரசவார்த்தைகளைக் கூறும்போது முஹம்மது(ஸல்) அவர்கள் சாதாரண மனிதனுடைய நிலையிலும் ஹதீஸ்களைக் கூறும் போது றசூலுடைய நிலைமையிலும் இருந்தார்கள். ஆனால், குர்ஆனைக் கூறும்போது றசூல்(ஸல்) அவர்களில் அல்லாஹ்வே தஜல்லியானான். (ஜிப்ரீல் மூலம் அறிவிக்கப்பட்டது என்கினும் சரிதான்) ஜிப்ரீல் என்பதில் விளக்கம் தரமுடியாத சில இரகசியங்கள் இருக்கின்றன. இதேபோல பிர்அவுண், நமுறூது போன்றோர் பேசிய சொற்கள் வஹ்முடைய சாதாரண மனிதனுடைய பிழையான பேச்சுக்களாய் இருக்கின்றன. ஆனால் அவ்லியாக்கள் கூறிய வார்த்தைகள் அவர்களில் தஜல்லியான இறைவனின் வார்த்தைகளாய் இருக்கின்றன. இவ்விரண்டக்குமிடையில் வெகுதூர வேறுபாடுகள் உண்டு. இதை விபரிப்பதானால் மிக அதிகமாய்க் கூறவேண்டியதாய் இருக்கிறது. இவ்விஷயத்தில் அனுபவத்தினால் உணரவேண்டிய பல ஷிர்ருகள் இருக்கின்றன.

கடல் என்பது அலை, நுரையென்ற பெயர்களில் காட்சியளிப்பது போல, மனம் கனவின்போது பற்பல நாமரூபங்களில் காட்சியளிப்பது போல என்றைக்குமுள்ள உண்மையான பொருள் தன்னிடத்தே பற்பலவகையில் காட்சியளிக்கிறது. இவ்விஷயம் குர்ஆன், ஹதஸ்களினாலும் புத்தியினாலும் அனுபவத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்ட ஓர் உண்மையாகும். இவ்வுண்மையில் நிலைபெறுவதற்குத்தான் ஈமான், எகீன், விசுவாசம் என்பது பெயராகும். இவ்வுண்மையில் ஊறித்திளைத்தவர்கள்தான்

றசூல்மார்கள், நபிமார்கள், வலிமார்கள். இவர்களிடத்தில் காண்பவன், காட்சிப்பொருள், காட்சி என்ற திரிபுடி உணர்வு கிடையாது. ஆனால் நபிமார்கள், றசூல்மார்களுக்கும் வலிமார்களில் ஒருவகுப்பினருக்கும் சில ஒற்றுமைகளும் வேறுசில வேற்றுமைகளும் இருக்கின்றன. அதாவது நபிமார்கள் றசூல்மார்கள் திரிபுடி உணர்வு உடையவர்களாயும் அவ்வுணர்வு இல்லாதவர்களாயும் ஒன்றையொன்று தடைசெய்யாத முறையில் விசேடத்தன்மையைப் பெற்றவர்களாவார்கள். வலிமார்களிலும் மிகச்சிலர் இந்த நிலைமையைப் பெற்றவர்களே. இவர்களைக் குத்புகள் என்று கூறப்படும். இந்த வகையினரல்லாத மற்றும் அவ்லியாக்கள் திரிபுடியுணர்வற்றபோது இறைவன் தஜல்லியானால், அவர்களுடைய வாய் மூலமாக ஏதோவெல்லாம் வெளியாகலாம். இவர்கள் தன்னுணர்வற்றிருப்பதால், தங்களைத் தாங்களே அறியாதவர்களாய் இருப்பதால், தங்களைக் கட்டுப்பாட்டுக்குள் அடக்கமுடியாதவர்களேதான். இவர்கள் மன்னிக்கப்பட்டவர்கள், தன்னுணர்வு ஏற்பட்டு மனித சுபாவத்தையடையும்போது நாம் இப்படிக் கூறினோம் என்பதும் கூட இவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். நிரப்பத்தையடைந்தவர்கள் தங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய ஆற்றலுடையவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் தான் நபிமார்கள். றசூல்மார்கள், ஷிர்ருடைய அடியார்கள்.

## 03 (10)

காண்பவன், காட்சிப்பொருள், காட்சி என்ற திரிபுடியுணர்வு மாய்ந்தவர்கள் சித்திக்கீன்களாய் இருக்கிறார்கள். இவர்கள் தங்களைத் தாங்களே அறிந்து கொள்ளாமல் இருந்ததே பாவம் என்பதை உணர்ந்தும் கொண்டவர்கள். சாதாரண மனிதருக்கும் இவர்களுக்கும் ஈமான், அறிவு விஷயங்களில் மிக மிக வேறுபாடு உண்டு.

وَقُلْنَا يَٰٓـَٔادَمُ ٱسْكُنْ أَنتَ وَزَوْجُكَ ٱلْجَنَّةَ وَكُلَا مِنْهَا رَغَدًا حَيْثُ
شِئْتُمَا وَلَا تَقْرَبَا هَٰذِهِ ٱلشَّجَرَةَ فَتَكُونَا مِنَ ٱلظَّٰلِمِينَ

2-35 பின்னர் நாம் ஆதமே! நீர் உம்முடைய மனைவியுடன் (ஜன்னத்) இச்சோலையில் வசித்திரும். நீங்கள் இருவரும் விரும்பும் இடத்தில் விரும்பியதைத் தாராளமாய்ப் புசியுங்கள், ஆனால் இவ்விருட்சத்தை அணுகாதீர்கள். அணுகினால் நீங்கள் இருவரும் தீங்கிழைத்துக் கொண்டவர்களாகி விடுவீர்கள் என்று கூறினோம்.

فَأَزَلَّهُمَا ٱلشَّيْطَٰنُ عَنْهَا فَأَخْرَجَهُمَا مِمَّا كَانَا فِيهِ ۖ وَقُلْنَا ٱهْبِطُوا۟
بَعْضُكُمْ لِبَعْضٍ عَدُوٌّ ۖ وَلَكُمْ فِى ٱلْأَرْضِ مُسْتَقَرٌّ وَمَتَٰعٌ إِلَىٰ حِينٍ

2-36 எனினும் ஷைத்தான் அவ்விருவரையும் தவறிழைக்கும்படி செய்து அச்சோலையை விட்டும் அவ்விருவரும் இருந்த நிலைமையில் இருந்தும் அவர்கள் வெளியேறும்படி செய்து விட்டான். ஆகவே உங்களில் ஒருவர் மற்றவருக்கு விரோதியாகிவிட்டதால் இச்சோலையில் இருந்து நீங்கள் இறங்கிவிடுங்கள். உங்களுக்குப் பூமியில்தான் வசிக்க இடமுண்டு.அதில் சிறிதுகாலம்வரையில் சுகமும் அனுபவிக்கலாம் என்று கூறினோம்.

فَتَلَقَّىٰٓ ءَادَمُ مِن رَّبِّهِۦ كَلِمَٰتٍ فَتَابَ عَلَيْهِ ۚ إِنَّهُۥ هُوَ ٱلتَّوَّابُ
ٱلرَّحِيمُ

2-37 பின்னர் ஆதம் கலிமாவைத் தன் இறைவனிடமிருந்த எடுத்துக் கொண்டார். அதனால் அவரை மன்னித்துவிட்டான். நிச்சயமாக அவன் மிக்கமன்னிப்போனும் இரக்கமுடையோனுமாய் இருக்கிறான்.

قُلْنَا ٱهْبِطُوا۟ مِنْهَا جَمِيعًا ۖ فَإِمَّا يَأْتِيَنَّكُم مِّنِّى هُدًى فَمَن تَبِعَ هُدَاىَ فَلَا
خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ

2-38 நாம் கூறினோம். நீங்கள் யாவரும் இதிலிருந்து இறங்கிவிடுங்கள். என்னிடமிருந்து உங்களுக்கு நேர்வழி நிச்சயமாக வரும். எவர்கள் என்னுடைய அந்த நேர்வழியைப்

*பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.*

وَٱلَّذِينَ كَفَرُواْ وَكَذَّبُواْ بِـَٔايَـٰتِنَآ أُوْلَـٰٓئِكَ أَصْحَـٰبُ ٱلنَّارِ ۖ هُمْ

فِيهَا خَـٰلِدُونَ

2-39 *எவர்கள் என்னுடைய (நேர்) வழியை நிராகரித்து என்னுடைய வசனங்களைப்க பொய்யாக்குகின்றார்களோ அவர்கள் நரகவாசிகளே. அதில் அவர்கள் தங்கிவிடுவார்கள்.*

இந்த ஆயத்துகளைப் பல கண்ணோட்டங்களோடு ஆலோசனை செய்துபார். இவ்வாயத்துக்கள் பல கருத்துடைய முதஸாபிஹாத் இனத்தைச் சேர்ந்தவையாகும். இவ்விதமான ஆயத்துகளுக்கு ஸூபிகளான ஒலிமார்கள் இதுவரை எட்டுக்கருத்துக்களை விளக்கியிருக்கிறார்கள். அவற்றில் அவசியமான ஓர் கருத்தை மட்டும் நாம் விளங்கியறிவோம்.

எம் தந்தை ஆதம்(அலை) அவர்கள் உண்ட கனி என்ன கனி என்பதை நீ அறிவாயா? அதுதான் நான் வேறு ஹவ்வா வேறு, இறைவன் வேறு என்று நம்பிய "அனாநிய்யத்" (அகங்காரம்) என்னும் கனியாகும். இந்த அகங்கார உணர்வு இனிமையாய் இருப்பதால் கனியென்று கூறப்பட்டது. நீ விரும்பினால் கோதுமைக் கனி என்றோ வேறு ஏதும் கனியென்றொ கூறிக்கொள். இந்தக்கனியும் கிளை, இலை, முதலாம் சார்புகளும் கொண்ட விருட்சம் எமது புறக்கண்ணுக்குத் தென்படாவிட்டாலும் அறிஞர்களான மகான்களின் அறிவுக்கண்ணுக்குத் தென்படவே செய்கிறது. அதாவது துவிதக் கொள்கையான ஷிர்க்கும் அதன் சார்புகளான மற்றும் காரியங்களும் ஒன்று சேர்ந்ததே அந்த கெட்ட மரமாகும்.

இதையிட்டு பைபிள் என்ன கூறுகிறதென்று பார். அந்த மெய்யான கடவுள் ஏதென் தோட்டம் என்ற பெயர் கொண்ட ஒரு அழகான தோட்டத்தை உண்டாக்கி முதல் மனிதனாகிய ஆதாமையும் முதல் மனுஷியாகிய ஏவாளையும் அத்தோட்டத்தில் வைத்தார். (ஆதி, 2-8)

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை மாத்திரம் நீங்கள் புசிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டார். (ஆதி, 2-17)

நன்மை, தீமை, சரி, பிழைகளை அறியத்தக்க கனி என்பது எதுவாக இருக்கும்? நன்மை தீமையை மனிதன் எப்படி அறிகிறான்? நன்மை, தீமையைச் சரிபிழையைப் பகுத்தறிவைக் கொண்டுதானே மனிதன் அறிகிறான். பகுத்தறிவு எப்படி வேலை செய்கிறது? ஒவ்வொன்றையும் தனித்தனியாய் வெவ்வேறாய்க் காண்பதால்தான் ஒன்றோடொன்றை ஒப்பிட்டு நோக்கி, பகுத்து (வகுத்து) அறிகிறது. ஆகையால்தான் அதற்குப்பகுத்தறிவு என்று பெயர் கூறப்படுகிறது இந்த பகுத்தறிவு, நான் வேறு மற்றெல்லாம் வேறு, வேறு என்ற ஓர் உணர்வை அடையாத நிலைமையில் பகுத்தறிவு என்று பெயர் பெறுவதேயில்லை. நான் வேறு மற்றவை வேறு என்று உணர்கிற இந்த நிலைமைக்குப் பெயர்தான் பகுத்தறிவு, அனாநிய்யத் அகங்காரம் என்றெல்லாம் கூறப்படுவது. ஆதாமும் ஏவாளும் இந்த அனாநிய்யத் (அகங்காரம் "ஆணவம்" வேறு, வேறு என்ற உணர்வு) என்னும் கனியை உண்டதனால்தான் பாவிகளாக, குற்றவாளிகளாகக் கணிக்கப்பட்டார்கள். ஜன்னத் (சுவர்க்கம்) (ஏதன்) என்னும் தோட்டத்தில் வாழத்தகுதியற்றவர்களானார்கள். அதாவது அனுபவிக்கப்படும் பொருள் அனுபவிப்பவர் அனுபவம் என்னும் (திரிபுடி) மூன்று உணர்வுகள் (ஓரே முறையில்) இவர்களுக்கு ஏற்பட்டதனால்தான் ஜன்னத் என்னும் சுவர்க்கத்தில் (தோட்டத்தில்) இருந்து நீக்கப்பட்டார்கள். இந்த உணர்வுடையவர்கள் வாழத்தகுதியான இடம் பூமி (துன்யா)தான் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆகவே திரிபுடி உணர்வுடைய அனாநிய்யத்துடைய, நான் வேறு மற்றும் யாவும் வேறு வேறானவை என்ற உணர்வுடைய எந்த ஓர் மனிதனும் சுவர்க்கத்தில் (ஜன்னத்தில் -ஏதன் எனும் தோட்டத்தில்) வாழத்தகுதியற்றவன் என்பதையும், இவ்வுணர்வு இருக்கும் வரையிலும் அவன் பாவமன்னிப்பை அடையவோ சுவர்க்கத்தில் (ஜன்னத்தில்-ஏதனில்) நுழையவோ முடியாது என்பதையும் நாம் அறிகிறோம். ஆகையால்தான் ஊசியுடைய காதில் ஒட்டகை நுழைவதைவிட மனிதன் ஜன்னத்தில் பிரவேசிப்பது கடினம் என்று இறைவன் விளக்கம் தருகிறான்.

ஆகவே சுவர்க்கம் என்பது எம்முடைய சமூக மக்களுக்கு (அவாம்களுக்கு) விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது போன்ற கற்பனை உலகமென்றோ. அந்தச் சுவர்க்கத்தில் பிரவேசிப்பது கண்மூடித்தனமான தொழுகை, நோன்பு போன்ற இபாதத்துக்களினாலென்றோ நாம் ஏமாந்துவிடக்கூடாது இவ்விஷயத்தில் ஒஸ்த்தாது (ஆசிரியர்) மூலம் அறியவேண்டிய பல இரகசியங்கள் இருக்கின்றன. அவற்றை நாம் இங்கே கூறுவதற்கில்லை. மனிதன் இறைவனின் ஏவலுக்கு மாறு செய்யும் தன்மையை ஏன் பெறுகிறான்? நான் இறைவனைவிட்டும் வேறான ஓர் தனிப்பொருள் என்ற உணர்விருப்பதனால்தான். இந்த உணர்வு எப்போது மாய்ந்தொழியுமோ அப்போதுதான் பாவம் என்பது (இறை ஏவலுக்கு மாறுசெய்யும் உணர்வு) நீக்கமடைகிறது. இந்தப்பாவ நீக்கத்துக்குரிய ஒரேயொரு வழி கலிமாவில் நிலைபெற்றுப் பகுத்தறிவைக் கடந்த ஓர் உயர்நிலைமையைப் பெறுவதாகும். இதற்கதிகமான விபரம் எதுவும் இங்கே தரமுடியாது. மன்னிக்கவும். பூரணசாந்தி என்பது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட (நன்மைதீமையின் பேதம் தெரியாத) ஓர் நிலைமை என்பதை நுட்பமாய்ப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜன்னத் (சுவர்க்கம், சோலை) என்பது இன்ஸானுடைய ஓர் மர்த்தபா (நிலைமை) ஆகும். இந்த ஜன்னத்தில் ஷிர்க்குடையோர் இருக்கத் தகுதியல்ல என்பதற்காகவே ஆதம் (அலை) அவர்களும் ஹவ்வா(அலை) அவர்களும் வெளியேற்றப்பட்டார்கள். துன்யா என்பது இன்ஸானுடைய வேறோர் தாழ்ந்த மர்த்தபாவாகும். சோலையில் இருந்து வெளியேறும்போது எமது தந்தை இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட வாக்கியம் “லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற கலிமாவாகும். இந்தக் கலிமா ஷிர்க்கில் இருந்து விடுபடுவதற்காகவே கொடுக்கப்பட்டதாகும். எம் தந்தை ஷிர்க்கு என்ற மரத்தின் கனியை உண்ட ஷிர்க்காளியாய் இருந்தமையால்தான் ஷிர்க்கை நீக்கும் கலிமா தரப்பட்டது. இந்தக்கலிமாவின் உதவியினால் ஷிர்க்கைவிட்டு நீங்கித் தௌஹீதில் நிலை பெற்றதனால்தான் மன்னிப்பை அடைந்தார்கள். அதாவது ஷிர்க்கு அற்ற நிலையில் (இன்ஸானுன்கபீர்) பெரிய இன்ஸானுடைய நிலையில் ஜன்னத்தில் வாசம் செய்தவர்கள், (வஹ்மு என்ற) இப்லீஸினால் மருட்டப்பட்டு ஜன்னத்தை இழந்து துன்யாவுக்கானார்கள். சின்ன இன்ஸானுடைய (இன்ஸானுன்ஸகீர்) நிலைமையை அடைந்தார்கள். பாவம் மன்னிக்கப்பட்டு மீண்டும் பழைய நிலைமையை (மர்த்தபாவை) அடைவதற்காகவே கலிமாவைப் பெற்றுக் கொண்டார்கள். இந்தக்கலிமாவின் துணைகொண்டுதான் மீண்டும் கலீபா என்ற இன்ஸானுன் கபீருடைய நிலைமையை அடைந்தார்கள். இவ்விடத்தில் பாவம் என்பதன் உண்மை என்ன? என்பதைச் சிந்தனை செய்யவேண்டும். (ஆதாரங்கள் பின்னால் தரப்படும்) அதாவது ஆதம்(அலை) அவர்களிடமிருந்த அறிவு பகுத்தறிவாய் மாறியபோது ஜன்னத் மறந்துவிட இவ்வுலகு உண்மையாய்த் தென்பட்டது. இது அறிவிலேற்பட்ட இறக்கமாகும்.

என்னிடமிருந்து நேர்வழிவரும் என்றும் நீங்கள் யாவரும் இறங்கிவிடுங்கள் என்றும் கூறப்பட்டது, ஆதம்(அலை) ஹவ்வா(அலை) அவர்களோடு சூட்சுமமாய் இருந்தவர்களான சகல மனிதர்களையும், கலிமாவைக் கொண்டு வந்த நபிமார்கள் றசூல்மார்கள், ஸுஹ்புகள் வேதங்களையும் குறிப்பிட்ட வசனமாகும். நேரான பாதை என்பது நபிமார்களால் உபதேசிக்கப்பட்ட கலிமாவும் அதன் விபரமான தௌஹீதுமேயாகும். ஆகவே உண்மையான தௌஹீதை ஏற்றுக்கொண்ட ஒருவர் எவ்வித அச்சமடையவும் கவலைப்படவும் வேண்டிய அவசியமே இல்லை. அவர் சுவர்க்கத்தை ஆசைப்படவும் நரகத்தை அச்சப்படவும் வேண்டியவரல்ல. இவர்கள்தான் அச்சம் தீர்ந்த நல்லடியார்கள் (நுட்பமாய் உணர்க). ஆகவே ஒருவர் தௌஹீதில் நிலைபெறவில்லையானால் அவர் அச்சப்படவேண்டியவரேதான். நரகவேதனை அவரை நிச்சயம் அடையும் என்பது உண்மை. றசூல்(ஸல்) அவர்கள் தங்களுடைய ஸஹாபாக்களில் ஒரு சிலரை மட்டும் சுட்டிக்காட்டி இவர்கள் தான் கேள்வி கணக்கின்றிச் சுவர்க்கம் போகிறவர்கள் என்று கூறியிருப்பது நம் எல்லோருக்கும் தெரிந்த ஓர் விஷயம்தானே. அப்படியானால் வஹ்மிலேயே ஊறிக் கொண்டிருக்கிற மக்களின் நிலைமை என்னவாகும் என்பதைச் சிந்தனை செய்துபார். கலிமாவில் ஊறிப் பாவம் மன்னிக்கப்பட்டாலேயன்றி எந்த ஓர் அமலும் பிரயோசனம் தராது என்பது உண்மைதான்.

**ஹதீஸ்:** ***நடுநிலைமையைக்கொண்டு இறை முன்நிலையை எய்திக் காலையிலும் மாலையிலும் இரவின் பிற்பகுதியிலும் இபாதத்தில் பெரும்பாலும் ஈடுபடுங்கள். நடுநிலைமையைக் கைவிட்டுவிட வேண்டாம். மார்க்கப்பிரசாரமும் செய்யுங்கள். அறிந்து கொள்ளுங்கள், நிச்சயமாக எவருடைய வணக்கமும் அவரைச் சுவர்க்கம் சேர்த்துவிடாது. (என்று கூறினார்கள்) அப்போது நாயகமே! தாங்கள்!! என்று மக்கள் வினவினார்கள். அதற்கு றசூல்(ஸல்) அவர்கள் முடியாது. அல்லாஹ்வுடைய கிருபையும் மன்னிப்பும் என்னை அடைந்தாலொழிய என்னுடைய வணக்கமும் என்னைச் சுவர்க்கம் சேர்த்துவிடாது என்று கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம்: புஹாரீ**

இந்த ஹதீஸை ஆழமாக நோட்டமிடவேண்டும். பாவமன்னிப்பு எது என்பதையும் கண்டறியவேண்டும்.

**ஹதீஸ்:** ***எவருடைய இறுதிமொழி “லா இலாஹ இல்லல்லாஹ்” என்று அமைகிறதோ அவர் சுவனம் செல்வார் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: முஆதுப்னு ஜபல்(றலி)**
**ஆதாரம்: அபூதாவூத்**

முன் கூறிய ஹதீஸில் சாதாரண அவாம்களுக்கும் இறைவழி செல்லும் கவாஸுகளுக்கும் பல சயிக்கினைகள் இருக்கின்றன. ஆராய்ந்து தெளிவு பெறவும்.

பாவம் என்பதன் சரியான உண்மை ஷிர்க்கில் சிக்குண்டிருப்பதுதான். பாவமன்னிப்பு என்பதன் உண்மை ஷிர்க்கிலிருந்த விடுபட்டுத் தௌஹீதை எத்திக்கொள்வதுதான். இவ்விடத்தில் சிலவிடயங்களை விளக்கித் தரலாம். எனினும் நீ இன்னும் உண்மையில் நிலைபெறும் தகுதியற்றிருப்பதால் “இஸ்லாத்தின் நோக்கமென்ன” என்ற தலைப்பில் சரியான ஆதாரங்களோடு விளக்குவேன். கவலைப்படாதே.

**ஷைத்**தானுக்குச் சோலையில் என்னவேலை என்று நீ கேட்கலாம். இதில் விபரம் தரக்கூடாத சில (சிர்ருகள்)இரகசியங்கள் இருக்கின்றன. தரக்கூடிய ஓர் விஷயத்தை மட்டும் தருகிறேன். ஒன்றுக்கு இன்னொன்று விரோதம்போல் தென்படுகிற இரு முரண்படு தன்மைகள் ஒன்று சேராத குணமோ தன்மையோ இயக்கத்தைப் பெறமுடியாது. ஆனால் உண்மையாக உள்ள ஒரே தன்மைதான் இடத்துக்கும் நிலைமைக்கும் ஏற்றபடி பெயர் பெறுகிறதேயல்லாமல் தன்மை, அல்லது குணம் இரண்டென்பது பொருளல்ல, உதாரணமாகக் கோபம் என்பது இரக்கமாகவும் இரக்கமே கோபமாகவும் பெயர் பெறுகிறது. இன்பமே துன்பமாயும் துன்பமே இன்பமாயும் பெயர் பெறுகிறது. (நுட்பமாய் உணர்க). இந்த இரண்டு முரண்படும் தன்மையினதும் நோக்கம் ஒன்றேயாகும். அபூஜஹீல் இல்லையானால் றசூல்(ஸல்) அவர்களும் இல்லை. றசூல்(ஸல்) அவர்கள் இல்லையானால் அபூஜஹீலும் இல்லவே இல்லை. வெளிச்சம் இல்லையானால் இருள் ஏது? இருள் இல்லையானால் வெளிச்சமும் இல்லை. உள்ள ஒன்றை (இறைவன் தன் நாட்டத்தை) அதன் எதிர்மறையைக் கொண்டே உறுதிப்படுத்த நாடினான். இந்த முரண்படும் தன்மைகள் இல்லையானால் இறைவனின் செயல்கள் எதுவுமே வெளியாகாது. இதற்கதிகமான விபரம் தரமுடியாது. அல்லாஹ் றசூலினால் போடப்பட்ட ஓர் போர்வையை நீக்கிவிட எமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது. நரகம் என்பதும் இறைவனுடைய வைத்தியசாலையான அருட்கொடைதான் என்பதை மறந்துவிடாதே. வானம் முட்டும் வரையில் நீ பாவம் செய்திருப்பினும் இறைவனுடய அருட்கொடையில் நம்பிக்கையிழந்து விடாதே! நீசெய்ய வேண்டியதெல்லாம் அவாம்களின் மிகைப்படுத்தப்பட்ட மூட உபதேசங்களை நீக்கிவிட்டு அரும்பாடுபட்டேனும் கலிமாவை விளங்கியறிந்து உன் ஈமானை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவ்வளவுதான். ஸபாஅத்தின் இரகசியமும் இதுதான். எப்போது உனக்கு உண்மை புலனானதோ அப்போதே இறைவன் உன்னை ஆட்கொண்டு விட்டான் என்பதே அர்த்தம்.

إِنَّ ٱللَّهَ لَا يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِۦ وَيَغْفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَآءُ ۚ وَمَن يُشْرِكْ
بِٱللَّهِ فَقَدِ ٱفْتَرَىٰٓ إِثْمًا عَظِيمًا

4-48 *நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவேமாட்டான், இதனைத்தவிர எதனையும் அவன் நாடியோருக்கு மன்னிப்பான். எவர்கள் அல்லாஹ்வுக்கு இணை ஏற்படுத்துகிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகப்பெரும் பாவத்தையே கற்பனை பண்ணுகிறார்கள் .*

**ஹதீஸ்:** ***இணை ஏற்படுத்தப்படுவதை விட்டும் நான் மிகவும் தேவை அற்றவன். ஒருவன் எந்த இபாதத்தையாவது செய்துவிட்டு இனனொன்றை என்னோடு இணையாக்கினால் அவனையும் அவன் இணை வைத்ததையும் விட்டு விடுகிறேன். என்று அல்லாஹ் கூறியதாக றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம்: முஸ்லீம்.**

**பைத்து**

என் பாவம் யாதென்று கேட்டேன். என் உஜூதே பாவமென்றும் இதற்கு நிகரான பாவம் எதுவுமே இல்லையென்றும் கூறப்பட்டது என்பதே. ஹக்கையன்றி உன்னை ஓர் தனி உஜூதாக எண்ணுவதே பெரும் பாவம் என்பதாகும். நான்வேறு இறைவன்வேறு என்ற நம்பிக்கையோடு செய்யப்படும் அமல்கள் துன்யாவுடைய பிரயோசனத்தைத் தரலாமேயல்லாமல் எம்மை ஜன்னத்தில் நுழைக்காது என்பது நிச்சயம். பாவம் உன் பூரணத் தன்மைக்கு ஏற்படும் தடையேயன்றி இறைவன் உன்னைக் கோபிக்கிறான் என்றும் மருட்சியடையாதே. இது அவாம்களின் நம்பிக்கை. அல்லாஹ் மிகப்பரிசுத்தமானவன்.

சிருஷ்டிகளான நாம் எம்முடைய சர்வ குணங்களையும் சிருஷ்டிக் குணமாய்கொண்டிருக்கும் ஆரம்ப நிலையில் இருந்துதான், சர்வமும் அவனும் அவன் குணங்களுமேயென்ற பூரண நிலைமையைப் பெறவேண்டியவர்களாய் இருக்கிறோம். ஆகவே நாம் ஆரம்பத்திலேயே உண்மையை விளங்கிக் கொண்டால், எச்செயலை எந்த அமலை செய்யும்போதும் சிருஷ்டியையும் சிருஷ்டிகர்த்தாவையும் பிரிப்பது எண்ணமும் சொல்லுமே என்பதை மனதில் இருத்திக்கொண்டால், செயல்கள் யாவும் அல்லாஹ்வுக்கென்றே ஆகும். மலஜலம் கழிப்பது கூட அமலே என்பதும் அவையும் அல்லாஹ்வுக்காகவே என்பதும் தென்படும். குறுகிய காலத்துக்குள் அமல்களினால் பிரயோசனத்தையும் பெறலாம். கலிமாவின் உண்மையை உணராமல் எந்த வணக்கத்தையும் அல்லாஹ்வுக்காகச் செய்யவே முடியாது. சிந்தனை செய்து தெளிவு பெறு.

**ஹதீஸ்:** ***அல்லாஹ்வுக்காக நேசிப்பவரும் அல்லாஹ்வுக்காக் கோபப்படுபவரும் அல்லாஹ்வுக்காச் செலவுசெய்தவரும் அல்லாஹ் தடைசெய்துள்ள துறைகளில் செலவுசெய்ய மறுப்பவரும் திட்டமாக ஈமானில் முழுமைபெற்று விட்டார்.***

அறிவிப்பவர்: அபூஉம்மா(றலி)
ஆதாரம்:அபூதாவூத்

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

6-162 *நீர் கூறும் நிச்சயமாக என்னுடைய தொழுகையும் என்னுடைய வணக்கங்களும் என் ஜீவியமும் என்மரணமும் உலகத்தாரைச் சிருஷ்டித்துப் போஷித்துப் பரிபக்குவப்படுத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை.*

## 05 (6)

**ச**ர்வபிரபஞ்சங்களும் தனித்தனியான சட (பௌதீக) வஸ்த்துக்களா? அல்லது ஏதோ ஓர் உண்மைப்பொருளின் வெளிப்பாடான தோற்றங்களா? என்பதை மகான்களான அறிஞர்கள் (அவ்லியாக்கள்) ஆராய்ந்து தீர்ப்புக் கட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய இறுதியான தீர்ப்பு என்னவென்றால், உண்மைப் பொருளான ஹக்கின் வெளிப்பாடான ஆதேயங்களே சர்வபிரபஞ்சங்களும் என்பதுதான். மேலும் இன்ஸானுக்கு ஜீவன் என்றும், ஜீவனுக்கு எண்ணம் கொண்டசைகிற உணர்வுள்ள சடம் என்றும், சடத்துக்கு நீளம், அகலம், கனம் என்னும் முப்பண்புகளை ஏற்கிற ஆதாரப்பொருள் என்றும், ஆதாரப்பொருட்களுக்கு இருப்பிடம் வேண்டாதே (தேவையில்லாத) மவுஜூது என்றும், மவுஜூதுக்கு உஜூதை உடையதென்றும் அவ்லியாக்களான மகான்கள் பொருள்களுக்கு இலக்கணம் கூறியிருக்கிறார்கள், ஆகவே வசனிப்பும் உணர்வும் எண்ணமும் அசைவும் முப்பண்பேற்றலும் இடத்தைப் பெறுவதும் உஜூதுடையதென்று மவுஜூதை உஜூதுடன் சேர்ப்பதும் ஹக்கான உஜூதில் தோன்றி மறைந்தழிகிற வெறும் கற்பனையான ஆதேயங்களாகும். மனதில் தோன்றி மறைந்தழியும் கனவைப்போல. **இவ்விஷயம் எம்காலத்தில் கண்டுபிடித்த புதிய ஓர் கண்டுபிடிப்பேயல்ல.** நீண்ட காலங்களுக்கு முன்பிருந்தே நபிமார்கள், ஒலிமார்கள் இவ்வுண்மையை விளக்கித்தான் சென்றிருக்கிறார்கள். ஆனால் எம்மில் **பலருக்கு இதுவரை இவ்வுண்மை கிடைக்கவில்லை. அவ்வளவுதான்.**

இருந்து, வந்து, தோன்றி, அழிந்தது என்பதை நோக்கினால் இருந்தது அனாதியானதுதான். வந்தது நுட்பமானதுதான். தோன்றியது உள்ளதுதான். அழிந்தது இல்லாததுதான். கனவு வெளியாவதற்கு முன் மனதில் அமைந்திருந்தது என்பதை நோக்கினால் கனவு அனாதியானது. அந்தக்கனவில் ஆணாய்ப் பெண்ணாய் நல்லதாய்க், கெட்டதாய், ஏதோவெல்லாமாய் வெளியானதை நோக்கினால் நுட்பமானதுதான். புலன்களால் உணரக்கூடியதாய்த் தோன்றியதால் கனவு உள்ளதுதான். ஓர் குறிப்பிட்ட நேரம் இருந்து மறைந்தழிவதால் கனவு இல்லாததுதான். இத்தனைக்கும் ஆதாரம் மனம் என்பதை நோக்கினால் உண்மையாக நிலையாக இருந்த உஜூது மனமே தான். ஆகவே கனவை “அஹ்யான்தாபிதா” உடைய ஸ்த்தானத்தில் வைத்துக்கொள். இப்போது சிந்தனை செய்து பார். சர்வ பிரபஞ்சங்களும் ஆதியாயும், அந்தமாயும், வெளிப்பட்டதாயும், மறைந்ததாயும் தெரியவரும், இவ்விடத்தில் “ஹுவல்அவ்வலு” போன்ற வேதவசனங்களையும் ஆராய்ந்து பார். இந்த விபரப்படி அஹ்யான்தாபிதாவை ஞானவான்கள் ஒரு கருத்துப்படி ஆதியாயும் ஒரு கருத்துப்படி அந்தமாயும், ஒரு கருத்துப்படி நுட்பமான வெளிப்படையானதாயும், ஒரு கருத்துப்படி இல்லாததாயும் காணுகிறார்கள். இதை நாமும் சரியாகப் புரிந்துகொண்டால் “முஹக்கிகூன்” களாக (கமாலை உடைய தத்துவஞானிகளாக) இருப்போம்.

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ ﴿٢٦﴾ وَيَبْقَىٰ وَجْهُ رَبِّكَ ذُو الْجَلَالِ وَالْإِكْرَامِ

55-26-27 *பூமியிலுள்ளவையாவும் அழிந்தேபோகும். மிக்க கண்ணியமும் பெருமையும் தங்கிய உமது இறைவன் மட்டிலும் நிலைத்திருப்பான்.*

அழிந்து போகக்கூடிய அத்தனையும் கனவுக்காட்சியைப்போல் நிலையற்ற நாமரூபபேதங்களாகவே இருக்கும். நிலையாய் இருக்கக் கூடிய ஒன்றுதான் உண்மைப் பொருளாக இருக்கும். இதை ஒன்று என்று கூறுவதே தவறாகும். ஏகம் என்பதே சரியாகும்.

எந்த ஓர் பொருளை எடுத்துக்கொண்டாலும் முதலில் உணரப்படுவது அப்பொருளின் உஜூதுதான். இது நாமத்தாலும் உருவத்தாலும்தான் உணரப்படுகிறதேயல்லாமல் அப்பொருளின் “குன்ஹு” என்னும் சுய தன்மையினால் உணரப்படுவதேயில்லை. இரவு வேளையில் வெளிச்சத்தில் ஒரு பொருளைப் பார்க்கும் போது சாதாரண மனிதன் அப்பொருளையே முதலில் பார்க்கிறான். ஆனால் ஒரு அறிஞன் முதலில் வெளிச்சத்தையும் அதன் பின்பே அப்பொருளையும் பார்க்கிறான். இதேபோல அவாம்களாக சாதாரண மக்கள் முதலில் சிருஷ்டிப்பொருளையே பார்க்கிறார்கள். அச்சிருட்டிப் பொருள்களைக்கொண்டு அவற்றிற்கு மூலமான ஓர் ஆதாரப்பொருள் இருக்கவேண்டும் என்று அனுமானிக்கிறார்கள். ஆனால் அறிஞர்களான மகான்களோ முதலில் சிருஷ்டிகர்த்தாவையும் அதன்பின்பே நாமரூபபேதங்களான சிருஷ்டிகளையும் பார்க்கிறார்கள். உஜூது என்ற உண்மைப்பொருள் மிகக் கடுமையாய் அகோரமாய் வெளியாகி இருப்பது அவாம்களின் அறிவைத் திணற வைப்பதற்குக்

காரணமாய் விட்டது. சூரியப்பிரகாசம் வெளவாலின் கண்களை இருளடையச் செய்வதுபோல ஹக்கின் வெளிப்பாடு அவாம்களுடைய அறிவை மழுப்பிக் குழப்பிவிடுகிறது. ஆனால் கவாஸுகள் என்ற மகான்களின் அறிவுக் கண்கள் கூர்மையாயும் தெளிவு பெற்றவையாயும் இருப்பதால் அவர்கள் உண்மையை உணர்கிறார்கள். உணர்த்தவும் முற்படுகிறார்கள். ஆனால் எம்மிடையே சரியான தராசு இருந்தும் எடைபோடத் தெரியாமையால் அந்த மகான்களை முன்பின் யோசிக்காமல் காபீர், மூடன், பித்தன் என்றெல்லாம் தீர்ப்புக்ட்டிவிடுகிறோம். எம்முடைய தவறான தீவிரவாத உணர்வினாலும் பிடிவாதத்தினாலும், அம்மகான்களிடமிருந்து கற்றறியவேண்டிய எவ்வளவோ உண்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத விதிகெட்டவர்களாகி விடுகிறோம். அவ்வளவுதான், இறைவன் உனக்கு நல்லுதவிபுரிவானாக. பொறுமையோடு கேட்டு, சிந்தனை செய்து, தெளிவுபெறுவாயாக.

**குறிப்பு: நாம் முன்பு கூறிய “அமா” என்னும் நிலையில் மிக அநேக இரகசிய விபரங்கள் அமைந்திருக்கின்றன. அவ்விபரங்களை உண்மையான ஞானவான்களான ஸுபிகளிடத்தில் கேட்டறிந்து தெளிவுபெறவும்.**

## 013 கலிமாவின் பொது விபரம்

“**லா** இலாஹ இல்லல்லாஹ்” என்ற கலிமத்துத் தையிபாவில் லா, இலாஹு, இல்லா, அல்லாஹ் என்று நாலு அறபுச்சொற்கள் இடம்பெறுகின்றன. இவற்றில் “இலாஹு” என்ற சொல் மனிதர்களால் வணங்கப்படுகிற சிருட்டிப்பொருட்களான சிலை முதலாம் விக்கிரகங்களைக் குறிப்பிடுகிற ஓர் சாதாரணமான அறபுச் சொல்லாகும். அறபு மக்கள் விக்கிரகங்களை இலாஹு என்ற சொல்லினாலேயே குறிப்பிட்டுக்கூறுவது அவர்களுடைய இயல்பான வழமை. இந்த இலாஹு என்ற சொல்லைத்தான் ஒரு சிலர்“வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன்” என்று வலிந்துரை கொண்டிருக்கிறார்கள். ஆனால் இலாஹு என்ற இந்தச் சொல்லை வணங்கப்படுகிற சிருஷ்டிகளுக்கும் இறைவனுக்கும் ஒன்றுசேர்த்துப் பொதுப் பெயர்ச் சொல்லாகவே இறைவன் குர்ஆனில் பற்பல இடங்களில் பற்பல வகையாகப் பாவித்திருக்கிறான்.

وَهُوَ ٱلَّذِى فِى ٱلسَّمَآءِ إِلَـٰهٌ وَفِى ٱلْأَرْضِ إِلَـٰهٌ

43-84 *அவனே வானத்திலும் இலாஹாய்ப் பூமியிலும் இலாஹாய் இருக்கிறான்.*

இவ்வசனத்தில் இலாஹு என்பதை வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் என்று பொருள்கொள்ளமுடியாது. ஏனென்றால் அறபுமக்கள் வணங்கப்படுகிற சிருஷ்களான விக்கிரகங்களுக்கு இலாஹு என்று கூறுவது அவர்களுடைய சாதாரண வழக்குச் சொல்லாகவே இருந்திருக்கிறது. இப்போதும் அந்த வழக்கமே அறபுமக்களிடையே இருக்கிறது. இப்போது உலகின் நாலா பாகங்களிலும் மனிதரால் வணங்கப்படுகிற சிருஷ்டிகளான பல இலாஹுகள் இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த விக்கிரகங்களை இலாஹுகள் என்றே அறபுமக்கள் கூறினார்கள். என்பதற்கு (இறைவனும் அவனால் எமக்களிக்கப்பட்ட திருக்குர்ஆனும் ஹதீஸுகளும் சாட்சி கூறுகின்றன.)

وَيَقُولُونَ أَئِنَّا لَتَارِكُوٓا۟ ءَالِهَتِنَا لِشَاعِرٍ مَّجْنُونٍ

37-36 *என்னே! நாங்கள் பைத்தியம் கொண்ட ஒரு கவிவாணரக்காக எங்களுடைய இலாஹுகளை மெய்யாகவே விட்டுவிடுவோமா? என்றும் அவர்கள் கூறுகின்றனர்.*

مَا نَعْبُدُهُمْ إِلَّا لِيُقَرِّبُونَآ إِلَى ٱللَّهِ زُلْفَىٰٓ

39-3 *இலாஹுகள் அல்லாஹ்விடம் நெருங்கிச்சேர்க்கும் என்பதற்காகவேயன்றி நாங்கள் அவைகளை வணங்குவதில்லை.*

என்றுதான் அவர்கள் கூறியுள்ளார்கள் என்பதாக இறைவனே குர்ஆன் மூலம் எமக்கறிவிக்கிறான். இந்த வசனங்களில் இலாஹு என்ற சொல் அம்மக்களால் வணங்கப்பட்டுக் கொண்டிருந்த விக்கிரகங்களையே குறிப்பிடுகிறது என்பது வெளிப்படையாகவே எமக்குத் தென்படுகிறது. ஆகவே வானத்திலும் இலாஹாய் பூமியிலும் இலாஹாய் இருக்கிறான் என்ற வேதவசனத்தில் இலாஹு என்ற சொல் இறைவனையும் வணங்கப்படுகிற சிருஷ்டிகளான விக்கிரகங்களையும் ஒன்று சேர்த்துப் பொதுப்பெயர்ச் சொல்லாகவே பாவிக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாகவே தென்படுகிறது. இவ்வளவு தெளிவான விளக்கத்தைக் குர்ஆன் எமக்குத் தரும்போதும் எம்மில்சிலர் இவ்வுண்மையை ஒப்புக்கொள்ளவேயில்லை. இப்போதும் ஒருசிலர் ஒப்புக்கொள்கிறார்களே இல்லை. ஆகையால் கலிமாவிலும் அதன் தலீல்களான வேதவசனங்களிலும் இலாஹு என்ற சொல்லை இறைவன் என்ன கருத்தோடு பாவித்துள்ளான்

என்பதை நாம் சந்தேகமில்லாமல் கண்டறிய வேண்டியவர்களாய் இருக்கிறோம். இப்படிக் கண்டறியாவிட்டால் கலிமா உணர்த்தும் உண்மையை எம்மால் கண்டறிய முடியாமலேபோய்விடும்.

وَلِلَّهِ يَسْجُدُ مَن فِى ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضِ

13-15 *அல்லாஹ்வுக்கே வானங்களில் இருப்போரும் பூமியில் இருப்போரும் ஸுஜூது (பணிந்து வணங்குதல்) செய்கிறார்கள்.*

என்று குர்ஆன் கூறுகிறது. இந்த ஆயத்தில் வணங்கப்படுகிறது அல்லாஹ்வை முற்படுத்தி "லில்லாஹியஸ்ஜூத் என்று கூறியிருப்பது, ஸுஜூது அல்லாஹ்வுக்கேயன்றி அவனல்லாத மற்றொன்றுக்கல்ல என்பது தெரியவருகிறது. விக்கிரகங்கள் போன்ற மண், கல், பொன், வெள்ளி முதலாம் தாதுவர்க்கங்களையும் ஆடு மாடு போன்ற ஜீவப்பிராணிகளையும் சூட்சும சிருஷ்டிகளையும் மனிதர்களில் பலர் பூமியில் வணங்கிக்கொண்டிருக்கும் போதும், பூமியிலிருப்போரும் அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்கிறார்கள் என்று இறைவன் கூறுகிறான். ஆகவே மனிதர்கள் வணங்கிக்கொண்டிருக்கும் சிருஷ்டிகளான இலாஹுகளும் அல்லாஹ்வின் வேறல்ல என்பதும் இலாஹு என்ற சொல் சிருஷ்டிகளான இலாஹுகளும் இறைவனுக்கும் ஒன்று சேர்த்துப் பாவிக்கப்பட்ட ஓர் பொதுப் பெயர்ச் சொல்லே என்பதும் **கலிமாவில் பாவிக்கப்பட்டுள்ள இலாஹு என்ற சொல் சிருஷ்டிகளான வணங்கப்படும் இலாஹுகளை (விக்கிரகங்களை)க் கருதியே கூறப்பட்டுள்ளது** என்பதும் எமக்கு வெளிப்படையாகவே தென்படுகிறது.

இது அப்படியல்ல, அல்லாஹ்வேறு சிருஷ்டிவேறுதான். இலாஹு என்று குறிப்பிட்டப்பட்டது வணக்கத்துக்குப் பாத்திரமான நாயனாகிய அல்லாஹ்வைத்தான் என்று கூறினால் குர்ஆனுடைய வேதவசனமும் இறைவனுடைய சாட்சியமும் பொய்யென்றே முடியும். அப்படியல்லாமல் குர்ஆன் கூறுவதே உண்மையென்றால் எம்முடைய அறிவிலும் விளக்கத்திலும் ஏதோ குழப்பம் இருக்கிறது. என்பதே பொருளாகும். ஆகவே எமது இமாமான குர்ஆனைப் பல கண்ணோட்டங்களோடு ஆராய்ந்தால் பல உண்மைகள் தெரிய வருகின்றன. இவ்வுண்மைகளை ஏறக்குறைய எல்லோரும் விளங்கிக் கொள்ளக்கூடியதாய்ச் சுருக்கமான பொழிப்பைமட்டும் இங்கே கூறுவோம். குர்ஆனுடைய தெளிவான ஆதாரங்களைக் கொண்டு கலிமாவை நோக்கினால் அதில் பொதுப்படையான பன்னிரெண்டு (12) அம்சங்கள் இருக்கின்றன. அவையாவன.

**1ஆவது**: "லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற தௌஹீதக்கலிமாவிலும்அதன் தலீல்களான வேதவசனங்களிலும் பாவிக்கப்பட்டுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு இறைவனால் கருதப்பட்ட பொருள் (விக்கிரகம்) பௌதீகப் பொருட்களால் ஆக்கப்பட்டவணங்கப்படுகிற சிருஷ்டிகள் என்பதேயாகும். இவ்வுண்மையைச் சில ஹதீஸ்களும் உறுதிப்படுத்துகின்றன. வணங்கப்படுகின்ற சூட்சும சிருஷ்டிகளும் இதில் அடங்கும்.

**2ஆவது**: அந்த இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் என்று வலிந்துரை கொள்வதுதவறு என்பதும் இது குர்ஆன்,ஹதீஸ்களுக்கு விரோதமான செயல் என்பதும் தெரியவருகிறது.

**3ஆவது**: அந்த இலாஹு என்ற பொதுப்பெயர்ச் சொல்லுக்கு"மவுஜூதுன்"என்ற சொல்லைஅல்லது அதுபோன்ற வேறோர் சொல்லைத் தொக்கிய பயனிலையாக அமைத்துக் கொள்வது தவறு என்பது தெரிய வருகிறது.

**4ஆவது**: அந்த இலாஹு என்ற பொதுப்பெயர்ச் சொல்லுக்கு முன் நிலையானவனுடைய (முஸ்ரீக்குடைய) எண்ணத்தில் இருக்கிற அல்லாஹ்வின் வேறு (கைறுல்லாஹி) என்பது தான் தொக்கிய பயநிலை என்பது தெரிய வருகிறது.

**5ஆவது**: பயனிலை தொக்கியிருக்கிறது என்பதற்கு ஆதாரம் முன்நிலையான அவனுடைய மனதில் இருக்கிற எண்ணமேயாகும். அதாவது எவர் மீது கலீமா எடுத்தோதப்பட்டதோ அந்த முன்னிலையான முஸ்ரீக்,இலாஹு (விக்கிரகம்) அல்லாஹ்வின் வேறாய் இருப்பதாகவே எண்ணியிருக்கிறான்.(லாஇலாஹ இல்லாகைறுல்லாஹி) என்பது தெரியவருகிறது.

**6ஆவது**: லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா, சிபத்தின் பேரில் மவுசூபை கஸ்று செய்கிற வகையில் சேர்ந்ததேயல்லாமல் மவுசூபின் போல் சிபத்தை கஸ்று செய்கிற வகையில் சேர்ந்ததேயல்ல என்பதும் அதுவும் கஸ்றுல்கல்பி என்றவகையில் சேர்ந்ததேஎன்பதும் தெரியவருகிறது.(விபரம் பின்னால் தரப்படும்)

**7ஆவது**: கலிமா ஆம, உண்டு, என்பதும் அல்ல, இல்லை என்பதுமான இரண்டு பொதுவிதிகளைக் கொண்டிருப்பதாயும், ஆம், உண்டு என்பது அல்லாஹ்வை நோக்கியும் அல்ல, இல்லை என்பது வேறு என்பதை நோக்கியும் தரப்பட்டதாக தெரிய வருகிறது.

**8ஆவது**: தௌஹுதுக்கலிமா வலிந்துரை கொள்ள முடியாத, வலிந்துரை கொள்ளத்தேவையில்லாத முஹ்கமாத்தான ஒரே கருத்துடைய திடப்பிரமாணத்தைச் சேர்ந்தது என்பது தெரிய வருகிறது.

**9ஆவது**: முஸ்ரீக்குகள் தங்கள் வஹ்மினால் சர்வபிரபஞ்சங்களையும் அல்லாஹ்வின் வேறானதாய் தனித்தனி மூலவஸ்துக்களாய் எண்ணிக்கொண்டிருந்த மருட்சியை மாய்த்து எல்லாம் அவனே (ஹமவோஸ்த்) என்னும் உண்மையை உணர்த்துவதற்காகவே கலிமா தரப்பட்டது என்பது தெரியவருகிறது.

**10ஆவது**: வஹ்தத்துல் உஜூது என்பது யுக்தி ,சுருதி என்ற இருபிரமாணங்களினாலும் மட்டுப்படுத்தப்பட்ட உண்மை என்பதும், மனிதருடைய வஹ்முக்கு சிருஷ்டிப்பொருட்கள் வெவ்வேறாய் தோன்றினாலும் சகலமும் அவனேயன்றி வேறில்லை என்பதும் தெரியவருகிறது.

**11ஆவது**: கலிமாவிலும் தப்ஸீறிலும் தஹ்வீலிலும் ஒரு சில முன்னோர்கள் கூறியுள்ள வியாக்கியானங்கள் குர்ஆன்,ஹதீஸ்களுக்கும், அறிவுக்கும் அனுபவத்திற்கும் முரணானவை என்பதும் அவர்களுடைய வஹ்முக்குச் சரியானவை என்பதும் தெரிய வருகிறது.

**12ஆவது**: நாம் சந்தேகத்தில் மூழ்கியிருப்பதால் உண்மையைக் கண்டறிவதற்காக இலக்கணவிதிகளை ஆராய வேண்டியதாய் இருக்கிறது என்பதும் எவ்வித இலக்கணவிதிகளுமே இல்லாமல், கலிமா எவ்வித அறிவீனனுக்கும் தெளிவாய் விளங்கக்கூடியதாகவே தரப்பட்டிருக்கிறது என்பதும் சாதாரண மனிதன் கூட இலாஹு என்ற சொல் கலிமாவில் விக்கிரகமான சிருஷ்டியை சுட்டுவதே என்பதை உணர்ந்து கொள்வான் என்பதும் தெரியவருகிறது.

மேலே நாம் காட்டிய 12 விதிகளையும் சரிவரப்புரிந்துகொண்டால்தான் கலிமாவின் உண்மைப்பொருளை இலகுவாய்ச் சந்தேகமில்லாமல் எம்மால் விளங்கிக் கொள்ள முடியும். இப்போது நாம் தந்துள்ள விபரங்களை குத்புஸ்ஸமான் மவுலான அப்துற்றஹ்மான்(றஹ்) அவர்கள் தங்களுடைய கலிமத்துல் ஹக்கி என்ற கிதாபில் பின்வருமாறு கூறுகிறார்.அதாவது அல் கலிமத்துத்தையிபாவானது பலஅம்சங்களைப் பொதிந்துள்ளது என்பதும் **அவற்றில் அநேக அம்சங்கள் கீழ்நாட்டார், மேல்நாட்டார், சலபுகள், கலபுகள்,ஆகிய இவர்களில் பெரிய பெரிய உலமாக்களிலும் சிலர் அறியாமல் மறைந்து புதையுண்டு போய்க்கிடந்தன என்றும் கூறுகிறார்கள்**.அவர்கள் தங்கள் கிதாபில் விளக்கியுள்ள அம்சங்களாவன:

**1ஆவது**: “ஜின்ஸியத்தை”“நப்யு” செய்வதற்குள்ள“லா”என்னும் சொல்லாகும். அதாவது ஒரு ஜாதிப்பெயர், பொருள் எல்லாவற்றையும் பொதுவாக இல்லையென்று மறுக்கும் எதிர்மறைச்சொல் என்பதாகும்.

**உதாரணம்**: “லாறஜுலபித்தாரி”“லாபறஸபில் இஸ்தப்பி”“லாஸஜறபில்அற்லி” இவற்றின் கருத்து முறையே இவ்வீட்டில் ஒரு புருஷனும் இல்லை, இந்த லாயத்தில் ஒரு குதிரையும் இல்லை, இந்தப் பூமியில் ஒரு மரமும் இல்லை. இந்த வாக்கியங்களில்“லா”என்ற சொல் இல்லையென்ற கருத்தில்பாவிக்கப்பட்டிருக்கிறது. இதைப்போலவே கலிமாவிலும் “லா” என்ற சொல் இல்லையென்றபொருளிலேயே (கருத்திலேயே) பாவிக்கப்பட்டிருக்கிறது.

**2ஆவது**: அதன் “மன்கூர்” ஆன இலாஹு என்னும் சொல்லாகும். அதாவது ஒரு ஜாதிப்பொருட்கள் எல்லாவற்றையும் பொதுவாய்க் காட்டக்கூடிய பொதுப்பெயர்ச் சொல்(இஸ்மு)என்பதாகும்.

**உதாரணம்**: “இன்ஸானுன்”“பர்ஸுன்”“ஷஜறுன்” இவற்றின் கருத்து முறையே, மனிதன், குதிரை, மரம், என்பதே. இந்தச் சொற்கள் பொதுப்பெயர்களாய் அமைந்திருப்பது போலவே கலிமாவிலும் இலாஹு என்ற சொல் பொதுப்பெயர்ச் சொல்லாகப் பாவிக்கப்பட்டிருக்கிறது.

**3ஆவது**: அந்த இலாஹு என்னும் இஸ்மின் “மஹ்துபாகிய” கபராகும். அதாவதுஅந்த எழுவாய்ப் பெயருக்கு (மறைந்திருக்கும்) தொக்கிய பயநிலை என்ன? என்பதை அறிவதாகும்.

**உதாரணம்**: அவன் பிறனல்லன் இந்த வாக்கியத்தில் அவன் என்ற எழுவாய்ப்பெயருக்கு “ஜெய்து” தான் என்னும் பயனிலை தொக்கி (மறைந்து) இருக்கிறது.

**4ஆவது**: அது “மஹ்துாபு”என்பதன் பேரில் அறிவிக்கிற “கரீனா”என்ன? என்பதாகும். அதாவது பயனிலை தொக்கி இருக்கிறது என்பதற்கு நெருங்கிய அத்தாட்சி என்ன? என்பதை அறிவதாகும்.

**உதாரணம்**: உனக்குப் படிப்பித்தவர் யார்? என்ற கேள்விக்கு விடையாக என் தந்தை என்று கூறினால் இது எழுவாய்ப்பெயர் ஆகிறது. இதில் படிப்பித்தார் என்பதற்கு நெருங்கிய அத்தாட்சிக் கேள்வியை கேட்டவர் விளங்கிக் கொள்ளும் விளக்கமேயாகும்.

**5ஆவது**:“இஸ்திஸ்னா”வுக்குள்ள “இல்லா” என்னும் சொல்லாகும். அதாவது அன்றி, தவிர, ஒழிய என்பது போன்ற நீக்கப்பொருளைக் குறிக்கும் சொல்லாகும்.

**உதாரணம்:** “ஜா அனில் கவுமு இல்லாஜெய்துன்” இதன் கருத்து ஜெய்து தவிர அக்கூட்டத்தார் எல்லோரும் என்னிடம் வந்தார்கள். இதில் இல்லா என்னும் சொல் ஜெய்துவை நீக்கப் பொருளாகக் குறிக்கிறது.

**6ஆவது:** “முபர்றகு” உடைய விளக்கமாகும். அதாவது ஒரு வாக்கியப் புணர்ப்பில் நீக்கப்பொருளாய் இருப்பதற்கு அது நீங்கி வந்த இடம் தெரியாமல் இருந்தால் அந்த வாக்கியத்தை “முபர்றகு’ என்று கூறப்படும். ஆகவே “லா இலாஹஇல்லல்லாஹ்” என்ற கலிமாவில் இதன் விபரத்தை விளங்கி அறிய வேண்டியது மிக மிக அவசியமாகும்.

**7ஆவது:** அல்-கலிமத்துத் தையிபாவானது சிபத்தின்மேல் மவுசூபை கஸ்ரு செய்கிற வகையைச் சேர்ந்தேயல்லாமல் மவுசூபின் பெயரில் ஸிபத்தைக் கஸ்று செய்கிற வகையைச் சேர்ந்தேயல்ல.அந்த கஸ்றும்கூட “கஸ்றுல்இப்றாதி”“கஸ்றுத்தஅய்யுனி”என்ற வகைகளில் சேராமல் “கஸ்றுல்கல்பி”யாய் இருக்கிறது என்பதாகும். இதன் விபரம் என்னவென்றால், ஸிபத்தின்மேல் மவுசூபைக் கஸ்று செய்வது என்றால், குணத்தின் மேல் குணியைச் சொந்தப்படுத்துவதாகும்

**உதாரணம்:** சூடுள்ளது நெருப்புத்தான். கைப்புள்ளது உப்புத்தான். இந்த வாக்கியங்களில் சூடு என்னும் குணம் நெருப்பு என்னும் குணிக்கே சொந்தமானது என்றும் கைப்பு என்னும் குணம் உப்பு என்னும் குணிக்கே சொந்தமானது என்றும் குணங்களுக்கு குணிகளைச் சொந்தமாக்கியிருப்பது போல.

மவுசூபின் மேல் ஷிபத்தைக் கஸ்று செய்வதென்றால், குணியின் மேல் குணத்தைச் சொந்தப்படுத்துவது என்பதே கருத்தாகும்

**உதாரணம்:** நெருப்பின் குணம் சூடுதான். உப்பின் குணம் கைப்புத்தான். இவ்வாக்கியங்களில் நெருப்பு என்னும் குணிக்கே சூடு என்னும் குணம் சொந்தமானது என்றும், உப்பு என்னும் குணிக்கே கைப்பு என்னும் குணம் சொந்தமானது என்றும் குணிகளுக்குக் குணங்களைச் சொந்தமாக்கியிருப்பது போல.

“கஸ்றுல் இப்றாதி” என்பது என்னவென்றால் ஒருவன் மற்றொருவனில் நிச்சயித்த இரண்டு அம்சங்களில் ஒன்றை மறுத்து ஒன்றுதான் என்று அவனுக்கு விளக்குவது போலாகும்.

**உதாரணம்:** ஜெய்து என்பவன் காதியும் புலவனுமாய் இருக்கிறான் என்று ஒருவன் நிச்சயிக்க, மற்றொருவன் அதை மறுத்து ஜெய்து காதியும் புலவனும் அல்லன், காதிமட்டுத்தான் என்று அவனுக்கு விளக்குவது போல்.

**“கஸ்றுத்த அய்யுனி” என்பது என்னவென்றால்** இரண்டு அம்சங்களில் எதையும் நிச்சயிக்காமல் இதுவோ அதுவோ என்று சந்தேகிக்கும் போது அவ்விரண்டில் ஒன்றைக் குறிப்பிட்டுச் சந்தேகத்தை நீக்குவது.

**உதாரணம்:** ஜெய்து காதியோ புலவனோ என்று ஒருவன் சந்தேகிக்கும் போது மற்றொருவன் ஜெய்து புலவனல்லன். காதிதான் என்று கூறி அவனுடைய சந்தேகத்தை நீக்குவது போல.

**“கஸ்றுல் கல்பி” என்பதன் விபரம் என்னவென்றால்,** உள்ள அம்சத்தை இல்லை என்று எண்ணியிருப்பவனுக்கு அதையே மாற்றி உள்ளதாகக் கூறி விளக்குவதாகும்.

**உதாரணம்:** காதியாய் இருக்கிற ஜெய்தைப்பார்த்து அவன் காதியல்ல என்று ஒருவன் நினைத்திருக்கும்போது அவ்வெண்ணத்தை மறுத்து மாற்றி ஜெய்து காதியல்லனல்லன் (ஜெய்து காதிதான்)என்று விளக்கம் கொடுப்பது போல. **இவ்வினத்தைச் சேர்ந்துதான் கலிமா.**

**8ஆவது:** அல்-கலிமத்துத்தையிபாவானது “ஈஜா”“பிஸல்பி” என்னும் இரண்டு ஹுக்கும்களைப் பொதிந்து கொண்டிருக்கிறது என்பதாகும். அதாவது எடுத்துக்கொள்ள வேண்டியது ஒன்றும் ஒதிக்கித்தள்ள வேண்டியது ஒன்றுமான இரண்டு பிரமாணங்களைக் கலிமா கொண்டுள்ளதே என்பதேயாகும்.

**உதாரணம்:** “லாபித்தாரி இல்லஸ்ஸிப்யானு” இதன் கருத்து. இந்த வீட்டில் சிறுவரேயன்றி இல்லையென்பதாகும். இந்த வாக்கியத்தில் அவ்வீட்டில் சிறுவரே உண்டு என்பதை எடுத்துக்கொள்வதும் மற்றவர் இல்லை என்பதை தள்ளிவிடுவதும் போல.

**9ஆவது:** அல்-கலிமத்துத்தையிபாவானது "சாலீபா""முஜீபா" என்ற இரண்டு குல்லியாவான ஹுக்கூம்களின் பக்கம் மீளும் என்பது. அதாவது ஆம், உண்டு, அல்ல, இல்லை, என்னும் இரண்டு பொது விதிகளில் வந்து அடங்கும் என்பதே.

**10ஆவது:** அல்-கலிமத்துத்தையிபாவானது குர்ஆனுடைய கோர்ப்பின் வகைகளில் நின்றும் "முஹ்கமாத்தாய்"இருக்கிறது என்பதாகும். அதாவது பொருள் பொருந்தாமல் இடர்படுகிற ஜயப்பிரமாணங்களில் ஒன்றாய் இராமல் எல்லோரும் தெளிவாய் அறியக்கூடியதாய் நேரே பொருள் தருகிற ஒரே கருத்துடைய திடப்பிரமாணத்தில் உள்ளதாய் இருக்கிறது என்பதாகும்.

ஆகவே நஹ்விலும், மஆனியிலும், பயானிலும், பலாக்கத்திலும், உசூலுடைய பண்ணிலும், மன்தீக்குவிலும், தப்ஸீறிலும், ஹதீஸிலும், தேர்ச்சியடைந்த அறிவைக் கொண்டு கலிமத்துத்தையிபாவை அதன் தலீல்களுடன் ஆராய்ந்து விளங்கியறியவேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஏனென்றால் இவ்விசயத்தை, எம்முன்னோர்களில் பலர் பின்பற்றல்முறையில் சென்று ஆராய்வில்லாமல் தலைகீழாய் நேர்விரோதமாய்ப் புரட்டி விட்டிருக்கிறார்கள். உண்மையைக்கண்டறிய வேண்டுமானால் ஆராய்தல் செய்யவேண்டியது அவசியமாகும்.

இது விஷயமாய் மௌலானா அப்துர்றஹ்மான்(றஹ்)குத்புஸ் ஸமான் அவர்கள் தங்களுடைய கலிமத்துல் ஹக்கி என்ற கிதாபில் மிக மிக நுட்பமாய்ச் சரியான ஆதாரங்களோடு விளக்கி இருக்கிறார்கள். ஆனால் சரியான பாண்டித்தியமும் தெளிவான நுண்ணறிவுமுடைய மகான்களேயன்றி அவ்விபரங்களை விளங்கிக்கொள்வது இலகுவான காரியமேயல்ல. சாதாரண பட்டம் பதவிகள் எல்லாம் கிட்டேயும் போகமுடியாமல் இருக்கும்போது, சாதாரண மனிதனுடைய நிலைமை என்னாகும்? ஆகவே மிகச்சுருக்கமாய் எம்முடைய அறிவுக்கேற்றபடியாவது விளங்கித்தெளிவு பெறுவோம். இன்னும் ஆராயத்தான் வேண்டுமென்றால் 'கலிமத்துல்ஹக்கி" என்ற கிதாபையே பார்வையிட்டுத் தெளிவு பெறவும்

**ஹதீஸ்:** *ஒருவன் நரக நெருப்பை நோக்கி செல்வதை அல்லாஹ் தடுத்திராத முறையிலே அல்லாஹ்வைத் தவிர இலாஹு இல்லை என்றும் முஹம்மது(ஸல்)அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் தான் என்றும் பரிசுத்தத்துடன் சாட்சிகூறக்கூடியவன் ஒருவனும் இல்லை என்று றசூல்லாஹ்வுடைய ஆதராத்தைத் தொட்டு அனஸ்(றலி) கூறுகிறார்கள்.*

**ஆதாரம்:புஹாரீ**

ஏனென்றால் பெரும்பாலாருடைய அறிவில் கலிமாவின் உண்மையான கருத்தை ஒப்புக் கொள்வது முடியாத காரியமாகவேதான் தென்படுகிறது. ஆகையால்தான் கலிமாவைப் அரும்பாடுபட்டு புரட்டியிருக்கிறார்கள் ஆனால் அவர்கள் இப்படிப் புரட்டியிருக்கிறார்கள் என்பதும், புரட்டினாலும் மற்றும் வேத வசனங்கள் உண்மையை உணர்த்தவே செய்கின்றன என்பதும் அறிவுடையோருக்குத் தென்படவே செய்கிறது.

## 014 கலிமாவின் கருத்து

**(1)**

**அ**ல்கலிமத்துத் தையிபாவில் உள்ளது "லா""இலாஹு""அல்லாஹ்" என்ற நான்கு அறபுச்சொற்கள் மட்டும்தான். எமது நாட்டில் "இலாஹு" என்ற சொல்லின் பொருளில் தான் மக்களிடையே அபிப்பிராய பேதம் இருந்து கொண்டிருக்கிறது. வெளிநாடுகளில் உள்ள ஒரு சிலரிடையே அல்லாஹ் என்ற சொல்லிலும் அபிப்பிரயாப் பேதம் இருப்பதாகத் தெரிகிறது. நாம் எம்நாட்டு மக்களிடையேயுள்ள அபிப்பிராயபேதத்தை மட்டுமே நோக்குவோம். நல்லடியார்களான கனம் தங்கிய பெரும் உலமாக்கள் (ஒலிமார்கள்) இலாஹு என்ற அறபுச்சொல்லுக்கு வணங்கப்படுகின்ற சிருஷ்டி(விக்கிரகம்) என்றும் கலிமாவில்(மறைந்து) தொக்கியிருக்கிற பயனிலை "கைருல்லாகஹி" என்பதே என்றும் சரியான ஆதாரங்களோடு நிரூபித்திருக்கிறார்கள். ஆனால் சரியான ஆராய்வில்லாத ஒரு கூட்டத்தார்(பின்பற்றல் வாதிகள்) இலாஹு என்ற சொல்லின் பொருள் வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் (அல்லாஹ்) என்றும் (மறைந்து) தொக்கியிருக்கும் பயனிலை "முஸ்தஹக்கலில் இபாதா" என்பதே என்றும் கூறுகிறார்கள். நாம் உண்மை எது? என்பதைக் கண்டறிவதற்காக இருசாராரின் அபிப்பிராயங்களையும் விளங்கியறிந்து தெளிவு பெறுவோம்.

| அறபுச்சொல் | தமிழ் மொழிபெயர்ப்பு |
|---|---|
| 1. லா | இல்லை |
| 2. இலாஹு | வணங்கப்படுகிறசிருஷ்டி(விக்கிரகம்)<br>(சூட்சும சிருஷ்டிகள்) |

3. இல்லா தவிர

4. அல்லாஹ் இறைவன்(அல்லாஹ்)

**மேலே காட்டியவற்றைப் பொருத்தினால்:**

இல்லை +(வணங்கப்படுகிற) சிருஷ்டி (விக்கிரகம)+தவிர+அல்லாஹ்

**இதை நெறிப்படுத்தினால் (ஒழுங்குபடுத்தினால்):**

அல்லாஹ் தவிர(வணங்கப்படுகிற)சிருஷ்டி(விக்கிரகம்)இல்லை என்பதாகும்

**இப்போது தொக்கியிருக்கும் பயனிலையான “கைருல்லாஹி” என்பதையும் இணைத்துக்கொண்டால்:**

லாஇலாஹ+ கைருல்லாஹி + இல்லல்லாஹ் - இதன் பொருள்: (வணங்கப்படுகிற)சிருஷ்டியான(இலாஹு)விக்கிரகம் இல்லை அல்லாஹ்வின் வேறாய். அல்லாஹ்வாகவேயன்றி என்பதே கருத்தாகும்.

**விஷேட குறிப்பு:**

உள்ளதாயிருக்கிற சிருஷ்டிகளை, இல்லையென்ற சொல் தற்காலிகமாய் மறுக்கலாமேயன்றி உண்மையாய் நிரந்தரமாய் மறுக்க முடியாது. ஏனென்றால் இருப்பது இல்லாததாகாது. இல்லாதது இருப்பதாகாது என்பது ஒர் தத்துவம். எனவே இல்லை என்ற எதிர்மறைச்சொல் வேறு என்பதை மறுப்பதாயும் அல்லாஹ்வைத்தனியே தரிப்படுத்துவதாயும் அமைந்திருக்கிறது. இதன்படி,

(அல்லாஹ்வையன்றி)அல்லாஹ்வின் வேறான சிருஷ்டியில்லை என்று “இபாரத்” தென்ற வெளிச்சத்தப்பிரமாணம் விளக்கிக் கொண்டிருக்கிறது. இதன்படி “தலாலத்” என்ற கருத்துப் பிரமாணம் சிருஷ்டிகள் யாவும் (பிரபஞ்சம்)அல்லாஹ்வின் வெளிப்படைச் சூறத்தே என்று விளக்கமளிக்கிறது.

மேலே காட்டியது தான் உண்மையான உலமாக்களான கனம் தங்கிய ஒலிமார்களின் ஏகோபித்த அபிப்பிராயமாகும். இந்த விபரம் வஹ்முக்கு விரோதம்போல் தென்பட்டாலும் குர்ஆன், ஹதீஸ்களுக்கோ பகுத்தறிவுக்கோ எள்ளளவும் மாறுபாடில்லாமல் உண்மையாகவே இருக்கிறது. இதன்படி குர்ஆன், ஹதீஸ்களில் உள்ள எந்த ஒர் வசனத்தையும் மாற்றவோ புரட்டவோ வேண்டிய அவசியமே இல்லை. “கைருல்லாஹி” என்ற பயனிலையைப் பொருத்திக் கொள்ளாமல் கலிமாவில் உள்ள நாலுசொற்களை மட்டுமே எடுத்துக் கொண்டாலும், அல்லாஹ் தவிர(வணங்கப்படுகிற விக்கிரகமான) இலாஹு இல்லை என்பதே கலிமாவின் உண்மையான பொருளாகும். இந்த இலாஹு என்பதும் வணங்கப்படுகிற விக்கிரகங்களான சிருஷ்டிகளுக்கு அந்த அறபு மக்களால் பாவிக்கப்பட்டு வழக்கத்தில் இருந்த ஒர் சாதாரண சொல் என்பதை முன்பே விளக்கியுள்ளேன். ஆகவே இந்தக் கலிமாவின் பொருளை நோக்கும் போது அல்லாஹ் தவிர இலாஹு இல்லை என்று இந்தக் கலிமா உணர்த்துகிறது. எல்லா இலாஹும் அல்லாவேதான் என்று உணர்த்துகிறது. இது பாமர மக்களின் அறிவுக்குத் தெளிவாய் விபரமாய்த் தென்பட்டது. ஆனால் இவ்விபரத்தை அறிவு ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஆகையால்தான் இந்தக் கலிமாவைக் கேட்ட மக்கள் ஆச்சரியமடைந்தார்கள். இந்தக் கலிமா உணர்த்தும் பொருள் பொய் என்று கூறினார்கள். அபூஜஹீல், உம்மை நாம் பொய்யராக்கவில்லை நீர் எதனைக் கொண்டு வந்தீரோ அதனையே பொய்யாக்குகிறோம் என்று கூறினான். இன்றைக்கும் மக்களில் பெரும்பாலார் இக்கருத்தைப் பொய் என்பதன் காரணம் என்னவென்றால் இந்தக் கலிமா வெளிச்சத்தாலும் கருத்தாலும் அல்லாஹ்வையன்றி ஒன்றுமில்லை என்று விளக்குவது தெளிவாகத் தென்படுவதாலும் இந்தக் கருத்தை வஹ்மு ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதாலும்தான். றசூலை மக்கள் எதிர்த்ததும் இப்போது இவ்வுண்மையை எடுத்துக் கூறுவோரை மக்கள் எதிர்ப்பதும் இக்கலிமாவின் பொருளை அறிவு ஏற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதே.

கலிமாவின் உண்மையான பொருளை அறிவதற்கு எந்த ஒர் இலக்கண விபரமும் வேண்டியதேயில்லை. ஏனென்றால் எழுதப்படிக்கத்தெரியாத சாதாரண உம்மிகளான மக்களும் கலிமாவின் பொருளைத் தெளிவாய் அறிந்து கொள்ளக்கூடியதாகவேதான் கலிமாவின் வசனங்கள் பாவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கலிமாவின் உண்மை புரட்டப்பட்டிருப்பதால் தான் நாம் கஷ்டமான இலக்கண விபரங்களைக் கொண்டு ஆராய வேண்டியதாய் இருக்கிறது. கலிமாவை எவ்வித இலக்கண விபரமும் கொண்டு ஆராயாத சாதாரண மக்கள்தான் அதன் பொருளைத் தெளிவாய் அறிந்து அப்பொருளை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்திருக்கிறார்கள்.

இப்போது நோட்டமிட்டுப்பார். இலாஹுகளில் நின்றும் ஒன்றேனும் அல்லாஹ்வின் வேறல்ல என்பது ஒரு விதியும் எல்லா இலாஹும் அல்லாஹ்வே தான் என்பது மற்றோர் விதியுமாக இரண்டு விதிகளில் கலிமா அடங்கியிருக்கிறது. ஆகவே வணங்கப்படுகிற இலாஹுகளான சிருஷ்டிகள் அல்லாஹ்வின் வேறல்ல என்று **கலிமாவின் வெளிச்சத்தமான “இபாரத்”தினால் எல்லாமவனே என்னும் ஒருமைப்படுத்தலான சுத்தமான தௌஹீது ஏற்பட்டு விட்டது.** இதை வஹ்மு மறுத்தாலும் சரியே. அதே

போல சிருஷ்டிகளான இலாஹுக்கள் அல்லாஹ்வின் வேறல்ல, அல்லாஹ்வேதான் என்று கலிமா உணர்த்துகிறது.

ஆகவே தௌஹீதுக் கலிமாவின் வெளிச்சத்தமான "இபராத்துன்னஸ்"ஸையும் கலிமா உணர்த்தும் கருத்துப்பிரமாணமான "தலாலத்துன்னஸ்"ஸையும் ஒன்று சேர்த்து நோக்கினால் நல்லவையாயினும் தீயவையாயினும் உண்டாயிருப்பவை எல்லாமே அல்லாஹ்வின் வேறல்ல, அல்லாஹ்வே தான் என்ற **சுத்த சத்தியமான உண்மைத் தௌஹீது ஏற்பட்டுவிட்டது. இதுதான் (ஒருமைப்படுத்தல்)ஏகமாக்கல் என்பதன் உண்மையான அர்த்தமாகும்.** குர்ஆன் ஹதீஸ்களின் திடமான ஆதாரங்களினாலும் தெளிவான அறிவினாலும் அனுபவத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்ட இந்த தௌஹீது நூற்கேள்வியறிவு, பழக்கவழக்கம், பிடிவாதம் முதலிய திரைகளில் சிக்குண்டு வஹ்முமிகைத்த மக்களுக்கு நேர்விரோதமாய்த் தென்பட்டதனால் தான் இத்தனை நபிமார்கள், றசூல்மார்கள் வரவேண்டியதாய் இருந்தது. வஹ்முக்கு விரோதமான முஹ்ஜிஸாத்துக்களைக் கொண்டும் யுத்தங்களைக்கொண்டும் இவ்வுண்மையை உறுதிப்படுத்த வேண்டியதாயும் இருந்தது. ஏனென்றால் சர்வபிரபஞ்சங்களும் அவற்றில் உள்ள சர்வசிருஷ்டிகளும் ஒன்றுக்கொன்று விரோதமானதாயும் வெவ்வேறு தத்துவமுடையவனாயும் மனிதன் தன்புலன்களினால், அறிவினால் நிதர்சனமாய்ச் சந்தேகமில்லாமல் காணுகிறான், அறிகிறான், அனுபவிக்கிறான். நல்ல தீய பொருட்களையும் சக்தி உடையவற்றையும் சக்தி குறைந்தவற்றையும் காணுகிறான். ஆகவே இவை எல்லாம் ஒன்றே என்பதை, இவையெல்லாம் அல்லாஹ் தான் என்பதை இவற்றின் தத்துவங்கள் எல்லாம் ஒரேதத்துவம் தான், என்பதை அறிவுத்தெளிவில்லாத சாதாரண மனிதன் எப்படி ஏற்றுக்கொள்வான்? ஏற்றுக்கொள்ளவேமாட்டான். நிச்சயமாகத் தெளிவில்லாத சாதாரண மனிதன் இக்கொள்கையை எதிர்க்கவும் இதைப்பொய்யென்று கூறவும்தானே செய்வான்.

ஆகவே கலிமாவில் இலாஹு என்ற சொல்லைக் கொண்டு விளங்கப்படுவது (அல்மஹ்பூதுபில்ஹக்கி) நியாயமாய் வணங்கப்படுகிற கடவுள் என்று ஒரு சாரார் கூறுவதும் (அல்மஹ்பூது முத்லகன்) மொத்தமாக வணங்கப்படுகின்ற மஹ்பூதே இலாஹு என்று ஒரு சாரார் கூறுவதும் (முஸ்த்தஹக்குன்லில் இபாதத்தி) வணக்கத்துக்குப்பாத்திரமானவன் என்று இன்னும் சிலர் கூறுவதும் (மாத்துஸம் மூனஹு இலாஹன் வதஸஉமூனஹு மஹ்பூதன்) நீங்கள் எதற்கு இலாஹு என்று பெயரிட்டு வணக்கத்துக்குரியதென்று நம்புகிறீர்களோ அதுவேயென்று வேறு சிலர் கூறுவதும் இலாஹு என்பது வாஜிபுல் உஜூதாகிய அல்லாஹ்தான் என்று இன்னும் சிலர் கூறுவதும் வெறும் மருட்சியும் ஆராய்வில்லாத தன்மையேயாகும். ஆனால் இறைவனல் எமக்களிக்கப்பட்ட திருவேதமான குர்ஆன் இலாஹு என்ற சொல் முன்கினாகிய கல்குக்கும் வாஜிபாகிய ஹக்குக்கும் பொதுவாய் சொல்லப்பட்ட பொதுப்பெயர்ச்சொல் என்பதையும் கலிமாவில் பாவிக்கப்பட்ட இலாஹு என்ற பதம் வணங்கப்படுகிற சிருஷ்டிகளான பொருட்களுக்கே பாவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் சக்குச் சந்தேகமில்லாமல் தெளிவாக விளக்கம் தருகிறது. இதை ஆராய்ந்து அறியாதவர்கள் மறுப்பினும் உண்மை இதுதான்.

## 015 கலிமாவை இன்னும் சிறிது ஆராய்வோம்

### (1)

**ஷி**ர்க்கை மறுதலித்து ஏகத்துவத்தைத் தரிப்படுத்தும் சுத்த சத்திய இறைவாக்கியமான கலிமத்துத்தையிபா, அறபு மொழியியல் மரபுகளுக்கும் அறபு இலக்கண விதிமுறைகளுக்கும் முரண்படாத வழுவற்ற வாக்கிய அமைப்பைக் கொண்ட மாசற்றதோர் அறபு வாசகம் என்பதில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்கவேமுடியாது. ஆதலால் கலிமாவுக்குப் பொருள்கொள்ளும் போது அப்பொருளமைப்பின் காரணமாக கலிமாவிலுள்ள அறபுப்பதங்களின் கருத்தமைப்பு அறபு மொழியியல் இலக்கணங்களுக்கு முரண்படுமானால் அம்முரண்பாட்டின் காரணமாகக் கலிமாவின் வாக்கிய அமைப்பின் யதார்த்தத்தன்மை பிறழ்ச்சியடையுமானால் கலிமாவுக்குக் கொள்ளப்படும் அப்பொருள் வலிந்துரையே என்பது தெளிவான உண்மை.

கலிமாவுக்கு "வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர"எனப்பொருள் கொண்டால் அப்பொருளமைப்பின் காரணமாகக் கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல் அல்லாஹ்வுக்குரிய ஒரு சிறப்புத் தனிப்பெயர்ச்சொல் என்றும், இல்லா என்ற சொல் தேற்றப்பொருளில்- அதாவது, திட்டவட்டமாக உறுதிப்படுத்திக் கூறும் பொருளில் அமைந்துள்ளதென்றும் அர்த்தப்படுகிறது. ஆனால், இது கலிமாவின் உண்மையான மொழியியல் இலக்கண அமைப்புக்கு முற்றிலும் முரண்படுவதன் காரணமாக, கலிமாவின் வாக்கிய அமைப்பின் யதார்த்தத்தன்மை பிறழ்ச்சியடைவதால் கலிமாவுக்குப் அப்படிப் பொருள்கொள்வது வலிந்துரையே என்பதில் ஐயமோ திரிபோ இல்லை.

கலிமாவைச் சரியான அறபு மொழியியல் இலக்கண அடிப்படையில் பகுப்பாய்வு செய்யுமிடத்து கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல் கலிமாவின் கருத்தமைப்பில் அல்லாஹ்வைச் சுட்டியதேயல்ல என்பதும் அல்லாஹ்வையும் சிருஷ்டியினங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்துக் குறிக்கும் இஸ்முல்ஜின்ஸ் என்ற அந்த இனப்பொதுப் பெயர்ச் சொல்லிலிருந்து அல்லாஹ் என்ற தனிப்பெயர்ச் சொல்லை இல்லா என்ற இஸ்திஸ்னா நீக்கப் பொருளாக்கி விலக்குவதால், கலிமாவின் கருத்தமைப்பில் இலாஹு என்ற அச்சொல் சிருஷ்டியினங்களையே சுட்டுகிறது. என்பதும், இதன்படி

கலிமாவின் உண்மையான இறுதிப்பொருள் அல்லாஹ்வைத்தவிர ஒன்றுமே இல்லை என்பதும் மிகத்துல்லியமாய் புலப்படும். ஆனால், இதற்கு இலாஹ௸ என்ற சொல்லின் உள்ளார்ந்த, தனித்துவமான கருத்தமைப்பற்றிய மிகத்தெளிவான விளக்கம் இன்றியமையாததாகும். எனவே இலாஹ௸ என்ற சொல்பற்றி விரிவாக நோக்கவேண்டியுள்ளது.

இலாஹ௸ என்ற சொல் அறபு மொழியியல் இலக்கணப்படி இஸ்முல்ஜின்ஸ் என்ற சொல்வகையைச் சேர்ந்தது. அறபியில் இஸ்மு என்றால் பெயர்ச்சொல் என்றும் ஜின்ஸ் என்றால் இனம் வகை வர்க்கம் என்றும் பொருள்படும். இஸ்முல் ஜின்ஸ் என்ற அறபுச்சொல் தமிழில் பொதுப்பெயர்ச்சொல் என்றே வழங்கப்படுமாயின், தெளிவான விளக்கங்கருதி இங்கு இனப் பொதுப்பெயர்ச்சொல் எனக் குறிப்பிடப்படுகிறது. இஸ்முல் ஜின்ஸ் என்ற இனப்பொதுப்பெயர்ச்சொல் என்பதன் விபரம் என்னவெனில், ஒரே இனத்தை அல்லது ஒரே வகையைச் சேர்ந்த பொருட்கள் அனைத்தையும் ஒட்டு மொத்தமாக ஒருமையில் குறிக்கப் பிரயோகிக்கப்படும் ஒரு பொதுவான பெயர்ச்சொல் என்பதாகும். இதற்கு உதாரணமாக மனிதன் என்ற சொல்லைக் கூறலாம். மனிதன் என்ற சொல் எந்த ஒரு தனிமனிதனையும் குறிப்பாகச் சுட்டாமல் மனித இனத்தைச் சேர்ந்த அனைவரையும் பொதுப்படையாய் ஒருமையில் குறிப்பதால், அச்சொல் மனித இனத்தைச் சேர்ந்த அனைவருக்குமுரிய ஒரு பொதுவான பெயர்ச் சொல்லாகும். ஆகவே அச்சொல் அறபுமொழி இலக்கணப்படி இஸ்முல் ஜின்ஸ் என்ற இனப்பொதுப்பெயர்ச் சொல்லாகும். இது போன்றே இலாஹ௸ என்ற சொல்லும் அறபு மொழியியல் மரபின் படி அல்லாஹ் உட்பட வணங்கப்படும் வஸ்த்துக்கள் அனைத்திற்குமுரிய ஒரு பொதுவான பெயர்ச்சொல்லாததால், அறபுமொழி இலக்கணப்படி அதுவும் இஸ்முல் ஜின்ஸ் என்ற இனப்பொதுப் பெயர்ச் சொல்லேயாகும்.

வணங்கப்படும் ஒன்றை இலாஹ௸ என அழைப்பது அறபு மொழி மரப்பாகையால், அராபியர் அல்லாஹ்வை இலாஹ௸ என அழைத்த பிரகாரமே தமது ஏனைய வணக்க வஸ்த்துக்களாகிய மஃபூதுக்கள் ஒவ்வொன்றையும் இலாஹ௸ இலாஹ௸ என அழைத்தனர். எனவே அறபு மொழியியலின்படி இலாஹ௸ என்பது வணங்கப்படும் இனத்துக்குரிய – அதாவது அல்லாஹ்வுக்கும் மஃபூதுக்களுக்குமுரிய ஒரு பொதுவான பெயர்ச் சொல்லாகும். இலாஹ௸ என்ற சொல் எந்த ஒரு தனி இலாஹையும் குறிப்பாகச் சுட்டாமல் இலாஹ௸ என்ற இனத்தைச் சேர்ந்த அனைத்து இலாஹ௸களையும் பொதுப்படையாய், ஒட்டு மொத்தமாய் ஒருமையில் குறிக்கிறது. அதாவது அல்லாஹ்வையும் மஃபூதுக்களையும் ஒருங்கிணைத்துப் பொதுப்படையாய் ஒட்டு மொத்தமாய் ஒருமையில் குறிக்கிறது. ஆகவே அறபு மொழி இலக்கணப்படி இலாஹ௸ என்ற சொல் இஸ்முல் ஜின்ஸ் என்ற இனப்பொதுப்பெயர்ச்சொல்லேயாகும். இது அறபு மொழி அகராதிகளையும் ஆதாரமாகக்கொண்ட நிதர்சனமான உண்மையாதலால், இதில் மறுதலிப்பதற்கு இடமே இல்லை.

இலாஹ௸ என்ற இனப்பொதுப்பெயர்ச் சொல் அறபுமொழி வழக்கில் உள்ள வேறு எந்த ஓர் இனப்பெயர்ச்சொல்லிலும் அமையாத ஒரு சில விஷேட அம்சங்களைத் தன்னில் கொண்டிருப்பதால் அது ஏனைய இனப்பொதுப்பெயர்ச் சொற்கள் அனைத்திலுமிருந்து மாறுபட்ட அமைப்புடைய தனித்துவமானதொரு சொல்லாக விளங்குகிறது. எப்படியெனில், மற்றைய இனப்பொதுப்பெயர்ச் சொற்கள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட ஒவ்வோர் இனத்தை மாத்திரமே குறிக்கையில் இலாஹ௸ என்ற இனப்பொதுப் பெயர்ச்சொல் மட்டும் அல்லாஹ்வையும் வானம் பூமியிலுள்ள பௌதீக சூட்சும சிருஷ்டியினங்கள் அனைத்தையும் ஒருங்கே குறிக்கிறது. எவ்வாறெனில் முஷ்ரீக்குகளுடைய மஃபூதுக்கள் யாவும் வானம் பூமியிலுள்ள பௌதீக சூட்சும சிருஷ்டியினங்கள் என்பதால சிருஷ்டி என்ற பொதுமைப்பாட்டின் அடிப்படையில் இலாஹ௸ என்ற சொல் மஃபூதுக்களல்லாத சிருஷ்டிகளையும் சேர்த்தே குறிக்கிறது. ஏனெனில் இன்னின்ன சிருஷ்டிகள் மட்டுமே மஃபூதுக்கள் என்று திட்டவட்டமான வரையறைகள் எதனையும் முஷ்ரீக்குகள் ஏற்படுத்திக் கொள்ளாமல் தம்மனோ இச்சைப்படி தாம் விரும்பிய சிருஷ்டிகளையெல்லாம் மஃபூதுக்களாய் எடுத்துக்கொண்டதால்-தற்போதும் எடுத்துக்கொண்டிருப்பதால் இனிமேலும் எடுத்துக்கொள்வார்கள் என்பதால் மஃபூதுக்கள் என்பதற்குரிய மிகச்சரியான வரைவிலக்கணம் வானம் பூமியிலுள்ள பௌதீக சூட்சும சிருஷ்டியினங்கள் என்றே அமையும். எனவே இலாஹ௸ என்ற இனப்பொதுப்பெயர்ச் சொல் வணங்கப்படுகிற இலாஹ௸வாகிய அல்லாஹ்வையும் மஃபூதுக்களையும் குறிப்பதன் மூலம் சர்வபிரபஞ்சங்களிலுமுள்ள சர்வசிருஷ்டிகளையும் (லாஹிறையும், பாதினையும்)அத்துடன் அல்லாஹ்வையும் ஒருங்கிணைத்து ஒரே இனமாய்க் குறிக்கிறது. ஆகையால், அது மற்றைய இனப்பொதுப் பெயர்ச் சொற்களைப் போல் குறிப்பிட்டதோர் இனத்தை மாத்திரமே குறிக்காமல் அனைத்து இனங்களையும் ஒருங்கே குறிக்கிறது.

மேலும் ஏனைய இனப் பொதுப் பெயர்ச் சொற்கள் யாவும் சிருஷ்டிகளைப் பகுத்துப்பிரித்துப் பல்வகைப்படுத்துகையில் இலாஹ௸ என்ற இனப் பொதுப்பெயர்ச் சொல் மட்டும் ஓரினமாய் ஒருமைப்படுத்துகிறது. ஏனைய இனப்பொதுப் பெயர்ச் சொற்களெல்லாம் சிருஷ்டிகளை மாத்திரமே சுட்டுவனவாய் அமைந்திருக்கும்போது இலாஹ௸ என்ற இனப் பொதுப் பெயர்ச் சொல்மட்டும் அல்லாஹ்வையும் சிருஷ்டிகளையும் ஒருங்கே சுட்டுவதாய் அமைந்துள்ளது. மற்றைய இனப் பொதுப் பெயர்ச் சொற்கள் எதுவும் ஒரு மூலப்பொருளையும் அந்த மூலப் பொருளிலிருந்து உருவான படைப்புப் பொருட்களையும் ஒரே பெயரில் ஒரே இனமாய்க் குறிக்காதபோது இலாஹ௸ என்ற சொல் மாத்திரம் மூலப் பொருளையும் அந்த மூலப் பொருளில் இருந்து உருவான படைப்புப் பொருட்களையும் ஒரே பெயரில் ஒரே இனமாய்க் குறிக்கிறது. ஆகவே, இலாஹ௸ என்ற இனப்பொதுப்பெயர்ச்சொல் அறபு மொழி வழக்கிலுள்ள வேறு எந்த ஓர் இனப் பொதுப் பெயர்ச் சொல்லிலும் அமையாத சிறப்பம்சங்கள் அமையப்பெற்ற மிகவும் நுட்பமான உள்ளார்ந்த கருத்தமைப்புடைய தனித்துவமானதொரு சொல்லாகும்.

இனி, கலிமாவின் இலக்கண அமைப்பைக் கவனிப்போம். கலிமாவிலுள்ள “இலாஹு“ என்ற இஸ்முல் ஜின்ஸை (இனப்பொதுப் பெயர்ச் சொல்லை) மறுதலிப்பதன் காரணமாக கலிமாவின் முதல் பதமான “லா” என்ற எதிர்மறைச்சொல் அறபு இலக்கணப்படி ஜின்ஸியத்தை நப்யு செய்யும் (இனத்தை மறுதலிக்கும்) “லா” ஆகும். ஜின்ஸியத்தை நப்யு செய்யும் (இனத்தை மறுதலிக்கும்) “லா” என்பதன் விபரம் என்னவென்றால், ஒரே இனத்தை அல்லது ஒரே வகையைச் சேர்ந்த பொருட்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக இல்லை என மறுதலிக்கும் “லா” என்பதாகும். ஆனால், இதில் மிக நுட்பமாகக் கிரகிக்கப்பட வேண்டிய அடிப்படையம்சம் என்னவெனில், ஜின்ஸியத்தை நப்யு செய்யும்(இனத்தை மறுதலிக்கும்) “லா”வானது, ஓர் இனத்தைச் சேர்ந்த அல்லது ஒரு வகையைச் சேர்ந்த பொருட்களைப்பற்றிய ஏதோவொரு விடயத்தைத்தான் மறுதலிக்கிறதேயன்றி அப்பொருட்கள் யதார்த்தத்தில் இல்லாதவை என மறுதலிக்கவில்லை என்பதே. அதாவது ஜின்ஸியத்தை நப்யு செய்யும் (இனத்தை மறுதலிக்கும் “லா”வால் ஓர் இனத்தைச் சேர்ந்த அல்லது ஒரு வகையைச் சேர்ந்த பொருட்கள் மறுதலிக்கப்படும் போது அப்பொருட்கள் தொடர்பான ஏதோவொரு விடயந்தான் மறுதலிக்கப்படுகிறதே தவிர, அப்பொருட்களின் இருப்பியல் அல்லது உள்ளமை மறுதலிக்கப்படுவதில்லை. இதற்கு உதாரணமாக ஒரு வாக்கியத்தை நோக்குவோம்.

**“லா ஷஜற பில் அர்ழி”**

இந் நிலத்தில் ஒரு மரமும் இல்லை.

இவ்வாக்கியத்திலுள்ள மரம் என்ற இனத்தைக் குறிக்கும் இஸ்முல் ஜின்ஸை (இனப்பொதுப் பெயர்ச் சொல்லை) மறுதலிப்பதன் காரணமாக இவ்வாக்கியத்தின் முதல் பதமான லா, அறபு இலக்கணப்படி ஜின்ஸியத்தை நப்யு செய்யும் (இனத்தை மறுதலிக்கும்)லாவாகும். இந்த லாவானது இவ்வாக்கியத்தில், குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியில் மரம் என்ற இனம் இல்லை என மறுதலிக்கிறதேயன்றி யதார்த்தத்தில் மரம் என்ற ஓர் இனமே இல்லையென மறுதலிக்கவில்லை. அதாவது இவ்வாக்கியத்தில் இந்த லாவானது மரம் என்ற இனம் பற்றிய ஒரு குறிப்பிட்ட விடயத்தைத்தான் மறுதலிக்கிறதே அல்லாது மரம் என்ற இனத்தின் இருப்பியலை அல்லது உள்ளமையை மறுதலிக்கவேயில்லை.

இதைப்போன்றே, கலிமாவின் முதல் பதமான “லா”வும் “இலாஹு” எனப்படும் மஃபூதுக்களாகிய சிருஷ்டியினங்கள் பற்றி முஷ்ரீக்குகளின் எண்ணத்திலுள்ள ஒரு விடயத்தைதான் மறுதலிக்கிறதேயன்றி இலாஹு எனப்பெயரிடப்பட்ட மஃபூதுக்களாகிய சிருஷ்டியினங்கள் யதார்த்தத்தில் இல்லாதவை என்று மறுதலிக்கவேயில்லை. **இல்லாதது இருப்பதாகாது, இருப்பது இல்லாததாகாது, இது ஓர் தத்துவ உண்மை.**

கலிமாவின் இரண்டாவது பதமாகிய இலாஹு என்ற சொல் அல்லாஹ்வையும் சிருஷ்டியையும் ஒருங்கே குறிக்கும் ஓர் இனப்பொதுப் பெயர்ச் சொல் என்ற விபரம் ஏற்கனவே தெளிவாக விளக்கப்பட்டுள்ளதால், அதை விடுத்து இனிக்கலிமாவின் மூன்றாவது பதத்தைக் கவனிப்போம்.

கலிமாவின் மூன்றாவது பதமாகிய “இல்லா” என்ற சொல் அறபு இலக்கணப்படி கலிமாவின் வாக்கியத்தில் இஸ்திஸ்னாவுக்குரிய “இல்லா”வாக அமைந்துள்ளது. அதாவது நீக்கப் பொருளைத் தருவதற்குரிய “இல்லா”வாக அமைந்துள்ளது. நீக்கப் பொருளைத் தருவதற்குரிய இல்லா என்றால், ஒரு வாக்கியத்தில் இல்லா என்ற சொல் தன்னைச் சார்ந்து வரும் சொல்லை அச்சொல்லுடன் தொடர்புற்று வேறு ஒரு சொல்லிலிருந்து பிரித்து நீக்கி விலக்குவதாகும்.

**உதாரணம்:**

**“ஜாஅனில் கவுமு இல்லா அஹ்மத்”**

அஹ்மது தவிர அக்கூட்டத்தினர் அனைவரும் என்னிடம் வந்தனர்.

இவ்வாக்கியத்தில் உள்ள “இல்லா” என்ற சொல், அறபு இலக்கணப்படி இஸ்திஸ்னாவுக்குரிய “இல்லா” வாக அதாவது, நீக்கப்பொருளைத் தருவதற்குரிய “இல்லா”வாக அமைந்துள்ளது. எனவே, அது தன்னைச் சார்ந்து வரும் அஹமத் என்ற சொல்லை அச்சொல்லுடன் தொடர்புற்ற கூட்டத்தினரை என்ற சொல்லிலிருந்து பிரித்து நீக்கி விலக்குகிறது. ஆகையால் இவ்வாக்கியத்தில் கூட்டத்தினர் என்பது அஹ்மது நீங்கலாக உள்ள ஏனையோரையே குறிப்பதாகும். இதன்படி வந்த கூட்டத்தினரிலிருந்து அஹ்மது மட்டும் நீங்கியிருப்பதால், அஹ்மது மட்டும் வரவில்லை என்ற கருத்தமைப்பு ஏற்படுகிறது.

இதே போலவே கலிமாவிலுள்ள இல்லா என்ற சொல்லும் இஸ்திஸ்னா எனப்படும் நீக்கப்பொருளைத் தருவதற்குரிய இல்லாவாக அமைந்திருப்பதால், அது தன்னைச் சார்ந்து வரும் அல்லாஹ் என்ற சொல்லை அச் சொல்லுடன் தொடர்புற்ற இலாஹு என்ற சொல்லில் இருந்து பிரித்து நீக்கி விலக்குகிறது. ஆகவே கலிமாவின் வாக்கியத்தில் இலாஹு என்ற சொல் சிருஷ்டியை மாத்திரமே

குறிப்பதாக அமைகிறது. ஏனெனில் அல்லாஹ்வையும் சிருஷ்டியையும் ஒருங்கே குறிக்கும் சொல்லான இலாஹுˆ என்பதிலிருந்து அல்லாஹ் என்ற சொல் நீக்கப்பட்ட பின் அது சிருஷ்டி என்ற சொல்லை மட்டுமே தன்னில் கொண்டிருக்கும். இதை இன்னொரு முறையில் மிகச் சுலபமாய்க் கூறலாம். அதாவது,

இலாஹுˆ=அல்லாஹ் +சிருஷ்டி (இது அல்லாஹ்வையும் சிருஷ்டியையும் ஒன்றிணைக்கிறது).

இலாஹுˆ-அல்லாஹ்=சிருஷ்டி (இது அல்லாஹ்வை நீக்கிச் சிருஷ்டியை மட்டும் குறிக்கிறது)

இலாஹுˆ என்ற சொல்லிலிருந்து இல்லா என்ற இஸ்திஸ்னா அல்லாஹ் என்ற சொல்லை நீக்கிய பின், இலாஹுˆ என்பது சிருஷ்டியை மாத்திரமே குறிப்பதால் "லா" என்ற சொல் இல்லையென மறுதலிப்பது சிருஷ்டியையேயாகும். ஆனால், அந்த "லா"ஜின்ஸியத்தை மறுதலிக்கும் லாவாக இருப்பதால் அது சிருஷ்டியின் உள்ளமையை அல்லது இருப்பியலை மறுதலிக்காமல் சிருஷ்டி பற்றிய ஒரு விடயத்தையே மறுதலிக்கிறது. அந்த விடயமானது, முஷ்ரீக்குகளின் எண்ணத்திலுள்ள "சிருஷ்டி அல்லாஹ் அல்லாதது" என்ற ஷிர்க்கேயாகும்.

சிருஷ்டியினங்கள் யாவற்றையும் அல்லாஹ்தான் படைத்தான் என்ற உண்மையை முஷ்ரீக்குகள் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டே இருந்தாலும் கூட சிருஷ்டிகள் அல்லாஹ் அல்லாதவை என்றே அவர்கள் நம்பினார்கள். சிருஷ்டிகள் அல்லாஹ் அல்லாதவை என்றால், அவை சுயமான தன்னிலை கொண்டவை என்றும் சுயமான தத்துவங்கள் உடையவை என்றும் பொருள்படுவதால், சுயம் என்ற பொதுமைப்பாட்டின் அடிப்படையில் அவையும் அல்லாஹ்வைப் போன்ற தனித்தனி வுஜுˆதுகளே என்றாகும். ஆதலால் அவை அல்லாஹ்வுக்கு இணையானவை அல்லது சமமானவை என்ற ஷிர்க் உண்டாகும். ஷிர்க் என்பது உண்மைக்குப் புறம்பான பொய்யாக இருப்பதால் அதனை மறுதலித்தே கலிமா அருளப்பட்டது. **சிருஷ்டிகள் அல்லாஹ அல்லாதவையே அல்ல** என்பதே கலிமாவின் சாரமாகும்.

கலிமாவின் நான்காவதும் இறுதியானதுமான அல்லாஹ் என்ற பதம், இறைவனுக்குரிய ஓர் இடுகுறித் தனிப்பெயர்ச் சொல் என்பதை எல்லோருமே ஏகமனதாய் ஏற்றுக்கொண்டிருப்பதால் இங்கு இதுபற்றி எதுவும் கூறப்பட வேண்டியதேயில்லை.

## (3)

இனி, இதுவரை கூறப்பட்ட இலக்கண மொழியியல் விளக்கங்களின் அடிப்படையில் கலிமாவின் கருத்தமைப்பை நெறிப்படுத்தினால் "அல்லாஹ்வைத் தவிர சிருஷ்டி இல்லை" என அமையும். இந்த இடத்தில் ஒரு நுட்பம் புரிந்து கொள்ளப்பட வேண்டும். அது என்னவெனில், அல்லாஹ் என்பது சிருஷ்டிக்குக் காரணமான மூலப்பொருளாகவும், சிருஷ்டி என்பது அந்த மூலப்பொருளில் இருந்து உருவான படைப்புப் பொருளாகவும் இருப்பதால் "அல்லாஹ்வைத் தவிர சிருஷ்டி இல்லை" என்ற வாக்கியம் "மூலப் பொருளைத்தவிர படைப்புப் பொருள் வேறு இல்லை" என்ற கருத்தமைப்பையே கொண்டிருக்கிறது என்பதாகும். **எனவே "லா" என்ற சொல் வேறு என்பதையே மறுப்பதாய் அமைந்திருக்கிறது.**

மூலப்பொருளைத் தவிர படைப்புப்பொருள் இல்லை என்றால், படைப்புப்பொருள் மூலப்பொருளாகவேதான் இருக்கிறதேயன்றி, மூலப்பொருளல்லாத வேறு பொருளாக இருக்கவில்லை என்பதே அர்த்தமாகும். இதற்கு ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். மாவு என்ற மூலப்பதார்த்தத்திலிருந்து உருவான உணவுப்பதார்த்தங்களை மாவு அல்லாத வேறு பதார்த்தங்கள் என்று நம்பிக் கொண்டிருக்கும் ஒரு சிறுவனை நோக்கி,"மாவைத் தவிர பதார்த்தம் இல்லை" எனக்கூறப்படுவதாக வைத்துக்கொள்வோம். இவ்வாக்கியத்தின் கருத்து அந்த உணவுப்பதார்த்தங்கள் மாவாகவேதான் இருக்கின்றனவேயல்லாது மாவு அல்லாத வேறு பதார்த்தங்களாக இருக்கவேயில்லை என்பதேயாகும். யதார்த்த பூர்வமாகச் சிந்தித்துப்பாத்தால் அந்த உணவுப்பதார்த்தங்கள் யாவும் மாவு என்ற மூலப்பதார்த்தத்தின் ஆதேயமானதோற்றப்பாடுகளும் அவற்றிற்குரிய பெயர்களுமேயாகும்; அவை மாவு அல்லாத வேறு பதார்த்தங்களே அல்ல, அவை மாவாகவே தான் இருக்கின்றன. ஆகவே உண்மையில் இருக்கிற ஒரே பதார்த்தம் மாவு மட்டுமேதான்.

இது போன்றே, அல்லாஹ்வைத் தவிர சிருஷ்டி இல்லை என்று கூறப்படும்போது சிருஷ்டி அல்லாஹ்வாகவேதான் இருக்கிறதே அன்றி அல்லாஹ் அல்லாத வேறு பொருளாக இருக்கவில்லை என்பதே அதன் கருத்தாகும். ஒரு மூலப்பொருளில் இருந்து உருவாகும் ஒரு படைப்புப் பொருள் அந்த மூலப் பொருளல்லாத வேறு பொருளாக இருக்கவே முடியாது. இது பௌதீக, இரசாயன, விஞ்ஞான, சமய, தத்துவ உண்மையாகும். யதார்த்தத்தை நோக்கினால், சிருஷ்டி என்பது அல்லாஹ்வின் தோற்றப்பாடுகளும் அவற்றிற்குரிய பெயர்களுமேயாகும். அவற்றை அல்லாஹ் அல்லாதவை எனக்கருதுவது உண்மைக்குப் புறம்பான பொய்மையாக இருப்பதனாலேயே அதனை மறுதலித்துக் கலிமா அருளப்பட்டது. ஆகவே சிருஷ்டி அல்லாஹ்வாகவே இருக்கிறது என்ற கலிமாவின் கருத்தமைப்பைக் கொண்டு இறுதியாக பெற்றுக்கொள்ளும் பொருள் என்னவென்றால் இருப்பது அல்லாஹ் மட்டுமே என்பதேயாகும். இதன்படி "லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற சுத்த சத்திய

இறைவாக்கியமான கலிமத்துத் தையிபாவின் உண்மைப்பொருள் “அல்லாஹ்வைத் தவிர ஒன்றுமே இல்லை”என்பதே.

## 016 கலிமா ஒரு முரண்படு வாக்கியம்தான்

01 **உ**ண்மையில் உள்ளதான ஒரு விடயம் “இல்லாதது” என எண்ணப்படும்போது, ஒரே வசனத்தில் ஏக காலத்தில் “அது இல்லாதது” என்ற எண்ணத்தையும் மறுதலித்தது,“அது உள்ளது தான்” என்ற உண்மையையும் உறுதிப்படுத்திக்கூற “அது இல்லாதது அல்ல” என எதிர்மறையாய்க் கூறும் வாக்கியப் பிரயோகம் முரண்வாக்கியப் பிரயோகம் எனப்படும். இது ஓர் இலக்கண விதியாகும். கலிமத்துத்தையிபாவும் அதன் விளக்க வாசகங்களும் முரண்வாக்கியப் பிரயோகங்களாகவே அமைந்துள்ளன. கலிமத்துத் தையிபாவும் அதை நிகர்த்த அதன் விளக்க வசனங்களும் முரண்வாக்கியங்களே என்பதைப் புரிந்து கொண்டால் அவற்றின் பொருளமைப்புக்களை விளங்கித்தெளிதல் மிக மிகச் சுலபமாகும். ஏனெனில், முரண்வாக்கியங்கள் இலக்கண எளிமையும் பொருள் தெளிவுமுடைய இலகு வாக்கிய வடிவத்தைக் கொண்டவையாகவும் முஹ்கமு எனப்படும் ஒரே கருத்தமைப்பைக் கொண்டவையாகவும் அமைந்துள்ளன. எனவே கலிமாவின் உண்மைப்பொருளை ஐயந்திரிபற விளங்கித்தெளிவடைய முதலில் கலிமா ஒரு முரண் வாக்கியமே என்ற உண்மையை உணர்தல் அவசியமாகும்.

முரண்வாக்கியங்கள்,“இல்லை” எனப் பொருள்படும்“لا , ما” ஆகிய இரு எதிர்மறைச் சொற்களில் ஒன்றை வாக்கியங்களின் ஆரம்பச் சொல்லாகவும் غير , الا ஆகிய இணைப்புச் சொற்களில் ஒன்றை வாக்கியங்களில் நீக்கப்பொருளிலும் கொண்டிருக்கும். முரண்வாக்கியங்களின் வசன அமைப்புக்கள் எப்போதும் “ஸாலிபா” எனப்படும் எதிர்மறைப் பிரமாணத்திலேயே அமைந்திருக்கும். ஆனால் அந்த எதிர்மறைப் பிரமாணத்தின் மூலம் அவ்வசனங்கள் தரும் பொருளமைப்புக்கள் எப்போதும் “முஜீபா” என்ற முரண்பாட்டுப் பிரமாணத்திலேயே அமைந்திருக்கும். உதாரணமாக அது இல்லாததல்ல என்ற எதிர்மறை வசனம் “அது இருப்பதுதான்” என்ற உடன்பாட்டுப் பொருளைத் தருவது போல் எனக்கொள்ளலாம். இதை இன்னொரு வகையில் சொல்வதானால், முரண்வாக்கியங்களின் எதிர்மறைப் பிரமாண வசனங்கள் ஒருபோதுமே எதிர்மறைப் பிரமாணப் பொருளமைப்புக்களைத் தருவதில்லை. உதாரணமாக,“அது இல்லாதது அல்ல” என்ற எதிர்மறை வசனம் ஒரு போதுமே “அது இல்லாததுதான்” என்ற எதிர்மறைப்பொருளைத் தராதிருப்பதுபோலெனக் கருதலாம்.

முரண்வாக்கியம் தொடர்பான மற்றுமொரு பிரதான விடயம் என்னவென்றால் முரண்வாக்கியங்களின் வசனங்களிலுள்ள எதிர்மறைச் சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் பதிலாக அம்முரண் வாக்கியங்களின் பொருளமைப்புக்களில் உடன்பாட்டுச்சொற்களும் சொற்றொடர்களுமே இடம்பெறும் என்பதும் முரண் வாக்கியங்களின் வசனங்களில் நீக்கப்பொருளில் இடம்பெறும் சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் பதிலாக அம் முரண் வாக்கியங்களின் பொருளமைப்புக்களில் நீக்கப்பொருளுக்கு நேர் எதிர்ப் பொருளுடைய உறுதிப்பொருளைத்தரும் சொற்களும் சொற்றொடர்களுமே இடம்பெறும் என்பதும், அத்துடன் அவசியமாகும் போது முரண்வாக்கியங்களின் வசனங்களிலுள்ள ஏனைய சில சொற்களுக்குப் பதிலாகவும் அம்முரண் வாக்கியங்களின் பொருளமைப்புக்களில் அச் சொற்களுக்கு நேர் எதிர்க்கருத்துள்ள வேறு சொற்களே இடம்பெறும் என்பதும் இலக்கண விதிமுறையாகும் என்பதே. இதைச் சுருக்கமாகச் சொல்வதானால் ஒரு முரண் வாக்கியத்தின் வசனமும் அதன் பொருளும் ஒன்றுக்கொன்று முரணானபிரமாணங்களைக் கொண்டவையாகும். அதாவது: வசனம் ஸாலிபா என்ற எதிர்மறைப்பிரமாணமாகவும் பொருள் அதற்கு நேர்முரணான முஜீபா என்ற உடன்பாட்டுப் பிரமாணமாகவும் அமையும். ஆகவே தான், வசனங்களில் உள்ள சொற்களுக்கு முரண் பிரமாணமுள்ள சொற்கள் பொருளமைப்புகளில் இடம் பெறுகின்றன.

உதாரணமாக “அல்லாஹ் நாடியே தவிர யாதொரு காரியமும் நிகழ்வதில்லை” என்ற முரண் வசனத்தில் நிகழ்வதில்லை என்ற எதிர்மறைச் சொல் வந்திருப்பதால் இவ்வசனம் ஸாலிபாவாகும். ஆனால் இவ்வசனத்தன் பொருளமைப்பு முஜபாவாக அமையும். அதாவது “அல்லாஹ் நாடித்தான் எல்லாக்காரியங்களும் நிகழுகின்றன” என்பதாக அது அமையும். இப்போது, வசனத்தின் சொற்களும் பொருளமைப்பின் சொற்களும் முரண்பாட்டுத்தன்மை பெற்றிருப்பதை அவதானிக்கலாம். நாடியே தவிர என்பது நாடித்தான் என்றும், யாதொரு என்பது எல்லாம் என்றும், காரியம் என்பது காரியங்கள் என்றும் நிகழ்வதில்லை என்பது நிகழ்கின்றன என்றும் நேர்முரண்பட அமைந்திருக்கின்றன. நாம் மேலே விளக்கிய விபரம் இதைப்போன்றதே என்பதை விளங்கிக் கொண்டு இனி உதாரணங்களை உன்னிப்பாக நோக்குவோம்.

**உதாரணம் - 1**

مَا يُقَالُ لَكَ إِلَّا مَا قَدْ قِيلَ لِلرُّسُلِ مِن قَبْلِكَ

41:43 *உமக்கு முன்வந்த தூதர்களுக்குக் கூறப்பட்டது எதுவோ அதையேயன்றி உமக்குக் கூறப்படவில்லை. (ஸாலிபா)*

**இவ்வசனத்தின் பொருளமைப்பு:**

உமக்கு முன்வந்த தூதர்களுக்குக் கூறப்பட்டது **எதுவோ அதுவேதான்** உமக்கும் **கூறப்பட்டுள்ளது**.(முஜீபா)

இவ்வசனம் உறுதிப்படுத்தும் ஏற்புக்குரிய கருத்து என்னவென்றால்:

றஸூல்(ஸல்) அவர்களுக்கு கூறப்பட்டுள்ளது, அவர்களுக்கு முன்வந்த தூதர்களுக்கும் **கூறப்பட்டதேதான்**.(முஜீபா)

இவ்வசனம் மறுதலிக்கும் மறுப்புக்குரிய கருத்து என்னவென்றால்:

றஸூல்(ஸல்) அவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது, அவர்களுக்கு முன்வந்த தூதர்களுக்குக் **கூறப்பட்டதல்ல.** (ஸாலிபா)இது ஏற்புடைய கருத்தல்ல.

**உதாரணம் - 2**

ஒரு ஹதீஸின் இறுதிப்பகுதி:

**“லாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹ”**

அல்லாஹ்வைக் **கொண்டேயன்றி** சக்தியும் **இல்லை**, திரும்புதலும் **இல்லை**.(ஸாலிபா)

**இவ்வசனத்தின் பொருளமைப்பு:**

அல்லாஹ்வைக் **கொண்டேதான்** சக்தியும் **உள்ளது**, திரும்புதலும் **உள்ளது.**(முஜீபா)இதுதான் ஏற்புடைய கருத்தாகும்.

அதாவது இவ்வசனம் உறுதிப்படுத்தும் ஏற்புக்குரிய கருத்து: சக்தியும் திரும்புதலும் உள்ளது,**அல்லாஹ்வைக் கொண்டேதான்.** (முஜீபா)

இவ்வசனம் மறுதலிக்கும் மறுப்புக்குரிய கருத்து:

சக்தியும் திரும்புதலும் உள்ளது,**அல்லாஹ்வைக் கொண்டல்ல.** (ஸாலிபா) இது ஏற்புடைய கருத்தல்ல.

**குறிப்பு:** அடுத்து வரும் உதாரணங்களிலுள்ள مَا என்ற சொல்லுக்கு முன்வரும் وَ என்பது, வசனத் தொடர்ச்சியைக் குறிக்கும் حَرْفُ عطفٍ என்ற குறியீடாகும். அது مَا என்ற சொல்லுடன் இணைந்ததல்ல.

**உதாரணம் - 3**

﴿وَمَا مِن دَآبَّةٍ فِي ٱلۡأَرۡضِ إِلَّا عَلَى ٱللَّهِ رِزۡقُهَا

11-6 *அதன் உணவு அல்லாஹ்வின்பொறுப்பில் இல்லாது யாதோர் உயிரினமும் உலகில் இல்லை. (ஸாலிபா)*

**இவ்வசனத்தின் பொருளமைப்பு:**

உலகில் **உள்ள எல்லா உயிரினங்களுடைய** உணவும் அல்லாஹ்வின் **பொறுப்பில்தான் இருக்கிறது**.(முஜீபா)

இவ்வசனம் உறுதிப்படுத்தும் ஏற்புக்குரிய கருத்து:

**எல்லா** உயிரினங்களின் உணவும் அல்லாஹ்வின் பொறுப்பிலேயே தான் **உள்ளது.**(முஜீபா)

**இவ்வசனம் மறுதலிக்கும் மறுப்புக்குரிய கருத்து:**

**யாதோர்** உயிரினத்தின் உணவும் அல்லாஹ்வின் பொறுப்பில் **உள்ளதல்ல.**(ஸாலிபா)

**உதாரணம் - 4**

وَمَآ أَرْسَلْنَـٰكَ إِلَّا رَحْمَةً لِّلْعَـٰلَمِينَ

21-107 *சர்வ ஆலங்களுக்கும் ஓர் அருட்கொடையாகவே அன்றி உம்மை நாம் அனுப்பவில்லை. (ஸாலிபா)*

**இவ்வசனத்தின் பொருளமைப்பு:**

சர்வ ஆலங்களுக்கும் **ஓர் அருட்கொடையாகவேதான்** உம்மை நாம் **அனுப்பினோம்.**(முஜீபா)

**இவ்வசனம் உறுதிப்படுத்தும் ஏற்புக்குரிய கருத்து:**

றஸுல்(ஸல்) அவர்கள் சர்வ ஆலங்களுக்கும் **ஓர் அருட்கொடையாகவே அனுப்பப்படடார்கள்.**(முஜீபா)

**இவ்வசனம் மறுதலிக்கும் மறுப்புக்குரிய கருத்து:**

றஸுல்(ஸல்)அவர்கள் சர்வ ஆலங்களுக்கும் **ஓர் அருட்கொடையாக அனுப்பப்படவில்லை.**(ஸாலிபா)

இனி, இந்த இலக்கண நிரூபணங்களின் அடிப்படையில் இதே இலக்கண அமைப்பின் இதே விதிமுறைகளுக்கிணங்க, கலிமாவின் விளக்க வாசகங்களாய் அமைந்துள்ள இரு முரண் வாக்கியங்களை நோக்குவோம். இவ்வாசகங்களின் பொருளமைப்பைத் தெளிவுற விளங்கியறிந்து கலிமாவின் உண்மைப் பொருளமைப்பைப் புரிந்து கொள்வதை எளிதாக்கும் பொருட்டே இவ்வளவு விரிவான விபரங்களும் உதாரணங்களும் தரப்பட்டன.

وَمَا مِنْ إِلَـٰهٍ إِلَّا ٱللَّهُ ٱلْوَٰحِدُ ٱلْقَهَّارُ

**38-65***அடக்கியாளும் ஒரே அல்லாஹ்வைத் தவிர யாதோர் இலாஹுஂம் இல்லை. (ஸாலிபா)*

**இவ்வசனத்தின் பொருளமைப்பு:**

**எல்லா இலாஹுகளும்** அடக்கியாளும் ஒரே **அல்லாஹ்வாகத்தான் உள்ளன.**(முஜீபா)

**இவ்வசனம் உறுதிப்படுத்தும் ஏற்புக்குரிய கருத்து:**

உள்ள இலாஹுகள் எல்லாம் **அல்லாஹ்வேதான்.** (முஜீபா)

**இவ்வசனம் மறுதலிக்கும் மறுப்புக்குரிய கருத்து:**

உள்ள இலாஹு **யாதொன்றும் அல்லாஹ் அல்ல.**(ஸாலிபா)

அடுத்துவரும் முரண்வாக்கியம் குர்ஆனில் பல இடங்களில் இடம் பெறுகிறது.

مَا لَكُم مِّنْ إِلَـٰهٍ غَيْرُهُۥٓ

7-85 *உங்களுக்கு அவனல்லாத யாதோர் இலாஹுஂம் இல்லை.(ஸாலிபா)*

**இதன் பொருளமைப்பு:**

உங்களுக்கு **எல்லா இலாஹுஂம் அவனாகத்தான் உள்ளன.**(முஜீபா)

**இது உறுதிப்படுத்தும் ஏற்புக்குரிய கருத்து:**

எல்லா இலாஹுகளும் **அவனேதான்.** (முஜீபா)

**இவ்வசனம் மறுதலிக்கும் மறுப்புக்குரிய கருத்து:**

யாதோர் இலாஹுஂம் அவனல்ல.(ஸாலிபா)

இனி கலிமாவை எடுத்துக் கொள்வோம். முதலில் கலிமா ஏன் அருளப்பட்டது என்பதற்கான காரணத்தைக் கவனிப்போம். சிருஷ்கள் சுயமான உள்ளமையைக் கொண்ட, அல்லாஹ் அல்லாத வஸ்துக்கள் என்ற எண்ணக்கருத்தின் அடிப்படையிலேயே அவை இலாஹுகளாய் எடுத்துக் கொள்ளப்பட்டதால் அல்லாஹவுடைய ஏக உள்ளமையில் இணை கற்பிக்கப்பட,“சிருஷ்டிகள் அல்லாஹ்

அல்லாதவை” என்ற எண்ணக்கருத்தே காரணமாய் அமைவதால், அந்த எண்ணக்கருத்தை மறுதலித்து அதற்கு நேர் முரணான உண்மைக்கருத்தை உணர்த்துவதன் மூலம் மாத்திரமே இணை கற்பித்தல் நீக்கப்பட்டு ஏகமாக்கல் நிலை நிறுத்தப்பட முடியுமாகையால், ஏக காலத்தில் சிருஷ்டிகள் அல்லாஹ் அல்லாதவை என்ற கருத்தை மறுதலிக்கவும் அதற்கு நேர் முரணான உண்மைக்கருத்தாகிய சிருஷ்டிகள் அல்லாஹ்வே தான் என்பதை உறுதிப்படுத்திக் கூறவுமேற்ற மொழியியல் நுட்பமுள்ள முரண்வாக்கியப் பிரயோகமாகக் கலிமா அருளப்பட்டது.

لَآ إِلَـٰهَ إِلَّا ٱللَّهُ

அல்லாஹ்வைத்தவிர இலாஹு இல்லை
(நீக்கப்பொருள்) (ஸாலிபா)

நேர் எதிர்ப்பொருள்

அல்லாஹ்வாகவேதான் இலாஹு இருக்கிறது. (முஜீபா)
(உறுதிப்பொருள்)

(அதாவது, இலாஹு அல்லாஹ் அல்லாதது அல்ல.)

ஒரு வாக்கியத்தில், இல்லை என்ற சொல்லால் மறுதலிக்கப்படும் ஒரு சொல் “இஸ்முல் ஜின்ஸ்”என்ற இனப் பொதுப் பெயர்ச் சொல்லாகவே இருப்பினுங்கூட-அவ்வாக்கியத்தில் நீக்கப்பொருளாக்கி விலக்கப்படும் சொல்லுடன் ஒரு போதுமே தொடர்புறாது என்ற இலக்கண விதியின்படி, 'لَآ إِلَهَ إِلَّا ٱللَّهُ' என்ற வசனத்தில் உள்ள இலாஹு என்ற சொல் ஒரு போதுமே அல்லாஹ்வைச் சுட்டாது. ஆகவே, **இவ்வசனத்திலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு “வணக்கத்துக்குரியநாயன்” என்று பொருள் கொண்டாலும் கூட, அப்பொருள் அமைப்பின் காரணமாக,** இவ்வசனத்தின் இலக்கண அமைப்பு மாறவும் மாட்டாது; “வணக்கத்துக்குரிய நாயன்” என்ற அந்த சொல் **அல்லாஹ்வைச் சுட்டுவதாக அமையவும் மாட்டாது.** ஏனென்றால் அல்லாஹ் என்ற சொல் إِلَّا என்ற சொல் மூலம் நீக்கப்பொருளாக்கி விலக்கப்பட்டுள்ளது. ஆகவே, அச்செல்லுடன் இலாஹு என்ற சொல் தொடர்புறாது.

உதாரணமாக “சக்தியைத் தவிர சடம் இல்லை” என்ற முரண்வாக்கியத்திலுள்ள“சடம்” என்ற சொல், பௌதீக உலகச் சக்தி உட்பட பௌதீக உலகப்பொருட்கள் அனைத்தையும் ஒட்டு மொத்தமாக குறிக்கும் ஓர் இனப்பொதுப்பெயர்ச் சொல்லாக இருப்பினும், இவ்வசனத்தில் அது சக்தியைச் சுட்டவில்லை. ஏனெனில் தவிர என்ற சொல் மூலம் சக்தி என்ற சொல் நீக்கப்பொருளாக்கி விலக்கப்பட்டுள்ளதால், அது மீண்டும் சடம் என்ற சொல்லுடன் தொடர்புறாது. ஆகவே, இவ்வசனம் “சடம் சக்தியாகத்தான் இருக்கிறது” என்றுதான் பொருள் தருமேயன்றி,“சக்திதான் சடமாக இருக்கிறது” என்றோ அல்லது “சக்தியைத்தவிர வேறு எதுவும் சடமல்ல” என்றோ அல்லது “சக்திமட்டுந்தான் சடம்” என்றோ ஒரு போதுமே பொருள் தராது. அப்படிப் பொருள்கொள்வது இலக்கணம் புரியாத குழப்பமேயன்றி வேறில்லை. இவ்வசனம்,“சடம் சக்தியேதான்” என்ற ஏற்புக்குரிய கருத்தை உறுதிப்படுத்துவதாகவும் “சடம் சக்தியல்ல” என்ற மறுப்புக்குரிய கருத்தை மறுதலிப்பதாகவும் அமைகின்றது. நிற்க...

கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல் இலக்கண விதிப்படி அல்லாஹ்வைச் சுட்டாதாகையில், அச்சொல் வணங்கப்படுகிற ம∴பூதுக்களாகிய, இலாஹுகளான சிருஷ்டிகளைக் குறிப்பாகவும் அக்குறிப்பின் மூலம் சர்வ பிரபஞ்சங்களிலுமுள்ள சகல சிருஷ்டிகளையும் ஒட்டுமொத்தமாகவும் கூட்டுகிறது. எப்படியெனில், வணங்கப்படுகிற சிருஷ்டிகளாகிய ம∴பூதுக்களான இலாஹுகள் எக்காலத்திலுமே வரையறை செய்யப்பட்டு எல்லைப்படுத்தப்படாதவையாதலால் அவற்றிற்குரிய வரைவிலக்கணமாக சிருஷ்டி என்ற இஸ்முல் ஜின்ஸே பிரயோகிக்கப்படும். ஆகவே கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல் சர்வ சிருஷ்டிகளையும் மொத்தமாகக் குறிப்பிடும் இஸ்முல் ஜின்ஸாகும். எனவே,“அல்லாஹ்வைத் தவிர இலாஹு இல்லை” என்ற கலிமா வசனத்தின் உண்மைக்கருத்து “அல்லாஹ்வைத் தவிர சிருஷ்டி இல்லை” என்பதேயாகும். ஆகவே,

**கலிமா உறுதிப்படுத்தும் ஏற்புக்குரிய கருத்து:**

சிருஷ்டி **அல்லாஹ்வேதான்.**(முஜீபா)

**கலிமா மறுதலிக்கும் மறுப்புக்குரிய கருத்து:**

சிருஷ்டி **அல்லாஹ் அல்ல.** (ஸாலிபா)

இனி, கலிமாவின் இலக்கண அமைப்பில் நன்கு கிரகிக்கப்பட வேண்டிய இன்னுமோர் அம்சம் தொடர்பான விளக்கத்தையும் உதாரணங்களையும் நோக்குவோம்.

கலிமா “இல்லை” எனப்பொருள்படும் ‘لَا’ என்ற எதிர்மறைச் சொல்லைக் கொண்டிருப்பதால் கலிமாவில் இடம்பெறும் ‘إِلَّا’ என்ற இணைப்புச் சொல், கலிமாவின் ஸாலிபாவான வசன அமைப்பில் நீக்கப்பொருளையும் கலிமாவின் முஜீபாவான பொருளமைப்பில் நீக்கப்பொருளுக்கு நேர் எதிர்ப்பொருளான உறுதிப்பொருளையும் தருமேயன்றி, ஒரு போதும் இவ்விரு பிரமாணங்களிலும் “மட்டும்” என்ற எல்லைப்பொருளைத் தரவே தராது. இது ஓர் இலக்கண விதிமுறையாகும்.

எனவே,“அல்லாஹ்வைத் தவிர இலாஹு இல்லை” என்றால் “அல்லாஹ் மட்டுமே இலாஹு; மற்றவை இலாஹுஅல்ல” எனப்பொருள் கொள்வது இலக்கணப்பிசகான வலிந்துரையேயாகும். கலிமாவிலுள்ள “இல்லா” என்ற சொல் “மட்டும்” என்ற எல்லைப் பொருளைத் தருவதாயின் கலிமாவில் “இல்லை” எனப் பொருள்படும் “லா” என்ற எதிர்மறைச் சொல்லுக்குப் பதிலாக “வேறில்லை” எனப்பொருள்படும் “இன்” என்ற எதிர்மைறைச் சொல்லே இடம்பெற்றிருக்க வேண்டும். ஏனெனில், இலக்கண விதிப்படி “இல்லா” என்றஇணைப்புச்சொல் “வேறில்லை” எனப்பொருள்படும் “இன்” என்ற எதிர்மறைச்சொல் இடம் வசனத்தில் நீக்கப்பொருளில் இடம்பெறும்போது மாத்திரமே அது “மட்டும்” என்ற எல்லைப் பொருளைத்தரும்.

**உதாரணம் - 1**

إِنْ أُمَّهَـٰتُهُمْ إِلَّا ٱلَّـٰٓـِٔى وَلَدْنَهُمْ

58:2 *அவர்களுடைய தாய்மார்கள், அவர்களைப் பெற்றவர்களைத் தவிர வேறில்லை.*

அதாவது, அவர்களுடைய தாய்மார்கள் அவர்களைப் பெற்றவர்கள் மட்டுமே.(மற்றவர்களல்ல)

**உதாரணம் - 2**

إِنْ هِىَ إِلَّآ أَسْمَآءٌ

53:23 *இவை பெயர்களைத்தவிர வேறில்லை.*

அதாவது, இவை பெயர்கள் மட்டுமே.(வேறு எதுவுமல்ல)

**உதாரணம் - 3**

إِنْ هُوَ إِلَّا وَحْىٌ يُوحَىٰ

53:4 *இது அறிவிக்கப்படுகிற வஹியேயன்றி வேறில்லை.*

அதாவது, இது அறிவிக்கப்படுகிற வஹியாகமட்டுமே உள்ளது. (வேறு எதுவாகவும் இல்லை)

கலிமாவின் பொருள் “அல்லாஹ் மட்டுமே இலாஹு“என்பதாக இருந்தால் إِنْ إِلَٰهَ إِلَّا ٱللَّهُ என்று அமைந்திருக்க வேண்டும். அப்படி அமைந்திருந்தால்தான் “அல்லாஹ்வைத் தவிர இலாஹுவேறில்லை” என்ற பொருளும் அதன் மூலம் அல்லாஹ் மட்டுமே இலாஹு என்ற கருத்தும் பெறப்படும். “லா” என்ற எதிர்மறைச் சொல் ஒரு போதும் “வேறில்லை” என்ற பொருளைத் தருவதேயில்லை என்பது அறபு மொழி அகராதிகளை ஆதாரமாகக் கொண்ட நிதர்சன உண்மையாகும். எனவே கலிமாவில் கருதப்பட்டது யாதெனில், அல்லாஹ் தவிர சிருஷ்டி இல்லை என்ற ஸாலிபாப் பிரமாணத்தைக் கொண்டதாய் அமைந்த “சிருஷ்டி அல்லாஹ்வே தான்” என்ற முஜீபாப் பிரமாணப் பொருளமைப்பாகும். இதன் மூலம் “சிருஷ்டி அல்லாஹ் அல்லாதது” என்ற எண்ணக்கருத்து மறுதலிக்கப்டும். அதே நேரத்தில் “சிருஷ்டி அல்லாஹ்வேதான்” என்ற உண்மைக் கருத்தும் உறுதிப்படுத்தப்படுகிறது. ஆகவே கலிமா ஒரு முரண்வாக்கியமே என்பது முற்றிலும் உண்மையேயாகும்.

கலிமாவிடயத்தில் எவ்வித இலக்கண விபரமும் அவசியமல்லவென்றாலும் இன்றுள்ள, பேப்பர் துண்டுகள் மூலம் பட்டம் பதவிகளைப் பெற்றுக்கொண்ட றியா என்ற மேலெண்ணம், வரட்டுக்கௌரவம்கொண்ட ஒரு சில மக்களும் கலிமாவின் உண்மையை உணரவேண்டும் என்பதற்காகவே இவ்வளவு தூரம் மிக மிகச் சுருக்கமாய் எழுதியுள்ளேன். கலிமா பாமர மக்களாலும் தெளிவாய் விளங்கக்கூடியதாய் இருந்தமையால்தான் அதன் உண்மை தங்கள் கொள்கைக்கு முரணாய் இருப்பதைக் கண்டார்கள். இன்றுள்ள மிகப்பெரும்பாலான மௌலவிமார்களும் அன்றுள்ள அபூஜஹ்லின் பிடிவாத உணர்வோடு வாழ்வதனால் தான் “முஜீபா”வாய் அமைந்த கலிமாவை “ஸாலிபா”வாய் மாற்றி விட்டு தஜ்ஜால்களாய் வாழ்கிறார்கள் என்பதைச் சிந்தனை செய்து தெளிவு பெறுவாயாக.

**சகோதரனே!**

சாதாரண மனிதனுடைய அறிவு ஏற்றுக்கொள்ளாமல் மறுத்த இந்தத் தௌஹீது என்னும் ஏகத்துவக் கொள்கையைப் பிரசாரம் செய்தமையால்தான் அல் அமீன் பொய்யராக்கப்பட்டார்கள். அல் அமீன் என்று பட்டம் சூட்டிய அதே வாய்கள்தான் பொய்யர், பித்தர், மடையர், வழிகெட்டவர், மார்க்கமில்லாதவர், கவிஞன் என்றெல்லாம் பட்டம் சூட்டினர். இப்போதும் பட்டம் சூட்டுகிறார்கள். இதற்கு முந்திய நல்லடியார்களான நபிமார்கள், ஒலிமார்களில் எவர்தான் இப்படியெல்லாம் பட்டம் சூட்டப்படாதவர்? அவர்களுடைய காலத்தவர்கள் அப்படித்தான் பட்டம் சூட்டினார்கள். ஆனால் அவர்களுடைய பேரப்பிள்ளைகளாகிய நாம் விஷயம் தெரியாமையால் கேள்விகளை நம்பி பட்டம் சூட்டிய அவர்களை அவ்லியாக்களென்று கூறுகின்றோம். அவ்வளவுதான்.

وَلَقَدْ ضَرَبْنَا لِلنَّاسِ فِى هَـٰذَا ٱلْقُرْءَانِ مِن كُلِّ مَثَلٍۢ ۚ وَلَئِن جِئْتَهُم بِـَٔايَةٍۢ
لَّيَقُولَنَّ ٱلَّذِينَ كَفَرُوٓا۟ إِنْ أَنتُمْ إِلَّا مُبْطِلُونَ

30-58 *மனிதர்களுக்கு வேண்டிய உதாரணங்கள் யாவும் இந்தக் குர்ஆனில் நிச்சயமாக நாம் கூறியே இருக்கிறோம். எந்த அத்தாட்சியை நீர் அவர்களிடம் கொண்டு வந்த போதிலும் நீரும் உம்மைச் சேர்ந்தோரும் பொய்யர்களேயன்றி வேறில்லை என்று இந்நிராகரிப்போர் நிச்சயமாக கூறுவார்கள்.*

இவ்விஷயம் அப்படியல்ல, நபியைப் பொய்யர் என்று கூறியதும் எதிர்த்தும் விக்கிரக வணக்கத்தைத் தடைப்படுத்தியதனால்தான் என்று கூறி பாமர மக்களை ஒரு சிலர் ஏமாற்றுவதும் வழிகெடுப்பதும் விளக்கமின்மையான வஹ்முவேயாகும். இந்த ஏமாற்றுப் பேர் வழிகளின் எல்லா விபரங்களையுமே வபரிப்பதனால் அதற்காகவே பல நூல்களை எழுத வேண்டிவரும். இந்த அறிவீனருக்கு விடையளிக்க “லாஇலாஹ இல்லல்லாஹ்” என்ற கலிமாவை நாவினால் கூறுகிறவரையில் வாள்கொண்டு யுத்தம் செய்ய இறைவன் என்னைப் பணித்தான் என்று றசூல்(ஸல்)அவர்களால் கூறப்பட்ட வசனமே போதுமாகும். மூடமக்களான பின்பற்றல் வாதிகளின் தந்திரோபாயமான பேச்சுக்களில் சிக்குண்டு இருளில் மூழ்காமல் உன் இமாமான குர்ஆனை பல கண்ணோட்டங்களோடு ஆராய்ந்து தெளிவு பெறு.

**ஹதீஸ்** ***நிறைந்த புத்தியினால் மனிதனுடைய ஈமானும் தீனும் பரிபூரண நிலைமைக்கு வருவதாலும் புத்திமானைப்புத்தி நேர்வழிக்குச் சேர்ப்பதாலும் புத்தியைவிடச் சிறந்த ஓர் பாக்கியத்தை மனிதன் சம்பாதிப்பதில்லை என்று றசூலுல்லாஹ் கூறியுள்ளார்கள்.***

## (2)

இப்போது, வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்பதுதான் கலிமாவின் உண்மைக்கருத்து என்று பின்பற்றல்வாதிகள் கூறுவதை நாம் நோக்குவோம். “வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர” என்ற வசனம் வெளிப்படையான சத்தப்பிரமாணமான **“இபாரத்” தினால் வணங்கப்படுகிற சிருஷ்டிகளான இலாஹுகள் அல்லாஹ்வேயல்ல என்பதைத் தெளிவாகவே விளக்குகிறது.** அதாவது அல்லாஹ் வேறு என்பதை வெளிப்படையாகவே காட்டுகிறது. கருத்துப்பிரமாணமான **“தலாலத்”தினால் இலாஹுகளான சிருஷ்டிகள் அல்லாஹ் அல்லாதவை ஆகையால் இலாஹுகளல்லாத மற்றும் சிருஷ்டிகளும் அல்லாஹ்வேயல்ல என்று உணர்த்துகிறது. ஆகவே (ஒருமைப்படுத்தல்) ஏகமாக்கல் என்பது எப்படி ஏற்படும்? எப்படி ஒன்றாக்கி ஒருமைப்படுத்துவது?** அப்படியானால் அவர்கள் கூறும் தௌஹீது என்பது என்ன? தெய்வங்கள் பல அல்ல ஒன்றே தான் என்று கூறுவது தான் தௌஹீது என்றால் இது குர்ஆன், ஹதீஸுகளுக்கும் அறிவுக்கும் மாறான வீண்விவாதம் என்பதை நாம் தௌஹீதுடைய விபரத்தில் விளக்கி இருக்கிறோம். இது போலிப் பேர்வழிகளால் காட்டப்படுகிற போலி நியாயமாகும். இறைவன் ஒருவனே என்பதையும், சகல ககனபுவனங்களையும் படைத்து ஆட்சிபண்ணும் நாயகத்தன்மை உடையவன் அவனே என்பதையும் முஸ்ரீக்குகள் ஒத்துக்கொண்டே இருந்திருக்கிறார்கள். இதைக் குர்ஆனைக் கொண்டே நான் முன்பு விளக்கியிருக்கிறேன்.

(ஷிர்க்குடைய பாடத்தை நோட்டமிடுக.)

இப்போது சிந்தனை செய்துபார், வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை என்று கூறும்போது அல்லாஹ்வே வணக்கத்துக்குரியவன் என்பதும் மற்றும் சிருஷ்டிகள் வணக்கத்துக்குரியவையேயல்ல என்பதும் வெளிப்படையாகவே தென்படுகிறது. ஆகவே சிருஷ்டிகள் அல்லாஹ் அல்லாதவை என்றால் அல்லாஹ்வுக்கும் சிருஷ்டிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லாதிருக்க வேண்டும். அதாவது அச்சிருஷ்டிகள் வேறொருவரால் படைக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது வேறொரு அல்லாஹ் அல்லாத மூலப்பொருட்களால் சிருஷ்டிகளை அல்லாஹ் படைத்திருக்க வேண்டும். இந்த மூலப்பொருட்கள் அல்லாஹ் அல்லாதவைதான் என்றால் அவை மூலஉஜூதுகளாய் அல்லது வேறோர் மூலஉஜூதினால் படையுண்டிருக்க வேண்டும். அப்படியானால் சிருஷ்டியைப்படைத்த இறைவனும் அவனுடன் வேறு பல உஜூதுகளும் அல்லது அவற்றைச் சிருஷ்டித்த வேறோர் அல்லாஹ்வும் இருக்க வேண்டும் (இதுதான் ஷிர்க் என்பது) அப்படியல்லாமல் அல்லாஹ்தான் தன்னில் இருந்து மூலப்பொருட்களை அல்லது சிருஷ்டிகளைப் படைத்தான் என்றால் மூலப்பொருட்கள் அல்லது சிருஷ்டிகள் அவனில் நின்றும் உள்ளவையாகத்தான் இருக்க வேண்டும். ஆகவே இறைவன் வேறு சிருஷ்டி வேறு என்பது பிழையாகும். இறைவனில் உள்ளவைதான் சிருஷ்டிகள் என்பது எமக்கு விளங்காவிட்டாலும் உண்மை அப்படித்தானே இருக்கும். (இதுதான் தௌஹீது)

இப்போது நம் உலமாக்களில் பலர் கூறுகிறபடி “வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ் தவிர” என்பது தான் கலிமாவின் பொருள் என்றே வைத்துக்கொண்டு ஆராய்ந்து பார்ப்போம்.

உலாமாக்களில் ஒரு சிலர் வணக்கத்துக்குரிய நாயன் என்று இலாஹு என்னும் சொல்லுக்குப் பொருள் செய்கிறார்களே, அந்த வணக்கத்துக்குரிய நாயன் யார்? அவர்களுடைய அபிப்பிராயப்படி வணக்கத்துக்குரிய நாயன் என்பது அல்லாஹ்வைத்தானே. அப்படியானால் இலாஹு என்ற சொல்லுக்கு அல்லாஹ் என்று பொருள் கொள்வதுதானே பொருத்தமானது. இப்போது சிந்தனை செய்து பார்.

அவர்களுடைய கூற்றின்படி பொருள் கொண்டாலும்,

| | | |
|---|---|---|
| லா | = | இல்லை |
| இலாஹு | = | அல்லாஹ் |
| இல்லா | = | தவிர |
| அல்லாஹ் | = | அல்லாஹ் |

இல்லை + அல்லாஹ் + தவிர + அல்லாஹ்

இதன்படி அல்லாஹ் தவிர அல்லாஹ் இல்லை என்பதே கலிமாவின் பொருளாகும். அறபுமக்கள் அல்லாஹ் தவிர வேறு ஓர் அல்லாஹ் உண்டு என்று எப்போதும் சொன்னதே கிடையாது. இதைக் குர்ஆன் உறுதிப்படுத்துகிறது. அப்படியானால் அல்லாஹ் தவிர அல்லாஹ் இல்லையென்று கலிமா ஏன் பொருள் தர வேண்டும்? சிருஷ்டிகள் அல்லாஹ் அல்லாதவையென்றுகொள்ளும் போது சிருஷ்டிகளை உருவாக்கிய,அல்லது சிருஷ்டிகளின் மூலப்பொருட்களை உருவாக்கிய இன்னோர் அல்லாஹ் உண்டு என்று ஆகிவிடும். அல்லாஹ்வைத் தவிர அப்படி வேறு ஓர் அல்லாஹ் இல்லையெனும்போது சிருஷ்டி அல்லாஹ் அல்லாததேயல்ல என்றும் சர்வ சிருஷ்டிகளும் அல்லாஹ்வின் ஷிபாத்துக்கள் என்றும் தௌஹீதை உறுதிப்படுத்தும். ஆகவே இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் இலாஹு என்ற சொல்லுக்கு அல்லாஹ் என்ற பொருள்கொண்டாலும், வணங்கப்படுகிற சிருஷ்டியென்று பொருள்கொண்டாலும் கலிமத்துதையிபா சுத்தமான தௌஹீதையே நிலைப்படுத்தும் என்பதுதான். ஆனால் இலாஹு என்ற சொல்லுக்கு அல்லாஹ் என்று பொருள்கொண்டால் கல்வியறிவில் தேர்ச்சியுடைய மக்களேயன்றி அவாம்களான சாதாரண மக்கள் தௌஹீதைச் சரியாய் உணரவும் பிரயோசனம் பெறவும் முடியாமல் இருக்கும். கலிமாவோ (கல்வியுள்ளவர்கள் கல்வி இல்லாதவர்கள்) யாவரும் தௌஹீதை விளங்கிப் பிரயோசனம் பெறக்கூடியதாகவே இறைவனால் கூறப்பட்டதாகும். அல்லாஹ்வுடன் வேறு அல்லாஹ் உண்டென்று யாரும் வாதிடவில்லை. எனவே, அல்லாஹ் தவிர அல்லாஹ் இல்லையென்று பொருள் கொள்வது பெரும் பிழையாகும். ஆரம்பத்திலேயே கலிமா உம்மி மக்களிடையே தான் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே கலிமாவில் இலாஹு என்ற சொல்லை வணங்கப்படுகிற சிருஷ்டிகளான பௌதீக சூக்கும சிருஷ்டிகளைக் குறிப்பிடுவதற்காகவே இறைவனால் பாவிக்கப்பட்டிருக்கிறது என்பதில் எவ்வித சந்தேகமுமே கிடையாது. இதைவிட எவ்வித தர்க்கரீதியான ஆதாரங்களும் ஆராய்வும் இல்லாமல் பேசுகிற எழுதுகிற மக்கள் இன்சானுடைய தோற்றத்தில் இருந்தாலும் அவர்கள் ஷைத்தானுடைய கையாட்களாகவே இருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சாரக்கண்ணன் ஒரே பொருளை இரண்டாகக் காண்பதுபோல அறிவு குறைந்த மக்கள் உள்ள ஒரே பொருளைப் பலவாய்க் கண்டார்கள். காண்கிறார்கள். வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று நம்புகிற மனிதன் அவனையறியாமலே அவனுடைய உள்ளத்தில் பலதெய்வங்களை ஆக்கிக்கொள்கிறான். சிருஷ்டிகள் அல்லாஹ் அல்லாதவை என்னும்போது, அல்லாஹ் அல்லாதவையான சிருஷ்டிகளையும் அல்லாஹ்வைப்போன்ற தனித்தனி மூலப்பொருட்களாய்க் காண்கிறான். இதை அவன் உணர்ந்து கொள்வதே இல்லை. ஷிர்க் என்பது இதுதான். 27-213ஆம் ஆயத்துக்களைப்போன்ற வசனங்களை ஆராய்வுக்கு எடுத்துக்கொள்ளவும். ஒன்றைப் பலவாய்க் காண்பதே ஷிர்க்கு என்றால், பலதை ஒன்றாகக் காண்பதே தௌஹீதாக இருக்க

வேண்டும். இந்த ஷிர்க்கைத்தான் இணை ஏற்படுத்துவது என்று கூறப்படுவது. இந்த தவறான கொள்கையை நீக்குவதற்காகத்தான் கலிமா தரப்பட்டது. ஆனால் நாம் கலிமாவை பலாத்காரமாகப்புரட்டி வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று எடுத்துக்கொண்டால்,**அது முஸ்ரீக்குகளுடைய கொள்கையை உறுதிப்படுத்துமே அல்லாமல் ஒரு போதும் தௌஹீதை உறுதிப்படுத்தவே முடியாது.** அக்கொள்கையில் வீண்பிடிவாதமாக ஊறிக்கொண்ட மனிதன் நேர்வழியை அடையவும் முடியாது.

ஆராய்வில்லாத சிலபட்டதாரிகள், ஸ்பிரித், சாந்து, பரிசுத்த ஆவி என்னும் திருத்துவக் கொள்கையில் மக்கள் ஊறியிருப்பதால், வணங்குவதால், வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று எங்கள் நாதாக்களான இமாம்கள் கூறியது சரிதான் என்று கூறி உண்மையை மழுப்பி விடுகிறார்கள். இந்த விதமான மருண்ட வாதங்கள் எல்லாம் அறியாமையும் வீண்பிடிவாதமுமேயாகும். இக்காலத்தில் உள்ள சாதாரண பட்டதாரிகளை நாம் குறை கூறுவதில் அர்த்தமேயில்லை. ஏனென்றால் **இவ்விஷயத்தில் மிகமிகப் பெரிய அறிஞர்கள் கூட ஆராய்வில்லாமல் தவறு செய்துள்ளார்கள் என்பது முழு உண்மையாகும்.**

வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று பொருள் கூறுவது, வணக்கத்தில் ஒருமைப்படுத்தல் (இபாதத்தில் தௌஹீது செய்தல்) செயல்களுக்குப் போதுமானது போல வெளிநோக்கில் தென்பட்டாலும் ஷிர்க்கில் இருந்து விடுபடவே முடியாது. ஷிர்க்கில் இருந்து விடுபடாமல் செய்யப்படுகிற எந்த ஓர் வணக்கமும் பிரயோசனம் தரப்போவதும் இல்லை. இவ்விஷயத்தை, அதாவது வணக்கம் எதற்காக? என்ற உண்மையை இன்ஸா அல்லாஹ் இஸ்லாத்தின் நோக்கம் என்ன? என்ற தலைப்பில் சரியான ஆதாரங்களோடு விளக்குவேன். பொறுமை அடைவாயாக. ஷிர்க்கில் இருந்து விடுபடாத ஓர்மனிதனுக்குக் கல்புடைய வாசல்கள்(வானத்தின் வாசல்கள்) திறபடவே முடியாது. கல்புடைய வாசல்கள் திறபடவில்லையானால் ஈமானில் நிரப்பமடைவதோ பூரணத் தன்மையைப் பெறுவதோ முடியாத காரியமேயாகும்.

மனிதன் தன்னுடைய அமல்களால் வெற்றியடையத் தன்பூரணத்தன்மையைப் பெற உள்ளது ஒரேயொருவழிதான். அதுதான் கலிமாவை விளங்கியறிந்து தௌஹீதில் நிலைப்படுவது. ஆனால் தௌஹீதை ஷிர்க்காக நாம் புரட்டிக்கொண்டால் எமது முடிவு என்னாகும்? இதை நாம் இப்போது உணர்ந்துகொள்ள முடியாவிட்டாலும் கூலிபெறும் நாளிலாவது நிச்சயமாக உணர்ந்தே ஆவோம். எங்களுடைய நாதாக்களான பலமுன்னோர்கள் பகலெல்லாம் நோன்பு இரவெல்லாம் தொழுகையுமாக வணங்கியும் கல்புடையவாசல்கள் திறக்காதவர்களாய், உண்மையைக் கண்டறிந்து வெற்றிபெற முடியாதவர்களாய் இருந்த காரணம், குர்ஆன், ஹதீஸ்களுக்கும் அறிவுக்கும் மாறான விளக்கங்களை ஊட்டித் தௌஹீதை ஷிர்க்காகவும் ஷிர்க்கைத் தௌஹீதாகவும் மாற்றிய காரணம் என்ன? என்பதைச் சிந்தனை செய்து தெளிவு பெறு. ஈமான் இஸ்லாம் எப்படிப் புரண்டுபோய்க் கிடக்கிறது என்பதையும், மக்களில் பெரும்பாலார் எங்கே எப்படிப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் கண்டறி.

**ஹதீஸ்** ***தனது யுக்தியினால்(வஹ்மினால்) குர்ஆனுக்குக் கருத்துச்செய்கிற ஒவ்வொருவனும் நரகில் பிரவேசிக்கட்டும் என்று றசூல்(ஸல்)கூறுகிறார்கள். மேலும் அறிவோடு என்பேரில் பொய்யைக் கட்டுகிற ஒவ்வொருவனும் நரகத்தில் குடியாகப்பிரவேசிப்பான் என்றும் கூறுகிறார்கள். றசூல்(ஸல்) அவர்கள் கொண்டுவந்த உண்மைக்கு மாறாய் குர்ஆன் ஹதீஸ்களைப் புரட்டுவதும் நபிபேரில் பொய் கூறுவதுதானே.***

நாம் முன்பு விளக்கியுள்ள மர்த்தபாவுடைய விஷயங்களைத் தெளிந்த மனத்தோடு சிந்தனை செய்து பார். எமக்குள்ள ஒவ்வோர் நிலைமையும் படிப்படியாய்க் கடந்து சாந்தியை அடைவதென்றால் தௌஹீதை விளங்கியறிந்து விசுவாசம்கொண்டே ஆகவேண்டும். **வெறும் குருட்டு அனுஷ்டானங்களும் மூடத்தனமான பின்பற்றலும் எம்முடைய பூரணத்தன்மையைத் தரவே முடியாது என்பது உண்மை.** நோக்கத்தை உறுதிப்படுத்துவதற்காகத்தான் அமல்கள் தரப்பட்டனவேயன்றி நோக்கமே இல்லாமல் அமல் எப்படிப் பிரயோசனம்தரும்? இதை நாம் விளங்கியறிவோம். கலிமாவை நாவினால் கூறுவது சட்டப்படி ஈமானே என்பதும், உலக விஷயங்களில் அதுவே போதும் என்பதும் உண்மை. ஆனால் ஆகிறாவில் வெற்றியளிப்பது அந்த ஈமானல்ல. கலிமாவை நாவினால் கூறிக்கொண்ட மனிதனை, அந்த ஈமான் பெரும்பாலும் தவறு செய்யவிடாது என்பது உண்மை. தௌஹீதை விளங்கிக் கொண்ட மனிதன் தன்னுடைய மனோ இச்சைகளை அடக்கியாள எவ்வித பலாத்கார முயற்சிகளிலும் இறங்க வேண்டிய அவசியமே இல்லை. ஆசை நாளடைவில் தன்னாலேயே ஒடுங்கி விடும். அம்மனிதன் ஆரம்ப நிலையில் அச்சம், ஆதரவுடையவராய் இருப்பினும் இறுதியில் அச்சம் தீர்ந்த நல்லடியாராக மாற்றமடைவார் என்பது நிச்சயம்.

கலிமாவைத் தெளிவாய் விளங்கி உண்மையான ஈமானைப் பெற்றுக்கொண்ட மனிதர் அல்லாஹ்விலேயே முற்றும் சரணடைந்து விடுகிறார். ஒருபோது அவரை இறைதத்துவங்கள் ஆட்கொள்ளுகின்றன. மூடனாய் வாழ்ந்த அம்மனிதர் மாபெரும் அறிஞராக, பட்டதாரிகளுக்கே பாடம் கற்பிக்கக்கூடிய மாபெரிய மேதையாகவே மாற்றமடைகிறார். இறைவனுடைய இரகசிய, பரகசியங்கள் அவருக்கு அறிவிக்கப்படுகின்றன. பூமி எனக்கு காண்பிக்கப்பட்டது அதன் மஹ்ரிபு, மஸ்ரிக்குகளை நான் பார்த்தேன் என்று றசூல்லாஹ் கூறுகிறார்கள். நாம் இப்றாஹீம்(அலை) அவர்களுக்கு வானங்களுடையவும் பூமியுடையவுமான இராஜரீகத்தைக் காட்டினோம். அவர் ஈமான்கொண்ட பேர்களில் இருப்பதற்காக என்று இறைவனே குர்ஆனில் கூறுகிறான். ஈமானுடையவர்களில் இருப்பதற்காகவே இந்த இராஜரீகம் காண்பிக்கப்பட்டதென்றால், இந்த இராஜரீகத்தைக் காணாதோர் ஈமான் கொண்டவர்களல்ல என்றும் பொருள்படுகிறது. ஆனால் அவர்கள் நபிமாரல்லவா? நாம் சாதாரண மனிதர்தானே என்று நீ

கூறக்கூடும். அதுதவறு, நபிமாரும் எம்மைப் போன்ற மனிதர்கள் தான். ஆனால் விஷேட ஸ்த்தானத்தை அடைந்தவர்கள்.

قُلْ إِنَّمَآ أَنَا۠ بَشَرٌ مِّثْلُكُمْ

18-110*உங்களைப்போல் நானும் ஓர்மனிதனே என்று சொல்லும்.*

முஹ்யித்தின் அப்துல்காதிறு ஜெய்லானி அவர்கள் கூறுகிறார்கள், நபிமாருக்கு நுபுவத்துடைய அசல் பெயரை(இஸ்மைக்)கொடுக்கப்பட்டிருக்கிறது. அல்லாஹ் அவனுடைய வசனங்களின் கருத்துக்களையும் அவனுடைய றசூலின் கருத்துக்களையும் எங்களுக்கு எங்களுடைய இருதயத்தில் அறிவித்து தந்திருப்பதோடு எங்களை நபி என்று பெயர் கூறுவதை தடுத்திருக்கிறான் என்று கூறுகிறார்கள். இதிலிருந்து நாம் அறிய வேண்டியது என்னவென்றால் ஈமானில் நிரப்பமடைவதும் இரகசிய பரகசியங்களை அறிவதும் நபிமார்களுக்கு மட்டும் சொந்தமான ஒன்றல்ல. நாமும் எம்முடைய தகுதிக்கேற்றபடி பெறலாம் என்பதே. (நுட்பமாய் உணர்க) உன் அனுபவத்தில் கண்டுணர வேண்டிய பல உண்மைகள் இவ்விடத்தில் மறைந்துள்ளன.

## (3)

**சகோதரனே!**

மனித இனத்தில் மிகப்பெரும்பாலாருடைய உள்ளத்தில் மிகக்கொடிய ஓர் உள நோய் இருந்து கொண்டிருக்கிறது. இது மறைந்ததாய் இருப்பதால் வெளிக்கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் அறிவுக்கண்ணுக்குத் தென்படவேதான் செய்கிறது. இந்த கொடிய உளநோயின் பெயர்தான் "ஷிர்க்கு" இணையுண்டாக்கல் என்பது. இந்த நோய் தீராத வரையில் சாந்தி என்ற பூரண சுகம் கிட்டவே கிட்டாது. இந்த நோயை முற்றாக ஒழித்துக் கட்டக்கூடிய ஒரேயொரு மருந்து தௌஹீதுக் கலிமாதான் என்பதை அறிந்த உண்மையான பெரிய வைத்தியனான (ஹக்கீம்) இறைவன் சுமார்124,000 (நபிமார்களை) வைத்தியர்களை அனுப்பி அதிலும் விஷேட திறமையுடைய ஒரு சிலரையும் அனுப்பி இம்மருந்தை மக்களுக்கு கொடுக்கச் செய்து மக்களின் நோயைப் பூரணகுணமாக்கி வைத்தான்.இதில் இறுதியாய் வந்த "ஸ்பெஸலிஸ்ட்"டாக்டர்தான் எமது றசூல்(ஸல்) அவர்கள். இவர்களுடைய காலத்தில் தான் இந்த நோய் மிகக் கொடூரமாய் மக்களைப் பீடித்திருந்தது. இந்த றசூல்(ஸல்) அவர்களும் இறை ஏவலின்படி தௌஹீதுக் கலிமாவையே இந்த நோய்க்கு மருந்தாக ஊட்டினார்கள். மருந்து பூரணமாய் வேலை செய்வதற்காக, கட்டாயக் கடமைகளான தொழுகை, நோன்பு போன்றவற்றை மருந்துக்குரிய பத்தியமாக அமைத்துக் கொடுத்தார்கள். இந்த மருந்தை முறைப்படி அருந்திப் பத்தியம் காத்த மக்களில் பல்லாயிரக்கணக்கானோர் நோய் குணமாகி வெற்றியடைந்தார்கள். இவர்கள்தான் நல்லடியார்கள்.

يَـٰٓأَيُّهَا ٱلنَّاسُ قَدْ جَآءَتْكُم مَّوْعِظَةٌ مِّن رَّبِّكُمْ وَشِفَآءٌ لِّمَا فِى ٱلصُّدُورِ

وَهُدًى وَرَحْمَةٌ لِّلْمُؤْمِنِينَ

10-57 *மனிதர்களே!உங்களுக்கு இறைவனிடமிருந்து நிச்சயமாக ஓர் நல்லுபதேசம் வந்திருக்கிறது. உங்கள் இருதயங்களிலுள்ள நோய்களுக்கு அது ஓர் சஞ்சீவி (மருந்து) ஆகும். விசுவாசம் கொண்டவர்களுக்கு நேர்வழி காட்டியாகவும் ஓர் அருளாகவும் இருக்கிறது. (இந்த ஆயத்தைத் தெளிவாய்ச் சிந்தனை செய்யவும்)*

ஆனால் இக்காலத்தில் அந்த உளநோயைப்பற்றியும் அதற்குரிய சஞ்சீவியான மருந்தைப்பற்றியும் விபரம் தெரிந்துகொள்ளாத, அனுபவமில்லாத போலி வைத்தியர்கள் மருந்தைக் கலப்படம் செய்து நோயாளர்களுக்கு ஊட்டிவிட்டிருக்கிறார்கள். கலப்படம் செய்து மருந்தைக் கொடுத்தால் அம் மருந்து நோயை மென்மேலும் அதிகப்படுத்தும் என்பதை இவர்கள் அறிந்து கொள்ளவே இல்லை மருந்தைக் கலப்படம் செய்யாவிட்டால் ஆளையே கொன்றுவிடும் என்று அஞ்சித்தான் கலப்படம் செய்தார்கள். கலப்படம் செய்த மருந்து என்னென்ன பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பது இவர்களுக்கும் தெரியாது. மருந்தை அருந்தியவர்களுக்கும் தெரியாது. மேலும், மருந்து கலப்படம் செய்யப்பட்டிருப்பதும் மருந்தை அருந்திய மக்களுக்கும் தெரியாது. மருந்தைக் குடித்த மக்கள் நியாயமான அளவு பத்தியம் காக்கவே செய்கிறார்கள். ஆனால் மருந்தையே அருந்தாமல் பத்தியத்தை மட்டும் கைக்கொள்பவர்களும் உண்டு. இந்தப் பத்தியம் காப்பதை முறையாய்க் கையாளவைப்பதற்காக எத்தனையோ எத்திவைக்கும் கூட்டங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் நோய் முன்னிலும் பல மடங்கு அதிகப்பட்டுள்ளது என்பது முற்றிலும் உண்மை. நோய் அதிகப்பட்டிருப்பதுகூட மக்களுக்குத் தெரியாது. அதுமட்டுமல்ல, தங்களிடம் இப்படியோர் உளநோயுண்டு என்பதுகூடத் தெரியாத மக்கள் நோயின் உயர்வு தாழ்வை எப்படி அறிவார்கள். அனுபவமுள்ள ஒருவர் இவர்கள் மீது அனுதாபப்பட்டு நீங்கள் அருந்திய மருந்து தவறானது வெறும் பத்தியம் காப்பதில் அர்த்தமேயில்லை என்று கூறினால் அந்த அனுபவசாலியைக் கொன்றொழிக்கவே முற்படுகிறார்கள் ஏன்? நோய் அவ்வளவு கொடூரமாய் வலுப்பெற்றிருப்பதனால் தான். உண்மையான மருந்தை அருந்தி முறைப்படி பத்தியம் காக்காவிடில் நோய் எப்படி குணமாகும்?

அறிவினால் உண்மைதான் என்று ஏற்றுக்கொண்டாலும் கூட ஈமானுடைய விஷயம் மனித உள்ளத்தில் ஒரே நாளில் இடம் பிடித்துவிடுவதே இல்லை. ஒரு சிலருக்கு சில நாட்களும் மற்றும் பலருக்குப் பல நாட்களும் அல்லது பல வருடங்கள் கூடப்பிடிக்கலாம். இது இயற்கையான ஓர்நியதி. ஆகவே ஆரம்பத்திலேயே உண்மையை ஓரளவேனும் உணர்ந்துகொண்டு அவ்வுண்மையோடு வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டியவனாய் இருக்கிறான் மனிதன். இது ஒருசிலரால் தான் முடியும் என்று கூறமுடியாது. ஆனால் சாதிப்பது கடினம் தான்.

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ

51-56 *இந்த ஆயத்துக்கு இன்ஸையும் ஜின்னையும் என்னை வணங்குவதற்காகவன்றி நான் படைக்கவில்லையென்று ஒரு சிலர் பாமரமக்களுக்குப் பொருள் கூறுகிறார்கள். விஷயம் அப்படியல்ல. இறைவழி நடக்க முற்படும் உனக்கு உண்மை தெரிந்தே ஆகவேண்டும். "என்னை அறிய வேண்டும் என்பதற்காக அல்லாமல் (என்செயல்கள் வெளியாவதற்கு அல்லாமல்) இன்ஸையும் ஜின்னையும் நான் சிருஷ்டிக்கவில்லை" என்பதே ஆயத்தின் உண்மைப்பொருளாகும். இது விஷயத்தில் அநேக ஆதாரங்களைக் காட்டி அறிஞர்கள் தெளிவான விபரம் தந்துள்ளார்கள். இக்காலத்தில் உள்ள ஒரு சில தப்ஸீர்களில் இவ்வுண்மையை மறைத்தே வைத்திருக்கின்றனர். (எமது "ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன்" என்ற நூலில் இவ்வாயத்தின் உண்மைப்பொருள் ஆதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளது)*

"நான் மறைபொருளான புதையலாக இருந்தேன். அப்போது நான் அறியப்படவேண்டும் என்று விரும்பிச் சிருஷ்டிகளைச் சிருஷ்டித்தேன் என்று இறைவன் கூறினான்" என்று ஹதீஸ் ஷரீபில் கூறப்பட்டிருக்கிற அதே விபரத்தைத்தான் இந்த ஆயத்தின் மூலம் இறைவன் வெளிப்படுத்தியிருக்கிறான். இவ்வுண்மையை ஏன்மூடி மறைக்க வேண்டும்? இவ்விதமாக, ஒவ்வோர் மனிதரும் தங்களுடைய அறிவைப்பெரிதாய்க் கணித்துக்கொண்டு இறைவசனங்களையே திரிபுபடுத்தி உண்மையை மறைத்துவிட்டிருப்பதால்தான் மனிதர்களில் மிகப்பெரும்பாலார் மறதியாளர்களாய் மாறியிருக்கிறார்கள். இதுதான் கலப்படத்தின் விளைவு.

## (4)

இயற்கை எமக்களித்துள்ள பலவகைப் பொருட்களில் பிரகாசமுள்ளவைகளும் பிரகாசமற்றவைகளும் இருப்பதை நாம் பார்க்கிறோம். பிரகாசமுள்ள இரத்தினக்கற்களையும் பிரகாசமற்ற கூழாங்கற்களையும் நாம் பார்க்கத்தானே செய்கிறோம். ஆனால் பிரகாசமுள்ள இரத்தினக் கல்லுக்கேயன்றிக் கூழாங்கல்லுக்கு நாம் மதிப்பளிப்பதில்லை ஏன்? இரத்தினக்கற்கள் பிரகாசமும் வேறு சில சிறப்பியல் சிறப்பியல்புகளையும் கொண்டிருப்பதனால்தான். ஆனால் இரத்தினக்கல்லும் கூழாங்கல்லும் இயற்கை எமக்களித்துள்ள கற்களே என்பதில் எமக்குச் சந்தேகமே இல்லை. இதே இயற்கை எமக்களித்த சொற்கள், வசனங்களை நாம் ஆராய்ந்தால் பிரகாசமற்ற கூழாங்கல்லையொத்த, மதிப்பில்லாத சொற்கள் வசனங்களையும் பிரகாசமுள்ள பலவிதமான சிறப்பியல்புகளையுடைய, விலைமதிப்பும் பெறுமதியுமுள்ள இரத்தினக்கற்களைப் போன்ற சொற்கள் வசனங்களையும் நாம் காணலாம். சொல், அல்லது வசனம் என்பதை ஆராய்ந்தால் ஒசை, அல்லது ஒலி என்பதிலிருந்தே அவை பிறக்கின்றன என்பது தெரிகிறது. அதாவது ஓசை அல்லது ஒலியின் ஓர்கட்டுப்பாட்டிற்குள் அமைந்த வடிவமே சொல், அல்லது வசனம் என்பதாகும். இந்த ஒலி அல்லது ஓசையென்பது சர்வசக்தனான இறைவனின் (ஸிபத்து) பண்புகளில் நின்றுமுள்ள ஓர் பண்பு என்பதும் எமக்குத் தெரியும். இந்தப்பரிசுத்தமான, நிரப்பமான பண்பு என்னும் ஒலியில் இருந்து முறையான கட்டுப்பாட்டினால் முறையாய் அமைந்த ஓர் சொல், அல்லது ஓர் வசனம் உயிர் என்னும் பிரகாசமுடையதாயும் மணம் என்னும் சிறப்பியல்புடையதாயும் இருக்கும் என்பதில் சந்தேகமே கிடையாது. இந்த ஒலியின் கட்டுப்பாட்டில் அமைந்த இராகங்களில் தேர்ச்சியுடைய சங்கீதக்கலை பயின்ற மக்கள் இவ்விஷயத்தை நன்கு அறிவார்கள்.

சொல்லை அல்லது வசனத்தைத் தமிழ் மொழியில் பதம் என்றும் கூறப்படும். இந்தப்பதம் என்ற சொல்லுக்கு ஓர் அர்த்தம் அல்லது கருத்து இருக்கவே செய்யும். ஆகவே பதம் என்ற சொல்லையும் அதன் அர்த்தம் என்ற சொல்லையும் ஒன்று சேர்த்து, பத +அர்த்தம் = பதார்த்தம் என்று கூறுகிறோம். ஆனால் பதார்த்தம் என்றால் ஓர் வஸ்த்து அல்லது ஓர் பொருள் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் பதம் என்ற சொல்லும் அதன் அர்த்தமும் சேர்ந்து உணர்த்தும் பொருள்தான் பதார்த்தம்(வஸ்த்து) என்பது நம்மில் அநேகருக்குத் தெரியவே தெரியாது. அதாவது உலகிலுள்ள எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் சரி அந்தப்பொருள் சொல்லுடையவும் அர்த்தத்துடையவும் தோற்றமாக(உருவமாக)வே அமைந்திருக்கிறது என்பதுதான் உண்மை. ஆகவே சொல்லும் அதன் அர்த்தமும் சரியாய் முறையாய் அமையாத ஓர் பொருள் எம்மால் அறியப்பட, உணரப்பட முடியாததாகவே தான் இருக்கும். இதே போல சொல்லும் அதன் அர்த்தமும் சரியாய் முறையாய் அமைந்திருக்கும் பொருள் எதுவானாலும் அதை எம்மால் அறிய, உணரமுடியும் என்பது நிச்சயம். (நுட்பமாய் உணர்க)

அப்படிச் சொல்லும் அதன் அர்த்தமும் சரியாய் முறையாய் அமைந்த (அமைக்கப்பட்ட) ஓர் சொல் அல்லது வசனம் உயிருடையதாயும் மணம் முதலாம் சிறப்பியல்புடையதாகவும் குறிப்பிடப்பட்ட பொருளை (வஸ்துவை)எமக்குத் தெளிவாய் அறிய, உணர்த்தக் கூடியதாகவுந்தான் இருக்கும். இப்படி

இறைவனால், இறைவனுடைய ஒலி என்னும் பரிசுத்த பண்பில் நின்றும் சரியாய் முறையாய்க் கட்டுப்படுத்தப்பட்டு(நெறிப்படுத்தப்பட்டு) அமைக்கப்பட்ட சொல்லைக் கொண்டுள்ள ஓர் வசனம்தான்,**பரிசுத்த வாக்கியம் என்று கூறப்படுகிற அல்கலிமத்துத் தையிபா என்பதாகும்.** இந்தக் கலிமா என்ன பொருளை உணர்த்துகிறதோ அதே பொருளை உணர்த்தக்கூடிய பல வசனங்கள் அறபு பாஷையில் இருக்கவே செய்கின்றன. (விரிவஞ்சி இங்கே எழுதப்படவில்லை) ஆனால் அப்படியான எந்த ஒரு வசனத்தையும் இறைவன் கலிமாவாகப் பாவிக்காமல் "லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற வசனத்தையே ஏன் தெரிவு செய்தான் என்பதை ஆராய்ந்தால் பல உண்மைகள் தென்படுகின்றன. அவற்றில் ஒன்று என்னவென்றால் அதன் சொல்லும் அர்த்தமும் அதனால் குறிப்பிடப்பட்ட பொருளை (வஸ்துவை) அறிவிக்க உணர்த்தக்கூடியதாயும் உயிரும் மணமும் போன்ற நற்பண்புகளை வெளியாக்கக் கூடியதாயும் ஒலியிலிருந்து முறைப்படி சரியாய் அமைக்கப்பட்டதாயும் இருப்பதனால் தான். ஆகவே இந்தக்கலிமாவின் பொருளை எமது அறிவுக்கு ஏற்றபடி மாற்றி வலிந்துரை கொள்ளும்போது அது குறிக்கப்படும் வஸ்துவான இறைவனை அறிவிக்க, உணர்த்த முடியாததாய் மாற்றம் அடைந்து விடுகிறது. **ஏன்? பதமும் அதன் அர்த்தமும் ஒன்று சேராவிடில் அதனால் குறிப்பிடப்படும் பதார்த்தத்தை எம்மால் உணரவோ அறியவோ முடியாது.** ஆகவே பதத்துக்கு விரோதமான அர்த்தத்தை வலிந்துரையாக எடுத்துக்கொண்ட ஒருவன் அந்தக் கலிமாவை நாவினால் கூறிக்கொண்டே முஸ்ரீக்காய் இருப்பதும் துர் நாற்றபண்புகளான கெட்டசெயல்களில் ஈடுபடுவதும் ஆச்சரியமேயல்ல.

பதமும் அதன் அர்த்தமும் முறையாய்ச் சரியாய் அமையாத வாக்கியம்(கலிமத்துல்கபீஸா) துர்நாற்றமுடைய வாக்கியமாய் இருப்பதால் அதைக் கூறிக்கொண்ட மனிதனும் துர்நாற்றம் என்னும் கெட்ட பண்புடையவனாகவே(நஜீசுடையவனாகவே)தான் இருப்பான். ஆகையால்தான் **முஸ்ரீக்குகள்(துவிதக்கொள்கையுடையவர்கள்) நஜீஸானவர்கள் என்று குர்ஆன் வருணிக்கிறது.** ஆனால் பதமும் அதன் அர்த்தமும் சரியாய் முறையாய் அமைந்த வாக்கியம் இப்படிப்பட்டதல்ல. இது உயிருடையதாயும் நற்பண்புகள் என்ற மணமுடையதாகவுமே இருக்கிறது. **ஆகையால்தான் அதற்கு "தையிபா" மணக்கும் கலிமா என்று இறைவன் பெயர் சூட்டினான்.** துர்நாற்றமாய் இருந்த நஜீஸைப் போக்கி நற்பண்புகள் என்ற மணத்தைக் கலிமத்துத் தையிபா நிச்சயமாகக் கொடுக்கத்தான் செய்யும் முறையாய் அமைந்த, உயிரும் பிரகாசமும் மணமும் உள்ள ஓர்வசனத்தை மனிதன் உச்சரிக்கும்போது (தியானிக்கும்போது) அந்த மணமுள்ள வசனத்தின் மகிமையால் அம்மனிதன் உண்மையான உயிருடையவனாகப் பிரகாசம்(நூர்) என்னும் அறிவுடையவனாக. மணம் என்னும் நற்பண்புடையவனாக மாற்றமடைவான் என்பது நிச்சயம்.

**தீயிலிட்ட இரும்பு தீயாவதுபோல, கடலில் இட்ட உப்புக்கல் கரைந்து கடலாவதுபோல கலிமத்துத் தையிபாவைத் தியானம் செய்யும் மனிதரும் கரைந்து இறைவன் என்னும் பெரும்கடலில் ஒன்றிவிடுகிறார்.** இது அறிவுக்கு விரோதமான ஓர் ஆச்சரியமேயல்ல. கலிமாவைத் தியானிப்பதால் துஆகபூல் ஆகக்கூடிய ஓர் நிலைமையை மனிதன் அடைவான் என்று சூசமாகக் கூறப்பட்ட உண்மை இது தான். ஆகவே இவர் எதற்கும் பயப்படவேண்டிய ஒருவரேயல்ல. இவரைத்தான் அச்சம் தீர்ந்த நல்லடியார் என்று கூறப்படுவது. **இன்ஸானுடைய குறிக்கோள், உப்புக்கல் கடலில் கரைந்து கடலாய் மாறித் தன் ஆதி நிலைமையை அடைந்தது போல அனாநிய்யத்தழிந்து இறைவன் என்ற பெரும் கடலில் ஒன்றிவிடுவதேயாகும்.** இதற்காகவேதான் ஒவ்வோர் மனிதனும் பிறக்கிறான். ஞானம் என்பதும் மஹரிபா என்பதும் இந்தப் பூரண நிலைமையைப் பெறுவதற்குரிய அறிவை அடைவதே. ஈமான், தௌஹீது, என்பதன் சாரமும் இதுதான். கலிமத்துத் தையிபாவைப் பற்றிய இரகசிய விபரங்கள், மெய் சிலிர்க்கக் கூடிய எத்தனையோ அம்சங்கள் உண்டு. இங்கே அவை இப்போது நமக்கு அவசியமல்ல. இறைவழி செல்லும் **நீ, தன்னுடைய வஹ்தத்தைத் தரிபடுத்த நாடித்தானே லா இலாஹ இல்லல்லாஹ் என்று இறைவன் தனக்குத்தானே கூறினான் என்பதையாவது புரிந்துகொள்.** ஆகையால் தான் கலிமாவுக்கு நிகரானது எதுவுமே இல்லை என்று கூறப்படுகிறது. இந்தக் கனம் பொருந்திய கலிமாவை உச்சரிப்பவர் அதை நம்பாமல் விட்டாலும் அதன் சக்தி அணுவளவேனும் குறையப்போவதே இல்லை. ஆனால் அவர் அதை விளங்கித் தெளிவு பெற்று நம்பாத காரணத்தினால் அக்கலிமாவின் சக்தி அவரில் வெளியாவதில்லை அவ்வளவுதான்.

## (5)

கடல் ஆழ்கடல்தான். ஆயினும் அதன் மேற்பரப்பில் கொந்தளிப்பும் அலைகளும் இருக்கவே செய்கின்றன. இந்தக் கொந்தளிப்பையும்அலைகளையும் போன்றவைதான்ஆராய்வில்லாத மனிதனுடைய நூற்கேள்வியறிவுகள். இந்த நூற்கேள்வியறிவைத் தான் சிற்றறிவு என்று கூறப்படுவது. இந்த அறிவு மிகப் பெரிய பட்டம் பெற்றதாயிருப்பினும் சரிதான். இல்முல் எகீன் என்பது (மனிதனுடைய ஆரம்ப அனுமான ஈமான் என்பது). இந்த நூற்கேள்வி அறிவான சிற்றறிவில் அமைந்ததுதான். இந்தச் சிற்றறிவில் இருக்கிற மனிதன் கலிமாவை விளங்கித் தெளிவு பெற்றுக்கொண்டால் கடலின் நடுப்பகுதியை அடைவது போல அறிவுக்கடலின் நடுப்பகுதியை நிச்சயமாக என்றோ ஓர்நாள் அடைந்தேயாவான். இந்த நடுப்பகுதியைத்தான் உண்மையான பகுத்தறிவு என்று கூறப்படும் "ஐனுல் எகீன்" என்பது இந்த நிலைமையிலுள்ள (ஈமான்) விசுவாசமேயாகும். இந்த நடுக்கடலில் நிலைமைக்கொப்பான அறிவில்,ஈமானில் பெரும்பாலும் கொந்தளிப்பும் அலைகளும் இல்லாவிட்டாலும் ஓரளவு சிறிது சலனம் இருக்கவே செய்யும். ஆனால் படிப்படியாய் முன்னேறும் மனிதர் அலைகளோ கொந்தளிப்போ சலனமோ இல்லாத அமைதியே உருவான ஆழ்கடலின் அடிப்பாகத்தை அடைவது போல எல்லையோ வரம்போ வேறு ஏதும் கட்டுப்பாடுகளோ இல்லாத இறையறிவு என்னும் பெருங்கடலில் நுழைந்துவிடுகிறார். இதைத்தான் பேரறிவு, அனுபவ ஞானம், ஹக்குல் எகீன் என்றெல்லாம் கூறப்படுவது. இதுதான் நபிமார்கள் றசூல்மார்கள் வலிமார்களான நல்லடியார்களின்

நிலைமை. இல்ஹாமத், இல்முல்லதுன்னீ, கஸ்பு, வஹி என்பவையெல்லாம் இந்தப் பேரறிவுக் கடலில் உள்ளவையேயாகும். இந்தப் பேரறிவுப் பெருங்கடலான இறையறிவின் ஓர்சிறுகிரணம் தான் சர்வககனபுவனங்களிலுமுள்ள சர்வசிருஷ்டிகளுடையவும் அறிவாகும். இந்த அறிவு ஒன்றுக்கு மற்றொன்று நேர்விரோதமாய்த் தென்படினும் சரியே. **நாம் எவ்வளவுதான் பெரிய ஓர் பட்டதாரியேயாயினும் எம்முடைய அறிவை இறையறிவின் ஓர்சிறுகிரணமே என்பதை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளாத வரையில் பேரறிவுக்கடலில் மூழ்கவும் சாந்தியடையவும் முடியாது.** அதாவது வெற்றியடைவதற்குரிய முதலாவது படித்தரம் தன் தோல்வியை, தன் குறைவை அறிந்து மனதார ஒப்புக்கொள்வதே. அதன் இரண்டாவது படித்தரம் தன் குறைவை நீக்கிக் கொள்ள முயற்சிப்பதே, இல்லையானால் வெற்றிபெறும் வாசல் அடைபடுவதும் பேரறிவுக்கடல் தென்படாமல் போவதும் நிச்சயமே. இறையறிவான பேரறிவில் மூழ்குவதனால் நிச்சயமாகக் கலிமாவை விளங்கியறிந்தே ஆக வேண்டும்.

இவ்வளவு மகத்துவம் பொருந்திய உயிருடைய, பிரகாசமுடைய, கலிமாவைப் புரட்டிக் கருத்தை மாறுபடுத்தி வைப்பதும் அதன் உண்மையை மனிதன் அறியமுடியாமல் மறைப்பதும் நியாயமாகுமா? கலிமாவின் உண்மையை உணர்த்த இனிமேலும் நபிமார்கள்தான் வரவேண்டும் என்பது அவசியமல்ல. முதலில் நபிமார்களால்தான் உண்மை உணர்த்தப்பட்டது. ஆகவே ஒருவர் இவ்வுண்மையை ஆராய்ந்தறிந்து அனுபவத்தையடைந்து மக்களுக்கு உபதேசம் செய்கிறாரென்றால், அவர் ஏதோ புதிதாய்க் கண்டுபிடித்துக் கூறுகிறார் என்பது பொருளல்ல. எல்லாமே பழைய விஷயங்கள் தான். இஸ்லாத்தின் உண்மைகள் புரட்டப்பட்டு மறையும்போது இறைவன் அவன் விரும்பிய மக்களைக்கொண்டு இந்தப் புதையுண்ட உண்மைகளை வெளியாக்குகிறான். அவ்வளவு தான். இவ்வளவு தூரமும் நாட்டுப்பாணியில் பிரசங்க மாதிரியில் நான் கூறியுள்ள விஷயங்களை ஓரளவு நீ புரிந்து கொண்டிருப்பாய் என்றே நான் நம்பகிறேன். ஆயினும் இறைவழி செல்வதனால் இன்னும் சில சிக்கல்களை நீக்கிவைக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஆகவே இஸ்லாத்தின் நோக்கம் என்ன? என்ற தலைப்பில் சில விஷயங்களை விளக்கித் தெளிவுபடுத்தி வைக்க விரும்புகிறேன். உள்ளத்தெளிவோடு ஆராய்ந்து தெளிவு பெறுவாயாக.

மனிதர்கள் கப்பலைச் செய்து நீரில்மிதக்க விடுவதற்குமுன்பே, ஆபத்து வேளையில் உதவக்கூடிய மிதப்புப் படகுகளையும் அக்கப்பலில் ஏற்றிக் கொள்கிறார்கள். ஏன் அப்படிச் செய்கிறார்கள்? கப்பலைத் தண்ணீரில் மூழ்கடித்து விடவேண்டும் என்பதற்காகவா? இல்லை. கப்பல் சிலவேளை நீரில் ஆழ்ந்து விட்டால் தப்பித்துக்கொள்ள வேண்டும், என்பதற்காகத்தான். இதே போல சர்வ சக்தியும் சர்வஞானமுமுடைய இறைவன் இம்மை என்னும் கடலில் பௌதீக உடல் என்னும் கப்பலை மிதக்க விட்டிருக்கிறான். இந்த உடல் என்னும் கப்பல் இம்மை என்னும் கடலில் நிச்சயமாய் மூழ்கக்கூடியதாகவேதான் இருக்கிறது. ஆகவே கப்பலில் பிரயாணம் செய்யும் நீ, கடலில் மூழ்கி மரணித்துவிடாமல் எப்படியும் தப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற காருண்ய நோக்கோடுதான் இறைவன் உன் கப்பலுக்குள் மிதப்புப்படகு ஒன்றைத் தந்திருக்கின்றான். இந்த மிதப்புப்படகு தான் பரிசுத்த வேதம் என்று கூறப்படுகின்ற குர்ஆன் ஆகும். அப்படகை நேர்திசைக்குத் செலுத்த உதவும் (ஸ்டயரிங்) சுக்கான்தான் கலிமத்துதையிபா என்பது. இந்தப்படகை உன் அறியாமையால் (பழுதாக்கி)உபயோகமற்றதாய் மாற்றிக்கொண்டால் நீ கடலில் மூழ்கி இறப்பாய் என்பது நிச்சயமான உண்மையாகும். கடலில் மூழ்கிக்கொண்டிருக்கும் உனக்கு திசை திரும்பிய ஒட்டைப்படகு எப்படி உதவி செய்யும்? ஆகவே சகோதரனே! நீ உன் படகை உபயோகமற்றதாய் மாற்றிக்கொள்ளாதே. (படகு என்பதில் உன் சூட்சும உடலும் அடங்கும்)

இம்மையென்னும் கடலில் உன் கப்பலை உன் இஷ்டம் போல் ஓட்டிக்கொள்ளும் உரிமையை இறைவன் உனக்களித்திருக்கிறான். கப்பலை மூழ்காமல் செலுத்தக்கூடிய சகல உபாயங்களையும் உனக்கு விளக்கி இருக்கிறான். இந்த இரகசியத்தைப் பூரணமாய் அறியும் திறமை இப்போது உன் அறிவில் அமையாது என்பது உண்மை. ஆகவே படகைக் கைவிடாதே. படகை உபயோகமற்றதாய் மாற்றிக்கொள்ளாதே. சிந்தித்துத் தெளிவுபெறு.

اتَّبِعُوا مَا أُنزِلَ إِلَيْكُم مِّن رَّبِّكُمْ وَلَا تَتَّبِعُوا مِن دُونِهِ أَوْلِيَاءَ قَلِيلًا
مَّا تَذَكَّرُونَ

7-3 *உங்களுக்கு உங்கள் இறைவன் அருளியதையே பின்பற்றுங்கள். அவனையன்றிக் காரியஸ்த்தர்களை நீங்கள் பின்பற்றாதீர்கள். நல்லுணர்ச்சி பெறுவோர் உங்களில் வெகு சொற்பம்.*

إِنَّ ٱلَّذِينَ كَذَّبُوا۟ بِـَٔايَـٰتِنَا وَٱسْتَكْبَرُوا۟ عَنْهَا لَا تُفَتَّحُ لَهُمْ أَبْوَٰبُ ٱلسَّمَآءِ وَلَا يَدْخُلُونَ ٱلْجَنَّةَ حَتَّىٰ يَلِجَ ٱلْجَمَلُ فِى سَمِّ ٱلْخِيَاطِ ۚ وَكَذَٰلِكَ نَجْزِى ٱلْمُجْرِمِينَ

7-40 *நிச்சயமாக எவர்கள் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கி அதனைப் புறக்கணிப்பதை பெருமையாகக் கொண்டார்களோ அவர்களுக்கு(இறைவனின் அருளுக்குரிய)வானத்தின் வாசல்கள் திறக்கப்படமாட்டாது. ஊசியுடைய காதில் ஒட்டகை நுழையும் வரையில் சுவன பதியை அவர்கள் அடையமாட்டார்கள். குற்றவாளியை நாம் இவ்வாறே தண்டிப்போம்.*

فَرِيقًا هَدَىٰ وَفَرِيقًا حَقَّ عَلَيْهِمُ ٱلضَّلَـٰلَةُ ۗ إِنَّهُمُ ٱتَّخَذُوا۟ ٱلشَّيَـٰطِينَ أَوْلِيَآءَ مِن دُونِ ٱللَّهِ وَيَحْسَبُونَ أَنَّهُم مُّهْتَدُونَ

7-30 *சிலரை அவன் நேரான வழியில் செலுத்தி இருக்க மற்றவர் மீது வழிகேடே விதிக்கப்பட்டதன் காரணம் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையன்றி ஸைத்தான்களையே தங்கள் அவ்லியாக்களாக(காரியஸ்தத்தர்களாக) எடுத்துக் கொண்டதுடன் தாங்கள் நேரான பாதையில் இருப்பதாகவும் எண்ணிக்கொண்டதுதான்.*

وَلَقَدْ يَسَّرْنَا ٱلْقُرْءَانَ لِلذِّكْرِ فَهَلْ مِن مُّدَّكِرٍ

54-17 *சிந்தித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இந்தக் குர்ஆனை மிக்க எழிதாக்கியிருக்கிறோம். ஆகவே (இதனைக்கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டா?*

## 017 இஸ்லாத்தின் நோக்கம் என்ன?

وَمَآ أَرْسَلْنَـٰكَ إِلَّا رَحْمَةً لِّلْعَـٰلَمِينَ

01 21-107 *உம்மை உலகத்தாருக்கு ஓர் அருளாக (றஹ்மத்தாக)வேயன்றி நாம் அனுப்பவில்லை.*

இந்த ஆயத்தின் விதிப்படி உலகமக்கள் அனைவருக்குமே றஹ்மத்தாக, அருட்கொடையாக அனுப்பப்பட்ட அந்த றசூல்(ஸல்)அவர்கள் ஒன்றிரண்டல்ல, இருபத்தொன்பது பகிரங்கமான யுத்தங்களைச் செய்திருக்கிறார்கள் என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். ஒரு யுத்தத்தின் போது அவர்களுடைய முத்தான பல்லே ஷஹீதாகியிருப்பதும், இன்னோர் முறை அவர்களுடைய சிரசில் வெட்டுண்டு அதன் காரணமாய் அவர்கள் நிலத்திலேயே வீழ்ந்ததும் நமக்குத் தெரியும். அவர்களுடைய சிரசிலிருந்த இரும்புக்கவசத்தின் வளையம் ஒன்று வாள்வீச்சின் வலிமையினால் அவர்களுடைய சிரசில் புகுந்திருந்ததும் அதை இன்னொருவர் பல்லினால் கடித்திழுத்து வெளியே எடுத்ததும் எமக்குத் தெரியாத விஷயமல்ல. இந்த யுத்தங்களின்போது எத்தனை எத்தனையோ நல்லவர்களும் தீயவர்களும் இறந்ததுண்டு. எத்தனை எத்தனையோ பெண்களும் பிள்ளைகளும் இறந்ததும் கஷ்ட, நஷ்டமடைந்ததும் உண்டு. எவ்வளவோ பொருட்சேதங்களும் ஏற்பட்டதுண்டு. இவ்விதமான கஷ்ட, நஷ்டங்களையும் இன்னல்களையும் தீயவர்கள் மட்டுமல்லாமல் நல்லவர்களும் றசூல்(ஸல்) அவர்களும் கூடத்தான் அனுபவித்திருக்கிறார்கள்.

உலக மக்களுக்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட றசூல்(ஸல்) அவர்களே இவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கெல்லாம் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பது உண்மையானால் அருட்கொடை (றஹ்மத்) என்பது என்ன? இந்த இன்னல்களுக்கெல்லாம் றசூல்(ஸல்) அவர்கள் காரணமல்ல என்றும் முஸ்ரிக்கீன்கள்தான் காரணம் என்றும் நீ கூறக்கூடும். இல்லை ஏனென்றால் “லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற கலிமாவை மக்கள் ஏற்றுக்கொள்ளும் வரையிலும் நான் யுத்தம் செய்ய ஏவப்பட்டுள்ளேன் என்று றசூல்(ஸல்)அவர்கள் தங்கள் நாவினாலேயே கூறியிருக்கிறார்கள். அந்த றசூல்(ஸல்) அவர்கள் தங்கள் பிரசங்கத்தை (கலிமாவின் உண்மையை) வெளிப்படுத்தாமல் விட்டுவிட்டிருந்தால் இவ்வளவு யுத்தங்களும் இன்னல்களும் ஏற்பட்டிருக்கவே முடியாது. ஆகவே அந்த

யுத்தங்களுக்கும் அவற்றால் மக்கள் அடைந்த இன்னல்களுக்கும் றசூல்(ஸல்) அவர்கள்தான் காரணம் என்று கூறுவதே அறிவுக்குப் பொருத்தமாயும் உண்மைக்கு நெருங்கியதுமாயும் தென்படுகிறது. இவற்றையெல்லாம் நாம் ஆராயும் போதும் றசூல்(ஸல்) அவர்களையும் அல்லாஹ்வுடைய அருட்கொடையான றஹ்மத்ததையும் நம்பமுடியதவர்களாகவும் சந்தேகக் கண்கொண்டு நோக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

**ஹதீஸ்** ***நான் அண்ணல் நபி அவர்களை முற்றும் பசியின் காரணமாகக் களைத்திருக்கக் கண்டேன். அன்றி அவர்கள் தங்களின் வயிறு நிரம்ப உண்ணக்கூடியதாய்க் கெட்டுப்போன பேரீச்சம்பழம் கூட அவர்களுக்குக் கிடைத்ததில்லை என்று உமரேபாரூக்(றலி)அவர்கள் கூறியதாக நுஹ்மான் இப்னுபஸீர்(றலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.***

**ஆதாரம்:முஸ்லீம்**

இதே போல உலகுக்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட அந்த றசூலின், மன்னிக்கும் தன்மை, பொறுமை, அறிவு, நெஞ்சுத்துணிவு, வறுமை பட்டினி முதலியவைகளை ஆலோசனைக் கெடுத்தால் இவற்றையும் எம்மால் சரிவர நம்ப முடியாமல்தான் இருக்கிறது. ஏனென்றால் இவ்வளவு கஷ்ட நஷ்டங்களும் இன்னல்களும் அருட்கொடையாக, றஹ்மத்தாக இருக்க முடியாதே? இன்பமும் சுகபோகமும்தானே றஹ்மத்தாக இருக்க முடியும் என்று எங்களுடைய அறிவு கூறுகிறது. ஆனால் இவ்வளவு கஷ்ட நஷ்டங்களையும் இன்னல்களையும் அறிந்திருந்துகொண்டுதான், உம்மை றஹ்மத்தாகவேயன்றி அனுபவமில்லை என்று இறைவன் கூறுகிறான். எங்களுடைய றசூல் மட்டுமல்லாமல் இவர்களுக்கு முந்திய றசூல்மார்களும் எம்முடைய றசூலைப் போலவே அவரவர்களுடைய கால சூழ்நிலைகளுக்கேற்றபடி கஷ்ட, நஷ்ட, இன்னல்களையே பெரும்பாலும் அனுபவித்தார்கள் என்பதும், அக்கால மக்களும் அந்த றசூல்மார்களினாலேயே கஷ்ட, நஷ்டங்களை அனுபவித்தார்களென்பது குர்ஆன், ஹதீஸ்களினாலும் சரித்திர ஏடுகளினாலும் எமக்குத்தெரிய வருகிறது. அப்படியானால் இந்த றசூல்மார்கள் அளவிடமுடியாத இன்னல்களை அனுபவிக்கவும் மக்களைக் கஷ்ட, நஷ்டங்களுக்குள்ளாக்கவும் வேண்டிய அவசியம் தான் என்ன? அல்லாஹ்வுடைய அருட்கொடையான றஹ்மத் என்பதன் உண்மைதான் என்ன? என்ற விபரங்களை நாம் ஆராய்ந்து கண்டறிய வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஆகவே எமது இமாமான குர்ஆனையே நாம் கேட்டறிவோம்.

لَقَدْ أَرْسَلْنَا نُوحًا إِلَىٰ قَوْمِهِۦ فَقَالَ يَٰقَوْمِ ٱعْبُدُوا۟ ٱللَّهَ مَا لَكُم مِّنْ إِلَٰهٍ
غَيْرُهُۥٓ إِنِّىٓ أَخَافُ عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ عَظِيمٍ

7-59 *திடமாக நூஹு நபியை நாம் அவருடைய கவுமுகளிடம்(சனங்களிடம்)அனுப்பினோம். அவர் என்கவுமுகளே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லை. உங்களுக்கு மகத்தான ஓர் நாளின் வேதனைக்குப் பயப்படுகிறேன் என்று கூறினார்.*

۞ وَإِلَىٰ عَادٍ أَخَاهُمْ هُودًا ۗ قَالَ يَٰقَوْمِ ٱعْبُدُوا۟ ٱللَّهَ
مَا لَكُم مِّنْ إِلَٰهٍ غَيْرُهُۥٓ

7-65 *ஆதுக் கூட்டத்தாரிடம் அவர்கள் சகோதரரான ஹூது நபியை அனுப்பினோம் அவர் என்கவுமுகளே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லையென்று கூறினார்.*

وَإِلَىٰ ثَمُودَ أَخَاهُمْ صَٰلِحًا ۗ قَالَ يَٰقَوْمِ ٱعْبُدُوا۟ ٱللَّهَ مَا لَكُم
مِّنْ إِلَٰهٍ غَيْرُهُۥ ۖ

7-73 *ஸமூதுக் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஸாலிஹு நபியை அனுப்பினோம். அவர் என் கவுமுகளே!நீங்கள் அல்லாஹுவை வணங்குங்கள். உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லையென்று கூறினார்.*

وَإِلَىٰ مَدْيَنَ أَخَاهُمْ شُعَيْبًا ۗ قَالَ يَٰقَوْمِ ٱعْبُدُوا۟ ٱللَّهَ مَا لَكُم مِّنْ إِلَٰهٍ غَيْرُهُۥ ۖ

7-85 *மதியன் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஷுஐபு நபியை நாம் அனுப்பினோம். அவர் என் கவுமுகளே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹுமு் இல்லையென்று கூறினார்.*

இவ்விதமாக ஒவ்வோர் நபிமார்களும் தங்கள் தங்கள் கூட்டத்தாரிடம் கூறிவந்துள்ளதாகவே குர்ஆன் கூறுகிறது.

مَّا يُقَالُ لَكَ إِلَّا مَا قَدْ قِيلَ لِلرُّسُلِ مِن قَبْلِكَ

41-43 *உமக்கு முன் வந்த தூதர்களுக்குக் கூறப்பட்டது எதுவோ அதனையே அன்றி உமக்குக் கூறப்படவில்லை.*

وَمَآ أَرْسَلْنَا مِن قَبْلِكَ مِن رَّسُولٍ إِلَّا نُوحِىٓ إِلَيْهِ أَنَّهُۥ لَآ إِلَٰهَ إِلَّآ
أَنَا۠ فَٱعْبُدُونِ

21-25 *உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம் நிச்சயமாக என்னைத்தவிர வேறு இலாஹுமு இல்லை. என்னையே நீங்கள் வணங்குங்கள் என்று நாம் வஹி அறிவிக்காமல் இல்லை.*

என்று குர்ஆன் எமக்கு விபரமாகவே விளக்கம் தருகிறது. இறுதியாக எம்முடைய றசூல்(ஸல்) அவர்கள் "லாஇலாஹ இல்லல்லாஹ்" அல்லாஹ்வையன்றி வேறு இலாஹுமு இல்லை என்று சொல்கிறவரையில் அவர்களுடன் புனித யுத்தம் செய்யும்படி எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது என்று அவர்களுடைய நாவினாலேயே அறிவித்தார்கள். யுத்தமே செய்தார்கள். ஆகவே குர்ஆனுடைய விளக்கத்தை நாம் சிந்தனைக்கெடுத்தால் மிக முக்கியமான இரண்டு உண்மைகள் நமக்கு வெளிப்படுகின்றன.

அதாவது குர்ஆனுடைய உண்மையான விளக்கப்படி றசூல்(ஸல்)அவர்களும் அவர்களுக்கு முந்திய நபிமார்களும் **"லாஇலாஹ இல்லல்லாஹ்"என்ற தௌஹீதுக் கலிமாவின் கொள்கை விளக்கமான ஓர் சித்தாந்தத்தையும் அதை உறுதிப்படுத்துவதற்காக ஓர் செயலையும்தான் கொண்டு வந்தார்கள் என்பது தெரியவருகிறது.** அதாவது தௌஹீதுக் கலிமாவினால் உணர்த்தப்படுகிற கொள்கை விளக்கமான அறிவுவிளக்கத்தை (சித்தாந்தத்தை) மக்களிடையே போதிப்பதுதான் **அந்த நபிமார்களுடைய பிரசாரமாகவும்** அந்த அறிவுவிளக்கம் மக்களுடைய மனதில் உறுதியடைவதற்காக விக்கிர வணக்கத்தை நீக்கி இறைவணக்கத்தைக் கற்பிப்பதுதான் அவர்களுடைய செயலாகவும் இருந்திருக்கிறது. ஏனென்றால், நோக்கத்துக்காகவே செயலல்லாமல் செயலுக்காக நோக்கமேயல்ல. நபிமார்களுடைய நோக்கம் தௌஹீது என்னும் கொள்கை விளக்கத்தை மக்கள் பெறவேண்டும் என்பதே. இந்த நோக்கத்துக்காகத்தான் விக்கிரக வணக்கத்தை நீக்கி இறைவணக்கத்தை கற்பிக்கும் செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகவே தென்படுகிறது. ஆகவே இவ்விடத்தில் **தௌஹீது என்னும் கொள்கை விளக்கத்தில் ஊறிவிடுவதற்காகவே தொழுகை முதலாம் அமல்கள் தரப்பட்டுள்ளன என்பதை நீ ஞாபகத்தில் இருத்திக் கொள்ளவேண்டும்.**

இவ்விஷயத்தை இன்னோர் வகையாகக் கூறினால் இறைவனால் நபிமார்கள் றசூல்மார்களுக்கு விதிக்கப்பட்ட முதலாவது ஏவல் தௌஹீதை எத்திவைக்க வேண்டுமென்பதே. இந்த ஏவலை நிலப்படுத்துவதற்காகவே விக்கிர வணக்கத்தை நீக்கும் படி இரண்டாவது (ஏவல்)விலக்கல் தரப்பட்டிருக்கிறது. இந்தத் தவறான வணக்க முறையை நீக்கிய பிறகு உண்மையான இறைவணக்கத்தை நிலைப்படுத்தும்படி மூன்றாவது ஏவல் தரப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் இஸ்லாம் ஐந்து காரியம் கொண்டு எடுக்கப்பட்டது என்ற ஹதீஸில், முதாவது கலிமாவைக் கொண்டு சாட்சி பகர்வது என்றும் இரண்டாவது தொழுகையை நிலைப்படுத்துவது என்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கலிமாவை உள்ளத்தில் உறுதிப்படுத்துவதற்காகத் தரப்பட்டதுதான் தொழுகை என்பதை மறந்து விடக்கூடாது.(மேலும் கூட்டுத்தொழுகையை வற்புறுத்திக் கூறப்பட்டிருப்பது சமூக நலத்தைக் கருதியே என்பதை இன்ஷா அல்லாஹ் பின்னால் அறிவோம்)

ஆகவே இந்தத் தௌஹீதின் உண்மை விளக்கத்தை மக்களிடையே பிரசாரம் செய்ய முற்பட்டதாலும் விக்கிர ஆராதனையைத் தடுத்து நிறுத்தியதாலும்தான் இந்த நபிமார்களும் அவர்களுடைய கவுமுகளும் மோதிக்கொள்ள நேரிட்டிருக்கிறது என்பதை அறிந்துகொண்டோம். இந்த மோதலினால்தான் அந்த நல்லவர்களும் தீயவர்களும் இவ்வளவு கஷ்ட நஷ்டங்களையெல்லாம் அடைந்தார்கள் என்பதையும் அறிந்துகொண்டோம். மேலும் இந்த தௌஹீது விளக்கமான சித்தாந்தத்தை,ஈமானைப் பெறாதவர்கள் வாழத்தகுதியற்றவர்களாய் இருந்ததால், அல்லது வாழவேண்டிய அவசியமில்லாததால்தான் இறைவன் அவர்களை அழித்தான் என்பதும் எமக்குத் தென்படவே செய்கிறது. **அப்படியானால் மனித வாழ்வு எதற்காக? என்று நோக்கினால் தௌஹீது விளக்கமான ஈமானை(அறிவை)ப் பெறுவதற்காகவே என்பது தெளிவாய்த் தென்படுகிறது.** சரிதான்.

ஈமான் எதற்காக? என்று நோக்கினால் மனித வாழ்வு மரணத்தோடு முடிந்து விடுவதில்லை. மனிதன் இறந்த பிறகும் வெவ்வேறு நிலைமைகளில் வாழவேண்டியவனாயும் இறுதியில் தன் பூரணத்தன்மையான சாந்தியை அடையவேண்டியவனாயும் இருக்கிறான். ஆகவே மனிதன் தன் பிரயாணமான, உலக வாழ்வு என்ற நிலைமையில் தௌஹீது என்ற அறிவு விளக்கத்தைப் பெற்றுக் கொண்டால்தான் அவனுடைய பிரயாணத்தை ஒழுங்காக முடித்து இறுதியில் வெற்றிபெற அவனால் முடியும். இதன் சாரம் என்னவென்றால், தௌஹீதை விளங்கி ஈமான் என்ற அறிவு விளக்கத்தைப் பெறுவதும் பெற்றுக்கொண்ட உண்மையில் நிலைப்பதற்காக அமல் செய்வதும் அதற்குதவியான ஊண், உடை, இடம் முதலாம் அவசியமான விஷயங்களைத் துன்யாவில் பெற்றுக் கொள்வதும் குறிக்கோளை நிலைப்படுத்துவதற்காகச் செய்யும் முயற்சிகளில் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்கள், இன்பசுகங்களை அனுபவிப்பதுதான் மனினுடைய உலக வாழ்வு என்பது தெரிய வருகிறது.

ஆகவே தன் குறிக்கோளை அடைவதற்காகவே மனிதன் பிறக்கிறான் என்பதும், குறிக்கோள் என்பதை அறிந்து கொள்ளாதவன் வாழத்தகுதியற்றவன், வாழத்தேவையில்லாதவன் என்பதும் தென்படவே செய்கின்றன. ஒவ்வோர் மனிதனும் எங்கேயோ ஓர் இடத்தில் இருந்து (அமாவில் இருந்து) வெளிக்கிட்டுப் பிரயாணம் செய்பவனாகவும் சிற்சில இடங்களில் தங்கித்தன் பிரயாணத்துக்கு வேண்டிய ஒழுங்குகளைச் சேகரித்துச் சீர்படுத்திக்கொள்ள வேண்டியவனாகவும் முடிவில் வெளிக்கிட்ட இடத்தை (லிகாவை) அடைய வேண்டியவனாகவும் இருக்கின்றான். ஆகவே தௌஹீது என்னும் கொள்கை விளக்கத்தை துன்யாவில் மனிதன் அவசியமாகப் பெற்றே ஆகவேண்டுமென்றிருந்தால், எமது அறிவு அகக்கொள்கை விளக்கத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தாலும் கூட, எமது வஹ்முக்கெட்டாத **ஏதோ ஓர் இரகசியம் அந்தக் கொள்கை விளக்கத்தில் இருந்துதான் ஆக வேண்டும்.**

அதாவது மனிதப்பிறவியாகிய நீ இன்ன இடத்தில் இருந்து இன்ன நோக்கத்துக்காக வெளிக்கிட்டுப் பிரயாணம் செய்பவனாய் இருக்கிறாய். இன்ன இன்ன இடங்களில் தங்கவேண்டியவனாயும் இன்ன இன்ன ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டியவனாயும் இருக்கிறாய். நீ தங்குமிடங்களில் இன்ன இன்ன கஷ்ட நஷ்டங்கள், இன்ப சுகங்கள் இருக்கின்றன. அவ்வவற்றின் போது ந் இன்னவிதமாக நடந்துகொள்ள வேண்டும் என்று உணர்த்துவதுதான் தௌஹீது என்னும் கொள்கை விளக்கமாக இருக்க வேண்டும். இப்படியானால்தான் கலிமாவைக் கொண்டு வந்த றசூல்(ஸல்) அவர்கள் இறைவனின் அருட்கொடையான றஹ்மத்தாக இருக்கமுடியும்.

**சகோதரனே!**

ஓர் நீண்ட பிரயாணத்தை ஆரம்பித்த மனிதன் ஓர் தங்குமிடத்தில் தங்கி அங்குள்ள வீண்விளையாட்டுக்களிலும் ஆசையென்ற மது போதையிலும் மயங்கிப் பிரயாணத்தையே மறந்த மறதியாளனாக இருக்கும் போது அவனை விளித்து அவனுடைய போதை மயக்கத்தை நீக்கி அவனுடைய நிலைமையையும் அவனுடைய நோக்கத்தையும் விளக்கி, அவனுக்கு வேண்டிய தங்கரிப்புக்களையும் சேர்த்துக் கொடுத்துச் சந்தோஷமுடையவனாய் அச்சம் தீர்ந்தவனாய் அவனை மாற்றி வழி அனுப்பி வைப்பதென்றால் உண்மையாகவே அது றஹ்மத்தாகத்தானே இருக்கும். ஆகையால்தான் உம்மை உலக மக்களுக்கு அருட்கொடையாக அனுப்பினேன் என்று இறைவன் கூறுகிறான். ஆகவே மனிதன் ஏன் பிறக்கிறான்? அவனுடைய நோக்கம் எவை? அவன் தன் பிரயாணத்தை முடித்து வெற்றி பெறுவது எப்படி? என்ற விபரங்களை விளக்கிக் காட்டுவது தான் நபிமார்களினால் **கலிமா உபதேசிக்கப்பட்ட உண்மையான நோக்கமாகும்.**

لَتَرْكَبُنَّ طَبَقًا عَنْ طَبَقٍ

84-19 *நீங்கள் நிச்சயமாகப் படிப்படியாய்க் கடக்க வேண்டியதாய் இருக்கிறது.*

மேலே தரப்பட்ட மிகச் சுருக்கமான விளக்கம் தான் மனிதனின் வாழ்க்கைத்திட்டமாகும். இந்த வாழ்க்கைத் திட்டம் இரண்டு அம்சங்களை உடையதாய்த் தென்படுகிறது. அவற்றில் ஒன்று நோக்கம். **இதுதான் ஈமான், விசுவாசம், தௌஹீது என்னும் கொள்கை விளக்கம்.** இது உள்ளத்தைப்பொறுத்த மறைவான விஷயமாகும். இதை "பாதின்" என்றும் உயிர் என்றும் கூறப்படும். மற்றொன்று நோக்கத்துக்கமைவான வெளிச்செயல்கள். இதில் அமல்கள் துன்யாவுடைய அரசியல், சமூக-இயல் எல்லாமே அடங்கும். இது "லாஹிறு" என்றும் உடல் என்றும் கூறப்படும். இந்த **பாத்தினு, லாஹிறு ஆகிய உயிர் உடல் இரண்டு பகுதிகளையும் பொதுப்படையாய்ப் பொதிந்து கொண்டதன் பெயர்தான் "இஸ்லாம்" சாந்திமார்க்கம் என்பது.** தீன்,அல்லது மார்க்கம் என்றால் வழி, தெரு, பாதை, வீதி, சாலை, ரோட் என்பது தான் அர்த்தம். ஆகவே இஸ்லாத்தின் உயிராய் அமைந்த தௌஹீதுக் கலிமாவின் உண்மை அநேகருடைய அறிவில் அமையாவிட்டாலும் கூட மனிதனுடைய வாழ்க்கைத்திட்டம் இஸ்லாமே என்பதையும் இஸ்லாத்தின் உண்மையான நோக்கம் ஈமான் என்னும் தௌஹீது விளக்கத்தைப்பெறுவதே என்பதையும் நாம் அறிந்து கொண்டோம். ஆகையால் தான் கலிமாவை விளங்கியறிந்து சாட்சி கூறுவது இஸ்லாத்தின் முதலாவது கட்டாய கடமையாக விதிக்கப்பட்டுள்ளது. அதாவது நோக்கத்தை சரியாய் உணர்ந்து கொள்ளாத ஒருவர் எந்தச் செயல்களையும் நோக்கத்தை உறுதிப்படுத்தக்கூடியதாய்ச் செய்யவே முடியாது. அந்தச் செயலால் வெற்றி பெறவும் முடியாது. **ஆகையாற்தான்(ஈமானை)கலிமாவின் உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொண்டு அதை உறுதிப்படுத்துவதற்காகச் செயலை இரண்டாவதாக, அமைக்கப்பட்டிருக்கிறது.** அதாவது ஈமான் கொள்வதை முதலாவதாகவும் தொழுகையை இரண்டாவதாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தொழுகையின் நோக்கம் ஈமானை உறுதிப்படுத்துவதேயாகும்.

அப்படியில்லாமல் தொழுகை முதலாம் அமல்களே மனிதனை வெற்றிபெறச்செய்யும் என்றிருந்தால் ஈமான் கொள்வதை இஸ்லாத்தின் முதலாவது கடமையாக அமைக்கப்பட்டிருக்கமாட்டாது. தொழுகை முதலாம் அமல்களே முதலாவதாக அமைக்கப்பட்டிருக்கும். (நுட்பமாய் உணர்க)

இதை இன்னும் கொஞ்சம் விபரமாய்க் கூறினால் தௌஹீதுக் கலிமாவைக் கொண்டு ஈமான் கொள்வதில் கட்டாய கடமையாக நாலு(பர்ளுகள்)கடமைகள் விதிக்கப்பட்டுள்ளன. இவ்விபரம் முன்பும் தந்திருக்கிறேன், இக்கடமைகளில்,

**1ஆவது:** அட்சரப்பிழையில்லாமல் கலிமாவை நாவினால் சரியாக உச்சரித்துக் கூறுவது.இந்தக் கடமை ஊமையர் பேரில் பர்ளு இல்லாமலும் வேறு சில நுட்பங்கள் பொதிந்ததாயும் இருப்பதால், இதுபர்ளாக ஆக்கப்பட்டிருப்பினும் மூலப்பர்ளு அல்லாத கிளைபர்ளாகவே தென்படுகிறது. அதாவது அட்சரப்பிழை ஏற்பட்டால் கலிமாவுடைய கருத்தில் மாற்றம் ஏற்படலாம். மாற்றம் ஏற்பட்டால் பிரயோசனத்தைப் பெற முடியாது. ஆகவே கலிமாவுடைய கருத்துப் புரளக் கூடாது, புரட்டக்கூடாது என்பதற்காகவே அட்சரப்பிழையின்றிக் கூறப்படவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

**2ஆவது:** அல்கலிமத்துத் தையிபாவின் கருத்தை விளங்கியறிந்துகொள்வது.

**3ஆவது:** ஒப்புக்கொண்ட உண்மையை(ஈமானை) எவ்வித சந்தேகமும் இன்றி உள்ளதால் ஒப்புக்கொள்வதால் (இந்த மூன்றாவது விதியே மூலப்பர்ளு என்பதை முன்பு விளக்கியுள்ளேன்).

**4ஆவது:** உள்ளத்தால் ஏற்றுக்கொண்ட கலிமாவின் பொருளை (ஈமானை) நழுவ விடாமல் அவ்வுண்மையில் நிலைத்திருப்பது.

மேலே கூறிய விபரத்தைத் தெளிந்த மனத்தோடு சிந்தனை செய்தால கலிமாவின் உண்மையில் நிலைத்துநிற்பதே மனிதவாழ்வின் குறிக்கோள் என்பதும் அக்குறிக்கோளுக்கு உதவியாகவே மற்றும் சகல கடமைகளும் (பர்ளுகள்,சுன்னத்துகள்) ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதும் தெளிவாகவே தென்படுகிறது.

## மேலே காட்டிய விபரத்தின் சாரம்

01. கலிமாவைக்கொண்டு நபிமாரை இறைவன் அனுப்பியது ஈமான் என்னும் கொள்கை விளக்கமான சித்தாந்தத்தை (தௌஹீதை) விளக்குவதற்காகவே.

02. அமல்கள் தரப்பட்டதெல்லாம் ஈமானை வளரச்செய்து உறுதிப்படுத்துவதற்காகவே.

03. மனித வாழ்க்கையின் குறிக்கோள் தௌஹீதில் நிலைபெறுவதே.

04. தௌஹீதுடைய விபரத்தைப் புரிந்து ஈமானை ஏற்றுக்கொள்ளாதவன் வாழத்தகுதியற்றவனாய் வாழத்தேவையில்லாதவனாய் இருக்கிறான்.

05. இஸ்லாம் என்பது இரண்டுபகுதிகளைக்கொண்டது. ஒன்று உட்படை(பாதின்) இஸ்லாத்துடைய உயிர். இதுதான் ஈமான், தௌஹீது என்பது. மற்றொன்று வெளிப்படை (லாஹிறு). இதுதான் இஸ்லாத்தின் உடல். இது இஸ்லாத்தின் பர்ளான, சுன்னத்தான, கடமைகளாகும். **இக்கடமைகள் ஈமானை வளரச்செய்து உறுதியடைவதற்காகவே தரப்பட்டுள்ளன.**

06. இன்ஸையும் ஜின்னையும் இறைவன் “மல்ஹறாக” வெளியாகும் ஸ்தானமாகப் படைத்திருக்கிறானேயன்றி வணங்குவதற்காக அல்ல, வணங்குவதற்காக என்பது சாதாரண மக்களுக்கு ஊட்டப்பட்ட விபரமாகும். (இதன் விபரம் பின்னால் தரப்படும்).

**(2)**

## எச்சரிக்கை

**அறிவுத்தாகம் கொண்ட அன்புச்சகோதரனே!**

இங்கே நான் தரப்போகிற விபரங்கள் இதுவரை பெரும்பாலான கிதாபுகளில் விளக்கப்படாத ஓர் நுட்பமான விளக்கமாகும். **இறைவழி செல்லும் ஸுபிகளுக்குத் தொழுகை முதலாம் கட்டாயக் கடமைகளில் ஏற்படக்கூடிய சில சிக்கலான சந்தேகங்களை நீக்க வேண்டும் என்பதற்காகவே இதை நான் விபரிக்க விரும்புகிறேன். இது காலவரையில் எந்த ஓர் கிதாபும் இவ்விபரத்தைத் தெளிவாய் விளக்கியுள்ளதாகத் தெரியவேயில்லை. ஆகவே நீ அவசரப்படாமல் பொறுமையோடு விளங்கியறிய**

**வேண்டும் என்று கேட்கிறேன்.** குர்ஆன், ஹதீஸ்களை ஒப்புக்கொள்ளாத, பிடிவாதத்தில் மூழ்கியுள்ள, பின்பற்றல் வழியில் செல்கிற அறிவு குறைந்த பாமர மக்களின் எவ்விஷயத்திலும் தலையிடுவது எமது நோக்கமல்ல. பன்றிகளின் கழுத்தில் இரத்தினக் கோவையை அணிய வேண்டாம் என்று ஈஸா(அலை) கூறுகிறார்கள். ஆகவே உண்மையான ஞானம் (மார்க்க விளக்கம்) இரத்தினக் கோவையை விடச் சிறந்ததாயும் அதை அடையத்தகுதியற்றவன் பன்றியிலும் கேவலமாய் இருக்கிறான் என்றும் கஸ்ஸாலி (றஹ்)வியாக்கியானம் செய்கிறார்கள். ஆகவே நான் கூறப்போகிற விபரங்களை தஹ்கீதுடைய, தக்லீதுடையவர்களே அன்றி கல்வியறிவில்லாத பாமர மக்கள் பார்வையிடவோ குறைகூறவோ வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். முடிவு வரை வாசிக்காமல் முடிவுக்கும் வரவேண்டாம்.

**சகோதரனே!**

ஈமானும் இஸ்லாமும் ஒன்று சேர்ந்ததா?அல்லது வெவ்வேறானவையா?என்பதைப் பூர்வகாலத்திலிருந்தே ஆராய்ச்சியாளர்களும் ஒலிமார்களும் கண்டறிந்து, உண்மை என்ன? என்பதைச் சரியான ஆதாரங்களோடு விளக்கி வைத்திருக்கிறார்கள். இந்த மகான்களின் பொதுவான விளக்கம் என்னவென்றால், குர்ஆன், ஹதீஸ்களில் சில இடங்களில் ஈமான் வேறு இஸ்லாம் வேறு என்றும் சில இடங்களில் இரண்டும் ஒன்றே என்றும் விளக்கப்பட்டிருப்பதாய், அவ்வவற்றிற்குரிய ஆதாரங்களை எடுத்துக்காட்டி அவர்களுடைய அபிப்பிராயங்களையும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அபிப்பிராயங்களில் கஸ்ஸாலி(றஹ்) அவர்களால் விளக்கப்பட்டுள்ள விபரம் நடுத்தர அறிவுடையோர் விளங்கிக்கொள்வதற்கு மிக இலகுவாய் இருப்பதால் அவ்விபரத்தையே நான் இங்கு கூறுகிறேன். அவர்களுடைய அபிப்பிராயமும் தீர்ப்பும் என்னவென்றால் ஈமானை இஸ்லாத்தோடு இணைத்து குர்ஆன், ஹதீஸ்களில் கூறப்பட்டிருப்பது பாஷை வழக்கத்தைப் பொறுத்துக் குர்ஆன்,ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளதென்றும் அப்படிக் கூறுவது தான் சாதாரண அறிவுக்கு ஏற்றதென்றும் ஈமான் செயலற்றதாயும் இஸ்லாம் செயலுள்ளதாயும் இருப்பதால் அவை வெவ்வேறே என்றும் கூறுகிறார்கள். மேலும் அபூதாலிபுல்மக்கீ என்பவர் தம்முடைய ஓர் கிதாபில் வணக்கங்கள் இல்லாமல் ஈமான் நிறைவேற்றுவதில்லையென்றும் இது இஜ்மாஉ என்று எழுதியிருப்பதாயும்,**இப்படி எழுதியிருப்பது மிகமிகத் தவறானது என்றும் தக்க ஆதாரங்களை எடுத்துக்காட்டி ஈமான் செயலற்றதே என்றும் இஸ்லாம் செயலுடையதே என்றும் இவ்விரண்டையும் இணைத்துக் கூறுவதே சாதாரண மனிதனுக்குப் பொருத்தமான விஷயம் என்றும் கஸ்ஸாலி(றஹ்) வெகு தெளிவாக விளக்கி வைத்துள்ளார்கள்.** இவ்விபரங்களைக் கூறி நான் காலத்தைக் கடத்தாமல் கஸ்ஸாலி(றஹ்)அவர்களால் தெளிவாய் விளக்கப்படாத ஓர் விஷயத்தை மட்டும் நான் இங்கே கூறிவைக்கிறேன். இவ்விஷயம் கஸ்ஸாலி(றஹ்)அவர்களுக்குத் தெரியாது என்பது கருத்தல்ல. இது முகாஸபத்துடைய இல்மாய் இருப்பதால் இதை அவர்கள் முஆமலத்துடைய இல்மில் தெளிவுபடுத்தவில்லை. அவ்வளவுதான்.

குர்ஆன், ஹதீஸ்களைச் சரியான முறையில் ஆராய்ந்து பார்த்தால் ஈமான் என்பதில் பலகிளைகள் அல்லது அம்சங்கள் இருப்பினும் பொதுப்படையாய் ஈமானை மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்தே குர்ஆன், ஹதீஸ்களில் விபரம் தரப்பட்டுள்ளது என்பது தென்படுகிறது. இதேபோல மனிதர்களையும் பொதுப்படையாய் மூன்று பெரும் பிரிவுகளாய் வகுத்தே குர்ஆன், ஹதீஸ்கள் விபரம் தருகின்றன. இவற்றில் ஈமானுடைய மூன்று பகுதிகளையும் “இல்முல் எகீன்”“ஐனுல் எகீன”“ஹக்குல் எகீன்” என்றும் மனிதர்களின் மூன்று பகுதிகளையும் “அவாம்”“கவாஸ்”“கவாஸுல் கவாஸ்” என்றும் கூறப்படும். இவற்றில் ஹக்குல் எகின் என்பதுடையவும் கவாஸுல் கவாஸுகளுடையவும் விபரங்கள் இப்போது எமக்கு அவசியமில்லாதிருப்பதால் அதை நிறுத்திக் கொண்டு மற்றிரு விபரங்களையும் நோக்குவோம்.

மனிதர்களில் அவாம்கள் என்று கூறப்படுகிற சாதாரண மனிதர்களின் நம்பிக்கை (ஈமான்)தான் இல்முல் எகீன் என்று கூறப்படுவது. இது நூற்கேள்வி அறிவினால், அனுமானிப்பதால் ஏற்பட்ட சாதாரண நம்பிக்கையாகும். சட்டம் ஏற்றுக்கொண்ட ஈமான் இதுதான். இவர்கள் மேலும் விளங்கியறிந்து ஈமான்கொள்ள வேண்டியவர்களாயும் இரண்டாவது நிலைமையில் சென்றடைவதற்காகத் தொழுகை முதலாம் கட்டாய கடமைகளில் ஈடுபட வேண்டியவர்களாயும் இருக்கிறார்கள். எம் சமூகமக்களில் 99%மானோர் இவ்வகையினர் தான்.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ ءَامِنُواْ بِٱللَّهِ وَرَسُولِهِۦ وَٱلۡكِتَٰبِ ٱلَّذِي نَزَّلَ عَلَىٰ
رَسُولِهِۦ وَٱلۡكِتَٰبِ ٱلَّذِيٓ أَنزَلَ مِن قَبۡلُۚ وَمَن يَكۡفُرۡ بِٱللَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ
وَكُتُبِهِۦ وَرُسُلِهِۦ وَٱلۡيَوۡمِ ٱلۡأٓخِرِ فَقَدۡ ضَلَّ ضَلَٰلَۢا بَعِيدًا

4-136 *ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அவன் தன்னுடைய தூதர்மீது அருளியதையும் இதற்கு முன்னர் அவன் அருளிய வேதங்களையும் ஈமான் கொள்ளுங்கள். அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் எவன் நிராகரிக்கிறானோ அவன் நிச்சயமாக வெகுதூரமான வழிகேட்டிலேயே இருக்கிறான்.*

இவ்வாயத்தை நோட்டமிட்டுப்பார். ஈமான் கொண்டவர்களே! என்று கூப்பிட்டுத்தான் மேலும் ஈமான் கொள்ளும்படி இறைவன் கூறுகிறான். அச்சமுறுத்துகிறான். எவன் நிராகரிக்கிறானோ என்ற வசனம் இம் மனிதனுடைய உள்ளக்கிடக்கையைச் சுட்டுவதாய் இருக்கிறது. இவன் சந்தேகிப்பவனாய் இருக்கும் நிலைமை குபிருக்கு, வழிகேட்டுக்கு நெருங்கியது என்பதை ஆயத்து அறிவிக்கிறது.

قَالَتِ الْأَعْرَابُ آمَنَّا ۖ قُل لَّمْ تُؤْمِنُوا وَلَٰكِن قُولُوا أَسْلَمْنَا وَلَمَّا يَدْخُلِ
الْإِيمَانُ فِي قُلُوبِكُمْ ۖ وَإِن تُطِيعُوا اللَّهَ وَرَسُولَهُ لَا يَلِتْكُم مِّنْ أَعْمَالِكُمْ
شَيْئًا ۚ إِنَّ اللَّهَ غَفُورٌ رَّحِيمٌ

49-14 *நாட்டுப்புறத்து அறபிகளில் பலர் தாங்களும் ஈமான்தாரிகள்தான் என்று கூறுகின்றனர். நீர்கூறும் நீங்கள் உங்களை(ஈமான்தாரிகள்) மூமின்கள் எனக் கூறாதீர்கள். ஏனென்றால் ஈமான் உங்களுடைய(கல்பில்)இருதயங்களில் நுழையவே இல்லை. ஆயினும் முஸ்லீம்கள் (வழிபட்டவர்கள்) என நீங்கள் கூறிக்கொள்ளுங்கள். எனினும் நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிபட்டு நடப்பீர்பளாகில் உங்களுடைய நன்மைகளில் எதையும் அவன் உங்களுக்குக் குறைத்து விடமாட்டான். நிச்சயமாக அல்லாஹ் மிக்கமன்னிப்போனும் கிருபையுடையோனுமாய் இருக்கிறான்.*

இவை போல் பல ஆயத்துக்கள் இருப்பினும் இவ்விரண்டையுமே நாம் போதுமாக்குவோம்.

**ஹதீஸ்:** ***எவர் நம்முடைய தொழுகையைப்போல் தொழுபவரும் எமது கிப்லாவைத் தொழுகையில் நோக்குபவரும் எம்மால் அறுக்கப்பட்டவற்றின் இறைச்சியை உண்பவருமாக உள்ளாரோ அவர் முஸ்லீம்தான் என்று றசூல்(ஸல்)அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்:அனஸ்(றலி)**
**ஆதாரம்:நஸாயி.**

இதே போன்ற இன்னும் பல ஹதீஸ்கள் இருப்பினும் இந்த ஒன்றையே நாம் போதுமாக்குவோம். இந்த விதமான ஆயத்துக்களில் ஹதீஸ்களில் சுட்டிக்காட்டப்பட்ட மக்கள் நாவினால் கலிமாவைக் கூறிய முஸ்லீம்களேயன்றி ஈமானைப்பற்றி எள்ளளவும் அறிந்து கொள்ளாதவர்கள் என்பதும் ஈமானை விளங்கி அறிய வேண்டிவர்கள் என்பதும் வெளிப்படையாகவே தென்படுகிறது. ஆயினும் நாம் இவர்களைப் பொதுப்படையாய் மூமின்கள் என்று கூறுவது வழக்கத்தின் அனுமதியாகும். ஏனென்றால் இவர்கள் அறிந்தோ அறியாமலோ கலிமாவை நாவினால் கூறியிருப்பதால் நாம் இவர்களை மூமின்கள் முஸ்லிம்கள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆயனும் முஸ்லம்கள் எல்லாருமே மூமீன்களே தான் என்பது பொருந்தாது.

ஒரு கட்சியின் கொள்கை விளக்கம் எதுவுமே ஒருவனுக்குத் தெரியாமல் இருக்கும் போதும் அவன் அந்த அரசியல் கட்சியை ஆதரிப்பவனாக, அக்கட்சிக்கு வாக்களிப்பவனாக இருந்தால் அவனை அக்கட்சியிலுள்ளவன் என்று அல்லது அக்கட்சியின் அங்கத்தவன் என்று நாம் ஏற்றுக்கொள்வதுபோல கலிமாவை நாவினால் கூறி இஸ்லாத்தின் வெளி அம்சங்களை எடுத்துக் கொண்டவனையும் நாம் மூமீனாக முஸ்லீமாக அங்கீகரிக்கவேண்டியது நியாயம் தானே! ஏனென்றால் இவனுடைய வெளிச்செயலை நாம் காணுகிறோமேயல்லாமல் இவனுடைய உள்ளத்தை எம்மால் காணமுடியாது. ஆனால் இந்த அங்கத்தவன் தன் முன்னேற்றத்துக்காக கட்சியின் கொள்கை விளக்கம் செயல் விளக்கங்களைக் கற்றறிய வேண்டியவனாய் இருக்கிறான். இவன் நாவினால் கலிமாவைக் கூறுவதே சட்டப்படி போதுமானதென்றாலும் அதே அளவோடு நின்று கொள்ள வேண்டும் என்பது கருத்தல்ல, ஆரம்ப காலத்தில் றசூல்(ஸல்)அவர்கள் இஸ்லாம் என்ற ஓர் கட்சியை முதலில் உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்ற அவாவினால் தான் நாவினால் கலிமாக் கூறிய மக்களையும் அங்கீகரித்திருக்கிறார். **அந்த அளவோடு நிறுத்துவதே போதும் என்றிருந்தால், நாம் முன்பு காட்டிய ஆயத்துகள் மூலம் மேலும் ஈமான் கொள்ளும்படி இறைவன் அறிவித்திருக்கமாட்டான்.** கலிமாவை விளங்கி அறிவதும் அதை ஏற்றுக்கொள்வதும் பர்ழாக்கப்பட்டிருக்காது.

நாவினால் கலிமாவைக் கூறி அதை விளங்கியறியாமல் இருக்கிற இந்த அவாம்களை கஸ்ஸாலி(றஹ்)அவர்களும் வேறுசிலரும் ஆட்டுமந்தைகளுக்கு ஒப்பிட்டுக்கூறுகிறார்கள்.குர்ஆன் இவர்களை மிருகங்களுக்கு ஒப்பானவர்கள் என்றும் குருடர்கள் செவிடர்கள் என்றும் வருணிக்கிறது. இவர்கள் ஓசையைப் பின்பற்றிச் செல்லும் கால் நடைகளுக்கு ஒப்பானவர்கள் என்று சில ஆயத்துக்கள் வருணிக்கின்றன. மக்களால் இமாம்கள் என்று கூறப்படுகிற ஒருசிலர் இயற்றியுள்ள பெரும்பாலான கிதாபுகள இவ்வினமான மக்களுக்காகத்தான் இயற்றப்பட்டிருக்கின்றன. றசூல்லாஹ்வுடைய பெரும்பாலான ஹதீஸ்களும் பெரும்பாலான செயல்களும் இவ்வின மக்களுக்காக விளக்கப்பட்டவைதான். இம்மக்களுடைய அறிவுக்கு ஏற்றபடி அச்சம் ஆதரவுகள் ஊட்டப்படவேண்டியது அவசியம்தான். ஆனால் இவ்விதமான விளக்கங்கள் உண்மையின் அடிப்படையில் இல்லாமல்

திரிவுபடுத்தப்பட்டு, இவ்விளக்கங்களே பூரணமான உண்மையென்றும் **இதற்கப்பால் கூறப்படுபவைகள் யாவும் வழிகேடு என்றும் பல கிதாபுகள் மக்களுக்கு விலங்கிட்டுருப்பதால்,** இவ்வின மக்களில் பெரும்பாலார் தாங்கள் அறிந்திருப்பதே முடிவான கல்வியென்றும் தாங்கள் நேரான பாதையிலே போய்க்கொண்டிருக்கிறோம் என்றும் நம்பியிருக்கிறார்கள். ஆகவே இவர்கள் எந்த வகையிலும் முன்னேற முடியாமல் தடைப்பட்டவர்களாகவே தங்கிவிடுகிறார்கள். இவர்களை வழிகாட்டுகிற இக்காலப்பட்டதாரிகளும் இதே கல்வியில் ஊறியிருப்பதால் இதற்கு மேலான எந்த அறிவும் பிழையானதேயென்றும் தாங்கள் கற்றறிந்துள்ளதே முடிவான கல்வியென்றும் நம்பி இம்மக்களுக்கு மேலும் மேலும் விலங்கிடும் வேலையிலேயே முயற்சிக்கிறார்கள்.

இந்த மிருகங்களுக்கொப்பான மக்களை வழிப்படுத்துவதற்காக எம்முன்னோர் கையாண்ட தவறான சில உபாயங்கள் இம்மக்களை ஓர் அங்குல துாரம்கூட முன்னேற முடியாதவர்களாகத் தடைப்படுத்தி விட்டிருக்கின்றன. இவர்களுக்கு எடுத்துக் காட்டப்படுகிற ஆயத்துக்கள் ஹதீஸ்கள் எல்லாம், மூமீனையும் முஸ்ரீக்கையும் பிரிப்பது தொழுகையே, தொழுகைதான் சுவர்க்கத்தின் திறவுகோல், ஆகிறாவில் முதல் விசாரணை செய்வது தொழுகையைப்பற்றித்தான் என்பவை போன்ற ஹதீஸ்களும் என்னை வணங்கவேயன்றி இன்ஸையும் ஜின்னையும் நான் படைக்கவில்லை என்பவை போன்ற திரிவுபடுத்திய கருத்துள்ள ஆயத்துக்களும்தான். அதாவது இவர்களுக்கு உபதேசிக்கப்பட்டது எல்லாம் தொழுகை முதலாம் வணக்கங்களையும் அவற்றின் வெளிக் கோலங்களையுமேயல்லாமல்,**அவை எதற்காக? அவற்றின் நோக்கம் தான் என்ன? என்ற விஷயங்கள் உபதேசிக்கப்படுவதே இல்லை.** ஆகவே, இம்மக்கள் மார்க்கம் என்பதே தொழுகைதான் என்ற முடிவுக்கே வந்துவிடுகிறார்கள். தொழுகை எவனிடமில்லையோ அவன் மூமீனோ முஸ்லீமோ அல்ல என்ற முடிவுக்கே வந்துவிடுகிறார்கள். நீர் மார்க்கமல்லாதவராய், வழிகெட்டவராய் இருக்கிறீர். நீர் எங்களைப்போல் விக்கிரக வணக்கத்தில் ஈடுபட்டுக்கொண்டு சொன்னால்தான் நாங்கள் அதைப்பொருட்படுத்துவோமென்று அக்கால முஸ்ரீக்கீன்கள் கூறியது போலவே,**இந்த அவாம்களும் தொழுகையற்றவனுடைய பேச்சைக்கேட்பது ஹறாம் என்கிறார்கள்.** நீர் உபதேசம் செய்வதனால் எம்மைப்போல் தொழுது கொண்டால் தான் அதை நாம் கேட்போம் என்கிறார்கள். இன்று தப்லீக் என்ற போர்வையிலுள்ள மக்களின் உபதேசமெல்லாம் இந்த மருட்சி வார்த்தைகள்தான்.

۞ يَٰٓأَيُّهَا ٱلرَّسُولُ لَا يَحْزُنكَ ٱلَّذِينَ يُسَٰرِعُونَ فِى ٱلْكُفْرِ مِنَ ٱلَّذِينَ قَالُوٓا۟
ءَامَنَّا بِأَفْوَٰهِهِمْ وَلَمْ تُؤْمِن قُلُوبُهُمْ

5-41 *துாதரே!சிலர் நிராகரிப்பின்பால்(குபிரின்பால்) விரைந்தோடுவது உமக்கு கவலையைத் தரவேண்டாம். (ஏனென்றால் அவர்கள் தங்கள் வாயினால்மட்டும் ஈமான் கொண்டோம் என்று கூறினார்களேயன்றி அவர்களுடைய இருதயங்கள் அதனை ஒப்புக்கொள்ளவில்லை.)*

இதே போல இக்கால அவாம்களும் இதே நிலையில் தான் தென்படுகிறார்கள். இது எம்முன்னோருடையவும், ஆராய்வில்லாத இக்காலப் பட்டதாரிகளுடையவும் **அறியாமையால் சமூக மக்களுக்கு ஏற்பட்ட பெரிய ஓர் சேதமாகும்.** இம்மக்களை ஆலோசனைக்கெடுத்தால் இவர்களுடைய செயல்கள் முஸ்லீம்களை ஒத்ததாயும் கொள்கை விளக்கம் (நம்பிக்கை) முஸ்ரிக்கீன்களை ஒத்ததாயும் தென்படுவதால் இவர்கள் முனாபிக்கீன்கள் என்ற கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகவே தென்படுகிறார்கள்.

إِنَّ ٱلْمُنَٰفِقِينَ يُخَٰدِعُونَ ٱللَّهَ وَهُوَ خَٰدِعُهُمْ وَإِذَا قَامُوٓا۟ إِلَى ٱلصَّلَوٰةِ قَامُوا۟
كُسَالَىٰ يُرَآءُونَ ٱلنَّاسَ وَلَا يَذْكُرُونَ ٱللَّهَ إِلَّا قَلِيلًا

4-142 *நிச்சயமாக இந்த முனாபிக்கீன்கள் அல்லாஹ்வை வஞ்சிக்கின்றனர். எனினும் அல்லாஹ்வோ அவர்களை வஞ்சித்து விடுகிறான்.அவர்கள் தொழுகையில் நின்றாலோ சோம்பேறிகளாய் நின்று மனிதர்கட்குக் காண்பிக்கிறார்கள். அவர்கள் வெகு சொற்பமாக அன்றி அல்லாஹ்வைத் தியானிப்பதில்லை.*

இவை போன்ற பல ஆயத்துக்கள் இருப்பினும் இவ்வளவையே நாம் போதுமாக்குவோம். இவ்வின மக்களில் சிறுசிறு உயர்வுதாழ்வுகள் இருப்பினும் ஏறக்குறைய அடிப்படை ஒன்றுதான். இவ்வினமக்கள் மார்க்கமாக, வேதமாக, சரியான பாதையாக நம்பியிருப்பதெல்லாம் தங்கள் தாய், தந்தையர்களால் சமூக மதிப்புடையவர்களால் தாங்கள் கற்றறிந்த புஸ்தகம் கிதாபுகளால் அறிந்துள்ள கேள்விப்பட்டுள்ள சமூக, அரசியல், கலாசார விஷயங்களேயன்றி **ஈமான் இஸ்லாத்துடைய**

**உண்மையான விளக்கங்களேயல்ல.** இவர்கள் மிகவும் சிந்தனை குறைந்தமக்களாய் இருப்பதாலும் நுற்கேள்வி, பழக்கவழக்கம் பிடிவாதம் என்னும் திரைகளில் கட்டுண்டிருப்பதாலும் பெரும்பாலும் உண்மையை ஒப்புக்கொள்வதும் குறைவுதான். இம்மக்களுடைய இந்த பரிதாபமான நிலைமைக்கு முக்கிய காரணம் அவர்களுடைய சிறுபராயத்தில் ஊட்டப்பட்ட தவறான விளக்கங்களேயாகும். இம்மக்கள் வணக்கங்களில் கண்மூடித்தனமாய் ஈடுபடுகிறார்களேயன்றி நாம் செய்யும் வணக்கம் எம்மை உயர் பதவிக்கு இட்டுச்செல்லுமா? இட்டுச் சென்றுள்ளதா? என்பதைச் சிந்திக்கிறார்களே இல்லை. வணக்கங்களின் நோக்கம் அவர்களுக்கு அறிவிக்கபடாமைதான் காரணம்.

இவ்வினமான மக்கள் மூமீன்கள் என்ற போர்வையில் இருந்தாலும் குபிர் என்னும் நிராகரிப்பை நெருங்கியவர்களாக, வழி சறுக்கக்கூடியவர்களாக (வழி சறுக்கியவர்களாக) தங்கள் வழியைச்சரியாய் அறிந்து அதில் நிலைபெறாதவர்களாக, தங்களுடைய குறிக்கோளை அறியாதவர்களாக இருப்பதால் இவர்களுடைய உலக ஆத்மீக விஷயங்களையெல்லாம் ஒன்றுபடுத்தி இவர்களுடைய அறிவுக்கேற்றபடி அச்சம் ஆதரவுகளை ஊட்டவேண்டியது அவசியமாய் இருந்தது. இவர்களுடைய ஆத்மீக விஷயத்துக்காக வணக்கங்களும் அவற்றின் உதவிக்காகச் சிட்சில சமூக, அரசியல் சுகாதார பழக்கவழக்கம் போன்றவற்றையும் ஒன்றுபடுத்தி ஸறகு என்ற பெயரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்குரிய மனோபக்குவத்துக்கேற்றப்படி இறைவனைப்பற்றிய அச்சம்தான் இவர்களுக்குப் பெரும்பாலும் ஊட்டப்பட்டிருக்கிறது.

அதாவது மனிதன் தன்னுடைய உண்மையான குறிக்கோளை அடைவதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. அந்த வழி இடைவிடாமல் ஞாபகம் செய்வதே ஆகும். (திக்கிர் செய்வதே ஆகும்). ஆனால் இரவு பகலாக மனிதன் ஆரம்ப நிலையிலிருந்தே திக்ரில் (தியானத்தில்) மூழ்கி விடுவதென்றால் இது முடிந்த ஓர் காரியமே அல்ல. அது தவிர அறிவு குறைந்த மனிதன் உலக விவகாரங்களில் ஈடுபடவேண்டியவனாயும் இல்லாவிடில் வாழ முடியாதவனாயும் இருக்கிறான். திக்ரில் ஈடுபட முடியாத உள்ளப் பலவீனமுடையவனாகவும் உலக இன்பதுன்பங்களை அனுபவிக்க வேண்டியவனாகவும் மனிதன் இருக்கிறான். ஆகவே இந்த மனிதன் இடைவிடாமல் திக்ரில் ஈடுபடமுடியாதவனாயும் பூரணத்தன்மையான குறிக்கோளை அடையமுடியாதவனாயும் இருப்பதைக் கண்ட இறைவன் இதை இலேசாக்க விரும்பி மனிதனுக்காகச் சில கட்டாய கடமைகளை (பர்ழுகளை) ஈந்தருளினான். இந்த வகையில் உள்ளவைதான் தொழுகை, நோன்பு போன்றவை. தொழுகையைப் பர்ளு என்றும் திக்கிரை நபில் என்றும் கூறப்படும். **இந்த நபிலை (திக்கிரை) மனிதன் பெற்றுக்கொள்வதற்காகவே பர்ளுகள் தரப்பட்டிருக்கின்றன.**

ஆனால் எம்முன்னோர்களும் இக்கால வழிகாட்டிகளும் பர்ளுவை மிக உயர்ந்த ஒர் காரியமாகவும் நபிலைத் தாழ்ந்த ஓர் காரியமாகவும் எமக்குக் கற்பித்திருக்கிறார்கள். இந்த முன்னோர்களும் இவர்களைப் பின்பற்றிய தற்காலப்படடதாரிகளும் எந்த அடிப்படையில் இப்படி உயர்வுதாழ்வு கணித்துக்கொண்டார்களோ நான் அறியேன். ஆனால் இவ்விஷயத்தைக் குர்ஆன் ஹதீஸ்களைக்கொண்டு ஆராயும்போது **நபில் என்று குறிப்பிடப்படுகிற திக்கிர் என்பதே மிகப்பெரிய ஓர் காரியம் என்றும் அதைப்பெற்றுக்கொள்வதற்கு உதவியாகவே பர்ளுகள் தரப்பட்டன என்பதும் தெரியவருகிறது.** மேலும் எம்முடைய வழிகாட்டிகளில் பலர் இதை உணர்ந்துகொள்ளவே இல்லை என்பதும் தென்படுகிறது.

وَأَقِمِ ٱلصَّلَوٰةَ لِذِكۡرِيٓ

20:14 *திக்கிர் செய்வதற்காகவே தொழுகையை எடுத்துக்கொள்ள வேண்டும்.*

என்பதுதான் ஆயத்தின் கருத்து. நம்முன்னோர் ஏதோசில ஆதாரங்களை அல்லது யூகங்களைக்கொண்டுதான் திக்கிரைவிட தொழுகை பெரியது என்று சாதாரண மக்களுக்குக் கூறியிருந்தாலும் அக்கூற்று முற்றிலும் உண்மைதான் என்பது பொருளல்ல. ஆனால் இறைவழி செல்ல முற்படுகிற நீ உண்மையை உணர்ந்தே ஆகவேண்டும். **திக்கிர் என்ற நபிலுக்காகவே தொழுகை தரப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.**

ஹதீஸ்: *உங்களில் எவரேனும் தூங்கிப் போய்த் தொழுகையை விட்டு விட்டால் அல்லது அதனை மறந்து விட்டால் நினைவு வந்த உடனே தொழுது விடவும். ஏனென்றால்நிச்சயமாக அல்லாஹ் தன்னை நினைவு கூறும் பொருட்டே (திக்கிர் செய்யும்பொருட்டே) தொழுகையைக் கடைப்பிக்கும்படி கூறியுள்ளான் என்று 20:14ஆவது குர்ஆன்ஆயத்தை றசூல்(ஸல்)அவர்கள் ஓதிக்காட்டினார்கள்.*

அறிவிப்பவர்: அனஸ்(றலி)
ஆதாரம் :முஸ்லீம்.

اتْلُ مَا أُوحِيَ إِلَيْكَ مِنَ الْكِتَابِ وَأَقِمِ الصَّلَاةَ ۖ إِنَّ الصَّلَاةَ تَنْهَىٰ
عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ ۗ وَلَذِكْرُ اللَّهِ أَكْبَرُ ۗ

29:45 *வஹிமூலம் உமக்கு அறிவிக்கப்பட்ட இவ்வேதத்தை நீர் ஓதித் தொழுகையைக் கடைப்பிடித்துவாரும். ஏனென்றால் நிச்சயமாகத் தொழுகை மானக்கெடான காரியங்களில் இருந்தும் பாவங்களில் இருந்தும் விலக்கிவிடும். அல்லாஹ்வைத் திக்கிர்(தியானம்) செய்வதோ மிகப்பெரிய காரியம்.*

நான் உனக்கு ஆதாரமாய் இருக்கிறேன். என்னோடு உனக்குச் சம்பந்தம் இருக்கிறது. ஒரு மூச்சாவது என்னை மறந்து விடாதே என்று இறைவன் கூறுகிறான்.

மறதியை நீக்கி எந்த நேரமும் திக்கிர் செய்து கொண்டிருப்பது யாவராலும் முடிந்த ஓர் காரியமல்ல என்பதைக் கண்ட இறைவன் நபில் என்ற திக்ரை பர்ளோடு இணைத்து இலகுவாக்கி, அவாம்களான ஆரம்ப நிலையிலுள்ள மக்களுக்கு ஓர் பாதையைவகுத்துத் தந்திருக்கிறான். **இப்பாதையின் பெயர்தான் "ஹுர்புல்பராயிலி" என்பது.** பக்திமார்க்கம் என்பது இதுதான். இது இஸ்லாத்தின் நேஸரி வகுப்பாகும். மக்களில் பெரும்பாலாருக்கும் பட்டதாரிகளில் சிலருக்கும் இவ்வுண்மை தெரியாவிட்டாலும் உண்மை இதுதான். அதாவது ஒரு நாளைக்கு ஐந்து முறையாவது தொழுகையின் போது திக்ரில் ஈடுபட்டு நினைவு கூரவேண்டும் என்பதே இறைவனின் ஆழிய நோக்கமாகும். ஆகையால்தான் திக்கிர் செய்வதற்காகவே தொழு என்று இறைவன் கூறுகிறான். ஆகவே **தொழுகை என்பது திக்கிருக்காகவும் திக்கிர் என்பது மறதியை நீக்கிக் கலிமாவின் உண்மையில் நிலை பெறுவதற்காகவும் (ஈமானை உறுதிப்படுத்துவதற்காகவும்) ஈமானை உறுதிப்படுத்துவது குறிக்கோளான சாந்தியை, பூரணத்தன்மையைப் பெறுவதற்காகவும் தான் என்பதை இப்போது சந்தேகமில்லாமல் அறிந்து கொண்டோம்.**

## இதன் சாரம்

**1ஆவது**: அறிவு குறைந்த ஆரம்ப நிலையுள்ள மனிதனின் விசுவாசம் (ஈமான்)வளர்ச்சியடைவதற்காகத் தொழுகை தரப்பட்டுள்ளது.

**2ஆவது:** தொழுகையின் நோக்கம் மனிதனைத் திக்ரில் ஈடுபடுத்த வேண்டும் என்பதே.

**3ஆவது:** திக்ரின் நோக்கம் மறதியை நீக்குவதும் ஈமானில் நிலைபெற்றுச் சாந்தியை அடையவைப்பதுமே.

இந்த தொழுகை கட்டாயக் கடமையாக விதிக்கப்பட்டுள்ள மக்களில் பலபடித்தரங்கள் இருப்பினும் ஏறக்குறைய அவர்கள் யாவரும் ஒரே அடிப்படையில் உள்ளவர்களேதான். இவர்களில் மிக உயர் பதவியுடையவர்கள்தான் முத்தக்கீன்கள் என்பவர்கள். இவர்கள் குர்ஆனைக் கொண்டு வழியை அறிந்து கொள்ளக் கூடிய அறிவைப் பெற்றுக்கொண்டவர்கள்.

الم ﴿١﴾ ذَٰلِكَ الْكِتَابُ لَا رَيْبَ ۛ فِيهِ ۛ هُدًى لِّلْمُتَّقِينَ

2-1,2 *இது வேதநூல். இதில் சந்தேகமில்லை. பயபக்தியுடையவர்களுக்கு நேரான வழியைக் காட்டும்.*

முத்தக்கீன்கள் என்ற இவர்கள்தான் "ஹர்புல்பராயிலி" என்ற பக்தி மார்க்கத்தில் சென்றுகொண்டிருப்பவர்கள். இவர்கள் தொழுகை முதலாம் கட்டாயக்கடமைகளைக் கைக்கொள்வார்கள். அவற்றின் நோக்கத்தையும் அவர்கள் அறிவார்கள். அக்கடமைகளை முறையாகவும் செய்வார்கள். ஆகவே இவர்கள் அடுத்த வகுப்பைப்பெறக் கூடிய மனோபக்குவத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள்

أُولَٰئِكَ عَلَىٰ هُدًى مِّن رَّبِّهِمْ ۖ وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ

2-5 *இத்தகையோர் தங்களின் இறைவனுடைய நேரான வழியில் இருக்கிறார்கள். இவர்கள் நிச்சயமாகச் சித்தியடைவார்கள்.*

இவ்வகையினர் என்றோ ஓர் நாள் நிச்சயமாகச் சித்தியடைவார்கள், குறிக்கோளைப் பெறுவார்கள் என்பது உண்மை. இந்த பக்திமான்களில் மிகமிகத்தாழ் நிலையில் இருப்பவர்கள்தான் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற வகையில் சென்று கொண்டிருக்கிற பாமர மக்கள். தப்லீக் என்ற போர்வையில் உலாவுகிற, அவர்களைப் பின்பற்றுகிற மிகப்பெரும்பாலான மக்கள் இவ்வகையினரே. **இவர்கள் ஈமான்கொள்வது ஒரு புறமிருக்க இஸ்லாத்திலேயே முற்றிலும் நுழைய வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் தாடியும் மிஸ்வாக்குக் குச்சியுமே இஸ்லாம் என்று நம்பியிருப்பவர்கள்.** இவர்கள் கலிமாவைக் கூறியிருப்பதால் சட்டப்படி முஸ்லீம்கள் தான்.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱدْخُلُواْ فِى ٱلسِّلْمِ كَآفَّةً وَلَا تَتَّبِعُواْ

خُطُوَٰتِ ٱلشَّيْطَٰنِ ۚ إِنَّهُۥ لَكُمْ عَدُوٌّ مُّبِينٌ

2:208 *ஈமான் கொண்டவர்களே! நீங்கள் இஸ்லாத்தில் முற்றிலும் நுழைந்து விடுங்கள். தவிர ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான விரோதி.*

இந்த மக்களுக்கு ஷைத்தான்கள் யார் என்பதை அறிவுறுத்தக் கூடியவர்கள் பெரும்பாலும் இந்த ஸமானில் மிகக்குறைவாய் இருப்பதனாலும், அறிவுறுத்துவோரின் சொற்களை இம்மக்கள் கவனிக்காது பறக்கணிப்பதனாலும் பெரும்பாலும் ஷைத்தான்களுடைய அடிச்சுவட்டைத்தான் இவர்கள் பின்பற்றுகிறார்கள். ஆயினும் அவர்கள் தாங்கள் நேரான பாதையில் சென்றுகொண்டிருப்பதாகவேதான் நம்புகிறார்கள்.

இப்போது சிந்தனை செய்துபார். (இன்னமல் அஹ்மாலு பின் நிய்யாத்தி) செயல்கள் யாவும் நோக்கமுடையவை என்று ஹதீஸ் கூறுகிறது. குர்ஆனும் இதை ஆமோதிக்கிறது. அதன்படி தொழுகை என்னும் உடலால் செய்யப்படும் செயலுக்கும் ஒரு நோக்கம் வேண்டும். இந்த நோக்கம்தான் திக்கிர் (நினைவுபடுத்தல்) என்பது. இந்தத் திக்கிர் என்பதும் ஓர் செயலாகவே இருக்கிறது. தொழுகை உடலின் செயலாய் இருந்ததுபோல திக்கிர் உள்ளத்தின் செயலாகவே இருக்கிறது. அதாவது தொழுகையின் வெளிக்கோலமான நிலை, றுகூஉ, ஸுஜூது இருப்பு முதலிய செயல்கள் யாவும் பௌதீக உடலின் செயல்களாகவும் தொழுகையின்போது பாவிக்கப்படுகிற சொற்களின் கருத்தை நினைவுபடுத்தல், இறைமுன்னிலையில் நிற்பதாய் நினைவுபடுத்தல் போன்ற செயல்கள் உள்ளத்தின் செயல்களாகவும் இருக்கின்றன. அப்படியானால் உள்ளத்தின் செயலான நினைவுபடுத்தலுக்கும் (திக்கிருக்கும்) ஓர் நோக்கம் வேண்டுமல்லவா? ஆம்,உள்ளச்செயலான திக்ருக்கும் ஓர் நோக்கம் வேண்டும். **அந்த நோக்கம்தான் அடியான் அல்லாஹ்விலே பனாவாகுதல் என்பது.** இந்த பனாவாகுதல் உடலுடையவோ உள்ளத்துடையவோ செயலல்ல. இது வசனங்களால் விபரிக்ககூடிய ஓர் விஷயமும் அல்ல. இந்த நிலைமையை எய்துவதுதான் **தொழுகை தரப்பட்ட உண்மையான நோக்கம்.** இந்த விபரத்தைப் பொறுமையோடு விளங்கித் தெளிவுபெற்று அமலில் ஈடுபட்டால் அந்த அமலின் பூரண பலனை அடைவது நிச்சயம்தான். ஆனால் இவ்வுண்மையை உணர்ந்து அதன்படி அமலில் ஈடுபடாத ஓர் மனிதன் அமலின் வெளிச் செயல்களிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி விடுகிறானேயன்றிப் பிரயோசனத்தைப் பெறமுடியாதவனாகவே மாறி விடுகிறான். நான் தொழுகையை நிறைவேற்றி விட்டேன் என்று நம்புகிறான். எனவே, ஏகத்துவத்தைத் தரிபடுத்த எற்படுத்தப்பட்ட தொழுகை, இன்று துவிதக் கொள்கையையே தரிபடுத்திக் கொண்டிருக்கிறது.

ஆனால் கூலிகொடுக்கப்படும் நாளில் தன் அமல்கள் பிரயோசனமற்றவை என்பதைக் காணவே போகிறான். (பவைலுல்லில் முஸல்லின் அல்லதீனஹும் அன்ஸலாத்திஹிம் ஸாஹூம்)என்ற ஆயத்தில் தொழுகையைப் பழுதாக்கிய தொழுகையாளர்களுக்கெல்லாம் கேடுதான் என்று இறைவன் கூறுவதையும், தொழுகிறவர்களில் எத்தனையோ பேருக்கு வருத்தமும் நோவுமே தவிர மற்றப்படி அத்தொழுகையினால் பலன் இல்லை என்று றசூலுல்லாஹ் கூறிய ஹதீஸையும் நாம் கவனத்துக்கு எடுக்க வேண்டும். இந்த ஹதீஸ் முன்பு தரப்பட்டுள்ளது. அப்படியானால் உண்மையை அறியும் வரையில் தொழாமலே இருந்து விடவேண்டுமென்று நீங்கள் கூறுகிறீர்களா? என்று என்னை நீ கேட்கலாம். **இல்லை நான் அப்படிக் கூறவேயில்லை.** அறிவு குறைந்த மனிதன் தன் வாழ்நாளில் பெரும்பகுதியை வீணாய்க்கழிப்பதை விட அல்லது அனாவசியமான வஷயங்களில் ஈடுபடுவதை விட அறிந்தோ அறியாமலோ தொழுகையில் ஈடுபாடுகொள்வது சமூகத்தில் எவ்வளவோ நன்மை பயக்கக் கூடியதாகவே இருக்கிறது. அவனுடைய தொழுகை ஆகிறாவில் நன்மை பயக்காதென்பது உண்மையேயானாலும், துன்யாவுடைய விஷயத்தில் எவ்வளவோ நன்மைகள் இருக்கவே செய்கின்றன. ஆகவே நான் கூறுவது என்னவென்றால் அறிவில்லாத நிலையில் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போதே **படிப்படியாய் உண்மையை உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதும் உண்மையின்படியே செயலை அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதும்தான்.**

ஷரீஅத் என்னும் இந்தப் பக்தி மார்க்கம் முறையாய் கையாளப்பட்டால், அதாவது “ஹுர்புல்பராயிலி” என்ற கட்டாய கடமைகளைக் கொண்டொழுகும் பாதையை மனிதன் முறையாய்க் கையாண்டால் முக்திமார்க்கம் என்றும் **ஹகீகத் மஹரிபத் தென்றும் கூறப்படுகிற“ஹுர்புன் நவாபிலி”**

**என்ற ஓர் பாதையில் அம்மனிதன் போய்ச் சேர்வான்** என்பது நிச்சயம் தான். இந்த “ஹுர்புன் நவாபிலி” என்பதை நாம் பின்னால் விளங்குவோம்.

நாம் முன்பு விளக்கிய, சாதாரண அவாம்களுக்குத் தரப்பட்ட பக்தி மார்க்கம், அல்லது “ஷரீஅத்’என்று கூறப்படுகிற “ஹர்புல்பராயிலி” என்னும் கட்டாய கடமைகளைக்கொண்டு செல்லும் பாதையின் வெளி அனுஷ்டானங்களை ஷாபி, ஹனபி, ஹம்பலி, மாலிகி, போன்ற மதஹபுகளாக வகுத்துச் சிற்சில அறிஞர்கள் விபரம் தந்திருக்கிறார்கள். இந்த அறிஞர்களின் விளக்கங்களில், வியாக்கியானங்களில், சாதாரண அவாம்களுக்கு மிகப்பல நன்மைகள் இருக்கின்றன என்பது உண்மையே. ஆனாலும்,**அம்மக்களை உயர் பதவியைப் பெற முடியாதவர்களாய் மாற்றி விட்டிருக்கின்றன என்பதும் உண்மைதான்.** அதிலும் மிக விஷேடமாய் இறை வழி செல்லும் மக்களுக்கு(ஸுபிகளுக்கு) மிகக் கஷ்டமான சில சிக்கல்களையும் அவர்களுடைய விளக்கங்கள் ஏற்படுத்தி வைத்திருக்கின்றன. உதாரணமாக ஓர் ஆஸிக்கு அல்லது ஓர் அச்சம் தீர்ந்த நல்லடியார், அல்லது தொழுகையை மேற்கொள்ள முடியாத ஒருவர், அல்லது முக்கியமான ஏதோ பல காரணங்களுக்காகப் பள்ளிவாசலுக்குப் போகாமல் தனிமையில் தொழுதுகொள்பவராய் இருந்தாலும், அல்லது வெளிப்படையான சில அனுஷ்டானங்களை விட்டவராக இருந்தாலும் இந்த மதுஹபுகளைப் பின்பற்றிய பெரும்பாலார் அவரை ஓர் மூமினாக முஸ்லீமாக ஏற்றுக் கொள்வதில்லை. அவர் ஓர் வழி கெட்டவரென்றே கருதப்படுகிறார். ஏனென்றால் இந்த மதுஹபுகளை வியாக்கியானம் தந்த ஒரு சிலர் கூறியுள்ள சில விபரங்கள் மக்களிடையே இந்த நிலைமையை ஏற்படுத்தி விட்டிருக்கின்றன. ஒரு சில பட்டதாரிகள் கூட இந்த நிலைமையில்தான் தென்படுகிறார்கள்.

அதாவது இவ்விதமான விளக்கங்கள் பாமரமக்களைக் கட்டுபடுத்துவதற்காக **ஒரு சிலரால் கையாளப்பட்ட ஆதாரமற்ற யூகங்களே என்பது இவர்களுக்குத் தெரியவில்லை.** மேலும் தாங்கள் அறிந்துள்ள மார்க்க சம்பந்தமான விஷயங்கள் பெரும்பாலும் உலக விவகாரங்களே என்பதும் தெரியாது. இந்த வியாக்கியானிகளின் வியாக்கியானங்களில் மூழ்கி அவர்களால் இடப்பட்ட சட்ட வரம்புக்குள் கட்டுப்பட்டுக் கிணற்றுத் தவளைபோல் வாழ்கிற இம்மக்களில் பெரும்பாலாருக்கு,ஈமான் என்பது செயலற்ற கொள்கை விளக்கமாய், சித்தாந்தமாய், அறிவாய் இருக்கிறது என்பதும் இந்த அறிவு என்னும் ஈமானைக் கொண்டே பூரணத்தைப் பெறமுடியும் என்பதும் தெரியாது. மேலும் ஆரம்ப நிலையிலுள்ள ஈமானைப் பூரண நிலைமைக்குகொண்டு வருவதற்காகவே தொழுகை என்பதும் தெரியாது. செயல்கள் உளத்தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் நோக்கத்துக்காகவே செயல்கள் என்பதும் அறிவு குறைந்த மக்களுக்கு எப்படித்தெரியும்? இவர்களுக்கு இவ்வுண்மையை எந்த புஸ்த்தகம் எந்த வழிகாட்டி விளக்கி இருக்கிறார்? இந்த மனிதர்களுக்கு கொடுக்கப்பட்ட விளக்கம் நீ சுவர்க்கத்தைப் பெற வேண்டுமானால், நரகத்தைவிட்டும் தப்பித்துக்கொள்ள வேண்டுமானால் நீ தொழுதே ஆக வேண்டும் என்பதோடு முடிவடைந்து விடுகிறது.

ஆகவே தன் குறிக்கோள் சுவர்க்கத்தைப் பெறுவதே என்று நம்பியுள்ள இம்மக்கள் **தீன் மார்க்கம் என்பது தொழுகையை நிலைப்படுத்துவதே என்று தீர்ப்புக் கட்டியிருக்கிறார்கள்.** தாங்கள் அறிந்துள்ள விபரங்களே இறுதியானவை என்றும் நம்பியிருக்கிறார்கள். இவர்களுக்கு இஸ்லாத்துடையவும் ஈமானுடையவும் சரியான விபரங்களைத் தனித்தனியாய் பிரித்து விளக்கப்படாமையினாலும் குறிக்கோள் இன்னதுதான் என்பதைத் தெளிவுபடுத்தாமையாலும் இதற்கடுத்த ஓர் நிலையை அடைவதற்குரிய விபரங்களே தாங்கள் அறிந்திருப்பது என்பதைப் புரிந்துகொள்ளாமையாலும் தங்களை விட உயர்ந்த பதவியுடையோர் இல்லை, தங்கள் அறிவை விட உயர்ந்த அறிவும் கிடையாது என்றே நம்பிவிடுகிறார்கள். இம்மக்களுக்கு வழிகாட்டும் பட்டதாரிகளிலும் பலர் இவ்விதமான தீவிர உணர்ச்சியோடுதான் வாழ்கிறார்கள்.

முந்திய நபிமார்களும் றசூல்(ஸல்)அவர்களும் கொண்டு வந்தது ஈமானின் விபரம் தான் என்பதும் அதை நிலைப்படுத்தவே அமல்கள் என்பதும் இவர்கள் அறிந்து கொள்ளாத ஓர் விஷயமாகவே இருக்கிறது.

**ஹதீஸ்:** ***வணக்கங்களில் சிறந்தது எது என்று றசூல்(ஸல்) அவர்களிடம் கேட்டபோது இஸ்லாம் என்றும் இஸ்லாத்தில் சிறந்தது எது என்று கேட்கப்பட்டபோது ஈமான் என்றும் விடை கூறினார்கள்.***

இந்த ஹதீஸை நோட்டமிட்டுப்பார். முதலாம் வகுப்பிலுள்ள ஓர் மாணவன் கல்வி கற்பதும் செயல்களில் ஈடுபடுவதும் இரண்டாவது வகுப்பைப் பெறுவதற்காகத்தானே. அப்படியில்லாமல் நான் படித்துக்கொண்டிருப்பதே முடிவான கல்வி என்றும் அதற்கு மேற்பட்ட ஓர் வகுப்பும் கல்வியும் கிடையாது என்றும் நம்பியுள்ள மாணவன் இரண்டாம் வகுப்புக்குச் செல்லவேமாட்டான். அம் மாணவன் தான் முதலாவது வகுப்பைக் கற்பது இரண்டாவது வகுப்பை அடைவதற்காகத்தான் என்பதை அறிந்துகொள்ளும் வரையிலும் தான் இருந்த வகுப்பிலேயேதான் இருந்து கொண்டிருப்பான். அவன் தன்னுடைய உண்மையான நோக்கத்தை புரிந்து கொண்டவானாய் இருந்தால் அவன் இறக்கும் வரையில் அதே நிலையில் இருக்கப்போவதே இல்லை. இவனுடைய ஆசிரியர் இரண்டாம் வகுப்பு அவசியமில்லாதது வழிகேடானது என்று இவனைக் கற்பித்திருக்கும்போது இம்மாணவன் இரண்டாம் வகுப்பிற்கு ஏன் செல்லப் போகிறான் இது மாணவனுடைய குற்றமேயல்ல. தன் ஆசிரியரின் உபதேசங்களில் ஆராய்தல் செய்யமுடியாத அறிவு குறைந்த மாணவன், ஆசிரியரின் உபதேசங்களைத்தான் நம்புவான். இதே போல எம் ஆசிரியர்களான ஒரு சில முன்னோர்கள் எம்மக்களுக்கு புகட்டிய சில அறிவுகள், அதிலும் விசேடமாகத் தொழுகையுடைய விபரங்கள், அவாம்கள் எந்த நிலையில் ஆரம்பத்தில் இருந்தார்களோ அதே நிலைமையிலேயே இறக்கும்

வரையிலும் வாழக்கூடிய தன்மையை ஏற்படுத்தி விட்டிருக்கின்றன. அவர்களுடைய முன்னேற்றத்துக்குத் தடைவிதித்து, அப்படி முன்னேறுவது தவறான பாதையென்றே விளக்கியிருக்கின்றன. மனிதன் வழிதவறிவிடக் கூடாது என்பதற்காகப் போடப்பட்ட சில கடினமான கட்டுப்பாடுகள் மனிதனின் உண்மையான குறிக்கோளை மறக்கடித்துவிட்டிருக்கின்றன.

மனித சமுதாயத்தில் உருவாகியுள்ள தவறான மூடப்பழக்க வழக்கங்கள் **தவறான குருட்டு நம்பிக்கைகளுக்கெல்லாம் மூலகாரணம் கடினமான அச்சமும் ஆதரவுமேயாகும்.** அளவுக்கதிகமான அச்சமும் ஆதரவும் மனிதனுடைய அறிவை மழுப்பி அவனை முழு மூடனாக மாற்றும் என்பது நிச்சயம். இந்த அச்சம் ஆதரவுகளை ஊட்டும் விஷயங்களில் எம்முன்னோர்களில் பலர் அளவுக்கதிகமான யூகங்களைக் கையாண்டு, சில விஷயங்களை மிகைப்படுத்திக் கூறியிருப்பது மனிதன் ஆத்மீகத்துறையில் முன்னேறுவதற்குத் தடையாய் அமைந்து விட்டன. ஒரு சாதாரண மனிதன் அறிந்துள்ள விளக்கப்படி இறைவனை மிகப்பெரிய ஓர் பயங்கரவாதியாகத் தண்டனை அளிப்பவனாகக் காணுகிறான். ஆனால் அவன் மாபெரும் காருண்ய மூர்த்தி என்பது பேச்சளவில் தெரியும் என்றாலும் அவ்விறைவனால் அளிக்கப்படும் தண்டனை **எம்முடைய அறிவீனத்தால் நாம் ஏற்படுத்திக்கொண்ட ஆத்மீக முன்னேற்றத்தின் தடைதான்** என்பது நம்மில் பெரும்பாலாருக்குப் புரிவதே இல்லை.

இறைவழி செல்கிற ஒரு ஸுபி நாஸ்த்தியாகும் நிலைமையில் அதாவது இறைவனேயன்றி நான் என்றுணர்பவன் வேறில்லை என்ற (அனாநிய்யத் அழியும்) நிலைமையில் மிகப்பெரிய ஓர் சிக்கலில் மாட்டிக்கொள்கிறார். இவர் மதுஹபுகளைப் பின்பற்றியவராக, முன்னோர்களின் தவறான விளக்கங்களில் ஊறியவராக இருப்பதால்தான் இந்த நிலைமை அவருக்கு ஏற்படுகிறது. எப்படியென்றால் இறைவனை உடனிருத்தி, அல்லது முன்நிறுத்தித் தொழுகையை முடிப்பதென்றால் அது அவரால் முடிவதில்லை. ஏனென்றால் இறைவனும் இருக்கிறான் நானும் இருக்கிறேன் என்ற துவித உணர்வு அங்கே அவருக்கு ஏற்படுகிறது. ஆனால் இவருடைய அறிவோ அல்லாஹ்வையன்றி ஒன்றுமே இல்லையென்று கூறுகிறது. இவ்விடத்தில் இவர் சரியான மார்க்க விளக்கம் இல்லாதவராய் இருப்பதால் தொழ முடியாதவராகவும், தொழுகையை விடமுடியாதவராயும், ஆகிவிடுகிறார். ஏனென்றால் மனித வாழ்வில் தொழுகையில்லாமல் இருக்கக் கூடிய ஓர் நிலைமை இல்லையென்றும் றசூல்(ஸல்) அவர்களும் அவர்களுடைய ஸஹாபாக்களும் இறக்கும்வரையில் தொழுகையைக் கடைபிடித்தே வந்திருப்பதால் தொழுகையற்ற ஓர் நிலைமை மனிதனுக்குக் கிடையாதென்றும், அப்படி ஓர் நிலைமை உண்டென்று ஒருவன் கூறுவாயேயானால் அவனைக் கொல்வது நாற்பது காபீர்களைக் கொல்வதைவிட ஏற்றமான செயல் என்றும் பல புஸ்த்தகங்கள் கிதாபுகள் மூலமும் அறிஞர்களின் சொற்பொழிவுகள் மூலமும் இவர் அறிந்திருக்கிறார்.

மேலும் மூமீனையும் முஸ்ரீக்கையும் பிரிப்பது தொழுகைதான் என்பவை போன்ற பல ஹதீஸ்களையும் மவுத்தாகும் வரையிலும் வணங்கு என்பவைபோல் திரிவுபடுத்தப்பட்ட ஆயத்துக்களையும் ஆதாரம் காட்டி எழுதப்பட்ட “பிக்ஹு“ கிதாபுகளை வாசித்தறிந்த இந்த நபருக்கு அந்தக் கிதாபுகளின் தடை உத்தரவுகளை மீறமுடியாத ஓர்நிலைமை ஏற்படவே செய்யும். இவருடைய சமூக மக்களும் ஒரு சில அறிஞர்களும் அடிக்கடி கிதாபுகளுடைய விளக்கங்களையே இவருக்கு வலியுறுத்துவதால் உண்மையை உணரக்கூடிய அறிவற்ற இம்மனிதருக்கு ஓர் கஷ்டமான நிலைமை ஏற்படவே செய்யும். ஏனென்றால் சமூகத்தால் ஒதுக்கப்படவேண்டியவராய் மாறவும் இவருக்குத் துணிவில்லை. சமூக மக்களோடு ஒத்துவாழவும் இவருடைய அறிவு தடைபோடுகிறது. குர்ஆன், ஹதீஸ்களை உள்ளபடி அறிந்து கொள்ளவும் இவரால் முடிவதில்லை. பிக்ஹுக் கிதாபுகளை எடைபோட்டுத் தெளிவுபெறக்கூடிய அறிவும் இவரிடம் இல்லை. இவருடைய சந்தேகங்களை நீக்கி உண்மையை உணர்த்தக்கூடிய ஆசிரியர்களும் கிதாபுகளும் இவருக்குக் கிடைக்காவிட்டால்தான் முன்பு கற்றறிந்த நூலறிவிலும் பழக்கவழக்கங்களிலும் மூழ்கவேண்டிய நிலைமையே இவருக்கு ஏற்படுகிறது. ஏனென்றால் ஹதீஸ்கள் ஆயத்துக்களுடைய விபரங்களை உலமாக்கள்தானே கிதாபுகள் மூலம் கூறியிருக்கிறார்கள். ஆகவே என்னுடைய அறிவும் விளக்கமும்தான் பிழையாய் இருக்கக் கூடும் என்று சந்தேகித்து, மேலே செல்ல முடியாதவராய் மீண்டும் பழைய நிலைமைக்கே மாறுகிறார்.ஆரிபுடைய நிலைமையை அடைய வேண்டிய இவர் ஓர் அமலாளியாக மாற்றமடைகிறார். ஆகையால் தான் **உண்மையை அறிவதற்கு முன் ஸுபியானவன் கெட்டான் என்றும் உண்மையை அறிந்த பின் ஸுபியானவன் ஜெயம் பெற்றான்** என்றும் கூறப்படுகிறது.

இவ்விதமான நிலைமையிலுள்ள பலமக்களை நான் பார்த்துப் பழகியதுண்டு. அதுமட்டுமல்ல. இவ்வுண்மையை விளக்கி வைக்க முற்படுகிற நானே, உண்மையை உணர்த்தக்கூடிய சரியான விளக்க முடைய ஒஸ்தாதுகள் எனக்குக் கிட்டாமையால் இவ்விஷயத்தில் உண்மையைக் கண்டறிய முடியாமல் சுமார் இரண்டு வருடங்கள் திணறினேன் என்பதை உனக்குச் சொல்லி வைக்கிறேன். என் அனுபவத்தில் கண்டறிந்த இன்னல்களை நீயும் அனுபவிக்காமல் இலகுவாய் உயர்பாதையை நீ எட்டிப்பிடிக்க வேண்டும் என்பதற்காகவே இதை ஓரளவு விளக்கிக்கூற விரும்புகிறேன். இஸ்லாத்தின் நோக்கம் என்ன? என்ற இந்தத் தலைப்பை நான் எடுத்துக்கொண்டதும் இந்த ஓர் விஷயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதற்காகத்தான்.

**சகோதரனே!**

றசூல்(ஸல்) அவர்களோ அவர்களுக்கு முன் வந்த நபிமார்களோ தொழுகை முதலாம் கட்டாய கடமைகளைக் கடைப்பிடித்தொழுகித்தான் நபிமார்கள் றசூல்மார்களாக வந்தார்களா? இல்லை. றசூல் (ஸல்) அவர்கள் தங்களை நபியாக றசூலாகப் பிரகடனப்படுத்திப் பதினொரு வருடங்களும் ஒன்பது மாதங்களும் சென்ற பிறகு தான் தொழுகையைக் கொண்டுவந்தார்கள் ஆனால் எம்முடைய

வஹ்மு,றசூல்(ஸல்) அவர்கள் வபாத்தாகும் வரையிலும் தொழுதிருக்கிறார்களே என்று சிந்திப்பதேயல்லாமல் தொழாமல் எப்படி நபியாக வந்தார்கள் என்பதைச் சிந்திப்பதேயில்லை. மேலும் றசூல்(ஸல்) ஓர் விஷேட மனிதர் ஆகையால் நம்மையும் அவர்களையும் ஒப்பிட்டு நோக்கவே கூடாது என்றும் வஹ்மு கூறுகிறது. ஆனால் விஷேட மனிதரால் கையாளப்பட்ட ஒன்றைச் சாதாரண மனிதனாகிய நான் ஏன் கையாள வேண்டும் என்றும் வஹ்மு சிந்திப்பதேயில்லை. மேலும் றசூல்(ஸல்) விசேட மனிதரானால் சாதாரண மனிதன் அனுபவித்த இன்னல்களை அவர்களும் ஏன் அனுபவித்தார்கள் என்பதையும் வஹ்மு சிந்திப்பதே இல்லை. மேலும் அவர்களுடைய கடந்த கால வாழ்வு எமக்கு வேண்டியதில்லை. அவர்கள் எப்போது தொழச் சொன்னார்களோ அப்போதிருந்து நாம் தொழுதேயாக வேண்டும் என்று வஹ்மு உபதேசம் செய்கிறது. ஆனால் இந்த வஹ்மு தொழுகையைக் கொண்டு வருவதற்கு முன்பும் அவர்கள் றசூலாக இருந்தார்கள் என்பதை மறந்தே விடுகிறது.

நங்கள் எப்போது றசூலாக்கப்பட்டீர்கள் என்று றசூலுல்லாஹ்விடம் கேட்கப்பட்டபோது ஆதம் (அலை) அவர்கள் உடலுக்கும் உயிருக்குமிடையில் இருந்தபோது என்றும் இன்னோர் ஹதீஸில் மண்ணுக்கும் தண்ணீருக்கும் இடையிலிருந்தபோது நான் றசூலாக்கப்பட்டேன் என்றும் றசூல்(ஸல்) அவர்கள் கூறியிருப்பதை எம்முடைய வஹ்மு சரியாய்ப் புரிந்து கொள்வதில்லை. ஏனென்றால் பிக்ஹு கிதாபுகளில் கூறப்பட்டுள்ள விபரங்கள் சாதாரண அவாம்களுக்கே என்பதை எம்முடைய வஹ்மு அறியாது.

وَٱعۡبُدۡ رَبَّكَ حَتَّىٰ يَأۡتِيَكَ ٱلۡيَقِينُ

15-99 *உமக்கு எகீன் ஏற்படும் வரையிலும் வணங்கிக் கொண்டிருப்பீராக. (இபாதத்துச்செய்து கொண்டிருப்பீராக)*

இபாதத்து என்றால் தொழுகை மட்டும்தான் என்பது பொருளல்ல. இந்த ஆயத்தில் கூறப்பட்டுள்ள எகீன் என்பது மரணம் என்று லாஹிறுடைய உலமாக்கள் சாதாரண மனிதர்களுக்கு விளக்கம் கொடுப்பதில் நமக்கு எதுவும் ஆட்சேபனையில்லை. ஆனால் எகீன் என்பது ஈமான் என்பதைக் குறிக்கும் ஓர் சொல் என்பதுதான் உண்மையாகும். இதைப் பின்பு நிரூபிப்போம். முதலில் எமது தொகுப்புரையை மட்டும் பொதுவாய் விளங்கிக்கொள்ள வேண்டும். ஈமான் என்பது நிரப்பமடையும்போது செயலற்றதாக இருக்கிறது என்பதையும் இஸ்லாம் செயலுள்ளதாக இருக்கிறது என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும். இங்கே எமக்கு ஓர் சந்தேகம் பிறக்கலாம், அதாவது எகீன் என்பது ஈமான்தான் என்றால் றசூல்(ஸல்) அவர்கள் பூரண ஈமானுடையவர்கள்தானே! அப்படியானால் அவர்கள் உபாத்துவரையும் தொழுதிருக்க வேண்டியதில்லையே? என்பதுதான் எமது சந்தேகம். விஷயம் அப்படியல்ல. ஈமானில் முழுமை பொற்றவர் மவுனியாய் இருப்பவரே என்று றசூல் (ஸல்)அவர்களே கூறியிருக்கிறார்கள். ஆனால் பேசிக்கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். அப்படியானால் அவர்கள் பேசிக்கொண்டு மவுனம் சாதிக்காமல் இருந்ததனால் ஈமானில் முழுமைபெறாதவர்கள் என்று பொருள் கொள்ள முடியுமா? இல்லை அவர்கள் ஈமானில் பரிபூரண முழுமை பெற்றவர்களாகத்தான் இருந்துகொண்டும் மவுனம் சாதிக்காமல் அவசியத்தினளவு பேசிக்கொண்டும்தான் இருந்திருக்கிறார்கள். இதே போல எகீன் ஏற்படும் வரையில் வணங்கு என்று வசனத்தை அறிந்திருந்து கொண்டும்தான் வபாத்தாகும் வரையும் வணங்கியிருக்கிறார்கள். அப்படியானால் நம் அறிவுக்குப் புலப்படாத ஏதோ ஓர் விஷயம் இதில் அடங்கியிருக்கத்தான் வேண்டும். இதைப் பொறுமையோடு நாம் விளங்கி அறிவோம். “இபாதத்” என்பதை அமலென்று பொருள் கொள்வது பாமரமக்களின் வழமையாகும். இபாதத் என்றால் அறிதல்,முறாகபா செய்தல் என்பதே அதன் உண்மைப் பொருளாகும். “எகீன்” என்றால் ஈமான் என்பதே அர்த்தம்.

وَكَذَٰلِكَ نُرِيٓ إِبۡرَٰهِيمَ مَلَكُوتَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلۡأَرۡضِ وَلِيَكُونَ مِنَ
ٱلۡمُوقِنِينَ

6-75 *இப்றாஹீம் எகீன் கொண்டவர்களிலிருப்பதற்காக வானங்களிலும் பூமியிலுமுள்ள மலக்கூத்தை நாம் அவருக்கு இவ்வாறு காண்பித்தோம்.*

**ஹதீஸ்:** ***எகீன் என்பது முழுமையான ஈமானாகும் என்று றசூல்(ஸல்) அவர்க்ள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி)**
**ஆதாரம்:புஹாரி**

மிகக்குறுக்கலாய்த் தரப்பட்ட இவ்விபரப்படி “எகீன்”என்றால் சந்தேகமற்ற முழுமையான ஈமான் என்பதையும் “இபாதத்” என்பது அல்லாஹ்வைப்பற்றிய அறிவு என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளவும்.

முன்பு ஈமான் இஸ்லாத்தை ஒன்று சேர்த்தும் தனித்தனியாயும் குர்ஆன் ஹதீஸ்கள் விளக்குவாதாய்க் கூறினேன். இதில் மிகத் தாழ்பதவியினர்தான் முஸ்லீம்கள் இதில் உயர்பதவியுடையவர்கள் தான் முத்தகீன்கள். இந்த நிலையிலுள்ளவர்களைத்தான் ஈமான் இஸ்லாம் ஒன்றிணைத்துக் கூறப்பட்டிருக்கிறது. முன்கூறிய முஸ்லீம்கள்,ஈமான் கொண்ட முஸ்லீம்கள் ஆகிய இவர்களில் பலபடித்தரத்திலுள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தித்தான் ஸரீயத்துடையவர்கள், பக்தி மார்க்கத்தவர்கள், அச்சம் ஆதரவுடையவர்கள் என்று கூறப்படுவது. இதற்குரிய ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன. நான் விரிவை அஞ்சுவதால் ஒன்றிரண்டை மட்டும் தருகிறேன். குர்ஆனில் இதற்கு ஆதாரம்: 4-136, 2-208, போன்ற நாம் முன்புகாட்டிய ஆயத்துக்களே போதுமானவை. இப்போது ஆதாரங்களைக் கவனிக்க முற்பட்டால் கவனம் வேறு திசையில் திரும்பக்கூடும். ஆகையால் இடையிடையே நான் அவசியமான போது ஆதாரம் காட்டுவேன். கவலைப்படாமல் பொறுமையோடு முதலில் விஷயத்தைக் கேட்டறிய வேண்டும்.

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ وَٱبْتَغُوٓا۟ إِلَيْهِ ٱلْوَسِيلَةَ وَجَـٰهِدُوا۟ فِى
سَبِيلِهِۦ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

5-35 *விசுவாசிகளே! (ஈமான்கொண்டவர்களே) நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்துகொண்டு அவனிடம் செல்வதற்குரிய வழியைத் தேடிக்கொள்ளுங்கள். அவனுடைய பாதையில் பெருமுயற்சி(பீஸபீல்) எடுத்துக்கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடையலாம்.*

குர்ஆனில் இவை போன்ற பல ஆயத்துக்கள் இடம்பெற்றிருக்கின்றன. பல ஹதீஸ்களும் இருக்கவே செய்கின்றன. இவ்விதமான ஆயத்துக்கள் ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்ட மூமீன்கள் அல்லாஹ்வுடைய பாதையைத் தேடவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தொழுகை முதலாம் கட்டாயக் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போதுதான் அல்லாஹ்வுடைய பாதையில் பீஸபீல் செய்யுங்கள் என்று இறைவன் கூறுகிறான். பீஸபீல் என்றால் வாளினால் வெட்டிக்கொள்வது மட்டும்தான் என்று நம்ப வேண்டாம். அதையெல்லாம் விடக்கடினமான பீஸபீல் அறிவுப்போராட்டமேயாகும். இந்த அறிவுப்போராட்டத்தின் வெளிக்கோலம்தான் வாள்வீச்சு. முன்காட்டிய ஆயத்தில், அல்லாஹ்வுடைய பாதை ஏதோ ஒன்று உண்டென்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அது கட்டாயக் கடமைகளைக் கையாளுவதுதான் என்றால் பீஸபீல் என்பது அக்கடைமைகளைத்திருத்தி **முறையாய்க் கைக்கொள்ளுங்கள் என்பதே பொருளாகும்.** அக்கட்டாய கடமைகளைவிட வேறு ஓர் பாதை உண்டு என்றால் அப்பாதையைக் கண்டறிய **அறிவுப்போராட்டம் செய்வதே பீஸபீல் என்பதன் பொருளாகும்.** ஆகவே ஆயத்தில் சுட்டப்பட்ட இரண்டு பாதைகளும் உண்மையே என்பதை நாம் விளங்கியறிய வேண்டும். இதில் கூறப்பட்ட முதலாவது பாதைதான் கட்டாயக் கடமைகளைக் கொண்டொழுகும் “ஹுர்புல் பராயிலி” என்பது. இவ்வினமக்களுக்கு வழிகாட்டும் நோக்கமாகவே றசூல்(ஸல்) அவர்கள் தொழுகையைக் கடைப்பிடித்தார்கள் என்பதையும் மவுனம் சாதிக்காமல் பேசிக்கொண்டிருந்தார்கள் என்பதையும் முதலில் நாம் சந்தேகமில்லாமல் விளங்கிக் கொள்ளவேண்டும்.

**இவ்விஷயத்தை ஓரளவு சூசகமாகவே அல்லாமல் வெளிப்படையாய்த் திறந்து காட்டவும் முடியாது.** ஏனென்றால் பல நூற்றாண்டு காலமாக மக்கள் ஊறி வளர்ந்த ஓர் விஷயத்தில், இது காலவரையிலும் பெரும்பாலார் விளக்கிக்காட்டாத ஓர் விஷயத்தில் திடீரென உண்மையை வெளிப்படுத்தும் போது ஓர் பெரிய கொந்தளிப்பு ஏற்படும் என்பது நிச்சயம். **அப்படி ஏற்படினும் பறவாயில்லை நாம் எடுத்துக்கொண்ட விஷயம் எல்லோருக்கும் அவசியமானதாய் இருந்தால். ஆனால் நாம் எடுத்துக்கொண்ட விஷயமோ சூபிகளுக்கு மட்டுமே அவசியமாய் இருப்பதால் ஓரளவு சூசகமாகவே கூறுவோம்.** அப்படியில்லாமல் வெளிப்படையாகவே விளக்குவதானால் அறிவுகுறைந்த மக்களைத் தவறான பாதையில் செலுத்துவதாகவே அமையலாம். ஆகவே கீழே சில குர்ஆன் வசனங்களை தருகிறேன். சிந்தனை செய்து தெளிவுபெறு.

فَإِنَّمَا يَسَّرْنَـٰهُ بِلِسَانِكَ لِتُبَشِّرَ بِهِ ٱلْمُتَّقِينَ وَتُنذِرَ بِهِۦ قَوْمًا لُّدًّا

19-97 *உம்முடைய பாஷையில் நாம் இதை எளிதாக்கி வைத்ததெல்லாம் இதன் மூலம் பயபக்தியுடைய (முத்தக்கீன்) மக்களுக்கு நன்மாராயம் கூறுவதற்கும் விதண்டாவாதம் செய்யும் ஜனங்களுக்குஅச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்குமேயாகும்.*

இந்த ஆயத்தில் கூறப்பட்ட பயபக்தியுடையவர்கள் (முத்தக்கீன்கள்) யார்? விதண்டாவாதம் செய்பவர்கள் யார்? என்பதை நோட்டமிடவேண்டும். முத்தக்கீன்கள் அவாம்களில் உயர்பதவி உடையவர்கள். விதண்டாவாதம் செய்வோர் அவாம்களில் மிகத் தாழ்ந்த மிருக சுபாவமுடையவர்கள். இவர்கள் எல்லோரையும் பொதுப்படையாய் ஷரீயத்துடையவர்கள், பக்திமார்க்கத்ததைச் சேர்ந்தவர்கள், என்றே கூறப்படும். இவர்களுக்கு அச்சம் ஆதரவு எதற்காக என்பதைச் சிந்திக்க வேண்டும்.

هُوَ ٱلَّذِى بَعَثَ فِى ٱلْأُمِّيِّـۧنَ رَسُولًا مِّنْهُمْ

62-2 *கல்வியறிவில்லாத ஜனங்களுக்காக அவர்களில் உள்ள ஒருவரை அவன் தூதராக அனுப்பி வைத்தான்.*

(இந்த ஆயத்து மாற்றப்பட்டது என்று நீ நம்பினாலும் பரறவாயில்லை, உனக்கு வேண்டிய ஓர் உண்மை இதில் இருக்கவே செய்கிறது. குர்ஆனிலுள்ள சில வசனங்கள் மாற்றப்பட்டவை என்பது வெளிப்படையில் உண்மையே ஆயினும் உண்மையான ஞான அறிவோடு நோக்கினால் மாற்றப்பட்ட ஓர் அட்சரம்கூடக் குர்ஆனில் இல்லை என்பதும் உண்மை).

وَمَآ أَرْسَلْنَـٰكَ إِلَّا كَآفَّةً لِّلنَّاسِ بَشِيرًا وَنَذِيرًا وَلَـٰكِنَّ أَكْثَرَ ٱلنَّاسِ لَا يَعْلَمُونَ

34-28 *சகல மனிதர்களுக்குமே நன்மாராயம் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் நாம் உம்மை அனுப்பியிருக்கிறோம். எனினும் மனிதரில் பெரும்பாலார் அறிந்து கொள்வதில்லை.*

இந்த ஆயத்தில் கூறப்பட்டுள்ள சகல மனிதர்களும் யார்? என்பதை நோட்டமிடவும்.

وَمَآ أَرْسَلْنَـٰكَ إِلَّا رَحْمَةً لِّلْعَـٰلَمِينَ

21-107 *உம்மை உலகத்தாருக்கு ஓர் அருளாகவேயன்றி நாம் அனுப்பவில்லை.*

இவை போன்ற இந்த ஆயத்துக்களைப் பல கண்ணோட்டங்களோடு ஆராய வேண்டும்.

لَّقَدْ كَانَ لَكُمْ فِى رَسُولِ ٱللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَن كَانَ يَرْجُوا۟ ٱللَّهَ وَٱلْيَوْمَ ٱلْءَاخِرَ وَذَكَرَ ٱللَّهَ كَثِيرًا

33-21 *எவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் உறுதியாக நம்புகிறார்களோ அவர்கள் பின்பற்றி நடக்க வேண்டிய அழகான உதாரணம் நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடமே இருக்கிறது. அவர்கள் அதிகமாக ஸ்தோத்திரம் (திக்கிர்) செய்து கொண்டிருப்பார்கள்.*

இந்த ஆயத்தில் குறிப்பிடப்பட்ட மக்கள் எந்த நிலைமையில் உள்ளவர்கள் என்பதையும் சிந்தனை செய்யவேண்டும்

وَلَا تَطْرُدِ ٱلَّذِينَ يَدْعُونَ رَبَّهُم بِٱلْغَدَوٰةِ وَٱلْعَشِىِّ يُرِيدُونَ وَجْهَهُۥ ۖ مَا
عَلَيْكَ مِنْ حِسَابِهِم مِّن شَىْءٍ وَمَا مِنْ حِسَابِكَ عَلَيْهِم مِّن شَىْءٍ فَتَطْرُدَهُمْ
فَتَكُونَ مِنَ ٱلظَّٰلِمِينَ

6-52 *தங்கள் இறைவனின் திருப்பொருத்தத்தை விரும்பிக்காலையிலும் மாலையிலும் பிராத்தித்துக் கொண்டிருப்போரை நீர் விரட்டிவிடாதீர். அவர்களுடைய கணக்கில் இருந்து யாதொன்றும் உம்முடைய பொறுப்பாகாது. உம்முடைய கணக்கில் இருந்து யாதொன்றும் அவர்களுடைய பொறுப்பாகாது. ஆகவே நீர் அவர்களை வெருட்டினால் அக்கிரமக்காரர்களில் நீரும் ஒருவராகி விடுவீர்.*

இந்த ஆயத்தைப் பல கோணங்களில் நிதானமாக அவதானிக்க வேண்டும். இவை போல் குர்ஆனில் இடம்பெறும் மற்றும் ஆயத்துக்களையும் எடுத்துக் கொள்க. ஆனால் உண்மையைக் கண்டறிவதற்கு நான் காட்டியுள்ள ஆயத்துக்களே போதுமானவையாகும்.

இதேபோல றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்டுள்ள சில ஹதீஸ்களையும் ஆராய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, மூமினையும் முஸ்ரீக்கையும் பிரிப்பது தொழுகைதான், என்னையும் என்வணக்கம் சுவர்க்கம் சேர்த்துவிடாது, என்பவைபோல் ஒன்றுக்கொன்று முரண்போல தென்படுகிற (தொழுகை, திக்கிர், சம்பந்தமான) ஹதீஸ்களையும எடுத்துக்கொள்ள வேண்டும். (விரிவை அஞ்சி அவற்றை இங்கே எழுதவில்லை). இந்த ஆயத்துக்கள் ஹதீஸ்களையும் றசூல்(ஸல்) அவர்களுடைய செயல்களையும் ஒன்றுதிரட்டி நோக்கும்போது, நாம் முன்பு விளக்கியது போல மனிதர்களை மூன்று பெரும் பிரிவுகளாகப்பிரித்தே விளக்கம்தரப்பட்டிருக்கிறது. அதில் ஒரு பிரிவினரின் விஷயங்களை வெளிப்படையாயும் மற்றொரு பிரிவினரின் விஷயங்களை சூசகமாயும் இன்னோர் பிரிவினரின் விஷயங்களை மறைத்துமே வளக்கப்பட்டிருக்கின்றன. நபிகள்(ஸல்) அவர்களுடைய வாழ்வும் அவர்களுடைய செயல்களும் இதேபோல மூன்று பெரும்பிரிவுகளாகவே அமைந்திருக்கின்றன. இதைச் சரிவர விளக்க வேண்டுமானால் பல புஸ்த்தகங்களை எழுத வேண்டி நேரிடலாம். ஆகவே இவற்றின் பொழிப்பை மட்டும் சுருக்கமாய்க் கூறுவோம்.

## இதன் சாரம்

01. மனிதர்கள், அவாம், கவாஸ், கவாஸுல் கவாஸ் என்று மூன்று பெரும் பிரிவுகளில் அடங்குவார்கள்.

02. குர்ஆன் ஹதீஸ்கள், அவாம்களுடைய விஷயங்களை வெளிப்படையாயும் கவாஸுகளுடைய விஷயங்களை சூசகமாயும் கவாஸுல் கவாஸுகளுடைய விஷயங்களைப் பரிபாஷைகளாயும் விளக்குகின்றன.

03. நபி வாழ்வின் சகல நிகழ்ச்சிகளும் மூன்று நிலைமைகளில் கட்டுண்டிருக்கின்றன. அந்த மூன்று நிலைமைகளும் அவாம், கவாஸ், கவாஸுல் கவாஸ் என்பவர்களுக்கு உரியவைகளே.

04. உலகுக்கு உம்மை றஹ்மத்தாக அனுப்பினேன் என்ற வசனம் இந்த மூன்று நிலைகளிலும் உள்ள **இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட, ஏற்றுக்கொள்ளாத எல்லாமக்களுக்கும் பொதுவான எல்லா விபரங்களும் முஹம்மது(ஸல்) அவர்களில் அமைந்திருப்பதை உறுதிப்படுத்துகிறது.**

05. நபியாக அனுப்பப்பட்டதாகக் கூறப்பட்ட வசனங்கள் மூலமும் அக்கால சூழ்நிலைகளில் நபி(ஸல்) அவர்களால் கூறப்பட்ட உபதேசங்களும் (ஹதீஸ்களும்) மிகத்தாழ்பதவியிலுள்ள அவாம்களுக்குக் கூறப்பட்டவை என்பது தென்படுகிறது.

06. றசூலாக அனுப்பப்பட்டுள்ளது என்பவை போன்ற வசனங்களும் அக்கால சூழ்நிலைகளில் றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட உபதேசங்களும் (ஹதீஸ்களும்) அவாம்களில் உயர் பதவியுள்ளவாகளுக்கு (முத்தக்கீன்களுக்கு) குறிப்பாகவும் மற்ற அவாம்களுக்குப் பொதுப்படையாகவும் கூறப்பட்டு விளக்கப்பட்டவை என்பது தென்படுகிறது.

07. ஷரீஅத் என்பது அச்சம் ஆதரவுடைய மக்களின் பக்தி மார்க்கம்தான் ஏனபது தெளிவாய்த் தென்படுகிறது. இதில் தரீக்கத்தும் அடங்கும்.

08. ஹகீகத், மஹரிபத் என்பவை அச்சம் தீர்ந்த முக்தி மார்க்கமே என்பது தெளிவாகத் தென்படுகிறது.

09. றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஒவ்வோர் ஹதீஸூம் முன்நிலையாய் இருந்த (ஹதீஸைக் கூறுவதற்கு காரணமாய் இருந்த) மனிதர்களின் அறிவு, நடைமுறை, அறிவுத்தகைமைகளுக்கு ஏற்றபடியே கூறப்பட்டிருக்கின்றன என்பது தென்படுகிறது. றசூல்(ஸல்) அவர்கள் ஈமானை 70க்கும் அதிகமான பிரிவாக விளக்கியிருப்பதும் ஒவ்வோர் ஹதீஸையும் வெவ்வேறு வகையாய் விளக்கியிருப்பதும் இதற்கு ஆதாரமாகும்.

10. குர்ஆனுடைய வசனங்களும் றசூல்(ஸல்) அவர்களுடைய ஹதீஸ்களும் அவாம்களுக்கும் கவாஸுகளுக்கும் ஒன்றுக்கொன்று விரோதமாய்க் கூறப்பட்டவைபோல் தென்பட்டாலும் உண்மை அப்படியல்ல. இதைச் சரியாய்ப் புரிந்துகொள்வதானால் உசூலுடைய இல்மில் சரியான பாண்டித்தியமும் நுட்பமான அறிவும் அவசியமாய் இருக்கிறது.

11. அவாம்களுக்காக (பக்திமார்க்கத்தவர்களுக்காக) றசூல்(ஸல்) அவர்களால் கையாளப்பட்ட எந்தச் சொற்களும் எந்த நடவடிக்கைகளும் கவாஸுகள் கவாஸுல்கவாஸுகளான **முக்தி மார்க்கத்தைச் சேர்ந்த மக்களைக் கட்டுப்படுத்தாது என்பது தெரிகிறது. அதாவது ஹுர்புல்பராயிலியின் சட்டதிட்டங்கள் எதுவும் ஹுர்புன் நவாபிலியைக் கட்டுப்படுத்தாது என்பது.**

12. **ஹுர்புன்நவாபிலியில் செல்லும் மக்களைச் சரீஅத்தின் பக்கம் திருப்புவதற்கு றசூல்(ஸல்) அவர்களுக்குக் கூட உரிமையில்லை என்பது தென்படுகிறது.**

# தொகுப்பு

**எ**ம் முன்னோர்களிலுள்ள சரியான ஆராய்வில்லாத பல வியாக்கியானிகள் குர்ஆன் ஹதீஸ்களுடையவும் மனிதர்களின் அறிவுத் தகைமையுடையவும் நிலைமைகளைச் சரியாய்ப் புரிந்து கொள்ளாமையால் அவரவர் இஷ்டம் போல புஸ்த்தகம் கிதாபுகளை வெளியிட்டிருப்பதால் மக்களில் மிகப்பெரும்பாலார் உண்மையை அறியமுடியாத குழப்ப நிலைக்குள்ளாகி இருக்கிறார்கள். அதாவது இந்தப் புஸ்த்தகம் கிதாபுகளில் பொதுப்படையாய் எல்லா வகுப்பு மனிதர்களையும் ஒன்றுபடுத்தியே விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. சில கிதாபுகளில் தொழுகையற்ற ஓர் நிலைமை மனிதனுக்கு இல்லவே இல்லையென்றும் அப்படி உண்டென்று ஒருவன் கூறுவானேயானால் அவனைக் கொல்வது நாற்பது காபீர்களைக் கொல்வதைவிட ஏற்றமான செயல் என்றும்கூட எழுதியிருந்ததை நான் வாசித்ததுண்டு. எவ்வித சட்டபூர்வமான, தர்க்கரீதியான ஆதாரங்களுமே இல்லாமல், யூகங்களை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ள இவ்விதமான வியாக்கியானங்கள் உண்மையை மனிதன் உணர முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கின்றன. மனிதன் தன் குறிக்கோளான உயர் நிலையை அடையமுடியாமலும் தடைப்படுத்தியிருக்கின்றன. ஆகவே நாம் உண்மையைக் கண்டறிந்து வெற்றிப்பாதையில் செல்ல வேண்டுமானால் பொறுமையோடு ஆராய்ந்துதான் தெளிவு பெறவேண்டும்.

அவாம்கள் என்று கூறப்படுகிற மக்கள் சரியான, தெளிவான, உறுதியான கல்வியறிவும் சிந்தனையுமில்லாதவர்கள். சபலபுத்தியும் உள்ளப் பலவீனமும் உடையவர்கள். இவ்வினமக்களுக்கு எந்த ஓர் விஷயத்தையும் அடிக்கடி நினைவூட்டிக்கொண்டே இருக்க வேண்டும். இல்லையானால் இவர்களை முன்னேற்றவோ சீரான ஓர் நிலைக்குக்கொண்டு வரவோ முடியாது. இவர்களில் மிகப்பெரும்பாலார் ஓசையைப்பின்பற்றிச் செல்லும் கால்நடைகளுக்கு ஒப்பானவர்களாக இருப்பதால் இவர்களுக்கு அச்சம் ஆதரவுகளைக் ஊட்டாமல் குறிக்கோளை நோக்கி இவர்களைச் செலுத்தமுடியாது. ஆகவே இவர்கள் தங்கள் கடமைகளைச் செய்தால் சன்மானம் கிடைக்கும் என்றும் செய்யாவிட்டால் தண்டனை கிடைக்கும் என்றும் அச்சம் ஆதரவு ஊட்டவேண்டியது அவசியம்தான். அது பொய்யுமல்ல. ஆனால் இதன் அந்தரங்கம் வேறாய் இருந்தாலும் இம்மக்களுடைய அறிவுக்கேற்ற வருணனைகளைக் கூறிக் குறிக்கோளுக்கமைவாய் இவர்களைச் செலுத்த வேண்டும் என்பதே அல்லாஹ் றசூலுடைய நோக்கமாகும். இவர்களுடைய குறிக்கோளை ஆரம்பத்திலேயே இவர்களுக்கு ஊட்டிவிட்டு அதற்கேற்றபடி வழிநடாத்த வேண்டும் என்பதே நோக்கம். ஆனால் குறிக்கோள் தவறான வியாக்கியானங்களால் மறைக்கப்பட்டுவிட்டதால் இன்றைய மனிதர்களுடைய குறிக்கோள் வேறுதிசையிலேயே திருப்பப்பட்டுவிட்டது.

ஆனால் மனிதருடைய குறிக்கோள் சாந்தியடைவதே என்பது சரியாய் உணர்த்தப்பட்டிருந்தால் மனிதன் சுவர்க்கபோகத்தை விரும்பமாட்டான். ஏனென்றால் சுவர்க்கபோகமும் பூரண சாந்தியழிப்பதேயல்ல என்பதையும் அதன் உண்மை வேறு என்பதையும் உணர்ந்துகொள்வான். தன்பூரணத்தன்மை என்பதே சுவர்க்கம் என்பது அவனுக்குத் தென்படும். இந்தப் பூரணத்தன்மையை அடைவதற்குரிய ஒரேயொருவழி இடைவிடாமல் ஞாபகம் (திக்கிர், தியானம்) செய்வதே. இதைத்தான் "ஹுர்புன்நவாபிலி" என்று கூறப்படுவது. அதாவது நபிலான வணக்கத்தைக்கொண்டு இறைவனில் ஐக்கியமாதல் (நாஸ்த்தியாதல்) என்பதே அதன் பொருளாகும். இந்த முடிவான பாதையில் அவாம்கள் திடீரென நிலைபெறமாட்டார்கள் என்பதற்காகவே இப்பாதையை இலகுபடுத்தி "ஹுர்புல் பராயிலி" என்னும் கட்டாயக் கடமைகளைக்கொண்டு ஒழுகும் பாதை கற்பிக்கப்பட்டிருக்கிறது. பர்ளான கடமைகளைச் செய்து அல்லாஹ்வை அணுகுதல் என்பதே இதன் உண்மையாகும். அதாவது சாதாரண அவாம்களும் பர்ளான கடமைகள் மூலம் இந்த நிலைமையைப் பெற வேண்டும் என்பதே அல்லாஹ் றசூலுடைய ஆழியநோக்கமாகும். ஆகையால் தான் "திக்கிர்

செய்வதற்காகவே தொழு” என்று இறைவன் கூறுகிறான். இந்த திக்கிர்தான் நபில் என்பது.ஆனால் திக்கிர் செய்வதற்குப் பொருத்தமானது தொழுகைதான் என்று அவாம்களுக்குக் கற்பிக்கப்படுவதில் எமக்கு ஆட்சேபனை கிடையாது, ஆனால் நபிலுக்காகவே பர்ளு என்பதை இறைவழி செல்லும் நீ மறக்கவே கூடாது.

**ஹதீஸ்:** ***தொழுகை, ஹஜ்ஜு,தவாபு, முதலான மற்றும் எல்லா வணக்கங்களையும் பர்ளாக, சுன்னத்தாக,ஆக்கிக் கற்பிக்கப்பட்டது அல்லாஹ்வைப்பற்றிய ஞாபகம் நியமமாவதற்கு (நிலைப்படுவதற்கு) ஆகவே,***

**ஹதீஸ்:** ***அல்லாஹ்வை நினைவுகூர்வதைவிட (திக்கிர்) அடியானின் எந்த அமலும் அல்லாஹ்வின் வேதனையைவிட்டும் அவனைக் காப்பாற்றக் கூடியதாய் இல்லை.***

**அறிவிப்பவர்:முஆதிப்னுஜபல்(றலி)**
**ஆதாரம்:அபூதாவுத்**

இங்கே நாம் சுருக்கமாய் விளக்கிய “ஹர்புல்பராயிலி” என்பதுதான் ஸரீஅத், தரீக்கத், (சரியை, கிரியை) என்ற பக்தி மார்க்கமாகும். இஸ்லாத்தின், அல்லது ஈமானின் வெளிஉடல் இந்த அவாம்களுக்கு விதிக்கப்பட்ட தொழுகை நோன்பு போன்ற பர்ளான சுன்னத்தான கடமைகளேயாகும். இந்த இஸ்லாமின் அல்லது ஈமானின் உண்மையான உயிர்தான் திக்கிர்(நினைவுபடுத்தல், தியானித்தல்) என்னும் நபிலாகும். பெரும்பாலும் எமது வழக்கத்தில் இருக்கிற முஆமலாத்தடைய இல்முகளும், இன்றுள்ள பட்டத்தாரிகள் பயிலும் பிக்ஹு கிதாபுகளும் இஸ்லாம் ஈமானுடைய வெளியுடலான கிரிகை விளக்கங்களைக் கூறுபவையே அல்லாமல் உயிரான நபில்விளக்கங்களைக் கூறுபவையே அல்ல. ஆகையால்தான் இந்தப்பட்டதாரிகளை லாஹிறுடைய உலமாக்கள் (வெளிப்படையை அறிந்த அறிவாளர்கள்) என்று கூறப்படுகிறது.

மனிதன் கட்டாய கடமைகளான தொழுகை நோன்பு முதலாம் கடமைகளை விளங்கியறிந்து முறையாச் செயல்படுவதால் அடிக்கடி இறைவனைத் திக்கிர் செய்யக் கூடிய வாய்ப்பும் தன்குறிக்கோளை அடையக்கூடிய ஓர்நிலைமையும் கிடைக்கிறது. உண்மையான பக்தியோடும் குறிக்கோளோடும் இக்கடமைகளில் ஈடுபடுகிற மனிதர் எல்லா விதமான பிரபஞ்சங்களுடையவும் தன்னுடையவும் உணர்வு அற்றவராக இறைவனுடைய உஜுதிலேயே சரணாகிவிடுகிறார். **தொழுகையின்போது குனிவதனாலும் நிலத்தில் தலையைவைத்து ஸுஜுது செய்வதனாலும் இந்த நிலைமை ஏற்படுவதே இல்லை. தொழுகையின் போது செய்கிற திக்ரினாலேயே(உணர்வினாலேயே) இந்த ஐக்கியமாகும் நிலைமை அம்மனிதருக்கு ஏற்படுகிறது.** இறைவனோடு முழு ஐக்கியமாகும் இந்த நிலைமையில்தான் றசூல்(ஸல்) அவர்கள் சுவர்க்கத்தின் கனி எனக்குத் தரப்பட்டது என்று கூறியுள்ளதும், அலி(றலி) அவர்களுடைய காலில் பாய்ந்த அம்பு தொழுகையின் போது பிடுங்கி எடுக்கப்பட்டதும். **இந்த நிலைமையைத்தான் அல்லாஹ்விலே அடியான் பனாவாதல் என்று கூறப்படுவதுதாகும்.** இது பர்ழான கட்டாயக் கடமைகளை முறையாய் விளங்கியறிந்து கடைப்பிடிப்பதால் ஏற்படுகிற பயனாகும். இந்தக் கட்டாயக்கடமைகளை முறையாய்க் கைக்கொள்பவர்களைத்தான் வணக்கவாளிகள் அமலாளிகள் என்று கூறப்படுவது. அச்சமுடைய நல்லடியார்கள், பக்தியுடையவர்கள் என்றெல்லாம் கூறப்படுபவர்கள் இவர்கள்தான். இந்த நிலைமையைப் பெற்ற நல்லடியார்களிடையே கறாமாத்தென்னும் அற்புத நிகழ்ச்சிகளும் இருக்கலாம். ஆனால் இந்த உண்மையான பத்திமான்களுடைய மகத்தான நிலைமை,**தன்னையும் உலகமக்களையும் ஏமாற்றிக்கொள்கிற போலித்தொழுகையினாலோ தாடி தலைப்பாகை, தஸ்பீஹுமணி போன்ற ஹீலாக்களினாலோ ஏற்படப்போவதே இல்லை.**

ஆனால் எம்மில் மிகப்பெரும்பாலார் கைகால்களைக் கழுவிக்கொண்டு கைகட்டி நிற்பதும் தமக்கே விளங்காத ஏதோ சிற்சில வசனங்களை ஓதுவதும் குனிந்து நிமிர்வதும் நிலத்தில் நெற்றியைப்பதித்துக்கொள்வதும்தானே தொழுகை என்று நம்பியிருக்கிறோம். விஷயம் அப்படியல்ல. நிற்பதும் குனிவதும் ஸுஜுது செய்வதும் நாம் கூறும் வசனங்களுக்கேற்றபடி எண்ணத்தை உறுதிப்படுத்துவதற்கான வெளிச்செயல்களேயாகும். முன்நிலையிலுள்ள இறைவன் பெரியவன், மதிப்புடையவன், கண்ணியமானவன், அரசன் என்று நம்புகிற எண்ணத்தை உறுதியாக்கவே கைகளைக்கட்டிக் கொள்ளுகிறோம். ஆகவே எம்முடைய எண்ணம்(நினைவு - திக்கிர்) உயிராயும் கைகட்டிக்கொண்ட செயல் உடலாகவும் இருக்கிறது. இதே போல தொழுகையிலுள்ள அத்தனை செயல்களும் எம்முடைய எண்ணத்தை வலுப்படுத்துவதற்காகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. **ஆகவே எம்முடைய எண்ணத்தினால் இறைவனை நாம் அண்மிக்கிறோமேயன்றி எம்முடைய வெளிச்செயல்களினாலல்ல.** இந்த எண்ணத்தைதான், நினைத்தல், ஞாபகப்படுத்தல், தியானித்தல், திக்கிர் செய்தல் என்று கூறப்படுவது. இந்த தியானித்தலைச் சிறிதளவேனும் பெற்றுப்படிப்படியாய் ஈமானை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்பதே அல்லாஹ் றசூலுடைய நோக்கமாகும்.

ஆனால் நாமும் எம்முடைய வழிகாட்டிகளும் என்ன செய்கிறோமென்றால் கையைக்கட்டியவன் சரியான இடத்தில் கட்டினானா? இவனுடைய தக்பீர்கட்டுதல் இன்ன மதுஹபுக்கும் இன்ன கிதாபின் விளக்கத்துக்கும் விரோதமாய் இருக்கிறதே இவனுடைய றுகூஉ சரியாய் அமையவில்லையே! இவன் ஸுஜுது செய்வதும் சரியாய் அமையவில்லையே! இவனுடைய தொழுகை சரியா? இல்லையா? என்பதையே அவாதானிக்கிறோம். காதியானி, வஹ்ஹாபி, பலாஸிபா என்றெல்லாம் பட்டமும் சூட்டுகிறோம். ஏனென்றால் எம்மிடம் உள்ள கண்கள் இம்மனிதனுடைய தொழுகையின் வெளிக்கோலத்தை கண்டனவனேயன்றி அதன் உட்கோலமான உயிரைப்பார்ப்பதே இல்லை.

இவ்விதமான அற்பசொற்பமான சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்துப் பெரும் பெரும் மற்போர் சொற்போர்களை நடாத்த முற்படுகிறோமேயன்றி எம் செயல்கள் வெற்றியளிக்குமா? என்பதைச் சிந்திப்பதே இல்லை. இவ்விதமான மருட்சியில் ஊறிக்கொண்டிருக்கிற நாம் எம்மை அறிவுமேதைகளாக எடைபோட்டுக் கொண்டிருந்தாலும் எம்முடைய அமல்கள் எப்படிப் பிரயோசனமளிக்கும்? இந்த நிலைமையை ஊட்டியவர்கள் யார் என்பது தெரியுமா? இவர்கள்தான் எமக்கு வழிகாட்டிய லாஹிறுடைய அறிவாளர்கள். இவர்களுடைய அறிவு ஓர் குறிப்பிட்ட வட்டத்துக்குள் கட்டுண்டிருப்பதால், அவ்வட்டத்துக்கப்பாற்பட்ட கல்வி அத்தனையுமே தவறானது என்று தீர்ப்புக் கட்டி, மக்களும் தாங்களிறிந்த வட்டத்தைக் கடக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக மிகமிகக்கடினமான தடையுத்தரவுகளை வலியுறுத்தியிருக்கிறார்கள். இவர்களைப் பின்பற்றிய நாம் பெரும் பாலும் சிந்திக்காமலே செயலில் ஈடுபடுவதன் காரணம் இதுதான். தன் நிலையை அறிந்துகொள்ள அறிவில்லாத சுதந்திரமற்ற மனிதன் தன் வாழ்நாளில் பெரும்பகுதியைக் கண்மூடித்தனமான பின்பற்றல் வழியில் கழித்துவிட்டு ஆகிறாவில் கைசேதப்படவே போகிறான். இந்த விஞ்ஞான காலத்திலும் மனிதன் இவ்விதமான இருளில் மூழ்கிக் கொண்டிருப்பது ஆச்சரியம்தான். (தன் அமலின் பிரயோசனத்தை அவன் இவ்வுலகிலேயே கண்டுகொள்ளக் கூடிய அறிவுக்கண் அவனிடத்தில் இல்லாமலிருப்பதால் ஆகிறாவில் நான் சுவர்க்கம் போவேன் என்று நம்பிக்கொண்டிருக்கிறான்).

***ஹதீஸ்: இருதய அடக்கமும் அவயவ சாஷ்டாங்கமுமே தவிர மற்றப்படி யாதொரு தொழுகையும் இல்லை.***

ஓர் மனிதன் உண்மையான உளப்பற்றுதலோடு “ஹுர்புல்பராயிலி” என்ற பர்ழான கடமைகளைக் கொண்டொழுகும் பாதையில் சென்று கொண்டிருந்தால் பனாவுடைய நிலைமையைப் பெறப்பலவருடங்களும் பிடிக்கலாம். இறக்கும் வரையும் கிடைக்காமலும் போகலாம். ஆகவே இந்த நிலைமையைப் பெறும் வரையிலும், உறுதியான ஹக்கான ஈமான் ஏற்படும் வரையிலும் பர்ளான கடைமைகளைச் செய்துகொண்டுதான் இருக்க வேண்டும். றசூல்(ஸல்) அவர்களால் மிகப்பெரும்பாலாருக்கு விளக்கப்பட்டது இந்த “ஹுர்புல்பராயிலி” என்னும் பாதைதான். எம் சமூகத்திலுள்ள ஸாபி, ஹனபி, ஹம்பலி, மாலிக்கி போன்ற மதுஹபுகளினாலும் விளக்கப்பட்ட விபரங்கள் எல்லாமே இந்த “ஹுர்புல்பராயிலி” என்ற பக்தி மார்க்கத்தின் வெளிக்கிரிகைகளான அமல்களின் விபரங்களேயாகும். இந்த விளக்கங்கள் ஏறக்குறைய ஒரே அடிப்படையில் உள்ளவைதான். ஒரு அறிஞரின் விபரம் இன்னோர் அறிஞரின் விபரத்துக்குச் சிறிது மாறுபட்டிருப்பினும் சரியே. இந்த அறிவுக்கு முஆமலாத்துடைய இல்மு (பிக்ஹு) என்பதே பெயராகும்.

இந்தப்பக்தி மார்க்கத்தை விளக்குவது எமது நோக்கமல்ல. இந்தப் பக்திமார்க்க அறிஞர்களால் ஸுபிகளுக்கேற்படும் சில இடைஞ்சல்களை நீக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வளவு விளக்கமும் தரவேண்டியிருக்கிறது. எமது நோக்கம் “ஹுர்புல்பராயிலி” யின் உயிரான “ஹுர்புன் நவாபிலியை” விளக்க வேண்டும் என்பதே. இவ்விளக்கத்தைப் பெறுவதற்கு உதவியாக பிக்ஹுடைய இல்மைப்பற்றி இன்னும் சிறிது கூறவேண்டியிருக்கிறது. செவி தாழ்த்தவும்.

மேலே விளக்கிக் காட்டிய பக்திமார்க்கத்தைச் சேர்ந்த அறிஞர் விளக்கியுள்ளதும் நம்மில் அநேகர் கையாளுவதும் பிக்ஹுக் கிதாபுகளில் இடம் பெறுவதும் “ஹுர்புல்பராயிலி” என்ற இந்தப்பாதையின் வெளி உருவங்களான இஸ்லாம், தொழுகை, நோன்பு, சக்காத், ஹஜ்ஜு, ஹறாம், ஹலால் போன்ற வெளி விஷயங்களேயாகும். அதாவது சமூகத்துக்கு வேண்டிய அரசியல், சுகாதாரம், கலை, கலாச்சாரங்களே பெரும்பாலும் இக்கல்வியில் இடம் பெறுகின்றன. இந்தப்பக்தி மார்க்கத்தின் வெளி அனுஷ்டானங்கள் பெரும்பாலும் இவ்வுலக வாழ்க்கையின் வெற்றிக்கு ஆதாரமாய் அமையலாம். எனினும் ஆகிறாவின் வெற்றிக்கு **இவை பிரயோசனம் தராதென்பதை நீ முதலில் தெளிவாய் விளங்கிக் கொள்ள வேண்டும்.** அதாவது இந்த பக்தியின் வெளிஅனுஷ்டானங்களும், இல்லற பிரயோசனங்களைவிட ஆகிறாவின் பிரயோசனத்தைப் பெற,**பக்தி மார்க்க உலமாக்களான பிக்ஹுடைய உலாமாக்களின் தீர்ப்பும், ஆராய்வும், செல்லாது** என்பதை நீ சரியாய் விளங்கிக் கொண்டால் தான் உண்மையான அறிவையும் ஆகிறாவின் பிரயோசனத்தையும் உன்னால் பெற முடியும்.

கலிமாவை நாவினால் கூறிய ஒருவரை ஒரு ஷஹாபி வெட்டிவிட்டதனால் அவரை நோக்கி வெட்டுப்பட்டவனுடைய கல்பை நீர் அளந்து பார்த்தீரோ என்று றசூல்(ஸல்) கடிந்து கூறியிருப்பதனாலும் இன்னும் சில கட்டங்களில் நாவினால் கலிமாவைக் கூறியவர்களை றசூல்(ஸல்) அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாலும் ஈமானுடைய விஷயத்தில் நாவினால் கலிமாவைக்கூறுவதே போதுமானதென்று பிக்ஹுடைய உலமாக்கள் தீர்ப்புக் கூறுவார்கள். ஆகவே நாவினால் கலிமாவைக் கூறவேண்டிய பர்ளு, ஷர்த்துக்களைப்பற்றிய வெளிப்படையைக் கூறுவது பகீஹுடைய உலமாக்களுக்குத் தெரியுமேயல்லாது, உள்ளத்தின் உண்மைகளைப்பற்றிய விபரங்கள் அவர்களுக்குத் தெரியவே தெரியாது. ஆகையால்தான் வாளுக்குப் பயந்து, உலக மக்களுக்குப் பயந்து, கௌரவத்தைப் பொருளைப் புகழை விரும்பி, நாவினால் கலிமாவைக் கூறுபனையும் பகஹுடைய உலமாக்கள் மூமீன், முஸ்லீம் என்று தீர்ப்புக்கட்டுகிறார்கள். **ஆனால் அவனுடைய** உள்ளத்தில் குடிகொண்டுள்ள ஷிர்க்கையும், குபிரையும், இருட்திரைகளையும் **வாளினாலோ, உலாமாக்களின் பேனையினாலோ, தீர்ப்பினாலோ அறியவே முடியாது**. “லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற கலிமாவை நாவினால் கூறுகிறவகையில் நான் அவர்களுடன் யுத்தம் செய்யக் கற்பிக்கப்பட்டுள்ளேன் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸ் இவ்வுண்மையை நிரூபிக்கிறது.

ஹதீஸ்: *மக்கள் அல்லாஹ்வைத் தவிர இலாஹு இல்லை. திட்டமாக முகம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய திருத்துாதராவார் என்று சாட்சி கூறித் தொழுகையைக் கடைப்பிடித்தொழுகி சக்காத்தும் கொடுத்துவராதவரை அவர்களுடன் அறப்போர் புரியுமாறு இறைவன் எனக்கு ஆணையிட்டுள்ளான். இவ்விதம் இவர்கள் செய்வார்களானால் அவர்களுடைய உயிர்களையும் பொருட்களையும் என்னை விட்டும் காத்துக்கொண்டவராவார். இஸ்லாத்தின் கடமைகளைத் தவிர அவர்களுடைய கணக்கு அல்லாஹ்விடமிருக்கிறதென்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

அறிவிப்பவர்:அப்துல்லாஇப்னுஉமர்(றலி)
ஆதாரம்:புஹாரீ முஸ்லிம்.

நாவினால் கலிமாவைக் கூறிக்கொண்டும் முஸ்லீமுடைய வேஷத்தைப் போட்டுக்கொண்டும் முஸ்லீம்களின் பர்ளான சுன்னத்தான கடமைகளைச் செய்து கொண்டும் நோக்கத்தை மறந்த நிலையில் காலத்தைக் கடத்துவது, துன்யாவுடைய விஷயத்தில் **பகீஹுகளுடைய சட்டப்படி போதுமானதாய் இருப்பினும் ஆகிறாவில் அது பிரயோசனம் தராதென்பது அதுவே தண்டனைக்குரிய காரணமாய் அமையலாம் என்பதும் உண்மையே.** நாவினால் கூறும் கலிமாவின் பிரயோசனம் துன்யாவில் உயிரையும் பொருளையும காப்பாற்றும் என்று றசூலுல்லாஹ் கூறினாகளேயாயினும் ஆகிறாவில் பிரயோசனம் பெறுவது உண்மையான ஈமான் மற்றும் நுட்பமான ஞான விளக்களினாலுமே அல்லாமல் இவ்வுலக முதல்களினாலல்ல என்பதைத் தெளிவாய் உணர்ந்து கொள்ளவேண்டும். ஓர்கலையின் சட்டதிட்டங்களை மீறக்கூடிய வகையில் எழுதுபவர் அல்லது பேசுபவர் அக்கலையை விட்டு நீங்கியவராகவே கணிக்கப்படுவார். இதே போல பிகஹுடைய உலமாக்கள் பேசும் போது அல்லது எழுதும் போது உண்மையான ஈமானின் விபரங்களையோ அல்லது இருதைய வணக்கங்களையோ அல்லது ஞான நுட்பங்களையோ வெளிப்படுத்த விரும்பினால் அவர் "பகீஹு" என்ற பெயரைவிட்டே நீங்கிவிடுவார்,**ஏனென்றால் ஈமானுடைய உண்மை இருதய வணக்கங்களுக்கான ஞான விளக்கங்கள் முகாஸபத்துடைய இல்மாய் இருக்கின்றன. இந்த இல்மு பகீஹுடைய உலாமாக்களின் அறிவான முஆமலாத்துடைய இல்மைக் கடந்ததாயும் பிக்ஹுடைய சட்டதிட்டங்களை மீறியதாயும் இருக்கிறது.** அதாவது பிக்ஹுக் கிதாபுகளில் விபரிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் விபரங்கள் சாதாரண மக்களைப் பொறுத்ததாயும் முஆமலாத்துடைய இல்மைச் சேர்ந்ததாயும் இருக்கின்றன. மார்க்க இரகசியங்களான ஈமானுடைய இரகசியங்கள் ஞான விபரங்கள் மகான்களான கவாஸுகளைப் பொறுத்தவையாயும் முகாஸபத்துடைய இல்முகளாயும் இருக்கின்றன. **ஆகவே இந்த முகாஸபத்தடைய இல்மை ஒரு பிக்ஹுடைய உலமா அறியாதவராயும் அதை விரோதிப்பவராகவும்தான் இருப்பார்.** அந்த உலமா இந்த முகாஸபத்துடைய இல்மை அறிந்தவராக இருந்து இதை எழுதும் போது அல்லது பேசும் போது பிக்ஹுடைய உலமா என்ற பெயரை விட்டு நீங்க வேண்டியவராயும் ஆரிபு, ஞானி, ஸுபி என்ற பெயரைப் பெற வேண்டியவராகவும் இருப்பார்.

ஒருவன் தன் தொழுகையை முடித்துக்கொண்டான் என்று வைத்துக் கொள்வோம். அவன் தொழுகையை மறந்தவனாகவும் அதன் வெளி உருவங்களான பர்ளு ஷர்த்துக்களைச் செய்து முடித்தவனாகவும் இருந்தாலும் அவனுடைய தொழுகை துருஸ்தாகி விட்டதென்றே பிக்ஹுக் கிதாபுகளும் அதற்குரிய உலமாக்களும் தீர்ப்புத்தருவார்கள். ஆனால் நாவினால் கூறிய கலிமா ஆகிறாவின் பிரயோசனத்தைப் பெறாதது போலவே இந்த வெளிப்படைத் தொழுகையும் பிரயோசனம் தராதென்பது உண்மை. ஆனால் வெளிப்படைத் தொழுகையினால் இவ்வுலக குற்றங்களில் நின்றும் அவன் காப்பாற்றப்பட்டதினால் அவன் செய்யவேண்டிய கடமை நிறைவேறிற்று என்றே தீர்ப்புக்கட்டுகிறோம். வெளிப்படைத் தொழுகையினால் பிரயோசனத்தைப் பெறுவதற்குரிய ஆதாரமாகவும் ஆகிறாவுக்குரிய வணக்கமாகவும் இருக்கிற ஈமானின் உண்மை இருதயபக்குவம் போன்ற அரிய விஷயங்களைப் பிக்ஹுக் கிதாபுகளோ பிக்ஹுடைய உலமாக்களோ எடுத்துப் பேசுவதே இல்லை. ஏனென்றால் இந்த ஞான இரகசியங்கள் அடங்கிய **முகாஸபத்துடைய இல்மு அந்த கிதாபுகளைக் கடந்ததாய், அந்தக் கிதாபுகளில் இல்லாததாய், அந்த உலமாக்கள் அறியாததாய் இருக்கிறது. ஹறாம், ஹலால் வணக்கம் முதலிய ஏறக்குறைய எல்லா விஷயங்களுமே இதில் அடங்கும்.** விபரித்தால் பெருகும்.

## இதன் சாரம்

01. மார்க்கத்தின் வெளிச்செயல்கள் யாவும் "ஹுர்புல்பராயிலி" உலக, சமூக, அரசியல் விஷயங்களாகும்.

02. மார்க்கத்தின் உட்கோலமான "ஹுர்புன்நவாபிலி"ஈமானின் உண்மையும் அது சம்பந்தமான ஞானங்களுமே ஆகிறாவைச் சேர்ந்தவையாகும்.

03. மார்க்கத்தின் வெளிச் செயல்கள் யாவும் ஈமானின் பிரயோசனத்தைப் பெறக்கூடிய ஆரம்ப அனுஷ்டானங்களாகும்.

04. மார்க்கத்தின் வெளி அனுஷ்டானங்களை விளக்குவதே "பிக்ஹு முஆமலாத் என்பது.

05. மார்க்கத்தின் உட்கோலத்தை விளக்கும் "முகாஸபாத்" ஹகீகத், மஹ்ரிகபத்தைச் சோந்த இல்மாகும்.

06. மார்க்கத்தின் உயிரான உட்கோலத்தை விளக்கும் இல்முகள் பிக்ஹுடைய உலாமாக்களுக்கு அப்பாற்பட்டவையே.

07. பிக்ஹுடைய இல்மு சாதாரண மக்களை நோக்கியது. அவாம்களைக் கட்டுப்படுத்திச் சீரான சமூகமாக்குவதே அதன் நோக்கம்.

08. முகாஸபத்துடைய இல்மு கவாஸுகளான மகான்களை நோக்கியது. இறைவனோடு ஐக்கியமாக்குவதே அதன் நோக்கம்.

இவ்விடத்தில் சட்டம் என்பதைக் கொஞ்சம் சிந்தனை செய்து பார். நீ ஓர் மனிதனைக் கொலை செய்துவிட்டாய் என்று வைத்துக்கொள். நீதிபதியிடத்தில் நீ கொலைக்காரனேதான் என்பது நிரூபிக்கப்பட்டால், அந்த நீதிபதி உனக்குச் சிரச் சேதம், அல்லது தூக்கு(மரண) தண்டனை விதிக்கிறார் என்று வைத்துக் கொள். இப்போது நோட்டமிட்டுப்பார். நீ செய்த அதே கொலையைத்தான் நீதிபதியும், நீதியென்ற அடிப்படையில் செய்விக்கிறார். ஆனால் நீ உன் ஆசையின் பெயரால் கொலை செய்தாய். இதில் உண்மை என்ன? உன்னை அப்படித் தண்டிக்காவிட்டால் சமூகத்தைப் பாதுகாக்கமுடியாது என்பதுதான் சட்டத்தின் நோக்கம். ஆனால் சட்டம் இவ்விதமான முடிவைக்கட்டியிருந்தாலும் கொலை நடைபெறாமல் விடுவதே இல்லை. நீ நீதிபதியால் தண்டிக்கப்பட்டுவிட்டாய் என்றால் இறைவனிடத்திலும் மன்னிப்புக் கிடையாது என்பதும் பொருளல்ல. ஆகவே சட்டத்தின் தீர்ப்புத்தான் இறைவனிடத்திலும் தீர்ப்பு என்பதும் முழு உண்மையல்ல. ஏனென்றால் சட்டத்தின் தீர்ப்பு நிரூபணத்தைப் பொறுத்த விஷயம். நிரூபணமோ வாக்குச் சாதுரியம் விவேகம் முதலியவைகளைப் பொறுத்ததாய் இருக்கின்றது. இந்த நிரூபிக்கும் விஷயத்தில் வெற்றி தோல்வி கணிக்க முற்படும்போது நூற்றுக்குத் தொண்ணூறு வீதமும் படு பொய் கலக்கும் என்பது நிச்சயம். ஆகவே சட்டங்களின் கல்வி (பிக்ஹு) அமைக்கப்பட்டதன் நோக்கம் சமூக மக்களைக் கட்டுப்படுத்தி அச்சம் ஆதரவுகளை ஊட்டி ஓரளவேனும் அமைதியான வாழ்க்கை முறையை உருவாக்க வேண்டும் என்பது தான். ஒவ்வோர் அரசாங்கத்துடையவும், ஒவ்வோர் மதத்துடையவும் வெளிப்படைச் சட்டங்கள் யாவும் இந்த நல்ல நோக்கத்தோடு அமைக்கப்பட்டவைதான். பகுத்தறிவுடைய மனிதன் இந்தச் சட்டங்களைத் துஷ்பிரயோகம் செய்யாமல் கடைபிடிப்பது சமூக நலனைப் பாதுகாக்கக்கூடிய ஓர் உபாயம்தான். இவ்விஷயம் பொதுப்படையாய் எல்லோருக்கும் பொதுவான ஓர் விஷயம். ஆனால் இறை ஐக்கியம் என்பதும் அதற்குரிய கல்வியும் அதன் சட்டதிட்டங்களும் நாம் முன்பு விளக்கிய சட்டதிட்டங்களும் (பிக்ஹுடைய அறிவுக்கு) வெகு தூரம் வேறுபட்ட ஒன்றேயாகும்.

ٱلَّذِينَ ٱتَّخَذُوا۟ دِينَهُمْ لَهْوًا وَلَعِبًا وَغَرَّتْهُمُ ٱلْحَيَوٰةُ ٱلدُّنْيَا ۚ
فَٱلْيَوْمَ نَنسَىٰهُمْ كَمَا نَسُوا۟ لِقَآءَ يَوْمِهِمْ هَٰذَا وَمَا كَانُوا۟ بِـَٔايَٰتِنَا
يَجْحَدُونَ

7-51 *இவர்களை இவ்வுலக வாழ்க்கை மயக்கி விட்டதானால் தங்களுடைய மார்க்கத்தை வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் அவர்கள் எடுத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் நம் வசனங்களை நிராகரித்து இந்நாளில்(நம்மை)சந்திப்பதையும் மறந்தவாறே நாமும் இன்றைய தினம் அவர்களை மறந்துவிடுவோம்.*

**ஹதீஸ்:** ***ஒரு விஷயத்தைப்பற்றி மற்றவர்கள் தீர்ப்புத்தந்த போதிலும் அதைப்பற்றி உமது இருதயம் ஆராய்வு செய்யவும் என்று றசூல்(ஸல்) அவர்கள கூறுகிறார்கள்.***

இரண்டாவது வகையினர் கவாஸுகள். இறைவழி செல்லும் இந்த இறைநேசர்கள் சென்று கரைசேரும் சிறாத்தல் முஸ்த்தகீம் என்ற நேரான பாதையையும் அவர்களுடைய அறிவையும் (ஞானத்தையும்) பிக்ஹுடைய உலமாக்களில் அநேகர் புரிந்து கொள்ளாமல் இருப்பதும், மறுப்பதும், விளங்காமையினால் எதிர்ப்பதும், ஆச்சரியமோ புதுவிஷயமோ அல்ல. ஏனென்றால் அவாம்களுக்குத் தரப்பட்ட வெளி அனுஷ்டானங்களையும் அறிவையும் கடந்த நல்லடியார்களின் பாதை பிழையானதுபோல் தான் தென்படும். துர்க்குணமும் பெருமையும் வஹ்மும் உடைய ஒருவருக்கு இந்த நல்லடியார்கள் செல்லும் பாதையின் இல்மு கொடுக்கப்படுவதே இல்லையென்று ஏகமனதாகப் பல ஆரிபீன்கள் கூறியுள்ளார்கள். இல்லறவிருப்பம் அதிகப்பட்டு வஹ்முக்கு அடிமையாயிருக்கிற ஒவ்வொருவனுக்கும் உலகின் மற்ற இல்முகளை விளங்கியறியக்கூடும் என்றாலும் இந்த நல்லடியார்களின் இல்மை விளங்கி உண்மை கொள்ள அவர்களால் முடியாதது என்றும்,**இந்த நல்லடியார்களின் இல்மை ஒத்துக்கொள்ளாதவனுக்குக் கொடுக்கப்படுகிற மிகக்குறைந்த தண்டனை** இந்த முகாஸபத்துடைய இல்மில் அற்ப அளவையும் அவன் விளங்கியறிந்து அனுபவிக்க முடியாமல் ஆகிவிடுவதே என்றும் பல ஒலிமார்களான பெரியார்கள் கூறியுள்ளார்கள்.

ஆம், இந்த நல்லடியார்களான மகான்கள் கூறியது முற்றிலும் உண்மைதான் என்பதை என் சொந்த அனுபவத்தைக் கொண்டு நானும் சாட்சி கூறுகிறேன். நல்லடியார்களைத் தவிரப் பெரும்பாலான மனிதர்கள் ஒவ்வொருவரும் தங்களைத் தங்களுடைய கௌரவம் பட்டம் பதவி அறிவுகளை மிகமிகப் பெரிதாகவே எடை போட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்களின் எந்த ஓர் சொல் செயல் கருத்தானாலும் அது பிறரிடம் மதிப்பைக் கவுரவத்தை புகழைப்பெறவேண்டுமென்ற நோக்கோடுதான் வெளிப்படுகிறது என்பதை இவர்கள் உணர்ந்து கொள்வதே இல்லை. அதாவது இவர்களுடைய சர்வகாரியங்களுக்கும் புகழாசை, கௌரவத்தைப் புகழைப் பெறவேண்டுமென்ற நோக்கோடுதான் வெளிப்படுகிறது என்பதை இவர்கள் உணர்ந்து கொள்வதே இல்லை. அதாவது இவர்களுடைய சர்வகாரியங்ளும் கௌரவ ஆசை (ரியா)என்ற ஊற்றிலிருந்தே ஆரம்பிக்கின்றன. ஏனென்றால் இவர்கள் சிருஷ்டிகள் என்ற கட்டில் மண்டுண்டவர்களாயும் பிறசிருஷ்டிகள் இருப்பதைக் கண்டு கேட்டு தொட்டு நுகர்ந்து சுவைத்து அறிபவர்களாயும் இருப்பதால் இவர்களையறியாமலே அகங்காரம் குடிகொண்டவர்களாய் இருக்கிறார்கள். இந்த அகங்காரம் இருக்கும் வரையிலும் இவர்களுடைய செயல் ஏறக்குறைய எல்லாமே புகழாசை வரட்டுக்கௌரவம் (ரியா) என்ற அடிப்படையில் இருந்துதான் உருவாகின்றன.இந்தப் புகழாசை என்பது கஞ்சா அபின் சாராயம் முதலாம் ஊக்கிப் பொருட்களைப் போலவே, ஊக்கிக்குணமாய் அமைந்திருக்கிறது. இந்த ஊக்கிக்குணம் எவ்வளவு சிறந்த ஓர் கல்விமானையும்கூட அவனை அறியாமலே மயக்கிவிடுகிறது. அதாவது அவனுடைய பகுத்தறிவுகூட இந்த ஊக்கிக் குணத்துக்குக் கட்டுப்பட்டுவிடுகிறது. தான் புகழாசை என்னும் ஊக்கிக் குணத்தினால் மஸ்த்தடைந்திருக்கிறேன் என்பதையும் அறியாமலே போய்விடுகிறான் அந்த மனிதன்.

மதுவைப் பாவித்துக் கொண்டு மஸ்த்தடைந்த ஒருவன் ஓர் சிறுகல்லில் தடுக்கிவிழுந்து விடுவான் என்பது நமக்குத் தெரியும். அதுதவிர உண்மையாகவே அவன் எந்த ஓர் மல்யுத்தக்கலையையும் கற்றறியாத "ஒல்லியான, விவேகமேயற்ற ஓர் முட்டாள் என்பதும் நமக்குத் தெரியும். ஆயினும் அந்த முட்டாள் என்ன கூறுகிறானென்றால், உலகமக்கள் அனைவரையும் நான் ஓர் கைபார்ப்பேன் என்னை எவராலும் ஜெயிக்கவே முடியாது என்று கூறுகிறான். இவனுடைய பரிதாப நிலையைக் கண்ட ஓர் மல்லன் மவுனம் சாதித்தவனாக மாறிவிடுகிறான். அப்போதும் கூட அந்த மஸ்த்துக்கடிமையான முட்டாள் என்ன கூறுகிறான் என்றால் பார்த்தாயா? மல்லன்கூட எனக்குப்பயந்து தானே பின்வாங்கிவிட்டான் என்று கூறுகிறான். மலையைப்பார்த்த நாய் தன் தொண்டை கிழியும் வரையில் குரைப்பதும் மலை என்றுமிருந்ததுபோல அசையாமல் இருப்பதும் நாமறிந்த உண்மைதானே! இதே போல ஊக்கிக்குணமான புகழாசையைப் பருகிக்கொண்ட மனிதர்களும் (கல்விமான்கள்கூட) தாங்கள் கூறுவதென்ன? என்பதைச் சிந்திப்பதேயில்லை. பிறருடைய அறிவுக்கு எள்ளளவும் மதிப்பழிப்பதோ, அதற்குச் செவிசாய்ப்பதோ அந்த அறிவில் நாமறியாத அம்சங்கள் ஏதுமிருந்தால் அதைப்பெற்றுக்கொள்வோம் என்று விரும்புவதோ கிடையாது தன்னைப் பெரிதாகக்கணித்துக்கொண்ட ஒருவன் மற்றவர்களைத் தன்னிலும் சிறிதாகத்தானே காண்பான். மனிதர்கள் ஒவ்வொருவரும் தம்மை அறிவாளியாகக் கணிப்பதனால்தான் உலகில் அதிகமான முட்டாள்கள் இருக்கிறார்கள் என்று ஒரு பழமொழி உண்டு. யார் எதை எப்படி வேண்டுமானாலும் கூறட்டும். தான் வெற்றியாளன் என் பேச்சே சரியானது என் செயலே சரியானது என்று எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். தன்னை ஓர் அறிஞனாக மக்கள் மதிக்க வேண்டும் என்பதுதான் இவனுடைய நோக்கம். இவ்விதமான மாமேதைகள் பலரை பார்த்ததுண்டு. போலிஞானவான்கள் பலரைக்கண்டதுண்டு. அவர்களின் ஞானோபதேசங்களை மவுனமாய் நான் கேட்டு ரசித்ததுமுண்டு.

இவ்விதமான மதியிழந்து புகழாசைப் போதையில் மூழ்கிய மக்கள் நல்லறிவுக்கு எப்படி இடம் கொடுப்பார்கள்? நல்லறிவை எப்படி விரும்புவார்கள்? இவர்கள் இறை நேசர்களின் இல்மை மறுப்பதனால் இவர்களுக்கு இறைவனால் அளிக்கப்பட்ட தண்டனைதான் இந்தப் புகழாசைப் போதை என்பதை எப்படி உணர்வார்கள்? தாங்கள் பேசும் பேச்சு உயிரற்ற வெறும் பதர் என்பதையும் நல்லடியார்களின் பேச்சு உயிருள்ள மணியென்பதையும் எப்படி அறிவார்கள்? தங்களுடைய போதைக்குணத்தால், காலடியில் கிட்டிய இரத்தினங்களையே கண்ணெடுத்தும் பாராமல் தட்டிவிட்டோம் என்பதை எப்படி ஒப்புக்கொள்வார்கள்? தாய் தன் குழந்தைக்கு அப்பத்தை வாங்கிக் கொடுக்கிறாள். மண்ணில் விழுத்திக்கொள்ளவேண்டாம், அமைதியாய் இருந்து உட்கொள் என்றெல்லாம் உபதேசம் செய்கிறாள். ஆனால் குழந்தை உபதேசத்தைப் பொருட்படுத்துவதே இல்லை. ஏன்? தன் அப்பத்தை மற்றவர்களுக்கும் காட்டவேண்டும், அவர்களிடம் மதிப்பைப் புகழைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் குழந்தை அப்பத்தோடு வெளியே வருகிறது. மற்றக்குழந்தைகளுக்கு அப்பத்தைக் காட்டிக்கொண்டிருக்கும் போது காக்கை பாய்ந்து வருவதைக்கண்ட குழந்தை கை தவறிக் கீழே அப்பத்தை விட்டு விடுகிறது. இந்தக் குழந்தையுடைய நிலைமைதான் புகழை விரும்பும் மக்களின் நிலைமையாகும். பெரும்பாலும் முஆமலாத்துடைய இல்மைப் பெற்றுக்கொண்ட கல்விமான்கள், ஞான இரகசியங்களை முறையான ஓர் ஒஸ்தாதிடம் பயின்று கொள்ளாமல் ஞானப்பாடல்களைப் பாடமிட்டுக்கொண்ட ஞானமேதைகள், ஆதாரமின்றித் தர்க்கிக்கும் விவாத வேங்கைகள் எல்லாம் அப்பத்தைப் பறிகொடுத்த அறிவு குறைந்த குழந்தையின் நிலைமையில் தான் தென்படுகிறார்கள்.

நல்லடியார்களான அவ்லியாக்கள், அப்தாலுகள் ஆரிபுகள், சித்திக்கீன்கள், நபிமார்கள், றசூல்மார்கள், இவ்விதமான மூடக்குழந்தைகளேயல்ல. தாய் சொற்கேளாத தனையர்களேயல்ல. இவ்வகையினர் புகழாசையென்னும் போதையில் மூழ்கிய புற்றடக்கி வீரர்களுமல்ல. தாய் சொற் கேட்டு வாழ்ந்தவர்கள் முறையான பயிற்சியில் பலகாலம் ஈடுபட்டு வெற்றி கண்டவர்கள். ஆழ்கடலில் நீந்திப்பழகியவர்கள். மூழ்கியவனைக் காப்பாற்றிக் கரையேற்றக் கூடியவர்கள். கண்தெரியாமல் தட்டலையும் குருடர்களைக் கூட்டிச்சென்று வழிகாட்டக்கூடிய கண்ணுடையவர்கள். பகுத்தறிவுக்கு ஏற்பட்ட மயக்கம் தீர மருந்தூட்டிவைக்கும் சிறந்த வைத்தியர்கள். இவர்களுக்கென்றுள்ள

அறிவுக்குத்தான் முகாஸபத்துடைய இல்மு என்பது பெயர். இவர்களுடைய இந்த இல்மு புகழாசையின் அடிப்படையில் வெளியாவதே இல்லை. இந்த இல்மு கடமை, தயை என்ற அடிப்படையில் வெளிப்படுவதாகும். இவ்வகையினருக்குக் கடமை என்பது ஏற்படவில்லையானால் இந்த முகாஸபத்துடைய இல்மு எப்போதும் வெளிவரப்போவதே இல்லை.

சகோதரனே! இன்னும் சிறிது செவிதாழ்த்துவாயாக. நபி என்பதை ஓர் ஆசிரியராகவும் றசூல் என்பதை ஓர் பேராசிரியராகவும் கணித்துக்கொள். இவ்விருவகையினரும் இறைவழி நடக்கவேண்டிய, பூரணத்தன்மையை பெற வேண்டிய மக்களுக்கு வழி காட்ட வேண்டியவராவார்கள். இந்த இறைவழி செல்ல முற்படும் மக்கள் ஆரம்பத்திலேயே பூரணத்தண்மையை பெற்றுக்கொண்டவர்களல்ல. இனிமேல்தான் பூரணத்தன்மையைப் பெறவேண்டியவர்கள். அதாவது இம்மக்கள் நிரப்பமான அறிவுடையவர்களேயல்ல. நபிமார், றசூல்மார்களின் வழிகாட்டலைக் கொண்டுதான் நிரப்பமான அறிவைப் பெற வேண்டியவர்கள். ஆகவே இவ்வகை மக்களுக்கு நபிமார்கள் றசூல்மார்களால் விளக்கப்பட்ட நல்லறிவுகள் பூரணமான உண்மையின் அடிப்படையிலுள்ளவையாகவே இருக்குமாயினும் முற்றுப்பெற்றவயாய் இருக்கமுடியாது. அதாவது இன்ஸானியத்தின் ஓர் குறிப்பிட்ட எல்லைவரையிலும் உள்ளதாகத்தான் இருக்கும். ஏனென்றால் முற்றுப்பெற்றதாய் அமையும்போது நபி , றசூல் என்ற எல்லைக் கோட்டை அந்த இல்மு கடந்துவிடுவதால் நபி, றசூல் என்ற பெயர்களும் நீங்கிவிடும். இந்த விஷயம் இன்ஸானுடைய ஓர் அகமியமாய் இருக்கிறது.

ஹதீஸ்: *எனக்கும் என்னுடைய அடியானுக்குமிடையில் ஓர் (ஷிர்று) இரகசியம் இருக்கிறது. முகற்றபானமலக்கோ முற்ஸலான நபியோ அதற்கு இடம்பெற மாட்டார்கள் என்று இறைவன் கூறியதாக றசூல்(ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள்.*

இந்த ஹதீஸின்படி நோக்கினால் றசூல்(ஸல்) அவர்களை விடவும் உயர் பதவியுடையவர்கள் உண்டா? என்று நீ என்னைக் கேட்கிறாய். அப்படி இல்லவே இல்லையென்று நான் கூறுகிறேன். ஏனென்றால் றசூல்(ஸல்) அவர்களை 34-28ஆம் 19-97ஆம் ஆயத்துக்கள் மூலம் நபியாக, றசூலாகவும் 21:107ஆம் ஆயத்து மூலம் உலகத்துக்கு ஓர் அருட்கொடையாகவும் அனுப்பினேன் என்று இறைவன் கூறுகிறான். இந்த 21-107ஆம் ஆயத்தின் படி றசூலுக்கு அப்பாற்பட்ட, ஷிர்ரைப் பெற்றுக்கொண்ட அடியாராகவும் றசூல்(ஸல்) அவர்கள் இருந்தார்கள் என்பதை நாம் அறிகிறோம். ஆகவே அவர்கள் நபியாகவும், றசூலாகவும் ஷிர்றுடைய அடியாராகவும் பூரணத்தன்மையுடையவர்களாகவே இருந்தார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமே கிடையாது. ஆகவே அவர்கள் நபியாக, றசூலாக இருந்து மக்களுக்கு விளக்கிய விபரங்கள், சட்டதிட்டங்கள் ஓர் எல்லை உடையவைதான் என்பதும் இறைநேசர்களின் இரகசியங்கள் அவர்களால் சமிக்ஞை செய்யப்பட்டுள்ளன என்பதும் உண்மை. **அவர்களால் பொது மக்களுக்கு கொடுக்கப்பட்ட சட்டநுட்பங்கள் இறைநேசர்களின் விஷயத்தில் தலையிடமுடியாது என்பதும் உண்மை.** இதற்குரிய ஆதாரம் 6:52வது ஆயத்தாகும். ஆகவே இறைநேசர்களைச் சட்ட அடிப்படையில் நோக்குவது தவறாகும்.

இந்த முகாஸபத்துடைய இல்மு சித்திக்கீன்கள் முகற்றபீன்களுடைய இல்மாய் இருப்பதால் சாதாரண அவாம்களுடைய இல்மைப் பாடமிட்டுக்கொண்ட ஓர் லாஹிறுடைய உலமா இதில் பிரவேசிப்பதும் தீர்ப்புக் கட்டுவதும் முடியாத காரியமும் தவறுமாகும். **ஈமான் உறுதியடைந்து உள்ளம் பரிசுத்தமாகும் போது அவ்வுள்ளத்தில் அவதாரமாகிற தெய்வீக ஒளியே(நூர்)இந்த முகாஸபத்துடைய இல்மு என்றும் இதில் பிக்ஹுடைய உலமாக்கள் பிரவேசித்துத் தலையிடுவது மகா குற்றமேயென்றும் கஸ்ஸாலி(றஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.** கஸ்ஸாலி(றஹ்) அவர்களின் கூற்று உண்மைதானென்பதை நானும் கூறிவைக்கிறேன்.

ஹதீஸ்: *ஈமான்தாரிகளின் (நல்லடியார்களின்)அறிவுக்கு அஞ்சிக்கொள்ளுங்கள். அவர்கள் மெய்யாகவே இறைவனின் பேரொளியைக்கொண்டு பார்க்கிறார்கள். என்று கூறி உண்மையைக் கண்டறிவோருக்கு நிச்சயமாகப் பல நற்சான்றுகள் உள்ளன என்ற 15:75ஆம் ஆயத்தையும் நபி(ஸல்) அவர்கள் ஓதிக்காட்டினார்கள்.*

**அறிவிப்பவர்: அபூஸயீத்(றலி)**
**ஆதாரம்:திர்மிதீ.**

இந்த முகாஸபத்துடைய இல்மில் தேர்ச்சி பெற்றவர்கள் தான் உண்மைக்கும் பொய்க்கும் இடையில் பிரித்தறியக் கூடியவர்கள். இவர்கள்தான் கவாஸுகள், கவாஸுல்கவாஸுகள் என்று கூறப்படுபவர்கள். குர்ஆன் ஹதீஸ்களில் இவ்வகையினருக்கென்றே கூறப்பட்ட பல விஷயங்கள் தென்படுகின்றன. இவ்விதமான ஆயத்துக்கள் ஹதீஸ்களை ஒருசாரார் புரட்டியும் மறைத்தும் விட்டிருக்கிறார்கள். மேலும் முகாஸபத்துடைய இல்மில் முன்னேற விரும்பும் மக்களை நோக்கி இது ஸறகுக்கு விரோதமென்றும், தவறான விளக்கமென்றும் தவறான பாதையென்றும் கூறித்தட்டிக்கலைத்து விடுகிறார்கள் ஒரு சில வழிகாட்டிகள் தங்கள் யூகங்களுக்கேற்றபடி வெறும் பொய்களையும் கற்பனைகளையும் மக்களிடையே பரப்பி விடுகிறார்கள். இந்த முகாஸபத்துடைய இல்மில் முன்னேற விரும்பும் மக்களைத் தவறான பாதையில் செல்பவர்களாகக் கணித்து அவர்களைத் தங்கள் மூடத்தனத்துக்குள் நுழைத்துக்கொள்ள விரும்புகிறார்கள் ஒவ்வொருவரும் தங்களை மிகப் பெரிய மார்க்க விளக்கவான்களாக, அறிஞர்களாகவே காணுகிறார்களன்றி, தாங்கள் செல்லும் பாதை சரியானதா? என்பதைச் சிறிதேனும் சிந்திக்கிறார்களே இல்லை. **இவர்களில் பெரும்பாலாருக்கு தாங்கள் ஷைத்தான்களுடைய அடிச்சுவடுகளையே பின்பற்றி வழிதவறிக்கொண்டிருக்கிறோம் என்பதும் பிறரையும் வழிகெடுக்கிறோம் என்பதும் தெரிவதே இல்லை.** குர்ஆன் ஹதீஸ்களைப்பற்றித் தர்க்கரீதியான எந்த

ஆதாரமுமே தெரியாமல் இருந்துகொண்டும் இவர்கள் தங்களை மேதைகளாக எடை போடுவதும் நல்லடியார்களான மாகான்களை எடை போடுவதும் வழிதவறியவர்களாக் கணிப்பதும் ஆச்சரியமல்ல.

கிளிப்பிள்ளைகளுக்கு ஒப்பான இவ்வகையினர் தங்களின் கல்வியறிவைப் பற்றி ஏதோவெல்லாம் பெரிதாக கற்பனை பண்ணிக் கொண்டாலும், அபாயஸீதுல்புஸ்தாமி(ற) கூறுவதுபோல பிணத்திலிருந்து பிணத்தை எடுத்துக் கொண்டவர்கள் என்பது உண்மை. மேலும் தாங்கள் ஷைத்தான்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறோம் என்பதும் தஜ்ஜாலின் கூட்டத்தைச் சேர்ந்திருக்கிறோம் என்பதும் இவர்கள் விளங்கிக் கொள்ளாத உண்மையேயாகும். அபூஜஹ்லின் கட்சியைச் சேர்ந்த முஸ்ரீக்கீன்கள்கூட, றசூல்(ஸல்) அவர்களையும் அவர்களின் ஸஹாபாக்களையும் வழிதவறிய கூட்டமாகத்தான் கணித்தார்கள்.

مَا ضَلَّ صَاحِبُكُمْ وَمَا غَوَىٰ

53-2 *உங்களது தோழர் வழிதவறிவிடவுமில்லை, அறியாமையில் ஆகிவிடவுமில்லை.*

ஆகவே இக்காலப் பண்டிதர்கள் பட்டதாரிகளில் ஒரு சிலர் ஸூபிகளைப் பார்த்து வழிகெட்டவர்களாய்க் கணிப்பது ஆச்சரியமேயல்ல.

ஏனென்றால் இவர்களறிந்துகொண்ட ஈமான் வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று சொல்லிக்கொண்டால் போதுமானது என்பதுதானே! இவர்கள் அறிந்து கொண்ட இஸ்லாம் நீண்டதாடி தலைப்பாகையுடன் பள்ளிவாசலில் சென்று தொழுதுகொண்டால் போதுமானது என்பதுதானே! இவர்களுடைய அறிவின் நிலைமையை நோக்கினால் மனவருத்தமடைய வேண்டியதாகவே இருக்கிறது. **இவர்களுடைய வாழ்வு, குழந்தைகள் மண்ணினால் ஆகாரம் சமைத்து விளையாடுவது போலவே அமைந்திருக்கிறது.**

وَمِنْهُمْ أُمِّيُّونَ لَا يَعْلَمُونَ الْكِتَابَ إِلَّا أَمَانِيَّ وَإِنْ هُمْ إِلَّا يَظُنُّونَ

2-78 *அன்றி கல்வியறிவில்லாதவர்களும் அவர்களிலுண்டு. வேதத்தைப் பற்றி (கேள்விப்பட்டுள்ள) வீண் நம்பிக்கைகளைத் தவிர (உண்மையை) அவர்கள் அறியவேமாட்டார்கள். அவர்கள் வீண் சந்தேகத்தில் (ஆழ்ந்து) கிடப்போரைத் தவிர வேறில்லை.*

**ஹதீஸ்:** ***எவர் தம்மைத்தாமே நோட்டமிட்டுக் கணக்குப் பார்த்துக் கொள்பவரும் இறந்தபின் தமக்கு நன்மை பயப்பதற்காக செயல்களை அமல்களைச் செய்பவரும்தான் அறிவாளராவார். எவர்தம்மனோ இச்சையின்படி செயலாற்றி அமல் செய்து பாவங்களை அல்லாஹ் மன்னிப்பான் என்று மேலோட்டமாக எண்ணுகிறாரோ அவர் அறிவற்றவரே ஆவார். என்று நபிகள்(ஸல்) அவர்கள் கூறினார்.***

**அறிவிப்பவர்: ஸத்தார் இப்னு அவ்ஸ்(றலி)**
**ஆதாரம்:திர்மிதீ**

## (3)

**ஆ**கிறாவுக்குக் கொண்டுசெல்லக்கூடிய இல்முகள் இரண்டு வகையானவை. அவற்றில் ஒன்று அவசியமான அமல்களுடன் கூடிய முஆமலாத்துடைய பரோட்சஞானம் என்று கூறப்படும். அதாவது அல்லாஹ் றசூலினால் அமல் செய்வதற்கு உதவியாய் விபரிக்கப்பட்ட உண்மையான விபரங்கள்தான் இந்த அறிவு. இரண்டாவது, அமல் இல்லாத சுத்த முகாஸபத்துடைய அபரோட்ச ஞானம் என்று கூறப்படும். அதாவது ஹகீகத்துடைய நியமனங்களை அனுசரித்து ஒழுகிய முடிவுப்பிரமாணங்களும், பிரயோசனங்களும், புலன்வழியாய் அறியக்கூடாததுமான ஞானமே இந்த அறிவு என்றும் பல ஆரிபுகள் கூறியுள்ளனர். இதை நூறுவீதமும் உண்மை என்று நானும் சாட்சி கூறுகிறேன். மேலும் மனிதருக்கு வேண்டியது இதுவேதான் என்றாலும் ஜனங்கள் இதைச் சாதாரண அறிவினால் விளங்கிக் கொள்ள மாட்டார்கள் என்பதை அறிந்து இந்த முகாஸபத்துடைய இல்மை அன்பியாக்கள் உவமைகளால் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்கள் என்றும், அன்பியாக்களுக்கு வாரிசுகளாய் இருக்கிற உண்மையான உலமாக்களுக்கு வேறுவழியில்லையாகையால் அவர்களைப்பற்றுவதே (சூசகமாய்க் கூறுவதே) சரியென்றும்,**இந்த முகாஸபத்துடைய இல்மைக் கிதாபுகளில் அமைப்பது குற்றமாய்யிருக்கிறதென்றும்** கஸ்ஸாலி (றஹ்)அவர்கள் தங்களுடைய இஹ்யா உலுமுத்தீன் என்ற கிதாபில் கூறுகிறார்கள். இன்னும் பல நூற்களில் இவ்வுண்மை கூறப்பட்டுள்ளது.

இவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெளிவாய் ஆராய்ந்து பார்த்தால், இரகசியங்கள் நீங்கலாகவுள்ள முகாஸபத்துடைய வெளிப்படையான இல்மைக் கிதாபுகளில் அமைப்பது குற்றமே

என்று **முன்னுள்ளோர் கூறிவந்ததைப் பின் பற்றியே இவர்களும் அவ்விதம் கூறியுள்ளார்கள்என்பது தென்படுகிறது**. ஆயினும் இவர்களுடைய பேச்சிலிருந்து ஓர் பெரிய உண்மை எமக்குத் தென்படுகிறது. அதாவது **முஆமலாத்துடைய பிக்ஹு கிதாபுகளில் இந்த முகாஸபத்துடைய இல்மு அமைக்கப்படவில்லை (எழுதப்படவில்லை) என்பதுதான் அந்த உண்மையாகும்**. ஆகவே, பிக்ஹுடைய பட்டதாரிகளில் மிகப்பெரும்பாலார் இந்த முகாஸபத்துடைய இல்மை அறியாதவர்களாய் இருக்கிறார்களென்பதும் உண்மை. ஆகவே லாஹிறுடைய உலமாக்களால் பொதுமக்களான அவாம்களுக்குத் தரப்பட்ட விபரங்கள் நூறு வீதமும் உண்மையானவை தான் என்பது கருத்தல்ல. இவ்விபரங்கள் உலக அரசியல் சமூகப்பிரச்சனைகளே ஆகும். அதாவது ஸரீஅத், தரீக்கத், ஹகீகத், மஹரிபத் என்று கூறுகிறார்களே! இவற்றில் மூன்றவதாகக் குறிப்பிடப்பட்ட ஹகீகத் என்பதே உண்மை என்பதாகும். அப்படியானால் அதற்கு முந்திய இரண்டு விபரங்களும் எவை? **உண்மைக்குச் செல்லும் இரண்டு படித் தரங்களேயல்லாமல் இவைதான் முற்றிலும் உண்மை என்பது பொருளல்ல.**

எம்முன்னோர்களான ஒருசிலர் அவர்களுடைய ஒருசில கிதாபுகளில் ஹகீகத்தின் பாதையைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள் என்பது உண்மை. ஆனால் அவர்கள் ஆராய்வும் அனுபவமுமில்லாமல் எழுதிய சிலவிபரங்கள் ஹகீகத்துடைய பாதையில் மக்களை முன்னேறவிடாமல் தடைபோடுகின்றன என்பதும் உண்மை. இந்தக் கிதாபுகளின் பெரும்பாலான விளக்கங்கள் மனிதர்கள் எல்லோருக்குமே பொதுப்படையாய்க் கூறப்பட்டிருப்பினும் ஒவ்வோர்வகுப்பாருக்குமுரிய தனித்தனி விபரங்கள் விபரமாய்ப் பிரிவுபிரிவாய்க் கொடுக்கப்படாமையால் ஹகீகத்துடைய மக்களுக்குச் சில கஷ்டங்கள் மக்களிடையே ஏற்பட்டுவிட்டன. ஏனென்றால் பிக்ஹு கிதாபுகளில் கூறப்பட்ட விஷயங்களே உண்மையானவையென்றும் முடிவானவையென்றும் நம்பக்கூடிய அளவு வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டிருப்பதால் அதைப் பூரணமாய் நம்பிக்கொண்ட மக்கள் ஹகீகத்துடைய மக்களை வழிதவறிச் செல்பவர்களாகக் கணித்து எவ்வளவோ இடைஞ்சல்களை ஏற்படுத்தி விடுகிறார்கள். மக்களுடைய இந்த மருட்சி நல்லடியார்களைப் பாதிக்கவே செய்கிறது. இவ்விஷயத்தை நான் பல முறை கூறியுள்ளேன்.

﴿إِنَّ شَرَّ ٱلدَّوَآبِّ عِندَ ٱللَّهِ ٱلصُّمُّ ٱلْبُكْمُ ٱلَّذِينَ
لَا يَعْقِلُونَ

8-22 *நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் கால்நடைகளில் (மிருகங்களில்) மிகக்கேவலமானவை (உண்மையை) அறிந்துகொள்ளமுடியாத செவிடர்களும் (அறிந்து சொல்லமுடியாத) ஊமையர்களும்தான்.*

உண்மையான ஞானமின்றி, இறைவழி சென்று கொண்டிருப்பதாய்க் கூறிக்கொண்டு ஏகாந்தத்தில் தங்குபவர்களே! என்பேச்சைச் செவிமடுங்கள்! உங்களுடைய நிஷ்டை அறைகளைக் காலி செய்துவிட்டு என்னளவில் வாருங்கள். உங்களுடைய நிஷ்டை அறைகளில் ஆதாரமின்றித் தரிபட்டிருக்கிறீர்கள். இதனால் நீங்கள் அடையப்போவது ஒன்றுமே இல்லை. என்னளவில் வந்து ஞானத்தைப் பெறுங்கள். இவ்வாறு உங்களை நான் அழைப்பது என் இலாபத்துக்காக அல்ல. நீங்கள் பயன் பெறுவதற்காகத்தான். என்று முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜெய்லானி(ற) அவர்கள் தங்களுடைய "பத்ஹுர்றப்பானி" என்னும் நூலில் கூறுகிறார்கள். அதே போல மூடப்பிடிவாதங்களிலும் குருட்டு அனுஷ்டானங்களிலும் தவறான விளக்கங்களிலும் ஊறி மதியிழந்து மாண்டுகொண்டிருக்கும் என் அன்புச் சகோதரனே !உன் கண்களைத் துடைத்துக்கொண்டு குர்ஆன், ஹதீஸ்களை நோட்டமிடு. சிந்தனை செய். நல்லறிஞர்களை அணுகி ஆராய்ந்து தெளிவுபெற்று இம்மையிலும் மறுமையிலும் வெற்றிபெறு. பிறர்மெச்ச வாழவேண்டுமென்று மருட்சியடையாமல் நீ திருப்பதியடையும் வகையில் வாழ்கையை அமைத்துக்கொள். அறிவுக்கு முதலிடம்கொடு. அமைதியடைந்த ஆண்மகனாய் மாற்றம் பெறு.

**(4)**

அடுத்ததாக "ஹுர்புன் நவாபிலி" என்ற பாதை. முகாஸபத்துடைய இல்முகள் யாவும் இப்பாதையைச் சேர்ந்தவைதான். இந்த அறிவில் சென்று கொண்டிருப்பவர்கள்தான் கவாஸுகள் என்ற நல்லடியார்களான மகான்கள். **அல்லாஹ்வுடன் ஐக்கியமாவதற்குரிய உண்மையான பாதை இந்த ஹர்புன் நவாபிலிமட்டுமேதான்.** இப்பாதையின் உண்மையை விளக்கி வைப்பதற்காகத்தான் நபிமார்கள் றசூல்மார்களை இறைவன் அனுப்பினான். இப்பாதையை விளக்குவதற்காகத்தான் காலாகாலம் குறிப்பிட்ட சில நல்லடியார்களை இன்றும் இறைவன் வெளியாக்கிக் கொண்டே இருக்கிறான். இப்பாதையை இலகுபடுத்துவதே பர்ழான கடமைளைக் கொண்ட செயலுள்ளபாதை என்பதும் அப்பாதையின் உயிரே செயலற்ற இந்தப்பாதை என்பதும் சாதாரண மக்களுக்கு மட்டுமல்ல, ஒரு சில உலமாக்களுக்கும்கூடத் தெரியாமலே மறைந்து போய்க் கிடக்கிறது.

"ஹுர்புன் நவாபிலி" என்றால் நபிலான வணக்கங்களைக் கொண்டு இறைவனோடு ஐக்கியமாதல் என்பதே அதன் கருத்தாகும். இப்பாதையில் செல்வதற்குச் சரியான நுண்ணறிவும் சரியான மனோ உறுதியும் அவசியமாய் இருக்கின்றன. இந்தப்பாதையில் சென்று தேர்ச்சியடையும்போது "ஸிபத்துல் பஸரியத்" என்று கூறப்படுகிற மனிதப்பண்புகள் அம்மனிதரை விட்டும் நீங்கி விடுகின்றன. சாதாரண

மனிதன் மட்டுமன்றி பெரும் பெரும் பட்டதாரிகள்கூட விளங்கிக்கொள்ள முடியாத அநேக உண்மைகள் இம்மனிதருக்கு வெளியாகின்றன. மிகச் சுருக்கமாய்க் கூறினால் இம்மனிதருக்கு வெளிப்புலன்களால் கிரகிக்கக் கூடிய “ஆலமுல்மஹ்ஸூஸாத்” என்ற பௌதீக உலகத்தின் திரை நீங்கிவிடுகிறது. அதன் பின் கியாலுடைய உலகமாகிய “ஆலமுல்மிதால்” உடைய திரை நீங்கிவிடுகிறது. அதன் பின் இறைவனுடைய ஸிபத்துக்களின் உலகம் அவருக்கு வெளியாகிறது. இன்னும் சுருக்கமாகக் கூறினால் நான் என்ற அனாநிய்யத் (அகங்காரம்) இவருக்கு மாய்ந்து விடுகிறது. அல்லாஹ்வுடைய ஸிபத்துக்கள் அவரில் பூரணமாய் வெளியாகி விடுவதால் அல்லாஹ்வைன்றி எதுவுமே கிடையாது என்ற பூரண ஈமான் (ஹக்குல் எகீன்,கமாலுல் எகீன்) அம்மனிதருக்குக் கிட்டிவிடுகிறது. அவர் தமது பூரணத்தன்மையை அடைந்துவிடுகிறார்.

**“தஜற்றுது” மவுத்துக்கபுல் அன்தமவுத்து” கட்டவிழ்தல் என்றெல்லாம் கூறப்படுகிற நிலைமை இதுதான்.** அதாவது நீ சிருஷ்டியாய் இரு என்று இறைவனால் கூறப்பட்ட “குன்” என்ற சொல்லில் கட்டுண்டிருந்த அவர் தன் கட்டிலிருந்தும் விடுபட்டுத்தான் ஆதியில் இருந்த நிலைமையில் அமைந்து விடுகிறார் என்பதே. உலகில் இருமுறை பிறக்காதவர் சுவனம் செல்லமுடியாது என்று றசூல்(ஸல்) அவர்களுடைய ஓர் ஹதீஸ் அறிவிக்கிறது. இந்த ஹதீஸை நோட்டமிட்டால் தாய்வயிற்றில் இருந்து பிறப்பது ஓர் பிறவி என்பதும் மவுத்தாகாமல் மவுத்தாகிப் பிறப்பது இன்னோர் பிறவி என்பதும் தெளிவாகவே தென்படுகிறது. **இந்த நிலைமையை எய்தாதவர் பல நூறு வருடங்கள் அமலில் ஈடுபடினும் நரகம் செல்லாமல் தப்பலாம் என்றால் அது நடக்கக் கூடிய ஓர் விஷயமேயல்ல.** இந்த மௌத்தாகாமல் மௌத்தாகும் நிலைமை அடைந்தவர்கள்தான் நபிமார்கள், வலிமார்களான ஞானவான்கள், ஆரிபீன்கள்.

இப்பாதையின் முடிவில் அம்மனிதர் சிருஷ்டி ஆவதற்கு முன் எந்த மர்த்தபாவில் இருந்தாரோ அதே மர்த்தபாவை அடைந்து விடுகிறார் என்பதே. சாந்தி, பூரணத்தன்மை, கமாலியத், லிகா என்பதெல்லாம் இதுதான். ஐக்கியமாதல், நாஸ்தியாதல், பனாவாதல் என்றெல்லாம் கூறப்படுவதும் இதுதான். கலிமாவின் உண்மைப்பொருளான தௌஹீதை விளங்கியறிந்து பூரணமாய்ச் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொண்டு முறைப்படி செயல்பட்டாலே அல்லாமல் **மூடத்தனமான எந்த ஓர் வணக்கத்தினாலும் மனிதன் இந்த நிலைமையை அடையவே முடியாது என்பது உண்மை.** இந்த நிலைமையை அடைந்த மனிதரின் புலன்கள் பொறிகள் அல்லாஹ்வுடையதாகவே இருக்கின்றன. இம்மனிதர் இன்ஸான் என்ற போர்வையில் எமக்குத் தென்பட்டாலும் உண்மை அப்படியல்ல. இவருடைய புலன்கள் வியாபகமடைவதால் கண்ணைக்கொண்டு பார்ப்பது போலவே காதைக்கொண்டும் மற்றும் உறுப்புக்களைக்கொண்டும் பார்க்கிறார் கேட்கிறார். அர்ஸி, குர்ஸி, லவ்ஹு கலம், நரகம், சுவர்க்கம் அத்தனையும் ஆட்சியும் செய்வார். கேட்பதற்கு எமக்கு ஆச்சரியம்போல் தென்பட்டாலும் விஷயம் உண்மைதான். இந்த நிலைமைதான் **அல்லாஹ்வுடைய ஷிபத்தில்அடியானுடைய ஷிபத்துப் பனாவாகுதல் என்று கூறப்படுவது. இது நபிலான வணக்கங்களை விளங்கியறிந்து செய்வதனால் ஏற்படுகிற பயனாகும்.** இந்த நிலைமையில் உள்ளவர்கள், அல்லது இந்த நிலைமையை நோக்கி முன்னேறுகிறவர்கள் மிகமிக அபூர்வமாகத்தான் தென்படுகிறார்கள். யாராவது ஒரு சிலர் முன்னேற முயன்றாலும் மூட மக்கள் அவர்களைக் கலைத்து விடுகிறார்கள்.

***ஹதீஸ்: என் அடியான் நான் அவனை உவந்து கொள்ளும் வரையிலும் நபிலான வணக்கங்களைக்கொண்டு இடைவிடாமல் நெருங்கிக் கொண்டிருப்பான். எப்போது நான் அவனை உவந்து கொள்கிறேனோ அப்போது நான் அவன் கேட்கும் அனுடைய செவிப்புலனாகியும் விடுகிறேன். அவன் பார்க்கும் அவனுடைய கட்புலனாயும் இருக்கிறேன். அவன் பிடிக்கும் அவனுடைய கையாயும் இருக்கிறேன். அவன் நடக்கும் அவனுடைய காலாயும் இருக்கிறேன். என்று இறைவன் கூறியதாக றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூதர்த்தா(றலி)**
**ஆதாரம்: நஸாயீ**

இதேபோல்,உமரேபாருக் போன்றவர்களால் கூறப்பட்ட வேறுபல ஹதீஸ்களும் தென்படுகின்றன.

***ஹதீஸ்: அல்லாஹ்வை நினைவுகூர்வதை விட (திக்கிர் செய்வதைவிட)அடியானின் எந்த (அமலும்) செயலும் அல்லாஹ்வின் வேதனையை விட்டும் அவனைக்காப்பாற்றக் கூடியதாய் இல்லை என்று றசூல்(ஸல்)அவர்கள் கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: முஆதிப்னு ஜபல்(றலி)**
**ஆதாரம்: முஅத்தா**

இந்த நபிலான பாதையில் முன்னேறிக்கொண்டிருப்பவர்கள் சிற்சில சமயங்களில் சாதாரண மனிதருடைய பழக்க வழக்கங்களுக்கும் பிக்ஹுடைய சில சட்டதிட்டங்களுக்கும் மாறாக நடந்துகொண்டாலும் நாம் ஆச்சரியப்படவோ பிழையாகக் கணிக்கவோ மார்க்கவிரோதமாய் கணிக்கவோ வேண்டியதில்லை. **அப்படிக் கணிப்பது எம்முடைய அறியாமையாகும்.** ஏனென்றால் இவர் ஓர் சிருஷ்டியேதான் என்று சிருஷ்டியாய் இருக்கிற நாம் கணித்தாலும் அவருடைய நிலைமையில்

அவர் எம்முடைய கணிப்பைக்கடந்தவராய் இருக்கிறார். ஆகவே நாம் சிருஷ்டியாகிய எமக்கிடப்பட்ட சட்டதிட்டங்களை வைத்துக்கொண்டு பிழைகாண முற்படுவதும் தண்டிக்க பட்டம் சூட்ட முற்படுவதும் அறிவீனமாகும். நாம் தீன், என்ற பாதையின் ஆரம்பத்தில் காலடி எடுத்து வைத்திருப்பவர்கள். இந்த மகான்கள் பாதையில் சென்று கொண்டிருப்பவர்கள். சிலர் பாதையையே கடந்துவிட்டவர்கள். இவர்களைப் பொதுப்படையாய்க் கவாஸுகள் என்று கூறப்படினும் இவர்களில் அநேக படித்தரங்கள் இருக்கின்றன. இவர்களுடைய விபரம் இப்போது நமக்கு அவசியமல்ல. **ஆனால் இவர்களை எடைபோட முற்படுவது குருடர்கள் கண்ணுடையோரைக் குருடர் என்று கூறுவது போலாகும்.** இம் மகான்களைக் குறைகூற முற்படுவதும் இவர்களுடைய விஷயங்களில் தலையிடுவதும் மாபெரும் தவறாகும். **இம்மகான்களுடைய விஷயத்தில் தலையிட றசூல்(ஸல்) அவர்களுக்கும் அவர்களால் தரப்பட்ட எந்தச் சட்டதிட்டங்களுக்கும்கூட உரிமைகிடையாது.**

وَلَا تَطْرُدِ ٱلَّذِينَ يَدْعُونَ رَبَّهُم بِٱلْغَدَوٰةِ وَٱلْعَشِىِّ يُرِيدُونَ وَجْهَهُۥ ۖ مَا
عَلَيْكَ مِنْ حِسَابِهِم مِّن شَىْءٍ وَمَا مِنْ حِسَابِكَ عَلَيْهِم مِّن شَىْءٍ فَتَطْرُدَهُمْ
فَتَكُونَ مِنَ ٱلظَّٰلِمِينَ

6-52 *தங்கள் இறைவனின் திருப்பொருத்தத்தை விரும்பிக் காலையிலும் மாலையிலும் பிராத்தித்துக் கொண்டிருப்போரைக் கண்டால் நீர் விரட்டி விடாதீர். அவர்களுடைய கணக்கிலிருந்து யாதொன்றும் உம்முடைய பொறுப்பாகாது. உம்முடைய கணக்கிலிருந்து யாதொன்றும் அவர்களுடைய பொறுப்பாகாது. ஆகவே நீர் அவர்களை வெருட்டினால் அக்கிரமக்காரர்களில் நீரும் ஒருவராகி விடுவீர்.*

காலை மாலை என்றால் என்ன? இரவு 12 மணியிலிருந்து பகல் 12 மணிவரை காலை நேரம், பகல் 12 மணியிலிருந்து இரவு 12 மணிவரை மாலை நேரம். அப்படியானால் நாள்முழுவதும் என்பதே பொருள். ஆகவே நாள் முழுவதும் பிரார்த்தனையில் திக்றில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? தொழுது கொண்டுதான் இருக்கிறார். இவ்வித நிலையிலுள்ள ஒருவர் பள்ளிவாசலுக்குச் செல்லவில்லை, தொழவில்லை என்றால் அவரில் என்ன குற்றத்தை எம்மால் காணமுடியும். விபரித்தால் பெருகும். வேறோர் இடத்தில் ஆதாரங்களோடு விபரிப்போம்.

**ஆகவே "ஹர்புன் நவாபிலி"யுடைய பாதையில் செல்லும் மக்களைத் தடைபோட, எடைபோட எவருக்குமே, எவ்வித சட்டங்களுக்குமே உரிமை இல்லை என்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ளவேண்டும். இவ்வினமக்களைத் தட்டிக்கலைப்பது பட்டம் சூட்டுவதுதான் மார்க்க விரோதமான செயலேயல்லாமல் இம்மகான்கள் மார்க்க விரோதிகளோ வழிகெட்டவ்ர்களோ அல்ல.** இவர்களை வழிகெட்டவர்களாகக் கணிப்பவர்கள்தான் 6-52 ஆயத்தின்படி **மாக்கம் தெரியாத வழிகெட்ட ஷைத்தான்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.**

ஓர் முஸ்லீமைக்காபிர் என்று கூறுபவரும் அல்லது அவரை அல்லாஹ்வின் விரோதியென்று கூறுபவரும் காபிராக அல்லது அல்லாஹ்வின் விரோதியாக ஆகிவிட்டார் என்று சில ஹதீஸ்கள் அறிவிக்கின்றன. ஒரு மூமினைக் காபிர் என்று கூறியவன் அவனைக் கொலைசெய்பவனைப் போலாவான் என்று சில ஹதீஸ்கள் அறிவிக்கின்றன. இவ்விதமான இன்னும் பல ஹதீஸ்கள் புஹாரி முஸ்லீம் போன்ற கிரந்தங்களில் தென்படுகின்றன. ஆகவே நல்லடியார்களான மகான்களை நாம் தவறாக எடைபோடுவதும் கெட்டபெயர்களைச் சூட்டுவதும் எம்முடைய அறிவீனமாகும். உண்மையை உணர்த்தும் நல்லடியார்களுக்கு ஏதோவெல்லாம் தப்புத்தவறான பட்டங்களைச் சூட்டுகிற கோஷ்டியினர் உலமாக்களா? உலமாக்கள் என்ற போர்வையிலுள்ள ஷைத்தான்களா? என்பதைச் சிந்தனை செய்துபார்.

இந்த இறைவழி செல்லும் மக்கள் சிற்சில கட்டங்களில் தொழுகையை விடவேண்டியவர்களாகவும் சிற்சில கட்டங்களில் தொழ முடியாதவர்களாயும் சிற்சில சமயங்களில் சில பழக்கவழக்கம் செயல்களில் மாறுபட்டவர்களாயும் தென்படலாம். இது மார்க்க விரோதமோ அறிவுக்கு மாறானதோ அல்ல. இவர்களில் ஒரு சிலர் தொழுகை முதலாம் கட்டாயக் கடமைகளை எடுத்துக் கொண்டவர்களாகவும் சிலர் விட்டவர்களாகவும் தென்படுவது அவர்களுடைய நிலைமைகளைப் பொறுத்த ஓர் விஷயமாகவே இருக்கிறது. இவர்களுக்கு மார்க்கம் விதிவிலக்குச் செய்தே இருக்கிறது. இதைச் சமீபத்தில் அறிவோம். இந்த நிலைமையிலுள்ள சிலர் தங்களை ஆகிறாவில்

இருப்பவர்களாகவும் வேறு சிலர் ஒரு போது துன்யாவையும் ஒரு போது ஆகிறாவையும் பார்ப்பவர்களாகவும் இருக்கிறார்கள். வேறு சிலர் தங்கள் பூரணத்தன்மையில் வெற்றி பெற்று மீண்டும் இன்ஸானியத்துக்கே திரும்பி மக்களை வழிகாட்டுவதற்காக அனுப்பப்படுகிறார்கள். இவர்கள் மீண்டும் பர்ழான கடமைகளை எடுத்துக்கொள்வதும் உண்டு. ஹுர்புன் நவாபிலியில் நுழைந்து தன்னுணர்வற்ற, அல்லாஹ்வுடைய ஸிபத்தில் ஒன்றிவிட்ட ஒரு சிலருக்கு பிறந்ததும் வாழ்ந்ததும் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்ட ஓர் விஷயமென்றும், தான் அன்றிருந்த நிலைமையிலேயே இன்றும் இருந்து கொண்டிருக்கிறேன் என்றும் தெரியவருகிறது. **அல்லாஹ்வுடைய தாத்து, ஷிபத்து ,துன்யா, ஆகிறா, நரக சுவர்க்கம், நுபுத்துவம், வஹி, மலக்குகள், ஷைத்தான், அர்ஸி, குர்ஸி லவ்ஹுீ, கலம் போன்ற சொற்களின் உண்மைகளும்** மற்றும் மனித அறிவுக்கெட்டாத அநேக இரகசியங்களும் சிலருக்குத் தெரியவருகின்றன. மஹ்ராரிபா, ஞானம் என்பதெல்லாம் இந்த விபரம்தான். இவர்களில் பலர் பாதையைக் கடந்து பட்டினத்தில் பிரவேசித்தவர்களுக்குப் பாதைப் பிரச்சனையே கிடையாது.

سَنُرِيهِمْ ءَايَـٰتِنَا فِى ٱلْـَٔافَاقِ وَفِىٓ أَنفُسِهِمْ حَتَّىٰ يَتَبَيَّنَ لَهُمْ أَنَّهُ ٱلْحَقُّ

41-53 *நம்முடைய உண்மை அவர்களுக்கு வெளியாகும்படி உலகத்திலேயும் அவர்களுடைய நப்ஸுீகளிலேயும் நம்முடைய திருட்டாந்தங்களை நாம் அவர்களுக்குக் காட்டுகிறோம்.*

இந்த ஆயத்தில் பல சைக்கினைகள் இருக்கின்றன. பக்தி என்பதன் உண்மையான நோக்கம் இந்த முக்தியை அடைவதே தான். இதில் தாழ் பதவி உடையோர் அச்சமுடைய நல்லடியார்களாகவும் உயர்பதவியுடையோர்அச்சம் தீர்ந்த நல்லடியார்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் பாமர மக்களின் பழக்க வழக்கங்களுக்கும் பிக்ஹுீடைய சில சட்டங்களுக்கும் மாறுபட்டவர்களாகவும் இருக்கலாம். பொதுப்படையாய் வலிமார்கள் என்று கூறப்படுவது இந்த வகையினர்தான். **இதுதான் மிஹ்றாஜின் இரகசியமும் மனிதவாழ்வின் நோக்கமும் ஆகும்.** இந்த மகான்களின் அறிவு நூற்கேள்வியறிவுகளினால் ஏற்படுவதே இல்லை. இது அனுபவத்தினால் ஏற்படுகிற அறிவாகும். இந்தஅனுபவ உண்மையை அடைந்த மக்களிடையே எவ்விதமான அபிப்பிராயபேதங்களும் கட்சிப்பற்றும் வெற்றிதோல்வி கணிக்கும் சுபாவமும் வீண்பிடிவாதமும் இருக்கவே இருக்காது. அது மட்டுமல்ல ஷிர்க்குக்கும், தௌஹீதுக்குமிடையிலும் கூட இம்மகான்கள் பேதம் காணமாட்டார்கள். அதாவது அவ்விரண்டு கொள்கைகளினதும் காரணமாய் விருப்போ வெறுப்போகொள்ளவும் மாட்டார்கள். ஏனென்றால் இது ஓர் ஆழிய நோக்கின் பிரதிபலிப்பே என்றும் **இது இறைவனின் இரகசியம் என்றும் அவர்கள் அறிவார்கள்.** ஆனால் அனுபவமற்ற புஸ்தகப்பூச்சிகளாய் இருக்கிற மக்களிடையே எப்போதும் அபிப்பிராய பேதமும் பித்தலாட்டமும் இருந்து கொண்டுதான் இருக்கும். இவர்கள் பிக்ஹுீ கிதாபுகள் மூலம் அவரவர் அறிவுக்கேற்றபடி வியாக்கியானம் செய்வதும் தீர்ப்புக்கட்டுவதும் ஆச்சரியமேயல்ல. **ஹகீகத்துடையபாதையில் செயலற்ற ஓர் இடமும் மனிதனுக்குண்டு என்பதை இவர்கள் அறிந்திருந்தால் தொழுகை இல்லாதவனுடைய பேச்சைக் கேட்கவேண்டாம் என்று இவர்கள் கூறுவார்களா?** இப்பேச்சு அவர்களுடைய மூடத்தனமான வெறும்பேச்சேயல்லாமல் இப்பேச்சுக்கு குர்ஆன், ஹதீஸுீகளில் எந்த ஆதாரங்கள் இருக்கின்றன? **எவ்விதமான ஆதாரமுமற்ற மூடர்களின் பேச்சேயாகும்.** இதே போல தொழுகையற்ற இடமும் மனிதனுக்கு உண்டு என்பதை இவ்வகையினர் அறிந்திருந்தால் தொழாமல் இருப்பவனைக் கொன்றொழிக்க வேண்டும் என்று கூறுவார்களா? **இப்பேச்சும் ஆதாரமற்ற வீண் பேச்சேயாகும்.**

இவ்வகையினரின் மூடத்தனமான விளக்கங்களும் பேச்சுக்களும்தான் மனிதர்கள் உண்மையைக் கண்டறிய முடியாமல் தடைபோட்டு வைத்திருக்கின்றன. இவ்விதமான மருண்ட பேச்சுக்களுக்கெல்லாம் குர்ஆன், ஹதீஸ்களில் எவ்விதமான ஆதாரங்களுமே கிடையாது.

وَٱعْبُدْ رَبَّكَ حَتَّىٰ يَأْتِيَكَ ٱلْيَقِينُ

15-99 *உமக்கு உறுதியான ஈமான் ஏற்படும் வரையில் வணங்கிக் கொண்டிருப்பீராக.*

இந்த ஆயத்துக்கு இன்றுள்ள தப்ஸீர்களில் வலிந்துரையில் கொள்ளப்பட்டிருக்கிறது. எகீன் என்றால் மரணம் என்றே பொருள் கொண்டிருக்கிறார்கள்.

**ஹதீஸ்:** ***ஈமான் என்பது முற்றாக எகீன் (உறுதியான நம்பிக்கையே) ஆகும். ஆகையால் இந்த எகீன் உண்டாகவேண்டிய எத்தனைத்துக் கற்றுணர்ந்து பின்பு இருதயத்தில் பதிய வேண்டிய வாசலைத் திறக்கவும்.***

(இந்த ஹதீஸ் முன்பு தரப்பட்டுள்ளது)

இந்த ஹதீஸினால் எகீன் என்று கூறப்படுவது மரணத்தையல்ல ஈமானையே என்பதையும் ஈமான் நிலைப்படவே அமல் என்பதையும் அறிந்து கொண்டோம்.

**ஹதீஸ்:** *உறுதியான அமைச்சலையும் எகீனையும் உங்களுக்கு குறைந்த அளவாகவே தரப்பட்டுள்ளது. ஆனால் அவற்றில் பூரண அளவு கொடுக்கப்பட்டுத் தெய்வ அனுக்கிரகமுண்டாகிற ஒவ்வொருவனும் இரவெல்லாம் நின்று வணங்காததைப் பற்றியும் பகலெல்லாம் நோன்பு பிடிக்காததைப்பற்றியும் கைசேதப்பட வேண்டியவனல்லன்.*

**ஹதீஸ்:** *கியாமத்து நாளையில் ஓர்மனிதன் கொண்டுவரப்படுவான். தொண்ணூற்றொன்பது புஸ்த்தகங்கள் அவனுடைய பாவங்கள் எழுதப்பட்டவையாய்க் கொண்டுவரப்படும். இவைகளில் எதையாவது நீ மறுக்கிறாயா? என்று அந்த மனிதனை அல்லாஹ் வினவுவான். அதற்கவன் இல்லையெனப் பதிலளிப்பான். அவ்வாராயின் நீ நிரபராதி என்று நிரூபிக்கக்கூடிய ஆதாரங்கள் ஏதும் உண்டா? என்று அல்லாஹ் வினவுவான். அம்மனிதன் இல்லை என்று பதிலளிப்பான். அப்போது அல்லாஹுத்தஆலா உன்னுடைய ஓர் நன்மை என்னிடமிருக்கிறது. நாம் யாருக்கும்அநீதி செய்யமாட்டோம் என்று கூறி ஓர் கடிதத்தை வெளியில் எடுப்பான். அதில் கலிமா எழுதப்பட்டிருக்கும். என்னுடைய பாவச்சுமையளுக்கு முன்இக்கடிதம் எம்மாத்திரம் என்று அவ்வடியான் நினைப்பான். அதை ஓர்தட்டில்வைத்தவுடன் அது மற்றையத்தட்டைவிட அதிக பழுவுள்ளதாக ஆகிவிடும். ஆகவே கலிமாவைவிட வேறு எவ்வஸ்த்துவும் பளுவுள்ளதேயல்ல.*

(இப்னு மாஜா திர்மதீ)

**ஹதீஸ்:** *அற்பமான எகீன் அளவிறந்த அமலைவிடச் சிறந்ததாய் இருக்கிறது. சிறந்த எகீனோடு அளவிறந்த பாவம் செய்கிறவனையும் குறைந்த எகீனோடு வணக்கத்தில் பிரவேசிக்கிறவனையும் றசூல்லாஹ்விடம் கேட்டபோது மனுஜன்மம் பாவத்தில் இருந்து விடுபடுவது அரிதாகிறது. ஆயினும் கூரியபுத்தியும்எகீனுமுடைய ஒருவனின் பாவத்தினால் அபத்தம் நேரிடாது என்றும் அப் பாவம் மன்னிக்கப்பட்டுத் தெய்வ அனுக்கிரகத்தினால் சுவர்க்கம் போகிறான் என்றும் கூறினார்கள்.*

(இந்த ஹதீஸை எதிரிடையாய் நோக்கினால் ஈமான் அற்ற இபாதத்துப் பிரயோசனம் தராது என்பது தெரியவரும்.)

**ஹதீஸ்:** *(நபியே) உம்முடைய சமூகத்தவரில் எவர் அல்லாஹ்வுக்கு இணையாக்காமல் (தௌஹீதில் நிலைபெற்று) இருந்து விடுகிறாரோ அவர் சுவனம் செல்வார் என்று ஜிப்ரீல்(அலை) அவர்கள் தம்மிடம் வந்து நல்மாராயம் கூறியதாக நபி(ஸல்) அவர்கள்அறிவித்தார்கள். அப்போது நான் அவன் விபச்சாரனாகவும் திருடனாகவும் இருந்தாலுமா? என்று வினவினேன். அதற்கு நபி அவர்கள் ஆம் அவன் விபச்சாரனாகவும் திருடனாகவும் இருந்தாலும் சரியே என்று கூறினார்கள். பின்னரும் நான் அவன் விபச்சாரனாகவும் திருடனாகவும் இருந்தாலுமா? என்று கேட்டேன்.ஆம் விபச்சாரனாகவும் திருடனாகவும் இருந்தாலும் சரியே என்று நபி(ஸல்) என்று பதிலளித்தார்கள். பின்னர்நான்காவது தடவையில்அபூசற்றுடைய மூக்கு அறுபடினும் சரியே என்று நபியவர்கள் மொழிந்தார்கள்.*

**அறிவிப்பவர்: அபூசற்கிபாரி(றலி)**
**ஆதாரம்: புஹாரீ, முஸ்லீம், திர்மிதீ**

இந்த ஹதீஸைத் தவறாக விளங்கிக்கொள்ளக் கூடாது. அதாவது நாம் தௌஹீதுவாதியாய் இருந்தால் மனம் போன போக்கெல்லாம் போகலாம் என்பது ஹதீஸின் கருத்தல்ல. நாம் எவ்வித பாவம் செய்திருப்பினும் இணை ஏற்படுத்தாமல் இருந்தால் மன்னிக்கப்படுவோம் என்பதே ஹதீஸின் பொருளாகும். ஏனென்றால் எவனும் ஈமானுடன் விபச்சாரத்தில் ஈடுபடுவதில்லையென்று றசூல்(ஸல்) அவர்களுடைய ஹதீஸில் வந்திருக்கிறது. விபச்சாரம் செய்த மூமீனைக் கொல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது அவன் ஈமானை நழுவ விடுவதனால்தான். மேலும் ஓர் தௌஹீதுவாதி துவித உணர்வில்லாமல் இருக்கும்போது துர்க்கிருத்தியங்களில் ஈடுபடவேமாட்டார். ஆகவே நாம் ஹதீஸில் விளங்க வேண்டிய உண்மைகள் மூன்று தான்.

**1ஆவது:** ஷிர்க்கில் இருந்து விடுபட்ட ஒருவர் எவ்வித பாவியாய் இருப்பினும் மன்னிக்கப்படுவார் என்பது.

**2ஆவது:** தௌஹீதில் நிலைப்பட்ட ஓர் ஈமான்தாரிக்கு எவ்வித வணக்கங்களும் அவசியமேயல்ல என்பது.

**3ஆவது:** ஸறகைவிடல், தொழுகை போன்ற கடமைகளைவிடல், விபசாரத்தில் ஈடுபடல் போன்றவற்றை விட ஷிர்க்கு என்பது மிகப்பெரிய பாவமாகும்.

ஹதீஸ்: *நடுநிலைமையைக்கொண்டு இறைமுன்னிலையை எய்தி காலையிலும் மாலையிலும் இரவின் பிற்பகுதியிலும் இபாதத்தில் பெரும்பாலும் ஈடுபடுங்கள். நீங்கள் நடுநிலமையைக் கைவிடவேண்டாம். மார்க்கப்பிரசாரமும் செய்யுங்கள். மேலும் அறிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக எவருடைய வணக்கமும் அவரைச் சுவர்க்கம் சேர்த்துவிடாது என்று கூறினார்கள்.(அப்போது நாயகமே தாங்கள்!! என்று மக்கள் வினவினார்கள்). அதற்கு றசூல்(ஸல்) அவர்கள் முடியாது. அல்லாஹ்வுடைய கிருபையும் மன்னிப்பும் இருந்தாலொழிய என்னுடைய வணக்கமும் என்னைச் சுவர்க்கம் சேர்த்துவிடாது என்று கூறினார்கள்.*

அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி)
ஆதாரம்: புஹாரி

ஹதீஸ்: *ஈமான் உடை இல்லததாகவும் அதன் உடை தக்வாவாகவும் அதன் அலங்காரம் அல்லாஹ்வுக்கு அஞ்சுவதாகவும் அதன் பலன் அறிவாகவும் இருக்கிறது.*

ஹதீஸ்: *வணக்கஸ்த்தர்களுக்கும் அறிஞர்களுக்குமிடையிலுள்ள கண்ணிய வித்தியாசம் என்னுடைய அஷ்ஹாபிகளில் குறைந்த பதிவியுடைய ஒருவருக்கும் எனக்குமிடையிலுள்ள வித்தியாசம் போலாகும். (இந்த ஹதீஸில் அறிவில்லாமல் வணக்கம் பிரயோசனம் தரமுடியாமல் இருப்பதால், அறிவோடு வணங்கியவர்களின் பதவியைத் தாழ்த்தி அறிஞர்களின் (ஈமான்தாரிகளின்) பதவியை நபிப்பட்டத்தோடு இணைத்துக் காட்டப்பட்டிருப்பதை நோக்கவும்.)*

ஹதீஸ்: *அறிஞர்களுக்கும் வணக்கஸ்தர்களுக்குமிடையில் உள்ள வித்தியாசம் பதினாலாம் இரவு பூரணச்சந்திரனுக்கும் நட்சத்திரத்திற்கும் இடையிலுள்ளது போலாகும்.*

ஹதீஸ்: *கியாமத்து நாளையில் ஸபாஅத்துச் செய்கிற மூன்றுகூட்டங்களில் முதலாவது அன்பியாக்களும் இரண்டாவது (ஞானவான்களும்) அறிஞர்களும் மூன்றாவது மார்க்கயுத்தத்தில் மாண்டவர்களுமாகும். இந்த ஹதீஸில், பல பதவிகளைத் தரக்கூடிய மார்க்க யுத்தமான பீஸபீலைவிடச் சிறந்ததும் நபிப்பட்டத்தை நெருங்கியதும் ஈமானுடைய அறிவேயன்றி வணக்கமல்ல என்பது புலனாகிறது.*

ஹதீஸ்: *மார்க்கத்தை விளங்கி அறிவதைவிடச் சிறந்ததைக் கொண்டு அல்லாஹ்வை வணங்கப்படுவதே இல்லை. மார்க்கத்தை விளங்கியறிந்த ஒருவன் ஆயிரம் ஆபிதுகளை விட ஷைத்தானுடைய விஷமத்துக்கு மிகக்கடினமானவனாய் இருக்கிறான். ஓவ்வோர் மாளிகைக்கும் தூண் இருப்பது போல மார்க்கத்தின் தூண் மார்க்க விளக்கமாய் இருக்கிறது. (மார்க்க விளக்கம் என்பது பிக்ஹுடைய இல்முதான் என்று மருட்சியடைய வேண்டாம்)*

ஹதீஸ்: *மார்க்கத்தில் சிறந்தது சுலபமானதாகவும் வணக்கங்களில் சிறந்தது மார்க்க விளக்கமாகவும் இருக்கிறது. (இந்த ஹதீஸினாலும் மார்க்கத்தை விளங்கியறிவது வணக்கமே என்பது தெரிகிறது)*

ஹதீஸ்: *மூமினான வணக்கவாளியை விட மூமினான அறிஞன் 70 பதவி சிறந்தவனாய் இருக்கிறான்.*

(இந்த ஹதீஸில் சட்டம் ஏற்றுக்கொண்ட அமல் செய்யும் மூமினையும் அமலில்லாத உண்மையான மூமினையும் விளக்கம் தரப்பட்டுள்ளது)

ஹதீஸ்: *மார்க்க விளக்கவான்கள் உத்தாரம் சொல்பவர்கள் மிகுதமாகவும் ஓதுகிறவர்கள் மிகுதமாகவும் உபதேசிகள் மிகுதமாகவும் கேட்கிறவர்கள் குறைவாகவும் இருக்கிற இக்காலத்தில் அமல் சிறந்ததாகிறது. ஆனால் மார்க்கப் பிரமாணிகள் உத்தாரம் சொல்பவர்கள் குறைவாகவும் உபதேசிகளுள் கேட்பவர்கள் மிகுதமாகவும் நேரிடுகிற இனிமேல் வரும் காலத்தில் அமலைவிடஅறிவு சிறந்ததாகின்றது.*

ஹதீஸ்: *(ஈமானுடைய அறிவுள்ள) அறிஞனுக்கும் வணக்கவாளிக்கும் இடையில் சிறந்த குதிரை எழுபது வருடம் நடக்கிற தூரமுள்ள நூறு பதவிகள் இருக்கின்றன.*

ஹதீஸ்: *வணக்கங்களில் சிறந்து என்ன? என்று றசூல்(ஸல்) அவர்களிடம் கேட்க அல்லாஹ்வைப் பற்றிய அறிவு என்றார்கள். எந்த அறிவு என்று திரும்பவும் கேட்ட அல்லாஹ் சுப்ஹானஹுத்த ஆலாவைப்பற்றிய அறிவு என்றார்கள்.நாங்கள் அமலைப்பற்றிக் கேட்கும்போது தாங்கள் அறிவைப்பற்றிக் கூறுவதென்ன? என்று மீண்டும் கேட்க அல்லாஹ்வை அறிவதுடனே அற்பவணக்கமும் பிரயோசனம் செய்கிறது. ஆனால் இறைவனப்பற்றிய அறிவீனத்துடனே எந்த வணக்கமும் பிரயோசனம் கொடாது என்று கூறினார்கள்.*

அல்லாஹ் இறக்கிய வேத வசனங்களை மறுத்துப்புரட்டி மாறான அபிப்பிராயத்தை மனதில் வைத்துக்கொண்டு அமல் செய்பவர்களின் அமல்கள் பிரயோசனமளிக்குமா? என்பதைச் சிந்தனை

செய்து பார். நேரான பாதையில் சீராக வழி நடாத்து என்று பல வருடங்களாய்க் கேட்டிருந்தும் நேரான பாதையைப் பெறாமலும் இருந்த நிலையில் இருந்து அணுவளவேனும் முன்னேற முடியாமலும் இருப்பதன் காரணமென்ன? என்பதையும் சிந்தனை செய்ய வேண்டும்.

**ஹதீஸ்:** ***அல்லாஹ்விடத்தில் திக்கிர் அதற்குதவியான விஷயங்கள் இல்மைக் கற்றுக்கொள்கிறவன் அதைக் கற்பிக்கிறவன் முதலானவர்களைத் தவிர துன்யாவும் அதிலுள்ளவைகளும் சபிக்கப்பட்டவைகளே. (திக்கிர் செய்வதற்காகக் கையாளப்படும் எல்லாச்செயல்களும் வணக்கங்கள் தான் என்பதை இந்த ஹதீஸ் விளக்கம் தருகிறது)***

**ஹதீஸ்:** ***அல்லாஹ்விடத்தில் அபேட்சையோடு பிரார்த்தனை செய்கிற ஓர் கூட்டத்தையும் இல்மைக்கற்பிக்கிற ஓர் கூட்டத்தையும் றசூல்லாஹ் கண்டு முதலாவது கூட்டம் அல்லாஹ் விரும்பினால் நிறைவேறக்கூடிய விஷயங்களை அபேட்சிக்கிறார்கள். ஆனால் இரண்டாவது கூட்டம் இல்மைக் கற்பிக்கிறதினாலும் நானும் இல்மைக்கற்பிக்கவே அனுப்பட்டதினாலும் இவர்களுடனேயே இருக்கிறேன்.என்று இருந்து கொண்டார்கள்.(எந்த இல்முக்காக றசூல்(ஸல்) அனுப்பப்பட்டார்கள் என்பதை நோட்டமிட வேண்டும்.) இல்மு என்பதில் பிக்ஹுடைய உலமாக்கள் அவரவருக்கு அவ்விடங்களுக்குத் தேவைப்பட்ட அறிவுகளே என்று பொருள்கொள்வது சரியேயென்றாலும் இன்ஸானுக்குப் பொதுப்படையாய்த் துன்யாவில் தேவைப்படுவது ஈமானுடைய இல்மே என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.***

**ஹதீஸ்:** ***என்னை அல்லாஹ்விடத்தில் சமீபிக்கச்செய்யும் அறிவு அதிகமாகாத ஒவ்வோர் நாளிலும் எனக்கு யாதோர் பறக்கத்தும் இல்லை. (இந்த ஹதீஸில் இருந்து வணக்கங்களைவிடவும் மார்க்கயுத்தமான பீஸபீலைவிடவும் அல்லாஹ்வை சமீபிக்கச் செய்யும் ஈமானுடைய அறிவு சிறந்தது என்பது தென்படுகிறது.)***

ஈமானை விளங்கியறிந்த அறிவாளர்கள் நித்திய ஜீவனுடையவர்களாகவும் அறிவீனர்கள் பிரேதங்களையும் இருப்பதால் எக்காலத்திலும் வாழ்வைத்தரக்கூடிய அறிவைக்கற்றுணர்ந்து ஜெயம் பெறுங்கள் என்று அலி(றலி) அவர்கள் பைத்தாகப்பாடுகிறார்கள்.

(ஈமானுடைய) அறிவு ஆணாய் இருப்பதால் ஆண்மையுடையோரைத் தவிர அதை நேசிக்கமாட்டார்களென்று ஸுகைரிய்யி(றலி) பாடுகிறார்கள்.

அன்புச் சகோதரனே! நீ அறிவைப்படித்துக்கொண்டால் போதுமானதாயிருப்பதால் **தொழாமலே இருந்து விட வேண்டுமென்று நான் கூறுவதாய் விளங்கிக் கொள்ளவேண்டாம்.** நான் கூறுவது என்னவென்றால் ஈமானற்ற தொழுகை பிரயோசனம் தராமல் இருப்பதால் ஈமானை விளங்கியறிந்து அதை உறுதிப்படுத்தும் நோக்கமாகவே தொழவேண்டும் என்பதும் ஸுபிகளுடைய விஷயத்தில் தொழுகையைவிடத் தியானம் பெரிய காரியமாய் இருக்கிறது என்பதும் **தொழுகையில்லாமல் இருக்கக் கூடிய ஓர் நிலைமை இன்ஸானுக்கு உண்டு என்பதும் அவ்வித நிலைமை மார்க்கவிரோதமல்ல என்பதுமே.**

وَٱلَّذِينَ كَفَرُوا۟ فَتَعْسًا لَّهُمْ وَأَضَلَّ أَعْمَـٰلَهُمْ

47-8 *எவர்கள்நிராகரிக்கிறார்களோ அவர்களுக்குக்கேடுதான்.அவர்களுடைய அமல்களையெல்லாம் பயனற்றதாக்கி விடுவான்.*

(நிராகரிப்பு, குபிர் , என்பது என்ன என்பதைச் சிந்தனை செய்து தெளிவு பெறுக)

ذَٰلِكَ بِأَنَّهُمْ كَرِهُوا۟ مَآ أَنزَلَ ٱللَّهُ فَأَحْبَطَ أَعْمَـٰلَهُمْ

47-9 *அல்லாஹ் இறக்கிவைத்ததை மெய்யாகவே வெறுத்து விட்டது தான் காரணம். ஆதலால் அவர்களுடைய அமல்களையெல்லலாம் அழித்து விட்டான்.*

இவ்விதமான ஆயத்துக்களை ஆலோசனை செய்து பார். உண்மையை உதறித்தள்ளிவிட்டு ஊர்மெச்சுவதற்காக அமல் செய்யாதே. மேலும், இறைவழி செல்லும்போது துவித உணர்வு (அனாநிய்யத்) மாய்ந்து அத்வைத உண்மையில் நிலைபெறும் கட்டத்தில் அமல்களை (தொழுகையை) விட வேண்டிய ஓர் நிலைமை உனக்கேற்பட்டால் வெளி அமல்களை நீ பொருட்படுத்த வேண்டாம். அத்வைத உண்மையில் நிலைபெறும்போது அவசியத்துக்கேற்றபடி **வெளி அமல்களை நிறுத்திக்கொள்ளும் உரிமையை மார்க்கம் உனக்குத்தந்தே இருக்கிறது.**

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ لَا تَقْرَبُواْ ٱلصَّلَوٰةَ وَأَنتُمْ سُكَٰرَىٰ

4-43 *விசுவாசிகளே! நீங்கள் கூறுவது இன்னதென்று நீங்கள் அறிந்துகொள்ள முடியாதவாறு நீங்கள் போதையாய் இருக்கும் சமயத்தில் தொழுகைக்குச் செல்லாதீர்கள்.*

இந்த ஆயத்தின் உசூலை ஆராய்ந்த போது மது போதையை நிறுத்துவதற்கு வந்த ஆயத்து இதுதான் என்பது தென்படுகிறது. திர்மிதியில் அலி(றலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட ஓர் ஹதீஸூம் இவ்வுண்மையை அறிவிக்கிறது. மேலும் இந்த ஆயத்து முஹ்கமாத்தைச் சேர்ந்ததா? முதஸாபிஹாத்தைச் சேர்ந்ததா? என்பதை ஆராய்ந்த போது இந்த ஆயத்துப் பலகருத்துக்களை உடைய **முதஸாபிஹாத்தைச் சேர்ந்தது என்பதும தெரியவருகிறது.** ஆகவே இந்த ஆயத்துக் குறிப்பிடும் "போதை" என்ற சொல்லுக்கு 4 கருத்துகள் தென்படுகின்றன.

**1ஆவது:** மதுபோதையினால் (லாகிரி வஸ்த்துக்கள், மருந்துக்கள் உணவுகள், மூலம் போதையாதல்)

**2ஆவது:** உலக இன்ப துன்பங்கள், ஆசைகளில் மயக்குண்டு நினைவு தொழுகையில் செல்லாமல் போதையாதல்

**3ஆவது:** தாங்கள் கூறும் வார்த்தைகளில் (தொழுகையின்போது) உண்மையான அர்த்தம் தெரியாதவர்களாய், வஹ்மு, அறிவீனம், பேதபுத்தியில் மூழ்கிப்போதையாதல்.(அறிந்து கொள்ள முடியாத என்ற வசனம் இதை உணர்த்துகிறது) இம்மூன்று பொருட்களும் அவாம்களை நோக்கியவை.

**4ஆவது: நான் அல்லாஹ்வை விட்டும் வேறானவனல்ல. என்ற உணர்வில் மூழ்கிய மூமன்கள் அறிவுப்போதையில் (இஸ்க்கில்) போதையாதல்.** இது கவாஸுகளை நோக்கிய பொருளாகும்.

இந்த கவாஸுகளான மூமீன்களில் சிலர் இஸ்குடையவர்களாய் இருக்கிறார்கள். சிலர் மனிதப்பண்புகளாகிய சிருட்டிக்குணங்கள் நீங்கியவர்களாய் இருக்கிறார்கள். நான் என்று ஓர் பொருள் இருப்பதாய் உணராமல் அல்லாஹ்விலேயே முற்றும் சரணாகிவிட்டவர்களும் இவர்களில் உண்டு. இம்மகான்களில் பெரும்பாலார் காண்பான், காட்சி, காட்சிப்பொருள் என்ற மூன்றும் ஒன்று என்றறியும் நிலையில் மனித அறிவு மாய்ந்து இறையறிவான விஜ்தான் குடிகொள்ள முற்படும் நிலையில் **சிலகாலம் போதையுடையவர்களாகவே தென்படுவார்கள்.** இவர்கள் தொழுகையை முறைப்படி நிறைவேற்றிக்கொள்ள முடியாதவர்கள். உதாரணமாக இந்த நிலையிலுள்ள ஒருவர் தக்பீர் கட்டினார் என்று வைத்துக்கொள்வோம். அல்லாஹு அக்பர் என்ற சொல்லை உச்சரிக்கும் போதே நான் அல்லாஹ்வின் முன்னிலையில் இருக்கிறேன் என்ற உணர்வு மாறிவிடலாம். சொல்லின் கருத்தியலேயே முறாகபா பலமணித்தியாலங்களும் நீடிக்கலாம். றுகூஉ, ஸுஜுது என்பவையும் ஓதும் வசனங்களும்கூட அவர்களுடைய அறிவில் அமையாமல் நின்ற நிலையிலேயே நிற்க வேண்டியும் சிலவேளை மயக்கமடைந்து விழவும் நேரிடலாம். இந்த நிலையிலுள்ள ஒருவர் மற்றும் ஜனங்களோடு எப்படித் தொழுகையை நிறைவேற்றுவார்? ஆகையால்தான் இத்தகையோருக்கு **இறைவனே விதிவிலக்கழிக்கிறான்.** நாம் சுருக்கமாய்க் கூறிய இந்த நிலைமையை ஓர்ஸுபி அடிக்கடி எய்துவார் என்பது நிச்சயம். ஆகையால் தான் ஓர்ஸுபி ஆரம்பத்திலேயே (உஸ்லத்) ஒதுங்கியிருப்பதற்குக் கற்பிக்கப்படுகிறார். **இது மார்க்க விரோதமான ஸறகுக்கு விரோதமான ஓர் செயலேயல்ல.** ஆனால் அனுபவமும் ஆராய்வும் இல்லாத ஒரு சிலர் இவர்களை வழிகெட்டவர்களாகவும், தொழுகையில்லாத ஓர் நிலைமை மனிதனுக்கு இல்லவே இல்லையென்றும் கணித்து இவர்களை மூமீன்களல்ல என்பதாகவும் கூறுவது அறிவீனமாகும். இப்படிக் கூறுபவர்கள்தான் உண்மையாகவே மார்க்கத்தை அறியாதவர்களாய் இருக்கிறார்கள்.

இங்கே ஓர் சந்தேகம் பிறக்கலாம். அதாவது குர்ஆனில் 4:103 ஆவது ஆயத்தில் தொழுகை மூமீன்கள் குறிப்பிட்டநேரத்தில் செய்யவேண்டிய கடமையாகவே இருக்கிறதென்று கூறப்பட்டிருக்கிறதே! அப்படியானால் 4:103ஆம் 4:43ஆம் 15:99ஆம் ஆயத்துக்கள் ஒன்றுக்கொன்று முரணாகின்றனவே என்று சந்தேகிக்கலாம். விஷயம் அப்படியல்ல. 4:103ஆம் ஆயத்து அவாம்களான மூமீன்களையும் 4:43ஆம் ஆயத்து கவாஸுகளான மூமீன்களையும் அவாம்களான மூமீன்களையும் ஒன்றுசேர்த்தும் (அதாவது பொதுவாக எல்லா மூமீன்களுக்கும்) 15:99ஆம் ஆயத்துக் கவாஸுகளான மூமீன்களை மட்டும் நோக்கியும் கூறப்பட்டிருக்கின்றன. அதாவது எல்லா ஆயத்துக்களும் **எல்லோரையும் சுட்டுவது போல தென்பட்டாலும் ஒவ்வொன்றும் ஒவ்வோர் வகையினருக்கு என்றே குறிப்பாகக் கூறப்பட்டுள்ளன.** ஆகவே ஆயத்துக்கள் முரண்படுவதாய்க் காண வேண்டிய அவசியமே இல்லை.

## (5)

இவ்வுலகிலுள்ள சர்வ ஜீவராசிகளும் இயல்பான சில சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே வாழ்கின்றன. இந்த இயற்கை நியதியை எந்தச் சீவராசியாலும் மீறவே முடியாது. நாம் இதை ஒப்புக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் உண்மை இப்படித்தான் இருக்கிறது. உதாரணமாக நாம் விழிப்பு நிலையில (ஜாக்கிரதை) இருக்கும்போது அதேவேளையில் ஆழ்ந்த உறக்கமான (சுழுத்தி) நிலையையோ கனவுகாணும் (சொற்பனாவஸ்த்தை) நிலையையோ பெற முடியாது. இதேபோல ஆழ்ந்த

உறக்கத்தில் இருக்கும்போது விழிப்பு நிலையையோ கனவு நிலையையோ எம்மால் பெறவேமுடியாது. அதாவது மனிதாரகிய நாம் **எமக்குள்ள விழிப்பு, உறக்கம், கனவு ஆகிய மூன்று நிலைமைகளையும் ஒரே வேளையில் எம்மால் அனுபவிக்கவே முடியாது**. உலகிலுள்ள (ஒரு சிலரைத் தவிர) எவராலும் தான் அனுபவிக்க முடியாது. ஒரு சிலர் என்பது நபிமார்கள் றசூல்மார்களைத்தான். இவர்களைப்பின் நோக்குவோம். ஆகவே அறிவாளனும் மூடனும், முஸ்ரீக்கும், மூமீனும் **எம்மனிதரேயாயினும் ஒரே நேரத்தில் ஒரு பண்பை மட்டும் தான் அனுபவிக்கமுடியும்.** விழித்தவனாகவும் ஆழ்ந்த உறக்கமுடையவனாகவும் கனவைக் காண்பவனாகவும் ஒரே நேரத்தில் இருப்பதென்றால் உலகிலுள்ள எவரால்தான் முடியும்?

விழிப்படைந்தவனாக (கண்விழித்தவனாக) இருக்கும் போது ஆழ்ந்த உறக்கமும் கனவும் அடிபட்டு விடுவது இயற்கை. அதே போல ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது கனவும் விழிப்பும் அடிபடுவதும் உண்மை. கனவு நிலையிலிருக்கும்போது விழிப்பும் உறக்கமும் அடிப்பட்டுவிடுவதும் இயல்புதான். இதே போல நாம் ஜாக்கிரதா உலகமான துன்யாவைக்காணும் போது ஆகிறாவுடைய சங்கதி அடிபட்டுவிடுகிறது. **ஆகிறாவுடைய சங்கதிகள் ஒருவருக்கு வெளியாகும்போது துன்யாவுடைய சங்கதிகள் அவருக்கு அடிபட்டு விடுகின்றன. இது இயற்கையான ஓர் நியதிதான். ஹகீகத்தில் மூழ்கிய ஓர் மூமீனுக்கு ஸரீஅத்தின் விதிகள் அடிபட்டுவிடுகின்றன. ஷரீயத்தில் மூழ்கிய ஒருவருக்கு ஹகீகத்தின் உண்மைகள் மூடுண்டுவிடுகின்றன. இது ஓர் ஆச்சரியமான, மார்க்கவிரோதமான, பகுத்தறிவுக்கெட்டாத ஓர் செய்தியேயல்ல**. ஆனால் மார்க்கவிரோதமாயும் ஆச்சரியமாயும் காண்பது விளக்கம் தெரியாமையே அல்லாமல் அறிவுடமையல்ல.

இறைவனோடு ஐக்கியமாகும் அரும்முயற்சியில் ஈடுபடுபவர்களை, மார்க்கம், மகான்களாகக் குறிக்கோளை முன்னோக்கி முன்னேறும் பாக்கியவான்களாக விளக்கம் தருகிறதேயல்லாமல், மூடமக்கள் வழிகெட்டவர்களாகக் கருதுவது போல எவ்விடத்திலும் விளக்கம் தரவேயில்லை. தப்புத்தவறான விபரங்களைத் தந்துள்ள பல புஸ்த்தகம் கிதாபுகளை மக்கள் நம்பினார்களேயன்றிக் குர்ஆன், ஹதீஸ்ஃகளைப் புரட்டிப்பார்ப்பதோ ஆராய்வதோ இல்லை. மூடத்தனமான நூற் கேள்வியறிவில் சிக்குண்டிருப்போர்உண்மையை உணர்வது கடினம்தான்.

ஓர் குழந்தை தன் தாயைத் தேடி எத்தனையோ வழிகளில் அலைந்து கொண்டிருந்தது. கண்டுகொள்ள முடியவேயில்லை. இறுதியாகத் துக்கமேலிட்டால் அழுது புலம்பிக்கிக்கொண்டிருந்தது. அவ்வேளையில் தன் தாயின் (சப்தத்தை) அரவணைப்பை அல்லது தாய் சமீபமாக நெருங்கிக்கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்து கொள்கிறது. அல்லது தாயையே நேரடியாய்க் கண்டு கொள்கிறது. குழந்தை தாய் மேற்கொண்டிருந்த அன்புப்பெருக்கால் பரவச நிலையை அடைந்து விடுகிறது. (தாயோடு சேர்ந்து) தாயின் மடியில் நுழைந்துவிடும் நோக்கமாகத் தாயை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. ஆசை மேலீட்டால் அவசர உணர்வால், சறுக்கி நஜீஸில் சேற்றில் விழுந்து விடுகிறது. ஆயினும் அது நஜீஸென்பதும் சேறு என்பதும் அக்குழந்தைக்குத் தெரிவதேயில்லை. அதே நஜீஸோடும் தான் தன் தாயின் மடியை எட்டமுற்படுகிறது. கருணையுள்ள தாயோ அந்த நஜீஸைக் குழந்தைக்குத் தெரியாமலே அகற்றி விடுகிறாள். தன் குழந்தையை அரவணைத்தும் ஆட்கொள்கிறாள். இந்தக் குழந்தைதான் இறைவனைக் கண்டடைய, அவனுடைய உண்மையில் ஊறிவிடத்துடிக்கும் பக்தன் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தன் றப்பைத்திருப்திப்படுத்தக் கடமையில் ஈடுபடுவது மிக மிகத்தாழ்ந்த ஓர் பதவியாகும். தன் றப்பின் சமீபத்தை அறிந்து பரவசநிலைமையை அடைவது மிக உயர்ந்த ஓர் பதவியாகும். இதிலும் தாய் மடியில் நுழையத்துடிக்கும் குழந்தையைப்போல இறை ஜோதியில் மூழ்கமுற்படுவது மிகமிக ஓர் உயர்ந்த பதவியாகும். இந்த நிலைமையிலுள்ள(ஆஸிக்கீன்களுக்கு) பக்திமான்களுக்கு நஜீஸோ, சகதியோ தென்படாமல் இருப்பது ஆச்சரியமல்ல. அதுமட்டுமல்லாமல் இவர்களுடைய அறிவில் நஜீஸென்பதும் கிடையாது. ஏனென்றால் அல்லாஹ்வையன்றி மற்றும் யாவுமே பொய்யென்று இவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகவே இவர்கள் நஜீஸில் விழுந்தாலும் கூட அந்த நஜீஸை நீக்கி அவர்களை ஆட்கொள்வது இறைவனுக்கு ஓர் பொருட்டுமல்ல. இந்த ஆபிதீன்களான, ஆஸிகீன்களான ஒலிமார்களின் நிலைமையே ஸறகில் மன்னிப்பளிக்கப்பட்ட ஒன்றுதானென்றால், இவர்களுடைய எல்கையை வெகுதூரம் கடந்த ஸித்திக்கீன்கள் (குத்புமார்களின்) நிலையை மார்க்க விரோதமென்று நாம் கணிப்பது முடியாத ஓர் விஷயமாகும். இவ்வகையினரை நாம் கவனத்துக்கெடுக்கவேண்டிய அவசியமே எமக்கில்லை, நாலாம் வகுப்பு மாணவனில் சரிபிழை கணிக்கவேண்டிய கடமை முதலாம் வகுப்பு மாணவனுக்கு இல்லவே இல்லை. ஆகவே இந்த நல்லடியார்களான ஆபிதீன்களை, ஆரிபீன்களை, ஞானவான்களை, ஸித்திக்கீன்களை, பொதுப்படையாய் அவ்லியாக்களைக் காபீர், முர்த்தத், முஸ்ரிக், மூடன், பித்தன் என்றெல்லாம் பட்டப் பெயர் சூட்டுவதும் பறைசாற்றுவதும் எவ்வளவு மதியீனம். இந்த நல்லடியார்களுக்கு இவ்விதமான பட்டப் பெயர்களைச் சூட்டுவதும் வழிகெட்டவர்களாய்க் கூறுவதும், எமக்கும் எம் பிற்சந்ததியினருக்கும் திறக்கப்பட்டிருந்த சுவர்க்கத்தின் ஓர் பிரதான வாசலை மூடிவிடுவதற்கு ஒப்பான ஓர் செயலாகும் என்பதை நாம் உணரத்தான் வேண்டும்.

கவாஸ்ஃகளில் உயர்பதவி உடையவர்கள்தான் கவாஸுல் கவாஸ்ஃகள் என்ற மகான்கள். இவர்கள்தான் றசூல்மார்கள், நபிமார்கள். இவர்கள் இறைவனால் தெரிவுசெய்யப்பட்ட விசேட ஸ்தானத்தைப் பெற்றவர்கள். இவர்கள் துன்யாவையும் காணுகிறார்கள். அதேவேளை ஆகிறாவையும் காணுகிறார்கள். **ஆனால், ஒன்றையொன்று தடைப்படுத்தாமல் காணுகிறார்கள்.** உதாரணமாக கல்லினால் செதுக்கப்பட்ட ஓர் நாயின் உருவத்தைத் தொலைவில் நின்று பார்க்கிற ஒருவன் அது கல்லேதான் என்று அறியாத காரணத்தால் அந்த உருவத்தை நாயாகவே காண்கிறான். ஆனால் சமீபிக்கும்போது அது நாயல்ல, கல்லேதான் என்று காண்கிறான். அதாவது கல்லைக் கண்டவன் நாயைக் காண்பதில்லை. நாயைக் கண்டவன் கல்லைக் காண்பதில்லை. இதேபோல ஆகிறாவின் உண்மை வெளியாகும்போது கவாஸ்ஃகளுக்குத் துன்யா மறைந்து விடுகிறது. துன்யா தென்படும்போது

ஆகிறா மறைந்து விடுகிறது. ஆனால் கவாஸுல்கவாஸுகளான மகான்களுக்கோ துன்யாவை ஆகிறாவும், ஆகிறாவைத் துன்யாவும், சிருஷ்டிகர்த்தாவைச் சிருஷ்டியும் தடைப்படுத்தாமல் (மறைக்காமல்) எல்லாமே உள்ளாலுள்ளபடி வெளியாகின்றன. **இந்த நிலைமைதான் றசூல் (ஸல்) அவர்கள் வபாத்தாகும் வரை தொழுது கொண்டிருந்த காரணம். மக்களுக்கு வழிகாட்டுவதுதான் இதன் நோக்கமாகும் .**

## இதன் சாரம்

1. திக்கிர் செய்வதற்காகவே தொழுகை தரப்பட்டுள்ளது. இது அவாம்களுடைய விஷயம்.

2. ஒரு நல்லடியார்இடைவிடாமல் திக்ரில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார் என்றால் தொழுது கொண்டிருக்கிறார் என்பதே அர்த்தம்.

3. இன்ஸானுக்குத் தொழாமல் இருக்கக்கூடிய ஓர் நிலைமை எய்தும் என்பது நிச்சயம்.

4. இவ்வித மக்களுக்கு மார்க்கம் அனுமதியளித்திருப்பது 4:43 போன்ற ஆயத்துக்களாலும் ஹதீஸ்களாலும் நிருபிக்கப்பட்டிருக்கிறது.

5. இவ்வினமான மக்களின் விஷயத்தில் தலையிட எவருக்கும் அனுமதி கிடையாது என்பதை 6:52 போன்ற ஆயத்துக்களும் ஹதீஸ்த்துக்களும் நிரூபிக்கின்றன.

6. இவ்விதமான மக்கள் தவறான வழியில் செல்வதாகக் காண்பதும் மார்க்கம் இவர்களை விரோதிப்பதாய்க் காண்பதும் ஆராய்வும் அனுபவமும் இல்லாத அறிவீனர்களின் வாதமாகும்.

7. இந்த மகான்களை வழிகெட்டவர்களாய்க் காண்பவர்களே குர்ஆன் ஹதீஸ்களை மீறி, இந்த மகான்களுடைய கணக்கில் பிரவேசிப்பவர்களாயும் **மார்க்கத்தை அறியாத வழிகெட்டவர்களாயும் இருக்கிறார்கள்.**

8. தொழுகையற்ற இடம் இன்ஸானுக்கில்லை என்பவை போன்ற வார்த்தைகளும் தீர்ப்புக்களும் **ஆதாரமற்ற வெற்றுப்பேச்சும் வஹ்மும் ஆகும்.**

## (6)

மனிதனுடைய வாழ்வை நுட்பமாய் ஆராயும்போது எல்லையே இல்லாத விலைமதிக்கமுடியாத பேராற்றல் ஒவ்வோர் மனிதனுடைய உள்ளத்திலும் புதையுண்டுகிடப்பது தென்படுகிறது. ஒருமனிதன் எவ்வளவுதான் பெரிய ஓர் பாவியாய் இருப்பினும் அவனுடைய உள்ளத்திலும் நாம் கூறும் **அந்தப் பேராற்றல் இருக்கவே செய்கிறது.** ஆனால் அது அவனையறியாமலே புதையுண்டுபோய்க் கிடக்கிறது. தன்னுடைய உண்மையைத், தன்னுடைய இயல்பைக்கொண்டு, தனக்குரிய பூரண உணர்ச்சியை அடைவதுதான் இன்பம் (சுவர்க்கம்) என்று கூறப்படுகிறது. இந்தச் சுவர்க்கத்தைப் பெறுவதற்கு உதவியான ஓர் சாதனம்தான் தியானம் (திக்கிர்) என்பது. இந்தத்திக்ரை (தியானித்தலை, நினைவுபடுத்தலை) இலகுவாகப் பெறக்கூடிய ஓர்வழிதான் தொழுகை என்பது. ஆகையால்தான் என்னைத் திக்கிர் செய்வதற்காகவே தொழு என்று இறைவன் கூறுகிறான். **ஆகவே வாழ்க்கையில் முக்கிய இடம் தொழுகைக்காகவும் தொழுகையின் முக்கியம் திக்றுக்காகவும் என்றால் வாழ்க்கையின் அந்தரங்கம் என்ன? வாழ்வில் அடங்கியுள்ள விஷயங்கள் எவை? என்பதை நாம் ஆராயவேண்டியிருக்கிறது.**

இந்த மனித வாழ்வுடைய உண்மையான இரகசியத்தை நபிமார்கள், வலிமார்கள் ஆராய்ந்து வாழ்க்கைக்குத் தனியான அனுபவமே அடிப்படை என்றும், அந்த **அனுபவத்தின் தொடர்ச்சியே மனிதனின் முழுவாழ்க்கை என்றும் முடிவுகட்டியிருக்கிறார்கள்.** காண்கிறார்கள். ஆனால் இந்த முடிவைக் கண்டறிந்த பின்னும் அவர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளவில்லை. ஓய்வெடுத்துக் கொள்ளவும் முடியாது. இந்த அன்பியாக்கள் அவ்லியாக்களான மகான்கள், வாழ்க்கையின் பகுக்கமுடியாத அடிப்படைப்பகுதி அனுபவமே என்பதை அறிந்த பின்பும் **அதைப்பகுக்கமுறப்பட்டு ஓர் பேருண்மையைக் கண்டறிந்தார்கள். இப்போதும் கண்டறிகிறார்கள்.** விஞ்ஞானிகள் அணுவைப் பிழந்து ஆராய்வதுபோல.

அதாவது மனிதன் அடையவேண்டய நல்ல, தீய அனுபவம் எதுவாய் இருப்பினும் அந்த அனுபவத்துக்கு மூன்று அம்சங்கள் (பகுதிகள்) அவசியமாய்த் தென்படுகின்றன. மனிதன் அடையவேண்டிய ஒவ்வோர் அனுபவத்துக்கும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் இந்தமூன்று அம்சங்களும் ஒன்றுபடாவிட்டால் அனுபவம் என்பதும் இல்லாமலே போய்விடும். இந்த மூன்று அம்சங்களுடையவும் நிலைமை, தகைமைகளைப் பொறுத்தே அனுபவத்தின் தன்மைகள் தகைமைகளும் கணிக்கப்படுகின்றன. இந்த மூன்று அம்சங்களில்

**1ஆவது:** அனுபவிக்கும் அல்லது அனுபவத்தைப் பெறும் மனிதன்.

**2ஆவது:** அனுபவிக்கும் பொருள். அது பௌதீகமானாலும் சூட்சுமமானாலும் சரியே.

**3ஆவது:** அனுபவிக்கும் மனிதனுக்கும் அனுபவிக்கப்படும் பொருளுக்கும் உள்ள தொடர்பு அல்லது சம்பந்தம்

ஒரே இடத்தில் ஒரே வேளையில் இந்த மூன்று அம்சங்களும் ஒன்று சேர்ந்தாலேயல்லாமல் நன்மையான, தீமையான எந்த ஓர் அனுபவமும் ஏற்படவே முடியாது. இந்த மூன்று அம்சங்களையும் அவ்லியாக்களான **ஞானவான்கள் (ஸூபிகள்) திரிபுடி உணர்வு என்று கூறுவார்கள்.** அறியப்படும் பொருள் இல்லாதபோது அல்லது மனித அறிவில் அமையாதபோது அனுபவம், அறிவு என்பதே உண்டாக முடியாது. உதாரணமாகக் குதிரைக் கொம்பு என்று ஒருவர் கூறினால், அப்படி ஒன்று இல்லாதபோது, அதை எம்முடைய புலன்களால் அறியமுடியாதபோது, அக்கொம்பை எம்மால் உணர, அறிய அனுபவிக்கவே முடியாது. அதாவது அக்கொம்பைப்பற்றிய எவ்விதமான அனுபவமும் எமக்குக் கிடைக்கவேமுடியாது. (விபரித்தால் பெருகும்). இதே போல இறைவன் உருவமற்றவன், இடத்திலுமில்லாதவன், காலத்திலும் இல்லாதவன், அறிவினால் உணர முடியாதவன் என்று கூறும்போது **அந்த இறைவனை எம்மால் காண, உணர, அறிய, அனுபவிக்க முடியவே முடியாதுதான். ஆகவே அனுபவம் என்பது ஒருவகையிலும் ஏற்படவே முடியாதுதான். (நுட்பமாய் உணர்க)** இந்த அனுபவம் ஏற்படவில்லையானால் சந்தேகம், கலக்கம் நீங்கவும் முடியாது. விசுவாசம் என்னும் **உண்மையான ஈமானும் ஏற்படவே முடியாது.**

**நன்றான ஆதி அனாதியை நித்தனை நாயகனை**
**ஒன்றான ஞானவிளக்கான உத்தமவோரொளியாய்**

**நின்றானை எங்கும் நிரம்பியஹக்கனை நிச்சயமாய்க்**
**கண்டால் ஒழியத் தெளியாது சிந்தனைக் கலக்கங்களே**

என்று தற்கலைப்பீர் சாய்பு அவர்கள் பாடுகிறார்கள். இதே போல அறியப்படும் பொருள் இருந்தும் அறிபவர் இல்லையானால் அப்போதும் அனுபவம் ஏற்படவே முடியாது. உதாரணமாக நாம் ஆழ்ந்த உறக்கத்தில் (சுஷுத்தியில்) இருக்கும் போது, சர்வ உலகின் சர்வ பொருட்களும் வெளிப்படையாகவே இருக்கும்போதும் நாம் எந்த ஓர் அனுபவத்தையும் பெற்றுக் கொள்வதே இல்லை. ஏனென்றால் அறியப்படும் பொருட்கள் இருந்தும் அறிபவனாகிய நாம் அறியக்கூடிய நிலையில் இல்லாதிருப்பதால் அந்த அனுபவம் எமக்குக் கிட்டுவதே இல்லை. மூன்றாவதாக அறிபவனாகிய நாம் அறியக்கூடிய நிலையில் இல்லாதிருப்பதால் அந்த அனுபவம் எமக்கு கிட்டுவதே இல்லை. மூன்றாவதாக அறிபவனாகிய நாமும் அறியப்படும் பொருளும் ஒரே இடத்தில் ஒரே வேளையில் சந்தித்தாலும் எமக்கும் அப் பொருளுக்குமிடையில் ஓர் சம்பந்தம் அல்லது ஓர் தொடர்பு ஏற்பட்டாலேயல்லாமல் அப்போதும் நாம் அனுபவத்தைப் பெறவேமுடியாது. உதாரணமாக நாம் வேறோர்வகையில் அனுபவத்தை அடையும் போது எதிரேயுள்ள பொருளின் அனுபவத்தை இழந்தே விடுகிறோம். ஆகவே அனுபவிப்பவன் அனுபவிக்கப்படும் பொருள் இவ்விரண்டுக்குமுரிய தொடர்பு ஆகிய மூன்றும் ஒன்று சேராத வரையில் நாம் அனுபவத்தை அடையவே முடியாது என்பது நிச்சயமான உண்மை. **எம்முடைய வாழ்வு என்பது இந்த அனுபவத்தின் இடைவிடாத தொடர்ச்சியாகவே அமைந்திருக்கிறது. இம்மை மட்டுமல்ல, மறுமையும் நரக, சுவர்க்கம் யாவும் இதே போலத்தான்.**

இந்த நோக்கோடு ஆராய்ந்தால் மனிதனுடைய வாழ்வுக்கு விஞ்ஞானம் போன்ற கல்விகளே போதுமானவை என்று கூறமுடியாது. ஏனென்றால் இவ்வுலகக் கல்விகளெல்லாம் பௌதீகப் பொருட்களின் விபரங்களை மட்டுமே எமக்கு விளக்கம் தருகின்றன. சூட்சும உலகையும் அதன் தன்மைகளையும் எவ்வகையிலும் கண்டு அனுபவிக்கக்கூடிய எந்த ஓர் விபரத்தையும் விஞ்ஞானக் கல்வி எமக்குத் தருவதே இல்லை. ஆனால் மனிதனோ இயல்பாகவே சூட்சும உலகைச் சேர்ந்தவனாகவும் அவனுடைய வாகனமான உடல் மட்டுமே பௌதீக உலகைச் சேர்ந்ததாகவும் இருக்கிறது. **ஆகையால்தான் அவ்லியாக்கள் (ஞானவான்கள்) அறிபவனின் உண்மையையும் அறியப்படும் பொருளின் (இறைவனின்) உண்மையையும் முதலில் ஆராய்ந்து அதன்பின் அதனால் ஏற்படும் அனுபவத்தில் ஊன்றிவிடுகிறார்கள்.** இவ்விதம் அவர்கள் செய்வதால் அவச்சுரத்துக்கொப்பான பௌதீக உலகை ஒதுக்கிவிடவும் சுத்த சுரங்கள் சேர்ந்த தெய்வீக நாதத்துக்கொப்பான உண்மையில் ஊறிவிடவும் வேண்டிய ஓர் நிலைமை அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆனால் அவச்சுரத்துக்கும் சுத்த சுரத்துக்குமிடையில், பொய்க்கும் உண்மைக்கும் இடையில் பேதம் காணமுடியாத புஸ்த்தகப் பூச்சிகளான நாம் இந்த மகான்களைத் தவறாக எடைபோட்டு விடுகிறோம். தண்டிக்கவும் முற்படுகிறோம். ஆனால் **அவர்கள் எவ்வளவோ கஷ்டநஷ்டங்களையடைந்து கண்டறிந்த அனுபவ உண்மைகள் எமது காலடியில் கிட்டும்போதும் அதன் உண்மையும் பெறுமதியும் எமக்குத் தெரியாமையால் அதைத் தட்டிக்கழித்துவிட்ட, மதியும் விதியும் கெட்டவர்களாகி விடுகிறோம்.**

உண்மையை நோக்கினால் தன் அறைக்குள் கண்ணை மூடிக் கொண்டு உலகையே மறந்து தியானத்தில் மூழ்கியிருக்கிற அவ்லியாக்களான மகான்களைவிட, விஞ்ஞானிகளோ அரசியல்வாதிகளோ எவருமே மக்களுக்கு அவ்வளவு நலன்களைச் செய்வதும் இல்லை, செய்ததும் இல்லை. ஆனால் பல அரிய கண்டுபிடிப்புகளை கண்டறிந்த விஞ்ஞானிகளுடைய செயல்களும் அரசியல்வாதிகளுடைய செயல்களும்தான் எம்முடைய அறிவுக்கும் புலன்களுக்கும் தென்படுகின்றன. ஆனால் தன் அறையிலேயே கட்டுண்டு கிடக்கிற அந்த மேதை உலக மக்கள் அனைவருக்குமே நன்மை செய்து கொண்டிருக்கிறார் என்பதை நாம் காண்பதேயில்லை. இம்மக்களின் பொருட்டால்தான் பாமரமக்கள்

வாழ்கிறார்கள் என்பதும் எமது அறிவில் பிடிபடுவதில்லை. இவ்வுண்மையைக் காணக்கூடிய அறிவுக்கண் எம்மிடம் இல்லை. சாதாரண மனிதராகிய நாம் எம்மையோ எம்மால் அறியப்படும் பொருளையோ எவ்வகையிலுமே ஆராயாமல் எமக்கும் அப்பொருளுக்கும் உள்ள தொடர்பை, வெளிப்படையை மட்டும் அனுபவமாக எடுத்துக் கொள்கிறோம். ஆனால் அந்த மகான்களோ அனுபவிக்கப்படும் பொருளான உலகையே முதலில் சிந்தனை செய்கிறார்கள். அந்தச் சிந்தனையின் முடிவு அனுபவிப்பனாகிய தன்னைக்கண்டறியும் வேலையில் நுழைத்து விடுகிறது. ஆகவே,**இவர்கள் முடிவில் அனுபவிக்கும் பொருளும் அனுபவிக்கும் தானும் அனுபவமும் ஒன்றே என்ற நிலைமையைப் பெற்றுவிடுகிறார்கள்.** இவர்கள் சிருஷ்டி என்ற நிலைமையில் இருந்து விடுபட்டு விடுகிறார்கள். இவர்கள் தங்கள் குறிக்கோளை அடைந்து விடுகிறார்கள். பௌதீக உலகின் செயல்களும் பொருள்களும் இவர்களுடைய அறிவில் புதைந்து விடுகின்றன. இவர்களுடைய அறிவு வேறு, எம்முடைய அறிவு வேறு. அவர்களுடைய அனுபவம் வேறு, எம்முடைய அனுபவம் வேறு. நாம் அனுபவிக்கும் பொருள் வேறு, இவர்களுடைய அனுபவப் பொருள் வேறு. ஆகவே இவர்களுடைய எந்த ஓர் நிலைமையும், அறிவும், எந்தச் செயலும், எந்தப் பேச்சும் **சாதாரண மனிதனுடைய அறிவில் திடிரென அமையக்கூடியவையேயல்ல.**

இந்த மகான்களுடைய நிலைமையை ஒவ்வோர் மனிதனும் பெற வேண்டும் என்பதற்காகவே **ஒவ்வோர் மனிதனும் பிறக்கிறான்.** மனிதனின் பிறவியின் நோக்கம் இதுதான் என்றால், இதை உணர்துவதற்காகவே கலிமாவும் வேதநூற்களும் நபிமார்களும் என்றால் இந்த மகான்களின் **நிலைமையை மார்க்கத்துக்கு விரோதமாகக் கணிப்பது எப்படி? இப்படிக்கணிப்பவர்கள் அவ்லியாக்களை ஏன் ஏற்றுக்கொள்ளவேண்டும்?** இவர்கள் எவ்விதமான ஆதாரமுமே இல்லாமல் ஒருவரை ஒருவர் பின்பற்றிக் கூறுகிறார்கள். முற்காலங்களில் உள்ள **சுயநலப்புலிகள் சிலர் போட்டுவந்த தந்திரமான உபாயங்களில் ஒன்றுதான், நல்லடியார்களின் செயல்கள் பேச்சுக்கள் ஸறகுக்கு விரோதம் என்பது.** இறைவனுக்கும் அடியானுக்கும் எப்போதும் அற்றுப்போக முடியாத, தடைப்படாத தொடர்பு நிச்சயமாக உண்டு. மனிதர்கள் எல்லோருமே மகான்களுடைய நிலைமையைப் பெற முடியாது என்பதும் மருட்சிவாதமேயாகும். “அலஸ்து பிறப்பிக்கும் காலுபலா” என்ற வசனமே உண்மையை உணர்த்தப் போதுமானதாகும். மனிதன் வஹ்மைவிட்டும் நீங்கி உள்ளத்தெளிவுடையவனாய் மாறும்போது தன் உண்மையை உணர்ந்து கொள்வான். மனிதனுடைய திரிபுடி உணர்வுகள் நீங்கும்போது அவனுடைய உள்ளத்தில் மறைந்து கிடந்த அபாரசக்தி வெளியாகும் என்பது நிச்சயம். இவர்கள் தான் பூரண ஈமான்தாரிகள். இவ்ாகளை பிக்ஹுடைய எந்தச் சட்டத்தின் கீழும் கட்டுப்படுத்த முற்படுவது அறியாமையாகும்.

இந்த நல்லடியார்களான மகான்கள் கையாளும் நபிலான வணக்கத்தையும் அதன் தன்மைகளையும் குர்ஆன் ஹதீஸ்கள் விளக்கம் தருகின்றன.

الَّذِينَ آمَنُوا وَتَطْمَئِنُّ قُلُوبُهُم بِذِكْرِ اللَّهِ ۗ أَلَا بِذِكْرِ اللَّهِ تَطْمَئِنُّ
الْقُلُوبُ

13-28 *அவர்கள் உண்மையாகவே விசுவாசம் கொண்டிருப்பதுடன் அல்லாஹ்வின் திருநாமத்தைத் திக்கிர் செய்வதால் அவர்களுடைய இருதயங்கள் திருப்தி அடைந்து விடுகின்றன. திக்கிர் செய்வதால் இருதயங்கள் நிச்சயமாக திருப்தி அடையும் என்பதை நீர் அறிந்து கொள்ளும்.*

(திருப்தி என்பது பூரணத்தன்மை, சாந்தி என்பதே அர்த்தம்)

فَاذْكُرُونِي أَذْكُرْكُمْ وَاشْكُرُوا لِي وَلَا تَكْفُرُونِ

2-152 *நீங்கள் என்னை திக்கிர் செய்யுங்கள். நான் உங்களைத் திக்கிர் செய்வேன். நீங்கள் நன்றிகெட்டவர்களாகிவிடாமல் எனக்கே நன்றி செலுத்திவாருங்கள்.*

فَأَعْرِضْ عَن مَّن تَوَلَّىٰ عَن ذِكْرِنَا وَلَمْ يُرِدْ إِلَّا الْحَيَاةَ الدُّنْيَا

53-29 *எவன் என்னை திக்கிர் செய்யாது விலகி இவ்வுலக வாழ்க்கையைத்தவிர விரும்பாதிருக்கிறானோ அவனை நீர் புறக்கணித்துவிடும். (இந்த ஆயத்தில் இவ்வுலக வாழ்வு என்று கூறப்பட்டுள்ளதை நுட்பமாய்ச் சிந்தனை செய்யவும்.)*

إِنَّنِي أَنَا اللَّهُ لَا إِلَٰهَ إِلَّا أَنَا فَاعْبُدْنِي وَأَقِمِ الصَّلَاةَ لِذِكْرِي

20-14 *நிச்சயமாக நான் அல்லாஹ், என்னைத்தவிர இலாஹுஉ இல்லை. என்னையே நீர் வணங்கும். என்னைத் திக்கிர் செய்து கொண்டே இருக்கும்பொருட்டுத் தொழுகையைக் கடைப்பிடியும்.*

ஹதீஸ்: ***அல்லாஹ்வை திக்கிர் செய்வதைவிட அடியானின் எந்த அமலும் அல்லாஹ்வின் வேதனையிலிருந்தும் அவனைக் காப்பாற்றக் கூடியதாய் இல்லை.***

ஹதீஸ்: ***நீங்கள் சுவர்க்கத்துத் தோப்புக்கருகில் செல்லும்போது அதில் நீங்கள் மேய்ந்து கொள்ளுங்கள் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூற சுவர்க்கத்துத் தோப்புக்கள் என்றால் என்ன? என்று மக்கள் வினவ! அல்லாஹ்வை திக்கிர் செய்கிற சங்கங்கள் என்று கூறினார்கள்.***

(இந்த ஹதீஸில சிலநுட்பங்கள் தென்படுகின்றன. இதை முன்னிலையாக்கி கூறப்பட்ட மக்களின் நிலைமையைக்கொண்டு சிந்திக்கவும்)

ஹதீஸ்: ***உங்களுடைய இபாதத்துக்களில் எல்லாம் மேலானதையும் அவற்றில் எதனால் உங்களின் பதவிகள் உயர்வடைகின்றன என்பதையும் அவற்றில் எது உங்களுடைய இறைவனிடம் மிகத்துாய்மையானது என்பதையும் நீங்கள் பொன்னையும் வெள்ளியையும் தர்மம் செய்வதை விட மேலானது எது என்பதையும் நீங்கள் உங்கள் எதிரிகளைப் போரில் சந்தித்து நீங்கள் அவர்களைக் கொன்று குவிப்பதையும் அவர்கள் உங்களை கொன்று குவிப்பதையும் விட மேலானது எது என்பதையும் நான் உங்களுக்கு அறிவிக்க வேண்டாமா? என்று றசூல்(ஸல்) கேட்டார்கள். அதற்குத் தோழர்கள் ஆம் (அறிவியுங்கள் ) என்றனர். அதற்கு றசூல்(ஸல்) அவர்கள் திக்கிர் செய்வதுதான் என்று கூறினார்கள்.***

**அறிவிப்பவர்: அபூதர்த்தா(றலி)**
**ஆதாரம்: முஅத்தா, திர்மிதீ**

ஹதீஸ்: ***வணக்கங்களில் சிறந்தது எது என்று றசூல்(ஸல்) அவர்களிடம் கேட்ட போது ஹறாமான விஷயங்களை விடுவதோடு ஓயாமல் திக்கிர் செய்வது என்றும், சிநேகிக்கக் கெட்டவர்கள் யார்? என்று கேட்டபோது அல்லாஹ்வைத் திக்கிர் செய்வதற்கு உதவி செய்யாமலும் அவனை மறந்தநேரம் நினைவுபடுத்தாமலும் இருப்பவர்கள் என்றும், சிநேகிக்கச் சிறந்தவர்கள் யார்? என்று கேட்டபோது அல்லாஹ்வைத் திக்கிர் செய்ய மறந்தபோது நினைவு படுத்துகிறவர்கள் என்றும் சிறந்த அறிவாளிகள் யார்? என்று கேட்டபோது அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் மிகைத்தவர்கள் என்றும், சேர்ந்திருக்கச் சிறந்தவர்கள் யார்? என்று கேட்கக்,கண்டால் அல்லாஹ்வை நினைவு கூறக்கூடிய அந்தஸ்த்துடையவர்களென்றும் ஜனங்களில் மிகக் கெட்டவர்கள் யார்? என்று கேட்க அல்லாஹ்விடத்தில் மன்னிப்புத் தேடினார்கள். மீண்டும் அந்தக் கெட்டவர்கள் யார்? என்று கேட்க கெடுதியை உடைய உலமாக்கள் என்று கூறினார்கள்.***

இவை போல் இன்னும் பல ஹதீஸ்கள் தென்படுகின்றன. தொழுகை சம்பந்தமான ஹதீஸ்களையும், திக்கிர் சம்பந்தமான ஹதீஸ்களையும், இவ்விரண்டையும் விளக்கம் தருகிற குர்ஆன் ஆயத்துக்களையும் **சரியான பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ந்து தெளிவு பெற வேண்டும்.** கவாஸுகளான பெரியார்கள் கையாளும் ஹுர்புன் நவாபிலி என்ற பாதையைச் சூசகமாயும் வெளிப்படையாயும் வற்புறுத்தி விளக்கப்பட்டிருப்பதை நோக்கினால் ஹுர்புல் பராயிலி ஹுர்புன் நவாபிலியைப் பெற்றுக் கொள்வதற்காகவே என்பதை அறிந்து கொள்ளலாம். அதாவது பக்தி மார்க்கம் என்னும் ஷரீயத் தரீக்கத் என்பவை முக்திமார்க்கமான ஹகீகத், மஹ்ரிபத்தை அடைவதற்காகவே என்பது தான் உண்மை. ஆபூதர்த்தா(றலி) அவர்களால் கூறப்பட்ட, என்னடியான் நான் அவனை உவந்து கொள்ளும் வரையிலும் நபிலான வணக்கங்களைக்கொண்டு இடைவிடாமல் என்னிடம் நெருங்கிக் கொண்டிருப்பான் என்ற ஹதீஸுஉம், 29-45, 6:52 போன்ற ஆயத்துக்களுமே உண்மையை உணர்பவர்களுக்குப் போதுமான ஆதாரங்களாகும்

ஆனால் "ஹர்புன் நவாபிலி" என்ற இந்த ஐக்கியமாகும் பாதை **பெரும்பாலான மக்களுக்குத் தெரியாமல் மறைந்து புதையுண்டு போய்க்கிடக்கிறது.** மேலும் மக்களில் மிக மிக அநேகர் பிறந்த நோக்கத்தை மறந்த மறதியாளர்களாய் மாறியிருக்கிறார்கள். பிக்ஹுஉடைய இல்மே முடிவானது என்று மருட்சியடைந்த மக்கள் இப்பாதை பிழையானது என்று மருட்சியடைகிறார்கள் . மக்களுக்கு வழிகாட்டுபவர்களில்**அநேகர் ஸுஜுது இல்லாத வணக்கமே கிடையாது என்றும், ஸுஜுது செய்யாதவர்களுடைய பேச்சைக் கேட்கக் கூடாது என்றும் ஆதாரமற்ற வெறும் மருட்சி வார்த்தைகளைக் கூறி மக்களை ஏமாற்றி இருப்பதால், மக்கள் இந்த ஐக்கியமாகும் பாதையைத் தஜ்ஜாலுடைய பாதையாகவே காண்கிறார்கள்.** இதன் விளக்கங்களைக் கேட்கும்போது ஆச்சரியமடைகிற மக்கள், தங்கள் வழிகாட்டிகளைக் கண்ட அதே கணத்தில் மீண்டும் இருளிலேயே நுழைந்து விடுகிறார்கள். இந்த நிலைமை எப்போதுமே இருந்துகொண்டிருந்தால் மக்கள் உண்மையை எப்போதுதான் உணர்வார்களோ நாம் அறியோம்.

**சகோதரனே!**

நரக உலகத்தின் (அதாபை) தண்டனையைப் பயந்த ஒருவன் அமலில் ஈடுபடுகிறான் என்றால் உண்மையாகவே அவன் மிருகங்களுடைய நிலைமையிலேயே இருக்கிறான் என்பதுதான் அர்த்தம். ஏனென்றால் சுயமாகச் சிந்தனைசெய்து தெளிவுபெற முடியாத ஓர் மிருகம் தண்டனையைப் பயந்துதானே வேலை செய்கிறது. தண்டனை என்பது ஒன்று இல்லையானால் (நரகம் என்பது இல்லையானால்) இவ்வகை மனிதனும் அமலில் ஈடுபடவே மாட்டான். அச்சமடையவே மாட்டான். நரகத்தைப் படைக்காவிட்டாலும் அச்சமடையத் தகுந்தவன் அல்லாஹ்வே என்பதை இவன் அறிவதேயில்லை. ஆகவே இவன் இறைவனையும் அவனுடைய வல்லமையையும் அறியாதவனாய், இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட நெருப்பு முதலாம் தண்டனைப் பொருட்களான சிருஷ்டிப்பொருட்களுக்கு அச்சப்படுபவனாய் இருப்பதால் முற்றிலும் ஷிர்க்கு என்னும் கொள்கையிலேயே ஊறியவனாய் இருக்கிறான். அதாவது இறைவனைப் பயப்படாமல் இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட பொருட்களுக்கு இவன் பயப்படுவதால், இவனுடைய அமல்கள் முஸ்லீம்களுடைய அமல்களைப்போல் இருந்தாலும் இவனுடைய உள்ளமோ முஶ்ரிக்கீன்களை ஒத்ததாகவே இருக்கிறது. ஆகவே இவனுடைய அமல்கள் இவனுக்குப் பலன் கொடுக்கும் என்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. ஆகவே இவனுக்குப் போதிக்கப்படும் போதனை இவனை ஓரளவு அச்சப்படுத்தி வழிப்படுத்துவதற்காகவே அல்லாமல் வேறு இல்லை.

இதே போல சுவர்க்க சுக போகங்களை விரும்பி ஒருவன் அமலில் ஈடுபடுகிறான் என்றால், இவன் பேராசைபிடித்த ஓர் பேயாக, சைத்தானாக இருக்கிறான் என்பதே அர்த்தம். ஏனென்றால் இவன் தன்னுடைய அறிவில் தன் தேவையை உபாதையைத் தீர்த்துக்கொள்ளும் மலகூடத்தைப் போலவே சுவர்க்கத்தையும் கணிக்கிறான். அதாவது இவன் சுவர்க்க போகத்துக்கு ஆசைப்படுவதெல்லாம் தன் தேவையை, உபாதையைத் தீர்த்துக் கொள்வதற்காகத்தானே! அப்படியானால் சுவர்க்கம் படைக்கப்படாமல் இருந்தால் இவன் அமலில் ஈடுபடவேமாட்டான் என்பது வெளிப்படை. சுவர்க்கம் படைக்கபடாமல் இருப்பினும் ஆசைப்படக் கூடியவன் இறைவனேதான் என்பதை இவன் அறிவதே இல்லை. இவன் ஆசைகொண்டதெல்லாம் படையுண்ணப்பட்ட தேனாறு, பழவர்க்கம், ஹூர்லீன்கள் போன்ற சிருஷ்டிப் பொருட்களைத்தானே! அப்படியானால் சிருஷ்டி கர்த்தாவை விட்டுவிட்டுச் சிருஷ்டிப் பொருளை ஆசை கொள்பவன் செய்யும் அமல்கள், முஸ்லீம்கள் மூமீன்களுடையதுபோல தென்பட்டாலும் உண்மையிலேயே இவனுடைய உள்ளமும் முஶ்ரீன்களை ஒத்ததாகத்தானே இருக்கிறது. ஆகவே இவ்வகையினருக்கு உபதேசிக்கப்பட்ட உபதேசமும், இவர்களை ஓரளவு ஆசை ஆதரவு காட்டி உயர்பதவிக்கு அழைத்துச் செல்வதற்காகவே அல்லாமல் வேறில்லை என்பது வெளிப்படை. அப்படியானால் இவனுடைய அமல்களும் பூரணபலனைக் கொடுக்கும் என்பதற்கும் எவ்வித ஆதாரமும் கிடையாது. ஊசியின் காதில் ஒட்டகை நுழைவதை விட மனிதன் சுவர்க்கத்தில் நுழைவது கடினம் என்று குர்ஆன் விளக்கம் தந்திருக்கிறது.

இறைவனைத் திருப்திப்படுத்துவதற்காகவே ஓர் மனிதன் அமல் செய்கிறான் என்றால் அவன் மிருகங்களுடையவும் ஷைத்தான்களுடையவும் குண சுபாவங்கள் நீங்கப் பெற்ற ஓர் நல்ல மனிதனாகவே இருக்கிறான் என்பதுதான் அர்த்தம். ஆனால் அறிவு குறைந்தவனாய் இருக்கிறான். எனினும் இவன் நேரான பாதையிலேயே இருக்கிறான். என்றோ ஓர் நாள் வெற்றியடைவான் என்பது நிச்சயம் தான். இவ்வகையினர்தான் ஆபிதீன்கள். (உண்மையான வணக்கவாளிகள்) இதே போல அல்லாஹ்வுடைய திருப்பொருத்தத்தை நான் பெற வேண்டும் என்ற நோக்கோடு ஒருவர் அமலில் ஈடுபடுவாரானால் அவர் ஞானவானாயும் அவ்லியாக்களில் உள்ளவராயும் இருக்கிறார். இவர்களைவிட இன்னும் சற்று முன்னேறி இரண்டறக்கலத்தல், ஐக்கியமாதல் பூரணத்தன்மையைப் பெறுதல் என்ற நோக்காகவே ஒருவர் அமலில் ஈடுபடுகிறார் என்றால் இவர் அவ்லியாக்களில் உயர் பதவியிலுள்ள ஆரிபுகளைச் சேர்ந்தவராகவே இருக்கிறார். இவருடைய குணசுபாவங்களை இவர் மற்றவர்களை விட்டும் மாறுபட்டவராக மாற்றிக் கொண்டிருப்பதனால் தான் “அப்தால்” என்று பெயர் பெறுகிறார்கள். அப்தால் என்றால் மாறுபட்டவர் என்பதே அதன் அர்த்தமாகும். இவ்வகையினர் மலக்குகளை விடவும் உயர்பதவியில் இருக்கிறார்கள் என்பது உண்மை. இன்னும் முன்னேறியவர்கள் இறைவனையே அன்றித் தன்னைக்காணாதவர்களாய், சிருஷ்டி என்ற நிலைமையே மாய்ந்தழிந்தவர்களாய், இரண்டு என்பதில்லாத ஏகத்தில் (ஒன்றில்) அமைந்தவர்களாய்க் கடலில் கரைந்துவிட்ட உப்புக்கல்லின் நிலைமையில் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள்தான் சித்திக்கீன்கள். கலிமாவை உண்மைகொண்டவர்கள். உண்மைப்படுத்தியவர்கள் உண்மையாளர்கள். இதற்கதிகமாய் நாம் இவர்களைப்பற்றி விளக்கம்தருவது தகாது. இந்த உண்மையை நாவினால் எழுத்தினால் விளக்கம் தருபவர்களையே நாம் ஸாதிக்குகள் என்று கூறுகிறோம். அதாவது நாவினால் எழுத்தினால் விபரம் தருவோர் சாதிகுகளாகும், சொல்லிலும் எழுத்திலும் செயலிலும் நிலைமையிலும் உண்மையாளர்களாய் இருப்பவர்கள் சித்திகீன்களாகவும் இருக்கிறார்கள்.

அல்லாஹ்வுடன் நான் அல்லது என்னுடன் அல்லாஹ் இருக்கவேண்டும், இரண்டென்னும் தன்மை இல்லாதிருக்க வேண்டும் என்று நாம் விரும்பினால் நேர்மையை, உண்மையை நாம் நிச்சமாகக் கடைபிடித்தே ஆகவேண்டும். ஏனென்றால் அல்லாஹ் நேர்மையாளர்களுடன் (உண்மையாளர்களுடன்) இருக்கிறானென்று அல்லாஹ்வே குர்ஆனில் விபரம் தருகிறான். இவ்வகையினர்தான் ஆரிப் பில்லாஹ் (அல்லாஹ்வைக்கொண்டு சகலமும் உணர்ந்தவர்கள்) என்று கூறப்படுகிறவர்கள். மேலே நாம் மிக மிகச் சுருக்கமாய் விளக்கிக் காட்டிய மக்களில் இன்னும் அநேக படித்தரங்கள் வகுப்புக்கள் இருப்பினும் இவ்வகுப்புக்கள், படித்தரங்களை குறிப்பாகவும், சில கட்டங்களில் பொதுப்படையாகவும் ஒவ்வொருவருடைய அறிவு நிலைமைகளுக்கும் ஏற்றபடி

விளக்கிக்காட்டி விபரம் தந்து எம்மைப் பூரண நிலைமைக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்பது தான் குர்ஆன், ஹதீஸ்களுடைய உண்மையான நோக்கமாய் இருக்கிறது. உதாரணமாக நரகம் என்பது தண்டனையளிக்கப்படும் சிறைக்கூடத்துக்கொப்பானது என்பதே மிருக சுபாவமுடைய மனிதனின் விளக்கமாகும். ஆனால் சிறிது உயர்பதவியிலுள்ள இன்னொருவர் நரகம் என்பது இறைவன் தன் அடியார்கள் மீது கொண்ட அன்பினால் சிருஷ்டித்திருக்கிற ஓர் வைத்தியசாலை (ஆஸ்பத்திரி) என்று விளக்கம் பெறுகிறார். இவர் இறைவனுடைய தண்டனையும் கருணைதான் என்று காணுகிறார். இதே போல ஒவ்வோர் மனிதனும் தன்னுடைய அறிவு நிலைக் கேற்றபடி விளக்கம் பெறுகிறான். இதில் ஒன்றும் தவறே இல்லை என்பது உண்மைதான். குர்ஆன், ஹதீஸ்கள் இவ்விதமான பற்பல உண்மைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும்போதும் அவற்றை இருட்டிப்புச் செய்து மூடிமறைத்துப் புரட்டவேண்டிய அவசியம் தான் என்ன?

குர்ஆன், ஹதீஸ்களுக்கு மிருகங்களுக்கொப்பான மக்கள் விளக்கும் விளக்கமே சரியானது, உண்மையானது, மற்றெல்லா விளக்கங்களும் பொய்யானது என்று தீர்ப்புக் கட்டவேண்டிய அவசியம் தான் என்ன? இவ்விதமான பற்பல உண்மைகளை, விளக்கங்களை மூடிமறைத்து அல்லது ஒன்று சேர்த்துக்கொண்டு குழப்பமடைவதும் மிருகசுபாவத்திலுள்ளவனை மனிதசுபாவத்துக்கு முன்னேற முடியாதவாய்த் தடைப்படுத்துவதும் எப்படி நியாயமாகும்? இவ்வகைப் புரட்டர்களைத், தங்களறிவைத் தாங்களே எடைப்போட்டு உண்மையை உணர்ந்து கொள்ளமுடியாதவர்களை, மக்களின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்துபவர்களை அறிஞர்கள், உலமாக்கள், எத்திவைப்பவர்கள் என்று எப்படிக் கூறுவது? இவ்வகையினர் குருடன் குருடனுக்கு வழிகாட்டுவது போல், தாங்களறிந்த, படித்த, கேள்விப்பட்ட விஷயங்களே முடிவானவை உண்மையானவையென்று நம்பிக்கொண்டும் அது சரியான பாதையே என்று ஏமாந்துகொண்டும் வழிகாட்டுகிறார்கள். அந்த மிருகசுபாவமுடைய மக்களின் அடிப்படை விளக்கங்களையே மேலும் மேலும் உறுதிப்படுத்துகிறார்கள். எல்லா மக்களையும் ஒரே அடிப்படையில் கணித்தே தீர்ப்புக்கட்டுகிறார்கள். றசூல்(ஸல்) அவர்களும் குர்ஆனும் எம்மிடையே வந்தும் இன்று சுமார் 1400 வருடங்கள் ஆகிவிட்டன என்பதை நாம் உணரவேண்டும். இவ்விதமான மூடத்தனமான, பிடிவாதமுடைய, தீவிரவாதமுடைய விளக்கங்கள் எம்மை உண்மையின் பக்கம் இழுத்துச் செல்லாது என்பது உண்மை.

எம்முன்னோரில் மிகப்பலர் கண்மூடித்தனமாய்க் கூறியுள்ள விளக்கங்கள், சிலகட்டுப்பாடுகள் உண்மைக்கு மாறானவையாய், இருட்டிப்புச் செய்யப்பட்டவையாய் இருப்பதனால்தான் இன்று நல்லடியார்களான அவ்லியாக்கள், அப்தாலுக்கள், சித்திக்கீன்களை நாம் காண்பது அரிதாக இருக்கிறது. உண்மையான தௌஹீதின், மனித உயர்பதவியின் விபரங்கள் சரிவர விளக்கப்படாமையால் தான் எம்மிடையயே கண்மூடித்தனமான, கஞ்சா மஸ்த்தான்களை நாம் காணக்கூடியதாய் இருக்கிறது. அறிவுகுறைந்த மக்களின் கையில் அதிகாரங்கள் சிக்கியிருக்கும்போது ஆத்மீகப்பாதை அடைபட்டு விடும் என்பது நிச்சயமான உண்மை. ஆகவே மார்க்க சம்பந்தமாய் ஆத்மீக விளக்கங்களை நாம் பெறவேண்டுமானால் செல்வச் செருக்குடையவர்களிடமோ உயர் பட்டங்களைப் பெற்றுக்கொண்டு அரசாங்க ஆதரவில் வாழும் ஆலிம்களிடமோ செல்வதில் பிரயோசனமே கிடையாது. உண்மையைக் கண்டறிய வேண்டுமானால் அனுபவஸ்தர்களான நல்லறிஞர்களையே நாம் தேடவேண்டும். கற்றதன்படி நடக்காத உலாமாக்களைப் புஸ்த்தகம் சுமந்த கழுதைகளுக்கு இறைவன் ஒப்பிட்டுக்கூறியிருக்கிறான். கழுதைக்கு புஸ்தகப் பொதி சுமந்த அனுபவமிருக்குமே அல்லாமல் அப்புஸ்த்தகங்களில விளக்கப்பட்டுள்ள எந்த ஒரு அறிவிலும் அனுபவம் இருக்கவே இருக்காது என்பதை முன்பே கூறியுள்ளேன்.

**சகோதரனே!**

முதலில் உன் உள்ளத்திற்கே நீ உபதேசம் செய். அவ்வுள்ளம் திருந்தி ஜெயம் பெற்றவிட்டதானால் அதன் பின்புதான் நீ மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும் தகுதியடைந்தவனாவாய். நீயே நீந்திக்கரையேறத் தெரியாமல் மூழ்கிவிடும் நிலையில் இருக்கும்போது பிறரைக் கரையேற்றநினைப்பது அறிவீனமேயாகும். எமக்கே கண்ணில்லாமல் இருக்கும் நிலைமையில் பிறரைவழி நடத்துவது எப்படி? நீந்தத் தெரிந்தவன் தான் சமுத்திரத்தில் விழுந்தவனைக் காப்பாற்ற முடியும். அல்லாஹ்வின் பக்கம் அழைத்துச் செல்லக்கூடியவன் அல்லாஹ்வை அறிந்த, அனுபவமுடையவன்தான். அல்லாஹ்வை அறிந்து கொள்ளமுடியாத ஒருவன் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளும் வகையில் ஆதாரம் காட்ட முடியாதவனேயாவான். வீட்டின் வாயிலில் தௌஹீதும் வீட்டினுள்ளே ஷிர்க்கும் இருப்பதில் பயனேது? நாவில், உடலில் சுத்தமும் உள்ளத்தில் அசுத்தமும் இருந்து என்னதான் பயன் பெறமுடியும்? ஆகவே நீ பட்டத்தில் பதவியில் மயங்காதே!

நம் நாட்டில் தற்காலம் படையெடுத்துள்ள ஒரு சில விஷமிகளின் கூட்டத்தைச் சிந்தனை செய்துபார். இந்த முனாபிக்குகளான ஷைத்தானின் அடிச்சுவட்டைப்பின்பற்றுகிற, அபூஜஹ்லின் கொள்கையையும் முஸ்லீம்களின் செயலையும் கைக்கொண்டிருக்கிற இந்தக் கூட்டங்கள் தங்களை ஏதோவெல்லாம் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் இக்கூட்டங்கள் தீனுடைய விஷயத்தில் முற்றும் கண்ணிழந்த குருடர்களாய் இருக்கிறார்கள் என்பதும் தாங்கள் விழப்போகிற படுகுழியிலேயே மற்ற மக்களையும் விழுத்திவிட முயற்சிக்கிறார்கள் என்பதும் இதை அவர்கள் உணர்ந்துகொள்ளாமலே செயல்படுகிறார்கள் என்பதும் பகுத்தறிவுடைய ஒவ்வோர் மனிதனுக்கும் தெரிந்த ஓர் விஷயம் தான். நீந்திப்பழகிய ஒருவன்தான் நீரில் மூழ்கியவனைக் காப்பாற்ற முடியுமேயல்லாமல் நீச்சலுடையை அணிந்துகொண்ட நீந்தத் தெரியாதவனால் காப்பாற்றவே முடியாது குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவது எப்படி?

தொழுகையை முடித்துக்கொண்டால் சரி, மற்றது எப்படியானாலும் பரவாயில்லை என்று நம்புகிற இம்மக்கள், அஹ்லுல் ஹல்லிவல் அக்திகளான அவ்லியாக்கள்தான் எத்திவைக்கும் தப்லீக்கூட்டத்தினர் என்பதை அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் முஸ்லீம்கள் என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டவர்களாயும் உள்ளரங்கத்தில் இஸ்லாத்தின் ஜென்மவிரோதிகளாயும் இருக்கிறார்கள் என்பதை நாம் சிந்தனை செய்து தெளிவு பெற வேண்டும். நல்லடியார்களான நபிமார்கள் றசூல்மார்கள் அவ்லியாக்களின் உண்மையான போதனைகளுக்கு இவர்கள் களங்கம் ஏற்படுத்துகிறார்கள் என்பதையும் நாம் உணரவேண்டும். இதோ குர்ஆனைப்பார்.

إِنَّ ٱلْمُنَٰفِقِينَ يُخَٰدِعُونَ ٱللَّهَ وَهُوَ خَٰدِعُهُمْ وَإِذَا قَامُوٓا۟ إِلَى ٱلصَّلَوٰةِ قَامُوا۟
كُسَالَىٰ يُرَآءُونَ ٱلنَّاسَ وَلَا يَذْكُرُونَ ٱللَّهَ إِلَّا قَلِيلًا

4-142 *நிச்சயமாக இந்த (முனாபிக்குகள்) நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்கின்றனர். எனினும் அல்லாஹ்வோ அவர்களை வஞ்சித்து விடுகிறான். அவர்கள் தொழுகையில் நின்றாலோ சோம்பேறிகளாக நின்று மனிதர்களுக்குக் காண்பிக்கிறார்கள். அவர்கள் வெகு சொற்பமாகவேயன்றி அல்லாஹ்வைத் தியானிப்பதில்லை.*

مُّذَبْذَبِينَ بَيْنَ ذَٰلِكَ لَآ إِلَىٰ هَٰٓؤُلَآءِ وَلَآ إِلَىٰ هَٰٓؤُلَآءِ ۚ وَمَن يُضْلِلِ ٱللَّهُ فَلَن
تَجِدَ لَهُۥ سَبِيلًا

4-143 *இவர்கள் அவர்களுடனும் (முஸ்ரிக்கீன்களுடன்) இல்லை. இவர்களுடனும் (மூமீன்களுடனும்) இல்லை. மத்தியில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். எவர்களை அல்லாஹ் வழி தவற விட்டுவிட்டானோ அவர்களுக்கு நீர் யாதொரு வழியும் காணமாட்டீர்.*

إِنَّ ٱلْمُنَٰفِقِينَ فِى ٱلدَّرْكِ ٱلْأَسْفَلِ مِنَ ٱلنَّارِ وَلَن تَجِدَ لَهُمْ نَصِيرًا

4-145 *நிச்சயமாக இந்த (முனாபிக்கீன்கள்) நயவஞ்சகர்கள் நரகத்திலும் கீழ்ப்பாகத்தில்தான் இருப்பார்கள். அவர்களுக்கு உதவி செய்யும் எவரையும் நீர் காணமாட்டீர்.*

ஆகவே பகுத்தறிவுக்கு இடம் கொடாத இவ்வகைக் கூட்டங்களின் வீணான ஆதாரமற்ற விதண்டாவாதங்களில் ஏமாந்து உன் பொற்காலத்தை மண்ணாக்கி விடாதே.

## (8)

**“ஹுர்புன்நவாபிலி”** என்று நாம் கூறிய இந்தப்பாதையைக்கொண்டு இறைவனை அணுகும்வகையில், பல அறிஞர்கள் பலதினுசான யுக்திகளைக் கையாண்டு பலவழிகளை (தரீக்காக்களை) உருவாக்கியிருக்கிறார்கள். வழிகள் பல என்பது பொருளல்ல. இவ்வழிகளில் செல்லும் மக்களின் குணசுபாவங்கள், அறிவுகள் பலதரப்பட்டவையாய் இருப்பதால்தான் வழிகள் பல ஏற்பட்டனவேயன்றி எல்லாவழிகளுடைய நோக்கமும் ஒன்றுதான். அதாவது அனுஷ்டானங்கள் மட்டும் மாற்றமடைந்திருக்கின்றன. அதாவது பக்தியின் பாதையை ஷாபி, ஹனபி, ஹம்பலி, மாலிக்கி என்று பல வழிகளாய் வகுக்கப்பட்டிருப்பதுபோல இந்த முக்தி மார்க்கத்தையும் பலவழிகளாய் (தரீக்காக்களாய்) வகுத்திருக்கிறார்கள். இந்த தரீக்காக்கள் எல்லாமே (ஒன்றைத்தவிர) தொழுகை முதலாம் கட்டாய கடமைகளைக் கைக்கொள்வதோடும் கடமைகள் முடிந்த பின் நபிலான வணக்கங்களை எடுத்துக்கொள்வதோடும்தான் செல்கின்றன. இப்பாதைகளில் செல்பவர்கள் மிக அரும்பாடுபட்டுப் பல **வருடங்களின் பின்புதான் (அத்வைதம்) தௌஹீதின் எல்கையை அடைகிறார்கள். அடைந்திருக்கிறார்கள்.** இதை நுட்பமாய்ச் சிந்தனை செய்தால், எப்போது தௌஹீதில் நுழைந்தார்களோ அப்போதிருந்துதான் “ஹுர்புன் நபாபிலியை”க் கைக்கொள்ளுகிறார்கள் என்பதும்,**அதற்குமுன் அவர்கள் கையாண்டதெல்லாம் ஹுர்பல்பராயிலியே என்பதும் தெரிய வருகிறது.** ஆகையால் தான் இவர்கள் பெரும்பாலும் அச்சம் ஆதரவுடைய நல்லடியார்களாவும் தங்கள் றப்போடு பராக்கானவர்களாவும் தென்படுகிறார்கள். இதற்குரிய காரணம் இம்மக்கள் ஆரம்பத்தில் கலிமாவின் உண்மையைச் சரியான விபரங்களுடன் அறிந்து கொள்ளாமல், உள்ள பலவீனம் உடையவர்களாய் இருப்பதேயாகும். ஆகவே இவர்கள் **இறை ஐக்கியத்தைப் பெறமுயலும் பாதைகள் எல்லாமே ஆரம்பத்தில் நபிலுடைய பாதையில் (ஹுர்புன் நவாபிலியில்) இருந்தே ஆரம்பிக்கப்படுகின்றன என்று எம்மால் கூறமுடியாமலே இருக்கின்றன.** ஆயினும் எந்தப்பாதையுமே பிழையானதோ தவறானதோ அல்ல.

ஆனால் நபிமார்களும் அவர்களை விளங்கித் தெளிவு பெற்றுப் பின்பற்றிய சில அவ்லியாக்களும் சென்றபாதையோ **முற்றிலும் வெளிச் செயலற்ற சுத்தமான நபிலுடைய பாதையாகவே இருக்கிறது.** உதாரணமாக றசூல்(ஸல்) அவர்களோ அதற்கு முந்திய நபிமார்களோ எவ்விதமான செயல்களில் (கட்டாய கடமைகளில்) ஈடுபட்டும் நபிமார்களாக வரவே இல்லை. அவர்கள் அனைவரும் கையாண்ட **நபிலான பாதை என்பது கலிமாவை முறாகபா** (நோட்டமிடல், ஆராய்தல்) **செய்தது மட்டும்தான்.** இப்படி முறாகபா செய்து முஸாஹிதாவை (காட்சி) அடைந்து அதன்பின்தான் மக்களை வழிகாட்டும் நோக்கமாகப் பர்முடைய பாதைகளை நபிலோடு இணைத்துக் கொடுத்திருக்கிறார்கள். **உண்மையான "ஹர்புன் நவாபிலி" என்ற நபிலான பாதை நபிமார்களும் றசூல்மார்களும் கையாண்ட பாதைதான். இப்பாதை எம்முடைய ஓர் புதிய கண்டுபிடிப்பல்ல. இதை மக்களில் மிக அநேகர் அறியாமல் இருக்கிறார்கள். அவ்வளவுதான்.** இந்தப் பாதையில் முன்னேறுவதற்குச் சரியான அறிவு விளக்கமும் உறுதியான உள்ளமும் மிக மிக அவசியமாகும். இப்படி அறிவு விளக்கமும் உறுதியான உள்ளமுடைய மக்களுக்கு ஒரு சில தினங்களிலேயோ, அல்லது மிகக் குறுகிய காலத்திலேயோ வெற்றியும் அளிக்கலாம். இப்பாதையிலுள்ள செயல்கள் கலிமாவினால் உணர்த்தப்படும் உண்மையான தௌஹீதைக்கேட்டு, சிந்தித்து, தெளிவுபெறுவதேயாகும். அதாவது முறாகபா (நோட்டமிடல், ஆராய்தல்) செய்வதும் அதனால் ஏற்படும் அனுபவத்தை (முஸாஹிதா, காட்சி) அடைவதுமேயாகும். இந்தப் பாதை வெளி அமலே இல்லாத கொள்கை விளக்கமான சித்தாந்தம் (ஞானம்) மட்டுமேயாகும். ஈமான் என்பதன் இரகசியம் இதுதான் .

இது ஸறகுக்கோ அறிவுக்கோ விரோதமான ஓர் பாதையல்ல என்பதை முதலில் அறிந்து சந்தேகம் நீங்கிக்கொள்ள வேண்டும். மஹரிபா, ஞானம், பூரண ஈமான், ஐக்கியமாதல் என்பதெல்லாம் இப்பாதையின் பிரதிபலன்தான். ஆனால் மஹரிபா என்னும் ஞானப்பாதை ஸறகுக்கு விரோதமானதென்று ஒரு சிலர் கண்மூடித்தனமாய் கூறும் வார்த்தைகளுக்குக் குர்ஆன் ஹதீஸ்களில் எவ்விதமான ஆதாரங்களுமே கிடையாது. இன்றைய உலகமக்களின் மனோநிலைமையையும், அவர்களுடைய போக்குகளையும் நுட்பமாய் அவதானிக்கும்போது, உலகமக்களின் இன்றையத் தேவை குறிக்கோளை அடையக் கூடிய அறிவே அல்லாமல் வெளிப்படை அமலல்ல என்பது தென்படுகிறது.

**ஹதீஸ்:** ***மார்க்கவிளக்கவான்கள் உத்தாரம் சொல்பவர்கள் மிகுதமாகவும் ஓதுகிறவர்கள் உபதேசிகள் குறைவாகவும் இருக்கிற இக்காலத்தில் உங்களுக்கு அறிவைவிட அமல் சிறந்ததாகிறது. ஆனால் மார்க்கப்பிரமாணிகள் உத்தாரம் சொல்பவர்கள் குறைவாகவும் உபதேசிகர்களும் கேட்பவர்கள் மிகுதமாகவும் நேரிடுகிற இனிமேல் வரும் காலத்தில் அமலைவிட அறிவு சிறந்ததாகின்றது.***

## (9)

ஈமான், ஞானம், மஹரிபா என்ற சொற்கள் மக்கள் எல்லோருக்கும் தான் தெரியும். அதே போல அவ்லியாக்கள் என்ற சொல்லும் சர்வசாதரணமாக எல்லோருக்கும் தெரிந்த ஓர் சொற்தான். என்றாலும் இந்தச் சொற்களைப் பற்றிய விபரங்களில் மக்கள் மிகத்தவறான அபிப்பிராயங்களைக் கொண்டவர்களாக, உண்மையை அறியாதவர்களாக, அறிய முடியாத கட்டுப்பாடுகளை உடையவர்களாகவே தென்படுகிறார்கள். ஞானம் என்பது ஏட்டுச்சுரைக்காய் என்றும் சிலர் நம்புகிறார்கள். ஞானத்தினால், மஹரிபாவை அறிவதனால் மனிதன் பித்தனாகிவிடுவான் என்று சிலர் நினைக்கிறார்கள். ஞானத்தில் மூழ்குபவன் சோம்பேரியாகிவிடுவான் என்று சிலர் நினைக்கிறார்கள். கஞ்சா, அபின் முதலிய லாகிரிவஸ்த்துக்களைப் பாவித்துக்கொண்டும் தாடி, தலைப்பாகைகளினால் அலங்காரம் செய்துகொண்டும் தங்களுக்கே விளங்காத பாடல்களைப் பாடிக்கொண்டும் மவுலானாவாப்பா, ஆரிபுபில்லா என்ற பெயர்களைச் சூட்டிக்கொண்டும் **மக்களை ஏமாற்றுகிற போலி வேஷதாரிகள் சிலர் பாமர மக்களை இந்த மூடதடதனமான நிலைமைக்கு உள்ளாக்கி இருக்கிறார்கள்.** மேலும் சிலர் இந்து ஞானவான்களின் தத்துவ விளக்கப்பாடல்களை ஆதாரமாக எடுத்துக்கொண்டு மூச்சைப்பிடிப்பதிலும் முச்சுடரை தேடுவதிலும், கொடிய நோய்களுக்குள்ளாவதிலும் காலத்தை அனாவசியமாகக் கடத்திவிட்டு இறுதியில் ஏமாற்றமடைகிறார்கள். தாங்கள் வழிதெரியாதவர்கள் என்பது அவர்களுக்கே தெரியும் என்றாலும் தங்களை மக்களிடையே ஞான மேதைகளாக, அவ்லியாக்களாக சுல்தானுல் ஆரிபீன்களாக விளம்பரம் செய்வதிலும் பணம் தேடுவதிலும் புகழ் தேடுவதிலும் தான் பராக்காகிறார்கள். மக்கள் ஏன் இப்படியெல்லாம் போய்க் கொண்டிருக்கிறார்கள்? மக்களுக்கு உண்மையான அறிவுகிட்டாமைதான்.

மக்களை வழிகாட்ட முற்பட்டுள்ள எத்திவைக்கும் கூட்டங்களேனும் உண்மையை உணர்த்தி மக்களின் குறிக்கோளை, அமல்களின் அவசியத்தை ஞாபகப்படுத்துகிறார்களா? அதுவும் இல்லை. இந்த எத்திவைக்கும் கூட்டங்களே மக்களை மேலும் மேலும் வஹ்மு என்ற இருளில் தள்ளிவிட்டு, உண்மையைக் கண்டறியமுடியாதபடி பல விலங்குகளையும் திரைகளையும் மக்களுடைய அறிவுக்கு ஊட்டிவிடுகிறார்கள். மக்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள்? எத்திவைக்கும் கூட்டங்களின் உண்மையான நோக்கம் தான் என்ன?

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் சிந்திக்க, ஆராய்ந்து முன்னேறவே பிறக்கிறான். மனிதனுடைய முன்னேற்றம் எத்துறையில் உள்ளதேஆனாலும் அதற்குச் சிந்தனையும் ஆராய்வும் அவசியமேயாகும். **சிந்தனைக்கும் ஆராய்வுக்கும் மனிதனுக்குப் பூரண சுதந்திரம் மிக மிக அவசியமாகும்.** அப்படியிருக்கும் போது சிந்திக்காதே! ஆராயாதே! நாங்கள் கூறுகிறபடி, ஆட்டுமந்தைகள் போல எங்களைப் பின் தொடர்வதே சரி என்றும், எங்களுடைய கூட்டமல்லாத மற்ற

எல்லோருமே வழிகெட்டவர்களாகையால் அவர்களுடைய பேச்சைக் கேட்பதே ஹறாம் என்றென்றால்லாம் கூறுகிற இந்தக் கூட்டங்களை **எத்திவைப்பவர்கள், வழிகாட்டுபவர்கள், மனித முன்னேற்றத்துக்கு உழைப்பவர்கள் என்று கூற முடியுமா? மக்களின் அறிவுக்கு விலங்கிடுகிற, அறியாமையை எத்திவைக்கிற, ஷைத்தானின் கையாட்கள் என்றே நான் காணுகிறேன்.**

இன்றைய உலகிலுள்ள அத்தனை மதங்களையும் ஆராய்ந்து பார்த்தால் ஒன்றுக்கொன்று சிற்சில அனுஷ்டானங்களில், கொள்கை விளக்கங்களில் வேறுபட்டிருப்பினும், மதங்களின் உண்மையான அடிப்படை நோக்கமெல்லாம் மனிதனைச் சிந்திக்க வைக்கக் கூடியவனாக ஆக்க வேண்டும் என்பதுதான். சிந்திக்கக் கூடிய உபாயங்கள் இல்லாத எந்த மதமும் இல்லையென்றே கூறலாம். இந்த அடிப்படையில்தான் மதங்கள் மனிதயுத்தியினால்கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த மதங்களில் மக்களுக்கு வழிகாட்ட முற்பட்ட ஒரு சில பெருச்சாளிகள், வியாக்கியானிகள், உண்மையை புரட்டித்திருப்பி விட்டிருக்கும் காரணத்தினால்தான் உண்மையான மதம் எது என்பதைக் கூட கண்டறிய முடியாதபடி மனிதன் திணறவேண்டியதாகவே இருக்கிறது. ஒவ்வோர் மனிதக்கூட்டமும் தான் பிடித்த முயலுக்கே இரண்டு கொம்பு என்ற நிலைமையில் கட்சிப்பற்றுடையவர்களாய் வாழவேண்டிய நிலைமையே உருவாக்கியிருக்கிறது. என்னுடைய அறிவுக்கெட்டிய வரையில் நான் ஆராய்ந்து பார்த்த போது, மனிதனுடைய சிந்தனையை முறைப்படி செயல்படவைத்து, மனிதன் தன்னுடைய மறதியை நீக்கித் தான் யார்? என்பதை உணர்ந்து கொள்ளக்கூடிய உபாயங்களை உள்ளபடி இலகுவாய் விளக்கி வைத்திருப்பது **இஸ்லாம் மட்டுமே என்பதைக் கண்டேன் . ஆயினும் இஸ்லாம் இன்றிருக்கும் நிலைமையில் மனிதனுடைய சிந்தனையையும் அறிவையும் சுதந்திரத்தையும் எவ்வளவு தூரம் தடைப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் தடைப்படுத்தக் கூடியதாகவே வழிகாட்டும் கூட்டங்களாலும் வியாக்கியானிகளாலும் மாற்றி அமைக்கப்பட்டிருப்பதாகவே தென்படுகிறது.** சிந்திக்க ஆராயப் பிறந்த மனிதனுடைய சிந்தனையைத் தடைப்படுத்தி அவனுடைய பகுத்தறிவைப் பறிக்கும் பழக்க வழக்கங்களுக்கும், உபதேசங்களுக்கும், கொள்கை விளக்கங்களுக்கும் மதம், தீன், என்று எப்படிப் பெயர் கூறலாம்? இவ்விதமான மருட்சியில் அழைத்துச் செல்வோரை வழிகாட்டிகள் என்று கூறுவது நியாயமாகுமா?

**சகோதரனே!**

ஞானமேதைகளான நபிமார்களும் அவர்களைப்பின்பற்றிய பெரும் பெரும் மேதைகளும் பலாமரத்தை, பலாப்பழத்தைப் போன்றவர்கள். பலாமரம் பூப்பதே இல்லை. அதே போல இம்மகான்கள் மக்களைக் கவரக்கூடிய படாடோபங்களைக் கையாளுவதே இல்லை. பலாப்பழம் வெளிப்பார்வையில் கரடு முரடாய் இருந்தாலும் பயங்கரமான முட்கள் நிரம்பியது போலத்தென்பட்டாலும் உள்ளே மிக இனிமையான, உபயோகமுள்ள சுளைகள் இருக்கின்றன. இதேபோல இம்மகான்களுடைய நடையுடை பாவனைகளான வெளிச்செயல்கள் பயங்கரமானவையாக, பிழையானவைபோலத் தென்பட்டாலும் அவர்களுடைய அனுபவமும் அறிவும் மிகமிக இனிமையானவையாகவே மனிதகுலம் அத்தனைக்கும் உபயோகமுள்ளவையாகவே இருக்கின்றன. **பலாமரம்பூக்காமலே காய்ப்பது போல இவர்கள் எவ்விதமான கல்வியறிவும் பட்டம் பதவிகளும் இல்லாமலே இந்த மகத்தான நிலைமையை இறையருளால் பெறுகிறார்கள்.**

இவர்களின் அடிச்சுவட்டைப்பின்பற்றிய உண்மையான சில அவ்லியாக்கள் (குத்புமார்கள்) மாமரத்தைப் போல், மாம்பழத்தைப் போல் இருக்கிறார்கள். மாமரம் பூப்பதுண்டு. காய்த்துப்பழுப்பதும் உண்டு. அதே போல இவர்களில் பட்டம் பதவி, கல்வியறிவு, ஆராய்வு உடையவர்கள் உண்டு. இவர்களுடைய அனுபவம் மாம்பழத்துக்கொப்பானது. இனிமையானது. உபயோகமானது இவர்களுடைய நடையுடைபாவனைகள் மிகக் கவர்ச்சி இல்லாவிட்டாலும், மாமரத்தின் பூவைப்போலாவது இருக்கும். இவர்களில் ஒலிமார்களல்லாத அனுபவம் குறைந்த **சாதாரண அறிவாளர்கள் புளிப்பும் தும்பும் உள்ள உபயோகமற்ற மாமரத்துக்கும் மாம்பழத்துக்கும் ஒப்பானவர்கள்.** ஏதோ பழம் சாப்பிடுகிறோம் என்ற அனுபவத்திற்காக இப்பழத்தைச் சாப்பிட்டாலும் வயிற்றுக் கோளாறுகளை ஏற்படுத்தும் என்பது நிச்சயம். **இவர்கள் தான் தவறான வியாக்கியானங்களைக் கொடுக்கிற பட்டதாரிகள்.**

இன்னோர் வகையினர் இருக்கிறார்கள். இவர்கள் பாதிரி மரத்துக்கு ஒப்பானவர்கள். பாதிரிமரம் பூப்பதேயல்லாமல் காய்ப்பது இல்லை. இதே போல இம்மக்கள் பட்டம், பதவி, கல்வியறிவு, அழகான, இனிமையான பேச்சுவன்மை, மிகவடிவான தாடிதலைப்பாகை உடையவர்களாய் இருக்கிறார்கள். பாதிரிமரம் பூப்பதைப்போல. ஆனால் இவர்களுடைய சொற்களோ, செயல்களோ எப்போதும் எவருக்கும் பிரயோசனம் கொடுப்பதே இல்லை. **இவ்வகையினர்தான் இன்று மக்களுக்கு எத்திவைக்கும் கூட்டத்தினர். இவர்களிடமுள்ளதெல்லாம் பாதிரிமரத்தின் பூவைப்போன்ற தாடிதலைப்பாகை தொழுகை போன்ற பூக்களேயல்லாமல் காய்களோ பழங்களோ அல்ல.** பாதிரி மரம்தான் எப்போதும் காய்ப்பதோ பழுப்பதோ இல்லையே. அதே போல இவர்களும் பூக்கும் அளவோடு நின்றுகொள்கிறார்களேயன்றி எவரும் எப்போதும் காய்த்ததோ பழுத்ததோ இல்லை. அதாவது இவ்வகையினருக்கு எப்போதுமே **அனுபவஞானம் உண்டாவதே இல்லை.** மீதிவிபரங்களை நீ சிந்தனை செய்து கொள்.

**சகோதரனே!**

உண்மை என்றுமே இறப்பதில்லை. எங்கேயும் அவ்வுண்மை மறைந்து ஒழிந்து கொள்வதும் இல்லை. மனிதனுடைய ஆத்மாவோடு அவ்வுண்மைகொண்டுள்ள இனிய தொடர்பு உண்மைவாதிகளான நல்லடியார்கள்(அவ்லியாக்கள்) செய்யும் பிரசாரத்தினால் வித்திடப்பெற்று வேரூன்றி எங்கேயாவது எப்போதாவது பூத்துக்காய்த்துப் பழுத்துப் பலனழித்தேயாகும். இன்றுள்ள மக்களில்

அறிவுத்தாகமுடையவர்களும், சென்று போனவர்களில் வில்லியமூர், இங்கர்சால் போன்ற அறிவுத்தாகமுடையவர்களும் நாஸ்தீகர்களான காரணம் மதங்களின் உண்மை புரட்டப்பட்டிருந்ததுதான். தௌஹீது மறைக்கப்படாமல் மனிதன் விளங்கக்கூடிய வகையில் உண்மை வெளிப்படுத்தப்பட்டிருந்தால் நாஸ்தீகவாதிகள் யாவரும் குத்புமார்களுடைய ஸ்தானத்தை அடைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமெ கிடையாது.

இன்றும் இஸ்லாமிய, கிறிஸ்தவ, சைவ, பௌத்த மதங்களைத் தழுவியுள்ள பெரும்பாலான வாலிப உள்ளங்கள் நாஸ்த்தீகப்பாதையிலும், மனம் போன போக்கிலும் போய்க்கொண்டிருப்பதன் காரணம்,**மதங்களின் வெளிக்கோலங்களில் மருட்சியடைந்த சிலர் அந்த மதங்களின் அடிப்படை உண்மைகளை மறைத்துவிட்டிருப்பதேயாகும்.** இந்த வாலிப உள்ளங்களில் ஏற்படும் ஆசைகளை, அறிவுத்தாகங்களைமுறையாய் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிவகைகளை அவர்களுடைய அறிவு ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் விளக்கம் கூறக்கூடிய மக்கள் இக்காலத்தில் மிக மிகக் குறைவு ஆகும். **மதங்களின் வெளி அனுஷ்டானங்கள் எவையுமே அவர்களுடைய அறிவுக்கு விளக்கம் தருவதில்லை. அவற்றின் உண்மையான நோக்கமும் அவர்களுக்குப் புரிவதில்லை.** ஆகவே கட்டுப்பாடுகளில் சிக்கியுள்ள அந்த வாலிப உள்ளங்கள் அவர்களுடைய தேவைகளைத் தீர்த்துக்கொள்ள அவரவருக்குத் தெரிந்த பற்பல உபாயங்களைக் கையாளுகிறார்கள். இன்றைய உலகின் நாலா பாகங்களிலும் நடைபெறுகிற தீயவிழைவுகளுக்கெல்லாம் காரணம் இதுதான். **இது வாலிப உள்ளங்களின் பிழை என்பதை ஏற்றுக் கொள்ளவே முடியாது.** குழந்தைகளுக்கு ஆரம்பத்திலேயே மதங்களின் உண்மையான நோக்கமும் மனிதனின் குறிக்கோளும் பாடசாலைகளில் உணர்த்தப்பட்டிருந்தால் பெரும்பாலும் இந்தத் தீயவிளைவுகள் ஏற்படமுடியாதென்றே கூறலாம்.

இந்த விபரங்களைச் சரிவர ஆராய்ந்தால் மனித இனத்திலுள்ள சகலருக்குமே, சகல சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும் ஏற்றபடி இலகுவாக வழிகாட்டக்கூடிய ஓர் வழி இஸ்லாம்தான் என்பது வெளிப்படையாகவே தென்படுகிறது. அப்படியிருந்தும் இன்று இஸ்லாமிய நாடுகளைச் சீர்தூக்கி ஆராய்ந்தால் அந்த நாடுகளிலும் தீயவிழைவுகள் நிறைய இருக்கவே செய்கின்றன. இஸ்லாம் இறுதி நாள் வரையிலும் மக்களுக்கு வழிகாட்டக்கூடிய ஓர் பாதைதான் என்றால், சாந்தியளிக்ககூடியதுதான் என்றால் இந்த இஸ்லாமிய நாடுகளிலும் இந்த தீய விழைவுகளும் நாஸ்தீகமும் ஏன் ஏற்பட வேண்டும்? அரசியல் வேறு மதம் வேறு என்று மனிதன் பிரித்துக்கொண்டதும், மதங்களின் உண்மையான நோக்கம் புதையுண்டு போனதும், மதங்களின் வெளி அனுஷ்டானங்களில் மயங்கிய மக்கள் கட்சிப்பற்றுடையவர்களாய் மாறியதும்தான் காரணம். அது மட்டுமல்லாமல் மதசம்மதம் பெறாத தான் தோன்றித்தனமான மூடப்பழக்க வழக்கங்களை மதத்தின் பெயரால் சமூகத்தில் நுழைத்துக் கொண்டதும் ஓர் காரணமாகும். அறிவும் அனுபவமும் உடைய மக்களின் அபிப்பிராயங்களை ஆராய்ந்து தௌஹீதின் உண்மை தெளிவாய்ப் புலனாகக்கூடிய வகையில் கல்வி திட்டங்கள் அமைத்து ஆரம்பத்தில் இருந்தே கல்வி புகட்ட முற்பட்டால் சுமார் பத்து அல்லது பதினைந்து வருடங்களுக்குள் இஸ்லாமிய நாடுகள் அத்தனையுமே சுவர்க்கத்துப் பூங்காக்களாக மாற்றமடையும் என்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது.

## (10)

மார்க்கம், மதம் தீன் என்றெல்லாம் நாம் பெயர் கூறுகிற இஸ்லாத்தின் கொள்கை, மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரையிலுமுள்ள உலக விவகாரங்களில், இயற்கை நியதிகளுக்கு விரோதமில்லாமல், சுதந்திரமாய்க் கடைப்பிடித்தொழுகித் தன் தேவைகளைப் பூரணமாய்ப் பெற்றுக் கொள்ளக்கூடிய, நியாயமான நிலையான சட்ட திட்டங்களைக்கொண்ட ஓர் பகுதி (லாஹிறு-வெளிப்படை)யையும், மனிதனுடைய ஆத்துமா இறைவனோடு ஐக்கியமாகி ஆகிறாவில் வெற்றி பெற்றுத் தன் உண்மையான பூரணத் தன்மையைப் பெறக்கூடிய, உபாயங்களை விளக்கக் கூடிய இன்னோர் (பாதினு-உட்படை) பகுதியையும் கொண்டதாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாத்தையும் பிறமதங்களையும் கட்டுப்பாடற்ற, கட்சிப்பற்றில்லாத சுய சிந்தனையோடு ஆராய்ந்தால் நாம் கூறிய இவ்விரு பகுதிகளையும் அவ்வவற்றிற்குரிய நிலையான இயற்கைக்கு விரோதமில்லாத சட்டநுட்பங்களையும் கொண்டுள்ளது இஸ்லாம் மட்டுமே என்பது தெளிவாகவே தென்படுகிறது.

இந்த இஸ்லாத்தின் உலக விவகாரங்கள் அடங்கிய பகுதியை இஸ்லாத்தின் உடல் (முஆமலாத்-பிக்ஹு) என்றும் இறைவனோடு ஐக்கியமாகும் பகுதியை உயிர்(முகாஸாபாத்- மஹரிபா) என்றும் கூறப்படும். இவ்விருபகுதிகளும் சாதாரண மனிதனுடைய பேதபுத்திக்கு(வஹ்முக்கு) ஒன்றுக்கொன்று விரோதம் போல் தென்பட்டாலும் உண்மையான பகுத்தறிவுக்கு அவை விரோதமானவையேயல்ல. இதைப்பல இடங்களில் பலமுறை விளக்கியுள்ளேன். இவ்விரு பகுதிகளையும் ஒன்றுக்கொன்று முரணில்லாமல் விளக்கம் தருவதே குர்ஆன் ஹதீஸ்களின் நோக்கமாகும். ஆனால் நாம் எம்முடைய யூகங்களால் அவற்றைப் புரட்டிக் கொண்டிருப்பதால் அவை முரண்படுவது போல் தென்படுகிறன. இப்போது இஸ்லாத்தின் உலக விவகாரமான வெளி உடலை நாம் சரியான முறைப்படி கண்டறிவதானால் மனிதனுடைய தேவைகள் எவை? மனிதனுக்கு வேண்டிய சீர்திருத்தங்கள் எவை? என்பதை நாம் கண்டறிய வேண்டும். மனிதன் உலக விவகாரங்களில் எதை ஆசைப்படுவதானாலும், எதை அனுபவிப்பதானாலும், எந்த ஓர் தேவையைப் பெறுவதானாலும், எந்த ஓர்சீர்திருத்தத்தை அடைவதானாலும் அவனுடைய ஐந்துபுலன்களுக்கும் (பார்வை, கேள்வி, ஸ்கந்தம். சுவை, ஸ்ப்பரிஸம்) அமைவாகத்தான் பெறவேண்டும். **அதாவது மனிதனுடைய உலகதேவைகள் எதுவாயினும் இந்த ஐந்துபுலன்களையும் கடக்கமுடியாது.**

ஆகவே மனிதனுடைய பார்வை கேள்வி ஸ்கந்தம் மணம் சுவை ஸ்ப்பரிதம் (தொட்டுணர்வு) ஆகிய ஐம்புலன்களுக்கும் உரிய தேவைகளை இயற்கை சுபாவத்துக்கு மாறில்லாமல், இறைவனோடு ஐக்கியமாகும் நோக்கத்துக்கு தடையில்லாமல், பெற்றுக்கொள்ளக் கூடிய, அனுபவிக்கக்கூடிய சம உரிமையையும் சட்டதிட்டங்களையும் எந்த மார்க்கம் மனிதனுக்கு விளக்கிக் காட்டுமோ அந்த மார்க்கம் தான் உண்மையான நிலையான, இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கமாக இருக்கும். இதற்கு அப்பாற்பட்ட எந்த மார்க்கமும் நிலையானதாக, உலகமக்கள் அனைவருக்குமே வழிகாட்டக்கூடியதாக, இறைவனால் முழுமையாக்கப்பட்டதாக இருக்கவே முடியாது. இறைவனால் மனிதனுக்கென்றே ஈயப்பட்ட இவ்வுலகின் சர்வபொருட்களையும் நியாயமான முறையில் அவசியத்தினளவு அனுபவிக்க உலகமக்கள் அனைவரும் சமமான உரிமையுடையவர்களாய் இருக்கவேண்டுவது அவசியமேயாகும். இல்லையானால் மனித இனம் சுதந்திரமுடையதென்பது பகட்டுப் பேச்சாகும். **இதை அறிவோடு நோக்கினால் எல்லாமக்களுக்கும் எக்காலத்திலும் வேண்டிய எல்லா உரிமைகளையும் ஐந்து புலன்களுக்கும் அவசியமான அளவு சமமாய் வழங்குவது இஸ்லாம் ஒன்றுதான் என்பது தென்படுகிறது.**

இவ்வளவு நிறைவான சிறப்புடைய ஓர் பாதையாக இஸ்லாம் அமைந்திருந்தும் இஸ்லாமிய மக்களிடையேயும், உலக விவகாரங்களான வெளி விஷயங்களில்கூட முரண்பாடுகளும் பித்தலாட்டங்களும் இருக்கின்றனவென்றால் இது இஸ்லாத்தின் குற்றமோ குறைவோ அல்ல. **நான் ஓர் முஸ்லீம், மூமீன் என்று தங்களைத் தாங்களே எடைபோட்டுள்ள மனிதர்களின் அறியாமையின் குற்றமேயாகும்.** இந்த மனிதர்கள் இஸ்லாத்தை ஆராய்ந்து முறைப்படி கற்றறியாமல், உண்மையை உணராமல் மேலோட்டடமாக, முஸ்லீம் வயிற்றில் மூமீன்வயிற்றில் பிறந்தநான் முஸ்லீம் தானே, மூமீன்தானே, எதையும் ஆராயவேண்டிய அவசியமே நமக்கில்லையென்று நம்பிக்கொண்டிருப்பதுதான் இந்த முரண்பாடுகளுக்கும் பித்தலாட்டங்களுக்கும் காரணமாய் இருக்கிறது. **அதாவது ஒவ்வோர் மனிதனும் எவ்விதமான விளக்கங்கள் விபரங்கள் இஸ்லாத்தைப் பற்றித் தெரியாதவனாக இருக்கும் போதும் தன்னைமிகப்பெரிய முஸ்லீம் அறிஞனே என்று நம்பி விடுகிறான்.**

இன்றைய உலகின் மற்றும் மதங்களை நோக்கினால் மனிதன் பிறப்பைக்கொண்டு, பணத்தைக்கொண்டு, பட்டம் பதவிகளைக் கொண்டு, உயர்வு தாழ்வு கணிக்கப்படுகிறான். முஸ்லீம்களிலும் மிக அநேகர் இந்த நிலையில்தான் தென்படுகிறார்கள். ஒருவன் உயர்பதவியிலும் இன்னொருவன் தாழ்பதவியிலும் இருப்பதால் உயர் பதவியிலுள்ளவன் அனுபவிக்கும் உரிமைகள் தாழ்பதவியிலுள்ளவனுக்குக் கிடைப்பதே இல்லை. ஆண் தன்மனைவியிடத்தில் எவ்வித உரிமை உடையவனாய் இருக்கிறானோ அதே உரிமை பெண்ணுக்கும் இருப்பதற்காகக் கூறுவது இஸ்லாம் ஒன்றுமட்டும்தான். ஆண் தன் மனைவியை விட்டுப்பிரிய உரிமையுடையவனாய் இருப்பதுபோல பெண்ணும் தன் கணவனை விட்டுப்பிரிய உரிமையுடையவள் என்று கூறுவது இஸ்லாம் ஒன்றுதான். தாய் தந்தையரின் ஆஸ்த்தியில் நியாயமான முறைப்படி ஆணுக்கும் பெண்ணுக்கும் பங்கீடு செய்வது இஸ்லாம் ஒன்றுதான். இன்னபார்வை ஹறாம், இன்னபார்வை ஹலால், இன்ன தொட்டுணர்வு ஹலால், இன்ன தொட்டுணர்வு ஹறாம் என்று ஐந்து புலன்களுக்குமுரிய சரியான விதி விலக்குகளை மனிதனுக்கு இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மதம் விளக்கியிருக்கிறது? தெளிவாய்ச் சிந்தனை செய்துபார். இந்த இஸ்லாம் கூறும் உபாயங்களை மனிதன் விளங்கியறிந்து கையாள்வதானால் அவனுக்கு வேறு என்ன முன்னேற்றம் தேவை? எவ்விதமான கொலை, களவு முதலாம் துர்க்கிருத்தியங்களுமே சமூகத்தில் ஏற்படமுடியாது.

ஆனால் மனித சமூகத்தில் ஏற்படும் இவ்விதமான குற்றச் செயல்களை ஒழித்துக்கட்ட எவ்விதமான சட்டதிட்டங்களை வகுத்தாலும் அவை காலாகாலம் மாற்றப்படவேண்டியவையாயும் புதுப்பிக்கபட வேண்டியவையாயும்தான் அமையும். ஏனென்றால் இப்படி இயற்றப்படும் சட்டதிட்டங்கள் மனிதனுடைய இயற்கைப்பண்புகளை அடிப்படையாய் வைத்து அமைக்கப்படுவதில்லை. ஆகவே அவை தற்காலிகமானவையாய்த் தான் அமையும். மற்றும் விபரங்களை நீ சிந்தனைக்கெடுத்துக்கொள். விபரித்தால் பெருகும். இவ்விதமான சகல வெளிஉலக விஷயங்களும் நிரப்பமாய் அமைந்த இஸ்லாத்தின் உயிரான (முகாஸபத்-மஹரிபத்) **இறைவனோடு ஐக்கியமாகும் விஷயத்தில், வெளிஅனுஷ்டானங்கள் முரணாய் இருக்கின்றன, அல்லது தவறான விளக்கமாய் இருக்கின்றது என்றால் இதைப் பகுத்தறிவு எப்படி ஏற்றுக்கொள்ளும்? இப்படிக் கூறுவதே பகுத்தறிவுக்கு முரணான வாதமாகும்.** மனிதர்களில் மிக அநேகர் இஸ்லாத்தில் இல்லாத கண்மூடித்தனமான பழக்க, வழக்கங்களில் மூழ்கிக் கொண்டதனாலும் இஸ்லாத்தின் உயிரான இல்முல் முகாஸபத்தில் அற்பமும் விளக்கம் இல்லாமையாலும் அமல்கள் எதற்காக என்ற ஆராய்வில்லாதமையாலும், இஸ்லாத்தில் புதைக்கப்பட்ட உண்மைகள் அவர்களுடைய அறிவுக் கெட்டாமையாலும் செயலுக்குக் கொள்கை விரோதம் என்று காணுகிறார்கள். ஆனால் உண்மை அப்படியல்ல.

இஸ்லாத்தின் வெளி அனுஷ்டானங்களையும் கொள்கையையும் முறைப்படி அறிந்துகொள்ளாத மனிதன் தன்னுடைய தேவைகளைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய உபாயம் பணத்தைத் தேடுவதே என்று காணுகிறான். பணத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய என்னென்ன உபாயங்களுண்டோ அத்தனையையும் கையாளுகிறான். இஸ்லாத்தின் கொள்கை விளக்கம் அணுவளவும் தெரியாமலிருந்தாலும் நானும் ஓர் மூமீனே முஸ்லீமே என்று நம்புகிற மனிதன் குற்றச் செயல்களில் ஈடுபடுவதும் பணவேட்டைக்காக எந்த உபாயத்தைக்கையாள்வதும் ஆச்சரியமே அல்ல. ஆனால் இஸ்லாத்தின் உண்மைகளை முறைப்படி அறிந்துள்ள எந்த ஓர் மனிதனும் பணத்துக்கு முதலிடமளிக்கவோ, அதற்காகக்குற்றச் செயல்களில் இறங்கவோ சிருஷ்டிப் பொருட்களில் மயங்கவோமாட்டான். உலகில் அவசியமானவற்றை அவசியமான அளவு பெற்றுக்கொள்ளவே விரும்புவான். **பணத்துக்காக புகழுக்காகத் தன் சர்வசக்திகளையும் செலவிடவோ மற்றவர்களை அடக்கியாளவோ விரும்பமாட்டான்.** தன் தேவைகளை ஆசைகளைப் பெற்றுக்கொள்ள அறிவுக்குப் பொருந்தாத எந்த வழியிலும் இறங்கவும் மாட்டான். இஸ்லாமிய

மக்களிடையே எவ்வளவோ தப்புத்தவறான பழக்கவழக்கங்கள் குடிகொண்டிருந்தும் அவற்றைப்படிப்படையாய் நீக்கி உண்மையான சீர்திருத்தங்களை ஏற்படுத்தவோ அறிவு விளக்கங்களைக் கூறவோ எந்த ஓர் தப்லீக்கும் முயற்சிப்பதே இல்லை. ஆனால் அந்த எத்திவைக்கும் கூட்டத்தாரின் கவனிப்பில் தென்படுவதெல்லாம் எவன் தொழாமல் இருக்கிறான். அவனைப் பள்ளிவாசலுக்கு இழுத்துச் செல்லவேண்டும், எவன் தாடி இல்லாமல் இருக்கிறான் அவனுக்குத் தாடியின் அவசியத்தைக் கற்பிக்க வேண்டும், மக்களை அல்லாஹ்வுடைய பாதையில் ஓர் மூன்று நாள் அல்லது நாற்பது நாள் அல்லது நாலுமாதம் இழுத்துச் செல்லவேண்டும், அப்படிச் சென்றால் ஒரு அடிக்கு ஓர் இலட்சம் நன்மைகளை அடையலாம் என்பதே. அவர்களுடைய பிரசாரங்களைக் கேட்கும் மக்களில் அநேகர் நன்மை என்றால் என்ன? அதன் நீளம் அகலம் உயரம் எடை எவ்வளவு? என்பதைக் கூடச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அல்லாஹ்வுடைய பாதை எது என்பதை விசாரிக்கக் கண்டடைய முயற்சிப்பதும் இல்லை.

أَلَمْ تَرَ إِلَى ٱلَّذِينَ بَدَّلُوا۟ نِعْمَتَ ٱللَّهِ كُفْرًا وَأَحَلُّوا۟ قَوْمَهُمْ دَارَ ٱلْبَوَارِ

14-28 *அல்லாஹ்வின் அருட்கொடையை (நிஹ்மத்தை)க் குபிரைக் கொண்டு மாற்றித் தங்கள் ஜனங்களையும் அழிவுக் கிடங்கில் இறக்கிவிட்டவர்களை நீர் பார்க்கவில்லையா?*

தங்களைத் தாங்களே எடைபோட்டுக்கொள்ளத் தெரியாதவர்களாய், குர்ஆன், ஹதீஸ்களின் எவ்விதமான விபரங்களுமே தெரியாதவர்களாய், செம்மறி ஆட்டுமந்தைகள் போல ஒருவரை ஒருவர் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றிச் சென்று கொண்டிருக்கிற அறிவு விளக்கமில்லாத சிலர் தங்களை எத்திவைக்கும் தப்லீக் ஜமாஅத்தை சேர்ந்தவர்கள் என்றும் றசூல்(ஸல்) அவர்களை முற்றாய்ப் பின்பற்றியவர்கள் தாங்களே என்றும் நம்பியிருக்கிறார்கள். சுவர்க்கவாதிகளான தங்களுடைய தாடி மயிர்களில் சுவர்க்கலோக ரம்பைகளான ஹுறுலீன்கள் ஊஞ்சலாடிக் கொண்டிருப்பதாய் நம்புகிற இந்த மக்கள், றசூல்(ஸல்) அறபு பாஷை பேசியிருப்பதால் நாமும் அப்பாஷையைப் பேசுவதே சுன்னத்து என்று நம்புவதில்லை. றசூல்(ஸல்) அவர்கள் கோதுமையை உணவாகக்கொண்டவர்கள். ஒட்டகை, குதிரை, கழுதைகளில் பிரயாணம் செய்தவர்கள். 11 மனைவிமார்களை விவாகம் செய்தவர்கள். கலிமாவை ஒப்புக்கொள்ளவைப்பதற்காகவே “பீஸபீல்” செய்தவர்கள். பட்டினி, பசிதாங்க முடியாத நிலைமையில் வயிற்றில் கல்லைக்கட்டிக் கொண்டவர்கள். எவ்வித கைக்கூலி, சீதனமும் இல்லாமல் மகளை விவாகம் செய்து கொடுத்தவர்கள். ஒரு நல்ல மாளிகையோ ஒரு நல்லபடுக்கையோ இல்லாமல் வாழ்ந்தவர்கள். ஏழைகள் எளியவர்களுக்குத் தாராளமாய் வழங்கியவர்கள். இவைபோன்ற றசூல்(ஸல்) அவர்களுடைய மற்றும் செயல்களெல்லாம் இந்த எத்திவைக்கும் சுன்னத்துவல்ஜமாஅத்துக் கூட்டத்தாரின் அறிவுக்கண்களில் சுன்னத்துக்களாகவோ பர்ளுகளாகவோ தென்படுவதில்லை. **ஆயினும் றசூல்(ஸல்) அவர்களுடைய தாடியும், மிஸ்வாக்குக் குச்சியும் மணம் பூசுவதும் தானே இவர்களுடைய அறிவில் சுன்னத்தாகப் பர்ளாகத் தென்படுகின்றன.** இவற்றை மட்டும் எடுத்துக்கொண்டால் நாமும் றசூலை முற்றாய்ப் பின்பற்றி விட்டோம் என்று நம்புகிற இந்த மக்கள், தாங்களே வழிதவறிச் சென்று கொண்டிருப்பது மட்டுமல்லாமல் ஒவ்வோர் கிராமத்திலுமுள்ள அறிவு குறைந்த மக்களையுமல்லவா வழி தவறச் செய்து விடுகிறார்கள். ஆனால் றசூல்(ஸல்) அவர்களுடைய உண்மையான நோக்கங்களைக் கண்டறிந்து வாழ முடியாமல் தவிக்கிற இம் மக்கள் றசூல்(ஸல்) அவர்களை முற்றிலும் பின்பற்றிய நல்லடியார்களின் கூட்டம் தாங்களே என்றும் தாங்களே சுவர்க்கவாதிகள் என்றும் தீர்ப்புக் கட்டியிருப்பது ஆச்சரியமல்ல. **அபூஜஹ்லுகூடத் தன்னை நேரான பாதையில் செல்வதாகத்தானே நம்பியிருந்தான். இக்கூட்டத்தின் மூலமந்திரம் என்னதெரியுமா? தொழாதவனுடைய பேச்சைக் கேட்காதே என்பதே. இந்த மந்திரம் பாவிக்கப்படாவிட்டால் அவர்களுடைய பாதையில் மக்களைச் செலுத்த முடியாதல்லவா?**

மனிதனுடைய கண்மூடித்தனமான பின்பற்றல் அவனை எப்படி எங்கே அழைத்துச் செல்லுகிறது என்பதைச் சிந்தனை செய்துபார். தாங்கள் எங்கே எப்படிப் போய்க்கொண்டிருக்கிறோம் என்பது கூடத் தெரியாத பல கூட்டங்கள் **வெளிநாடுகளில் தோன்றி இஸ்லாம் என்ற போர்வையில் நுழைந்துகொண்டு பாமரமக்களின் ஆதரவைத் தேடுகின்றன.** இது எதற்காக என்பதுகூட மக்களுக்கு தெரியாது. நம் நாட்டிலுள்ள கல்விமான்கள்கூட எள்ளளவும் சிந்தனையில்லாமல் இந்தக் கூட்டங்களோடு ஒத்துழைப்பதுதான் ஆச்சரியம். **தொழுகையை எடுத்துக்கொள்ளும் கூட்டம் என்ற அளவிலேயே மனிதன் ஏமாந்து விடுகிறான்.** ஒவ்வோர் கிராமமும் இதே நிலையில் மாறிக்கொண்டிருந்தால் எதிர்காலக் குழந்தைகளின் அறிவுவளர்ச்சி என்னாகும்? வேஷதாரிகளின் மருண்ட வார்த்தைகளால் மேலும் மேலும் உண்மை மறைக்கப்பட்டுக்கொண்டே வந்தால் மனிதகுலத்தின் முடிவுதான் என்னாகும்?

**ஹதீஸ்:** ***இறுதிக்காலத்தில் சிலர் வருவார்கள். அவர்கள வெளித்தோற்றத்தில் மார்க்கப்பக்தர்கள் (ஆபிதீன்கள்) போன்று நடித்துச் சரிசெய்து உலகத்தைப் பெறுவார்கள். மக்களை ஏமாற்றும்பொருட்டு ஆட்டுத் தோல்களை அணிந்துகொள்வார்கள். அவர்களுடைய பேச்சின் மென்மை தேனைவிட இனிமையாக இருக்கும். அவர்களுடைய இருதயங்களோ ஓநாய்களைப் போன்றிருக்கும், (எனவே) இறைவன் நீங்கள் என்னிடமா அகம்பாவம் செய்கிறீர்கள்,என்மீதா உங்களுடைய திறமைகளைக் காட்டுகிறீர்கள். என்மீது ஆணையாக நிச்சயமாக நான் இத்தகையோர் மீது அவர்களுடைய அறிவு தடுமாறும்படியான சோதனையை அனுப்பிவைப்பேன் என்று அல்லாஹ் கூறுவான் என்று றசூல் (ஸல்)அவர்கள் கூறினார்கள்.***

அறிவிப்பவர்: இப்னு உமர்(றலி) அபூஹுறைறா(றலி)
ஆதாரம்: திர்மிதீ.

இவைபோல் இன்னும் பல ஹதீஸ்கள் இவ்விதமான கூட்டங்களைப்பற்றி முன்னறிவித்தல் செய்திருக்கின்றன.

(முன்பும் இவ்வித கூட்டங்களைப் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது)

ٱلَّذِينَ يَصُدُّونَ عَن سَبِيلِ ٱللَّهِ وَيَبۡغُونَهَا عِوَجٗا وَهُم بِٱلۡأٓخِرَةِ هُمۡ
كَٰفِرُونَ

**11-19** *எவர்கள் அல்லாஹ்வின் வழியைத்தடுத்து அதில் கோணலை உண்டு பண்ண விரும்புகிறார்களோ அவர்கள் மறுமையையும் நிராகரிப்பவர்கள் (காபிரீன்கள்)தான்.*

**சகோதரனே!**

இஸ்லாத்தின் வெளிக்கோலமான அனுஷ்டானங்களே தலை கீழாகப் புரண்டுபோய்ச் சின்னாபின்னம் அடைந்து கிடக்கும்போது இஸ்லாத்தின் உட்கோலமான இறைவழி நடைமுறைகள் எப்படியிருக்கும் என்பதை சிந்தனை செய்து பார். சிறுபராயத்தில் அறபு எழுத்துக்களை வாசிக்கக்கூடிய பயிற்சி மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. குர்ஆன் என்னதான் கூறுகிறது என்ற விபரம் அம்மாணவனுக்குத் தெரியவே தெரியாது. தன் ஆசிரியர் அந்தக் குர்ஆனில் கூறியுள்ள உண்மையான விபரங்களையே தமக்குப் போதித்திருப்பதாகவே அம்மாணவர்கள் நம்புகிறார்கள். **ஆனால் ஒரு சில விஷயங்களை அந்த ஆசிரியர் குர்ஆனுக்கு மாறாகவே தமக்குப் புகட்டியிருக்கிறார் என்பது மாணவர்களுக்குத் தெரியாது.** பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவன் சமூகப்பழக்கவழக்கங்களில் ஊறியே வளர்கிறான். இவன் தன் பழக்கவழக்கத்தையும் தன் ஆசிரியர் போதித்தவைகளையுமே மார்க்க விளக்கமாகத் தன் உள்ளத்தில் பதித்துக் கொள்கிறான். அம்மாணவர்களில் ஒரு சிலருக்கு இயற்கையான அறிவு வளர்ச்சி ஏற்படும் பொது உண்மையைக் கண்டறியும் ஆவலும் தன் கல்வியில் சந்தேகமும் ஏற்பட்டாலும், அவனுடைய நூற்கேள்வியறிவும் சமூகமும், பழக்கவழக்கமும் இடமளிப்பதே இல்லை. அப்படி ஏதோ ஓர் வாய்ப்புக்கிடைத்து இவன் உண்மையை உணர்ந்து கொண்டாலும், சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாதவனாகவே அமைந்துவிடுகிறான். ஆனால் குழந்தைகளின் சிறுபராயங்களிலேயே உண்மை புகுத்தப்பட்டிருந்தால் சமூகம் சீரான நிலையைப் பெற்றிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## (11)

**நாம்** முன்பு விளக்கியதுபோல இறைவன் தன்னுடைய வஹ்தத்தைத் தரிப்படுத்த நாடித்தானே “லா இலாஹ இல்லல்லாஹ்” என்று கூறினான். தன்னைத்தான் வெளியாக்க நாடி தஜயுனுல்ஊலா, தஜயுனுஸ்ஸானி, அஹ்யான் தாபிதா, ஆலமுல் அற்வாஹ், ஆலமுல் மிதால், ஆலமுல் அஜ்ஸாம், என்ற மாத்தபாக்களை வகுத்துத் தன்னிடத்தே தனக்காகத் இன்ஸான் என்ற போர்வையில் வெளியாகியிருக்கிறான். அறிவுக்கெட்டாமல் நிற்கும் மனம் இருந்தபடியே இருந்துகொண்டு தன்னிடத்தே புதையுண்டு கிடந்த அத்தனையையும் தனக்காகத் தன்னிடத்தே கனவு என்ற நிலைமையில் வெளியாவது போல. கனவில் வெளியான ஒவ்வொன்றும் தத்தம்மை வெவ்வேறாய்க் காண்பதுபோல் இன்ஸானாகிய நாமும் காலம், இடம், வஹ்மு என்ற திரைகளில் சிக்குண்டிருப்பதால் இறைவனைவிட்டும் நம்மை நாம் வேறாகக் காண்கிறோம். நம்மை நாமே அறியாதவர்களாயும் இருக்கிறோம். இந்த நிலையில் இருக்கும் நாம் எம்முடைய ஆரம்பநிலையை அடைந்து பூரண சாந்தியைப் பெறவேண்டியவர்களாய் இருக்கிறோம். இந்த நிலையில் இருக்கும் நாம் எம்முடைய ஆரம்ப நிலையை அடைந்து புரண சாந்தியைப் பெறவேண்டியவர்களாய் இருக்கிறோம்.இதற்காக முதலில் கலிமாவை நாவினால் கூறுகிறோம். அதன்பின் நாவினால் கூறிய கலிமாவின் கருத்தில் உள்ளம் உறுதியடைவதற்காகச் செயலில் (அமலில்) ஈடுபடுகிறோம். செயல்கள் எண்ணத்தை உறுதியடையச்செய்யும் என்பது உண்மை. ஆகவே செயல் எண்ணத்துக்காகவே அல்லாமல் செயலுக்காக எண்ணமேயல்ல. ஆகவே இநத எண்ணத்தை உறுதிப்படுத்துவதற்காக அல்லாமல் செய்யப்படும் எந்த செயலும் பிரயோசனம் தரவே முடியாது என்பதையும் அச்செயல் எதிர்மாறான பலனையே தரும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இஸ்லாம் என்பது இம்மை மறுமைகளுக்குரிய சர்வவிபரங்களையும் பொதிந்துகொண்ட ஓர் சம்பூரண மதமாகும். **அதன் நோக்கமான உண்மையான சாந்தியை நாம் பெறவேண்டுமானால் அதை விளங்கியறிந்துதான் செயல்பட வேண்டும்.** வெறும் மூட நம்பிக்கைகளோ குருட்டு அனுஷ்டானங்களோ சாந்தியைத் தரக் கூடியவையேயல்ல. தாடி தலைப்பாகை உன்னை மருட்ட வேண்டாம்.

தும்பையாட்டுக்கும் தாடி இருக்கத்தானே செய்கிறது. அது தடியைக் கண்டு தலைவனுக்கடங்கும் தனிக்குணம்படைத்ததேயல்லாமல் வழிகண்டு தெளிவடையும் ஆற்றலுடையதேயல்ல. இஸ்லாத்தின் வெளிக்கோலமான கடமைகளில், மக்களுடைய சிற்சில நன்மைகளைக்கருதி அறிஞர்கள் பலவாறான விபரங்களைத் தந்திருந்தாலும் அவற்றின் உட்கருத்துக்கள் யாவும் ஒரே நோக்குடையவை தான். கடமைகளில் சிற்சில ஸறுத்துக்கள் துன்யாவுடைய நன்மைகளை உத்தேசித்துத் தரப்பட்டிருக்கின்றனவே அன்றி அவற்றிற்கும் ஆகிறாவுக்கும் சம்பந்தமே கிடையாது.

உதாரணமாக மனிதன் உண்ணும்போது கையைக்கழுவிக் கொள்வது, தலையை மூடிக்கொள்வது போன்ற மற்றும் ஸறகுடைய விஷயங்களெல்லாம் இஸ்லாத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கையைக்கழுவிக்கொள்வதால் நோய்க்கிருமிகள் அழுக்குகளில் இருந்தும் விடுபடலாம் என்பது உண்மை,தலையை மூடிக்கொள்வதும் அழுக்கு, உரோமங்கள் உணவில் நுழையக்கூடாது என்பதற்காகத்தான். உப்பைத் தொட்டு நாக்கில் வைப்பதால் உமிழ் நீர்க்கோளங்கள் சரிவர இயங்குவதால் உணவின் ரசனையை அனுபவிக்கலாம் என்பதும்,உணவு ஜீரணமாக உதவும் என்பதும் உண்மை. இவ்விதமான கிரிகைகளால் நோயற்றவனாக வாழலாம் என்பதும் உண்மை. நோயற்றவனாய் வாழ்வது இறைவனோடு ஐக்கியமாவதற்கு உதவியான செயல்தான். ஆகவே இவைபோன்ற பல சுகாதார விதிகளை மார்க்கத்தோடு இணைத்து தரப்பட்டிருக்கிறது. ஆனால், இறைவனோடு ஐக்கியமாவதற்கும் இச்செயலகளுக்கும் சம்பந்தமே இல்லையெனினும் இச் செயல்கள் நோக்கத்துக்கு உதவியாய் இருப்பதினாலேயே அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

**உதாரணமாக:**

***ஹதீஸ்:மார்க்கசுத்தி மார்க்கத்தின் அத்திவாரமாகிறது.***

***ஹதீஸ்:தொழுகையின் திறவுகோல் சுத்தம் ஆகும்.***

***ஹதீஸ்:ஈமானில்பாதி பரிசுத்தம் ஆகும்.***

***ஹதீஸ்:நாம் பரிசுத்தமுடையோரை நேசிக்கிறோம்.***

ஆயத்து: *உங்களுக்குச் சடைவு ஏற்படுவதை (நாம்)விரும்புவதில்லை. ஆயினும் உங்களைப் பரிசுத்தம் செய்து கொள்ளவேண்டும் என்பதை விரும்புகின்றோம்.*

இவ்விதமான ஹதீஸ்கள் ஆயத்துக்கள் உடற்பரிசுத்தத்தை மட்டுமல்லாமல் உள்ளப்பரிசுத்தத்தையும் தான் வலியுறுத்துகின்றன. ஆயினும் சாதாரண லாஹிறுடைய உலமாக்களும் அறிவு குறைந்த மக்களும் உடற்பரிசுத்தம்தான் என்று நம்பினாலும் பரவாயில்லை. ஆனால் அதன் தேவை என்ன? என்பதைச் சிந்திப்பதே இல்லை. ஆகவே நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் கையைக் கழுவுவதிலும் காலைக்குழுவதிலும் மனிதன் கவனத்தைச் செலுத்தி விடுகிறான்.

**ஹதீஸ்:** ***எவர் உளுவின் துவக்கத்தில் இறைவனின் பெயரைக் கூறினாரோ அவருடைய உடல் முழுமையும் தூய்மை பெற்றுவிடும். எவர் இறைவனின் பெயரைக் கூறவில்லையோ அவர் உளுச்செய்த இடங்கள் மட்டும் தூய்மை பெறுகின்றன என்று றசூல்(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டேன்.***

**அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி)**
**ஆதாரம்: ரஜீன்,**

(இந்த ஹதீஸை நோட்டமிட்டுப்பார். உளூ எதற்காக என்பதைக் கண்டறி)

தொழுகையின் போது கிப்லாவை நோக்குவது, கத்தனாச் செய்வது, ஒழுச் செய்வது, முழுக்கிறுப்பது, மிஸ்வாக்குச் செய்வது, தாடி, தலைப்பாகைகளை எடுத்துக்கொள்வது போன்ற வெளி அனுஷ்டானங்கள் யாவும் மிக முக்கியமான சுகாதார விதிகளையும் வேறு சில நன்மைகளையும் உத்தேசித்துத் தான் மார்க்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. விபரித்தால் பெருகும். நுட்பமாய்ச் சிந்தனைக்கெடுத்துக்கொள்ளவும். இந்தச் செயல்கள் யாவும் மனிதனுடைய உலக வாழ்வுக்கு அவசியமான பலன்களை ஏற்படுத்துகின்றன. உலக வாழ்வு சீராய் அமைவது இபாதத்தைச் செய்வதற்கும் குறிக்கோளை அடைவதற்கும் மூலகாரணமாய் அமைந்திருக்கிறது. ஆகவேதான் இச்செயல்கள் மார்க்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றனவே அன்றி **இச்செயல்கள்தான் மார்க்கம் என்பது பொருளல்ல. நாம் மல சலங்களில் இருந்து சுத்தமாக்கிக்கொண்டாலும் எம் வயிற்றில் இன்னும் அழுக்குகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆகவே இறைவனுடன் ஐக்கியமாவதற்கும் இச் செயல்களுக்கும் எவ்வித சம்பந்தமுமே இல்லை. ஆகவே இந்த வெளி அனுஷ்டானங்களில் அளவுக்கதிகமான முயற்சி செய்வது மருட்சியேயாகும்.** இந்த அனுஷ்டானங்களில் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்றபடி ஓர் நல்லடியார் சிலவற்றை விட்டுவிட்டால் நாம் அவரைக் குறைகாண்பதும் அறிவுடைமையாகாது.

விளக்கம் குறைந்த மக்களிடையே எப்போதும் அபிப்பிராய பேதம் இருந்து கொண்டு தான் இருக்கும். இந்த அபிப்பிராயங்களில் மூழ்கவும் இந்த அறிவு குறைந்த மக்களைத் திருப்திப்படுத்தவும் முற்பட்டால் இறைவழி செல்லவே முடியாது. ஹகீகத், மஹரிபத்துடைய நிலைமைகளைப் பெற்ற மக்களிடையே பெரும்பாலும் அபிப்பிராய பேதங்கள் இருப்பதில்லை. இருந்தாலும் அது நோக்கத்தைத் தடைப்படுத்துவதுமில்லை. இதே போல இம்மகான்களிடையே சிற்சில அனுஷ்டான பேதங்கள் தென்பட்டாலும் அவற்றின் நோக்கம் ஒன்றாகவே இருக்கிறது. தரீக்காக்கள் எல்லாம் இவ்வகையில் உள்ளவைதான். பட்டினத்தை அடையும் மக்கள் ஒவ்வோர் வாகனத்தில் பிரயாணம் செய்துகொண்டிருந்தாலும் நோக்கம் பட்டினத்தை அடையவேண்டும் என்பதே. பட்டினத்தை அடைந்த மக்களிடையே வாகனப் பிரச்சினையோ பாதைப்பிரச்சனையோ தலைதூக்குவதில்லை. இதே போல ஞானவான்களிடையே மதுகபுப்பிரச்சினையோ தரீக்காப்பிரச்சனையோ தொழுகையின் பிரச்சினையோ கிடையாது. இந்தப்பட்டினத்தையடையும் பாதைகளில் பிரதானமான, இலகுவான, நேரான, எவ்வித கஷ்டமும் பயங்கரமும் இல்லாத (மெயின்) பாதைதான் கலிமாவை விளங்கியறிந்து செல்லும் பாதை. இப்பாதையில் அநேக விசேடங்கள் தென்படுகின்றன. அவற்றில் ஒன்று என்னவென்றால் கலிமாவை முறைப்படி விளங்கியறிந்து சரியான உறுதியடைந்தால் அதேகணத்தில் பட்டினத்தை அடையலாம் என்பதுதான். மேலும் இப்பாதையில் எவ்வித கட்டாய கடைமைகளுக்கும் உடன்பாடு கிடையாது. அதாவது பலாத்காரமாகக் கடமைகளைக் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிர்ப்பந்தமும் கிடையாது. இப்பாதையில் சென்ற மகான்கள் தங்கள் வாழ்நாளில் சித்தி பெறாமல் போனதும் கிடையாது.

யோகம், ஞானம் (ஹகீகத் - மஹரிபத்) என்பவற்றில் எந்த ஓர் தரீக்காவிலும் மதங்களிலும் பேதம் கிடையாது. ஆனால் இன்று உலகிலுள்ள ஒவ்வோர் மதத்திலும் உண்மைக்குமாறான பல விபரங்கள் வியாக்கியானிகளால் புகுத்தப்பட்டிருப்பதால் பேதமும் விரோதமும் தென்படுகின்றன. ஆனால் அறிவோடும் தெளிந்த மனத்தோடும் கட்சிப்பற்றில்லாமல் ஆராய்ந்து பார்த்தால் சகல மதங்களும் ஒரே நோக்குடையவைதான் என்பது தென்படுகிறது. உதாரணமாக ஓர் முஸ்லீம் தௌஹீது என்ற அறபுவசனத்தால் கூறுகிற அதே விஷயத்தைத்தான் ஓர் இந்து அத்வைதம் என்று கூறுகிறான். ஆனால் விளக்கம் தெரியாத நம்மில்பலர் கட்சி அடிப்படையில் அத்வைதம் இந்துவின் கொள்கை என்றும் தௌஹீது முஸ்லீமின் கொள்கையென்றும் அதுவேறு இதுவேறு என்றும் நம்புகிறோம். இஸ்லாத்தைத் தானே இறைவன் ஏற்றுக்கொண்டிருக்கிறான், இஸ்லாமல்லாத பிறமதங்களிலும் தௌஹீதின் உண்மையை எப்படிப் பெறமுடியும்? என்று நீ சந்தேகமடைய வேண்டியதில்லை. மதங்களின் ஒவ்வோர் பிரிவிலும் கட்டுண்டிருக்கிற மனிதக் கூட்டங்கள் அத்தனையும், அவரவர் பிரிவும் கொள்கையும் செயல்களும் தான் உண்மையானவை, சரியானவை என்றே நம்பியிருக்கிறார்கள். இதைக் குர்ஆனே எமக்கு விளக்கம் தருகிறது. இது எதுபோல் என்றால், ஒரு பையன் வீட்டில் இருந்த தேனில் கொஞ்சத்தை எடுத்துக் கலப்படம் செய்து கொண்டு என்னுடைய தேன் சுத்தமானது, திறமையானது, சுவையானது என்று கூறுகிறான். இவனைப்போலவே இவனுடைய சகோதரனும் சிறிதுதேனை எடுத்துக் கலப்படம் செய்துகொண்டு என்னுடைய தேன்தான் உண்மையானது, சுவையானது என்று கூறுகிறான். ஆனால் ஒரே பாத்திரத்தில் இருந்த தேனையே இருவரும் எடுத்திருக்கிறோம் என்பது இருவருக்குமே தெரியாது. இருவரின் பேச்சையும் தேனையும் தேனிருந்த பாத்திரத்தையும் பார்த்துக்கொண்டிருந்த உனக்குமே தெரியாது. ஆனால் தேனைப்பரிசோதனை செய்யும் திறமையுள்ள ஒருவர் அவ்விருவரின் தேனையும் பரிசோதனை செய்து பார்த்த பிறகு இருவருடைய தேனும் ஒன்றேயென்றும் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு பொருட்களைக் கலப்படம் செய்துள்ளார்கள் என்றும் கண்டறிகிறார். மதங்களின் நிலைமைகளும் இப்படித்தான் தென்படுகின்றன.

இஸ்லாத்தையே இறைவன் பொருந்திக்கொண்டான் என்பது முற்றிலும் உண்மைதான். முதல் மனிதர் ஆதம்(அலை) அவர்களும் அதன் பின் வந்த நபிமார்களும் இஸ்லாத்தில்தான் இருந்தார்கள். ஆதம்(அலை) அவர்கள் கையாண்ட அதே இஸ்லாத்தைத்தான் பின்வந்த நபிமார்கள் றசூல்மார்கள் இறைவனின் ஏவலின்படி சில சீர்திருத்தங்களைச் செய்து கையாண்டிருக்கிறார்கள். ஒரு போது அக்கால சூழ்நிலை அறிவுகளுக்கேற்ற மாற்றங்களோடும் “தௌறாத்” என்ற பெயரோடும் இம்மதம் கையாளப்பட்டிருக்கிறது. அதன் பின் வந்தோர் அக்கால சூழ்நிலை அறிவுகளுக்கேற்றபடி இறைவனின் ஏவலோடு சில சீர்திருத்தங்களைச் செய்து “சபூர்” என்ற பெயரோடு கையாண்டிருக்கிறார்கள். இதன் பின் வந்தவர்கள் அவர்களுடைய நிலைமைகளுக்கேற்ற மாற்றங்களை இறை ஏவலின் படி செய்து “இஞ்ஜீல்” என்ற பெயரோடு கையாண்டிருக்கிறார்கள் . இதன்பின் வந்த றசூல்(ஸல்) அவர்கள் எக்கால சூழ்நிலைகளுக்கும் எவ்விடத்து மக்களுக்கும் ஏற்றபடி இறைஏவலோடு பலசீர்த்தங்களோடும் “புர்கான்’ என்ற பெயரோடும் கையாண்டடார்கள் . “இஸ்லாம்” என்ற பொதுப் பெயரையும் அதைக் கையாளும் மக்களுக்கு “முஸ்லீம்கள்” என்ற பொதுப்பெயரையும் நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் சூட்டியிருக்கிறார்கள். மேலே நாம் கூறிய சீர்திருத்தங்கள் மாற்றங்கள் எல்லாம் அனுஷ்டானங்களிலேயே அல்லாமல் மூலக் கொள்கையில் எவ்வித மாற்றங்களும் சீர்திருத்தங்களும் செய்யப்படவே இல்லை. இவ்வுண்மையை குர்ஆனுடைய 41:43, 21:25 போன்ற ஆயத்துக்கள் எமக்கு விளக்கம் தருகின்றன.

நபி ஆதம்(அலை) அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூலக் கொள்கையை உணர்த்தும் “லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற பரிசுத்த வாக்கியத்தில் எவ்வித மாற்றமும் எப்போதும் ஏற்படவே இல்லை. இந்தப் பரிசுத்தவாக்கியம் உணர்த்தும் உண்மையில் மனிதர்கள் ஊறிவிடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட அனுஷ்டானங்களில் (அமல்களில்)தான் மாற்றங்களும் சீர்திருத்தங்களும் செய்யப்பட்டு வந்திருக்கின்றது. இவ்விஷயத்தைச் சரியாகப்புரிந்து கொள்ளவேண்டும். இந்த மத

அனுஷ்டானங்களைச் சீர்திருத்திச் சென்ற ஒவ்வோர் றசூல்மார்களும் வபாத்தான பிறகு, அதற்கடுத்த நபி, றசூல் தோன்றுவதற்கு முன்னுள்ள, அதாவது நபிமாரில்லாத இடைப்பட்ட காலங்களில் சிற்சில சீர்திருத்தவாதிகள் தோன்றி நல்ல நோக்கோடும், புகழ் பொருளோடும் தீயநோக்கோடும் தத்தம் அறிவுக்கேற்றபடி சிற்சில உபாயங்களைப் புகுத்தி இருக்கிறார்கள். அவர்களைப்பின்பற்றிய இன்னும் சில வியாக்கியானிகள் வெறும் புழுகுப் புராணங்களையெல்லாம் கற்பனையாகப் புகுத்திக் கலப்படம் செய்திருக்கிறார்கள். இது ஆராய்ச்சியாளருக்கு தெளிவாய் தெரிந்த ஓர் விஷயம் தான். இதை உறுதிப்படுத்த உமரேபாருக்(றலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட ஓர் ஹதீஸே போதுமானது.

ஹதீஸ்: ***காலத்தில் சிறந்தது என்னுடைய காலமும் என் காலத்தை அடுத்தவர்களின் காலமும் பிறகு அவர்களை அடுத்தவர்களின் காலமும் பிறகு அவர்களை அடுத்தவர்களின் காலமுமாகும். அதன் பின் பொய் பரவி விடும்.***

(இந்த உண்மையானகாலம் சுமார் 30 வருடங்கள் தான் றசூல்(ஸல்) அவர்களுடைய வபாபத்துக்குப்பின் இருந்திருக்கிறது).

இன்றும் வஹ்மு நீங்காத ஒரு சில மக்களால் புதுப்புதுக்கொள்கைகளும் மதங்களும் தோன்றிக்கொண்டுதான் இருக்கின்றன. இன்றைய உலகில் கிறிஸ்தவர்களில் மட்டும் நூற்றுக்கணக்கான பிரிவுகளும் வேறுபாடுகளும் இருக்கின்றன. அதே போல முஸ்லீம்களிலும் எழுபதுக்கதிகமான பல பிரிவுகள் இருக்கவே செய்கின்றன. இதே போல் ஒவ்வோர் மதமும் எத்தனை எத்தனையோ பிரிவுகளையும் பேதங்களையும் உடையவனாய்த்தான் தென்படுகின்றன. ஆனால் குர்ஆன், ஹதீஸ்களையும் மற்றும் மத அடிப்படை நூல்களையும் சரிவர ஆராய்ந்தால் மனிதகுலம் அத்தனைக்கும் வேண்டிய தௌஹுது என்னும் ஒரேயொரு கொள்கை விளக்கமே என்பதையும் அதை உறுதிப்படுத்த விபரம் தரப்பட்ட வேதங்கள் நாலு என்பதையும் அறிந்து கொள்ளலாம். ஆனால், ஆராய்வில்லாத மக்கள் வேறு வேறு மதங்களாகவும் வேறு வேறு கொள்கைகளாகவும் கணிக்கிறார்கள். ஆனால் இறுதிநாள் வரையிலும் வாழவேண்டிய உலக மக்கள் அத்தனை பேருக்கும் உரிய கொள்கை ஒன்று தான். அதுதான் தௌஹீது (அத்வைதம்). உலக மக்கள் அத்தனை பேருக்கும் உரிய மதமும் இஸ்லாம்தான். இறுதி நாள் வரையுமுள்ள உலக மக்களுக்குரிய நபியும் றசூல்(ஸல்) அவர்களேதான். ஆனால் மக்கள் எதையும் நினைக்கட்டும். நம்பட்டும். சொல்லட்டும். நானறிந்த உண்மை இது தான்.

**றசூல்(ஸல்) அவர்கள் எந்த ஓர் புதிய கொள்கையையும் எந்த ஓர் புது அனுஷ்டானத்தையும் கொண்டு வரவேயில்லை.** எல்லா நபிமார்களும் கையாண்ட எல்லாச் சீர்த்திருத்தங்களையும் அனுஷ்டானங்களையும் ஒன்றுபடுத்தி எக்கால மக்களும் இலகுவாய்க் கையாளக்கூடியதாய் ஒழுங்குபடுத்தி வைத்திருக்கிறார்கள். அவ்வளவுதான் அவர்களால் கையாளப்பட்ட சட்ட திட்டங்களும் இதே அடிப்படையிலுள்ளவைதான். உதாரணமாக பழிக்குபழி வாங்கும்படி அதாவது ஒருவன் உனக்கு அறைந்தால் நீயும் அவனுக்கு அறைந்துகொள் என்று மூஸா(அலை) கூறினார்கள். ஒருவன் உனக்கு அறைந்தால் மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு என்று ஈஸா(அலை) கூறினார்கள். றசூல்(ஸல்) அவர்களிடம் நீங்கள் எதைக் கூறுகிறீர்கள் என்று கேட்க, இரண்டையும் இடத்துக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கும் ஏற்ப கையாளுங்கள் என்றுதான் கூறினார்கள். இதே போல சில நபிமார்கள் ஸுஜுதையும், சில நபிமார்கள் றுகூஉவையும், சில நபிமார்கள் தக்பீர் நிலையையும், சில நபிமார்கள் அத்தஹிய்யாத் இருப்பையும் கையாண்டு இறைவணக்கம் செய்திருக்கிறார்கள். சில நபிமார்கள் ஸுப்ஹையும், வேறுசிலர் லுஹறையும், வேறு சிலர் அஸறையும் வேறு சிலர் மஹ்ரிபையும், வேறு சிலர் இஷாவையும் இறைவணக்கத்துக்குரிய நேரமாகக் கையாண்டிருக்கிறார்கள். **இவற்றையெல்லாம் ஒன்றுபடுத்திதான் றசூல்(ஸல்) அவர்கள் தொழுகையின் அங்கங்களையும் நேரங்களையும் வகுத்துத் தந்திருக்கிறார்கள்.**

வேதங்கள் நாலு என்ற பெரும் பிரிவைக் கொண்டிருந்தாலும் இஸ்லாம் என்ற அடிப்படையில் அவை நாலும் ஒன்றேயாகும். புர்க்கான் இந்த அம்சங்கள் எல்லாவற்றையுமே தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. அதாவது இன்ஸான் என்ற அடிப்படையில் சிசுவும், பையனும், வாலிபனும், வயோதிபனும் ஒன்றேயாகும். சிசுவும் இன்ஸான்தான். பையனும் இன்ஸான்தான். வயோதிபனும் இன்ஸான்தான். ஆனால் சிசுவுக்கும், பையனுக்கும், வயோதிபனுக்கும் நடை, உடை, பாஷை, உணர்வுகளில் அறிவுகளில் வேறுபாடு இருப்பினும் இன்ஸான் என்ற அடிப்படையில் ஒன்றே ஆகும். இந்த நாலும் இன்ஸானின் நான்கு நிலைமைகளாகும். நாலு வேதங்களின் நிலைமைகளும் இதே போலத்தான். ஆகவே எக்காலத்தவனாயினும் எந்த நாட்டை, எந்த சமூகத்தை எந்த மதத்தைச் சேர்ந்தவனேயாயினும் ஓர் நல்லுபதேசத்தைக் கூறியிருப்பானே ஆயின் அது இஸ்லாத்தில் உள்ளதாகவே தான் இருக்கும். றசூல்(ஸல்) அவர்களுடைய இரண்டொரு ஹதீஸ்களை மட்டும் நோட்டமிட்டுப்பார். "சீனாதேசம் சென்றாயினும் கல்வியைக் கல்", "அறிவு ஈமான்தாரிகளின் தவறிப்போன பொருளாய் இருப்பதால் அதை எங்கே கண்டாலும் பெறுக" என்று கூறுகிறார்கள். இதே வசனங்களின் பொழிப்புரையைத்தான் "எப்பொருள் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்று வள்ளுவர் கூறுகிறார். எந்த நாட்டில் எவரிடம் கல்வியிருந்தாலும் அதைக்கண்டடைய வேண்டும், உண்மையை உணர வேண்டும் என்பதுதான் ஹதீஸ்களுடையவும் குறளுடையவும் கருத்தாகும். **ஆனால் தொழுகை இல்லாதவனுடைய பேச்சைக் கேட்கக் கூடாது அது ஹறாம் என்று கூறுகிற கூட்டம் றசூலை ஏற்றுக்கொண்ட கூட்டமா? ஆபூஜஹ்லின் கூட்டமா? என்பதைச் சிந்தனை செய்து தெளிவுபெறு.** இப்போது "உயிர்களிடத்து அன்பு வேணும் தெய்வம் உண்மை என்று தானறிதல் வேணும்" என்று ஓர் இந்து பாடுவதும் "பாசமுல்ல பார்வையிலே கடவுள் வாழ்கிறான் கருணையுள்ள

நெஞ்சினிலே கோயில் கொள்கிறான்" என்று சினிமா பாடகன் பாடுவதும் இஸ்லாத்தை விட்டுக்கடந்தவையா? இஸ்லாத்தில் உள்ளவையா? என்பதை நோட்டமிட்டுப்பார்.

தேனை ஆராய்ந்தபோது இரு பையனும் வைத்திருந்த இருவித தேன்களும் ஒன்றேயென்று தெரியவந்தது போல தௌஹீதின் உண்மையை விளங்கியறிந்த பிறகுதான் உள்ளது ஒரே மதம் தான் என்பதும் அது இஸ்லாமே என்பதும் தென்படும். இந்த இஸ்லாம் என்பது இன்ஸான்களான மனிதர் ஜின்களுக்கு மட்டுமே என்றும் மருட்சியடைய வேண்டாம். சர்வபிரபஞ்சங்களும் அவற்றிலுள்ள சர்வ சிருஷ்டிகளும் அறிந்தாலும் அறியாவிட்டாலும் இஸ்லாத்திலேயேதான் இருந்து கொண்டிருக்கின்றன. இஸ்லாம் என்றால் குர்ஆனே என்றும் மருட்சியடைய வேண்டாம். குர்ஆன் என்பது இஸ்லாத்தை விளக்கித்தரும் விளக்க நூலேயாகும். இஸ்லாத்தின் ஆரம்பமும் முடிவும் தௌஹீதே என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்

وَإِنَّ هَٰذِهِۦٓ أُمَّتُكُمْ أُمَّةً وَٰحِدَةً وَأَنَا۠ رَبُّكُمْ فَٱتَّقُونِ

23:52 *நிச்சயமாக உங்களுடைய மார்க்கம் ஒரே வழிதான். நானே உங்களுடைய இறைவன். ஆகவே நீங்கள் எனக்கே பயப்படுங்கள்.*

مِنَ ٱلَّذِينَ فَرَّقُوا۟ دِينَهُمْ وَكَانُوا۟ شِيَعًا ۖ كُلُّ حِزْبٍۭ بِمَا لَدَيْهِمْ فَرِحُونَ

30:32 *எவர்கள் தங்கள் மார்க்கத்துக்குள் பிரிவினையை உண்டு பண்ணிப் பலபிரிவுகளாய்ப் பிரிந்து விட்டனரோ அவர்கள் ஒவ்வோர் வகுப்பாரும் தங்களிடமுள்ளவைகளைக்கொண்டு சந்தோஷப் படுகின்றனர்.*

قُولُوٓا۟ ءَامَنَّا بِٱللَّهِ وَمَآ أُنزِلَ إِلَيْنَا وَمَآ أُنزِلَ إِلَىٰٓ إِبْرَٰهِۦمَ وَإِسْمَٰعِيلَ
وَإِسْحَٰقَ وَيَعْقُوبَ وَٱلْأَسْبَاطِ وَمَآ أُوتِىَ مُوسَىٰ وَعِيسَىٰ
وَمَآ أُوتِىَ ٱلنَّبِيُّونَ مِن رَّبِّهِمْ لَا نُفَرِّقُ بَيْنَ أَحَدٍ مِّنْهُمْ وَنَحْنُ لَهُۥ
مُسْلِمُونَ

2-136 *நீங்களும் கூறுங்கள். அல்லாஹ்வையும் எங்களுக்கு அருளப்பெற்றதையும் இப்றாஹீம், இஸ்மாயில், இஸ்ஹாக், யாகூப் முதலியவர்களுக்கும் அவர்களுடைய சந்ததிகளுக்கும் அருளப் பெற்ற யாவற்றையும் மூஸாவுக்குக் கொடுக்கப்பட்டிருந்தவற்றையும் நாங்கள் விசுவாசிக்கின்றோம். அவர்களில் இருந்து எவரையும் நாம் பிரித்து விடமாட்டோம். அவனுக்கே நாங்கள் முற்றிலும் வழிப்படுவோம்.*

وَٱتَّبَعْتُ مِلَّةَ ءَابَآءِىٓ إِبْرَٰهِيمَ وَإِسْحَٰقَ وَيَعْقُوبَ ۚ مَا كَانَ لَنَآ أَن نُّشْرِكَ
بِٱللَّهِ مِن شَىْءٍ ۚ ذَٰلِكَ مِن فَضْلِ ٱللَّهِ عَلَيْنَا وَعَلَى ٱلنَّاسِ وَلَٰكِنَّ أَكْثَرَ ٱلنَّاسِ
لَا يَشْكُرُونَ

12:38 *அன்றி என்னுடைய மூதாதைகளான இப்றாஹீம், இஸ்ஹாக், யாகூப் ஆகிய இவர்களின் மார்க்கத்தையே நான் பின்பற்றியிருக்கிறேன். ஆதலால் அல்லாஹ்வுக்கு யாதொன்றையும் நாங்கள் இணையாக்குவது எங்களுக்குத் தகுமானதல்ல. இக்கொள்கை எங்கள் மீது அல்லாஹ்வின் ஓர் அருளாகும். எனினும் மனிதர்களில் பெரும்பாலார் நன்றி செலுத்துவதில்லை.*

இதேபோல் 10:37 போன்ற ஆயத்துக்களையும் ஆராய்ந்து தெளிவு பெறவும். றசூல்(ஸல்) அவர்களுக்குப்பின் இறுதிநாள் வரையிலும் வரவேண்டிய எல்லா நாட்டு எல்லா இனமக்களும் றசூல்(ஸல்) அவர்களுடைய உம்மத்துக்களே ஆகும். அவர்கள் தங்களை எம்மதத்தின் பெயரைக் கொண்டழைப்பினும் சரிதான். இதே போல உலகிலுள்ள பாஷைகள், சங்கீதம், மற்போர் மற்றும் கலைகள் யாவும் ஒரே அடிப்படையில் தௌஹீதை நிலைநாட்டும் ஆதாரங்களாக அமைந்தவைதான். இக்கலைகள் நாட்டுக்கு நாடு காலத்துக்குக்காலம் உருவத்திலும் சட்ட அமைப்புக்களிலும் மாறுபடினும் அடிப்படை ஒன்றுதான். நோக்கமும் ஒன்றுதான். இவை நோக்கத்தை மீறும் போது பிழையாயும் நோக்கத்தை உறுதிப்படுத்தும் போது சரியாயும் கணிக்கப்படுகின்றன. **இதே போல தௌஹீதை மீறிய எந்தக்கொள்கையும் எந்த அபிப்பிராயமும் எந்த மதத்தில் இடம் பெற்றாலும் அது பிழையானதாயும் மனித யூகத்தினால் நுழைக்கப்பட்டதாகவுமே இருக்கும்.** தௌஹீதை ஒப்புக்கொண்டு அதை உறுதிப்படுத்தும் அபிப்பிராயங்கள் உண்மையானவையாயும் இயற்கையாய் உள்ளவையாயும்தான் இருக்கும். இவ்விதமான தௌஹீதுக்கு மாறுபடாத, மனிதமுன்னேற்றத்துக்கு உதவியான எந்த ஓர் நல்ல அபிப்பிராயத்தை எந்த மதம், எந்த மனிதன் கூறினாலும் அது வரவேற்கப்பட வேண்டியதுதான். அது இஸ்லாத்திலுள்ளதாகவே இருக்கும். ஆனால் கூறுபவன் எம்முடைய பழக்கவழக்கங்களுக்கு மாறுபட்டவனாய் இருப்பினும் நாம் அதைப்பொருட்படுத்த வேண்டியஅவசியமே இல்லை. எமக்கு வேண்டியது உண்மைதான்.

காலாகாலம் தோன்றிய நபிமார்களும் அவர்களைப் பின்பற்றிய நல்லடியார்களும் எம்மைப்போன்ற மனிதர்களேதான். இவர்கள் எல்லோரும் ஒரே இனமான பழக்கவழக்கம் கலாச்சாரம் உடை உணவுகளை உடையவர்களே அல்ல. இவர்களில் அநேகரை சாதாரண மக்கள் மட்டுமல்ல நீயும் நானும் கூடத்தான் நம்பமாட்டோம். அவர்கள் யாவரும் ஒரே கொள்கை உடையவர்கள்தான் என்பதை நாம் நம்பாமல் விடுவதற்குத் திரையாய் அமைவது அவர்களுடைய வெளிக்கோலங்களே ஆகும். உதாரணமாக அமைவது அவர்களுடைய வெளிக்கோலங்களே ஆகும். உதாரணமாக “கத்னா” செய்தல் இப்றாஹீம்(அலை) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஓர் செயலாகும். இப்போது நீயும் நானும் இதே பழக்கவழக்கத்தில் ஊறியிருப்பதால் முந்திய நபிமார்களில் பலர் கத்தனாச் செய்யப்படாதவர்கள் என்று கூறும் போது நாம் அதை நம்பமறுக்கிறோம். **ஆகவே நல்லடியார்கள், நல்லறிவாளர்களின் சொல் செயல் கருத்துக்களை நாமறிந்த அடிப்படையிலேயே குறுகிய கண்ணோட்டத்தோடு நாம் கணிக்கவே கூடாது. நாம் கற்றும் கேட்டும் பழகியும் இருப்பதுதான் உண்மை. மற்றெல்லாம் பிழையென்ற திடீர் முடிவுக்கும் நாம் வரவேகூடாது.** அப்படித் திடீர்முடிவுக்கு வருதல் உண்மையை அறியும் வாய்ப்பை இழப்பதாகவே முடியும்.

يُؤْتِي ٱلْحِكْمَةَ مَن يَشَآءُ ۚ وَمَن يُؤْتَ ٱلْحِكْمَةَ فَقَدْ أُوتِيَ خَيْرًا كَثِيرًا ۗ وَمَا
يَذَّكَّرُ إِلَّآ أُو۟لُوا۟ ٱلْأَلْبَٰبِ

2-269 *தான் விரும்பியவர்களுக்கே ஞானக்கல்வியைக் கொடுக்கிறான். ஆதலால் எவர் ஞானக்கல்வி கொடுக்கப் பெறுகிறாரோ அவர் நிச்சயமாக அநேக நன்மைகளைப் பெற்றுக் கொண்டார். ஆயினும் அறிவாளிகளைத் தவிர உணர்ச்சி பெற மாட்டார்கள்.*

إِنَّ ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَٱلَّذِينَ هَادُوا۟ وَٱلنَّصَٰرَىٰ وَٱلصَّٰبِـِٔينَ مَنْ
ءَامَنَ بِٱللَّهِ وَٱلْيَوْمِ ٱلْءَاخِرِ وَعَمِلَ صَٰلِحًا فَلَهُمْ أَجْرُهُمْ عِندَ رَبِّهِمْ
وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ

2-62 *மூமீன்களாயினும், யூதர்களாயினும், கிறீஸ்தவர்களாயினும், ஸாபியீன்களாயினும் எவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் உண்மையாகவே விசுவாசித்து நற்கருமங்களைச் செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய கூலி அவர்களுடைய இறைவனிடத்தில் நிச்சயமாக உண்டு. மேலும் அவர்களுக்கு எவ்வித பயமும் இல்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.*

(இந்த ஆயத்தை ஆழமாய் நோட்டமிட வேண்டும்)

எந்த நபியுடையவும் நல்லடியாருடையவும் நெற்றியில் இவர் நபிதான், இவர் நல்லடியார்தான் என்று இறைவன் பொறித்து அனுப்புவது இல்லை அனுப்பியதும் இல்லை. அல்லது ஏதோ ஓர் கடதாசித் துண்டில் நற்சான்றிதழ் பத்திரமும் கொடுத்தனுப்புவதுமில்லை. ஆனால் அந்த இறைவன் பகிரங்கமான நற்சான்றிதழ் கொடுத்துத்தான் அனுப்புகிறான். நாம் எம்முடைய அறிவுக் கண்ணில் வஹ்மு என்ற திரையைப் போட்டுக்கொண்டிருப்பதால் அந்தச் சான்றிதழை நாம் காண்பதில்லை. திரை நங்கிய கண்கள் எம்மிடமிருந்தால் நாம் அதைக் காணமுடியும்.

وَمِنْهُم مَّن يَسْتَمِعُونَ إِلَيْكَ أَفَأَنتَ تُسْمِعُ ٱلصُّمَّ وَلَوْ كَانُوا۟ لَا يَعْقِلُونَ

10-42 *அவர்களில் உம்முடைய வார்த்தையைக் கேட்போரும் இருக்கின்றனர். (அதனால் அவர்கள் யாவரும் நீர் கூறுவதைப்புரிந்து கொண்டார்கள் என்று நம்புகிறீரா!) ஒன்றையுமே அறிந்து கொள்ள முடியாத முழுச் செவிடர்களைக் கேட்கும் படி செய்ய உம்மால் முடியுமா?*

وَمِنْهُم مَّن يَنظُرُ إِلَيْكَ أَفَأَنتَ تَهْدِى ٱلْعُمْىَ وَلَوْ كَانُوا۟ لَا يُبْصِرُونَ

10:43 *அவர்களில் உம்மை பார்ப்போரும் பலர் இருக்கின்றனர். (அவர்கள் எல்லோருமே உம்மைப்பார்த்து அறிந்துகொண்டார்களென்று நம்பிவிட்டீரோ?) யாதொன்றையும் பார்க்க முடியாத பிறவிக்குருடர்களைப் பார்க்கும்படி செய்ய உம்மால் முடியுமா?*

நல்லடியார்களின் சொல், செயல், நோக்கங்களின் உண்மையை எல்லோராலும் உணர முடியாமல் இருப்பதனால்தான் **செயலை நோக்காதே சொல்லை நோக்கு என்று கூறுப்படுகிறது.** இந்த உண்மையை மக்களுக்கு உணர்த்துவதற்காகத்தான் நபி மூஸா(அலை) அவர்களுக்கும் ஹிலுறு (அலை) அவர்களுக்குமிடையில் நடந்த செயல்களையும் விவாதத்தையும் இறைவன் குர்ஆனில் தெளிவுபடுத்துகிறான். முன்னூற்றிப்பதின்மூன்று முர்ஸலீன்களிடையே தெரிவு செய்யப்பட்ட ஆறு உலுல் அஸ்மிகளில் நபி மூஸா(அலை) அவர்கள் ஒருவராய் இருந்தும் கூட ஹிலுறு(அலை) அவர்கள் அறிந்திருந்த உண்மைகளை அறியாதவர்களாகவும் எதிர்ப்பவர்களாகவும் ஆனார்கள். இவ்விஷயத்தைக் குர்ஆனில் ஸூறத்துல் கஹ்புவில் இறைவன் விபரிக்கிறான்.

ஹிலுறு(அலை) அவர்கள் நபியா? இல்லையா? என்பதில்கூட அறிஞர்களிடையே விவாதமுண்டு. அப்படியிருந்தும் ஹிலுறு(அலை) அவர்களை மூஸா(அலை)அவர்கள் ஏன் எதிர்த்தார்கள் என்றால் அவர்களுக்குத் தெரிந்த சட்டங்கள் பழக்கவழக்கங்களை அடிப்படையாக வைத்து ஹிலுறு(அலை) அவர்களைக் கணித்தமையால்தான். இந்தச் செயல்கள் றசூலாக இருந்த மூஸா(அலை) அவர்களுடைய அறிவைக்கடந்தவையாய் இருந்தன. இவர்களுடைய சட்டங்களை மீறியவையாகவே தென்பட்டன. ஆனால் ஹிலு(அலை) அவர்கள் ஒவ்வோர் செயலுக்கும் விளக்கம் கொடுத்த பிறகு தான் மூஸா(அலை) அத்தனையையும் முழுமனதாக ஏற்றுக்கொண்டார்கள். இதில் உயர்வு தாழ்வு கணிக்க வேண்டிய அவசியம் எமக்கில்லை. இதே போல சாதாரண மனிதன் அறிந்துள்ள சட்ட திட்டங்களையோ, பழக்க வழக்கங்களையோ, விளக்கமில்லாத சாதாரண அறிவையோ அடிப்படையாகக்கொண்டு இறை நேசர்களின் சொல், செயல் கருத்துக்களை நாம் தவறாகத் தீர்ப்புக்கட்டுவது மனித குலத்துக்குச் செய்யும் துரோகமும் படுபாதகமும் ஆகும். ஆகவே பட்டம் பதவிகளுக்கோ வெளிக்கோலங்களுக்கோ அடிமையாகாமல், உண்மையைக் கண்டறிய வேண்டுமானால் பொறுமையோடு விளங்கித்தான் அறிய வேண்டும். எதை எங்கே வைப்பது என்பது இறைவனுக்கேயன்றி எவருக்குமே தெரியாது.

وَمِمَّنْ خَلَقْنَآ أُمَّةٌ يَهْدُونَ بِٱلْحَقِّ وَبِهِۦ يَعْدِلُونَ

7-181 *நாம் சிருஷ்டித்தவர்களில் சிலருண்டு. அவர்கள் சத்திய வழியை அறிவித்து அதைக்கொண்டே நீதியும் செய்கின்றனர்.*

وَفَوْقَ كُلِّ ذِى عِلْمٍ عَلِيمٌ

12-76 *ஒவ்வோர் கல்விமானுக்கும் மேலான ஓர் கல்விமான் இருந்து கொண்டேயிருக்கிறான்.*

إِنَّ هَٰذِهِۦ تَذْكِرَةٌ ۖ فَمَن شَآءَ ٱتَّخَذَ إِلَىٰ رَبِّهِۦ سَبِيلًا

76-29 *நிச்சயமாக இது (குர்ஆன்) ஓர் நல்லுபதேசமாகும். விரும்பியவன் தன் இறைவன்பால் செல்லக்கூடிய (நேரான) வழியைப் பலமாகப் பிடித்துக் கொள்ளவும்.*

# 018 அகில உலக உலமாக்களுக்கும் ஓர் அறிவுரை

**என் அன்புச் சகோதரர்களான உலமாக்களே!**

இந்த நூலில் இதுவரையிலும் பிரசங்கபாணியில் நான் கூறிவந்துள்ள விஷயங்களைத் தாங்கள் கவனத்தோடும் பொறுமையோடும் வாசித்திருப்பீர்கள் என்றே நான் நம்புகிறேன் . என்னை விட உலமாக்களாகிய நீங்கள் நூற்கல்வியில் எவ்வளவோ உயர் பதிவியில் இருக்கலாம் என்பதை நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். ஆயினும் தௌஹீதுடைய விஷயத்தில் இறைவன் உதவியால் நானும் ஓரளவு அனுபவமுடையவன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே நான் பல வருடங்கள் மிகக் மிகக் கடினமான கஷ்டநஷ்டங்களையடைந்து இறைவனுடைய நல்லுதவியால் ஓரளவு அனுபவத்தை அடைந்த பின்பும் என்னுடைய மனாமிலும் றூயாக்காட்சியிலும் பலமுறை இந்நூலை எழுதுவது எனது கடமையென்பதைச் சக்குச் சந்தேகமில்லாமல் அறிந்த பிறகுதான் இந்த நூலை நான் எழுதியிருக்கிறேன். இதில் என்னுடைய வசன நடைகள் சில சந்தர்ப்பங்களில் உங்களில் ஒரு சிலருடைய உள்ளங்களைத்தாக்கியும் இருக்கலாம். ஒரு சிலருடைய உள்ளங்களுக்கு உற்சாகம் ஊட்டியுமிருக்கலாம். நான் கூறியுள்ள விபரங்கள் உங்களில் ஒரு சிலருக்குப் பிழையாகவும் வேறுசிலருக்குச் சரியாகவும் தென்பட்டிருக்கலாம். ஆகவே கண்ணியமுள்ள உலமாக்களென்ற வகையில், நான் குற்றவாளிதான் என்று நீங்கள் திடீர் முடிவு கட்டியிருந்தாலும்கூட முதலில் வசன நடைகளில் தவறிருந்தால் என்னை மன்னித்துவிடுங்கள். நான் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் முதலாம் ஆதாரங்களோடு கூறியுள்ள விஷயங்களை நினைவில் இருத்துங்கள். அதன்பின் நான் கூறிய விபரங்களை, எவ்விதமான குரோத மனப்பான்மையுமில்லாமல், வெற்றி தோல்வி கணிக்கும் நோக்கமும் இல்லாமல் பரந்தமனப்பான்மையோடு, பலமுறை பலவாறாகக் கலந்தாலோசித்து, அதன் பின் என்னை வழிதவறியவனாக, அல்லது நேர் வழிபெற்றவனாகத் தீர்ப்புக்கட்டுங்கள். உலமாக்களாகிய நீங்கள் நபிமார்களின் வாரிசுகளாய், இஸ்லாத்தின்,ஈமானின் பாதுகாவலர்களாய் முஸ்லீம் மக்களணைவருக்குமே வழிகாட்டுபவர்களாய் இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். குர்ஆன், ஹதீஸ்களுக்கோ, வலிமார்களின் கூற்றுக்களுக்கோ, பகுத்தறிவுக்கோ மாற்றமாய் இருந்தால் இந்த நூலை இன்னும் பலமுறை ஆராய்தல் செய்யுங்கள். நான் தவறான பாதைக்கே வழிகாட்டினேன் என்று நீங்கள் தீர்ப்புக் கட்டினால் உங்களுடைய தீர்ப்புக்குரிய சரியான ஆதாரங்களை உலகமக்கள் அறியக்கூடியதாய் நிரூபித்துக்காட்டுங்கள். உங்களுடைய ஆதாரங்கள் குர்ஆன் ஹதீஸ்களின்படியும் அறிவின்படியும் நல்லடியார்களான வலிமார்களின் ஏகோபித்த அபிப்பிராயப்படியும் அமைந்தால் என்னை எப்படி வேண்டுமானாலும் தண்டியுங்கள். என்னை நாட்டி வைத்துக் கல்லெறிந்து கொல்வதே சரியென்றாலும் நான் அதற்கு மனப்பூர்வமாகவே உடன்படுகிறேன். எவ்விதமான தவறான பெயரை வேண்டுமானாலும் சூட்டுங்கள். ஆனால் ஆராய்தல் செய்வதில் குறைவு செய்யாதீர்கள்.

அதே போல நான் கூறியுள்ள விஷயங்கள் சரியானவை, உண்மையானவைதான் என நீங்கள் கண்டால் முன்சென்று போன மக்களின் நிலமை எப்படியிருப்பினும் இனிமேல் வரக்கூடிய எமது பிற்சந்ததியினரான எம் குழந்தைகளுக்காவது உண்மையை உணர்த்தி அவர்களை உண்மையான முஸ்லீம்களாக உண்மையான மூமீன்களாக மாற்றியமைக்கக்கூடிய உபாயங்கள் என்னென்ன உண்டோ அவற்றையெல்லாம் கையாள முன் வாருங்கள். நாம் வாழ்வது பகுத்தறிவு தெளிவடைந்த விஞ்ஞான காலம் என்பதை உணருங்கள். மூடத்தனமான பின்பற்றலையும் கல்வித்திட்டங்களையும் நீக்கி விட்டு உண்மையின் பாதையில் எல்லோரும் செல்லக்கூடிய வகையில்கல்வித்திட்டங்ளை மாற்றியமையுங்கள். ஒவ்வோர் வணக்கமும் எதற்காக! ஆதனால் வெற்றியடைவது எப்படி என்ற விபரங்களை எல்லா மக்களும் உணர்ந்து செயல்படக்கூடியதாக அறிவுக்கேற்றபடி சரியான விளக்கங்களை, விபரங்களை மக்களுக்கு விளக்கி வையுங்கள். ஏனென்றால் எதிர்காலச் சந்ததியினர் உலமாக்களாகிய உங்களிடம் அமானிதமாகத் தரப்பட்டவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் ஒவ்வோர் கிராமத்திலுமுள்ள மூடப்பழக்க வழக்கங்களை முற்றாய் ஓழித்துக்கட்டித் தீனுல் இஸ்லாத்தை உண்மையின் அடிப்படையில் நிலைநிறுத்தி வையுங்கள். இது உங்களுடைய கடமை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

றசூல்(ஸல்) அவர்களும் அவர்களுடைய ஷஹாபாக்களும் எவ்வளவோ கஸ்ட நஷ்டங்களை அடைந்தே இஸ்லாத்தின் கொடியை நிலைநாட்டினார்கள் என்பதை நீங்கள் அறிவீர்களே! இருள் சூழ்ந்த உலகுக்கு ஒளிவிளக்கேற்றிய அதே இஸ்லாம் இன்று வெளி வேஷத்தில், உயிரற்றதாய்க் காட்சியளிப்பதை நீங்கள் காணவில்லையா? விலைமதிக்க முடியாத எம் சமூகப் பச்சிளம் வாலிபர்கள் அறியாமை காரணமாக அல்லோலகல்லோலப்படுவதை நீங்கள் அவதானிக்கவில்லையா? வாயிலில்

தௌஹீதும் வீட்டினுள்ளே ஷிர்க்கும் இருக்கும் போது நாவில் உண்மையும் உள்ளத்தில் பொய்யும் இருக்கும் போது மனிதன் எவ்வித நன்மையைத்தான் பெறமுடியும்? தீனுக்காக வழி காட்டுபவர்கள் இஸ்லாத்தை நிலை நிறுத்த உரிமையாளர்கள், சமூக மக்ளைக் கட்டுப்படுத்தும் சக்தியுடையவர்கள் கண்ணியமுள்ள உலமாக்களாகிய நீங்களேதான் என்றால் உண்மை மூடிமறைந்து இஸ்லாம் என்ற போர்வையில் இஸ்லாத்துக்கு நேர் முரணான செயல்கள் கொள்கைகள் சமூகத்தில் இடம் பெறும் வரையில் நீங்கள் ஏன் மவுனிகளாக இருக்க வேண்டும்?

**அன்பிற்குரிய உலமாக்களே!**

இன்றைய உலகில், இஸ்லாம் என்ற போர்வையிலுள்ள எமது சமூக மக்கள் அறிவு விளக்கமில்லாதவர்களாக, அறிவு விளக்கம் தேவைப்படுபவர்களாக, நடைப்பிணங்களாக, வீணான மூடத்தனமான பொய்ப்புரட்டு வியாக்கியானங்களை நம்பியவர்களாக, அந்நிய சமூகத்தினரின் நடையுடை பாவனை கொள்கைகளைக் கைக்கொண்டவர்களாக வாழ்ந்து கொண்டிருப்பதை நீங்கள் கண்ணாரக் கண்டுகொண்டும், கண்மூடித்தனம், அறியாமை, மறதியுடையோராய் மவுனிகளாய் உங்கள் கடமைகளை நீங்கள் மறந்தவர்களாய் வாழவேண்டிய அவசியம்தான் என்ன? நீங்கள் விளிப்புடையவர்களாக அகப்பார்வையுடையவர்களாக மக்களுக்கு உண்மைகளை விளக்கம் தருபவர்களாக ஏன் மாற்றமடையக் கூடாது?

அத்திவாரம் இல்லாத கட்டிடம் நிலை பெறாது என்பதை நீங்கள் அறிவீர்களே! உண்மையான தௌஹீதில் நிலைபெறுவதே அமல்களின் (வணக்கங்களின்) உண்மையான நோக்கம் என்பதை நீங்கள் அறிவீர்கள்தானே! அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கமில்லாத எந்த வணக்கத்தினாலும் நடை உடை பாவனைகளாலும் மனிதன் ஈடேற்றம் பெறமுடியாது என்பதை நீங்கள் அறிந்துதானே இருக்கிறீர்கள். அப்படியிருந்தும் அல்லாஹ்வை மறந்தவர்களாய், அவனுடைய அருட்கொடைகளை மறந்தவர்களாய், சிருஷ்டிகளான உலகமக்களையே ஞாபகத்தில் கொண்டவர்களாய் உலக மக்களின் மதிப்பு, கண்ணியம் முதலியவற்றையே கருத்தில்கொண்டவர்களாய் நீங்கள் ஏன் வாழ வேண்டும்? இன்னும் இன்னும் உண்மைகளை நீங்கள் ஏன் மூடி மறைக்க வேண்டும்? சர்வ சக்தனான அல்லாஹ்வுக்கேயன்றி சிருஷ்டிகளான மக்களுக்கு நீங்கள் ஏன் அச்சமடைய வேண்டும்? முற்றிலும் தூயவனான இறைவனுடைய குர்ஆனின் உண்மைகளின் விஷயத்தில் காத்தமுன் நபியீன் றசூல்(ஸல்) அவர்களால் நிலைநிறுத்தப்பட்ட தௌஹீது விஷயத்தில், உண்மையை உணர்ந்திருந்தும் அவற்றை மறுப்பவர்களாய் அல்லது அவற்றை மக்களுக்கு விளக்க முடியாதவர்களாய் நீங்கள் ஏன் மாற வேண்டும்?

உண்மையான தௌஹீதை மறுப்பதாய் அல்லது அதை மூடிமறைப்பதாய் அமைந்துள்ள (இஸ்லாமிய மதுரஸாக்களின்) கல்வித்திட்டங்களை உடைந்தெறிந்து, உண்மையை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வோர் குழந்தையும் உண்மையின் அடிப்படையிலேயே வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக்கூடியதாய், வாழக்கூடியதாய், உண்மை மூமீன்களாய் வாழக்கூடியதாய் அதற்கேற்றவகையில் கல்வித்திட்டங்களை உங்களால் ஏன் மாற்றியமைக்கக் கூடாது? மூடத்தனமான ஆதாரமற்ற பழக்கவழக்கங்களை, அறிவூட்டல்களை ஆதாரமற்ற பின்பற்றல்களை விட்டொழிக்கக்கூடிய வழிவகைகளை மேற்கொள்ள உலமாக்களாகிய நீங்கள் ஏன் தயங்க வேண்டும்? தவறான பின்பற்றல்களை விட்டுவிடக்கூடாது என்று நீங்கள் கற்றிருக்கிறீர்களா? தவறான பின்பற்றல்களை விட்டொழிப்பது நியாயம்தான் எனக்கண்டால் இன்னும் நீங்கள் தாமதிக்காதீர்கள், அழிவுக்கிடங்கில் வீழ்ந்து கொண்டிருக்கின்ற அறிவிலி மக்களான சமூகமக்களைக் காப்பாற்றி அவர்களைக் கரைசேர்க்க ஒன்று சேருங்கள், கௌரவ ஆசையை உதறித்தள்ளுங்கள். உங்கள் அறிவுக்கண்களைத் துடைத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்காக மக்களுக்கு உண்மையான அறிவைப்புகட்டவும் சீர்திருத்தங்களைச் செய்யவும் முன்வாருங்கள்.

அப்படியில்லாமல் நாங்கள் முஆமலாத்துடைய (பிக்ஹுடைய) இல்மோடுமட்டும் நின்று கொள்வதே போதுமானது என்று நம்பினால் அப்படியே நின்று கொள்ளுங்கள். ஆனால் முகாஸபத்துடைய இல்மில் தலையிடவோ அது தவறானதென்று உண்மைக்குமாறான பிரச்சாரங்களைச் செய்து மேலும் மக்களை இருளில் தள்ளிவிடவோ முற்படாதீர்கள். ஏனென்றால் கரைசேர்க்கக்கூடிய ஒருவரை மனிதன் காணாதவரையில் அம்மனிதனால் கரைசேர முடியாது என்பது உண்மை, சகோதரர்களே! நீங்கள் அறியாமையில் வீண்பிடிவாதத்தில் கௌரவத்திமிரில் பற்றுடையவர்களாய் (அசுத்தம் நிறைந்தவர்களாய்) இருக்கும் நிலைமையில் ஓர் மூமீனுடைய அறிவை ஸித்தீக்குடைய இல்மை, தடுக்க, மறுக்க முற்படாதீர்கள், ஏனென்றால் அல்லாஹ்வுடைய ஜோதியின் உதவிகொண்டு அந்த மூமீன் (ஸித்தீக்) மக்களை மூடியுள்ள முனாபிக்குத்தனம்போன்ற மற்றும் அசூசிகளையும் கண்டுகொண்டே இருக்கிறார். ஆனால் அவர் மிகக்கடினமான பயிற்சிகளில் ஈடுபாடு கொண்ட பொறுமை, அடக்கம், போன்ற பரிவட்டங்களைப் போர்த்திக்கொண்டிருப்பதால் (ஸத்தார்) மறைப்பவன் என்ற திருநாமத்தின்கீழ் இயங்குகிறார். ஆகவே ஓர்மூமீனால் கூறப்படுகிற (ஓர் ஸித்திக்கால் விபரம் தரப்படுகிற) ஹக்கான விளக்கங்களை மனமுரண்டாய் மறுக்க முற்படாதீர்கள்.

ஓர் நோய்க்குரிய மருந்தை, அதன் தன்மையை, குணங்களை அறியாமல் நாம் அருந்துவதைவிட, உண்மையான ஓர் வைத்தியன் தரும்சரியான விளக்கத்துடன் அம்மருந்தை நாம் அருந்துவது ஏற்றமான செயலல்லவா? அறிஞர்களான நபிமார்களின் வாரிசுகளான உலமாக்களாகிய உங்களுடைய இருதயங்கள் ஏன் கல்லாக மாற்றமடையவேண்டும்? பொறுப்பை உணரும் தன்மை உங்களை விட்டு அகலவே கூடாது. மக்களால் அலட்சியம் செய்யப்பட்டு வருகிற உண்மையான தௌஹீதில்தான் உண்மையான பாதுகாப்பும் கிருபாகடாட்சமும் தங்கியிருக்கின்றன என்பதை உணருங்கள். உண்மைக்குமாறாய் (குர்ஆன், ஹதீஸ், பகுத்தறிவுக்கு மாறாய்) நீங்கள்

செயல்படும்போது கண்ணீர் வடிப்பவர்களாக, அல்லாஹ்வின் கருணைக்கதவு அடைக்கப்பட்டவர்களாக, இம்மையிலும் மறுமையிலும் தண்டிக்கப்படுபவர்களாக, மாறுவீர்கள் என்பதை உணருங்கள். சிருஷ்டித்துப் போஷிப்போனுடைய பாதுகாப்பை நீங்கள் தேடிக்கொள்வது உங்களுக்கு அவசியமல்லவா? ஆகவே உலக மக்களுக்கு அஞ்சாமல் சர்வசக்தனான அல்லாஹ்வுக்கே அஞ்சுங்கள், ஏனென்றால் அவ்வல்லோனின் பற்றுதல் மிகமிக வலிமையானது. ஆகவே நீங்கள் உண்மையான உலமாக்களாயிருந்தால் அவ்விறைவனின் வசனங்களுக்கு மாறுசெய்யும் நோக்கம் ஓர் அணுவளவேனும் உங்கள் உள்ளத்தில் இடம்பெறவே கூடாது.

சகோதரர்களே! உங்கள் நிலைமைகளையிட்டுக் கவலை கொள்ளுங்கள். உண்மையின் ஆராய்தல் இருதயத்தின் இயற்கை சுபாவமாகும். உங்கள் விஷயத்தில் நலனைக் கண்டால் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். தீமையைக் கண்டால் அதிலிருந்து மீட்சிபெற முயலுங்கள். இவ்விதமான உண்மையான கவலையைக் கொண்டுதான் உங்கள் மார்க்கத்துக்கு உங்களால் உயிரூட்ட முடியும். அப்படியானால் ஷைத்தானுடைய தீவினைகள் சமூகத்தைவிட்டும் தானாகவே படிப்படியாய் நீங்கும் என்பது நிச்சயம். ஆகையால்தான் ஒரு மணி நேரத்தில் உண்மையை ஆராய்தல் செய்யும் கவலை இரவு முழுமையும் செய்யப்படும் வணக்கத்தை விடச்சிறந்து என்று விபரம் தரப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். றசூல்(ஸல்) அவர்களுடைய உம்மத்துக்களான கனம் தங்கிய உலமாக்களே! உங்களுக்கு முன்னிருந்த நபிமார்களின் உலமாக்களுக்குச் சுமத்தப்பட்டிருந்த கடமைகளைவிட மிக இலகுவான கடமைகளையே இறைவன் உங்கள் மீது சுமத்தியுள்ளான் என்பதை நீங்கள் முற்றாய் அறிவீர்கள். அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். உலகில் தோன்றிய உம்மத்துக்கள் சகலரிலும் றசூல்(ஸல்) அவர்களுடைய உம்மத்துக்களே இறுதியானவர்கள் என்பதும் இறுதிநாளில் நம் கூட்டமே எல்லோரிலும் முதன்மையானவர்கள் என்பதும் நம் எல்லோருக்கும் தெரிந்த ஓர் விஷயம்தான். ஆகவே இவ்உம்மத்தைச் சேர்ந்த உலமாக்களான நீங்கள் உண்மையாளர்களாய், உண்மையை உறுதிப்படுத்துபவர்களாய் இருந்தால் உங்களை ஒப்பாரும் மிக்காரும் இல்லவே இல்லை என்பது உண்மை. நீங்களே மற்றும் பிரஜைகளுக்கு அரசர்களாவீர்கள் என்பது உண்மை.

ஆயினும் உங்களுடைய மனம் போன போக்கிலும் மனோ இச்சைகளிலும் ஆராய்வில்லாத நூலறிவிலும் கட்டுண்டிருக்கும் வரை நீங்கள் முதலிடம் பெறுவது முடியாத ஓர் காரியமேயாகும். சிருஷ்டிகளைப்பற்றிய மயக்கத்தில் வஹ்மினால், பகட்டும், கபடமும் கொண்டு, அச்சிருஷ்டிகளின் ஆதரவை, புகழை, பொருளை, விரும்பி அவற்றைப்பற்றிப் பிடித்துக் கொண்டு நின்றால் ஆத்ம ஆரோக்கியமான சாந்தியை அடைய முடியாது என்பதை நீங்கள் உணரத்தான் வேண்டும். உலகத்தை, உலகப் பொருளை, புகழை மட்டும் உங்களுடைய இலட்சியமாகக் கொண்டிருக்கும் வரையிலும், அல்லாஹ்வையன்றி நீங்கள் வேறு எதையும் பொருட்படுத்துவதாய் இருக்கும் வரையிலும் உங்கள் நிலைமை சீர்பெறுவதோ உங்களால் உலக மக்கள் சீர்பெறுவதோ முடியாத ஓர் காரியமே என்பதையும் நீங்கள் உணர வேண்டும். அல்லாஹ்வின் சன்னிதானத்துக்கு நீங்கள் அருகதையுடையவர்களாய் இருந்தால், உங்களுடைய சொற்கள், செயல்கள் கலப்புள்ள இவட்சியங்களைப்பற்றி அல்லாஹ்விடத்தில் அல்லாஹ்வின் முன் நிலையில் மீட்சியும் மன்னிப்பும் தேடுங்கள்.

அல்லாஹ்வுக்குரிய அடியார்களான உலமாக்களின் சொல் செயல் கருத்துக்களில் சிருஷ்டிகளின் முகஸ்த்துதி புகழாசை பொருளாசை போன்ற அழுக்குகள் இருப்பதில்லை. அப்படியிருப்பதும் பொருந்தாது. இந்த நிலையிலுள்ள உலமாக்களே மதிப்பிற்குரிய பாரவான்கள், றசூலின் வாரிசுகள் என்பதை நீங்கள் அறிந்துதானே இருக்கீறீர்கள். இவ்வகையினர்தான் பரிபக்குவமும் ஜெயமும் பெறுவார்கள், இவ்வகையினர்தான் நிச்சயமான நம்பிக்கையும் கலப்பற்ற தௌஹீதும் (ஏகத்துவமும்) இறைநேசமும் பெற்ற நல்லடியார்கள். இறைவனால் ஏற்படுத்தப்படும் சோதனைகளில் பொறுமையும் இன்பசுகங்களில் நன்றியறிதலும் உடையவர்களாய், அல்லாஹ்வைத் தங்கள் நாவினாலும் உள்ளத்தினாலும் நினைவுகூர்பவர்களாய், சிருஷ்டிகளான மூடமக்கள் இன்னலிழைக்கும் போதும் அல்லது தங்களை வழிகெட்ட மூடர்களாய்க் கணிக்கும்போது புன்சிரிப்போடு அம்மக்கள் மீது இரங்குபவர்களாய் இருப்பவர்களே அந்த நல்லடியார்களான உலமாக்கள் என்பது உங்களுக்குத் தெரியாத ஓர் விஷயமேயல்ல, இவ்விதமான கண்ணியமும் மதிப்பும் இறையன்பும் கொண்ட கனம் தங்கிய உலமாக்கள் எந்த ஓர் வல்லரசுக்கும் கூட வால்பிடிக்கமாட்டார்கள் என்பது உண்மை. அறிவில்லாத உண்மையை நெருங்காத அரசர்கள் கூட இவ்வுலமாக்களின் கண்ணில் அற்பர்களாய், உயிரற்ற பிணங்களாய்த் தென்படுவார்கள் என்பது நிச்சயம். ஆகவே எக்காரணத்தைக் கொண்டும் எந்த ஓர் சிருஷ்டியின் ஆதரவையோ, விரோதத்தையோ அணுவேனும் பொருட்படுத்தாமல் உண்மையை (ஹக்கை) உள்ளாலுள்ளபடி வெளிப்படுத்த அவர்கள் அணுவேனும் தயங்கவே மாட்டார்கள் என்பதையும் உண்மையை மூடி மறைப்பவர்கள் சிருஷ்டிகளுக்குப் பயந்து பேர்புகழ் பொருள் நஷ்டங்களை எதிர்பார்த்து மவுனிகளாய் மாறியவர்கள் உலமாக்களேயல்ல என்பதையும் நீங்கள் அறிந்துதானே இருக்கிறீர்கள்.

மேலும் நாம் உலமாக்களென்று வருணிக்கிற உலமாக்களிடத்தில் சிருஷ்டிகள் யாவும் உயிரற்ற, இயலாத, சீரும் சிறப்புமற்றவைகளாகவே தென்படுவதால் அவர்களிடத்தில் சுவர்க்கம் கூட வனாந்தரமாய்த் தென்படுவது ஆச்சரியமல்ல, அவர்களிடத்தில் பல நோக்கெல்லாம் செத்தழிந்து ஓரேயொரு நோக்கு மட்டும்தான் இடம் பெற்றிருக்கும். முதலாம் படியில் உலகத்தில் உலக மக்களின் உறவாடலில் இருந்து, இரண்டாவது படியில் மறுமையுடையவும் மறுமையுடையவர்களின் உறவாடலிலும் இருந்து, பின் இம்மை மறுமைகளை உருவாக்கிய இறைவனின் சகாவாசத்தில் இருக்கும் நிலைமையை அடைவார்கள். ஆகவே இவ்வகை உலமாக்கள் ஓர் படியை மற்றோர் படிக்கு முரணானதாய் எப்படிக் காண்பார்கள்? காணவே மாட்டார்கள். ஆதலால் உண்மையை உதறி வீசக்கூடிய உபாயங்களை அவர்கள் கையாளவே மாட்டார்கள். இறைவனுடைய நிரந்தரமான நினைவு

சகல பாரச்சுமைகளையும் நீக்கி விடுவதாகவே இருக்கிறது என்பதை அந்த உலமாக்கள் அறிந்திருப்பதால் சிருஷ்டிகள் சம்பந்தப்பட்டவரை இறந்தவர்களாயும் சிருஷ்டி கர்த்தன் சம்பந்தப்பட்ட வரைமட்டும் உயிர் வாழ்பவர்களாயும் இருக்கிறார்கள். ஆகவே உலமாக்களாகிய நீங்கள் உண்மையான உலமாக்களாய் இருந்தால், நான் இந்த நூலில் கூறியுள்ள எந்த ஓர் விஷயத்தையும் அலட்சியம் செய்ய முற்படாதீர்கள். ஏனென்றால் நான் காட்டியுள்ள ஆதாரங்களை நீங்கள் முற்றாய் உணர்ந்தே இருக்கிறீர்கள். **நான் ஆதாரமற்ற வீண் புரட்டல்களை எவ்விடத்திலும் கூறவேயில்லை.** என் வெளித்தோற்றத்திலோ, என் வசன நடையிலோ நீங்கள் கவனம் செலுத்தாமல் என் கருத்தையே பல முறை நோட்டமிடுங்கள். என்னால் உணர்த்தபபட்டுள்ள பகிரங்கமான உண்மைகளை விடாப்பிடியாய், மன முரண்டாய்த் தோற்கடிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் நான் அதைப்பற்றிப் பொருட்படுத்தவேயில்லை. என்னுடைய காரியஸ்தன் இறைவனேதான். ஆனால் நீங்கள் மனமுரண்டாய் இவ்வுண்மைகளைத் **தோற்கடிக்க முற்பட்டால், மிக நீண்ட காலத்தக்குப்பிறகு திறக்கப்பட்டுள்ள, இறையன்பிற்குரிய ஓர் பிரதானமான கதவை மூடிவிடுகிறீர்கள் என்பதே அதன் அர்த்தமாகும்.** இறைசன்னிதானத்தில், இக்கால சாட்சிகளில் நானும் ஒருவனாக ஆகிறாவில் சாட்சி பகர்வேன் (இன்ஷா அல்லாஹ்) என்பதை நான் உலமாக்களாகிய உங்கள் கவனத்துக்கு எத்திவைக்கிறேன்.

**அன்புச் சகோதர்களே!**

உண்மையின் உணர்ச்சி பெற்றவர்களாய் வாழ, மக்களை வாழ வைக்க முன்வாருங்கள். அறியாமையை அலட்சியப் போக்கைக் களைந்தெறியுங்கள், அறிவில்லாமல் அமல் பிரயோசனம் தராதென்பதை நீங்கள் உணர்ந்திருப்பதால் முதலில் மக்களுக்குக் காலத்துக்கேற்ற அறிவு விளக்கங்களை ஊட்டி அதன் பின் அமலில் ஈடுபடுத்துங்கள், அன்பான உலமாக்களே! “ஸாபீர்” களாக (பொறுமையாளர்களாக) மாற்றமடைந்தவர்களே “காதிர்” களாக (தத்துவமுடையவர்களாக) உருப்படுத்தப்படுவார்கள் என்பதை ஞாபகத்தில் இருத்துங்கள். என் வசன நடைகளில் நீங்கள் பிழை கண்டால் என்னை மன்னித்து மறந்துவிடுங்கள். ஆனால் என் கருத்துக்களில் அலட்சியம் செய்யாமல் ஆராய்தல் செய்து உண்மையை உறதிப்படுத்த ஆவனை செய்யுங்கள். உலமாக்களாகிய எங்களுக்குப் புத்தி புகட்ட நீர் யார்? என்று என்னை நீங்கள் கேட்டால், நான் உங்களுடைய அன்புச் சசோதரன் என்று விடை கூற விரும்புகிறேன். எமது றசூல்(ஸல்) அவர்கள் எனக்குத் தந்த அறிவிப்பின்படி நான் உங்களுக்கு அறிவுரை பகரத்துணிந்தேன் என்பதை உங்களுக்கு எத்திவைக்கிறேன்.

ثُمَّ قَسَتْ قُلُوبُكُم مِّنۢ بَعْدِ ذَٰلِكَ فَهِىَ كَٱلْحِجَارَةِ أَوْ أَشَدُّ قَسْوَةً ۚ وَإِنَّ مِنَ
ٱلْحِجَارَةِ لَمَا يَتَفَجَّرُ مِنْهُ ٱلْأَنْهَٰرُ ۚ وَإِنَّ مِنْهَا لَمَا يَشَّقَّقُ فَيَخْرُجُ مِنْهُ ٱلْمَآءُ ۚ
وَإِنَّ مِنْهَا لَمَا يَهْبِطُ مِنْ خَشْيَةِ ٱللَّهِ ۗ وَمَا ٱللَّهُ بِغَٰفِلٍ عَمَّا تَعْمَلُونَ

2-74 *இதற்குப் பின்னும் உங்களுடைய இருதயங்கள் இறுகிவிட்டன. அவை கற்பாறைகளைப் போல் அல்லது அவைகளை விடக் கடினமானவைகளாய் இருக்கின்றன. கற்பாறைகளிலும் சதா ஊற்றுக்கள் உதித்தோடிக்கொண்டிருப்பவைகளும் நிச்சயமாக உண்டு. வெடித்து அதிலிருந்து நீர் புறப்படக் கூடியவைகளும் அவற்றில் உண்டு. அல்லாஹ்வுடைய பயத்தால் உருண்டு விழக்கூடியவைகளும் அவற்றில் உண்டு. உங்கள் செயலைப் பற்றி அல்லாஹ் பராமுகமாய் இல்லை.*

وَلَقَدْ يَسَّرْنَا ٱلْقُرْءَانَ لِلذِّكْرِ فَهَلْ مِن مُّدَّكِرٍ

54-17 *சிந்தித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இந்தக் குர்ஆனை மிக்க எழிதாக்கியிருக்கிறோம். ஆகவே (இதனைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டா?*

## 019 “அஸ்ஸுலூக்”
## (இறைவழி நடைமுறை)

**இ**றை நேசர்களான நல்லடியார்களில் பலர் அவரவருடைய அறிவு அனுபவங்களைக் கொண்டு ஸுலூக்குடைய பாதையைப் பலவாறாகப் பிரித்து (தரீக்காக்களை உருவாக்கி)த்திருக்கின்றார்கள். இந்தப் பாதைகள் பலதினுசுகளாய் அமைந்திருப்பதன் காரணம் இறைவழி நடக்கும் மக்களின் அறிவு, மனோபாவம், விளக்கங்கள் பழக்கங்கள், வெவ்வேறாய் இருந்தமைதான். ஆனால் எவர் எப்பாதையில் செல்லினும் குறிக்கோள் ஒன்றேதான். இந்தப் பாதைகளில் சென்று வெற்றி பெற்ற பெரியார்களின் பெயர்களைக்கொண்டே இந்தத் தரீக்காக்களுக்குப் பெயர்கள் சூட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஒவ்வோர் பாதையிலும் கடைப்பிடிக்கப்படும் திக்கீர்களின்விபரங்களிலும் சிற்சில நடைமுறைகளிலும் சிற்சில

பேதாபேதங்களும் இருக்கின்றன. என்றாலும் இந்த யோகவழிகள் அத்தனையையும் (ஓன்றைத்தவிர) பொதுப்படையாய் நோக்கினால் எட்டு அங்கங்கள் (உறுப்புக்கள்) தென்படுகின்றன. ஆகையால் தான் இந்த யோகவழிகளைப் பொதுப்படையாய் அஷ்டாங்கயோகம் என்று கூறப்படுகிறது. இயமம், நியமம் ஆசனம், பிராணாயாம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் சமாதி என்பவைகளே அந்த எட்டு அங்கங்களுமாகும்.

பெரும்பாலும் இந்து ஞானவான்களும் முஸ்லீம்களில் ஒரு சிலரும் இந்த அஷ்டாங்கயோக முறைகளைத்தான் பெரும்பாலும் கையாண்டிருக்கிறார்கள். கையாளுகிறார்கள் என்பது தென்படுகிறது. இந்த எட்டு அங்கங்களினதும் பொது நோக்கம் என்னவென்றால் தியானம் செய்பவர் தன்மனதை ஒரு வழிப்படுத்தித் தன்குறிக்கோளை அடைவதற்கு சில உபாயங்களைக் கையாள வேண்டும் என்பதேயாகும். **இவற்றில் பிராணாயாமம் போன்ற சில அங்கங்கள் ஆபத்தானவையேயாகும்.** நபிமார்களோ றசூல்மார்களோ குத்புமார்களோ இந்த அஷ்டாங்க யோகத்தைக் கையாளவே இல்லை என்பது தெளிவாய் தென்படவே செய்கிறது. இதைப் பின்னால் நாம் அறிவோம். நாம்முன்பு கூறிய பிராணாயாமம் (சுவாசக்கட்டுப்பாடு) சில சமயங்களில் உயிர்க்கருவிகளான இரத்தாசயம், மூளை போன்ற உறுப்புக்களைப் பாதிக்கக்கூடிய ஓர் அங்கமாகும், இவ்விஷயத்தில் மிகப்பலர் பாதிக்கப்பட்டே இருக்கிறார்கள். யோகிகள் இந்த அங்கத்தை ஏன் ஏற்படுத்தினார்கள் என்பதை ஆராய்ந்து பார்த்தால் சில உண்மைகள் தென்படுகின்றன. அவ்வுண்மைகளில் ஒன்று இந்த யோகிகளில் பலர் கலிமாவை விளங்கித் தெளிவுபெற்றுச் செல்லாமல் சிற்சில குறுக்குப் பாதைகளைக் கையாண்டு வெற்றிபெற முனைந்திருக்கிறார்கள். இன்னொன்று, வேறுசிலர் அஷ்டமாசித்துக்களை (கறாமாத்) பெறுவதே நோக்கமாக இந்த யோகசாதனையைக் கையாண்டிருக்கிறார்கள். இந்த அஷ்டாங்க யோகமான இராஜயோகம் ஹடயோகம் போன்றவற்றில் குறுகிய கால எல்லையில் தௌஹீது சித்திப்பதேயில்லை, தியானத்தில் ஈடுபாடு கொண்டும் சுமார் எட்டுப்பத்து வருடங்களின் பின்தான் ஓரளவு சிந்தனைகளைப் பெறக்கூடியதாயும் தௌஹீதின் உண்மை புலனாகக் கூடியதாயும் இருக்கிறது. ஆயினும் எல்லோருக்குமே இந்த நிலைமைகிட்டும் என்றும் கூறமுடியாமல் இருக்கிறது. மேலும் ஏகாந்தியாய் இருக்கிற ஒருவரேயல்லாமல் குடும்பஸ்த்தர்களாய் இருக்கிற எவருமே இந்த யோகங்களில் ஈடுபாடுகொள்ளவும் முடியாமல் இருக்கிறது. மேலும் இப்பாதைகளில் முயல்வதற்கு கல்வத்தில் (தனிமையில்) இருக்க வேண்டியதாயும் இருக்கிறது. ஆகவே இவற்றையெல்லாம் **மிகமிக நுட்பமாய் ஆராய்ந்தபோது இவர்களில் மிகப்பலர் பெரும்பாலும் பின்பற்றல் முறையிலேயே சென்றுள்ளார்கள் என்பதும் வெற்றிபெற்ற ஒரு சிலர் மிகக் கடினமான இன்னல்களை அடைந்தே வெற்றியடைந்திருக்கிறார்கள் என்பதும் தெரியவருகிறது.**

இந்தப் பாதைகளில் வெற்றிபெற்ற மகான்கள் அவர்களுடைய அனுபவ வாயிலாக இப்பாதைகளில் இரண்டை மட்டுமே சிறந்ததாகத் தெரிவு செய்திருக்கிறார்கள், அவற்றில் ஒன்று "அல்லாஹ்" என்ற இஸ்மை மட்டும் எடுத்துக் கொள்வதாகும். இந்தப் பாதை உண்மையாகவே சிறப்புடையதே ஆயினும் சில கட்டாயக் கண்டிப்புக்களைக் கைக்கொள்ளவும் தனிமையில் (கல்வத்தில்) இருந்தே வெற்றிபெற வேண்டியதாயும் இருக்கிறது. மேலும் இப்பாதையிலும் பலவருடங்களின் பின்புதான் தௌஹீதில் நுழையவும் முடியும், இப்பாதையின் முழுவிபரங்களையும் நீ சரியாக அறிந்து கொள்ள வேண்டும் என்றால் முஹ்யித்தீன் இப்னு அறபி(றஹ்) அவர்களால் எழுதப்பட்ட "அத்ததுபீறாதுல் இலாஹிய்யா" என்ற கிதாபைப் பார்வையிட்டுத் தெளிவுபெறு.

இன்னும் விபரமாய் அறிய வேண்டுமானால் முஹ்யித்தீன் அப்துல் காதிறு ஜெய்லானி அவர்களால் எழுதப்பட்ட "குன்யத்துத் தாலிபீன்" என்ற கிதாபைப் பார்வையிட்டுத் தெளிவுபெற வேண்டும். இந்தப் பாதையைத்தான் "காதிரிய்யா" தரீக்கா என்று கூறப்படுகிறது. பெரும்பாலும் பக்திமார்க்கமே அதன் அடிப்படையாகும். நப்ஸைத்திருத்தி நற்குண நல்லொழுக்கங்களைக் கடைப் பிடிப்பதோடு ஒவ்வொர் குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட அளவு தியானத்தில் ஈடுபாடுகொள்வதே இந்தப் பாதையின் பொதுப்படை இலட்சணமாகும், ஆரம்பத்திலேயே தௌஹீதுடைய விபரங்கள் எதுவுமே இப்பாதையில் விளக்கப்படுவதில்லை. ஆகவே இப்பாதையிலும். ஒருவர் பல வருட அரும் முயற்சியில் ஈடுபடாமல் ஜெயம்பெறமுடியாத என்பது உண்மை.

அடுத்தது "லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவைக் கொண்டு செல்லும் பாதை. என்னைப் பொறுத்தவரையில் பல வருடங்கள் மிக அரும் முயற்சிசெய்து ஒவ்வோர் தரீக்காவழிகளையும் ஆராய்ந்து பார்த்தபோது மிக இலகுவானதும் சுத்தமான "ஹுர்புன்நவாபிலி" என்பதும் கலிமாவைக் கொண்டு செல்லும் பாதைதான் என்பது தெரியவந்தது. மேலும் தொழிலாளி, முதலாளி, குடும்பஸ்தன் சிறுவர் வாலிபர், மூடன், கல்விமான், ஆண், பெண் போன்ற எல்லோராலும் எக்காலத்திலும் எவ்விதமான சூழ்நிலையிலும் கையாளக் கூடியதும் குறுகிய காலத்தில் வெற்றி பெறக்கூடியதும் இந்தப்பாதை, ஒன்று மட்டும்தான் என்பதும் தெரியவந்தது. என் அறிவினால் மட்டுமன்றி அனுபவத்தினாலும் இப்பாதைக்கு நிகரான வேறோர் பாதை இல்லவே இல்லை என்பதும் தெரியவந்தது. மேலும் நபிமார்கள் றசூல்மார்கள் யாவரும் கையாண்டு வெற்றி அடைந்ததும் இதே பாதைதான். இப்பாதை இவ்வளவு சிறப்புடையதாய் இருந்தும் பெரும்பாலான மக்கள் இப்பாதையில் ஈடுபடாமல் இருந்த காரணம், கலிமாவை முறைப்படி விளங்கித் தெளிவுபெறக்கூடிய வாய்ப்பில்லாமல் இருந்ததும் வரட்டு ஞானவான்களின் உருட்டுப் புரட்டுகளான எழுத்துக்களிலும் உபதேசங்களிலும் சிக்குண்ட மக்களுக்கு உண்மையை உணரக்கூடிய வாய்ப்பும் உணர்த்தக்கூடிய நல்லறிஞர்களும் இல்லாமல் இருந்ததும் தான், றசூல்(ஸல்) அவர்களுடைய மறைவுக்குப்பின் கலிமாவைப் புரட்டி விட்டதனால் ஏற்பட்ட விளைவுதான் இந்தப்பாதை மூடுபட்ட காரணம். ஆராய்வும் திட உறுதியும் உடையவர்களான ஒருசில மகான்கள்தான் இப்பாதையில் சென்று வெற்றி அடைந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் பெரும்பாலும் அவரவருடைய (ஸமானில்) காலத்தில் கலிமாவின் உண்மையை விளக்கி

இந்தப்பாதையையும் தெளிவுபடுத்தியே வந்திருக்கிறார்கள். இந்தக் கலிமாவின் பாதையில் சென்று வெற்றிபெற வேண்டுமானால் நீண்டகாலம் வேண்டியதில்லை. இந்தப்பாதையில் கண்டிப்பான விஷயங்கள் இரண்டுதான். **அவற்றில் ஒன்று, எவ்விதமான சந்தேகமும் இல்லாமல் உள்ளம் உறுதியடையும் வரையிலும் கலிமாவின் விபரங்கள் யாவையும் சரியான உண்மையான ஆதாரங்களோடு விளக்கித் தெளிவு பெறவேண்டும் என்பதே.** இப்படிச் சந்தேகம் தீரும் வரையிலும் விளங்கித் தெளிவுபெறாமல் அமலில் ஈடுபடுவது வெற்றியளிப்பது நிச்சயமல்ல மேலும் காலநீட்சியும் எற்படலாம். **இரண்டாவது நிபந்தனை என்னவென்றால் விளங்கியறிந்த உண்மை கல்பை (உள்ளத்தை) விட்டு நழுவி விடாமல் பூரண உறுதியடைவதற்காக இடைவிடாமல் திக்கிர் செய்வதும் "முறாக்கபா" (நோட்டமிடல்) செய்வதுமே ஆகும்.**

மேலே கூறிய இவ்விரு நிபந்தனைகளும் சரிவரக் கையாளப்பட்டால் மிகக் குறுகிய காலத்தில் நிச்சயமாக வெற்றியடையலாம் என்பதில் எள்ளளவும் சந்தேகமே கிடையாது. ஆகவே எக்காலத்திலும் ஏறக்குறைய எல்லோராலும் கையாளக் கூடிய இந்தப் பாதையையே நான் உனக்கு விளக்கிக் கூற விரும்புகிறேன். இந்தத் தௌஹீதுக் கலிமாவைக்கொண்டு செல்லும் இப்பாதையை வலிமார்கள் ஆறு பெரும் பிரிவுகளாக விளக்கித் தந்தள்ளார்கள். அவற்றில்.

### 1ஆவது: "அஸ்ஸைறு லில்லாஹி" என்று கூறப்படும்.

"அஸ்ஸைறு லில்லாஹி" என்பதன் விபரம் என்னவென்றால் அறிவின்மையான மூடத்தனத்தை (வஹ்மு) பேத புத்தியை, மருட்சியை விட்டு நீங்கி மஹ்ரிபா, (ஞானம்) ஈமான், என்பதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசை கொள்வது என்பதேயாகும். அறிவு விளக்கமில்லாத மூடமக்களுடைய சகாவாசத்தைவிட்டு நீங்கி, சற்சனங்களான நல்லறிஞர்களை அணுகிக் கலிமாவையும் அதன் உண்மையான சகல விபரங்களையும் தெளிவாய் விளங்கி அறிய வேண்டும். அறிவின் சரியான விளக்கம் தெரியாத பாமர மக்கள், உண்மையை உணராத அறிஞர்கள் (உலமாக்கள்) போன்ற தீயோரின் சகாவாசம் (உறவாட்டம்) நல்லோர்களான பெரியார்களின் அறிவைப்பற்றிய நல்லெண்ணத்தைக் களைந்தெறிந்து விடக்கூடியதாகவே இருக்கிறது. ஆகவே இறைவனின் பாதையில் செல்ல முற்படுகிற நீ துர்ச்சன சகாவாசத்தைவிட்டு நீங்குவது மிகமிக அவசியமாகும். வேத நூலான குர்ஆனை இமாமாகவும் றசூல்(ஸல்) அவர்களையும் உன்குருவையும் (ஒஸ்தாது) அறிஞர்களின் உபதேசங்களையும், உன் அறிவையும் சாட்சிகளாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும். கலிமாவின் உண்மையை உன் உள்ளம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் வரையிலும் விளங்கி அறிவதில் நீ சடைவுகொள்ளவெ கூடாது. விளங்கித்தெளிவு பெறாமல் சாதனையில் ஈடுபடவும் கூடாது. அப்படி விளங்கித் தெளியாமல் சாதனையில் ஈடுபடுவது வீண் காலம் கடத்துவதாகவே அமையும், ஆகவே காலம் கடந்தாலும் கூடக்கவலைப்படாமல் நல்லறிஞர்களைத் தேடிக் கண்டடைந்து முதலில் உண்மையை விளங்கித் தெளிந்து கொள்ள வேண்டும். இதை ஒருசில வலிமார்கள் "முஜாஹிதா" (சத்முயற்சி) என்று விளக்கம் தருகிறார்கள்.

ஞானப்பாதையில் (இறைவழியில்) செல்லும் ஓர்மனிதனுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய கடமைகளில் முதலாவது கடமை இந்த முஜாஹிதாவாகவே இருக்கும். "நமது பாதையில் முயற்சி செய்பவர்களுக்கு நிச்சயமாக நாம் நம்முடைய வழிகளைக் காட்டுவோம்" என்று குர்ஆனில் இறைவன் கூறுவது இம்முயற்சியைக் குறிப்பிட்ட விபரமேயாகும். இம்முயற்சியை இன்னும் சில வலிமார்கள் "ஜிஹாது" என்று வருணிக்கிறார்கள் "ஜிஹாது" என்பதற்கு சத்தியவழியில் போர்புரிதால், உண்மையைக் கண்டறிவதற்கு அறிவுப் போராட்டம் செய்தல் என்றெல்லாம் பொருள் கூறப்படும். தன்வெளிநிலைமையை சத்முயற்சிகொண்டு அழகுசெய்பவனுடைய உள்ளத்தின் நிலைமையை "முஜாஹிதா" என்னும் ஆன்மதிருஷ்டிகொண்டு இறைவனே அலங்காரம் செய்து விடுகிறான் என்று அபூஅலிவஹாக்(ற) அவர்கள் கூறுகிறார்கள். என்னுடைய அனுபவத்தில் நான் கண்ட உண்மை என்னவென்றால் இந்த முஜாஹிதா என்னும் தெண்டிப்பை மேற்கொள்ளாத ஒருவன் இறைவழி செல்ல முற்படுகிறான் என்றால் ஒருபோதும் எட்டமுடியாத திராட்சைக்கனிக்கு ஆசைப்படுகிற நரியாக அவன் இருக்கிறான் என்பதேயாகும்.

இவ்விதமான முஜாஹிதாவில் ஈடுபட்டுக்கொண்டிருந்த புஸ்த்தாமி(ற) அவர்கள், பனிரெண்டு வருடங்கள் "அனாநிய்யத்" (நான்) என்னும் அகந்தையைப் பரிசுத்தம் செய்வதில் செலவிட்டேன். ஐந்துவருடங்கள் என் மனத்தைக் கண்ணாடி போலாக்க முயற்சித்தேன். பின் ஒருவருடம் என்மனக் கண்ணாடியைப் பார்த்துக்கொண்டே காலம் கழித்தேன். இதன்பின்னும் என் உள்ளத்தில் மாசு (குற்றம்) இருப்பதைக்கண்டேன். பின்பும் இந்த முஜாஹிதாவையே மேற்கொண்டு வெற்றியடைந்தேன். அதன்பின் என் அகக்கண்ணால் பார்க்கையில் மானிடர்களெல்லாம் பிணங்களாகவே வாழ்வதைக் கண்டேன். அப்படி நான் பார்த்தவுடனேயே இறைவனுடைய சிருஷ்டிகளை நோக்கி ஜனாஸாவின் தக்பீர்கள் நான்கையும் கூறிவிட்டேன் என்று கூறியுள்ளார்கள்.

சுபாவம் கல்லாய்விடுதல் (மூடப்பிடிவாதம்) வழக்கம் வலுத்துப் போதல் (பழக்கவழக்கத்துக்கு அடிமையாதல்) சகாவாசதோஷம் ஆகிய இம்மூன்றினாலேயே வினைகளெல்லாம் விளைகின்றன என்று அபாஅலி(ற) கூறுகிறார்கள். சுபாவம் கல்லாவது எப்படியென்று அவர்களிடம் வினவப்பட்டபோது

ஹறாமானதை அருந்துவதனால் என்று விடை கூறினார்கள். வழக்கம் வலுத்துப்போவது எப்படியென்று கேட்கப்பட்டபோது தெரிந்தும் தெரியாதவன் போல் நடப்பது பிறர்மேல் பழி சுமத்துவது என்று கூறினார்கள். **சகாவாச தோஷத்தைப்பற்றிக் கேட்கப்பட்டபோது, பிறரின் சகாவாசதோஷம் ஒரு புறமிருக்க, நமக்குள்ளேயிருந்து தீமைசெய்யத்தூண்டும் நப்ஸை (அறியாமையில் ஊறி எம்மை அடக்கியாளும் நப்ஸ்அம்மாறாவை) அடக்காமல் அதற்கிசைந்து (அறிவீனத்தில்) நடத்தல்** என்று வியாக்கியானம் கூறினார்கள்.

**சகோதரனே!**

அறிவீனம் என்பது மிகமிகக் கடினமான ஓர் சிறையாகும். இந்தச் சிறையைவிட்டு நீங்கும்போதுதான் அழியாச்செல்வத்துக்கு உரியவனாக நீ ஆகமுடியும். பிறர் மெச்ச, பிறரிடமிருந்து புகழ் பொருள் பெற விரும்பும் அவா உன்னிடம் இருக்கும் வரையிலும் அறியாமையென்னும் சிறையிலேயே நீ சிக்குண்டிருக்கிறாய் என்பதை நீ முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். ஆத்மவழியில் உண்மையைக் கண்டறிந்து உண்மையில் நீ நிலை பெற வேண்டும் என்று விரும்பினால் உன்மனம் போன போக்கெல்லாம் சரிதான் என்று மருளால் அம் மனதை ஆதாரத்தின் பக்கம் நிலைநிறுத்தும் அரும் முயற்சியில் ஈடுபடவேண்டியவனாய் இருக்கிறாய். மனம் ஆதாரத்தை விட்டுக் குருட்டுத்தனத்தில் குதிக்கும்போது அதை அடக்கி ஆளும் திறமை நிச்சயமாக உன்னிடத்தில் இருந்தே ஆகவேண்டும். “முஜாஹிதா” என்னும் தெண்டிப்பில் பூரணத்தன்மை “முஹாஸபா” என்னும் சத்தியவிசாரணையிலேயே பொதிந்து கிடக்கிறது என்பதை நீ அறிந்து கொள்ளவேண்டும். இந்த உண்மையான விசாரணை (ஆராய்வு)தான் எல்லா நன்மைகளுடையவும் உன் பூரணத்தன்மையுடையவும் ஆணிவேராக அமைந்ததிருக்கிறது. ஆத்மீக விசாரணையில் இன்றியமையாத நான்கு நிபந்தனைகள் தென்படுகின்றன.

**1ஆவது:** அல்லாஹ்வே உண்மைப்பொருள் என்று அறிதல்.

**2ஆவது:** அவ்வுண்மைப் பொருளுக்கு விரோதிபோல் தென்படும் இப்லீஸின் உண்மையைப் புரிந்து கொள்ளுதல்.

**3ஆவது:** “நான்” என்னும் “அனாநிய்யத்” அகங்ககாரம் சிருஷ்டி என்னும் சிறையின் பக்கமும் அறிவீனம் என்னும் இருளின் பக்கமுமே அழைத்துச் செல்லும் என்பதை அறிதல்.

**4ஆவது:** சொல், செயல், கருத்து யாவும் உண்மைப் பொருளான அல்லாஹ்வை முன்னோக்கியதாக, அல்லாஹ்வுக்காக, அல்லாஹ்விலேயே அமைந்ததாகவே ஆக்கிக்கொள்ளல்.

ஓர் மனிதன் தன் ஆயுள்முழுவதும் வணக்கத்திலேயே கழிப்பவனாக இருந்தாலும் நாம் கூறிய இந்த நான்கு அம்சங்களையும் உணர்ந்து கொள்ளாதவனாக இருந்தால் அவன் அறிவீனனாகத் தன் அமல்களால் பிரயோசனம் பெறமுடியாத ஏமாளியாவே இருப்பான். மேலும் அவனுடைய அமல்களே அவனை நரகின் பக்கம் இழுத்துச் செல்லும் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

அல்லாஹ்வைப்பற்றிய “மஹ்ரிபா” ஞானம் என்பது, அடியான் தன் உள்ளத்தை எக்காலமும் இறைவன் சந்நிதியில் ஆழ்த்தியவனாகத் திகழ்வதுதான். இந்த நிலைமையில் அவ்வடியான் நிலைபெற்றவனாய் மாறுதலற்றவனாய்க் கலப்பற்றவனாய் இருக்கவேண்டும். இந்த நிலைமையால் ஏற்படும் பலமே அவன் சக்தியாக விளங்க வேண்டும். இந்த நிலைமையை மனிதன் எய்தி வெற்றிபெற வேண்டுமானால் இறைவனைப்பற்றிய இறைவனுடைய குணாகுணங்களை (ஷிபத்துக்களை)ப் பற்றிய பூரணமான உண்மையை, எள்ளளவேனும் சந்தேகம் ஏற்படாதவகையில் அறிவு ஒத்துக்கொள்ளக்கூடிய முறையில் விளங்கியறிந்துதான் ஆகவேண்டும். அந்த அரும் முயற்சியைப் பெற்றுக்கொள்வதனால், கௌரவம், பட்டம் பதவிகளின், பணத்தின், செருக்குகளைவிட்டு நீங்கித்தான் ஆகவேண்டும். அவசரபுத்தி, அடங்கா முற்கோபம், வீண்பிடிவாதம், தீவிரவாதங்களை விட்டு நீங்கித்தான் ஆகவேண்டும். பொறுமையோடு படிப்படியாய் ஒவ்வோர் விடயமாய் விளங்கி அறிந்துதான் ஆகவேண்டும். விளக்கம் தரக்கூடிய மனிதர்கள் தென்படும் வரையில் அடிக்கடி இறைவனை வேண்டிக்கொண்டும் தனக்குத் தெரிந்த வரையில் குர் ஆன் ஹதீஸ்கள் வலிமார்களின் நல்லுபதேசங்களை ஆராய்ந்து கொண்டுதான் இருக்கவேண்டும். “முஜாஹிதா” என்பது சாதாரண மக்களைப் பொறுத்தவரையில் வெளியரங்கமான முயற்சிகளை (கடமைகளை) நிறைவேற்றுவதேயாகும். ஆனால் ஆத்மீகப்பாதையில் செல்பவர்களின் “முஜாஹிதா” என்பது இதுவல்ல. பொதுப்படையாய்க் கூறினால் தன்னுடைய இருள் திரைகளைக் கிழித்தெறிவதும் அத்திரைகளில் சிக்குண்டிருந்தமையால் ஏற்பட்ட மாசுகளைக்களைவதும் உண்மையோடு ஒன்றிவிடக்கூடிய பக்குவத்தைப் பெறுவதுமேயாகும். இம்முயற்சி சாதாரண ஓர் வேலையே அல்ல. இறைவன் உனக்கு நல்லருள் பாலிப்பானாக. அவன் மேல்திடமான நம்பிக்கை கொண்டவனாக உன் முயற்சியில் ஈடுபடுவாயாக.

**2ஆவது: “அஸ்ஸைறு இலல்லாஹி” என்று கூறப்படும்**

இதன் விபரம் என்னவென்றால் சந்தேகமில்லாமல் விளங்கியறிந்த உண்மையான ஞானத்தேர்ச்சியோடு (திக்ரில்) தியானத்தில் ஈடுபடுவது என்பதேயாகும்.

**ஹதீஸ்:** ***நாற்பது நாட்கள் கலப்பற்ற மனத்தோடு (இக்லாஸ், ஏகாக்கிரசித்தம்) எவர் இறைவனைத்தியானிக்கிறாரோ அவருடைய மனதில் இருந்து ஞானத்தின் ஊற்று நாவழியாக வெளியாகும்.***

**அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(றலி)**
**ஆதாரம்: ரஜீன்**

**சகோதரனே!**

நீ தியானத்துக்கு எடுத்துக்கொள்ளவேண்டிய "திக்கிர்""லா இலாஹ இல்லல்லாஹ் " என்ற கலிமாவேயாகும். உன்னுடைய ஒஸ்த்தாதுடைய, அல்லது கனவு மூலம் அறிவுப்பவருடைய அல்லது "றூயாக்' காட்சி மூலம் அறிவிப்பவருடைய உத்தரவில்லாமல் (திக்ரில்) கலிமாவில் ஓர் அட்சரத்தையேனும் கூட்டவோ குறைக்கவோ கூடாது. (திக்ரில்) தியானம் செய்வதற்கு உளூ வேண்டும் என்றோ கிப்லாவை நோக்கவேண்டும் என்றோ இன்ன இன்ன உடைதான் அணிய வேண்டும் என்றோ இன்ன இன்ன உணவுதான் உட்கொள்ள வேண்டுமென்றோ இன்ன நிலையில் (ஆசனத்தில்) இருந்துதான் செய்ய வேண்டுமென்றோ எந்த ஓர் நிபந்தனையும் கட்டுப்பாடும் கிடைக்கவே கிடையாது. ஆனால் உனக்கு மனத்திருப்தி ஏற்படவேண்டும் என்று நீ விரும்பினால் ஸறகிலுள்ள எந்தக்காரியத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொள். நீ ஸறகை எடுத்துக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் ஸறகில் கவனத்தைச் செலுத்தாமல் திக்கிரிலேயே உன் முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டும். இந்த ஸறகுடைய காரியங்கள் உன்மனோ உறுதியை (இக்லாஸை ஏகாக்கிரசித்தத்தை, நோக்கத்தை)க் குழப்பக் கூடியதாய் இருந்தால் அக்காரியங்களை நிறுத்திவிட்டு உன்மனோ ஒருமைக்காகவே நீ அரும் முயற்சி செய்ய வேண்டும். இல்லையானால் உன் தியானம் பூரணபலனைத் தரவேதராது என்பதை நீ தெளிவாய் விளங்கிக்கொள்ள வேண்டும். தியானத்துக்காக ஓர் குறிப்பிட்ட நேரத்தையும் இடத்தையும் தெரிவு செய்து கொள்வது குடும்ப வாழ்வுக்கும் தொழில் முயற்சிகளுக்கும் இலகுவாக அமையலாம். இது ஆரம்ப மாணவர்களுக்குத்தான். இதேபோல தியானத்தின் போது அத்தஹியாத் இருப்பிலோ அல்லது உனக்குச் சௌகரியமான எந்த இருப்பிலோ இருந்து கொண்டு தியானம் செய்யலாம். ஆனால் மனிதனுடைய முள்ளந்தண்டு கோணாமல் நிமிர்ந்து நேராய் இருப்பது மன ஒருமைக்கு ஓர் காரணமாய் இருப்பதால் இயன்ற வரையிலும் நிமிர்ந்து இருந்து தியானம் செய்வதே ஆரம்பப் பயிற்சியாளர்களுக்குப் பொருத்தமானதாகும்.

சிந்தனை கலையாமல் நீண்ட ரேம் இருந்து தியானம் செய்யக்கூடிய பல இருப்புக்களை ஞானவான்கள் தெரிவு செய்திருக்கிறார்கள். இவ்விருப்பக்களை ஆசனம் என்று கூறுவார்கள். யோகாசன வகைகள் அநேகமுண்டு. சித்துக்களைப் பெறவே விரும்பிய ஹடயோகிகள் மிகக் கடினமான ஆசனங்களையெல்லாம் அமைத்திருக்கிறார்கள். இவ்விதமான ஆசனங்கள் எதுவுமே வேண்டியதில்லை. ஆசனம் இருப்பு என்றால் நீண்ட நேரம் அசைவற்றுச் சிந்தனை கலையாமல் இருக்கக்கூடிய ஓர் நிலை என்பதுதான் பொருள். என்னைப் பொறுத்த வரையில் அத்தஹிய்யாத் இருப்பு அல்லது பத்மாசனமே போதுமானதென்று கூறுவேன். பத்மாசனம் என்றால் வலது காலை இடது தொடையின் மேலும் இடது காலை வலது தொடையின் மேலும் வைத்து முதுகு வளையாமல் நிமிர்ந்து இருந்து இருகைகளையும் இரு முழங்கால்களின் மேலும் வைத்துக்கொள்வதே. இது எல்லோராலும் இலகுவாய்க் கையாளக்கூடிய ஒன்றாகும். இவ்விருப்பில் மனம் ஒரு வழிபடக்கூடிய சில உபாயங்கள் இருக்கவே செய்கின்றன.

இரவு பகலாக எவ்வேளையிலும் மனதில் தியானம் (திக்கிர்) ஓடிக்கொண்டிருந்தாலும் ஒரு நாளைக்கு இருமுறையோ மூன்று முறையோ ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட இருப்பில் இருந்து தியானம் செய்வதே நல்லதாகும். இப்படிச் செய்வதில் பலநன்மைகள் இருக்கின்றன. நேரத்தைப் பொறுத்த வரையில் மஹரிபுக்குப் பின் நித்திரைக்குச் செல்லும் வரைக்குள் சுமார் ஒன்று இரண்டு மூன்று மணித்தியாலங்களும் தியானத்தில் ஈடுபடலாம். இதே போல மூன்று மணிக்குப் பின் (அதிகாலை) சுபஹீவரையிலும் தியானத்தில் ஈடுபடலாம் . பகல்வேளைகளிலும் வாய்ப்பிருந்தால் ஓர் குறிப்பிட்ட நேரத்தை நியமித்துக்கொள்ளலாம். நேரமும் தியானத்தின் எண்ணிக்கையும் எம்முடைய வசதிக்கேற்றபடி அமைத்துக்கொள்ளலாம். இந்தக் குறிப்பிட்ட நேரங்களைத் தவிர மற்றும் நேரங்களில் எந்த வேளையில் எந்த நிலைமையில் இருந்தாலும் மனதில் (திக்கிர்) தியானம் நடைபெற்றுக் கொண்டே இருக்கவேண்டும். செய்யும் வேலை தடைப்படலாம் என்றிருந்தால் திக்கிரை நிறுத்திக்கொள்ளலாம். ஆனால் சில நாட்கள் பழக்கப்பட்டுவிட்டால் செய்யும் வேலை தடைப்படாமலே திக்கிர் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் என்பது நிச்சயம். தியானம் செய்யும் போது கடினமான வெளிச்சம் இல்லாத அடக்கமான சந்தடியற்ற ஓர் இடத்தை எடுத்துக்கொள்வது நல்லது. ஆரம்ப மாணவர்கள் தியானத்தின் போது கண்களைக் மூடிக்கொள்வதும் மனஒருமையைப் பெறுவதற்குச் சிறந்தவழியேயாகும். தியானம் செய்யும்போது சப்தமிட்டுக் கலிமாவைக் கூறவேண்டியதில்லை. ஆனால் நாவினால் வெளியாகும் வார்த்தை செவிக்கெட்டுவதால் உளதாக்கம் ஏற்படும் என்பது உண்மை. ஆதலால் ஆரம்பப் பயிற்சியாளர்கள், தாங்கள் கூறும் திக்கிர் தங்கள் செவிக்கு எட்டக்கூடிய அளவு கூறிக்கொள்வது சிறந்ததே தான். பயிற்றப்பட்டவர்கள் நாவினால் கூறவேண்டிய அவசியமே இல்லை. இதைத்தவிரக் கலிமாவைக் கூறும் போது அட்சர பாவனைசெய்து தலையை அசைக்கவோ, மூச்சைப் பிடிக்கவோ, சுழிமுனையை நாடவோ முச்சுடரைத் தேடவோ வேண்டிய அவசியமே இல்லை. நீ செய்யவேண்டியதெல்லாம் உன்

உள்ளத்தில் நடைபெறும் கலிமாவின் கருத்தை மட்டும் முறாக்கபா (நோட்டமிடுதல்) செய்ய வேண்டியது மட்டும்தான்.

அடுத்ததாகச், சில தரீக்காக்களில் உணவு விஷயமாகச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. சில தரீக்காக்களில் மச்சம் மாமிசம் கண்டிப்பாய் விலக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கலிமாவைத்தியானம் செய்பவர்களுக்கு எவ்விதமான உணவு நிபந்தனைகளும் வேண்டியதில்லை. ஆயினும் மச்சம் புசியாமல் இருப்பதில் சில நன்மைகள் தென்படவே செய்கின்றன. நீ விரும்பினால் அதை விலக்கிக்கொள். முடியாதெனக் கண்டால் எடுத்துக்கொள். **கஞ்சா, அபின், முதலாம் லாகிரிப்பொருட்களை நீ பாவிப்பவனாக இருந்தால் அவற்றை முற்றாய் நீக்கிய பின்பேயல்லாமல் நீ தியானத்தில் ஈடுபடவேகூடாது. அப்படி லாகிரிப்பொருட்களை அருந்துகிற ஒருவர் தியானத்தில் ஈடுபடுவது மிக மிக ஆபத்தாகவே அமையலாம்.**

நம் நாட்டிலுள்ள பெரும்பாலான திருட்டு வேஷதாரிகளான ஷெய்குமார்கள் கஞ்சா, அபின் போன்ற மஸ்த்துக்களைப் பாவித்துக்கொண்டு ஞானோபதேசம் செய்வதாகவும் ஒரு சில அறிவு குறைந்த மக்களுக்கு பைஅத் (இஜாஸா) அளிப்பதாகவும் நான் அறிகிறேன். இவ்வகையினரைவிட்டு நான் மிக மிக மனவருத்தமடைகிறேன். கஞ்சா, அபின், சாராயம் போன்ற மஸ்த்துப் பொருட்கள் ஊக்கிப்பொருட்களாய் இருக்கின்றன. இப்பொருட்களில் மருந்து சம்பந்தமான சில நன்மைகள் இருப்பினும் இவ்வகைப்பொருட்களிலுள்ள தீமைகளோ மிக மிக அதிகமாய் இருக்கின்றன. இப்பொருட்கள் பெரும்பாலும் றூஹு ஹைவானின் (மிருகத்தன்மையின்) சுபாவத்தை ஊக்குவிப்பவனவாகவே இருக்கின்றன. ஹைவானியின் சுபாவம் ஊக்கப்படும் போது நப்ஸு ஷைத்தானி (அம்மாறா) இயல்பாகவே மூரியாட்டம் பெறுகிறது. நப்ஸு அம்மாறா மூரியாட்டம் பெறும்போது அறிவீனம், பிடிவாதம், மருட்சி தீவிரவாதம்,மயக்கம், போன்ற தன்மைகள்தான் உருவாக்கப்படுகின்றன. அதாவது பகுத்தறிவு அதன் செயலை இழந்து விடுகிறது. பகுத்தறிவு சரியான முறைப்படி இயங்கவில்லையானால் எந்த ஓர் கல்விமானும் கூட உண்மைக்கும் பொய்க்குமிடையில் நன்மைக்கும் தீமைக்கும் இடையில் பகுத்தறியவேமாட்டான். இந்த மயக்க நிலையில் பிடிவாத உணர்வில் ஊறியுள்ள ஓருவன் தெளஹீதின், ஞானத்தின் ஆரம்ப வாயிலைக் கண்டடைய மாட்டான் என்பது சந்தேகமில்லாத உண்மையாகும். அப்படியிருக்கும்போது லாகிரிவஸ்த்துக்களுக்கு அடிமையான ஒருவன் ஞானோபதேசம் புரிகிறான், பையத் (இஜாஸா) கொடுக்கிறான் என்றால் அவன் மக்களை ஏமாற்றிப பொருள் புகழ்தேடும் மகாபெரிய திருடனாக, குட்டிச்சைத்தானாக இருக்கிறான் என்பதில் எள்ளளவும் சந்தேகப்பட வேண்டியதே இல்லை. ஞானம் பெறுவதற்கு லாகிரிவஸ்த்துக்கள் அவசியம்தான் என்றிருந்தால் நபிமார்கள் றசூல்மார்களே அவற்றை ஆமோதித்திருப்பார்கள். அந்த நல்லடியார்கள் இவ்விதமான லாகிரிவஸ்த்துக்களை ஆமோதித்துள்ளதாக நாம் எங்கேயும் எப்போதும் அறியவேயில்லை. அவர்களின் பின்வந்த எந்தவோர் ஒலிமார்களும் இவ்வித பொருட்களை அனுமதித்ததாக நாம் அறியவில்லை. எம்முடைய அனுபவமும் அறிவும்கூட இப்பொருட்களை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்விதப் பொருட்களுக்கு அடிமையான ஷைத்தான்கள் தங்கள் சுயநல நோக்குக்காக நல்லடியார்களான நபிமார் றசூல்மார்கள் ஒலிமார்களையும் அவர்களால் எமக்களிக்கப்பட்ட ஞானத்தையும் மாசுபடுத்துகிறார்கள் என்றே நான் கருதுகிறேன். ஆகவே சகோதரனே! நீ உண்மையான ஞானத்தைப் பெறவேண்டுமானால், எவ்வித மஸ்த்துக்கும் நீ அடிமையாகவே கூடாது என்று உன்னை நான் எச்சரிக்கிறேன்.

தியானம் செய்வதற்காக குடும்பவாழ்வை ஒதுக்கித்தள்ளவோ இன்ப துன்பங்களை நீக்கிக் கொள்ளவோ காட்டுக்குப்போகவோ வேண்டியதில்லை. உலக விஷயங்களில் எது எது உனக்கு அவசியமோ அவற்றை அவசியத்தின் அளவு எடுத்துக்கொள். கலிமாவின் பூரணவிளக்கத்தை நீ பெற்றிருந்தும் உறுதியான உள்ளம் உன்னிடத்தில் இல்லையென்றால் ஓர் ஒஸ்த்தாது உனக்கு அவசியமாகும்.

நீ தியானம் செய்யும்போது உனக்குள்ள கண்டிப்பான கடமை என்னவென்றால் "முறாக்கபா" செய்ய வேண்டியது மட்டும் தான். அதாவது லா இலாஹ என்று கூறும் போது சர்வசிருஷ்டிகளையும் உன் உடலையும்கூட இல்லாததாயும்,"இல்லல்லாஹ்" என்று கூறும்போது அல்லாஹ்வைத் தரிபடுத்திவைப்பதாயும் நீ கற்பனைபண்ண வேண்டும். பெரும்பாரான நல்லடியார்கள் ஒருமித்துக் கூறும் முறாக்கபா இதுதான். ஆயினும் இதை இலகுவாய் உள்ளத்தில் பதிக்கக்கூடிய என்னுடைய சொந்த அனுபவம் என்னவென்றால், தியானம் செய்யும் போது அல்லாஹ்வையன்றி ஒன்றுமே இல்லையென்றால் நான் இருக்கிறேன் என்றுணர்வது யார்? அப்படி உணர்வது அல்லாஹ்வாகத்தானே இருக்கவேண்டும் என்பதை மட்டும் சிந்தனை செய்வது மிக உசிதமான முறாக்கபாவாகும் என்பதே. இப்படி முறாக்கபா செய்தால் நான் என்றுணர்பவன் அல்லாஹ்வேயன்றி வேறு ஒரு நாயன் இல்லவே இல்லையென்பது இரண்டொரு தினங்களிலேயே உனக்குத்தெரியவரும். இந்த விஷயம் பேசுவதற்கு இலகுவாய் இருந்தாலும், உண்மையான பீஸபில் என்பது இந்த முறாகபாவாகத்தான் இருக்கிறது. இது இலகுவான ஓர் செயலல்ல. இவ்விஷயம் பேசுவதற்கு இலகுவாய் அமைவது கலிமாவின் உண்மையை விளக்கியறிவதிலேயே தங்கியிருக்கிறது. உன் மனோ உறுதிக்கேற்றபடி அனாநிய்யத் மாய்ந்தொழியவும் (முஸாஹிதா) தெய்வீகக்காட்சிகள் உன்னிடத்தே வெளியாகவும் ஆரம்பிக்கும். இவ்வேளையில் ஓர் கண்டிப்பான நிபந்தனை என்னவென்றால், எந்த நேரத்திலும் அல்லாஹ்வை விட்டும் நான் வேறானவன் என்ற நினைப்பை மறந்தவனாகவே இருக்கவேண்டும் என்பதுதான். இது முறாகபா செய்தவனாலேயே அன்றி வாய்க்காது. நான் அல்லாஹ்வை விட்டும் வேறானவன் என்ற நினைவு உள்ளத்தில் இருக்கும்வரையும் தெய்வீகக் காட்சிகள் எதுவுமே வெளியாகாதென்பது நிச்சயம். இவ்விஷயத்தைப் பொறுமையோடு பலவாறாகச் சிந்தனைக்கெடுக்க வேண்டும்.

எந்த நேரமும் எந்த ஓர் பொருளை நீ காணும்போதும் நிறம் தோற்றம் பெயர்களினால் இது ஓர் பொருளாகக் தென்படுகிறதே அல்லாமல் அல்லாஹ்வை விட்டும் வேறான ஓர் தனிப் பொருளேயல்ல என்று உன் உள்ளத்தில் முறாக்கபா செய்துகொண்டே இருந்தால் உன் உடலைமறக்கக்கூடிய ஓர் நிலைமை நிச்சயமாக உனக்கேற்பட்டேயாகும். அதாவது நான் இந்தப்பௌதீக உடலில் குடிபுகுந்திருந்ததாய் ஏமாந்துகொண்டிருந்தேன் என்றும் உண்மையாக என்னுடைய இருப்பிடம் அறிவே என்றும் தென்படும். மேலும் நான் அறிவு என்னும் சூட்சும உடலில் வாசம் செய்கிறேன் என்றும் இந்தப்பௌதீக உடல் என் அறிவிலேயே இருக்கிறதென்றும் தெளிவாகும். இக்கட்டத்தில் மிக உறுதியோடும் ஊக்கத்தோடும் தியானத்தில் ஈடுபடவும் முறாக்கபா செய்யவும் வேண்டும். இக்கட்டத்தில் சடைவு ஏற்பட்டால் இதற்கடுத்த உயர்பதவிகள் தடைப்படலாம். இவ்வித நிலைமையில் எவ்வித காரணத்துக்காகவும் உன் ஒஸ்த்தாதைத் தவிர அல்லது உன் சகமாணவர்களைத் தவிர வேறு எவருக்கும் உன் நிலைமை வெளியாகாமல் மறைத்துக்கொள்வதும் இயன்றவரையில் மதசம்பந்தமான எந்தப் பேச்சிலும் எவரோடும் கலந்துரையாடாமல் மௌனம் சாதிப்பதும் மிகமிக அவசியமாகும். இல்லையேல் நிச்சயமாகக் கீழ் பதவியையே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமைதான் ஏற்படும். இவ்வித நிலைமையில் சில இரகசியங்கள் இருக்கின்றன. அவற்றை உன் அனுபவத்தில் கண்டடைய வேண்டுமேயல்லாமல் விபரித்து விளக்குவது பொருந்தாது. இந்தக்கட்டத்தில் உன்னுடைய அறிவு, நடை உடை பாவனைகளில் சிற்சில மாற்றங்கள் ஏற்படலாம். உன்னுடைய நபுஸு அம்மாறா (ஆசைகள்) உன் கட்டுப்பாட்டின் கீழ் அடங்கிவிடும். அதாவது துன்யாவுடைய பற்றுதலும் கெட்ட சிந்தனை கெட்டகுணங்களும் மாற்றம் அடைவதோடு நற்குணங்களும் தெளிவான நல்லறிவும் உண்டாகும். இவ்விடத்தில் ஓர் முக்கியமான விஷயம் என்னவென்றால் இதற்குமுன் நீ கற்றும் கேட்டும் அறியாத மிகநுட்பமான அறிவு விளக்கங்கள் உன் உள்ளத்தில் இயல்பாகவே உருவாகும். இதை “வாரிதாத்” என்று கூறுவார்கள். இந்த வாரிதாத்தில் இரண்டுவகைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று வாரிதாத் ஷைத்தானி என்று கூறப்படும். கலிமாவைத் தியானம் செய்பவர்களுக்குப் பெரும்பாலும் இந்த வாரிதாத் ஷைத்தானி ஏற்படுவதே இல்லை. ஆயினும் அதன் விபரத்தை நீ அறிந்திருப்பது அவசியமாகும். இந்த வாரிதாத் ஷைத்தானி ஏற்படும் போது உடலில் எரிவு, நடுக்கம், மயக்கம், சடைவு, கெட்ட எண்ணம், நுட்பமான கெட்ட யோசனைகள் எல்லாம் தென்படலாம். இப்படி இல்லாதிருந்தால் கெட்டகனவுகள், அல்லது றூயாக் காட்சிகளும் தென்படலாம். இவ்விதமான நிலைமை உனக்கேற்பட்டால் இது உன்னுடைய தவறாகவே இருக்கும். தவறு என்ன என்பதைக் கண்டறிநது திருத்திக்கொள்ள வேண்டும். பெரும்பாலும் கலிமாவுடைய பாதையில் இப்படி ஏற்படுவதில்லை. இஹ்லாஸ், ஏகாக்கிரசித்தம் இல்லாமல் மனம்போன போக்கில் தியானம் செய்தால் இப்படி ஏற்படக்கூடும். ஆகவே திக்கிர் செய்யும் போது முறாக்கபா செய்வதையன்றி வேறு எத்திசையிலும் மனம்பாயாமல் கடும்முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தது “வாரிதாத்றஹ்மானி” என்று கூறப்படும். பெரும்பாலும் கலிமாவின் பாதையில் இந்த வாரிதாத்துத்தான் ஏற்படும். இது ஏற்படும்போது உடலில் கணக்கான குளிர்ச்சியும் மனதில் ஓர் பேரானந்தமும் கண்களில் பிரகாசமும் தென்படும். இந்த நிலைமையில் மிக மிக நுட்பமான அறிவு விளக்கங்கள் உண்மைகள் எல்லாம் உள்ளத்திலும் தென்படும். புலன்களிலும் தென்படும். உள்ளத்தில் தென்படாதபோது புலன்கள் வாயிலாகத் தென்படும். உறக்கத்தில் கனவு மூலம் நல்லடியார்களைக்கண்டு உறவாடிச் சிற்சில உண்மைகளை விளங்கியறியக்கூடிய வாய்ப்பும் ஏற்படும். உள்ளத்தில் தென்படாதபோது புலன்கள் வாயிலாகத் தென்படும். சில சமயங்களில் அர்வாகுகள் ஜின்கள் மற்றும் சிலசிருஷ்டிகளோடு உறவாடவும் அவர்களால் சிற்சில உதவிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகளுக்கும் கிடைக்கலாம். ஆனால் எந்த ஓர் சிருஷ்டி மூலமாகவும் துன்யாவுடைய எந்த உதவியை நீ பெற்றுக்கொள்ள விரும்பினாலும் இந்த மர்த்தபாவில் இருந்தும் நீ கீழே விழுந்து விட்டாய் என்பதே பொருளாகும். இந்த வாரிதாத் உன் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி உன்னை உயர்பதவிக்கு இட்டுச் செல்வதற்காக ஏற்பட்ட சோதனையே என்பதை நீ மறக்கக்கூடாது. உன் நோக்கமெல்லாம் இறைவனுடைய ஐக்கியமே என்ற உறுதி உன்னிடமிருந்தால் திடீரென ஓர் உயர்பதவி உனக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம் . இதை “றூயா” என்று சொல்லப்படும். அதாவது தியானத்தின் போது உறக்கத்துக்கும் விளிப்புக்கும் மத்திபமான ஓர் மயக்க நிலமை உனக்கேற்படும். இந்த நிலைமையில் சிற்சில (ஸிர்றுகள்) இரகசியங்கள் உனக்கு வெளியாகும். இந்த வெளிப்பாடும் இரண்டுவகையாய் இருக்கிறது. ஒன்றை “ஹிஸ்லி” என்றும் மற்றொன்றை “கியாலி” என்றும் கூறப்படும். இதன் விபரம் என்னவென்றால், சிற்சில இரகசியமான தெய்வீகக் காட்சிகள் தென்படும்போது கண்ணை மூடிக்கொண்டால் சில சமயம் அக்காட்சி மறைந்துவிடலாம். இப்படி மறைந்துவிடும் காட்சிக்கு “கியாலி” என்று கூறப்படும், இந்தக்காட்சி உண்மை அல்லாததாகும். அதாவது உள்ளத்தில் ஏற்பட்ட பிரேமை மருட்சி அவா முதலியவற்றால் ஏற்படும் பொய்க்காட்சியாகும். ஆனால் காட்சி வெளியாகும் போது கண்ணை மூடிக்கொண்டாலும் விளித்துக்கொண்டாலும் காட்சி தென்படுமேயானால் உண்மையான “ஹிஸ்லி” என்னும் தெய்வீகக் காட்சி இதுவேயாகும். இதை உன் அனுபவத்தில் பெறவேண்டுமேயன்றி விளக்கிக் கூறுவது பொருந்தாது. ஆனால் இவ்விடத்தில் நீ எக்காரணத்தைக் கொண்டும் உன் இரகசியங்களை உன் ஒஸ்த்தாதுக்கேயன்றி வெளிப்படுத்தவே கூடாது. மேலும் இந்தக் கஸ்பில் சிருஷ்டிகளால் உனக்கேற்படும் உதவிகளை நீ ஏற்றுக்கொள்ளவும் கூடாது. அப்படி ஏற்றுக்கொண்டால் நீ விழுந்துவிட்டாய் என்பதுதான் கருத்தாகும். உன் தேட்டமெல்லாம் இறை ஐக்கியமாகவே இருக்கவேண்டும். இல்லையானால் உனக்காகத் திறக்கப்பட்ட வானத்தின் வாசல்கள் மூடிக்கொள்ளும் என்பது நிச்சயம். அவசியமான அறிவு விளக்கங்களையேயன்றி வேறு எதையும் நீ தேடாதே. துஆ கேட்பதைக் கூட நீ நிறுத்திவிடவேண்டும். அப்படித் துஆ கேட்க முற்பட்டால் மீண்டும் தாழ் பதவியையே நீ பெறுவாய் என்பது நிச்சயம்.

நீ சரியான மனோஉறுதி உடையவனாய் இருந்தால் உன்னுடைய வெளிப்புலன்களான கண், செவி, போன்றவற்றின் திரைகள் நீக்கப்படும். அதாவது தியானத்தின்போது வெளியாகும் காட்சிகளுக்கு

(துன்யாவுடையவையாயினும்) எந்த ஓர் பொருளும் மறைக்கும் திரையாக இருக்காது. இதற்கதிகமான விபரம் தரமுடியாது. இந்த நிலைமை உனக்கேற்படும் போது இயன்றவரையிலும் பசித்து, தனித்து, விழித்து இருப்பதே மிகமிகப் பொருத்தமாகும். முடியுமானால் “கல்வத்தில்” அமர்ந்து கொள்வதே சிறப்பாகும். ஏனென்றோல் இந்த நிலைமை இலகுவாய்ச் சறுக்கக்கூடிய ஓர் நிலைமையாகவும் மிகக்கடினமான சோதனைகள் நிறைந்த ஓர் நிலைமையாகவும் இருக்கிறது. ஆயினும் சரியான மனோ உறுதி இருந்தால் கல்வத் அவசியமில்லை.

இவ்விடத்தில் ஓரளவு விபரம் தரவேண்டியது அவசியமாய் இருக்கிறது. இகவாழ்வுக்கும், ஆத்மீகவாழ்வின் முன்னேற்றத்துக்கும் சில விதிகள் மிக மிக முக்கியமாய் அமைந்துகிடக்கின்றன. அவற்றில் ஒன்று “தவக்கல்” என்று கூறப்படும். தவக்கல் என்றால் இறைவன் பேரில் நம்பிக்கைகொள்வது என்பதேயாகும். அதாவது இறைவழி செல்லுகிற ஒருவர் இறைவன் பேரில் நம்பிக்கை கொண்டவராகத்தான் முயற்சி செய்கிறார் என்பது உண்மை. ஆனால் இந்த இரண்டாவது நிலைமையில் அவருடைய நம்பிக்கை இல்லாதொழிந்துவிடக்கூடிய சோதனைகள் இவருக்கு ஏற்படுகின்றன. சோதனை என்னும் போது இறைவன் அறியாமல் இருந்த ஓர் விஷயத்தை அறிந்து கொள்வதற்காகவே சோதனை செய்கிறான் என்பது பொருளல்ல. நாம் நம்பியிருந்த நம்பிக்கை உண்மையான நம்பிக்கையா? அல்லது மருட்சியானால் ஏற்பட்ட நம்பிக்கையா? என்பதை எமக்கு எடுத்துக்காட்டி அந்த நம்பிக்கை எவ்வித கஷ்டநஷ்டத்தின் போதும் தளர்ச்சியடையாமல் இருக்கக்கூடிய மனோ உறுதியை எமக்கு ஈவதற்காகத்தான் இறைவன் இவ்வித நிகழ்ச்சிகளை (சோதனைகளை) ஏற்படுத்துகிறான். இவ்வித சோதனைகளுக்கெல்லாம் அசையாமல் நின்று பிடிக்கக்கூடிய மனோ பக்குவம் எமக்கு ஏற்படும்போதுதான் அடுத்த உயர்பதவிக்குரிய ஆற்றலை நாம் பெறுகிறோம்.

இவ்விஷயத்தையிட்டுத் “தெய்வத்தில் நம்பிக்கை உள்ளவனாய் இருப்பவனுக்கு அல்லாஹ் போதுமானவனாய் இருக்கிறான்” என்றும் “நீங்கள் உண்மையான மூமீன்களாயிருப்பின் இறைவனில் நம்பிக்கை உள்ளவர்களாய் இருங்கள்” என்றும் குர் ஆனில் இறைவன் கூறுகிறான். இவ்விஷயத்தை விளக்கித் தரக்கூடிய பல ஹதீஸ்கள் இருக்கின்றன. விரிவை அஞ்சி நாம் இங்கே அவற்றை எழுதவில்லை. விலாயத்துடைய பதவிகளில் முதலாவது படித்தரம்தான் “தவக்கல்” என்று கூறலாம், அதாவது எம்முடைய சகல பொறுப்புக்களையும் இறைவன் மீது சாட்டுதல் (ஒப்புக்கொடுத்தல்) என்பதுதான் அதன் சாரம்சம். இந்த தவக்கலுடைய இரண்டாவது படித்தரத்துக்கு “தஸ்னீம்” என்று பெயர் கூறப்படும். தஸ்னீம் என்றால் முற்றாய் அடிபணிதல் என்பதே அதன் பொருளாகும். தஸ்னீம் என்ற படித்தரத்தில் இருப்பவர் தெய்வ அறிவைப் பெரிதாகவும் சரியானதாகவும் காண்பதால் எல்லா விஷயங்களிலும் இறைவனுடைய விருப்பத்துக்கு, அறிவுக்கு முற்றிலும் தம்மை அர்ப்பணித்தவராகவே இருப்பார். இந்த தவகல்லுடைய மூன்றாவது படித்தரத்துக்கு “தப்வீஸ்” என்று பெயர் கூறப்படும். தப்வீஸ் என்றால் எவ்விதசடைவும், சோர்வும், வெறுப்பும் இல்லாமல் முழுவிருப்பத்தோடு சகலகாரியங்களையும் இறைவனிடம் ஒப்படைத்துவிடல் என்பதே அதன் பொருளாகும். ஆகவே தப்வீஸ்யுடைய ஒருவர் இறைவனுடைய விருப்பமே தன் விருப்பமெனக்கொண்டு இருப்பவராகையால் நன்மை தீமைகளின் போதும் இன்பசுகங்களின்போதும் எவ்விதமான சந்தோஷமும் துக்கமும் விருப்புவெறுப்பும் இல்லாதவராகவே வாழ்கிறார். இவர்களிடத்தில் எவ்வித துஆப்பிராத்தனைகளும் இடம்பெறமுடியாது. இதை, தெய்வ சித்தத்தைப் பொருந்துதல் என்றும் “தக்தீர்” என்றும் கூறப்படும்.

இவ்வகையினர் இறை நாட்டம் நடந்தேறுவதற்காகவே உயிர் வாழ்கிறார்கள். இவர்கள் அனுஷ்டானங்களில் ஈடுபடுவது கூடத் தெய்வ நாட்டத்துக்காகவே அன்றி அவர்களுக்காகவல்ல. ஏனென்றால் தான் எவ்வித அதிகாரமும் சக்தியுமற்ற வெறும் மள்ஹர்தான் என்பதை அவர்கள் அறிவார்கள். இதை ஒருசில வலிமார்கள் தவக்கல் ஆரம்ப நிலையென்றும் தஸ்னீன் இடைநிலையென்றும் தப்வீஸ் உச்ச நிலையென்றும் கூறியுள்ளார்கள். அவர்களின் கூற்று முற்றிலும் உண்மையானது தான். இதை நான் சிறிது விபரிப்பதனால் தவக்கல் என்பது உண்மையான மூமீன்களின் நிலைமையென்றும் தஸ்னீம் என்பது அல்லாஹ்வுடைய ஒலிமார்களான அன்பர்களின் நிலைமையென்றும் தப்வீஸ் என்பது தௌஹீது என்னும் மெய்ஞானத்தில் ஊறிய சித்திக்கீன்களின் நிலைமையென்றும் கூறுவேன். இந்த மூன்று நிலைமைகளையும் விளக்கம் தருகிற பல ஆயத்துக்கள் ஹதீஸ்கள் இருக்கின்றன. இந்த மூன்றாவது நிலைமையை விளக்கம் தருவதற்காகவே இப்ராஹீம்(அலை) அவர்களை நெருப்புக் குண்டத்தில் எறிந்தபோது ஜிப்ரீல்(அலை) மற்றும் சிருஷ்டிகளின் உதவியை அவர்கள் மறுத்து விட்டார்கள்என்பதை இறைவன் எமக்கு விளக்கம் தருகிறான். அவ்வேளையில் இப்றாஹீம்(அலை) அவர்கள் நாம் குறிப்பிட்ட தப்வீஸ் என்னும் நிலைமையிலேயே இருந்து கொண்டிருந்தார்கள். அதாவது தம்முடைய சகல காரியங்களையும் இறைவன்மேல் பூரணமாய் ஒப்புக்கொடுத்தவர்களாக சர்வ வல்லமையும் அவனுடையதே என்பதை உணர்ந்தவர்களாக துஆ கேட்பதுகூட அறிவீனமே என்பதை அறிந்தவர்களாக இருந்தமையால்தான் எவ்வித கலக்கமும் அற்றவர்களாக எவருடைய உதவியையும் ஏற்றுக் கொள்ளாதவர்களாக இருந்தார்கள் . இந்த நிலைமையில் அவர்கள் இருந்தமையால்தான் நெருப்புக்கு இறைவனால் கொடுக்கப்பட்டிருந்த இயற்கைத்தன்மை மாற்றப்பட்டிருக்கிறது. இல்லையானால் அந்த நெருப்பு இப்றாஹீம்(அலை) அவர்களைப் பஸ்மீகரமாக்கியிருக்கும் என்பதும் நிச்சயம். இதை இறைவனே தெளிவுபடுத்தியுள்ளான். இதிலிருந்து நாம் அறியக்கூடிய மிகப்பெரிய ஓர் உண்மை என்னவென்றால், எவர் தப்வீஸ் என்ற நிலைமையில் இருக்கிராரோ அவருக்காகச் சகல சிருஷ்டிப்பொருட்களினதும் இயற்கை சுபாவம் கூட மாற்றியமைக்கப்படலாம் என்பதே. ஆகவே இந்த நிலைமையில் உள்ள ஒரு ஷித்தீக்கின் விஷயத்தில் அற்புதங்கள் நிகழ்வது ஆச்சரியமான ஓர் விஷயமேயல்ல.

தவக்கல் என்பதன் முதலாவது படித்தரத்தைப் பற்றிச் சஹல் இப்னு அப்துல்லாஹ்(ற) அவர்கள் என்ன கூறுகிறார்கள என்றால் ஜனாஸாவைக்குளிப்பாட்டுபவன் கையில் அது எப்படி சுயநிர்ணயமற்றதாய்க் கிடக்கிறதோ அதேபோல இறைவனின் நாட்டமென்னும் கரத்தில் அவன் நாடியபடி செய்யட்டும் என்று கிடப்பதே தவக்கலாகும் என்று கூறுகிறார்கள். இந்தத் தவக்கலுடைய முதலாவது படித்தரத்தில், தன்நாட்டம் நிறைவேறும்போது (தேவையானது கிடைக்கும்போது) இறைவன் பேரில் நன்றியறிதல் உடையவனாகவும் கிடைக்காதபோது பொறுமை நிறைந்தவனாகவும் இருக்கவேண்டியது அவசியமாகும். இரண்டாவது நிலைமையில் கிடைப்பதும் கிடைக்காமல் விடுவதும் சமமே எனக்கொண்டு, இறைநாட்டம் அதுதான் என நம்பிச் சாந்தியோடு இருப்பது அவசியமாகும். அதாவது எம்முடைய ஊண் உடை முதலான தேவைகள் நிறைவேறுவதற்கு எவ்விதமான வழிவகைகளுமே இல்லாமல் இருக்கும்போதும் பதட்டமற்றவனாக இறைவன்பேரில் முழுநம்பிக்கை வைத்தவனாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

மூன்றாவது நிலைமையில் ஓர் காரியம் நிறைவேறாது போனாலும் அதில் எனக்கு நன்மையே இருக்கும் எனக்கருதிக் கொள்ளவேண்டும். அந்த நன்மையே இறைவன் அறிந்திருப்பதாலேயே அதை எனக்கு நிறைவேற்றாமல் தடைப் படுத்தியுள்ளான் என்று நம்பி அவ்விறைவனின் நல்லுதவிக்காக நன்றி செலுத்திக்கொண்டிருக்கவேண்டும். இந்தத் தவக்கலுடைய நிலைமையைப் பெற்ற ஓர் அடியான் இரணமளிப்பவன் இறைவனே என்பதை ஒப்புக்கொண்டவனாய் இருப்பதால் தன் இரணத்தைத் தேடுவதற்காக உலகமக்களை ஏய்க்கப்போவதே இல்லை. உலகமக்களைக் கவருவதற்காக வேஷம்போடப் போவதுமில்லை உலகமக்களிடையே கௌரவத்தைப் பெறுவதற்காக ஞானவானாய் நடிக்கப்போவதுமில்லை தன் கஷ்ட நஷ்டங்களைத் தேவைகளை எவரிடமும் முறையிடப்போதுமில்லை. எந்த ஓர் சிருட்டிக்கும் அவர்கள் அஞ்சப்போவதும் இல்லை. இவ்வகையினர் தங்கள் சகலகாரியங்களையும் இறைவனிடமே பரிபூரணமாய் ஒப்படைத்து விட்டார்கள். இப்றாஹீம்(அலை)அவர்கள் ஜிப்ரீல்(அலை) அவர்களிடம் கூடத் தம்பொறுப்பை ஒப்படைக்க மறுத்துவிட்டார்கள் தங்களுடைய முழுக்காரியங்களையும் இறைவனிடமே பூரணமாய் ஒப்படைத்து விட்டார்கள். ஆகையால்தான் பூரணவெற்றியை (இயற்கையைக்கூட வென்று) ஜெயம் பெற்றார்கள். “அடியார்களின் பொறுப்பாளனாயிருக்க அல்லாஹ் போதுமானவன்” என்று இறைவனே குர்ஆனில் தெளிவுபடுத்துகிறான். பசியுடன் காலையில் எழுந்துசெல்லும் பறவைகள் பசிதீர்ந்தவையாக மாலையில் தம் கூடுகளுக்குத் திரும்புவதுபோல இறைவன் மீது மனிதருக்கிருக்க வேண்டிய தவக்கல் செம்மையாய் இருந்த மனிதர்கள் தடையில்லாது இரணம் பெறுவார்கள் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். ஆம் அவர்களுடைய வாக்கு என்னுடைய அனுபவத்தில் நான் கண்ட ஓர் பூரண உண்மையாய் இருக்கிறது. உமரேபாருக்(றலி) அவர்கள் இருகவிதைகளைக் கூறுகிறார்கள். அவற்றின் சாரம் என்னவென்றால்,

எல்லாக் காரியங்களுடையவும் அளவு இறைவன் விதிக்கும் அளவாகவே இருப்பதனால் உன்காரியங்களை எளிதாக்கிக்கொள் உனக்கென்று விதிக்கப்படாதது கிடைக்கப்போவதே இல்லை. உனக்கென்று விதிக்கப்பட்டது கிடைக்காமல் போவதுமில்லை என்பதேயாகும்.

தவக்கல் உள்ளமனிதன் தாய்மடியிலுள்ள சிறுகுழந்தைக்கு ஒப்பானவன் இக்குழந்தை அன்னையின் மடியையே அல்லாது வேறு எதையும் அறிவதே இல்லை. இதே போல தவக்கல் உள்ள ஒருவன் இறைவன் மீதேயல்லாது வேறு எதிலும் எதற்காகவும் ஸ்த்திரமான நம்பிக்கை கொள்வதே இல்லை.

**ஆகவே என் அன்புச் சகோதரனே!**

ந் இறைவழி செல்லும் முயற்சியில் ஈடுபடும்போது எவ்விதமான கஸ்ட நஷ்டங்கள், பசிபட்டினிகள் இன்பதுன்பங்கள் ஏற்படினும் மனச்சடைவு கொள்ளாமல் நம்பிக்கை இழக்காமல் தவக்கலில் நிலைப்பட்டவனாக, உறுதியான திடசித்தமுடையவனாக வாழவேண்டியவனாய் இருக்கிறாய். இவ்விதமான சோதனைகளின் போது உன்னுடைய தவக்கல் தளர்வுற்றால் நிச்சயமாக மீண்டும் தாழ்பதவியையே பெற்றவனாவாய். ஆனால் சோதனைகளின்போது தளர்வடையாமல் உண்மையான தவக்கலில் நீ நிலைப்பட்டால் நிச்சயமாக ஓர் உயர் பதவியையும் உன் கஷ்டங்களிலிருந்து பூரணமான விடுதலையையும் பெறுவாய் என்பது உறுதி. இவ்விடத்தில் பொறுமையைப்பற்றியும் நீ ஓரளவு புரிந்து கொள்ளவேண்டும். அதாவது எவ்விதமான கஷ்டமான நிலையிலும் கூட மிகமிகப் பொறுமையுடையவனாகவே நீவாழ வேண்டும் என்பதுதான் . நாம் மேலே கூறிய தவக்கலுடைய விஷயத்தில் நீ வெற்றியடைந்தால் சுக்கூர்-பொறுமை, ரிலா (இறைநாட்டமான தக்தீரைப் பொருந்துதல்) போன்ற விலாயத்துக்குரிய குணங்கள் சம்பூரணமாய் இடம்பெறும் என்பது பூரணமான உண்மையாகும்.

إِنَّ ٱللَّهَ مَعَ ٱلصَّٰبِرِينَ

**2:153** *நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையோர்களுடன் இருக்கிறான்.*

இந்த நிலைமையில் ஏற்படும் இன்னல்கள் சோதனைகளில் வெற்றியடைந்தால் “மஹ்ஸூஸாத்”தின் திரைகள் உன்னை விட்டும் முற்றாய் நீங்கிவிடும். இதை ஞான வெளிப்பாட்டின் ஆரம்ப நிலைமை என்று கூறுவதைவிட வேறு எந்த விபரமும் தருவதற்கில்லை. ஏனென்றால் குறிப்பிட்ட அவ்லியாக்களே அன்றி உலமாக்கள்கூட இந்த நிலைமையைப் புரிந்துகொள்ள முடியாது. கஸ்பு வெளியாகும் ஸ்தானம் இந்த (மர்த்தபா) நிலைமைதான். தியானத்தின்போது திடீரெனச்

சரீரகுறிப்புக்களும் மறந்துவிடலாம். மயக்க நிலைமையும் ஏற்படலாம். சில சமயங்களில் சில நிமிடங்கள் புலனறிவுகளும் அணைந்துவிடலாம். எதற்கும் நீ கவலைப்படாதே. மருட்சியில் மூழ்கிவிடாதே. நீ சரியான மனோஉறுதி உடையவனாய் இருந்தால் இதற்கடுத்தப்படியாக "ஆலமுல் மஹ்தானியத்"தின் திரைகள் உன்னைவிட்டும் நீக்கப்படும். அதாவது உலோக பொருட்களின் திரை நீக்கப்படும் என்பது பொருளாகும். இந்தக் கஸ்பு வெளியாகும்போது உன்னுடைய திக்கிரில் மாற்றம் செய்து தரப்படும். இதை அறிவிப்பது யார் என்பதும் உனக்குத் தெரியவரும்.

மாற்றம் செய்து தரப்பட்ட திக்கிரிலேயே பராக்காகிக் கொண்டிருந்தால் "ஆலமுன்னபாதாத்" உடைய திரை உன்னைவிட்டும் நீக்கப்படும். அதாவது தாவர வஸ்த்துக்களின் சரியான உண்மைகள் உனக்கு வெளியாகும். தாவரங்களும் உன்னோடு உறவாடுவதை நீ காண்பாய். ஆனால் அவை ஒவ்வொன்றும் உன் பாஷையிலே உறவாடுவதைக் கண்டால் அது பிரேமை (மருட்சி)யாகும். மேலும் திக்றில் ஈடுபட்டுக்கொண்டு அடிக்கடி முறாகபாவில் மூழ்கிக்கொண்டிருந்தால் "ஆலமுல் ஹைவானாத்" உடைய திரை உன்னைவிட்டும் நீக்கப்படும். அதாவது ஜீவப்பிராணிகளின் திரை நீங்கும் என்பதே பெருளாகும். இந்த ஜீவப்பிராணிகள் அவ்வவற்றிக்குரிய பாஷைகளில் உன்னோடு உறவாடுமேயானால் அது உண்மையான விஷயமாகும். அவற்றை நீ விளங்கிக்கொள்ளவும் கூடும். ஆனால் அவை உன் பாஷையிலே உறவாடினால் அது வெறும் பிரேமையேயாகும். இந்தக் கஸ்பின்போது ஜீவப்பிராணிகள் எவ்விதமாகத் தஸ்பீஹு செய்கின்றன என்பவை போன்ற சிற்சில இரகசியங்களும் உனக்குத் தெரியவரும். இப்போது மிகச் சுருக்கமாயும் சூசகமாயும் கூறப்பட்டதுதான் "அஸ்ஸைறு இலல்லாஹி" என்பதன் சாரம்சமாகும்.

## 3ஆவது "அஸ்ஸைறு வபில்லாஹி" என்று கூறப்படும்.

இதன் விபரம் என்னவென்றால் திக்றில் முற்றாய் மூழ்கி ஹக்கிலே தன் நினைவு முற்றாய் மாய்ந்தொழிவது என்பதுதான். அனாநிய்யத் என்னும் அகங்காரம் மாய்ந்தொழியும் நிலைமை இதுதான். மௌத்தாகாமல் மௌத்தாகுதல் என்பதும் கட்டவிழ்தல் என்பதும் இந்த நிலைமைதான். இதைத் "தஹ்வீல்" என்றும் கூறப்படும். இக்கட்டத்தில் சில சமயங்களில் தியானம்கூட மறந்து விடலாம். இவ்வித நிலைமையை அடைந்தவர்களுக்கும் பக்தர்களான வணக்கவாளிகளுக்கும் இடையில் மிகமிக வேறுபாடுகள் தென்படலாம். அதாவது இந்த கட்டவிழ்தல் நிலைமையில் உள்ள ஒருவர் பௌதீக, சூட்சும, உலகங்களைவிட்டும் படிப்படியாய் நீங்குகிறார். இவரிடத்தில் எவ்விதமான அமல்களும் இருக்கவே இருக்காது. இவருக்கும் தீனுடைய விஷயங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்காது. "வமாயஹ்புது றப்பக்க ஹத்தா யஹ்தியகல் எகீன்" என்று கூறுகிற வேதவசனம் இவ்விடத்தில் பூரண உண்மை என்பது தெரிய வரும். இந்த நிலைமையை அனுபவத்தினாலோ அறிவினாலோ புரிந்துகொள்ளாத ஒருசிலர்தான் தொழுகையற்ற இடமில்லை என்று கூறுபவர்கள். நிச்சயமாக அப்படியோர் இடமுண்டு என்பதை நீ சரியாய்ப் புரிந்துகொள். இந்த நிலைமையிலுள்ள "ஸூபி" மண், தண்ணீர், காற்று, நெருப்பு முதலாம் பௌதீக உலகின் தொடர்பை ஆரம்பத்தில்விட்டு நீங்குவதால் முதலாவது வானத்தை அடைகிறார். ஆதம்(அலை) அவர்களைக் காணவும் அவர்களிடமிருந்து அஸ்மாக்களுடைய இல்மைப் பெறவும் செய்கிறார். ஆதம்(அலை) அவர்களுடைய ஹகீகத்தும் இவருக்கு வெளியாகும். அல்லாஹ்வுடைய அஸ்மாக்களில் எதுதனக்குச் சொந்தமானது என்பதும் தெரியவரும். கலீபா என்பதன் உண்மையும் புலனாகும். மேலும் மனிதர்கள் செய்யும் இபாதத்துக்களும் உயிருண்டு என்பதுபோன்ற சில சிற்றுகளும் ஜீவன் என்பதன் இரகசியங்களும் தெரியவரும். இதற்கதிகமான விபரம் தரமுடியாமைக்காக மன்னிக்கவும். உன் அனுபவத்தில கண்டறிய முயற்சிசெய். இக்கட்டத்தில் "உஸ்லத்" ஒதுங்கியிருத்தல் மிக அவசியமாகும். இக்கட்டத்துக்குதான் "தஜற்றுத்" என்றும் "தஹ்வீல்" என்றும் கூறப்படுவது.

## 4ஆவது "அஸ்ஸைறுமினல்லாஹி" என்று கூறப்படும்.

இதன் விபரம் என்னவென்றால் தன்னுடைய சிருட்டிக்குணங்களான மனிதப் பண்புகள் முற்றாய் மாய்ந்தொழிந்து உண்மையான சுயநிலைமையில் தரிப்பது என்பதே. இந்த நிலைமையை "அன்வாறுத்தவாலிஉ" என்றும் கூறப்படும். தௌஹீதின் உண்மை பூரணமாகச் சித்திக்கும் இடம் இவ்விடம்தான். இந்த நிலைமையில் இவருடைய வாயில் இருந்து வெளியாகும் எந்த ஒரு சொல்லும் சிருஷ்டியின் சொல்லாக இருக்கவே இருக்காது. இவ்வித நிலைமையை எய்திய சில மகான்கள் கூறிய சில வார்த்தைகளை அறிவு விளக்கமும் அனுபவமும் இல்லாத ஒருசிலர் கண்டித்து எழுதியிருக்கிறார்கள் ஆனால் இவ்வறிவு குறைந்தவர்களின் தாக்குதல் பிழையானதென்று அதற்குரிய சரியான ஆதாரங்களைக் காட்டிப் பலமகான்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். இந்த ஹாலில் உள்ள நல்லடியார்களுக்கு "உலூமி இலாஹிய்யா" என்ற தெய்வீகஞானம் அருளப்படுகிறது இவர்கள் நரகசுவர்க்கங்களின் இரகசியபரகசியங்களையும் ஜபறூத்துடைய உலகத்தையும் அறிகிறார்கள். மேலும் அக்லுல் அவ்வலில் போய்ச் சேர்கிறார்கள். இந்த அக்லுல் அவ்வல் என்பதுதான் யாவற்றிக்கும் ஆரம்பம் என்பதையும் அதன் குணபாடே முதல் நிலைமைகளில் வெளியானவையாகும் என்பதையும் அறிகிறார்கள். இதன் தொகுப்பைத்தான் "லவ்குல்மஹ்பூல்" என்று கூறப்படுவது இதில்யாவும் தொகுப்பாயும் வகுப்பாயும் இருப்பதை உத்தேசித்து இதை "நூன்" என்றும் கூறப்படுகிறது. இந்த லௌஹூல் மஹ்பூலில் யாவற்றையும் ஆக்குவதற்காக இந்த அக்லுல் அவ்வலைச் சில ஸூபிகள் "கலம்" என்று கூறுவார்கள். இந்த இரகசியங்களைப் பற்றிச் சாதாரண மனிதர்களுக்குக் கூறப்பட்ட விஷயங்கள் யாவும் அம்மக்களின் அறிவுக்கேற்ற வருணிப்பக்களேயாகும். இந்த நிலைமையைத்

தாண்டி முன்னேறினால் இன்னோர் மர்த்தபா கிடைக்கும் என்பதைத்தவிர வேறெதுவும் கூறுவதற்கில்லை.

**5ஆவது "அஸ்ஸைறுபில்லாஹி" என்று கூறப்படும்.**

இதன் விபரம் என்னவென்றால் ஹக்குடைய நாமம் பண்புகள் (அஸ்மா, சிபத்துக்கள்) தன்னுடைய நாமமும் பண்புகளுமே என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லாமல் உணர்ந்து அவ்வுண்மையிலேயே முற்றாய் மூழ்கிவிடுவது என்பதுதான் ஹக்குல் எகீன் அல்லது கமாலுல் எகீன் என்று கூறப்படுகிற பூரண ஈமான் என்பதன் இரகசியம் இவ்விடம்தான். இது அல்லாஹ்வுடைய ஈமானே என்றுதான் நாம் கூறலாம். அதாவது ஹக்காகிய நான் நானாக இருக்கிறேன் என்று அல்லாஹ் அறிந்திருக்கும் அவருடைய அறிவுதான் இந்த ஈமானின் ஆரம்ப நிலைமையாகும். இந்த நிலைமையில் "ஸிபத்துல் முஹர்ரிகா" வெளியாகும். அதாவது சர்வசிருஷ்டிகளையும் இயக்கும் தத்துவம் ஏகவியாபகமாய் (ஏகத்துவமாய்) ஒன்றாய் இருப்பது உணரப்படும் என்பது தான். இதை அறிவு என்று கூறவும் முடியாது. ஆயினும் எம்முடைய விளக்கத்துக்காக அறிவு உணர்வு அனுபவிப்பு என்று கூறுவதைவிட வேறுவகையாய்க் கூறவும் முடியாது. இந்தநிலைமையில் ஒருசிலர் மஜ்தூபுகளைகப் போல் மாறிவிடுவதும் ஒருசிலர் இறந்துவிடுவதும் உண்டு. வேறு சிலர் விலாயத்துடைய மர்த்தபாக்களில் அவர்களுடைய மனோவலிமைக்கேற்ற ஸ்த்தானத்தைப் பெற்றுக்கொண்டு மீண்டும் சிருஷ்டி என்ற நிலைமையில் தங்களுடைய ஸ்த்தூல உடலுக்கு மீண்டுவிடுவார்கள். இவர்கள் மீண்டும் சிருஷ்டி என்ற நிலைமைக்கே மீண்டுவிட்டதால் ஸறகையும் மற்றும் கட்டாயக் கடமைகளையும் கையேற்றுக்கொள்வார்கள். ஆயினும் சிற்சில வேளைகளில் அவற்றைவிட்டு நீங்கியும் இருப்பார்கள். இவர்கள் தான் தங்கள் நப்ஸோடு பராக்கான நல்லடியார்கள். இவர்கள் எந்த வழியை (தரீக்காவை)ப் பின்பற்றிச் சென்றார்களோ அந்த வழிக்கேற்றபடியே அவர்களுடைய நிலைமையும் இருக்கும். ஆனால் கலிமாவைக்கொண்டு சென்றவர்கள் வேறோர் வகையினராய் அமைகிறார்கள். அதாவது கலிமாவைக்கொண்டு சென்று ஸ்த்தூல உடலுக்கு மீண்டவர்கள் பெரும்பாலும் மக்களுக்கு வழிகாட்டுவதற்காகவே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் அநேக படித்தரங்கள் இருக்கின்றன. பொதுப்படையாகக் கூறுவதானால் இவர்கள் ஒவ்வொருவரும் அக்கால சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ற உபாயங்களைக் கொண்டே மக்களுக்கு வழிகாட்டுவார்கள். இவர்களிடம் இருந்து வெளிப்படையான எந்த வேறுபாடுகளுமே தென்படாது. ஆயினும் இவர்களுடைய சர்வகாரியங்களுமே சித்துருபமாய் இருப்பதை அறிவுடையோர்கள் நிச்சயமாகக் காண்பார்கள். அவர்களைப்பற்றிய வேறுவிபரங்கள் எதுவுமே இப்போது நமக்கு வேண்டியதில்லை.

**6ஆவது "அஸ்ஸைறுமஅல்லாஹி" என்று கூறப்படும்.**

இதன் விபரம் என்னவென்றால் சர்வபிரபஞ்சங்களிலும் ஆட்சி அதிகாரங்களை நடாத்துவது என்பதேயாகும் இது அல்லாஹ்வின் வேலையென்று கூறுவதைவிட வேறு விபரங்கள் எதுவுமே கூறுவதற்கில்லை.

பலமுறை வாசித்துச் சிந்தனைசெய்து, தெளிவுபெற்றுச் சாதனையில் ஈடுபட்டு ஓர் நல்லடியாராக மாற்றமடைய இறைவன் உனக்கு நல்லுதவிபுரிவானாக. ஆமீன்.

## இறைவனுக்கு நன்றி

**இராகம்: இரத்தினாங்கி**

**தொகையறா**

கலையென்ற சோலையில் களையாக மாறிநான்
களைப்புற்றிருந்தபோது (தற்)
கொலையென்ற நிலையிலே சிலையாக இருந்த என்
கண்களைத் திறந்துவிட்டாய்
தேர்ந்தறிய முடியாத திருநபியின் பொருட்டினால்
திசைமாற்றி எனைச் செலுத்தித்
தீதாறுபெற அருள் செய்த இறையோனே! உன் அருளை
அனுதினம் நினைகுவேனே!

உன்னாணை உனையன்றி ஒன்றுமே இல்லையென
எனக்குணர்த்திப்
பொன்னான வாழ்வளித்தாய்
மண்ணான புத்தியை மாய்த்திட்ட மன்னவா
மனதார நன்றி அல்லாஹ்!

## பல்லவி

ஈமானென்ற செல்வமீந்து - இருளைநீக்கி ஒளியைத்தந்த
இறைவா உனையே புகழுவேனே.

## அநுபல்லவி

பார்வை கேள்வி பேச்சு மூச்சு - பண்புயாவும் நீயேயாச்சு
மனித அறிவு மாய்ந்தபோதே மல்ஹர் என்ற உண்மை கண்டேன்
(ஈமானென்ற)

## சரணம்

மாயஉள்ள மருட்சி நீங்கிக்கால வெள்ளக்கரை கடந்தேன்
ஆயயாவும் நீயேயல்லால் அணுவும்இல்லை லாஇலாஹ
(ஈமானென்ற)

கனவுத்துன்யாக் காட்சிநீங்கிக் - கரியதிரைகள் அகலக்கண்டேன்.
மறதிநீங்கி மனிதனானேன் மற்ஹபாசொல் லா இலாஹ
(ஈமானென்ற)

## ஷெய்ஹுல் முப்லிஹீன்
## எம். எஸ். எம். அலதுல்லாஹ் (றஹ்) அவர்களின்
## வெளியீடுகள்

### தமிழ்

1. ஈமானின் உண்மையை நீ அறிவாயா?
2. ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன்
3. பகுத்தறிவின் நீதிமன்றம்
4. திருக்குர்ஆன் தீர்ப்பு - பாகம் 1
5. திருக்குர்ஆன் தீர்ப்பு - பாகம் 2
6. திருக்குர்ஆன் தீர்ப்பு - பாகம் 3
7. பித்அத்துக்கு உண்மையின் சவுக்கடி (பாகம் 1)
8. பித்அத்துக்கு உண்மையின் சவுக்கடி (பாகம் 2)
9. ஏகத்துவப் பாடல்கள் (181பாடல்கள் உள்ளடங்கிய DVDவெளிவந்துள்ளது.)

### English Translations

1. Do you know the truth of Iman (Faith)
2. Al-Quran on Oneness of Being
4. The Court of Reason
5. Holy Quran’s Judgement - Part 3

### Sinhala Translation

1. Buddhiye Adikranaya (The Court of Reason)